வெளியீடு—5—1—1972]
Issued—5—1—1972]

3897

# தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு

## OFFICIAL REPORT

சனிக்கிழமை 1971 ஜூலை 17

Saturday 17th July 1971

தொகுதி VIII—எண் 1

Volume VIII—No. 1

தமிழ் நாடு அரசு
1971

GOVERNMENT OF TAMIL NADU
1971

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9

Legislative Assembly Department
Fort St. George, Madras-9.

விலை 50 காசுகள்]
Price 50 Paise]

V211, 31 'N71
31 N71. 8
61519
3897

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES.

SECOND SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

*17th, 19th, 20th and 21st July,* 1971.

*Volume VIII (Nos.* 1 *to* 4).

*Saturday,* 17th *July* 1971.

| | PAGES |
|---|---|
| 1. Question and Answers ... ... ... ... | 1–28 |
| 2 Voting on Demands for Grants for 1971–72 (*cont.*). | |
| Demand No. 12—Police ... ... ... | 29–99 |
| 3. Point of Order— | |
| Insinuation in a cut motion ... ... | 29 |
| 4. Papers laid on the Table ... ... ... | 99 |

*Monday,* 19*th July* 1971.

| | |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... | 129–155 |
| 2. Calling Attention— | |
| Rise in prices of Rayan Yarn and the hardship of handloom and powerloom weavers ... | 155-157 |
| 3. Presentation of Reports— | |
| Report on the action taken on the Estimates Committee's Report on Highways and Rural Works ... ... ... ... ... | 157 |
| 4. Government Bill— | |
| Tamil Nadu Buildings (Lease and Rent Control) Second Amendment Bill, 1971 ... ... | 158 |

PAGES.

*Monday, 19th July 1971—cont.*

5. Voting on Demands for Grants for 1971-72 (*contd.*).
   (*a*) Demand No. 12—Police (contd.) ... 158-248
   (*b*) Demand No. 18—Animal Husbandry 158-248

6. Papers laid on the Table ... ... ... 248

*Tuesday, 20th July 1971.*

1. Questions and Answers ... ... ... 269-298

2. Calling attention to the alleged malpractices in admission of boys and girls in Private Colleges 298-300

3. Voting on Demands for Grants for 1971-72 (*contd.*)
   (*a*) Demand No. 19—Co-operation ...
   (*b*) Demand No. 22—Khadi ... ... 300-381

4. Papers laid on the Table ... ... ... 382

*Wednesday, 21st July 1971.*

1. Questions and Answers ... ... ... 487-519

2. Presentation of Report—
   Report on the action taken on the Report of the Estimate's Committee on Khadi and Village Industries ... ... ... ... 519

3. Voting on Demands for Grants for 1971-72 (*cont.*)
   (*a*) Demand No. 2—Motor Vehicles Acts
   (*b*) Demand No. 30—Road Transport Schemes
   (*c*) Demand No. 43—Capital Outlay on Road Transport Schemes ... ... ... 519-598

4. Statement by Chief Minister—
   Letter from the Prime Minister on the Cauvery Water Distribution ... ... ... 566-570

5. Papers laid on the Table ... ... ... 599



## How to use the index.

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject-matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the Main heading ' Bill(s) '.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., ' Committee(s) ', ' Council(s) ', ' Corporation(s) ', etc.

Various subjects like Schools, Colleges, Conferences, Ports, temples and similar other board subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading " Papers Laid on the Table ".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading " Chair ".

A list of abbreviations used in the Index is given below :—

| | | |
|---|---|---|
| A.M./Ad. Motion | ... | Adjournment Motion |
| Ann. | ... | Announcement |
| B.O.H. | ... | Business of the House |
| C.A. | ... | Calling Attention to a Matter of Urgent Public Importance. |
| C.A. St. | ... | Calling Attention Statement. |
| Consid. | ... | Consideration stage of a Bill. This stage includes :<br>(i) Motion to refer to Select/ Joint Select Committee.<br>(ii) Amendment to refer to Select/Joint Select Committee.<br>(iii) Amendment to circulate. |

Consid.—*cont.*

| | | |
|---|---|---|
| | | (iv) Motion to consider as reported by Select/Joint Select Committee. |
| | | (v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc. |
| Consid. Cl. | ... | Consideration of clauses of a Bill. |
| D.E.E. | ... | Demands for Excess Expenditure. |
| Dis. S.D. or D.S.D | | Discussion for Short Duration on an urgent matter of Administration. |
| D.S.G. | ... | Demands for Supplementary Grants. |
| G.A. | ... | Governor's Address. |
| G.D. | ... | General Discussion. |
| H.A.H. Dis./H.H.D. | ... | Half-hour Discussion. |
| Int. | ... | Introduction stage of a Bill. |
| L.A. | ... | Legislative Assembly. |
| L.C. | ... | Legislative Council. |
| M. | ... | Motion. |
| P.M. | ... | Privilege Motion. |
| R/Res | ... | Resolution. |
| St. | ... | Statement. |

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்.

திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. **மாண்புமிகு திரு. மு. கருணாநிதி (முதலமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பொதுத் துறை நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (.ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, செய்தி, விளம்பரம், திரைப்படச் சட்டம், பயண அனுமதிச் சீட்டுகள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, சரக்குகளின் விலைகள்–வழங்கல் குறித்த சட்டம், தமிழ்நாடு கழிவுநீர்-குடிநீர் வாரியம், குடிசைமாற்று வாரியம்.

2. **மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் (கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சட்டமன்றம்.

3. **மாண்புமிகு திரு. க. அன்பழகன் (பொதுநலத் துறை அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுச் சுகாதாரம், மருத்துவம், கால்நடை வளர்ப்பு.

4. **மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழிலாளர், எழுது-பொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், சீரணி, எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரம், பத்திரப் பதிவு.

5. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து (அரிசன நலத் துறை அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீனவர் நலம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

6. **மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (உணவு-வருவாய்த் துறை அமைச்சர்):** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—உணவு, வணிக வரிகள், வருவாய், மாவட்ட துணை ஆட்சித் தலைவர்கள், வருவாய்த்துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள்.

7. மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப்பொருள்கள், இரும்பு உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும்-பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (பொதுப் பணித் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பொதுப்பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறுபாசனம், நெடுஞ்சாலைகள், முகம்மதியர் அறக்கட்டளைகள்.

9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (கூட்டுறவுத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— கூட்டுறவு, துறைமுகங்கள், வேளாண்மை, மறுநிதி உதவி, மண் வளப் பாதுகாப்புத் திட்டங்கள் நீங்கலாக வேளாண்மை இயக்கத்தின் வேளாண்மைப் பொறியியற் பிரிவு, கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம்.

10. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் (வேளாண்மைத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—வேளாண்மை, உணவு உற்பத்தி.

11. மாண்புமிகு திரு. க. இராசாராம் (பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பின்தங்கிய வகுப்பினர் நலன், சுற்றுலா, வீட்டு வசதி, இட வசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா.

13. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி.

14. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அறநிலையத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— அறக்கட்டளைகள், பால் வழங்கு துறை, முன்னாள் இராணுவ வீரர்கள், பூதான-கிராமதான இயக்கங்கள்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## Governor of Tamil Nadu

Thiru KODARDAS KALIDAS SHAH

1. The Hon. Thiru M. KARUNANIDHI (Chief Minister) : Minister in-charge of Public, Finance, Planning, General Administration, Matters relating to I.C.S. and I.A.S. Officers, District Revenue Officers, Police, Elections, Prohibition, Information and Publicity, Cinematograph Act, Passports, Newsprints Control, Prices and Supplies of Goods Act, Tamil Nadu Drainage and Water Board and Slum Clearance Board.

2. The Hon. Thiru V. R. NEDUNCHEZHIYAN (Minister for Education and Local Administration) : Minister in-charge of Education including Technical Education, Official Language, Municipal Administration, Community Development, Panchayats and Panchayat Unions and Legislature.

3. The Hon. Thiru K. ANBAZHAGAN (Minister for Public Health) : Minister in-charge of Public Health, Medicine and Animal Husbandry.

4. The Hon. Thiru N. V. NATARAJAN (Minister for Labour) : Minister in-charge of Labour, Stationery and Printing, Government Press, Prosperity Brigade, Legislation on Weights and Measures, Statistics and Registration.

5. The Hon. Dr. (Thirumathi) SATYAVANIMUTHU (Minister for Harijan Welfare) : Minister in-charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages, Approved Schools and Vigilance Services, Indians Overseas, Refugees and Evacuees.

6. The Hon. Thiru P. U. SHANMUGAM : (Minister for Food and Revenue) : Minister in-charge of Food, Commercial Taxes, Revenue Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

7. The Hon. Thiru S. MADHAVAN (Minister for Industries) : Minister in-charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. The Hon. Thiru S. J. SADIQ PASHA (Minister for Public Works) : Minister in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Waqfs.

9. THE HON. THIRU SI. PA. ADITANAR (Minister for Co-operation): Minister in-charge of Co-operation, Ports, Agricultural Refinance, Agricultural Engineering Wing of the Directorate of Agriculture except Soil Conservation Schemes, Khadi and Village Industries and Rural Industries Project.

10. THE HON. THIRU A. P. DHARMALINGAM (Minister for Agriculture): Minister in-charge of Agriculture and Food Production.

11. THE HON. THIRU K. RAJARAM (Minister for Backward Classes): Minister in-charge of Backward Classes, Tourism, Housing and Accommodation Control.

12. THE HON. THIRU O. P. RAMAN (Minister for Electricity): Minister in-charge of Electricity, Legislation on Money Lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests and Cinchona.

13. THE HON. THIRU S. RAMACHANDRAN (Minister for Transport): Minister in-charge of Transport, Nationalised Transport and Motor Vehicles Tax.

14. THE HON. THIRU M. KANNAPPAN (Minister for Religious Endowments): Minister in-charge of Religious Endowments, Milk, Ex-Servicemen, Bhoodan and Gramdan.

## தமிழ் நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

---

**பேரவைத் தலைவர்:**

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்

**பேரவைத் துணைத் தலைவர்:**

மாண்புமிகு திரு. பெ. சீனிவாசன்

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்**

திரு. மா. வெ. கரிவேங்கடம்
திருமதி ஜோதி வெங்கடாசலம்
திரு. நா. வீராசாமி
திரு. நீ. அன்புச்செழியன்
திரு. என். கே. பழனிசாமி
திரு. எம். ஏ. லத்தீப்

**சட்டப் பேரவைச் செயலாளர்**

திரு. கா. து. நடராசன், எம்.ஏ., பி.எல்.

**துணைச் செயலாளர்**

திரு. கு. புஜங்க ராவ், பி.ஏ., எல்.எல்.பி.

**உதவிச் செயலாளர்கள்**

திரு. த. இராதாகிருஷ்ணன் (எஸ்டேட் அதிகாரி)
திரு. ஜி. இராகவன்
திரு. சி. கே. இராமசாமி, பி.ஏ., பி.எல்.
திரு. ஆர். மாணிக்கம், பி. எஸ்ஸி., பி.எல்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகரவரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். | தொகுதி |
|---|---|
| (1) | (2) |
| 1 அண்ணாமலை, திரு. சி. வி. எம். .. | காஞ்சிபுரம். |
| 2 அபுசாலி, திரு. எம். ஏ. .. .. | புவனகிரி. |
| 3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை. .. | அரவக்குறிச்சி. |
| 4 அரங்கண்ணல், திரு. இராம. .. .. | எழும்பூர். |
| 5 அழகமுத்து, திரு. து. ப. (அரசாங்க தலைமைக் கொறடா). | உப்பிலியப்புரம். |
| 6 அழகர்சாமி, திரு. சோ. .. .. | கோவில்பட்டி. |
| 7 அழகுத்தேவர், திரு. எஸ். .. .. | சாத்தூர். |
| 8 அனந்தநாயகி, திருமதி த. ந. .. | மயிலாப்பூர். |
| 9 அன்பழகன், மாண்புமிகு திரு. க. (அமைசசர்). .. | புரசைவாக்கம். |
| 10 அன்புச்செழியன், திரு. நீ. .. .. | பெரியகுளம். |
| 11 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.) |
| 12 ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 13 ஆலடி அருணா, திரு. வி. .. .. | ஆலங்குளம். |
| 14 ஆல்டா எம். ஃபௌலர் திருமதி .. | நியமன உறுப்பினர். |
| 15 ஆறுமுகம், திரு. அ. .. .. .. | எடப்பாடி. |
| 16 ஆறுமுகம், திரு. எஸ். .. .. .. | வீரபாண்டி. |
| 17 ஆறுமுகம், திரு. சி. .. .. .. | மதுராந்தகம். |
| 18 இரத்தினசபாபதி, திரு. மு. .. .. | விளாத்திகுளம். |
| 19 இராசகோபால், திரு. க. மு. .. .. | உத்திரமேரூர். |
| 20 இராசகோபால், திரு. வீ. .. .. | வந்தவாசி (செ.வ.) |
| 21 இராசமாணிக்கம், திரு. அ. .. .. | நாகப்பட்டினம். |
| 22 இராசமாணிக்கம், திரு. கு. .. .. | ஆடுதுறை. |
| 23 இராசரத்தினம், திரு. டி. .. .. | ஸ்ரீபெரும்புதூர். |
| 24 இராசாராம், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | சேலம்-II. |
| 25 இராசு, திரு. ஜே. எஸ். .. .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 26 இராதாகிருட்டிணன், திரு. எம். எஸ். .. | தண்டராம்பட்டு. |
| 27 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. .. | பரங்கிமலை. |
| 28 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்). | பண்ருட்டி. |
| 29 இராமநாதன், திரு. சி. .. .. | அறந்தாங்கி. |
| 30 இராமலிங்கம், திரு. இரா. .. .. | தூத்துக்குடி. |
| 31 இராமலிங்கம், திரு. செ. .. .. | கடலாடி (செ.வ.) |
| 32 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு (செ.வ.) |
| 33 இராமன், திரு. மூ. .. .. .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 34 இராஜாங்கம், திரு. என். .. .. | குறிஞ்சிப்பாடி (செ.வ.) |
| 35 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே. .. | கன்னியாகுமரி. |
| 36 இளங்கோவன், திரு. கோ. .. .. | திருவையாறு. |
| 37 இளஞ்செழியன், திரு. வீ. சா. .. .. | விராலிமலை. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 38 எட்டியப்பன், திரு. பூ. | பெரணமல்லூர். |
| 39 எட்மண்ட், திரு. க. உரொ. | திருச்செந்தூர். |
| 40 கணபதி, திரு. நா. | பாபநாசம். |
| 41 கணபதி, திரு. டி. | நாங்குனேரி. |
| 42 கணேசன், திரு. எல். | ஒரத்தநாடு. |
| 43 கணேசன், திரு. சி. | குற்றாலம். |
| 44 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | இணைத்துக்கடவு. |
| 45 கண்ணன், திரு. எம். ஆர். | பேலின்பிரிட்ஜ். |
| 46 கதிரவன், திரு. கா. மு. | தென்காசி. |
| 47 கந்தசாமி, திரு. கே. பி. | சாத்தான்குளம். |
| 48 கந்தசாமி, திரு. எம். | குளித்தலை. |
| 49 கந்தப்பன், திரு. செ. | திருச்செங்கோடு. |
| 50 கரிவேங்கடம், திரு. மா. வெ. | பாலக்கோடு. |
| 51 கருணாநிதி, மாண்புமிகு திரு. மு. (முதல் அமைச்சர்). | சைதாப்பேட்டை. |
| 52 கருணாநிதி, திரு. தாழை மு. | திருவாரூர் (செ.வ.) |
| 53 கருணாநாதன், திரு. சோ. | கூனூர். |
| 54 கருப்பையா, திரு. ஆ. | கங்கைகொண்டான் (செ.வ.). |
| 55 காசிராமன், திரு. நா. | கும்பகோணம் |
| 56 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி, திரு. | முதுகளத்தூர். |
| 57 காமாட்சி, திரு. கு. | திருவரம்பூர். |
| 58 கார்த்திகேசன், திரு. வீ. | இராதாபுரம். |
| 59 காவேரிமணியம், திரு. சொ. | திருப்பரங்குன்றம். |
| 60 காளிமுத்து, திரு. கா. | சிவகாசி. |
| 61 கிட்டப்பா, திரு. என். | மாயூரம். |
| 62 கிருட்டிணன், திரு. நா. | பேரணம்பட்டு, (செ. வ.) |
| 63 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிக்குப்பம். |
| 64 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ. | திருச்சிராப்பள்ளி-1. |
| 65 கிருஷ்ணன், திரு. கே. ஆர். | ஊத்தங்கரை. |
| 66 குப்பல் ராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். | மதுரை (கிழக்கு). |
| 67 குமாரசாமி, திரு. அ. சே. | திருக்கோயிலூர். |
| 68 குமாரசாமி, திரு. கே. என். | பல்லடம். |
| 69 குருசாமி, திரு. நா. வெ. | ஆண்டிப்பட்டி. |
| 70 கேசவலு, திரு. தே. | கள்ளக்குறிச்சி. |
| 71 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். | உதனப்பள்ளி. |
| 72 கோபால், திரு. எம். | குன்னத்தூர், (செ. வ.) |
| 73 கோபால், திரு. கே. பி. | கம்பம். |
| 74 கோபால், திரு. பி. | கோயம்புத்தூர் மேற்கு. |
| 75 கோவிந்தசாமி, திரு. வி. செ. | காவேரிப்பட்டினம். |
| 76 கோவிந்தராசன், திரு. ஆர். | கடலூர். |
| 77 கோவிந்தராசன் துரை, திரு. | கந்தர்வகோட்டை. |



| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி (2) |
|---|---|
| 78 கோவிந்தன், புலவர் கா. | செய்யாறு. |
| 79 கோவை செழியன், திரு. | காங்கேயம். |
| 80 சகாதேவன், திரு. எஸ். | செஞ்சி. |
| 81 சங்குமுத்து தேவர், திரு. ச. | அம்பாசமுத்திரம். |
| 82 சதாசிவம், திரு. சே. | ஆண்டிமடம். |
| 83 சண்முகசுந்தரம், திரு. அ. ப. | பொள்ளாச்சி. |
| 84 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணாமலை. |
| 85 சண்முகம், திரு. பெரி. | திருவாடானை. |
| 86 சண்முகம், திரு. மு. | விழுப்புரம். |
| 87 சத்தியமூர்த்தி, திரு. மு. | புதுக்கோட்டை. |
| 88 சத்தியவாணிமுத்து, மாண்புமிகு டாக்டர் (திருமதி) (அமைச்சர்). | பெரம்பூர் (செ.வ.) |
| 89 சத்தியேந்திரன், திரு. எம். எஸ். கே. | இராமநாதபுரம். |
| 90 சம்பத், திரு. டி. வி. | செம்பனார்கோயில். |
| 91 சாதிக்பாட்சா, மாண்புமிகு திரு. எஸ். ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 92 சாரதி, திரு. மா. பா. | வேலூர். |
| 93 சிதம்பரம், திரு. சித. | காரைக்குடி. |
| 94 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. | சேரன்மகாதேவி. |
| 95 சிவபெருமாள், திரு. கோ. | அரியலூர். |
| 96 சிறைமீட்டான், திரு. தொ. க. | பரமக்குடி, (செ. வ.) |
| 97 சீனிவாசன், திரு. பெ. (பேரவைத் துணைத் தலைவர்). | விருதுநகர். |
| 98 சீனிவாசன், திரு. தொ. ப. | போளூர். |
| 99 சின்னசாமி, திரு. அ. | செயங்கொண்டன் (செ.வ.) |
| 100 சின்னசாமி, திரு. ஆர். | தர்மபுரி. |
| 101 சின்னசாமி, திரு. மு. | மொடக்குறிச்சி. |
| 102 சின்னசாமி, டாக்டர் வ. | ஏற்காடு (ஆ.வா.). |
| 103 சின்னராசு, டாக்டர் ச. அ. | ஹரூர், (செ.வ.) |
| 104 சின்ன வெள்ளையன், திரு. சி. | சேந்தமங்கலம் (ஆ.வ.) |
| 105 சுந்தரம், திரு. ஒ. என். | திண்டுக்கல். |
| 106 சுப்ரமணியம், திரு. எஸ். கே. | சத்யமங்கலம் |
| 107 சுப்பிரமணியம், திரு. கே. எம். | தியாகராயநகர். |
| 108 சுப்பிரமணியன், திரு. மா. | ஈரோடு. |
| 109 சுப்பு, திரு. க. | ராஜபாளையம். |
| 110 சுப்பையா, திரு. ஆ. கு. | கோட்டூர் (செ.வ.). |
| 111 சுப்பையா, திரு. கே. வி. | ஆலங்குடி. |
| 112 சுப்பையா, திரு. ச. | சங்கரன்கோயில் (செ.வ.) |
| 113 சுப்பையா, திரு. ஏ. ஆர். | கடயநல்லூர். |
| 114 சுப்பிரமணியம், திரு. ஏ. | சிங்கநல்லூர். |
| 115 சுப்பிரமணியன், திரு. வீ. | உளுந்தூர்பேட்டை. |
| 116 சுருளிவேல், திரு. மு. | போடிநாயக்கனூர். |
| 117 சுரேந்திரன், திரு. எம. | மேட்டூர். |
| 118 சுவாமிதாஸ், திரு. ஏ. | பத்மநாபபுரம். |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 119 செபமாலை, திரு. கோ. | மங்களூர் (செ.வ.). |
| 120 ஜெயராமன், திரு. கி. | சேலம்-1. |
| 121 செல்லதுரை, திரு. வீ. | ஓமலூர் (செ.வ.). |
| 122 செல்லையா, திரு. குழ. | பேராவூரணி. |
| 123 செல்வராஜ், திரு. எம். | விருத்தாசலம். |
| 124 சேதுராமன், திரு. சி. | சிவகங்கை. |
| 125 சோலையா, திரு. த. | மானாமதுரை. |
| 126 சோமசுந்தரம், திரு. ந. | வலங்கைமான் (செ.வ |
| 127 சௌடி சுந்தரபாரதி, திரு. | அருப்புக்கோட்டை. |
| 128 சௌந்திரபாண்டியன், திரு. பெ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 129 டென்னிஸ், திரு. என். | கிள்ளியூர். |
| 130 தங்கமணி, திரு. கே. டி. கே. | மதுரை மேற்கு. |
| 131 தர்மலிங்கம், மாண்புமிகு திரு. அ. பெ. (அமைச்சர்). | திருச்சிராப்பள்ளி-2. |
| 132 தருமலிங்கம், திரு. ந. | ரிஷிவந்தியம் (செ.வ.) |
| 133 தவமணித் தேவர், திரு. வி. | சேடப்பட்டி. |
| 134 திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி. | நாட்றம்பள்ளி. |
| 135 தியாகராசன், திரு. அ. | திருமயம். |
| 136 தியாகராசன், திரு. இ. எஸ். | திருத்தணி. |
| 137 திருப்பதி, திரு. கு. | மதுரை சென்ட்ரல். |
| 138 துரைசாமி, திரு. எ. க. | குடியாத்தம். |
| 139 துரைசாமி, திரு. சு. | திருப்பூர். |
| 140 துரைமுருகன், திரு. | காட்பாடி. |
| 141 துரைராஜ், திரு. சு. ம. | திருவள்ளூர் (செ.வ.). |
| 142 தூயமணி, திரு. மே. சி. | மேட்டுப்பாளையம். |
| 143 தேவராசன், திரு. எம். | உதகமண்டலம். |
| 144 தேவேந்திரன், திரு. அ. | நன்னிலம் (செ.வ.). |
| 145 தோப்பூர் திருவேங்கடம், திரு. | கணியம்பாடி. |
| 146 நடராசன், திரு. ஈ. எம். | அந்தியூர். |
| 147 நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர். |
| 148 நரசிம்மன், திரு. ஏ. சி. | ஆரணி. |
| 149 நல்லசாமி, திரு. எஸ். | கரூர். |
| 150 நாகராஜன், திரு. க. | வடமதுரை. |
| 151 நாகலிங்கம், திரு. பா. | பொன்னேரி (செ.வ ). |
| 152 நாச்சிமுத்து, திரு. நா. | ஒட்டன்சத்திரம். |
| 153 நாச்சியப்பன், திரு. எ. எம். டி. | ஆத்தூர். |
| 154 நாச்சியப்பன், திரு. ந. | சங்கராபுரம். |
| 155 நாராயணசாமி, திரு. மா. வே. | திருவொற்றியூர். |
| 156 நெடுஞ்செழியன், மாண்புமிகு திரு. இரா. (அமைச்சர்—பேரவை முன்னவர்). | திருவல்லிக்கேணி. |
| 157 நைனாமலை, திரு. இரா. | ராசிபுரம். |
| 158 பத்மநாபன், திரு. பொ. | திருநெல்வேலி. |
| 159 பத்மாவதி, திருமதி எ. கோ. | முகையூர். |



| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி (2) |
|---|---|
| 160 பரந்தாமன், திரு. ஆ. | கடம்பத்தூர். |
| 161 பரமசிவம், திரு. எம. | தாரமங்கலம் |
| 162 பலராமன், திரு. என். எஸ். | அரக்கோணம். |
| 163 பழனிசாமி, திரு. நா. | பொங்கலூர். |
| 164 பழனிசாமி, திரு. என். கே. | பெருந்துறை. |
| 165 பழனிசாமி, திரு. மு. | வெள்ளக்கோயில். |
| 166 பழனிச்சாமி, புலவர். சி. | பழனி (செ.வ.). |
| 167 பழனியப்பன், டாக்டர் ச. மு. | கோபிசெட்டிபாளையம். |
| 168 பழனியம்மாள், திருமதி வி. ப. | தாராபுரம். |
| 169 பழனிவேலன், திரு. க. | வரகூர். |
| 170 பழனிவேலன், திரு. மு. | நாமக்கல். |
| 171 பழனிவேலு, திரு. வி. | ஆத்தூர். |
| 172 பழனிவேல் ராஜன், திரு. | தேனி. |
| 173 பன்னீர்செல்வம், திரு. எம். | ஆம்பூர் (செ.வ.). |
| 174 பாண்டுரங்கம், திரு. சி. | செங்கம் (செ.வ.). |
| 175 பாலகிருட்டிணன், திரு. கு. | மன்னார்குடி. |
| 176 பாலசுந்தரம், திரு. வை. | அச்சரபாக்கம் (செ.வ.). |
| 177 பாலையா, திரு. எ. | கொளச்சல். |
| 178 பெரியசாமி, திரு. கு. | கொடவாசல். |
| 179 பெரியசாமி, திரு. தி. ஒ. | அவிநாசி. |
| 180 பெருமாள், திரு. செ. | காட்டுமன்னார்கோயில். |
| 181 பெருமாள், திரு. எ. ஆர். | காரியப்பட்டி. |
| 182 பொம்மன், திரு. கு. அ. | கூடலூர் (செ.வ.). |
| 183 பொன்சொக்கலிங்கம், திரு. பி. | சிதம்பரம். |
| 184 பொன்னப்ப நாடார், திரு. ஆர். | விளவங்கோடு. |
| 185 பொன்னுமலை, திரு. தி. | பனைமரத்துப்பட்டி. |
| 186 பொன்னுரங்கம், திரு. எ. எம். | சோளிங்கபுரம். |
| 187 மணலி கந்தசாமி, திரு. சி. | திருத்துறைப்பூண்டி. |
| 188 மணியன், திரு. பி. எஸ். | சோழவந்தான். |
| 189 மதியழகன், மாண்புமிகு திரு. கே. எ. (பேரவைத் தலைவர்). | ஆயிரம் விளக்கு. |
| 190 மருதாசலம், திரு. என். | பேரூர் (செ.வ.). |
| 191 மலைக்கண்ணன், திரு. வீ. | இளையாங்குடி. |
| 192 மலைச்சாமி, திரு. பெ. | மேலூர் வடக்கு. |
| 193 மன்னியப்பன், திரு. சி. | கிருஷ்ணகிரி. |
| 194 மாணிக்கம், திரு. என். | பென்னகரம். |
| 195 மாணிக்கவாசகம், திரு. இரா. | தொண்டாமுத்தூர். |
| 196 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். |
| 197 மாரிமுத்து, திரு. எ. ஆர். | பட்டுக்கோட்டை. |
| 198 மாரிமுத்து, திரு. மூ, | தலைவாசல் (செ.வ.). |
| 199 மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம். |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | | தொகுதி. (2) |
|---|---|---|
| 200 | முகமது காதர் முகைதீன், திரு. எஸ். | மேலப்பாளையம். |
| 201 | முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந. | லால்குடி. |
| 202 | முத்து, திரு. வ. | சங்கரி (செ.வ.). |
| 203 | முத்துசாமி, திரு. ப. | வேடசந்தூர். |
| 204 | முத்துச்செல்வன், திரு. பு. செ. | முசிரி. |
| 205 | முத்துவேல், திரு. ந. | வானூர் (செ.வ.). |
| 206 | முத்தையா, திரு. கே. கே. | கடலூர். |
| 207 | முத்தையா, திரு. எம். | ஒட்டப்பிடாரம் (செ.வ.). |
| 208 | முருகையன், திரு. எஸ். | கலசப்பாக்கம். |
| 209 | முனியாண்டி, திரு. ஆ. | நிலக்கோட்டை (செ.வ). |
| 210 | முனு ஆதி, திரு. மு. | திருப்போரூர். |
| 211 | முனுசாமி, திரு. ரா. ரா. | மேல்மலையனூர். |
| 212 | மொய்தீன், திரு. திருப்பூர் ஏ. எம். | துறைமுகம் (சென்னை நகரம்). |
| 213 | மோசஸ், திரு. ம. | நாகர்கோவில். |
| 214 | ரங்கநாதன், திரு. கே. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 215 | ராமசாமி, திரு. இ. | வால்பாறை. |
| 216 | ராமசாமி, திரு. ஜி. | திருப்பத்தூர். |
| 217 | ராமராசன், திரு. வ. க. | பவானிசாகர் (செ.வ.). |
| 218 | ராஜா, திரு. ஏ. எம். | பவானி. |
| 219 | ராஜாராம், திரு. ஜி. | திண்டிவனம். |
| 220 | ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ. | திருமங்கலம். |
| 221 | லத்தீப், திரு. எம். ஏ. | வாணியம்பாடி. |
| 222 | வகாப், திரு. கே. ஏ. | ராணிப்பேட்டை. |
| 223 | வடிவேலு, திரு. சீ. க. | தோட்டியம். |
| 224 | வடிவேல், திரு. எஸ். | சீர்காழி (செ.வ.). |
| 225 | விசுவநாதன், திரு. செ. கோ. | செங்கல்பட்டு. |
| 226 | வீராசாமி, திரு. நா. | ஆற்காடு. |
| 227 | வெங்கடசாமி, திரு. பி. | ஹோசூர். |
| 228 | வெள்ளத்துரை, திரு. அ. | வாசுதேவநல்லூர். |
| 229 | வேதாசலம், திரு. மு. | வண்ணாரப்பேட்டை. (சென்னை நகரம்). |
| 230 | வேலப்பன், திரு. சி. வே. | கபிலமலை. |
| 231 | வேழவேந்தன், திரு. கா. | கும்மிடிபூண்டி. |
| 232 | ஜேம்ஸ், திரு. ஜே. | திருவட்டார். |
| 233 | ஜோதி வெங்கடசாலம், திருமதி | ஸ்ரீரங்கம் (செ.வ.). |
| 234 | ஹாண்டே, டாக்டர் எச். வி. | பார்க் டவுன் (சென்னை நகரம்). |
| 235 | வெற்றிடம் | உசிலம்பட்டி. |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.**

| தொடர் எண்ணும், பெயரும். | | |
|---|---|---|
| 1 | மாண்புமிகு திரு. என். வி. நடராசன் | அமைச்சர். |
| 2 | திரு. எஸ். கோவிந்த் சுவாமிநாதன் | தலைமை வழக்கறிஞர். |

# தமிழ் நாடு சட்டப் பேரவை.

**சனிக்கிழமை, 1971 ஜூலை 17.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

### நூலகத்துறைக்கு இயக்குநர்

*280 வினா—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நூலகத் துறைக்குத் தனி இயக்குநர் ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இல்லை.

**திரு. பி. எஸ். மணியன்:** இப்பொழுது நூலகத்தினுடைய நிர்வாகம் பலதரப்பட்ட நிர்வாகத்திலிடத்திலே இருக்கிறது. இவைகளையெல்லாம் ஒன்று சேர்த்து, ஒவ்வொரு பகுதியிலும்—சிறிய கிராமங்களிலும் கூட—நூலகத்தை ஏற்படுத்தி, நம்முடைய அரசின் சாதனைகளைத் தெளிவாகப் பரப்பக்கூடிய நூல்களை வெளியிடுவதற்கும் தனியாக இயக்குநர் ஒருவரை நியமிக்க அரசு ஆலோசனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, நூலக ஆணைக் குழுவினுடைய மாநிலத் தலைவருக்குப் பதில் கல்வி இயக்குநரே இப்பொழுது அந்தப் பணிக்குப் பொறுப்பாக இருந்து வருகிறார்கள். அவருக்குக் கீழே ஒரு தனி சிறப்பு அலுவலரும் இந்தப் பணிகளை ஏற்று நடத்திக்கொண்டு வருகிறார்கள். இதற்காக இயக்குநர் அளவில் ஒரு தனி இயக்குநரை நியமிக்க வேண்டிய அவசியம் இப்பொழுது ஏற்படவில்லை.

நூலகத்தைப் பொறுத்தவரையிலும் மேலும் வளர்ச்சியுறுவதற்கு வகையில்லாமல் கிடைக்கின்ற தொகை நிர்வாகச் செலவுக்கே பெரிதும் பயன்படுகிற சூழ்நிலை இப்பொழுது இருந்து வருகிறது. அதனுடைய நிதி வசதிகளை எப்படி. எப்படிப் பெருக்கலாம் என்பதைப்பற்றி அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது. அதற்காக நூலக ஆணைக்குழுத் தலைவர்களை

யெல்லாம் கூட்டிவைத்து, கூட்டம் நடத்தி, அதில் சிலபல யோசனைகளைச் செய்ததற்குப் பிறகு முடிவு எடுக்கலாம் என்று அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது. இப்பொழுதுள்ள சூழ்நிலையின்படி நூலகங்களுக்கு என்று தனியாக இயக்குநர் நியமிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று அரசு கருதுகிறது.

திரு. இ. எஸ். தியாகராசன்: தலைவர் அவர்களே, மாவட்ட நூலகக் குழுவிற்கு தற்போது உள்ளது போன்று ஜில்லாக் கல்வி அதிகாரியே செயலாளராக இல்லாமல், தனியாக செயலாளர் ஒருவரை நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, சென்னை மாவட்ட நூலக ஆணைக் குழுவுக்கு மட்டும் தனியாகச் செயலாளர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அதுபோன்று ஒரு சில இடங்களில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மற்ற இடங்களில் டி.ஈ.ஓ. அவர்களையே பார்த்துக் கொள்ளும்படியாகக் கேட்டிருக்கிறோம். நூலக ஆணைக்குழுத் தலைவர்கள் கூடிப் பரிசிலித்த பிறகு ஒரு தனி அலுவலரை நியமிக்கவேண்டிய அவசியம் ஏற்படுமானால் அதுபற்றி யோசிக்கலாம்.

திரு. எஸ். ஆறுமுகம்: தனி இயக்குநர் நியமிக்கப்படுவதற்கு முன்னால் மாவட்ட நூலக ஆணைக்குழுத் தலைவர்களை அழைத்துப் பேசுவதாக அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். சேலம் மாவட்டத்தில் நூலக ஆணைக்குழுத் தலைவர் தேர்தல் நீண்ட காலமாக நடத்தப்படாமல் தலைவர் பதவி நிரப்பப்படாமல் அப்படியே இருக்கிறதே, அதற்குக் காரணம் என்ன? தலைவர் தேர்தலை விரைவில் நடத்துவதற்கு அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, சேலம் மாவட்ட நூலக ஆணைக் குழுவிற்குத் தலைவர் தேர்தல் ஏன் நடைபெறவில்லை என்பதற்கான குறிப்புகள் இப்பொழுது இல்லை. அதற்கான காரணம் என்ன என்பதை ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்க முயற்சி செய்யலாம்.

திரு. பெ. சௌந்திரபாண்டியன்: தலைவர் அவர்களே. ஊராட்சி ஒன்றிய நூலகங்களையும் தனிப்பட்ட நிர்வாகத்திலுள்ள நூலகங்களையும் அரசாங்கமே ஏற்று நடத்துவதற்கு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்பொழுது இயங்குகின்ற நூலகங்களெல்லாம் 1948-ம் ஆண்டு சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. அவற்றுக்காக லெவியிலிருந்தும் ஈட்டு மானியமாகவும் தொகை அளிக்கப்படுகிறது. அந்த நிதி நிரந்தரமாக ஒரே அளவில் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவேதான் புதிய புதிய கிளை நூலகங்களை உருவாக்க முடியாமலும் புதிய நூலகங்களைத் துவக்க



முடியாமலும் அவை அதே நிலையில் தவித்துக்கொண்டிருக்கின்றன. நிதி வசதிகளை எவ்வாறு பெருக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம். இப்போதே அரசாங்கம் நேரடியாக ஏற்று நூலகங்களை நடத்தவில்லை. நூலக ஆணைக்குழுதான் அதற்கேற்ற சட்டப்படி இப்பொழுது நிர்வகித்து வருகிறது.

திரு. ஏ. சி. நரசிம்மன்: நூலக ஆணைக்குழு ரெவின்யூ டிஸ்ட்ரிக்டுக்கு ஒன்று வீதம் இப்பொழுது இருக்கிறது. அதை மாற்றி, கல்வி மாவட்டத்திற்கு ஒரு நூலக ஆணைக்குழு அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ரெவினியூ மாவட்டத்திற்கு ஒரு நூலக ஆணைக்குழு வைத்து நிர்வகிப்பதே இப்பொழுது கடினமான ஒன்றாக இருக்கும்போது, அதை கல்வி மாவட்டத்திற்கு ஒன்றாக வைப்பதின் மூலம் இன்னும் பல சிரமங்கள் ஏற்படக்கூடும். ஏராளமான நூலகங்கள் இருந்து தனியாக இயக்குநர் இருந்து அவற்றை நிர்வகிக்க வேண்டுமானால் அதுபற்றி அப்பொழுது யோசித்துக்கொள்ளலாம். இப்போதே மேலும் பரவுவதற்கேற்ற வகையில் சூழ்நிலை இல்லாததற்குக் காரணம் நிதி வசதியின்மை என்று எடுத்துச் சொன்னேன். இப்பொழுதிருக்கும் சூழ்நிலையிலும் மேலும் இரண்டு மாவட்ட ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட வேண்டியிருக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டத்திற்கு இந்தச் சட்டத்தை விரிவுபடுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். தர்மபுரி மாவட்டத்தைத் தனியாகப் பிரித்ததனால் அதற்கு ஒரு நூலக ஆணைக்குழு அமைக்கும் முயற்சியை அரசாங்கம் எடுத்து வருகிறது. இப்பொழுது ரெவினியூ மாவட்ட அளவில்தான் நூலக ஆணைக்குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய வளர்ச்சியின் தன்மையைப் பொறுத்து எதிர்காலத்தில் வேண்டுமென்றால் சிந்திக்கலாமே தவிர, இப்பொழுது கல்வி மாவட்ட அளவில் தனி இயக்குநர் அமைக்கவேண்டிய அவசியம் இல்லை.

திரு. ஆ. கு. சுப்பையா: மாவட்ட நூலகங்களுக்குப்போதுமான நிதி வசதி இல்லை என்று மாவட்ட நூலகங்களிடமிருந்து அரசாங்கத்திற்கு முறையீடு வந்ததா? அப்படியாயின் அந்த முறையீடு சம்பந்தமாக அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்று கூறமுடியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, சிலபல மாவட்ட நூலக ஆணைக்குழுக்களிடமிருந்து அந்த முறையீடு வந்திருக்கிறது. ஆகவே, போதுமான அளவுக்கு நிதி வசதி, அட் ஹாக் கிராண்ட் பல வகையிலே தரவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அதையும் ஒரு குறிப்பிட்ட மாவட்டத்திற்குத் தர இயலாது. எல்லா மாவட்டங்களிலிருந்தும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். லாண்டு செஸ் மூலமாகவும், ஈட்டு மானியம் மூலமாகவும் தொகையைக் கொடுத்துக்கொண்டு வந்தும்,

அது ஒரு நிலையான வருவாயாக இருப்பதால் வளர்ச்சி ஏற்படுவதற்கு இடமில்லாமலிருக்கிறது. தேவைக்கேற்றபடி, அதனுடைய அலுவல்கள் வளருவதற்கேற்றபடி, நிதி வசதியை வளர்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அதுபற்றித்தான் விரைவில் அரசாங்கம் முடிவு எடுக்கவேண்டியதாக இருக்கிறது.

THIRUMATHI JOTHI VENCATACHELLUM: Is there any proposal before the Government to amend the Public Libraries Act, 1948?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இப்பொழுது அந்தச் சட்டத்தைத் திருத்துகிற யோசனை இல்லை. நூலக ஆணைக்குழுத் தலைவர்களையெல்லாம் அழைத்து ஒரு கூட்டம் கூட்டலாம்—அநேகமாக அடுத்த திங்களிலே கூட்டலாம்—என்று அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. அவர்களுடைய அனுபவத்தின் அடிப்படையில் எதை எதை எடுத்துச் சொல்லுகிறார்களோ, அதற்குப் பிறகு இதைத் திருத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டால் திருத்தலாம் என்று அரசு எண்ணிக் கொண்டிருக்கிறது.

**திரு. இரா. இராமலிங்கம்:** மாவட்ட நூலக ஆணைக்குழுவிற்கு, நகர மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவைகளிலிருந்து வரவேண்டிய நிதி உரிய காலத்தில் வரவில்லை. அதற்காக அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, வசூலிப்பது அவர்களுக்கே கடினமாக இருப்பதால் சில சமயங்களில் வரவில்லை. ஆகவே, நூலக ஆணைக்குழுவிற்குச் சேரவேண்டிய நிதிகளை அந்தந்த ஊராட்சி ஒன்றியங்கள் சேர்க்க வேண்டுமென்று தாக்கீது அவ்வப்போது அனுப்பப்பட்டு வருகிறது. மேலும் தீவிரப்படுத்தும் முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

**திரு. எஸ். முருகையன்:** மாநில அளவில் தனியாக இயக்குநர் அமைக்கத் தேவையில்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். பல மாவட்டங்களில் மாவட்டக் கல்வி அதிகாரிகளிடத்தில் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் இதைச் சரியான முறையில் கவனிக்க இயலாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதனால் பல நூலகங்கள் சரியான முறையில் இயங்காத நிலையில் இருந்துகொண்டிருக்கின்றன. அதற்கு வேண்டிய சிப்பந்திகளுக்கெல்லாம் சம்பளம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நூலகங்கள் சரியான முறையில் இயங்க அவற்றுக்கென்று தனி அதிகாரியை நியமிக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இப்போதே நூலகக் குழுக்களை இயக்குவிப்பது, நிதியைப் பொறுத்த வரையில், கமமமாக இருக்கிறது என்று கூறினேன்.



அதற்கென்று தனி இயக்குநர் நியமித்து, அவருக்குப் பெருந் தொகை சம்பளம் தந்து, அவற்றை எடுகட்ட வேண்டிய வகையில் நூலக ஆணைக்குழு இயங்க முடியுமா என்பது ஐயப்பாட்டுக்குரிய ஒன்றாகும். அதற்காகத்தான் அடிப்படையாக இருக்கும் பிரச்சினைகளை ஆராய்ந்து, விரிவுபடுத்தி, அதற்கென்று தனி அதிகாரி போட வேண்டிய அவசியம் ஏற்படுமானால் அப்பொழுது போடலாம். இதனுடைய செலவை அந்த நூலக ஆணைக்குழு ஏற்றுக்கொள்ளும் வன்மை பெறவேண்டும். இதையெல்லாம் யோசித்து, கலந்தாலோசிக்கும் கட்டத்தில் அரசு இருக்கிறது.

THIRU B. VENKATASWAMY: Is it not a fact that local library authorities are not supplying Telugu, Kannada and Urdu books to the local libraries?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அதைப்பற்றிய குறிப்பு இல்லை. அப்படி வாங்கக்கூடாது என்று தடை எதுவும் இல்லை. எந்தெந்தப் பகுதியில் என்னென்ன புத்தகங்கள் தேவைப்படுகின்றனவோ அந்தந்தப் பகுதியில் அந்தந்தப் புத்தகங்களை வாங்கிக்கொள்ளுகிறார்கள். ஒருசில பகுதிகளில் கன்னடப் புத்தகங்கள் தேவைப்படுமானால் அவற்றை அங்கே வாங்கி வைக்கிறார்கள். செங்கற்பட்டு மாவட்ட நூலக ஆணைக்குழு தெலுங்கு பகுதிகளில்—குறிப்பாக ப்ரொடத்தூர் பேட்டையில்—தெலுங்கு பேசும் மக்கள் படிப்பதற்கு ஏற்ற வகையில் தெலுங்குப் புத்தகங்கள் வாங்கி வைக்கிறார்கள். எங்கெங்கே குறைபாடு இருந்து, தெலுங்குப் புத்தகங்கள் தேவை என்று நூலக ஆணைக்குழுவிற்கு எழுதி அனுப்பினால் அதன்மீது தக்க கவனத்தைச் செலுத்தி அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

### *Revision of property tax by Madras Corporation.*

*281 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Corporation of Madras has requested the Government in 1970 to permit it to revise the property tax; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** 1—10—1970 முதல் ரூ. 7000-க்கும் மேற்பட்ட மதிப்பீடுள்ள சொத்துகளுக்கு தற்போதுள்ள 25 சதவிகித வரியை 30 சதவிகிதமாகத் திருத்துவது பற்றி அரசின் ஒப்புதலை சென்னை மாநகராட்சி ஆணையர் கோரியுள்ளார். அதற்கான சென்னை நகர நகராட்சி நகராண்மை சட்டம் பிரிவு 99-ல் உள்ள பிரிவு 2-உள்ள சரத்தைத் திருத்தலாம் என்றும் அவர் ஒரு யோசனை கூறியுள்ளார். மேற்படி சரத்தை திருத்துவது பற்றி ஆலோசனை அரசின் கவனத்தில் இருந்து வருகிறது.

[1971 ஜூலை 17

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, சென்னை நகரத்தில் தனிப்பட்டவர்கள் இருபது முப்பது வீடுகளை வாங்கி வைத்துக் கொண்டு அவற்றை வாடகைக்கு விட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதைத் தடுக்கின்ற வகையில் இன்கம் டாக்ஸ்க்கு ஸ்லாப் இருப்பதைப் போல் ஒரு லட்சம் ரூபாய்க்கு சொத்து இருந்தால் 25 சதவிகிதத்தில் இருந்து 30 சதவிகிதம் வரையிலும், ரூபாய் 10 லட்சத்திற்கு மேல் போனால் 35 சதவிகிதம் வரி வசூலிப்பது என்றும் நகராட்சிமன்றத்திற்கு அனுமதி அளிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்போதிருக்கிற மாநகராட்சிச் சட்டத்தின் கீழ் அவர்கள் சொத்து வரியாக 15 சதவிகிதத்தில் இருந்து 25 சதவிகிதம் வரையில் போட்டுக் கொள்ளலாம் என்று உரிமை வழங்கப் பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில்தான் சென்னை நகராட்சி மன்றம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல் ஸ்லாப் ஸிஸ்டத்தின் அடிப்படையில்தான் வைத்திருக்கிறார்கள். ஆண்டு வருமானத்தைப் பொறுத்து ரூ. 500-ம் அதற்கும் கீழ் இருந்தால் 15 சதவிகிதம் விதிக்கப்படுகிறது. ரூ. 500 முதல் ரூ. 1,000 வரை வருமானம் இருந்தால் 19 சதவிகிதம் விதிக்கப்படுகிறது. ரூ. 1,000-க்கு மேல் ரூ. 7,000 வரையில் 20 சதவிகிதம் விதிக்கப் படுகிறது. ரூ. 7,000-க்கு மேல் 25 சதவிகிதம் விதிக்கப்படுகிறது. அது இப்போது திருத்தப்பட்டு அரசினருடைய அனுமதிக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதில் ரூ. 500 ம் அதற்குக் கீழே உள்ள 15 சதவிகிதம் என்பதை மாற்ற வேண்டாமென்று நிறுத்தி இருக்கிறார்கள். ரூ. 500-க்கு மேல் ரூ. 1,000 வரையில் இருப்பதை 19 சதவிகிதத்திலிருந்து 21 சதவிகிதமாக மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ரூ. 1,000-க்கு மேல் ரூ. 5,000 வரை இருப்பதை இப்போது 20 சதவிகிதம் என்றிருப்பதை 22½ சதவீத மாக உயர்த்த வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ரூ. 5,000 முதல் ரூ. 7,000 வரையில் 25 சதவிகிதமாக உயர்த்தவேண்டுமென்றும் அதற்கு மேல் உள்ளதை 30 சதவிகிதமாக உயர்த்தவேண்டு மென்றும் கோரியிருக்கிறார்கள். 25 சதவிகிதம் வரை உயர்த்து வதற்கு இப்போதுள்ள சட்டமே இடம் கொடுக்கிறது. ஆனால் 30 சதவிகிதமாக உயர்த்தவேண்டுமென்றால் அதற்குரிய சட்டம் திருத்தப்படவேண்டும். அதை ஏற்றித்தருமாறு மாநகராட்சி மன்றம் அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிறது. இது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. அதற்குரிய விதிகள் திருத்தப்பட்ட பிறகு எவ்வளவு அனுமதிக்கிறோமோ அதற்குள்ளாக உள்ள சதவிகித அடிப்படையில் மாநகராட்சி மன்றம் வரி விதிக்கலாம். இப்போது மதுரை மாநகராட்சி மன்றத்திற்குக் கூட 35 சதவிகிதம் வரையில் விதித்துக் கொள்ளலாம் என்று வரம்பு கட்டியிருக்கிறோம். அதற்குள் மாநகராட்சி மன்றம் விரும்பத்தக்க அளவிற்குப் போட்டுக் கொள்ளலாம்.



1971 ஜூலை 17]

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, இந்தச் சட்ட மன்றத் தொடரிலேயே 99(2) பிரிவை அம்மாதிரி திருத்துவதற்கும், மதுரை, சென்னை போன்ற கார்ப்பரேஷன்கள் ஒரேமாதிரியான முறையில் வரி விதிக்கும் அமைப்பை ஏற்படுத்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற யோசனைப்படியே இந்தச் சட்ட மன்றத்தொடர் கூட்டத்திலேயே கொண்டுவரவேண்டுமென்ற எண்ணத்தில்தான் அதற்கான முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

DR. H. V. HANDE: Sir, when the Government bring forward such a legislation, will the Government also keep in mind the houses whose rental value is Rs. 100 and less and give exemption to them as the Government are giving exemption to the lands less than one ground? If such an exemption is given, rent also will not increase. Will the Government come forward to give this concession?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அடுத்த வினா குடிசைகளுக்கான வரி பற்றியது. குடிசைகளைப் பொறுத்த வரையில் ஆண்டு வருமானம் ரூ. 18-ம் அதற்குக் குறைந்த அளவு வருமானம் உள்ளவைகளுக்கு வரி இல்லை என்றிருக்கிறது. ரூ. 100-ம் அதற்குக் கீழும் என்று கொண்டு வருவது என்பது பரிசீலனையில் இல்லை. ஆராய்ந்து பார்த்துத் தான் கொண்டுவரவேண்டும். அப்படிச் செய்தால் எல்லோரும் அதற்குக் கீழ் கொண்டுவரும் முயற்சிகளைச் செய்வார்கள். அதனால் மாநகராட்சி மன்றத்திற்கும், நகராட்சி மன்றங்களுக்கும் எவ்வளவு வருமான இழப்பீடு ஏற்படும் என்பதையும் காண வேண்டும். இப்போதே உள்ளாட்சி மன்றங்களுக்கு போதிய நிதி வசதி இல்லை என்ற நிலைமை இருக்கிறது. உள்ளாட்சி மன்றங்கள் தங்கள் நிதிவசதியைப் பெருக்கிக் கொள்கிற பெரும் வாய்ப்பு சொத்து வரி ஒன்றுதான். ஆகவே, இதை ஆராய்ந்துதான் செய்ய வேண்டும். ஆராய்ந்த பிறகு நஷ்டம் எதுவும் இல்லாமல் தொல்லைகள் தவிர்க்கப்படும் சூழ்நிலை இருந்தால் கவனிக்கலாம். இப்போது அப்படிப்பட்ட ஆலோசனை எதுவும் அரசாங்கத்தின் கவனத்தில் இல்லை.

குடிசைகளுக்கான நகராட்சி வரி.

* 282 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகராட்சிப் பகுதிகளில் உள்ள குடிசைகளுக்கான நகராட்சி வரியினை நீக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இல்லை. வருடாந்திர மதிப்பீடு 18 ரூபாய்க்கு அதிகப்படாமலிருந்தால் சொத்து

வரியிலிருந்து விதிவிலக்கு அளிக்கலாம் என 1920-ம் ஆண்டு தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தில் ஏற்கனவே விதி உள்ளது.

திரு. என். கிட்டப்பா : நகரங்களில் உள்ள பங்களா வாசிகளுக்கு இன்னும் வரியை அதிகப்படுத்தி வரியைத் தாங்க முடியாத குடிசைவாழ் ஏழை எளியவர்களுக்கு வரி விலக்கு அளிக்க இனியாவது அரசு வகை செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஏழை எளியவர்களுக்கு, ஆண்டு வருமானம் ரூ. 18-ம் அதற்குக் கீழும் இருந்தால் வரிவிலக்கு அளிக்கலாம் என்றிருக்கிறது. தஞ்சை நகராட்சி மன்றம் ஒரு குறிப்பை அனுப்பியிருக்கிறார்கள். ரூ. 60-க்கு கீழேயுள்ளவர்களுக்கு விலக்கு அளிக்கவேண்டும் என்ற செயற் குறிப்பை தஞ்சை நகராட்சி மன்றம் அனுப்பி வைத்திருக்கிறது. அது பரிசீலனையில் இருந்து வருகிறது. இப்போதுள்ள தன்மையில் ரூ. 18-க்கு அதிகப்படாமல் இருக்கவேண்டும். சொத்துக்கு உரியவர்கள் வேறு கட்டடம் அல்லது நிலம் உள்ளவர்களாகவோ, தொழில் வரி அல்லது வருமான வரி செலுத்துபவர்களாகவோ அல்லாதவர்களாக இருக்க வேண்டும். மொத்தக் கணக்கைப் பார்க்கவேண்டுமே தவிர தனித்தனியாகப் பார்த்தால் சில பேர்கள் வரியிலிருந்து தப்பித்துக்கொள்ளக்கூடும். ஐந்து வீடுகள் இருந்து ஒவ்வொன்றுக்கும் குறைந்த அளவில் வாடகை இருக்கக் கூடும். ஆகவே மொத்தமாகக் கணக்கு பார்க்கவேண்டும். வேறு சொத்து இருக்கக்கூடாது. வேறு வரி செலுத்தாதவர்களாக இருக்கவேண்டும். தஞ்சை நகராட்சி மன்றம் அனுப்பியுள்ள குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இழப்பு எவ்வளவு என்று கணக்கிட்டு முடிவு செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

திரு. இ. எஸ். தியாகராசன்: நகரப் பஞ்சாயத்துக்களில் உள்ள குடிசைகளுக்கு வரி விதிப்பு இல்லை என்று அரசு அறிவிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பொதுவாக பஞ்சாயத்துக்கள் என்று கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். தமிழ் நாட்டு நகராட்சி மன்றங்கள் சட்டம் இருக்கிறது. மற்றப் பஞ்சாயத்துக்களில் எப்படி இருக்கிறது என்பதற்குத் தனிக்கேள்வி போட்டால் விவரங்களை அறிந்து சொல்கிறேன்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : ரூ 18-க்கு குறைவாகவுள்ளவர்களுக்கு விலக்கு என்றிருக்கிறது. இடத்திற்கு இடம் வாடகையின் அளவு மாறுபடுகிற நிலைமை இருக்கிறது. சென்னை போன்ற நகரங்களில் வாடகை அதிகமாகக் கிடைக்க வாய்ப்பிருக்கிறது. ஆரணி போன்றயிடங்களில் அப்படி இல்லை. அங்கு ரூ 18-க்கு கீழ் வருமானம் உள்ளவர்கள் ஏழைகள் அதிகமாக இருக்கிறார்கள். ஆகவே இந்த ரூ. 18 என்பதை ரூ. 24 என்றளவிற்கு உயர்த்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ? அந்தமாதிரி ஒரு



தீர்மானத்தை ஆரணி நகராட்சி மன்றம் ஏற்கனவே நிறைவேற்றி அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறது. அதை அரசாங்கம் அறியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஊருக்கு ஊர் அப்படி மாறுகின்ற தன்மை இருக்கிறது. ஆரணி போன்ற இடங்களை சென்னையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது அதிகப் படியான விலக்குகள் ஏற்படுகிற சூழ்நிலைதான் இருக்குமே தவிர சென்னையைப் போன்றிருக்காது. ரூ. 18 என்பதை ரூ. 24 என்று செய்யவேண்டுமென்று குறிப்பிட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதில் அதிகமான வித்தியாசம் இல்லை. அதனால் ஏற்படுகிற நஷ்டத்தைப் பார்க்கவேண்டும். ஒரு பக்கத்தில் ஊராட்சி மன்றங்கள் தங்கள் நிதி வசதியைப் பெருக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். இன்னொரு பக்கத்தில் முக்கியமான வரியை எடுத்துவிட்டால் எந்த வகையில் நிதி சேர்ப்பது என்பதையும் கவனிக்கவேண்டும். ஆகவே எல்லாவற்றையும் ஆராய்ந்துதான் செய்யவேண்டும்.

திரு. எம். சுரேந்திரன் : சார், அமைச்சர் அவர்கள் கூறுகிற பதில் 1920-ம் வருஷம் சட்டத்தின்படி ரூ. 18-க்குக் குறைவான வருமானம் உள்ளவர்களுக்குத் தான் விதிவிலக்கு என்று கூறினார்கள். 1920-ம் வருஷம் சட்டம் என்று சொன்னால் இன்று 50 வருஷம் ஆகிவிட்டது. இதற்கிடையில் விலைவாசிகள் எவ்வளவோ உயர்ந்து போய் எல்லாத் துறைகளிலும் உயர்த்தித் தரவேண்டுமென்று இருக்கிற நிலைமையில். சோஷலிஸக் கோட்பாடுகளை நாம் நிறைவேற்ற உறுதி பூண்டு இருப்பதால், ஏழை எளியவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கும் வகையில் இதையும் உயர்த்தித் தர அரசு முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஆங்காங்கு இருக்கும் நிலைமைகளை ஒட்டி நகராட்சிமன்றங்கள் தங்களது கருத்துக்களை அரசுக்கு எழுதுவார்களானால், அதைப் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 283, 284 தள்ளி வைக்கப்படுகின்றன.

வினா எண்கள் 285, 286 ஒருசேர எடுத்துக்கொள்ளப் படுகின்றன.

### பஞ்சப் பகுதியென அறிவிக்கப்பட்ட வட்டங்கள்.

*285 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டிலுள்ள எந்தெந்த தாலுக்காக்களை தற்போது பஞ்சப் பிரதேசமாக மத்திய அரசு அங்கீகரித்துள்ளது ?

(இ) அவற்றிற்கு மத்திய அரசு அளித்து வரும் உதவிகள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) பஞ்சப் பகுதியென்று எந்த வட்டமும் இந்திய அரசினால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இருந்தபோதிலும் தருமபுரி மாவட்டத்தில், தருமபுரி, கிருஷ்ண கிரி, ஹரூர், ஊத்தங்கரை ஆகிய வட்டங்களையும், இராமநாதபுரம் மாவட்டத்தில் திருப்பத்தூர், பரமக்குடி, இராமநாதபுரம். முதுகுளத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய வட்டங்களையும் பன்னெடுங்காலமாகவே மிக வறண்ட பகுதிகளென இந்திய அரசு வகைப்படுத்தி வறட்சிப் பாங்கான பகுதிகளில் மத்திய அரசு பொறுப்பேற்கும் கிராமப் பணிகள் சிறப்பு வேலைத் திட்டத்தில் அவற்றைச் சேர்த்துள்ளது. எனினும், இந்திய அரசு பின்னர் ஏற்பளிக்குமென எதிர்பார்த்து இந்த அரசு இவ்விரு மாவட்டங்களில் உள்ள ஏனைய வட்டங்களையும் சிறப்புத் திட்டத்தின் கீழ் சேர்த்துள்ளது.

(இ) 1970-71-ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் இந்திய அரசு தருமபுரி மாவட்டத்திற்கு ரூ. 46.5 லட்சமும் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ரூ. 60.5 லட்சமும் வழங்கியுள்ளது.

*Irrigation facilities to drought affected areas.*

* 286 Q.—Dr. H. V. HANDE :
Thiru K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether the Union Governent have agreed to include. Ramanathapuram and Dharmapuri districts in perenially drought affected areas chosen for improving irrigation facilities with the special fund of Rs. 100 crores; and

(b) if so, whether its decision has been announced?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தருமபுரி மாவட்டத்தில் தருமபுரி, கிருஷ்ணகிரி, ஹரூர், ஊத்தங்கரை ஆகிய வட்டங்களையும். இராமநாதபுரம் மாவட்டத்தில் திருப்பத்தூர், பரமக்குடி, இராமநாதபுரம், முதுகுளத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய வட்டங்களையும் பன்னெடுங்காலமாகவே மிக வறண்ட பகுதிகளென இந்திய அரசு வகைப்படுத்தி, வறட்சிப்பாங்கான பகுதிகளில் மத்திய அரசு பொறுப்பேற்கும் கிராமப் பணிகள் சிறப்பு வேலைத் திட்டத்தில் அவற்றைச் சேர்த்துள்ளது. இந்த வேலைத் திட்டம் 1970-71-லிருந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது. எனினும், இந்திய அரசு பின்னர் ஏற்பளிக்கும் என் எதிர்பார்த்து, இந்த அரசு இவ்விரு மாவட்டங்களிலுமுள்ள ஏனைய வட்டங்களையும் சிறப்புத் திட்டத்தின் கீழ்ச் சேர்த்துள்ளது.



திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் இராமநாதபுரத்தை ஒட்டியுள்ள அறந்தாங்கி தாலுக்கா பட்டுக்கோட்டை தாலுக்கா, ஓரத்தநாடு தாலுக்கா போன்ற பகுதிகளில் நீர்ப்பாசன வசதி இல்லாததால், அந்தப் பகுதிகளையும் பஞ்சப் பகுதி என்று பிரகடனப்படுத்தி, பஞ்ச நிவாரண வேலை மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அந்தந்தப்பகுதிகளில் மழை குறைவாக இருக்கிறது, நீர்ப்பாசனம் குறைவாக இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்கிறோம். பஞ்சப் பிரதேசம் என்று அறிவிப்பதற்கு இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, மத்திய அரசு தர்மபுரி மாவட்டத்தையும், கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுக்கா உள்பட "permanently and perenoially drought affected areas" என்று பிரகடனப்படுத்தி இருக்கிறார்கள். அப்படிப் பிரகடனப்படுத்தியிருக்கும் மத்திய அரசானது அதற்காக மான்யம் கொடுக்கவேண்டிய நிர்பந்தம் இருக்கிறது. 1970–71-ம் ஆண்டில் எவ்வளவு மான்யம் கொடுத்தது? 1971–72-க்காக எவ்வளவு பணம் ஒதுக்கி இருக்கிறது? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, 1970-71-க்காக எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டது என்ற விவரத்தை ஏற்கனவே சொன்னேன். இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ரூ. 60.5 லட்சமும், தருமபுரி மாவட்டத்திற்கு ரூ. 46.5 லட்சமும் மத்திய அரசு வழங்கியுள்ளது. 1971-72 ம் வருஷத்திற்கு நாம் கொடுத்து இருக்கும் திட்டத்தை மத்திய அரசு ஏற்றுக் கொள்வதாக இருக்கிறார்கள். அதற்காக அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்தின்படி தருமபுரி மாவட்டத்திற்கு ரூ. 70 லட்சமும், இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ரூ. 84.85 லட்சமும் ஒதுக்குவது என்று நிர்மானிக்கப்பட்டு இருக்கிறது.

Dr. H. V. HANDE : May I know whether it is a fact that the Union Government selected all over India about 45 districts orginally and they did not allot even a single district to Tamil Nadu but later on our Chief Minister persuaded the Central Government with the stipulation of extension of aid to Tamil Nadu as a condition ? Did our Chief Minister put planning as a condition, that the State Government would not extend their co-operation to planning unless the Centre selected some districts in Tamil Nadu which were drought-affected and only after such a stipulation by our Chief Minister, the two districts were selected by the Centre? May I know whether this Government also suggested some other districts to be declared as drought-affected and some other talyks also? Were the proposals accepted by Central Government ? What is the position now? What is the type of work they are going to start in these places? May I know all the details from the Hon. Minister?

[1971 ஜூலை 17

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, நான்காவது ஐந்தாண்டு திட்டத்தை தமிழக அரசு ஏற்க வேண்டுமென்று சொன்னால் முதலமைச்சர் விதித்த நிபந்தனைகளிலே இதுவும் ஒரு நிபந்தனை ஆகும். 100 கோடி என்று தனியாக ஒதுக்கி இருக்கும் பணத்திலே தமிழ்நாட்டுக்கு என்று தனியாக கொடுக்கவேண்டுமென்று சொன்னோம். ரூ. 2 கோடி ஒதுக்கிக் கொடுத்து இரண்டு மாவட்டங்களை நீங்களே தேர்ந்தெடுத்துக் கொடுங்கள் என்று சொன்னார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தையும், தர்மபுரி மாவட்டத்தையும் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறோம். அவர்கள் இரண்டு மாவட்டங்களில் மழை இல்லாத பகுதியாக தேர்ந்தெடுத்து இரண்டு வட்டங்கள் சொல்லுங்கள் என்று குறிப்பிட்டு இருந்தார்கள். இரண்டு மாவட்டங்கள் என்ற அடிப்படையில் மத்திய அரசு ஒப்புக் கொள்ளும் என்ற வகையில் இரண்டு மாவட்டங்களிலும் பரவலாக வேலைகள் செய்துக்கொண்டு இருக்கிறோம். எந்தெந்த வேலைகளுக்காக செலவு செய்கிறோம் என்று கேட்டார்கள்.

(1) Formation of pucca roads, conversion of existing Katcha roads into pucca roads by metalling wherever necessary.

(2) Major and minor irrigation works including desilting of supply channels, renovation of tanks, etc.

(3) Soil conservation including construction of percolation ponds, check dams, contour bunding, etc.

(4) Afforestation.

இதுபோன்ற வேலைகளுக்கு என்று பணம் செலவழித்து வருகிறோம். இந்திய அரசு இவற்றிற்காக செலவு செய்யும் முழுத் தொகையும் மான்யமாகக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறது.

**திரு. தோப்பூர் திருவேங்கடம்:** தலைவரவர்களே, வடஆற்காடு மாவட்டத்தில் திருப்பத்தூர், வேலூர், வந்தவாசி ஆகிய வட்டங்களில் அடிக்கடி வறட்சி ஏற்பட்டு, பஞ்சத்தால் பாதிக்கப்படுவதால், அந்தப் பகுதிகளையும் பஞ்சப்பிரதேசம் என்று அறிவிக்க மத்திய அரசுக்கு மாநில அரசு எழுதுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, சொந்த மாவட்டம் என்பதற்காக அதிகமான உரிமை கொண்டாட முடியாது. அதை பஞ்சப்பிரதேசம் என்று அறிவிப்பதற்கு இல்லை.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவரவர்களே, இந்தப் பஞ்சப் பிரதேசமாக பிரகடனப்படுத்துவதிலே, பல்லடம் தாலுக்கா பல வருஷமாக மழை இல்லாமல் இருப்பது அரசாங்கத்திற்கு தெரியுமா? ரெவின்யூ போர்டு மெம்பர் கூட தம்முடைய சுற்றுப் பயணத்தின்போது அதைப்பற்றி குறிப்பிட்டு இருக்கிறார்.



1971 ஜூலை 17]

ஆகவே, அந்தப் பகுதியை பஞ்சப் பிரதேசம் என்று அறிவிக்க மத்திய அரசுக்கு மாநில அரசு எழுதுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, ஒவ்வொருவரும் அவரவர்களுடைய தொகுதியிலுள்ள மாவட்டங்களைப் பற்றி கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன், பொதுவாக ஆங்காங்கு இருக்கும் வருவாய்த்துறை அதிகாரிகள் வறட்சிப்பகுதிகளைத் தேர்ந்தெடுத்து அந்தந்தப் பகுதிகளில் நிவாரண வேலைகளைச் செய்து வருகிறார்கள். ஆங்காங்கு வறட்சி நிவாரண வேலைகள் நடப்பதால், எல்லாவற்றையும் பஞ்சப் பிரதேசம் என்று சொல்லிவிட முடியாது. எங்கே வறட்சி இருக்கிறதோ அங்கெல்லாம் வறட்சி நிவாரணப்பணிகள் செய்வதற்கு தமிழக அரசு ஏற்பாடு செய்து வருகிறது.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவரவர்களே, இந்தப் பஞ்சப் பிரதேசம் என்று சொல்லும்போது, அதில் திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த கோவில்பட்டிதான் முதலிடம் வகிக்கும் என்று நினைக்கிறேன். இப்போது மத்திய அரசாங்கம், தர்மபுரி, இராமநாதபுரம் மாவட்டங்களைத்தான் பஞ்சப் பிரதேசமாக பிரகடனப்படுத்தியிருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தை ஒட்டியுள்ள இந்த கோவில்பட்டியையும் இதில் சேர்த்துக் கொண்டால் நல்லது. கோவில்பட்டியில் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை கடுமையான வறட்சி ஏற்படுகிறது. இதையும் சற்று யோசித்துப் பார்த்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். வறட்சி இருக்கிற பகுதிகளில் செலவு செய்வதற்கு தமிழக அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்டுள்ளது. அப்படிப்பட்ட பகுதிகளில் என்னென்ன செய்யவேண்டுமென்று வருவாய்த் துறையில் இருக்கிற போர்டு மெம்பர்களை அனுப்பி நாங்கள் தகவல் சேகரித்து வைத்து இருக்கிறோம். அந்த வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. பஞ்சப்பிரதேசம் என்று அந்தப் பகுதியைச் சொல்வதற்கு இல்லை. வறட்சி இருக்கிறது என்று சொன்னால், அதைத் தணிக்க என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமோ அதை எடுத்து வருகிறோம்.

THIRU B. VENKATASWAMY: According to the answer given by the Hon. Minister, Dharmapuri District is getting only Rs. 70 lakhs for this year. When our Hon'ble Speaker was the Revenue Minister he has toured the Hosur Taluk and he was able to know how drought has affected that area. Will the Government come forward to press the Central Government to declare those areas—the entire Dharmapuri district as drought affected area and demand more money ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தர்மபுரி மாவட்டம் வறட்சிக்கு உட்பட்டது என்பதை தமிழக அரசு ஏற்றுக்கொண்டு பணம் செலவழிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அந்த மாவட்டத்திற்கு 70 லட்சம் ரூபாய் தானே செலவழிக்கப்படுகிறது என்றார்கள். பெரிய மாவட்டம் இராமநாதபுரம் அதற்கே 84 லட்சம் என்கிறபோது சிறிய மாவட்டமாகிய தர்மபுரிக்கு இது பெரிய தொகையாகும். ஹோசூரில் இருக்கிற நிலைமையை நானே பார்த்திருக்கிறேன், மழைக்காலங்களில் ரோடுகள், ஏரிகள் எல்லாம் உடைபடுவதையும் பார்த்திருக்கிறேன். மழை இல்லாத வறண்ட காலத்தையும் பார்த்திருக்கிறேன். ஆக அந்த அந்தக் காலத்திற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள அரசு அவ்வப்போது முடிவு செய்யும்.

திரு. ஆ. கருப்பையா: தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில், மானூர் போன்ற இடங்களில் வறட்சி மிகுதியாக உள்ளது. அந்தப் பகுதியில் உள்ள வரட்சியைப் போக்க மாவட்ட ஆட்சித்தலைவர் மூலமாய் ஏதாவது பரிந்துரை செய்யப்பட்டுள்ளதா? அரசாங்கம் எடுத்திருக்கிற நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தனிக் கேள்வி வேண்டும்.

திரு. ஏ. சி. நரசிம்மன்: வடார்க்காடு மாவட்டத்தில் சில இடங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அமைச்சர் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவராதலால் மற்றவர்கள் ஏதாவது சொல்லப்போகிறார்கள் என்று நினைத்து அந்தப் பகுதிகளை பஞ்சப் பிரதேசங்களாக அறிவிக்க மறுக்கிறார்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: காலை வடார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவரைப் பார்த்தேன். அந்த மாவட்டத்தில் உள்ள 13 வட்டங்களில் 11 வட்டங்களில் நல்ல மழைபெய்திருப்பதாகச் சொன்னார்கள். இரண்டு வட்டம்—வந்தவாசி, குடியாத்தம் பற்றித் தெரியவில்லை என்றார்கள். அங்கும் நல்ல மழைபெய்திருப்ப தாக அரசாங்கத்திற்குத் தகவல் வந்திருக்கிறது.

திரு. எஸ். நல்லசாமி: தமிழகத்தில் குடிப்பதற்குத் தண்ணீர் கூட இல்லாத கிராமங்கள் வறட்சிப்பகுதியாக அறிவிக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: தமிழ்நாட்டில் குடிப்ப தற்குக் கூடத் தண்ணீர் இல்லாத கிராமங்களே இருக்கக்கூடாது என்றுதான் அங்கங்கே உள்ள கிணறுகள் ஆழப்படுத்தச் சொல்லி ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. எந்த கிராமத்திலாவது குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை என்றால் அதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வசதியாக இருக்கும்.





திரு. கே. கே. முத்தையா: வறட்சிப் பகுதிகளைப் பார்ப்ப தற்காக வருவாய்த்துறை ஆணையர்கள் அங்கங்கே செல்வதாகச் சொன்னார்கள். அவர்கள் அங்கங்கே டி.பி.யில் தங்கிவிட்டு கீழ் அதிகாரி சொல்கிற புள்ளி விவரத்தையே தந்துவிடுகிறார்கள். அப்படியின்றி அவர்கள் தாங்களே எல்லா இடத்திற்கும் நேரில் சென்று பார்த்து ரிப்போர்ட் தரவேண்டுமென்று உத்தரவிடு வார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இதை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை. ஒவ்வொருவர் ஒவ்வொரு பகுதிக் குச்சென்று நேரில் பார்வையிட்டு ரிப்போர்ட் அனுப்பவேண்டும் என்றோம். அதைப்போலவே அவர்கள் பார்த்துத்தான் ரிப்போர்ட் அனுப்பியிருக்கிறார்கள்.

*Demonstration by employees of Accountant General's Office.*

* 278. THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Chief Minister be pleased to state:

(a) whether any police assistance was given to the Accountant General of Tamil Nadu during the first week of October and December, 1970 to deal with employee demonstrators; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) மாநிலக் கணக்குத் துறைத் தலைவரிடமிருந்து (Accountant General) பெறப் பட்ட புகாரின் மேல், 1970 நவம்பர் முதல் வாரத்தில் மட்டும் அவருக்கும், ஏனைய முதுநிலை நிர்வாக அதிகாரிகளுக்கும் காவலர் பாதுகாப்பு கொடுக்கப்பட்டது.

(இ) துறைத் தேர்வின் முடிவு வெளியிடப்பட்டது குறித்து 1970-ம் வருடம் அக்டோபர் மாதம் 26, 30, 31 ஆகிய நாட்களில் மாநிலக் கணக்கு துறைத்தலைவர் அலுவலகப் பணியாளர்களில் சிலர் ஆர்ப்பாட்டம் செய்தனர். ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் வன் முறையில் இறங்கி, 1970-ம் வருடம் நவம்பர் மாதம் 2-ம் தேதி அன்று மாநிலக் கணக்குத் துறைத் தலைவர் தனது அறையிலிருந்து வெளியே வருவதைத் தடுத்து, அவரைச் சூழ்ந்து கொண்டு ஆர்ப் பாட்டம் செய்தனர். தகவல் கிடைத்ததன் மேல், அந்த இடத் திற்குக் காவலர் விரைந்து சென்று மாநிலக் கணக்குத் துறைத் தலைவரின் அலுவலக அறைக்குச் செல்லும் வழியிலுள்ள வராந்தா வில் இருந்த ஆர்ப்பாட்டக்காரர்களை அகற்றினர்.

திரு. எஸ். சங்குமுத்து தேவர்: தலைவர் அவர்களே, இங்கே மத்திய அரசு போலீஸ் அனுப்பப்பட்டதா? மாநில அரசு போலீஸ் அனுப்பப்பட்டதா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாநில அரசு போலீஸ்தான் சென்றது.

[1971 ஜூலை 17

**திரு. கே. டி. கே. தங்கமணி** : ஏ.ஜி. ஆபீசில் பணியாற்றக்கூடிய சிப்பந்திகளுக்கு ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஊதியம் கொடுக்கப்படவில்லை என்ற காரணத்தினால் எல்லோரும் சேர்ந்து வெளியில் வந்தார்களே தவிர இதை காரோ என்ற முறையில் தவறாக அறிவித்த காரணத்தினால் போலீஸ் வந்தது என்பதையும், சிப்பந்திகள் அமைதியாகத்தான் வெளியில் கூடினார்கள் என்பதையும் அரசு அறியுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : இதில் இரண்டு பிரச்சினைகளை இணைத்திருக்கிறார்கள். முதலில் அந்த ஆர்ப்பாட்டத்திற்குக் காரணம் ஊதியத் தகராறு என்று சொன்னார்கள். ஆனால் ஆர்ப்பாட்டத்திற்குக் காரணம் டிபார்ட்மெண்டு எக்சாமினேஷன் நடந்தது என்றும் அதன் அடிப்படையில் ஏற்பட்ட வேறுபட்ட கருத்தால் ஆர்ப்பாட்டம் நடந்தது என்றுதான் தெரிகிறது. ஆர்ப்பாட்டத்தில் காரோ செய்யவில்லை என்றாலும்—அமைதியாகவே நடைபெற்றது என்றாலும் ஏ.ஜி. தன் அறையைவிட்டு வெளியே வரமுடியாதபடி தடுப்பது என்பது ஓரளவு வன்முறையையே குறிக்கும் என்பது அரசின் அபிப்பிராயம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி** : அம்மாதிரியான தனி டெஸ்ட் முறை இப்போது கைவிடப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : இப்போது அவர்களது கோரிக்கைபற்றி அடிப்படை கேள்வி இல்லை. நிகழ்ச்சியைப்பற்றிய கேள்வி. அதுபற்றி தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்து அளிக்கப்படும்.

**திரு. எஸ். ஆறுமுகம்** : தொழிலாளர்கள் தங்களுடைய கோரிக்கைகளை வற்புறுத்த பல்வேறு முறைகளைக் கையாள்கிறார்கள். அதில் ஒன்றாக காரோ செய்கிறதும் அசம்பாவிதமான காரியங்களில் கொண்டுபோய்விடுகிறது. ஆகவே இதை அடியோடு தவிர்க்க தொழிலாளர்கள் பிரதிநிதிகளை அழைத்து பேசுவார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : தமிழ்நாட்டைப்பொறுத்தவரையில் அதிகமாக காரோ செய்கிற முறை பின்பற்றப்படவில்லை. ஆகவே. அழைத்துப் பேச வேண்டிய சூழ்நிலை ஏற்படவில்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்** : இது சம்பந்தமாக வழக்குகள் ஏதாவது பதிவு செய்யப்பட்டிருக்கிறதா? அதன் விவரங்கள் என்ன? கேஸ் என்ன ஆயிற்று?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : இதைத் தொடர்ந்து அந்த இலாக்கா அலுவலர்கள் 11 பேர்கள் மீது போலீசார் இ.பி.கோ. 147, 341, 426 இன் கீழ் எண் 2513/70-இன் கீழ் வழக்குப் பதிவு செய்தார்கள். அவர்கள் கைது செய்யப்பட்டு, பிறகு ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டார்கள். சிப்பந்திகளின் பிரதிநிதிகள் சிலர் முதல் அமைச்சர் அவர்களைச் சந்தித்துப் பேசினார்கள். அவர்கள் மீது போடப்பட்ட வழக்கு திரும்பப் பெறப்பட்டது.



1971 ஜூலை 17]

**திரு. என். கணபதி** : தொழிலாளர்கள் தகராறு பிரச்சினையில் அவர்கள் வன்முறையில் இறங்குகிற நேரத்தில் முதலாளிகளுக்கு—மானேஜ்மெண்டுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படவேண்டும் என்று உயர்நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியிருப்பதை அரசு அறியுமா? அதை அமுல்படுத்துகிறார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : வன்முறையில் யார் ஈடுபட்டாலும் காப்பாற்றப்படவேண்டியவர்களுக்கு அரசு பாதுகாப்பு அளிக்க நடவடிக்கை எடுக்கும்.

*Report on Police Firing at Tenkasi*

* 279. Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Chief Minister be Pleased to place on the table of the House the report of the inspector-General of Police on the Tenkasi incidents resulting in police firing about the 27th September 1970.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : 1970-ம் வருடம் செப்டம்பர் மாதம் 26-ம் தேதி அன்று தென் காசியில் நடந்த துப்பாக்கிச் சுடல் குறித்து நீதி விசாரணை செய்வதற்காக விசாரணை ஆணைக் குழு ஒன்றினை அரசு நியமித்து உள்ளதால், இது தொடர்பான தனிப்பட்ட அறிக்கை எதுவும், சென்னை, காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரலிடமிருந்து பெறப்படவில்லை.

**திரு. பெ. மலைச்சாமி** : 1966-வது ஆண்டுவரை பலதரப்பட்ட துப்பாக்கிச் சூடுகள் நடைபெற்றிருக்கின்றனவே. அப்போதிருந்த அரசு அவை ஒவ்வொன்றுக்கும் விசாரணைக் குழு அமைத்ததா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இந்தக் கேள்வி அனுமதிக்கப்படவில்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி** : 1970-ம் வருடம் செப்டம்பர் 26-ஆம் தேதி நடைபெற்ற துப்பாக்கிச் சூடுபற்றி விசாரிக்க ஜட்ஜ் வரதராஜன் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டதே, அந்த ரிப்போர்ட் சபையில் வைக்கப்படுமா? இதுபோன்ற விசாரணைக் கமிஷன் ரிப்போர்ட்டுகள் எல்லாம் சபையில் வைக்கப்பட்டிருக்கின்றனவா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : இதுபோன்ற விசாரணைக் கமிஷன் ரிப்போர்ட்டுகள் எல்லாம் சபையில் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் குழுவின் அறிக்கையையும் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அரசு ஆராய்ந்த பிறகு இந்த அவையிலும் வைக்கும்.

**திரு. என். கணபதி** : தலைவர் அவர்களே, பழைய காலங்களில் நடைபெறுகின்ற துப்பாக்கிப் பிரயோகங்களில் ‘ஷூட் டு ஸ்கேர்’ என்ற தத்துவம் இருந்தது. அதாவது கூட்டத்தைக் கலைப்பதற்காகத்தான் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதன் நோக்கமா

யிருந்தது. 1967-க்கு முன்னால் அது 'ஷூட் டு கில்' என்ற அளவில் மாற்றியமைக்கப்பட்டதே, இப்போது ஏதாவது மாற்றியமைப்ப தற்கான எண்ணம் அரசுக்கு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, சொல் அப்படி இருந்தாலும் பயன்படுத்துகிற முறைகள் கூடுமான வரையில் மனிதாபிமான உணர்ச்சியுள்ள முறையில் இருக்க வேண்டுமென்று இந்த அரசு விரும்பி, அந்த நிலையில் நடைபெற்று வருகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, துப்பாக்கிச்சூட்டினால் உயிர் இழந்தவர்களுக்கு நஷ்ட ஈடு ஏதாவது கொடுத்திருக்கிறதா ? அதுமாதிரி ஊனமடைந்தவர்களுக்கும் நஷ்ட ஈடு கொடுத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, துப்பாக்கிச் சூட்டினால் குருசாமி முதலியார் என்கிற ஒருவர் மரணமடைந்தார். அவருடைய மனைவிக்கு முதலமைச்சர் பொதுநல நிதியிலிருந்து இரண்டாயிரம் ரூபாய் வழங்கப்பட்டது.

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, துப்பாக்கிப் பிரயோகங்கள் சில சந்தர்ப்பங்களில் தேவைப்பட்டோ, தேவையில்லாமலோ நடந்துவிடுகின்றன. ஒவ்வொரு துப்பாக்கிப் பிரயோகம் நடக்கும்போதும் அது சரியானதா, அல்லவா என்பதைப் பொதுமக்கள் தெரிந்துகொள்வதற்காக நீதி விசாரணையை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் துப்பாக்கிப் பிரயோகங்களில் நீதிவிசாரணை நடத்துவதற்கு ஒவ்வொரு தடவையும் வழிவகை செய்திருக்கிறது. தென்காசி துப்பாக்கிப் பிரயோகத்திலும் நீதி விசாரணை நடத்தப்பட்டு அறிக்கையும் சபைமுன் வைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறேன்.

### கோணிப் பைகள் தொழில்

*287. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் தற்போது கோணிப்பைகள் செய்யும் தொழிற்சாலைகள் நிறுவிட ஏதேனும் திட்டம் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.





திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, கல்கத்தாவிலிருந்து தமிழ்நாட்டிற்கு கோணிப்பைகள் வருவது குறைந்துவிட்டதால், நமக்குத் தேவையான கோணிப்பைகளுக்காகத் தேவையான சணல் பயிரிட இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இதுபற்றி வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்க வேண்டும்.

### *Spinning Mill in Hosur Taluk.*

*288 *Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether there is any proposal to start a spinning mill in Hosur Taluk; and

(*b*) if so, when it will be started ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

THIRU B. VENKATASWAMY : Sir is, it not a fact that a spinning mill was sanctioned to Hosur a few years ago but it was started in Salem and not in Hosur. As Hosur is having an ideal climate for a spinning mill and cheap labour also is available there, will this Government come forward to open a spinning mill at Hosur ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இது மத்திய அரசின் கொள்கையைப் பொறுத்துள்ளது. இனிமேல் ஸ்பின்னிங் மில்கள் அதிகமாக ஏற்படுத்தக்கூடாது என்று மத்திய அரசினர் முடிவு எடுத்திருக்கிறார்கள். அவர்கள் அனுமதித்தால் இது செய்யப்படும்.

### *Production of Glass Bangles.*

* 289 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there are proposals under the consideration of the Government now to offer financial assistance to the Glass Bangle Industry ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, பிளாஸ்டிக் வளையல்கள் அதிகமாக வந்துவிட்டதன் காரணமாக கண்ணாடி வளையல்கள் உற்பத்தி பாதிக்கப்படுவதால், கண்ணாடி வளையல் உற்பத்திக்குப் பாதுகாப்பு அளிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, புதிதாக உற்பத்தி செய்வதற்கு உதவி தேவைப்பட்டால், 'சிட்கோ' நிறுவனத்திற்கு மனுப்போட்டால் பரிசீலிப்பார்கள்.

[1971 ஜூலை 17

*Production of barrels by Indian Oil Corporation*

* 290 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(a) whether the Indian Oil Corporation is setting up any factory for the manufacture of barrels for packing up of oil in this State; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :**

(அ) ஆம்.

(இ) 1969-ம் ஆண்டு அக்டோபர் மாதம் இந்திய அரசுக்கு சொந்தமான இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் என்னும் நிறுவனத்திற்கு மணலியிலுள்ள பெட்ரோலியம் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் உற்பத்தியாகும் மசகு எண்ணெய், பிட்யுமென் இவற்றை நிரப்புவதற்குத் தேவையான 5 இலட்சம் ட்ரம்களும் 10 இலட்சம் பீப்பாய்களும் அதன் சொந்த உபயோகத்திற்கு என உற்பத்தி செய்வதற்கு உரிமம் வழங்கப்பட்டது. இத்திட்டம் ரூ. 25 இலட்சம் முதல் ரூ. 28 இலட்சம் வரை செலவு ஆகும் என மதிப்பிடப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகிறது.

**திரு. என். டென்னிஸ்:** தலைவர் அவர்களே, எத்தனைபேருக்கு அதன்மூலம் வேலைவாய்ப்பு கிடைக்கும்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அதுபற்றிய விவரம் இல்லை.

திறந்த வெளி சிறைச்சாலை

* 291 வினா.—திரு. என். கிட்டப்பா :

**திரு. மா. பா. சாரதி :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாவட்டந்தோறும் திறந்த வெளி சிறைச்சாலைகள் அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மாவட்டந்தோறும் திறந்த வெளிச் சிறைச்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, திறந்தவெளிச் சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளில் நன்னடத்தையோடு நடந்துகொள்பவர்களை பொதுப்பணித் துறையின் வேலைகளுக்குப் பயன்படுத்திக்கொள்வதுபற்றி அரசு ஆலோசிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இப்போது அந்தந்த சிறைச்சாலைகளில்தான் வேலைதரப்பட்டு வருகிறது. வேறு துறைக்கு வேலைக்கு அனுமதிப்பது குறித்து பரிசீலனையில் எதுவும் இல்லை.



1971 ஜூலை 17]

**திரு. பி. எஸ். மணியன் :** தலைவர் அவர்களே, 1962-ல் நமது சட்ட அமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்த நேரத்தில், விலைவாசிப் போராட்டக் கிளர்ச்சியில் ஈடுபட்டதற்காக மதுரையில் இரண்டு தினங்கள் வரை ஒரு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார். சிறையில் இடம் இல்லாததால் மணற்பரப்பில் வைக்கப்பட்டு, அன்றைக்கு ஆட்சியில் இருந்தவர்களால் கொடுமைப்படுத்தப்பட்டார். ஆகவே, அதே இடத்தில் திறந்த வெளிச் சிறைச்சாலை அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, அந்த இடத்தில் இடமில்லாத காரணத்தால் அப்படி ஏற்பட்டது. மதுரை மாவட்டத்திலே திறந்தவெளி சிறைச்சாலைக்காக ஒரு இடம் தேடப்பட்டு வருகிறது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவர் அவர்களே, தஞ்சாவூரில் இருக்கிற திறந்தவெளி சிறைச்சாலை கைதிகளுக்கு என்ன வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, விவசாய வேலை கொடுக்கப்படுகிறது.

**திரு. கோவை செழியன் :** தலைவர் அவர்களே, அம்மாதிரியான திறந்தவெளிச் சிறைச்சாலைகளில் எந்தமாதிரியான கைதிகளை வைக்கின்றார்கள்? வைக்கப்பட்ட கைதிகளில் யாராவது தப்பி ஓடிவிட்டார்களா என்ற விவரம் உண்டா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, தப்பி ஓடியவர்கள் விவரம் என்னிடத்தில் இல்லை. சிறையிலுள்ள கைதிகளைப் பரிசீலித்து, பொதுவாக நீண்டநாள் கைதிகள், தூக்குத் தண்டனை பெற்றவர்கள், இன்னும் அதைவிட குறைவாக ஓராண்டு, இரண்டு ஆண்டுகளுக்கு மேல் தண்டனை பெற்றவர்கள் ஆகியவர்களுடைய சிறைவாழ்க்கையைப்பற்றிப் பரிசீலித்து, வெளியிலே சென்று வேலை செய்வதற்குத் தகுதியானவர்களா என்பதைப் பார்த்து, தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இம்மாதிரி அனுப்பப்பட்டவர்கள் சிறந்த முறையில் நடந்துகொள்கிறார்கள் என்ற செய்திதான் அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கிறது.

**திரு. பி. பொன்சொக்கலிங்கம் :** தலைவர் அவர்களே, மாவட்டந்தோறும் திறந்தவெளிச் சிறைச்சாலை அமைக்கப்படுமா என்பதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள், இடம் இருக்கின்ற இடங்களில் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். தென்ஆர்க்காடு மாவட்டத்தில் கடலூரில் அதிகமான இடம் இருக்கிறது. அங்கே திறந்த வெளிச் சிறைச்சாலை அமைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைப்பதுபற்றி பரிசிலனையில் இருக்கிறது. மாவட்டங்களில் எங்கெங்கு பெரிய இடம் அமைந்திருக்கிறதோ, அங்கு இடவசதி, தண்ணீர் வசதி மற்ற வசதிகளைப் பார்த்து முடிவு

எடுக்கிறார்கள். தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கடலூரில் சிறைச்சாலை இருக்கிறது. அந்த மாவட்டத்திலே இடம் கிடைத்தால், அது எந்த இடம், அங்குள்ள தண்ணீர் வசதி, இன்னும் பிற வசதிகளையெல்லாம் குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுதியனுப்பினால் அதுபற்றி பரிசீலிக்கலாம்.

**திரு. என். கணபதி :** தலைவர் அவர்களே, திறந்தவெளிச் சிறைச்சாலையில் கைதிகளை விவசாயத்தில் ஈடுபடுத்துவதாக அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அப்படி விவசாயத்தில் ஈடுபடுபவர்களுக்கு உற்பத்தியில் பங்கு ஏதாவது கொடுக்கப்படுகிறதா அல்லது நாள் ஊதியம் அவர்களுக்குத் தரப்படுகிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, அவர்களுக்கு பங்கு கொடுப்பதாக இல்லை. அவர்களுக்குத் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. மேலும்—ரெமிஷன்—விடுதலையாவதற்கு உதவும்படியாகக் கூடிய வகையில் கழிவு நாட்கள் அதிகமாக்கி, சீக்கிரம் விடுதலையடைய வழிவகை கிடைக்கும்.

**திரு. துரைமுருகன் :** தலைவர் அவர்களே, எப்படிப்பட்ட குற்றம் புரிந்தவர்கள், கொலைக்குற்றம் புரிந்தவர்கள் திறந்தவெளிச் சிறைச்சாலைகளில் வைக்கப்படுகின்றார்களா அல்லது மைனர் கிரிமினல் குற்றம் புரிந்தவர்கள் மட்டும் வைக்கப்படுகின்றார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, நான் கொஞ்சநேரத்திற்கு முன்னாலே விளக்கம் சொன்னேன். மைனர் கிரிமினல் குற்றம் புரிந்தவர்களைப் பொறுத்து, அவர்களுக்குத் தனிச் சிறைச்சாலை இருக்கிறது. நீண்டநாள் தண்டனை பெற்றவர்கள், சிறையில் நல்லமுறையில் நடந்துகொள்பவர்கள், நல்லமுறையில் நடந்துகொள்வார்கள் என்கிற நம்பிக்கையுள்ளவர்களை திறந்தவெளிச் சிறைச்சாலைகளில் வேலைக்கு அனுப்பலாம் என்று இருக்கிறது.

## அகரம் கிராமத்திற்கருகே பாலம்

*** 292 வினா.—திரு. தோப்பூர் திருவேங்கடம் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டத்தில் ஆம்பூர் தொகுதியைச் சார்ந்த மாதனூரிலிருந்து ஒடுகத்தூர் செல்லும் பாதையின் இடையில் அகரம் கிராமத்திற்கருகில் ஆற்றுக்கு குறுக்கே மேம்பாலம் கட்டும் வேலை தற்சமயம் என்ன நிலையிலுள்ளது?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அரசு இந்த வேலைக்கு இன்னும் அனுமதி அளிக்கவில்லை.

**திரு. தோப்பூர் திருவேங்கடம் :** தலைவர் அவர்களே, இந்த மேம்பாலம் கட்டுவதற்காக கரும்பு செஸ் நிதியிலிருந்து நிதி ஒதுக்கப்படிருப்பதாக எனக்குக் கூட தகவல் வந்திருக்கிறது. அந்த



மேம்பாலத்திற்கு அனுமதி கிடைத்துவிட்டது என்று சொல்லப்படுகிறதே, அந்த மேம்பாலத்தைக் கட்ட அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, செஸ் நிதி ஒதுக்கப்பட்டதாக எனக்கு விவரம் இல்லை. அப்படி நிதி ஒதுக்கப்பட்டிருந்தால் இந்த ஆண்டே வேலை எடுத்துக் கொள்ளப்படும்.

## பொதுப் பணித்துறையின் கீழ் உள்ள புறம்போக்கு நிலங்கள்

*** 293. வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பொதுப்பணித்துறையில் உள்ள புறம்போக்கு நஞ்சை புஞ்சை நிலங்களைச் சாகுபடி செய்து வரும் விவசாயிகளுக்கு நிரந்தரமாக ஜாரி செய்து கொடுக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறையில் உள்ள நஞ்சை புஞ்சை நிலங்களை, பொதுப்பணித் துறையின் விரிவான திட்டங்களுக்குப் போக எஞ்சியுள்ள நிலங்களை சாகுபடி செய்துவரும் விவசாயிகளுக்கே ஜாரி செய்து ஒப்படை செய்ய அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, தேவையில்லாத புறம்போக்கு நிலங்கள் விவசாயிகளுக்கு விவசாயத்திற்காக அளிக்கப்படுகிறது. இப்போது உரிமம் செய்து கொடுக்கும் வேலை வருவாய்த் துறையிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. இ. பொன்னுமலை :** தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையிலே உள்ள ரோடு ஓரங்களிலே உள்ள ஏராளமான ஏழைகள் குடிசைகள் போட்டிருக்கிறார்கள். அந்த நிலங்களையெல்லாம் அவர்களுக்குப் பட்டாச் செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ரோடு ஓரங்களிலே போக்குவரத்துக்கு இடைஞ்சல் இல்லாமல் இருந்தால் பொது மக்களுடைய ஆட்சேபணையில்லாமல் இருக்குமானால் ஏழை மக்களுக்குப் பட்டாச் செய்து கொடுப்பதற்கு ரெவின்யூ தரப்புக்கு அது மாற்றித் தரப்பட்டு ரெவின்யூ இலாக்கா மூலமாக பட்டா செய்து கொடுக்கலாம்.

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, பப்ளிக் ஓர்க்ஸ் டிபார்ட்மெண்டிற்குச் சொந்தமான ஏரி, புறம்போக்கு நிலங்கள் விவசாயிகளுக்குப் பட்டா செய்து கொடுக்கப்படுகிறது. நிலங்களை

[1971 ஜூலை 17

நீர்ப்பிடிப்பு இல்லாத நேரங்களில் பட்டா செய்து கொடுத்து விடுகிறார்கள். ஆனால் நீர்ப்பிடிப்பு ஏற்படும்பொழுது பயிர்களுக்காக ஏரிக் கரைகளை உடைத்து விடுகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை ஏற்படாமல் இருப்பதற்காக நீர்ப்பிடிப்பு இருந்தாலும், நீர்ப்பிடிப்பு இல்லாவிட்டாலும் அப்படிப்பட்ட நிலங்களை பட்டா செய்யக் கூடாது என்று அரசாங்கம் உத்திரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஏரிப் புறம்போக்கு ஆற்றோரப் புறம்போக்கு இவைகள் பட்டா செய்து கொடுக்கப் படுகின்றன. அப்படிச் செய்யும்பொழுது எந்தவிதமான கெடுதலும் இல்லாமல் இருந்தால்தான் பட்டா செய்து கொடுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் போன்று பரவலாக இருக்கிறது. அப்படிச் செய்யக் கூடாது என்று அரசாங்கம் தேவையான உத்திரவுகளைப் பிறப்பித்திருக்கிறது.

**திரு. வ. க. ராமராசன் :** தலைவர் அவர்களே, பவானிசாகர் கால்வாய்ப் பகுதியில் 10 ஆயிரம் 15 ஆயிரம் ஏக்கர் பூமியுள்ளவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. அப்படிக் கொடுக்காமல் கூலி வேலை செய்கின்ற விவசாயிகளுக்கு ஏழை விவசாயிகளுக்குக் கொடுக்க அரசாங்கம் ஆணையிடுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அதுபற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை.

**திரு. எம். செல்வராஜ் :** தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறையிலே இருக்கின்ற ஏரிகள் பல வருடங்களாகவே மேடிட்டுத் தண்ணீர் ஏறாமல் இருக்கிறது. அதற்குப் பக்கத்திலே விவசாயிகள் பல வருடங்களாகப் பயிர் செய்து வருகிறார்கள். அந்த ஏரிகளுக்கு எந்த விதத்திலும் இடைஞ்சல் இல்லாத பகுதிகளிலே மட்டும் பட்டா செய்துகொடுப்பதற்கு பொதுப்பணித் துறைக்கு ரெவின்யூ துறை மாற்றிக்கொடுக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ரெவின்யூ துறை பொதுப் பணித்துறைக்கு மாற்றிக் கொடுக்காது. பொதுப்பணித் துறைதான் ரெவின்யூத் துறைக்கு மாற்றிக் கொடுக்கிறது. சட்டத்திற்கு உட்பட்டு ஜாரி செய்யப்படக்கூடிய நிலங்களாக இருந்தால் அவற்றை பொதுப்பணித்துறை ரெவின்யூத் துறைக்கு மாற்றிக் கொடுக்கலாம்.

**திரு. என். கணபதி :** தலைவர் அவர்களே, பாசன வாய்க்கால்களை ஒட்டியுள்ள பப்ளிக் ஓர்க்ஸ் டிபார்ட்மெண்ட் புறம்போக்கு நிலங்களைப் பெரும்பாலோர் ஆக்கிரமித்துக் கொண்டு நீர்ப்பாசனத்திற்கு இடைஞ்சல் செய்து கொண்டு வருகிறார்கள். அவர்களையெல்லாம் நீக்குவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே சாதிக் பாட்சா :** இது போன்று அனுமதியில்லாத ஆக்கிரமிப்புகளை நீக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து இருக்கிறது.



1971 ஜூலை 17]

**புலவர் சி. பழனிச்சாமி :** தலைவர் அவர்களே, சாலை ஓரங்களிலே இருக்கிற புளிய மரங்களை வெட்டி, மொட்டையாக்கி விடுகிறார்கள். இதனால் பாதசாரிகளுக்கு நிழல் தராத நிலை ஏற்பட்டு, அரசாங்கத்திற்கு வருகின்ற வருமானமும் போய்விடுகிறது. எனவே, புளிய மரங்களை வெட்டாமல் இருப்பதற்கு அரசாங்கம் உத்திரவிடுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அது போன்ற நடவடிக்கைகளைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

### *Memorandum from Dhobies Association*

* 296 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether this Government have received a memorandum from "The Tamil Nadu Salavai Thozilalar Munnetra Sangam" during the month of February 1970; and

(b) if so, the details thereof and the action taken thereon ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) & (இ) விவர அறிக்கையொன்று@ மன்றப் பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

DR. H. V. HANDE : In the detailed statement, certain points had been clarified but certain things have not been clarified, such as the assurance given by this Government to the Dhobies that they would be given opportunity to get these basic materials sold through co-operatives at controlled rates. That is not being done and co-operatives are not functioning. May I know from the Hon. Minister whether loans are given for construction of dhobikhanas. It is mentioned here that Rs. 5 lakhs would be issued. The Hon. Minister said that he would himself visit Dhobikhanas and see how they are functioning. May I know whether steps have been taken by this Government to see that they are properly functioning, whether the grievances of dhobies such as power laundries, for which money was granted, whether all these things will be taken into consideration ? Will the Hon. Minister be pleased to tell us the steps taken in this direction ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** பேரவைத் தலைவர் அவர்களே, சலவைத் துறைகள் கட்டுவதைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு 50 சதவீதம் மானியமாகவும் 50 சதவீதம் கடனாகவும் அரசாங்கம் தந்து வருகிறது என்பதை ஏற்கெனவே நான் இந்த மன்றத்திலே தெரிவித்திருக்கிறேன். அதிலே சில கட்டப்பட்டுக் கொண்டு வருகின்றன. சலவைத் துறைகளைக் கட்டி அவற்றை நகராட்சிகளுக்கும் பேரூராட்சிகளுக்கும் தந்து விடுகிறோமே தவிர அவற்றை நிர்வகிப்பதில் அரசு எந்தவிதமான செலவையும் வைத்துக் கொள்ளவில்லை. இயந்திரச் சலவை அமைப்பதில் சென்னையில் ஒன்று ஏற்படுத்தத் திட்டம் தீட்டப்பட்டு அதற்குக் கட்டடம் போன்ற வேலைகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. இதற்காக கூட்டுறவு சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டு நிலம் கூட 10

---

@ 101-ம் பக்கத்தில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

கிரவுண்ட் வாங்கியிருக்கிறார்கள். அதற்கான கட்டட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வேலைகள் நடந்து முடிந்த பிறகு இயந்திர சலவை வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சரியான விலைக்கு அவர்களுக்குப் பொருட்கள் கிடைக்கவில்லையென்று சொன்னார்கள். அவையெல்லாம் கிடைப்பதற்குக் கூட்டுறவுத் துறை மூலம் அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், சலவைத் துறைகள் அநேகமாக ஆற்றையும் குளத்தையும் ஒட்டியே இருக்கின்றன. ஆற்றோரங்களிலேதான் அவர்கள் தங்களுடைய தொழிலைச் செய்வதற்கு துணி துவைப்பது மற்ற காரியங்கள் செய்வது போன்றவற்றிற்கு வசதியாக இருக்கிற காரணத்தினால் ஆற்றோரங்களிலே அவர்களுக்கு வீடுகள் இருந்தால் நல்லதாக இருக்கும். ஆற்றோரங்களிலே வீடுகள் கட்டிக் கொடுக்கவோ அல்லது அவர்கள் வீடுகள் அங்கு கட்டிக் கொள்வதற்கு அனுமதி கொடுக்கவோ அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** இந்த அரசு வீடற்ற ஏழைகளுக்கு வீட்டு மனைகள் பட்டாக்கள் வழங்கியிருப்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அரசு சம்பந்தப்பட்ட மனைகள் இருந்தால் அவை வேண்டுமென்று அரசை அணுகிக் கேட்பார்களானால் அவற்றைப் பரிசீலிக்க அரசு தயாராக இருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** மதுரையிலே இந்த வருடம் மார்ச் மாதத்திலே அந்தத் தொழிலாளர்கள் இரண்டாயிரம் பேர்களுக்கு மேல் ஊர்வலமாகத் திரண்டு வந்து இதுபற்றி மகஜர் கொடுத்திருக்கிறார்களே, இப்பொழுது சொன்ன பதிலில் அது உள்ளதா? நவீனமான முறையிலே டோபி கானா மதுரையிலே உடனடியாகக் கட்டுவதற்கு உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மதுரை நகராட்சியினுடைய விண்ணப்பம் இன்னும் அலுவலகத்திற்கு வந்து சேரவில்லை. அதுபற்றி வந்தவுடன் ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. நா. வீராசாமி :** கிராமப் பகுதிகளிலே உள்ள சலவைத் தொழிலாளர்கள் தேர்தல்கள் வந்தால் அவதிப்படுகிறார்கள். கட்சி செல்வாக்குப் பெற்றவர்கள் தான் விரும்புகின்றவருக்கு ஏன் ஓட்டளிக்கவில்லை, எதிர்ப்பவருக்கு ஓட்டளிக்கக் கூடாது என்றெல்லாம் நிர்பந்தப்படுத்தி பிறகு அவர்கள் வீடுகளுக்குப் போகக் கூடாது என்றெல்லாம் கட்டுப்பாடு போடுகிறார்கள். இதனால் அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அப்படிக் கட்டுப்பாடு விதிப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** அப்படிக் கட்டுப்பாடு இருப்பதை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்க அரசு தயங்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





## அறநிலையங்களின் வருமானம்.

*297 வினா.—திரு. என். கிட்டப்பா :
திரு. ச. சங்குமுத்து தேவர் :
திரு. கே. என். குமாரசாமி :
திரு. சி. கணேசன் : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோயில்கள், மடங்கள், ஆதீனங்கள், ஆகியவற்றின் நிகர வருமானத் தொகையினை கல்வி, மருத்துவமனை போன்றவற்றிற்கு செயல்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** அறநிலையங்களிலுள்ள உபரிநிதியை கல்வி நிலையங்கள், மருந்தகங்கள் இவற்றை அமைத்தல், பேணுதல் ஆகியவற்றிற்குப் பயன்படுத்தும் செயற் குறிப்பு ஏதும் தற்பொழுது பரிசீலனையில் இல்லை. இது பற்றிய செயற் குறிப்புகள் கிடைக்கும் போதெல்லாம் தமிழ்நாடு 1959-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் 36-வது பிரிவின்படி சென்னை. இந்து சமய அறக்கட்டளை ஆணையாளர் அவ்வாறு தொகையினை மாற்றிப் பயன்படுத்துவதற்கு ஒப்பளிப்பு வழங்கும் அதிகாரமுள்ளவராவார்.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, இந்தக் கோயில்கள், மடங்கள், ஆதீனங்கள் ஆகியவற்றிற்காகத் தேவைப்படுகின்ற நியாயமானத் தேவைகள் போக எஞ்சியுள்ள நிகர வருமானத்தில் கண்டிப்பாக ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை பள்ளிகூடங்கள், மருத்துவ மனைகள் போன்றவற்றிற்காகப் பயன்படுத்த அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** உள்ள சட்டத்தின்படி 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் 66-வது பிரிவின்படி சில நோக்கங்களுக்காக நாம் நிதியைப் பயன்படுத்தி வருகிறோம். ஏற்கெனவே கல்வி நிலையங்களுக்காகவும் மருத்துவ மனைகளுக்காகவும் அந்த நிதியை நாம் பயன்படுத்திக் கொண்டு வருகிறோம்.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவரவர்களே, கோயில்களிலே இருந்து ஏராளமான நிதி கிடைக்கிறது. அந்த நிதியைக் கொண்டு கோயில்களுக்கு வரும் மக்களுக்காக, கோயில்கள் இருக்கும் பகுதிகளில் ஆஸ்பத்திரி ஒன்றை உண்டாக்குவதன் மூலம் வருகின்ற மக்களுக்கு உடல்நலக் குறைவாகயிருந்தால் அந்த ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிக்க ஏற்பாடுகளை அதன்மூலம் செய்ய முடியும். அப்படிப்பட்ட ஏற்பாடுகளை அரசாங்கம் வருமானமுள்ள கோயில்கள் இருக்கும் பிரதேசங்களில் ஏற்படுத்த முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1971 ஜூலை 17

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்** : தலைவரவர்களே, நிதி வசதி இருக்கின்ற ஆலயங்களிலிருந்து தற்பொழுது 11 சித்த வைத்திய மருத்துவ மனைகளை நடத்திக் கொண்டு வருகிறோம். வரும் ஆண்டுகளில் அதிகப்படியாக நடத்த ஏற்பாடுகளை அறநிலையத்துறை எடுத்துக்கொண்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பது குறிக்கும்.]

### 2. 1971-72-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு (தொடர்ச்சி).

### கோரிக்கை எண் 12—காவல் துறை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அடுத்து, நிதிக் கோரிக்கையின் மீது விவாதம். பதின்மூன்றும் நாள். கோரிக்கை எண். 12—காவல் துறை.

**மாண்புமிகு திரு. மு கருணாநிதி** : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"நிதிக் கோரிக்கை எண். 12—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 18,91,04,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

**திரு. எ. சுவாமிதாஸ்** : போலீஸ் நிர்வாகத்தில் எல்லோருக்கும் சமநீதி கிடைக்க ஏற்பாடு செய்வதைப்பற்றி விவாதிக்க. I move the cut motion standing in my name, namely,

"That the allotment of Rs. 18,91,04,300 under Demand No. 12—Police—be reduced by Rs. 100".

**திரு. க. சுப்பு** : தலைவரவர்களே, காவல்துறை நிர்வாகத்தில் வெளியார் தலையிடுவதைத் தடுப்பதுப்பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 12—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 18,91,04,300-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**DR. H. V. HANDE** : Sir, to discuss the need for the issue of instructions to all the police stations to take impartial action irrespective of political considerations whenever complaints are brought to police stations, I move the cut motion standing in my name, namely,

"That the allotment of Rs. 18,91,04,300 under Demand No. 12—Police—be reduced by Rs. 100".



1971 ஜூலை 17]

### 3. நடைமுறைக் கேள்வி

### ஒரு வெட்டுத் தீர்மானத்தில் மறைமுகக் குற்றச்சாட்டு இருப்பதாகக் கூறப்பட்டது குறித்து.

*THIRU N. GANAPATHY : Mr. Speaker, Sir, on a point of order. The cut motion moved by Dr. Hande makes some insinuation against the police, as if they are acting partially now towards some political parties. I therefore request that it should not be allowed.

DR. H. V. HANDE : May I submit, Sir, on the point of order raised that there is absolutely no insinuation.........

MR. SPEAKER : I will answer it. It is not for you to answer. The cut motion reads : "To discuss the need for the issue of instructions to all the police stations to take impartial action irrespective of political consideration whenever complaints are brought to police stations". There is no insinuation in it. It is in perfect order.

### 2. 1971-72-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு (தொடர்ச்சி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இப்பொழுது மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய தீர்மானமும், வெட்டுத் தீர்மானங்களும் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சரவர்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு காவல்துறை பற்றிய இந்த மானிய விவாதத்திற்குப் பயன்படும் பொருட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்காக ஆய்வுரை@ ஒன்று மன்றத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆய்வுரையிலேயுள்ள விஷயங்களைப் பற்றியும், மேலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அரசுக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய அரிய கருத்துக்களைப் பற்றியும் இன்றையதினம் பேச இருக்கின்றார்கள். நாளை மறுநாள் பதில் அளிக்கின்ற வாய்ப்பு எனக்கிருக்கின்ற காரணத்தினாலும், எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்களுக்கு விளக்கங்களைத் தருகின்ற வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் பேசுவதற்கு வழிவிட்டு இந்த அளவில் இந்த மானியத்தைப்பற்றி உறுப்பினர்கள் பேச வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கின்றேன்.

* THIRU K. M. SUBRAMANIAM : Mr. Speaker, Sir, I thank you for having called me to initiate the discussion on this very important subject of Police administration.

---

@ 104-126-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[Thiru K. M. Subramaniam] [1971 ஜூலை 17

Any Government can function as stated in the handout given us only on the efficiency of the Police administration of a State. And particularly when freedom is got only about 20 years back and political rights have been given to all the aduits, naturally they expect economical improvements and they agitate for economic improvements. When they demand economic improvements, it is always misunderstood as agitations and then Police come to the rescue to suppress those agitations.

I am very glad that in Tamil Nadu we have got an excellent police with a very good record. Similarly we are very happy after the various incidents that took place during the elections, we had the assurance in the Assembly from the Hon. Chief Minister that he would take special care to see that such incidents were put down and it would not be repeated. The assurance was in the Assembly, but when we go out to the public and see what is happening, many of the assurances are not kept up at all.

Our Hon. Chief Minister has come to the top by ascending the ladder. The ladder is very good, but various steps are shaking because many of the people below are not acting according to the instructions givn by the Hon. Chief Minister, according to the knowledge I have received from various places.

I would quote one or two very minor incidents. I do not say that they are very serious examples. A drama hall was burnt in Tambaram and up to now I understand, after it was set fire to 20 days back, no action has been taken. I am speaking subject to correction. Similarly in a village a few miles away from Kancheepuram I have come to know that there was a severe attack on certain farmers and many animals and other things were destroyed and 17 arrests were made on 5th July. Up to now, no action has been taken. These are all minor incidents. But I only quote these incidents to show that in spite of the anxiety of the Chief Minister to see that there is law and order in this State, certain things are going on, as if the Chief Minister has not given instructions.

Now coming to other points, we know that there has been various cut motions that political interference should not be there. I am sure at the top there is very little political interference, but at the bottom in every police station—Mr. Speaker, Sir, you may ask for evidence, I do not carry a camera to give evidence to you—you will see many people going about, particularly those belonging to the ruling party—I do not mean any M.L.As.—going about to the police stations and almost controlling the police. Of course, these things are still happening. I am sure that a party that has won the elections with a massive majority will not hereafter care for such things and come to the rescue of the public.

Now Sir, so far as the police welfare is concerned, I can only say what I see and what is happening in the City. They have built houses for the police but the houses are rarely repaired. Particularly in T. Nagar, I see that repairs to police quarters are



1971 ஜூலை 17] [Thiru K. M. Subramaniam]

not carried out regularly. In Mannadi the police quarters are looking as if they are cow-sheds. There was no proper care of these police quarters in those places.

Secondly the police has an important place and its welfare should be looked after. There is no doabt about it and the most important welfare is the housing of the police, particularly in the constabulary rank. They should not be allowed to construct houses in slums and other places where they are mixing up with unsocial elements and somehow create a sort of social relationships with certain kinds of people. They must be provided separate houses or separate living quarters at least. I am sure these 4,000 houses that are mentioned in this report do not touch even a fringe of the housing problem of the police. I think the money spent on housing the police is money well-spent. I am sure that the Hon. Chief Minister will see that he devotes more money for housing the police.

Sir, about the law and order situation in this State, we know that as the country develops, and as people demand more and more economic rights, particularly in the industrial field, you get a lot of agitation. It is very difficult to stop this agitation because the capitalists who run the factories are accustomed to a particular way of life. The labour that work there are accustomed to a particular way of life. There is no approach between the two to corrective values and see that good things are done in this country. It is very essential that Police should be absolutely neutral in the matter of labour-capital relationship.

But what we find in spite of the tall talk about the capital-labour relationship and the duty of the police in such matters, is that the police is interferring in favour of one section or other, mostly in favour of the influential section. Such a thing must stop if there should be industrial peace and good industrial progress. Sir, the tradition of the police is such that they have always been accustomed to side with the capitalist section and now they are not able to forget it and I do not blame them. But I am sure the police will now be made to be impartial and only if there is any danger to the law and order situation, the police has to come and till then the capitalists and the labourers should be allowed to settle the affairs according to the labour laws and not according to the wishes of the police.

Now coming again to the law and order in the State, we are glad that the offences are coming down but these are recorded offences. There are so many unrecorded offences that do not find a place. As a matter of fact, it is well known to the public that the general law and order situation is gradually deteriorating. The police has to realise that this is a welfare State and it is not only control of law and order but it is the curative method that the police should think. What is the curative method that they have in view ?

[Thiru K. M. Subramaniam] *[1971 ஜூலை 17*

We are modernising the police. We can modernise the laboratory or investigation but we have to modernise the thought of the police. And what is most essential is that the police will have to change their outlook and see that they are helpful to the established law and order and to prevent the peculiar tendency of the younger generation to lead an unlawful life. We have imported many, many new ways of life from the West. We have imported good and bad things but today we are importing a lot of bad things which are affecting the character of the youth of the country and the responsibility of maintaining law and order has fallen on the police especially with regard to the younger generation.

Now, unemployment is increasing. The prices of food stuffs are increasing and people feel frustrated. Ultimately, frustration leads to agitation and agitation leads to rebellion and then the police has to see that such things do not take place, and the police administration goes on well. As I have already stated, we have got an excellent police whose reputation is very good. The Tamil Nadu Police Chief was even sent to Calcutta to find out certain things and he had successfully done his job. Also when the Prophet's Hair was stolen in Kashmir, it was the Tamil Nadu Police which had done a unique job of finding it out.

When we have such an excellent Police and when the Government themselves are anxious to establish law and order as stated in this House, a lot of unpleasant things are happening in this State. Political influences are brought to bear on the police and partymen go to the police station, sit along with the Inspector and direct him by saying: 'you do this and you do that'. If such is the state of affairs, I think the future of the country is Completely sealed.

Whatever be the intention of the Government, the Police must act to put down any agitation and see that law and order is maintained. Then only there is the possibility of a good Government functioning. Mr. Speaker, Sir, when girls go to the school, so many people go after them and jeer at them and no action is taken against them. These things are happening..........

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் சுப்பிரமணியம் அவர்கள் பேசும்போது, தமிழ் நாட்டுப் போலீஸ் இலாகாவைப் பாராட்டினார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் ஒரு அசம்பாவிதத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள். ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டாகப் பொதுவாகச் சொல்லுகிறார்கள். கலாட்டா செய்கிறார்கள் என்றால், குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். பத்திரிகைகளில் செய்தி வரவேண்டுமென்பதற்காகப் பேசுவது சரியல்ல. குறிப்பிட்ட குற்றச்சாட்டாக இருந்தால் சொல்லலாம். இப்படிப் பொதுவாகப் பேசுவது சரியல்ல.



*1971 ஜூலை 17]*

THIRU K. M. SUBRAMANIAM: I am very happy I am corrected. I am sure the Hon. Minister has made some responsible correction. I say on the one hand we have an excellent police and on the other hand we have a Government anxious to establish law and order. In spite of that, such things are happening.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : தாங்கள் ஒரு பக்கத்திலே திறமையான போலீஸ் இருக்கிறது என்பதை ஏற்றுக் கொண்டீர்கள். இன்னொரு பக்கத்திலே நடக்கும் தவறுகளைச் சொல்லுகிறீர்கள். அந்தத் தவறு திறமையான போலீசால் நடைபெறவில்லை. நாட்டில் இருக்கும் கேடுகெட்ட சமூக விரோதிகளால் நடத்தப்படுகிறது. திறமையான போலீஸ் இருக்கிறது; சமூக விரோதிகளும் இருக்கிறார்கள். திறமையான போலீஸ் இருப்பதால் அந்தச் சமூக விரோதிகள் தலையெடுக்காமல் இந்த அரசு பார்த்துக் கொள்ளும்.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, I am very happy about the assurance given by the Hon. Chief Minister. He has completely understood my point. My point is that anti-social elements are increasing in the State because of political interfernce and he has given an assurance that the anti-social elements will not increase and it will be put down. After all, we want to assist the Government through you, Mr. Speaker, by bringing to their notice the events happening in the country. The social structure in the country is such that the Police have to think on new lines and see that such things do not take place.

As I have stated earlier, the police force should be provided with good houses and the existing houses should be well repaired and well-maintained. Police force should also be trained in modern psychology. The police should alos think of curative methods to maintain law and order.

Also in the matter of labour-capital relationship, there should be no interference by the police and they should interfere only when there is physical trouble. There should be absolute freedom for the police and I am very happy that the Hon. Chief Minister has given us such an assurance and I sit down with a feeling of happiness.

* **மணலி திரு. சி. கந்தசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின்மீது எங்கள் கட்சியின் பொதுக் கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாக, போலீஸ் இலாகா என்று சொல்லுகிற நேரத்தில் ஜனங்கள் மத்தியில் ஒரு வெறுப்புணர்ச்சி இருக்கிறது என்பது வாஸ்தவம். அதற்கான காரணம் போலீஸ் இலாகா நடவடிக்கை மாத்திரமல்ல. ஏகாதிபத்திய காலத்தில் போலீஸ் இலாக்கா எந்த நோக்கத்திற்காக வைக்கப்பட்டதோ, எதற்காகப் பயிற்றுவிக்கப்பட்டதோ, எதற்காகச் செயல்படுத்தப்பட்டதோ அந்தக் கட்டுக்கோப்பு குலையாத வகையில் காங்கிரஸ் கட்சி ஆண்ட 25 ஆண்டு

களுக்குப் பிறகும், இப்போது இருக்கும் இந்த ஆட்சியின் காலத்திலும் அடிப்படை மாற்றங்கள் ஏற்படாததன் காரணமாகத்தான், பழக்க வழக்கங்கள் மாற்றப்படாததன் காரணமாகத்தான் போலீஸ் என்றால் வெறுப்புணர்ச்சி ஏற்படுகிறதே தவிர, போலீஸ் துறையினரின் தனிப்பட்ட நடவடிக்கையால் அந்த வெறுப்புணர்ச்சி ஏற்படவில்லை.

பொதுவாக, இந்த தேசத்தில் சுதந்திரத்திற்குப் பிறகு ஏற்பட்ட மறுமலர்ச்சி, மக்கள் வாழவேண்டுமென்ற துடிப்பு, சோஷலிச சமுதாயத்தை அமைக்க வேண்டுமென்ற நோக்கம், மக்கள் மனமாற்றங்கள், புதிய சமுதாயமாக உருவாகின்ற நிலையில் போலீஸ் துறையின் கட்டுக்கோப்பு அப்படியே இருப்பதால், இந்த நிலை ஏற்படுகிறது.

இன்று ஒரு புதிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. புதிய பல சீர்திருத்தங்கள் வருகின்றன. நிலச்சீர்திருத்தம் இருக்கிறது. விவசாயிகளுக்கு, தொழிலாளர்களுக்கு புது நீதி வழங்கவேண்டுமென்ற உணர்ச்சி இருக்கிறது. சொத்து உடமையாளர்களுக்கு ஒரு வரம்பு கட்ட வேண்டுமென்ற நிலைமை இருக்கிறது. ஆக, இப்படி புதுப் புது நிலைமைகள் ஏற்படுகிறபோது போலீசின் கடமையும் மாறுபடுகிறது. அதற்குத் தக்கபடி போலீஸ்காரர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். புதுக் கண்ணோட்டத்துடன் போலீஸ்காரர்கள் பிரஜைகளைப் பார்க்க வேண்டும் என்று சீர்திருத்தம் செய்வதில் நாம் சற்றுத் தயக்கம் காட்டுவதால்தான் இத்தகைய வெறுப்புணர்ச்சி ஏற்படுகிறது.

இந்த அறிக்கையை நான் நன்கு படித்துப் பார்த்தேன். இதில் பல நல்ல அம்சங்கள் இருக்கின்றன. மிக அசாத்தியமான சூழ்நிலையில் வேலை செய்கிறவர்களுக்குச் சௌகரியமான சூழ்நிலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று செய்யப்பட்டிருக்கிற சிபார்சு நல்ல சிபார்சுதான். அதை எவ்வளவு சீக்கிரத்தில் கொண்டு வர முடியுமோ, அந்த அளவிற்குச் சீக்கிரத்தில் கொண்டு வருவோமானால் போலிசார் தங்கள் நிதானத்தை இழக்காமல் மக்களை நல்ல முறையில் பாதுகாக்கக்கூடியதொரு நிலைமை ஏற்படும்.

குறிப்பாக போலீஸ் ஸ்டேஷனில் புகார் செய்கிறவர்களை அவர்கள் நடத்தும் விதத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது முற்றிலும் உண்மை. புகார் செய்ய வருகிறவர்கள் இந்த நாட்டுக் குடிமகன் என்ற முறையில் அவரை வரவேற்று விசாரணை செய்வது, எழுதி வாங்குவது, புலன் விசாரிப்பது போன்றவைகளில் அவர்களை மனிதர்களாக நடத்தும் முறையில் நிலைமை சீர்திருத்தி அமைக்கப்பட வேண்டும். அந்தச் சீர்திருத்தத்தை விரைவில் அமல் படுத்த வேண்டும்.

அடுத்தபடியாக, பொய் வழக்குகள் போடுவது பற்றிய விஷயத்தைப் பற்றிச் சொல்கிறேன். என் விஷயத்தைப் பற்றிச் சொல்கிறேன். முதல்வர் அவர்களின் பாஷையில் சொன்னால் 'நிலப்





பறி இயக்கம்' சம்பந்தமாக நான் கைது செய்யப்பட்டு என் மீது வழக்கு தொடரப்பட்டது. எஃப்.ஐ.ஆர்.-ஐப் பார்த்தால் தெரியும். 12 அரிவாள்கள், 12 தடிக்கம்புகள் இவற்றை வைத்துக் கொண்டு இருபது பேர்களுடன் விளக்கைப் போட்டுக் கொண்டிருந்ததாக எழுதியிருக்கிறார்கள். சட்டத்தை மீறுகிறோம் என்ற உணர்வோடுதான் மீறியிருக்கிறோம். அதனால் ஏற்படக் கூடிய விளைவுகளுக்குத் தயாராகத் தான் இருந்திருக்கிறோம். அதைப் பற்றிச் சொல்லவில்லை. 20 பேர்களை வைத்துக் கொண்டு விளக்கைப் போட்டு வைத்திருந்தார்கள் என்று வழக்கு போட்டிருக்கிறார்கள். இப்படி வழக்கு போடுவதால் போலீஸ் மீதுள்ள நம்பிக்கை மக்களுக்குக் குறைகிறது. சர்க்கார் திசை திருப்பக் கூடாது. சர்க்கார் உத்தரவு இல்லாமல் அப்படிப் போட்டிருக்கமாட்டார்கள் என்பது எனக்குத் தெரியும். நீதி தலை குனியாமல் இருக்கக்கூடிய நிலையில் போலீஸ் இலாகா செயல்படுவதற்கு அரசாங்கம் உறுதுணையாக இருக்க வேண்டும்.

அடுத்தபடியாக, லாக்கப்ஸ் பற்றிக் கூறியிருப்பது பொருத்தமாகவுள்ளது. லாக்கப்பில் இரண்டு நாட்கள் வைத்திருக்கிறார்கள் என்றால், அவன் குற்றவாளி என்று ருசிப்பிக்கப்படவில்லை, கைது செய்து ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்கிறார்கள். இரண்டு நாட்கள் அங்கு வைத்துவிட்டு, பின்னர் கேஸ் போடுகிறார்கள். வழக்கு ருசுப்பிக்கப்பட்ட பிறகுதான் அவனைக் குற்றவாளியாகக் கருத வேண்டும். அதுவரையில் அவன் குற்றவாளி என்று ருசுப்பிக்கும் வரையில் அவன் லாக்கப்பில் கண்ணியமான முறையில் வைத்து நடத்தப்பட வேண்டும். லாக்கப்பைப் போன்ற சுகாதாரக் குறைவான இடம் வேறில்லை. ஒருமுறை பீச் ஸ்டேஷனில் லாக்கப்பில் என்னை அடைத்து வைத்திருந்தார்கள். வேறு சில சமயங்களிலும் லாக்கப்பில் இருந்திருக்கிறேன். அந்த அறையில் மனிதன் இருக்க முடியாது. ஆகவே, லாக்கப்புகளை நல்ல சுகாதார முறையில் வைத்திருக்க சானிட்டரி ஸ்டாப் வைத்து நல்ல முறையில் அவை வைத்திருக்கப்பட வேண்டும். நவீன முறையில் அவை இயக்கப்பட வேண்டும். இதையும் கவனிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, சாட்சிக்கு சாட்சி போடுவதற்கு கண்ணியமான மனிதர்கள் வருவதில்லை. கண்ணியக் குறைவானவர்கள், சமுதாயம் வெறுக்கக்கூடியவர்கள் இவர்கள்தான் சாட்சிகளாக வருகிறார்கள். அவர்களைத்தான் போடுகிறார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. அதுவும் உண்மை. அதைப்பற்றியும் பரிசீலிக்க வேண்டும். கண்ணியமான மனிதர்கள் வராததற்குக் காரணம், அப்படி வருகிறவர்களை அலைய வைக்கிறார்கள். கோர்ட்டில் இடமில்லை, கோர்ட்டில் மனிதத்தன்மையற்ற முறையில் நடத்துகிறார்கள். ஆகவே, அவர்கள் குறிப்பிட்டுள்ள சீர்திருத்தத்தைக் கொண்டு வந்தால் கண்ணியமானவர்கள் சாட்சிகளாக வருவார்கள். அப்போது தவறான மனிதர்களைச் சாட்சிகளாகப் பிடிக்க வேண்டியதில்லை. அதனால் போலீஸின் அந்தஸ்தும் குறைய வேண்டியதில்லை. அந்த சிபார்சுகள் நல்லவை.

[மணலி திரு. சி. கந்தசாமி] [1971 ஜூலை 17

அடுத்தபடியாக, மக்களைப் பயமுறுத்துவதில்தான் போலீஸுக்கு மதிப்பு இருக்கிறது என்ற பழைய மனோபாவம் மாற வேண்டும். போலீஸ், சமுதாயத்தில் உள்ளவர்கள் இரண்டுபேர்களும்தான் சமுதாய நீதியைப் பாதுகாக்க வேண்டியவர்கள். ஆகவே, மக்களைப் போலீஸ் பயமுறுத்தும் நிலை மாற வேண்டும். போலீசைக் கண்டு வெறுக்கக்கூடிய நிலை இருக்கக்கூடாது. இவற்றைச் செய்யவேண்டுமென்று சொன்னால் போலீஸ் கான்ஸ்டபிள்ஸ், போலீஸ் அதிகாரிகள் இவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும்போது நவீன கருத்துக்களை உடையவர்கள் அவர்களுக்குப் பாடம் கற்றுக் கொடுக்க வேண்டும். நல்ல முறையில் போலீஸ் ஒழுங்காக இயங்கவும், சட்டத்தையும் அமைதியையும் காக்கும் விதத்திலும், மக்களிடம் கண்ணியமாகவும் கருருடனும் நடக்கும் விதத்திலும் இயங்க வேண்டும் என்பதோடு கூட, புதிய சூழ்நிலையில் எவ்வாறு போலீஸ் நடக்க வேண்டும் என்பது பற்றிச் சொல்லிக் கொடுக்கும் விதத்தில் போலீஸ் பள்ளிக்கூடங்கள் திருத்தியமைக்கப்பட வேண்டும். அங்குள்ள உபாத்தியாயர்கள் நவீன கண்ணோட்டத்துடன் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

அரசியல் கட்சிகளுக்கும் போலீசுக்கும் உள்ள விஷயங்கள் பற்றி அறிக்கையில் கூறப்பட்டுள்ளதை தயவுசெய்து மாண்புமிகு அமைச்சரவர்கள் படித்துப்பார்க்க வேண்டும். 'இன்டர்வென்ஷன்', 'இன்டர்செஷன்' என்பது பற்றிக் குறிப்பிட்டுவிட்டு இன்டர்செஷன் கூட காலப்போக்கில் தவறாகப் போய்விடும் என்று ஒரு பாராவில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை இங்கு படித்துக் காட்டி விடுவது நல்லது என்று கருதுகிறேன். நான் அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு பேசக்கூடியவன் அல்ல என்பது உங்களுக்குத் தெரியும். அதை வாசிக்கிறேன்.

The problem arises in this way. The dividing line between intervention and intercession is conceptually clear, but not always clear in practice. Intercession can easily become improper pressure where the interceder has the ear of Ministers, or at least the ear of someone who has the ear of Ministers.

என்றிருக்கிறது. அந்தப் பாராவைப் படித்துப் பார்க்க வேண்டும். நானே ஒரு சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறேன் என்றாலும், அனாவசியமாக நிர்வாக விஷயங்களில் தலையிடுவது தப்பு என்ற உணர்வோடு செயல்படக்கூடியவன் என்ற முறையில் சொல்கிறேன். இந்த ஆட்சிக்குப் பெருமை தரும் விதத்தில் நடக்க வேண்டுமென்றால் கூடுமானவரையில் அன்றாட நிர்வாகத்தில் தலையிடாமல் இருப்பது மிகவும் நல்லது. அதைக் கமிஷனும் எடுத்துக் காட்டியிருக்கிறது. அதை நிச்சயமாகக் கடைப்பிடிக்க வேண்டும். இது மக்கள் கிளர்ச்சி செய்யக்கூடிய காலம். வன்முறைச் செயல்களை ஆதரிக்க வேண்டுமென்று சொல்லவில்லை. தூண்டிவிட வேண்டுமென்பதை ஒப்புக்கொள்ளவில்லை. நீதியின் பேரால் தொழிலாளர்கள், விவசாயிகள், இன்னும் படித்தவர்கள், என்.ஜி.ஓ.க்கள், அகில இந்திய ரீதியில் மத்திய அரசாங்க சிப்பந்திகள் எல்லோரும்



1971 ஜூலை 17] [மணலி திரு. சி. கந்தசாமி]

இன்றையதினம் கிளர்ச்சியில் இறங்கக்கூடிய அளவில் ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இன்று சமுதாயம் ஒரு கொதிக்கலனாக இருக்கிறது. அது மீண்டும் புதிதாக வார்க்கப்படக்கூடிய நிலையில் இருக்கிறது. கிளர்ச்சிகள் அத்துமீறிப் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. சட்டத்தைப் பாதுகாக்கவேண்டுமென்ற பொறுப்பு இருக்கிறது. அவற்றை நவீன முறையில் கட்டுப்படுத்தக்கூடிய முறைகளைக் கையாள வேண்டும்.

போலீஸ்காரர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் இன்றையதினம் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்குள்ள சம்பளம் போதுமானதாக இல்லை. 48 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஐந்து குழந்தைகள் இருப்பதாக இந்தக் குறிப்பில் காணப்படுகிறது. குடும்பக் கட்டுப்பாடும் இதில் வருகிறது. அவர்கள் நல்லமுறையில் வாழ்வதற்கு நம் 'கல்ச்சர்', நம் கலாசாரத்தோடும், பண்பாட்டோடும் வாழ்வதற்கேற்ற முறையில் பல திருத்தங்களைக் கொண்டு வரவேண்டும்.

எங்கள் கட்சி கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட கிளர்ச்சிகளைத்தான் செய்கிறது. சில சமயங்களில் மக்களின் கவனத்தை ஈர்ப்பதற்கு, அல்லது சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு ஒரு கிளர்ச்சி செய்கிறோம். அந்தச் சந்தர்ப்பங்களில் நாங்கள் சிறை செல்வதற்குத் தயங்குவதில்லை. சிறைக்குச் செல்ல வேண்டும் என்று தெரிந்துதான் செல்கிறோம்.

நான் கேட்டுக்கொள்வது, போலீஸ் ஸ்டேஷன்ஸ், சிறைகள் இவற்றில் நல்ல மாற்றங்கள், மாறுதல்கள் செய்யப்பட வேண்டும். அரசியல்வாதிகளைக் கௌரவமாக நடத்தவேண்டும். அவர்கள் மதிக்கப்பட வேண்டும். அவர்கள் ஏழைகளானாலும் சரி அல்லது பணக்காரர்களானாலும் சரி. ஒன்று என் ஞாபகத்திற்கு வருகிறது. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும், அண்ணா அவர்களும் பாதுகாப்புக் கைதிகளாக 1954-ல் பிடித்து வைக்கப்பட்டார்கள். அன்றையதினம் அவர்களைச் சென்று பார்த்த ஞாபகத்தோடு சொல்கிறேன். அரசியல்வாதிகள் பல சந்தர்ப்பங்களில் சமுதாய நீதிக்காகப் போராடுகிற காலத்தில் தன்னலம் கருதாது, எந்தவித தண்டனையும் ஏற்றுக் கொள்ளச் செல்லும்போது, அவர்களுக்கு சில வசதிகளை, சில மாற்றங்களைச் செய்து தரவேண்டும். அந்தளவில் போலீஸ் இலாகா இயங்க வேண்டுமென்று கூறிக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழக முதல்வர் கொண்டு வந்து இருக்கிற தமிழ்நாடு போலீஸ் பற்றிய இந்த மானியக் கோரிக்கைகளை மிக பூரிப்புடன் வரவேற்று சில கருத்துக்களை சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன்.

(திரு. நா. வீராசாமி—தலைமை)

எனக்கு முன்னாலே இந்தக் கோரிக்கைகளின் மேல் பேசிய ஸ்தாபனக் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அவர்களும், நம்முடைய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் அவர்களும் எடுத்த

எடுப்பிலேயே போலீஸ் நிர்வாகத்தை அதன் திறனைத்தான் மிகச் சிறப்பாகப் பாராட்டியிருக்கிறார்கள். "எக்ச்லண்ட் ரிகார்டு" என்று அவர்கள் அந்த வார்த்தையைப் பயன்படுத்தி இருப்பதை நாம் எல்லாம் மகிழ்ச்சியாக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். தமிழ்நாட்டைக் காக்கும் பொறுப்பை ஏற்றுள்ள முதலமைச்சர் அவர்கள் காவல் துறையைக் காக்கும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் பொறுப்பு ஏற்றுக் கொண்ட பின்னால், தாம் எதை நீண்டகாலமாகச் சொல்லி வந்தார்களோ, அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று முயன்று கொண்டு இருக்கிறார்கள்.

அவர் தன்னுடைய பேச்சிலே மட்டுமல்ல, நாடகத்திலே கூட அது தாலாட்டுப் பாடலாக இருந்தாலும், வசனமாக இருந்தாலும், போலீஸ்காரர்களின் நிலைமையை மிகச் சிறப்பாக அதிலே எடுத்துச் சொல்லி, அவர்களை உயர்த்த வேண்டிய நிலைமையையும் எடுத்துச் சொல்லி இனி அவர்கள் எப்படி இருக்க வேண்டுமென்று அந்தக் காலத்தில் நாடகத்திலே கூட நடித்துக்காட்டினார்கள். இதை நடைமுறைப்படுத்தும் முறையிலேதான் இன்று போலீஸ் கமிஷனை அமைத்து, வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு அறிக்கையைத் தயாரித்து ஏறத்தாழ ரூ. 8 கோடியிலிருந்து ரூ. 9 கோடிவரை அதற்காகச் செலவிட 'ஃபேஸ்ட் ப்ரோக்ராம்' என்ற அளவிலே, அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான சீரிய முயற்சியை எடுத்து இருக்கிறார்கள். பல மாநிலங்களில் கலவரம் ஏற்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் ரத்தக் களறிகள் ஏற்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் ரண களங்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில், தமிழ் நாட்டின் அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டுவிடுமோ என்று அச்சப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் மிகச் சிறந்த முறையில் நமது மாநிலத்தில் உள்ள காவல் துறை பணியாற்றியது என்பதற்காக அந்தக் காவல் துறையில் சிறப்பான நிர்வாகத்தை நாம் பாராட்டித் தீரவேண்டும். குறிப்பாகவும் சிறப்பாகவும் சென்ற ஆண்டு அடுத்தடுத்து நடைபெற்ற ஊராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள், பத்து நகராட்சிகளுக்கு நடைபெற்ற தேர்தல்கள், பொதுத் தேர்தல்கள், இவ்வளவு தேர்தல்களும் நடைபெற்ற காலத்தில் நம்முடைய மாநில காவல் துறை மிகச் சிறப்பாகப் பணியாற்றி இருக்கிறது. அதற்காக நாம் அதைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம்.

அது மட்டுமல்ல. நிலப்பறி இயக்கம் பற்றி மணலி கந்தசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆயிரமாயிரம் பேர் ஒரு நாள் கிளர்ந்தெழுந்து பல இடங்களிலே அந்த இயக்கத்தில் ஈடுபட்ட நேரத்தில் முதல் அமைச்சர் அவர்கள் போலீஸ் துறையோடு அடிக்கடி தொடர்பு கொண்டு சிறப்பான முறையில், அமைதியான முறையில், அதைச் சமாளித்திருக்கிறார்கள் என்ற பெருமை நமது மாநிலத்திற்கும் நமது காவல் துறைக்கும் உண்டு. நாஸிக்கில் மட்டுமா பணத்தோட்டம் வளர வேண்டும், நமது மாநிலத்தில் மட்டும் அது வளரக்கூடாதா என்று சிலர்





எண்ணி அத்தகைய காரியங்களில் ஈடுபட்ட நேரத்தில், நமது காவல் துறையினர் விழிப்பாக இருந்து அவர்களைக் கைது செய்தனர். கேரளத்திலிருந்து தமிழகத்திற்குக் கள்ள நோட்டுகள் வராமே தவிர, அவற்றை இங்கேயே அடிக்க விடக் கூடாது, தமிழ் நாட்டில் பணத் தோட்டம் வளரக் கூடாது என்ற முறையில் நம்முடைய காவல் துறை விழிப்பாக இருப்பதை நினைத்துப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நக்ஸல்பாரிகளை ஒடுக்குவதிலே முளையிலேயே கிள்ளி எறிவது போல நம்முடைய தமிழகக் காவல் துறை அந்தக் கட்சியை வளர விடாமல தக்க நடவடிக்கை எடுத்ததற்கு அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முதல் அமைச்சர் அவர்கள் காவல் துறை அதிகாரிகளோடு அடிக்கடி தொடர்பு கொண்டு, இந்த இயக்கங்கள் எங்கெங்கே தளங்களை அமைக்கின்றனவோ அங்கேயெல்லாம் போய், காவல் துறை அதை ஒடுக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்கச் சொன்னார்கள். கேரளாவில் சில ஊர்களில் வீட்டில் உட்கார்ந்து கொண்டிருந்த பணக்காரரை, பனங்காய் சீவுவது போல் தலையைச் சீவி, பூசணைக்காயைத் தொங்கவிடுவது போல் வீட்டிற்கு முன்னால் தலையை தொங்கவிட்டு ரத்தத்தை எடுத்து சுவற்றில் எழுதி விட்டுப் போனதாகச் செய்தி பத்திரிக்கைகளில் படங்கள் மூலமாக நாம் பார்த்தோம். நம்முடைய மாநிலத்தில் அப்படிப் பட்ட பயங்கர சம்பவங்கள் வரவொட்டாமல் தடுத்ததற்காக நாம் உண்மையிலேயே காவல் துறையைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். நம்முடைய காவல் துறை இவ்வளவு சிறப்பாகப் பணியாற்றிய காரணத்தால்தான், மற்ற மாநிலங்களுக்கு ஏற்பட்ட பழி நம்முடைய நாட்டிலே தலையெடுக்க முடியாமல் போயிருக்கிறது என்பதைப் பூரிப்போடு கூறிக்கொள்கிறேன்.

இது நாள் வரை மதுவிலக்கு இருந்தது. இந்த ஆண்டு அதன் மூலமாகப் பிடிக்கப்பட்ட கேஸ்கள் 3¾ லட்சத்திற்கு மேல் இருக்கின்றன. இனிமேல் அப்படிப்பட்ட நிலைமை இல்லை. வாயை ஊதுங்கள் என்று போலீசார் இனிமேல் கூற மாட்டார்கள் ஊரிலே இருக்கும் அண்டான் குண்டாவைத் தூக்கமாட்டார்கள். போலீசாருக்கும் மக்களுக்கும் இடையே நல்ல ஒரு தொடர்பு ஏற்பட வேண்டும். எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் சொன்னது போல், காவல் துறை இனி ஆக்கபூர்வமான வேலைகளில் ஈடுபட வேண்டும். பல்வேறு நாடுகளில் உள்ள காவல் துறையைவிட நம்முடைய நாட்டில் இருக்கும் காவல் துறை சிறப்பாக விளங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடை காவல் துறையினைப் பாராட்டுகிற வகையில் குறிப்பாக ஒன்றைக் கூற விரும்புகிறேன். 'அன்டிடெக்டட் வழக்குகள்' என்பது தமிழ் நாட்டிலேதான் குறைவாக இருக்கின்றன. ஏராளமான வழக்குகள் இங்கே தான் கண்டுபிடிக்கப் படுகின்றன. இந்த ஆண்டு 67.34% வழக்குகள் கண்டுபிடிக்கப்

[திரு. கா. வேழவேந்தன்] [1971 பிப்ரவரி 17

பட்டிருக்கின்றன என்ற பூரிப்பான செய்தியை நமது முதலமைச்சர் அவர்களுடைய உரையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் இன்னும் சிறப்பாகப் பணியாற்ற வேண்டும். மதுவிலக்கு நீக்கப்படுவதால் சில தகராறுகள் ஏற்படலாம். நான் ஹைதராபாத் நகரத்திற்குச் சென்றிருந்த நேரத்தில் பார்த்திருக்கிறேன். குடித்துவிட்டு கொஞ்சம் நிலை தடுமாறி வருவார்கள். வீதிகளில் கொஞ்சம் தாறுமாறாக நடந்து கொள்வார்கள். போக்குவரத்திற்கு இடைஞ்சல் ஏற்படுகிற நிலைமை ஏற்படும். அப்படிப்பட்ட நிலைமையைத் திறமையாக நாம் சமாளிக்க வேண்டும். மேல்நாடுகளில் இரவெல்லாம் குடித்துவிட்டு வந்தால்கூட அனுமதியோடு அவர்கள் இருப்பார்கள். ஆனால், இங்கே கொஞ்சம் மிகுதியாகக் குடித்துவிட்டால்கூட, கொஞ்சம் கலாட்டா செய்யும் உணர்வு வந்து விடுகிறது. நம்முடைய சீதோஷ்ண நிலை அப்படி அந்த நேரத்தில் நம்முடைய போலீசார் நல்ல முறையில் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்தாபனக் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த திரு. கே. எம். எஸ். அவர்கள் காவல் துறையின் நிர்வாகத்தில் ஆளும் கட்சியினர் தலையிடுகிறார்கள் என்று சொன்னார்கள். இந்த ஆட்சி வந்ததற்குப் பின்னாலேதான் ஆளும் கட்சி சட்ட மன்ற உறுப்பினரான, இப்போது துணை சபாநாயகராக இருக்கும், திரு. சீனிவாசன் அவர்களைக் கைது செய்து உள்ளே வைத்தோம். கடந்த ஒரு வார காலமாக உட்லாண்ட்ஸ் ஓட்டல் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் ஒன்றை நடத்திக் கொண்டு இருக்கிறேன். இன்று ஒரு மகிழ்ச்சியான செய்தி என்னவென்றால், நம்முடைய முதலமைச்சரும், தொழிலாளர் நல அமைச்சரும் அதற்காக ஒரு உடன்பாடு கண்டு, அந்தத் தொழிலாளர்கள் எல்லாம் இன்றைக்குக் காலையில் வேலைக்குத் திரும்பியிருக்கிறார்கள். அப்படி வேலை நிறுத்தம் செய்து கொண்டிருந்த நேரத்தில் போலீஸ்காரர்கள் எங்கே நிற்கச் சொன்னார்களோ; அந்த இடத்தில் நின்றுதான் நாங்கள் ஆர்ப்பாட்டம் செய்தோம். கோஷங்கள் எழுப்பினோம். அந்த ஓட்டலின் எதிர் வரிசையில் நின்றுதான் கோஷம் போட வேண்டுமென்று சொன்னார்கள். வெயிலாக இருந்தாலும் பரவாயில்லை என்று சொல்லி, போலீஸ்காரர்கள் சொன்ன இடத்தில்தான் நின்றோம். ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் ஆயிற்றே என்று நினைத்து இருந்தால் அந்த நிர்வாகத்தின் பக்கத்திலேயே போய் நின்று கொண்டு இருக்க முடியும். ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, போராட்டங்கள் அமைதியான முறையில் நடத்த வேண்டும். வன்முறைகள் தலையிடக் கூடாது, கட்சிக்காரர்களின் தலையீடு காவல்துறையில் இருக்கலாகாது என்று நம்முடைய சட்ட மன்றக் கட்சிக் கூட்டங்களிலும், தனிப்பட்ட நேரத்தில் பேசுகிற போதும், நம்முடைய கலைஞர் அவர்களும், அண்ணா அவர்களும் எத்தனையோ முறை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1971 ஜூலை 17]

THIRU MANALI C. KANDASAMI: What I stated was this. I simply quoted from the report of the Police Commission. I did not accuse that the parties intervene.

திரு. கா. வேழவேந்தன்: அப்படிப் போலீஸ் குழுவில் பரிந்துரை வழங்க வேண்டிய அவசியம் ஒரு வேளை கடந்த கால சரித்திரத்தின் விளைவாக ஏற்பட்டு இருக்கலாம். ஆனால் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு அப்படிப்பட்ட நிலைமை ஏற்படவில்லை என்றுதான், நம் மதிப்பிற்குரிய திரு. சீனிவாசன் அவர்களை கைது செய்யப்பட்ட நிலைமையையே எடுத்து வைக்க விரும்புகிறேன்.

இன்றையதினம் இந்த போலீஸ் குழு எடுத்துச் சொல்லியிருக்கின்ற பரிந்துரைகளை வெகுவேகமாக நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்திக் கொண்டு வருகின்றார்கள். அப்படிப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் இன்றைக்கு முக்கியமாகக் கிராமப் பகுதிகளில் உள்ள காவல் நிலையம் ஒன்றுக்கு ஒரு மோட்டார் சைக்கிள் வீதம் 100 காவல் நிலையங்களுக்கு 100 மோட்டார் சைக்கிள்கள் வாங்கவும், கிராமங்களில் உள்ள காவலர்களுக்கு வழங்குவதற்காக 5,000 சைக்கிள்கள் வாங்கவும் அனுமதித்து அரசு சமீபத்தில் ஆணை பிறப்பித்து இருக்கிறது.

மேலும் பலருக்கு வேலைவாய்ப்புகளைத் தேடித்தர வேண்டும் என்ற முறையில் முதல் நிலைக் காவலர்கள் பதவிகளை ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இதன் அடிப்படையில் 2,100 பதவிகளை ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கி உள்ளனர்.

'அவர்களுடைய வீடுகள் மிகவும் கேவலமான முறையில் கட்டப்பட்டிருக்கின்றன' என்று மதிப்பிற்குரிய கே. எம். எஸ். அவர்கள் குறைபட்டுக் கொண்டார்கள். அவைகள் எல்லாம் கடந்த ஆட்சியினர் காலத்தில் கட்டப்பட்டவை. இனி எதிர் காலத்தில் கட்டப்பட இருக்கும் அவர்களுடைய குடியிருப்புகள் மிகச் சிறந்த முறையில் அமைய இருக்கின்றன. குடிசை மாற்று வாரியம் கட்டுவதுபோல இனி அவர்களுக்காகக் கட்டப்படும் குடியிருப்புகள் நான்கு மாடி ஐந்து மாடிக் கட்டிடங்களாக அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துணைபுரிய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, போலீஸ் சர்க்கிள் ஒன்றுக்கு ஒரு ஜீப் வீதம் வழங்கப்பட வேண்டும். இன்னும் மாவட்டப் போலீஸ் அளவில் பார்க்கும் போது எஸ். ஏ. பி. மாவட்டத் தலைநகரங்களில் மட்டுமே இப்போது வைக்கப்பட்டு இருக்கின்றது. இப்படி ஒரே இடத்தில் இருக்காமல் டெபுடி சூப்பரிண்டெண்டு அளவில் உள்ள தலைநகரங்களிலும் அவர்களைப் பகிர்ந்து வைக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய பகுதியைப் பொறுத்த வரையில் திருவொற்றியூர் டி.எஸ்.பி. அலுவலகம் இருக்கின்ற பகுதி ஒதுக்குப் பகுதியாகும். அந்த அலுவலகத்தை ரெட்ஹில்ஸ் போன்ற மையப் பகுதியில் வைக்க வேண்டுகிறேன்.

[திரு. கா. வேழவேந்தன்] [1971 ஜூலை 17

இன்றைக்கு இப்படிப் பயனுள்ள முறையில் பணியாற்றிவரும் போலீஸ் துறை மேலும் சிறந்த முறையில் செயலாற்றுவதற்கு வழிவகைகள் ஏற்படுத்தித் தரப்பட்டு இருக்கின்றன. இதற்காக நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என் பணிவான பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

***திரு. கோவை செழியன்** : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, காவல் துறை மான்யத்தின் மீது நடக்கும் விவாதத்தில் பங்கு கொண்டு இரண்டொரு கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பினை அளித்தமைக்காக என் நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நமது தமிழ் நாடு காவல் துறையானது இந்தியாவிலேயே மிகச் சிறந்ததொரு இடத்தைப் பெற்று இருக்கிறது. ஆங்கில நாட்டின் 'ஸ்காட்லாண்டு யார்டு' என்று சொல்லப்படும் தனிப் பிரிவினைப் போல மிகச் சிறந்த பெயரையும புகழையும் பெற்றுள்ளது நமது தமிழகத்தின் காவல் துறை. ஆனால் எவ்வளவுதான் பெயரையும் புகழையும் பெற்று இருந்தாலும், அது என்றைக்குமே, எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும் எதிர்க்கட்சியினரால் தாக்கப்பட்டுப் பேசப்படுகிற, குறை சொல்லப்பட்டுப் பேசப்படுகிற இலாகாவாகும்.

எங்கேயாவது சட்டம்-அமைதி குறைவு ஏற்பட்டுவிட்டால் நாட்டிலே சட்டம் இருக்கிறதா இல்லையா என்று சொல்லுவார்கள். சட்டம்-அமைதியைக் காக்க வேண்டும் என்பதற்காக ஏதாவது சிறியதொரு நடவடிக்கை எடுத்துவிட்டாலும் 'போலீஸ் அட்டூழியம் பொறுக்க முடியவில்லை' என்று குறை சொல்லுவார்கள். நீதிவிசாரணை வேண்டும் என்று கேட்பார்கள். இப்படிச் சொல்லுகிற காரணத்தினால் போலிஸ் நிர்வாகம் தன்னுடைய நடவடிக்கைகளைச் சீரான முறையில் செய்ய முடியாததொரு இக்கட்டான நிலைமைக்கு ஆளாகிறது. 'யார் எப்படிப் போனால் என்ன, யார் கொல்லப்பட்டால் என்ன, ஏன் நாம் தலையிட்டுவிட்டு பிறகு நீதி விசாரணையில் சிக்கிக் கொண்டு தவிக்கவேண்டும்' என்ற எண்ணத்துடன் ஒதுங்கி விடுவதற்கு இதனால் வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே எந்தக்கட்சி ஆட்சியில் இருந்தாலும் அவர்கள் சுதந்திரமாகப் பணியாற்றுவதற்கு ஏற்ற முறையில் அவர்களை விட்டுவிட வேண்டும்.

பத்திரிகைகளில் 'ஃபோடோ' போட்டுக் காட்டினார்கள். 'இந்தப் படத்தில் இருப்பவர் போலீஸ் கமிஷனர். அவருடைய கையில் இருப்பது தடிதானா அல்லது தர்ப்பைப்புல்லா' என்றெல்லாம் கேட்டார்கள். அவர் தன் கையில் இருப்பது தடிதான் என்று காண்பிக்க ஆரம்பித்தால் 'அவர் மிகக் கொடூரமானவர்' என்று சொல்லப்படுவார். அமைதியைக் காப்பதற்காகக் கூடுமான வரையில் துப்பாக்கிப் பிரயோகத்தைத் தவிர்த்து ஒரு சிறு தடியடிப் பிரயோகம் செய்துவிட்டாலும் அப்போதும் அவர்மீது குறை சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட நிலைமைகளுக்கிடையில்



1971 ஜூலை 17] [திரு. கோவை செழியன்]

அவர்கள் பணியாற்ற வேண்டியிருக்கிறது. நமது தமிழகக் காவல் துறையைப் பொறுத்த வரையில் அவர்களுடைய செயல் முறை போன்றவற்றை ஆராய ஒரு குழுவினை அமைத்து அது தன்னுடைய பரிந்துரைகளையெல்லாம் அரசுக்கு அளித்திருக்கிறது. அவைபற்றி விவாதம் செய்வதற்கு இப்போது நான் விழையவில்லை. இரண்டொரு கருத்துக்களை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

காவல் துறையில் உள்ள உயர் பதவியில் உள்ள அதிகாரியாக இருந்தாலும், கீழ் மட்டத்தில் உள்ள அதிகாரியாக இருந்தாலும், அவர்கள் யாரும் ஓர் இடத்தில் மூன்று ஆண்டுகளுக்கு மேலே இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது மிகமிக அவசியம். இது கண்டிப்பாக அமல் படுத்தப்பட வேண்டும். அப்போதுதான் பாரபட்சம் இன்றி நிர்வாகம் நடத்துவதற்கு வசதியாக இருக்கும். சிறந்த முறையில் பணியாற்றும் அதிகாரிகளுக்கு அடிக்கடி வெகுமதிகள் தந்து, அவர்கள் மேலும் திறம்படப் பணியாற்றுவதற்கு உதவ வேண்டும். திறமையின் அடிப்படையில் அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கப்பட வேண்டும். வெறும் ஸீனியாரிட்டி அடிப்படையில் மட்டும் பதவி உயர்வு கொடுக்கப்படுவது தவிர்க்கப்பட வேண்டும். திறமையின் அடிப்படையில் பிரமோஷன் கொடுத்தால்தான் இந்தத் துறையில் நல்ல பல காரியங்களைப் பெற முடியும்.

மேலும், இத் துறையில் உள்ளவர்கள் பல நேரங்களில் தங்களுடை உயிரையும் பொருட்படுத்தாது 'ரிஸ்க்' எடுத்துப் பணியாற்ற வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் இப்படிப்பட்ட பணியில் ஈடுபட்டு இருக்கும்போது அவர்களுடைய உயிருக்கோ உடலுக்கோ தீங்கு ஏற்பட்டால் இப்போது கொடுக்கப்படும் 'காம்பென்ஸேஷன்' தொகை அதிகரிக்கப்பட வேண்டும். அப்போதுதான் அவர்களுடைய குடும்பத்தினருக்கு மறுவாழ்வுக்கான வசதி ஏற்படுவதுமட்டுமின்றி இத் துறையில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கும் தங்களது குடும்பத்திற்குப் பாதுகாப்பு இருக்கிறது என்ற நல்ல நம்பிக்கையோடு செயல் ஆற்ற முடியும்.

மேலும், சம்பளத்தைப் பொறுத்த வரையில் பல பரிந்துரைகளைக் குழு சொல்லியிருக்கிறது. அதையொட்டிய சர்ச்சைக்கு வர விரும்பாவிட்டாலும் சம்பள விகிதத்தில் உள்ள 'டிஸ்பேரிடி' அதாவது கீழ் மட்டத்தில் உள்ள அதிகாரிகளுக்கும் மேல் மட்டத்தில் உள்ள அதிகாரிகளுக்கும் இடையிலே உள்ள சம்பள விகிதம் தொடர்பே இல்லாத ஒரு நிலை இருக்கிறது. இந்த நிலைமை மாற்றியமைக்கப்பட வேண்டும். அவர்களுடைய சம்பளம் கணிசமான அளவிற்கு உயர்த்தப்படும்போது ஊழலும் லஞ்சமும் குறையும் என்பதை எதிர்பார்க்கலாம். சாதாரணமாக, போலீஸ் துறையில் லஞ்சம் என்று சொல்லப்படுவதெல்லாம் மேலதிகாரிகள் மட்டத்தில் வாங்கப்படுவதாக யாரும் சொல்லுவதில்லை. கீழ் மட்டத்தில்தான் சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட இழிச் சொல்லை அவர்கள் ஏற்காத முறையில் அவர்களுக்கு அதிக சம்பளத்தையும், அடிக்கடி ஊக்கத்திற்கான வெகுமதிகளையும் அளித்தால் நிச்சயம் இப்படிப்பட்ட குறைகளைப் போக்கலாம்.

[திரு. கோவை செழியன்] [1971 ஜூலை 17

அடுத்து, குடியிருப்பு வசதிகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இப்போது அவர்கள் குடியிருக்கும் குடியிருப்புகள் பல ஆண்டுகளுக்கு முன்பு அவர்களுக்கெனக் கட்டிக் கொடுக்கப்பட்டவையாகும். இருக்கும் ஒரே அறையில்தான் போலீசாரும் அவருடைய துணைவியாரும், இன்னும் மாமனார் மாமியார் போன்றவர்களும், தங்கியிருக்க வேண்டிய சிரமமான நிலைமை இருக்கிறது. இன்னும் பல இடங்களிலே அவர்களுக்கு வீடே கிடையாது. ஊதியூர் பகுதியில் உள்ள எங்கள் பகுதிக் காவலர்களுக்கு வீட்டு வசதியே செய்து தரப்படவில்லை. தனி நபர்களுடைய வீடுகளில் அவர்கள் குடியிருந்தால் சில சந்தர்ப்பங்களிலே அவர்களுடைய பேச்சைக் கேட்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் போலீஸ் துறையில் உள்ளவர்களுக்கு ஏற்படுகிறது. இதை வைத்துக் கொண்டு அந்த நபர்கள் ஊரை மிரட்டுகிறதைப் பார்க்கிறோம்.

மேலும், ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனுக்கும் நிச்சயமாக ஒரு ஜீப் தரப்பட வேண்டும். 1967-க்கு முன்பு பல இலாக்காக்களில் தேவையற்ற முறையில் ஜீப்கள் வழங்கப்பட்டு இருந்தன. அறிஞர் அண்ணா அவர்கள் வந்த பிறகு அவற்றில் பலவற்றைத் திரும்பப் பெற்றுவிடும்படி உத்திரவிட்டார்கள். குறிப்பாக ரூரல் பகுதிகளில் உள்ள காவல் நிலையங்களுக்கு இப்படிப்பட்ட ஜீப்கள் மிக மிக அவசியமாகும். ஏதாவது கொலை, கொள்ளை என்று தகவல் வந்தால் 5 மைல் 10 மைல் தூரத்திற்கு அவர்கள் நடந்து செல்ல வேண்டிய நிலையிருப்பதைப் பார்க்கிறோம். டாக்ஸி போன்ற வேறு மாற்று வண்டிகள் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. இது போன்றே மோட்டார் சைகிள்களும் எல்லாக் காவல் நிலையங்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும்.

அடுத்து, போராட்ட காலங்களில் அவற்றை அடக்கும் பணியில் ஈடுபட்டுள்ள போலீஸ்காரர்களும் முகமூடி போன்ற மாஸ்க் தரப்பட வேண்டும்.

மேலும், பெண்களை லாக்கப்பில் அடைக்கக்கூடிய நிலைமை ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும். அப்படி அவர்களை லாக்கப்பில் அடைக்கும் நிலை ஏற்பட்டால் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துகொள்ள வேண்டும்.

அடுத்து டி. எஸ். பி.-யை நேரடியாக நியமனம் செய்யும் முறை எடுக்கப்பட்டு, கீழ் மட்டத்தில் உள்ள அதிகாரிகள் பிரமோஷன் மூலம் அந்தப் பதவிகள் நிரப்பப்பட வேண்டிய நிலை ஏற்பட வேண்டும். தஞ்சை, கோவை ஆகிய மாவட்டங்கள் இரண்டு போலீஸ் மாவட்டங்களாகப் பிரிக்கப்பட வேண்டும். கோவை இண்டஸ்ட்ரியல் ஏரியா, தஞ்சை அக்ரிகல்சுரல் ஏரியா இவ்விரண்டையும் நிர்வகிக்க வசதியாக இந்த மாவட்டங்களை இரண்டு போலீஸ் மாவட்டங்களாகப் பிரிக்க வேண்டும்.



1971 ஜூலை 17] [திரு. கோவை செழியன்]

பிச்சைக்காரர்களுடைய விடுதிகளின் நிர்வாகம் போலீஸ் நிர்வாகத்திலிருந்து எடுக்கப்பட்டு அது சிறைச்சாலை நிர்வாகத்தின் கீழோ அல்லது சோஷல் வெல்ஃபேர் நிர்வாகத்தின் கீழோ வைக்கப்பட வேண்டும் என்று கூறிக்கொண்டு இந்த அளவிற்குப் பேச வாய்ப்பினை அளித்தமைக்கு நன்றி கூறி அமருகிறேன். வணக்கம்.

***திரு. ஏ. சி. நரசிம்மன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்துள்ள போலீஸ் மானியத்தை ஆதரித்து சில கருத்துக்களைக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இதுவரையில் பேசிய கட்சிக்காரர்கள் அனைவரும் போலீசாருடைய பணிகளைப் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். அதிலும் இந்தியாவிலேயே சிறந்த போலீஸ் என்று பெயர்பெற்ற நமது போலீசாரின் திறமையினைப்பற்றி நான் அதிகம் கூறவேண்டியிருக்காது என்று கருதுகிறேன்.

போலீசார் தேர்தல் நேரத்தில் அமைதியினை மிகவும் செம்மையாக நிலைநாட்டினார்கள் என்பதற்கு ஒரு சிறு உதாரணத்தைக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆரணியில் காங்கிரஸ் மாநாடு ஜனவரி 30, 31 தேதிகளில் நடைபெற்றது. 31-ஆம் தேதி அன்று அந்த மாநாட்டை ஒட்டி நடத்தப்பட்ட ஊர்வலத்தின் ஒரு பகுதியினர் அண்ணா சிலையின் மீது கற்களையும் காலணிகளையும் வீசினார்கள். அவர்கள் மீது போலீசார் நடவடிக்கை எடுத்தபோது, போலீசாரைக் கடுமையாகத் தாக்கிப் பேசினார்கள். அதில் ஒரு காங்கிரஸ் தொண்டர் ஒரு போலீஸ் அதிகாரியைப் பார்த்து "you are unfit to be a police officer" என்று நேரிடையாகச் சொன்னார். இன்னும் சிலர் நான்கு ஐந்து பேராகச் சேர்ந்து கொண்டு, தனியாக இருந்த டி.எஸ்.பி. அவர்களை சற்றுத் தூரமாக அழைத்து சென்று அவருடைய கைகளைப் பின்னால் கட்டிவிட்டு பித்தானைக் கழட்டி விட்டு, அவர் அணிந்திருந்த சட்டையைக் கழட்டுகின்ற அளவிற்கு வன்முறைச் செயல்களைச் செய்தார்கள். ஆனால் அப்போதுகூட போலீசார் அமைதியை நிலைநாட்ட வேண்டுமே, தேர்தல் நேரமாயிற்றே என்பதற்காகக் கடுமையான நடவடிக்கை எடுக்காமல் பொறுமையாக நடந்துகொண்டு, கலவரங்களை அறிவுடன் சமாளித்து, மாநாட்டை தொடர்ந்து நடத்த உதவி புரிந்தார்கள். அப்போது நடந்தது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் போலீசார் அந்த அளவிற்கு எதிர்கட்சிக்காரர்களுக்குப் பாதுகாப்பு கொடுத்து ஜனநாயகத்தைக் காப்பாற்றினார்கள். அந்த அளவுக்கு அவர்கள் நாட்டில் அமைதியை நிலைநாட்டினார்கள் என்பதற்கு இதைத் தவிர வேறு உதாரணம் சொல்ல வேண்டியதில்லை என்றே கருதுகிறேன்.

அதேபோன்று சமீபத்தில் ஆரணியில் சில கலவரங்கள் நடைபெற்றன. அந்நேரங்களிலும்கூட போலீசார் பொறுமையாக நடந்து கொண்டு யார் யாரை எப்படியெப்படிக் கைது செய்ய வேண்டுமோ அந்த அளவிற்குக் கைது செய்து நிலைமையை உடனடி-

[திரு. ஏ. சி. நரசிம்மன்] [1971 ஜூலை 17

யாகச் சமாளித்தார்கள். அப்படிப்பட்ட திறமை மிக்க நமது போலீசாருக்கு நாம் நன்மைகளைச் செய்யவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

போலீசாரின் வீட்டு வசதியைப் பற்றிச் சொன்னார்கள். போலீஸ் துறையை எடுத்துக்கொண்டு பார்த்தால், போலீஸ்காரர்களுக்கு வீடுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு குவார்டர்ஸ் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதேபோன்று சர்க்கிள் இன்ஸ்பெக்டர்களுக்கு குவார்டர்ஸ் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எஸ்.பி.க்குக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் டி.எஸ்.பி.க்களுக்கு மட்டும் குவார்டர்ஸ் கொடுக்கப்படவில்லை. அவர்கள் என்ன பாபம் செய்தார்களோ தெரியவில்லை. ஆகவே டி. எஸ் .பி. களுக்கும் குவார்டர்ஸ் கொடுப்பது மிகச் சிறந்ததாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, தீயணைப்புப் படையை நாம் எவ்வளவு பாராட்டினாலும் தகும். சென்னை நகரத்தில் தீ விபத்துக்கள் நடைபெற்றபோது மிக அருமையான முறையில் அவற்றை தீயணைப்புப் படை சமாளித்திருக்கின்றது. ஆரணி நகரத்திலும், அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் பல்வேறு தீ விபத்துக்கள் நடந்து கொண்டு வருகின்றன. ஏழு எட்டு ஆண்டுகளாக அந்தப் பகுதியில் தீ விபத்துக்கள் அதிகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. தீயை அணைக்க தீயணைப்புப் படைகள் ஆரணிக்கு 20 மைலுக்கு அப்பாலிருந்து வரவேண்டிய நிலைமை இருக்கிறது. ராணிப் பேட்டையிலிருந்து, வேலூரிலிருந்து தீயணைப்புப் படை வர வேண்டியிருக்கிறது. அவை 20 மைலுக்கு அப்பாலிருந்து வர வேண்டியிருப்பதால், தீயணைப்புப் படை வருவதற்குள்ளாகவே தீப் பற்றி எரிந்து, எல்லாம் முடிந்து விடுகிறது. ஆகவே ஆரணி நகரத்தில் ஒரு தீயணைப்பு நிலையத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏற்கெனவே அண்ணா அவர்கள் 27 தீயணைப்பு நிலையங்கள் ஏற்படுத்தப் போகின்றோம், அவற்றில் ஒன்று ஆரணியில் ஏற்படுத்தப்படும் என்று இந்த மாமன்றத்தில் தெரிவித்திருக்கின்றார்கள். விரைவில் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆரணியில் ஒரு தீயணைப்பு நிலையத்தை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். அதற்காக ஒரு இடத்தை ஏற்கெனவே ஒதுக்கித் தந்திருக்கிறோம். இந்த ஆண்டு மூன்று தீயணைப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அவ்வாறு அமைக்கப்படுவதில் ஆரணியில் ஒன்றிருக்கவேண்டும் என்று மன்றாடிக் கேட்டுக்கொள்ளு

அடுத்தபடியாக, மதுவிலக்கைப் பற்றி பலரும் பேசினார்கள். சில கட்சிக்காரர்கள் மதுவிலக்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதை எதிர்க்கிறார்கள். நம்மோடு உள்ள தோழமைக் கட்சிக்காரர்களில் சிலரும் எதிர்க்கிறார்கள். அதில் முஸ்லீம் லீக் கட்சியைச் சார்ந்தவர்கள் சிலர் எதிர்க்கிறார்கள். இந்த மாமன்றத்தில் முன்னால் முஸ்லிம் லீக் உறுப்பினராக இருந்தபோது ஹபிபுல்லா பேக் மதுவிலக்கைக் கண்டித்துப் பேசியிருக்கிறார்கள்,



1971 ஜூலை 17]

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் : மதுவிலக்கு ரத்து திட்டத்தை முஸ்லீம் லீக்கில் சிலர் அல்ல, அவ்வளவு பேரும் எதிர்க்கிறார்கள் என்பதைத் தயவு செய்து அங்கத்தினர் அவர்கள் ஞாபகப் படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : நானும் அதைத்தான் சொன்னேன். முஸ்லிம் லீக் உறுப்பினராக இருந்த திரு. ஹபிபுல்லா பேக் மதுவிலக்கைக் கண்டித்து, நாம் மதுவிலக்கை ரத்து செய்யவேண்டும் என்று இந்த மாமன்றத்தில் பேசியிருக்கிறார்கள். 1967-லே அம் மாதிரி பேசிவிட்டு, இப்போது மதுவிலக்கு ஒத்திவைக்கப்படும் போது முஸ்லிம் லீக் கட்சிக்காரர்கள் எதிர்க்கிறார்களே, ஏன் என்பதைத்தான் நான் கேட்கிறேன். அதேபோன்று சுதந்திரா கட்சி உறுப்பினர்களான திரு. கரு. சிமைச்சாமி, திரு. எல்லப்ப பாகவதர் போன்றவர்கள் மதுவிலக்கைக் கண்டித்து, மதுவிலக்கை ரத்து செய்யவேண்டும் என்று பேசியிருக்கிறார்கள். அப்போதெல்லாம் சும்மாயிருந்து விட்டு, இந்த அரசு மதுவிலக்கை, ரத்துக்கூட அல்ல, ஒத்தி வைக்கும்போது, அது குற்றம் என்று சொல்லுவதில் பொருள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மதுவிலக்கைத் தள்ளி வைக்கின்றபோது, மதுவிலக்கை ரத்து செய்கின்றபோது ஒன்றைச் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. துரைமுருகன் : Sir, on a point of order. முஸ்லிம்கள் அவ்வளவுபேரும் மதுவிலக்கை எதிர்க்கிறார்கள் என்று மதிப்பிற்குரிய அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள். அது சரிதானா?

MR. CHAIRMAN : (Thiru N. Veerasami) : This is not a point of order.

திரு. ஏ. சி. நரசிம்மன் : அடுத்தபடியாக, மதுவிலக்கை நாம் தள்ளிவைக்கும்போது ஒன்றை நன்றாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். காரணம், இன்றையதினம் நாம் மதுவிலக்கைத் தள்ளி வைக்கப்போகின்றோம் என்று சொன்னவுடன், பக்கத்திலுள்ள புதுவை மாநிலம் மதுவகைகளின் பேரில் இருக்கின்ற எக்சைஸ் டியூடிகளைக் குறைத்துவிட்டிருக்கிறார்கள். அதனால் மிகக் குறைந்த விலையில் எல்லா மதுவகைகளும் அங்கு கிடைக்கும். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால் வெளிநாட்டுச் சாராயம் அங்கே ஒரு ரூபாய்க்குள்ளே கிடைக்கிற நிலைமையில் இருக்கிறது. நாம் இங்கே விற்றால் அதே சாராயம் 8 ரூபாய் ஆகும். அந்நிலையில் அங்கிருந்து நிறைய கள்ளச் சாராயம் நமது மாநிலத்திற்குள்ளே வந்துவிடுமோ என்று அஞ்சவேண்டிய நிலை இருக்கிறது. அங்கிருந்து சாராயம் வராத அளவிற்கு, மதுப்பொருட்கள் வராத அளவிற்கு, பாதுகாக்க வேண்டியது போலீசாருடைய கடமை என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடைசியாக ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆரணியில் ஆரணி டவுன் போலீஸ் ஸ்டேஷன், தாலுக்கா போலீஸ் ஸ்டேஷன் என்று இரண்டு போலீஸ் ஸ்டேஷன்கள் இருக்கின்றன.

[திரு. ஏ. சி. நரசிம்மன்] [1971 ஜூலை 17

அவற்றை அடுத்து தாலுக்கா பூராவும் எடுத்துக் கொண்டால் கண்ணமங்கலத்தில்தான் போலீஸ் நிலையம் இருக்கிறது. இப்போது அதிகமான போலீஸ் நிலையங்களை ஏற்படுத்தவேண்டுமென்பது பரிசீலனையில் இருக்கிறது. இரண்டு சர்க்கிள் இன்ஸ்பெக்டர்களைப் போடப் போகிறார்கள். ஆகவே, இந்தச் சந்தர்ப்பத்தில் எஸ்.வி. நகரம், குன்றத்தூர், தச்சூர் ஆகிய இடங்களில் போலீஸ் நிலையங்களை அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

திரு. பி. வெங்கடசாமி அவர்கள் தெலுங்கில் உரையாற்றினார்கள்.

* **திரு. ஆ. கருப்பையா :** தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த காவல்துறை மானியத்தை ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல முன் வருகின்றேன்.

இந்த மானியத்தில் குறிப்பாக அரிசனங்களுக்கு வேலைவாய்ப்பு அதிகமாக ஏற்படுத்தித்தரப்பட்டிருக்கிறது. இந்த மானியத்தில் உள்ள அந்தச் சிறப்பு அம்சம் பாராட்டத்தக்கது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நாட்டில் சாதி மத பேதமற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்க இந்தத் துறையில் அரிசனங்களுக்கு அதிகமான வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருப்பது உதவியாக இருக்கும். பிற்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ஆகியவர்களின் முன்னேற்றத்திற்காக எடுக்கப்பட்டிருக்கிற முயற்சிகளில் சாலச் சிறந்ததாக இது இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு காவல்துறையினர் பல அம்சங் களில் சிறப்பாகப் பணியாற்றிக்கொண்டு வருவதை நான் உண்மை யில் பாராட்டத்தான் வேண்டும். அண்மையில் நடந்த பஞ்சா யத்துத் தேர்தல், அதை அடுத்து நடந்த பொதுத் தேர்தல்—இவை எல்லாம் அடுத்தடுத்து வந்தும் கூட, பஞ்சாயத்துத் தேர்தல் புகைச்சல் அடங்குவதற்குள் வந்த பொதுத் தேர்தல் அமைதியாக நடைபெறுவதற்கு நமது காவல்துறையினர் ஆற்றியிருக்கக்கூடிய பணி மிகச் சிறந்ததாகும் என்பதைத் தெரிவித்து அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்ல. இந்த நாட்டில் பொருளாதாரச் சிக்கலை ஏற்படுத்தக்கூடிய கள்ள நோட்டுகள் சம்பந்தப்பட்டவரை அடிக் கப்படுகிற கள்ளநோட்டுகள் புழக்கத்திற்கு வருவதற்குள்ளாகவே நமது காவல்துறையினர் அந்தக் கோஷ்டியினரைக் கண்டுபிடித்து வருகிற திறன் மிகமிகப் பாராட்டத்தக்கதாகும்.

முன்பு கோவையில் கள்ள நோட்டு வழக்கு கண்டுபிடிக்கப் பட்டது. அப்போது கூட அடிக்கப்பட்ட நோட்டுகள் புழக்கத் திற்கு வந்து—பாங்குகள் இந்த இந்த நம்பர் நோட்டுகளை வாங்கக்



1971 ஜூலை 17] [திரு. ஆ. கருப்பையா]

கூடாது என்று அறிவித்து. அதனால் குழப்பமடைந்த மக்கள் நல்ல நோட்டுக்களைக் கூட கள்ள நோட்டோ என்று வாங்க அச்ச முற்றிருந்த நிலை எல்லாம் நமக்குத் தெரியும். ஆனால் சமீபத்தில் நமது காவல் துறையினர்—கள்ள நோட்டுகள் புழக்கத்திற்கு வருவதற்கு முன்பாகவே கள்ள நோட்டு அடிக்கிறவர்களை எல்லாம் பிடித்துவருவது எல்லோராலும் பாராட்டத்தக்கது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. பல மாநிலங்களில் சொத்துடையவர்கள் வெளியில் நடமாடக்கூட முடியாமல் பயந்துகொண்டிருக்கிற நேரத்தில்—நமது மாநிலத்தில் நக்சல்பாரிகள் தலைதூக்க முடியாத படி முளையிலேயே அவர்களைக் கண்டுபிடித்து அந்த இயக்கத்தை ஒடுக்க நமது மாநில போலீஸ் துறை அவ்வப்போது கண்காணிப் பாக எடுத்து வருகிற நடவடிக்கைகள் எல்லாம் பாராட்டுவதற் குரியன.

அடுத்து, என்னுடைய தொகுதியில் மானூரில் போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது. அந்த போலீஸ் ஸ்டேஷனுக்கு 15 மைலுக்கு அப்பாலுள்ள உக்கிரங்கோட்டையில் ஒரு அவுட் போஸ்ட் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று போன முறையே கேட்டேன். அதை மீண்டும் வலியுறுத்த ஆசைப்படுகிறேன்.

போன ஆண்டுகூட ஒரு சம்பவம் நடந்து, சாராய வேட்டைக் காக போன போலீஸ்காரர்கள் நடுஇரவில் போய் உக்கிரங் கோட்டையில் மாட்டிக்கொண்டார்கள். பக்கத்திலே போலீஸ் ஸ்டேஷன் எதுவும் இல்லாத காரணத்தினால் சப்-இன்ஸ்பெக்டருக்கு உதவி செய்ய யாரும் இல்லை. பின்னர் கிராம மக்களே அவருக்கு உதவிசெய்து அவரை ஆஸ்பத்திரியில் கொண்டுபோய் சேர்த்தார்கள். ஆகவே, அங்கே ஒரு அவுட் போஸ்டாவது அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, போலீஸ் ஸ்டேஷன்களுக்கு டெலிபோன் வசதி செய்து தர வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொருளாதார அடிப்படை உயர உயர செய்யலாம் என்று சொன்னார்கள். பொருளாதாரத்தைச் சீர்செய்து டெலிபோன் வசதியையும் செய்து தர வேண்டும். போலீஸ் ஸ்டேஷன்களுக்கு டெலிபோன் வசதி அவசியமாகிறது. கிராமங்களில் இருக்கிற போலீஸ் ஸ்டேஷன்களில் கட்டாயம் டெலிபோன் வசதி இருக்க வேண்டும். கிராமங்களில் மக்களுக்கும் போலீஸ்காரர்களுக்கும் தகராறு வந்தாலோ, போலீஸ்காரர்களுக்குப் பாதுகாப்பு வேண்டு மென்று தெரிவிக்க வேண்டுமென்றாலோ செய்தியைத் தெரிவிக்க பல மைல்கள் கடந்துதான் நகரத்திற்கு வர வேண்டும். டெலிபோன் வசதி இருந்தால் உடனுக்குடன் செய்தியைத் தெரிவித்து தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

என்னுடைய தொகுதியில் திருமலாபுரம் என்ற கிராமத்தில் 277 வீடுகள் எரிந்து சாம்பலாயின. தீயணைப்புப்படையின் உதவி வேண்டுமென்றால் அந்தக் கிராமத்திற்கும் திருநெல்வேலிக்கும்

உள்ள தூரம் 30 மைல். பக்கத்தில் இருக்கும் போலீஸ் ஸ்டேஷனில் டெலிபோன் வசதி செய்து கொடுத்திருந்தால் ஓரளவுக்கு உதவியாக இருந்திருக்கும். உடனுக்குடன் தீயணைப்புப் படை வர வசதியாயிருந்திருக்கும். ஆகவே, போலீஸ் ஸ்டேஷன்களுக்கு டெலிபோன வசதியை உடனடியாகச் செய்துகொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, போலீஸ்காரர்கள் அன்றாடம் 24 மணி நேரமும் தொழில் செய்கிறார்கள். அவர்கள் தங்கள் வேலையை முடித்துக் கொண்டு ஆபீஸுக்கு வந்து கேஸ்களைப்பற்றி எழுத வேண்டுமென்றால் சரியான வசதிகள் இல்லை. அவர்களுக்கு வசதி செய்து கொடுத்து, மின்சார விளக்கு வசதி செய்துதர வேண்டும்.

மேலும் அவர்கள் போட்டிருப்பதோ முரட்டு உடை. அவர்கள் பல இடங்களில் சுற்றிவிட்டு, ஆபீசில் வந்து கேஸ்களை எழுத வேண்டுமென்றால் அதற்குத் தக்கபடியாக மின்சார விளக்குவசதி, மின்விசிறி வசதி செய்துகொடுக்க வேண்டும். அவர்கள் தங்கள் உடைகளையும் கழற்றி வைக்க முடியாது, ஏனெனில் யாராவது மேலதிகாரிகள் வந்துவிட்டால் கோபித்துக்கொள்வார்கள். ஆகவே, அவர்கள் சௌகரியமாக உட்கார்ந்து தங்கள் கேஸ்கள் விஷயமாக எழுதுவதற்கும், மற்ற அலுவல்களைப் பார்ப்பதற்கும் தகுந்தவிதமாக மின்சார வசதி செய்து கொடுக்க வேண்டும். மின்சார வசதிக்கு அதிகம் செலவாகும் என்று நாம் எதிர்பார்க்கவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக இந்த வசதியைச் செய்து தர வேண்டும்.

அடுத்தபடியாக, வீட்டுவசதியைப்பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், இப்போது நிறைய வீடுகள் கட்டிக் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். இன்னும் நிறைய கட்டித் தர வேண்டும். என்னுடைய தொகுதியில் கங்கைகொண்டான் என்ற கிராமம் இருக்கிறது. அதைச் சுற்றி அக்ரகாரம்தான் இருக்கிறது. போலீஸ்காரர்கள் யாரவது வந்தால், அவர்களே பார்த்து இல்லையென்று சொல்லிவிடுகிறார்கள். அந்தப் பகுதிக்கு யாராவது போலீஸ்காரர்கள் வந்தாலும் வீடு கிடைக்காத நிலைமை இருக்கிறது. அவர்கள் ஓட்டல்களில் சாப்பிட்டுவிட்டு ஸ்டேஷனில் தங்கும்படியான நிலைமை இருக்கிறது. இந்தச் சூழ்நிலையை அகற்றவேண்டும். இன்னும் நிறைய வீடுகளைக் கட்டித் தர வேண்டும் என்று கூறிக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே, போலீஸ் மானியக் கோரிக்கையின்மீது நான் சில வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காரணம், போலீஸ் இலாகா சமுதாயம் முழுவதுக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டிய ஒரு இலாகாவாகும். இந்த இலாகாவுக்கு ஒதுக்கப்படுகின்ற மானியத்தை சரியானமுறையில் பயன்படுத்தினால், நல்ல மேம்பாடான சமுதாயம் உருவாகும் என்கிற



நம்பிக்கை நமக்கு இருக்கிறது. சமுதாயத்தில் தீயவர்களை, கொடுமைப்படுத்துகிறவர்களை, ஆதிக்கத்தை ஏதாவதொரு ரூபத்திலே நிலைநாட்ட வேண்டுமென்பதற்காக ஒரு பகுதியினர் பயன்படுத்திக்கொள்வதைத் தடுத்து, சாதாரண மக்களுக்கும் சட்டத்தின் அடிப்படையில் பாதுகாப்பு அளித்து, அவர்களுக்கும் உரிமை வழங்க வேண்டுமென்கிற தத்துவத்தை போலீஸ் இலாகா ஏற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த இலாகாவில் ஒருசிலரால் குறைபாடுகள் ஏற்படுகிறது என்பது மட்டுமல்ல, சமுதாயம் முழுமைக்கும் நம்பிக்கையிழக்கும் நிலைமை ஏற்படுகிறது. ஒருசிலருக்கு, தங்களுக்கு வேண்டியவர்கள் என்பதற்காக தனிச்சலுகை அளிப்பதன்மூலம் சமுதாயம் முழுவதற்கும் கெட்ட பெயர் ஏற்படுகின்ற நிலைமைக்கு மாறிக் கொண்டிருக்கிறது. போலீஸ் இலாகாவில் தங்களுக்கு வேண்டியவர்களுக்குச் சாதகமாக ஒத்தாசை புரிவதன் காரணமாக இந்த இலாகாவுக்கே கெட்ட பெயர் ஏற்படுகிறது. இதை மேலதிகாரிகள் சற்று உன்னிப்பாகக் கவனித்துச் சரியான முறையில் துப்பறிவதன் மூலம் கண்டறிந்து, இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழில் தகராறுகளிலே எல்லோருக்கும் பொதுவான முறையில் சட்டம் இயங்க வேண்டும். சட்டம் என்றால் பொதுவான சட்டமாக இருக்க வேண்டும். தொழில் பிராந்தியங்களில் சில தொழிற்சங்க இயக்கங்களுக்குச் சாதகமாக சில போலீஸ்காரர்கள் நடவடிக்கை எடுப்பதன் காரணமாக ஒருவருக்கு ஒரு சட்டம், இன்னொருவருக்கு ஒரு சட்டம் என்கிற நிலைமையைத் தவிர்க்க வேண்டும். சட்டம் என்று சொல்கிறபொழுது எல்லோரும் சமம் என்கிற நியாயம் வழங்கப்பட வேண்டும். தொழில் பிராந்தியங்களில் பணியாற்றுபவர்கள் இதை மிக விளக்கமாகத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெறுவது வன்முறைக் கும்பல்களை அடக்குவதற்கும், தற்காப்புக்கும் தவிர்க்க முடியாத நிலையில் உள்ளதாக இருக்க வேண்டும். சின்னச் சின்ன காரியங்களுக்கெல்லாம் துப்பாக்கிப் பிரயோகம் நடத்துவது சமுதாய மட்டத்திலே பொதுமக்கள் அஞ்சுகிற அளவுக்குப் போய் விடக்கூடாது. பலாத்காரக் கும்பல்களிலிருந்து தற்காப்புக்காக துப்பாக்கிப் பிரயோகத்தைப் பயன்படுத்த வேண்டுமே தவிர, அதுவும் பல எச்சரிக்கைகள் செய்த பின்னர் உபயோகிக்க வேண்டுமே தவிர, எடுத்ததற்கு எல்லாம் துப்பாக்கிப் பிரயோகம் நடத்துவது சரியல்ல. துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்திவிட்டு, பிறகு அதற்கான சூழ்நிலையை உருவாக்குவதைத் தவிர்க்க வேண்டும்.

போலீஸ் துறையை மேம்படுத்தி, இதன்மூலமாக சமுதாயத்தில் இருக்கும் மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று சொல்லும்போது அந்தத் துறையில் பணியாற்றுபவர்களுடைய குறைபாடுகளைப் போக்க வேண்டும். மேலும், பல காலத்திற்கு முன்னால்

[திரு. கே. என். குமாரசாமி] [1971 ஜூலை 17

இருந்து வருகிற சந்தேகக் கேஸ் போன்றவைகளை நீக்க வேண்டும். இதனால் சாதாரண அப்பாவி மக்களும், அரிஜன மக்களும்தான் அகப்பட்டுக்கொள்கிற நிலைமை இருக்கிறது. சந்தேகக் கேஸ் போடாமல் இருப்பதற்குத் தடை செய்ய வேண்டும்.

மேலும், தொழிலாளர்கள் இரவு நேரங்களில் வேலையை விட்டுத் திரும்பும்போது சைகிளில் சென்றால் லைட் இல்லாமல் போகிறார்கள் என்று அவர்களை சார்ஜ் செய்து, கேஸ் போட்டுவிடுகிறார்கள். இதனால் தொழிலாளர்களுக்கு வேலைக்கு சரியான நேரத்தில் வர முடியாதபடியும், தண்டச் செலவுகளும் ஏற்படுகின்றன. இரவு நேரங்களில் சைகிளில் வருகிறவர்கள் லைட் இல்லாத காரணத்திற்காக கேஸ் போடுவது என்பது தவிர்க்கப்பட வேண்டும். சைகிளில் வருபவர்களும் பந்தோபஸ்தாகத்தான் வருவார்கள். போலீஸ் துறையிலுள்ள மேலதிகாரிகள் இதைக் கவனித்து தக்க உத்தரவுகள் பிறப்பிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, போலீஸ்காரர்களை; சப்-இன்ஸ்பெக்டர்களை மூன்று மாதத்திற்கு, ஆறு மாதத்திற்கு ஒரு தடவை மாற்றுவது, அவர்களுடைய பணியிலிருந்து வேறு பணிக்கு மாற்றுவது என்பது எல்லாம் கெடுதலான சூழ்நிலையை உருவாக்குகின்றது. ஒரு இடத்தில் ஒருவர் மூன்று ஆண்டுகள், நான்கு ஆண்டுகள் தொடர்ந்து இருந்தால்தான் அந்த இடத்தின், சுற்றுப்புறத்தின் தன்மைகளை, சூழ்நிலைகளை நன்கறிந்துகொண்டு செம்மையாகச் செயலாற்ற முடியும். சூழ்நிலையைப் புரிந்துகொண்டு செயலாற்றுவதற்கு வாய்ப்புத் தர வேண்டும். அடிக்கடி மாறுதல் கொடுக்கக்கூடாது: அப்படி மாறுதல் கொடுக்கப்பட்டாலும் பள்ளிகளின் கல்வி ஆண்டுத் தொடக்கத்தில்தான் மாறுதல் கொடுக்கப்பட வேண்டும். அப்படிச் செய்தால்தான் அவர்களுடைய குழந்தைகள் தொடர்ந்து கல்வி பயில வசதியும் வாய்ப்பும் ஏற்படும். இடைக்காலத்தில் மாறுதல் கொடுக்கப்பட்டால் குழந்தைகளுடைய கல்வி பாழ்பட்டுவிடும். கல்வியாண்டின் தொடக்கத்தில் மாறுதல் கொடுக்க வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் போலீஸ்காரர்கள் வெளி மாநிலங்களுக்கு, வெளி ஜில்லாக்களுக்கு, வெளியூர்களுக்கு அல்லது கோர்ட்டுகளுக்குப் போகும்போது அவர்களுக்கு ஒருநாள் படி மூன்று ரூபாய்தான் கொடுக்கிறார்கள். கேரள மாநிலத்திலே அவர்களுக்கு நாள் ஒன்றுக்கு 9 ரூபாய் கொடுக்கிறார்கள். அந்த நாள் படியை உயர்த்திக் கொடுப்பது அவசியம்.

அடுத்தபடியாக, ரிசர்வ் போலீகாரர்களுக்கு துப்பாக்கி அலவன்ஸ் கொடுக்க வேண்டும். அவர்களுக்குத் துப்பாக்கி அலவன்ஸ் கிடையாது.

அவர்களுக்கு லீவு நாட்களிலே வேலைசெய்கின்றபொழுது கொடுக்கிற பணம் 1 ரூபாய்தான் என்று சொல்லப்படுகிறது. அப்படி ஒரு நாள் முழுவதும் பணியாற்றிவிட்டு ஒரு ரூபாய்தான்



1971 ஜூலை 17] [திரு. கே. என். குமாரசாமி]

பெறமுடியும் என்று சொன்னால் எந்த அளவுக்கு முடியும் என்பதைப் பார்க்கவேண்டும். எனவே அதை உயர்த்திக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

கல்விச் சலுகைகளைப் பொறுத்தவரையில் அவர்களுடைய குழந்தைகள் படிப்பதற்குக் கடனாகத்தான் பணம் கொடுக்கப்படுகிறது, அவர்கள் குழந்தைகள் படிக்கின்ற கல்விச் செலவு முழுவதையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையிலே சலுகைகள் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சம்பளக் குழு (பே கமிஷன்) அறிக்கை அரசாங்கத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். அதிலே என்ன இருந்தாலும் இப்பொழுது இருக்கின்ற விலைவாசிகள் உயர்வின் காரணமாக 200 ரூபாய் 205 ரூபாய் என்ற அளவிலே சம்பளம் கிடைக்கிறது. அதை மாற்றி 300 ரூபாய் சம்பளமாவது கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அவர்களுக்கு உடுப்புகள் வருடத்திற்கு ஒரு முறை மூன்று செட்டுகள்தான் கொடுக்கிறார்கள். அவர்களுக்கு அது போதுமானதாக இல்லாத காரணத்தினால் அவர்கள் தங்கள் செலவிலிருந்து உடுப்புகள் தைத்துக்கொள்ளக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே அவர்களுக்கு இன்னொரு செட்டும் அதிகமாகக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக அவர்களுக்கு வீட்டு அலவன்ஸ் நகரமாக இருந்தால் 20 ரூபாயும் கிராமப்புறங்களாக இருந்தால் 15 ரூபாயும் தான் கொடுக்கப்படுகிறது. ஆனால் இப்பொழுது பார்த்தால் வீட்டு வாடகை அதிகமாக இருக்கிறது. அதனாலே அதையும் உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டோபி அலவன்ஸ், முடி வெட்டிக்கொள்கின்ற அலவன்ஸ் இவை மாதத்திற்கு 5 ரூபாய்தான் அளிக்கிறார்கள். அது போதுமானதாக இல்லை. எனவே அதையும் உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ரிசர்வ் போலீஸ்காரர்கள் ஐந்தாறு வருடங்கள் நகரப்புறங்களில் பணியாற்றிவிட்டால் அவர்களை கிராமப்புறங்களுக்கு மாற்றுவது கிடையாது. புதிதாக வருகின்றவர்களைக் கிராமப்புறங்களுக்குப் போடுகிறார்கள். அப்படியில்லாமல் நகரப்புறங்களிலே ஐந்தாறு வருடங்கள் பணியாற்றிவிட்டவர்களை கிராமப்புறங்களுக்கு மாற்றிவிட்டு புதிதாக வருகின்றவர்களை நகரப்புறங்களிலே போடுவதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

போலீஸ்காரர்கள் குடியிருக்கிற வீடுகளிலே 10 மணிக்குமேல் இரவில் லைட்டை அணைத்துவிடுகிறார்கள். இதனால் மின்சார விளக்குகள் இல்லாத காரணத்தினால் பல காரியங்களை இரவு நேரங்களிலே செய்வதற்கு முடியாத நிலைமையிலே அவர்கள் இருக்கிறார்கள். ஒரு மாதத்திற்கு இருபது யூனிட்டுகள்தான் வழங்கப்படும் என்று சொல்லப்படுகிறது. அதை அதிகப்படுத்திக்

[திரு. கே. என். குமாரசாமி] [1971 ஜூலை 17

கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படி அதிகப் படுத்திக் கொடுப்பதினால் செலவு சர்க்காருக்கு அதிகமாகும் என்று சொன்னாலும் அந்த அதிகமாக ஆகின்ற செலவை அவர்களே தனியாகப் போடுவதற்கு ஏற்பாடு செய்துகொள்ளக்கூடிய முறையிலே தனி மீட்டர் வாங்கிக்கொடுத்து யூனிட்டுகளை அதிகமாக ஆக்கிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சப்-இன்ஸ்பெக்டர் கிட்டத்தட்ட ஒவ்வொரு ஸ்டேஷனுக்கும் ஒருவர்தான் இருக்கிறார். பல கிராமங்களைக் கொண்டதாக ஒவ்வொரு ஸ்டேஷனும் இருப்பதால் அவர்கள் வேலைகளைச் சரிவரச் செய்ய முடியவில்லை, பற்றுக்குறை காரணமாக கேஸ் கொடுக்கின்ற நேரத்திலே உடனடியாக அதைப் பைசல் செய்வதற்கும், உடனடியாகக் குற்றவாளிகளைப் பிடிப்பதற்கும் வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. நகரங்களைக் காட்டிலும் கிராமப் புறங்களிலே போலீஸ் ஸ்டேஷன்களிலே அந்தக் கஷ்டம் அதிகமாக இருப்பதால் ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனிலும் ஒரு உதவி சப்-இன்ஸ்பெக்டர் போடவேண்டும். அதோடு அவர்களுக்கு ஒரு ஜீப் கொடுக்கவேண்டும். வழியில் போகிற லாரிகளை மடக்கி அவர்களை அவசரம் அவசரமாகப் பிடிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டால் அவர்கள் மிகவும் கஷ்டப்படவேண்டிய நிலைமை யெல்லாம் இருக்கிறது. லாரிகளைப் பிடித்து அவற்றை விட்டுவிட முடியாத நிலைமையெல்லாம் ஏற்படுகின்ற காரணத்தினால் லாரிச் சொந்தக்காரர்களுக்கும் சங்கடங்கள் ஏற்படுகின்றன. மேலும் சப்-இன்ஸ்பெக்டர்கள் உண்மையைக் கண்டுபிடிக்கமுடியாத நிலைமை ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். அந்த அடிப்படையிலே ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனுக்கும் ஒரு ஜீப்பும், ஒரு உதவி சப்-இன்ஸ்பெக்டரும் போடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

அதோடுகூட போலீஸ் ஸ்டேஷன்களிலே போலீஸ்காரர்களை அதிகப்படுத்தவேண்டும். இப்பொழுது அரசாங்கம் ஆயிரம், இரண்டு ஆயிரம் பேர்களுக்கு போலீஸ் உத்தியோகம் கொடுக்கப் படும் என்று சொல்லியிருக்கிறது. இந்த வகையிலே அது செய்யப் படவேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுவிலக்குச் சட்டம் ரத்து ஆவதாலே போலீஸ் அதிகமாகப் போட்டால்தான் சமுதாயத்திலே குளறுபடிகள் இல்லாமல், மோசமான சூழ்நிலைகள் ஏற்படாமல் தடுப்பதற்கு முடியும்.

கிராமப்புறங்களிலே அவற்றையெல்லாம் தடுக்கக்கூடிய முறையிலே ரோந்துப் போலீஸ் படை ஏற்படுத்தவேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் குற்றங்கள் அதிகப்படியாக ஆகாமல் இருக்கக்கூடிய முறையிலே அதைச் செய்யவேண்டும். ஒரு திருட்டு நடந்துவிட்டால் மறுநாள் காலையில்தான் அதைப்பற்றிச்சொல்ல வேண்டிய நிலைமை போக்குவரத்துக் கஷ்டத்தினால் ஏற்படுகிறது. எனவே அப்படியெல்லாம் ஏற்படாமல் தடுப்பதற்காக உடனடியாக



1971 ஜூலை 17] [திரு. கே. என். குமாரசாமி]

கேஸ் எடுக்கக்கூடிய முறையிலே ரோந்து சுற்றப்படுகிற வாய்ப்பை உடனடியாக ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த இலாகாவிலே உள்ளவர்கள் சரியான முறையிலே பணி யாற்றுகிறார்கள் என்பது ஒருபுறத்திலே மெச்சிக்கொள்ள வேண்டியதுதான். தமிழக போலீஸைப் பொறுத்தவரையிலே அந்த நிலை நிச்சயமாக இருக்கிறது. கள்ளக் கடத்தலைத் தடுப்பது, கள்ள நோட்டு அச்சடிப்பவர்களைப் பிடிப்பது போன்ற கஷ்டமான காரியங்களில் நம்முடைய போலீஸார் மிகத் துணிச்சலோடு செய்துவருகிறார்கள். பொதுமக்கள் மத்தியிலே அவர்களுக்குச் சன்மானங்கள் வழங்குகின்றமுறையிலே அந்தந்தக் கோட்டங் களிலே ஏற்பாடுகள் செய்வதன்மூலம் அவர்களுடைய திறமையை வளர்த்துக்கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படும்.

போலீஸ் துறையினருக்கு சம்பள உயர்வு கொடுப்பதன்மூலம் லஞ்சம் வாங்குகிறார்கள், லஞ்சம் வாங்குகிறார்கள் என்று கெட்ட பெயர் அவர்களுக்கு வராமல் தடுப்பதற்கும், அவர்கள் திறமை யுள்ளவர்கள், சமுதாயத்திலே உள்ளவர்கள் ஆக பணியாற்றக் கூடிய வாய்ப்புகளை ஏற்படுத்தவும். போலீஸ்காரனைக் கண்டு சாதாரணக் குடிமகனும் கொண்டிருக்கின்ற பயம் நீங்கி போலீஸ் காரர்கள் நமக்கு உதவி செய்யத்தான் இருக்கிறார்கள் என்ற நிலைமையை ஏற்படுத்தக்கூடிய முறையிலே பெரிய அதிகாரிகளி லிருந்து கீழ் மட்டத்தில் இருக்கின்றவர்கள் வரையில் அப்படிப் பட்ட நல்ல எண்ணத்தைப் பரவச்செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு அந்த வாய்ப்பை அரசாங்கம் அவர்களுக்கு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்புத் தந்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. சொ. காவேரிமணியம்:** அவைத் தலைவர் அவர்களே, நம் முடைய முதல்வர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற துறை மானியத்தை வரவேற்று ஒரு சில கருத்துக்களைக் கூற விழைகின்றேன்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் நம் முடைய காவல்துறை அதிகாரிகளைப்பற்றியும் அந்த நிறுவனங் களைப்பற்றியும் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். வெளி மாநிலங் களிலிருந்து வரக்கூடியவர்களானாலும் சரி, வெளி நாடுகளிலிருந்து வரக்கூடியவர்களானாலும் சரி நம்முடைய மாநிலத்தில் அமைதி நிலவுகிறது, சட்டம் பாதுகாக்கப்படுகிறது, ஒழுங்கானது கட்டுப் படுத்தப்படுகிறது என்றெல்லாம் புகழ்ந்து சொல்கிறார்கள் என்றால் அதற்கு முழுமுதற் காரணமாக இருக்கக்கூடியவர்கள் நம்முடைய காவல் துறையிலே பணியாற்றக்கூடியவர்கள்தான் என்பது யாராலும் மறுக்க முடியாது என்பதை என்னால் துணிந்து கூற முடியும்.

[திரு. சொ. காவேரிமணியம்] [1971 ஜூலை 17

நான் ஒன்றைமட்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். ஆண்டுக்கொரு முறை நாட்டிலே திருவிழாக்கள் நடைபெறுகின்றன. பல் பெரும் போராட்டங்கள் நடைபெறுகின்றன. ஆண்டுதோறும் பல நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. போராட்டங்கள் நடைபெறுகின்ற நேரத்தில் தலைவர்கள் எத்தனைபேர்கள் கூடினார்கள், எப்படிப் போராட்டங்கள் நடைபெற்றன என்ற கருத்தைத்தான் உள்ளடக்கி இருப்பார்கள். ஆனால் காவல் துறையினர் சட்டத்தை எங்கே மீறுகிறார்கள், யார் யார் சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகளிலே ஈடுபடுகிறார்கள் என்று அங்குமிங்குமாக ஓடிக்கொண்டு சட்டம், அமைதியைப் பாதுகாப்பதிலே முனைந்து நிற்பார்கள். அதே நேரத்திலே தேரோட்டமானாலும் சரி. திருவிழாவானாலும் சரி வருகின்றவர்கள் ஆண்டவனுக்கு வேண்டுகோள் விடுக்கின்ற அதே நேரத்திலே காவல் துறையினர் யார் யார் சமூக விரோதிகள், யார் யார் சட்டத்தை மதிக்காமல் திரிகிறார்கள் என்று அவர்களைப் பிடிப்பதற்கும், அவர்கள்மேல் நடவடிக்கை எடுப்பதிலும்தான் அவர்களுடைய உள்ளம் உந்தப்பட்டிருக்கும். நான் இதையெல்லாம் சொல்வதற்குக் காரணம் அவர்களுடைய வாழ்க்கையும் உள்ளப் போராட்டங்களும் எப்படி எப்படி இருக்கின்றது என்பதை எல்லா அரசியல் வாதிகளும் அறிந்திருக்கின்ற உண்மையாகும். குறிப்பாகக் காவல்துறையினர் நம்முடைய மாநிலத்திலே மிகக் கொடுமையான வழக்குகளையெல்லாம் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

இன்னும் சொல்லவேண்டுமானால் இம்மாதிரி கொடூரமான வழிகளிலே, இன்னும் வேறுபல சமூக விரோதமானச் செயல்களிலே ஈடுபட்டு மறைந்திருந்தவர்களைக்கூட மதுரை மாவட்டத்திலே பணிபுரிந்த காவல்துறையினர் பாராட்டுத்தக்க முறையில் கண்டுபிடித்து நாட்டிற்கும் நம்முடைய அரசியல் நாகரீகத்திற்கும் ஒரு பண்பாக ஏற்படுத்தியிருக்கின்றார்கள் என்றால் அது மிகையாகாது என்றே நான் கருதுகிறேன். இவைகளையெல்லாம் நான் சொல்லி விட்டு ஒன்றை மட்டும் கூற ஆசைப்படுகிறேன். ஏறத்தாழ 90 அல்லது 95 சதவிகிதத்திற்குமேல் இந்த நாட்டில் மிக நல்ல முறையிலே அமைதியும், சட்டமும், ஒழுங்கும் பாதுகாக்கப்படுகிறது. மிச்சம் விட்டிருக்கும் 5 சதவிகிதம் என்று சொல்வதற்குக் காரணம் அந்த 5 சதவிகிதத்திலே கோடியிலே என்னுடைய தொகுதியும் ஒட்டி வருகிறது.

என்னுடைய தொகுதி என்று சொல்லக்கூடிய நேரத்தில் மதுரைக்குப் பக்கத்திலே சுற்றியிருக்கும் ஏறத்தாழ 266 கிராமங்களை உள்ளடக்கிய தொகுதி. செல்வம் கொழிக்கும் மதுரை என்று சொல்லக்கூடிய மதுரையிலே நடைபெறும் பெரும்பெரும் திருட்டுக்கள், சில்லறைத்தனமான செயல்கள், அதாவது சமூகவிரோதிகளாலும், சட்டத்தை ஏய்த்துத் திரிபவர்களாலும் நடத்தப்படுகிறது என்பது காவல்துறையினருக்கு மிக நன்றாகத் தெரியும். அப்படிப்பட்டவர்கள் தங்கும் பகுதியாகவும், மறைந்துவாழும் பகுதியாக, அடைக்கலம் கொள்ளும் பகுதியாக மதுரைக்குப்



1971 ஜூலை 17] [திரு. சொ. காவேரிமணியம்]

பக்கத்திலே உள்ள கிராமங்களையும், மதுரையை ஒட்டிய பகுதிகளையும் அவர்கள் தேர்ந்தெடுத்துக்கொள்ளுகிறார்கள். அவ்வாறு தேர்ந்தெடுத்துக்கொள்ளப்பட்ட பகுதிகளிலே ஒன்று மதுரைக்குப் பக்கத்திலே இருக்கும் வில்லாபுரம் என்ற கிராமம் ஆகும். அங்கே ஏறத்தாழ 5,000 பேர்கள் இருக்கிறார்கள். அதிலே இரண்டாயிரம் பேர் விவசாயத் தொழிலில் ஈடுபடுபவர்கள். இதை நான் சொல்வதற்குக் காரணம் கடந்த இரண்டாண்டுக் காலமாக அங்கேயுள்ள நிகழ்ச்சிபற்றி நான் பலமுறை சொல்லியிருக்கிறேன் காவல் துறையினரிடத்திலே. அங்கே நடக்கக்கூடியவைகளை நான் இங்கே சொல்லித்தான் ஆகவேண்டும். அதிலே தவறு இருந்தால் நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் என்னை மன்னிப்பார்கள் என்று கருதுகிறேன். இரண்டாண்டுக்காலமாக அங்கே நடக்கும் நிகழ்ச்சிகள் என்ன என்பதை உயர் அதிகாரிகள் மட்டத்திலே தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறது.

விவசாயப் பெருமக்கள் ஏறத்தாழ 200 ஏக்கர்களுக்குமேல் வாழை, கரும்பு, நெல் போன்றவைகளைப் பயிரிட்டு வருகிறார்கள். அவ்வாறு பயிரிட்டு வரும்பொழுது அவர்களைப் பயமுறுத்தி பக்கத்திலேயிருக்கும் சமுதாயத்திற்குப் புறம்பானவர்கள், இன்னும் குரோத மனப்பான்மை படைத்தவர்கள் பயிர்களை அழித்தும், கால்நடைகளை மேய்த்தும் நாசப்படுத்தி வருகிறார்கள். இது எத்தனையோ முறை எடுத்துச் சொல்லப்பட்டும் அதற்கான தக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று சொல்ல முடியாது, ஆனாலும் எடுத்த நடவடிக்கைகள் போதுமானதாக அங்கே இல்லை என்பதை மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். அவைகளையெல்லாம் களைய வேண்டுமென்று மிகப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் சொல்ல வேண்டுமானால் பல காவல் நிலையங்களில் டெலிபோன் வசதி இல்லை என்று எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் தெளிவாகச் சுட்டிக் காட்டினார்கள். கிராமப்புறங்களில் இருக்கும் காவல் நிலையங்களில் டெலிபோன் வசதி இல்லை என்றால் அங்கே இருக்கும் அரசியல்வாதிகள் அல்லது பொறுப்பானவர்கள் நடைபெற்ற நிகழ்ச்சிகளை வேகமாக எடுத்துச் சொல்லவோ, போலீஸ் அதிகாரிகளோடு தொடர்பு கொள்ளவோ மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஏற்படக்கூடிய நிகழ்ச்சிகள் இரண்டு அல்லது மூன்று நிமிஷங்களில் நடந்து விடுகின்றன. வளர்கின்ற சமுதாயத்தில் எப்படி எப்படியோ, ஏதாவது ஆச்சரியப்படத்தக்க வகைகளிலே குற்றங்கள் செய்யப்படுகின்றன. இவைகளையெல்லாம் களையவும், குற்றங்கள் நடைபெறாமல் தடுக்கவும், அவ்வப்பொழுது பொறுப்பிலேயிருப்பவர்கள். பொதுமக்களோடுத் தொடர்புகொண்டு இருக்கக்கூடியவர்கள் செய்திகளைச் சொல்லும் நேரத்தில் அங்கே தொடர்பு நிலையமோ அல்லது தொலைபேசி நிலையமோ இல்லாத நேரங்களில் சிரமம் ஏற்படுகிறது. மதுரைக்குப் பக்கத்தில் உள்ள ஊர்மச்சிக்குளம் என்ற ஊரிலுள்ள நிலையத்தில் இல்லை.

[திரு. சொ. காவேரிமணியம்] [1971 ஜூலை 17

ஆகவே, மிகவும் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன், கிராமப்புறங்களிலேயிருக்கும் காவல்துறை நிலையங்களில் தொலை பேசி நிலையமும், அதுபோல் சப்-இன்ஸ்பெக்டர்கள், சர்க்கிள் இன்ஸ் பெக்டர்கள் போன்றவர்களுக்கு வாகன வசதிகளும் செய்து கொடுத்தால் குற்றங்கள் வராமல் தடுக்கவும், சமூக விரோதிகளை உடனுக்குடன் அவர்கள் எங்கே செல்கிறார்கள் என்று கண் காணித்து, கண்டுபிடித்து தக்க நடவடிக்கை எடுக்க முடியும் என்று மிகப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

இன்னும் ஒன்றை மட்டும் கூறி என்னுடைய உரையை முடிக்க லாம் என்று கருதுகிறேன். குறிப்பாக வழக்கு மன்றங்களில் பல வழக்குகளில் விடுதலை செய்யப்படுகின்றன. அவ்வாறு விடுதலை செய்யப்படக் காரணம் குறிப்பாக 'வாண்ட் ஆஃப் சப்ஸ்டான் ஷியல் எவிடென்ஸ்' என்று சொல்கிறார்கள். அவ்வாறு தக்க சாட்சியங்கள் இல்லாததால் விடுதலை செய்யப்படுகிறது. எனவே சர்க்கிள் இன்ஸ்பெக்டர்கள், சப்-இன்ஸ்பெக்டர்கள் தேர்வுகள் நடத்தும் நேரத்தில் சட்டத்துறையிலே பயின்றவர்களுக்கு முதலிடம் தரப்பட்டால் அவர்கள் திறமையாக அந்த வழக்குகளை ஆராய்ந்து தக்க காரணங்களோடு வழக்குகளை வழக்குமன்றத்திலே பதிவு செய்து உண்மையான குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கு மிகவும் பயன்படும் என்று கூறிக்கொண்டு அடுத்து ஒன்றைக் கூறிக்கொள்ளலாம் என்று விரும்புகிறேன்.

குறிப்பாக, எதிர்க் கட்சியைச் சார்ந்த நண்பர்கள் கூறினார்கள், ஆளுங்கட்சியிலே இருப்பவர்கள் அடிக்கடி போலீஸ் ஸ்டேஷனு க்குச் சென்று அவர்களுடைய நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள் என்று. நான் ஒன்றை மட்டும் மிகப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளுகின்றேன். நாங்களெல்லாம் எதிர்க்கட்சியாக இருந்த நேரத்தில் நாங்கள் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றால் எங்களைப் பார்த்து பயந்து பல காரியங்களைச் செய்தார்கள். ஆனால் இன்றைக்கு அப்படியா என்று நீங்கள் கேட்கலாம். எங்கள் முதலமைச்சரவர்கள் மிகவும் கடுமையாக சுற்றறிக்கை அனுப்பி யிருக்கிற காரணத்தினால் நாங்கள் ஏதாவது சொன்னாலும்கூட அதைப் பலமுறை ஆராய்ந்து துருவித்துருவிப் பார்த்து நியாயமான முறையில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதைச் சொல்லிக்கொண்டு நான் ஏற்கனவே கூறிய அந்தக் குறைகளை நிவர்த்திக்க வேண்டுமென்று கூறி, என்னுடைய உரையை முடிக் கிறேன், வணக்கம்.

* **திரு. எ. சுவாமிதாஸ் :** தலைவரவர்களே, நான் எங்கள் கட்சியின் சார்பில் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து ஒருசில கருத்துக்களைக் கூறுவதற்கு முன்பு என்னுடைய மனத்திலேபட்ட ஒரு காரியத்தை இந்த மன்றத்திலே கூறுவது நல்லது என்று கருதுகிறேன்.



1971 ஜூலை 17] [திரு. எ. சுவாமிதாஸ்]

அண்மையில் முன்னாள் ஐ.ஜி.யாகயிருந்த உயர்திரு. மகாதேவன் அவர்கள் காலம் சென்றுவிட்டார்கள். அவர்கள் காவல்துறையிலே தலைமைப் பதவியை வகித்து இந்த மாநிலத்திற்கு அரிய தொண்டாற்றியவர்கள். நான் பத்திரிகையில் படித்தபொழுது எனக்கு மனத்திலே பட்டது இதுதான். அரசாங்கத்தரப்பிலே அவருக்கு ஏதாவது மரியாதை செய்யப்பட்டிருக்கிறதா அல்லது முதலமைச்சரவர்கள் தனது சார்பிலே அவர்களுடைய இறுதி மரியாதையில் கலந்துகொள்ள யாரையாவது அனுப்பியிருக் கிறார்களா என்று பார்த்தபொழுது பத்திரிகையில் படிக்கவில்லை, ஆகவே . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவரவர்களே, பத்திரிகை யில் வந்த செய்தியை அவர்கள் முழுவதும் படிக்கவில்லை என்று கருதுகிறேன். அநேகமாக மிக முக்கியமான பத்திரிகைகளி லெல்லாம் அந்தச் செய்தி வந்திருக்கிறது. மறைந்த பழைய ஐ.ஜி. திரு. மகாதேவன் அவர்களுடைய சவத்திற்கு முதலமைச்சர் சார்பிலே மலர் வளையம் வைக்கப்பட்டிருக்கிறது. இங்குள்ள 4 டி.ஐ.ஜி-க்கள் அரசின் சார்பிலும், காவல்துறையின் சார்பிலும் மரியாதை செலுத்தியிருக்கிறார்கள். அவர்கள் படித்த பத்திரிகையிலே அந்தச் செய்தி ஒருவேளை விடுபட்டிருக்கலாம்.

**திரு. எ. சுவாமிதாஸ் :** தலைவரவர்களே, முதலமைச்சரவர்கள் கொடுத்த விளக்கத்திற்கு நன்றி. அதைவிடுத்து அடுத்தபடியாக காவல்துறைபற்றிய ஒரு சில கருத்துக்களைக் கூற முற்படுகிறேன்.

நமது நாட்டில் சட்டத்தையும், ஒழுங்கையும் சரியாக நிலை நிறுத்தி பணி புரிகின்றவர்கள் காவல்துறையினர். காவல் துறையை நம்பித்தான் பொதுவாக மக்கள் வாழ்கிறார்கள். அவர் களுடைய சேவை இல்லை என்றால் எந்தக் காரியத்திலும் ஒழுங்காக நாம் ஈடுபட முடியாது. இன்றைக்கிருக்கும் இலாக்காக்களில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இலாக்கா காவல்துறையாகும். இதற்காக இந்த நிதி அறிக்கையில் ஏறத்தாழ 19 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். இவ்வளவு தொகையை இதனுடைய முக்கியத்துவத்தை உணர்ந்து ஒதுக்கியிருந்தாலும்கூட இன்னும் அதிகமாகப் பணம் ஒதுக்கியிருந்தால் மிகவும் நலமாக இருந் திருக்கும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கு பல நண்பர்கள் பேசும்பொழுது காவல்துறையினுடைய நிர்வாகத்திலே அரசியல் குறுக்கீடுகள் இருக்கின்றன என்று குறிப் பிட்டார்கள். அறிக்கையிலும்கூட அதைப்பற்றிச் சுட்டிக்காட்டி யிருக்கிறார்கள். பூரணமாகக் குறுக்கீடு இல்லை என்று சொல்ல முடியாது. குறுக்கீடு என்ற கருத்தை அடிப்படையாக வைத்து தான் இந்த மன்றத்திலே பேசியவர்கள் கூறினார்கள். அதை நான் வலியுறுத்திக்கூற ஆசைப்படுகிறேன்.

[திரு. எ. சுவாமிதாஸ்] [1971 ஜூலை 17

இந்த அறிக்கையில் 9 துப்பாக்கிச்சூடு நிகழ்ச்சிகள் நடந்ததாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். முன்னால் காங்கிரஸ் ஆட்சியின் காலத்தில், நீங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபொழுது பல உறுப்பினர்களும் துப்பாக்கிச் சூட்டினைக் கண்டித்துப் பேசினார்கள். 'கூலி உயர்வு கேட்டான் அத்தான்' என்றெல்லாம் சொல்லி, அவர்களைச் சுட்டுவிட்டார்கள் என்ற நிலையிலே பேசியதுண்டு. எந்த அடிப்படையிலே பேசினார்கள் என்றால் துப்பாக்கிச்சூடே கூடாது என்ற நல்லெண்ணத்திலே பேசினார்கள் அன்றையதினம். அதைத்தான் இப்பொழுது வற்புறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்தத் துப்பாக்கிச்சூட்டில் இன்று உயிரிழந்தவர்கள், 9 துப்பாக்கிச் சூடுகளில் 10 பேர் உயிரிழந்திருக்கிறார்கள், காயமுற்றவர்கள் 78 பேர். கூடியமட்டும் போலீஸ் இலாக்காவினர் அந்தமாதிரி நிகழ்ச்சிகள் நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இந்த அறிக்கையில் பார்க்கும்போது மதுவிலக்கு வழக்குகள் 1960-ல் 93,947-ல் இருந்து 1970-ல் 3,72,462 அளவுக்கு உயர்ந்திருக்கிறது. இதைப் பார்க்கும்போது, மதுவிலக்கை மீறி மக்கள் அதிகமாக மது அருந்த முற்பட்டார்களா அல்லது போலீசார் வழக்குகளை அதிகமாகக் காட்டவேண்டுமென்ற அடிப்படையில் பல வழக்குகளைச் சிருஷ்டித்தார்களா என்ற சந்தேகம் எழ இடம் இருக்கிறது. எங்கள் பகுதியில் போலீசார் மதுவிலக்கு வழக்குகளை அதிகமாகப் போடுவது மாதக் கடைசியில்தான். அவர்கள் ரெக்கார்டுகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்பதற்காக, ஒவ்வொரு மாதத்திலும் இவ்வளவு வழக்குகளை பதிவு செய்ய வேண்டுமென்ற முறை இருப்பதன் காரணமாகவும் இந்தமாதிரி மதுவிலக்கு வழக்குகளைப் போடுகிறார்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இத்தனை வழக்குகளைப் போட்டாக வேண்டுமென்று அரசிடமிருந்து எந்த உத்திரவும் எந்தக் காவல் துறை அதிகாரிக்கும் அனுப்பப்படவில்லை. போடப்பட்ட வழக்குகளில் பெரும்பாலன வழக்குகள், எண்ணிக்கையைக் காட்டுவதற்காகப் போடப்பட்ட வழக்குகள், அந்த வகையில் மதுவிலக்கு வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன என்றார்கள். பழைய காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயே கிட்டத்தட்ட இரண்டு லட்சம் மதுவிலக்கு வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. ஏதாவது ஒரு வழக்கை வேண்டுமென்று போடப்பட்ட வழக்கு என்று சுட்டிக்காட்ட முன்வருவார்களா ?

**திரு. எ. சுவாமிதாஸ் :** வேண்டுமென்றே போடப்பட்ட வழக்குகள் என்று சொல்லவில்லை. ரெக்கார்டுகளில் அதிகமாக வழக்குகள் போட்டிருக்கிறோம் என்று காண்பிப்பதற்காக சாயங்கால வேளைகளில் ரோந்துப் படையினர் பல பேரைப் பிடித்துச் செல்லுகிறார்கள். எல்லா நாளும் செய்வதில்லை, மாதக் கடைசியில் தான் செய்கிறார்கள். சாயங்கால நேரத்தில் பிடித்து இரவு பத்து மணிக்குமேல் போலீஸ் ஸ்டேஷனில் கைதிகளாக வைக்கிறார்கள். கைதிகளுக்குச் சொந்தக்காரர்கள் அவர்களை ஜாமீனில் எடுக்க



1971 ஜூலை 17] [திரு. எ. சுவாமிதாஸ்]

ஓடோடிப் போகிறார்கள். ஒரு கைதிக்கு 15 ரூபாய் என்று மாமூல் வைத்திருக்கிறார்கள். பத்து கைதிகளைப் பிடித்தால் அந்த வகையில் மாமூல் கிடைப்பதை அந்தப் போலீஸ்காரர்கள் எடுத்துக் கொள்ளுகிறார்கள். அந்த வகையில் போலீஸ்காரர்களுக்கு அந்தத் தொகை கிடைத்து விடுகிறது.

**திரு. துரைமுருகன் :** ஆன் எ பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன், சார்.. ஒருவருக்கு 15 ரூபாய் வீதம் போலீஸ்காரர்களுக்கு மாமூல் கொடுப்பதாகச் சொன்னார்கள். 15 ரூபாய் போலீஸ்காரர்களுக்குத் தரப்படுகிறதா ? அல்லது அரசாங்கத்திற்கு தரப்படுகிறதா ? அப்படி வாங்கிய ஒருவர் இருவரை உறுப்பினர் அவர்கள் காட்ட முடியுமா ?

**திரு. எ. சுவாமிதாஸ் :** இது சர்வசாதாரணமாக நடக்கும் நிகழ்ச்சி. எல்லோருக்கும் தெரியும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** 15 ரூபாய் வாங்குகிறார்கள் என்றால் எந்த இடத்தில் வாங்கினார்கள், யார் வாங்கினார்கள் என்று ஆதாரத்தோடு பேசினால் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முடியும்.

**திரு. எ. சுவாமிதாஸ் :** அது ஒரு நடைமுறையாக இருக்கிறது.

**திரு. துரைமுருகன் :** தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தமாக போலீஸ் இலாக்கா . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஒரு உறுப்பினர் பேசும்போது இன்னொரு உறுப்பினர் குறுக்கிட்டால், பேசுகின்ற உறுப்பினர் அதற்கு இணங்கினால்தான் குறுக்கிடவேண்டும். குறுக்கிடுவதை அவர்கள் அனுமதிக்க வேண்டும். பொதுவாக, உறுப்பினர்கள் பேசும்போது அமைச்சர்கள் குறுக்கிட இந்த மன்றத்தில் அனுமதி இருக்கிறது. அதை மரபாக வைத்துக் கொண்டிருக்கிறோம். அதேபோன்று எதிர்க்கட்சித் தலைவரும் குறுக்கிட்டு சில விஷயங்களைச் சொல்ல உரிமை இருக்கிறது. இப்படி ஒவ்வொரு உறுப்பினரும் ஒரு உறுப்பினர் பேசும்போது குறுக்கிட்டுப் பேசினால் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லிப் பேசுகின்றவரின் பேச்சு ஓட்டம் தடைப்படும். உறுப்பினர் ஆளும் கட்சியில் இருப்பதால் குற்றச்சாட்டுக்கு ஆளாக நேரிடும். எதிர்க் கட்சியில் உள்ள உறுப்பினர்கள்பேசும்போது ஆளும் கட்சி உறுப்பினர்கள் குறுக்கிடாமல் இருக்க வேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** நம்முடைய விதிமுறைகளிலே தெளிவாக இருக்கிறது. பாயின்ட் ஆப் ஆர்டர் மட்டுந்தான் அனுமதிக்கப்படும். மெம்பர்கள் விரும்புகிற நோக்கத்தைப் பதிலாகப் பெற குறுக்கிட இடம் இல்லை.

'Members should not raise points of order to express their opinion on a certain matter'.

[திரு. நா. வீராசாமி] [1971 ஜூலை 17

என்று தெளிவாக விதிமுறைகளிலே இருக்கிறது. எனவே, உறுப்பினர்கள் குறுக்கீடு இல்லாமல் பேசுவதற்கு இந்த மன்ற உறுப்பினர்கள் உறுதுணையாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. எ. சுவாமிதாஸ்: நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம் எல்லாப் பகுதியிலும் இந்த நிலை இருக்கிறது என்பது தான். மதுவிலக்கு வழக்குகளுக்கு அடுத்து எளிதாகப் போடக்கூடிய வழக்குகள் சந்தேக வழக்குகள். கிராமப் பகுதி மக்கள் சந்தைக்குப் போகிறார்கள். அவர்களுடைய ஆடை அழுக்கு நிறைந்த ஆடையாக இருக்கும். இரவில் அவர்களுக்குப் படுக்க இடம் இல்லாது ஏதாவது கடை ஓரங்களில் படுத்திருப்பார்கள். அவர்களை சந்தேகப் பேர்வழிகள் என்று சொல்லி பிடித்துக் கொண்டு போய் வழக்குப் போடுகிறார்கள். காவல்துறை கண்காணிப்பு அதிகமாக இருக்க வேண்டுமென்பது உண்மைதான். குற்றவாளிகளை, உண்மையான குற்றவாளிகளைத் தண்டிக்கலாம். இந்தமாதிரி சந்தேக வழக்கு என்று சொல்லி யாரையும் பிடித்துக் கொண்டு போகக்கூடாது.

குற்றம் செய்தவர்களைக்கூட அடித்துத் தண்டிக்க சட்டம் இடம் கொடுக்கவில்லை. அப்படியிருக்க போலீஸ்காரர்கள் தங்களுக்குத் தான் பூரண அதிகாரம் இருக்கிறது என்ற நிலையில் பல இடைஞ்சல்களை ஏற்படுத்துகிறார்கள். குழித்துறை போலீஸ் நிலையத்தில் ஜாதிச் சண்டையையே மூட்டி விடுவார்களோ என்ற அச்சம் ஏற்படும் அளவுக்குப் பனை மட்டையை வைத்து அடிக்கிற நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. இதைத் தடுக்க வேண்டும்.

தற்கொலைகள் பல நடக்கலாம். விபத்தில் பலர் இறந்து விடலாம். இதைப் பற்றிப் போலீஸ் இலாகாவுக்குத் தகவல் கொடுத்தால் உடனடியாக வந்து எந்தவித நடவடிக்கையும் எடுப்பது கிடையாது. அதற்கு மூலகாரணம் டாக்சி பிடித்து வந்து சடலத்தை அப்புறப்படுத்த தேவையான ஆட்களுக்குக் கூலி கொடுக்த போலீசாருக்கு வசதி இல்லை. ஊரிலுள்ள நாலு பேர் அந்தத் தொகையைக் கொடுத்தால்தான் உடனடியாக வந்து அதற்கான வழிவகைகளைச் செய்கிறார்கள். இந்தமாதிரி நிலைமை ஏற்படும்போது போலீஸ்காரர்களே 100, 200 ரூபாய் வரை செலவழிக்க வசதி செய்து கொடுக்கவேண்டும்.

பாதுகாப்புக்காக என்று அடிக்கடி போலீசார் அதிகமாகப் போக வேண்டியிருக்கிறது. ராஷ்டிரபதி வந்தாலும், கவர்னர் வெளியே போனாலும், அமைச்சர்கள் போனாலும் பாதுகாப்பு என்ற நிலையில் போலீசார் போகிறார்கள். ஏதாவது ஒரு வழக்கு சம்பந்தமாக போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றால் போலீஸ்காரர்களே இருப்பதில்லை. ஆகவே, பாதுகாப்புக்கு என்று தனியாக ஒரு பிரிவை வைத்துக் கொள்ள வேண்டும். அதற்கு சாதாரணமாக போலீஸ் ஸ்டேஷன்களில் இருக்கும் கான்ஸ்டபிள்களைப் பயன்படுத்தக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.



1971 ஜூலை 17] [திரு. எ. சுவாமிதாஸ்]

பொதுவாக களவு, அடிதடி போன்ற குற்றங்கள் நடக்காமல் பார்த்துக்கொள்வதற்காகக் கிராமப் பகுதிகளில் இரவு நேரங்களில் ரோந்து வரும் நிலை முன்பு இருந்தது. சாயங்காலம் ஆறு மணியில் இருந்து மறுநாள் காலை ஆறு மணிவரை ரோந்து வருவார்கள். இந்த முறை நிறுத்தப்பட்டுவிட்டது. கேட்டால் போலீஸ்காரர்கள் அதிகமாக இல்லை என்கிறார்கள். மீண்டும் இந்த முறையைப் புகுத்தி கிராமப் பகுதிகளில் இரவில் ரோந்து சுற்றக்கூடிய நிலையை ஏற்படுத்த வேண்டும்.

சப் இன்ஸ்பெக்டர்களுக்கு மோட்டார் சைகிள் கொடுக்க திட்டமிடப்பட்டிருக்கிறது. இதை எல்லோருக்கும் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். இதற்கு ஆகும் செலவில் 40 சதவிகிதம் அரசாங்க மானியமாகக் கொடுக்கப்படுகிறது. 60 சதவிகிதம் அரசாங்க மானியமாகக் கொடுத்து மீதியை அவர்கள் கட்ட வேண்டுமென்று செய்யலாம். எஸ்.ஐ. வேலைக்கு கிராஜுவேட்டுகளைத்தான் போட வேண்டுமென்ற நியதி இருக்கவேண்டும். இப்போது போலீஸ்காரர்களாக எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களைப் போட வேண்டுமென்று முடிவு செய்திருப்பதை நான் வரவேற்கிறேன்.

காவலர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்படும் வீடுகள் ஒழுங்காக இல்லை. தக்கலைப் பகுதியில் கட்டப்பட்ட வீடுகள் காங்கிரஸ்காரர்கள் காலத்தில் கட்டப்பட்டது இல்லை, அண்மையில் கட்டப்பட்டதுதான், மாட்டுக் கொட்டகை போல் இருக்கிறது. மனிதன் வாழ்வதற்கான முறையில் வீடுகள் இல்லை. எஞ்சினியரிங் இலாகா வீடு கட்டிக் கொடுக்கும் போது மனிதர்கள்தான் அதில் வாழ வேண்டும், பிள்ளை குட்டிகளுடன் வாழ வேண்டுமென்பதைக் கருத்தில் கொண்டு வாழ்வதற்கு வசதியான வீடுகளாகக் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய தமிழ்நாட்டுக் காவல்துறை எல்லா வகையிலும் இந்திய நாட்டிலேயே முதன்மையானதாக இருக்கிறது என்பது மிகவும் பெருமைப்படத்தக்கது. ஆனால் ஸ்போர்ட்ஸ் விஷயத்தில் முதலிடம் வகிக்கவில்லை. காவல்துறையில் இருக்கும் நல்ல விளையாட்டு வீரர்களுக்குத் தனிப் பயிற்சி கொடுத்து தமிழ்நாட்டு காவல் துறையினர் ஸ்போர்ட்சிலும் இந்தியாவிலேயே முன்னணியில் நிற்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த காவல்துறை மானியத்தை வரவேற்று, ஆதரித்து, பாராட்டி என் சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

ஒரு நாட்டில் சட்டத்தையும் அமைதியையும் நிலைநாட்டவும், தீய சக்திகளின் கொடுமையைத் தடுக்கவும், சமுதாயத்தை சமூக விரோத சக்திகளிடமிருந்து காப்பாற்றவும் திறமையுள்ள ஒரு காவல் துறை தேவை என்பதை நாமும் உணர்கிறோம், நாடும்

[திரு. பெ. சௌந்தரபாண்டியன்] [1971 சூலை 17

நன்கு உணர்ந்திருக்கிறது. கடந்த நான்காண்டு காலத்தில், நம்முடைய கழக ஆட்சிக் காலத்தில் காவல் துறை எந்தவளிற்குத் திறமையோடும், சிறப்பாகவும் பணியாற்றி வருகிறது என்பதற்கு நாம் பல சான்றுகளைக் காட்டலாம். வடக்கேயிருந்து வந்த ஒரு கொள்ளைக் கூட்டத்தினரை நம்முடைய காவல் துறையினர், துப்பறியும் பிரிவினர், திறமையாகக் கண்டு பிடித்து அவர்களை அடக்கிய காட்சியைக் கண்டோம். இப்படிப்பட்ட திறமை வாய்ந்த காவல் துறையினர் மேலும் நல்ல திறமையுடன் பணியாற்றுவதற்கு நம்முடைய முதல்வர் அவர்கள் கடந்த நான்காண்டு காலத்தில் அவர்களுக்குப் பல நல்ல வசதிவாய்ப்புகளைச் செய்து தந்திருக்கிறார்கள்.

காங்கிரஸ்காரர்கள் ஆண்ட காலத்தில் காவல்துறையினர் தங்களது குடியிருப்புகளில் மின்சாரத்தை எரிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட அளவு பத்து யூனிட்ஸ்தான். கழக ஆட்சி வந்தப் பிறகு அதை 20 யூனிட்களாக ஆக்கி, அவர்கள் விழாக்காலங்களிலும் வேறு பல நிகழ்ச்சிகளிலும் அதிகமாக விளக்குகளை எரித்துக் கொள்வதற்கு வழிவகைகள் செய்து கொடுத்திருக்கிறது.

அதேபோல் காவல்துறையினரை ஊக்குவிப்பதற்கும், உற்சாகப்படுத்துவதற்கும் நமது முதல்வர் அவர்கள் 1970-ம் ஆண்டு தமிழ்நாடு முதல் அமைச்சர் காவலர் பதக்கம் என்றதொரு திட்டத்தை துவக்கி, திறமையுள்ளவர்களுக்குப் பதக்கமும் பண வெகுமதியும் அளித்திருப்பதைப் பார்க்கிறோம். அதேபோல் காவல்துறையில் வீரப் பதக்கம் என்ற பெயரால் இந்திய அரசின் ஒப்புதலோடு நம்முடைய தமிழ் நாட்டில் புகுத்தி, காவல் துறையினர் தங்கள் கடமையினைச் செய்யும்போது வீர மரணம் அடைந்தால் அவர்களது குடும்பத்தினருக்கு உதவுகிற வகையில் ஒரு அருமையான திட்டத்தைப் புகுத்தியிருப்பது உள்ளபடியே பாராட்டுக்குரியதொன்றாகும்.

நமது காவல் துறை மேலும் மேலும் விரிவாக்கப்படவேண்டும். நம் காவல் துறையில் துப்பறியும் நாய்ப் படையினை மேலும் மேலும் விரிவாக்க வேண்டும் என்பதில் இங்கு கருத்து ஒற்றுமை இருப்பதை நான் வரவேற்கிறேன். இந்த நடப்பாண்டில் திருச்சி மாவட்டத்தில் ஒரு துப்பறியும் நாய்ப் படைப் பிரிவைத் துவங்குவதற்கு முதல்வர் அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள். ஆகவே என்னுடைய மாவட்ட மக்கள் சார்பாக முதல்வர் அவர்களுக்கு நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் நம்முடைய தமிழ்நாட்டின் தலைநகராம் சென்னை நகரில் இரவு காலங்களில் திருட்டுகள் நடக்காமலும், கொடுஞ்செயல்கள் புரியும் குற்றவாளிகளைத் தடுப்பதற்கும், ரோந்துப் படையை நம் அரசு புகுத்தியிருக்கிறது. இது ஒரு அருமையான திட்டம். இந்த நல்ல திட்டத்தைத் தமிழ்நாட்டிலுள்ள திருச்சி, கோவை, சேலம், தஞ்சாவூர் போன்ற எல்லா நகரங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்



1971 சூலை 17] [திரு. பெ. சௌந்தரபாண்டியன்]

மேலும், நம் முதல்வர் அவர்கள் காவல் துறையினர் உற்சாகத்தோடு பணியாற்றவும், ஆக்கமும் ஊக்கமும் பெறவும், 1969-ம் ஆண்டு காவல் துறை ஆணைக் குழு ஒன்றினை நியமித்து இந்தத் துறையைச் சீர்திருத்தம் செய்யவும், வேறு பல நல்ல திட்டங்கள் தீட்டவும், நாடு முழுவதும் சென்று பார்த்து ஒரு அறிக்கையைத் தயாரிக்கச் செய்து, அதைப் பெற்று அதில் குறிப்பிட்டுள்ள சில அத்தியாவசியமானக் காரியங்களை இந்த நடப்பாண்டிலேயே செய்திருப்பது உள்ளபடியே பாராட்டுக்குரிய ஒன்றாகும். இருந்தாலும், ஒருசில தேவையான நல்ல ஆலோசனைகளையும் அந்த ஆணைக் குழு வெளியிட்டிருக்கிறது. அரசுக்குச் செலவில்லாத முறையில் எந்தெந்த திட்டங்களை நிறைவேற்ற முடியுமோ அவற்றை நிறைவேற்ற வேண்டுமென்று நான் அரசை விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

நம் காவல் நிலையங்களின் அதிகார வரம்பிற்குட்பட்ட எல்லைகள் பல ஆண்டுகளுக்கு முன்பே பிரிக்கப்பட்டவையாகும். காவல் நிலையம் ஒரு பக்கத்திலும் அதன் எல்லை நீண்ட தொலைவிலும் இருக்கின்ற காரணத்தினால் பொது மக்கள் காவல் நிலையத்திற்கு வருவதற்கும், காவல் துறையினர் குற்றம் நடந்த இடத்திற்குச் செல்வதற்கும் மிகுந்த சிரமங்கள் உள்ளன. ஆகவே காவல் நிலையத்தின் சுற்றுவட்டாரத்திலுள்ள இடங்களின் மையமான இடத்தில் காவல் நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எனக்கு முன்பு பேசிய நண்பர்கள் காவல் நிலையங்களுக்குத் தொலைபேசி மிகமிக அவசியம் என்று குறிப்பிட்டார்கள். நானும் அதை வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனெனில் நடந்து முடிந்த இடைத் தேர்தலில் என் தொகுதியில் லாலாப்பேட்டையில் வேட்பாளராகிய என்னையும், கழகத் தோழர்களையும் வெட்டி வீழ்த்த ஒரு சதித் திட்டம் தயாரிக்கப்பட்டு, நான் வேறு நிகழ்ச்சிகளுக்குச் சென்று விட்டதால் அந்த இடத்திற்குச் செல்ல முடியவில்லை. ஆகவே, கழகத் தோழர்கள் சாமியப்பன், ராமசாமி என்பவர்களை மண்டையில் அடித்தார்கள். அந்த நேரத்தில் அங்கு பணியாற்றிய சப்-இன்ஸ்பெக்டர் மேல் அதிகாரிகளுக்குச் செய்தி தெரிவிக்க முற்படுகிற நேரத்தில் காவல் நிலையத்தில் தொலைபேசி இல்லை. ஆகவே, தபால் ஆபீஸைத் தேடிச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. அதனால் காலதாமதமும் ஏற்பட்டது. ஆகவே, அவசரக் காலங்களில் செய்திகளை மேல் அதிகாரிகளுக்குத் தெரிவிக்கவும் காவல் துறை மேல் அதிகாரிகளோடு, தொடர்பு கொள்ளவும் போலீஸ் நிலையங்களில் தொலைபேசி அமைத்துக் கொடுப்பது மிக மிக அவசியம் என்பதை நம் அரசு உணரவேண்டும். நம் கழக ஆட்சிக் காலத்தில்தான் ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரிகின்ற 374 ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கும் அவர்களது இல்லங்களில் தொலைபேசி அமைத்துக் கொடுத்திருக்கிறோம். அதேபோல் வட்டத்தில் பணியாற்றுகிற தாசில்தார் இல்லங்களிலும்

[திரு. பெ. சௌந்தரபாண்டியன்] [1971 ஜூலை 17

தொலைபேசி அமைத்துக் கொடுத்திருக்கிறோம். ஆகவே சட்டத்தையும் அமைதியையும் நிலைநாட்ட வேண்டிய காவல் நிலையங்களுக்குத் தொலைபேசி அமைத்துக் கொடுப்பது மிக மிக அவசியம்.

அடுத்து. நம் காவல் துறையினைச் சீரமைக்கவேண்டும். போக்குவரத்துப் பிரிவினரை ஒரு பிரிவாகவும், காவலர்களை ஒரு பிரிவாகவும், இன்னும் மலபார் போலீஸ் படையை ஒரு பிரிவாகவும் பிரித்து, அவரவர்கள்—அதாவது அந்தந்தப் பிரிவினர்—அந்தந்தப் பணியைச் செய்கிற அளவிற்கு நாம் செயல் திட்டத்தை வகுக்கவேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இப்போது சாதாரணமாகப் பணியாற்றுகிற காவலர்கள் துணைக் கருவூலங்களையும், சப் ஜெயில்களையும் பாதுகாக்கிற பொறுப்பில் இருக்கிறார்கள். அந்தப் பொறுப்பைத் தனி போலீஸ் படையினரிடம் ஒப்படைக்கவேண்டும். காவல் துறை சட்டத்தையும், அமைதியையும் நிலைநாட்டுகிற பொறுப்பையும் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பது, குற்றங்களைத் தடுப்பது போன்ற பொறுப்புகளையும் ஏற்று பணியாற்றுவதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது நீதிமன்றங்களிலிருந்து, குறிப்பாக க்ரிமினல் நீதிமன்றங்களிலிருந்து அனுப்புகிற 'ஸம்மன்ஸ்' களைக் காவலர்கள் எடுத்துச் செல்கிறார்கள். இந்நிலை தவிர்க்கப்பட்டு முதலாவதாக அஞ்சல் மூலம் அனுப்பவேண்டும். அப்படி அஞ்சல் மூலம் அனுப்பப்படும் ஸம்மன்ஸ் அனுப்பப்படுகிறவருக்குக் கிடைக்கவில்லையென்றால், பிறகு வேண்டுமென்றால், காவலர்களைப் பயன்படுத்தலாம்.

நம் காவல் துறையினர் நல்ல முறையில் பணியாற்றி வருகிறார்கள். அதனால் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேநேரத்தில் கீழ்மட்டத்திலுள்ளவர்கள் கடமையை மறந்து வேறு சில உணர்ச்சிகளுக்கு ஆட்படுகிற காரணத்தினால் அப்படிப் பட்டவர்களைத் திருத்துவதற்கு மாவட்ட அளவில் காவல் துறைக்கென்று ஒரு பொது மக்கள் தொடர்பு அதிகாரியை நியமிக்க வேண்டும்.

பொது மக்கள் கொடுக்கிற புகார்களை விசாரிக்கிற அளவிற்கு மாவட்ட அளவில் ஒரு குழுவையும் அமைத்தாகவேண்டும். மதுவிலக்கு நீக்கப்படுகிற நேரத்தில் அதற்கு ஆலோசனை சொல்கிற அளவில் வட்ட ரீதியில் தாசில்தார், சர்க்கிள் இன்ஸ்பெக்டர், சட்டமன்ற உறுப்பினர், இன்னும் நகரப் பிரமுகர்கள் அடங்கிய ஒரு குழு இதுவரையில் பணியாற்றியது. இனிமேல், அந்த வட்டத்தில் அமைதியை நிலைநாட்டவும், ஆங்காங்கு ஏற்படுகிற குற்றங்களைத் தடுக்கவும், குற்றவாளிகளை நல்லமுறையில் திருத்தவும் அந்தக் குழுவைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென விரும்பிவேண்டிக் கேட்டுக்கொண்டு, எனக்கு இந்த நல்ல வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து, பாராட்டி, வரவேற்று விடைபெறுகிறேன். வணக்கம்.



1971 ஜூலை 17]

* திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் : தலைவரவர்களே, போலீஸ் மானியத்தின் மீது என்னுடைய பேச்சை நான் தொடங்குகிறேன். நான் மிக அச்சத்தோடு தொடங்குகிறேன் என்று சொல்வதில் வெட்கப்படவில்லை. காரணம், இந்தத் துறையைக் கொஞ்சம் நாசூக்காகத் தொட்டுப் பேசவேண்டியிருக்கிறது. போலீசாரின் குறையை அவர்கள் சொல்லும்போதும், அவர்கள் குறையை நான் சொல்லும்போதும், இந்த இரண்டையும் கருத்தில் ஒன்றி நாம் சிந்திக்க வேண்டியிருக்கிறது. தவறு என்பது அவர்கள் இடத்தில் மட்டும் இருப்பதாக நான் கருதவில்லை. அந்த நிர்வாகத்தில் இருப்பவர்களிடத்தில் தற்செயலாகத் தவறு நிகழ்ந்து விடுவது உண்டு. அந்தப் போலீசார் பொதுமக்களைக் காக்கும் காவலர்கள். அவர்களை நம்பி மக்கள் வாழ்கிறார்கள். அவர்கள் எந்த நோக்கத்தோடும் எந்த கண்ணியத்தோடும் நடத்தப்படுகிறார்களோ அந்த அளவுக்கு அவர்கள் மக்களுக்குக் காவலாக இருக்கிறார்கள்.

இப்போது இந்த மதுவிலக்கு எடுக்கப்படுகிறது இல்லையா? மற்றவர்களுக்கு எப்படி இருக்கிறது என்பது அல்ல. எனக்கு உண்மையிலேயே அச்சமாக இருக்கிறது. மது தடுக்கப்பட்ட நேரத்திலேயே இரவு 9 மணிக்கு மேல் சில சமயங்களில் நான் குடி இருக்கும் பகுதியில் மது உண்டு விட்டு நிதானம் இழந்து செல்பவர்கள் என் காலை தட்டிவிட்டுச் செல்வதும் உண்டு. அந்தத் தடையை எடுத்தபிறகு என்ன ஆகும் என்ற அச்சம் எனக்கு இல்லாமல் இல்லை. போலீஸ்காரர்கள் வாயை ஊதிப்பார்த்துப் பிடிப்பார்கள் என்று சொன்னார்கள். இப்போது கால் தடுக்கி விழுந்தாலும் பிடிக்க முடியாது. கழுத்தை ஆட்டி நடந்தாலும் பிடிக்க முடியாது. வேறு ஏதாவது தவறு செய்தால் பிடிக்கலாமே தவிர மற்ற நேரங்களில் அவர்கள் நாசூக்காக நடந்து கொள்ள வேண்டும். எனக்கு எப்போதுமே பழைய நினைவு வருகிறது. யாரோ ஒருவர் எங்கோ எதற்கோ பாடிய ஒரு பாட்டு எனக்கு நினைவுக்கு வருகிறது.

போலீசே பெரும் தொல்லை
இதை விட்டுத் தொலைப்போம் என்றால்
நாளும் வரவில்லை
போலீசே பெரும் தொல்லை
துப்பாக்கி தூக்கியே முறியுதே இடுப்பு
காடெல்லாம் நடந்து காலிலே வெடிப்பு
போலீசே பெரும் தொல்லை
இதை விட்டுத் தொலைப்போம் என்றால்
நாளும் வரவில்லை.

என்று எங்கோ, எப்போதோ, எவனோ பாடிய பாடல் எனக்கு நினைவுக்கு வருகிறது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்தக் காலத்தில் பூட்ஸ் இல்லாமல் இருந்து இருப்பார்கள்.

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் : முதலமைச்சர் அவர்கள் பூட்ஸ் இல்லாமல் இருந்திருப்பார்கள் என்று சொன்னார்கள். அப்படியும் இருக்கக் கூடும். அவர்களைப் பற்றி குறை சொல்வதை விட எப்படி நிர்வாகம் நடக்க வேண்டுமென்று சொல்வது நல்லது. இதை அங்கத்தினர்கள் வித்தியாசமாக கருதக் கூடாது. என்ன இவன் ஒரு புதுப்பாணியைப் பின்பற்றுகிறானே என்று நினைக்கக் கூடாது.

அந்தத் துறையில் இருப்பவர்களுக்கு மிகுந்த கஷ்டம் உண்டு. இங்கே பேசிய மாண்புமிகு நண்பர்கள் குறிப்பிட்டார்கள், காவல் துறையினருக்கு அரசியல் ஈடுபாடு உண்டு என்று. நான் தோழமைக் கட்சியைச் சார்ந்தவன். மாண்புமிகு நாடார் அவர்கள் எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்கள். திரு. ஹாண்டே அவர்கள் எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்கள். இன்னும் இந்த வரிசையில் இருக்கும் பலர் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள். ஒரு பிரச்னை சம்பந்தமாக நாமெல்லாம் காவல் நிலையம் போனால், அரசியல் தொடர்பு உள்ளவர்கள்தானே சொல்கிறோம். அரசியலோடு தொடர்பு இல்லாதவர்கள் போலீசோடு எப்படித் தொடர்பு கொள்வது என்று எனக்குப் புரியவில்லை. இதற்கு எனக்கு விளக்கம் சொல்லவேண்டுமென்று சபாநாயகர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு நிரபராதி கைது செய்யப்படுகிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். எனக்கு ஒருவர் தகவல் தருகிறார். சட்டியைத் தூக்கிக்கொண்டு போனவன் வேறு ஒருவன். தூக்கிச் சென்றவன் 5½ அடி உயரம் இருந்தான், தலையில் குல்லாய் போட்டுக்கொண்டு இருந்தான். அதற்காக அதுமாதிரி வேறு ஒருவன் ரோட்டிலே நடந்து போய்க்கொண்டிருந்தான் என்ற காரணத்திற்காகக் கைது செய்துகொண்டு போய்விட்டார்கள் என்றால் அவன் நிரபராதி என்று சொல்ல ஒரு எம்.சி.யோ ஒரு எம்.எல்.ஏ.வோ போக வேண்டியிருக்கிறது. ஐயா, இவன் திருடன் அல்ல, இவனுக்கு சட்டி திருடும் பழக்கம் இல்லை. இவன் நீண்ட நாள் பொதுத் தொண்டு செய்தவன். இவன் பெயர் மொய்தீன் என்று சொன்னால் தான் அவர்கள் விடுவார்கள். நிரபராதிகள் போலீசாரிடம் சிக்கக் கூடாது, கொடுமைப் படுத்தப்படக் கூடாது, என்று அழுத்தம் திருத்தமாக சொல்லிக் கொள்கிறேன். போலீஸ் இலாக்கா நிர்வாகம் திறம்பட இருக்கிறது என்று நான் என் கட்சியின் சார்பில் சொல்லிக்கொள்கிறேன்.

சமீபத்தில் நடந்த சில சம்பவங்களின் போது காவல் துறை எவ்வளவு கண்யத்தோடும், கடமை உணர்ச்சியோடும் நடந்து கொண்டார்கள் என்பதை நன்கு உணர்ந்து அதற்காக அவர்களைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். அவர்கள் எடுக்கும் நடவடிக்கை சில சமயங்களில் தப்பாகி விடும். அதற்காக அவர்களைச் சொல்லிக் குற்றம் இல்லை. சந்தர்ப்பச் சூழ்நிலையால் அப்படி ஏற்பட்டு விடலாம். அந்தச் சூழ்நிலையை தெளிவு படுத்துவது





சர்க்கார் தான். இதைச் சொல்லும்போது அவர்களிடத்தில் நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால் உண்மை அல்லாத ஒன்று உங்களுக்கு உண்மையாகத் தோன்றலாம். அதில் உண்மை எது என்று கண்டு பிடித்து, உண்மை அல்லாதது எது என்று கண்டு பிடித்து அவர்களுக்குத் தண்டனை அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ரிமாண்டு செய்யும் முறை இருந்து வருகிறது. அதில் எனக்கு அனுபவம் இருக்கிறது. நான் அந்த முறையில் சென்று இருக்கிறேன். பாகிஸ்தான் படையெடுப்பின் போதும், தேசியப் போராட்டத்தின் போதும் நான் இருந்து இருக்கிறேன். எனக்கு ஒரு அனுபவம். சுதந்திரப் போராட்டம் ஒன்றில் நான் கலந்து கொள்ளவில்லை. இருந்தாலும் நான் கைது செய்யப்பட்டேன். என்ன என்று கேட்டபோது, அந்த அதிகாரியிடமிருந்து பதில் வந்தது. நீங்கள் கள்ளுக்கடை முன்பு நின்று மறியல் செய்தீர்கள் என்று. மறியல் செய்யாமல் நான் நின்று இருந்தபோது என்னைக் கைது செய்தார்கள். "போலீஸ் மேல் அதிகாரிகள் திருப்பூர் மொய்தீனை கைது செய்தாயா என்று கேட்கிற போது என்ன பதில் சொல்வது, எங்களிடம் ஒரு லிஸ்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் உங்கள் பெயர் இருக்கிறது, நீ நட ஸ்டேஷனுக்கு" என்று சொன்னார்கள். இம்மாதிரி சம்பவங்கள் நிகழாமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சபாநாயகர் மூலமாக நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால், அராஜகம் தலைவிரித்தாடுகிறபோது, மக்கள் பாதிக்கக்கூடிய நிலையில் இருக்கும்போது, காவல்துறை அதில் தலையிட்டு உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும். சமூக விரோதிகளின் மீது போலீசார் எடுக்கும் நடவடிக்கைகளில் யாரும் கண்டிப்பாகத் தலையிடவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அராஜகம் தொழிலாளர்களாலோ அல்லது வேறு பெயராலோ தொடங்கப் படும்போது அவை உடனடியாகத் தடுத்து நிறுத்தப்படவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் அது குற்றத்தை வளர்க்கும். பாரபட்சம் வளரும். அது மனித இனத்திற்கு அப்பாற்பட்டது. போலீஸ் கட்டாயம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மனித ஒழுங்கை பாதிக்கும் வகையில் நடக்கும் எந்தச் செய்கையாயினும் போலீஸ் தடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே ஹிப்பியைப் பற்றிச் சொன்னார்கள். இவர்கள் ஒரு வகையான போதையை அருந்திக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் காரணம் இல்லாமல் மயிரை தொங்கப் போட்டுக்கொண்டு, அர்த்தம் இல்லாத ஒரு சட்டையைப் போட்டுக்கொண்டு, அர்த்தம் இல்லாத நிலையில் தங்களை ஆக்கிக்கொண்டு ஏதோ ஒரு சூழ்நிலையில் இருக்கிறார்கள். தயவு செய்து இதை மாற்ற வேண்டுமென்று சொல்வது எனக்குக் கடமையாக இருக்கிறது. போலீசாருக்கும் பல குறைகள் உண்டு. நம்முடைய அதாவது அவர்களைப் பற்றிய

நம்முடைய குறைகளையெல்லாம் சொல்லியாகிவிட்டது என்றாலும் அவர்கள் குறைகளும் இருக்கின்றன என்பதை நாம் மறந்துவிடுவதற்கு இல்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, நான் ஒரு கேள்வியைக் கேட்கலாமா? கள்ளுக்கடை மறியலின்போது கைது செய்யப்பட்டதாக மதிப்பிற்குரிய நண்பர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது சம்பந்தமாக அவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டு தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விழைகிறேன்.

**திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் :** அந்த மாதிரி காலங்களில் காலை சிறைபிடிப்பதும் மாலை வெளியே திறந்துவிடுவதும் மிகமிகச் சாதாரணமாக இருந்தது. நான் பல முறை சிறைபிடிக்கப்பட்டு இருக்கின்றேன். அவை ரெகார்டிலே இல்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ரெகார்டு மட்டும் இருக்குமானால் தியாகிகள் பென்ஷனை அவர்களுக்கு நிச்சயமாக அளித்திருப்பேன்.

**திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் :** அப்படிப்பட்ட ரெகார்டுகள் இல்லாமலேயே இருந்து விடவேண்டும் என்பதே என்னுடைய பிரார்த்தனை. தியாகிகளுக்கான பென்ஷனை நான் பெற விரும்பவில்லை. நான் விரும்பியிருந்தால் பெருந் மதிப்பிற்குரிய தலைவர் காமராஜர் அவர்கள் காலத்திலேயே எனக்கு அது கிடைத்து இருக்கும். முன்பொரு சமயம் நண்பர் ஒருவர் அதுபற்றி என்னிடம் சொன்னபோது நான் கூறினேன், ' நான் எதிர் வரிசையில் உள்ளவன். எதிர் வரிசையில் இருந்து கொண்டு தியாகிகளுக்கான பென்ஷனைப் பெற்றுக்கொண்டு அரசினைக் குறை கூறிப் பேசினால், என் சோற்றைத் தின்றுவிட்டு என்னைக் குறைகூறிப் பேசுகிறான்' என்று சொல்ல இடம் ஏற்படும். எனவே அதை நான் விரும்பவில்லை' என்று அன்றைக்கே குறிப்பிட்டேன்.

எனவே போலீசாருடைய குறைகளையும் நாம் அறிய வேண்டும். மேலும் நாம் அவர்களை வாய்ப்பு ஏற்படும்போது பாராட்ட வேண்டும். அவசியம் ஏற்படும்போது அணைத்துச்செல்ல வேண்டும். என்னுடைய அனுபவம் அதுதான். உங்களுடைய அனுபவமும் அப்படித்தான் இருக்கும் என்று நினைக்கிறேன். நாம் போலீஸ் நிலையத்திற்குள் செல்லும்போதே நம்முடைய அங்க வஸ்திரத்தை முறுக்கி விட்டுக்கொண்டு போனால் அங்கே உள்ள அதிகாரியும், தன்னுடைய உடுப்பையும் பித்தானையும் ஸன்னத்தையும் ஒரு முறை பார்த்துக் கொள்ளுகிறார். இது இயற்கை. நாம் அடக்கத்தோடு உள்ளே போனால் அவர்களும் தன்னடக்கத்தோடு பதில் அளிப்பார்கள். அதை விடுத்து, உள்ளே போகும்போதே அங்கவஸ்திரத்தை இழுத்துவிட்டுக் கொண்டு எஸ்.ஐ. இருக்கிறாரா என்று அதிகாரத்தோடு போகும்போது அதே முறையில் பதிலும் வருகிறது, ' இல்லை ' என்று. பண்பினை நாம் கொடுத்து அதை நாம்





திரும்பப் பெற வேண்டும். நான் போகும் போது நான் யார் என்று கூட அவர்களில் பல சந்தர்ப்பங்களிலே தெரிவதில்லை. ஆனாலும் நான் தன்னடக்கத்தோடு போகும்போது அவர்களும் பணிவாகப் பதில் அளிக்கிறார்கள். பிறகு நான் யார் என்று தெரிந்தவுடன் அவர்கள் ஆச்சரியப்படுகிறார்கள், ' இவ்வளவு அடக்கத்தோடு வந்து உட்கார்ந்து கொண்டு இருக்கிறாரே ' என்று. இந்தத் தன்னடக்கம் அவர்களிடமும் பண்பை வளர்க்கிறது, நம்மிடமும் பண்பை வளர்க்கிறது. எனவே அவர்கள்மீது மட்டும் குறை சொல்லிப் பயன் இல்லை. நாம் இரண்டு பேருமே அந்த நெறியை பொது நெறியினைப் பின்பற்ற வேண்டும்.

இப்படிப் போலீஸாரைப் பற்றிப்பேசும்போது அவர்களுக்கும் பல குறைகள் உண்டு என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அவர்களுக்கும் பல கஷ்டங்கள் இருக்கின்றன. போலீஸ் இலாகாவில் லஞ்சம் பெருகியிருப்பதாகப் பொதுவாகப் பேசப்படுகிறது. இது இந்தத் துறைக்கு மட்டும் இல்லை; அனைத்துத் துறைகளுக்கும் தான். தமிழகத்துக்கு மட்டுமின்றி இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களிலும் உள்ள குறைபாடாகும். பொதுவாக லஞ்சம் வாங்குகிறார்கள் என்று எல்லோரும் சொல்லுகிறார்கள். இப்போதுகூட ஒரு நண்பர் அவர்கள் சொன்னார்கள், ஏதோ 10, 15 என்று மாமூல் வாங்குகிறார்கள் என்று. இந்த மாமூல் என்ற வார்த்தைக்கு என்ன அர்த்தம் என்று தெரியவில்லை. ஆனால் எப்படியோ பெறுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. 'ஆதாரம் இருக்கிறதா இதற்கு' என்று கேட்டபோது அவரும் 'பெப்பெப்பே' என்று விழித்தார், நாமும் ' பெப்பெப்பே ' என்று இளிக்க வேண்டியிருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, இந்த 'பெப்பெப்பே' என்ற வார்த்தையை உபயோகப்படுத்தாமல் இருந்தால் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

**திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் :** எப்படியோ இது வாங்கப்பட்டு வருகிறது. இது நடைபெறாமல் இருக்க நாம் ஏற்பாடு செய்ய வேண்டும். மன்றத்தின் தலைவர் அவர்கள் மூலமாக போலீஸ் இலாகாவின் தலைமையைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த மாதிரி இழிச்சொல் இருக்கிறதே இது உங்கள் இலாகாவிற்கு வராதபடி பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். நான் கொஞ்சம் மனம் திறந்தே பேசுகிறேன், சபாநாயகர் அவர்கள் மன்னிக்க வேண்டும், இப்படி மாமூல் கொடுப்பதை யாராவது அதிகாரி ஏற்காவிடில் அவரை எப்படியாவது மாற்றிவிட வேண்டும் என்று எண்ணுகிறார்கள் கொடுப்பவர்கள். எனக்குத் தெரியும், ஒரு டீ கூட வாங்கிச் சாப்பிடாத அதிகாரிகள், ஒரு சோடா கூட வாங்கிக் குடிக்காத அதிகாரிகள் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் அப்படிப்பட்ட அதிகாரிகள் இருந்தால் தங்கள் காரியங்கள் நடைபெறாது என்று அவர்களை மாற்றிவிட வேண்டும் என்று முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. அவர்களும் இருக்கிறார்கள், அப்படி வாங்காத அவர்களை மாற்ற வேண்டும் என்று

முனைபவர்களும் இருக்கின்றார்கள். எனவே, இப்படி வாங்குபவர்களும் இருக்கக் கூடாது, வாங்காதவர்களை இப்படி மாற்ற முயற்சிப்பவர்களும் இருக்கக் கூடாது என்பதே என்னுடைய பணிவான விண்ணப்பமாகும்.

இதைக் கூறிக்கொண்டு கடைசியாக ஒரே ஒரு வார்த்தை, நான் முகஸ்துதிக்காக பேசி ஒருவருடைய அன்பைப் பெற விரும்புகிறவன் இல்லை. நான் மனதார, நெஞ்சார நமது பெருமதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். அவரோடு சமீப கால சம்பவம் ஒன்றில் எனக்குத் தொடர்பு ஏற்பட்டது. இதை இங்கே விளக்கிச் சொல்ல விரும்பவில்லை. போலீஸ் இலாகா அவரிடம் இருக்கும் காரணத்தினால் அவரோடு இந்தத் தொடர்பு ஏற்பட்டது. அவர் நடந்து கொண்ட விதம் உண்மையாகவே அவரிடம் பெருமதிப்பை மீண்டும் ஏற்படுத்தியது. முறையோடும் கட்டுப்பாடோடும் கண்ணியத்தோடும் முகம் சுளிக்காமல் அந்தப் பிரச்சனையில் அவர் காட்டிய பொறுமையும் பரிவும், உண்மையிலேயே அவருடைய பெருந்தன்மைக்கு என் கட்சி சார்பிலே என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கடைசியாக போலீஸ் துறையில் முஸ்லிம்களுக்கு பிரதிநிதித்துவம் கொஞ்சம் அதிகப்படுத்தப்பட வேண்டும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். இப்போது பொன்னப்ப நாடார் அவர்கள் என்னைப் பார்த்துச் சிரிக்கின்றார்கள். அது எனக்குப் புரிகிறது. மதிப்பிற்குரிய கே.டி.கே தங்கமணி அவர்கள், "கேரளத்தில் போலீஸ் அமைச்சராகவே இருக்கிறார்களே" என்று குறிப்பிட்டார்கள். இங்கே போலீஸ் மந்திரியாக ஆகவேண்டும் என்று குறிப்பிடவில்லை. தங்கமணி அவர்களே, இங்கே போலீஸ் துறையில் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன். இதை அன்பு கூர்ந்து கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் பேச்சுக்கு இவ்வளவு நேரம் அவகாசம் அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

* **திரு. ந. நாச்சியப்பன்** : தலைவர் அவர்களே, தமிழக காவல் துறை மான்யத்தின் மீதும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொடுத்துள்ள உரையின் பேரிலும் என் கருத்துக்கள் இரண்டொன்றைத் தெரிவித்துக்கொள்ள விழைகிறேன்.

நான்கு கோடி மக்களைக் கொண்ட தமிழகத்தில் சட்டம்-அமைதியைப் பாதுகாக்கும் காவல் துறையில் 30 ஆயிரம் பேரே பணிபுரிகின்றனர், அதாவது ஏறத்தாழ ஆயிரம் மக்களுக்கு ஒரு காவலர் என்ற விகிதத்தில் அவர்கள் பணி புரிகின்றனர் என்றால் அவர்கள் எவ்வளவு தூரம் பணிக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றார்கள் என்பது ஓரளவிற்குப் புரியும். பல்லாண்டு காலத்திற்கு முன்பு ஒரு காவல் நிலையத்தில் எவ்வளவு காவலர்கள் இருந்தார்களோ அதே எண்ணிக்கையில்





தான் இன்றைக்கும் அவர்கள் பணிபுரிகின்றார்கள். மக்கள் தொகை பெரும் அளவிற்குப் பெருகியிருந்தும் அதற்கேற்றபடி காவலர்களின் எண்ணிக்கை பெருகவில்லை. எனவே தேவையான அளவிற்குக் கூடுதல் எண்ணிக்கையில் காவலர்களை நியமிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வரவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன் இந்த நேரத்தில். பல நேரங்களிலே ஒரு காவல் நிலையத்தில் ஏதாவதொரு குறிப்பிட்ட பந்தோபஸ்து பணிக்குச் செல்லும் போது அந்த நிலையத்தில் ஒன்று அல்லது இரண்டு காவலர்களே இருக்கும் நிலை ஏற்படுகிறது. இந்த நிலை ஏற்படாதவாறு கூடுதலான காவலர்களை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

குறிப்பாக விருத்தாசலம் நகராட்சியாக ஆக்கப்பட்டு ஒரு ஆண்டுகாலம் ஆகியும் முப்பது ஆண்டுகாலத்திற்கு முன்பிருந்த அதே எண்ணிக்கையில்தான் இன்றைக்கும் அங்கே காவலர்கள் பணியாற்றுவதைப் பார்க்கிறோம். இதுபோன்றே நெய்வேலியிலும் கூடுதலான காவலர்களை நியமிக்க இடமிருக்கிறது. எனவே இந்தப் பகுதியில்தான் நக்சல்பாரிகள் இருக்கின்றார்கள். ஆகவே அதிகமாகக் காவலர்களை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேலும் விருத்தாசலத்தில் தாலுக்கா போலீஸ் ஸ்டேஷன் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும் பல காவல் நிலையங்களுக்கு மின்சார வசதியும் டெலிபோன் வசதியும் கொடுக்கப்படாமல் இருக்கின்றது. இவைகள் உடனடியாகக் கொடுக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

மேலும் ஒவ்வொரு இன்ஸ்பெக்டருக்கும் குறைந்தது ஒரு ஜீப்பும் ஒவ்வொரு உதவி ஆய்வாளருக்கு ஒரு மோட்டார் சைக்கிளும் கொடுக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

பொதுவாக, நம்முடைய அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு மதுவிலக்கில் கவனம் செலுத்தவில்லை என்று வெளியே பேசப்பட்டாலும் உண்மையை நன்கு எடுத்துக் காட்டுகிறது, 1970-71-ம் ஆண்டுக்கான தமிழ் நாடு காவல் துறை மீதான முதலமைச்சர் அவர்களின் ஆய்வுரை. நமது அரசு பதவி ஏற்குமுன்பு 1960-66 ஆக ஏழு ஆண்டுகளில் மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை 961,683 ஆகும். ஆனால் நமது அரசு பொறுப்பேற்ற பிறகு 1967 70 ஆக நான்கு ஆண்டுகளில் தொடரப்பட்ட வழக்குகள் 1,123,337 ஆகும் என்று அதில் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இதிலிருந்து என்ன அறிகிறோம் என்றால், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு மதுவிலக்கில் எந்த அளவிற்குத் தீவிர கவனம் செலுத்தியிருக்கிறது, அக்கறை காட்டியிருக்கிறது என்பதை நாம் உணர வாய்ப்பு ஏற்படுகிறது. இவ்வளவு

[திரு. ந. நாச்சியப்பன்] [1971 ஜூலை 17

அதிகமாகக் கவனம் செலுத்தியும் வழக்குகள் இவ்வளவு அதிகமாகத் தொடுத்தும், மக்கள் அந்தச் சட்டத்திற்கு மதிப்பளிக்கவில்லை என்ற அடிப்படையில் இன்றைய தினம் மதுவிலக்கை ஒத்தி வைக்க வேண்டும் என்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக உணர வாய்ப்பு ஏற்படுகிறது. அதை நாம் புரிந்துகொள்ள முடிகிறது.

அடுத்து, எல்லாக் காவல் நிலையங்களுக்கும் சொந்தக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்க வேண்டும். கள்ளக்குறிச்சி காவல் நிலைய கட்டடம் இடிந்து ஒரு ஆண்டு காலம் ஆகிறது. அது இன்னும் செப்பனிடப்படவில்லை. தியாகதுர்க்கம், வடபொன்பரப்பி, கச்சிராப்பாளையம் போன்ற காவல் நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட வாய்ப்பில்லாமல் இருக்கிறது. அதையும் கவனித்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

காவலர்களுக்குக் குடியிருப்புகள் அவசியம். அவரவர்கள் காவல் நிலையங்களுக்கு அருகிலேயே குவார்டர்ஸ் கட்டிக் கொடுத்தால்தான் சிறப்பாக காவலர்கள் கடமையை ஆற்ற ஏதுவாக இருக்கும். இன்றைய தினம் 60 சதவிகிதத்தினருக்கு குடியிருப்புக்கள் கட்டியிருக்கிறோம். இன்னும் உள்ள அத்தனை காவலர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும். அப்படிக் கட்டித் தரப்படுகின்ற வீடுகள் அவர்களின் இன்றைய தேவையைக் கருதி வசதியான அளவில் கட்டிக் கொடுக்க இந்த அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கிராமங்களில் ஊர்க்காவல்படை என்று அமைக்கப்பட்டிருக்கிறது. அவை சரியான முறையில் செயல்பட வாய்ப்பற்ற நிலைமையில் உள்ளன. ஆகவே சீரணிப் படைக்கு ஊர்க்காவல் பயிற்சி அளித்து, ஊர்க்காவல் வேலை புரிய அவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கள்ளக்குறிச்சிக்குத் தீயணைப்பு நிலையம் தேவை என்று பல ஆண்டுகளாக இந்த மாமன்றத்தில் எடுத்துச் சொல்லப்பட்டு வந்திருக்கிறது. அந்தப் பகுதி மிகவும் ஏழ்மையான நிலையில் இருக்கிற பகுதியாகும். எங்களுடைய வட்டத்தில் அதிக அளவிற்குக் கூரை வீடுகள் இருப்பதால், அடிக்கடி தீப்பிடித்து எரிகிற நிலைமையிருப்பதால், கள்ளக்குறிச்சியில் ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

என்னுடைய சங்கராபுரம் தொகுதியில் சுற்றியிருக்கிற மலைப் பகுதியில் கஞ்சாச் செடிகள் பயிரிடப்படுகிறது. அதைப் பிடிக்க காவல் துறையினர் பாதை வசதியில்லாத காரணத்தால் மிகச் சிரமப்பட்டுச் சென்று பிடிக்கின்றனர். ஆகவே பாதை வசதிகளை செய்துதர வேண்டும். அங்கே தேக்கு மரங்கள், சந்தன மரங்கள் ஆகியவற்றை வெட்டி கடத்திக் கொண்டு போகிறார்கள். அப்படிப்பட்ட சர்க்காருக்குச் சொந்தமான மரங்களை காப்பாற்றுகிற அளவுக்கு அந்த மலைப் பகுதியில் ஒரு காவல் நிலையத்தை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



1971 ஜூலை 17]

அடுத்து ரிஷிவந்தியம் தொகுதியில் காவல் நிலையம் ரிஷிவந்தியம் என்ற இடத்தில் தான் இருக்கிறது. அது பெரிய தொகுதியாக இருப்பதால், இரண்டு யூனியன் ஒன்றியங்களைக் கொண்ட பகுதியாக இருப்பதால், அரியலூரில் ஒரு காவல் நிலையத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இவ்வளவு சிறப்பாகப் பணியாற்றுகிற காவற்றுறை பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள கலைஞர் அவர்கள் நல்ல முறையில் தீவிர கவனம் செலுத்துவார் என்பதை நாட்டிலுள்ளவர்களும் அந்த இலாக்காவில் பணிபுரிகிற போலீஸ் நண்பர்களும் அறிவார்கள். குறைந்த வசதியில் நிறைந்த சேவை செய்கின்ற திறமையின் அடிப்படையில் இன்றைய தினம் செயலாற்றிக் கொண்டு வருகிற கலைஞர் அவர்கள் காலத்தில் காவலர்கள் அதிக நன்மை பெறுவார்கள். அது போலவே, நாட்டிலிருக்கின்ற மக்களுடைய பாதுகாப்புக்கு வழி செய்கின்ற வகையில் அதிகமான காவலர்களை நியமித்து, காவல் நிலையங்களுக்குச் சொந்தமாக கட்டடங்களைக் கட்டிக் கொடுக்க ஆவன செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

திரு. வி. கே. இராஜாப்பிள்ளை : தலைவர் அவர்களே, தென்குமரி முதல் திருவேங்கடம் வரையில் என்று சொல்லும் அளவுக்கு வாய்ப்பு இல்லாத முறையில் வடவேங்கடம் நம்மை விட்டுப் பிரிந்து போய்விட்ட போதிலும், தென்குமரி தமிழகத்தோடு இணைந்திருப்பதோடுகூட, தென்குமரித் தொகுதி திராவிட முன்னேற்றக் கழகத்தின் கையில்தான் இருக்கிறது. அதிலும் குறிப்பாகத் தமிழ்த் தாய் பெற்றெடுத்த தவப் புதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களின் படை வீரர்களில் ஒருவனாக இருக்கிற நான் அந்தத் தொகுதியின் பிரதிநிதியாக இங்கே பேசுவதற்கு எனக்கு வாய்ப்பிருக்கிறது என்று நினைக்கும்போது உண்மையிலேயே பெருமைப்படுவதோடுகூட எனக்கு முன்னால் பேசிய நண்பர் திருப்பூர் மொய்தீன் அவர்களைப் போல் நகைச்சுவையோடு அல்லது விஷய ஞானத்தோடு என்னால் பேச முடியாது. என்றாலும்கூட கடமை உணர்ச்சியுடன் ஒருசில கருத்துக்களை நமது முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற மானிய கோரிக்கையை ஆதரித்துக் கூற விரும்புகிறேன்.

நமக்கெல்லாம் ஒரு ஆய்வுரை தரப்பட்டிருக்கிறது. அந்த ஆய்வுரையிலே தமிழ்நாட்டுக் காவல் துறையைப்பற்றி விவரங்களும் விளக்கங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதைப் பார்த்தாலே நாட்டில் குற்றங்கள் குறைந்து குணங்கள் பெருகி அதன் காரணமாகப் பொருளாதாரத் துறை முன்னேறியுள்ளது என்பதைப் பார்க்கின்றோம்.

அதைப் போலவே காவல் துறைக்கும் அவர் தம் குடும்ப நலனுக்கும் அரசு செய்து கொடுத்திருக்கும், இனி செய்து கொடுக்கப் போகிற நல்ல திட்டங்களையும், அவர்கள் பெறுகின்ற பயன்களையும் அந்தக் குறிப்பிலிருந்து நாம் பார்க்கின்றோம்

[திரு. வி. கே. இராஜாப் பிள்ளை] [1971 ஜூலை 17

காவல் துறை ஆணைக் குழுவின் பரிந்துரைகளுக்கு இணங்கவும் காவல்துறையினருக்கு அரசு செய்து கொடுத்திருக்கிற பல நன்மைகளையும் நாம் அதிலிருந்து அறிகிறோம்.

அவர்களுடைய சம்பளங்கள் நியாயமான முறையில் உயர்த்தப்பட்டிருக்கின்றன. அவர்கள் திருப்தியுறுமாறு அவர்கள் பதவியும் உயர்த்தப்பட்டிருக்கின்றன. இன்னும் உள்ள பரிவு உரைகள் நிதி நிலைமைக்கேற்ப பரிசீலனையில் உள்ளது என்று அறியும்போது உண்மையிலேயே நாம் மாத்திரமல்ல காவல் துறையினரும் கூட மிகவும் மகிழ்ச்சி கொள்கின்றனர். இவற்றை எல்லாம் பார்க்கும்போது நல்ல உள்ளம் படைத்த யாரும், நியாய உள்ளம் படைத்த யாரும், கலைஞர் அவர்கள் தலைமை தாங்கி நடத்தும் தமிழக அரசின் கீழ் இயங்கும் காவல் துறையை நிச்சயமாகப் பாராட்டாமல் இருக்க முடியாது. இன்னும் கூட காவல் துறை உண்மையிலேயே லட்சியத் துறையாக இருக்க வேண்டுமென்றால், அது எப்படி அமைய வேண்டும், எல்லோரும் உயர்ந்த லட்சியத்தை அடைய முடியவில்லை என்றாலும் கூட, ஒரு சிலராவது ஒரு சில வரையறைக்குட்பட்டாவது அடைய வேண்டுமென்றால், அது எப்படியிருக்க வேண்டும் என்பதற்கு ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் இந்த மன்றத்தில் கூற விரும்புகிறேன்.

1939-40 என்று நினைக்கின்றேன். அப்போது நான் திருநெல்வேலி இந்து கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது அங்கு எம்.எ. (கான்டாப்) படித்த ஒருவர் கெமிஸ்டிரி புரொபசராக வேலை பார்த்துக் கொண்டிருந்தார். அவர் இந்து கல்லூரியில் சேர்ந்து ஒன்றிரண்டு மாதங்கள் கழித்து நடந்ததைச் சொல்ல விரும்புகிறேன். அவர் சாதாரணமாகவே ஆங்கில பாணியை பின்பற்றிக் கொண்டிருப்பவர். அவர் வந்து கல்லூரியில் சேர்ந்து ஒன்றிரண்டு மாதங்கள் கழித்துப் போக்குவரத்துத் துறையை நடத்திக் கொண்டிருக்கிற காவற்படை வீரரை அணுகி, அவரிடம் போய் where is the police station or where is the post office? " என்று கேட்டபோது, போக்குவரத்துத் துறை காவலர் போக்குவரத்தைக் கண்காணித்துக்கொண்டிருக்கும் போது இங்கிலாந்து நாட்டில் எப்படிக் கேட்பார்களோ அந்த முறையில் பூட்ஸ் காலால் அவருடைய பூட்ஸை தட்டி Police man, " Where is the police station or where is the post office? " என்று கேட்டார். உடனே அந்தக் காவலர் இவர் ஏதோ பெரிய அதிகாரி என்று நினைத்து வழியைக் காட்டினார். வழியைக் காட்டிவிட்டு, பக்கத்தில் வந்துகொண்டிருந்த ஒரு மாணவனைப் பார்த்து இவர் யார் என்று கேட்க, அந்த மாணவன், இவர் எங்கள் உபாத்தியாயர், கெமிஸ்டிரி புரொபசர் என்று கூறினான். காவலர் நோட்புக்கில் எழுதிக்கொண்டார். 2,3 நாட்கள் கழித்து இதைப் போலவே அந்த புரொபசர் காவலரிடம் வந்து வேறொன்றைக் கேட்டார். இவர் வாத்தியார் என்று அறிந்தவுடன் போலீஸ்காரர் போலீஸ் ஸ்டேஷனைப் பார்த்து, அவர் கேட்ட இடம் இதுதான் என்று அனுப்பி வைத்தார். அனுப்பி வைத்தது



1971 ஜூலை 17] [திரு. வி. கே. இராஜாப் பிள்ளை]

மாத்திரம் அல்ல அவரைக் கூட்டிக் கொண்டுபோய் லாக்கப்பில் வைத்துத் துன்புறுத்த—அப்போது மாணவர்களாக இருந்த நாங்கள் அங்கே போய் டவுன் போலீஸ்—ப்ரொபசரை விடுதலை செய் என்பதாக கிளர்ச்சியில் கலந்து கொண்டது நினைவுக்கு வருகிறது.

அந்தப் பேராசிரியர் அதேமுறையில் லண்டன் நாட்டில் நடந்திருந்தாரானால் மிக்க மரியாதையாக அந்த நாட்டு போலீசார் அவரை தானே அவர் சொன்ன இடத்திற்கு அழைத்துப்போயிருப்பார். அல்லது துணையாக வேறு யாரையாவது சேர்த்து அனுப்பியிருப்பார். ஆனால் இந்த நாட்டில் நிலைமை வேறாக இருந்தது. அந்த நிலை இன்னமும் மாறியிருக்கிறதா என்றால் இல்லை என்பதற்காகத்தான் இந்த நிகழ்ச்சியை நான் குறிப்பிட்டேன். இதுபோல உடனடியாக அந்த இலாக்காவில் உள்ளவர்கள் செயல்படுவார்கள் என்ற நம்பிக்கையில் நான் சொல்லவில்லை. ஆனால் இந்த முறையில் நம்முடைய லட்சியத்தை அடைவதற்கு, போலீஸ்காரர்கள் உயர்ந்த பண்பாடோடு நடப்பதற்கு நாம் வழிவகுத்தாக வேண்டும். அப்போதுதான் காவல் துறையினரால் மக்களுக்கு நல்ல பலன் ஏற்படும். அவர்களிடையே இத்தகைய நல்ல பண்பாடுகளை எல்லாம் வளர்த்தாக வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதோடு கூட இன்னும் எனது மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் அங்கே போலீஸ் நல்லமுறையில் செயல்படுகிறது. அது கேரளா எல்லையில் இருப்பதால் நக்சலைட் தலைதூக்கவும், கள்ளநோட்டுத் தொல்லைகள் ஏற்படவும் வழியிருப்பதால் அங்குள்ள போலீஸ் துறை மிகுந்த கண்காணிப்பாக இருந்தாக வேண்டும். இப்போதே கண்காணிப்பாக இருக்கிறார்கள் என்றாலும் இன்னும் அங்குள்ளவர்கள் உஷாராக இருக்க ஆவன செய்ய வேண்டும்.

அதோடு கூட எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. பி. பொன்சொக்கலிங்கம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றிருக்கிற போலீஸ் இலாக்கா மானியத்தின் மீது பேசுகின்ற வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த இருபதாண்டு காலத்தில் குறிப்பாகக் காங்கிரஸ் ஆட்சியின் போது போலீஸ் மக்களிடத்தில் எந்தமுறையில் நடந்து கொண்டது என்பதை நாடறியும். பேரறிஞர் அண்ணா அவர்கள் பொறுப்பேற்ற பிறகு அந்த இலாக்கா எந்த முறையில் உருவாக்கப்பட்டிருக்கிறது, அண்ணா அவர்களுடைய வழியைப் பின்பற்றி வருகிற கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் எப்படி மிகச் செவ்வையாக அவர்கள் பணியாற்றி வருகிறார்கள் என்பதைப் பார்த்தால் பாராட்டாமல் இருக்க முடியாது. குறிப்பாக நக்சலைட்டுகளை

ஒடுக்குவதிலும், தீவிரமாக அவர்களைக் கண்டுபிடிப்பதிலும் இவர்கள் ஆற்றி வருகிற பணி மிகச் சிறப்பானது என்றால் மிகையாகாது.

அதோடு கள்ள நோட்டுகள் அடிக்கிற குற்றங்களில் அந்த நோட்டுகள் புழக்கத்திற்கு வருவதற்கு முன்பே தீவிரமாக அத்தகையவர்களைக் கண்டுபிடித்து வருகிறார்கள் நம்முடைய போலீஸ் துறையினர். இதற்காக எல்லாம் இந்த அரசைக் குறிப்பாக முதல்வர் அவர்களைப் பாராட்டாது திரு. ஹாண்டே அவர்கள் முதல்வருடைய படம் வருவதுபற்றி அடிக்கடி மிக்க எரிச்சலோடு பேசி வருவதால், நான் இன்று நினைவூட்ட விரும்புகிறேன். கடந்த நான்காண்டுகாலமாக அரசியல்வாதியாக இருந்தாலும், பொதுமக்களாக இருந்தாலும், எந்தக் கட்சி உறுப்பினராக இருந்தாலும் சமமாக—தராசுபோல ஒரே நிலையில் பண்போடு நடந்து வருகிற ஆட்சி ஒன்று என்றால் அது கலைஞரது ஆட்சிதான். கடந்த காலத்தில் மதிப்பிற்குரிய திரு. ராஜகோபாலாச்சாரியார் காலத்தில் மக்களுடைய நியாயமான கோரிக்கையை எடுத்து வைக்க முற்பட்டவர்களை எல்லாம் சுட்டார்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** போலீஸ் துறை மானியத்தைப் பற்றிப் பேசுவது பொருத்தமாக இருக்கும். தலைவர்களைப் பற்றி மாசு கற்பிப்பது நல்லது அல்ல என்பதைத் தங்கள் மூலமாக மீண்டும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

**திரு. பி. பொன்சொக்கலிங்கம் :** எங்களுடைய தலைவர்களைப் பற்றிச் சொல்கிறபோது அவர்களுடைய தலைவர்களைப்பற்றிச் சொல்வதில் குறையில்லை என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத்தலைவர் : (திரு. நா. வீராசாமி)** போலீஸ் மானியத்தைப் பற்றிப் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. பொன்சொக்கலிங்கம் :** கடந்த காலத்தில் போலீஸ் துறை எந்த அளவுக்குச் செயல்பட்டது என்பதைக் கவனிக்க வேண்டும் என்பதற்காகத்தான் சொன்னேன். 15 ரூபாய் மாமூல் கொடுத்தால்தான் நடக்கிறது என்று சொன்னார்கள். சிதம்பரத்தைப் பொறுத்தவரையில் திருப்பூர் மொய்தீன் சொன்னதற்கு ஆதாரமே இல்லை.

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நகர மன்ற உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். நகரச் செயலாளர் மீது வழக்குகள் போட்டிருக்கிறார்கள். இது சம்பந்தமாக சட்டமன்ற உறுப்பினர்கள் யாரும் அத்துறையில் குறுக்கிடவில்லை. எங்களது தலைவர்—மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிகக் கடுமையாக ஒரு சுற்றறிக்கையே அனுப்பியிருக்கிறார்கள். அதிகாரிகளிடம் நெருங்கக் கூடாது என்பதாக. அதை இந்த நேரத்தில் சொல்வது உசிதமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.





மிகச் சிறப்பான முறையில் பணியாற்றி வருகிற போலீஸ் துறையில்—சர்கிள் இன்ஸ்பெக்டர்களுக்கு ஜீப்புகள் வழங்க வேண்டும். டி.எஸ்.பி.களுக்கு நிரந்தரமான வீட்டு வசதி செய்து தரப்படவேண்டும். அப்போதுதான் அவர்கள் யாருடைய தயவு தாட்சண்யத்திற்குக் கட்டுப்படாமல் பணியாற்ற வழியேற்படும்.

நக்சலைட்டுகள் கிண்டி ஐ.ஐ.டி. மாணவர்களை இரவோடு இரவாகச் சந்தித்து இரகசியக் கூட்டம் நடத்தினார்கள் என்று தெரிகிறது. அதைக் கண்டுபிடித்து ஆவன செய்யவேண்டும்.

இன்னும் காவல்துறையில் ஐ.பி.எஸ். க்கு 75 சத விகிதம் என்றும், எம்.பி.எஸ். க்கு 25 சத விகிதம் என்றும் ஒதுக்கப்படுகிறது. அப்படியின்றி நிரந்தரமாக ஐ.பி.எஸ்., எம்.பி.எஸ். க்கு 50 சதம் 50 சதம் விகிதம் என்ற விதத்தில் ஒதுக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தீயணைக்கும் பிரிவில் உள்ளவர்கள் பலர் இன்னமும் அரசாங்க ஊழியர்களாக நிரந்தரமாக்கப்படாமல் இருப்பதாகத் தெரிகிறது. அவர்களை நிரந்தரமாக்குவதோடு அல்லாமல் போலீஸ்துறையில் மற்றவர்களுக்கு அளிக்கப்படுகிற சலுகைகள் எல்லாம் இவர்களுக்கும் அளிக்க அரசு முன்வரவேண்டும்.

காவல்துறையில் உள்ளவர்களில் மாணவர்களைக் கல்லூரிகளில் சேர்ப்பதற்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் வேதனையோடு எங்களிடம் சில சந்தர்ப்பங்களில் வருகிறார்கள். அவர்களுடைய பிள்ளைகளுக்குக் கல்லூரியில் இடம் கிடைக்கத் தக்க வழிவகை செய்யப்படவேண்டும்.

காவல்துறையில் உள்ளவர்கள் கள்ளநோட்டு, நக்சலைட் ஆகியவற்றைக் கண்டுபிடிக்க சில சமயம் போக்குவரத்து வசதி அற்ற பல இடங்களுக்குச் சென்று வரவேண்டியிருக்கிறது. மற்றவர்களுக்கு ஒரு நாளைக்கு 3 ரூபாய் படி என்றால் இதுபோன்ற காரியங்களில் ஈடுபட்டு போக்குவரத்து வசதியற்ற இடங்களுக்கு எல்லாம் போய் வருகிறவர்களுக்குக் கொஞ்சம் படியை உயர்த்தித் தரவேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து நக்சலைட் பற்றி முன்னே சொன்ன உறுப்பினர் குறிப்பிட்டது போல விருத்தாசலம், பெண்ணாடம் போன்ற பகுதி, அண்ணாமலை சர்வகலாசாலைப் பகுதி, இங்கேதான் உருவாகிக் கொண்டிக்கிறது. இந்த இடங்களில் பணிபுரிகிற உதவி போலீஸ் கண்காணிப்பாளர்களுக்கு உதவுகிற அளவு மேலும் சில கண்காணிப்பாளர்களை நியமித்து இந்த இலாக்கா செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய எஸ்.ஐ. களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்கப்பட இருக்கிறது. சர்கிள் இன்ஸ்பெக்டர்களுக்கு ஜீப்புகள் வழங்கப்படவேண்டும்.

நக்சலைட் போன்ற ஊடுருவல்கள் இருக்கக்கூடிய இடங்களில் போலீஸ் எண்ணிக்கை போதுமான அளவு இல்லாததால் மாவட்ட அதிகாரிகளைக் கலந்துகொண்டு போலீஸ்படை வரவழைக்க வேண்டிய நிலைமை இருக்கிறது.

அந்த நிலையில் இல்லாமல் அவர்கள் உடனடியாக அந்த இடத்திற்குச் சென்று பார்வையிட்டு, குற்றங்களைத் தடுத்து நிறுத்தச் செய்வதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையின்கீழ் இயங்குகின்ற இந்த இலாகா மிகச் சிறப்பாகப் பணியாற்றக்கூடிய நிலையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். போலீஸ் துறையில் நிர்வாக அதிகாரிகள் கடந்த தேர்தல் காலத்தில் மிகச் சிறந்த முறையில், நியாய உணர்வோடு பணியாற்றியிருக்கிறார்கள். நமது கலைஞர் அவர்கள் இந்த இலாகாவின் பொறுப்பை எடுத்துக்கொண்டால் துன்பம் வந்துவிடும் என்று பரவலாகப் பேசினவர்கள் மலைத்துப்போகும் அளவுக்கு, அறிஞர் அண்ணா அவர்களுக்கும் மேலாக, இந்த இலாகா மிகக் கவனத்தோடும் நேர்மையோடும், நியாய உணர்வோடும் பணியாற்றிடச் செய்த நமது கலைஞர் அவர்களைப் பாராட்டி என் உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

* திரு. குழ. செல்லையா : பெருமதிப்பிற்குரிய பேரவைத் தற்காலிகத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தைப் பாராட்டி ஒரு சில வார்த்தைகள் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்ப் பெருமக்கள் எல்லாம் இந்த மானியத்தைச் சிறப்பான முறையில் பாராட்டியும், இந்த மாநிலத்தின் உயர்வினையும் பாராட்டுகிற நேரத்தில், நானும் என் கடமையுணர்ச்சியோடும், பெருமித உணர்ச்சியோடும் நமது கலைஞர் அவர்களைப் பாராட்டி இந்த மானியத்தை வரவேற்கிறேன்.

ஏனைய மாநிலங்களோடு ஒப்பிடுகிறபோது நம்முடைய மாநிலம் மிகச் சிறப்பாக, மிக உயர்வாகப் பணியாற்றுகிறது என்பதனை மிக அழகாகவும், தெளிவாகவும் உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

சட்டம் ஒழுங்கு போன்றவைகள் ஒழுங்காகக் காப்பாற்றப்படுமா என்று சில ஆண்டுகளுக்கு முன்னாலே ஒரு சிலருக்கு ஐயம் ஏற்பட்டது. 1967-ல் திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பு ஏற்றால் பெண்கள் தெருவில் நடமாட முடியாது என்றெல்லாம் பேசிய கருத்துக்களையெல்லாம் முறியடித்து, அவற்றிற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்றால், அவையெல்லாம் நமது கலைஞர் அவர்களுடைய ஆட்சியின் பெருமை என்றுதான் சொல்ல வேண்டும். காவல் துறை சீரோடும் சிறப்போடும் கடமையுணர்வோடும் பணியாற்றி வந்திருக்கிறது, என்பதற்குப் பற்பல மேற்கோள்களை எடுத்துக்காட்டலாம்.



உதாரணமாக உலகத் தமிழ் மாநாட்டின்போது லட்சோப லட்சம் மக்கள் கூடியதும், அந்த மக்களை ஒழுங்குபடுத்தி, சிறப்புற, சிறந்த முறையில் ஒரு சிறு அசம்பாவிதமும் இல்லாமல் நடத்திக் கொடுத்த காவல் துறையை எவ்வளவு பாராட்டினாலும் தகும். அவர்கள் கடமையுணர்வோடு காரியம் ஆற்றினார்கள் என்பதை இந்த நாடே அறியும்.

அடுத்தபடியாக, குடந்தையில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மகாமகம் திருவிழா நடைபெறுவது வழக்கம். 1967-லே குடந்தையில் நடந்த மகாமகத் திருவிழாவின்போது காவல் துறையினர் கடமையுணர்வுடன் அவ்வளவு பெருங்கூட்டத்தையும் கண்காணித்து, ஒருவித குற்றமும் நடக்காமல் பாதுகாத்து, பொது மக்களுக்கு சிறப்பான பாதுகாப்பு அளித்ததை யாரும் மறக்க முடியாது. 1955-லே என்று நினைக்கிறேன். நான் திருவாரூரிலே படித்துக்கொண்டிருக்கும்போது மகாமக திருவிழாவின்போது எத்தனையோ பேர் நெரிசலில் சிக்கி உயிர் இழந்திருக்கிறார்கள், எவ்வளவோ பேர் தங்கள் பொருள்களைத் திருட்டுக் கொடுத்திருக்கிறார்கள். எத்தனையோ அசம்பாவிதமான செயல்கள் எல்லாம் நடைபெற்றிருக்கின்றன. ஆனால் 1967-ல் நடந்த மகாமகத் திருவிழாவின்போது எத்தகைய அசாம்பாவிதங்களும் நேராமல், பொதுமக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படாத வகையில் காவல் துறையினர் பொறுப்புடன் பணியாற்றினர் என்பதை அனைவரும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். காவல் துறை மிகமிகச் சிறப்பாகப் பணியாற்றியிருக்கிறது.

அடுத்து, தஞ்சையிலேயிருந்து சென்னைக்கு வந்தால், ‘சென்னையிலே திருட்டுக்கள் அதிகம், பிக்பாக்கெட் செய்துவிடுவார்கள்’ என்றெல்லாம் சொல்லும் வழக்கம் இருந்தது. நகர்ப்புறங்களில் உள்ள மக்களுக்குப் பாதுகாப்பு அளித்திருக்கிறார்கள். திருட்டுகள் குறைந்திருக்கிறது. பொதுமக்களுக்கு நல்ல பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு கலைஞர் அவர்கள் தலைமையின்கீழ் இயங்குகின்ற காவல்துறை நல்ல பணியினைச் செய்து வருகிறது என்பதை அத்தனை பேரும் அறிவர்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் பேராவூரணி, பட்டுக்கோட்டை, கீரமங்கலம் போன்ற பகுதிகளில் காவல்துறை இயங்கி வருகிறது. என்னுடைய தொகுதி மிகமிகப் பின்தங்கிய தொகுதி. கடற்கரையோரப் பகுதியாக இருக்கிற காரணத்தால் பஸ் வசதி இல்லை, சைகிளிலேதான் போக வேண்டும். அப்படியில்லாவிட்டால் ஜீப்பில்தான் போகவேண்டும். கீரமங்கலம் காவல் நிலையத்திற்கு போகவேண்டுமென்றால், நீண்ட தூரம் போகவேண்டியிருக்கிறது. பேராவூரணியில் இருக்கும் காவல் துறை 64, 65 கிராமங்களுக்கு மையமாக இருக்கிறது. கீரமங்கலம் காவல்துறையில் இருப்பவர்கள் 20 மைலுக்கு அப்பால்போய் பணியாற்றக்கூடிய நிலைமை இருக்கிறது. குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கவும், மற்றக்காரணங்களுக்காகவும் வெளியே போகவேண்டியிருக்கிறது. போக்குவரத்து

சௌகரியம் இல்லாததால் உடனடியாக காவல்துறையினர் செல்ல முடிவதில்லை. ஆகவே, பெருமகளூரை மையமாக வைத்துக் கொண்டு, 40, 50 ஊராட்சி மன்றங்கள் அடங்கிய பகுதிக்குக் காவல்துறை ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் காவல் துறையை ஏற்படுத்திக்கொடுத்தால் அடிக்கடி போலீஸ்துறையினர் சுற்றுப்புறங்களில் நல்ல பாதுகாப்பு அளிக்க முடியும். மேலும் இப்போது அந்தப் பகுதியில் ஒரு பஸ்தான் ஓடிக்கொண்டிருக்கிறது. அதுவும் ஒருநாளைக்கு மூன்று முறைதான் போகிறது.

அடுத்து ஒவ்வொரு காவல் துறைக்கும் ஒரு மோட்டார் சைக்கிள் கொடுக்கப்படுவதாக இருக்கிறது. கிராமப்புறங்களில் இருப்பவர்களுக்கு மோட்டார் சைக்கிள் என்பதற்குப் பதிலாக ஒரு ஜீப் கார் கொடுத்தால் நல்லதாக இருக்கும். அதற்கான வழி வகைகளைச் செய்ய வேண்டும் என்று முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

என்னுடைய தொகுதியான பேராவூரணியில் உள்ள காவல் நிலையத்தில் காதர்மொய்தின் என்கிற சப் இன்ஸ்பெக்டர் இருக்கிறார். அவர்மீது மக்களுக்கு ஒருவிதமான அதிருப்தி பரவியிருக்கிறது. அவர் உண்மைக்கு மாறான முறையில் சிலர்மீது வழக்குகளைப்போட்டிருக்கிறார். சில முறைகேடுகள் நடந்திருக்கின்றன. ஒரு சிறு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். ஒட்டங்காடு என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அங்கே கோவிலில் ஒரு சிறு தகராறு ஏற்பட்டதன் காரணமாக ஊராட்சி மன்றத் தலைவர் திரு. சிங்கு ராஜு என்பவரைக் கைது செய்து ஐ.பி.சி. 307—செக்ஷன் அதாவது 'அட்டம்ப்ட்டு மர்டர்' என்ற வகையில் கேஸ் புக் செய்திருக்கிறார். அவரை ஜாமீனிலும் விட முடியாத அளவுக்கு வழக்குத் தொடுத்திருக்கிறார். அவர் பல கொடுமைகளைச் செய்து வருகிறார். அவர் தன்னுடைய கடமைகளைச் சரியாகச் செய்கிறாரா இல்லையா என்பது அந்தப் பகுதி மக்களுக்கே நன்கு தெரியும். மக்களிடத்திலே கையூட்டுகள் வாங்குகிற நிலை இருக்கிறது, கைவன வயல் கிராமம் காளிமுத்து நாடார் மகன் ஆத்மநாதன் என்பவர்மீது உண்மைக்கு மாறான வகையில் வழக்குப் போட்டிருக்கிறார். ரெகார்டு இல்லாமலேயே காவல் நிலையத்தில் வைத்திருக்கிறார்கள். 'அன்-ரிகார்டு'-ஆக காவல் துறையில் வைக்கப்படுகிறார்கள். நான் தகவல் அறிந்ததும், மேல் அதிகாரிக்குத் தெரிவித்தேன். அதற்கு அவர் சாராயம் கால் லிட்டரோ, அரை லிட்டரோ வைத்திருந்ததாக வழக்கு எழுதப்பட்டிருக்கிறது. இப்படியெல்லாம் உண்மைக்கு மாறாகவும், அங்குள்ள மக்களுக்கு அதிருப்தி ஏற்படக்கூடிய நிலையிலும் காரியங்களைச் செய்து வருகிறார்.





அடுத்து அந்த எஸ்.ஐ. தனக்குச் சொந்தமான எம்.டி.ஜி. 981 எண்ணுள்ள அம்பாசிடர் கார் ஒன்று வைத்திருக்கிறார். அதை வாடகைக்கு விட்டுக்கொண்டு இருக்கிறார்கள். வருகின்றவர்களிடத்தில் காரை எடுத்து வந்தால் தான் தருவேன் என்று கூறி, ஏழைமக்களை வாட்டி வதைக்கிறார். இன்னும் பல காரியங்கள் நடைபெறுகின்றன. எல்லாவற்றையும் இங்கே அதிகமாகச் சொல்லக்கூடாது என்பதனால் சிலவற்றை விட்டுவிடுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனித்து, தமிழகத்தின் சிறப்பை வளர்க்கும் முறையில், மக்களுடைய நிலைமைகளைக் கண்டறிந்து ஆவன செய்ய வேண்டும்.

தஞ்சையைப் பொறுத்தவரையில் சிலபல தினங்களுக்கு முன்பாக திடீர் திடீர் என்று தீ பிடிக்கின்ற நிலைமை இருந்து வருகிறது. குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு, அந்தத் தீயசெயலை ஒடுக்க வேண்டும் என்று கூறி, பேச வாய்ப்பு அளித்த தலைவருக்கு நன்றிகூறி, இந்த மானியத்தை வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.

* திரு. கே. பி. கோபால்: பேரவைத் தலைவர் அவர்களே, காவல்துறை மானியத்தின்மீது ஒருசில வார்த்தைகளைக் கூறிக் கொள்கிறேன். காவல்துறையின் விசாரணைக் குழுவின் அறிக்கை வெளியாகியிருக்கிறது. அதில் அந்தக் குழுவின் சிபாரிசுகள் படிப்படியாக ஐந்தாண்டுக் காலத்தில் செயல்படுத்தப்படும் என்று உறுதி கூறியிருக்கிறார்கள். நிதிநிலைமையைப் பாதிக்காத அளவில் ஒருசில கருத்துக்களை உடனடியாகச்செயல்படுத்தலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். விசாரணைக் குழு போலீஸ் துறையில் திடீர் மாற்றங்கள் தவிர்க்கப்பட வேண்டுமென்று கூறியிருக்கிறது. மூன்று ஆண்டுகளுக்குக்கூட பணியாற்றக்கூடிய நிலைமை இல்லாமல் காவல் பணியாளர்கள் மாற்றப்படுகிறார்கள். பொதுவாக கோடை விடுமுறையின்போது மாற்றங்கள் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஏனெனில் அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகளின் கல்வி பாதிக்கப்படுவதோடு அல்லாமல், அவர்களுடைய உற்சாகமும் பாதிக்கப்படுகிறது.

அடுத்து, போலீஸ் தலையீடு, முறையீடு, நிர்ப்பந்தம் என்பது பற்றியும் விரிவாகக் கூறியிருக்கிறார்கள். மக்களின் பிரதிநிதிகள் என்ற முறையில் அவர்களுக்கும் முறையிடும் உரிமை இருக்கிறது. ஆனால் அந்த முறையீடுகள் எல்லாம் நியாயமானதாக இருக்க வேண்டும். நேர்மையானதாக இருக்கவேண்டும். அது நியாயமற்றதாக இருக்கக் கூடாது என்பதை வற்புறுத்தியிருக்கிறார்கள். எனவே மூன்றாண்டுகளுக்குப் பணிபுரியும் காவலர்களை மாற்றிவிடவோ அல்லது நிர்ப்பந்தம் காரணமாக மாற்றிவிடவோ முயற்சி செய்வது தவிர்க்கப்பட வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. கே. பி. கோபால்] [1971 ஜூலை 17

என்னுடைய தொகுதியிலே 1967-ஆம் ஆண்டிலிருந்து 1971-ஆம் ஆண்டு வரை 5 காவலர்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலைமையை மாற்றவேண்டும். இதுவும் இந்த விசாரணைக் குழுவின் அறிக்கையிலே வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

கள்ளக்கடத்தல் பொருட்கள் கைப்பற்றப்படும்பொழுது அதில் ஒரு பகுதியை அவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று இதிலே வலியுறுத்தப்பட்டிருக்கிறது. கம்பம் பகுதியிலே கள்ளக்கடத்தல் சம்பந்தமாகக் கைப்பற்றப்பட்டதை ஒரு பகுதியைக் கொடுக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்தால் அந்தப் பகுதியிலே கள்ளக் கடத்தல்கள் தடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தையும் ஒரு சர்க்கிளாக அமைத்து ஜனத்தொகையின் அடிப்படையிலே கிராமங்களில் காவல் நிலையங்களையும் அந்தந்தக் காவல் நிலையங்களுக்குப் போதுமான ஜீப்புகளையும், மோட்டார் சைக்கிள்களையும் காவல் நிலையங்களிலும், காவலர்களின் வீடுகளிலும் டெலிபோன் வசதிகளையும் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்காக அறிக்கையிலே ஒரு திட்டம் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் பொழுது முதல் இடத்தை கம்பம் தொகுதிக்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அதற்குப் பல் காரணங்கள் இருக்கின்றன. கேரள மாநிலத்தின் எல்லை ஒரு புறத்திலே இருப்பதாலும் அடர்ந்த காடுகள் இருப்பதாலும், நக்சல்பாரிகள், பெரிய குற்றம்செய்தவர்கள் தலைமறைவாக இருக்கக்கூடிய இடங்களாக அடர்ந்து இருப்பதாலும் அங்கே அந்தத் திட்டத்தை முதல் இடம் ஆக அமல் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கள்ளக் கடத்தலைத் தடுப்பதற்குத் தனியான துறையொன்று இருந்தாலும் அவர்களுக்கு உதவியாக இதுவும் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று மதுவிலக்கு நீக்கப்பட்ட பிறகு எக்ஸைஸ் இலாகா என்று ஒன்று அமைக்கப்பட்டாலும் அவர்களுக்கும் துணையாக இந்தப் பிரிவு பயன்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே தேக்கடி, பெரியாறு, சுருளி போன்ற பகுதிகள் கண்ணகியில் பூர்வக் கோயில் இவைகள் இருக்கின்ற காரணத்தினால் அங்கே அடிக்கடி வி.ஐ.பி.-க்கள் முக்கியப் பிரமுகர்கள் அடிக்கடி வருகின்ற காரணத்தினால், அங்கேயுள்ள காவலர்களுக்கு இது உதவியாக இருக்கும் என்பதால் அங்கே இந்தத் திட்டத்திற்கு முதலிடம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சமூக விரோதிகள் ஆண்டுக்காண்டு அதிகரித்து வருகிறார்கள். கள்ளக்கடத்தல் தடுப்பு அதிகாரிகளை அடிப்பதும், வைக்கோல் போருக்குத் தீ வைப்பதும் அடிக்கடி அந்தப் பகுதிகளிலே நடைபெறுகின்றன. பஞ்சாயத்துத் தேர்தலிலே வன்முறைச் செயல்கள் நடைபெற்றன. கடந்த முறை பஞ்சாயத்துத் தேர்தலின்போது கட்சி சார்பற்ற முறையில் இருந்தாலும் ராயப்பன் பட்டியில் 600



1971 ஜூலை 17] [திரு. கே. பி. கோபால்]

வாழைத் தார்கள் வெட்டப்பட்டன, காமயகவுண்டன் பட்டியில் தென்னங்கன்றுகள் அழிக்கப்பட்டன, கூடலூரில் வைக்கோல் போருக்குத் தீவைத்தார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் நிதி நிலைமையை அனுசரித்து அவர்கள் 5 ஆண்டுகளுக்குள் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினாலும் நிச்சயமாக கம்பம் பகுதிக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அறிக்கையின் பிரகாரம் 1961-ஆம் ஆண்டில் உள்ள ஜனத்தொகையின் அடிப்படையில் காவலர்கள் நியமிக்கப்பட்டார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. கம்பம் நகரம் 40 ஆயிரம் மக்கள் கொண்ட இரண்டாவது நிலை நகராட்சியாக இப்பொழுது ஆகியிருக்கிறது. கம்பத்தில் உள்ள காவலர்கள்தான் அதைச் சுற்றியுள்ள ராயப்பன்பட்டி முதல் சுருளிப்பட்டி வரையில் உள்ள ஐந்து கிராமங்களையும் சுருளி ஸ்தலத்தையும் அவர்கள் கண்காணிக்கவேண்டியிருக்கிறது. அதேபோன்று கூடலூர் நகரத்திலே இப்பொழுது 35 ஆயிரம் மக்கள் இருக்கிறார்கள். அங்கேயிருக்கின்ற காவலர்கள் அடுத்துள்ள இரண்டு கிராமங்களையும் கண்காணிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. கிராமங்கள் அருகாமையில் இருக்கின்றன என்று சொல்ல முடியாது. 15 மைல் அளவுக்கு பெரியாறைச் சுற்றிக்கொண்டு கருநாயக்கம்பட்டி குள்ளப்பம்பட்டி போன்ற கிராமங்களுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. சுருளி ஸ்தலத்தில் ஒரு பயணிகள் விடுதி கட்டுவதற்குப் பரிசீலனையில் இருக்கிறது. அங்கேயும் ஒரு அவுட் போஸ்ட் தேவைப்படுகிறது. என்னுடைய தொகுதியிலே கோம்பையிலே 15 ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள், அங்கே ஒரு அவுட் போஸ்ட் இருக்கிறது. பல அவுட் போஸ்ட்கள் முழுக் காவல் நிலையங்களாக மாற்றப்படும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அப்படி மாற்றப்படுவதில் நிச்சயம் கோம்பையும் இருக்கும் என்று நம்புகிறேன். புதிதாக அவுட் போஸ்ட்கள் திறக்கப்படும்பொழுது சுருளி ஸ்தலத்திலும் ஒரு அவுட் போஸ்ட் வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுமக்கள் மனுக்கள் கொடுத்தால் உடனுக்குடன் விசாரணை செய்து உண்மையென்று தெரிந்தால் வழக்குகள் பதிவுசெய்ய வேண்டும். சாட்சிகள் இல்லையென்று சொல்லி நோட்டீஸ் கொடுக்க வேண்டும். தேர்தல்பற்றி பல மனுக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன, ஏன் இன்னும் விசாரணை செய்யவில்லை என்பது தெரியவில்லை. இரண்டு மனுக்களுக்குத்தான், ஒன்று தேர்தலில் நின்ற அபேட்சகர் தாக்கப்பட்டார் என்பதும் போதிய சாட்சியங்கள் இல்லை என்றும் மற்றொன்றும்தான் முடிவு செய்யப்பட்டிருக்கின்றன. மற்ற மனுக்கள் இன்னும் ஏன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. இதிலே ஐயப்பாடு இருக்கிறது. என்ன காரணம் என்று தெரியவில்லை. இதுபோன்றவற்றை விரைவாகச் செய்தால்தான் பொதுமக்களுக்கு நல்லமுறையிலே அவர்கள் பணியாற்ற முடியும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

[1971 ஜூலை 17

**திரு. க. சுப்பு :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காவல் துறையைப்பற்றி விசாரணைக் குழுவின் அறிக்கை தாக்கல் செய்யப் பட்டிருக்கின்றது. அதிலே பல தெளிவான விவரங்களும் நல்ல ஆலோசனைகளும் அடங்கியிருக்கின்றன. அதைப்பற்றித் தனியாக விவாதிப்பதற்குத் தனியாக நேரம் ஒதுக்கப்பட்டு இருந்தால் நல்ல வாய்ப்பாக இருக்கும் என்று கருதுகிறேன்.

இந்த மன்றத்திலே பல உறுப்பினர்கள் சட்டம், ஒழுங்கு தமிழகத்திலே நிலைநாட்டப்படுகிறது என்ற கருத்தை வெளி யிட்டார்கள். சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்படுகிறது என்று சொல்கிற நேரத்திலே எந்தச் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டுகிறார்கள் என்பதைப் பார்க்கவேண்டும். இருக்கின்ற சட்டத்தையும் ஏற்கனவே இருக்கின்ற சட்டத்தை நிலைநாட்டுகின்ற அளவுக்குத் தான் நிலைமை இருக்கிறது. ஏற்கனவே இருக்கின்ற சட்டத்தைத் தவிர சமுதாய முன்னேற்றத்திற்காக நாம் சில சட்டங்களை இயற்றுகின்றோம். அப்படிப்பட்ட சட்டங்களையும் நாம் நிலைநாட்டுவதற்கு ஏற்றவகையில் காவல் துறையினர் பயன் படுத்தப்படவேண்டும். ஏற்கனவே இருக்கிற சட்டம் என்று நாம் எதைக் கருதுகிறோம் என்றால் திருடியது குற்றம் என்றால் அதைத் தண்டிப்பதற்குத்தான் ஏற்கெனவே இருக்கிற சட்டம் வகை செய்கிறது. அவன் எதற்காகத் திருடினான்—துலாபாரத்திலே திருடிய குழந்தை அடிபடுகின்றது, ஆனால் அது ஏன் திருடியது, எதற்காகத்திருடியது, உணவு கிடைக்கவில்லை, வேலை கிடைக்க வில்லை அதனால் திருடியது—அப்படித் திருடினால் குற்றவாளி அல்ல என்ற நிலைமையில் இன்றைக்குச் சட்டங்கள் நிலைநாட்டப்படுவ தில்லை. ஏற்கெனவே இருக்கின்ற சட்டங்களுக்கு நாம் இப்பொழுது கொண்டுவருகின்ற சட்டங்கள் நல்ல மாறுபாட்டைக் கொண்டிருந் தால்தான், நாம் எண்ணுகின்ற முற்போக்கான சட்டங்கள் கொண்டு வரப்பட்டு அப்படிப்பட்ட சட்டங்கள் நிலைநிறுத்தப்படுகின்ற அளவிலே நிலைமை வரவேண்டும்.

தொழிலாளர்கள் நடத்துகின்ற போராட்டங்களும் கிளர்ச்சி களும் மதிக்கப்படாத நிலைமையிலே அவர்கள் கைதுசெய்யப் படுகின்ற நிலைமைதான் இருக்கின்றன. முதாளிகளை எடுத்துக் கொண்டால், எந்த முதலாளியாவது கைது செய்யப்படுகிறாரா? எந்த முதலாளியாவது சட்ட விரோதமாக நடந்தார் என்று கைது செய்யப்பட்டிருக்கிறாரா?

தேர்தல் காலங்களிலே பணக்காரர்கள் வீடுகள் அலுவலகங் களாக இருக்கின்ற நிலையில் பணக்காரர்களுடைய உதவி தேவைப் படுகிறது. ஆனால் தொழிலாளர்களைப் பொறுத்தவரை எந்த அளவுக்கு நாம் அவர்களை வைத்திருக்கிறோம், முற்போக்கான கருத்துக்களைக் கொண்டிருக்கிற நாம் இதிலே என்ன கருத்தைக் கொண்டிருக்கிறோம் என்பதைப் பார்க்கவேண்டும். தொழிலாளர்கள் போராட்டம் நடத்துகின்ற நேரத்தில் வன்முறையில் இறங்காமல்



1971 ஜூலை 17]

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பணக்காரர்கள் வீடுகள் தேர்தல் அலுவலகங்களாகப் பயன்படுகின்றன என்று சொன்னார்கள். அவர் ராஜபாளையத்தில் உள்ள வீட்டைப்பற்றிச் சொல்கிறாரா வேறு எந்த வீட்டைப்பற்றிச் சொல்லுகிறார் ?

**திரு. க. சுப்பு :** அவையெல்லாம் சரியென்று கருதுவது தேர் தலிலே நல்லதல்ல.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தேர்தல் நேரத்திலே சுப்ப ராஜா உங்கள் பக்கம் போனாரே அதைப்பற்றிச் சொல்கிறீர்களா?

**திரு. க. சுப்பு :** சுப்பராஜா மட்டுமல்ல, சுப்ரமணியம் அவர் களுக்குக் கூட நாங்கள் பாடுபட்டிருக்கிறோம். நாம் கொண்டிருக் கின்ற கட்சி உறவை அடிப்படையாக வைத்துக்கொண்டு நான் பேசுகிறேன். தனிப்பட்டு எந்தக் கட்சியையும் நான் குறிப்பிட வில்லை. தேர்தல் நேரத்தில் தவிர்க்கமுடியாத உறவு காரணமாக அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க அச்சம் இருக்கிறது. நான் முதலமைச்சர் அவர்களைக் குறிப்பிடவில்லை. ஏற்கனவே இருக் கின்ற சட்டங்களைப் பாதுகாத்து அமல்படுத்துகின்ற முறையிலே தான் போலீஸார் பயன்படுகின்றார்கள்.

தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் அவர்களுடைய பிரச் சினையைத் தீர்க்கச் சட்டமில்லை, தொழில் கோர்ட்டிற்குத்தான் போக வேண்டிய நிலை இன்னும் இருக்கிறது. அது என்றைக்குத் தீர்க்கப்படுமோ அன்றைக்குத்தான் தீர்க்கப்படும், என்ற நிலைமை இருக்கிறது.

தொழிலாளர்கள் கிளர்ச்சிகள் செய்யும்பொழுது வன்முறைகள் ஈடுபடுத்தப்பட்டால் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் அவர்கள் கிளர்ச்சியும் ஆர்ப்பாட்டமும் இல்லாத நிலைமை யிலே அவர்களுடைய கோரிக்கை நியாயம் என்பதை வலியுறுத்த நடத்துகின்ற போராட்டங்கள் தடுக்கப்பட்டால், எப்படிப் பொது மக்களைப் புரிந்துகொள்ள வைக்கமுடியும் என்பது எனக்குத் தெரியவில்லை. நாம் இயற்றும் சட்டத்திற்கு உறுதுணையாக முற் போக்கான நடவடிக்கைகள் இருக்க வேண்டுமென்பதை வர வேற்கும் அதேநேரத்தில், அது இருக்க வேண்டும் என்று சொன்னால் ஆர்ப்பாட்டங்களும், கிளர்ச்சிகளும் வரத்தான் செய்யும். அவைகள் இருந்தால்தான் சட்டத்தையே கொண்டுவர முடியும். இதை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அதேநேரத்தில் நான் ஒடுக்கிவிட்டேன், கடுமையாக ஒடுக்கி விட்டேன் என்று சொல்வது எனக்குச் சரியாகப்படவில்லை.

எப்படி நக்சல்பாரிகள் தோன்றுகிறார்கள் என்றால், நேற்று முதலமைச்சரவர்கள்கூடக் குறிப்பிட்டார்கள், அவர்களுடைய உள்ள உணர்வை நான் பாராட்டுகிறேன். சமுதாயத்தில் முன்னேற வேண்டுமென்ற எண்ணத்திலேயிருப்பவர்களை எப்படிச் சந்திக்க வேண்டுமென்பதைச் சிந்திப்பது பொருத்தமாகயிருக்கும். வட்டிக் கடைக்காரர்கள் கொலை செய்யப்படுகிறார்கள் என்றால், அப்படி

நக்சல்பாரிகள் செய்கிறார்கள் என்றால் அதைத் தவிர்க்கக்கூடியது போலீஸ் மட்டும் அல்ல, அதற்குப்பதிலாக வட்டிக்கு வட்டி கொடுத்து பலர் வட்டி கட்டும் சூழ்நிலையில் விவசாயிகளுக்கு மீட்புக் கொடுக்கின்ற அளவில் கடன் மீட்புச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று சுட்டிக்காட்டுவதற்காகவே நான் இதைச் சொல்கிறேன்.

தொழிலாளர்கள் நடத்தும் போராட்டங்கள் போலீஸ் தலையிடுகிறது என்றால், சங்கங்கள், அதில் எந்தக் கட்சிக்காரர்களாயிருந்தாலும் சரி. . .

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** மாண்புமிகு உறுப்பினரவர்கள், இதுவரையிலே அரசு எந்தத் தொழிலாளர் யூனியனின் வேலைநிறுத்தத்தை அடக்கியிருக்கிறது, போலீஸ் உதவியைக்கொண்டு எந்தெந்த வேலைநிறுத்தங்களை அடக்கி ஒடுக்கியிருக்கிறது என்ற விவரத்தை எடுத்துக் கூற முடியுமா?

**திரு. க. சுப்பு :** எடுத்துக் காட்டாக நெய்வேலி போராட்டத்தைப்பற்றிக் கூறினால் மட்டும் போதும் என்று கருதுகிறேன். நெய்வேலியில் தொழிலாளர்கள்மீது அடிதடி நடந்திருக்கிறது, ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சார்ந்தவர் மட்டுமல்ல, எல்லாக்கட்சிகளையும் சேர்ந்த தொழிலாளர்கள் இருப்பார்கள் என்பதை ஒப்புக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைச்சேர்ந்த தொழிலாளர்களும் உண்டு, அவர்களும் அந்த அடிதடிக்கு ஆளானார்கள். ஆகவே கட்சி வேறுபாடு இல்லை. காவல்துறையினர் செல்லுகின்ற நேரத்தில் முதலாளிகளின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும், யாருடைய உயிராயிருந்தாலும், யாருடைய உடைமையாயிருந்தாலும் பாதுகாப்பு கொடுக்கப்படத்தான் வேண்டும். தொழிலாளர்கள், முதலாளிகள் ஆகியவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கவேண்டும். நாட்கணக்கில், மாதக்கணக்கில், ஆண்டுக்கணக்கில் நடைபெறும் இடத்தில் அவர்களிடத்திலே காந்திய உணர்வுகளுடனே அந்தக் கோணத்திலே சென்றால் அதில் தடையில்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நெய்வேலி சம்பவத்தைப் பற்றிச் சொன்னார்கள். நெய்வேலியிலே இருக்கும் தொழிலாளர் யூனியன் பெரும்பாலும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கும் யூனியன். இங்கே பேசும்பொழுது மாண்புமிகு உறுப்பினர் திரு. குமாரசாமி அவர்கள், திராவிட முன்னேற்றக் கழக யூனியனாகயிருந்தால் போலீசார் ஒருமாதிரியாகவும், வேறு கட்சியைச் சேர்ந்த யூனியனாகயிருந்தால், இன்னொரு மாதிரியாகவும் நடத்துவதாக குற்றம் சாட்டினார்கள். ஆனால் திரு. சுப்பு அவர்கள் அந்தக் கருத்தை ஒத்துக்கொள்ளாமல், எந்த யூனியனாகயிருந்தாலும் சம்பவங்கள் எப்படி நடைபெறுகின்றன என்பதைப் பார்த்து நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகக் குறிப்பிட்டதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.





ஆகவே, பாரபட்சம் இல்லாமல், வன்முறையிலே எந்த யூனியன் ஈடுபட்டாலும் சரி, எந்தத் தொழிலாளர்களாகயிருந்தாலும் சரி, போலீசார் கண்காணிப்பாக இருக்க வேண்டியிருக்கிறது. அசம்பாவிதங்கள் நடைபெறும் நேரத்தில் கண்ணீர்ப்புகை, துப்பாக்கிப் பிரயோகம் என்ற நிலைக்குப் போலீசார் போகவேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட நேரங்களிலும் அந்தச் சம்பவங்களுக்காக வருந்துகின்ற அரசு இன்றையதினம் இருக்கிறது. இழப்பு ஏற்பட்டவர்களின் குடும்பங்களுக்கு ஆறுதலும், உதவியும் புரிகின்ற அரசாக இந்த அரசு இருக்கிறது என்பதை திரு. சுப்பு அவர்கள் மறந்துவிட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** நெய்வேலி சம்பவத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். என்னயிருந்தாலும் அந்தச் சம்பவத்திற்கு அதிகப்படியாக போலீசார் உபயோகப்படுத்தப்பட்டார்கள் என்பதை ஒத்துக் கொண்டாலுங்கூட. அதற்காக ஒரு விசேஷ அதிகாரி நியமிக்கப்பட்டிருந்தார், அந்த அதிகாரிகூட அரசாங்க அதிகாரியாகப் போய்விட்டாரே என்பதுதான் எங்கள் குறை. ஜட்ஜ் மாதிரியிருப்பவர் நியமிக்கப்பட்டிருந்தால் தொழிலாளர்கள் மீது நடத்தப்பட்ட அடக்குமுறை, போலீசாரின் அத்துமீறிய செய்கை பற்றியெல்லாம் நன்றாக விசாரிக்கலாம். அங்கே மாதா கோவிலைச் சேர்ந்த பாதிரியார் ஒருவர் தாக்கப்பட்டிருக்கிறார் என்பதும் உண்மைதானே? ஆகவே, இம்மாதிரியாக தொழிலாளர்கள் தகராறுகள் ஏற்படுகின்ற காலத்தில் போலீஸ் துறையினர் அத்துமீறிப்போகிறார்கள் என்பது உண்மைதானே?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நெய்வேலியில் பாதிரியார் தாக்கப்பட்டார் என்ற புதிய செய்தியைச் சொன்னார்கள். அப்படி நடைபெறவில்லை. அதிகாரியைப் போட்டதாகச் சொன்னார்கள். நெய்வேலியில் உள்ள தொழிலாளர்கள் என்னை வந்து சந்தித்தார்கள். அப்பொழுது நான் உடல்நிலை பாதிக்கப்பட்டு வீட்டில் இருந்தேன். அவர்களுடன் கிட்டத்தட்ட 3 மணி நேரம் உரையாடினேன். இப்பொழுது போக்குவரத்துத்துறை அமைச்சராகயிருக்கின்ற நண்பர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் தொழிலாளர் அணிக்குத் தலைமை வகித்து வந்திருந்தார்கள். அவர்களோடு 3 மணி நேரம் உரையாடினேன். அவர்கள் கேட்டுக் கொண்டதற்கேற்பத் தான் அதிகாரி அனுப்பப்பட்டார். அவர்கள் நிலைமையை விசாரித்து சில இடங்களில் போலீசார் அத்துமீறியிருப்பதாக எடுத்துச் சொன்னார்கள். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, எங்கே அசம்பாவிதங்கள் நடந்தாலும் மனிதாபிமான உணர்ச்சியுடன் இந்த அரசு அணுகுகிறது என்பதை எடுத்துக்கூற விரும்புகிறேன்.

**திரு. க. சுப்பு :** தொழிலாளர்கள் பிரச்னையில் மனிதாபிமானத்துடனும், பொறுப்புணர்ச்சியோடும் அணுகுகிறது என்பதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் நாம் இயற்றும் சட்டங்கள் தொழி

லாளர்களுக்குப் பாதுகாப்பான சட்டங்கள், நாம் முற்போக்கான சட்டங்களை இயற்றுகிறோம் என்ற அந்த எண்ணை வளர்ச்சியிருக்க வேண்டுமென்பதைத்தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** உள்ளபடியே ஒரு விஷயத்திற்காக நான் வருந்துகிறேன். வட்டிக் கடைக்கான சட்டம் வரும் வரையில் வட்டிக்கடைக்காரர்கள் வெட்டப்படுவார்கள் என்ற முறையில் பேசுவது இந்த மன்றத்திற்கு அழகு அல்ல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கின்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் அதை ஏற்றுக்கொள்ளாது என்று கருதுகிறேன்.

**திரு. க. சுப்பு :** வட்டிக்கடைக்காரர்களை வெட்ட வேண்டும் என்ற கருத்தை நான் சொல்லவில்லை. வெட்டப்படுகிறார்கள் என்றால் அதைக் கொலைக்குற்றம் என்று ஏற்றுக்கொண்டு அதைத் தடுக்க தூக்கிலே போடுவதனால் மட்டும் அதைத் தடுக்க முடியாது. அதற்காகத்தான் இந்தச் சட்டத்தை இயற்ற வேண்டுமென்று சொல்கிறேனே தவிர, அதற்காகக் கொலை செய்ய வேண்டுமென்ற அந்தக் கருத்திலே நான் சொல்லவில்லை. ஆகவே சமுதாயத்தில் குற்றங்கள் நிகழும்போது . . . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்த நல்ல விளக்கத்தைத் தந்ததற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வேகமாகப் பேசி முடியுங்கள்.

**திரு. க. சுப்பு :** குறுக்கீடுகள் அதிகமாக இருந்தன. சிறிது நேரம் கொடுங்கள். தொழிலாளர்களின் முற்போக்கான வாழ்வையும், அவர்களுடைய நல்ல வாழ்வையும் கருத்திற்கொண்டு சட்டத்தை அமல் நடத்த வேண்டுமென்பதில் காவல்துறையினருக்குப் பயிற்சியளிக்க வேண்டும். ஏற்கெனவே இருக்கும் காவல்துறை, முன்னேயிருந்த காவல்துறை, பிரிட்டிஷார் காலத்தில் இருந்த அமைப்பே இன்றைக்கும் இருக்கிறது. சமதர்ம சமுதாயத்தைக் கருத்திற்கொண்டு இந்தக் காவல்துறை அமைக்கப்படவில்லை. இந்தி எதிர்ப்புக் காலத்தில் இருந்த காவல்துறைதான் இன்றைக்கும் இருக்கிறது, விலைவாசிப் போராட்டத்தின்போது இருந்த காவல்துறைதான் இன்றைக்கும் இருக்கிறது. இந்த காவல்துறையில் மாற்றம் தேவைப்படுகிறது. சமுதாய வளர்ச்சிக்கு ஏற்ற சட்டத்திற்கு ஏற்ற வகையில் மாற்றத்தைக் காவல்துறையில் மேற்கொள்ள வேண்டும். அப்படி மாற்றப்படவில்லை என்பதை எங்களுடைய அனுபவத்தில் பார்த்திருக்கிறோம். இளைஞர்களாக வருபவர்கள் இப்படிப்பட்ட தவறுகளில் ஈடுபடுவதாகத் தெரியவில்லை. மிகச் சிறந்த பணியினை அவர்கள் ஆற்றுகிறார்கள். யாராவது தவறாக நடக்கச் சொன்னால்கூட அவர்கள் வெட்கப்படுகிறார்கள். முற்போக்கான தலைமுறை இன்றைய தினம் உருவாகிக்கொண்டிருக்கிறது. அவர்களுக்கு இந்தக் காவல்துறையில் வாய்ப்புக் கொடுக்கப் [illegible] மற்றவர்கள் [illegible] வைக்கப்பட வேண்டுமென்று



சொல்லவில்லை, உரிய இடத்திலே வைத்துவிடலாம், அதில் தவறு இல்லை, இளைஞர்களுக்கு அந்த எண்ணத்தை ஊட்டுவது நல்லது என்று கருதுகிறேன்.

ஒன்றே ஒன்றை மாத்திரம் கூறி முடித்துவிடலாம் என்று எண்ணுகிறேன். காவல்துறையில் செய்ய வேண்டிய ஒருசில சீர்திருத்தங்களைப்பற்றி ஓரிரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இன்றைக்குக் காவல்துறையில் இருக்கும் பணி மிகவும் அதிகமாக இருக்கிறது. எந்தவிதமான குற்றம் என்றாலும், நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டுமென்றாலும் அவர்கள் போக வேண்டுமென்ற அளவிற்குப் பளு சுமத்தப்படுகிறது. ஆகவே இந்தக் காவல்துறையில் உள்ள பளுவைக் குறைக்க டைம் டேட்டி போட்டு, டர்ன் சிஸ்டம் வைத்து சப்-இன்ஸ்பெக்டர்கள் 8 மணி நேரம் வேலை பார்க்க வேண்டுமென்று வைக்கலாம். 24 மணி நேரமும் ஒரு மனிதன் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும், 24 மணி நேரத்தில் எந்த நேரத்திலே அழைத்தாலும் வரவேண்டுமென்ற நிலையில்லாமல், டர்ன் டியூட்டி வைத்து 8 மணி நேரம் என்று இருந்தால் அவர்கள் திறமையாகப் பணியாற்றுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அவர்கள் தங்களுடைய குறைகளைச் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கவேண்டும். அகில இந்திய அடிப்படையில் ஐ.பி.எஸ். அதிகாரிகளுக்குச் சங்கம் இருக்கிறது, தமிழகத்தில் கிளை இருக்கிறது. ஆனால் கீழ் மட்டத்தில் வேலை பார்ப்பவர்களுக்கு எந்த விதமான கிளையும் இல்லை. அவர்கள் தங்களுடைய குறைகளை யாரிடத்திலே எடுத்துக்கூற முடியும்? குற்றம் செய்துவிட்டு வந்தவர்களிடம்தான் கூற வேண்டும், அது அடி என்ற முறையிலே வருகிறது. ஆகவே, அவர்கள் குறைகளைச் சொல்லுகின்ற முறையில் சப்-இன்ஸ்பெக்டர்களுக்காவது சங்கம் வைத்துக்கொள்ள உரிமை வேண்டும். மேலதிகாரிகளாக இருப்பவர்கள் அதில் அதிக அக்கறை காட்டி புரிந்து கொள்ள அவகாசம் இருப்பதில்லை. காரணம் அவர்கள் எசமானர்கள், இவர்கள் ஊழியர்கள் என்ற முறையில் சாதாரணமாக மேலதிகாரிகள் என்ற முறையில் சற்று எட்டி நின்றுதான் பேச வேண்டியிருக்கிறது. தங்கள் குறைகளை அவர்களிடம் சொல்லுவதற்கு முடிவதில்லை. ஆகவே, சப்-இன்ஸ்பெக்டர்கள் அளவிலாவது சங்கத்தை வைத்துக்கொள்ளக்கூடிய நிலைமையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டி.ஏ.வை. ரிவைஸ் செய்யவேண்டும். 1962-லே சீலிங் இம்போசிஷன் போட்டிருக்கிறது. 1962-லே எமர்ஜென்ஸி காலத்தில் போட்டிருக்கிறது. இன்றும் அந்த அளவிற்கே கிடைக்கிறது. காவல்துறையில் 16 மணிநேரம் வெளியில் சென்றால் 3 ரூபாய் ஒரு நாளைக்கு என்றும், 12½ மணி நேரம் சென்றால்கூட 1½ ரூபாய்தான் அரை நாள் என்று கணக்குப் போட்டு கொடுக்கிறார்கள். 12 மணி நேரம் வெளியில் இருக்க வேண்டுமென்று சொன்னால் எப்படி முடியும், காலையில் 9 மணிக்குக் கிளம்பினால் மாலை 5 மணி வரை இருந்தால் டி.ஏ.வை எங்கு போய்க் கேட்க முடியும்? ஆகவே,

இப்படிப்பட்ட சில காரியங்களில் மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, சில சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த விசாரணைக் குழுவின் அறிக்கை பயன்படுகின்ற முறையில் அதன்மீது விவாதம் நடத்துகின்ற வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த அளவிற்கு வாய்ப்பு கொடுத்தமைக்காக நன்றி தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. என். இராஜாங்கம் :** சட்டப் பேரவைத் தலைவரவர்களே, இந்த மானியத்தின் மீது ஒரு சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். போலீஸ் இலாக்காவைப் பற்றி இது வரையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு தரமாகப் பேசினார்கள். இரண்டு தரத்திற்கும் பொதுவானதுதான். 1967-ல் நமது பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது ஒரு கேள்வி இங்கே கேட்கப்பட்டது. இந்த நாட்டிலிருக்கின்ற போலீஸ்காரர்கள் மக்களின் உடைமைக்கும், உடலுக்கும் பாதுகாப்பாக இருக்கவில்லை, ஆனால் வெளிநாடுகளிலே உடலுக்கும் உடைமைக்கும் பாதுகாப்பாக இருக்கிறார்களே அது ஏன் என்று கேட்கப்பட்டது. அதற்கு அண்ணா அவர்கள் பதில் சொல்லும் பொழுது மக்களுடைய பண்பும், அவர்களுடைய செயலும் எந்த அளவிற்கு வளர்கிறதோ அந்த அளவில்தான் போலீசாரின் பண்பும் வளரும், அங்கேயிருக்கும் மக்கள் நூற்றுக்கு நூறு பண்புடையவர்களாகவும், பிறருடைய சொத்துக்களை அழிக்காமல், உடைமைக்கும் உயிருக்கும் பாதுகாப்பாக இருக்கிறார்கள், ஆனால் நம்முடைய நாட்டில் அந்தப் பண்பாடு இல்லை என்பதால்தான் இங்கே நிலைமை இப்படி இருக்கிறது என்ற கருத்தைச் சொன்னார்கள். ஆகவே, மக்களிடையே வளர்பவர்கள்தான் போலீஸ்காரர்களே தவிர அவர்கள் வேறு எங்கேயிருந்தும் வந்தவர்கள் அல்ல. நமக்கு உறவினர்களாக இருக்கலாம். நம்மோடு பிறந்தவர்களாக இருக்கலாம். எல்லா இனத்தவர்களாகவும் இருக்கலாம். அவர்கள் நம்மவர்கள். நம்முடைய பண்பாடுதான் அவர்களுக்கு இருக்கும் என்று பதில் அளித்தார்கள். மொத்தத்தில் பார்க்கும்போது மக்களுடைய பண்பாடு எந்த அளவுக்கு நல்ல முறையில் வளருகிறதோ அந்த அளவுக்குப் போலீஸ்காரர்களின் பண்பாடும் வளரும் என்று சொல்லி இந்தப் பிரச்சினையை இதோடு நிறுத்திக் கொள்கிறேன்.

நெய்வேலியில் போலீசார் அத்துமீறி நடந்து கொண்டார்கள் என்று குறிப்பிட்டார்கள். நானே விசாரணைக் குழுவில் இருந்தேன். போலீஸ்காரர்கள் எப்போது குறுக்கிட்டார்கள் என்பதை மனசாட்சியோடு பார்க்கவேண்டும். கலெக்டரைக் கல்லால் அடித்தார்கள். போலீசார் அப்போதும் பொறுத்துக் கொண்டார்கள். அந்த நிலையும் மாறி நெய்வேலிப் பகுதியையே அழிப்பதற்கான முயற்சியை மேற்கொண்டார்கள். யார் அந்தக் காரியத்தை மேற்கொண்டார்கள் என்று நான் இப்போது





குறிப்பிட விரும்பவில்லை. அந்த நிலையில் லட்சக்கணக்கான மக்களுடைய வாழ்விற்குரிய பொருள்கள் அழிக்கப்பட்டு விடக் கூடாதே என்ற காரணத்தால் போலீசார் நடவடிக்கை எடுத்தார்கள். அப்படி நடவடிக்கை எடுத்தபோது அத்துமீறி ஏதாவது நடந்திருக்கலாம். நாங்கள் ஒத்துக் கொள்கிறோம். போலீஸ்காரர்கள் முதலிலே எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதிலே இறந்தவர் கூட திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்தான். மாற்றுக் கட்சியினர் அல்ல. ஆகவே, இதிலே தவறான கணக்குப் போட வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

போலீஸ்காரர்களுக்குச் செய்துகொடுக்க வேண்டிய வசதிகளைப் பற்றியெல்லாம் இந்தக் குறிப்பிலேயே சொல்லியிருக்கிறார்கள். அதையெல்லாம் செய்வதற்குரிய ஆற்றல் பெற்ற முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். குறிப்பாக ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். சர்க்கிள் இன்ஸ்பெக்டர்கள், சப் இன்ஸ்பெக்டர்கள், டெபுடி இன்ஸ்பெக்டர்கள் ஆகியவர்களுக்கு அரசாங்க வீடுகள் கொடுப்பது நல்லது. தனிப்பட்ட வீடுகளில் இருப்பதால் அவர்கள் நியாயமாக நடந்து கொண்டாலும் கூட அவர்கள் சொல்லி இவர்கள் இப்படிச் செய்கிறார்களோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. அந்தச் சந்தேகம் ஏற்படாதவாறு இவர்களுக்கு அரசாங்க வீடுகளில் குடியிருக்க வசதி செய்துகொடுக்க வேண்டும்.

என்னுடைய பகுதியில் வடலூர், நெய்வேலி, விருத்தாசலம் சிராமிக் சென்டர் ஆகிய இடங்களிலுள்ள தொழிற்சாலைகளில் 20,000-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் இருக்கிறார்கள். வடலூர் பகுதியில் நான்கு டவுன் பஞ்சாயத்துக்களில் இரண்டு பெரிய தொழிற்சாலைகள் இருக்கின்றன. ஜனத்தொகை அதிகமாகிவிட்ட காரணத்தால் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் கூடப் போட்டிருக்கிறார்கள். ஆனால் அங்கு ஆபீசுக்கு டெலிபோன் வசதி கிடையாது. தொழிலாளர்களிடையே சச்சரவு வந்தால் உடனடியாக போலீசுக்குத் தெரிவிக்க நடந்து சென்றுதான் தெரிவிக்க வேண்டுமே தவிர தொலைபேசி கிடையாது. அங்கு ஒரு தொலைபேசி வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

குள்ளஞ்சாவடி என்ற ஊர் இருக்கிறது. அதிலே ஒரு போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது. 15 மைல் தூரத்தில் கடலூரும், 12 மைல் தூரத்தில் வடலூரும் இருக்கின்றன. பக்கத்தில் எந்தவித வசதியும் கிடையாது. கடலோரப் பகுதி அது. அந்தப் பகுதியைப் பார்த்தால் தீவு மாதிரி இருக்கிறது. அங்கிருக்கும் போலீஸ் ஸ்டேஷனில் இருக்கும் சப் இன்ஸ்பெக்டர் வெகு தூரத்திற்கு அப்பால் குடியிருக்கிறார். வசதியான வீடு கிட்டே கிடையாது. சப் இன்ஸ்பெக்டர் எங்கே என்று கேட்டால் வீட்டில் இருக்கிறார் என்பார்கள். இந்த நிலையை மாற்றி போலீஸ் சப் இன்ஸ்பெக்டருக்கும், போலீஸ்காரர்களுக்கும் அரசாங்கம் வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. என். இராஜாங்கம்] [1971 ஜூலை 17

போலீஸ் இலாகா பிரிட்டிஷ்காரன் காலத்தில் இருந்தது மாதிரி தான் இருக்கிறது என்று சொன்னார்கள். இப்போது சட்டங்கள் எந்த அளவுக்குத் தளர்த்தப்பட்டிருக்கின்றன என்பதை மனதார எண்ணிப்பார்க்க வேண்டும். சட்டம் எப்படி இருந்தாலும் நாட்டின் நிலைமையைப் பொறுத்து போலீசார் எப்படி எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதை மனதார எண்ணிப் பார்க்க வேண்டும். நாட்டு மக்கள் எப்படி இருக்கிறார்கள், அரசாங்கப் பண்பாடு எப்படி இருக்கிறது, அரசியல் போக்கு எப்படி இருக்கிறது, ஆட்சி முறை எப்படி இருக்கிறது என்பதையெல்லாம் உணர்ந்து அதற்குத் தகுந்தவாறு போலீசார் தங்களுடைய நிலையை மாற்றிக் கொண்டு வருகிறார்கள் என்பதை ஒத்துக் கொள்ள வேண்டும். இருக்கின்ற சட்டங்களை அப்படியே எறிந்து விடவும் முடியாது, அப்படியே பின்பற்றவும் முடியாது. இருக்கின்ற சட்டங்களை அப்படியே பின்பற்றியிருந்தால் இன்று நிலைமை வேறுவிதமாக இருந்திருக்கும். அந்தக் காலத்தில் நடந்ததுபோல் இப்போது நடக்கவில்லை. அந்தக் காலத்தைப்போல் செய்திருந்தால் நாம் இப்போது இங்கிருந்து பேசிக்கொண்டிருக்க முடியாது.

அரசாங்கத்தின் எண்ணத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு அதிகாரிகள் நடந்து கொள்ளுகிறார்கள். போலீஸ் இலாகா இன்று எல்லா வகையிலும் திறம்பட வேலை செய்து வருகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. சிறு சிறு குறைகள் இருக்கலாம். எல்லாவற்றையும் திடீரென்று மாற்றிவிட முடியாது என்ற உண்மையை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். மக்கள் எண்ணத்திற்குத் தகுந்தவாறு போலீஸ் இலாகாவில் இருப்பவர்கள் தங்களுடைய போக்கை மாற்றி வருகிறார்கள் என்பதை மறந்து விடுவதற்கில்லை என்று கூறி என்னுடைய தொகுதியிலுள்ள சங்கடங்களை முதலமைச்சர் அவர்கள் தீர்த்து வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. என். கணபதி:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, போலீஸ் மானியத்திற்கு என்னுடைய ஆதரவைத் தெரிவித்து ஓரிரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். சாதாரணமாக, தொன்றுதொட்டு என்று சொல்லக்கூடிய அளவில் பரம்பரை பரம்பரையாக போலீசாரைப் பார்த்து பயந்து கொண்டிருந்த நிலைமை இன்றைய தினம் மாறி, அவர்கள் நம்முடைய நண்பர்கள், அவர்கள் நம்முடைய தோழர்கள், அவர்கள் நமக்குத் தொண்டாற்றுவதற்காகத்தான் இருக்கிறார்கள். அவர்கள் தான் நம்முடைய உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பாக இருக்கிறார்கள் என்ற எண்ணம் ஓரளவுக்கு நம்முடைய முன்னேற்றக் கழக ஆட்சியில் பொதுமக்கள் மத்தியில் பரவி இருக்கிறது. அதற்காக, இந்த துறையில் பொறுப்பேற்று பணியாற்றிக் கொண்டிருக்கின்ற நம்முடைய போலீஸ் அமைச்சர் மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டினை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.



1971 ஜூலை 17] [திரு. என். கணபதி]

பயந்து கொண்டு அணுகும் பொருளாக இருந்த ஒன்றை இப்போது ஒரு தோழமை உணர்ச்சியோடு அணுகக்கூடிய அளவுக்கு பொதுமக்கள் மத்தியில் உணர்ச்சி பரவி இருக்கும் நேரத்தில் நம்முடைய போலீஸ் இலாகா எந்த அளவுக்கு நல்ல முறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறது என்பதற்காக அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அந்தக் காலத்தில் அதிகார வர்க்கத்தினருக்கு ஆதரவாக இருந்திருக்கலாம், அதிகார வர்க்கத்தினர் போட்ட கட்டளைக்குப் கட்டுப்பட்டு பல்வேறு நிலைமைக்கு ஆளாகி அவர்கள் காரியங்களைச் செய்திருக்கலாம்.

இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் ஜனநாயக உணர்ச்சியோடு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு ஜனநாயக உணர்ச்சியுடன் ஒவ்வொரு பிரச்சினையிலும் நடந்து கொள்ளுகிறார்கள் என்பது பற்றி நாங்கள் அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை.

போலீஸ் இலாகாவைப் பற்றி ஆராய அமைத்த குழு நம்முடைய போலீஸ் இலாகாவைப்பற்றிக் கொடுத்திருக்கும் பாராட்டை பார்க்கின்ற நேரத்தில் வசிஷ்டர் வாயால் பிரும்ம ரிஷி என்ற பட்டத்தைப் பெற்றது போல் இருக்கிறது.

இந்தத் துறையில் நீண்ட நெடுங்காலமாக அனுபவம் பெற்ற திரு. கோவிந்த் சாமிநாதன், தலைமைச் செயலாளராக இருந்து ஓய்வு பெற்ற திரு. ஆர். ஏ. கோபாலசாமி ஆகியவர்கள் சொல்லுகிறார்கள்.

"The Police force of Tamil Nadu still remains an organisation of which the citizens may justly be proud". என்று சொல்லியிருப்பதைப் பார்க்கும்போது நியாயமாக பெருமைபடக் கூடிய அளவில் போலீஸ் இலாகா பணியாற்றிக்கொண்டு வருகிறது என்பதை அனுபவமிக்கவர்கள் சொல்லிவிட்டார்கள். எனவே, நாம் அதிகமாக அவர்களைப் பாராட்ட வேண்டிய அவசியம் இல்லை. இருந்தாலும் ஒன்றிரண்டு சொல்லி நம்முடைய கடமையை நிறைவேற்றிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நடந்து முடிந்த தேர்தல்களைப் பற்றி நீங்கள் எல்லோரும் நன்றாக அறிவீர்கள். சாதாரணமாக பிரஷர் அண்டு ஸ்ட்ரெயின் என்று சொல்லும் அளவில் அப்படிப்பட்ட நெருக்கடியான சூழ்நிலைகள் தேர்தல் நேரங்களில்தான் எழும்.

அரசியல் மாச்சரியங்களாலும், காழ்ப்புணர்ச்சிகளாலும் இல்லாத ஒன்றை கற்பனை செய்து கொண்டு ஏதேதோ நெருக்கடிகளை உண்டாக்கும்போது அந்த சந்தர்ப்பத்தில் போலீஸ் இலாகா நிதானம் தவறாமல், சிறிய தவறுகள் நடந்திருந்தாலும், மொத்தத்தில் நிதானம் தவறாமல் நடுநிலை நின்று அந்தத் தேர்தலை நடத்திக் கொடுத்ததற்காக தான் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மற்ற மாநிலங்களைப் பார்க்கும்போது அன்றாடம் பத்திரிகைகளைப் பிரித்துப் பார்க்கும்போது அந்த மாநிலங்களில் நாம் உயிரோடு இருக்க முடியுமா, இரவில் தூங்கி விட்டு காலையில் எழுந்திருக்கும்போது நம் மனைவியைப் பார்க்க

முடியுமா, நம் குழந்தை குட்டிகளைப் பார்க்க முடியுமா, நாம் வெளியே செல்ல முடியுமா என்று நினைக்கக் கூடிய வகையில் அவ்விடங்களின் நிலைமைகள் இருக்கின்றன. ஆனால் தமிழ்நாடு அமைதியின் இருப்பிடமாக, நிதானத்தின் உறைவிடமாக இருக்கக் கூடிய அளவிற்கு காவல் துறையினர் பணியாற்றி வருவது உள்ளபடியே பாராட்டக்குரியதொன்றாகும்.

பிரிட்டனில் ஸ்காட்லாந்த் யார்ட் என்று இருக்கிறது, அமெரிக்காவில் எஃப். பி. ஐ. என்றிருப்பதைக் கேள்விப்படுகிறோம். இவை மிகச் சிறந்த துப்பறியும் இலாகாக்கள் என கேள்விப்பட்டிருக்கிறோம். அதற்கு அடுத்த வரிசையில் எண்ணக் கூடிய அளவிற்கு நம் தமிழ்நாடு போலீஸ் இலாகா இருப்பது கண்டு நாம் பெருமைப்பட்டுக்கொள்ளலாம்.

குறிப்பாக, ஒன்றிரண்டு சம்பங்களைச் சொல்ல வேண்டுமென்றால் பெண்ணாடத்தில் ஏற்பட்ட வெடி விபத்து காரணமாக நக்சலைட் என்ற வெடி தமிழ்நாட்டில் வெடித்த நேரத்தில் அதற்கு மூல காரணமாக இருந்த கலியபெருமாள் என்பவனை தேடிக்கண்டு பிடித்ததற்காக காவல் துறையினரை பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம்.

நவீன கார் திருட்டுகள் தமிழ்நாடு முழுவதும் நடைபெற்ற போது, இருக்கிற கார் ட்ரைவருக்குக் கூட மயக்க மருந்து கொடுத்து எங்கேயோ ஒரு காட்டில் இறக்கிவிட்டு விட்டு, இறக்கி விட்ட கார் டிரைவர்மீது காரை ஓட்டி அடையாளம் தெரியாத அளவிற்கு உருக்குலைத்து கொலை செய்துவிட்டுச் சென்ற அந்தக் கார் திருட்டுக் கும்பலைக் கண்டு பிடித்ததற்காக காவல் துறையினரைப் பாராட்ட நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

நம் நாட்டுச் செலாவணியை மட்டும் கள்ள நோட்டாக அடித்தால் போதாது என்று அமெரிக்க டாலர்களையும் அடித்து தொழில் வளர்ச்சி உணர்ச்சி காரணமாக கள்ள டாலர் நோட்டுகளை அச்சடிக்க முயன்றதைக் கண்டு பிடித்ததற்காக காவல் துறையினரைப் பாராட்ட நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதேபோல்தான் இரட்டிப்பு வழக்குகள். நம் நாட்டில் இரட்டிப்பு மோசடி வழக்குகள் பற்பல நடந்து கொண்டிருக்கிறன. நடைபெற்ற சில நாட்களுக்குள் அவற்றை திறமையோடு கண்டு பிடித்துவிடுகிறார்கள் காவல் துறையினர். அதற்காக அவர்களுக்கு பராட்டுதல்கள் தெரிவிக்கிற நேரத்தில் இந்தக் குற்றங்கள் குறைவதற்கான வழிகள் என்ன என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இரட்டிப்பு வழக்குகள் எல்லாம் சாதாரணமாக சீட்டிங்க் என்று சொல்லி செக்ஷன் 420-ன் கீழ் போடப்படுகின்றன. ஒரு லட்சம் ரூபாய் அளவிற்கு அந்தக் குற்றத்தைச் செய்தாலும் சரி அல்லது ஆயிரக்கணக்கான ரூபாய் அளவில் அந்தக் குற்றத்தைச் செய்தாலும் சரி நான்-பேலபிள் அப்பன்ஸ் அல்லாத நிலையில், நீதிமன்றத்தில் கொண்டு போய் நிறுத்துகிறார்கள். உடனே அவர்களை ஜாமீனில் விட்டு விடுகிறார்கள்,



ஏறக்குறைய நூறு ஆண்டுகளுக்கு முன்னதாக லார்ட் மெக்காலே ஏற்படுத்திய பீனல் கோட் சட்டத்தில் அவர்கள் இப்படிப்பட்டதொரு நிலைமையைச் சிந்தித்துப் பார்த்திருக்க முடியாது. ஏனென்றால் அப்படிப்பட்ட வழக்குகளை அவர் சிந்தித்துப் பார்ப்பதற்கானதொரு சூழ்நிலை அப்போது இல்லை. 420 செக்ஷன் பேலபிள் செக்ஷனாக இருக்கிற ஒரே காரணத்தைப் பயன்படுத்திக் கொண்டு இரட்டிப்பு வழக்குகள் மேலும் மேலும் பெருகிக் கொண்டு வருகிறது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளவேண்டியிருக்கிறது. அந்த செக்ஷனுக்கு ஒரு திருத்தம், ஒரு சில குற்றங்களையாவது ஜாமீனில் விடக்கூடாது என்ற திருத்தத்தைக் கொண்டு வந்தால் அப்படிப்பட்ட வழக்குகள் மேலும்மேலும் ஏற்படாதிருக்க வழிவகை ஏற்படும்.

அடுத்து, நீதிமன்றத்தில் ப்ராக்ஸிக்யூஷன் நடத்துவதற்காக அஸிஸ்டெண்ட் பப்ளிக் ப்ராஸிக்யூட்டர் கிரேட் 2 என்று வைத்திருக்கிறார்கள் சப் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகளில். ஆனால் வாரத்திற்கு ஒருமுறைதான் அவர்களால் கோர்ட்டுக்குச் செல்ல முடிகிறது. காரணம் நாலைந்து கோர்ட்டுகளைப் பார்க்கவேண்டிய நிலைமை அவர்களுக்கு இருக்கிறது. அந்த நேரங்களில் நல்ல தகுதியான, திறமையான காவலரைக் கொண்டு ப்ராக்ஸிக்யூஷன் பார்த்திடும் நிலைமை ஏற்படுகிறது. அதை எதிர்பார்த்துத்தான் தமிழக அரசு முதல் நிலை காவலர் என்ற பதவியை ஏற்படுத்தியிருக்கிறது. அவர்களுக்கு ப்ராஸிக்யூஷன் நடத்தும் பயிற்சியைக் கொடுத்து நீதிமன்றங்களில் ப்ராக்ஸிக்யூஷனை சரிவரச் செய்து குற்றவாளிகளுக்கு சரிவரத் தண்டனை வாங்கிக் கொடுக்கிற நிலையில் தமிழக அரசு வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

காவலர்களின் குறைகளைப் பற்றிச் சொல்லும்போது அந்தக் குறைகளின் அடிப்படைக் காரணங்களை அலசிப் பார்க்கும்போது நம் உள்ளங்களில் இருக்கிற கருத்து வேறுபாடுதான் அந்தக் குறைகளைக் கூற காரணமாகிறது. நாம் ஒரு கட்சியைச் சார்ந்திருக்கிறோம், ஒரு கொள்கையினைக் கொண்டிருக்கிறோம். நமக்கு ஒருவிதக் கருத்து இருக்கிறது. அதற்கு மாறாக நடவடிக்கைகள் எடுக்கப்படும்போது சொந்த மோட்டிவேஷன் என்று சொல்லக் கூடிய அளவிற்கு ஏதாவது கற்பனைக் காரணங்களைச் சொல்லி அதிகாரிகள் மீது புகார் சொல்லிவிடுகிறோம். அல்லது வேறுபல காரணங்களைச் சொல்லக்கூடிய அளவிற்கு நிலைமை அமைந்து விடுகிறது. அந்த அளவில் நம் காவலர்கள் நடுநிலைமை தவறாமல் பணியாற்றி வருகிறார்கள்.

அப்படிப்பட்ட காவலர்களுக்கு மோட்டார் சைக்கிள் வசதி செய்து கொடுக்க அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. அதற்காக அரசைப் பாராட்ட வேண்டும். கிராமப்புறங்களில் பலயிடங்களுக்கு சென்றுவர காவலர்களுக்கு பலயிடங்களில் சைக்கிள் வசதி செய்து தரப்படுகிறது.

[திரு. என். கணபதி] [1971 ஜூலை 17

இவற்றையெல்லாம் செய்கிற நேரத்தில் நான் ஒன்றைச் சொல்லிக் கொள்வேன். சாதாரணமாக எல்லாப் போலீஸ் நிலையங்களிலும் மக்களுடன் தொடர்பு கொள்ள போன் வசதி கிடையாது. என் பாபநாசம் தொகுதியில் பாபநாசம் ஸ்டேஷனில் மட்டும் போன் வசதி இருக்கிறது. அதைச் சுற்றியுள்ள மூன்று காவல் நிலையங்களிலும் போன் வசதியில்லை. ஆகவே எமர்ஜென்ஸி காலத்தில் பொதுமக்களுடன் தொடர்பு வைத்துக்கொள்ள காவல் நிலையங்களுக்கு போன் வசதி செய்து தரப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தன்னிலை மறந்து நாட்டுக்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் காவலர்களுக்கு சில சலுகைகளை அவசியம் தந்துதான் ஆக வேண்டும். அவர்களின் எதிர்கால சந்ததியினர் நல்ல வாழ்வு வாழ்ந்திட, வாழ்க்கையில் நல்ல முன்னேற்றம் கண்டிட, அவர்களின் எதிர்காலம் ஒளிமயமாகத் திகழ்ந்திட ராணுவத்தினருக்குத்தரப்படுகிற சலுகைகள் போன்று நம் காவலர்களுக்கும் சலுகைகள் தரப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் சர்கிள் இன்ஸ்பெக்டர்களுக்கு ஜீப் வசதி செய்து தரவேண்டும். இவற்றையெல்லாம் நம் போலீஸ் குழு சிபார்சு செய்திருக்கிறது. இருந்தாலும் என் கடமை என்று கருதி இவர்களுக்கு ஜீப் போன்ற வசதிகளைச் செய்து தரவேண்டுமென்று இங்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

போலீஸ் கமிஷன் ரிப்போர்ட் 220-வது பக்கத்தில் கூறப்பட்டிருக்கிறது. அஸிஸ்டன்ட் கமான்டென்ட்ஸ், டெப்டி சூப்பரின்டென்டென்ட் ஆஃப் போலீஸ் இவர்களை நேரிடையாகப் போடக் கூடாது என்று வலியுறுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம், கீழ் மட்டத்தில் பணியாற்றுகிற காவலர்கள் தங்கள் திறமை காரணமாக, நல்லமுறையில் பணியாற்றி நல்ல பெயர் வாங்கியதன் காரணமாக, அவர்கள் பாஷையில் சொல்வதென்றால் ரிவார்ட் வாங்கியதன் காரணமாக அவர்கள் பதவி உயர்வை நியாயமாக எதிர்ப்பார்க்கிறார்கள். அந்த நியாயமான பதவி உயர்வு அவர்களுக்குக் கிடைப்பதற்கு நாம் வழி வகை செய்ய வேண்டும்.

அதேபோல் யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் ரூல்களை மாற்றி இங்கு பணியாற்றுகின்ற காவலர்கள் அகில இந்திய மட்டத்தில் போட்டியிட்டு ஐ.பி.எஸ். பதவி உயர்வு பெற வழிவகை செய்து தரவேண்டும்.

அடுத்து, பல்வேறு நிகழ்ச்சிகள் காரணமாக கண்ணீர் புகையில் ஆரம்பித்து அது தடியடியில் சென்று கடைசியில் துப்பாக்கிப் பிரயோகம் வரை செல்லக்கூடிய அளவிற்குப் பல நெருக்கடிகள் ஏற்படுகின்றன. அப்போது நம் அரசு தயக்கம் காட்டாமல் எதிர்க்கட்சிகள் எழுப்புகிற கோரிக்கைகளுக்கு செவிமடுத்து



1971 ஜூலை 17] [திரு. என். கணபதி]

உடனடியாக விசாரணை வைப்பதற்கு முனைந்து விடுகிறார்கள். அப்படி விசாரணை நடத்தி அதில் வருகிற முடிவுகள் கண்டு நம் அரசு திருப்தி அடைந்து விடுகிறது. என்ன விசாரணை நடத்தினாலும் நாம் எதிர்க்கட்சிகளை திருப்திப்படுத்த முடியவில்லை. ஆனால் அதனால் ஏற்படுகிற விளைவுகளைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

துப்பாக்கிப் பிரயோகம் அல்லது தடியடி அல்லது போலீஸ் எக்ஸெஸஸ் என்று சொல்லக் கூடியது நடைபெறுகிற நேரத்தில் நம் அரசு நன்கு ஆழ்ந்து யோசித்து விசாரணைகளுக்கு உத்தரவிட வேண்டும். காரணம், ஒரு கட்டுப்பாட்டோடு பணியாற்றுகிற இந்த இலாகா நிலைமைகள் மாறுகிற காரணத்தினால் மாறி வருகிற சூழ்நிலைக்கேற்ப தங்கள் பணியை அமைத்துக் கொள்கிறார்கள். ஒரு சில வேளைகளில் ஒருசில தவறுகள் நேர்ந்து விடலாம். ஒருசில நேரங்களில் உண்மையாகவே நடந்து கொண்டிருக்கலாம். ஆகவே தவறாக நடந்துகொண்ட நேரங்களில் மட்டும் ஒரு விசாரணையை நடத்தவேண்டும். மற்ற நேரங்களில், அல்லது மற்ற கேஸ்களில் அப்படிச் செய்யக்கூடாது. அப்படிச் செய்தால் அந்தப் பணியாளர்களிடையே டீமாரலைஸேஷன் ஏற்பட்டு விடும். அவர்களுடைய கடமையுணர்ச்சி, அவர்களுடைய கட்டுப்பாட்டு உணர்ச்சியை ஒழிக்கிற அளவில் இத்தகைய விசாரணைகள் சில நேரங்களில் அமைந்து விடக்கூடும். ஆகவே நிலைமைகளை நன்கு ஆராய்ந்து, யோசித்து, சிந்தித்து விசாரணைக்கு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படியாக நான் கேட்டுக்கொள்கிற நேரத்தில் யாரும் என்னைத் தவறாக கருதி விடமாட்டார்கள். ஏனென்றால் கலைஞர் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகு, போலீஸ் அமைச்சராக பேரறிஞர் அண்ணா இருந்த நேரத்தில் இப்படிப்பட்ட விசாரணைக்கு உடனடியாக நாம் தான் உத்தரவு போட்டு இருக்கிறோம். பல்வேறு நிகழ்ச்சிகள், மிருகத்தனமான நிகழ்ச்சிகள், பயங்கரமான நிகழ்ச்சிகள் நடந்த நேரத்தில்கூட, பல கோரிக்கைகள் எழுந்த நேரத்தில்கூட நாம் அந்தக் கோரிக்கைகளைச் சொன்னால் எந்த விதமான செவி சாய்ப்பும் இல்லாமல், எப்படிப்பட்ட விசாரணையும் நடத்த முன்பு இருந்த அரசு முன் வரவில்லை. எனவே நாம் மாத்திரம் அக்கறை காண்பித்து அந்த வசதியைச் செய்து கொடுத்து நம்முடைய போலீஸ் போர்ஸை டீமாரலைஸ் செய்யவேண்டாம் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுறுகின்றன. பேரவை, மீண்டும் திங்கட்கிழமை 1971-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19-ம் தேதி காலை 9 மணிக்குக் கூடும்.

பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

1971 ஜூலை 17]

**6. ஸ்ரீகண்டன் அறிக்கை வெளியிடவேண்டும்.—**

1969-ம் ஆண்டு அமைக்கப்பட்ட பிற்பட்டோர் நலக்குழு தனது அறிக்கையை அரசுக்கு அனுப்பியுள்ளது. பின்னிலை வகுப்பினர் முன்னேற்றத்திற்கான எல்லா அம்சங்களையும் கொண்ட குழுவின் பரிந்துரைகள் அரசின் ஆய்வில் உள்ளன. திரு. ஸ்ரீகண்டன் அறிக்கையை இப்போது வெளியிடுவதால் ஒரு பயனும் இராது. ஆயினும் அவரின் அறிக்கை மீது 3—10—1963 தேதியிட்ட 4761 (பலவகை) எண்ணிட்ட (தொழில், தொழிலாளர், கூட்டுறவுத் துறை) அரசு ஆணை முன்னரே பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**7. இயந்திர சலவைச்சாலையை சென்னை மாநகரில் அமைப்பதை விரைவுபடுத்தவேண்டும்.**

தேவைப்படும் தொகையைக் கையடை செய்தபின்னர், தொழில் வணிகத்துறை இயக்குநர், அலுவலகத்தின் கட்டட அமைப்புப் பிரிவின் ஒரு கட்டடம் கட்டும் பொறுப்பு சென்னை சலவையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர்கள் வாரியத்தைச் சேர்ந்த தாகும்.

**8. சலவைக்குப் பயன்படும் உவர்மண் எடுக்கப்படும் நிலத்தை மாவட்ட சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு அளிக்கவேண்டும்.**

சலவைத் தொழிலாளர்கள் தங்கள் வழிவழிப் பணியை மேற்கொள்ள உதவும் வகையில் முற்றிலும் தேவைப்படும் அளவிற்கு புறம்போக்கு நிலங்களை ஒதுக்கி வைக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

**9. ஈரோட்டிலுள்ள தோணித்துறையை கோயம்புத்தூர் சலவைத் தொழிலாளர் கூட்டுறவுத் சங்கத்திற்காவது ஈரோடு சலவைத் தொழிலாளர் சங்கத்திற்காவது நிலையான குத்தகைக்கு விடவேண்டும்.**

ஈரோட்டிலிருக்கும் தோணித்துறையை சலவைத் தொழிலாளர்கள் சங்கத்திற்கு விட ஈரோடு ஊராட்சி ஒன்றியக்குழு விரும்பவில்லை.

**10. சலவைத் தொழிலாளர்களுக்கு சுகாதார ஈட்டுறுதித் திட்டம்.**

இம் மாநிலத்திலுள்ள சலவைத் தொழிலாளர்களுக்கு தொழிலாளர் ஈட்டுறுதித் திட்டத்தை நீட்டிக்கும் செயற்குறிப்பு எதுமில்லை.



1971 ஜூலை 17]

(a) No sir. However a Memorandum from the (தமிழ் நாடு சலவையாளர் மத்திய சங்கம்) has been received by the Government.

(b) The requests contained in the above Memorandum and the action taken thereon are as follows:—

1. To dispense with the requirement of advance deposit equal to one-third of the loan required, insisted on by the Nationalised Banks, so as to draw loans therefrom :

The Nationalised Banks have devised various schemes of liberalised financial assistance for Scheduled Castes and Tribes. The question of making available these benefits to Backward Classes also, is under the consideration of the Government. The Director of Backward Classes has been asked to discuss this matter with the officials of the Nationalised Banks and formulate proposal.

2. Inclusion of Dhobies in the list of Scheduled Castes :

As the stigma of untouchability is not attached to this community, the request is not acceptable to Government.

3. *Construction of Dhobikanas.*—The Government have already issued orders allocating Rs. 5 lakhs for rendering financial assistance to the municipalities and town panchayats who come forward to construct Dhobikhanas. Certain proposals have already been received and they are under examination.

4. *Police protection to dhobies.*—The Police is giving protection to one and all without discrimination of community.

5. *Assignment of pattas for house-sites.*—The policy of the Government is to assign as many sites as possible to all the houseless persons irrespective of community. Dhobies also can avail of this facility.

6. *Publication of Srikantan Report.*—The Backward Classes Commission set up in 1969 has submitted its report covering all aspects of the welfare of Backward Classes and its report is under examination. No useful purpose will be served now by publishing the Srikantan Report. However orders have already been passed on the above report in G.O. Ms. No. 4761, I.L. & C. (Labour), dated 3rd October 1963.

7. Expediting the setting up of a Power Laundry in Madras City.

It is for the Board of Directors of the Madras Co-operative Dhobikana, Limited, to get the building constructed through the construction branch of the Director of Industries and Commerce after depositing the required amount.

8. Assignment of land from which alkaline is removed and used for washing purposes to the District Co-operative Washermen Society :

The Government have issued instructions to Collectors to reserve poramboke lands to the extent absolutely necessary to facilitate dhobies to carry on their traditional avocations.

9. That the ferry yard at Erode may be permanently leased out to either the Coimbatore District Co-operative Washermen Association or to the Erode Washermen Association.

The Panchayat Union Council, Erode, is not willing to lease out the ferry ghat at Erode to the Washermen Association.

10. Health Insurance of Dhobies :

There is no proposal to extend the E.S.I. Scheme to dhobies in the State.

## இணைப்பு 2.

[29-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க]

### தமிழ் நாட்டுக் காவல் துறை.

### 1970–71-ம் ஆண்டிற்கான ஆய்வுரை.

சட்டத்தையும் ஒழுங்கையும் பேணிக் காத்து நிலைநாட்ட, வன்மையும் திண்மையும் படைத்த ஒரு காவற்படை மெத்தத் தேவையாகும். நமது நாட்டில் மிகச் சிறந்த ஓர் அமைப்பாகத் திகழ்ந்து வரும் பெருமையினைத் தமிழ்நாட்டுக் காவற்படை தொடர்ந்து காப்பாற்றி வருகிறது.

**படைக்கலந் தாங்கிய காவற்படை அணிகள்.**

ஆவடி, படைக்கலந் தாங்கிய சிறப்புக் காவற்படையின் 1-வது அணி, முறைப்படுத்தப்பட்ட அமைப்பு முறைக்கிணங்க, ஆவடியைத் தலைமையிடமாகக் கொண்டு தொடர்ந்து செயலாற்றுகிறது.

படைக்கலந் தாங்கிய சிறப்புக் காவற்படையில் II-ம் அணி இந்திய அரசுக்காக புகலையில் அஸ்லாமுக்குச் சென்றிருந்தது. இந்தப் படை அணி 1970 ஜூலை திங்கள் 1-ம் நாள் இம் மாநிலத்திற்குத் திரும்பி வந்தபின், திருச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு இப்போது செயல்படுகிறது. படைக்கலந் தாங்கிய சிறப்புக் காவற்படையின் IV-வது அணி, ஆவடியைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

மலபார் சிறப்புக் காவற்படை 1-ம் அணி, வடகிழக்கு எல்லைப் புறத்தில் (நேபா) இருந்த மலபார் சிறப்புக் காவற்படையின் III-வது அணியை விடுவிக்க 1968 மார்ச் திங்கள் 9-ம் நாள் இம் மாநிலத்திற்குப் புறம்பே அனுப்பப்பட்டது. இது வடகிழக்கு எல்லைப்புறத்தில் இந்திய அரசுக்காகத் தொடர்ந்து பணியாற்றி வருகிறது. இந்த அணியின் பணி இம் மாநிலத்திற்குத் தேவைப் படுவதால் இதை விரைவில் திருப்பி அனுப்புவது குறித்து இந்திய அரசிடம் கடிதப் போக்குவரத்து நடைபெற்று வருகிறது.

மலபார் சிறப்புக் காவற்படை II-ம் அணி, திருநெல்வேலி மாவட்டம் மணிமுத்தாற்றில் தொடர்ந்து தங்கி வருகிறது.





**காவல்துறையிலுள்ள அரிசனங்கள், பழங்குடி மக்கள், பின்தங்கிய வகுப்பினர்களின் சதவீதம்.**

1970 டிசம்பர் 31-ம் நாளன்று நிலவரப்படி காவல்துறையில் வேலைக்கமர்த்திக்கொள்ளப்பட்ட அரிசனங்களின் சதவீதம் பின் வருமாறு :—

| | 31—12—70 நிலவரப் படி அதிகாரிகளின் மொத்த எண்ணிக்கை. (1) | வேலைக்கமர்த்தப்பட்ட அரிசனங்களின் எண்ணிக்கை. (2) | சதவீதம். (3) | பின்தங்கிய வகுப்பினர் (4) | சதவீதம். (5) | பழங்குடியினர். (6) | சதவீதம். (7) |
|---|---|---|---|---|---|---|---|
| அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்கள்— | | | | | | | |
| நிலைப் பணியாளர் .. | 146 | 11 | 7·53 | 31 | 31·23 | 1 | 0·68 |
| தற்காலிகப் பணியாளர்கள் .. | 52 | 4 | 7·69 | 13 | 25 | .. | .. |
| அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள்— | | | | | | | |
| கடைநிலைப் பணியாளர்கள் நீங்கலான ஏனையோர்— | | | | | | | |
| நிலையான பணியாளர்கள் .. | 37,144 | 4,188 | 11·28 | 12·761 | 34·36 | 89 | 0·24 |
| தற்காலிகப் பணியாளர்கள் .. | 4,971 | 458 | 9·21 | 1,697 | 34·14 | 11 | 0·22 |
| கடைநிலைப் பணியாளர்கள்— | | | | | | | |
| நிலையான பணியாளர்கள். .. | 405 | 145 | 35·80 | 55 | 13·58 | .. | .. |
| தற்காலிகப் பணியாளர்கள். .. | 139 | 55 | 39·57 | 15 | 10·79 | .. | .. |

தற்போதுள்ள காவற்படையினரின் எண்ணிக்கை குறித்த விவரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

**பயிற்சியும் பணிக்கேற்ற ஆள் திரட்டலும்.**

காவல்துறைத் துணை சூப்பிரண்டுகள் நால்வரும் (1-ம் வகை), உதவி சூப்பிரண்டுகள் மூவரும் 1970-ல் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். துணை சூப்பிரண்டுகள் வேலூர் காவல்துறை பயிற்சிக் கல்லூரியில் பயிற்சிபெற்று வருகின்றனர். ஆபுவில் உள்ள தேசிய காவலர் பயிற்சிக் கழகத்தில் மூன்று உதவி சூப்பிரண்டுகள் பயிற்சி பெறுகின்றனர். வேலூர் காவல்துறை பயிற்சிக் கல்லூரியில் இரண்டு ஐ.பி.எஸ். அதிகாரிகள் பயிற்சி பெறுகின்றனர்.

காவல்துறையில் நேரிடை நியமனம் பெற்ற துணை சூப்பிரண்டுகள் மூவர் (1-ம் வகை) இப்போது மாவட்டங்களில் செயல்முறைப் பயிற்சி பெறுகின்றனர். மாவட்டங்களில் இந்தியக் காவல்துறை பணி அதிகாரிகள் இருவர் செயல்முறைப் பயிற்சி பெறுகின்றனர். இந்த ஆண்டில் III-ம் வகை துணை சூப்பிரண்டு, ஒருவர் மாவட்டத்தில் செயல்முறைப் பயிற்சி பெற்றுவந்தார்.

**கல்கத்தாவிலுள்ள மத்திய புலனாய்வுப் பள்ளியில் பயிற்சி பெறுதல்.**

இந்த ஆண்டில் மத்தியப் புலனாய்வுப் பயிற்சிப் பள்ளியில் புலனாய்வுக்குத் தொடர்பான அறிவியல் நுட்பக் கருவிகளிலும் மேம்பட்ட வழிகளிலும் பதினைந்து வாரங்கள் பயிற்சி பெறுவதற்கென பன்னிரண்டு துணை இன்ஸ்பெக்டர்கள் அனுப்பப்பட்டனர்.

**கூர்தல் பயிற்சி.**

1970-ஆம் ஆண்டில் வேலூர் பயிற்சிக் கல்லூரியில் ஆண்டு மறுபயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது. மறுபயிற்சி வகுப்பில் ஒரே தொகுதியில் 30 அதிகாரிகள் பயிற்சி பெற்றனர்.

**குற்றஞ்சார்ந்த அறிவியல் ஆய்வுத் துறை.**

தமிழ்நாடு குற்றஞ்சார்ந்த அறிவியல் ஆய்வுக்கூடம் ரசாயன ஆய்வாளர் ஆய்வுக் கூடத்திலிருந்து பிரிந்து அமைக்கப்பட்டு, 1967, மார்ச் 1-ஆம் தேதி முதற்கொண்டு காவல் துறையின்கீழ் வந்தது. இந்த ஆய்வுக் கூடம் செயல்படுவதை இந்திய அரசு நியமித்த ஆய்வுக்குழு ஒன்று ஆராய்ந்து, குற்றஞ்சார்ந்த அறிவியல் ஆய்வு குறித்த மத்திய ஆலோசனைக் குழுவிற்கு அதன் அறிக்கையை அளித்தது. தற்போது, தமிழ்நாடு குற்றஞ்சார்ந்த அறிவியல் ஆய்வு கூடத்தில் கீழ்க்காணும் பிரிவுகள் அடங்கியுள்ளன :—

(1) உயிரியல் பிரிவு.
(2) ரசாயனப் பிரிவு.
(3) பௌதீகப் பிரிவு.
(4) புகைப்படப் பிரிவு.
(5) சுடுபடைக்கலன் பிரிவு.
(6) ஆவணங்கள் பிரிவு.



தமிழ்நாடு குற்றஞ்சார்ந்த அறிவியல் ஆய்வுக்கூடம் சிறந்த முறையில் தொடர்ந்து செயலாற்றி வருகிறது.

காவல்துறையைச் சேர்ந்த அதிகாரிகள் ஐவர், குற்றவியல் ஆய்வு (Criminology) குற்றஞ்சார்ந்த அறிவியல் ஆய்வு (Forensic science) குறித்த தகுதிப் பட்டப் படிப்பில் பயிற்சிபெற சென்னை மருத்துவக் கல்லூரிக்கு 1970-ல் அனுப்பப்பட்டுள்ளனர்.

**குற்றம்.**

சிறப்புச் சட்டங்களின் கீழும் உள்ளூர்ச் சட்டங்களின் கீழும் இந்தியத் தண்டனைச் சட்டத் தொகுப்பின் சிறு தொல்லைகள் விளைவித்தல் குறித்த பரிவுகளின் கீழும் நிகழ்ந்த குற்றங்கள் நீங்கலாக, 1970-ல் நிகழ்ந்த பிடி ஆணை வேண்டாக் குற்றங்களின் (Cognizable crimes) மொத்த எண்ணிக்கை 49,407 ஆகும்; 1969-ல் 66,326 குற்றங்கள் நிகழ்ந்தன. எனவே, 16,919 குற்றங்கள் குறைந்தன. பொருளாதார நிலை முன்னேறியுள்ளதே இதற்குக் காரணமாகும்.

**துப்பு துலக்குதல்:**

1970-ல் துப்பு துலக்கப்பட்ட பிடி ஆணை வேண்டாக் குற்றங்கள் 67.73 சத வீதம் ஆகும். 1969-ல் இந்த எண்ணிக்கை 61.3 சதவீதம் ஆகும். துப்புத் துலக்கிய குற்றங்களின் சதவிதம் 1970-ல் அதிகரித்துள்ளது பெருமிதத்திற்குரியது.

**மதுவிலக்கு:**

மதுவிலக்குச் சட்டத்தைக் காவல்துறையினர் இது வரையில் தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றனர். மதுவிலக்குக்குழு கூட்டங்கள் அவ்வப்போது நடைபெற்றன. பொதுமக்களின் ஒத்துழைப்பும் கூடுமானவரை பெறப்பட்டது. 1960 முதல் 1970 வரை குற்றத் தலைப்பின்கீழ் பதிவாகிய வழக்குகளின் மொத்த எண்ணிக்கையைக் கீழ்க்காணும் புள்ளி விபரம் காட்டுகிறது:—

| ஆண்டு. | வழக்குகளின் எண்ணிக்கை. |
|---|---|
| 1960 .. .. .. | 93,497 |
| 1961 .. .. .. | 1,12,889 |
| 1962 .. .. .. | 1,29,977 |
| 1963 .. .. .. | 1,23,006 |
| 1964 .. .. .. | 1,37,714 |
| 1965 .. .. .. | 1,65,052 |
| 1966 .. .. .. | 1,89,548 |
| 1967 .. .. .. | 1,90,713 |
| 1968 .. .. .. | 2,53,607 |
| 1969 .. .. .. | 3,06,555 |
| 1970 .. .. .. | 3,72,462 |

**துப்பறியும் நாய்ப்படைப் பிரிவு.**

இம் மாநிலத்தில் தற்போது சென்னை மாநகரில் ஒன்றும், மதுரையில் ஒன்றும், கோயம்புத்தூரில் ஒன்றுமாக துப்பறியும் நாய்ப்படைப் பிரிவுகள் மூன்று உள்ளன. இவைகள் சிறந்த முறையில் செயலாற்றி வருகின்றன.

தமிழ் நாடு துப்பறியும் நாய்ப்படைப் பிரிவுக்கு கிழக்கு ஜெர்மனியிலிருந்து ஐந்து ஆண் குட்டிகளும் ஒரு பெட்டையும் அண்மையில் அரசு இறக்குமதி செய்தது. நடப்பாண்டில் திருச்சிராப்பள்ளியில் துப்பறியும் நாய்ப்படை ஒன்றை அமைக்க அனுமதி வழங்கப்படும். தமிழ்நாட்டுக் காவல்துறையின் நாய்ப் படைப் பிரிவுகள் 1970-71-ல் 398 வழக்குகளில் குற்றங்களை துப்பு துலக்குவதற்கு உதவியாக இருந்தன.

**மாவட்டக் குற்றப் புள்ளி விவரக் கழகங்கள்.**

குற்றத்தைப் புலன் விசாரணை செய்வதற்காக, புலன் விசாரணை அதிகாரிகளுக்கு எல்லா மாவட்டங்களிலுமுள்ள தலைமையிட மாவட்டப் புலன் விசாரணைக் கழகங்கள் உதவுகின்றன. குற்றம், குற்றவாளிகள் பற்றிய தகவலை இக்கழகங்கள் திரட்டும். குற்றவாளிகள் விவரச் சுவடிகள் அவர்களுடைய தற்கால நடவடிக்கை பற்றிய காலமுறை அறிக்கைகள் முதலியவற்றைப் பேணிவரல், அட்டவணை அட்டைகள் வைத்துவருதல், குற்ற விளக்க அட்டவணைகள் தயாரித்தல், குற்றவாளிகளைப் புகைப்பட மெடுத்தல் ஆகியவை இக் கழகங்கள் பொறுப்பு ஏற்றுச் செய்யும் சில பணிகளாகும்.

**சிறுவர் சங்கங்கள்.**

மாவட்டங்களிலும், சென்னை மாநகரிலும் 1959-ல் சிறுவர் சங்கங்கள் திறக்கப்பட்டன. இவைகளைக் காவல்துறை நிர்வகிக்கிறது. சிறுவர் சங்கங்கள் மத்தியக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. குற்றவியல் புலனாய்வுத் துறையில் துணைத் தலைமை அதிகாரி அதன் தலைவராவர். தமிழ் நாட்டில் 29 சிறுவர் சங்கங்கள் உள்ளன. தமிழ்நாட்டில் சிறுவர் சங்கங்களை பேணுவதற்கு 1970-71-க்கென ரூ. 60,597 வழங்க அரசு ஒப்பளித்துள்ளது. நடப்பாண்டில் சிறுவர் சங்கங்களுக்காக ரூ. 62,000 நிதி ஒதுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**வகுப்பு வாதம்.**

"சாதிப் பூசல்கள்" என வகைப்படுத்தக்கூடிய வகையில் 4 நிகழ்ச்சிகள் மட்டுமே நிகழ்ந்தன. 1969-ல் இத்தகைய நிகழ்ச்சிகள் 23 நடைபெற்றன என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்க தாகும். இவற்றுள் பெரும்பாலானவை உள்ளூர் சிறு பூசல்கள் ஆகும். தேசிய ஒருமைப்பாட்டு மன்றப் பரிந்துரைகளின் அடிப் படையில், வகுப்புகளுக்கிடையே கொந்தளிப்பான நிலையைத் தடுக்கவும், வகுப்புகளுக்கிடையே பதட்ட நிலை தொடர்ந்திருப்





பதைத் தடுக்க கடுமையான நடவடிக்கை எடுக்கவும், விழிப்புடனிருந்து கண்காணிக்குமாறு காவல்துறை சூப்பிரண்டு களுக்கும், காவல்துறைக் கமிஷனருக்கும் உத்தரவுகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன. வகுப்புகளுக்கிடையே பதட்டநிலையைத் தடுப்பதற்கு, மாவட்டங்களுக்கும், காவல்துறைத் தலைமையிடங் களுக்குமிடையே தொடர்பு வைத்துக் கொள்வதற்காக குற்றப் புலன் விசாரணை சிறப்புத் துறையில் தனிப் பிரிவு ஒன்று தனிப்பட்ட அலுவலர்களுடன் அமைக்கப்பட்டுள்ளது.

**உழவு முனை நிலவரம்.**

கூலி உயர்வு கோரியும், அறுவடைக்கு வெளியிலிருந்து ஆட்களைத் தருவித்து வேலைக்கமர்த்தியதை எதிர்த்தும் சில கலவர நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இவையாவும் சிறு நிகழ்ச்சிகளே. திறமையுடன் இவை சமாளிக்கப்பட்டன.

**நிலப்பறி இயக்கம்.**

அனைத்திந்திய கிசான் சபைகளின் (உழவர் சங்கங்கள்) 15-வது மாநாட்டில், இந்தியப் பொதுவுடைமைக் கட்சி, 1970-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 15-ம் நாள் முதல் நிலப்பறி இயக்கத்தைத் தொடங்குவதென்று முடிவு எடுத்தது. காவலர் திறமையான தடுப்பு நடவடிக்கை எடுத்தனர். மாவட்டங்களில் தெரிந்தெடுத்த இடங்களில், 1970 ஆகஸ்டு 8-ம் நாள் முதல் இ.பி.கோ. 144 உத்தரவு கள் பிறப்பிக்கப்பட்டன. கோவை, சேலம் மாவட்டங்களில் தடை ஆணையை மீறியதற்காகவும், காட்டு நிலங்களில் அத்துமீறி நுழைந்ததற்காகவும் கைது செய்யப்பட்ட 7,327 பேர் உட்படவும் இந்தியப் பொதுவுடைமைக் கட்சியையும், அதன் கிசான் சபை யையும் (உழவர் சங்கம்) சேர்ந்த தலைவர்கள் உட்படவும் ஏறக் குறைய 12,757 தொழிலாளர்கள் பல மாவட்டங்களில் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட அனைவரும் காவலில் வைக்கப்பட்டனர். கலவரத்தின்போது மாநிலத்தில் எந்தப் பகுதியிலும் கட்டுக்கடங்காத நிகழ்ச்சி எதுவும் நடைபெற்றதாகத் தெரியவில்லை. இயக்கம் தொடர்ந்து நடக்காது என அறிவிக்கப் பட்ட பின் கைது செய்யப்பட்ட தலைவர்களும் தொண்டர்களும் பின்னர் விடுவிக்கப்பட்டனர். அவர்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகளை 1970 ஆகஸ்டில் அரசு கைவிட்டது.

**தொழிலாளர் நிலவரம்.**

பொதுவாகச் சொல்லப்போனால், தொழிலாளர் நிலவரம் மன நிறைவு தருவதாகவே இருந்தது. ஒரு சில இடங்களில், வேலை நிறுத்தங்களும், ஆர்ப்பாட்டங்களும் நடந்தன. இருந்த போதிலும் அவை குறித்து நல்ல வகையில் நடவடிக்கை எடுக்கப் பட்டது. இந்தத் தகராறுகள் யாவும் ஆங்காங்கே நிகழ்ந்த தல நிகழ்ச்சிகளாகும். தொழிலாளர் அமைதியின்மை நிலவிய இடங்கள் எதிலும் அது சட்ட ஒழுங்கு முறையைப் பாதிப்பதாக இல்லை.

**நக்சலைட்டுகள்.**

காவல் துறைக்குக் கிடைத்த தகவலின்படி, தீவிரவாதிகள், குறிப்பான சில நிலவுடைமையாளர்களைத் தாக்கியும், 'மா'வின் சுவரொட்டிகளை ஒட்டியும், "மே தினம்" கொண்டாடத் திட்டமிட்டிருந்தனர் எனத் தெரிகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த சில நிலவுடையாளர்களுக்குக் கொலை மிரட்டல் கடிதங்கள் வந்தன. இந்த நடவடிக்கைகளின் பின்னால் தமிழ் நாட்டில் தீவிரவாதிகள் இயக்கம் எந்த அளவுக்குப் பரவியுள்ளது என்பதை மதிப்பிடுவதற்கும், தீவிரவாதிகளின் ரகசியத் தளங்களைக் கண்டறிவதற்கும், காவல்துறையின் சிறப்புத் திட்டம் ஒன்று 1971 ஏப்ரல்–மே திங்களில் செயல்படுத்தப்பட்டது. அதன் விளைவாக, தமிழ்நாடு காவல் துறையினர் 357 தீவிரவாதிகளைக் கைது செய்து விசாரணை செய்தனர். காவல் துறையின் இச்சிறப்பு முயற்சியினால் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளைக் குறித்துச் சில உண்மைகள் புலனாயின. காவல் துறையின் சிறப்பு முயற்சியின், விளைவாகக் குறிப்பிட்ட சில வழக்குகளில் தேடப்பட்டு வந்த சில தீவிரவாதிகள் கைதாயினர். காவல் துறையின் இச் சிறப்புப் பணி, தீவிரவாதிகள் இயக்கத்தை ஒடுக்குவதில் காவல் துறைக்குரிய திறமையின்மீது பொது மக்களுக்குப் பெரும் நம்பிக்கையளித்துள்ளது. காவல்துறையின் இப்பணி நக்சலைட் அனுதாபிகள், கட்சியில் எப்பக்கம் சார்வது எனத் தெரியாமல் குழம்பி நிற்போர் ஆகியோருக்கு நல்ல பாடம் புகட்டியுள்ளது. எந்த உருவிலாவது சதி வேலைகளில் தாம் ஈடுபட்டால், காவல் துறையின் கண்காணிப்பினின்றும் தப்ப முடியாது என்னும் உண்மையை அவர்கட்கு அறிவுறுத்தியுள்ளது.

தீவிரவாதிகளின் நடவடிக்கையைக் கட்டுப்படுத்தவும் ஒடுக்கவும், காவல் துறை சூப்பிரண்டு ஒருவரின்கீழ் ஒரு சிறப்புப் பிரிவு செயல்பட்டு வருகிறது. மாவட்டங்களில் உள்ள காவல் துறையினரும், தீவிரவாதிகளால் ஏற்படும் தொல்லைகளை நீடிக்க விழிப்புடன் கண்காணித்து வருகின்றனர்.

**காவலர் துப்பாக்கிச் சுடல்.**

1970-ல் ஒன்பது நேர்வுகளில் காவலர் துப்பாக்கிச் சுடல் நடத்தவேண்டியதாயிற்று. அவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:—

(i) வழக்கொன்றில் குற்றஞ்சாட்டப்பட்டு தலைமறைவாக இருந்த ஒருவரைக் கண்டுபிடித்துக் கைது செய்ய 1970 ஜனவரி 25-ஆம் நாள் அன்று அறந்தாங்கி காவல் நிலைய இன்ஸ்பெக்டர், காவலர்களுடன் சென்றார். காவலர் படையை மக்கள் கூட்டம் ஒன்று சூழ்ந்து கொண்டது. காவல் அதிகாரிகளின் மீதும், வண்டிகள் மீதும் அந்தக் கூட்டத்தினர் கற்களைக் கொண்டு தாக்கத் தலைப்பட்டனர். இன்ஸ்பெக்டர் தற்காப்புக்காகச் சுட வேண்டியதாயிற்று. பட்டுக்கோட்டை வருவாய்க்கோட்ட அதிகாரி விசாரணை நடத்தினார். துப்பாக்கிச் சுடல் நியாயமானது என்று முடிவாகியது.



(ii) கொள்ளை வழக்கொன்றில், குற்றஞ் சாட்டப்பட்ட இருவரைக் கைது செய்வதற்காக வேப்பங்குளம் கிராமத்திற்கு 1970 பிப்ரவரி 9-ஆம் நாள் அன்று கமுதி காவல் துறை இன்ஸ்பெக்டர் காவலர் படையுடன் சென்றார். குற்றஞ் சாட்டப்பட்டவர் அபாயகரமான ஆயுதங்களுடன் காவலரைத் தாக்க முயற்சி செய்தார். இன்ஸ்பெக்டர் தற்காப்புக்காகச் சுட்டார். ஒருவர் காயமுற்றார். இராமநாதபுரம் வருவாய்க் கோட்ட அதிகாரி விசாரணை நடத்தினார். துப்பாக்கிச் சுடல் நியாயமென்று முடிவாகியது.

(iii) 1970 ஏப்ரல் 25-ஆம் நாள் அன்று மதுவிலக்கு வேட்டையின்போது காவலர் ஏழு பேரைக் கைது செய்தனர். குற்றவாளிகள் கடலூர் கோட்டைக் காவல் நிலையத்திற்குக் கொண்டுவரப்பட்டனர். காவல் நிலையத்தில் அவர்களைக் காவலில் வைப்பதற்கான வசதி இல்லாததால், குற்றவாளிகள் வழிக்காவலருடன் பஸ்ஸில் திருப்பாதிரிப்புலியூருக்கு அனுப்பப்பட்டனர். குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுவிக்க பெரிய கூட்டம் ஒன்று காவல் நிலையத்தைத் தாக்கியது. காவலர் தற்காப்புக்காகச் சுட வேண்டி வந்தது. இதனால் பதினொரு பேர் காயமடைந்தனர். சிதம்பரம் வருவாய்க்கோட்ட அதிகாரி இது பற்றி விசாரணை நடத்தினார். துப்பாக்கிச் சுடல் நியாயமானதே என்று முடிவு செய்யப்பட்டது.

(iv) நெய்வேலி பழுப்பு நிலக்கரி கூட்டு நிறுவனத் தொழிலாளர்கள் 1970-ஆம் ஆண்டு மே திங்கள் 1-ஆம் நாள் அன்று நள்ளிரவு முதற்கொண்டு வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர். அப்பகுதியில் ரோந்து சுற்றி வந்த காவல்படையினர் கடுமையான கல்லடிக்கு உள்ளாயினர். கூட்டத்தைக் கலைக்கும் பொருட்டு மேற்கொண்ட முயற்சி பலனளிக்காமல் போகவே, கூட்டத்தைக் கலைக்கும் பொருட்டு காவலர் 1970 ஆம் ஆண்டு மே திங்கள் 2-ம் நாள் அன்றும் 1970-ஆம் ஆண்டு மே திங்கள் 3-ஆம் நாள் அன்றும் தற்காப்புக்காகச் சுடவேண்டி நேரிட்டது. இதனால் ஒருவர் மரணமடைந்தார். 10 பேர் காயமுற்றனர் இந் நிகழ்ச்சி பற்றி விசாரணை செய்ய தனி நபர் ஆணைக்குழுவை அரசு நியமித்தது. துப்பாக்கிச் சுடல் நியாயமானதே என்று முடிவு செய்யப்பட்டது.

(v) 1970-ஆம் ஆண்டு மே திங்கள் 5-ஆம் நாள் அன்று வட ஆர்க்காடு மாவட்டத்தில் கோனை கிராமத்திலிருந்து 2,000 பேர் கொண்ட கூட்டம் ஒன்று பயங்கர ஆயுதங்களுடன் அரிசனங்களைத் தாக்கும் பொருட்டு நாவல்பூருக்குச் சென்று கொண்டிருந்தது. வழியில் காவல் துறை இன்ஸ்பெக்டரும் காவலரும் இக் கூட்டத்தினரைத் தடுத்து நிறுத்தினர். இதனால் கூட்டத்தினர் காவலரைத் தாக்க முயற்சி செய்தனர். நிலைமை மிகவும் மோசமானதால், காவலர் தற்காப்புக்காகச் சுட்டனர். இதில் ஒருவர் இறந்தார். ஒன்பதின்மர் காயமுற்றனர். வருவாய்க் கோட்ட அதிகாரி இதுபற்றி விசாரணை நடத்தினார். துப்பாக்கிச் சுடல் நியாயமானதே என்று முடிவு செய்யப்பட்டது.

(vi) திருநெல்வேலியில் 1970-ஆம் ஆண்டு மே திங்கள் 20-ஆம் நாள் அன்று, காவல் துறை சப்-இன்ஸ்பெக்டர், பேருந்து நிலையத்திற்கருகில் போக்குவரத்தை முறைப்படுத்திக் கொண்டிருந்தார். பேருந்து நிறுவனத்தின் முகவர் ஒருவர் சப்-இன்ஸ்பெக்டரிடம் முறை தவறி நடந்ததோடு அவரைத் திடீரென்று தாக்கினார். அதனால் சப்-இன்ஸ்பெக்டர் அம்முகவரை அடித்தார். எல்லா பேருந்து வலவர்களும் ஒன்று சேர்ந்தனர். 300 பேர் கொண்ட கூட்டம் ஒன்று சப்-இன்ஸ்பெக்டரையும் காவலரையும் தாக்கத் தொடங்கினர். கூட்டத்தினர் வன்முறையில் இறங்கியதால் காவலர் தற்காப்புக்காகச் சுட்டனர். இதில் எவரும் காயமடையவில்லை. திருநெல்வேலி, மாவட்ட வருவாய் அதிகாரி இதுபற்றி விசாரணை ஒன்றை நடத்தினார். துப்பாக்கிச் சுடல் நியாயமானதே என்று முடிவு செய்யப்பட்டது.

(vii) மின்சாரக் கட்டண விதங்கள் உயர்த்தப்பட்டது குறித்து எதிர்ப்புத் தெரிவிக்கும் முறையில், கோயம்புத்தூர் மாவட்ட உழவர்கள் சங்கம் அரசு அலுவலகங்களுக்கு முன்பு மறியல் செய்தது. 1970-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 19-ஆம் நாள் அன்று, 1,000 பேர் கொண்ட மறியல்காரர்கள் காவலரையும் ரோந்துப் படையினரையும் தாக்கத் தொடங்கினர். அப்போது காவல் துறை அதிகாரிகள் பலர் காயமுற்றதாலும் கூட்டத்தினர் கலைந்து செல்ல மறுத்ததாலும், காவலர் தற்காப்புக்காகச் சுட்டனர். இதில் மூவர் இறந்தனர், 11 பேர் காயமுற்றனர். இது பற்றி விசாரணை நடத்த சென்னை உயர்நீதி மன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதியாகிய திரு. பி. ராமகிருஷ்ணன், ஐ.சி.எஸ் அவர்களைக் கொண்ட தனி நபர் ஆணைக் குழுவை அரசு நியமித்தது. காவலர் நடத்திய துப்பாக்கிச் சுடல் நியாயமானதே என்று விசாரணை ஆணைக்குழு முடிவு செய்தது. ஆணைக் குழுவின் முடிவுகளை அரசு ஏற்றுக்கொண்டது.

(viii) 1970-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 12-ஆம் நாள் அன்று, மதுரை மாவட்டத்தின் வடக்குப் பகுதியில் உள்ள சில்வார்பட்டி கிராமத்தினர், நாயக்கர் வகுப்பைச் சேர்ந்த ஒரு பெண்மணியின் சடலத்தை வழக்கமான பாதை வழியாக எடுத்துச் செல்வதற்கு மறுப்புத் தெரிவித்தனர். இது தொடர்பாக குறையீடு ஒன்று கொடுக்கப்பட்டதன் பேரில், சப்-இன்ஸ்பெக்டர் அக் கிராமத்திற்குச் சென்று அவ்விரு வகுப்பினரிடையே ஓர் உடன்பாடு ஏற்படுவதற்கு முயற்சி செய்தார். இன்ஸ்பெக்டரும் காவலர் பலருடன் அக்கிராமத்திற்கு விரைந்தார். பெரிய கூட்டமொன்று காவலரைத் தாக்கத் தொடங்கியது. காவலர் தற்காப்புக்காகச் சுட்டனர். இதில் நால்வர் இறந்தனர். 17 பேர் காயமுற்றனர். இதுபற்றி விசாரணை நடத்த வாரிய உறுப்பினராகிய திரு. என். அனந்த பத்மநாபன், ஐ.ஏ.எஸ். அவர்களை தனி நபர் ஆணைக் குழுவாக அரசு நியமித்தது. காவலர் நடத்திய துப்பாக்கிச் சுடல் நியாயமானது என்று விசாரணை ஆணைக் குழு முடிவு செய்தது.





(ix) 1970-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 26-ம் நாள் அன்று தென்காசியில், வீட்டுவரி உயர்த்தப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் அனைத்துக் கட்சியினர் மறியல் மேற்கொண்டனர். பெரிய ஊர்வலம் ஒன்று தென்காசி நகராட்சி அலுவலகத்தை அடைந்தது. இவ்வரி உயர்த்தப்பட்டது குறித்து நகராட்சித் தலைவரையும், உறுப்பினர்களையும் உடனடியாக ஒரு முடிவு எடுக்குமாறு கூட்டத்தினர் கோரினர். கூட்டத்தினர் அலுவலகத்தினுள் நுழையத் தொடங்கியதோடு, அங்கிருந்த சாளரங்கள், கதவுகள், சைக்கிள்கள் முதலியவற்றைச் சேதப்படுத்தினர். நிலைமை கட்டுக்கடங்காமற்போனதால், காவலர் சுட்டனர். இதில் ஒருவர் இறந்தார். 12 பேர் காயமுற்றனர். இதுபற்றி விசாரணை நடத்த சென்னை மாநகர சிவில் நீதிமன்றத்தின் முதல் கூடுதல் நீதிபதியாகிய திரு. ஏ. வரதராசன், பி.ஏ., பி.எல். அவர்களை தனி நபர் ஆணைக் குழுவாக, அரசு நியமித்தது. துப்பாக்கிச் சுடல் நியாயமானதே என்று விசாரணை ஆணைக் குழு முடிவு செய்தது. ஆணைக் குழுவின் முடிவுகளை அரசு ஏற்றுக் கொண்டது.

**கண்ணீர் புகை.**

(i) 1970-ம் ஆண்டு ஜூன் திங்கள் 15-ம் நாள் அன்று தஞ்சாவூர் மாவட்டத்தில், சேலூர் கிராமத்தில் வன்முறைக் கூட்டத்தினர்மீது படைக்கலம் தாங்கிய சேமக்காவல் படையினர் கண்ணீர் புகையை பயன்படுத்தினர்.

(ii) கோயம்புத்தூர் மாவட்டத்தில் பெருமாநல்லூரில் 1970-ம் ஆண்டு ஜூன் திங்கள் 15-ம் நாள் அன்றும், 1970-ம் ஆண்டு ஜூன் திங்கள் 19-ம் நாள் அன்றும் மாவட்ட உழவர் சங்கத்தினர் நடத்திய போராட்டம் தொடர்பாக, கூட்டத்தினரைக் கலைக்கும் பொருட்டு கண்ணீர்ப்புகை பயன்படுத்தப்பட்டன.

(iii) செங்கற்பட்டு மாவட்டம் ஆவடியில் 1970-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 13-ம் நாள் அன்று உடை தயாரிப்புச்சாலை முன்பும், மீனம்பாக்கத்தில் 1970-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 9-ம் நாள் அன்று ஜெயின் கல்லூரிக்கு முன்பும் சட்டத்தை மீறி கூடியிருந்த கூட்டத்தினர் மீது இரு தடவை கண்ணீர்ப்புகை வீசப்பட்டன.

(iv) 1970-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 8-ம் நாள் அன்று, புனித ஜார்ஜ் கோட்டையின் தலைமைச் செயலகத்திற்கு முன்பு சட்ட விரோதமாகக் கூடியிருந்த மாணவர் கூட்டத்தைக் கலைக்க கண்ணீர்ப்புகை பயன்படுத்தப்பட்டது.

(v) மேலும் 1970-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 9-ம் நாள் அன்று, இராயப்பேட்டை புதுக்கல்லூரிக்கு எதிரே கூடியிருந்த சுமார் 500 பேர் கொண்ட கட்டுக்கடங்காத கூட்டத்தினரைக் கலைக்க கண்ணீர்ப்புகை பயன்படுத்தப்பட்டது. கூட்டத்தினர் கற்களையும், செங்கற்கட்டிகளையும் எறியத் தொடங்கினர். இதில் பணியில் இருந்த காவல் துறை அதிகாரிகள் சிலரும் மற்றவர்களும்

காயமுற்றனர். முறையாக எச்சரிக்கை விடுத்த பின்னர், கண்ணீர்ப்புகை வீசப்பட்டன. அதன் பின்னர் கூட்டத்தினர் கலையத் தொடங்கினர்.

ரோந்துப்படை.

1970 டிசம்பர் வரையில், சென்னை மாநகரின் ரோந்துப் பணிக்காக, போலீஸ் கட்டுப்பாட்டு அறையின் பொறுப்பில் நான்கு லாரிகளே இருந்தன. மேற்கொண்டும் நான்கு வண்டிகள் வாங்க 1970 அக்டோபர் திங்களில் அனுமதி வழங்கப்பட்டது. அவை 1971 ஜனவரித் திங்களில் பயனுக்குக் கொண்டு வரப்பட்டன. இந்த எட்டு வண்டிகளிலும் கம்பியில்லாத் தந்திச் சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன. இவ்வண்டிகளை எளிதில் அடையாளம் கண்டு கொள்வதற்காக அவற்றில் சிவப்பு விளக்குகள் Blinkers பொருத்தப்பட்டுள்ளன. மேற்கொண்டும் ஐந்து வண்டிகள் வாங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இவ்வண்டிகளும் விரைவில் பயனுக்குக் கொண்டுவரப்படும். இவற்றுடன், சேர்த்து, போலீஸ் கட்டுப்பாட்டு அறையின் பொறுப்பில் 13 வண்டிகள் இருக்கும். அப்போது சென்னை மாநகரில் உள்ள சட்டமன்றப் பேரவைத் தொகுதி ஒவ்வொன்றிலும் ரோந்துப் பணிக்காக ஒரு வண்டி இருக்கும். ஒரு வண்டி "ரிசர்வ்" வண்டியாக இருக்கும். இவ்வாறாக சென்னை மாநகரில் திறம்படவும் மும்முரமாகவும் ரோந்துப் பணியாற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. போலீஸ் கட்டுப்பாட்டு அறையைச் சேர்ந்த வண்டிகள் எவ்விதத் தாமதமுமின்றி, தொல்லைகள், குழப்பங்கள் ஏற்படும் இடத்தை அடைய முடியும். இதனால் மாநகரக் காவல் படை, மக்களுக்குச் செவ்விய முறையில் பணியாற்ற இயலும்.

காவல் துறை வானொலிப் பிரிவு.

காவல்துறை வானொலிப் பிரிவில் சுமார் 81 கம்பியில்லாத் தந்தி நிலையங்கள் உள்ளன. மாவட்டங்கள் அனைத்தும் துணைக்கோட்டத் தலைமையிடங்களும் இவ்வானொலித் தொடர்பு மூலம் இணைக்கப்பட்டுள்ளன. மேலும், மேட்டூர், பவானிசாகர், தேக்கடி, கீழ் அணை, கல்லணை முதலிய இடங்களிலுள்ள வெள்ள அறிவிப்பு அவசரக்கால நிலையங்களும் இத் தொடர்பு மூலம் இணைக்கப்பட்டுள்ளன. மிக உயரமான பகுதிகளில் செய்தி ஏற்பு-அனுப்புகை (V.H.F.) நிலையங்களைக் கொண்ட உயர் அலைக்கோடி நிலையங்கள் எல்லா மாவட்டங்களையும் இணைத்து அமைக்கப்பட்டுள்ளன. நம்பகமான தகவல்கள் நெருக்கடி கால ரேடியோ தொலைபேசித் தொடர்புகள் ஹங்கேரியில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஓரளவு நவீன வசதிச் சாதனங்களுடன் கம்பியில்லாத் தந்திச் செய்தி தொடர்பிணைப்புகள் ஆகியவை தமிழ் நாடு காவல்துறை வான் செய்தி அமைப்பின் முக்கியமான கூறுகளாகும்.

நிலையான இடங்களுக்கிடையேயும், ரோந்து வண்டிகளுக்கும் கட்டுப்பாட்டு நிலையங்களுக்கு இடையேயும் ரேடியோ தொலைபேசி மூலம் நம்பகமான தகவல்களை அனுப்பவும், பெறவும் வகை





செய்யும் பொருட்டு நீள் தொலைவு உயர் அலைக்கோடி தொடர்பு இணைப்புகளும், மாநகர அல்லது நகர உயர் அலைக்கோடி கட்டுப்பாட்டு அறைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

மிக உயரமான பகுதிகளிலுள்ள, தானே செய்திகளை ஏற்று—அனுப்பும் நிலையங்களின் உதவியுடன் நிலையான இடங்களுக்கிடையே விரைவாகவும் நேரடியாகவும் தொடர்பு கொள்ள இந்த நீள் தொலைவு உயர் அலைக்கோடி தொடர்பிணைப்புகள் வகை செய்கின்றன. பருவமாற்றங்களாலோ பிற இடையூறுகளாலோ இந்த அலைவரிசைகள் பாதிக்கப்படமாட்டா.

அதிகாரிகள் அனைவருக்கும் டெலிபிரிண்டர், வரி வடிவத் தொடர்பிணைப்புகள் வாயிலாகவும் நம்பகமான ரேடியோ தொலைபேசித் தொடர்பு வாயிலாகவும் தகவல்கள் ஐயுறப்பட்ட ஆவணங்கள், கைவிரல் ரேகைகள் முதலியவற்றை உடனுக்குடன் ஒரே சமயத்தில் அனுப்பும்பொருட்டு பல கிளைகளுடன் கூடிய நவீனப் போக்குவரத்து வசதிகளை காவலர்கள் மேற்கொள்ள இயலும் வகையில் நுண் அலைவரிசை பற்றிய திட்டம் ஒன்றுக்கு அண்மையில் அரசு இசைவளித்துள்ளது. இத்தகைய பல்முனை போக்குவரத்து வசதிகளைக் கொண்டு தமிழ் நாடு காவல்துறை மாநிலத்தில் பல இடங்களில் சட்டம்-ஒழுங்குக்கு விரோதமாக எழக்கூடிய நிலைமைகளை நன்கு கவனிக்க இயலும்.

காவற்படையைச் சீரமைத்தல்

குற்றங்கள் நிகழாமல் தடுப்பதற்கும், குற்றங்களைத் திறமையுடன் கண்டுபிடிப்பதற்கும் காவற்படையைச் சீரமைப்பது அவசியமாகிறது. உயிரியல், பௌதிகம், ரசாயனம், ஆவணங்கள், படைக்கலன் ஆகிய பிரிவுகளைக் கொண்ட தமிழ் நாடு குற்றவியல் சார்ந்த அறிவியல் ஆய்வுக்கூடம் (Tamil Nadu Forensic Science Laboratory) புலனாய்வின் தொடக்கத்திலேயே காவல்துறை அதிகாரிகளுக்கு அறிவியல் முறையிலான உதவியைத் தொடர்ந்து அளித்து வருகிறது. ஆய்வுக்கூட இயல் ஊர்தி ஒன்று 1970-ஆம் ஆண்டு மே திங்களில் செயல்படத் தொடங்கியது. சென்னை மாநகரிலும், செங்கற்பட்டு, வட ஆர்க்காடு தென் ஆர்க்காடு மாவட்டங்களிலும் குற்றங்கள் நிகழ்ந்த இடத்திலேயே புலனாய்வு செய்வதற்கு இப்பிரிவு உதவுகிறது. சென்னைப் பல்கலைக் கழகத்தில் குற்றவியலும் குற்றம் சார்ந்த அறிவியலிலும் எம்.ஏ. பட்ட பாட முறைகளையும், தகுதிப்பட்டய பாட முறைகளையும் நடத்துவதில் இந்த ஆய்வுக்கூடம் ஒத்துழைத்து வருகிறது.

தமிழ் நாடு குற்றம் சார்ந்த அறிவியல் ஆய்வுக்கூடத்தில் குற்றங்களை துப்பு துலக்குவதற்கு அறிவியல் முறைகளைக் கடைப்பிடிப்பதில் காவல்துறை அதிகாரிகளுக்குப் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. குற்றம் சார்ந்த அறிவியல் ஆய்வுக்கூடத்திற்கான சாதனங்கள், கருவிகள் வாங்க, இந்திய அரசு 1969-70-ஆம் ஆண்டில் ரூ. 2.5 லட்சம் நிதி உதவி வழங்கியுள்ளது. 1970-71-ஆம் ஆண்டில், கருவிகள் வாங்குவதற்காக ரூ. 10 லட்சம் நிதி உதவித்து,

இந்திய அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. அறிவியல் முறையில் புலனாய்வு செய்வதில் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழ் நாடு காவல் துறை முன்னணியில் நிற்கின்றது. இம்மாநிலத்தின் நிதி வாயில்களைக் கொண்டு மாநிலக் காவற்படையைச் சீரமைக்க எல்லா முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. அடுத்துவரும் ஆண்டுகளில் நல்ல பலன் கிடைக்குமென்று எதிர்பார்க்கப் படுகிறது.

**தமிழ் நாடு காவல் துறையினரின் குடும்ப நல அமைப்பு.**

1956-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட தமிழ் நாட்டுக் காவல் துறையினரின் குடும்ப நல அமைப்பு மிகச் சிறப்பாகப் பணியாற்றி வருகிறது. இந்த அமைப்பு வகுத்துள்ள நூற்பு, தையல், பாய் பின்னுதல், தீக்குச்சி தயாரிப்பு, பட்டாசு உறை தயாரித்தல், பீடி சுற்றுதல், காகித உறை தயாரித்தல், புத்தகம் கட்டுதல், பால் பண்ணை, கோழி வளர்ப்பு, கைத்திறப் பொருள்கள் முதலிய பல்வேறு திட்டங்களினால் காவல் துறையினரின் குடும்ப வருமானம் தொடர்ந்து பெருகி வருகிறது.

காவலர் குடியிருப்புகளில் வாழும் காவல்துறையினரின் குடும்பங்களின் 5 வயது வரையுள்ள குழந்தைகளுக்கும், சூல் மகளிர்க்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் சத்துணவை வழங்க வேண்டி 'கேர்' நிறுவனத்தின் உதவியுடன் ஊட்டச் சத்துணவுத் திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. ஒரு திங்களில் 25 நாட்களுக்கு, நாள் ஒன்றுக்கு 110 கிராம் சத்துணவு வழங்கப்படுகிறது. மாநிலத்திலுள்ள காவற் படையினர் அனைவருக்கும் இத் திட்டத்தை நீட்டிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

250 குழந்தைகளுக்கு ஊட்டச் சத்துள்ள ரொட்டியினை வழங்கும் மத்திய அரசுத் திட்டம் சத்தியமூர்த்தி நகர், ஆவடி முதலிய இடங்களிலுள்ள படைக்கலம் தாங்கிய சிறப்புக்காவற் படையினர் குடியிருப்புகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திங்கள் ஒன்றுக்கு ரூ. 70-க்குக் குறைவாக அடிப்படைச் சம்பளம் பெறும் பெற்றோர்களின் தேர்வு செய்யப்பட்ட குழந்தைகளுக்கு இது வழங்கப்படுகிறது. செங்கற்பட்டு மாவட்ட படைக்கலம் தாங்கிய சேமக் காவல் படையினர் குடியிருப்புகள், மற்ற புலனாய்வுத் துறை காவலர் குடியிருப்புகள், சென்னை மாநகரக் காவலர் குடியிருப்புகள் ஆகியவற்றுக்கும் இத் திட்டத்தை நீட்டிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**அனைத்திந்திய காவல் துறையினர் நலன் குறித்த பொருட்காட்சி 1970.**

1970 நவம்பரில் சிம்லாவில் நடந்த அனைத்து இந்தியக் காவல் துறையினர் நலன் குறித்த பொருட்காட்சியில் தமிழ் நாடு காவல் துறை பங்கு கொண்டு பாராட்டு பெற்றது. படைப்பிரிவினர் 36 பரிசுகளையும், சுழற்கோப்பையும் பெற்றதோடு நாட்டிலேயே முதலிடத்தை வகித்தனர்.





**தமிழ் நாடு காவலர் நல நிதி.**

காவல் துறையைச் சேர்ந்த அரசிதழ்ப் பதிவு பெறாத பணியாளர் அனைவரது நிலைமைகளை மேம்படுத்துவதற்காக 1957 ஜூலை திங்களில் உருவாக்கப்பட்ட தமிழ் நாடு காவலர் நல நிதி தொடர்ந்து சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. செயற்பணி, நிர்வாகப் பணி, சார்நிலை அலுவலர்கள் ஆகியோருக்கும் அவர்தம் மனைவியருக்கும் குழந்தைகளுக்கும் நிதியுதவியும், படிப்பு உதவித் தொகைகளும், நல வசதிகளும், பொழுதுபோக்கு வசதிகளும் இந் நிதியின் வாயிலாக அளிக்கப்படுகின்றன. காவல்துறையில் அரசிதழ்ப் பதிவு பெறாத அதிகாரிகள் மனமுவந்து கொடுக்கும் தொகைகள் வாயிலாகவும், அரசிதழ்ப் பதிவு பெற்ற அதிகாரிகளிடமிருந்து நன்கொடைகள் பெறுவதன் வாயிலாகவும் இந் நிதிக்குத் தொகை சேர்க்கப்படுகிறது. இந் நிதிக்கு ரூ 50,000 என்ற அதிக அளவுத் தொகைக்குட்பட்டு இணைமானியத் தொகை அளிப்பதன் மூலம் இந் நிதியை அரசு ஏற்கெனவே பெருக்கி வந்திருக்கிறது. நிபந்தனை எதுவும் விதிக்காமல் இந் நிதிக்கு 1970–71-ம் ஆண்டில் ரூ. 1 லட்சம் ஒரு மொத்த மானியம் வழங்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

தமிழ் நாட்டுக் காவல்துறை நூற்றாண்டு விழா படிப்பு உதவித் தொகைத் திட்டம் ஒன்றும் உள்ளது. இத் திட்டத்தின் கீழ், காவல்துறை அரசிதழ்ப் பதிவு பெறா நிர்வாக அதிகாரிகளின் தகுதியுள்ள குழந்தைகளுக்குக் கல்லூரிகளில் உயர் படிப்புக்கும் தொழில் நுட்பப் படிப்புக்கும் படிப்பு உதவித் தொகையாக ஆண்டுதோறும் ரூ. 21,100 வழங்கப்படுகிறது.

**ஊர்க்காவல் படையும் உள்நாட்டு பாதுகாப்பும்.**

ஆர்வத்துடன் அமைக்கப்பட்ட நிறுவனமாகிய ஊர்க்காவல் படை 1963-ஆம் ஆண்டில் செயல்படத் தொடங்கியது. தமிழ் நாடு முழுவதிலும் இரவு ரோந்து, போக்குவரத்துக் கட்டுப்பாடு ஆகிய வாலாயமான பணிகளில் காவல் துறையினருக்கு இப் படையினர் தொடர்ந்து உதவி செய்கின்றனர்.

ஊர்க்காவல் படையினரை நிர்வகிக்கும் பணி சென்னை வடக்கு சரகம் காவல்துறை டெபுடி இன்ஸ்பெக்டர்-ஜெனரலிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாடு ஊர்க்காவல் படையின் ஒரு பிரிவினர் 1970 நவம்பரில் ஹைதராபாத்தில் நடந்த இரண்டாவது அனைத்து இந்திய ஊர்க்காவல் படை விளையாட்டுப் போட்டியில் பங்கெடுத்துக் கொண்டார்கள்.

இம் மாநிலத்தில் நடந்த ஊராட்சிகள் தேர்தலின் போதும், இடைக்காலப் பொதுத் தேர்தலின் போதும் ஊர்க்காவல் படையினர் ஆற்றிய சிறப்பான பணி குறிப்பிடத்தக்கதாகும்.

**காவல் படையினருக்குக் குடியிருப்பு வசதி.**

காவலர் குடியிருப்பு வசதித் திட்டம் 1955-56-ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்டது. காவல் துறை சார் நிலைப்பணியாளர்களில் 80 சதவீதத்தினருக்குக் குடியிருப்பு வசதிகள் செய்து தருவதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இதுவரை 60 சதவீதத்தினருக்குக் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. இத் திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

இதுவரை மாவட்டங்களிலும், சென்னை மாநகரிலும் 111 இன்ஸ்பெக்டர்களுக்கும், ஐந்து ரிசர்வ் இன்ஸ்பெக்டர்களுக்கும், 393 சப்-இன்ஸ்பெக்டர்களுக்கும், 47 ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்களுக்கும், உதவி சப்-இன்ஸ்பெக்டர் ஒருவருக்கும், 40 ரிசர்வ் உதவி சப்-இன்ஸ்பெக்டர்களுக்கும், 876 தலைமைக் காவலர்களுக்கும், 5,384 காவலர்களுக்கும் குடியிருப்புகள் கட்டித் தரப்பட்டுள்ளன. ஆவடியில் படைக்கலம் தாங்கிய சிறப்புக் காவல் படையைச் சேர்ந்த உதவித் தளவாய்கள் இருவருக்கும், ஒரு சுபேதார்-மேஜருக்கும், சுபேதார்கள் எட்டுப் பேருக்கும், ஜமேதார்கள் 20 பேருக்கும், பணிப் பட்டயம் பெறாத 512 அதிகாரிகளுக்கும் (Non-Commissioned Officers) / பிற பதவித்தர அதிகாரிகளுக்கும், மலபார் சிறப்புக் காவல்படையின் முதல் பிரிவைச் சேர்ந்த சுபேதார் மேஜர் ஒருவருக்கும், சுபேதார் ஒருவருக்கும், பணிப்பட்டயம் பெறாத 81 அதிகாரிகளுக்கும், பிற பதவித்தர அதிகாரிகளுக்கும் குடியிருப்பு வசதிகள் செய்துதரப்பட்டுள்ளன. 512 குடியிருப்புகள் பல்வேறு நிலைகளில் கட்டப்பட்டு வருகின்றன.

காவலர் குடியிருப்பு வசதித் திட்டத்திற்கு 1970-71 வரையில் இந்திய அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ள மொத்தக் கடனுதவி ரூ. 384.79 லட்சமாகும். இத் திட்டம் குறித்து 1970-71 வரையில் இவ்வரசு செய்த மொத்தச் செலவு ரூ. 598.05 லட்சமாகும். மத்திய அரசிடமிருந்து பெற்ற கடனுதவியைக் காட்டிலும் தமிழ் நாடு அரசு கூடுதலாக ரூ. 203.26 லட்சம் செலவு செய்துள்ளது என்பது இதன் மூலம் தெரிய வரும்.

காவலர் குடியிருப்புகள் கட்டுவதற்காக மாநில அரசின் கடந்த ஆண்டு வரவு-செலவுத் திட்ட முதல் பகுதியில் ரூ. 34.24 லட்சமும், இரண்டாவது பகுதியில் ரூ. 15 லட்சமும் ஒதுக்கப்பட்டது. ரூ. 40 லட்சம் கடன் அளிக்குமாறு மத்திய அரசுக்கு எழுதப்பட்டது. ஆனால், ரூ. 20 லட்சம் கடனளிக்க அவர்கள் ஒப்பளிப்பு வழங்கினர். காவலர்க்குக் குடியிருப்பு வசதிகள் செய்து தருவதற்காக மொத்தத்தில் இவ்வரசு இவ்வாண்டு வரவு-செலவுத் திட்டத்தின் முதல் பகுதியில் ரூ. 53.62 லட்சமும், இரண்டாவது பகுதியில் ரூ. 30 லட்சமும் ஒதுக்கியுள்ளது.

நடப்பாண்டில் காவலர்கள் வீட்டு வசதித் திட்டத்திற்காக ரூ. 70 லட்சம் கடன் வழங்குமாறு மத்திய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. ரூ. 15 லட்சம் கடனுதவி அளிப்பதற்கான மத்திய



அரசின் ஒப்பளிப்பு அண்மையில் கிடைத்துள்ளது. காவலர்கள் குடியிருப்புக்கள் கட்டுவதற்காக இவ்வரசு கேட்ட ரூ. 70 லட்சம் கடனில் எஞ்சிய தொகையை மத்திய அரசு விரைவில் வழங்குமென எதிர்பார்க்கிறோம்.

கள்ள நோட்டுகள்

1966-க்கும் 1970-க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் தமிழ் நாட்டுக் காவல் துறையினர் தமது தளரா முயற்சியினாலும், உரிய காலத்தில் நடவடிக்கை எடுப்பதன் மூலமும், கள்ள நோட்டுகள் அச்சிடப்பட்டு புழக்கத்தில் விடப்படுவதைத் தடுத்தனர். 1966-ல் சேலத்தில் கள்ள நாணயம் அச்சிடுவதற்கான அச்சு இயந்திரம், இரண்டு ரூபாய் கள்ள நோட்டு அச்சடிப்பதற்கான பட அச்சுக் கட்டைகள், அச்சுப் பிரதிகள் முதலியவற்றுடன் 18 பேர் கொண்ட ஒரு கூட்டத்தினர் வளைக்கப்பட்டனர். இறுதியில் அவர்களில் பதினொரு பேருக்கு நீண்டகாலச் சிறைத் தண்டனை அளிக்கப்பட்டது. அதே ஆண்டில் புதுக்கோட்டையில், இரண்டு ரூபாய் கள்ள நோட்டுகள் அச்சடிப்பதற்கான அச்சு இயந்திரங்கள், துணைக் கருவிகள் ஆகியவற்றுடன் 11 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் இப்போது, புதுக்கோட்டை உதவி செஷன்சு நீதிபதியின் முன் விசாரணையில் இருந்து வருகின்றனர். அதே ஆண்டில் 17 பேர் அடங்கிய மூன்று கூட்டத்தினர் அச்சுக் கட்டைகள், மற்றைய துணைக் கருவிகளுடன் கைது செய்யப்பட்டனர். அதில் இரு கூட்டத்தினருக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. ஒரு கூட்டத்தினர் பற்றிய வழக்கு நீதிமன்றத்தில் இன்னும் முடிவடையா நிலையில் உள்ளது.

1968-ல் 11 பேர்கள் கைது செய்யப்பட்டனர். இரண்டு ரூபாய் நோட்டுகளை அச்சிட்டு வெளியிடுவதற்கான அச்சு இயந்திரங்களும், மற்ற துணைக் கருவிகளும் கைப்பற்றப்பட்டன. அவர்களில் மூவர் தண்டிக்கப்பட்டனர். அதே ஆண்டில் பத்து ரூபாய் கள்ள நோட்டுகளை சென்னையில் புழக்கத்தில் விட்டதற்காக திருநெல்வேலியைச் சேர்ந்த ஒருவரை தமிழ் நாடு குற்றப் புலனாய்வுத்துறை கைது செய்தது. திருநெல்வேலியில் உள்ள கள்ள நோட்டு அச்சிடப்படும் இடத்தை முற்றுகை இட்டு, அக் கூட்டத்தைச் சேர்ந்த 20 பேர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து ரூ. 37,050 மதிப்புள்ள 3,705 பத்து ரூபாய் நோட்டுகளையும் அச்சு இயந்திரத்தையும் துணைக் கருவிகளையும் கைப்பற்றினர். குற்றஞ்சாட்டப்பட்ட அனைவரும் சென்னை செஷன்சு நீதி மன்றத்தில் விசாரணையில் உள்ளனர்.

1969-ல், அச்சு இயந்திரம் முழுவதும் அச்சடிக்கப்படாத ரூ. 8,38,000 மதிப்புள்ள இரண்டு ரூபாய் கள்ள நோட்டுகள் ஆகியவற்றுடன் ஒரு கூட்டத்தினர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் இப்போது விசாரணையில் இருந்து வருகின்றனர். 100 ரூபாய் கள்ள நோட்டுகள் அச்சடித்தமைக்காக சேலத்தில் 9 பேர்

அடங்கிய மற்றுமொரு கூட்டத்தினர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் பெருமளவில் நோட்டுகளை அச்சிட்டுப் புழக்கத்தில் விடுவதற்கு முன்னர் அச்சு இயந்திரங்களும் ஏனைய பொருட்களும் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டன.

தமிழ் நாடு குற்றப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த கள்ள நோட்டுகளைக் கண்டுபிடிக்கும் தனிப் பிரிவு நகரக் காவல் துறையினரின் நெருங்கிய உடனுழைப்புடன் 1971-ம் ஆண்டு ஜூன் மாதம் 14-ம நாளன்று கேரளத்தினர் 5 பேர் கொண்ட கூட்டத்தை கைது செய்தது. அவர்கள் சுத்தமாக அச்சடிக்கப்பட்ட 1,000 நூறு ரூபாய் கள்ளநோட்டுக்களுடன் சென்னைக்கு வந்து அதில் ஒரு பகுதியை சென்னை மாநகர், காஞ்சீபுரம், ஓங்கோல் (ஆந்திரப் பிரதேசம்) ஆகிய இடங்களில் புழக்கத்தில் விட்டனர். குற்றப் புலனாய்வுத் துறை, கேரளத்தைச் சேர்ந்த இந்த 5 பேரையும் சேர்த்து 11 பேரைக் கைது செய்தது. அவர்களிடமிருந்து ரூ. 82,700 மதிப்புள்ள 827 நூறு ரூபாய் கள்ள நோட்டுக்களைக் கைப்பற்றியது. கேரள குற்றப் புலனாய்வுத் துறையுடன் ஒருங்கிணைந்து புலனாய்வு செய்ததில் (கோட்டயம் மாவட்டம்) கோழஞ்சேரியில் உள்ள அச்சடிக்கும் இடம் கண்டு பிடிக்கப்பட்டது. கேரளக் குற்றப் புலனாய்வுத் துறையினர் மேலும் 3 பேர்களைக் கைது செய்தனர். இது தொடர்பாக மேலும் புலனாய்வு செய்யப்பட்டு வருகிறது.

கள்ள நோட்டுகள் அச்சடிப்பு வழக்குகளைக் கவனிப்பதற்காக மூன்று இன்ஸ்பெக்டர்கள், ஆறு சப்-இன்ஸ்பெக்டர்கள், நான்கு தலைமைக் காவலர்கள், ஆறு காவலர்கள், ஒரு தட்டச்சர் அடங்கிய தனிக் குற்றப் புலனாய்வுப் பிரிவு ஒன்று உள்ளது. 1970 அக்டோபரில் செயல்படத் தொடங்கிய இப் பிரிவு, சேலத்தில் இரண்டு ரூபாய் கள்ள நோட்டு அச்சடிக்கப்படும் இடத்தையும் கேரளத்தில் 100 ரூபாய் கள்ள நோட்டு அச்சடிக்கப்படும் இடத்தையும் கண்டு பிடித்தது.

### சிலைத் திருட்டுகளைக் கண்டுபிடிப்பது.

தொன்மையான கலைப் பொருள்களாகக் கருதப்பட்டு, அதிக விலை பெறக் கூடிய சிலைகள்- கலைவண்ணம் பொருந்திய கலைப் பொருட்கள் தென்னிந்தியாவில் உள்ள தக்க பாதுகாப்பு இல்லாத ஏராளமான கோயில்களில் பெருமளவில் காணப்படுகின்றன. அருங்கலைப் பொருள் சேகரிப்பவர்கள் அவற்றை விரும்பி ஏற்பதால் அவற்றின் விலை விரைவாக உயர்ந்தது. சிலை, கலைப் பொருட்கள் திருட்டில் ஈடுபடுகின்ற சமூக விரோதிகளுக்கு இது நல்ல ஊதியம் தரும் தொழிலாக அமைந்தது.

சென்னை காவல்துறையைச் சேர்ந்த ஆராய்ச்சி நிலையத்தில் சிலைத் திருட்டு பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இத் திருட்டுகளைத் தடுப்பதற்கான வழிவகைகள் விவாதிக்கப்பட்டன. சிலைகள், அருங்கலைப் பொருட்களின் திருட்டுக்களைப் புலனாய்வு செய்வதற்கான குறிப்புகள், இத்தகைய திருட்டுகளில் ஈடுபட்டுள்ள





கூட்டத்தினர், தனிப்பட்ட நபர்கள் ஆகியோர் பற்றி விவரங்கள் அடங்கிய ஆய்வு அறிக்கை இம் மாநிலத்தில் உள்ள எல்லாக் காவல் நிலையங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

பாதுகாப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்துவதன் மூலமும், இக் கலைப்பொருட்களை அயராது கண்காணித்து வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதன் வாயிலாகவும், நமது பழங்கால வரலாற்றுச் சின்னங்களுக்கு எவ்வித ஊறும் ஏற்படாத வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும், தேசத் துரோகிகளாலும் சமூக விரோதிகளாலும், அரும் பெரும் கலைப் பொருட்களுக்கு எவ்விதத் தீங்கும் ஏற்படா வண்ணம் கவனித்துக்கொள்ள வேண்டும் என்றும் எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், காவல்துறை அதிகாரிகளுக்கும் கட்டளையிடப்பட்டுள்ளது. தேவைபடும் பொழுதெல்லாம், தனி படைப்பிரிவுகள் அமைத்து, சிலைத் திருட்டு தொடர்பான குற்றங்கள் மிகவும் கவனமாகப் புலனாய்வு செய்யப்பட்டு வருகின்றன. சிலைத் திருட்டுக்களைப் பற்றி புலனாய்வு செய்வதற்கென்றே தமிழ் நாடு குற்றப் புலனாய்வுத் துறையில் குற்றப்பிரிவில் கீழ்க்கண்ட தனிப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்:—

1. இரண்டு இன்ஸ்பெக்டர்கள்.
2. இரண்டு சப்-இன்ஸ்பெக்டர்கள்.
3. இரண்டு தலைமைக் காவலர்கள்.

சிலைத் திருட்டு, கொள்ளைக் கூட்டத்தினர் பற்றி புலனாய்வு செய்தல், சிலைத் திருட்டுகளில் ஈடுபடுகின்ற கூட்டத்தினரைக் கைது செய்தல் குற்றங்களைக் கண்டுபிடித்துத் தடுப்பதில் வெற்றி பெறுவதற்கான மாவட்ட மாநில அளவுகளில் இச் சிக்கல் பற்றி அவ்வப்போது ஆய்வு செய்தல் ஆகியவை சிலைத் திருட்டுக்களை தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் முக்கியமானவையாகும். காவலர்கள் அளிக்கின்ற பாதுகாப்பைத் தவிர, கோவில் அதிகாரிகளும் சிலைத் திருட்டுக்களைத் தடுப்பதற்காக பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளார்கள்.

### காவலர் பதக்கங்கள்.

1970-71-ல் இந்திய அரசு, தமிழ் நாட்டு காவல்துறை அதிகாரிகளுக்கு, காவல்துறை வீரப் பதக்கம் ஒன்று (வீரர் இறந்த பின் கொடுக்கப்படும் பரிசு) தகைசால் பணிக்காக காவல்துறை குடியரசுத் தலைவர் பரிசு, மெய்யணைப்புப்பணி பரிசுகள் நான்கு, பாராட்டத்தக்க பணிக்காக 10 காவலர் பதக்கங்கள், ஆகியவற்றை வழங்கியுள்ளது. ஒரு பதக்கத்தைத் தவிர, மற்ற எல்லாப் பதக்கங்களையும் 1970 டிசம்பர் 18-ஆம் நாள் அன்று சென்னையில் நடத்தப்பட்ட காவலர் பதக்க அணிவகுப்பில் தமிழ்நாட்டு ஆளுநர் வழங்கினார்.

1971 ஜூலை 17]

இத்துடன் கும்பகோணம் அரசினர் கலைக்கல்லூரியைச் சேர்ந்த மாணவர் ஒருவர் காவிரியாற்று வெள்ளத்தில் சிக்கிய ஒரு பையனை காப்பாற்றியமைக்காக இந்திய அரசு அவருக்கு "உயிர் காப்பான் பதக்கம்" (Jeevan Raksha Pathak) ஒன்றை வழங்கியது.

### முதலமைச்சர் காவலர் பதக்கம்.

மாநிலக் காவலர்களின் வீரச்செயல், கடமை உணர்வு, மிக உயரிய பற்றுறுதி ஆகியவற்றிற்காக "தமிழ் நாடு முதலமைச்சர் காவலர் பதக்கம்" என்னும் புதிய பரிசு முறை ஒன்றைத் தமிழ் நாடு அரசு வழங்க வகை செய்துள்ளது. இதில் காவல்துறை மாவட்ட சூப்பிரண்ட் உட்பட, வீரத்துடன் பணிபுரியும் காவற் படையினர் அனைவருக்கும் பரிசு வழங்கப்படுகிறது. தமிழ் நாடு தீயணைப்புப் பணியைச் சேர்ந்த 10 ஆண்டுக்காலம் பணிபுரிந்த கோட்டத் தீயணைப்பு அதிகாரிகள் உட்பட தீயணைப்புப் படை உறுப்பினர்களுக்கும் இப் பரிசு வழங்கப்படும். நெடுங்காலமாகப் பணிப்புரிந்துள்ளவர்களுக்கும் முதலிடம் கொடுக்கப்படுகின்றது. ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 15-ஆம் நாள் இவ்வரசு பரிசை அறிவிக்கிறது. பதக்கங்கள் பெறுவோர் ரொக்கத் தொகையும் பெறுவர்.

இத் திட்டத்தின்கீழ் 1970 செப்டம்பர் 24 காவல்துறை அதிகாரிகள், காவலர்கள் ஆகியோருக்கு முதலமைச்சர் காவலர் பதக்கம் வழங்கப்பட்டது.

### அனைத்திந்திய காவலர் விளையாட்டுகள் 1970.

1970 மார்ச்சு 13-ஆம் நாள் முதல் ஏப்ரல் 5-ஆம் நாள் வரையில் போபாலில் நடைபெற்ற அனைத்திந்திய காவலர் விளையாட்டுப் போட்டியில் தமிழ் நாடு காவலர் விளையாட்டுக் குழு கலந்து கொண்டு 33 புள்ளிகளைப் பெற்று ஆறுவது இடத்தை வகித்தது. ஐந்து வெள்ளிப் பதக்கங்களும், ஒரு வெண்கலப் பதக்கமும் பெற்றது.

1970 நவம்பர் 10-ஆம் நாள் முதல் 17-ஆம் நாள் வரை சிம்லாவில் நடைபெற்ற அனைத்திந்திய காவலர் பணிப் போட்டியில் தமிழ் நாடு காவற் படையினர் கலந்துகொண்டு வெற்றியும் பெற்றனர். தமிழ் நாடு காவல் பிரிவினர் "குற்றப் புலனாய்வில் அறிவியல் கருவிகள்." என்னும் போட்டியில் கலந்துகொண்டு மூன்றாவது ஆண்டாகத் தொடர்ந்து வெற்றிக் கோப்பையைத் தட்டிச் சென்றனர்.

### தேர்தல்கள்.

மாநிலம் முழுவதிலும் நடைபெற்ற ஊராட்சித் தேர்தல்கள் மூன்று நிலைகளில் 1970, ஜூலை 25-ம் நாள், 28-ம் நாள், 31-ம் நாள் ஆகிய நாட்களில் நடந்தன, 10 நகராட்சிகளில் நகராட்சித்



1971 ஜூலை 17]

தேர்தல்கள் 1970, டிசம்பர் 28-ஆம் நாள் அன்று நடந்தன. இடைக் காலப் பொதுத் தேர்தல்கள் மூன்று நிலைகளில் 1971, மார்ச்சு 1-ஆம் நாள், 4-ஆம் நாள், 7-ஆம் நாள் ஆகிய நாட்களில் நடந்தன. தேர்தல்கள் ஒழுங்காகவும், அமைதியாகவும் நடப்பதற்கு விரிவான பந்தோபஸ்தும், பாதுகாப்பு ஏற்பாடுகளும் காவல் துறையினால் செய்யப்பட்டன. தமிழ் நாட்டில், இடைக்காலத் தேர்தலின் போது 51 வன்முறை நிகழ்ச்சிகள் நடந்தன. தேர்தல்கள் நடைபெறுவது இந் நிகழ்ச்சிகளால் பாதிக்கப்படவில்லை. தேர்தல்கள் மொத்தத்தில் அமைதியாக நடந்தேறின. சில இடங்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாக வன்முறை நிகழ்ச்சிகள் நடந்தன. மற்றபடி, தமிழ்நாட்டில் திட்டமிட்ட வன்முறைச் செயல் எதுவும் நடக்கவில்லை.

### காவல்துறை பொதுமக்கள் தொடர்புகள்.

காவல் துறையினருக்கும், பொதுமக்களுக்குமிடையேயான நல்லுறவு தொடர்ந்து பேணப்பட்டது. கிராமக் கண்காணிப்புக் குழு காவல்துறையினருக்குத் தொடர்ந்து உதவி புரிந்து வந்தது. சிறுர் சங்கம், ஊர்க்காவலர்கள் படை, சென்னை மாநகர் காவல் துறை பொதுமக்கள் தொடர்பு அதிகாரி, சென்னை காவல்துறை துணைக்கமிஷனர் (போக்குவரத்து உரிமம்) அலுவலகத்தின் வளவில் உள்ள சிறுர் போக்குவரத்துப் பூங்கா, போக்குவரத்து மரியாதை வாரத்தைக் கடைப்பிடித்தல், பத்திரிகையாளர்களின் பிரதிநிதிகளுடன் அவ்வப்போது கலந்தாலோசித்தல்-இவை போன்ற செயல்கள் காவல்துறையினருக்கும் பொதுமக்களுக்கும் இடையே நல்லுறவு வளர்வதற்கு உதவி செய்தன.

### வேலை வாய்ப்புகள்.

தமிழ் நாடு காவல்துறையில் முதல்நிலைக் காவலர்கள் பதவிகளை ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இந்தப் புதிய நிலையில் இரண்டாயிரத்து நூறு பதவிகளை ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்தக் காலியிடங்களில், பள்ளி இறுதித் தேர்வில் தேறிய ஆயிரம் இளைஞர்கள் நேரடி நியமனம் மூலம் நியமிக்கப்படுவர், எஞ்சியுள்ள ஆயிரத்துநூறு பதவிகள் துறையின் தகுதி பெற்ற காவலர்களுக்குப் பதவி உயர்வு கொடுப்பதன் மூலம் நிரப்பப்படுகின்றன. முக்கியமான காவல் நிலையங்களிலும் பிற காவல் அலுவலகங்களிலும் அவர்கள் நியமிக்கப்படுவார்கள். குற்றங்களைப் புலனாய்வு செய்வதிலும், வழக்குகளில் நடவடிக்கை எடுப்பதிலும் அவர்களின் நுண்ணறிவும், திறமையும் உரிய அளவுக்குப் பயன்படுத்தப்படும்.

### மோட்டார் சைக்கிள்களும், சைக்கிள்களும் வழங்குதல்.

முக்கியமாகக் கிராமப்பகுதிகளில் காவல்நிலையம் ஒன்றுக்கு ஒரு மோட்டார் சைக்கிள் வீதம் 100 காவல்நிலையங்களுக்கு 100 மோட்டார் சைக்கிள்கள் வாங்கவும், கிராமங்களில் உள்ள காவலர்

[1971 ஜூலை 17

களுக்கு வழங்குவதற்காக 5,000 சைக்கிள்கள் வாங்கவும் அனுமதித்து அரசு 1971, ஜூன் 14-ஆம் நாள் அன்று ஆணைகள் பிறப்பித்துள்ளது. சைக்கிள்கள் வழங்குவது உதவித்தொகை-கடன் அடிப்படையில் இருக்கும் (சைக்கிள்களின் விலையில் 40 சத வீதம் உதவித் தொகையாகக் கொடுக்கப்படும், எஞ்சியது கடனாகக் கொடுக்கப்படும்). மோட்டார் சைக்கிள் ஒன்றுக்கு ரூ. 5,700 என்ற வீதத்தில் 100 மோட்டார் சைக்கிள்கள் வழங்குவதற்காகும் தொடராச் செலவு ரூ. 5,70,000 ஆகும். சைக்கிள் ஒன்றுக்கு ரூ. 225 என்ற வீதத்தில் 5,000 சைக்கிள்கள் வாங்க ஆகும் செலவு ரூ. 11,25,000. காவலர்களுக்கு மோட்டார் சைக்கிள்களும்; சைக்கிள்களும் வழங்குவதால் காவலர்களின் திறமை கூடுதலாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## காவல்துறை ஆணைக்குழு.

பொது நிர்வாகத்தில் காவல்துறை முக்கியமான இடத்தை வகிப்பதோடு, மதிநுட்பம் வாய்ந்த துறையாகவும் செயல்படுகிறது. தற்கால நிலைமைகளில் குற்றம், போக்குவரத்து, சட்டம்-ஒழுங்கு ஆகிய பிரச்சினைகள் கூடுதலாவதுடன், சிக்கல் மலிந்தவையாகவும் உள்ளன. தற்கால நடைமுறைகளில் காவல் துறையினர் எப்படிச் செயல்படவேண்டும் என்பதை மதிப்பிடுவதற்காக இந்த அரசு 1969 டிசம்பரில் காவல்துறை ஆணைக்குழு ஒன்றை நியமித்தது. இந்த ஆணைக்குழு தன்னுடைய அறிக்கையை 1971 ஜனவரியில் அரசுக்குப் பணிந்தனுப்பியது. இந்த அறிக்கை மூன்று பாகங்களாக உள்ளது; காவல் துறையினரின் முக்கியமான பிரச்சினைகளைப் பற்றியும், அவைகளைத் தீர்ப்பதற்காக பரிவுரைகளைப்பற்றியும், விரிவான விளக்கத்தை முதல் பகுதி தருகிறது. பரிவுரைகளின் செயல்முறைகளை இரண்டாம் பகுதி அளிக்கிறது. காவல் துறையினரின் முக்கியமான பிரச்சினைகளைக் குறிப்பிடுவதற்காக ஆணைக்குழு சேகரித்த புள்ளி விவரங்களை மூன்றாம் பகுதியில் காணலாம்.

முதல் பகுதியில் முக்கிய அறிக்கையின் பரிவுரைகள், இறுதி அத்தியாயத்தில் 133 இனங்களின்கீழ் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இதுவரை கீழ்குறிப்பிட்டுள்ளவை குறித்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது:—

(அ) சம்பள ஆணைக்குழு, காவல்துறை ஆணைக்குழு ஆகியவற்றின் பரிந்துரைகளின் அடிப்படையில் சம்பளங்கள், படிகள் வழங்குதல் ;

(இ) முதல்நிலைக் காவலர்கள் என்ற 1,000 புதிய பதவிகளை ஏற்படுத்த அனுமதி வழங்கல், தற்போதுள்ள 1,100 காவலர் பதவிகளை முதல்நிலைக் காவல் பதவிகளாகத் தரம் உயர்த்துதல்;

(உ) இம் மாநிலத்தில் 60 புதிய காவல்துறை வட்டங்களை ஏற்படுத்துதல்;

(எ) சப்-டிவிஷன்களுக்கும் வட்டங்களுக்கும் வழங்குவதற்காக 43 மோட்டார் வண்டிகள் வாங்க அனுமதி வழங்கல்;



1971 ஜூலை 17]

(ஐ) கிராமப்புறங்களில் உள்ள காவல் நிலையங்களுக்குக் கொடுப்பதற்காக 100 மோட்டார் சைக்கிள்கள் வாங்க அனுமதி அளித்தல். உதவிப் பணத்தைக்கொண்டு கிராமங்களில் உள்ள காவல் நிலையங்களின் காவலர்களுக்கு 5,000 சைக்கிள்களை வழங்குவது பற்றி காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரலின் செயற்குறிப்புக்கு அனுமதி வழங்குதல்.

ஆணைக்குழுவின் பிற பரிவுரைகள் தற்போது உள்துறையில் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. இவை இயன்ற விரைவில் செயல்படுத்தப்படும். ஆணைக்குழுவின் பரிவுரைகள் அனைத்தையும் முழுவதுமாகச் செயல்படுத்துவதற்கு ஆண்டு ஒன்றுக்குக் கூடுதலாக ரூ. 3.44 கோடி தொடர் செலவும், தொடராச் செலவாக ரூ. 5.06 கோடியும் ஆகும். நிர்வாக நிலையையும், நிதிநிலையையும் கருத்தில் கொண்டு இப் பரிவுரைகளை ஐந்தாண்டுக்கால அளவில் படிப்படியாகச் செயல்படுத்துவது அவசியமாகிறது. போக்குவரத்து, செய்திப் போக்குவரத்து, அறிவியல் சாதனங்கள் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து மாநிலக் காவல்துறையைச் சீரமைக்கும் திட்டங்களுக்காகும் தொடராச் செலவுகளுக்காக இந்திய அரசு கடன்-மானியம் கொடுப்பதன் மூலம் இந்த அரசுக்கு உதவி புரியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## தீ அணைப்பு.

மாநிலம் தொழில்மயமாக்கப்பட்டதன் காரணமாக தீ அணைப்பு துறையின் சிறப்பு பெருகிவருகிறது. முன்னுரிமை அடிப்படையில் மாநிலத்தில் தீ அணைப்பு நிலையங்களைப் படிப்படியாக ஏற்படுத்துவதற்குத் திட்டம் ஒன்று அரசிடம் உள்ளது. தற்போது மாநிலத்தில் 58 தீ அணைப்பு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும் 10 தீயணைப்பு நிலையங்களுக்கு முன்னரே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவைகளுக்கான கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்ட பின்னர் அவை செயல்படத் தொடங்கும்.

தீயணைப்பு நிலையப் பணியாளர் 1970-ல் 4,447 அழைப்புகளுக்கிணங்கி தீப்பிடித்த இடங்களுக்குச் சென்று தீயை அணைத்தனர். இதில் 3,922 அழைப்புகள் உண்மையான தீ விபத்து பற்றிய அழைப்புகளாகும். 30 இடங்களில் கடும் தீவிபத்துகள் ஏற்பட்டன. 1970-ல் தீயினால் சேதப்படுத்தப்பட்ட அல்லது அழிக்கப்பட்ட சொத்துக்களின் மதிப்பு ரூ. 70.11 லட்சமாகும். தீயிலிருந்து சேதப்படாமல் காக்கப்பட்ட சொத்தின் மதிப்பு ரூ. 903.23 லட்சமாகும்.

தீ அணைப்பு தொடர்பான கடமைகள் தவிர, பல்வேறு சட்டங்கள், விதிகள், ஆகியவற்றின் கீழ் உரிமம், வழங்கப்பட்ட உரிமம் வழங்கப்படுகிற இடங்களைப் பார்வையிடுவதன்மூலம் தீ விபத்தைத் தடுப்பதற்கு தீ அணைப்புத்துறை அதிகாரிகள் தங்கள் ஆலோசனைகளை நல்கினர். தீ விபத்துத் தடுப்பு முறைகளைப் பின்பற்ற

# தமிழ் நாடு சட்டப் பேரவை.

**திங்கட்கிழமை, 1971 ஜூலை 19.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

*Breeding of horses in Hosur Cattle Farm*

* 302 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal to start a horse breeding station in the Hosur cattle farm;

(b) if so, the variety of horses to be introduced; and

(c) when it will be started?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) இல்லை.

(இ) & (உ) இக் கேள்விகளுக்கு இடம் எழவில்லை.

THIRU B. VENKATASWAMY : Is it a fact that a private member—Major Kumaramangalam—has applied for 80 acres of land at Hosur cattle farm, so as to start a horse breeding station?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, மேஜர் குமாரமங்கலம் அவர்கள் தனிப்பட்ட முறையில் அந்த வட்டாரத்தில் ஒரு குதிரை வளர்ச்சிப் பண்ணை அமைப்பது பற்றி விரும்பி விண்ணப்பித்திருந்தார். அதற்கான இடம் ஓரளவு ஒதுக்கப்பட்டு, அந்த இடம் வழங்குவதற்கான சில கட்டளைகள் தீர்மானிக்கப்பட்டு, அந்தக் கட்டளைகளுக்கு (கண்டிஷன்ஸ்) உட்பட்டு, அவர் அதை ஏற்றுக்கொள்ளுகிறாரா என்று அறியும்படி இந்தத் துறையினுடைய இயக்குநர் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதைப் பற்றி முழு விவரங்கள் இன்னும் முடிக்கப்படவில்லை.

THIRU B. VENKATASWAMY : Sir, previously it was a horse breeding farm. Now there are no horses in this cattle farm. Will this Government come forward to introduce more horses under Government sector at Hosur cattle farm?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, நாட்டுக்கு மிக இன்றியமையாததாக இருக்கின்ற, மிக அத்தியாவசியமாக இருக்கின்ற, மாடுகள், ஆடுகள், பன்றிகள், கோழிகள் ஆகியவைகளை வளர்க்கும் திட்டமே கூட இன்னும் முழு வெற்றி பெறவில்லை. இதை வெற்றி பெறச் செய்வது இந்த நாட்டு மக்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு—அவர்களுடைய உடல் நலத்தைப் பாதுகாப்பதற்கு—மிக இன்றியமை

தீயணைப்பு அதிகாரிகள் அரசுக் கட்டிடங்களை அவ்வப்போது பார்வையிட்டனர். இவ்வாண்டில் அப்படிப் பார்வையிட்ட கட்டிடங்களின் எண்ணிக்கை 1,656 ஆகும். மேலும், தீயணைப்புத் தொடக்க முறைகளில் அரசுப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தீயணைப்புத் துறையில் அரசிதழ் பதிவுபெற்ற 10 அதிகாரிகளும் 2,655 அரசிதழ் பதிவு பெறாத பணியாளர்களும் உள்ளனர்.

## காவற் படையின் கட்டுப்பாட்டு ஒழுங்கு.

காவல்துறையினரின் உயரிய ஒழுக்க முறையும் கட்டுப் பாடும் முன்போலவே போற்றத்தக்க வகையில் இருந்தன. தொழிலாளரிடையே அமைதியின்மை, உழவர்கள் கிளர்ச்சி, இடைத் தேர்தல்கள், ஊராட்சித் தேர்தல்கள், இடைக்காலப் பொதுத் தேர்தல்கள், தகைமையாளர் வருகைகள், ஆகியவற்றின் காரணமாக ஆண்டு முழுவதும் காவலர்களுக்கு பணிச்சுமை அதிகமாக இருப்பினும், சட்டம்-ஒழுங்கைப் பராமரிப்பதிலும், குற்றங்களைத் தடுப்பதிலும், குற்றங்களைக் கண்டுபிடிப்பதிலும் காவல்துறையினர் தங்கள் கடமைகளைப் பாராட்டத்தக்க முறையில் செவ்வையாக நிறைவேற்றினர். காவல்துறையில் எல்லாப் பதவியினரும் ஆர்வத்துடனும் பற்றுடனும் தொடர்ந்து பணிபுரிந்து வந்தனர்.

இவ் விவாதத்தில் கலந்துகொள்ளும் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் காவல்துறையினருக்கும், பொதுமக்களுக்குமிடையே நல்லுறவுகளை மேலும் நன்முறையில் உயர்த்துவதற்கும், காவலர்கள் தங்கள் கடமைகள் மேலும் செவ்வையாக நிறைவேற்றுவதற்கும் வழி வகைகளைக் கோடிட்டுக்காட்டும் வகையில் தேவையான கருத்துரைகளையும், ஆலோசனைகளையும் நல்குவராயின், அவற்றை அரசு மகிழ்ச்சியுடன் வரவேற்கும்.

## இணைப்பு 2-அ.

### (i) 1970-ஆம் ஆண்டு டிசம்பர் 31-ம் நாள் உள்ளவாறு காவல் படையினரின் அமைப்பு.

(மலபார் சிறப்புக் காவற்படையினர், படைக்கலந்தாங்கிய சிறப்புக் காவற்படையினர் நீங்கலாக).

| | |
|---|---|
| காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் | 1 |
| காவல்துறை துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல் (சென்னை, காவல்துறைக் கமிஷனர் உட்பட). | 9 |
| காவல்துறை சூப்பிரண்டுகள் | 59 |
| காவல்துறை கூட்டு சூப்பிரண்டுகள் | 5 |
| காவல்துறை உதவி சூப்பிரண்டுகள் | 23 |
| காவல்துறை துணை சூப்பிரண்டுகள் | 95 |
| காவல்துறை இன்ஸ்பெக்டர்கள் | 397 |





| | |
|---|---|
| காவல்துறை சப்-இன்ஸ்பெக்டர்கள் | 1,581 |
| காவல்துறை உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள் | 166 |
| தலைமைக் காவலர்கள் | 3,339 |
| காவலர்கள் | 20,874 |

### (ii) படைக்கலந்தாங்கிய ஏமக்காவல் படைகள் (மாவட்டங்களிலும் மாநகரிலும்.)

| | |
|---|---|
| காவல்துறைத் துணை சூப்பிரண்டுகள் வகை | 17 |
| ரிசர்வ் இன்ஸ்பெக்டர்கள் | 45 |
| ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்கள் | 237 |
| ரிசர்வ் உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள் | 157 |
| தலைமைக் காவலர்கள். | 1,028 |
| காவலர்கள் | 9,290 |
| மொத்தம் | 37,314 |

யாததாக இருக்கிறது. இதற்கான பெரு முயற்சி வெற்றி பெறும் கட்டத்தில், அடுத்த முயற்சியாக குதிரையைப்பற்றிக் கவனிக்கப் படும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** குதிரை வளர்ப்புக்காகக் கொடுக்கின்றதுபோல், அதே இடத்தில்—ஓசூரில் ஆடு, மாடு, வளர்ப்புக்காகவும் வசதி செய்து கொடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இந்த குதிரை வளர்ப்பு ஒரு தனி வகையான—சிறப்பான—திறமையோடு நடைபெற வேண்டியதாகும். ஆடு, மாடு வளர்ச்சி கிராமந்தோறும் பெருக வேண்டியதாகும். எல்லாக் கிராமங்களிலும், பரவலான முறையில், கிராம மக்களிடத்திலிருக்கும் ஆடு மாடு இனத்தை—தரத்தை—உயர்த்துவதற்கான முறையில் இப்பொழுது செயற்கை முறைக் கருத்தரிப்புத் திட்டம் பெருமளவில் நிறைவேறிக் கொண்டு வருகிறது. அது மட்டுமல்லாமல், ஓசூர் பண்ணையிலேயே கூட, இன்றைக்கே மூன்று பொலி குதிரைகளும் ஐந்து பெண் குதிரைகளும் அடையாளத்திற்காக வைக்கப்பட்டிருக்கின்றன.

மணல்மேட்டில் கால்நடை மருத்துவ மனை

* 803 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தொகுதி, மணல்மேடு பேரூராட்சிப் பகுதியில் கால் நடை மருத்துவ மனை ஒன்று அமைத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் தற்போது அரசு பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** மாயூரம் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருக்கிற காரணத்தாலும், விவசாயிகள் நிறைந்த பகுதியில் கால்நடைகள் ஏராளமாக இருக்கின்ற காரணத்தாலும், இனியேனும் மணல்மேடு பேரூராட்சிப் பகுதியில் ஒரு கால்நடை மருத்துவ மனையினைத் துவங்கிட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, ஒவ்வொரு பஞ்சாயத்து ஒன்றியப் பகுதியிலும் ஒரு கால்நடை மருத்துவ மனை ஏற்படுத்தப்படுவது என்பதுதான் இன்றைக்குள்ள நடைமுறையாகும். மணல்மேட்டிலிருந்து 20 கிலோ மீட்டர் தூரத்தில் ஒரு சிறந்த கால்நடை மருத்துவ மனை நடைபெற்று வருகிறது. மணல்மேட்டுப் பகுதியிலிருந்து ஒன்றரை கிலோமீட்டர் தூரத்தில் உள்ள கிழை என்கிற இடத்தில் ஒரு கால்நடை மருந்தகம் நடைபெற்று வருகிறது. ஒன்றரை கிலோ மீட்டர் தூரத்தில் மருந்தகம் இருக்கும்போது விலங்கினங்களுக்கு 'கால்நடை' என்று பெயர் இருக்கும்போது அது அதிக தூரம் என்று கருதப்படுவதற்கு இடம் இல்லாததால், மணல்மேட்டில் ஏற்படுத்துவதற்கு இப்பொழுது வாய்ப்பு இல்லை.



**திரு. எஸ். முருகையன் :** சில ஊராட்சி ஒன்றியங்கள் 20 ஊராட்சிகளைக் கொண்டதாக இருக்கின்றன. சில ஊராட்சி ஒன்றியங்கள் அறுபதுக்கும் மேற்பட்ட ஊராட்சிகளைக் கொண்டதாக இருக்கின்றன. ஒன்றியத்திற்கு ஒரு கால்நடை மருத்துவ மனை என்ற நிலை இருக்கின்ற காரணத்தால் அது போதாது. ஆக, அதிகப்படியான ஊராட்சி மன்றங்கள் இருக்குமிடங்களில் அதிகப்படியாக ஒன்றுக்கு மேற்பட்ட கால்நடை மருத்துவ மனைகளைத் திறக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இந்தக் கால்நடைத் துறை எப்படி இயங்குகிறது என்பதேகூட பொது மக்களுக்கும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் கூட சரியாக விளக்கப்படவில்லை என்று எண்ணிக்கொண்டிருப்பவன் நான். இப்பொழுது ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் உள்ள மருந்தகத்தில் ஒருவர் கால்நடை மருத்துவராக, அந்த மருத்துவ துறையிலிருந்து நியமிக்கப்பட்டிருக்கிறார். இன்னொருவர், கால் நடை வளர்ச்சித்திட்டத்தின்கீழ் கிராமங்கள்தோறும் பரவலாக வளர்க்கும் அந்தப் பணிகளைச் செய்வதற்காக, டெவலப்மென்ட் முறைகளுக்காக, நியமிக்கப்பட்டிருக்கிறார். அதுமட்டுமல்லாமல், இந்த மாயூரம் ஒன்றியத்தில்கூட, ஏழு கால்நடை மருத்துவக் கிளை நிலையங்கள் இருக்கின்றன. ஊத்துக்குப்பை, மறையூர், வில்லிய நல்லூர், தலைஞாயிறு, காளி, கடலங்குடி, பொன்னூர் ஆகிய இடங்களில் இப்படிப்பட்ட மருத்துவத் துணை நிலையங்கள் மூலமாக அந்தந்த வட்டாரத்தில் விலங்கினங்களுக்குச் செய்யப்பட வேண்டிய எல்லாவிதமான மருத்துவ சிகிச்சைகளும் முறைப்படி வழங்கப்படுகின்றன. இந்த சிகிச்சை அளித்து இருக்கின்ற பயன்படாத விலங்கினங்களைக் காப்பாற்றிக்கொண்டிருக்கிற அந்தக் கடமையில் அரசாங்கத்தின் பணத்தையும் நேரத்தையும் செலவழிப்பதை விட விலங்கினங்களின் தரத்தை உயர்த்துவது தான் மிகப் பெரிய கடமையாக, நல்ல கடமையாக மக்கள் சமுதாயத்திற்குக் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் எவ்வளவு அவசியமோ அதைப்போல். விலங்கின சமுதாயத்தில் விலங்கினத்தின் தரத்தை உயர்த்தும் பெரும் கடமையை இன்றைய தினம் நிறைவேற்ற அரசாங்கம் முயற்சித்துக் கொண்டிருக்கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** கீ வில்லேஜ் ஸ்கீம், இன்டென்ஸிவ் காட்டில் டெவலப்மென்ட் ப்ராஜெக்ட் போன்ற திட்டங்கள் இப்பொழுது நிறுத்தப்பட்டிருப்பதாக அறிகிறோம். இம் மாதிரியான திட்டங்கள் நிறுத்தப்பட்டிருப்பதன் காரணமாக, கால்நடை இனப் பெருக்கம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தத் திட்டங்களை மீண்டும் செயல்படுத்த அரசாங்கம் முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, மைய கிராமத் திட்டம், மும்முரா விலங்கின அல்லது கால்நடை வளர்ச்சி திட்டம் ஆகிய திட்டங்கள் ஏற்கனவே கையாளப்பட்டபோது, சில பகுதிகளில் மட்டும்தான் பயன்பட்டது. உதாரணத்திற்கு,

கோயம்புத்தூர் மாவட்டம், மதுரை மாவட்டம் ஆகிய மாவட்டங்களில்தான் மிகத் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டன. தமிழ் நாடு முழுவதும் பரவலாக ஏற்பட வேண்டிய வளர்ச்சிக்கு அது போதுமான துணையாக இல்லை. எனவே, ஓராண்டு, ஒன்றரை ஆண்டுக்குள்ளேயே, இந்த இலாகாவினுடைய வேலைகள் இப்படித் தனித்தனித் துறைகள் மூலமாக—ஸ்பெஷலிஸ்ட் மூலமாக இயங்குவதற்குப் பதில், ரீஜனல் டைரக்டர் மூலமாக, ஒருங்கிணைந்த திட்டத்தின்கீழ், எல்லா ஒன்றியங்களிலும், எல்லாக் கிராமங்களிலும் கூடுமான வரையில் விலங்கின வளர்ச்சி—கால்நடை வளர்ச்சி—ஏற்படச் செய்ய வேண்டும் என்பதை அரசாங்கத்தின் நோக்கமாகக் கொண்டு செயல்படுத்திக் கொண்டு வருகிறது.

**திரு. கே. என். குமாரசாமி:** அமைச்சரவர்கள் பதில் சொல்லும் போது, கால்நடை வளர்ச்சிக்காக அரசாங்கம் பல நன்மைகளைச் செய்வதாகக் கூறினார்கள். ஆனால், கால்நடை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நல்ல கன்றுகள் வளர்ப்பதற்காக மத்திய அரசாங்கத்திலிருந்து கிராண்ட் மாதம் இருபது ரூபாய் கொடுக்கப்பட்டு வந்து, இப்பொழுது நிறுத்தப்பட்டு விட்டதே, அதற்கு என்ன காரணம்?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** 'ஸப்ஸிடி' என்ற சொல்லால் சொல்லாவிட்டாலுங்கூட, 'இன்ஸென்டிவ்' அடிப்படையில் ஊக்குவிப்பதற்காகத் தருவதாகும். ஒரு பகுதியை 'ஸப்ஸிடி' ஆகக் கொடுக்கும்போது மீதத்தை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும். ஸப்ஸிடி தொடர்ந்து தரப்பட்டால் நோக்கமே நிறைவேறாது என்பது ஒரு காரணம். ஸப்ஸிடி தரப்பட்டபோது, அது வசதியுள்ளவர்கள், செல்வந்தர்கள் இப்படிப்பட்டவர்களுக்குத் தான் பயன்பட்டது என்பது மற்றொரு காரணம். தரத்தில் ஏற்பட்ட குறைபாடு மூன்றாவது காரணம். செலவுக் கணக்கு ஏறிய அளவுக்குப் பலன் ஏற்பட்டதா என்கிற சந்தேகம் ஒரு காரணம். எனவே, நிறுத்தப்பட்டது. அதற்குப் பிறகு எந்த வகையில் ஊக்கம் அளிப்பது என்பது பரிசீலிக்கப்படுகிறது.

**திரு. ரா. ரா. முனுசாமி:** இப்பொழுது கால்நடை மருத்துவமனை—மருந்தகம்—இரண்டு மாவட்டங்களுக்கு ஒன்றாக—தென்னார்க்காடு மாவட்டத்திற்கும் வடார்க்காடு மாவட்டத்திற்கும் சேர்ந்து ஒன்றாக—இயங்குகிறது. அந்த நிலையை மாற்றி, உடனுக்குடன் மருத்துவ வசதி அளிக்கும்பொருட்டு அந்தந்த வட்டாரத்திலேயே மருந்தகத்தை ஏற்படுத்தி, ஆங்காங்கு உள்ள கால்நடைகளுக்கு மருந்து கொடுக்க அரசு முன்வருமா? குறிப்பாக, செஞ்சி வட்டத்தில் மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியத்தில் மருந்தகம் இருந்தும் அங்கு போதிய மருந்து கிடைக்கவில்லை ஆகவே, அந்தந்த தாலுக்காவில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் எதையோ நினைத்துக் கொண்டு எதையோ கேட்டிருக்கிறார்கள். அப்படியாவது கேட்டதற்காக நன்றி.



இராணிப்பேட்டையில் நோய்த் , தடுப்பு மருந்துகள் உற்பத்தி செய்கின்ற அடிப்படையில் ஒரு நிலையம் இயங்கி வருகிறது. தென்னார்க்காடு, வடார்க்காடு மாவட்டங்களிலுள்ள கால்நடைகளுக்கு மருந்து கொடுக்கும் அந்த முறை ஏதும் இல்லை. கிண்டியில் நோய்த் தடுப்பு மருந்துகள் எப்படி உற்பத்தி செய்யப்பட்டு எல்லா இடங்களுக்கும் வழங்கப்படுகின்றனவோ அதுபோல், கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களைத் தடுப்பதற்காக இராணிப்பேட்டையில் உற்பத்தியாகும் தடுப்பு மருந்துகள் எல்லா மாவட்டங்களுக்கும் வழங்கப்படுகின்றன எந்த மாவட்டத்திலிருக்கும் மருந்தகமாக இருந்தாலும் தேவையான அளவு மருந்துகளைப் பெற்றுக் கொள்ளலாம். அப்படிப் பெற்றுக்கொள்ளாவிட்டால், அது பற்றி தெரிவித்தால் உடனடியாக அதைக் கவனிக்க முயற்சி எடுத்துக் கொள்ளுவோம்.

**திரு. எஸ். நல்லசாமி:** தலைவர் அவர்களே, கால்நடைக்கு ஊசி போடுவதில், இப்பொழுது பசு மாட்டுக்கு ஊசி போடுவது அதிகமாக இருக்கிறது. எங்கள் கரூர் பகுதியில், கிராமங்களில் இருப்பது அதிகமாக காங்கயம் இனத்தைச் சேர்ந்தவைகள். ஊசி போடுவது, சிந்தி இனத்தைச் சேர்ந்ததாக இருக்கிறது. ஆனால் ஊசி என்ன இனம் என்று உழவர்களுக்குத் தெரிவதில்லை. ஆனால் இந்த ஊசி போட்டுவிட்டதன் காரணமாக காங்கயம் பசுவில் சிந்திக் கன்று, வேலைக்கு உதவாத கன்றுகள் ஆட்டுக்குட்டிகள் போல் சிந்திக் கன்றுகள் பெற்றுத் தவிக்கிறார்கள். அது அரசுக்கு தெரியுமா? அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, இந்த செயற்கை கரு உற்பத்தித் திட்டம் நிறைவேறும்போது, அதற்கான ஊசி போடும் போது, கருவை உற்பத்திச் செய்யும்போது, இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் போது, அது எந்த வகையான இனத்தைச் சேர்ந்தது என்பது மருத்துவர்களுக்கு நிச்சயமாகத் தெரியும். அப்படித் தெரியாவிட்டால், உடனடியாக அதைத் தெரிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஒரு பகுதிக்கு தரமான கன்றுகள் கிடைக்கும் வகையில் சரியான விந்துக்கள் வழங்கப்படவில்லை என்றால், அதை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தால், உடனடியாக விசாரித்து, தவறுகளைத் திருத்த முயற்சிகள் எடுக்க முடியும்.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவர் அவர்களே, இந்த செயற்கை முறை கரு தரிப்பதில், 50 சதவிகிதம்தான் பலன் ஏற்படுகிறது. பாக்கி 50 சதவிகிதம் பயன் இல்லை என்பதும் அமைச்சருக்குத் தெரியுமா? அப்படிப் பல்வேறு பகுதிகளில், ஒரு வருஷம் இரண்டு வருஷங்களாகியும், இஞ்ஜெக்ஷன் போட்டும் கருத்தரிப்பதில்லை என்பதும் அரசாங்கத்திற்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, இந்த செயற்கை முறை கரு தரிக்க. உற்பத்தி செய்யும் திட்டத்தில் குறையில்லை. அந்தத் திட்டம் பயன்படுத்துவதன் காரணமாக

[1971 ஜூலை 19

குறைபாடுகளில்லை. ஆனால் கருவை ஏற்றுக் கொள்ளும் தகுதி யற்றதாக இருக்கலாம்; அல்லது கருச் சிதைவு நோய்க்கு ஆளாகி யிருக்கலாம். சில கணவன் மனைவிக்கு குழந்தைகளே இல்லை என்பது போன்ற நிலையாகவும் இருக்கலாம்.

### திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் வருவாய்த்துறை அதிகாரிகளுக்கு குடியிருப்புகள்.

* 304. விஞ—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிகளுக்கும், தாசில்தார்களுக்கும் அந்தந்த தாலுக்கா தலை நகரங்களில் குடியிருப்பு வீடுகள் கட்டிக்கொடுக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் ;** இம் மாநிலத்திலுள்ள கோட்ட ஆட்சித் தலைவர்கள், வணிகவரி அதிகாரிகள், வட்டாட்சித் தலைவர்கள் ஆகியவர்களுக்கு குடியிருப்பு வீடுகள் கட்டும் திட்டம் ஒன்றிற்கு தேதி 26-5-70-ஆம் நாளிட்ட வருவாய்த்துறையின் 1589-ம் எண் ஆணையில் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இந்த ஆணை திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள கோட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் வட்டாட்சித் தலைவர்களுக்கும் பொருந்தும்.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, கோட்டாட்சி, வட்டாட்சித் தலைவர்களுக்கு வீடு கட்டித்தருவதில், இந்தக் குடியிருப்புக்களை ஹவுசிங் போர்டு மூலமாக கட்டித்தர அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அந்தத் திட்டம்தான் அரசாலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இந்த ஆணை 26–5–1970-ல் பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. தமிழகம் பூராவுக்கும் இது செல்லும். அப்படியானால், இந்த ஆண்டு இறுதிக்குள் தாசில்தார் போன்றவர்களுக்கு குடியிருப்புக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளியைப் பற்றி மட்டும் கேள்வியிருப்பதால், புள்ளி விவரங்கள் அது பற்றி மட்டும்தான் இருக்கின்றன. தமிழ் நாடு பூராவுக்கும் ரூ. 53 லட்சம் செலவில் ஸ்டேட் ஹவுசிங் போர்டு மூலம் கட்டித்தர ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்று கூறினார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் பத்மநாபபுரத்தில் ஆர்.டி.ஓ. ஆபிசுக்குக் கட்டடம் கட்ட அடிக்கல் நாட்டி இன்னமும் வேலை துவங்கவில்லை. அது எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?



1971 ஜூலை 19]

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, கேள்வி திருச்சி மாவட்டத்தைப் பற்றியது என்றாலும், பத்மநாபபுரம் சம்பந்தமாக, அதற்கான கண்ட்ராக்டர் ஒப்பந்தம் முடிந்து விட்டது. வேலை சீக்கிரமே துவங்கப் போகிறார்கள்.

### *Relief to victims in fire accidents in Mylapore area*

* 305 Q.—THIRU A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether financial help was offered to the victims of the fire accidents in Mylapore area in Madras city about the 10th May 1971; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** 10-5-1971 அன்று சென்னை மைலாப்பூர் வட்டாரத்தில் தீ விபத்து ஏதும் ஏற்படவில்லை. மைலாப்பூர் கபாலித் தோட்டத்தில் 9–5–1971 அன்று ஒரு தீ விபத்தும், 11-5-1971 அன்று மற்றொரு தீ விபத்தும் ஏற்பட்டன.

(இ) 9-5-1971 அன்று மாலை 1 மணியளவில் சென்னை மைலாப்பூர் கபாலித் தோட்டத்தில் ஒரு தீவிபத்து ஏற்பட்டது. 323 குடிசைகள் அழிந்து போயின. 737 குடும்பங்கள் பாதிக்கப் பட்டன. இத் தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமாக ரூ. 33,680 வரை உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

மற்றொரு தீ விபத்து 11-5-1971 அன்று மாலை 2 மணியளவில் சென்னை மைலாப்பூர் கபாலித் தோட்டத்தில் ஏற்பட்டது. அதில் 85 குடிசைகள் பாதிக்கப்பட்டன. 185 குடும்பங்கள் வீடிழந்தனர். பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ. 8,080 வரை உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

### சென்னி மலையிலுள்ள சாயப்பட்டறை

* 306 விஞ—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

சென்னி மலை நெசவாளர்கள் கூட்டுறவு உற்பத்தி சங்கத்திற்குச் சொந்தமான சாயப்பட்டறையில் நாளொன்றுக்கு எத்தனை பிரிநூலுக்கு சாயம் போடப்படுகிறது?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சென்னி மலை நெசவாளர்கள் கூட்டுறவு உற்பத்திச் சங்கத்திற்குச் சொந்தமான சாயப்பட்டறையில் நாளொன்றுக்கு 20,400 முதல் 23,800 பிரிகள் வரை (Hanks) சாயம் போடப்படுகிறது. அதாவது நாளொன்றுக்கு 3-லிருந்து 3½ பேல்கள் வரை (சிப்பம்) சாயம் போடப்படுகிறது.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விஞ நான் கொடுத்து நான்கு ஆண்டுகள் ஆகின்றன. என்றாலும், அந்த

பட்டறையில் ஒரு நாளைக்கு 3½ பேல் என்று அமைச்சர் தெரிவித்தார்கள். 3½-க்கும் அதிகமாகச் செய்யப்பட்டதாக ஆடிட் ரிபோர்டில் குறிப்பிட்டிருக்கிறது. அப்படி குற்றச்சாட்டு இருந்தால், நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அப்படிப்பட்ட குற்றச்சாட்டு பற்றித் தகவல் இல்லை.

*Prices of yarn supplied to Handloom Industry.*

* 307 Q.—THIRU N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Industries be pleased to state the steps taken by the Government to reduce the prices of the yarn supplied to the Handloom Industry in the State?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கைத்தறித் தொழிலுக்கு வழங்கப்படுகிற நூலிழையின் விலைகளைக் குறைக்க அரசு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது:—

(1) நூலிழையின் விலையைக் குறைப்பது குறித்து ஆய்வு செய்யவும், பொருத்தமான நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஆலோசனை கூறவும் அரசு சார்புள்ளவர்கள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டது.

(2) புரவலாக்கப்பட்ட துறைக்கு சிக்கெடுக்கப்பட்ட பருத்தி நூலிழையை (carded cotton yard) வழங்குவதற்காக, பருத்தி நூலிழைச் சிறப்புத் தொகுப்புத் திட்டம் இந்திய அரசால் கொண்டு வரப்பட்டது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** கைத்தறி நெசவாளர்களுக்கு சப்ளை செய்யப்படும் நூல் விலை குறைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வெகு காலமாக இருந்தாலும், இன்னும் கமிட்டி ஸ்டேஜில் தான் இருக்கிறது. குறைந்த பட்சம் அரசுக்குச் சொந்தமான கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியாகும் நூலை குறைந்த விலையில் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் பொறுத்தவரையில் சங்கடம் இல்லை. நம்முடைய கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்து அவ்வப்போது விலை நிர்ணயம் செய்து கொடுக்கப்படுகிறது. இங்கே கேட்டிருக்கும் பிரச்சினை கூட்டுறவுக்கு வாராத, நெசவாளர்கள் குடும்பங்களுக்குத் தேவையான நூல்கள் பற்றியது. அதன் விலை ஏறும்போது, என்ன செய்ய முடியும் என்பதைப் பார்த்து, நூற்பாலைச் சொந்தக்காரர்களை அழைத்து பேசி குறைந்த விலைக்குக் கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. நிரந்தரமாக கைத்தறி நெசவாளர்களுக்கு நூல் விலையைக் குறைக்க, வரிச் சலுகை கொடுத்தால் எந்த விலை அளவில் குறையும் என்பது யோசனையில் இருக்கிறது.

**திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, கைத்தறியாளர்களுக்கு உபயோகமாகும் நூல், "ஹாங்க் யார்ன்" என்று தனியாக உற்பத்தி செய்யப்படுகிறது. ஆகையால் அந்த





ஹாங்க்குக்கு மட்டும் போடப்படும் சேல்ஸ் டாக்ஸை நீக்குவதால் விலை குறையும். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அப்படியொரு கோரிக்கை இருந்து வருகிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** கூட்டுறவு ஆலையில் உற்பத்தியாகக் கூடிய நூல் சில காரணங்களால் கூட்டுறவு ஆலையில் பணியாற்றக் கூடிய கைத்தறியாளர்களுக்குக் கிடைக்காமல் போகிறது. திரும்ப வந்து தனியாருக்குக் கொடுக்கப் படுகிறது என்ற புகார் அரசுக்கு வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அப்படி ஒன்றும் இருப்பதாக தெரியவில்லை. அந்த அந்த மாவட்டத்திலுள்ள கூட்டுறவு நூற்பாலைகள்—கூட்டுறவு நெசவாளர்களுக்காகவே உற்பத்தி செய்கிறார்கள். சில சமயத்தில் பருத்தி விலை உயர்வதால் விலையேறுகின்ற நிலை ஏற்படுகிறபோது நெசவாளர்களுக்கு நூல் விலை உயர்ந்து போகாதிருக்க நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. ஆனால் நூற்பாலைகளும் தாங்கள் லாபம் அடைய வேண்டாமா என்கிறார்கள்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** கூட்டுறவு நூற்பாலைகள் வெளிமார்க்கெட் விலை உயர்ந்தால் நூல் விலையை உயர்த்தியே கூட்டுறவு நெசவாளர் சொசைடிகளுக்குக் கொடுக்கிறார்கள். வெளிமார்க்கெட்டில் விலை குறையும்போது உடனே விலையைக் குறைத்துக்கொள்ள முன் வருவதில்லை. அப்படியின்றி வெளிமார்க்கெட் விலை குறைந்தால் நூல் விலையை அதற்கு ஏற்றாற்போல உடனே குறைத்து நெசவாளர்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கூட்டுறவு நூற்பாலைகள் விலையைக் குறைப்பதில்லை என்ற புகாரை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராய் இல்லை. காரணம் அடிக்கடி நம்முடைய இயக்குநர் எல்லா நூற்பாளர்களையும் அழைத்துப் பேசி நியாயவிலையில் நெசவாளர்களுக்கு நூல் கிடைக்க நூல் விலையை அவ்வப்போதுள்ள மார்க்கெட் நிலவரப்படி, கூட்டியோ, குறைத்தோ தான் வருகிறார்கள்.

**திரு. என். கணபதி:** பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு இந்தக் கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். கூட்டுறவு நூற்பாலைகளுக்கு தொழிலாளர்களை எடுக்கும்போது கூட்டுறவுச் சங்கங்கள் முன்மொழியவேண்டுமென்ற விதி இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தனிக் கேள்வி போடுங்கள். அதற்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை.

**திரு. எம். சுரேந்திரன்:** நூல் விலை ஏறுவது தொழில் துறையில் இருக்கிற நெசவாளர்களைப் பாதிக்கக்கூடிய விஷயமாக இருக்கிறது. கூட்டுறவு நூற்பாலைகள் நெசவுத் தொழிலாளர்களுக்கு

உதவவேண்டுமென்ற நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டன. ஆகவே, மார்க்கெட் விலையைக் கணக்கிட்டு குறைந்த விலையில் நெசவாளர்களுக்கு நூல் கிடைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** விலையை குறைத்துக்கொடுப்பது என்பது வேறு. கூட்டுறவு நெசவாலைகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்துவது என்பது வேறு. இரண்டாவதை ஒப்புக்கொள்ள முடியாது.

*Rise in price of silk sarees.*

*308 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government are aware of the increase in prices of Kancheepuram, Kollegal, etc., sarees in the State; and

(b) if so, the action taken to arrest the rise in prices.?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) கச்சாப்பட்டு, சரிகை, வண்ணச் சாயம், இரசாயனப் பொருட்கள் ஆகியவற்றின் விலை உயர்வினால் பட்டுச் சேலையின் உற்பத்தி மதிப்பு உயர்ந்ததன் காரணமாக பட்டு சேலையின் விலையும் உயர்ந்துள்ளது. இவற்றில் ஒரு சில கச்சாப் பொருள்கள் மைசூர், குஜராத் போன்ற மாநிலங்களிலிருந்து வாங்கவேண்டியுள்ளது. அங்கு இதற்கென என்று விலைக்கட்டுப்பாடும் இல்லை. இருப்பினும் கச்சாப்பட்டின் விலையினைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு மத்தியப் பட்டு வாரியமும் இந்திய அரசும் கேட்டுக்கொள்ளப்பட்டன. கொள்ளேகால் தமிழ் நாட்டில் இல்லை.

**திரு. கி. ஜெயராமன் :** நம்முடைய மாநில கைத்தறி கார்ப்பரேஷன் மூலமாக தனியாருக்கும், கூட்டுறவு சங்கத்திற்கும் சாய மருந்து நியாயவிலையில் வாங்கிக் கொடுப்பதுபோல் மைசூரிலிருந்து பட்டு நூலையும் அரசே வாங்கித் தர முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** வாங்குவதில் சிக்கல் இல்லை. அடிக்கடி மைசூரில் இருந்து கச்சாப் பட்டு கிடைக்காத காரணத்தினால், வெளிநாடுகளுக்கு அதிகம் ஏற்றுமதி செய்யப்பட்டு விடுகிற காலத்தில் விலை உயர்வு ஏற்படுகிறது. சில்க் போர்டு இதை கவனத்தில் கொண்டு நெசவாளர்கள் பாதிக்கப்படாதிருக்க வழிவகை செய்ய கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. ச. சங்குமுத்து தேவர் :** மாநிலத்தில் இருந்து அனுப்பப்படும் பட்டுப் பொருள்களின் மூலம் கிடைக்கும் அந்நியச் செலாவணி மாநிலத்திற்கே கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இது பட்டுச் சேலையின் விலை உயர்வைப் பற்றியது.



**திரு. கே. ஏ. வகாப் :** இப்போது தாளவாடியில் கூட்டுறவுச் சங்கம் மூலமாக பட்டு உற்பத்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. நமது நாட்டிலேயே அறிஞர் அண்ணா அவர்களால் புகழ்பெற்ற காஞ்சிபுரம் பட்டுக்கும் புகழ்பெற்றிருக்கிற காரணத்தினால் பட்டுநூல் விலையைக் குறைக்க அதிக அளவில் அங்கே உள்ள கூட்டுறவு சங்கத்தை அபிவிருத்தி செய்ய முன் வருவார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பட்டுச் சேலை உற்பத்தியில் சங்கடம் ஏற்படவில்லை. இதற்குத் தேவையான மூலப்பொருளை மைசூரில் இருந்து வாங்குவதில் சிக்கல் இருக்கிறது. இதைத் தவிர்க்கத்தான் இப்போது அரசாங்கம் ஹோசூர், தாளவாடிப் பகுதியில் பட்டுநூல் உற்பத்தியை வெற்றிகரமாக அதிகப்படுத்த எல்லா நடவடிக்கையும் எடுத்து வருகிறது.

**திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் :** தற்சமயம் பட்டு விலை குறைந்து 160-க்கு விற்கிறது என்று அறிக்கை கூறுகிறது. ஆனால் கூட்டுறவு சங்கங்கள் முதற்கொண்டு பட்டுச்சேலை விலையைக் குறைக்காமல் இருக்கிறார்கள். சேலைகளின் விலையைக் குறைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பட்டுக்களின் விலை அடிக்கடி இறங்குவதும், ஏறுவதுமாகத்தான் இருக்கின்றன. மைசூரிலிருந்து அதிக அளவு ஏற்றுமதி செய்யப்பட்டால் ஏறி விடுகிறது. இல்லையானால் விலை குறைகிறது.

**திரு. சோ. கருணைநாதன் :** காஞ்சீபுரம் பட்டுக்கு வெளிநாடுகளில் கிராக்கி உண்டா? ஏற்றுமதி செய்யப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஓரளவு ஏற்றுமதி செய்யப்படுகிறது. முழு விவரம் இல்லை.

**திரு. கா. வேழவேந்தன் :** சூரத்தில் இருந்து ஜரிகையை எதிர்பார்த்து நிற்கிற காலம் மாறவேண்டும் என்பதற்காக 25 லட்சம் ரூபாயில் காஞ்சீபுரம் அருகே ஜரிகைத் தொழிற்சாலை வருகிறது. அதுபோல மைசூரில் இருந்து பட்டுநூலை எதிர்பார்த்திருக்கிற காலம் மாற இங்கேயே பட்டுநூலை உற்பத்தி செய்ய அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இதைத்தான் முன்னர் விளக்கினேன். நம்முடைய மாநிலத்திலேயே உற்பத்தி செய்ய ஹோசூர், தாளவாடி பிர்க்காவில் வாய்ப்பு இருக்கிறது. அதுபூராவையும் கண்டறியத்தான் தனி அலுவலரை அங்கே அனுப்பி அது பற்றிய முயற்சியில் அரசு ஈடுபட்டு வருகிறது.

Thiru B. VENKATASWAMY : From the answer given by the Hon. Minister that Thalavadi and Hosur are having good climatic condition to improve the production of silk, may I know from the

Hon. Minister whether this Government will take some intensive steps so as to increase silk production, where there is large potentiality in that area. Will this Government come forward to take some immediate steps to implement it intensively?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மாண்புமிகு உறுப்பினருக்கே இது பற்றித் தெரியும். அவரது பகுதியில் ஸ்டேட் பார்மிங் முறையில் அத்தகைய முயற்சிக்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம். அங்குள்ள விவசாயிகள் நிலத்தைச் சொந்தமாக்கவேண்டும்—குத்தகைக்கு வேண்டாம் என்கிறார்கள். நிலத்தைச் சொந்தமாக்கினால் அவர்கள் பட்டுப்புழுவுக்காக இந்தப் பயிரைத்தான் வைப்பார்களா என்பது சந்தேகம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் விவசாயிகளுடன் பேசி இது பற்றி ஒத்துழைப்புத்தர அவர்கள் முன்வரும்படி செய்ய வேண்டும்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா :** குற்றாலம், செங்கோட்டைப் பகுதியில் அபிவிருத்தி செய்ய திட்டம் இருந்ததே. அது கைவிடப்பட்டு விட்டதா? அல்லது அந்தத் திட்டம் செயல்பட இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அரசின் சார்பில் அங்கே ஒரு யூனிட் வைத்திருக்கிறோம். பெரும் அளவுக்கு இந்த இடத்திலே உற்பத்தி செய்ய வாய்ப்பு இல்லை என்றே தெரிகிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** கைத்தறித் துணிகளுக்கு ரிபேட் கொடுப்பதுபோல அரசாங்கம் பட்டுச்சேலைகளுக்கும் தள்ளுபடி கொடுக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தள்ளுபடி என்றாலே அரசாங்கப் பணம் செலவழியும் என்றுதான் பொருள்.

**இராமநாதபுரம் மாவட்டத்தில் பனை ஓலைப்பொருட்கள்.**

* 303 வினா—திரு. க. சுப்பு : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பனையோலை, ஈக்கி, நார் முதலானவற்றைக்கொண்டு செய்யப்படும் குடிசைத் தொழில்களை நம்பி வாழும் இராமநாதபுரம் மாவட்டத்து லட்சக்கணக்கான மக்கள், உற்பத்தி செய்யும் பொருள்களுக்குப் போதிய விலைவாசி, மார்க்கெட் வசதிகள் இல்லாமல் நசித்து வருவதைத் தடுக்க, அவர்களுக்கு நல்வாழ்வளிப்பதற்கு அரசு எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** "இராமநாதபுரம் பனையோலைப் பொருட்கள் உற்பத்தி செய்வோர் கூட்டுறவு குடிசைத் தொழிற்சங்கம்" என்ற ஒரு கூட்டுறவு தொழிற்சங்கம் இராமநாதபுரம் மாவட்டத்தில் இயங்கி வருகிறது. அதன் உற்பத்திப் பொருட்கள் அரசு விற்பனை நிலையங்கள் மூலமாகவும், புதுடில்லியிலுள்ள மத்திய அரசு கைத்தறி மற்றும்—கைவினைப் பொருட்கள் கழகம் மூலமாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. தரமுள்ள பொருட்கள் அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.





மேலும், இராமேஸ்வரத்தில் பனையோலைப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு தொழில் துறையால் ஒரு வியாபார நிலையம் நடத்தப்பட்டு வருகிறது. இந்த நிலையத்தில் தரமுள்ள பலதரப்பட்ட பனையோலைப் பொருட்கள் செய்வதற்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்நிலையத்தின் பொருட்கள் அரசுத்துறை விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன.

**திரு. கே. டி. கே தங்கமணி :** இராமநாதபுரம் மாவட்டத்தில் மதுவிலக்கு ரத்து செய்துவிட்டதையொட்டி இந்தத் தொழிலை அபிவிருத்தி செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் இந்தத் தொழிலில் ஈடுபடுகிறார்கள். எனவே இராமநாதபுரம் மாவட்டத்தில் அதிகமான கூட்டுறவு அமைப்புகளை ஏற்படுத்தி இந்தத் தொழிலை அபிவிருத்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன். முற்பகல் 9-30

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எங்கெங்கே கூட்டுறவுச் சங்கம் அமைக்க முன்வருகிறார்களோ அங்கே எல்லாம் உதவி செய்கிறோம். சங்கம் அமைப்பதை விட இதில் உற்பத்தி செய்கிற பொருள்களை விற்பனை செய்வது தான் கஷ்டமாக இருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவர் அவர்களே, பனை ஓலைப் பொருட்களுக்கெல்லாம் வெளிநாடுகளில் அதிக கிராக்கி இருக்கிறதென்றும், ஆனால் அவர்கள் கேட்கும்போது நாம் அனுப்புவதில்லையென்றும் புகார் சொல்லப்படுகிறதே, அது உண்மையா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட புகார் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. நாம் அனுப்பியது விற்பனையாவதில்லை என்றுதான் சொல்லப்படுகிறது. ஜப்பானிய நாடு கூட்டுறவுத் துறையில் "ஹாண்டிக்ராப்ட்ஸ்" பொருட்களை, அதாவது பாய் முதலிய பொருள்களை அனுப்பி அங்கேயும் போட்டி இருப்பதாகச் சொல்லப்படுகிறது. நாம் மாவட்டங்கள்தோறும் விற்பனைக்கூடங்கள் அமைத்து உற்பத்தியாகும் பொருட்களைச் சேகரித்து, வெளிநாடுகளுக்கு அனுப்புவது என்றும் பரிசீலனை செய்திருக்கிறோம்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவர் அவர்களே, பனை ஓலையால் செய்யக்கூடிய பொருள்களை நாம் வெளிநாடுகளுக்கு அனுப்புகிறோம் என்று கூறப்படுகிறதே, அதனால் நம் நாட்டிற்குக் கிடைக்கக்கூடிய அந்நியச் செலாவணி எவ்வளவு?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, பனை ஓலையால் செய்யப்படுகிற பொருள்களுக்கு அதிக கிராக்கி இருக்கிறது. இருந்தாலும் கூட, இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளிகளுக்குக் குறைந்த ஊதியம்தான் கிடைக்கிறது. ஆகவே, தொழிலாளிகளுக்கு அதிக ஊதியம் கிடைக்கும்படியாக அரசாங்கம் ஏதாவது திட்டத்தை செயல்படுத்துமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : தலைவர் அவர்களே, ஆங்காங்கு நாம் பயிற்சி நிலையம் வைத்திருக்கிறோம். உற்பத்தி செய்கின்ற பொருள்களை விற்பனைக்கு வைத்திருக்கிறோம். அதிகமான பொருள்கள் விற்பனையடைந்தால், தொழிலாளிகளுக்கு அதிக ஊதியம் கிடைக்கும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி** : தலைவர் அவர்களே, பனை ஓலையால் செய்யப்படும் பொருட்களை எப்படி எப்படியெல்லாம் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று பொதுமக்களுக்குத் தெரியவில்லை. ஆகவே, அதற்கு வேண்டிய அளவு விளம்பரத்தை அரசாங்கம் செய்வதற்கு அந்தந்த மாவட்டங்கள்தோறும் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு செ. மாதவன்** : தலைவர் அவர்களே, மாவட்டங்களின் தலைநகரங்களில் விற்பனை செய்யும் நிலையம் அமைப்பது என்ற முடிவைப் பரிசீலித்துக்கொண்டிருக்கிறோம். ஒரு சில மாவட்டங்களில் விற்பனைக்கூடங்கள் இருக்கின்றன. ஒரு சில இடங்களில் பயிற்சி நிலையங்களை வைத்து அதன்மூலம் பலர் இந்தப் பொருட்களை வாங்குவதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படும்.

### பாய் விற்பனைக்கு வெளிச்சந்தைகள்

* 310 வினா—**திரு. கே. ஏ. வகாப்** : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பத்தமடையில் நெய்யப்படும் பட்டுப்பாய்களுக்கும் வந்தவாசி, வீரநல்லூர், சீர்காழி ஆகிய இடங்களில் நெய்யப்படும் கோரைப்பாய்களுக்கும் போதிய வெளிமார்க்கெட்டுகள் பிடிக்க ஆவன செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : இல்லை.

**திரு. கே. ஏ. வகாப்** : தலைவர் அவர்களே, இந்த பாய்களை தனியார்கள் வாங்கி வெளிநாடுகளுக்கு அனுப்பி, அதனால் நல்ல லாபம்பெறுகிறார்கள். சென்னையிலும் பம்பாயிலும் உள்ளவர்கள் இந்த பாய்களை வாங்கி, வெளிநாடுகளுக்கு அனுப்புகிறார்கள். பத்தமடை பாய் புகழ்பெற்றது. அமெரிக்க நாட்டில் இந்தப் பாய்களை மிகவும் விரும்பி வாங்குகிறார்கள். ஆகவே, அரசாங்கமே இந்தப் பாய்களை எல்லாம் வாங்கி ஏற்றுமதி செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : தலைவர் அவர்களே, அரசாங்கத்தின் சார்பில் விக்டோரியா டெக்னிகல் இன்ஸ்டிடியூடும், மத்திய அரசாங்கத்தின் சார்பில் "ஹேண்ட்லூம் அண்டு ஹேண்டிக்ராப்ட்ஸ் எக்ஸ்போர்ட்ஸ் கார்ப்பொரேஷனும்" இந்த முயற்சியில் ஈடுபட்டு வருகிறது.





### *Scooter factory at Ambattur*

* 311 Q.—THIRU A. SWAMIDHAS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any private parties have been issued licences recently to open a Scooter factory in Ambattur; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : (அ) & (இ) அம்பத்தூரில் ஆண்டொன்றுக்கு 24,000 ஸ்கூட்டர்கள் தயாரிப்பதற்குப் புதிய தொழிற்சாலை ஒன்றை நிறுவ 6—10—1971 வரை செல்திறனுடைய 'இசைவுக்கடிதம்' ஒன்றை, கீழ்க்கண்ட நிபந்தனைகட்டு உட்பட்டு சென்னையைச் சேர்ந்த திரு. ரமண்லால் என். திரிவேதிக்கு இந்திய அரசு வழங்கியது:—

(1) வெளிநாட்டு ஒத்துழைப்பு அனுமதிக்கப்படமாட்டாது.

(2) படிப்படியாக வகுக்கப்பட்ட உற்பத்தித் திட்டமும் மூலதனப் பொருள்கள் இறக்குமதி ஏற்பாடுகளும் இந்திய அரசுக்கு மனநிறைவளிக்கும் வகையில் முடிவு செய்யப்பட வேண்டும்;

(3) துணை உறுப்புகளில் 50 சதவிகிதம் சிறுதொழில் துறையிலிருந்து கொள்முதல் செய்யப்படவேண்டும்.

(4) ஸ்கூட்டரின் முதல் வடிவத்தயாரிப்பு செய்து முடிக்கப்பட்டு, இந்திய அரசு நியமிக்கும் ஆய்வு நிறுவனத்தால் அதன் 'சாலை ஓட்டுத்தகுதி' சோதிக்கப்பட்டு ஏற்பளிக்கப்பட வேண்டும்.

இந்நிறுவனம், இசைவுக் கடிதத்தில் கண்டுள்ளவற்றைச் செயல்படுத்துதலும், அந்நிறுவனத்துக்கு இந்திய அரசு உரிமை வழங்குதலும் பற்றி கூர்ந்து கவனிக்கப்பட்டு வருகிறது.

**திரு. ஏ. சுவாமிதாஸ்** : தலைவர் அவர்களே, இப்போது ஸ்கூட்டர்கள் விற்கின்ற விலையை விட இங்கு உற்பத்தியாகும் ஸ்கூட்டர் குறைந்த விலையில் உற்பத்தி செய்யப்படுமா ? அல்லது கூடுதல் விலை ஆகுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : தலைவர் அவர்களே, ஸ்கூட்டர்கள் உற்பத்தியான பிறகு அதுபற்றி பரிசீலிக்கலாம்.

DR. H. V. HANDE : Is it not a fact that most of the scooters that are manufactured today in Madras are going with a heavy premium because the demand is much more than the supply? May I know the number of scooters that are manufactured right now in Madras and what is the demand ratio, whether this particular factory is going to start functioning within a year or so? How are the Government going to ease the serious demand of the scooter position in Madras City?

[1971 ஜூலை 19

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, புதிய ஸ்கூட்டர் தொழிற்சாலை தமிழ் நாட்டிற்கு வேண்டுமென்ற முயற்சியில் இந்த அரசு ஈடுபட்டு வருகிறது. அதற்கு மத்திய அரசு அனுமதி கொடுத்திருக்கிறார்கள். நாட்டில் பொதுவாக ஸ்கூட்டர் பற்றாக்குறை இருந்து வருகிறது. பற்றாக்குறையைப் போக்க வேண்டுமென்றால் மத்திய அரசுதான் தக்க முடிவு எடுக்க வேண்டும்.

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, சென்னையிலே தொடங்கியிருக்கிற ஸ்கூட்டர் தொழிற்சாலையின் மூலதனம் எவ்வளவு? தமிழ் நாட்டின் தேவையை நிறைவேற்றியதற்குப் பின்னாலேதான் மற்ற மாநிலங்களுக்கு அல்லது மற்ற வெளிநாடுகளுக்கு உற்பத்தியாகும் ஸ்கூட்டர்களை ஏற்றுமதி செய்யவேண்டுமென்று முயற்சி எடுத்துக்கொள்ளப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ .மாதவன் :** தலைவர் அவர்களே, அந்த உரிமம் தனியார் துறையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. உற்பத்திக்குப் பின்னாலேதான் அவர்கள் எந்த அளவிற்கு ஏற்றுமதி செய்ய முடியும் என்பதைப்பற்றிப் பரிசீலிக்கலாம். மத்திய அரசாங்கம் கொடுத்திருக்கிற நிபந்தனைகளின்படி, 'டெக்னிகல் நோ-ஹௌ' இல்லாமல் உற்பத்தி செய்ய வேண்டுமென்று பார்த்தால், அந்த அளவிற்கு வெளிநாட்டிலே ஏற்றுமதி செய்ய முடியுமா என்கிற சந்தேகம் எனக்கு இருக்கிறது. உற்பத்தி செய்ததற்குப் பின்னாலேதான் இதைப்பற்றி யோசிக்க முடியும். இதற்கு மொத்த மூலதனம் கிட்டத்தட்ட 385 லட்சம் ரூபாய்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, ஸ்கூட்டர் ஆரம்பித்த காலத்திலே அது பெண்கள் பிரயாணம் செய்வதற்காகத் தான் ஏற்பட்டது. இன்றைய தினம் இரண்டு பாலாரும் சவாரி செய்யக்கூடிய செல்வாக்கைப் பெற்றிருக்கிறது. ஆகவே, தமிழக அரசு மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி, ஒரு தொழிற்சாலை மட்டுமல்ல, இன்னும் பல தொழிற்சாலைகளையும் அமைக்க தக்க ஏற்பாடுகளைச் செய்யுமா ? மேலும் சர்க்கார் அலுவலர்கள் பலர் பஸ்ஸுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பஸ்ஸுக்காக காத்திராமல் ஸ்கூட்டர்கள் பெற்றுக்கொள்வதற்கு வேண்டிய உதவிகளை அரசாங்கம் செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இப்போதுகூட பெண்கள் ஸ்கூட்டர்களில் பிரயாணம் செய்கிறார்கள். பெண்கள் முன்னாலும் உட்கார்ந்து போகிறார்கள். பின்னாலும் உட்கார்ந்து போகிறார்கள். அரசு ஊழியர்களுக்கு ஸ்கூட்டர்கள் வாங்கித் தருகிற பொறுப்பு உள்துறைக்குக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. உற்பத்தி செய்யப்படுபவைகளில் அரசு ஊழியர்களுக்கென்று பகிர்ந்து கொடுக்கப்பட்டு வருகிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவர் அவர்களே, ஏற்கெனவே சென்னையில் ஸ்கூட்டர் தொழிற்சாலை இருக்கிறது. அம்பத்தூரில் ஒரு புதிய தொழிற்சாலையை ஆரம்பிக்க அப்ஜெக்‌ஷன் கொடுத்திருக்கிறதா ?



1971 ஜூலை 19]

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, எந்தத் தொழிற்சாலையை அம்மையார் அவர்கள் குறிப்பிடுகிறார்கள் என்று தெரியவில்லை. புதிய தொழிற்சாலையை அம்பத்தூரில் நடத்த முன்வந்திருக்கிறார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒரு தொழிற்சாலை சென்னையில் இருப்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, எந்தத் தொழிற்சாலை என்றுதான் கேட்டேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலைக்கு லைசென்ஸ் வழங்குகிறபோது, ஒரு ஸ்கூட்டர் இன்ன விலைக்குத்தான் விற்கவேண்டுமென்று விலையை நிர்ணயம் செய்தால் நன்றாக இருக்கும் அல்லவா ? அப்படிச் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, அந்த அதிகாரம் மத்திய அரசுக்குத்தான் இருக்கிறது.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவர் அவர்களே, தொழிற்சாலையினுடைய முதலீடு சுமார் ¼ கோடி ரூபாய் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சம்பந்தப்பட்ட ரமண்லால் கம்பெனிக்காரர்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் ஆரம்பிக்காவிட்டால், நம்முடைய அரசே அதை ஆரம்பித்து, விரைவாக ஸ்கூட்டர்களை மார்க்கெட்டுக்குக் கொண்டுவர வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களும் அதற்கு மனுப் போட்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் கிடைக்காமல், இவர்களுக்குக் கிடைத்திருக்கிறது. காரணம் என்னவென்று தெரியவில்லை. ரமண்லால் கம்பெனிக்காரர்கள் வேலை தொடங்க தக்க முயற்சி எடுத்து வருகிறார்களா என்று பார்த்து வருகிறோம். இதைப்பற்றி மத்திய அரசுக்கு தெரியப்படுத்தி சரியான முறையில் முயற்சிகள் எடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். இதைப்பற்றி மத்திய அரசுக்கு எழுதியனுப்புவோம்.

**திரு. கு. காமாட்சி :** தலைவர் அவர்களே, ஸ்கூட்டர்கள் விடும்போது விபத்துக்கள் ஏற்பட்டால் தலையில்தான் பலமான காயம் ஏற்படுகிறது. ஆகவே, ஸ்கூட்டர் அளிக்கும் சமயத்திலே கூடவே தலைக்கு தொப்பியையும் சேர்த்துக் கொடுக்க வேண்டுமென்று முயற்சிகள் செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இத்தகைய முயற்சி நமது மாநிலத்தில் எல்லோராலும் பின்பற்றப்படுகின்ற அளவில் குறிப்பு வைக்கப்பட்டிருக்கிறது. தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் இதனால் தொழிற்சாலைகள் நின்றுவிடுவதை அரசாங்கம் ஆதரிக்காது.

***திருமதி த. ந. அனந்தநாயகி :*** *தலைவர் அவர்களே, ஸ்கூட்டர் கம்பெனிக்குத் தமிழர்கள் மனுப் போட்டார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அம்மாதிரி மனுக்களின்பேரில் தமிழக அரசு ஏதாவது பரிந்துரை செய்கிறதா அல்லது மத்திய அரசே முடிவு எடுக்கிறதா ?*

***மாண்புமிகு திரு. செ. மாதவன் :*** *தலைவர் அவர்களே, தமிழக அரசைப் பொறுத்த அளவில், நமக்கு எப்படியாவது தொழிற்சாலை வந்துவிட வேண்டும் என்ற நிலையில் இருக்கிறோம்.*

***திரு. கே. ஏ. வகாப் :*** *தலைவர் அவர்களே, ஸ்கூட்டரில் இப்போது ஒருசேர தம்பதிகள் பிரயாணம் செய்கிறபோது, புடவை சிக்கி, ஆக்ஸிடெண்டுகள் ஏற்படுகின்றன. ஆகவே, பெண்கள் பின்னால் அமர்ந்து கொண்டு செல்லக் கூடாது . . . .* ***(மணியடிக்கப்பட்டது).***

***மாண்புமிகு பேரவைத் தலைவர் :*** *இந்தக் கேள்வி அனுமதிக்கப் படவில்லை.*

### *Fly-over near Gemini*

* 312 Q.—DR. H. V. HANDE :
THIRU N. KITTAPPA :
THIRU K. A. WAHAB : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) when the work for construcring fly-over at the Gemini will be started;

(b) whether the selection of the contractor has been finalised; and

(c) if so, the reasons for the delay in starting the work?

***மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :*** *(அ) வேலைக்கான முன் ஏற்பாடுகள் இப்போது செய்யப்படுகிறது.*

*(இ) ஆம்.*

*(உ) ஜெமினி சந்திப்பில் நீர்க்குழாய், சாக்கடை வடிகால், மின்சாரக் கம்பி இவைகளை வேறு இடம் மாற்ற வேண்டியுள்ளது. இந்த வேலைகளை முடிக்க மாநகராட்சியுடன் கலந்து தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.*

DR. H. V. HANDE : Sir, this particular Fly-over was originally planned about 3-1/2 years ago. May I know why there is such an inordinate delay in constructing it ? I understand that the original contractor had backed out and then tenders were called for. Also may I know whether there is any difference of opinion between the persons who accepted the tenders and also with regard to the conditions laid down for the tender ? Will the Hon. Minister be pleased to give all such details?



THE HON. THIRU S. J. SADIQ PASHA : The proposal was sanctioned in the year 1969 at an estimated cost of Rs. 45 lakhs by the Government in G.O. Ms. No. 1065, Public Works, dated 28th June 1969. Tenders were also finalised. The Government also accepted the alternate design tender proposal No. II of Messrs. East Coast Construction and Industries on 16th November 1970. So orders have been issued. The necessary land acquisition has been done and the work is in progress.

***திருமதி த. ந. அனந்தநாயகி :*** *இந்த ஃப்ளை-ஓவர் பிரிட்ஜை கார்ப்பரேஷனிடம் கொடுத்து நிறைவேற்றினால் காலதாமதம் ஏற்படும். கனம் முதலமைச்சர் அவர்கள் ரோடு போடுவதைக்கூட கார்ப்பரேஷனிடம் கொடுத்தால் காலதாமதம் ஆகும் என்பதால் அவருடைய தொகுதியிலே உள்ள ரோடுகளை பி.டபிள்யூ.டி. யிடம் கொடுத்துச் செய்யச் சொன்னார்கள். எனவே இந்த ஃப்ளை ஓவர் பிரிட்ஜையும் பி.டபிள்யூ.டி. இலாகாவே எடுத்துக் கொண்டு விரைவாக முடிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?*

***மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :*** *இது ஹைவேஸ் இலாகாவால்தான் செய்யப்படுகிறது. மவுண்ட் ரோடு ஹைவேஸ் இலாகாவிலே இருக்கிறது, எனவே அதுதான் செய்கிறது, கார்ப்பரேஷன் செய்யவில்லை. துரிதமாக வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன.*

***திரு. என். கிட்டப்பா :*** *தலைவர் அவர்களே, இந்த ஜெமினிக் கருகில் கட்டப்பட இருக்கிற மேம்பாலத்தைப் போலவே மாயூரத்தில் 44 லட்ச ரூபாய் அனுமதியளிக்கப்பட்டு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு இன்னும் அனுமதி கொடுக்கப்படாத நிலைமையில் இருப்பதை அனுமதி கொடுத்து அதை இறுதியாக்கி உடனடியாக வேலை தொடங்க அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.*

***மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :*** *மாயூரம் மேம்பாலத்தைப் பொறுத்த வரையிலும் அதற்காக டெண்டர்கள் கோரப்பட்டு அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. மிகத் துரிதமாக வேலைகள் தொடங்குவதற்கு ஆன முன் ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.*

***திரு. கே. ஏ. வகாப் :*** *இந்த ஃப்ளை ஓவர் ப்ரிட்ஜை ஜப்பான் போன்ற நாடுகளிலே மிகவும் அற்புதமான முறையிலே கட்டியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே கட்டப்பட வேண்டுமென்று அரசு முயற்சிக்குமா ? இப்பொழுது சென்னையிலே உள்ள பாதாள சுரங்கத்திலே குறைபாடுகளும் வெடிப்புகளும் இருப்பதாகத் தெரிகிறது. அப்படிப்பட்ட குறைபாடுகளைப் போக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?*

***மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :*** *சென்னையில் பாதாள சுரங்கங்களிலே வெடிப்பு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. நான் ஜப்பானுக்குப் போகவில்லை. ஜப்பானில்*

இருக்கின்ற நிலைமைகளைப் பார்த்து நம்முடைய அதிகாரிகள் அதற்காகத் திட்டமிட்டு அதை அரசாங்கம் பரிசீலித்து ஒரு திட்டவட்டமான முடிவுக்கு வந்திருக்கிறது.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ஃப்ளை-ஓவர் பிரிட்ஜைப் பற்றி ஏற்கனவே ஒரு எஸ்டிமேட் போடப்பட்டு வேலைகள் துவங்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி அந்த வேலையை ஆரம்பிப்பதற்கு முன்னால் மறுபடியும் ரிவைஸ்டு எஸ்டிமேட் தேவைப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ரிவைஸ்டு எஸ்டிமேட் தேவைப்படுமா என்று இப்பொழுது சொல்வதற்கில்லை. வேலை துவங்கப்பட்டதற்குப் பிறகுதான் சொல்ல முடியும்.

**திரு. ஏ. எம். இராஜா :** இந்த ஃப்ளை-ஓவர் பிரிட்ஜைக் கட்டுவதற்காக அரசாங்கம்—இடம் போதாமல் இருப்பதால்—தனியார் நிலங்களைக் கேட்டதா? தனியார்கள் அந்த நிலங்களைக் கொடுக்க மாட்டேன் என்று சொன்னார்கள் என்று கூறுகிறார்களே, அதனுடைய விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தனியாரிடமும் கொஞ்சம் தேவை என்று அதிகாரிகள் அறிவித்து இருக்கிறார்கள். ஆர். எம். அருணாசலம் செட்டியார், நுங்கம்பாக்கம், எண். 22, ஆர். எஸ். நம்பர் 156—0-94 கிரவுண்டு 5 செண்ட்கள்; வி. பாலசுப்பிரமணியம், ஜெமினி ஸ்டுடியோ, மயிலாப்பூர், எண். 1, ஆர். எஸ். எண். 3/1—8.24 கிரவுண்டு, 0.40 ஏக்கர். அக்ரி-ஹார்டிகல்சுரல் சொஸைடி, மயிலாப்பூர் எண். 2, ஆர். எஸ். எண். 13—14.60 கிரவுண்டு, 0.81 ஏக்கர். ராஜா சர் அண்ணாமலை செட்டியார் டிரஸ்ட், நுங்கம்பாக்கம், ஆர். எஸ். எண். 48/1—6 கிரவுண்டு, 0.37 ஏக்கர். மேற்படி நான்கு பேர்களுடைய இடங்கள் தேவையாக இருக்கின்ற காரணத்தினால் அவர்களில் ஆர். எம். அருணாசலம் செட்டியார் அவர்களும், ராஜா சர் அண்ணாமலை செட்டியார் டிரஸ்டும் சம்மதம் தெரிவித்து இருக்கிறார்கள். ஆனால் இன்னும் எழுத்து மூலமாகத் தெரிவிக்கவில்லை. மற்ற இரண்டு பேர்களிடமும் தொடர்பு கொள்ளப்பட்டு வருகிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** பம்பாயிலே இருக்கின்ற ஃப்ளை-ஓவர் பிரிட்ஜைப் போன்று நம்முடைய ஜெமினிக்குப் பக்கத்திலே கட்டப்பட இருக்கின்ற பிரிட்ஜும் இருக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாடல் ஃப்ளை-ஓவர் பிரிட்ஜ் இருக்கிறது, வேண்டுமானால் காண்பிக்கிறேன்

THIRU K. M. SUBRAMANIAM : Sir, when the Government are contemplating to construct fly-over bridges, do the Government realise that the interior roads of Madras also need improvement and will they sanction loans for that purpose?





**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இந்தக் கேள்வி ஜெமினி ஃப்ளை ஓவர் பிரிட்ஜைப்பற்றியது. மவுண்ட் ரோடிலே போக்குவரத்து வசதியாக இருக்க வேண்டுமென்று கட்டப்பட இருக்கிறது.

**திரு. என் கணபதி :** ஜெமினியிலே மேம்பாலம் கட்டப்படுவதால் ஜெமினி ஸ்டுடியோ பாதிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஜெமினி ஸ்டுடியோ பாதிக்கப்படாது என்றுதான் அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

*Dams in Hosur Taluk*

* 313 Q.—THIRU B. VENKATASAMY :
THIRU K. S. KOTHANDARAMAIAH : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal to construct dams across the rivers mentioned below :

(i) Sanathkumaranathi near Byrakondapally, Denkanikotta Sub-Taluk.

(ii) Kodiyalam Anicut in South Pennar in Hosur Taluk Dharmapurai District; and

(*b*) if so, when they will be constructed?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) & (இ) ஆம்

(உ) இரு திட்டங்களுடைய வேலையும் தொடங்கும் நிலையில் உள்ளது.

THIRU B. VENKATASWAMY : Sir, is the Government aware that certain people in Mysore have made representation to the Mysore Governor, Shri Dharma Vira on 16th July 1971 with regard to the construction of the Kodiyalam Anicut in Soutth Pennar in Hosur Taluk ? People there are fearing that the Anicut may not come up and so will the Government come forward to give assurance to the people that the Government will go ahead with the project?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : I saw such an allegation in the newspapers. The allegation is baseless. The scheme involves acquisition of 7.88 acres of wet lands and 11.20 acres of dry lands. By the implementation of the scheme, an extent of 200 acres of dry land would be brought under wet cultivation. So, there is no question of the sub submersion of the Mysore lands. The scheme has already been taken up and it will be executed in due course.

[1971 ஜூலை 19

## Master Plan for Mahabalipuram

* 314 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state the details of the Master Plan for the development of Mahabalipuram?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மாமல்லபுரத்தின் அபிவிருத்திக்காக இம் மாநில அரசு 1968-69-ஆம் ஆண்டில் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு பெருந் திட்டம் தயாரித்தது. ஆனால் இந்திய அரசு இதை ஏற்றுக் கொள்ளவில்லை. மாமல்ல புரத்திற்கு நிதி உதவி பற்றியும் ஒன்றும் குறிப்பிடவில்லை. மாமல்லபுரத்திற்கு ஒரு பெருந் திட்டத்தினை வரைவதற்கும் கடற்கரையை அபிவிருத்தி செய்து, இப் பகுதியை அகில உலக சுற்றுலா இடமாக மாற்றியமைப்பதற்கு உதவி செய்ய கடற்கரை அபிவிருத்தி சம்பந்தப்பட்ட நிபுணர்களை அனுப்பி வைக்க, இந்திய அரசு ஒத்துக் கொண்டது. இந்திய அரசின் நிபுணர்களுடன் ஆலோசனை செய்து, விரைவில் அமைக்கப்படவிருக்கும் தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மாமல்லபுரத்திற்கான பெருந் திட்டத்தின் முழு விவரங்களை முடிவு செய்யும்.

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, ஒரு கோடி ரூபாய் செலவிலே நாம் திட்டம் போட்டு அனுப்பியும் மத்திய அரசாங்கம் ஒத்துக் கொள்ளவில்லை என்று சொன்னார்கள். இருந்தாலும் நம்முடைய அரசாங்கமே திட்டத்தை ஏற்று நடத்துவதற்குச் செயற்குறிப்பு ஏதேனும் இருக்கின்றதா ? அதை இப்பொழுது செய்கிற நேரத்திலே ஸௌண்ட் அன்ட் லைட் ஒளி-ஒலி அமைப்பு மாமல்லபுரத்திலே அமைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக இப்பொழுது இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின்படி ஒரு சுற்றுலாப் பயணிகள் விடுதியில் ஒரு நபர் தங்குகிற விடுதிகள் 18-ம் இரண்டு நபர் தங்குகிற விடுதி நான்கும் இதை 6 லட்சத்து 58 ஆயிரம் ரூபாய் செலவு செய்யவும் நடுத்தர வருவாய் உள்ள குடும்பத்தினருக்காக இரு நபர் தங்கும் விடுதி 50 கட்டுவதற்காக 9 லட்சத்து 50 ஆயிரம் ரூபாயும், நடுத்தர மத்திய மக்கள் மற்ற எல்லோரும் சிற்றுண்டி அருந்துவதற்கான சுற்றுலா விடுதியைக் கட்டுவதற்காக 1 லட்சம் ரூபாயும், படகுக்காகவும், படகு வீடு கட்டுவதற்காகவும் 1 லட்சம் ரூபாயும், கார் பார்க் ஏற்படுத்துவதற்காக முப்பதாயிரம் ரூபாயும், பேதிங் காட் கடற்கரைக் கோயிலுக்குப் பக்கத்தில் அமைப்பதற்காக 30 ஆயிரம் ரூபாயும் ஸ்டால்கள் ஏற்படுத்துவதற்காக முப்பதாயிரம் ரூபாயும் சிறுவர் பூங்காவிற்காக ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாயும், கடற்கரையைச் சுற்றி அழகுப்படுத்தவும், கடற்கரையிலே அழகுக் குடைகள் அமைக்கவும், குளித்துவிட்டு உடுப்பை மாற்றிக்கொள்வதற்காக வசதி செய்யவும் ஆகிய இம்மூன்றுக்கும் 1 லட்சம்



1971 ஜூலை 19]

ரூபாயும், சுகாதார முறைப்படி குடிநீர் தருவதற்காக அங்கே ஒரு டவுன்ஷிப், டூரிஸ்ட் செண்ட்டர் உருவாக்குவதற்காக 8 லட்சம் ரூபாயும், மருத்துவ விடுதிக்காக 2 லட்சம் ரூபாயும், பஸ் ஸ்டாண்டு வசதிகள் செய்வதற்காக 2 லட்சம் ரூபாயும், சுற்றுலாப் பயணிகள் நிறுத்துவதற்காக கார் பார்க் வசதி செய்வதற்காக 2 லட்சம் ரூபாயும் மின்சார வசதிக்காக 2 லட்சம் ரூபாயும் மற்றபடி பாதைகளை மாற்றியமைப்பது போன்றவற்றிற்காக 1 லட்சம் ரூபாயும் ஆக மொத்தம் 39 லட்சத்து 48 ஆயிரம் செலவிலே ஒரு திட்டம் நிறைவேற்ற முடிவு செய்யப்பட்டு மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவரவர்களே, நம்முடைய அரசு ஒரு கோடி ரூபாயிலே ஒரு திட்டத்தைப் போட்டு அனுப்பியிருக்கிறது இந்தியப் பேரரசுக்கு. ஆனால் இந்தியப் பேரரசு ஒப்புதல் அளிக்கவில்லை என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். என்ன காரணத்தினால் அவர்கள் ஒப்புதல் அளிக்க மறுத்திருக்கிறார்கள்? தமிழ் நாட்டில் வேறு எந்தச் சுற்றுலா இடங்களுக்காக இந்தியப் பேரரசு பணம் கொடுத்திருக்கிறது ? அதேபோல் வடக்கேயிருக்கின்ற மாநிலங்களுக்கு இதுபோன்று அவர்கள் திட்டத்தைக் கொடுத்து ஒப்புதல் அளித்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** பேரவைத் தலைவரவர்களே, சுற்றுலாத் துறையின் மூலம் ஒவ்வொரு பகுதியாக அவர்கள் வளப்படுத்திக் கொண்டு வருவதாகச் சொல்கிறார்கள். அதன்படி தெற்கே திருவனந்தபுரத்திற்கருகே இருக்கிற கோவளம் கடற்கரையை இந்த ஆண்டு எடுத்து இருக்கின்றார்கள். ஒவ்வொரு கடற்கரையாக தான் எடுத்துக் கொண்டு வர முடியுமென்ற பதிலைத் தெரிவித்திருக்கிறார்கள்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவரவர்களே, ஒரு கோடி ரூபாய் பணச் செலவிலே மகாபலிபுரத்திற்குச் சில திட்டங்களைப் போட்டு மத்திய சர்க்காருக்கு எடுத்துக் கூறியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இதை முழுக்க முழுக்க மத்திய சர்க்காரிடத்திலே இந்த அரசு எதிர்பார்க்கிறதா அல்லது ஒரு பங்காக ஏதாகிலும் குறிப்பிட்டு மத்திய சர்க்காரிடம் கேட்டிருக்கின்றார்களா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

**திரு. கோவை செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மகாபலிபுரம் வெளிநாட்டுப் பயணிகள் பலரைக் கவரக்கூடிய விதத்திலே அமைந்திருக்கிறது. ஆனால் அதற்கான வசதிகள் பல இல்லை என்று கூறப்படுகிறது. குறிப்பாக பார் அட்டாச்ட் ஹோட்டல் இனிமேல் ஆரம்பிக்கப்படுமா ? ஸ்விம்மிங் பூல் ஒன்று ஆரம்பிக்கப்படுமா ? அதைப்போல் கைடுகளாகப் படித்த

[1971 ஜூலை 19

இளம் பெண்களைப் போட்டால் வெளிநாட்டினருக்குச் சொல்லிக் கொடுக்க வசதியாகயிருக்கும். இதை அரசாங்கம் கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** பேரவைத் தலைவரவர்களே, மகாபலிபுரத்தைப் பொறுத்த வரையில் நல்ல அளவிற்குக் கைடுகள் இங்கிருந்து போகிறார்கள், அதிலே குறை இல்லை. பார் அட்டாச்ட் ஹோட்டல் என்று சொன்னார்கள். அது சென்னைக்கு வருகிற வெளிநாட்டுப் பயணிகளுக்கு இங்கே நல்ல அளவில் தேவையான பர்மிட்டுகள் கொடுக்கப்படுவதால் வெளிநாட்டுப் பயணிகளைப் பொறுத்த வரையில் அதிலே சங்கடங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. உள்நாட்டுப் பயணிகளுக்கு எப்படி என்று தெரியவில்லை, ஸ்விம்மிங் பூல் போன்றவைகளையும், மற்றவைகளையும் ஏற்பாடு செய்ய அரசு திட்டங்களைத் தயாரித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்த கேள்வியும் இது சம்பந்தமுடையதுதான், அதையும் எடுத்துக் கொள்ளலாம்.

### சென்னை-மாமல்லபுரம் கடற்கரை

* 315 வினா—திரு. சு. துரைசாமி :

திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

**சென்னையிலிருந்து மகாபலிபுரம் வரை உள்ள கடற்கரை ஓரங்களில் அழகுபடுத்தும் முறையில் பூக்கள் வைத்து பராமரிக்க அரசுக்கு உத்தேசம் உள்ளதா ?**

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள முட்டுக்காடு என்ற கடற்கரை கிராமத்திலிருந்து மகாபலிபுரம் கடற்கரை வரை பலவகை மரங்கள் வைத்து கடற்கரையை அழகு செய்யும் செயற் குறிப்பு ஒன்று அரசினுடைய ஆலோசனையிலிருந்து வருகிறது. இதற்காக எவ்வளவு செலவாகும், எவ்வகையில் கடற்கரையை அழகுபடுத்தலாம் என்ற விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவரவர்களே, சென்னையிலே இருந்து மகாபலிபுரம் வரையில் கடற்கரையை அழகுபடுத்தினால் பலர் வந்து நம்முடைய நாட்டுக் கடற்கரையைப் பார்ப்பதற்கு வாய்ப்புக் கிடைக்கும். அதேநேரத்தில் வெளிநாட்டிலேயிருந்து வருபவர்கள் தங்குவதற்கு சுற்றுலா மாளிகைகளை இடையிடையே அமைக்க ஏதாவது திட்டம் அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** பேரவைத் தலைவரவர்களே, முட்டுக்காட்டிலிருந்து மகாபலிபுரம் வரையில் ஒரு அழகிய கடற்கரை, நம்முடைய கிழக்கு வங்கக் கடற்கரை இருக்கிறது என்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்.



1971 ஜூலை 19]

இதை அபிவிருத்தி செய்வதில் இரண்டு முறைகள் இருக்கின்றன. ஒன்று, உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளை அங்கே கொண்டு வந்து அந்தக் கடற்கரையிலே உட்கார வைத்து உல்லாசப் பயணத்திற்கு ஏற்பாடு செய்வதா? அல்லது வெளிநாட்டுப் பயணிகளைக் கவரும் வகையில் அழகுபடுத்துவதா என்பது இரண்டு. பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்தவர்கள் வந்திருந்தார்கள், அவர்கள் முட்டுக் காடு, கோவளம் தடங்கள் சிலவற்றைப் பார்த்து விட்டு அதை அழகு படுத்தலாம் என்ற திட்டத்தைத் தந்து அதற்காக எல்லா ஒத்துழைப்பையும் தருவதாக பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்தவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஏர்-இந்தியா நிறுவனமும் அதற்கு ஒத்துழைப்புத் தருவதாகத் தெரிவித்து இருக்கிறது.

**திரு. வை. பாலசுந்தரம்:** தலைவரவர்களே, மகாபலிபுரத்தில் தற்போதிருக்கும் கோயில்களைப்போல் 6 கோயில்கள் கடலிலே மூழ்கிப் போயிருப்பதாகச் சொல்லப்படுகிறதே. அது உண்மையா இல்லையா என்ற ஆராய்ச்சியில் நம்முடைய அரசு ஈடுபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய தனிக் குறிப்பு என்னிடத்தில் இல்லை என்றாலும், தற்பொழுது வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் மகாபலிபுரத்தைப்பற்றி கடலுக்குள்ளே மூழ்கி ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மூலம் செய்தியறிந்து இந்தச் சபைக்குத் தெரிவிக்க முயற்சி செய்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவரவர்களே, போகும் வழியில் திறந்த வெளிக் கலையரங்கம் ஒன்று இருக்கிறதே, அதில் வசதிகளைச் செய்து ஊட்டியிலே நடத்துவதைப் போல் கலை விழாக்கள் நடத்துவதற்கு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** நல்ல யோசனை. ஏற்றுக் கொள்ளத் தகுந்தது.

**திரு. சோ. கருணாநாதன் :** தலைவரவர்களே, மகாபலிபுரத்திற்குச் செல்ல விரும்பும் சுற்றுலாப் பயணிகளுக்குப் போக்குவரத்து வசதியை, சென்னை மாநகரத்திலிருந்து விருப்பம் போல் போய்வர, கடற்கரையை யொட்டி மின்சார இரயில்பாதை அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** பேரவைத் தலைவரவர்களே, மகாபலிபுரத்திற்கு ஏராளமான வண்டிப் போக்குவரத்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. சுற்றுலாப் பயணிகளுக்கான வண்டிகள் நிறையக் கிடைக்கின்றன என்பதாகத்தான் தெரிகிறது. அரசும் போக்குவரத்துத் துறையின் மூலம் பல வசதிகளைச் செய்திருக்கிறது. மின்சார இரயில் பாதை பற்றிய விஷயம் மத்திய சர்க்காரிடம் கேட்க வேண்டிய கேள்வி.

திரு. என். கணபதி : தலைவரவர்களே, சென்னை கடற்கரைக்கும் மகாபலிபுரம் கடற்கரைக்கும் இடையில் கள்ளக்கடத்தல் அதிகமாக நடப்பதாகப் பலரும் பேசிக் கொள்கிறார்கள். அப்படி அந்தக் கள்ளக் கடத்தல் நடப்பதைத் தடுக்க இந்தக் கடற்கரையை முன்னேற்றுவது நல்லது. அந்த நல்ல திட்டம் பற்றி அரசு ஆராயுமா? என்ன திட்டம் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக் கடத்தல் பம்பாய் கடற்கரை யோரத்தில் நடப்பதாகத் தான் அடிக்கடி பத்திரிகை வாயிலாக அறிந்திருக்கிறேன். சென்னைக் கருகில் நடப்பதாகக் கேள்விப்படவில்லை, அப்படிப்பட்ட தகவல் எதுவும் அரசுக்கு இல்லை.

### தனியார் பேருந்துகளில் வானொலிப் பெட்டிகள்

* 316 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் துறை பஸ்களில் ரேடியோக்களை வைக்கக் கூடாதென அரசு ஆணை பிறப்பித்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதற்குரிய காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) பயணிப் பேருந்துகளில் அல்லது ஒப்பந்தப் பேருந்துகளில் வானொலிப் பெட்டிகளை உபயோகிக்கக் கூடாது என்று அரசு ஆணைகள் எதுவும் பிறப்பிக்கவில்லை எனினும், பயணிப் பேருந்துகளிலும், ஒப்பந்தப் பேருந்துகளிலும் வானொலிப் பெட்டிகளை நிறுவுவது அனுமதிக்கக் கூடாது என்று, சென்னை போக்குவரத்து ஆணையாளர் 1958-ஆம் ஆண்டில் எல்லா வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளுக்கும் ஆணைகள் பிறப்பித்துள்ளார்.

(இ) வானொலிப் பெட்டியிலிருந்து எழுகிற இசையில் ஆழ்ந்து வலவரின் கவனம் வேறு பக்கம் திருப்பப்படாமலும், பாதுகாப்பான முறையில் வண்டியோட்டுவதற்கு அவர்கள் விழிப்புடன் இருக்கவும் வகை செய்வதற்காகவே இந்த ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, பேருந்துகளில் பயணம் செய்யும் பிரயாணிகளின் அலுப்பினைப் போக்குவதற்காக இனிமேலாவது அத்தகைய வண்டிகளில் வானொலிப் பெட்டிகளை அமைத்திட ஆவன செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அலுப்பினைப் போக்குவதை விட உயிரைக் காப்பாற்றுவதே மேல் என்ற காரணத்தினால் வானொலிப் பெட்டிகள் வைக்க உத்தேசமில்லை.



### *Sri Chandra Choodeswara Temple at Hosur*

* 317. *Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether any representation has been received recently from the trustees of Sri Chandra Choodeswara Temple of Hosur in Dharmapuri district to lay a road to the hill temple of Sri Chandra Choodeswara; and

(*b*) if so, the estimated cost of the same and when it will be sanctioned?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) இந்த வேலையின் மதிப்பீடு ஒரு லட்சம் ரூபாய். இந்த மதிப்பீட்டுக்கு விரைவில் ஒப்புதல் வழங்க, இந்து சமய அறநிலைய ஆணையாளர் நடவடிக்கை எடுத்துக் கொண்டுள்ளார்.

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister whether any representation has been received requesting sanction for renovation of the gopuram of Sri Chandrachoodeswara temple? If so, what is the action taken by this Government?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அங்கே ஒரு இலட்சம் ரூபாய் செலவில் ரோடு போடுகின்ற வேலைக்கான மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்கப்பட வேண்டுமென்றுதான் வந்திருக்கிறது. கோபுர வேலை பற்றி எதுவும் வந்ததாக அரசாங்கத்திற்குத் தகவல் இல்லை.

THIRU B. VENKATASWAMY ; May I know from the Hon. Minister when the amount will be sanctioned for laying of roads?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : 26—9—1970-ம் தேதி அன்று அங்கிருக்கும் அறங்காவலர்களிடமிருந்து ஆணையருக்கு கோரிக்கை வந்து 29—6—71-ம் தேதியன்று மேற்பார்வைப் பொறியாளர் அவர்கள் ரோடு போடும் இடத்திற்குச் சென்று பார்வையிட்டு வந்துள்ளார். வெகு விரைவில் ஒப்புதல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. கவன ஈர்ப்பு

### ரேயான் நூல் விலையேற்றமும், கைத்தறி விசைத்தறி நெசவாளர் அல்லலும்.

திரு. கி. ஜெயராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, "காப்புவரி ஆணைக் குழுவின் அறிக்கையை (Tariff Commission) அமுல்படுத்தாமல் தாமதம் செய்யும் மத்திய

அரசினரால் அங்கீகரிக்கப்பட்டுள்ள (Voluntary Distribution (Scheme) தன்னிச்சை விநியோகத் திட்டத்தால் நார்ப்பட்டு நூல் (Rayan yarn) விலை மிகவும் அதிகமாகி தமிழகத்தில் பல்லாயிரக்கணக்கான கைத்தறி நெசவாளர்களும் விசைத்தறியாளர்களும் பல்வேறு கஷ்டங்களுக்குள்ளாகியிருப்பதால், இத் திட்டத்தைக் கைவிட்டு விலையைக் குறைக்கவும் சீரான விநியோகம் செய்யவும் மத்திய அரசை தமிழக அரசு வற்புறுத்த வேண்டும் என்பது பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்."

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இம் மாநிலத்திலும் கைத்தறித் தொழிலுக்குத் தேவைப்படும் ரேயான் நூல் ஆண்டு ஒன்றுக்கு 120 லட்சம் கிலோ கிராம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. தமிழ் நாட்டில் மேற்படி நூலைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஒரே ஆலையான கோயம்புத்தூர் "தென் இந்திய லிங்கோஸ் இந்தியா லிமிடெட்" ஆண்டு உற்பத்தி சுமார் 34 லட்சம் கிலோ கிராம் மட்டுமேயாகும். எனவே, தமிழ்நாடு செயற்கைப்பட்டு நூல் உற்பத்தியைப் பொறுத்த வரையில் பற்றுக்குறை மாநிலமாக உள்ளது. மேலும், நூற்போர் ஏனைய மாநிலங்களிலுள்ள நூற்பு ஆலைகளையும், இறக்குமதியையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. இந்த நாட்டில் ரேயான் நூல் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள ஆலைகள் பின்வருமாறு :

1. நேஷனல் ரேயான் கார்ப்பரேஷன் லிமிடெட், பம்பாய்.

2. செஞ்சுரி ரேயான், பம்பாய்.

3. பரோடா ரேயான் கார்ப்பரேஷன் லிமிடெட், சூரத் (குஜராத் மாநிலம்).

4. இந்தியன் ரேயான் கார்ப்பரேஷன் லிமிடெட், வீராலால் சாலை, வீராலால் (குஜராத் மாநிலம்)

5. சௌத் இந்தியா விங்கோஸ் லிமிடெட், கோயம்புத்தூர்.

6. திருவாங்கூர் ரேயான் லிமிடெட், கேரளா.

7. ஜே. கே. ரேயான், கான்பூர்.

8. கேசாராம் ரேயான், கல்கத்தா.

ரேயான் நூல் விலைகளிலும், பகிர்ந்தளிப்பதிலும் சட்டப்படிக்கான கட்டுப்பாடு எதுமில்லை. நூற்பவர்களும், உண்மையில் பயன்படுத்துபவர்களும், இந்த நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மொத்த உற்பத்தியில் 52½ சதவீதம் வரை தாமே முன்வந்து நியாயமான விலையில் பகிர்ந்தளிக்க ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டுள்ளனர். 1—1—1971 முதல் 31—12—1971 வரை ஓராண்டுக் காலத்திற்குள் இந்த ஒப்பந்தம் செயலில் இருக்கும்.



இந்த ஒப்பந்தத்தின் கீழ், இந்த மாநிலத்திலுள்ள ரேயான் நூல் உண்மையில் பயன்படுத்துபவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுவதை சேலத்தில் அரசு சார்பிலே வட்டாரக் குழு ஒன்று கவனிக்கிறது. இதைத் தவிர, லிங்கோஸ் இழைத் துணி ஏற்றுமதி செய்வதால் ஏற்படும் குறைவை நிறைவு செய்வதற்காக நூற்பவர் ஒவ்வொருவரும்தான் உற்பத்தி செய்கிற நூலில் முதல்தரமான 10 சதவீத நூலை ஒதுக்கி வைக்க வேண்டும். நூற்போர் உற்பத்தியில் எஞ்சியவற்றை வெளிச்சந்தையில் விற்கலாம்.

எனவே, செயற்கைப் பட்டு நூலின் ஒரு பகுதி தேவை மட்டுமே வரையறுக்கப்பட்ட விலைகளில் கிடைக்கிறது என்பது இதனால் தெரியவரும். இந்தத் தன்னிச்சை விநியோகத் திட்டம், கூட பகிர்ந்தளிப்பதிலுள்ள குறைபாடுகளின் காரணமாக, நியாய விலைகளில் ஒதுக்கீடு செய்யப்பட்ட அளவு நூலை வழங்க இயலவில்லை. இதனால், உண்மையில் ரேயான் நூலைப் பயன்படுத்துபவர்கள் தங்களது பெருமளவு நூல் தேவைகளுக்காக வெளிச் சந்தைக்குச் சென்று அதிக விலையில் நூல் பெற வேண்டியதாயுள்ளது. செயற்கைப் பட்டு நூலின் பகிர்ந்தளிப்பையும் விலையையும் கட்டுப்படுத்த மாநிலத்திற்குச் சட்டப்படிக்கான அதிகாரங்களை இந்திய அரசு கொடுத்தாலொழிய இதற்கு நிலையான தீர்வு காண்பது இயலாததாகும். கைத்தறி நெசவாளர்கள் தங்களது முழுத் தேவைகளுக்கும் போதுமான அளவு நூலை வெளிச் சந்தையில் பெற வகை செய்வதற்காக, அரசு வணிகக் கழகம் கூப்ராமோனியம் செயற்கைப்பட்டு நூலை இறக்குமதி செய்து அதைப் போதுமான அளவு வெளிச் சந்தையில் கிடைக்கச் செய்ய அதற்கு அனுமதி வழங்க வேண்டுமென இந்திய அரசை நமது அரசு எழுதிக் கேட்டுக்கொண்டுள்ளது.

**திரு. கி. ஜெயராமன் :** நார்ப்பட்டை விநியோகிக்கும் பொறுப்பு தனிப்பட்ட குழுவுக்கு இருப்பதை மாற்றி மாநில அரசு இயக்குநர் அவர்கள் சிபார்சின்படி உபயோகிப்போருக்கு மட்டுமே விநியோகிக்கும் வகையில் மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நல்ல யோசனை. இந்த யோசனையை அரசு ஏற்று மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறது.

## 3. அறிக்கை அளித்தல்

### நெடுஞ்சாலைகள் பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கை மீதான அறிக்கை

THIRU K. VEZHAVENDAN : Mr. Speaker, Sir, I rise to present the First Report of the Committee on Estimates on the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report on Highways and Rural Works.

[1971 ஜூலை 19

### 4. அரசினர் சட்ட முன்வடிவு

### தமிழ்நாடு 1971-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு.

**திரு. க. இராசாராம்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) இரண்டாம் திருத்த சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

### (5) 1971-72-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### (அ) கோரிக்கை எண் 12—காவல் துறை (தொடர்ச்சி).

**திரு. நா. வீராசாமி:** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியத்தின் மீது எனது கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

காவல்துறை என்று சொல்கின்ற நேரத்திலே இந்த நாட்டில் இருக்கக்கூடிய சட்டம், அமைதி, ஒழுங்கைக் காப்பாற்றக்கூடிய அந்தத் துறைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கோரப் பட்டிருக்கும் தொகையானது உண்மையிலேயே மிகவும் குறைவானது என்று சொல்லும் அளவுக்கு அவர்கள் நல்ல அரும் பணியினை ஆற்றி வருகிறார்கள். மாம்பலத்தில் ஏற்பட்ட திடீர் பிள்ளையாரிலிருந்து நடைபெறுகின்ற கொலை, கொள்ளை போன்ற காரியங்களைக் கண்காணிக்கின்ற வகையில் தங்கள் உயிரையே தியாகம் செய்யும் அளவில் அவர்கள் செயல்பட்டுக் கொண்டிருக் கிறார்கள்.

சட்டம் ஒழுங்கு இந்தியத் துணைக் கண்டத்திலேயே எந்த அளவுக்குக் காப்பாற்றப்பட்டிருக்கிறது என்று பார்க்கும்போது இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு தமிழகத்திலேதான் அமைதி ஒழுங்கு காப்பாற்றப்பட்டு அமைதியான ஆட்சி, முறையான ஆட்சி நடைபெறுகிறது.

பொதுவாக, துப்பாக்கிச் சூடுகள் நடைபெற்றதைப் பற்றிச் சொன்னார்கள். 1962 ல் இருந்து 1966 வரையில் காங்கிரஸ் ஆட்சி காலத்தில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடுகளோடு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்ட பிறகு நடைபெற்ற துப்பாக்கிச் சூடுகளைப் பார்த்தால் எண்ணிக்கையில் பாதியாகத் தான் இருக்கிறது.



1971 ஜூலை 19] [திரு. நா. வீராசாமி]

நான்கு ஆண்டுக் காலத்தில் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் 60 துப்பாக்கிச் சூடுகள் நடந்தன என்றால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 30 துப்பாக்கிச் சூடுகள்தான் நடந்திருக்கின்றன. அந்தத் துப்பாக்கிச் சூடுகளும் தவிர்க்க முடியாத நேரத்திலேதான் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை அறிக்கையில் கொடுக்கப் பட்டிருப்பதில் இருந்தே அறிந்துகொள்ள முடியும்.

பொதுவாக, இந்தியத் துணைக் கண்டத்திலேயே நம்முடைய மாநிலத்தில் இருக்கும் காவல் துறையினர்தான் திறமையாகத் தங்களுடைய கடமைகளை ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

காக்னிசிபிள் கிரைம் என்று சொல்லப்படுகின்ற குற்றத்தைப் பொருத்த வரை நம்முடைய தமிழ் நாட்டை இந்தியத் துணைக் கண்டங்களில் உள்ள மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது தமிழகத்திலே 68,164 குற்றங்கள்தான் நடந்திருக்கின்றன. ஆனால் மகாராஷ்டிராவில் 98,338 குற்றங்கள் ; மத்தியப் பிரதேசத் தில் 1,02,349 குற்றங்கள்; உத்திரப்பிரதேசத்தில் 1,70,698 குற்றங்கள்.

கொலை வழக்குகளை எடுத்துக் கொண்டால் தமிழ் நாட்டில் 740 கொலைக் குற்றங்கள்; பீகாரில் 1,367 கொலைக் குற்றங்கள்; மத்தியப் பிரதேசத்தில் 1,616 கொலைக் குற்றங்கள்; உத்தரப் பிரதேசத்தில் 2,089 கொலைக் குற்றங்கள். ஏதோ திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்த பிறகு கொலைகள், குற்றங்கள் அதிகமாகி விட்டன என்று சொல்லுகிறார்கள். 1966-ல் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் 758 கொலைகள் நடந்திருக்கின்றன; ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்த பிறகு அந்த எண்ணிக்கை குறைந்திருக்கிறது.

அதேபோல் கடத்தல், தடுத்தல் போன்ற வழக்குகளைப் பார்க் கும்போது தமிழ் நாட்டில் 417; வெஸ்ட் பெங்காலில் 810; ராஜஸ் தானில் 994; உத்தரப் பிரதேசத்தில் 1,906 என்ற அளவில் அதிலும் தமிழகத்தில்தான் குறைவாக இருக்கிறது.

கொள்ளை வழக்குகளைப் பார்த்தால் தமிழ் நாட்டில் 19 வழக்கு கள், வெஸ்ட் பெங்காலில் 830 வழக்குகள்; பீகாரில் 1,752 வழக்கு கள், உத்தரப் பிரதேசத்தில் 2,065 வழக்குகள். கொள்ளை வழக்கு கள் நம்முடைய ஆட்சியில் 19: காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் 39.

திருட்டு வழக்குகளை எடுத்துக் கொண்டால் தமிழ் நாட்டில் 122; பீகாரில் 1,080; மகாராஷ்டிரத்தில் 1,683. உத்தரப் பிரதேசத்தில் 8,352.

கலவர வழக்குகளை எடுத்துக் கொண்டால் தமிழ்நாட்டில் 2,461; உத்தரப்பிரதேசத்தில் 7,116 ; பீகாரில் 8,282 ; வெஸ்ட் பெங்காலில் 8,514; நம்முடைய மாநிலத்தைப் போல் நான்கு மடங்கு வழக்குகள் அதிகமாக மற்ற மாநிலங்களில் இருக்கின்றன.

சாதாரணத் திருட்டு வழக்குகளைப் பொறுத்தவரை தமிழ் நாட்டில் 20,925 வழக்குகள்; மத்தியப் பிரதேசத்தில் 36,203; மகாராஷ்டிராவில் 47,259; உத்தரப் பிரதேசத்தில் 66,192.

திருட்டுப் போன சொத்துக்களைப் பொறுத்தவரை தமிழ் நாட்டில் 101; மத்தியப் பிரதேசத்தில் 980 ; மகாராஷ்டிராவில் 1,224 ; உத்தரப் பிரதேசத்தில் 2,638.

போலீஸ்காரர்கள் தாக்கப்படுகிறார்கள் என்ற குற்றச்சாட்டைப் பார்க்கும்போது போலீசார் தாக்கப்பட்டு இறந்தவர்கள் தமிழ் நாட்டில் 8 பேர் ; அஸ்ஸாமில் 16 பேர் ; பஞ்சாபில் 13 பேர் ; உத்தரப்பிரதேசத்தில் 43 பேர். காயம்பட்ட போலீசார் தமிழ் நாட்டில் 112 பேர் ; மகாராஷ்டிராவில் 626 பேர் ; வெஸ்ட் பெங்காலில் 723 பேர் ; குஜராத்தில் 821 பேர்.

இப்படி எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் தவறு செய்கின்றவர்கள், தாக்கப்படுகின்றவர்கள் எண்ணிக்கை தமிழ்நாட்டில் தான் குறைவாக இருக்கிறது என்பதை நாம் இந்தப் புள்ளி விவரத்தில் இருந்து அறிய முடியும். தமிழ் நாட்டில் இருக்கும் காவல் துறையினர் சட்டம், அமைதி, ஒழுங்கைக் காப்பாற்ற உள்ளபடியே பெருமுயற்சி எடுத்துக் கொள்ளுகிறார்கள் என்பதைக் காட்டுவதற்காகத்தான் இவைகளை நான் சுட்டிக் காட்டினேன்.

அது மட்டுமல்ல. நம் போலீஸ் துறை எந்தளவிற்கு மிகத் திறமையாகப் பணியாற்றுகிறது என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. சமீபத்தில் கார்ப்பரேஷனில் நடைபெற்ற திருட்டு வழக்கிலிருந்து காவல் துறை எந்தளவிற்கு அவர்களுடைய கடமையை ஆற்றியிருக்கிறது என்பதை நான் சொல்லாமலேயே புரிந்து கொள்ள முடியும். கார்ப்பரேஷனில் ரூ. 65,000 திருட்டு போயிற்று. 23-4-71 அன்று காலை 10-15 மணிக்கு திருட்டு போயிருக்கிறது. உடனே நம் திறமைவாய்ந்த போலீஸ்காரர்கள், குறிப்பாக திரு. கருப்பையா என்ற துப்பறியும் இன்ஸ்பெக்டர் அவர்கள் விரைவில் அந்த வழக்கினைக் கண்டுபிடித்திருக்கிறார்கள் என்பது இந்த மன்றத்தில் உள்ள அனைவருக்குமே தெரியும். எவ்வளவு சாமர்த்தியமாகத் திருடியிருக்கிறார்கள் என்பதைப் பற்றி அவர்களே ஒரு கட்டுரையில் எழுதியிருக்கிறார்கள். இந்த வாரக் 'குமுத'த்தில் அதைப் படிக்கும்போது நம் மெய் சிலிர்க்கிறது. அவ்வளவு சாமர்த்தியமாகத் திருடியிருக்கிறார்கள். ஆனால் அப்படிப்பட்டவர்களையும் நம் போலீஸ் அதிகாரிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள் என்றால் அவர்களை நாம் ஊக்குவிக்கவேண்டும்.

திரு. கருப்பையா அவர்கள் அதில் தம் முழுத் திறமையையும் பயன்படுத்தியிருக்கிறார்கள். டெல்லியில் ரூ. 60 லட்சம் திருட்டுப் போன வழக்கில் அதைக் கண்டுபிடித்த நகர்வாலாவிற்கு எந்த அளவிற்குப் பதவி உயர்வு கொடுத்தார்களோ அதேபோல் இந்தக் காவல் துறை அதிகாரிக்கும் நாம் பதவி உயர்வு அல்லது அவர்களை





உற்சாகப்படுத்தக் கூடிய அளவிற்கு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் முதல் அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக இந்தக் காவல் துறை அதிகாரிகள் அருமையைப் புரிந்து கொள்ள வேண்டுமென்றால் தேர்தல் காலங்களில்தான் புரிந்து கொள்ள முடியும். நம் தமிழ் நாட்டில் நான்கு பொதுத் தேர்தல்கள் நடைபெற்றிருக்கின்றன. ஆனால் சமீபத்தில் நடைபெற்ற தேர்தலில் காவல்துறையினர் மீது எங்கேயாவது குற்றம் சுமத்தக்கூடிய அளவிற்கு அவர்கள் நடந்து கொண்டிருக்கிறார்களா என்றால் நிச்சயமாக இல்லை என்பதை நான் தெளிவோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கடந்த ஆண்டு ஊராட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெற்றன. மாநகராட்சி மன்றத் தேர்தல் நடைபெற்றிருக்கிறது. அதைத் தொடர்ந்து பொதுத் தேர்தல் நடைபெற்றிருக்கிறது. இப்படி நடைபெற்ற எல்லாத் தேர்தல்களிலும் தமிழ் நாட்டில் குறிப்பிட்ட சில இடங்களில்தான் வன்முறைச் செயல்கள் தலைதூக்கியது என்பதைக் காணமுடியும்.

இப்படி நல்ல முறையில் பணி புரிந்து வருகிற காவல் துறையினருக்கு, அவர்களுக்காக அமைக்கப்பட்ட கமிஷன் சில சிபார்சுகளைச் செய்திருக்கிறது. அதில் குறிப்பாக சில சிபார்சுகளை முதல் அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நேரம் இல்லாத காரணத்தினால் அந்தப் பாராக்களின் எண்களை மட்டும் கூறிக் கொண்டு முடித்துக்கொள்கிறேன். 10-வது பாராவில் உள்ள சிபார்சுகள், 102, 103 பாராக்களில் உள்ள சிபாரிசுகள், 104, 105 பாராக்களில் உள்ள சிபார்சுகள், 232 வது பாராவில் உள்ள சிபார்சுகள் 111, 114, 124 ஆகிய பாராக்களில் உள்ள சிபாரிசுகள் இவற்றை தமிழக அரசு ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் தொகுதியில் பாரப்பந்தல் என்ற இடத்திற்குப் பத்து மைல்கள் சுற்று வட்டாரத்தில் ஒரு காவல் நிலையமும் இல்லை என்பதால் அங்கு ஒரு காவல் நிலையத்தை அமைத்துத் தரவேண்டுமென்றும் முதல் அமைச்சர் அவர்கள் அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றும் பணிவோடு கேட்டுக்கொண்டு எனக்கு இந்த வாய்ப்பளித்தமைக்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. எம். ஆர். கண்ணன் : தலைவர் அவர்களே, இந்தப் போலீஸ் மானியக் கோரிக்கையை வரவேற்று சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

தமிழ் நாட்டு காவல் துறை மிக மிகப் பாராட்டத்தக்கது என்பதை நாம் மட்டுமல்ல, அகில இந்தியாவே சொல்கிறது. அந்த அளவிற்கு நம் காவல் துறை மேலும் நல்ல முறையில் பணிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, கப்பல்

[திரு. எம். ஆர். கண்ணன்] [1971 ஜூலை 19

கம்பனி மோசடி வழக்கின் குற்றவாளி தர்ம தேஜாவை நமது மாநில ஐ. ஜி. அவர்கள் முன்னின்று அரெஸ்ட் செய்ய வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார்கள் என்பது மேலும் பெருமை தரக் கூடிய ஒன்றாகும்.

அதேபோன்று ஆந்திராவில் உள்ள நக்ஸல்பாரி நாகிரெட்டியைப் பிடிக்க முடியாமல் சென்னை நகரில் அவரை நம் மாநில போலீஸ் தான் கண்டுபிடித்தது. அதுபோன்று சிறப்புமிக்க பல செயல்களை நம் போலீஸ் துறையினர் பல ஆண்டுகளாகச் செய்துகொண்டு வருகின்றார்கள். இந்த நிலைமை மேலும் மேலும் வளர வேண்டும்.

இந்தியாவிலேயே சட்டமும், அமைதியும், ஒழுங்கும் நல்ல முறையில் கடைப்பிடிக்கப்பட்டு வருவது தமிழ் மாநிலத்தில் தான் என்பதில் எந்தவித ஐயப்பாடும் இல்லை.

புதிதாக இப்போது போலீஸ் வேலைக்கு எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களை எடுத்துக்கொள்ளக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அது வரவேற்கத்தக்கது. அந்த அளவில் நம் போலீஸ் இலாக்காவின் பணி மேலும் சிறக்கும் என்பதில் ஐயப்பாடில்லை.

அதோடு, போலீஸ் கமிஷன் ரிப்போர்ட்டில் குறிப்பிடப்பட்டுள்ள சில விஷயங்களை இந்தத் துறை நிச்சயம் கவனிக்க வேண்டும். எந்த ஒரு ரிப்போர்ட்டாக இருந்தாலும் அதை போலீஸ் துறையினருக்கு அனுப்பினால் அதை அவர்கள் அக்னாலட்ஜ் செய்வதில்லை. ஒரு பதிலும் வருவதில்லை. அது ஒரு குறைபாடாக இருக்கிறது. பல ஆண்டுகளாகவே இந்த நிலை போலீஸ் துறையில் நீடித்து வருகிறது. ஆகவே அந்த நிலை மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று இந்தக் கமிஷனே சிபார்சு செய்திருக்கிறது. அதை நிச்சயமாக எடுத்துக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

அதேபோல் சந்தேகம், மற்ற மற்ற முறைகளில் கைது செய்யப்படுபவர்கள், சில சமயங்களில் பிச்சைக்காரர்கள் என்று பிடித்துச் சென்று விடுபவர்கள் போன்றவர்களைப் பற்றி அவர்களது குடும்பங்களுக்குத் தகவல் கிடைப்பதில்லை. அப்படிச் சிலரைப் பிடித்து அவர்களை கேர் ஹோம்ஸ்க்கு அனுப்பி விடுகிறார்கள். அவர்களது உற்றார் உறவினர்கள் அவரைத் தேடிப் பார்த்து ஆள் கிடைக்கவில்லை என்ற நிலையில் ஒரு வாரம் கழிந்த பிற்பாடு அவர் கேர் ஹோமில் இருக்கிறார் என்பதை அறிந்து அவரைக் கொண்டுவர அவர்களே நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே போலீஸ்காரர்கள் யாரையாவது பிடிக்கும்போது அவரது சுற்றத்தினருக்குத் தெரிவிக்க வேண்டும் என்ற சிபாரிசை உடனடியாக அமல் படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1971 ஜூலை 19] [திரு. எம். ஆர். கண்ணன்]

இந்தப் போலீஸ் துறையினருக்கு நல்ல பல வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். அவர்களது குழந்தைகளுக்குக் கல்வி வசதி வேலை வாய்ப்பு இவற்றை அவர்களே தேட வேண்டிய நிலைமை இருக்கக் கூடாது. நிச்சயமாக அரசே அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு போலீஸ் துறையில் உள்ளவர்களின் குழந்தைகளின் கல்வி வசதி, வேலைவாய்ப்பு போன்றவற்றைத் தேடித் தரவேண்டும். காரணம் அவர்களுக்கு முக்கியமான வேலைகள் இருப்பதால். பொறுப்பான வேலைகள் இருப்பதால் இந்தக் காரியங்களை அவர்களால் கவனிப்பது என்பது மிகவும் கஷ்டம். அதேபோல்தான் மந்திரிகளுக்கும். மந்திரிகள் காலத்தைப் பார்த்து வேலை செய்பவர்கள் அல்லர். அவர்கள் 24 மணி நேரமும் வேலை பார்க்கக் கூடியவர்கள். ஆகவே அவர்கள் குழந்தைகள் விஷயத்திலும் கல்வி, வேலைவாய்ப்பு போன்ற மற்ற விஷயங்களில் அரசே பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது மதுவிலக்கு நீக்கப்படுகிறது. அதனால் மதுக் கடைகள் அதிகமாக வர இருக்கின்றன. இப்பொழுது டீ ஸ்டால்களுக்குப் போலீஸ் லைசென்ஸ் தரப்படுகிறது. அதை எந்தச் சட்டத்தின் அடிப்படையில் கொடுக்கிறார்கள் என்பது தெரியவில்லை. சென்னை நகரில் மட்டும் அப்படிக் கொடுத்து வருகிறார்கள். இந்தப் போலீஸ் லைசென்ஸ் தருவது என்பதை நீக்கிவிட்டால் அது டீக்கடை வியாபாரிகளுக்கு அனுகூலமாக இருக்கும். இதை டிப்பார்ட்மென்டார் யோசிக்க வேண்டும்.

அடுத்து, ரிக்ரியேஷன் கிளப்ஸ் என்ற சூதாட்ட கிளப்புகள் சென்னை நகரில் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டு வருகின்றன. இவை சூதாட்ட க்ளப்ஸ் ஆக இருக்கின்றனவே தவிர, எந்தக் க்ளப்பிலும் ரிக்ரியேஷன் என்பது கிடையாது. அவற்றைப் போலீஸ் அதிகாரிகள் சட்டப் பிரகாரம் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆகவே அரசு அருள் கூர்ந்து இதற்கு வேறு ஏதாவது ஒரு வழி வகை செய்யவேண்டும். அப்படி ஏதாவது வழிவகை செய்து இந்த சூதாட்டக் கிளப்புகளை ஒழிக்க வேண்டும். காரணம், அவற்றினால் பல குடும்பங்கள் கெட்டு விடுகின்றன.

எனது பகுதியில் தான் அதிக ஸ்லம்ஸ் இருக்கின்றன. அங்கு பயர் சர்வீஸ் ஸ்டேஷன்ஸ் அதிகமாக ஏற்படுத்தவில்லை. ஆகவே அதிக பயர் சர்வீஸ் ஸ்டேஷன்களை என் பகுதியில் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது எதிர்க்கட்சி சார்பில் ஒருசில காரியங்களை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கும் காவல் துறை. சென்னை மாநிலத்தில் உள்ள காவல் துறை, திறமையான காவல் துறை என்ற பெயரைப் பெற்றுள்ளது. ஆனால் சமீப காலங்களில்

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1971 ஜூலை 19

அரசியல் தலையீடுகள் காரணமாக அவற்றின் திறமை வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை நேரிடையாகப் பல கஷ்டங்களை அனுபவித்திருக்கிற நான் எடுத்துச் சொல்வதற்கு ஆசைப்படுகிறேன். இதைச் சொல்ல வந்ததற்குக் காரணம், குற்றங்களைக் கண்டு பிடிக்க வேண்டும் என்பதற்காக இருப்பதைக் கட்சியின் ஒரு கருவியாக நாம் பயன்படுத்தக் கூடாது. மாம்பலம் பிள்ளையாரிலிருந்து தலைவர் காமராஜ் அவர்களின் கார் மீது கல் வீசியது வரை போலீஸ்மீது ஏதேதோ கதைகளைச் சுமத்துவதைப் பார்க்கிறோம். இதனால் அவர்கள் பயமின்றி விருப்பு வெறுப்பு இன்றி சட்டத்தையும், ஒழுங்கையும் அமைதியையும் பாதுகாக்க முடியுமா என்பது கேள்விக்குறியாகிறது.

போலீஸ் கமிஷன் தன் ரிப்போர்டை சமர்ப்பித்திருக்கிறது. ஏதோ காரணங்களினால் அரசியல் தலையீடுகள் வளர்ந்து கொண்டிருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. முன்பு அப்படியில்லாமல் இருந்தது. இப்பொழுது அப்படி இருக்கிறது என்று சொல்வதற்கு நான் தயாராக இல்லை. முன்பும் இருந்தது. ஆனால் இன்று அளவு கடந்து போயிருக்கிறது. தேர்தலுக்குப் பின்னால் பல காரியங்கள் நடந்திருக்கின்றன. யார் தாக்கப்படுகிறார்களோ அவர்கள் போலீஸ் ஸ்டேஷனுக்கு செல்வதற்கு முன்னால் அவர்களைத் தாக்கியவர்கள் முன்கூட்டியே செயலாளர்களோடு போலீஸ் ஸ்டேஷனில் நின்று கொண்டிருந்தால் தாக்கப்பட்டவர்களுக்கு எப்படி நியாயம் கிடைக்கும் ? ஆகவே எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அனாவசியமாக போலீஸ் ஸ்டேஷனுக்குள் போகக்கூடாது என்ற ஒரு வரையறையை ஏற்படுத்துவது நல்லது. வரவேற்கத்தக்கது. நியாயமிருந்தால் நிச்சயமாக போலீஸ் ஸ்டேஷன்களுக்கு போன் செய்யலாம். அப்படியல்லாது, முன்கூட்டியே போலீஸ் ஸ்டேஷனுக்கு நேரடியாகப் போய் நின்றுகொண்டு, அதைச் செய்யுங்கள், இதைச் செய்யுங்கள் என்று சொல்வது என்றால், சட்டம், ஒழுங்கு இவை பாதுகாக்கப்படமாட்டாது.

அடுத்தபடியாக, பெயில் கொடுக்கக் கூடிய அபன்ஸ்ஸில் சில அதிகாரிகள் கொடுக்க மாட்டேன் என்று சொல்கிறார்கள். அதனால், யாருக்கு செல்வாக்கு இருக்கிறதோ அவர்களது செல்வாக்கை உபயோகித்துத்தான் பெயில் வாங்க வேண்டியிருக்கிறது. பெயிலபிள் அஃபென்ஸ்க்கு பெயில் ரெப்யூஸ் செய்வதற்குக் காரணம் என்ன என்று கேட்கிறேன்.

இந்த 15 நாட்கள் ரிமாண்டு வாங்குகிறார்களே அதிலே துஷ்பிரயோகம் நடந்து கொண்டு இருக்கிறது. வேண்டியவர்களை வெளியே விட்டு விடுகிறார்கள். வேண்டாதவர்கள் என்றால் வேறு காரணத்திற்காக 15 நாள் ரிமாண்டு போட்டுவிடுகிறார்கள். லாக்கப்பிலே இருக்கும்போது சரியாக நடத்தப்படுகிறார்களா என்பது கேள்விக்குரியாக இருக்கிறது.



1971 ஜூலை 19] [திருமதி த. ந. அனந்தநாயகி]

ஒரு சில தினங்களுக்கு முன்னால் ஒரு செய்தி படித்தேன், ஆரணியில் லாக்கப்பில் ஒரு ஆள் இறந்து விட்டான் என்று. ஜமிலா, மஞ்சுளா என்ற பெண்கள் லாக்கப்பில் இறந்திருக்கிறார்கள் என்பதும் நினைவுக்கு வருகிறது. போலீஸ் கமிஷன் ரிபோர்ட்டில்கூட, எக்காரணத்தைக்கொண்டும் பெண்களை லாக்கப்பிற்கு எடுத்துச் செல்லக்கூடாது என்று சிபாரிசு செய்து இருக்கிறது. இந்தக் கட்டுதிட்டமான சிபாரிசை உடனடியாக அமுல் நடத்துவதற்கு முதலமைச்சர் உத்தரவு போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். லாக்கப்பில் இருப்பது நரகத்தில் இருப்பது மாதிரி இருக்கிறது என்று போலீஸ் கமிஷன் ரிப்போர்டிலேயே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மனிதர்கள் வாழக்கூடிய இடமாக லாக்கப் இல்லை.

பல பேர் இன்று உண்மையாக பிராது கொடுப்பதற்காக போலீஸ் ஸ்டேஷனுக்குப் போவது இல்லை. சில நேரங்களில் பிராது கொடுக்கப்போகிறவர்களைப் போலீஸ் ஸ்டேஷனில் பிடித்து உள்ளே போட்டு விடுகிறார்கள். இதற்குப் பயந்து கொண்டு தான் நல்லவர்கள் அங்கே போகப் பயப்படுகிறார்கள். ஜனநாயக ஆட்சியில் போலீஸ் ஸ்டேஷனுக்கு மக்கள் பயந்து கொண்டு செல்லக் கூடாது. மக்களுக்குத் துணை செய்யும் ஸ்தாபனமாக மக்கள் அதைக் கருதிக் கொண்டு செல்லவேண்டும். அனுபவம் வாய்ந்த அதிகாரிகளால் தயாரிக்கப்பட்ட போலீஸ் கமிஷன் ரிப்போர்டிலேகூட ஆராய்ந்து இதைச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, போலீஸ் ஸ்டேஷனிலுள்ள இத்தகைய நோக்கத்தை மாற்றிக்கொள்வது நல்லது என்று கூறிக்கொள்கிறேன்.

போலீஸ்காரர்கள் எதிர்க்கட்சிக்காரர்களைக் கஷ்டப்படுத்துகிறார்கள். எதிர்க்கட்சிக்காரர்கள் போலீஸ் ஸ்டேஷனில் கம்பெளியின்ட் கொடுத்தால் அதைக் கவனிப்பது இல்லை. இதிலிருந்து போலீஸ்காரர்கள் எவ்வளவு தவறாக நடந்து கொள்கிறார்கள் என்பது தெரியும். இது விஷயமாக எனக்கு நேரிடையாகக்கூட தெரியும். தேர்தல் நேரத்தில் பல பேர் அடிபட்டு உதைபட்டு, அதன் காரணமாக போலீஸ் ஸ்டேஷனில் கம்பெளியின்ட் கொடுத்தார்கள். ஆனால் அதன் மேல் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

குடிசைப் பகுதியில் இருப்பவர்கள்மீது போலீஸ் அனாவசியமாக நடவடிக்கை எடுத்துத் துன்புறுத்துகிறார்கள். அவர்கள் இன்று வெளியே வருவதற்குக்கூட பயந்து கொண்டு இருக்கிறார்கள். இப்படி நிலைமை இருந்தால் சட்டத்தையும் ஒழுங்கையும் எப்படி நிலைநிறுத்துவது என்று கேட்க ஆசைப்படுகிறேன். தயவு செய்து முதலமைச்சர் அவர்கள் இந்த மாதிரி நடக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போலீஸ் இலாகா திறமையாக நடக்கவேண்டுமானால் பல பிரிவுகள் தனித்தனியே இயங்கவேண்டும். பொதுவாக, அமைச்சர்கள் பந்தோபஸ்து என்ற பெயரில் போலீஸ்காரர்கள் மணிக்கணக்காக

நிறுத்தி வைக்கப்படுகிறார்கள். நாமோ உரிய நேரத்தில் போகும் வழக்கம் கிடையாது. 8 மணிக்கு அமைச்சர் அந்த வழியாக வருகிறார் என்றால், அவர்களைப் பட்டினி பட்டாளங்கள் போல் நிறுத்தி வைத்து விடுகிறார்கள். ஆனால் அமைச்சர் 8 மணிக்கு வருவது இல்லை. அவர் வருகிறவரை அவர்கள் வெயிலில் நிற்க வேண்டியதுதான். இந்த மாதிரி நான் சொல்லும்போது அமைச்சர்களுக்கு பந்தோபஸ்து வேண்டுமென்று சொல்வார்கள். வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. இந்த பந்தோபஸ்து முறையை மாற்றி அமைக்கவேண்டுமென்றுதான் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் இருக்கும்போது இப்படி இல்லையா, என்று கேட்கலாம். அது அல்ல சரியான பதில். நீண்ட நேரம் நிற்க வைப்பது என்பது அவர்களுடைய மற்ற வேலையைக் கெடுக்கிறது. ஆகவே, பந்தோபஸ்துக்கு என்று தனியாக ஒரு பிரிவை ஏற்படுத்த வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன். இதற்காக லா அண்டு ஆர்டர் போலீஸ்காரர்களை எடுக்கக்கூடாது. அப்படி எடுத்து விடுவதால் போலீஸ் ஸ்டேஷன்களில் ஆட்கள் இருப்பது இல்லை. அவர்கள் போலீஸ் வேலையையும் சரிவரச் செய்ய முடிவது இல்லை.

அதேபோன்று கூட்டங்கள் கூடுகிற நேரத்தில், அதற்கென்றும் லா-அண்டு-ஆர்டர் போலீஸ்காரர்களை எடுத்துக்கொள்கிறார்கள். தேர்தல் காலங்களில் ஒரு நாளைக்கு 8 கூட்டங்கள் 10 கூட்டங்கள் கூட ஒரு போலீஸ் வட்டத்தில் நடக்கின்றன. இரவு 12 மணி வரைகூட கூட்டங்கள் தேர்தல் காலங்களில் நடக்கின்றன. அதனால் போலீஸ்காரர்கள் யாரும் அந்த நேரங்களில் போலீஸ் ஸ்டேஷனில் இருப்பது இல்லை. ஆகவே, கூடியவரைக்கும் அமைச்சர் பந்தோபஸ்து, அரசியல் பொதுக்கூட்டங்களுக்கு பந்தோபஸ்து ஆகியவற்றிற்குத் தனியாக ஆட்களைப் போடுவது வரவேற்கத்தக்கது என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிரைம், டிராபிக் என்று பிரிவுகள் இருக்கின்றன. இப்போது டிராபிக் பிராப்ளம் அதிகமாக இருக்கிறது. நாளுக்கு நாள் 'பேடல் கேஸ்கள்' அதிகமாகின்றன, பல பேர் அங்கஹீனப் படுத்தப்படுகின்றனர். ஆகவே, இதை எல்லாம் ஆராய்ந்து பரிகாரம் தேடுவதற்கு டிராபிக் சப்-ஸ்டேஷன் போட்டு அதன் மூலம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போலீஸ்காரர்களுக்கு அதிக வசதி செய்து கொடுக்கவேண்டும். பல பேருக்கு வீடுகள் கிடையாது. மாவட்டங்களில் இருக்கும் டிப்டி சூப்பிரண்டெண்டுகளுக்குக்கூட வீடுகள் கிடையாது. இதனால் அவர்கள் தனியார் வீடுகளில் வாடகைக்கு இருக்கவேண்டியிருக்கிறது. இப்படி அவர்கள் தனியார் வீடுகளில், பணக்காரர்களின் வீடுகளில் இருப்பதால் அவர்களுக்கு சில சமயங்களில் தயவு காட்டவேண்டி வருகிறது. இதனால் சட்டம் ஒழுங்கு சரியாகக் காக்கப்பட முடிவதில்லை. ஆகவே, உடனடியாக எல்லா 'ஸ்டாப்' ஆபீசர்களுக்கும், போலீஸ் கான்ஸ்டபிள்களுக்கும்,





குவார்டர்ஸ் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று உத்தரவு போடுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். முடிந்தவரை அவர்கள் பொதுமக்களோடு அதிகத் தொடர்பு கொள்ளாமல் இருந்தால், நடு நிலை வகித்து, பாரபட்சம் இல்லாமல் நடக்க முடியும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கான்ஸ்டபிள் வீடுகளுக்குத் தனி எலெக்டிரிசிடி மீட்டர் போட்டுக் கொடுக்க வேண்டும். அவர்கள் பல நாட்களாக விளக்கு இல்லாமல் இருந்தார்கள். இப்போது 10 மணி வரைதான் விளக்கு எரிக்கலாம் என்று வைத்திருக்கிறார்கள். அவர்கள் வீட்டில் இருக்கும் பையன்கள் மட்டும் படிக்க வேண்டாமா? ஆகவே அவர்கள் வீட்டிற்கு தனித்தனியாக எலெக்ட்ரிசிடி மீட்டர் போட்டுக் கொடுத்து, அந்த எலெக்டிரிசிடி பில்லை அவர்களே கட்டிக் கொள்ளும்படி செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையில் பல இடங்களில் கட்சி விருப்பு வெறுப்புகளின் பேரில் போலீஸ் நடவடிக்கை எடுக்கிறது. அப்படிப்பட்ட நேரங்களில் அவர்கள் குற்றவாளிகள் யாரைப் பிடிக்கவேண்டுமோ அவர்களைப் பிடிக்காமல், அவர்கள் வீட்டில் இல்லாத நேரத்தில் அங்கே சென்று, அங்கே உள்ள பெண்களைத் துன்புறுத்தி ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று விடுகிறார்கள். அந்தப் பெண்களை லாக்-கப்பில் போட்டு, அவர்கள் வீட்டு ஆண்கள் எங்கே இருக்கிறார்கள் என்று கேட்கிறார்கள். அதோடு அவர்களை லாக்-அப் செய்வேன், அடிப்பேன், உதைப்பேன் என்று மிரட்டுகிறார்கள். இந்த நிலைமைகள் மாற்றப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போலீஸ்காரர்கள் நியாயமான முறையில் நடப்பார்களானால் சிறந்த முறையில் வழக்குகளுக்கு சாட்சி சொல்ல சாட்சிகள் வருவார்கள். ஆனால் இப்போது போலீஸ் வழக்கு என்றால் சாட்சிகள் வரப் பயப்படுகிறார்கள். நல்ல சாட்சிகள் வருவதில்லை. சில நேரங்களில் கட்டாயமாக போலீஸ்காரர்கள் "தே ப்ரோகிஸ்ட் தி விட்னசஸ்". போலீஸ் நிலையத்திற்கு அடிக்கடி சென்று பழக்கப்பட்டவர்கள்தான் இதற்கு வருகிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் மக்களைத் துன்புறுத்தி போலீஸ் இலாகா நடந்து கொண்டிருக்கிறது.

ஜனநாயகப் பண்போடு நாம் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து, குற்றவாளிகள் என்று தெரிந்த பிறகுதான் தண்டனை கொடுக்க வேண்டும். அந்த எண்ணம் இனிமேலாவது வரவேண்டும்.

மதுரையில் ஒரு பஞ்சாயத்து தலைவரையே கைது செய்து விலங்கு போட்டு அழைத்துச் சென்று இருக்கிறார்கள். குற்றவாளிகள் என்று நிரூபிக்கப்பட்டால்தான் தண்டனை கொடுக்கலாம். வழக்குகள் நடந்து கொண்டிருக்கும்போதே யார் குற்றவாளி என்று யார் வேண்டுமானாலும் சொல்லலாம் என்ற நிலை

இருக்கிறது. என்னுடைய தொகுதியில் முதலமைச்சர் ஒரு விழாவில் பேச வரும்போது, அங்கேயுள்ள கவுன்சிலர் நோட்டீஸ் அடித்துக் கொடுக்கிறார் இன்னார்தான் குற்றவாளி என்று. இப்படிச் செய்தால் எப்படி சட்டம் ஒழுங்கு காப்பாற்றப்பட முடியும்? இப்படிப்பட்ட செயல்களைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மானியத்தின் மீது என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின் முன் முதலமைச்சரால் வைக்கப்பட்டு இருக்கும் போலீஸ் மான்யத்தை வரவேற்று என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

எந்த நாடாக இருந்தாலும், எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும், எந்தச் சர்க்காராக இருந்தாலும், போலீஸ் இல்லாமல் ஒரு காரியமும் நடைபெறாது என்பதை நாம் எல்லோரும் உணர்ந்து இருக்கிறோம். ஒரு நாட்டிலே உருவாக்கப்பட்ட சட்டங்கள் பாதுகாக்கப்படவும், அந்த சட்டத்திலிருந்து தவறாமல், வழுவாமல் மக்கள் பாதுகாக்கப்படவும், தவறு செய்பவர்கள் தண்டிக்கப்படவும் ஆகிய எல்லாவித காரியங்களையும் கண்ணும் கருத்துமாகப் பார்த்து வரும் இலாகா, போலீஸ் இலாகாதான். போலீஸ் இலாகா இல்லாமல் எந்த நாடும் எந்த அரசும் இருக்க முடியாது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த போலீஸ் இலாகாவின் நிலைமையைப் பற்றி எல்லோரும் பல்வேறு முறையில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இதற்கு முன்னாலே இருந்த நிலைமை, இன்றைக்கு இருக்கும் நிலைமைபற்றி எல்லோரும் பேசியிருக்கிறார்கள். தமிழகத்திலே இருக்கிற போலீஸ்காரர்கள் மிகத் திறமை வாய்ந்தவர்கள். உலகத்திலேயே முதன்மையாக விளங்கும் லண்டன் மாநகர் போலீசுக்கு அடுத்தபடி நம்முடைய போலீஸ் இலாகா இருக்கிறது. பல்வேறு குற்றங்களைக் கண்டுபிடித்து இருக்கிறார்கள். அது கண்டுபிடிக்காத குற்றங்களே இல்லை என்கிற அளவுக்கு ஆளும் கட்சியானாலும், எதிர்க்கட்சியானாலும், எல்லோரும் ஒட்டுமொத்தமாகப் பாராட்டுகிறார்கள். அப்படிப்பட்ட இலாகாவை நாம் பெற்று இருக்கிறோம். அதிலும் குறிப்பாக, அந்த இலாகா நம்முடைய முதல்வரின் கையில் இருக்கிறது என்பதைக் கண்டு உள்ளபடியே நான் பெருமைப்படுகிறேன்.

இந்த மான்யத்தில் பேசுவதற்கு அதிக நேரம் இல்லாத காரணத்தால் நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இப்போது, இந்த இலாகாவில் டி.எஸ்.பி. பதவிகளுக்காக சர்வீஸ் கமிஷன் குரூப்-2 தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். மொத்தமாக நம்முடைய மாநிலத்திற்கு 4 டி.எஸ்.பி.-க்கள் வேண்டுமென்றால், இங்கே இருக்கும் தமிழக சர்க்கார் ஒரு டி.எஸ்.பி.யைத் தான் தேர்ந்தெடுக்க முடியும். மற்ற 3 பதவிகளுக்கு மத்திய





சர்க்கார் ஆட்களைத் தரவேண்டும். இங்கே தமிழக போலீஸ் இலாகாவில் பணியாற்றுவதற்காக நாம் தேர்ந்தெடுப்பது ஒருவர் தான், மத்திய சர்க்கார் அனுப்புவது மூன்று என்ற அடிப்படையில் இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமை இருக்கக்கூடாது.

அதுமட்டுமல்லாமல், அங்கேயிருந்து வருகிற ஏ.எஸ்.பி.யும் இங்கே இருக்கிற டி.எஸ்.பி.யும் ஒரே மதிப்பு உள்ளவர்கள் தாம்.

Section 142 states that the Government have laid down that the status of the Deputy Superintendent of Police is equal to that of the Assistant Superintendent of Police.

ஆகவே, இந்த இரண்டு பேரும் சமமானவர்கள்தான். ஆனாலும் டெல்லியில் தேர்ந்தெடுக்கப்படும் ஏ.எஸ்.பி. நான்கு ஆண்டு காலத்தில் எஸ்.பி. ஆகிவிடுகிறார். இங்கே எடுக்கப்படும் டி.எஸ்.பி. 20 ஆண்டுகளானாலும் கூட உழைத்துப் பல கஷ்டங்களை அனுபவிக்கும் நிலையில்தான் இருக்கிறார்கள். இவர்கள் எஸ்.பி. ஆக வருவதற்குக் காலம் அனுமதிக்கவில்லை. 10, 20 ஆண்டுகள் வரை இவர்கள் கஷ்டப்படவேண்டிய நிலை இருக்கிறது. இந்த நிலையை மாற்ற வேண்டும். மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற கோஷத்தைக் கிளப்பியிருக்கும் நேரத்தில், இந்த இரண்டு பேர்களும் 50 : 50 என்ற முறையில் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். மத்திய சர்க்கார் 2 பேர்களையும், நாம் இரண்டு பேர்களையும் தேர்ந்தெடுப்பது என்று இருக்க வேண்டும். அந்த வகையில் மத்திய சர்க்காரை வற்புறுத்திக் கேட்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அரசியல் சட்டச் சிக்கல் இருக்கிறது என்று சொல்லலாம். அரசியல் சட்டம் திருத்தக் கூடாதது என்பது ஒன்றுமில்லை. அப்படித் திருத்தியும், வாதாடியும், மூன்று அங்கே, ஒன்று இங்கே என்றிருப்பதை மாற்றி அங்கும் இரண்டு, இங்கும் இரண்டு என்ற நிலையை உருவாக்க வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

முன்பு 'மெட்ராஸ் போலீஸ் சர்விஸ்' என்று இருந்ததை, நாம் இன்றைய தினம் 'தமிழ்நாடு காவல் துறை' என்று மாற்றியிருக்கிறோம். ஆனால் அவர்கள் அணிந்திருக்கும் பாட்ஜ் 'எம்.பி.எஸ்.' என்றுதான் இருக்கிறது. நாம் இன்றைக்கு போக்குவரத்துத் துறையில் 'டி.எம்.' என்று மாற்றியிருக்கிறோம். அதே வகையில் போலீஸ் துறையிலும் 'தமிழ்நாடு காவல் துறை' என்பதற்கு ஒப்பாக பாட்ஜ் அமையும் வகையில் திருத்தி அமைக்க வேண்டும் என்று பணிவோடு முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். தமிழகக் காவல் துறை என்பதை அடையாளம் கண்டு கொள்ளும் வகையில் மாற்றம் செய்ய வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

பழைய நடவடிக்கைகளையும் புரட்டிப் பார்த்தேன். எல்லாக் காரியங்களையும் போலீசார்களே செய்கிறார்கள். உதாரணமாக, ரோட்டிலே மாடு போகிறது என்றால் அதைப் போலீசார்தான் விரட்ட வேண்டும். லா அண்ட் ஆர்டர் என்றால், அதையும் போலீசாரே செய்ய வேண்டும். மற்ற கேஸ்கள் போடுவதும் அவர்களே.

பந்தோபஸ்து செய்து கொடுப்பதும் அவர்களாகத்தான் இருக்கிறார்கள். ஆகவே, இந்தப் போலீஸ் இலாகாவைப் பிரித்துத் தந்தால், ஒவ்வொருவரும் ஒரு வேலையைச் செய்ய முடியும். உதாரணமாக, பந்தோபஸ்து என்றால் ஒரு பிரிவினர் செய்யலாம். லா அண்ட் ஆர்டரைப் பார்ப்பதற்கு ஒரு தனிப் பிரிவு; வீதியிலே ஓடும் ஆடு மாடுகளைப் பார்த்துக்கொள்ள இன்னொரு பிரிவு டிராபிக் பற்றி கவனம் செலுத்த வேறு . பிரிவு என்று செய்தால் நலமாக இருக்கும். தனித்தனியாகப் பிரித்து விட்டால், ஒவ்வொரு துறையிலும் தனித்தனி ஆட்கள் இருப்பார்கள். மற்றத் துறையும் பாதிக்காது. அந்த நிலையை உருவாக்க வேண்டும்.

போலீசுக்குத் தாய் வீடு எங்கள் வேலூர். போலீசாரை உற்பத்தி செய்து அவர்களுக்குப் பயிற்சி அளித்து நாட்டிலே நல்ல பெயரை வாங்குவதற்குக் காரணகேந்திரமாக இருப்பது எங்கள் வடாற்காடு. மாவட்டத்தில் உள்ள வேலூர். ஆனால் அந்தப் பயிற்சிக் கூடங்கள், ஹாஸ்டல்கள் இவையெல்லாம் பல ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டவை, வெள்ளைக்காரன் காலத்தில் கட்டப்பட்டவை. அவையெல்லாம் மிக்க வருந்தத்தக்க நிலையில் இருக்கின்றன. அவற்றை மாற்றி, நல்ல சுகாதாரமும், காற்றோட்டமும் உள்ள இடங்களாகச் செய்யவேண்டும் என்பதை வலியுறுத்தி, இந்தக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. வை. பாலசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் போலீஸ் மானியத்தின் மீது என் கருத்துக்களைக் கூற இத்தகைய சந்தர்ப்பத்தை வழங்கியதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டம், ஒழுங்கு, அமைதி இவற்றைப் பாதுகாக்கும் தமிழக அரசின் தனித் திறமையையும், நிலையையும், மற்ற மாநிலங்கள் எவ்வாறு புகழ்கின்றன, போற்றுகின்றன என்பதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். இப்படிச் சட்டம், ஒழுங்கு, அமைதி இவை சிறப்பாக இருப்பதைக் காணச் சகியாமல், சிலர் குறை கூறுகிறார்கள். அதே நேரத்தில் இன்றைக்கு சட்டம், ஒழுங்கு, அமைதி எவ்வாறு காக்கப்படுகிறது என்பதைத் தெள்ளத் தெளிவாகப் பார்க்கவேண்டும். இன்றைக்கு போலீஸ் துறையினர் மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் காரணமாக, நக்சல்பாரிகளுடைய தொந்தரவு நம் மாநிலத்தில் இல்லை. அண்டை மாநிலங்களில் மக்கள் அச்சுறுத்தப்படுகிறார்கள், பயமுறுத்தப்படுகிறார்கள். இதை எண்ணிப் பார்க்கும்போது அந்தந்த மாநிலங்களில் வாழும் மக்கள் அச்சப்படும் சூழ்நிலைகள் இருக்கின்றன. ஆனால், நம்முடைய தமிழ்நாட்டில் பயமின்றி மக்கள் வாழும் தன்மையைப் பார்க்கிறோம். அதற்குப் பாதுகாப்பாக போலீசார் இயங்கி வருகிறார்கள். மக்கள் அந்த வகையில் சுபிட்சமாக வாழ்கிறார்கள். அந்த வகையில் நக்சல்பாரிகள் அடக்கப்படும் சூழ்நிலைகள் நம்





மாநிலத்தில் இருக்கிறது. அதே நேரத்தில் இன்றைக்கு சட்டத்தையும், ஒழுங்கையும் பாதுகாக்கும் சூழ்நிலைகளை உருவாக்கி, போலீஸ் துறை செய்து வரும் செயல்கள் பாராட்டப்படவேண்டியவை.

இந்த ஊர்க்காவல் படை தேசியப்படையாக இருக்கிறது. அது மக்கள் மத்தியில் தொண்டு ஆற்றுகிறது. ஆனாலும் அதை மாற்றியமைக்க வேண்டும் என்கிற எண்ணம் இருக்கிறது. புதிதாக மாற்றம் செய்தால்தான் சிறந்த தன்மையில் அது பணியாற்ற முடியும் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நல்ல பணிகளைச் செய்யும் இந்த ஊர்க்காவல் படையை மாற்றியமைக்க வேண்டும் என்று கோரும் அந்த நேரத்தில் ஒன்றைக் கவனிக்க வேண்டும். இதற்காக மத்திய சர்க்கார் சில மானியங்களைத் தருகிறார்கள். அப்படிச் செய்யும் மத்திய சர்க்கார் நம்முடைய மாநில சர்க்காருக்கு அப்படியொன்றும் அதிகமாக வழங்கிவிடுவதாகத் தெரியவில்லை. உத்தரப் பிரதேசம், பஞ்சாப் போன்ற மாநிலங்களில் இதை ஊக்குவிக்க மத்திய சர்க்கார் ஏராளமான மானியங்களை வழங்கியிருக்கிறது. மத்திய சர்க்காரோடு போராடி அதிகமான மானியத்தைப் பெற வேண்டும் என்று தங்கள் மூலம் மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

போலீஸ் துறையிலேயே பல மாற்றங்கள் செய்ய வேண்டும் என்று குறிப்பிட விரும்புகிறேன். ஸ்பெஷல் பிராஞ்ச், கிரிமினல் பிராஞ்ச் இந்த இரண்டு பிரிவிற்கும் ஒரே டி.ஐ.ஜி. தான் இருக்கிறார். அந்த நிலையை மாற்றி, ஸ்பெஷல் பிராஞ்சுக்கும், கிரிமினல் பிராஞ்சிக்கும் தனித் தனி டி.ஐ.ஜி.யைப் போட்டு அந்த வகையில் உருவாக்கினால் வேலைகள் ஸ்தம்பிதம் இல்லாமல் நடக்கும்.

அதே அடிப்படையில் சிறந்த முறையில் பணியாற்றுகிற போலீஸ் நிர்வாகம் அதன் கீழ் உள்ள நாய்ப் படைப் பிரிவு எந்த அடிப்படையில் செயலாற்றுகிறது என்பதைச் சற்று யோசித்துப் பார்க்க வேண்டும். பொதுவாக, நமது போலீஸ் துறையின் கீழ் உள்ள நாய்ப் படைப் பிரிவு மிகச் சிறந்த முறையில் பணியாற்றி வருகிறது. ஆனால் இந்தப் பிரிவு சென்னை, மதுரை, கோவை போன்ற பகுதிகளில்தான் செயல்பட்டுக் கொண்டு வருகிறது. இது போதாது என்றே கருதுகிறேன். இது மாவட்டத்திற்கு மாவட்டம் செயல்படுத்தப்பட வேண்டும் என்று வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

ஆனால் இப்படி எல்லாத் துறைகளிலும் நல்லவர்களாகவும் வல்லுனர்களாகவும் பணியாற்றிக்கொண்டு வரும் நமது போலீஸ் துறையினர் ஒரே ஒரு விதத்தில்தான் சொத்தையாகவும் சோடையாகவும் இருந்து வருகின்றனர். அது எதுவென்றால் விளையாட்டுத் துறை என்பதை நான் சொல்லாமலேயே புரிந்துகொள்ளலாம். இந்த விஷயத்தில் மற்ற மற்ற மாநிலங்களைக்காட்டிலும் நமது

மாநிலப் போலீஸ் மிகவும் பின் தங்கியிருக்கிறது. ஏனோ தெரியவில்லை, இது விஷயத்தில் போதிய அக்கறை எடுத்துக்கொள்ளப்படாமலேயே இருந்து வருகிறது. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்று சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட வாழ்விற்குப் போதிய விளையாட்டுக்களும் பயிற்சிகளும் மிக மிக அவசியம். எனவே போலீஸ் துறையில் இதை ஊக்குவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். 'கேம்ஸாக' இருந்தாலும் "ட்ராக் ஈவெண்டாக" இருந்தாலும் நமது மாநிலத்திலிருந்து செல்லும் போலீஸ் துறையினர் எப்போதும் பின்தங்கியே இருக்கின்றார்கள் என்பதை ஆண்டுதோறும் பார்க்கிறோம். எனவே, போதிய அளவிற்கு புதிய முயற்சியை மேற்கொண்டு இத்துறையிலும் நமது போலீஸ் துறையினர் மற்ற மாநிலத்தவர்களுக்குச் சற்றும் பின் தங்கியவர்கள் இல்லை என்று உலகுக்கு எடுத்துக்காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்படிச் சிறந்த முறையில் பணியாற்றி வரும் நமது போலீஸ் துறையினருக்கு மேலும் என்ன தேவையோ அவைகளையெல்லாம் செய்து தர வேண்டும் என்று போலீஸ் குழு கூட தன்னுடைய பரிந்துரைகளில் எடுத்துக் காண்பித்து இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அதையொட்டி இங்கிலாந்து நாட்டில் செயல்பட்டு வரும் 'ஸ்காட்லாண்டு யார்டு' என்று சொல்லப்படும் போலீஸ் பிரிவிற்குச் சரிசமமாக செயலாற்றிப் பெயரும் புகழும் பெற்றுள்ள நமது போலீஸ் துறையை மேலும் மேலும் ஊக்குவிப்பதற்கு ஆவன செய்ய சர்க்கார் முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய தொகுதியைப் பற்றி இரண்டொரு கருத்துக்கள் மட்டும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் இடைக்கழி நாடு என்று ஒரு பகுதியிருக்கிறது. இப்பகுதிக்கு ஒரு தனிக் காவல் நிலையம் வேண்டும் என்று மட்டும் சொல்லிக்கொண்டு இந்தப் போலீஸ் மானியத்தை மனமார வாழ்த்தி வரவேற்று, உரையை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

*திரு. எம். முத்தையா: பேரவைத் தலைவர் அவர்களே, 1971-72-ம் ஆண்டுக்கான போலீஸ் துறையின் மான்யக் கோரிக்கையை ஆதரித்து இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இதில் உள்ள முக்கியமான குறை என்னவென்றால் போலீஸ் துறையில் உள்ளவர்களுக்கு சாதாரண ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுடைய சம்பளம் கூட கொடுக்கப்படவில்லை. இது கவனிக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

அடுத்தபடியாக, சம்பளக் கமிஷன் அறிக்கையைப் பார்க்கும் போது முன்பெல்லாம் டி.எஸ்.பி. யாக வருவதற்கு எஸ்.ஐ.களிலிருந்து பதவி உயர்வு மூலம் அப் பதவியில் அமர்த்தப்



பட்டார்கள். தற்சமயம் அவர்கள் ஐ.பி.எஸ். பாஸ் பண்ணினால் தான் டி.எஸ்.பி.-யாக வரலாம் என்று அறிக்கையிலிருப்பதால் பெரும்பாலும் பின்தங்கிய அரிசன வகுப்பைச் சார்ந்தவர்கள் பாதிக்கப்படுவார்கள். எஸ்.ஐ.-ஆக இருப்பவர்கள் அவர்கள் தங்களுடைய அன்றாட அலுவல்கள் சம்பந்தமான பொறுப்புக்களையும் மேலும் குடும்பப் பொறுப்புகளையும் கவனித்துவிட்டு ஐ.பி.எஸ். பட்டம் பெறுவதற்கான படிப்பைக் கவனிக்க அவர்களுக்கு நேரம் இல்லாது போய்விடுகிறது. எனவே அவர்கள் பழைய முறையிலேயே பிரமோஷன் பெற வேண்டும் என்பதற்கான வாய்ப்பினை அளித்தால் நன்றாக இருக்கும். அப்படியில்லையென்றால் பின்தங்கிய வகுப்பினர்கள் இப்படிப்பட்ட படிப்பில் ஐ.பி.எஸ். தேற முடியாது போய்விடுவார்கள். எனவே முன்பிருந்தது போலவே எஸ்.ஐ.களுக்குப் பதவி உயர்வு அளிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்

அடுத்தபடியாக இப்போதுள்ள நிலைமையில் ஒரு போலீஸ் ஸ்டேஷனுடைய ஜுரிஸ்டிக்ஷன் என்று சொல்லப்படும் அந்தச் சரகத்தைச் சார்ந்த கிராமங்கள், அடுத்துள்ள போலீஸ் ஸ்டேஷனைத் தாண்டிப் பரவியிருக்கின்றன. அப்படிப்பட்ட கிராமங்களுக்கு இந்த போலீஸ் ஸ்டேஷனுடைய எல்லையைக் கடந்து செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஒரு போலீஸ் சரகத்தைச் சார்ந்த கிராமங்கள் அடுத்துள்ள போலீஸ் சரகத்தை ஊடுருவிச் செல்லும் நிலைமையில் இல்லாமல் அந்தந்த போலீஸ் சரகத்தை ஒட்டியே இருக்கும்படியாக அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக கிராமப்புறங்களிலுள்ள போலீஸ் ஸ்டேஷன்களுக்கான எஸ்.ஐ.களுக்குக் கண்டிப்பாக குடியிருப்புகள் அமைத்துத்தரப்பட வேண்டும். ஏன் என்றால் கிராமப்புறங்களிலுள்ள போலீஸ் ஸ்டேஷன்களில் அரிசன வகுப்பைச் சார்ந்த ஒருவர் எஸ்.ஐ.-ஆக நியமிக்கப்பட்டால் கிராமத்தில் அவருக்கு யாரும் வீடு கொடுக்க முன்வருவது இல்லை. என்னுடைய தொகுதியில் எப்போதுவென்றான் என்ற ஊரில் ஒரு போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது. அங்கே அரிசன எஸ்.ஐ. நியமிக்கப்பட்டால் கிராமத்தில் அவருக்கு யாரும் வீடே கொடுக்க முன்வருவது இல்லை. எனவே அவர் பெரும்பாலும் தூத்துக்குடி அல்லது எட்டையபுரத்தில் குடியிருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. எனவே தான் கிராமாந்திர போலீஸ் ஸ்டேஷன் எஸ்.ஐ.களுக்கு கண்டிப்பாக க்வார்ட்டர்ஸ் கட்டிக்கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அல்லது அரிசன சமுதாயத்தைச் சார்ந்த எஸ்.ஐ.களை பெரிய நகரங்களிலேயே நியமிக்க வேண்டுமேயல்லாது கிராமப்புறங்களில் உள்ள போலீஸ் ஸ்டேஷன்களில் போடாமல் இருக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, போலீஸ் ஸ்டேஷன்களுக்கு ஜீப் இல்லாவிட்டாலும் தற்காலிகமாக ஒரு மோட்டார் வசதியாவது அவசியம் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏன் என்றால் பல

[திரு. எம். முத்தையா] [1971 ஜூலை 19

சந்தர்ப்பங்களில் அவர்களுடைய கிராமங்கள் 10 அல்லது 15 மைல் தொலைவில் கூட இருக்கின்றன. திடீரென்று அப்படிப்பட்ட கிராமத்திற்குப் போகவேண்டும் என்றால் முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே இதைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த மான்யக் கோரிக்கையின் மீது பேசும் வாய்ப்பினை அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

DR. H. V. HANDE : Hon. Speaker, Sir, in pursuance of the cut motions given on behalf of my party, I wish to say a few words. At the very outset, I want to say that the Police Department has certain advantages as well as certain disadvantages. As regards advantages, whenever we level charges against the Department and point out its acts of omission and commission, it so happens invariably both before 1967 and after 1967 that they are always taken as an attack on the ruling party, on the Chief Minister or the Home Minister and they start answering the points raised by us. I request that this habit be dropped.

I want the Chief Minister or the Home Minister to examine the points made by us and see whether justice is done irrespective of the fact whether we try to hurt people or not. That is one aspect of the matter. As regards the disadvantages, whenever there is a police firing, we in the Opposition have got the habit of criticising the ruling party and saying that the police firing could have been avoided. This has been the practice both before 1967 and after 1967. Before 1967 we saw several posters saying—

கூலி உயர்வினைக் கேட்டான் அத்தான்
குண்டடிபட்டுச் செத்தான்.

Now also the same posters are pasted. In the recent elections also we saw the same posters. I am trying to make an impartial observation. My point is that the question of police firing—irrespective of the parties involved—must be viewed on merits and both the ruling party and the Opposition Parties must put an end to frequent reference to the Police Department in regard to this matter. There should be a moratorium on that. To day it may be the Ruling Party and tomorrow it may be the Opposition Party and so only cases where the Police have acted in excess must be taken into account. This is another aspect of the matter.

Among the several cut motions we have given notice of, one of them related to the provision of more facilities and amenities to the police force. Another cut motion specifically refers to non-interference by the politicians. We do not want politicians to interfere in the police administration and we want to take a clear-cut stand in regard to this matter. Now I want to dilate on this aspect of the matter.



1971 ஜூலை 19] [Dr. H. V. HANDE]

We find there is a feeling among the public that there is miscarriage in administration and orders are wrongly passed. In the good old days in used to be said in the United Kingdom that the Food Ministry was the grave-yard of brilliant men. I would like to say that the post of Commissioner of Police, Madras City had let down several brilliant officers. In 1967, after the elections an order was passed by the Chief Minister that the particular officer manning that post should be removed or must be transferred. Another person was posted. The Chief Minister might argue as he pointed out in the case of Inspector-General of Police (when pointed out by Thirumathi Anandanayaki) that it was all a matter of administrative exigency. In 1967, after the elections, the Commissioner of Police was changed. In 1971, after the elections, the Commissioner of Police was changed. These are indisputable facts. Why is it they were changed? I am sure the Hon. Chief Minister will explain the circumstances under which the Commissioner of Police was changed. The fear outside is that these officers went against the rulings, wishes and mandates of the ruling party and they took an impartial attitude and that is why they were changed.

Just before the recent elections, in the year 1971, the Commissioner of Police convened a conference of leaders of political parties. All of us went and we ventilated our grievances to the Police Commissioner and we began to think at least here was a police officer who listened to us and who took an impartial attitude—never mind whether he heeded to what all we said and did what all we told him—but he listened patiently to what all we said. That officer was transferred after the elections. The circumstances under which he was transferred might be made known to us. The feeling outside in the police stations is when this is the fate of the Commissioner of Police, nothing should be done against the ruling party. There is a feeling in administration that if the ruling party is pleased, one could get away with anything.

Let me take my own constituency. In this very House, three months ago, I had mentioned certain bitter things. I have once again to repeat in a grave and painful manner that the situation is far from satisfactory. We have the G-1 and G-2 police stations. There are always a number of cases. But even bailable cases are sent for remand. If there is interference by local member of the ruling party, there is a saving of the whole thing. I can quote in this connection a particular paragraph, which would have definitely been written after experience in police administration. On page 212 paragraph 56 it is said as follows : (the Communist Party Member also quoted it).

"The problem arises in this way. The dividing line between intervention and intercession is conceptually clear, but not always clear in practice. Intercession can easily become improper pressure where the interceder has the ear of Ministers,

[Dr. H. V. Hande] [1971 ஜூலை 19

or at least the ear of someone who has the ear of Ministers". This must have been written only after some investigation. They go on :—

"In a situation of this kind, the officer concerned is always placed in a dilemma. Intercessions of this kind always become known not only to the parties who are adversely affected, but the rival political factions in the local area."

My whole constituency is ridden with this problem. If this is the position in a constituency wherein the M.L.A. does not belong to the ruling party, what will be the position in a constituency wherein the M.L.A. belongs to the ruling party? As the lady member Thirumathi Anandanayaki pointed out, persons charged for bailable offences are remanded to custody. When persons come to police stations and request bail, it should be granted, for bailable offences. But for these petty offences, bail is not immediately granted. The man is remanded to custody. The bail papers do not come to the office of the Commissioner of Police in time. When the Deputy Commissoner begins to examine the case, the papers do not come in time with the result the concerned police station has to be again contacted and papers obtained and bail given. In the meantime three or four days elapse and the poor man has to be remanded to custody all the time, when in fact it is only a bailable offence. Bail papers should be sent to the Office of the Commissioner of Police that day itself. This rule should be there and enforced strictly. The concerned person should not be remanded to custody unnecessarily.

What happens to the poor persons? They are exposed to sunlight. I would request the Hon. Chief Minister to go himself incognito or depute some officer incognito to find out the conditions of these persons, the dingy atmosphere in which they are kept. What is happening when the Deputy Commissioner examines the cases betwen 12–30 and 1–30? Let these things be examined and let the Hon. Minister know how things are going on. Then he will be satisfied what I say has some significance.

I want to tell again something about my constituency. It has ten divisions. 33, 34 and 35 comprise the Choolai area. I come to understand that the Police Officer concerned was transferred to Adayar (J1 or J2). But then after some time the same police officer had been transferred back. That is the information I have got. I would request the Hon. Minister to examine this. Ruling party members are able to have their say.

A particular jeep, belonging to the police department, (I have got the number of the jeep, I shall tell it after some time) is always standing between 8. a.m. and 10-30 a.m. before the house of an important ruling party member. This is the information I have and this has come in papers also. I want the Hon. Minister to find out how much pressure is being brought by the



1971 ஜூலை 19] [Dr. H. V. Hande]

ruling party members on the administration. This particular person is an influential member and his house is in division 34. This jeep stands there for nearly two hours in the morning and this jeep belongs to the Assistant Commissioner of Police. I want this particular point to be clarified. On account of that we are given trouble.

Persons having sympathy with the Opposition are driven from pillar to post. They are put in the lock up, bail is not granted to them. These people go about the houses and threaten the ladies asking their sons to withdraw their activities with Congress or Swantantra parties. I shall cite one particular instance. I got into touch with the Deputy Commissioner on telephone over an incident. He got in touch with the concerned Police Sub-Inspector on phone and I was fed with some reply. That is the information which I had already fed him with. Immediately when I phone to the Police Station, after two minutes, I was told that the Inspector was not present.

"நான் இல்லை என்று சொல்லச் சொன்னேன் என்று சொல்லு"

That is the reply I get. With all the persuasiveness at my command I request Government to examine all these things in the Police administration should we not be given proper hearing whenever we want to complain something genuinely? I now got the number of the Police Jeep. It is MSM 8041. Daily it is waiting between 8.00 a.m. and 10-30 a.m. before the house of the ruling party member. This point may be given proper consideration and examined.

There is another point. The Hon. Minister for Harijan Welfare is also here. She knows the place. Regular robbery is going on in my constituency in a particular place. The persons affected belong mostly to B and C Mills. In division No. 34, just below the railway line, there is some sort of under-bridge and whenever persons pass along that place, they are robbed. Innocent people are victimised. They are all persons working in B and C Mills factory. But these complaints I have got in my hand. I want the Hon. Chief Minister to examine this matter also. This is a very important matter.

Then, Sir, finally I just want to say one or two things and I am done with. With regard to the recruitment policy that the Government has now brought forward, I am afraid, it is beset with certain dangers. The recruitment policy may be a backdoor method of bringing in party sympathisers. That is the feeling and that should be completely put an end to. The Hon. Chief Minister must give a categorical statement in this House that whatever happens, he will see to it that proper service commission methods are adopted and proper methods of selection will take place.

There is also another mess in this. It unleashes a great deal of discontentment among the present constables at the lower level. They are expecting promotions. But we are bringing in another

set of persons who are supposed to be higher over and adove these lower constables. The constables at lower level will be discontented thereby. A large number of them have put in a number of years of service. I demand serious re-consideration of this recruitment policy by promoting the senior perons among the present constabulary into First Grade Constables and give opportunities to youngsters also, so that discontentment will not be there. If any further proof is required, I am prepared to give it to the Chief Minister.

In fact I would request the Hon. Chief Minister to convene a sort of a get-together in his room. I am prepared to come. I am prepared to bring all the persons concerned. We are prepared to give evidence about the nefarious activities that were going on in the station, so that he can also bring the Inspector of Police or any one to come there. We are prepared to discuss the whole thing and give evidence before the Chief Minister. At least in my area let there be an impartial method of treatment of persons, irrespective of whether they belong to the ruling or the opposition party. If this guarantee is given to me, I have nothing to grumble or worry. Otherwise, it is impossible for me to carry on my functions.

Every day I am being pestered by this sort of partisan attitude and all these things. I would request, therefore, that immediately the details must be called for and proper action mus be taken, so that proper things are done in my constituency.

With these words and once again expressing the hope that the cut motions—a number of cut motions we have given—will all be taken into consideration and suitable answers will be given by the Chief Minister, I resume my seat.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** மிஸ்டர் ஸ்பீக்கர் சார், இன்று விவாதிக்கப்படக்கூடிய போலீஸ் மானியம் மிக முக்கியமானது என்றாலும் அதில் பேசுவதில் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்பதை தாங்கள் அறிவீர்கள். இந்த அடிப்படையில் எங்கள் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். நாங்கள் கொடுத்திருக்கக்கூடிய வெட்டுப் பிரேரணை பிரதானமாக காவல் துறை நிர்வாகத்தில் அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களோ, வெளியார்களோ தலையிடக்கூடாது என்பதுதான். இந்த விஷயத்தைப்பற்றி பல உறுப்பினர்கள் பல கோணங்களில் இருந்து தங்கள் கருத்துக்களை எடுத்துத் தெரிவித்திருக்கிற காரணத்தினால், போலீஸ் கமிஷன் ரிப்போர்ட்டில் பல யோசனைகளும் கொடுக்கப்பட்டிருக்கிற காரணத்தினால் அதுபற்றி நான் அதிகமாகப் பேச விரும்பவில்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

போலீஸ் கமிஷன் 1969-ஆம் வருஷம் டிசம்பர் மாதம் 20-ஆம் தேதி அன்று திரு. ஆர். ஏ. கோபாலசாமி அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டு, அவர்களும் வெகு சீக்கிரத்தில் ரிப்போர்ட்



கொடுத்திருக்கிறார்கள் என்பது பாராட்டத்தக்க செய்தியாகும். அந்தக் கமிஷனில் நல்ல அரசியல் அனுபவம் பெற்ற திரு. ம. பொ. சி. அவர்களும், கிரிமினல் வழக்குகளில் நல்ல தேர்ச்சி உள்ள திரு. கோவிந்தசாமிநாதன் அவர்களும் இருந்திருக்கிற காரணத்தினால் அந்த ரிப்போர்ட்டில் அடங்கியுள்ள நல்ல அம்சங்களைப்பற்றி இந்தச் சபையும் தன் கருத்துக்களைச் சொல்ல வாய்ப்புக் கொடுத்திருக்க வேண்டும். இந்தக் கூட்டத் தொடரில் அதற்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்றாலும் அடுத்த தொடரிலாவது அதற்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். இந்தச் சபையின் கருத்தையும் அறிந்து எந்த எந்த சிபார்சுகளை அமுல்படுத்தவேண்டும் என்பதை அரசு முடிவு செய்யவேண்டும். அதுதான் பொருத்தமாக இருக்கும் என்பதாக முதன்முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் நமக்குக் கொடுத்திருக்கக்கூடிய விளக்கத்தில் சில சிபார்சுகளை அமல் நடத்தியிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக சம்பள விஷயமாக கமிஷன் சொல்லியிருக்கக்கூடிய விஷயத்தை அமல்படுத்தியிருப்பதாகச் சொன்னார்கள். நான் அறிந்த வரையில் அந்த சம்பளக் கமிஷன் அடிப்படையில் போலீசார்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய பணம் இன்னமும் கொடுக்கப் படாமல் இருக்கிறது என்பதுதான். ஆகவே துரிதமாக அவர்களுக்கு அந்தச் சம்பளம் கிடைக்கும்படிச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவது சிபாரிசு, புதியதாக ஆயிரம் போலீஸ்காரர்கள் சேர்க்கப்படும் என்பதாகும். இம்மாதிரி புதியதாக போலீஸ் துறையில் ஆட்களைச் சேர்க்கும்போது பலவிதமான சந்தேகங்களுக்கு இடமில்லாமல் சர்வீஸ் கமிஷன் மூலமாகவே ஆட்களைத் தேர்ந்தெடுக்க ஆவன செய்யவேண்டும்.

மூன்றாவதாக, 60 போலீஸ் சர்க்கிளை ஏற்படுத்தப்போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். எந்த எந்த இடங்களில் ஏற்படுத்த இருக்கிறார்கள் என்கிற விபரத்தை அளித்தால் உதவியாக இருக்கும்.

நான்காவது சிபாரிசாக—பல உறுப்பினர்களும் வெட்டுப் பிரேரணை கொடுத்திருக்கிறார்கள்—அவர்களுக்கு எல்லாம் மோட்டார் சைக்கிளும், மோட்டார் காரும் வழங்கப்படவேண்டுமென்று எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் சொல்கிறார்கள். ஆகவே, அதுவும் அமல்படுத்தப்படும் என்று சொல்லப்படுகிறது. இந்தச் சிபார்சுகளை அமல்படுத்துவதோடு, மற்ற எந்த எந்தச் சிபார்சுகளை அமல்படுத்தவேண்டும் என்பதுபற்றி இந்தச் சபையின் கருத்தையும் தெரிந்துகொண்டு, போலீஸ் அதிகாரிகளின் கருத்தையும் தெரிந்துகொண்டு அமல்படுத்தவேண்டும் என்பதாக நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1971 ஜூலை 19

என்னுடைய ஆலோசனை என்னவென்றால் இன்றைக்கு ஸ்பெஷல் ஆர்ம்டு போலீஸ் இருக்கிறது. போலீஸ் கான்ஸ்டபிள்களும் இருக்கிறார்கள். ஸ்பெஷல் ஆர்ம்டு போலீஸில் பத்தாயிரம் பேர்கள் இருக்கிறார்கள் என்றால் சாதாரண போலீஸ் இருபதாயிரத்திற்கும் அதிகமாக இருக்கிறார்கள். கிட்டத்தட்ட சாதாரண போலீசில் பாதி ஸ்பெஷல் ஆர்ம்டு போலீஸ் இருக்கிறது. இதற்கும் அப்பாற்பட்டு மலபார் ஸ்பெஷல் போலீஸ் என்று இரண்டு மூன்று பட்டாலியன்ஸ் வைத்திருக்க வேண்டிய அவசியம் என்ன என்று தெரியவில்லை. எவ்வளவு பட்டாலியன்ஸ் இருக்கின்றன என்கிற விவரம் தெரியவில்லை. ஆனால் அமைச்சர் குறிப்பில் இரண்டாவது, மூன்றுவதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் மலபார் ஸ்பெஷல் போலீஸ் என்பது There is a special odium attached to the Malabar Special Police என்பதாகத்தான் இருக்கிறது. 1946-ம் வருஷம் பொன்மலை என்பதாகத்தான் இருக்கிறது. 1946-ம் வருஷம் பொன்மலை வேலைநிறுத்தத்தின்போது இதே மலபார் ஸ்பெஷல் போலீஸ்தான் ராஜி, ராமச்சந்திரன், தங்கவேலு முதலிய ஐந்து பேர்களை துப்பாக்கிச் சூடு நடத்திக் கொன்றிருக்கிறார்கள். இதுபோல ஓடியம் இருக்கக்கூடிய—மலபார் ஸ்பெஷல் போலீசையே கலைத்து விட்டு ஸ்பெஷல் ஆர்ம்டு போலீசோடு சேர்த்துவிடலாம் என்பது என் கருத்து.

அடுத்து, போலீஸ் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. மொய்தீன் சொன்னார்களே, அதைத்தான் அப்ரூவ் செய்ய வேண்டியிருக்கிறது. கொஞ்சம் நேரமானாலும் இரண்டு நிமிஷத்தில் ஒரு கருத்தைச் சொல்லிவிடுகிறேன். வெள்ளையர் காலத்தில் இருந்தே மிக விரைவாகவும் திறமையாகவும் செயல்படக்கூடிய வகையில் டிசிப்ளினோடு கொண்டுவரப்பட்ட இலாகாக்கள் என்றால் போலீஸ் இலாக்காவும், ஜெயில் இலாக்காவும்தான். அதே திறமை, விரைவு, டிசிப்ளின் இன்றைக்கும் இருக்கிறது. பாராட்டத்தான் வேண்டும்.

1962-ஆம் வருஷம் சீன ஆக்கிரமிப்பு ஏற்பட்டபோது 7 மணியில் இருந்து பத்து மணிக்குள்ளாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட கம்யூனிஸ்டுகளை அதனால்தான் கைது செய்ய முடிந்தது. அதே போல ஆகஸ்டு 9-ஆம் தேதி ஊர்வலமாகச் சென்று 15-ஆம் தேதி ஒருசில பண்ணைகளில் இறங்கப்போவதாக அறிவித்தவுடன் 12 ஆயிரத்துக்கும் அதிகமான பேர்களை 7-ஆம் தேதியன்றே கைது செய்ய முடிந்தது. வேறு எந்த வேலையாக இருந்தாலும்—தேர்தலையே எடுத்துக் கொள்ளுங்கள், வேறு எந்த இலாக்காவிலும் இந்தப் போலீஸ் இலாக்காவைப்போல இவ்வளவு திறமையாகச் செயலாற்றியிருக்க முடியாது. நாடாளுமன்றம் நடக்கிறது, சட்டமன்றம் நடக்கிறது என்றால் போலீஸ்காரர்களை வாட்ச் அண்டு வார்டு ட்யூடியில் போடுகிறபோதுதான் இந்தச் சபைகளின் நடவடிக்கை முறையாக நடக்கிறது. அவர்களிடம்



1971 ஜூலை 19] [திரு. கே. டி. கே. தங்கமணி]

இருக்கும் இந்த டிசிப்ளினை நான் குறை சொல்லவில்லை. ஆனால் அவர்களுக்கு நாம் எந்தமாதிரியான காரியத்தைக் கொடுக்கிறோம், எந்தமாதிரியான அரசியலைக் கொடுக்கிறோம், எந்தமாதிரியாக நடக்கவேண்டுமென்பதாக ஆணையிடுகிறோம் என்பதுதான் பிரதானமானது.

ஆகவே, இந்த இலாகா அன்றைக்குத் திறமையாக இருந்தது மாதிரி, இன்றைக்கும் திறமையாகத்தான் இருக்கிறதென்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன். அதற்கு வேண்டுமானால் ஓரிரு உதாரணங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

சமீபத்தில் நான் மதுரைக்குச் சென்றிருந்தேன். இம்மாதம் 7-ஆம் தேதி என்று நினைக்கிறேன். இம்மாதம் 6-ஆம் தேதியன்று ஜெய்ஹிந்த்புரம், எம். கே. புரம் என்ற இடத்தில் இரு சாராருக்குள் ஒரு ஜாதிச் சண்டை ஏற்பட்டு, அதில் ஒரு ஜாதியைச் சேர்ந்த ஒருவர் இறந்துவிட்டார். இறந்து போனவருடைய ஜாதியைச் சேர்ந்தவர்கள் . சேர்ந்து கொண்டு வந்து, அடுத்த ஜாதியைச் சேர்ந்தவர்களைத் தாக்கினார்கள். நான் பக்கத்தில் கொஞ்ச தூரத்தில் இருந்தேன். போலீஸுக்குத் தகவல் கொடுத்து ஒரு லாரி நிறைய போலீஸ் வந்தது. அவர்களால் சமாளிக்க முடியாததால், கடைசியில் ஸ்பெஷல் ஆர்ம்டு போலீஸ் வந்து பிஸ்டல் பாயின்ட்டில்தான் அந்தக் கூட்டத்தினரை பணிய வைத்தார்கள். இப்படியாக போலீசார் சிறந்த முறையில் பணியாற்றுகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.

அடுத்தபடியாக ஒரு விஷயம். எந்தப் போலீஸ் நடவடிக்கையிலிருந்து உயிர்ச்சேதம் ஏற்பட்டாலும் அதற்கு ஜூடிஷியல் என்குயரி வேண்டும். ஜூடிஷியல் என்குயரி வைத்தால்தான் நல்லது. மதுரை மாவட்டத்தில் ஒரு ஜாதிச் சண்டை ஏற்பட்டு, ஒருவர் இறந்ததால் அவருடைய பிணத்தை எடுத்துக்கொண்டு போனார்கள். லாரி நிறைய போலீஸ் வந்து சுட்டார்கள். அதற்கு ஒரு நீதி விசாரணை போட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும். ரெவின்யூ போர்டு மெம்பரைப் போட்டால் போதாது. நான் இந்த அரசுக்குச் சொல்லிக்கொள்வதெல்லாம் துப்பாக்கிப் பிரயோகத்தைத் தடுக்க வேண்டும் என்பதுதான். அப்படித் தவிர்க்க முடியாத நிலையில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்து, அதன் காரணமாக உயிர்ச்சேதம் ஏற்பட்டால் அதற்கு கண்டிப்பாக ஜூடிஷியல் என்குயரி போட வேண்டும். அப்படிச் செய்தால்தான் மக்கள் மத்தியில் ஒரு நல்ல பெயர் எடுக்க முடியும், மக்களின் அதிருப்தியைப் போக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, போலீசார் எப்படி அத்துமீறி காரியங்களைச் செய்கிறார்கள் என்பதற்கு ஓர் உதாரணம். அண்மையில் நில மீட்சிப் போராட்டம் நடந்தபோது யார் யார் அந்தப் போராட்டத்தில் ஈடுபடப்போகிறார்கள் என்கிற விவரத்தை

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1971 ஜூலை 19

நான் சார்ந்திருக்கிற கம்யூனிஸ்ட் கட்சி முதலிலேயே தெரியப்படுத்திவிட்டது. அந்தப் போராட்டத்திற்குச் சம்பந்தம் இல்லாதவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டார்கள். ஆரூரான் சர்க்கரை ஆலையில் வேலை செய்கிற ஆறு பேரைக் கைது செய்திருக்கிறார்கள். ஆலையில் ஆறு நாட்கள் அல்லது பத்து நாட்கள் அல்லது பதினைந்து நாட்களுக்கு மேல் லீவு இருக்காது. அப்படி 15 நாட்களுக்கு மேல் போனால் அவனுக்கு வேலை போய்விடும். இந்த நிலையில் அந்த ஆலையில் ஆறு பேரைக் கைது செய்தார்கள். தாரங்கதாரா ஆலையில் ஒருவர் கைது செய்யப்பட்டதால் அவர் 15 நாட்களுக்கு மேல் ஆப்சென்ட் ஆனார் என்று காரணம் காட்டி அவருக்கு வேலை போய்விட்டது.

அதுமட்டுமல்ல, மோகன் என்று சொல்லக்கூடிய ஒரு என்.ஜி.ஓ. அவருக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை. போலீஸார் என்னைக் கைது செய்கிறபோது, அவரையும் கைது செய்துவிட்டார்கள். நான் இரவு 10 மணிக்கு கூட்டத்தை முடித்துக்கொண்டு வந்தேன். அப்போது என்னைக் கைது செய்தார்கள். என்னைக் கைது செய்யும்போது அவரையும் கைது செய்துவிட்டார்கள். பிறகு அவர் வெளியில் வந்தார். இந்த விஷயம் ஐ.ஜி. அவர்களுக்குப் போகிறபோது, 'இரவு 2½ மணிக்கு கைது செய்யப்பட்டார்கள்' என்கிறமாதிரி போகிறது. இரவு 2½ மணி என்றால் ஏதோ சதி நடத்துவதாக ஒரு சந்தேகம் எழலாம் அல்லவா? பத்து மணிக்கு கைது செய்தவர்களை இரவு 2½ மணிக்குக் கைது செய்ததாகத் தவறான முறையில் தகவல்களைக் கொடுக்கிறார்கள். இதை செக்கப் பண்ண வேண்டும். இப்படி மேலதிகாரிகளுக்கு தவறான இம்ப்ரஷனை ஏற்படுத்தக்கூடாது. இந்தமாதிரி விஷயங்கள் எல்லாம் வருகிறபோது, உண்மை தெரிந்த எங்களைப் போன்றவர்களுக்கெல்லாம் இதுமாதிரி சிரமம் ஏற்படுகிறது.

இன்னொரு விஷயம், 1949-ஆம் வருஷத்தில் யாராவது கம்யூனிஸ்ட் என்று சொல்லிவிட்டால் உடனே கைது செய்துவிடுவார்கள். அதேபோலத்தான் இன்றைக்கு நக்சலைட் என்றால் உடனே கைது செய்துவிடுவார்கள். ஆனால் நக்சலைட் என்று பெயர் வைத்து பல பேர்களை சிரமத்திற்கு உள்ளாக்குகிறார்கள்.

அடுத்தபடியாக, போலீஸுக்கு இப்போது அதிகமாகப் பணம் ஒதுக்கியிருக்கிறோம். பெரிய தவறு இதில் இருப்பதாக நினைக்கவில்லை. 1966-67-லே பத்து கோடி ரூபாய்தான் இதற்கு இருந்தது. இப்போது 18 கோடி ரூபாய் என்ற அளவில் உயர்த்தியிருக்கிறார்கள். இப்பொழுது இந்தத் துறையில் ஆட்களும் அதிகம், வேலையும் அதிகம், இன்னும் விஞ்ஞானரீதியில் பல காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

அடுத்தபடியாக, ரயில்வே போலீசாருக்கும் உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நம்மை நம்பி அவர்கள் ரயில்வேயில் வேலை செய்கிறார்கள். ரயில்வே போலீஸுக்கு



1971 ஜூலை 19] [திரு. கே. டி. கே. தங்கமணி]

மத்திய அரசு 15 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு ஏன் மத்திய அரசு இதைக் கொடுக்கக்கூடாது. இதைப்பற்றி நான் ஒரு தடவை கேள்விபோட்டபோது, அமைச்சர் அவர்கள், 'இது மத்திய அரசின் பொறுப்பு' என்று சொல்லிவிட்டார்கள். அவர்களுக்கும் நாம் உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் இரண்டொரு விஷயங்களைச் சொல்லலாம் என்றிருக்கிறேன். அதிகமாகச் சொல்லாமல் சுருக்கமாகவே சொல்ல விரும்புகிறேன். இப்போது போலீஸ் இலாக்காவிலிருந்து ஃபயர் சர்வீஸ் தனியாகச் செயல்படுகிறார்கள். அவர்களைப் பற்றி ஒரு குறிப்பு வந்திருக்கிறது. 4,447 கால்கள் வந்தன.

'Of this, 3,922 calls relate to actual fire. There were 30 instances of serious fires. The estimated value of property lost or damaged by fire in 1970 is Rs. 70.11 lakhs. The estimated value of property saved from destruction is Rs. 903.23 lakhs.'

இது ஒரு பெரிய சாதனை. அப்பேர்ப்பட்ட இந்த இலாகாவுக்கு இன்னும் கொஞ்சம் அதிகமான கவனம் செலுத்தி, அவர்களுடைய ஊதியத்தை உயர்த்த வேண்டும். வேலை முறைகளில் அதிகமான கவனம் செலுத்த வேண்டும். இப்பொழுது கவனக் குறைவு இருக்கிறது. அவர்களுடைய குறைகள் எல்லாம் நீக்கப்பட வேண்டும். அவர்களுடைய உடைக்கு 'டோபி அலவன்ஸ்' 3 ரூபாய்தான் கொடுக்கிறார்கள். போலீஸுக்கு 7 ரூபாய் தருகிறார்கள். இப்படியாக சில பாகுபாடுகள் இருக்கின்றன. இதிலே அதிகமான கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 'ஹோம்-கார்ட்ஸ்' பற்றியது. அதற்கு டி.ஐ.ஜி. அந்தஸ்தில் ஒருவர் தலைவராக இருக்கிறார். நான்-அபிஷியலாக இருப்பவர்கள் ஜனங்களை மேய்க்கிற அதிகாரங்களையெல்லாம் செய்கிறார்கள். எவ்வளவோ விஷயங்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் சொல்ல நான் விரும்பவில்லை.

நாம் இன்றைக்குக் காவல் துறையினருக்கு வீடு கட்டுவதற்காக 83 லட்சம் ரூபாய் வரையில் நிதி ஒதுக்கியிருக்கிறோம். மத்திய அரசை 70 லட்சம் ரூபாய் தரும்படிக் கேட்டிருக்கிறோம். கண்டிப்பாக மத்திய அரசிடமிருந்து அந்தத் தொகையைக் கேட்டுப் பெறவேண்டும்.

மதுரை, இராமநாதபுரம் போன்ற இடங்களில் வீடுகளைக் கட்டும்போது மற்றொன்றையும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அந்தப் பகுதிகளில் நிரந்தரமாக தண்ணீர் தட்டுப்பாடு இருந்து வருகிறது. போலீஸ்காரர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும்போது, குடிதண்ணீர் வசதியையும், மற்ற வசதிகளையும் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1971 ஜூலை 19

அடுத்து, 'கொச்சின் ஹவுஸ்' போன்ற போலீஸ் லைன்களில் கடந்த ஏப்ரல் மாதம் மின்சாரம் தடைப்பட்டுப்போய் ஒரே இருளாக இருந்தது. சரியானபடி மின்சார வசதி செய்து கொடுக்க வேண்டும்.

மண்ணடியிலே காவல்துறையினருக்கென்று கட்டப்பட்டிருக்கும் வீடுகள் எல்லாம் மிகப் பழமையானவை, மொகலாயர்கள் காலத்திலே கட்டப்பட்டவையாக இருக்கலாம். சென்னைக்கு வருபவர்கள் மண்ணடியிலுள்ள காவல்துறையினர் வீடுகளைக் கண்டிப்பாகப் பார்க்கிறார்கள். ஆகவே, இதிலே விசேஷ கவனம் செலுத்தி, நல்ல முறையில் வீடுகளைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மஞ்சுளா விஷயமாக ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். ஏற்கெனவே போலீஸ் தீர்ப்பு வந்திருக்கிறது. 'நான் ஒத்துக்கொண்டேன் என்று அர்த்தம் இல்லை. ஐ.ஜி. அவர்களிடத்தில் விசாரணை நடத்தச் சொல்லி இருக்கிறேன்' என்று முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்த விசாரணை என்ன ஆனது? முடிவு என்ன? என்பன போன்ற சில விவரங்களைத் தெரிவிக்க வேண்டுகிறேன். இன்னும் சில விவரங்களை மட்டும் சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளலாம் என்றிருக்கிறேன்.

ஆரணியிலே ஒரு கலகம். அண்ணாமலை என்ற தொழிலாளி லாக்கப்பிலே வைக்கப்பட்டு, இம்சை செய்யப்பட்டு, மரணமடைந்தார் என்று பத்திரிகையிலே வந்தது. 7—7—1971 மாலை முரசு பத்திரிகையிலே வந்ததை பல உறுப்பினர்கள் பார்த்திருப்பார்கள். அதன் நிலைமை என்ன என்றே தெரியவில்லை.

அடுத்தபடியாக, சந்தேகக் கேஸ் என்று போடுகிறார்கள். எப்படி மதுவிலக்கிலும் கீழ்த்தட்டில் இருக்கக்கூடிய நகரசுத்தித் தொழிலாளர்கள், அரிசனங்கள் பாதிக்கப்படுகிறார்களோ அம்மாதிரியே சந்தேகக் கேஸினாலும் கீழ்த்தட்டில் இருக்கிற மக்களே பாதிக்கப்படுகிறார்கள். சந்தேகக் கேஸினால் பாதிக்கப்பட்ட 20 இன்சிடென்ட்ஸ் என்னிடத்தில் வைத்திருக்கிறேன். மதுரையில் ஆஸ்பத்திரியில் தூங்கிக்கொண்டிருக்கிறவர்களையெல்லாம் சந்தேகக் கேஸ் என்று போட்டு விடுகிறார்கள். அவர்கள் பெரும்பாலும் அரிசனங்களாகவும், பின்தங்கிய மக்களாகவும்தான் இருக்கிறார்கள். இரவு பத்து மணிக்கு ஓட்டல் தொழிலாளி வெளியே வருகிறான். அவனுடைய வேஷ்டி அழுக்காக இருப்பதால் கைது செய்து சந்தேகக் கேஸ் என்று போட்டு விடுகிறார்கள். ஆகவே, சந்தேகக் கேஸ் போடுகிற உத்தரவு மாற்றப்பட வேண்டும்.

அடுத்தபடியாக, விவசாயத் தொழிலாளர்கள் தகராறுகளில் எந்த விஷயத்திலும் போலீஸ் தலையிடக்கூடாது என்பது எங்களுடைய கோட்பாடான கொள்கை. அமைதிக்குப் பங்கம்



1971 ஜூலை 19] [திரு. கே. டி. கே. தங்கமணி]

ஏற்படுகிறது என்றால் கைது செய்யலாம். தொழிலாளர்கள் எந்த அளவுக்குத் தாக்கப்படுகிறார்களோ அந்த அளவுக்கு முதலாளிகளும் தாக்கப்பட வேண்டும். முதலாளிகளை மட்டும் தாக்காமல் தொழிலாளர்களைத் தாக்குவது சரியல்ல.

நான் நேற்று ஒரு மாநாட்டிற்குப் போயிருந்தேன். நகரசுத்தித் தொழிலாளர்களுக்குக் குறைந்த சம்பளம் தருகிறார்கள். சம்பளத்தை அதிகரிக்க வேண்டும் என்று கோரியிருந்தார்கள். சோஷலிச நாடு என்று சொல்லிக்கொள்கிற இங்கிலாந்து போன்ற நாடுகளில் நகர சுத்தித் தொழிலாளிக்கு பத்து பவுன் சம்பளம் கொடுக்கப்படுகிறதென்றால், பஸ் ஓட்டுகின்ற தொழிலாளிக்கு ஐந்து பவுன்தான் சம்பளம் கொடுக்கப்படுகிறது. ஏனென்றால் கீழான வேலைக்கு யாரும் வரமாட்டார்கள். அதற்காகத்தான் மற்றவர்களை விட அதிகமாக மூன்று மடங்கு கொடுக்கப்படுகிறது. இங்கே நமக்குக் கீழே இருப்பவர்களுக்குக் குறைந்த சம்பளம்தான் கொடுக்கிறோம். ஆகவே, கீழ்மட்டத்தில் இருக்கும் தொழிலாளர்களுக்கு நிறையச் சம்பளம் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகள் கேட்டுக்கொண்டால் போலீசார் உதவலாம் என்று சொல்லிக்கொள்கிறேன். 1957-ம் வருஷத்திலே நிலத்திலேயிருந்து விவசாயிகளை வெளியேற்றக்கூடாது என்கிற சட்டம் வந்தது. அப்போது நிலத்தில் 500 விவசாயிகள் நுழைந்த காரணத்தால் அந்த 500 பேர்களும் போலீசாரால் தாக்கப்பட்டார்கள். எந்த ஒரு நிலச்சுவான்தாரும் தாக்கப்படவில்லை. கேரளாவில் அப்படி இல்லை. நிலத்திற்குள் விவசாயிகளை அனுமதிக்க மறுத்த ஜமீன்தாரும் கைது செய்யப்பட்டார். அதேமாதிரி சட்டத்தை மீறுகின்ற நிலச்சுவான்தார், சட்டத்தை மீறுகின்ற முதலாளிகள் கைது செய்யப்படுகிறார்களா என்றால் இல்லை. குற்றம் செய்கின்றவர்கள் யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்ற நிலைமை இருந்தால்தான் அது மக்கள் மத்தியிலே ஒரு புதிய சிந்தனையை உண்டாக்கும் என்பதால்தான் நான் இந்த விஷயத்தை வற்புறுத்துகிறேன்.

முன்பெல்லாம் போலீசாரை கேவலமாகப் பேசுவதுண்டு. இப்பொழுது மிஸ்டர் போலீஸ்மென் என்று சொல்லவேண்டும். இல்லாவிட்டால் கன்னத்தில் அறைந்து விடுவார்கள். every Police Constable is a Police Officer என்று சொல்லவேண்டும். நாங்கள் தொழிலாளர்களை கூலி என்று சொல்லக்கூடாது, தொழிலாளர் என்றுதான் சொல்லவேண்டும். அல்லது மஸ்தூர் என்றுதான் சொல்லவேண்டும் என்று சொல்லி அதற்காகவே ஒரு இயக்கம் நடத்தினோம். எனவே அவர்களுடைய அந்தஸ்தை உயர்த்தவேண்டுமென்ற முறையிலே அவர்களை பெயரை மாற்றி முறைப்படி அழைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1971 ஜூலை 19

| | | |
|---|---|---|
| Grade I | .. | S.P. |
| ,, II | .. | Dy, S.P. |
| ,, III | .. | C.I. |
| ,, IV | .. | S.I. |
| ,, V | .. | Constable. |

என்று போட்டுவிடுவது நல்லது. மத்திய சர்க்காரிலே பொதுவாக ஒன்றுவது தரம், இரண்டாவது தரம், மூன்றுவது தரம் என்று இருப்பதைப் போன்று செய்யவேண்டும். அப்படியில்லாமல் கான்ஸ்டபிள், அதற்குமேலே ஹெட் கான்ஸ்டபிள், அதற்கு மேலே சப்-இன்ஸ்பெக்டர், அதற்கு மேலே இன்ஸ்பெக்டர் என்ற முறையிலே இல்லாமல் இருக்கச் செய்யவேண்டும்.

போலீஸாருக்கு அதிகமாக வேலை கொடுக்கப்படுகிறது. கூட்டங்கள் நடத்தவேண்டுமென்றால் அவர்களிடம் பெர்மிஷன் வாங்கவேண்டிய நிலைமை இருக்கிறது. கூட்டங்கள் நடத்துகிறவர்கள், தொழிலாளர்கள் அல்லது விவசாயிகள் நடத்துகிறார்கள். மன்றங்கள் கூட்டங்களை நடத்துகிறார்கள். அவர்கள் அதற்காக பெர்மிஷன் வாங்கவேண்டுமென்று சொன்னால் மூன்று நாட்கள் சுற்றவேண்டியிருக்கிறது. எனவே, அதற்காக ஸ்டாம்ப் பேப்பரே தேவையில்லை என்று கொண்டுவரலாம். அதிலே வருமானம் குறைந்தாலும் பரவாயில்லை. எனவே ஸ்டாம்ப் பேப்பரை இந்த விஷயத்தில் எடுத்துவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

யாராய் இருந்தாலும் 3 வருஷங்கள் சர்வீஸ் இருந்தால் மாற்ற வேண்டுமென்பதிலே எங்களுக்கு அபிப்பிராயபேதம் கிடையாது.

கடைசியாக, ஒன்றிரண்டு நடந்த சம்பவங்களைப்பற்றிச் சொல்லிவிட்டு முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். அருப்புக்கோட்டையிலே ஜான் சாமுவேல் என்ற 27 வயது அடைந்த வாலிபர் எக்ஸ்ட்ரா டிபார்ட்மெண்டல் போஸ்ட்மேன் ஆக இருக்கிறார். அவர் தினசரி தன்னுடைய பைக் கட்டுகளை பஸ்ஸிலே கொடுக்கவேண்டும். அந்தப் பஸ் காரியாபட்டி, பாளையம்பட்டி இரண்டு ஊர்களுக்கும் போகிறது, காரியாபட்டிக்கு இரண்டு பஸ்கள், பாளையம்பட்டிக்கு ஒரு பஸ் போகிறது. மே மாதம் 1-ஆம் தேதி 3,500 ரூபாயை அவர் பையிலே போட்டு போட்டேன் என்பதற்குக் கையெழுத்தும் வாங்கிக்கொண்டு தகவல் கொடுத்துவிட்டு வீட்டுக்குப் போய்விட்டார். ஆனால் அதற்குப் பிறகு 3-ஆம் தேதி அது காணமல் போய்விட்டது என்று சொல்லி அவரைக் கைது செய்திருக்கிறார்கள். வேதனைக்குரிய விஷயம் ஆக இருக்கிறது. அவர் 3, 4-ஆம் தேதி லாக்-அப்பில் வைத்து நையப் புடைக்கப்பட்டிருக்கிறார். மே மாதம் 11-ஆம் தேதி முதல் 15-ஆம் தேதி வரை அவர் நையப்புடைக்கப்பட்டிருக்கிறார். 11-வது நாள் அவர் ஆஸ்பத்திரியில் இருந்தார். இப்பொழுது கூட அங்கே இருந்த சப் இன்ஸ்பெக்டர் போய் இங்கிருந்து கிருஷ்ணன் என்பவரை இன்வெஸ்டிகேஷனுக்காக



1971 ஜூலை 19] [திரு. கே. டி. கே. தங்கமணி]

அனுப்பியிருக்கிறார்கள். அவர் நன்றாக அடிக்கப்பட்டிருக்கிறார். இதையெல்லாம் பார்த்தால் நாம் எந்த நாட்டிலே இருக்கிறோம் என்பது தெரியவில்லை. இப்பொழுது அங்கே உள்ள தொழிற் சங்கத்தினர் அது தடுத்து நிறுத்தப்படவேண்டுமென்ற முறையிலே கவனித்துக்கொண்டு வருகிறார்கள். இன்டராகேஷன் என்ற முறையிலே இப்படி அடிப்பது சரியல்ல. இதற்கெல்லாம் காரணம் அந்த பஸ் முதலாளி பெரும் பணக்காரர், மத்திய அரசாங்கத்தோடு கான்ட்ராக்ட் வைத்திருக்கக்கூடியவர். உள்ளபடியே அந்தப் பணம் காணமல் போகவில்லை. அதை வைத்துக்கொண்டு தன்னுடைய பெயருக்குக் குந்தகம் வந்துவிடுமோ என்று நினைத்துக்கொண்டு தன்னுடைய பெயருக்குக் குந்தகம் வரக்கூடாது என்பதால் பாவம் அந்தப் பையன் குற்றவாளியாக்கப்பட்டிருக்கிறான். தினசரி அடிபட்டுக் கொண்டிருக்கிற நிலைமை இருக்கின்றது. அவன் குற்றத்தை ஒத்துக்கொண்டால் 3,500 ரூபாய் முதலாளியே போட்டுக் கொள்கிறாராம். இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதிலே நியாயமாக நடந்துகொள்ளவேண்டும். இங்கிருந்து போன கிருஷ்ணன் அவனை தினசரி உதைக்கிறார். அவர்கள் என்னிடம் வந்து சொல்கிறார்கள். நான் சொன்னேன், என்னைப் பார்த்தோம் என்று சொல்லுங்கள், அதற்குப் பிறகு மறுபடியும் அவர்கள் அடிப்பார்களானால் நான் வருகிறேன், என்று சொன்னேன். அந்தப் பையன் நல்ல பையன். அந்தப் பையனுக்கு என்ன ஆகும் என்று தெரியவில்லை. இப்பொழுது உதையை நிறுத்தியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். எங்களுடைய கொள்கையை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்

போலீஸிலே அரசாங்கத்தின் தலையீடு இல்லாமல் இருப்பது நல்லது. ஒரு ரகசியத்தை நான் சொல்கிறேன் என்று நினைக்க வேண்டாம். கேரளாவிலே அச்சுதமேனன் அவர்கள் பதவியேற்கும்பொழுது கட்சிக்காரர்கள் கீழ்மட்டத்திலிருந்து மேல் வரையில் யாரும் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகவில்லை என்று சொன்னால்தான் நான் முதலமைச்சராக வருவேன் என்று சொன்னார்கள். ஏற்கனவே அப்படித் தலையிட்டதால்தான் ஒரு கட்சி போய்விட்டது. அங்கேயிருக்கிற ஒரு சேரையும் அகற்றிவிடவேண்டுமென்று அங்கே மந்திரியாக இருக்கின்ற திரு. கோபா அவர்கள் சொல்லிவிட்டார்கள். திரு. மொய்தீன் அவர்கள் சொன்னபடி—சப்ஜெக்ட் டு திஸ்—ஜான் சாமுவேல் சம்பந்தமாக நான் போய் சொல்வதில் தவறு இல்லை என்று நினைக்கிறேன். தினம் போட்டு உதைக்கிறார்களே நான் போய் வேண்டுமானால் சொல்லலாம், எஸ்.பி.யிடம் சொல்லலாம், அல்லது கடிதம் எழுதலாம். ரெஸ்ட்ரைன்ட் மஸ்ட் பி அப்ஸர்வ்டு பை தி இன்டிவிஜுவல் மெம்பர்ஸ். ஆனால் தங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி நீதிக்கு விரோதமான முறையிலே போலீஸார் நடவடிக்கை எடுப்பதிலே தலையிடக்கூடாது என்று வைத்தால் நல்லது.

இறுதியாக ஒரு கருத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். போலீஸ் கமிஷனுடைய ரிப்போர்ட் கண்டிப்பாக அமல் நடத்தப்படவேண்டும். அதற்காக நாம் விவாதம் இங்கே நடத்த வேண்டும். தலையீடு சம்பந்தமாக நான் பல விவரங்களைக் கொடுத்திருக்கிறேன். அது சம்பந்தமாக விசாரணை நடத்தி, மக்கள் மத்தியிலே நல்ல நிர்வாகம் என்ற முறையிலே எடுத்துக் காட்டவேண்டும். நான் ஆரம்பத்திலேயே சொன்னபடி போலீஸ் நிர்வாகம் எஃபிஷியண்ட் நிர்வாகம். அதற்கு இன்றைக்குள்ள சில நிலைமைகளைச் சீர்திருத்தவேண்டும். அதற்குக் காரணம் இன்றைக்குள்ள போலீஸார் அல்ல, பாரம்பரியமாக வந்திருக்கின்றன, அவற்றைச் சீர்திருத்தி அவர்களை நல்ல முறையிலே பல காரியங்களுக்குப்—பஞ்ச நிவாரண வேலைகள் போன்ற வேலைகளுக்கு—பயன்படுத்திக்கொள்வதற்கும் நாம் முயலவேண்டும்.

நம்முடைய ஃபையர் சர்வீஸ் சம்பந்தமாக அவர்கள் எவ்வளவு பெரிய காரியம் செய்திருக்கிறார்கள், அவர்களுக்கும் நியாயம் வழங்கப்படவேண்டும். காவல் துறையினருக்கு 80 சதவீதம் பேருக்கு வீடுகள் கட்டித்தர திட்டமிட்டு இந்த 60 சதவீதம் செய்தால் போதும் என்று இல்லாமல் ஒவ்வொரு காவல் துறையினருக்கும் அவர் எங்கு மாற்றப்பட்டிருந்தாலும் சொந்தமாக ஒரு வீடு இருக்கிறது என்ற முறையிலே அவர்களுக்கு வீட்டு வசதிகள் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** துணைத் தலைவர் அவர்களே, போலீஸ் மானியத்தின் மீது நடக்கின்ற இந்த விவாதம் தீவிரமாகவும் கடுமையாகவும் இருக்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். கழிந்த ஒரு ஆண்டுக்காலமாக எதிர்க்கட்சி தீவிரமான முயற்சியிலே ஈடுபடாத காரணத்தினாலே சூடு இல்லாத விவாதமாக இருந்தது என்று கருதுகிறேன். எதிர்க் கட்சிகள் உடனே கிளர்ச்சிகளில் இறங்கப்போகின்றன அல்லது சூடு வரக்கூடிய நிலைமையிலே நடக்கவேண்டுமென்று நான் சொல்ல வரவில்லை. எதிர்க்கட்சியிலுள்ள சாதாரணமானவர்கள் சில துன்பங்கள், கஷ்டங்கள் அனுபவிக்கிறார்கள். இதைப்பற்றி யெல்லாம் நாங்கள் எடுத்துச்சொன்னால் தப்பாக எடுத்துக் கொள்ளாமல் அவற்றை அனுதாபத்தோடும் பரிவோடும் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரையிலே சிறந்த போலீஸ் நிர்வாகம் இருக்கிறது என்பதைப் பல உறுப்பினர்கள் சொல்லி பாராட்டிப் பேசினார்கள். நான் மறுமுறையும் எடுத்துக்கூற நினைக்கவில்லை. ஒரு சில கருத்துக்கள் என்னுடைய கட்சியின் சார்பிலே ஆலோசனையாகக் கூறுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.





துப்பாக்கிச் சூடு நடந்தால் எப்படி நடக்கவேண்டும், அதற்கு நீதி விசாரணை போடவேண்டுமா, யார், ஆபீஸர் நியமனம் செய்யப்படவேண்டுமா என்பதைப் பற்றியெல்லாம் இந்த மன்றத்திலே கருத்துக்கள் தெரிவித்திருக்கிறார்கள். பிராஸிக்யூட்டராக இருந்த இந்த மன்றத்தின் உறுப்பினராக இருக்கின்றவர் ஒரு முறையைத் தந்தார்கள். அதாவது விசாரணையின் முடிவுகள் எல்லாம் ஃபயரிங் ஜஸ்டிபைட் என்று சொல்கிறது. இதனால் அந்த விசாரணை பயன் அற்றது என்ற முறையிலே அவர்கள் கூறினார்கள்.

**திரு. என். கணபதி :** துணைத் தலைவரவர்களே, நான் சொன்னது, எல்லா ஃபயரிங் ரிப்போர்ட்டிலும் ஜஸ்டிஃபைட் என்றிருப்பதால் விசாரணை தேவையில்லை என்று சொல்லவில்லை, சந்தர்ப்பத்தைப் பார்த்து நியமிக்க வேண்டுமென்றுதான் கேட்டுக் கொண்டேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் விளக்கத்திற்கு மிகவும் நன்றி. இம்மாதிரியாக எந்தெந்த வரைமுறைகள் அனுஷ்டிக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்து ,ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்குமேற்றவாறு முடிவு செய்ய வேண்டிய விஷயம்தான். ஆனால் நான் ஒன்றைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். சாதாரணமாக இந்தத் துப்பாக்கிச் சூடுகள் தவிர்க்க முடியாத சில காரணங்களினால் திடீரென்று நிகழ்ந்து விடுகின்றன. எப்படி நடக்கிறது, என்ன முறையிலே நடந்தது என்பதை விரிவாகத் தெரிந்து கொள்ளவும், புரிந்து கொள்ளவும் அரசாங்கத்திற்கு இந்த இலாக்காவைப் பூரணமாக நிர்வகிக்கவும் உதவிகரமாக இருக்கும். இம்மாதிரியாக துப்பாக்கிச்சூடு அண்மையிலே ஒன்று நடந்து, அது இந்த மன்றத்திலே அவசரத் தீர்மானம் மூலமாக நடந்த விவாதத்திற்கு எடுக்கவேண்டுமென்ற தீர்மானம் கொண்டுவரப்பட்டது. மாண்புமிகு முதல் அமைச்சரவர்களும் ஒரு சில விளக்கங்களைக் கூறினார்கள். எனக்கு வந்த தகவல் என்னவென்றால் இந்தத் துப்பாக்கிச் சூட்டினால் ஒரு சிலரைப் போலீஸ் அதிகாரிகள் ஒரு தலைப்பட்சமாகச் சில இடங்களில் நடந்து கொண்டார்கள் என்ற ஒரு இன்ஃபர்மேஷன் என்னிடத்திலே இருக்கிறது. ஏதோ சிறு பான்மையினரைத் தாக்கியதாக அந்த வகுப்பைச் சார்ந்தவர்கள் தகவலைத் தந்திருக்கிறார்கள். இது உண்மையா என்று ஆராய வேண்டும்.

வாணியம்பாடியிலே நடந்த நிகழ்ச்சி, அதைப்பற்றி முதலமைச்சரவர்கள் தவிர்க்கக்கூடிய சில காரியங்களைத் தவிர்த்திருக்கலாம். ஆனால் துரதிருஷ்டவசமாகப் பல விரும்பத்தகாத, வெறுக்கத்தக்கூடிய சில நிகழ்ச்சிகள் நடந்துவிட்டன. எந்தப் பக்கத்திலேயிருந்து வந்தாலும் அதை இந்த மன்றத்திலே விவாதிக்க. அதற்கு [illegible] திறங்களைக் கொடுக்க

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1971 ஜூலை 19

வேண்டுமென்று சொல்லவில்லை. இம்மாதிரியான காரியங்களிலே மிகவும் கடமையுணர்ச்சியோடு இருக்கவேண்டும். இதிலே அவர்களுக்குப் பல இன்னல்களும் ஒருவேளை நேரக்கூடும். ஆனால் அவர்கள் பெருமையோடு இந்த இன்னல்களைத் தாங்கிக்கொள்ள வேண்டும்.

இன்னொரு விஷயத்தை முக்கியமாகக் கூற வேண்டுமென்று கருதுகின்றேன். நக்சலைட் இயக்கத்தைப்பற்றிக் கூற வேண்டும். நக்சலைட் இயக்கத்தைப் பொறுத்தவரையில் இன்று சட்டப் பூர்வமாக அதை எந்தவிதமான தடையும் செய்யவில்லை, இன்றைக்கிருக்கிற கிரிமினல் சட்டப்படிதான் அவர்கள் மீது நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள். அதுவல்லாமல் விசேஷ கிரிமினல் சட்டப்படி அவர்கள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் இப்பொழுது எடுக்கப்படவில்லை. நான் ஒன்றைக் கூறவேண்டுமென்று விரும்புகிறேன். இந்த நக்சலைட் இயக்கம் கேரளாவுடைய எல்லைப்பகுதியில் இருக்கும் என்னுடைய தொகுதியையொட்டி ஒரு சில இடங்களில் இருக்கிறது, போலீசார் மிகுந்த கண்காணிப்போடு நடந்துகொண்டிருக்கிறார்கள். இந்தக் கண்காணிப்பு தேவையுள்ளதுதான், ஆனால் இந்தக் கண்காணிப்பு நடக்கிறபொழுது குற்றம் ஒன்றும் புரியாதவர்கள் இதற்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்பதைப் பார்த்து அம்மாதிரியான காரியங்கள் தவிர்க்கப்பட வேண்டுமென்று கூறி இந்தச் சந்தர்ப்பத்திலே நான் ஓரிரு காரியங்களைச் சொல்லி, அதை உதாரணமாகச் சொல்ல முற்படுகிறேன்.

கொளப்பாறை எஸ்டேட் என்று என்னுடைய தொகுதியில் இருக்கிறது. கேரள எல்லைக்கு அருகாமையில் இருக்கிறது. அதிலே ஒரு தொழிலாளியாக தங்கப்பன் என்பவர் வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார். கழிந்த தேர்தலிலும், அதற்கு முந்தைய தேர்தலிலும் அவர் காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவு கொடுத்துக்கொண்டிருந்தவர். முன்பு இடதுசாரி கம்யூனிஸ்ட் இயக்கத்தில் ஈடுபட்டுள்ளவராகயிருந்தார். பிறகு அதிலிருந்து ராஜினமா செய்துவிட்டு இப்பொழுது காங்கிரஸ் இயக்கத்திற்கு ஆதரவு கொடுக்கின்ற தன்மையிலிருக்கிறார். அங்கு ஒருசிலர் கம்யூனிஸ்ட் கட்சியிலேயிருப்பவர்கள் இவரை எப்படியாவது பழி வாங்க வேண்டுமென்று சொல்லி அவர்கள் திட்டம்போட்டு சதி செய்து கைது செய்வதற்குப் பல திட்டங்களையும் தீட்டினார்கள். அவர் உண்மையில் கைது செய்யப்பட்டு, 54-வது வகுப்புப்படி சந்தேகத்தில் கைது செய்தார்கள். வீட்டிலிருந்து இரவோடு இரவாக 2 மைலிக்குக் கைது செய்து நாகர்கோயிலுக்குப் பக்கத்தில் இருக்கிற ஆரல்வாய் மொழியிலே பதுங்கியிருந்தார் என்று பதிவு செய்து கோர்ட்டிலே ஆஜர் செய்யப்பட்டார். பிறகு ஜாமீனிலே விடுதலையாகிவிட்டார். அவர் அம்மாதிரி இயக்கத்திலே ஈடுபடவில்லை என்ற கருத்தினை போலீசார் தரப்பில் கூறப்பட்டது. இம்மாதிரி குற்றம் புரியாதவர்களையும் வேண்டு



1971 ஜூலை 19] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

மென்றே ஒரு சிலருடைய ஏவுதலின் காரணமாக இம்மாதிரி குற்றங்களுக்கு ஆளாக்கப்படுகிறார்கள், கொடுமைக்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்றால் போலீஸ் இலாக்கா நிதானமாகச் செயலாற்ற வேண்டுமென்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இன்னொரு சம்பவத்தைப்பற்றிக் கூற விரும்புகிறேன். இந்த ரிசர்வே பார்ட்டி ஆபிசிலே குமாஸ்தாவாக ஒருவர் வேலை செய்து கொண்டிருந்தார். என்னுடைய வீட்டிற்குப் பக்கத்திலே இருக்கிறது. அவர் அவருடைய லாட்ஜில் தங்கியிருந்தார். அவரை இரவோடு இரவாக அரெஸ்ட் செய்து கன்னியாகுமரியில் காந்தி மண்டபத்தின் பக்கத்திலேயிருந்தார் என்று சொல்லி கைது செய்து கோர்ட்டில் ஆஜர் செய்து, கடைசியில் ஜாமீனில் விடுதலை செய்தார்கள். பிறகு போலீஸ் தரப்பிலே கூறினார்கள், இவர் மீது எந்தவிதமான சந்தேகமும் இல்லை, ஆதலால் வழக்குத் திரும்பப் பெற்றிருக்கிறது என்று சொல்லுகின்ற அளவில் செய்திருக்கிறார்கள். உண்மையாகவே இந்த இயக்கத்தில் இருப்பவர்களை அரசாங்கம் தேடுவதிலேயோ அவர்களைப் பிடிப்பதிலேயோ, அவர்களுக்குத் தகுந்த தண்டனை கொடுப்பதிலேயோ எங்களைப் போன்றவர்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனால் இம்மாதிரி குற்றம் புரியாதவர்களை, எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாகயிருந்தாலும் ஏதோ அவர்களுக்கு நக்சலைட் என்ற பெயரைக் கொடுத்து

'Give the dog a bad name and hang it'.

என்று சொல்லும் அம்மாதிரி தன்மையில்லாத முறையில் இது செயலாற்றப்பட வேண்டுமென்பதை வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு கஷ்டம் போலீஸ் இலாக்காவிற்கு இருக்கிறது. நக்சலைட்டுகளைக் கண்டுபிடிப்பதில் மிகவும் கஷ்டம் இருக்கிறது. இரண்டு இராஜ்யங்களின் எல்லைப் பகுதிகளிலே மெயின் ரோட் இருக்கிறது. ஆகவே, கேரளா எல்லையில் ரோடு இருப்பதால் அங்கு போலீஸ்காரர்கள் வேண்டிய முறையிலே அங்கே சென்று அவர்களுடைய ஒத்துழைப்பின்பேரிலே காலாகாலங்களில் சென்று இந்த இயக்கத்தைத் தடுப்பதிலே சங்கடங்கள் இருக்கின்றன. ஆகவே, இந்த எல்லைப் பகுதிகளில் நம்முடைய பகுதியில் ரோடு அமைத்துக் கொடுத்தும், போலீசாருக்கு வாகன வசதிகள் செய்து கொடுத்தும் ஆவன செய்ய வேண்டும். அது மட்டுமல்ல, உடனுக்குடன் தலைமை அதிகாரிகளோடு தொடர்பு கொள்ளவும் அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

வெள்ளச்சிப்பாறை எஸ்டேட் என்று ஒன்று இருக்கிறது. அதற்குத் தேர்தல் காலங்களிலேயோ அல்லது மற்றக் காலங்களிலேயோ கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் அல்லாத மற்றவர்கள் செல்ல வழியில்லாமல் இருக்கிறது. போதிய பாதுகாப்பை அங்கே போலீசார் அளிக்க முடியாத தன்மையிருக்கிறது மலைப்பகுதியாக இருப்பதால். இம்மாதிரியான கஷ்டங்களும்,

சங்கடங்களும் இருப்பதைத் தவிர்க்க போலீஸ் இலாக்காவினர் நல்ல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இம்மாதிரியான இயக்கத்திலே ஈடுபட்டிருப்பவர்களை மேலும் கண்காணிக்கின்ற முறையிலே கேரள அரசாங்கத்தோடும், மத்திய அரசாங்கத்தோடும் வேண்டிய தொடர்பு கொண்டு இம்மாதிரியாக அங்கிருந்து இங்கு ஊடுருவல் வராமல் தடுக்க வேண்டிய வழி முறைகளைச் செய்ய வேண்டும் என்பதை என்னுடைய ஆலோசனையாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் பலவிதமான இயக்கங்கள் இருக்கின்றன. கேரளாவிலே பலரும் அங்கு கள்ள நோட்டு அடிப்பவர்களோடு தொடர்பு கொண்டு இருக்கிறார்கள். அவர்களைத் திறமையோடு அதிகாரிகள் கைது செய்தது பாராட்டத்தக்கது. ஆனால் இம்மாதிரி எங்கெங்கு நடக்கிறது என்பதைப் பற்றி அவர்களுக்குக் காலாகாலங்களில் கண்காணிக்கப் போதிய வசதிகள் அளிக்கப்பட வேண்டுமென்பதை/நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பொதுவாகப் பார்க்கும்பொழுது இம்மாதிரியான பிரிவுகளிலே 'மாடர்ன் மெத்தர்ட்ஸ் ஆப் இன்வெஸ்டிகேஷன்' ஏற்படுத்திக் கொடுக்க இந்த இலாக்காவிலே காரியங்களைச் செய்ய வேண்டும். அதேபோல் முன்பிருந்த வெள்ளைக்காரன் காலத்திலிருந்த மாதிரி குற்றம் புரிந்தவர்களை விசாரணை செய்வதிலே இன்டராகேஷன் தன்மையினை மாற்றி மாடர்ன் மெத்தர்ட்ஸ்ஸில் செய்வது பொருத்தமாகயிருக்கும் என்று கருதுகிறேன். 'தேர்ட் டிகிரி மெத்தர்ட்ஸ்ஸை' அவாய்ட் செய்வது, கைவிட்டுவிடுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். ஒருவேளை பெரிய குற்றங்களைப் புரிந்தவர்களை இண்டராகேட் செய்வதினால் ஒரு சில தவறுகள் கண்டுபிடிக்கப்படலாம். ஆனால் பொதுவாக இம்மாதிரியான குற்றம் புரிந்தவர்களை இன்டராகேட் செய்யும்பொழுது கடுமையாக நடக்காமல் இருப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். சாதாரணமாகப் போலீசாரைப் பற்றிச் சொல்வார்கள்,

'Polite in words and strong in action'

என்று சொல்லுவார்கள். இதை எவ்வளவு தூரம் கடைப்பிடிக்கிறார்கள் என்பதைப் பல உறுப்பினர்களும் பல குற்றச்சாட்டுகளை எடுத்துக் கூறி இருக்கிறார்கள். போலீஸ் படையினருக்குப் பல கஷ்டங்களும், பல துன்பங்களும் இருந்தாலும் கொஞ்சம் கண்ணியமாக இதை அனுஷ்டிக்க வேண்டுமென்று இங்கே கூறுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மலபார் ஸ்பெஷல் போலீசாரைப் பற்றி எடுத்துக் கூறினார்கள். நம்முடைய பிரதேசத்திற்கு, வந்த பிறகும் அந்தப் பெயரையே வைத்துக் கொள்ள வேண்டுமா என்பதைப் பற்றி புனராலோசனை செய்வது பொருத்தமாகயிருக்கும் என்றே கருதுகிறேன். மலபார் ஸ்பெஷல் போலீஸ் என்றால் ஒரு கெட்ட பெயர் முன்பிருந்தது, வெள்ளைக்காரன் காலத்திலே இருந்தது. அதை இனி மாற்றியமைப்பது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.



பொதுவாக போலீஸ் நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் பல கஷ்டங்கள் எதிர்க்கட்சியாகிய எங்களுக்கு இருக்கிறது. அதிலும் கட்சிக்கண்ணோட்டம் நிகழ்ந்துகொண்டிருக்கிறது என்பதை நான் ஒரு குற்றச்சாட்டாகக் கூறுவதற்குக் கடமைப்பட்டவனாகயிருக்கிறேன். நான் இந்தக் குற்றச்சாட்டைக் கூறும்பொழுது ஒன்றிரண்டு காரியங்களை இந்த அவையின் மூலமாக அமைச்சரவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டவனாகயிருக்கிறேன்.

உடன்குளம் என்ற ஊர் திருநெல்வேலி ஜில்லாவில் இருக்கிறது. தேர்தல் காலத்தில் அங்கு கலவரம் ஏற்பட்டு நான்கு பேர் கொலையுண்டார்கள். அந்த நான்கு பேர் சடலங்களும் இதுகாறும் எடுக்கப்படவில்லை. அதற்குப் பிற்பாடு நடந்த பயங்கர சம்பவங்களை எல்லாம் விரிவாக எடுத்துக் கூறத் தேவையில்லை. கொலையுண்டவர்களைச் சேர்ந்தவர்கள்தான் தாக்கப்படுகின்ற நிலையைப் பார்க்கிறோமே தவிர, கொலை செய்தவர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் இதுவரை சார்ஜ் ஷீட் போடவில்லை. குற்றவாளிகள் யாராக இருந்தாலும், எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களைத் தண்டிப்பது அரசாங்கத்தின் கடமை. நடுநிலைமை காக்கும் போலீஸ் இலாகா ஒழுங்காக இருக்க வேண்டும். அங்கிருக்கும் சப்-இன்ஸ்பெக்டர், ராதாபுரம் சப்-இன்ஸ்பெக்டர் மிகுந்த கொடுமையினைச் செய்கிறார்கள் என்ற குற்றத்தினை நான் இங்கு கூறுவதற்குக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன். புகார் மனுவின் நகல் என்னிடம் இருக்கிறது. கட்சிக் கண்ணோட்டத்தில் இருக்கும் ஒருசில அதிகாரிகள் ஒருசில இடங்களில் இருக்கிறார்கள். இந்த நிலையை மாற்றி எங்கு தவறு நடந்தாலும் உடனுக்குடன் கண்டுபிடித்துத் தண்டிக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு என்பதை இந்த நேரத்தில் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதோடு மதுவிலக்கு என்று சொல்லி இரவு 8 மணிக்கும் 10 மணிக்கும் இடையில் சாதாரண விவசாயிகளைத் தாக்கும் தன்மை இருக்கிறது. எஸ்.பி.க்கு பெட்டிஷன் போட்டிருக்கிறார்கள்; நகல் ஐ.ஜி.க்கு அனுப்பி இருக்கிறார்கள்., முதலமைச்சர் அவர்களுக்கும் அனுப்பியிருக்கிறார்கள். இந்தமாதிரிக் கொடுமைகளும், அக்கிரமங்களும் நீடித்து நடக்க அனுமதிக்கக்கூடாது. அப்படி நடந்தால் பெரும் புரட்சி ஏற்பட்டுவிடும் என்பதையும் கூற விரும்புகிறேன். ஜாதிக் கண்ணோட்டத்தோடு நிகழ்ச்சி நடக்கிறது என்ற கருத்து தொனிக்கும் வகையில் கூறியிருக்கிறார்கள். நான் ஜாதிப் பூசலை வளர்க்க விரும்புபவன் அல்ல என்ற காரணத்தால் உள் அம்சத்தைச் சொல்ல விரும்பவில்லை. இந்தமாதிரிக் காரியங்களில் எல்லாம் நடுநிலைமையோடு நடக்க வேண்டும். குறிப்பாக, நான்கு பேர் கொலை செய்யப்பட்ட பிற்பாடும் அந்தக்

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1971 ஜூலை 19

கொலையைச் செய்தவர்களை இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை என்று கூறுவது விபரீதமான ஒன்றாகும். 1965-ம் ஆண்டிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருந்தபோது இந்த மன்றத்திலே பேசியது என்னுடைய மனதிலே இப்போதும் வந்து கொண்டிருக்கிறது. "செங்கற் பட்டில் முண்டம் கிடந்தது; போலீஸ் இலாகாவானது கண்டு பிடிக்கவில்லை" என்று அன்று இருந்த அரசாங்கத்தைக் குற்றஞ் சாட்டிப் பேசினார்கள். அதேமாதிரிதான் நானும் கூறுகிறேன். நான்கு பேர் செத்ததற்குப் பிறகும், பயங்கரமான நிகழ்ச்சி நடந்த பிறகும், பரிபூரணமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாததோடு கொலையுண்ட வர்களைச் சேர்ந்தவர்களே தாக்கப்படுவது வெந்த புண்ணிலே வேல் கம்பைப் பாய்ச்சுவது போல் இருக்கிறது என்று கூற விரும்பு கிறேன்.

இன்னொரு விஷயம் கூற விரும்புகிறேன். மதுரை ஜில்லாவில் நடந்த நிகழ்ச்சி. மதுரை ஜில்லாவில் காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்த பஞ்சாயத்துத் தலைவர் வீரகுமார பிள்ளை என்ற அய்யாப் பிள்ளையோடு பத்து நபர்களைக் கைது செய்து விலங்கு போட்டு அவமானப்படுத்தும் நிலைமையில் நடத்திச் சென்றிருக்கிறார்கள் என்ற தகவலை முதலமைச்சர் அவர்களுக்குக் கொடுக்க விரும்பு கிறேன். அதற்கு முன்னதாக அந்த ஊரில் நீவைப்பு சம்பவம் ஏற்பட்டதும், அதிலே உள்ளான நபர்கள் காங்கிரஸ் அனுதாபி களாக இருந்தார்கள் என்ற விவரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் போலீஸ் ஸ்டேஷனில் பிராது செய்தார்கள் என்றும், அதற்கு வேண்டிய உதவிகள் எல்லாம் பஞ்சாயத்து ஒன்றியத்தின் முன்னாள் தலைவர் வீரகுமார பிள்ளை புரிந்ததாகவும், அதன் காரணமாக போலீஸ் இலாகாவில் இருந்து அவரைக் கைது செய்து அவமானப் படுத்தும் வகையில் விலங்கு போட்டு அழைத்துச் சென்று நையப் புடைத்திருக்கிறார்கள் என்று சொன்னால் அது போலீஸ் இலாகாவுக்கு நல்லதா என்பதைப் பற்றி முதலமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தமாதிரிச் சம்பவங்கள் ஆங்காங்கு ஒவ்வொரு ஜில்லா விலும் நடப்பதாக எங்களைப் போன்றவர்களுக்குத் தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. அவற்றை எடுத்துச் சொல்லுகின்ற போது அரசாங்கத்தின்மீது வேண்டுமென்று பழி சுமத்தவேண்டு மென்ற நோக்கத்தோடு சொல்லவில்லை. இந்தமாதிரிச் சம்பவங் கள் மேலும் நடக்கக்கூடாது; நடக்க அனுமதித்தால் கொடுமை யான விளைவுகள் ஏற்படும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அலங்காநல்லூரில் நடந்தது மாதிரி ஏனைய பகுதிகளில் நடக்க அனுமதிக்கக்கூடாது.



1971 ஜூலை 19] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

திருச்சி ஜில்லாவில் நடந்த சம்பவத்தைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு முஸ்லிம் சகோதரர், பிச்சை மொய்தீன் என்ற பெயருடையவர். அவரை அவருடைய வீட்டில் இருந்து 4—7—71 அன்று திருச்சி கோட்டை போலீசார் மத்தியானம் 1.30 மணிக்கு அழைத்துச் சென்றார்களாம். அவர் டயர் வியாபாரம் செய்கின்ற வியாபாரி. போலீஸ் ஸ்டேஷனில் அவரிடம் டயர் வாங்கினாயா என்று ஏதோ கேள்வி கேட்டு கடைசியாக கான்ஸ் டபிள் சட்டையைப் பிடித்து கீழே தள்ளி அவர் பெஞ்சில் விழுந்த பிறகு நையப் புடைக்கப்பட்டதாகப் புகார் கொடுத்திருக் கிறார்கள். இந்த வியாபாரி பத்து. பதினைந்து வருஷ காலமாகவே கண்ணியமாக வியாபாரம் செய்த நபர் என்று அங்கிருக்கும் வியாபாரிகள் அவ்வளவு பேரும் கையெழுத்திட்டு கனம் முதல மைச்சர் அவர்களிடம் பிராது மனு 9-7-71 அன்று கொடுத்திருக் கிறார்கள். நகல் எனக்கும் அனுப்பி இருக்கிறார்கள். அடிப்பட் டவர் டி. பி. நோயால் பீடிக்கப்பட்டவர். அவரை இந்த மாதிரித் துன்புறுத்தியிருக்கிறார்கள்; அடித்திருக்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்கிறேன். இது விரும்பத் தக்கதா என்று இந்த மன்றமும், முதலமைச்சர் அவர்களும் ஆராய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு விஷயம். இராமநாதபுரம் ஜில்லாவிலே நடந்தது. விருதுநகரில் அடிஷனல் எக்ஸ்டென்ஷன் ஆபீசர் (பஞ்சாயத்து), நாச்சிமுத்து என்ற பெயருடையவர் தாக்குதலுக்கு ஆளாகி யிருக்கிறார். அதைப் பற்றி என்.ஜி.ஓ. அசோசியேஷன் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். குற்றம் புரிந்தாரா இல்லையா என்று விவரமாக எடுத்துக் கூற விரும்பவில்லை. ஆளும் கட்சியில் உள்ள எம்.எல்.சி. இதிலே ஈடுபட்டதாகக் குற்றச்சாட்டு சொல்லப்பட்டிருக்கிறது. அது உண்மையாக இருக்குமானால் விரும்பத் தக்கதல்ல; வெறுக்கத்தக்கது. இதிலே அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். யாராக இருந்தாலும் சரி, குற்றம் புரிந்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். ஆளும் கட்சியில் இருக்கும் ஒரு பெரியவர் ஈடுபட்டிருக்கிறாரா இல்லையா என்பதைப் பற்றி நல்ல முறையில் ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டும்.

எங்களுடைய ஜில்லாவில் உள்ள பிரச்சினைகள் பற்றி எனக்கு முன்னால் பேசிய நண்பர் ஒருவர் விரிவாகப் பேசினார்கள். குழித்துறையில் ஒரு போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது. அங்கு பழனியப்பன் என்று ஒரு சப்-இன்ஸ்பெக்டர் இருக்கிறார். அந்த ஸ்டேஷனில் பனைமட்டையைச் செதுக்கி அடிக்கும் அளவில் வைத்திருக்கிறார்கள். இது சம்பந்தமாக ஜில்லா காங்கிரஸ் கமிட்டியில் புகார் வந்தது. நாங்கள் அதைப் பற்றித் தீர்மானம் எடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஆனால் இந்தத் தீர்மானத்தை எடுத்த உடனே, அதற்குப் பிற்பாடு முனிசிபல் கவுன்சிலராக இருந்த முத்தையன் இன்னொரு கேசுக்காகக் கைது செய்யப்பட்டு, அவரைத் தாறுமாறாகப் பேசியிருக்கிறார்கள்.

ஜில்லா கமிட்டியில் சென்று புகார் செய்தாயாமே என்று மிரட்டக் கூடிய அளவுக்கு பல விரும்பத்தகாத காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அந்த சப்-இன்ஸ்பெக்டர் இதற்கு முன்பு ராஜக்கமங்கலம் போலீஸ் ஸ்டேஷனில் இருந்தபோதும் நல்ல முறையில் நடக்கவில்லை என்ற புகார்கள் பல வந்திருக்கின்றன. முதலமைச்சர் அவர்களிடமும் இந்தமாதிரியான புகார்கள் வந்திருக்கின்றன. குமரி ஜில்லா லாரி டிரைவர்ஸ் அண்டு கிளீனர்ஸ் சங்கத்தார் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பி இருக்கிறார்கள். இந்த இன்ஸ்பெக்டர் எம்.டி.கே. 1253 என்ற லாரியை 24—7—1970 அன்று ஓட்டிச் சென்றாராம். அதைச் சோதனை செய்துவிட்டு லைசென்சைக் கைப்பற்றிக் கொண்டாராம். அந்த லைசென்ஸ் இதுசாறும் திரும்பிக் கொடுக்கப்படவில்லை. யூனியன் மூலமாக இந்த லைசென்சைத் திருப்பித் தரவேண்டுமென்று பல கடிதங்கள் எழுதியும் திருப்பிக் கொடுக்கவில்லை. அந்த சப்-இன்ஸ்பெக்டர் இப்போது குழித்துறையில் இருக்கிறார். இந்த குறிப்பிட்ட லாரி டிரைவர் குழித்துறை ஸ்டேஷன் எல்லைக்குப் போன இடத்தில் காரணமின்றி அடிக்கவும் செய்திருக்கிறார்கள் என்றும் புகாரில் சொல்லியிருக்கிறார்கள்.

இந்தமாதிரி அடிப்பது நியாயமல்ல. இந்த மாதிரி வெறி பிடித்த ஒரு சில அதிகாரிகள் இருக்கிறார்கள். அதற்குக் காரணம், ஒருவேளை அவர்கள் இளமையாக இருப்பது அதற்குக் காரணமாக இருக்கலாம். அப்படி ஒரு சில அதிகாரிகள் வெறுக்கத் தக்க செயல்களில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

அந்த ஸ்டேஷனில் பொதுவாக ஜாதியைச் சொல்லி • நீ இந்த ஜாதிதானா, அந்த ஜாதியைச் சேர்ந்தவனா என்று இழிவுபடுத்தும் முறையில் நடக்கிறது என்ற ஒரு குற்றச்சாட்டைக் கூறுவதற்கு நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இது நல்லதல்ல. இந்தமாதிரி அதிகாரிகள்மீது தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அவருக்கு உதவியாக இன்னொரு சப்-இன்ஸ்பெக்டர் சக்திவேல் என்ற ஒரு பெரியார் இருக்கிறார்கள். அவரும் இத்தகைய புனிதப் பணியில் ஈடுபட்டு வருகிறார். அங்கு பிள்ளைகளைசான் என்பவரைப் பிடித்து நையப் புடைத்தவுடன் அதுபற்றி எங்கள் வக்கீல், எங்கள் கட்சியைச் சார்ந்தவர் திரு. சக்திதாஸ் என்பவர் ஒரு தந்தி அனுப்பியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட அடக்குமுறைகள் துன்புறுத்தல்கள் ஏற்படக் கூடாது.

இன்னொரு விஷயம். கொல்லங்கோடு போலீஸ் ஸ்டேஷன் பற்றி முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரியப்படுத்தியிருக்கிறேன். இந்தமாதிரிக் காரியங்கள் நடக்கக் கூடாது. ஒரு சிவில் டிஸ்பூட் அல்லது ஒரு பாதைத் தகராறு உள்ள இடத்தில் போலீஸ் இன்ஸ்பெக்டர் நடுநிலைமை வகிக்க வேண்டும்.





குறிப்பாக அவர்கள் பணம் படைத்தவர்கள் பக்கத்தில் நிற்கிறார்கள் என்றால் ஏழை மக்களின் வாழ்வு என்னாவது என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஒரு கிராமம் இருக்கிறது. அங்கு சுமார் 50 வீடுகளுக்கு மேல் உள்ளன. அதற்கு சாதாரணமாக புறம்போக்கு பாதை இல்லை. தொன்றுதொட்டே, ஆதி நாளிலிருந்து, எவ்வளவோ காலமாக ஒரு சில பூமிகள் வழிதான் நடந்து கொண்டிருந்தார்கள். அதை இப்போது பட்டா நிலம் என்ற காரணத்தினால் அந்த இடத்தை அடைத்து பாதையைச் சேறுத்திருக்கிறார்கள். உடனடியாக ஊர் பெரியவர்கள் போலீசை அணுகியிருக்கிறார்கள். அதற்கு இன்ஸ்பெக்டர் என்ன செய்தார் என்றால் நிலச் சொந்தக்காரரின் பக்கத்தில் சேர்ந்து கொண்டு மற்றவர்கள் மீது பல வழக்குகளைத் தொடர்ந்து அவர்களை நையப் புடைத்திருக்கிறார்களே தவிர ஒழுங்கான முறையில் நியாயமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

அதேமாதிரி முன்சிப் கோர்ட் கோடை காலத்தில் அடைத்திருந்தபோது இன்னொரு நிகழ்ச்சி நடந்தது. பொதுவாக சிவில் கோர்ட் விஷயங்களில் போலீஸ் தலையிடுவதில்லை. முன்சிப் கோர்ட்டில் என்ன முடிவுகள் பிறப்பிக்கப்படுகின்றனவோ போலீஸ் இலாகா அதற்கு துணை புரியவேண்டும். ஆனால் அதற்கு மாறாக இவர்கள் நடக்கிறார்கள். ஒருதலைப்பட்சமாக இவர்கள் பல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். அது சம்பந்தமாக அந்தப் பஞ்சாயத்து தலைவரும் அங்குள்ள அங்கத்தினர்களும் கையெழுத்துப் போட்டு ஒரு மனு அனுப்பியிருக்கிறார்கள். ஆக, இந்தமாதிரிக் காரியங்களில், சிவில் தகராறுகளில் போலீஸ் அதிகாரிகள் பணக்காரர்களின் பக்கத்தில்தான் நின்று கொண்டிருப்பது என்றால் இந்த தேசத்தில் என்ன நடக்கும் என்பதை நான் இங்கு எடுத்துக் கூறத் தேவையில்லை.

பொதுவாக இன்னும் ஒன்றிரண்டு இன்ஸிடென்சுகளை மட்டும் எடுத்துக் கூறிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று புகார் செய்தால் அவற்றை ஏற்றுக்கொள்வதில்லை. உதாரணமாக, ஜோசப், பி.ஏ., பி.டி., என்ற ஆசிரியர்—அவர்கள் பள்ளம்துறையைச் சார்ந்தவர், மீனவ சமுதாயத்தைச் சார்ந்தவர்—மங்காவிளை என்ற ஊரில் உள்ள ஒரு ஹைஸ்கூலில் ஆசிரியராக இருப்பவர். மங்காவிளை என்பது முன்னால் சட்ட மன்ற உறுப்பினராக இருந்த திரு. பாலன் அவர்களின் ஊர். அந்த ஊரில் உள்ள ஏதோ ஒரு பூசல் காரணமாக ஒரு தலைப்பட்சமாக அவரது காலை முறித்திருக்கிறார்கள் அவர் இன்று சரியாக நடக்கமுடியாத நிலையில் நொண்டியபடி இன்றையதினம் நடந்து கொண்டிருக்கிறார். அதன்மீது போலீசில் புகார் செய்யப்பட்டும் எந்தவிதமான நடவடிக்கையையும் எடுக்கவில்லை. இது நியாயம்தானா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அதேபோல் ராஜாக்கமங்கலம் போலீஸ் ஸ்டேஷனில் மரியநாயகம் சந்திரா என்ற காங்கிரஸ்காரர் மார்ச், மே மாதத்தில் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார். அவருக்கு எதிராக ஒரு கோஷ்டி இருக்கிறது. போலீசில் புகார் செய்தால் அப்படிச் செய்தவர்களை ஆட்சேபகரமான முறையில் பேசுகிறார்களே தவிர எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப் படுவதில்லை. இம்மாதிரி மணவாளக்குறிச்சி ஸ்டேஷனிலும் பல காரியங்கள் நடந்திருக்கின்றன. அதன் விவரங்களைக் கூறுவதற்குக்கூட நான் தயாராகயிருக்கிறேன்.

இன்னொரு விஷயம். சில போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் நடுநிலைமையில் இருந்தால் அவர்களை மாற்றிவிடவேண்டுமென்று அப்படி பலயிடங்களில் நடந்திருக்கின்றன. உதாரணமாக, இரணியலில் ஒரு சப்-இன்ஸ்பெக்டர் இருந்தார். அவருக்கும் அங்குள்ள பஞ்சாயத்து ஒன்றியத் தலைவருக்கும் அபிப்பிராய பேதம் ஏற்பட்ட காரணத்தினால் அவர் மாற்றப்பட்டிருக்கிறார் என்ற செய்தியை இந்த மன்றத்தின்மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக நான் போலீஸ் ஸ்டேஷனுக்குச் செல்லாதவன். ஆனால், அங்கு நடக்கிற அக்கிரமங்களை எல்லாம் எடுத்துக் கூறுவது தேவையாக இருக்கிறது. எனது தொகுதியில் ஒரு பஞ்சாயத்துப் போர்ட் பிரசிடெண்ட் ஒரு எதிரியாக இருந்தார். அவரைக் கைது செய்ய முடியவில்லை. உடனடியாக அவரது சகோதரரை, தூங்கிக் கொண்டிருந்தவரை அழைத்துச் சென்றார்கள் குழித்துறை போலீஸ் ஸ்டேஷனுக்கு. உடனே அவரது உறவினர்கள் என்னிடம் வந்து சொன்னார்கள். நான் தக்கலை டி.எஸ்.பி. யைச் சென்று பார்த்தேன். இப்படி அவரை போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்து வந்து வைத்திருக்கிறார்களே, இது என்ன நியாயம் என்று கேட்டேன். அதற்கு அவர்கள் சில வேளைகளில் இந்தமாதிரித் தவறுகள் நடந்து விடுகின்றன என்று சொன்னார்கள். அந்த பஞ்சாயத்துப் போர்ட் ப்ரசிடெண்ட் உங்களுக்குக் கிடைக்கவில்லை என்று சொன்னால் எங்களைப் போன்றவர்கள் வேண்டுமானால் ஸ்டேஷனில் வந்து இருக்கிறோம் என்று சொன்னதன்பேரில் போன் செய்து அவரை விடுதலை செய்திருக்கிறார்கள். இந்தமாதிரியான காரியங்கள் நடக்கக் கூடாது.

நான் குற்றம் செய்தால் என்னை கைது செய்யட்டும், என்பேரில் நடவடிக்கை எடுக்கட்டும். ஆனால் என் உறவினர்களை, பெண்டு பிள்ளைகளை துன்புறுத்துவது என்பது நியாயம் அல்ல, தர்மமும் அல்ல.

அடுத்தபடியாக, போலீஸ் கமிஷன் ரிப்போர்ட் பற்றி ஒரு வார்த்தை. பல நல்ல கருத்துக்கள் அதன் பரிந்துரையில் காணப்படுகின்றன. அவற்றில் சிலவற்றை அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. நான் ஒரு ஆலோசனை கூற விரும்புகிறேன். இந்த அவுட்



போஸ்ட்ஸ் என்பதில் எந்தவிதமான பிரயோஜனமும் இல்லை என்பது என் கருத்து. அவுட் போஸ்டில் எந்தவிதமானதொரு இன்பர்மேஷனும் கொடுக்க முடியாது. காரணம், அங்கு ஒரு ஆபிசர் கிடையாது. ஆகவே, இந்த அவுட் போஸ்டினால் எந்தவிதமான நன்மையும் கிடையாது என்ற காரணத்தினால் outposts should be upgraded into police stations. என்று கூறியிருக்கிறார்கள் கமிஷனர் ரிப்போர்ட்டில். அதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது கொள்கையளவில் என்பதைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

அடுத்தபடியாக, இந்த இலாகாவில் உள்ள பிரிவுகளில் 'டிரும்பிக் செக்ஷனை' தனியாகப் பிரிக்க வேண்டும் இப்போது ப்ரொஹிபிஷனுக்கு என்று ஒரு சாரார் இருக்கிறார்கள். அவர்களை இனி எக்சைஸ் பிரிவில் மாற்றுவது என்பது பொருத்தமாகயிருக்கும். காரணம் மதுவிலக்கு ரத்தாக இருக்கிறது. அவர்கள் இனி எக்சைஸ் இலாகாவின் கீழ் வருவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். அதை நல்லமுறையில் கண்காணிக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

இன்னொன்று, போலீஸ் கமிஷனர் போன்ற பெரிய அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் சம்பளத்தை, ஸ்கேலை சிறிது உயர்த்தியிருக்கிறார்கள். கான்ஸ்டபிள்களின் சம்பளத்தையும் உயர்த்தியிருக்கிறார்கள்.

போலீஸ் ரிக்ரூட்மெண்ட் பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். சப் இன்ஸ்பெக்டர்களாக இருக்கிறவர்கள் குறைந்தபட்சம் பி.ஏ. ஆக இருக்கவேண்டுமென்ற நியதியை ஏற்படுத்தினால் இன்று படித்து பட்டம் பெற்றவர்களிடையே உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஓரளவிற்கு குறைக்கமுடியும். டெபுடி இன்ஸ்பெக்டர் என்ற கேடரையும் அமர்த்தவேண்டுமென்று பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அதிலும் போதிய வாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்கும் என்று கருதுகிறேன். பொதுவாக போலீஸ் இலாகா அதிகாரிகள் நல்லமுறையில் செயல்படுகிறார்கள். நான் இன்னொன்றையும் கூற வேண்டுமென்று நினைத்தேன். மறைந்த ஐ.ஜி. அவர்களைப் பற்றி இந்த ஆய்வுரையில் அவர்கள் இந்த ராஜ்யத்திற்கும், இந்த இலாகாவிற்கும் செய்த நல்ல காரியங்களைப் பற்றி ஒரு வார்த்தை கூறினால் பொருத்தமாக இருக்கும் என்ற என் ஆலோசனையைக் கூற கடமைப்பட்டிருக்கிறேன். குற்றஞ்சாட்டுவதற்கோ அல்லது குறை காண்பதற்காகவோ அல்ல சொல்வது, அந்த நோக்கத்தோடு நான் சொல்லவில்லை. இந்தமாதிரி நல்ல காரியங்களில் நாம் ஈடுபட வேண்டும் என்று சொல்லிக்கொண்டு என் உரையை இத்துடன் முடித்து அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் வைக்கப்பட்டுள்ள காவல் துறை மானியத்தின் மீது அனைத்துக் கட்சிகளுடைய உறுப்பினர்களும்,

[திரு. மு. கருணாநிதி] [1971 ஜூலை 19

அந்தந்தக் கட்சிகளின் தலைவர்களும் எடுத்துரைத்திருக்கிற கருத்துக்கள் இந்தத் துறை மேலும் திறமையாக நடைபெறுவதற்கும், செம்மையாக நடைபெறுவதற்கும் வழி வகுக்கும் என்று நான் திண்ணமாக நம்புகிறேன். காவல்துறை மிகுந்த கடமையுணர்ச்சியோடும், கண்ணியம் தவறாமலும் குலையாமலும் நடத்தப்படவேண்டிய ஒரு துறை என்பதையும், அந்த வழியைப் பின்பற்றி தமிழகத்திலுடைய காவல் துறை நல்ல புகழையும் மரியாதையையும் பாராட்டுதல்களையும் உரியதாக்கிக் கொண்டிருக்கிறது என்பதனையும் இங்கு பேசிய உறுப்பினர்கள் யாருமே மறுக்கவில்லை என்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உறுப்பினர்கள் பேசிய நேரத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒரு சில தவறுகளைச் சுட்டிக்காட்டினார்கள். அதிலும் குறிப்பாக நம்முடைய காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் ஏராளமான செய்திகளைத் தனித் தனியாக எடுத்துக் கூறினார்கள். அவர்கள் பெரும்பாலும் புகார்கள், புகார்கள் என்ற அளவிலே எடுத்துச் சொன்னார்கள். ஆகவே, அந்தப் புகார்கள் உண்மையாக இருந்தாலும் அல்லது அவர்களுக்குக் கிடைத்த தகவல்கள் தவறானவைகளாக இருந்தாலும் அவைகளை ஆராய்ந்திடவும், ஆவன செய்யவும் அந்தத் துறை கடமைப்பட்டு இருக்கிறது என்பதனை நான் இங்கே சுட்டிக் காட்டுகிறேன்.

இந்தத் துறையில் ஈடுபட்டு இருக்கிற ஆயிரக்கணக்கான அலுவலர்கள் அவர்களுடைய உயிரையும் பணயமாக வைத்து இந்த நாட்டு மக்களைப் பாதுகாப்பதிலும், சட்டம், ஒழுங்கு, அமைதி இவைகளைப் பேணிக் காப்பாற்றவேண்டுமென்பதற்காக உழைப்பதிலும் அல்லும் பகலும் பணியாற்றிவருகிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய வாழ்வில் நல்ல ஒளி இருக்க வேண்டும், அவர்களுடைய வாழ்வில் நிம்மதி இருக்கவேண்டும் என்று இந்த அரசு கருதிய காரணத்தாலேதான் தமிழ் நாட்டிலே, வெள்ளைக்காரன் காலத்திலிருந்து இதுவரையிலே உருவாக்கப்படாத, காவல் துறை ஆணைக் குழு (போலீஸ் கமிஷன்) முதல் தடவையாக 1969-ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அந்தக் குழு அளித்த பரிந்துரைகளிலே உடனடியாகவும் மிக அவசியமானதும் என்று கருதக்கூடிய கருத்துக்களை நிறைவேற்றுகிற வகையில் அரசு முன்வந்து, அந்தப் பரிந்துரைகளில் பலவற்றை ஏற்று நிறைவேற்றியிருப்பதையும் இங்கே வைக்கப்பட்டுள்ள ஆய்வுரையில் நான் குறிப்பிட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

மேலும் போலீஸ் கமிஷனின் சிபார்சுகள் பலவற்றைப் படிப்படியாக நிறைவேற்றுவதற்கு இந்த அரசு உரிய முயற்சிகளை ஏற்ற காலத்திலே எடுக்கும் என்பதனையும் நான் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1971 ஜூலை 19] [திரு. மு. கருணாநிதி]

போலீசாருடைய திறமையைக் காப்பாற்றவும் அவர்களுடைய உயிரைத் திரணமென மதித்து ஆற்றுகிற பல்வேறு பணிகளுக்கு, இப்போது நான் தொடக்கத்திலே குறிப்பிட்டது போல், அவர்களுடைய வாழ்வில் அமைதி இருக்கவேண்டுமென்பதற்காக இரண்டாவது ஊதியக் குழு அமைக்கப்பட்டபோது போலீஸ் கமிஷனின் பரிந்துரையை அதோடு இணைத்து அவர்களுக்கு என்று நாம் பல்வேறு நன்மைகளைச் செய்து இருக்கிறோம். குறிப்பாக நம்முடைய திரு. பொன்னப்ப நாடார் எடுத்துக் காட்டினார்கள். போலீசாருடைய சம்பளம் ஓரளவு உயர்த்தப் பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அந்த ஓரளவு என்ன என்பதை நாம் சற்று உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும்.

1965-ம் ஆண்டிலே அவர்களுடைய அடிப்படைச் சம்பளம் ரூ. 65 ஆகவும் பஞ்சப் படி ரூ. 33 ஆகவும் இருந்து, 1967-ல் அவர்களுடைய அடிப்படைச் சம்பளம் ரூ. 70 ஆகவும், பஞ்சப்படி ரூ.59 ஆகவும் உயர்ந்து, அவர்கள் ரூ. 129 மொத்தச் சம்பளமாகப் பெற்றுக் கொண்டு இருந்தார்கள். இன்றையதினம் அவர்களுடைய சம்பளம்—பஞ்சப் படி உள்பட மொத்தமாகப் பெறுவது ரூ. 165 என்பதை இந்த மன்றம் உணரும் என்று நான் கருதுகிறேன். அதைப்போலவே, 1965-ல் தலைமைக் காவலர்களுக்கு அடிப்படைச் சம்பளம் ரூ. 85 ஆகவும், பஞ்சப் படி ரூ. 33 ஆகவும் இருந்து, அவர்கள் அப்போது பெற்றது மாதம் ஒன்றுக்கு ரூ. 118 என்ற நிலைமையில் இருந்து, பிறகு 1966-ல் ரூ. 160 என்ற நிலைமைக்கு உயர்ந்து, தலைமைக் காவலர்கள் இப்போது ரூ. 225 மாதம் தோறும் பெறுகிறார்கள் என்ற செய்தியை இந்த மன்றம் உணரும் என்று நான் நம்புகிறேன். இந்த விகிதத்திலே மற்ற அதிகாரிகளுக்கும் சம்பளம் உயர்த்தி இருக்கப்படக்கூடிய அளவுக்கு இந்த காவல்துறையின் ஆணைக்குழுவின் சிபார்சுகளை இந்த அரசு ஏற்று இருக்கிறது.

அதைப்போலவே, காவலர்களுக்கு வீட்டு வாடகைப் படி சென்னை நகரத்தில் ரூ. 14, மற்ற இடத்தில் ரூ. 14, என்று (2—10—1970-க்கு முன்பு) இருந்தது. ஆனால் 2-10-1970-க்குப் பிறகு காவலர்களுக்கு வீட்டு வாடகைப் படி சென்னையில் ரூ. 20 என்றும், மற்ற இடங்களில் ரூ. 20 என்றும், இந்த நிலை 1972-73-ல் சென்னையில் ரூ. 25 என்றும். 1973-74-ல் சென்னையில் ரூ. 30 என்றும், மற்ற இடங்களில் ரூ. 25 என்றும் காவலர்களுக்கு அளிக்கப்படுவதும், இதே அளவில் மற்ற அதிகாரிகளுக்கும் இந்த வீட்டு வாடகைப் படி அளிக்கப்படுவதுமான நிலைமைகள் இந்த ஊதியக்குழுவால், போலீஸ் கமிஷனின் பரிந்துரையினால் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது.

ரூ. 17 லட்சம் செலவில் கிராமக் காவல் நிலையங்களுக்கு 100 மோட்டார் சைக்கிள்களும், 5,000 மிதி வண்டிகளும் (சைக்கிள்கள்) அரசு வழங்கியிருக்கிறது.

[திரு. மு. கருணாநிதி] [1971 ஜூலை 19

காவலர்களுக்கு முன்பு தரப்பட்டு வந்த நிலைப் படி ரூ. 1.25 என்று இருந்ததை, 2–10–1970-க்குப் பிறகு ரூ. 3 என்றும், தலைமைக் காவலர்களுக்கு ரூ. 2 என்று இருந்ததை ரூ. 4.50 என்றும், சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு ரூ. 2.50 என்று இருந்ததை ரூ. 4.50 என்றும், இன்ஸ்பெக்டர்களுக்கு ரூ. 2.50 என்று இருந்ததை ரூ. 6 என்றும் நாம் உயர்த்தியிருக்கிறோம். இதிலே இந்த இரண்டாவது ஊதியக் குழுவின் பரிந்துரைக்கு ஏற்ப இந்த ரூ. 3 காவலர்களுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது என்றாலும் அதிலே சில நிபந்தனைகள் இருக்கின்றன. அந்த நிபந்தனைகள் தளர்த்தப்படவேண்டுமென்று இங்கே பேசிய எல்லாக் கட்சி உறுப்பினர்களும் எடுத்துக் காட்டினார்கள். அவைகளை அரசு விரைவில் ஆராய்ந்து ஆவன செய்யும் என்ற உறுதியை நான் இந்த மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவலர்களின் குடியிருப்பு வசதிக்காக நாம் 1970–71-ஆம் ஆண்டில் ஒதுக்கிய தொகை முதல் பகுதிக்காக ரூ. 34.24 லட்சம் இரண்டாம் பகுதிக்காக ரூ. 15 லட்சம், ஆக மொத்தம் ரூ. 49.24 லட்சம். 1971-72-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் மொத்தம் ரூ. 83.62 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆக இதுவரையில் காவலர் குடியிருப்புத் திட்டத்திற்காகச் செலவழிக்கப்பட்டிருக்கும் தொகை ரூ. 583.05 லட்சமாகும். குறிக்கோளில் 60 சதவீதம் நாம் குறிக்கோளாகக் கொண்டு இருக்கிறோம் என்றால், அதிலே 60 சதவீதம் இதுவரையில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. காவலர்களின் மொத்த எண்ணிக்கை 36,958-ல் குடியிருப்பு வசதி செய்து தரப்பட்டவர்களின் எண்ணிக்கை 20,231 ஆகும். மீதம் உள்ளவர்களுக்கு விரைவிலே இந்த குடியிருப்பு வசதிகள் செய்வதற்கு அரசு தேவையான எல்லா நடவடிக்கைகளையும், முயற்சிகளையும், மேற்கொள்ளும் என்பதனையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மாத்திரம் அல்லாமல், காவல் துறையிலே நல்ல வீரம் செறிந்த செயல்களைப் புரிகிற காவலர்கள், ஏனைய அதிகாரிகள், அவர்கள் நீண்ட நெடு நாட்களாகப் பணியிலே இருந்து, நல்ல பெயரோடும், நல்ல ஒழுக்கத்தோடும், சிறந்த ஊக்கத்தோடும், அயராது பாடுபட்டு இருப்பார்களேயானால், அவர்களுக்கென்று 'முதலமைச்சர் பதக்கம்' என்கிற ஒரு புதிய திட்டத்தை உருவாக்கி, பதக்கம் மாத்திரம் அளிப்பது என்று இல்லாமல், அவர்களுக்கு தகுந்த ரூபாய்களையும் நன்கொடையாக வழங்கும் முயற்சியை இரண்டாண்டுக் காலமாக இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. செப்டம்பர் திங்கள் 15-ம் நாள், நம்முடைய முன்னாள் முதலமைச்சர் அண்ணா அவர்கள் பிறந்த நாளில், காவலர்களுக்கு இந்தப் பரிசுகள் வழங்கும் திட்டத்தை ஆரம்பித்து, இது வரையில் இரண்டு முறை அந்தப் பரிசுகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டும், வருகிற ஆண்டுகளிலும் தொடர்ந்து இந்தப் பரிசு அளிப்பு விழாக்கள் நடைபெற இருக்கின்றன.



1971 ஜூலை 19] [திரு. மு. கருணாநிதி]

காவல் துறையிலே வேலை வாய்ப்புக்களை மேலும் அதிகப்படுத்துகிற வகையிலே தமிழக அரசு எடுத்து இருக்கிற முயற்சியை இந்த மன்றம் நன்றாக அறியும். அதைப்பற்றிப் பேசிய நேரத்தில்கூட, சில பேர் குறிப்பிட்டார்கள். இதிலே கட்சிச் சார்புடையவர்களாக 1,000 பேரை நீங்கள் தேர்ந்தெடுத்துக் கொள்வீர்கள் என்று சில பேர் குறிப்பிட்டார்கள். இந்த வேலைக்கு பள்ளி இறுதி வகுப்பிலே தேறியவர்கள்தான் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இந்த வேலைக்கென்று தகுதி படைத்தவர்கள்தான் தேர்ந்தெடுக்கப்பட முடியுமேதவிர, நான் இன்ன கட்சியைச் சார்ந்தவன், ஆகவே உயரத்தில் 2" குறைவாக இருந்தாலும் பரவாயில்லை, மார்பு சுற்றளவு 2" குறைவாக இருந்தாலும் பரவாயில்லை, என்னைக் காவல் துறையில் வேலைக்கு அமர்த்துங்கள் என்று யாரும் சொல்ல முடியாது. அப்படிச் சொன்னபடி அவர்கள் எடுத்துக் கொண்டால், உள்ளபடியே அந்தத் துறையிலே இந்த அரசு ஜனநாயகம் அற்ற முறையிலே நடைபெறுகிறது என்பதை நீங்கள் நிச்சயமாகக் குற்றம் சாட்டலாம்.

ஆனால், ஒரு நல்ல காரியத்தைத் தொடங்குகிறோம், காலம் காலமாகக் காவல் துறைக்கு ஆட்கள் எப்படி எடுக்கப்பட்டிருக்கிறார்கள். எந்த வகையில் காவல் துறைக்கான ஆட்களை எடுக்கிறோம்? ஒரு ஆயிரம் பேர்களுக்குப் புதிதாக வேலை கொடுக்கிறோம் என்பதைப் பாராட்டாவிட்டாலும், கட்சிக்காரர்களைப் போட்டுவிடுவீர்களோ என்று கேட்பது விந்தையாக இருக்கிறது. கட்சிக்காரர்கள் யார்? நான் கேட்கிறேன். ஒரு மனிதன் உள்ளத்தில் ஒரு கொள்கைக்கான தத்துவம் இருக்கலாம். ஆனால், காவல் துறைக்கு எடுப்பவர்களுக்கு அங்க அடையாளங்கள், திறமை, உடல் அமைப்பு, தேக ஆரோக்கியம் இவைகளைத்தான் காண முடியுமே அல்லாமல், அவர் எந்தக் கட்சியைச் சார்ந்தவர் என்பதைக் கண்டுபிடிக்கத் தக்க 'எக்ஸ்-ரே' கருவி எதுவும் காவல் துறையினர் கைவசம் இல்லை.

கட்சியைச் சேர்ந்தவர்களை எடுப்பார்களோ என்று கூறுவதன் மூலம், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க ஒரு பகுதியில் நாம் எடுத்திருக்கும் முயற்சியைப் பாராட்ட மாண்புமிகு உறுப்பினர்கள் நழுவிவிட்டதற்காக நான் பெரிதும் வருந்துகிறேன். நிச்சயமாகச் சொல்லுகிறேன். தகுதியற்றவர்கள், கட்சிக்காரர்கள் நிச்சயமாக இந்த வேலை வாய்ப்பில் இடம் பெற மாட்டார்கள் என்பதை உறுதியாகக் கூறுகிறேன். அரசாங்க அதிகாரிகள், அது எந்த அரசாங்கமாக இருந்தாலும், அதற்கு விசுவாசத்தோடு நடந்து கொள்ளவேண்டும் என்பதை யாரும் மறுக்க முடியாது. கட்சிக்கு விசுவாசம் காட்டக் கூடாது. அரசாங்கத்தின் காரியங்கள், செயல் முறைகளை நடைமுறைப்படுத்தவேண்டிய பணிகள் இவற்றில் எந்த அதிகாரியாக இருந்தாலும், எந்தத் துறையில் இருந்தாலும், விசுவாசமாக இருக்க வேண்டும். கட்சிக்கு விசுவாசமாக இருக்க வேண்டும் என்று கூறவில்லை.

இங்கே பேசிய பலரும்—குறிப்பாக எதிர்த் தரப்பில் உள்ளவர்கள்—எடுத்துச் சொன்னார்கள். அரசியல் தலையீடு இதிலே நிச்சயமாக இருக்கக்கூடாது என்று எடுத்துச் சொன்னார்கள். அரசியல் தலையீடு இன்றையதினம் காவல் துறையில் இருக்கிறதா என்பதை அவர்கள் பேசிய பேச்சிலிருந்தே நாம் நன்றாகப் புரிந்து கொள்ளலாம். அரசியல் தலையீடு இருக்கக் கூடாது என்று கூறும் அதே நேரத்தில், தாங்கள் தலையிட நேர்ந்தது என்பதையும் கூறிவிட்டு, ஆனால் நான் சென்றது ஒரு அநியாயத்தைக் கண்டிக்க, என்று குறிப்பிட்டார்கள்.

அதிலும் குறிப்பாக, நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி சொல்லும்போது, நான்கூட இந்த விஷயத்திலே தலையிட்டேன், ஆனால் ஒரு அநியாயத்தைக் கண்டிக்கத் தலையிட்டேன், என்று சொன்னார்கள். நியாயமா, அநியாயமா என்று ஆராய்ந்தறிவது யார்? தலையீடு தலையீடு தான். தலையிட்ட பிறகு நான் நியாயத்திற்காகத் தலையிட்டேன் என்று சொன்னாலும், அநியாயத்திற்குத் தலையிட்டேன் என்று சொன்னாலும் அது பொருந்திவராது. ஆனால் தலையீடுகளை வைத்து ஏற்பட்ட விளைவுகள் என்ன? இந்தத் தலையீட்டின் காரணமாக ஒரு நியாயமான காரியம், அநியாயமாக மாற்றப் பட்டதா? அல்லது ஒரு அநியாயம் நியாயமாக மாற்றப் பட்டதா? என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அப்படிப்பட்ட அரசியல் தலையீடுகள் இருக்கக் கூடாது என்பதற்காக, காவல் துறைத் தலைமை அதிகாரியின்மூலம், 1968-ல் அனைவருக்கும் ஓர் அறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. 'எல்லா அதிகாரிகளும், குற்றங்களைத் தடுப்பதில் அல்லது கண்டு பிடிப்பதில் அல்லது சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதில் தங்களது கடமைகளை நிறைவேற்றும்போது, சட்டத்தில் சொல்லியுள்ள கூற்றைக் கண்டிப்பாகப் பின்பற்றி நடக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும் என்பதை மனதில் கொள்ள வேண்டும். அவசியமற்ற முறையில் அல்லது நியாயமற்ற முறையில் அல்லது நியாயமற்ற வகையில் செல்வாக்கினை எவர் பயன்படுத்தினாலும், காவலர்கள் அதை உறுதியாக எதிர்க்க வேண்டும்; நியாயமும், நேர்மையும் நிலைநாட்டப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும். அத்துடன், சட்டம் அல்லது நடைமுறையில் சொல்லியிருப்பவைகளுக்கு மாறான நடவடிக்கை எதையும் பிறர் கொண்டுவரும் செல்வாக்கிற்கு இணங்கி அல்லது அடிபணிந்து மேற்கொள்ளக்கூடாது' என்று காவல் துறைக்கு அறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது.

அந்த வகையில்தான் இன்றைக்கு அந்தத் துறை செயல்பட்டு வருகிறது. ஒன்றிரண்டு இடங்களில் தவறுகள் இருப்பது சுட்டிக் காட்டப்பட்டன. அப்படிப்பட்ட தவறுகள் ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான், அரசின் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டிலும், அதையடுத்துக் காவல் துறை அதிகாரிகள்



மாநாட்டிலும், நான் திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறேன். யார் எந்தப் பிரச்சினையைக் கொண்டுவந்து சொன்னாலும், கொண்டு வந்து சொல்கிறவர்கள் யார் என்று பார்க்காமல், அந்தப் பிரச்சினையில் இருக்கும் நியாய அநியாயம் என்ன என்பதைப் பார்த்து, அதற்கேற்றவாறு நடவடிக்கை எடுங்கள் என்றும், 'தவறு செய்யுங்கள்' என்று நானே சொன்னாலும்கூட, 'நீங்கள் பண்ணாதீர்கள்' என்றும் காவல் துறையினர் மாநாட்டிலும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டிலும் எடுத்துக் காட்டி யிருக்கிறேன். அதற்கேற்ப, இன்றைக்கு அந்தத் துறை நடைபெற்று வருகிறது.

வழக்குகளில் மற்றக் கட்சிக்காரர்கள் தலையிடவே இல்லையா? பொது விவகாரங்களாகட்டும், அல்லது தனிப்பட்ட விவகாரங்கள் ஆகட்டும், தலையிடவே இல்லையா என்பது ஒரு பிரச்சினை. இரண்டாவது, மற்றக் கட்சிக்காரர்கள் மனுக்கள் கொடுத்து, அவை அலட்சியம் செய்யப்பட்டிருக்கின்றனவா, என்பது இன்னொரு பிரச்சினை. சட்டமன்ற முன்னாள் உறுப்பினர், திரு. நா. சௌந்தரபாண்டியன், திருநெல்வேலி மாவட்டம் அடங்கார்குளம் பஞ்சாயத்துத் தலைவர் திரு. செல்லையா நாடார் என்பவர் வள்ளியூரில் பஞ்சாயத்து ஒன்றியப்புத் தேர்தலில் சௌந்தரபாண்டியன் ஆதரவு கொடுத்ததால், எதிர் மனுதாரர்கள் 11 பேர்கள் தனக்கும் சௌந்தரபாண்டியனுக்கும் உயிருக்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய வகையில் தனக்கு மிரட்டல் கடிதம் வந்ததாகவும், இதுகுறித்து சௌந்தரபாண்டியனுக்கும் தனக்கும் பாதுகாப்பு வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். என்னிடத்தில் மிரட்டல் கடிதம் அளிக்கப்பட்டது. உடனடியாகக் காவல் துறைக்குத் தெரிவித்து, அந்த மனுவைப் பற்றிக் காவல் துறையினர் விசாரித்து, யார் யார் சுட்டிக்காட்டப் பட்டிருந்தார்களோ அவர்களெல்லாம் எச்சரிக்கப்பட்டார்கள் அதேபோல பல நிகழ்ச்சிகளை எடுத்துக் காட்ட முடியும்.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதற்காகவோ அல்லது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதற்காகவோ அல்லது சுதந்திராக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதற்காகவோ அலட்சியப்படுத்துவதில்லை. இந்த மன்றத்திலே டாக்டர் ஹாண்டே போன்றவர்கள் சில விவகாரங்களை என்னிடத்தில் எடுத்துத் தந்ததும், அவைகளை உடனடியாக விசாரிக்கச் சொல்லி விசாரணைக்குப் பிறகு அதிகாரிகள் தந்த பதிலையும் அவர்களிடத்தில் உடனடியாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஆகவே, இந்தத் துறையில் பாரபட்ச மற்ற முறையில், கட்சி மாச்சரியங்களுக்கு அப்பாற்பட்ட முறையில் பணிகள் நடைபெறுகின்றன என்பதை மீண்டும் மீண்டும் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

பொதுவாக, பெரும்பாலும், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள், அதிலும் குறிப்பாகக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்தச் சந்தேக வழக்குகள் போடப்படுவது அறவே நீக்கப்பட

[திரு. மு. கருணாநிதி] [1971 ஜூலை 19

வேண்டும், அகற்றப்பட வேண்டும் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். இந்தச் சந்தேக வழக்குகளில் சில நேரங்களில் ஏதும் அறியாத அப்பாவிகள் சிக்கிக் கொள்ளுகிறார்கள் என்றெல்லாம், எடுத்துக் கூறியிருப்பதை இந்த அரசும் கவனிக்காமல் இல்லை. ஆனாலும் சில நேரங்களில், அப்படி நடந்துவிடும் சம்பவங்களுக்காக நான் வருந்துகிறேன். ஆனால், சந்தேக வழக்குகள் போடப்படும்போது, சில முக்கியமான, பயங்கரமான தகவல்கள் கிடைக்கின்றன. எப்படிப்பட்டவர்கள் பிடிபடுகிறார்கள் என்பதற்கான சில உண்மைகளை மேலும் குறிப்பிட விரும்புகிறேன்.

8-7-1971-ல் மதுரையில், ஜெயமணி எனப்படும் நபர் இரவில் சந்தேகச் சூழ்நிலையில் கைது செய்யப்பட்டார். அவர் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த வாடிக்கையான குற்றவாளி. சைக்கிள்களில் இரண்டு பேர்களாகவும், விளக்கு இல்லாமலும் சவாரி செய்யும் நபர்களிடமிருந்து தலைமைக் காவலரைப்போல போலி உடையணிந்து பணம் வசூல் செய்து வந்துள்ளார். வீடுகளில் புகுந்து திருடியதாகப் பல வழக்குகளில் அவர் சம்பந்தப்பட்டவர். சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதன் காரணமாக இவ்வளவு தகவல்களும் அவரைப்பற்றிக் காவல் துறையினருக்குக் கிடைத்தது.

15—5—1971 இரவு, விருதுநகரைச் சேர்ந்த குருசாமி என்பவர், சந்தேகச் சூழ்நிலையில் மதுரையில் கைதானவர். தன்னிடம் இருந்த ரூ. 10,000 பெறுமான தங்க நகைகளுக்கு அவரால் சரியான காரணம் காட்ட முடியவில்லை. விருதுநகரில் இரண்டு நாட்களுக்கு முன்பு ஒரு வீட்டை உடைத்து, பயங்கரமாகக் கொள்ளையடித்ததற்கு இவர் காரணமானவர். ரூ. 17,000 பெறுமான பொருள்கள் மீட்கப்பட்டன.

அடுத்தபடியாக, யாத்திரிகர்கள் நடுவே சந்தேகப்படும்படியாகத் திரிந்த தேவராஜ் என்பவர் 26-5-1971 இரவு மதுரை நகரில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து சைக்கிள் ட்யூப்களும் டயர்களும் மற்றும் பல உபகரணங்களும் ஆக ரூ. 10 ஆயிரம் பெறுமான பொருள்கள் மீட்கப்பட்டன. இவை அனைத்தும் ஒரு சைக்கிள் கடையில் திருடு போனவை என்று கண்டறியப்பட்டு ஒப்படைக்கப்பட்டன.

அடுத்து, திருவில்லிபுத்தூரைச் சார்ந்த காசிநாதன் என்பவர் மதுரைத் திருநகரில் காலை மூன்று மணிக்குப் பிடிபட்டவர். ரூ. 10 ஆயிரம் பெறுமான பொருள்கள் களவிற்குக் காரணமாக இருந்தவர் அவர்.

27-4-1971 இரவு வெள்ளையக் கடும்பன் என்கிற நபர் சந்தேகத்தின் காரணமாகக் கைது செய்யப்பட்டவர். ஆறு வீடுகளில் கொள்ளையடிக்கப்பட்ட வழக்குகளில் சம்பந்தப்பட்டவர். 1969-ஆம் ஆண்டிலிருந்து தலை மறைவாக இருந்தவர்.



1971 ஜூலை 19] [திரு. மு. கருணாநிதி]

சென்னையில் மூர்மார்கெட்டுக்கு அருகே 6-6-1971 இரவு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட தாமோதரன், காஞ்சிபுரத்தைச் சார்ந்தவர். வீடுகளை உடைத்துத் திருடிய 16 வழக்குகளிலும் மற்றும் பதினைந்து திருட்டுகளுக்கும் அவர் காரணமாக இருந்தவர். இக்களவுகள் யாவும் சென்னையிலும் செங்கற்பட்டு மாவட்டத்திலும் நடந்தன. இக்குற்றங்களில் ஈடுபட்ட அந்த நபரிடமிருந்து ரூபாய் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட பொருள்கள் மீட்கப்பட்டன. பின்னர் அவருக்கு நான்காண்டு தண்டனை வழங்கப்பட்டது.

19-6-1971 இரவு சந்தேகத்தின பேரிலே கைது செய்யப்பட்ட ஆவடியைச் சார்ந்த ஜான்ஸன் என்பவர் 17 சைக்கிள் திருடுகளுக்குக் காரணமானவர் என்று கண்டுபிடிக்கப்பட்டது.

1970-ஆம் ஆண்டிலே சந்தேகத்தின் பேரிலே இப்படிக் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள். இதிலே குற்றவாளிகள் என்று கருதி நடவடிக்கை எடுக்கப்பட்டவர்கள் 29 ஆயிரம் பேருக்கு மேற்பட்டவர்கள் என்ற குறிப்பும் என்னிடம் இருக்கிறது.

1971-ஆம் ஆண்டில் சென்னையில்மட்டும் பத்தாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் சந்தேகத்தின் பேரிலே கைது செய்யப்பட்டு இருக்கின்றார்கள். இவர்களில் ஒன்பதாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் குற்றவாளிகள் என்று நிரூபணம் ஆகியிருக்கிறது.

11-7-71 அன்று இரவு சென்னையில் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் சாலையில் சைக்கிள் ரிக்ஷாவில் போய்க்கொண்டு இருந்த சாத்மல் என்பவரைச் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்தார்கள். அவர் கையில் பிளாஸ்டிக் பை ஒன்று இருந்தது. எடுத்துப் பார்த்ததில் நூறு ரூபாய் நோட்டுகளாகவும் பத்து ரூபாய் நோட்டுகளாகவும் மொத்தம் ஒரு லட்ச ரூபாய்க்கு இருந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இன்றைக்கு அவர்மீது வழக்கு நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

இவற்றையெல்லாம் நான் இங்கே எடுத்துக்காட்டிப் பேசும்போது, சந்தேக வழக்குகள் போடுவது நியாயம்தான் என்று அவற்றை ஊர்ஜிதப்படுத்துவதற்காகப் பேசுவதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. இப்படிப் போடும் நேரத்தில், இந்தச் சந்தேக வழக்குகளால் பாதிக்கப்படுகின்ற, ஏதும் அறியாதவர்களுக்கு உதவிகரமாக இருப்பதற்குக் கூடுமான வரையில்—நாம் இதைத் தவிர வேறு சட்டங்கள் ஏதேனும் இயற்ற முடியுமா என்று முடிவெடுக்கும் வரையில்—போடப்படும் இந்தச் சந்தேக வழக்குகள் எல்லாம் துரிதமாகப் பைசல் செய்தாக வேண்டும், அவற்றிற்குத் தீர்வு கண்டாக வேண்டும் என்று அதிகாரிகளுக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டு இருக்கின்றது.

இப்போது உள்ள வழக்கத்தின்படி, ஒருவர் கைது செய்யப்படுவாரேயானால் அவர், தான் இந்த ஊரைச் சேர்ந்தவர் என்று சொன்னால், அந்த ஊருக்குக் கடிதம் எழுதி, அந்த ஊரிலுள்ள

ஸ்டேஷனிலிருந்து அதுபற்றிய தகவல் வருவதற்கு, இடையிலே ஆகும் ஒன்று அல்லது இரண்டு வார காலத்திற்கு, தன்னைப்பற்றி ஏதும் தெரிவித்துக்கொள்ள முடியாத சூழ்நிலையில், குற்றமற்றவர் சில நேரங்களில் சிறையில் இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுவிடுகிறது. இதைத் தவிர்ப்பதற்காக, கூடுமானவரையில் 'தொலைபேசியைப் பயன்படுத்தி, அங்கேயிருந்து தகவலறிந்து, இரண்டொரு நாட்களிலேயே, அவர் நிரபராதி என்றால் விடுவித்தும், அப்படியின்றிக் குற்றவாளியென்றால் வழக்குத் தொடர்ந்தும், நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டு இருக்கின்றார்கள்.' எனவே, இப்படிச் சந்தேகத்தின் பெயரால் கைது செய்வதற்காக, உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்காக வேறுவிதமான சட்டம் அல்லது நடைமுறையைக் காணும் வரையில் அதுவரையில், இந்த இடைக்காலத்தில், இப்படிக் கைது செய்யப்படும்போது அவற்றில் துரிதமாகத் தீர்வு கண்டிடவேண்டும் என்று எடுத்துச் சொல்லப்பட்டு இருக்கின்றது.

திறமை வாய்ந்த இந்த நிர்வாகம் இன்றைய தினம் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக்காட்டியதுபோல, தீவிரவாதிகள், "நக்சலைட்டுகள்" என்று சொல்லப்படும் அவர்கள் விஷயத்தில், எந்த அளவிற்குக் கண்காணிப்போடு இருந்து வருகிறது என்பதை இங்கே மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள ஆய்வுரையில் எடுத்துக் காண்பித்திருக்கின்றேன்.

அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பேசியிருக்கின்றார்கள். 'நக்சலைட்ஸ்' ஏன் வளருகின்றார்கள், எந்த அடிப்படையில் வளருகின்றார்கள் என்பதை முன்பே நான் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கும் வகையில் இங்கே எடுத்துக் கூறினேன். அவர்கள் வளருவதற்கான அடிப்படை எதுவாக இருந்தாலும், சமுதாயத்தில் உள்ள பல்வேறு சூழ்நிலைகள் மாற்றப்படவேண்டும் என்று நாம் கருதினாலும், வறுமையை வென்று வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கிச் சமுதாயத்தில் ஒரு பெரிய புதிய மறுமலர்ச்சியை உருவாக்குவதற்கு நாம் அனைவரும் இன்றைக்கு உறுதி கொண்டிருக்கின்றோம் என்றாலும், நாம் இன்னும் சமுதாயத்திலே ஆற்றவேண்டிய காரியங்கள் பல இருக்கின்றன. நாம் மாற்றியமைக்கவேண்டிய சட்டங்கள் பல இருக்கின்றன. எனவே, நாம் அந்த அடிப்படையை உணராமல் இல்லை. அந்த அடிப்படையை உணர்ந்து, ஜனநாயக ரீதியில் அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும் நேரத்திலே, வன்முறைகள்மூலம் இந்த நாட்டு மக்களிடத்தில் வளமான வாழ்க்கையை உருவாக்கிவிடலாம் என்று நினைத்து, இரத்தத்தில்தான் அந்த அருமையான வளம் மிகுந்த செந்தாமரை முளைக்கும் என்று கருதுவது தவறு என்று நாம் பல்வேறு சந்தர்ப்பங்களிலே சுட்டிக்காட்டியிருக்கிறோம். அவர்களுடைய உணர்வுகளை நான் என்றைக்கும் மதிக்கின்றேன்.





நாடு வாழ வேண்டும் என்பதற்காகத்தான் அவர்கள் தங்களைத் தீவிரவாதிகளாக ஆக்கிக்கொண்டு இருக்கின்றார்கள் என்றால், அந்த உணர்வுகளை மதிக்கின்றேன்.

ஆனால், அதே நேரத்திலே, அவர்களுடைய செயல்களை, ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் யாரும் ஏற்க முடியாது. ஆகவே, நாம் மெல்ல, மெல்ல, ஆனால் உறுதியாக, இந்தச் சமுதாயத்தில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தவேண்டியவர்களாக இருக்கின்றோம். அப்படிப்பட்ட மாற்றத்தை ஏற்படுத்துவதற்குத் தீவிரவாதிகளாக இருப்பவர்களும் நம்மோடு ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளும் அதே நேரத்தில் அவர்கள் இப்படி நமது கவனத்தைத் திசைதிருப்புவதாலும், கொலை, கொள்ளை போன்ற மிகக் கொடூரமான காரியங்களில் ஈடுபட்டு, ஒரு நாட்டின் அமைதியை, சமுதாயத்தினுடைய அமைதியைக் கெடுப்பதால் அப்படிப்பட்ட மாற்றங்களைக் கொண்டுவந்துவிட முடியாது என்று இந்த அரசு உறுதியாகக் கருதுகிறது. அரசுப் பொறுப்பிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகமும் கருதுகின்றது.

எனவே, அப்படிப்பட்ட தீவிரவாதிகளுக்கெல்லாம் மீண்டும் ஒரு முறை வேண்டுகோளாக விடுக்கின்றேன். உங்கள் உணர்வுகளை மதிக்கும் அதே நேரத்திலே நீங்கள் எடுத்துக்கொண்டுள்ள செயல்கள் கண்டிக்கத்தக்கவை, தேவையற்றவை. எனவே, அவற்றை விட்டுவிட்டு, இந்தச் சமுதாயம் முன்னேறுவதற்கு இந்தச் சமுதாயம் முன்னேற்றப்பட வேண்டும் என்று அக்கறை கொண்டுள்ள ஜனநாயக அரசோடு நீங்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். அப்படியில்லாமல் ஏதோ அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிலருடைய தலைகளைக் கிள்ளியெறிந்துவிடுவதால், சிலருடைய குழந்தைகள் பதைக்க பதைக்க, குடும்பத் தலைவனைக் கொன்றுவிடுவதால் நாட்டில் உண்மையான புரட்சி ஏற்பட்டுவிடும் என்று கருதினால் அப்படிப்பட்ட புரட்சி ஒரு மாத காலம் அல்லது இரண்டு மாத காலம் நடைபெறலாம். ஆனால் புரட்சிக்குப் பின்னால் பூத்துக்குலுங்க வேண்டிய சமதர்மப் பூக்காடு மலருமா என்று எண்ணிப் பார்க்கவேண்டும். எனவே, இந்தச் சமதர்மப் பூக்காட்டை உருவாக்குவதற்காக நாம் எல்லோரும் ஒன்றுபட்டுப் பாடுபடவேண்டும்.

இதே நேரத்தில் இவற்றையெல்லாம் மீறி வன்முறைதான் எங்கள் லட்சியம், பலாத்காரம்தான் எங்கள் குறிக்கோள், கொலை கொள்ளைகளைச் செய்யும் நாட்கள்தான் எங்களுக்கு இன்பமான திருநாட்கள் என்று அவர்கள் கருதுவார்களானால் அந்த விஷயத்தில் இந்த அரசு இப்போதுள்ளதைவிட இன்னும் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க நேரும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளாமல் இருக்க முடியாது.

[திரு. மு. கருணாநிதி] [1971 ஜூலை 19

காவல் துறையினர் மிகவும் நாணயமாக நடந்துகொள்ள வேண்டும் என்று எடுத்துச் சொல்லப்பட்டது. மாண்புமிகு அங்கத்தினர்கள் யாரும் மொத்தமாகக் காவல் துறையை அப்படியே குற்றம் சொல்லவில்லை என்பதை நான் முழுக்க முழுக்க நம்புகிறேன். நமது நாடார் அவர்கள் பேசும் நேரத்தில்கூட விவாதத்தில் அதிகமாகச் சூடு பிறக்கவில்லை என்றார்கள். சூடு இல்லாத காரணம் எதிர்க்கட்சியினுடைய திறமைக்குறைவு காரணம் என்று நான் நிச்சயமாகச் சொல்ல மாட்டேன். நீங்கள் நினைத்தால் . . . .

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: நீங்கள் அப்படிச் சொன்னாலும் நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: சொல்லாமல் இருக்கும் போது ஏன் வலிய ஏற்றுக்கொள்ள வேண்டும்? எனவே நான் எதிர்க்கட்சியினருடைய திறமைக் குறைவு என்று சொல்ல மாட்டேன். பதிலாக, சூடாகப் பேசும் அளவிற்கு இந்தத் துறை எந்தத் தவறுகளையும் இழைத்து விடவில்லை என்பதுதான். எனவேதான் சூடேறவில்லை.

மதிப்பிற்குரிய தங்கமணி போன்றவர்களும், நாடார் போன்றவர்களும் திருமதி அனந்தநாயகி அம்மையார் போன்றவர்களும் டாக்டர் ஹண்டே போன்றவர்களும் தங்கள் தொகுதியில் நடந்ததாகச் சொல்லப்படும் இரண்டொரு நிகழ்ச்சிகளைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அவைபற்றி அவ்வப்பொழுது துரிதமாக நடவடிக்கை எடுத்து ஆவன செய்யவேண்டும் என்று கட்டளை பிறப்பித்து இருக்கின்றேன். இன்னும் சொல்லப்போனால் நமது சங்குமுத்துத்தேவர் அவர்கள் தொகுதியில் நடந்த சில சம்பவங்கள் பற்றிக் காவல் துறையினரிடமிருந்து தகவல்கள் பெற்று அதன் விவரங்களை நமது நாடார் அவர்கள்மூலமாக திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்களுக்குத் தந்து இருக்கிறேன். எனவே இத்துறை விழிப்போடும் ஒழுக்கத்தோடும் நடந்துகொள்ள வேண்டிய பெரும்பொறுப்பை இந்த அரசு ஏற்றுக்கொண்டு இருக்கிறது.

அதே நேரத்தில் முஸ்லீம் லீக் உறுப்பினர் திருப்பூர் மொய்தீன் அவர்கள் சொன்னதை மறந்துவிடுவதற்கு இல்லை. காவல் துறையினரிடம் பண்பை எதிர்பார்க்கும் நாம் அவர்களிடமும் பண்போடு நடந்து கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அது முற்றிலும் உண்மைதான். அதே நேரத்தில் காவல் துறையினரை அணுகுகின்றவர்கள் பண்போடு நடந்து கொள்ளவில்லை என்ற காரணத்தினால் காவல்துறையினரும் பண்பற்ற முறையில் நடந்துகொள்ள வேண்டும் என்று சொல்லுகிறேனா என்றால், இல்லை. சிலர் பண்பற்ற முறையில் நடந்து கொண்டால்கூட காவல் துறையினர் தங்களுக்கே உள்ள பண்பை விட்டுக் கொடுக்காமல் நடந்துகொள்ள வேண்டும் என்றுதான் நான் காவல் துறையிலுள்ள எல்லா அதிகாரிகளுக்கும் ஏனைய காவலர்களுக்கும் என் வேண்டுகோளாக விடுக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



1971 ஜூலை 19] [திரு. மு. கருணாநிதி]

ஆனால், காவல்துறை நன்கு செயல்படவேண்டுமானால் அவர்களைப்பற்றி தவறான செய்திகளை, தகவல்களை வெளியிட்டு, காவல் துறையினருக்கு இழுக்கு ஏற்படுத்தும்வகையில் அரசியல் கட்சிகளும் அரசியல் ஏடுகளும் முனையக்கூடாது என்பது என்னுடைய பணிவன்பான வேண்டுகோளாகும். இன்றைக்கு எத்தனையோ செய்திகள் வருகின்றன. இன்றைக்கு ஒரு பத்திரிகையிலே பார்க்கின்றேன் ம. பொ. சிவஞானம் அவர்களின் மருமகன் எங்கேயோ கார் விபத்தில் சிக்கி யாரோ ஒரு பையன் அடிபட்டுச் செத்து விட்டான். அவர்மீது வழக்குப் போடவில்லை என்று பத்திரிகையிலே செய்தி வந்திருக்கின்றது. நான் அதிகாரிகளிடம் கேட்கிறேன். உடனே அதிகாரிகள் அந்த இடத்திலேயே அவர் கைது செய்யப்பட்டார் என்றும், அப்படிக் கைது செய்யப்பட்டவர்மீது வழக்குப் போடப்பட்டு ஜாமீனில் விடுதலையாகியிருக்கிறார் என்றும் தகவல் கொடுக்கின்றார்கள். தவறான தகவல்களை இன்றைக்குப் பத்திரிகையிலே போட்டு விடுகின்றார்கள்.

அண்மையிலே 15-ம் தேதி என்று கருதுகிறேன். சென்னை மாநகரத்திலே மதுவிலக்கு ஒத்திவைக்கப்படுவதை எதிர்த்து மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் முன்பாக டில்லியிலிருந்து வந்த திருமதி சுசிலா நய்யார் அவர்களும் தமிழகத்தில் உள்ள சிலரும் சேர்ந்து காலையில் 54 பேர், பிறகு மாலையில் 94 பேர் என்ற அளவிலே உண்ணாவிரதத்தில் ஈடுபட்டார்கள். அது அமைதியாக நடைபெறுவதற்குக் காவல் துறை பெரும் முயற்சி எடுத்துக்கொண்டு நல்ல பாதுகாப்பு அளித்திருக்கின்றது. ஆனால் பத்திரிக்கையிலே என்ன செய்தி வருகின்றது? உண்ணாவிரதத்தில் இருந்துகொண்டிருக்கும்போது, துறைமுகத்திலிருந்து தொழிலாளர்கள் வெளியே வந்து, உண்ணாவிரதம் இருந்த பந்தலைப் பிரித்துப்போட்டு, படங்களையெல்லாம் கிழித்துப்போட்டு அலங்கோலம் செய்தார்கள்; அமளிதுமளி ஏற்பட்டது; அவ்வளவு பேரும் திராவிட முன்னேற்றக் கழக அரசால் ஏவி விடப்பட்டவர்கள்; காவல்துறை கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது; அதற்குப் பிறகுதான் 10 பேராக இருந்த காவலர்கள் 100 பேராகப் பெருகிக் கலவரத்தை அடக்கினார்கள் என்று செய்தி போடப்படுகிறது. அப்படிப்பட்ட தவறான தகவல்கள் போடப்படுகின்றன; மிகைப்படுத்திப் போடுவது ஒன்று; பொய்யையே போடுவது ஒன்று. 400 பேர் இருந்தார்கள் என்றால், 4,000 பேர் இருந்தார்கள் என்று போடுவது மிகைப்படுத்திப் போடுவது. 400 பேரில் 300 பேர் செத்துவிட்டார்கள் என்று போடுவது பொய் போடுதல். அதைப் போலத்தான் அங்கே நடைபெற்ற உண்ணாவிரதத்தில் துறைமுகத்திலிருந்து தொழிலாளர்கள் வெளியே வந்தார்கள். வந்தவர்களில் சிலபேர் உண்ணாவிரதம் இருந்த இடத்திற்கு அப்பால், வெகு தொலைவிற்கு அப்பால், நின்றுகொண்டு மதுவிலக்கு ரத்துக்கு ஆதரவாகக் கோஷமிட்டார்கள். அது உண்மை. உடனடியாகப் போலீஸ் தலையிட்டு அவர்களை அப்

[திரு. மு. கருணாநிதி] [1971 ஜூலை 19

புறப்படுத்தியிருக்கிறார்கள். இதுதான் நடந்த நிலவரம். ஆனால் உண்ணாவிரதம் மேற்கொண்டவர்கள்கூட சொல்லாத கூற்று பத்திரிக்கையிலே வேண்டுமென்றே போடப்படுகிறது.

இன்னொரு நிகழ்ச்சி. வேலூரிலே இதுபோன்ற உண்ணாவிரதம் அதிலே கலந்துகொண்டவர்கள் யார், யார் என்று பத்திரிக்கையிலே செய்தி போடும்போது, நான் சாதாரணப் பத்திரிக்கையைக் கூட சொல்லவில்லை, தினமணிப் பத்திரிகை செய்தி போட்டது. என்ன போட்டது ? வேலூரிலே நடைபெற்ற உண்ணாவிரதத்தில் கலெக்டர் காரியாலயத்திலே 77 பேர் ஈடுபட்டார்கள். ஆளுங்கட்சி நீங்கலாக எல்லா அரசியல் கட்சிகளும் இந்த இயக்கத்திலே பங்கு கொண்டிருப்பதாக அந்த இயக்கத்தின் தலைவர் கூறினார். (எதிர் வரிசையிலே அமர்ந்திருந்த திரு. கே. டி. கே. தங்கமணியைப் பார்த்து) இதிலே நீங்கள் உண்டா ?

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இல்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இதிலே இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி பங்கு கொள்ளவில்லை என்று சொல்லுகிறார்கள். பார்வர்டு பிளாக் இல்லை. திருப்பூர் மொய்தீன் சொல்லுகிறார்கள், முஸ்லீம் லீக் இல்லை என்று. சுரேந்திரன் சொல்கிறார் பிரஜா சோஷலிஸ்டு கட்சி பங்கு கொள்ளவில்லை என்று, ஆனாலும் ஆளுங் கட்சி நீங்கலாக மற்ற எல்லாக் கட்சிகளும் இந்த இயக்கத்தில் பங்கு கொண்டிருப்பதாக அந்த இயக்கத்தின் தலைவர் கூறினார் என்று செய்தி போடப்படுகிறது அத்தோடு விட்டால் பரவாயில்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** சட்டமன்ற உறுப்பினர்கள் யாராவது இருந்தார்கள் என்று பத்திரிகையிலே போடப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இல்லை. 'உணவு அமைச்சர் ப. உ. சண்முகத்தின் சகோதரி மகன் பன்னீர்செல்வம் (பழைய காங்கிரஸ்) உண்ணாவிரதத்தில் கலந்துகொண்டது குறிப்பிடத் தக்கதாகும்.' (சிரிப்பு). இது தினமணிச் செய்தி. நான் வேறு சில பத்திரிகைகளில் இம்மாதிரிச் செய்தி வருவதை உள்ளபடியே ஆட்சேபிக்கவில்லை. அது அவர்களுடைய கட்சியின் பழக்கம். ஆனால் அமைச்சர் ப. உ. சண்முகத்திற்குப் பன்னீர்செல்வம் என்ற மருமகன் இருக்கிறாரா என்றால், இல்லை. நான் விசாரித்தேன். பழைய காங்கிரஸ் என்று போடப்பட்டிருக்கிறது. அதில் ஆச்சரியம்கூட இல்லை. தகப்பனார் காங்கிரஸ். மகன் திராவிட முன்னேற்றக் கழகமாக இருக்கலாம். டாக்டர் சுப்பராயன் காங்கிரஸ். மோகன் குமாரமங்கலம் கம்யூனிஸ்ட் என்று இருந்தார்கள். ராஜாஜி சுதந்திரா, நரசிம்மன் அப்போது காங்கிரஸ் என்று இருந்திருக்கிறார்கள். ஒரே குடும்பத்தில் பல கட்சிகளைச் சேர்ந்தவர்கள் இருப்பது வியப்பிற்குரியது இல்லை. ஆனால் இந்த



1971 ஜூலை 19] [திரு. மு. கருணாநிதி]

ஆச்சரியமான விஷயம் குறிப்பிடத் தக்க விஷயம் என்று போடப்பட்டிருப்பது உண்மையா என்றால், இல்லை. யார் அந்த பன்னீர் செல்வம் என்று அவனைப் பற்றி விசாரித்தேன்.

On 24th June 1971 Thiru Panneerselvam was found drunk and he was charge-sheeted by the Police in Tiruvannamalai in Crime No. 829/71/Thiruvannamalai Police Station. He was charged under Section 4 (1) (j) of the Prohibition Act. He was fined Rs. 20 by the Sub-Magistrate, Tiruvannamalai for this offence.

இந்த பன்னீர்செல்வம் மதுவிலக்குச் சட்டத்தை மீறியதற்காக அபராதம் கட்டியவர். அவர் வந்து உண்ணாவிரதம் இருந்திருக்கிறார் (சிரிப்பு). நான் உண்ணாவிரதம் இருந்தவர்களின் உணர்ச்சிகளுக்குக் குந்தகம் ஏற்படுத்துவதற்காகச் சொல்லவில்லை. பத்திரிக்கையிலே வந்திருக்கிற செய்தியிலே காணப்படுகின்ற பன்னீர்செல்வம் எப்படிப்பட்டவர், அவர் அமைச்சர் ப. உ. சண்முகத்தின் மருமகன் என்று செய்தியைப் போடுவதன்மூலம், இப்படித் தான் பல செய்திகள் தவறான முறையில் போடப்படுகின்றன என்பதைக் குறிப்பிட்டுக் காட்டுவதற்காகச் சொல்லுகிறேன்.

போலீசார் நாணயமாக ஒழுக்கமாக நடந்துகொள்ளவேண்டும் என்று கருதுகிற நாம், செய்தியை வெளியிடுகின்ற நேரத்தில் அந்தப் போலீசார் நாணயமாக, ஒழுக்கமாக நடந்துகொண்டதைப் பாராட்டுவதற்குப் பதிலாக, தவறுகள் செய்தார்கள் என்று குறிப்பிடுவது கொஞ்சமும் நல்லதல்ல. தேர்தல் நேரத்தில் போலீசார் தவறாக நடந்தார்கள், தவறாக நடந்தார்கள் என்றெல்லாம் இங்கே பேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் எடுத்துக் காட்டினார்கள்.

எனக்கு நன்றாக நினைவிருக்கிறது, கோயம்புத்தூரில் தேர்தல் நேரத்தில் பேசிய மதிப்பிற்குரிய தலைவர் காமராசர் அவர்கள் ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். அது தினமணிப் பத்திரிகையில் வந்திருக்கிறது. "போலீசை வைத்து முதலமைச்சர் பயமுறுத்துகிறார்" என்று என்னைத் தாக்கிவிட்டு, கடைசியாக "நடப்புத் தேர்தல் காலத்தில் போலீசார் பொதுவாக நேர்மையாகவும், பாரபட்சமற்ற நிலைமையிலும் நடந்து கொண்டிருக்கிறது" என்று பாராட்டினார் என்று செய்தி வந்திருக்கிறது. போலீசார் தேர்தல் நேரத்தில் ஆளுங்கட்சிக்கு அடிமையாக இருந்தார்கள்; எதிர்க்கட்சியை அடக்கி ஒடுக்கப் பயன்படுத்தினார்கள் என்கின்ற செய்திகள் எந்த அளவுக்குத் தவறானவை என்பதற்காகச் சொல்லுகிறேன்.

அது மாத்திரமல்ல. இன்றைக்குப் பகிரங்கமாகவே நாங்கள் குற்றங்கள் செய்கிறோம் என்று பேசப்படுகிறது. நேற்றைக்குக் கடற்கரைக் கூட்டத்தில் பேசியிருக்கிறார்கள். 'கல்லூரியிலே 4,000 ரூபாய் நன்கொடை என்ற பெயரால் நான் கொடுத்துத்தான் என்னுடைய வீட்டுப் பிள்ளையை காலேஜில் சேர்த்திருக்கிறேன்'.

[திரு. மு. கருணாநிதி] [1971 ஜூலை 19

என்று கடற்கரையிலே நேற்று ஒருவர் பேசியிருக்கிறார். பத்திரிக்கையிலே செய்தி வந்திருக்கிறது. எந்தப் பத்திரிக்கையோ அல்ல 'தினமணி' பத்திரிக்கையிலே செய்தி வந்திருக்கிறது. கல்லூரியிலே சேர்க்க நன்கொடை என்ற பெயரால் தான் 4,000 ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது என்று சொன்னவர்; காமராசர் ஆட்சிக் காலத்திலே லஞ்ச ஊழல் இல்லாமலிருந்தது' என்று சொல்லியிருக்கிறார். 'தான் கொடுத்த நன்கொடையை லஞ்சம் என்கிறார். உள்ளபடியே நன்கொடையாக இருந்தால் அதைக் குற்றமாகச் சொல்லக்கூடாது. அது குற்றமாகச் சொல்லப்பட்ட பிறகு அது லஞ்சமாகிறது. லஞ்சம் வாங்கியவர் மட்டுமல்ல குற்றவாளி; கொடுத்தவர் அதைவிடக் குற்றவாளி. இதை யோசித்து அரசு நடவடிக்கை எடுத்தால், கட்சிச் சார்போடு நடந்துகொள்ளுகிறார்கள் என்று குற்றச்சாட்டுக் கூறினாலும் ஆச்சரியமில்லை. பகிரங்கமாக ஒரு குற்றம் சாட்டப்பட்டு விட்டது. நான் எல்லா அரசுக் கல்லூரிகளையும் கேட்டுவிட்டேன். நாவலர் அவர்களையும் கேட்டு விட்டேன். அவரும் விசாரித்து எந்த அரசுக் கல்லூரியிலும், 4,000 ரூபாய் பேசிய நன்பரிடமிருந்து நன்கொடையாக வாங்கியதாகத் தகவலில்லை என்று சொல்லிவிட்டார். நன்கொடை என்ற பெயரில் வாங்கியிருப்பதாகக் குற்றச்சாட்டு. அப்படி வாங்கியவர்கள் லஞ்சம் என்கின்ற அளவில் வாங்கியிருக்கிறார்கள் என்று குற்றச்சாட்டு. காமராசர் காலத்தில் அந்த லஞ்சம் இல்லை. இப்போது லஞ்சம் இருக்கிறது என்பது குற்றச்சாட்டு. அந்தக் குற்றங்களைச் செய்துவிட்டு, அதைப் பகிரங்கமாக மேடையில் ஏறி, நானே லஞ்சம் கொடுத்தேன், நன்கொடை என்ற பெயரால். என்று சொல்லுகிறார் என்றால், அவர்கள் என்ன செய்திருக்கவேண்டும்? கேட்டவுடனேயே காவல் துறைக்கு எழுதியனுப்பியிருக்கவேண்டும். இப்படி என்னுடைய வீட்டுப் பிள்ளையைச் சேர்க்க இடம் கேட்டேன்; 4,000 ரூபாய் அவர்கள் நன்கொடை என்ற பெயரில் லஞ்சம் கேட்கிறார்கள் என்று காவல் துறைக்கு அப்போதே செய்தி அனுப்பியிருப்பாரேயானால், காவல் துறைக்கு தகுந்த நடவடிக்கை எடுத்திருக்க முடியும். அப்படி நடவடிக்கை எடுக்கின்ற சூழ்நிலையைக் காவல் துறைக்குத் தராமல் இன்றைக்குப் பகிரங்கமாக மேடையில் பேசுவது தமிழ் நாட்டின் ஒரு நாகரீகமான, பண்பாடான மரபை எந்த அளவிற்குப் பாதிக்கிறது. காவல் துறையின் நேர்மையை அது எந்த அளவுக்குப் பாதிக்கிறது என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று இந்த மாமன்றத்தில் உள்ள உறுப்பினர்களையெல்லாம் நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** ஏதோ லஞ்சத்தைப் புதிதாகக் கண்டுபிடித்துக் குற்றம் சாட்டவேண்டும் என்று கூறியதுபோலச் சொல்லுவது சரியில்லை. சென்ற ஆண்டிலே கல்வி அமைச்சர் அவர்களே ஒருவரைப் பிடித்துக் கொடுத்தார். அந்த மாதிரிச் சம்பவங்கள் நடந்து வருகின்றன என்பதால்தான் சொன்னார்கள்.



1971 ஜூலை 19]

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கல்வி அமைச்சருக்குள்ள பொறுப்புணர்ச்சி நேற்றுப் பேசியவருக்கு இல்லை என்பதைத் தான் சுட்டிக்காட்ட வந்தேன். கல்வி அமைச்சர் அவர்கள் தன்னிடம் லஞ்சம் கொடுக்க வந்தவர் கட்சியைச் சார்ந்தவர் என்று தெரிந்தும்கூட அவரைப் போலீசில் பிடித்துக் கொடுத்தார். ஆனால் இங்கே லஞ்சம் கொடுத்தவர் அந்தக் குற்றத்தைச் செய்துவிட்டு நான் லஞ்சம் கொடுத்தேன் என்று மேடையில் பேசுவது கொஞ்சமும் நாகரீகத்திற்கு ஏற்றதல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தேர்தல் நேரத்தில் நடந்த அரசியல் கொலைகளைப்பற்றிச் சொன்னார்கள். தேர்தல் நேரத்தில் அரசியல் கட்சிச் சார்புள்ளவர்கள் பத்துப் பதினேழு பேர்கள் கொல்லப்பட்டார்கள் என்கிற போது, வெவ்வேறு விஷயங்களுக்கு எல்லாம் அரசியல் வண்ணம் பூசப்படுகிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. பத்திரிக்கையிலே ஒரு காங்கிரஸ்காரர் கொல்லப்பட்டார் என்றால், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கொன்றார்கள் என்பதாகவும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் கொல்லப்பட்டால் காங்கிரஸ்காரர்கள் தாக்கினார்கள் என்பதாகவும் போடப்படும். இந்த இரண்டையுமே நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். அப்படிப் போடுவது வழக்குக்கு உறுதுணையாக அமையாது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

தேர்தல் நேரத்தில் திருநெல்வேலி வில்லாகுளம் கிராமத்தில் பாமுத்துத் தேவர், ஹரிகிருஷ்ண நாடார் என்பவர்கள் கொல்லப்பட்டார்கள். இது சம்பந்தமாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த 27 பேர்கள் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள். வழக்கு ஸ்ரீவைகுண்டம் சப்மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் விசாரணையில் உள்ளது.

தூத்துக்குடியில் பட்டு நாடார் என்பவர் கொல்லப்பட்டார். இது சம்பந்தமாக 7 காங்கிரஸ்காரர்கள் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள். இந்த வழக்கும் விசாரணையில் உள்ளது.

தஞ்சாவூர் பொய்யுண்டார் குடிகாடு என்ற இடத்தில் கன்னையன் என்பவர் கொலை செய்யப்பட்டார். இது சம்பந்தமாகக் காங்கிரஸ்காரர் ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். பட்டுக்கோட்டை சப்மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் வழக்கு விசாரணையில் உள்ளது.

தஞ்சாவூர் நாலுவேதபதி என்ற இடத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த காளிமுத்து என்பவர் கொலை செய்யப்பட்டார். இது சம்பந்தமாக 12 காங்கிரஸ்காரர்கள் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள். வழக்கு திருத்துறைப்பூண்டி சப்மாஜிஸ்டிரேட்கோர்ட்டில் விசாரணையில் உள்ளது.

தென்னாற்காடு இளவரசன்பேட்டை என்ற இடத்தில் சுப்பிரமணியம் என்கிற காங்கிரஸ்காரர் கொலை செய்யப்பட்டார். இது சம்மந்தமாக 5 திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். வழக்கு புலனாய்வில் உள்ளது.

[திரு. மு. கருணாநிதி] [1971 ஜூலை 19

செங்கற்பட்டு, பரங்கிமலை, புழுதிவாக்கம் என்ற இடத்தில் சின்னு என்ற வெங்கடசாமி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் கொலை செய்யப்பட்டார். இது சம்பந்தமாக 21 காங்கிரஸ்காரர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். சைதை சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் வழக்கு விசாரணையில் உள்ளது.

சென்னையில் புளியந்தோப்பு என்ற இடத்தில் குருவையா என்ற காங்கிரஸ்காரர் கொலை செய்யப்பட்டார் குற்றவாளி யாரும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. வழக்கு புலனாய்வில் தொடர்ந்து உள்ளது.

இறந்தவர்கள் 8 பேரில் 5 பேர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள். 3 பேர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள். தயவு தாட்சண்யம் பாராமல், கொலை செய்யப்பட்டவர் எந்தக்கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும் அதைப் பற்றிக் கவலைப்படாமல், குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு கண்டிக்கப்படுவார்கள். குற்றவாளிகள் யார் என்று பார்க்காது, வழக்கின் தன்மையை ஆராய்ந்து, நீதி வழங்க இந்தக் காவல் துறையினர் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த அவைக்கு அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படி எல்லா வகையிலும் நம் நாட்டில் சட்டம், அமைதி, ஒழுங்கு இவைகளைக் காப்பாற்ற, பணியாற்றக்கூடிய இந்தக் காவல்துறை மானியத்தின்போது எடுத்துச் சொல்லிய குற்றங் குறைகள் இருக்குமானால் அவற்றைக்களைய இந்த அரசு மேலும் முயற்சிகளை எடுத்துக்கொள்ளும் என்று சுட்டிக்காட்டி, மாண்புமிகு உறுப்பினர்கள் இன்றியமையாத காரியங்களை எல்லாம் இங்கே அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருவதன் மூலம் அந்தத் துறை அதிகாரிகளுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள், என்னுடைய கவனத்திற்கும் கொண்டு வந்திருக்கிறார்கள். இவற்றை எல்லாம் ஆராய்ந்து பார்த்து நடுநிலைமையில் இருந்து இந்த அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் என்கிற உறுதியினை அளித்து, இந்த மானியத்திற்குக் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் திரும்பப் பெறவேண்டுமென்று வேண்டி இந்த அளவில் அமைகிறேன். வணக்கம்.

DR. H. V. HANDE : Sir, on a point of clarification. The Hon. Chief Minister spoke about Panneerselvam incident in Vellore. Has he got it checked up? There are two Panneerselvams and one Panneerselvam was convicted in Tiruvannamalai and there is also another Panneerselvam. I want to know whether they are of the same person and I am not holding any brief for anyone. I want to know the details. It may be possible that there is one Panneerselvam here and another Panneerselvam there.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நான் அதை ஒரு முறைக்கு இருமுறையாக ஆராய்ந்தேன். இன்னும் விவரம் சொல்லவேண்டுமென்றால் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே



1971 ஜூலை 19] [திரு. மு. கருணாநிதி]

கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலையில் தலைவராக இருந்தபோது இந்த பன்னீர்செல்வம் அங்கே வேலைக்குப் பையனாக இருந்திருக்கிறார். அங்கும் குடித்துவிட்டு இருந்த காரணத்தினால் அங்கிருந்து வேலையில் இருந்து நீக்கப்பட்டும் இருக்கிறார். பின்னர்தான் புது காங்கிரசில் சேர்ந்தது. இந்தத் தகவல்கள் எல்லாம் என்னிடம் வந்திருக்கின்றன. இந்தத் தகவல்களில் தவறு இருக்கும் என்று சுட்டிக்காட்டப்பட்டால் நான் அந்தத் தவறைத் திருத்திக்கொள்ளவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : பயர் சர்வீஸ் பற்றி ஆலோசனை கேட்டார்கள். மலபார் ஸ்பெஷல் போலீஸ் பற்றி நான் சொன்னதற்கு ஏதாவது விளக்கம் தரமுடியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 'மலபார் ஸ்பெஷல் போலீஸ்' என்கிற பெயர் மாற்றி அமைக்கப்படவேண்டும் என்று பலர் சொன்னதற்கிணங்க 'தமிழ்நாடு ஸ்பெஷல் போலீஸ்' என்று அதற்குப் பெயர் மாற்றி அமைக்க ஆணை பிறப்பிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எ. சுவாமிநாதன், திரு. க. சுப்பு, டாக்டர் எச். வி. ஹாண்டே ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 12—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 18,91,04,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு. கோரிய தொகை வழங்கப்பட்டது.

(ஆ) கோரிக்கை எண் 18—கால்நடை வளர்ப்பு.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல்—

"நிதிக் கோரிக்கை எண் 18—கால்நடை வளர்ப்பு* என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,66,37,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்"

எனக் கோருகிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, to discuss about the need to increase the number of poultry farms in Tamil Nadu, I move—

"That the allotment of Rs. 3,66,37,600 under Demand No. 18—Animal Husbandry be reduced by Rs. 100.".

*249-267ம் பக்கங்களில் கொள்கை விளக்கக் குறிப்பு இணைப்பாக அச்சடிக்கப்பட்டுள்ளது.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் நல்ல கால்நடை வளர்ப்புக்கு விவசாயத் தொழிலாளர்களுக்குக் கடன் வழங்குவது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 18—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,66,37,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

Dr. H. V. HANDE : Sir, to discuss the need to review the Pay commission award and provide the graduates of Veterinary Science with the same scale of pay as that of medical graduates, I move—

"That the allotment of Rs. 3,66,37,600 under Demand No. 18—Animal Husbandry be reduced by Rs. 100".

திரு. கே. என். குமாரசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, செயற்கை கரு மூலம் மாடுகளை கரு தரிக்க வைப்பதில் சரியான கவனம் செலுத்தப்படாததினால் கால்நடைகள் பாதிக்கப்படுவது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 18—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,66,37,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிதிக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் சபை முன் விவாதத்திற்கு வருகின்றன.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கால்நடை வளர்ப்புத் துறையினுடைய மானியத்தை விவாதிக்கக்கூடிய இந்த நேரம் காவல்துறை மானியத்தை ஒட்டி தொடர்ந்த காரணத்தினால் ஒருவேளை மாண்புமிகு உறுப்பினர்கள் கவனத்தை இழந்துவிடக்கூடிய நிலையை உருவாக்குமோ என்ற அச்சம் ஏற்பட்டது.

உள்ளபடியே கால்நடை வளர்ப்புத்துறை என்பது அரசாங்கத் துறையாக மட்டும் கருதப்படுவது சரியல்ல. இந்தத்துறை நாட்டு மக்களுடைய நல்வாழ்வுக்கு அடிப்படையான சமுதாய பொருளாதார உணவுப் பிரச்சினை சேர்ந்த மக்கள் நலத்துறையிலே ஒன்று என்று மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். மிக இன்றியமையாத இந்தத் துறை குறித்துப் பல ஆண்டுகளாக அரசாங்கம் பல்வேறு திட்டங்களை மேற்கொண்டிருக்கிறது என்று சொன்னாலும், இந்தத் திட்டத்தைப் பொது மக்கள் நல்ல வகையில் பயன்படுத்திக்கொள்ளத் தவறிய காரணத்தினால், நிர்வாகத்தில் ஏற்பட்ட சுணக்கம் காரணமாக சில அடிப்படையான ஆராய்ச்சிகள் ஏற்கெனவே நடக்காத காரணமாக 2 ஆண்டுகளுக்கு முன்னாலே இந்தத்துறை பற்றி சில மாற்றங்கள் செய்யப்





பட்டு, அடிப்படையில் தளர்ச்சி ஏற்பட்டு, இன்றைய தினம் மறுபடியும் இந்தத்துறை விரிவாக்கப்பட இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டம் இங்கே வழங்கப்படுகிறது.

இந்தத் துறையைப் பற்றிய கருத்துக்களை, அரசாங்கம் இன்றைய தினம் கால்நடை வளர்ச்சிக்காக இனத்தையும் தரத்தையும் உயர்த்துவதற்காக, இறைச்சியினின்று பொருளாதார வளத்தைப் பெருக்குவதற்காக, பால் உற்பத்திக்காகப் பயன்படுத்துகின்றது. இன்னும் சொல்லப்போனால், மிக மிகத் தேவையான உணவிலும், பல்வேறு வகையான சத்துள்ள உணவிலும் எல்லாம் மக்களுக்கு உதவி செய்வதற்கு இன்றைய பொருளாதார வளர்ச்சிக்குக் கூறுக இந்தத் திட்டம்-கால்நடை வளர்ப்புத் திட்டம்-அரசாங்கத்தினுடைய பல்வேறு துறைகளால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

கால்நடை வளர்ச்சித் துறைக்குச் சிறந்த ஆராய்ச்சிகள் பலவும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்தத் துறையிலே, நாட்டிலே வளர்கின்ற விலங்குகளுக்கு ஏற்படும் நோய்களைப் போக்குகின்ற வகையில் தடுப்பு ஊசிகள் போடப்பட்டு, பெருமளவுக்கு நோய்கள் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கின்றன. தனிச் சிறப்பு வகையான மருந்துகள் உற்பத்தி செய்யப்பட்டு, தமிழ்நாட்டிலுள்ள எல்லா விலங்குகளுக்கும் மருத்துவமனை மூலமாக கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், மற்ற மாநிலங்களுக்குக்கூட இந்த மருந்துகள் வழங்கப்படுகின்றன. கால்நடை வளத்தையும் நல்ல வளர்ச்சியையும் கருத்திற்கொண்டு நல்ல மருந்துகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

மேலும் கால்நடை பயிற்சி பெறுகிறவர்கள் நாட்டுப் புகழ் பெற்றவர்களாக விளங்குவதற்கு ஏற்ற வகையில் கால்நடை வளர்ச்சி அமைந்திருக்கிறது. மக்களுக்கு இதனுடைய இன்றியமையாமை விளங்க வேண்டும். இம்மாதிரி இதைப் பின்பற்ற மக்கள் முன்வர வேண்டும். அரசாங்கத் துறையில் நடத்தப்படும் காரியங்கள் முழு அளவுக்கு அரசாங்கமே செய்ய வேண்டும் என்று நான் விரும்பவில்லை. இந்த என் விருப்பத்தை முன்கூட்டியே தெரிவிக்கக் காரணம், இந்தத் துறை ஆக்கபூர்வமான முறையில், எதிர்காலத்தில் நல்ல ஏற்றமிட்ட வளர்ச்சியைப் பெறக்கூடிய வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை வழங்க வேண்டுமென்று கூறிக்கொண்டு, அங்கத்தினர்களின் கருத்துகளை ஏற்று ஆவன செய்யும் என்பதைக் கூறிக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* THIRU K. M. SUBRAMANIAM : Sir, unlike the previous Demand where almost all legislators congratulated the Government, I think in this Demand we have definitely to accuse the Government of having neglected one of the most important subjects that is Animal Husbandry.

Animal Husbandry is as much important as agriculture because unless animal husbandry is improved, vitaminised food for the country cannot be given. We find that for this Demand only 1% of the State revenue is allotted. Kerala is the least milk consuming State and Tamil Nadu comes second in the reverse order. Our consumption of milk is very much less than the different States in India. They have not done anything and they are apolegetic that they have neglected this. In this report they have not given the total number of cattle available in Tamil Nadu, what is the per capita consumption of milk in Tamil Nadu (I may stand corrected if I am wrong) and how far these animals contribute to the green manure for the improvement of agriculture in the State. These three things have been lacking in the report.

So far as the City of Madras is concerned, stray cattle are moving about freely in streets and nobody bothers to feed them. In villages, where animal keeping is a subsidiary industry for agriculturists, they may devote better attention, to these cattle. But it is not so in the City of Madras. Many attempts have been made to improve milk supply. Previously there was a proposal to shift the entire cattle outside the city. But that scheme miserably failed because of practical difficulties. What is the result ? We find cows and buffaloes roaming about freely. The Corporation had constructed some public cattle sheds. But their number is awfully inadequate. I request the Hon. Minister for Animal Husbandry, through you, Sir, to give greater attention to construction of cattle sheds, particularly in slum areas. Many of the slum dwellers are milk vendors. There is a proposal to construct tenements for slum dwellers and near these tenemens please construct some cattle sheds for these milk vendors. Most of the milkmen live in slums and that is why I say this.

We do not have good milking place. In front of hotels and restaurants, right in the platform, milking takes place in the evenings. This should be prevented. This is not hygienic.

In the report something is mentioned about fodder production. We have heard adulteration of ghee, milk etc. But what is now going on is adulteration of fodder. These poor animals cannot speak. Secondly, there is a new attempt to give concentrated food instead of regular fodder to these animals. Government should examine this concentrated food, find out whether they are suitable first.

*திரு. கோவை செழியன் : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் கால்நடை மானியத்தைப் பற்றிப் பேசுகிறபோது பால்வழங்கும் துறையைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்களே என்பதை நினைவில் கொண்டு வருகிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இல்லை.*



THIRU K. M. SUBRAMANIAM : I do not know. I refuse to be a disciple of somebody else in my speech. I want to be myself. If animals should grow they should be given good fodder. So far as my experience goes, there seems to be a dispute on the type of food that should be given to animals whatever is manufactured, it should be first sent to Government for chemical examination and only after issue of certificate the manufacture should be permitted.

**(Mr. Deputy Speaker in the Chair)**

I now come to sheep breeding. We are having a sheep farm near Ooty and we are rearing good variety of sheep. We get good wool from it. It should be developed further in that cool climate. We are importing lakhs of rupees worth of wool from Australia. By developing this sheep breeding station at Ooty and rearing good quality sheep, we can get more wool and save considerable foreign exchange. I am sure this Government will make it a more remunarative enterprise.

There are various schemes like Key Village Scheme, Goshalas etc. I am hoping that he energetic new Minister of Animal Husbandry, who is doing things in a spirit of service, will devote better attention to the important subject of Animal Husbandry and give it the second place, (and not 100th place) in the economy of the country.

Particularly in the matter of manure, Mr. Deputy Speaker, Sir, it is all right to have chemical manure. I am not an expert on agriculture. But I am told and as far as I have read, I think green manure is also equally important and the animals are very useful, if fed with this green manure also. With these remarks I request the Government to give greater attention to animal husbandry.

*திரு. ஏ. ஆர். சுப்பையா : துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின்பேரில் சில விஷயங்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.*

*இந்தக் கால்நடை வளர்ப்புத் துறை 1970 ஜனவரியிலே நிர்வாக அமைப்பு மாற்றியமைக்கப்பட்டு அதன்படி நடைமுறையிலே இருந்து கொண்டிருக்கிறது. ரீஆர்கனேசேஷன் புரப்போசல் வந்து இரண்டு ஆண்டுகள் ஆகியும் நாம் எதிர்பார்த்த முன்னேற்றம் இல்லை என்று நினைக்கிறேன். அதற்காக ஒரு எக்ஸ்பர்ட் கமிட்டி போட்டு அதன் மூலம் சீர்திருத்தப்பட்டிருக்கிறது சரிதானா என்பதைக் கவனிக்கலாம். அந்தக் கமிட்டியில் நான்-அபிஷியல் ஒருவரை மெம்பராகப் போடுவது நலம்.*

*மையக் கிராமத் திட்டம், இன்செமினேஷன் சென்டர்ஸ் தனியாக நடந்துகொண்டிருந்தன. பொதுவாக இப்பொழுது மாற்றப்பட்டவுடன் சரியாக இருக்கிறதா அது இருக்கிறதா என்ற ஐயப்*

பாடு இருக்கிறது. அதை மாற்றி அதிகமாகப் பணியாளர்கள் நியமிப்பதன் மூலமாக அதை விருவிருப்பு அடையச் செய்யமுடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கால்நடை வளர்ச்சி முப்முரம் திட்டம என்ற அடிப்படையிலே ஐ.சி.டி.பி. திட்டத்தின் கீழ் நாம் அதைக் கவனித்துக்கொண்டு வருகிறோம். இப்பொழுது அதிலே கிப்ட் ஆகக் கொடுக்கப்பட்ட மாடுகளை வைத்துத்தான்—தானமாகக் கொடுக்கப்பட்ட மாட்டைப் பல்லைப் பார்க்கவேண்டுமா என்ற பழமொழி இருப்பதைப்போல், —அப்படி வருகின்ற மாட்டை வைத்து அபிவிருத்தி செய்வது என்பது பொருத்தமாக இல்லை. ஏனென்றால் அவர்கள் சுமாராகக் கழிக்கப்பட்ட மாட்டைத்தான் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். அப்படியில்லாமல் ஜெர்ஸி போன்ற 500 லிட்டர் பால் கறக்கக்கூடிய பசுக்களையும் மற்ற காளைகளையும் வைத்து அபிவிருத்தி செய்தால்தான் சென்டர் கொடுக்கக்கூடிய உதவித் தொகையை வைத்துக்கொண்டு வளர்ச்சி அடைய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோழிப்பண்ணைகளைப் பொறுத்தவரையில் எல்லாம் மூடப்பட்டு விட்டன, அபிவிருத்தி அடையவில்லை என்ற காரணத்தாலே. அன்றைக்கிருந்த நிலைமை வாஸ்தவம்தான். 140 முட்டைகள் ஒரு கோழியின் உற்பத்தி இருந்துகொண்டிருந்தது. ஆனால் இன்றைக்கு 180 முதல் 200 முட்டைகள் வரை தரக்கூடிய கோழிகள் இருக்கின்றன. எனவே, மறுபடியும் அபிவிருத்தி செய்வதற்கு வழிவகை செய்யலாம் என்று நினைக்கிறேன்.

இன்றைக்கு மில்க் கமிஷனோடு கேட்டில் டெவலப்மெண்டைச் சேர்த்திருக்கிறார்கள். ஒரு நான்-டெக்னிகல் ஹெட்டிலே கேட்டில் டெவலப்மெண்டைச் சேர்த்திருக்கிறார்கள். மில்க் கமிஷன் ஒரு வியாபாரத்தில் உள்ளது. அதோடு கேட்டில் டெவலப்மெண்ட் இருப்பது பொருத்தமல்ல. எல்லாம் ஓவர் லாப் ஆகியிருக்கிறது. மில்க் கமிஷன், கேட்டில் டெவலப்மெண்ட் இரண்டையும் தனித்தனியாக வைக்கவேண்டும், அல்லது கேட்டில் டெவலப்மெண்டை கால்நடை வளர்ச்சியிலே சேர்த்துவிடவேண்டும், அப்படிச் செய்தால்தான் நல்லது. இப்பொழுது பண விரயம் அதிகமாகிறது. ஓவர் லேப்பிங்கும் அதிகமாகிறது. எனவே அவற்றைப் பிரிக்கவேண்டும். மில்க் கமிஷன் வேறு. கேட்டில் டெவலப்மெண்ட் ஒரு டெக்னிக்கல் ஹெட்டில் சேர்க்கப்பட வேண்டுமென்று நினைக்கிறேன்.

கால்நடை கல்வி ஆராய்ச்சிக்கூடம் என்ற ஒரு கூடம் ஓசூரிலே இருந்தது. இப்பொழுது ஓசூரிலே கால்நடைப் பண்ணைதான் இருந்து கொண்டிருக்கிறது. அது பழையபடியும் ஆராய்ச்சிப் பண்ணையாக இருந்தால்தான் அபிவிருத்தியடைய முடியும்.

அடுத்தபடியாக, ஸ்டூடன்ஸைப் பொறுத்தவரையில் 6 வருஷத்திற்கு மேலாக அவர்கள் படித்துவிட்டு அவர்கள் பெறுகிற சம்பளம் 400 ரூபாய்தான். ஆனால் அதே போன்று



எம்.பி.பி.எஸ். படித்துவிட்டவர்களுக்கு 525 ரூபாய் சம்பளம் கொடுக்கப்படுகிறது. இப்படி தாரதம்மியம் இருப்பதாலே ஸ்ட்ரைக் செய்கிறார்கள். எனவே அவர்களுக்கும் எம்.பி., பி.எஸ்., போல சம்பளம் வேண்டும்.

இன்றைக்கு டைரக்டர் ஆப் வெட்டர்னரி எஜுகேஷன் சம்பளம் 1400 ரூபாய். ஆனால் அதே நேரத்தில் டைரக்டர் ஆப் டெக்னிகல் எஜுகேஷன், டைரக்டர் ஆப் ஹையர் எஜுகேஷன், டைரக்டர் ஆப் செகன்டரி எஜுகேஷன் இவர்கள் எல்லாம் 1,600 ரூபாய் முதல் 2000 வரையில் பெறுகிறார்கள். இதை மாற்ற வேண்டும். டைரக்டர் ஆப் வெட்டர்னரி எஜுகேஷன், டைரக்டர் ஆப் டெக்னிகல் எஜுகேஷன் இவர்களுடைய சம்பளத்தின் தரம் ஒரே மாதிரியாக இருந்தால்தான் ஊக்கமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 5 பண்ணைகளுக்காக 2 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. அந்த ஒதுக்கீடு ஓசூர், செட்டிநாடு, புதுக்கோட்டை, திருநெல்வேலி போன்ற பகுதிகளுக்கு ஒதுக்கப்படுகின்ற பணம் போதாது, எனவே கூடுதலாக ஒதுக்கீடு வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த ஃபாடர் டெவலப்மெண்ட் ஸ்கீம் ஐ.சி.டி.பி. யிலே இருந்து கொண்டிருந்தது. இப்பொழுது அது விவசாய இலாகாவுக்கு மாற்றப்பட்டிருக்கிறது. அதனாலே எந்த விதமான அபிவிருத்தியும் இல்லை. எனவே அதையும் கால்நடை இலாகாவே கவனிக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா: மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இப்பொழுது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன்வருகிறேன்.

இன்றைய தினம் கால்நடையானது விவசாயிகளுக்குத் துணையாக இருக்கக்கூடிய ஒரு இலாகாவாகும். இம்மாதிரி ஆடு, மாடு, பன்றி, கோழி போன்ற மிருகங்களைப் பராமரிப்பதற்கு 3 கோடியே 66 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாடுகளை எடுத்துக் கொண்டால் பாரம் இழுப்பதற்கும், பசுக்கள் பால் கறந்து மக்களுக்கு உணவாகப் பயன்படுவதற்கும், ஆடுகளை வளர்த்து ஆடுகளின் இறைச்சி மக்களின் உணவாகப் பயன்படுவதற்கும், கோழிகளை எடுத்துக்கொண்டால் அது போடுகின்ற முட்டைகள் மக்களுக்கு உணவாகப் பயன்படுவதற்கும் இருக்கின்ற ஒரு இலாகாவாகும். இந்த இலாகாவை நாம் மிகமுக்கியமான இலாகாவாகப் பார்க்க வேண்டும். இன்றைய தினம் மெள்ள மெள்ள அந்த இலாகாவுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டு வருகிறது. ஒரு சமயத்திலே கோழிப் பண்ணைகளிலே கோழிகள் சரியாகப் பராமரிக்கப்

படாமல் இறந்துபோனதெல்லாம் நமக்குத் தெரிந்த விஷயமே. கோழிகளை சாதாரண மக்கள் எல்லாம் வளர்த்து லாபம் அடையக் கூடிய நிலைமை இருக்கிறது. கிராமப்புறங்களிலே உள்ள ஏழைகளுக்கு அரசாங்கம் கோழிகளை வழங்கி கூலி வேலை செய்கின்றவர்கள் அவற்றை வளர்த்து முட்டை எடுத்து மக்களுக்குப் பயன்படுகின்ற முறையிலே செயல்படுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கால்நடையிலே எப்பளஞ்சேரி பண்ணை என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. தஞ்சையிலே பாரம் இழுப்பதற்கும், உழுவதற்கும் பயன்படுகின்ற ஒரு உயர்ந்த ஜாதியைச் சேர்ந்த நல்ல இனமாகும் அது. அந்த இனத்தை அபிவிருத்தி செய்வதற்கு அந்த இனத்தை வளர்த்தால்தான் தஞ்சை மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு பயன்படும். அப்படிப்பட்ட இனப் பசுக்களை கிராமங்களிலே அதிகமாக வழங்கவேண்டும்.

நகரங்களிலே உள்ளவர்கள் உயரி வருவாய் உள்ளவர்கள் மாடுகளை வாங்கி பயன்படுத்துகிறார்கள். கிராமங்களில் உள்ளவர்கள் அப்படிப்பட்டவற்றைப் பெற்றால் அவற்றிற்குப் பாதுகாப்புக் கொடுக்கவும் அவர்களுக்கு அவை துணையாகவும் இருக்கக்கூடிய நிலைமையிலே பயன்படும். அந்த முறையிலே கிராமப்புறங்களிலே அப்படிப்பட்ட இனங்களைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயத் தொழிலாளர்களுக்கு அது மிக மிக உதவியாக இருக்கும். விவசாயத் தொழிலிலே உள்ளவர்கள் வருவாய் போதுமான அளவுக்கு இல்லாமல் கஷ்டப்படுகின்றவர்கள் இவர்களுக்கு எல்லாம் அப்படிச் செய்தால் அது பெருந்துணையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கால்நடைத் துறையிலே ஆயிரக்கணக்கானவர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நீண்ட நாளையக் கோரிக்கைகள் எல்லாம் புறக்கணிக்கப்பட்டுக் கொண்டு வருகின்றன. இரண்டாவது சம்பளக் கமிஷன் சிபாரிசிலே அவர்களுடைய கோரிக்கை விடப்பட்டிருக்கிறது, அதை அவர்கள் மிகப் பெரிய குறைபாடாகக் கருதுகிறார்கள். அதை வைத்திய இயக்குநர் அவர்கள் சம்பந்தப்பட்ட செயலாளரை அணுகிப் பேசும்பொழுது சம்பளக் கமிஷனின் சிபாரிசைப் பரிசீலிப்பதாக வாக்களித்திருக்கிறார்கள். அது கூட முடியாமல் இருந்து கொண்டிருக்கிறது. கால்நடை உதவியாளர்களுக்கு லீவு என்பது கிடையாது. மற்ற அரசு இலாகாவில் பணியாற்றுகின்றவர்களுக்கு லீவ் கொடுக்கப்படுகிறது, ஆனால் இவர்களுக்கு லீவ் இல்லாமல் இருக்கிறது. ஆகவே 8 ஆண்டுகள் பணியாற்றினால் அவர்களுக்கெல்லாம் பதவி உயர்வு கொடுக்கலாம் என்று அரசு ஆணையிருந்தும் பதவி உயர்வு கொடுக்கப்படாமல் இருக்கிறது. இரண்டாம் நிலையில் இருப்பவர்களுக்கு முதல் நிலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.



டாக்டர்களை எடுத்துக் கொண்டால் 5½ ஆண்டுகள் பயிற்சி பெற்று மீண்டும் ஒரு வருடம் பண்ணைப் பயிற்சி பெறும் நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் குறைவு. நம்முடைய இராஜ்யத்திலேதான் மிக மிகக் குறைவான சம்பளம். சம்பளக் கமிஷன் 400 ரூபாயில் ஆரம்பித்து 650 ரூபாய் வரை கொடுக்க வேண்டுமென்று சிபாரிசு செய்திருக்கிறது. அதைப்போலவேதான் டாக்டர்களுக்குப் படிக்கிறார்கள், அவர்களுக்கு 525 ரூபாயில் ஆரம்பித்து 900 ரூபாய் வரை போயிருக்கிறது. டாக்டர்கள், எம்.பி.பி.எஸ் க்குப் படித்தவர்கள் தனியாகத் தொழில் செய்து அவர்களுக்கு வருவாயைப் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் இவர்கள் வேறு தனித் தொழில் நடத்த முடியாமல் இருக்கிறார்கள் என்பதையும் கவனிக்க வேண்டும்.

அதைப்போலவே கால்நடை இன்ஸ்பெக்டர்கள் 1-வது கிரேட் எஸ்.எஸ்.எல்.சி. படித்து, இரண்டு வருஷங்கள் பயிற்சி பெறுகிறார்கள். 425 ரூபாய் சம்பளத்தில் ஆரம்பித்து 700 ரூபாய் வரையிலும் கொடுக்கப்படுகிறது. இவ்வாறு பார்த்தால் டாக்டர்களின் குறைபாடுகள் நிறைய இருக்கின்றன நம்முடைய நாட்டிலேதான் 400 ரூபாயில் ஆரம்பித்து 650 ரூபாய் வரை கொடுக்கிறார்கள். ஆனால் பஞ்சாப் மாகாணத்திலே 550 ரூபாயில் ஆரம்பித்து 700 ரூபாய் வரையிலேயும், ஒரிசா மாகாணத்திலே 250 ரூபாயில் ஆரம்பித்து 900 ரூபாய் வரையிலேயும், அசாம் மாகாணத்திலே 300 ரூபாயில் ஆரம்பித்து 800 ரூபாய் வரையிலேயும் கொடுக்கிறார்கள். தமிழ் நாட்டில்தான் மிக மிகக் குறைவாக இருக்கிறது. எனவே அவர்களுடைய குறையைப் பூர்த்தி செய்யும் வகையில் அரசாங்கம் பரிசீலனை செய்து அந்தத் தேவைகளைப் பூர்த்திச் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக, கால்நடை இலாக்காவானது விவசாய இலாக்காவோடு இணைந்திருப்பது பொருத்தமாக இருக்குமென்று கூறிக் கொண்டு, ஆகவே விவசாய இலாக்காவிற்குப் பொறுப்பு வகிக்கும் அமைச்சரோடு இந்த இலாக்காவும் இணையுமானால் அதை நல்ல முறையில் செயல்படுத்த உதவிகரமாக இருக்கும் என்ற என்னுடைய ஆலோசனையைக் கூறி முடித்துக் கொள்கிறேன்.

**திரு. வி. கே. இராஜூப்பிள்ளை :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் மானியக் கோரிக்கையினை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்.

நமது தமிழக அரசு கால்நடை வளர்ச்சித்துறையின் மீது எவ்வளவு கவனம் செலுத்துகிறது, அதை எவ்வளவு நல்ல முறையில் நடத்த வேண்டுமென்று நினைக்கிறது என்பது நமக்குத் தந்திருக்கின்ற கொள்கை விளக்கத்தில் தெளிவாகயிருக்கிறது. ஆயினும் கூட இன்னும் அதனை நல்ல முறையில் சீர்திருத்தி

அமைக்க வேண்டுமென்று அதற்கான வேண்டிய ஆலோசனைகளை கூறுமாறும் மாண்புமிகு அமைச்சரவர்கள் உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். மற்றவைகளையெல்லாம் விட்டு விட்டு எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் திரு. ஏ. ஆர். சுப்பையா அவர்கள் கூறியதைப் போல் அந்தக் கால்நடை இலாக்காவிலே வேலை பார்க்கின்ற மருத்துவர்களுக்கு அவர்களுடைய சம்பளம் எப்படியிருக்க வேண்டும், ஏன் இருக்க வேண்டுமென்பதை மாத்திரம் கூறி என்னுடைய உரையை முடிக்கலாம் என்று கருதுகிறேன்.

இன்றைய தினம் பி.வி.எஸ்ஸி. டாக்டர்களை எடுத்துக் கொண்டாலும் சரி, எம்.பி.பி.எஸ். டாக்டர்களை எடுத்துக் கொண்டாலும் சரி, இரண்டு பேரும் ஐந்தாண்டுகள் படிக்கிறார்கள். அதுமட்டுமல்ல, எம்.பி.பி.எஸ். படித்தவர்களை டாக்டர்கள் என்றும் பி.வி.எஸ்.ஸி. படித்தவர்கள் மிருக டாக்டர்கள் என்றும் அழைக்கிறோம். இதிலிருந்தே அவர்களுடைய முக்கியத்துவத்தை நாம் அறியலாம். மனித டாக்டர்கள் என்றால் வரும் நோய்களுக்கு மருந்து கொடுக்கிறார்கள், உயிருக்கும் பாதுகாப்பு கொடுக்கிறார்கள். ஆனால் அதே சமயத்தில் மிருக வைத்தியர்கள் மிருகங்களுக்கு வரும் நோய்களை மட்டும் அல்ல, அவைகளினுடைய உயிர்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பதோடு மட்டுமல்ல, உயிரை எடுப்பதற்கும் அவர்கள் சான்றிதழ் கொடுக்கிறார்கள், 'இட் இஸ் ஃபிட் ஃபார் கன்ஸம்ப்ஷன்' என்று. இத்தனையும் செய்பவர்கள். இவர்கள் மிருகங்களைக் கொலை செய்வதற்கும் உதவியாக இருப்பவர்கள். ஒருவேளை நரகம் என்று ஒன்றிருந்தால் அங்கே என்ன பாடுபடுவார்களோ தெரியவில்லை. ஆகவே இந்த உலகத்திலேயாவது மனித டாக்டர்களுக்குக் கொடுப்பதை விட நிச்சயமாக அவர்களுக்குக் கூட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் மிருகங்களுக்கு அவர்கள் வைத்தியம் செய்யும்பொழுது பலர் பல தீங்குகளுக்கு ஆளாகின்றனர்.

உதாரணமாக குட்டி தனராஜ் என்னும் மிருக வைத்தியர் ஒருவர் தொற்று நோய் பரவி இறந்துவிட்டார் இரண்டு வருஷங்களுக்குமுன். அதைப்போலவே இன்னொரு டாக்டர் பாலகிருஷ்ணன் என்பவர் மிருகத்திற்கு வைத்தியம் செய்யும்பொழுது மிருகம் அவரை உதைத்து அவருடைய காலையே எடுக்கும்படி ஆகிவிட்டது. இப்பொழுது அவர் மதுரையிலே இருக்கிறார் என்று கருதுகிறேன். ரீஜினல் டைரக்டர் டாக்டர் வில்சன் என்பவர் 1943-லே குதிரைக்கு ட்ரீட்மென்ட் கொடுக்கும் போது அது அவரை உதைத்து அவருடைய காலுக்கு ஆபத்து வந்தது. பைத்தியக்கார நாய்களுக்கு டாக்டர்கள் தெரியாமல் சிகிச்சை செய்யும்போது உரசலோ, காயமோ ஏற்பட்டால் உடனே இறக்கக்கூடிய வாய்ப்பிருக்கிறது. இப்படி மிருகங்களோடு போராடுகின்ற இந்த டாக்டர்களுக்கு, மனித டாக்டர்களுக்கு





சாதாரணமாக எம்.பி.பி.எஸ். டாக்டர்களுக்குச் சமமாக அல்ல, கூடுதலாகக் கொடுக்கவேண்டும். அதுமட்டுமல்லாமல், அவர்கள் மிருகங்களுக்கு வைத்தியம் செய்யும்பொழுது தீங்கு ஏற்பட்டால் நஷ்ட ஈடோ அல்லது அதற்கு நியாயமான காம்பன்சேஷனோ கொடுக்க வேண்டும்.

கடைசியாக, இப்பொழுது இந்தக் கொள்கை விளக்க நூலிலேயும் காட்டப்பட்டிருக்கிறது, 17-ஆம் பக்கத்தில், விந்து சேமிப்பு நிலையத்தில் விந்துக்களை உறைய வைப்பதற்கான ஆய்வுக் கூடம் ஆகியவை பயிற்சி, ஆராய்ச்சி வசதிகளுக்காக அடுத்த ஆண்டில் ஏற்படுத்தப்படும் என்று காட்டப்பட்டிருக்கிறது. தற்சமயம் கோவையில் மூணார் பக்கத்தில் மாட்டுப்பட்டி பண்ணையில் இப்படிப்பட்ட விந்துக்களை உறையவைத்து திருவனந்தபுரம் பண்ணை நிலையத்தில் வைத்து உபயோகிக்கிறார்கள். நாமும் நமது தமிழ் நாட்டில் இப்படி உறைய வைத்து அந்த விந்துக்களைச் சேமித்து வைத்தால் இப்பொழுது நாம் பொலிகாளைகளுக்குச் செய்யும் செலவுகளைக் குறைத்து விடலாம். உதாரணமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் 18 பொலிகாளைகள் இருக்கின்றன. அதற்கு ஒரு நாளைக்கு 3 ரூபாய் விதம் நாம் தீவனத்திற்காகச் செலவழிக்கிறோம். ஆகவே இந்த நிலைமையில் விந்துகளைச் சேமித்து வைத்திருந்தால் பொலிகாளைகளைப் பராமரிக்கின்ற செலவும், மேலும் பராமரிக்க வேண்டிய செலவும் குறையும் என்பதால் உறைய வைக்கப்பட்ட விந்து வசதிகளைத் தமிழ் நாட்டில் செய்ய வேண்டுமென்று கேட்டுகொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. கே. என். குமாரசாமி: உதவி சபாநாயகரவர்களே, இந்தக் கால்நடை வளர்ப்புத் திட்டத்தின் அடிப்படையில் சில கருத்துக்களை என்னுடைய சார்பாக, என்னுடைய கட்சியின் சார்பாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கால்நடை இலாகாவானது விவசாயத்திற்கும், மக்களுக்கும் ஓர் அத்தியாவசியமான இலாக்கா என்பதை யாரும் மறந்துவிட முடியாது. விவசாயிகளுக்குக் கால்நடைச் செல்வம் மிக மிகப் பயன்படக்கூடிய ஒரு செல்வம், அதைப் பேணிக்கொடுப்பதிலேயும், ஏற்படுகின்ற ஆபத்துக்களைத் தடுப்பதிலேயும், அரசாங்கம் வைத்திய இலாக்காவை ஏற்படுத்தி அதன்மூலம் தடுப்பு ஊசிகள் மூலம் கால்நடைகளை வளர்ப்பதற்கு வாய்ப்பினை உருவாக்கிக் கொடுப்பதிலும் எந்தவிதமான சந்தேகமும் இல்லை.

ஆனால் கால்நடையைப் பொறுத்த வரையிலே தமிழ் நாட்டிலே மிகப் பெரும்பாலானவர்கள் வசதியின்மையின் காரணமாக கால்நடை வளர்ப்பதிலே மக்கள் அக்கறை செலுத்துவது மிக மிகக் குறைவாக இப்பொழுது போய்க்கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம், கால்நடைகளுக்கான தீவனத் தட்டுப்பாடு அதிகமாக ஏற்படுகின்ற காரணத்தினால் அந்த வசதிகள் இன்றைய தினம் கிராமங்களில் அற்றுப்போனதால் கால்நடைகள் மிகவும் குறைவாகப் போய்விட்டது. அதற்கு ஏதாவது வசதியை

[திரு. கே. என். குமாரசாமி] [1971 ஜூலை 19

நம்மால் செய்ய முடியுமா என்று பார்த்தால் கால்நடைகளுக்கான தீவனங்கள் இருப்பதற்கு எங்கே பார்த்தாலும் கொஞ்சம் மந்தைவெளி என்று கிராமப்பகுதிகளிலே இருந்தாலும் அதையும் விவசாயத்திற்குப் பயன்படுத்துகிறார்கள். தவிரவும் மேய்ப்பு நிலங்கள் என்று புறம்போக்காக கிராமங்களைச் சுற்றி முனைப்பு இருக்கும். இப்பொழுது அப்படிக் கிடையாது. அப்படிப்பட்ட வாய்ப்புகளெல்லாம் போய்விட்டதால் சாதாரண ஏழை எளிய மக்கள் கூட கால்நடைகளை வளர்த்துக்கொள்ள வசதியில்லாமல் கால்நடைகளை வளர்க்க முடியாமல் போகிற நிலைமைகளைப் பார்க்கிறோம். அந்த நிலைமைகளைப் போக்க, கிராமங்களிலே கால்நடை மேய்ச்சலுக்காக என்று நிலங்களில் ஒரு பகுதியை ஒதுக்கி அத்தகைய வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதன் மூலம் ஏழை எளியவர்கள் கால்நடைகளை வளர்க்க ஏற்பாடு செய்ய முடியும். அதைச் செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே சமயத்தில், கால்நடைகள் ஒரு வருஷம், ஒன்றரை வருஷம் ஆகியிருந்தாலும் கூட தமிழ் நாட்டிலேயிருந்து கேரளாவிற்கு வியாபாரிகள் மூலம் விற்று அங்கே கொண்டு போய் அடித்து, கறிக்காகப் பயன்படுத்துகிறார்கள். ஒரு ஆண்டு, ஒன்றரை ஆண்டுகளாக இருப்பவைகளையெல்லாம் கறிக்காக உபயோகப்படுத்தினால் கால்நடைகளை நம்முடைய தேசத்திலே வளர்க்க முடியுமா என்பதைப் பார்க்க வேண்டும். குறிப்பிட்ட வயதுக்கு மேல் ஆனாலும் பரவாயில்லை. இந்த நிலையில் நாம் எவ்வளவுதான் பேணிப் பாதுகாத்திருந்தாலும் பால் மாடுகள் கிடைப்பது இன்று அரிதுப் போய்க்கொண்டிருக்கிறது. அதற்கு ஒரு வயது வரம்பை நிர்ணயித்து சட்டமே கொண்டு வருவது கூட நல்லது. அந்த வகையில் கேரளாவுக்கு ஏராளமான கன்றுகள் போவதைத் தடுக்க அரசு முயற்சி எடுத்து தமிழ் நாட்டில் மாடுகளை அபிவிருத்தி செய்ய வழிவகை காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாட்டுத் தீவனங்களில் பருத்திக்கொட்டை அத்தியாவசியமானது. அதன் விலை இன்று ஏராளமாக ஏறியிருக்கிறது. ஒரு மணு 15 ரூபாய்க்கு மேல் விற்கிறது. அதைக் குறைவான விலைக்குக் கிடைக்கும் வகையில் ஒரு ஏற்பாட்டைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோழிப் பண்ணைகள் எல்லாம் சரியானபடி நடக்கவில்லை என்ற காரணத்தால் மூடப்பட்டு விட்டன. தனி நபர்கள் வைத்திருக்கும் கோழிப் பண்ணைகள் லாபகரமாகத்தான் நடக்கின்றன. ஒரு கோழி ஆண்டு ஒன்றுக்கு 230 முட்டைகள் இடும் அளவுக்கு ஸ்திரமான நிலைமையில் வைத்திருக்கிறார்கள். சர்க்கார் பண்ணைகளில் அப்படிப்பட்ட கோழிகளை வாங்கி வைத்து மேம்படுத்தி இருக்க முடியும். அதைப் பற்றியெல்லாம் கவனிக்காமல் கோழிப் பண்ணைகளை மூடிவிட்டதால் அந்த கட்டடங்கள் எல்லாம்



1971 ஜூலை 19] [திரு. கே. என். குமாரசாமி]

பழுதடையும் அளவுக்கு நிலைமை இருக்கிறது. இதைப் பற்றியெல்லாம் ஆராய்ந்து மறுபடியும் கோழிப் பண்ணைகளைத் திறக்க முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவு முறையில் உள்ள சங்கங்களுக்குப் போதிய வசதிகள் செய்து கொடுத்து பால் உற்பத்தியை அதிகப்படுத்த வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும். மேலும் கூட்டுறவு முறையில் மேய்ச்சல் நிலங்களை அரசாங்கமே ஏற்படுத்தி அதிலே மேய்க்கிறவர்களுக்கு மாதம் ஐந்து ரூபாய் பத்து ரூபாய் என்று வாடகை வாங்கியாவது ஏற்பாடு செய்து கொடுக்கவேண்டும். இந்தச் சூழ்நிலைகளை எல்லாம் உருவாக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

* திரு. என். கணபதி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால்நடை வளர்ப்புத் துறை மானியத்தில் என்னுடைய ஆதரவைத் தெரிவித்து ஒரு சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

பொதுவாக கால்நடைத் துறை அபிவிருத்தி பற்றி நினைக்கின்ற நேரத்தில், அதுவும் விவசாயத் துறையும் ஒன்றாகச் சேர்ந்து இயங்குமானால் நம்முடைய நாட்டில் உணவு உற்பத்தியிலும், மற்றும் பல்வேறு துறை வளர்ச்சியிலும் நல்ல ஒரு வழி வகை காண முடியும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். விவசாயம் ஒரு இடத்திலும், கால்நடை அபிவிருத்தித் துறை இன்னொரு இடத்திலும் இருந்து கொண்டிருக்கும் நேரத்தில் இரண்டும் ஒன்றுபட்டு முன்னேறுவதன் காரணமாக மக்கள் தொகைப் பெருக்கத்தால் நாட்டில் எதிர் காலத்தில் ஏற்படும் பயங்கரச் சூழ்நிலைகளைச் சமாளிக்க உணவுத் துறையை வளர்ப்பது போலவே, கால்நடை அபிவிருத்தித் துறையையும் வளர்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

கால்நடைக் கல்வியைப் பற்றிச் சொல்லுகின்ற நேரத்தில், சாதாரணமாக மனிதர்களுக்கு வைத்தியம் பார்ப்பது எளிதான காரியம், அவர்களுக்கு எங்கே நோய் இருக்கிறது, எங்கே வலி இருக்கிறது, அதனால் என்ன விளைவுகள் இருக்கின்றன என்பதை டாக்டர்களிடம் சொல்லிவிடுகிறார்கள். எனவே டாக்டர்கள் எளிதாக நோயைக் கண்டுபிடித்து வைத்தியம் செய்யும் நிலையில் இருக்கிறார்கள். கால்நடை வைத்தியத்தைப் பார்க்கின்ற நேரத்தில், வாயில்லாப் பிராணிகள் என்னென்ன நோயினால் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதை வெளியே சொல்ல முடியாத நிலைமையில் துன்பத்திற்கும், கொடுமைக்கும் ஆளாகின்ற நிலையில், அந்தத் துன்பத்தையும் கொடுமையையும் துடைக்கும் வகையில் கால்நடைக் கல்வி பயின்ற மருத்துவர்கள் அக்கறை கொண்டு அந்த நோயைப் போக்குவதிலே ஈடுபடுகிறார்கள். மனிதர்களுக்கு வைத்தியம் செய்கின்றவர்களை விட. கால்நடைகளுக்கு வைத்தியம் செய்கின்றவர்களை உன்னத நிலையில் அரசாங்கம் வைத்திருக்கும் முறையில் அணுகவேண்டும்.

[திரு. கே. என். குமாரசாமி] [1971 ஜூலை 19

கால்நடை வைத்தியத்திற்கு ஆறு ஆண்டுக் காலம் பயிற்சி பெற வேண்டியிருக்கிறது. மனித வைத்தியத்தைப் படிக்கின்றவர்கள் மனித உடற்கூறு சம்பந்தப்பட்டமட்டில் படித்தால் போதும். கால்நடைக் கல்வி படிக்கின்றவர்கள் பல்வேறுபட்ட பிராணிகளின் உடற்கூறுகளை ஆராய்ந்து படிக்க வேண்டும். அப்படிப்பட்ட பயிற்சி மேலும். மேலும் முன்னேறுவதற்கு நம்முடைய அரசு பலப்பல திட்டங்களை அந்தக் குறிப்பில் சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திட்டங்களுக்கு என்னுடைய ஆதரவைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆறு ஆண்டு காலம் பயிற்சி பெற்று வருகின்ற கால்நடை வைத்தியர்களுக்குப் போதிய ஊதியம் தரப்படவில்லை என்பது பெரிய மனக்குறையாக இருக்கிறது. மனிதர்களுக்கு வைத்தியம் செய்யும் டாக்டர்களுக்கு உயர்ந்த சம்பளம், கால்நடை டாக்டர்களுக்குக் குறைந்த சம்பளம் என்ற நிலைமை இல்லாமல் அந்த இலாகாவில் பணியாற்றுகின்ற டாக்டர்கள் மற்ற ஊழியர்களுடைய மனக்குறையைத் தீர்க்கும் வகையில் அரசு நல்ல முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடைக் கல்விக்கு அதிக வசதி செய்து தர வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். ஏனெனில் நம்முடைய சென்னை நகரில் இருக்கும் கால்நடை வைத்தியக் கல்லூரி, ஆசியாவிலேயே குறிப்பிடத்தக்க கல்லூரியாக இருக்கிறது. அதில் மேலும் மேலும் பல வசதிகளைப் பெருக்கி பல்வேறு துறைகளைப் பெருக்கி அங்கிருக்கும் மாணவர்களுக்கு விடுதி வசதியைப் பெருக்கி அந்தக் கல்லூரி மேலும் உன்னதமான நிலையைப் பெறும் வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த இலாகாவிலே பொறுப்பேற்று இருக்கும் டைரக்டர் பதவியை, சாதாரண உடற்கூறு டைரக்டர் பதவிக்கு ஒத்ததாக ஆக்கவேண்டும். அந்தஸ்தை உயர்த்த வேண்டும். சம்பளத்தை உயர்த்த வேண்டும். டாக்டர்கள் சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

DR. H. V. HANDE : Hon. Mr. Deputy Speaker, Sir, in support of the cut motions given on behalf of our party I wish to state the following :

Firstly, with regard to the veterinary college students I have given a number of cut motions on this Demand, one of which I have moved is, to discuss the need to review the Pay Commission award and provide the graduates of Veterinary Science with the same scale of pay as that of medical graduates.

I have also brought in another cut motion, namely, to discuss the need to examine sympathetically the demands placed by the Veterinary College students during their strike in the month of February 1971.



1971 ஜூலை 19] [Thiru H. V. Hande]

Then again another cut motion is to discuss the need to provide the graduates of Veterinary Science with adequate employment opportunities.

Then again I have given another cut motion to discuss the need to give more diversified employment to Veterinary graduates. These are some of the more important things which I have tried to bring to the attention of the Government.

Some time ago there was a strike also in the Veterinary college. Then the Legislature was not functioning. So, I had also sent an official letter as a sort of ex-M.L.A. to the Additional Finance Secretary enclosing a copy of the resolutions passed at the General Body Meeting of the Students of the Madras Veterinary College held on the 18th expressing their grave concern and thorough disappointment at the pay fixation based on the recommendations of the Second Pay Commission They have listed out the special features of the profession which unfortunately have not been taken into consideration at the time of the minimum and maximum increase made in the pay scale. Further, they had resolved to launch on an indefinite strike to focus the attention of the Government to their grievances. They could not find any other alternative in the absence of the Legislature functioning. I have also mentioned that I should be thankful if the just cause is brought to the kind attention of the concerned and the posisble unhappy events are averted.

Later on, the Hon. Chief Minister during his reply has given an assurance on the floor of the House that whatever demands have been left out by the Pay Commission would be properly looked into by a Special Officer appointed to go into the grievances of these persons who feel that justice has been denied. Several points have also been properly highlighted by my distinguished colleague belonging to the Communist Party with regard to the demands of the students. I am very grateful to him also because this particular college happens to be within the precincts of my constituency. So, I wanted to bring a number of things, to the notice of the Government.

The one point that I would like to bring to the attention of the Government is that the students who are to function as doctors in rural areas are denied this private practice but they also have had training as the medical graduates did.

Then the Livestock Inspectors are also getting a little more pay than the corresponding veterinary doctors. I request the Government to examine all the aspects of the matter.. For paucity of time, I shall briefly explain certain points

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு இந்த விவாதத்திற்கான நேரத்தை நீட்டித்துக் கொள்கிறேன்.

Dr. H. V. HANDE: Then I come to the most important point. We have a slaughter house in the City. Twenty-two years ago when I was a student I visited it and at that time the students were allowed to go and study it. I would be very happy if the Hon. Minister in charge of Animal Husbandry visits it. Recently I just peeped into the slaughter house and things are in a very bad shape there. Basically there is no proper water supply, no proper sanitation, and no proper outlet for water. Water gets stuck up. The Hon. Minister should see what exactly is happening there. The meat that the people get there is unhygienic because the meat that is soaked in that water is sold. It is a serious matter and I request the Government to appoint a one-man commission or some high-ranking officer to investigate the unhygienic conditions prevailing in the slaughter house.

Then, Sir, with regard to certain things no mention has been made in this year's budget. For instance, with regard to income and expenditure mention has been made in the last year's budget but in this year's budget the income and expenditure has not been properly analysed. I would have been happier if the Department had addressed themselves to this task.

Then with regard to subsidy for cattle-breeding, it has been stopped from this year. This should be continued. Unless subsidy is given it is very difficult for the cattle breeders to breed good cattle. In this connection, I wish to point out that the cattle farms are working at a loss for the past several years. I want to know what steps the Government are going to take to improve the cattle farms and place them on a proper footing.

Then mention has not been made in this year's budget with regard to the purchase of hatching machines for which an allotment of the 50,000 was made last year. I want to know whether they have been purchased and they have been made use of.

Then the Central Government wanted to start a Sheep Farm at Kodaikanal. Is it due to lack of co-operation of this Government, that it has not been started? Who is at fault and responsibility may be fixed and proper measures may be taken to put this Farm into operation.

Then I come to certain problems relating to the Hosur taluk. An intensive Cattle Development Project may be sanctioned to the Dharmapuri district where there is a great potential to breed good animals like Jersey cattle to tone up the milk distribution. As the Dharmapuri district especially Hosur taluk has good grazing lands, I am sure the Government will give serious attention to this matter.

Now there is no scheme to encourage poultry-farming on a large scale by the private breeders. I request the Government to see that the poultry farms by private agencies are properly





encouraged. In this connection, I wish to point out that the Estimates Committee also made the observation that a number of poultry farms are running at a loss. I request the Government to look into this aspect of the matter also.

Then I have to point out that after the reorganisation of the Animal Husbandry Department, the efficiency of the Department has to a certain extent decayed. I, therefore, request the Hon. Minister to appoint an one or two-man commission to enquire into the matter. I would also like to point out that performance budget has not been given for this year.

Finally I come to the Sheep Farm at Ootacamund. Large stocks of wool are lying idle. I understand that there is some bottleneck with regard to the tender system and I request the Hon. Minister to have this matter investigated so that unnecessary loss to the Farm could be avoided.

Thank you, Sir.

*திருமதி த. ந. அனந்தநாயகி: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இதில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

முதன்முதலாக இந்த மானியத்தை விவசாயத்தோடு சேர்க்க வேண்டுமென்று சொன்னது மிகவும் வரவேற்கத்தக்கது. இவை இரண்டும் இணைந்த பொருள்கள்; 'அலைட் சப்ஜெக்ட்ஸ்' என்பார்களே, அதுபோல்தான் இவை இரண்டும். இவை இரண்டும் இணைந்திருந்தால்தான் 'கோவார்டினேஷன்' இருக்கும். கோழி இறைச்சி, ஆட்டிறைச்சி இவைகளின் ருசி தெரியாதவர் இதற்கு அமைச்சராக இருப்பது வரவேற்கத்தக்கதல்ல. ஏனெனில் இந்த அறிக்கையைப் பார்க்கும்போது இறைச்சிக்காக விற்கப்படுகிற ஆடுகள், கோழிகள் இவற்றின் எண்ணிக்கை மிகவும் கணிசமான அளவிற்குக் குறைந்திருக்கிறது. அதற்குக் காரணம் என்னவென்று புரியவில்லை.

இந்த இலாகாவில் ரீ ஆர்கனைசேஷனுக்கு அப்புறமே சற்று விறுவிறுப்புக் குறைந்துதான் இருக்கிறது. 1968-69-ல் விற்பனைக்கு அனுப்பிய ஆடுகளின் எண்ணிக்கையையும் 1970–71-ல் அனுப்பியதையும் பார்த்தாலேயே அது தெரிய வரும். இறைச்சிக்காக வெட்டப்பட விற்பனைக்கு அனுப்பிய ஆடுகளின் எண்ணிக்கை 1968–69-ல் 2,122. 1970–71-ல் 618. நம் உணவுப் பிரச்சினையைத் தீர்க்க இறைச்சி சாப்பிடக் கூடியவர்களுக்கு அதிகப்படியான இறைச்சியை அளித்தால்தான் ஓரளவுக்கு நம் உணவுப் பிரச்சினையைச் சமாளிக்க முடியும். ஆனால் இந்த எண்ணிக்கை குறைந்து இருப்பதைக் காணும்போது இந்தத் துறை முன்னேறிக் கொண்டிருக்கிறதா அல்லது பின்னுக்குச் சென்று கொண்டிருக்கிறதா என்பது சந்தேகமாக இருக்கிறது. ஒன்பதாவது பக்கத்தில்.

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1971 ஜூலை 19

இறைச்சிக்காக விற்பனை செய்யப்பட்ட கோழிக் குஞ்சுகளின் எண்ணிக்கை 1968–69-ல் 70,165-ல் இருந்து 1970–71-ல் 59,405 என்ற அளவிற்குக் குறைந்திருக்கிறது. குஞ்சுகள் பொறிக்கும் நிலையங்களை எடுத்துக் கொண்டால் இறைச்சிக்காக விற்பனை செய்யப்பட்ட கோழிக் குஞ்சுகளின் எண்ணிக்கை 1968-69-ல் 25,800 ஆக இருந்தது. 1970-71-ல் 1,472 ஆகக் குறைந்திருக்கிறது என்பதைப் பார்க்கும்போது இத் துறை இவற்றில் அதிகக் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று கோழி வளர்ப்புத் திட்டங்கள் பலவற்றை மூடியிருக்கிறோம். அந்தத் திட்டங்களைப் பஞ்சாயத்து யூனியன் பொறுப்பில் விட்டிருக்கிறோம். அப்படிப் பஞ்சாயத்து யூனியன் பொறுப்பில் அவை விடப்பட்டது தவறு, அவற்றை நேரடியாக அனிமல் ஹஸ்பண்ட்ரி டிபார்ட்மெண்டின் பொறுப்பில் விட்டிருந்தால் ஒரு வேளை இந்தக் கோழி வளர்ப்புத் திட்டங்கள் எல்லாம் மூடப்படாமல் இருந்திருக்கலாம் என்று எண்ணுகிறேன். காரணம் பஞ்சாயத்து யூனியன்களுக்கு எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கின்றன. முன்பு சட்டசபையில் சொன்னதாகப் படித்தேன். பஞ்சாயத்து யூனியன்களில் கோழி சாப்பிடுகிறவர்களின் எண்ணிக்கை அதிகமாக அதிகமாக கோழிகளின் எண்ணிக்கையும் குறைகிறது என்று. ஆகவே, குறைகளைக் கண்டறிந்து கோழி வளர்ப்புத் திட்டத்தைத் தீவிரப்படுத்தவும், மூடப்பட்டிருக்கிற பண்ணைகளைத் திறப்பதற்கும் வழிவகை செய்ய முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முட்டை விற்பனையில்கூட எண்ணிக்கை குறைந்து வருகிறது. முட்டை மிக மிக அவசியம் என்பதை இப்போது எல்லோரும் உணர்ந்து இருக்கிறார்கள். இப்போது சைவர்கள் கூட முட்டை சாப்பிட ஆரம்பித்து இருக்கிறார்கள். உடல் நலக் குறைவாய் உள்ளவர்களும் இந்த முட்டையைச் சாப்பிடுகிறார்கள் என்ற காரணத்தால், முட்டைகள் எண்ணிக்கை குறைந்து வருவதற்கான காரணத்தை நாம் ஆராய்ந்து அதில் மிக மிகக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை டாக்டர்கள் மருத்துவ நிலையில் காலை 8 மணி முதல் 12 மணி வரையிலும் மாலை 2 முதல் 5 மணி வரையிலும் இருக்க வேண்டுமென்றும், எக் காரணத்தைக் கொண்டும் வெளியே செல்லக் கூடாது என்பது வரவேற்கத்தக்கதுதான். ஆனால் அதே சமயத்தில் அவசரமாகச் சில கன்றுகளுக்கு மருத்துவ உதவி தேவை என்கிற நிலைமை ஏற்பட்டால், அவர்கள் வெளியே சென்று வர முடியாது. அவர்கள் வரும் வரையில் கன்றுகள் உயிரோடு இருக்க முடியாது. பல பேர் நல்ல ஜாதி மாடு வைத்து இருக்கிறார்கள். ஆகவே, ஆங்காங்கு இருக்கும் கால்நடை



1971 ஜூலை 19] [திருமதி த. ந. அனந்தநாயகி]

மருத்துவ மனைகளில் உள்ள டாக்டர்களுக்கு ஒரு மூவ்மெண்ட் ரிஜிஸ்டர் என்று போட்டு, அவசரமாக அவர்கள் வெளியே செல்ல வேண்டுமென்றால், அதிலே எழுதிவைத்துவிட்டுச் சென்று வருகிற நிலைமையை ஏற்படுத்தினால் நல்லது என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு, முக்கியமான இடங்களில் 'ஆம்புலன்ஸ்' இருக்க வேண்டும். மனிதர்களுக்கு ஆம்புலன்ஸ் வைத்து இருப்பது போல், இந்த வாயில்லாத ஜீவன்களுக்கும் ஆம்புலன்ஸ் வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

புல் பண்ணைகளைப் பெருக்க வேண்டும். மாதவரத்தில்தான் புல் பண்ணை இருக்கிறது இங்கே இருக்கும் கழிவு நீரை பம்பு செய்து புல் வளர்ப்பதற்காக அதை பயன்படுத்துவது என்ற திட்டம் கார்ப்பரேஷனில் இருந்தது. ஆனால் இதுவரையில் அது நடைபெறவில்லை. ஒரு சில நாட்களுக்கு முன்பு காசிமேட்டுக்குச் சென்றிருந்தேன். கழிவு நீரைக் கடலில் விட்டுவிடுவதால் அந்தப் பக்கத்தில் சாக்கடை நாற்றம் சகிக்க முடியவில்லை. அந்தக் கழிவு நீரை அப்படி விடாமல், அதைப் பயன்படுத்தி புல் பண்ணைகளை அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அலமாதிக்கு கறவை நின்ற பசுக்களை அனுப்புகிறோம். அந்த இடத்தில் புல் கிடையாது; தண்ணீர் கிடையாது. எப்படித்தான் அந்த இடத்தைத் தேர்ந்தெடுத்தார்களோ தெரியவில்லை. அங்கே மாடுகளை அனுப்பி வைத்தால் அவை கவனிப்பாரற்று, கால், கை ஒடிந்து வருகிறது. இப்படி பராமரிப்பு இல்லாத நிலையில் அங்கே மாடுகள் இருக்கின்றன. இது வரவேற்கத்தக்கது அல்ல. நல்ல வேளையாக மாற்றப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். மாற்றுகிற இடமாவது அருமையான இடமாக, புல்வெளி, தண்ணீர் வசதி இருக்கும் இடமாகப் பார்த்துத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எருமைப் பண்ணை ஆரம்பிக்கப் போவதாகச் சொன்னார்கள். அதை எப்போது ஆரம்பிக்கப் போகிறீர்கள்? அதுவும் எருமை மாடு மாதிரி மெதுவாகத்தான் ஆகுமா? அதை உடனடியாக ஆரம்பிக்க முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று மத்திய அரசாங்கத்திற்கு மாநில அரசு எழுத வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த காட்டில் ஷெட் சென்னை மாநகரத்திற்கு மிகவும் தேவை. இங்கே மாடும் மனிதனும் சேர்ந்து வாழ்கிறார்கள். மைலாப்பூர், மாம்பலம் போன்ற இடங்களில் போய்ப் பார்த்தால் அதிகமாக இந்த கட்டில்ஸ் இருக்கின்றன. ஏனென்றால் இங்கேதான் பால் சாப்பிடுகிறவர்கள் அதிகமாக இருக்கிறார்கள்.

திரு. நா. வீராசாமி: அம்மையார் அவர்கள் பேசும்போது மாடுகளுக்குக் கை, கால் முறிந்து வருகிறது என்று குறிப்பிட்டார்கள். மாடுகளுக்குக் கை எங்கே இருக்கிறது என்று தெரியவில்லை, தயவுச் செய்து விளக்குவார்களா?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** கை என்று சேர்த்த மாதிரி வந்து இருக்கும். மாடுகளுக்கு 4 கால்கள் இருக்கின்றன. அதிலே இரண்டு கை இரண்டு கால் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அம்மையார் அவர்கள் சொல்வது வீட்டு மாட்டையா அல்லது பழைய தேர்தல் சின்னத்தையா ?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தேர்தல் சின்னத்தைப்பற்றி அல்ல, வீட்டு மாட்டைப்பற்றித்தான் சொன்னேன்.

மாடுகளைப் பராமரிக்க ஒரு தனி இடம் தேவை. இந்த மாடுகள் இங்கே இருப்பதால் பல விதத் தொல்லைகள் ஏற்படுகின்றன. மாதவரத்திற்கு இதை எடுத்துச் செல்வதாக இருந்தது. சென்னை நகரத்தில் இருக்கும் மாடுகளை எல்லாம் அங்கே அனுப்பிவிடுமோம்; தொல்லை இருக்காது என்று சொன்னார்கள். ஒவ்வொரு டிவிஷனிலும் ஒவ்வொரு காட்டில் ஷெட் தேவை. இப்போது 120 கார்ப்பரேஷன் டிவிஷன்கள் இருக்கின்றன. அத்தனை டிவிஷன்களிலும் காட்டில் ஷெட் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிச் செய்து கொடுத்தால் மாட்டுச் சொந்தக்காரர்களும் அடிக்கடி மாடுகளைச் சென்று பார்த்து வர முடியும். அதோடு, இந்த காட்டில் ஷெட் அமைப்பதன் மூலம் கார்ப்பரேஷனுக்கும் வருவாய் அதிகமாகும். ஆகவே, அரசாங்கம் உடனடியாகக் கார்ப்பரேஷனுக்கு உத்தரவு போட்டு, இதை அமுல் நடத்தினால் வரவேற்கத்தக்கதாகும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

இந்த காட்டில்ஸ்களுக்கும் இன்சூரன்ஸ் வரவேண்டும். மாடுகளுக்குக் கோமாரி நோய் வந்தால் அவை உடனடியாக இறந்து விடுகின்றன. தடுப்பு ஊசி போடுவதாகச் சொல்கிறோம். ஆயிரம் ரூபாய் இரண்டாயிரம் ரூபாய் போட்டு கறவைப் பசு வாங்குகிறார்கள். ஆனால் அவை ஒரு நொடியில் இந்த நோய் வந்தால் இறந்து விடுகின்றன. ஆகவே, நஷ்ட ஈடு செய்யும் வகையில் காட்டில் இன்சூரன்ஸ் வசதி செய்து கொடுத்து உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊட்டியில் இருக்கும் ஷீப் பார்மிங் பற்றிச் சொன்னார்கள். அது நஷ்டத்தில் நடத்தப்படுகிறது. பராமரிப்பு இல்லாமல் இருக்கிறது என்று சொன்னார்கள். அங்கே அவர்கள் 'உல்' செய்யவில்லை. 'உல் கேதரிங்' தான் செய்து கொண்டு இருக்கிறார்கள். அந்த ஷீப் பார்மிங் நன்றாக நடத்துவதற்குத் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

தீவனம் சப்ளை செய்வதற்கு டெண்டர் கேட்டு நியமிக்கிறார்கள். காண்டிராக்ட் ஒப்புக் கொண்ட பிறகு இரண்டு மூன்று மாதங்களுக்கு சப்ளை செய்து விட்டு நிறுத்திவிடுகிறார்கள். தன்னால்



வைக்கோல் கொடுக்க முடியாது என்று சொல்கிறார்கள். இதற்குப் புதிய முறை வேண்டும். பழைய முறையில் நிறுத்துப் பார்த்து சப்ளை செய்கிறார்கள். நடுவில் கல்லை வைத்து சப்ளை செய்து விடுவதாகச் சொல்கிறார்கள். இப்படிப்பட்ட கஷ்டத்தை இந்த வாயில்லா ஜீவன்களுக்கு ஏற்படுத்துகிறார்கள். இதிலே அரசாங்கம் தீவிர கவனம் செலுத்தி, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மானியத்தின் மீது கூறப்பட்ட குறைகளைத் தீர்ப்பதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'கால்நடை வளர்ப்பு குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அளவுக்கு அக்கறை காட்டி இந்த விவாதத்திலே கலந்து கொண்டு பல்வேறு விதமான சீர்திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று எடுத்துக் கூறியதற்கு நான் முதலிலே அவர்களுடைய உரைகளை வரவேற்க விரும்புகிறேன். ஆனால் அதே நேரத்தில் குறைகள் எங்கே தோன்றின என்று தெரியாமல், குறைகள் எந்த ஆட்சியில் தோன்றின என்று தெரியாமல், ஏதோ சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லி இருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

ஆலமாதியில் இருக்கிற மாடுகள் பராமரிப்புப் பண்ணை அமைக்கப்பட்டு தண்ணீர் இல்லாமல், புல் இல்லாமல், போகிற மாடுகள் கால் ஒடிக்கப்பட்டு வருகின்றன என்று சொன்னார்கள். 1948-ம் ஆண்டில் அமைக்கப்பட்டு பல்லாண்டுக் காலமாக நடைபெற்று, அண்மைக் காலத்திலே கூட அதைக் குறித்துத் திரும்ப மறுபரிசீலனை செய்யப்பட்டபோது, வேறு பெரிய பண்ணை இல்லை என்ற காரணத்திற்காகத் தேவைப்படவில்லை என்ற எண்ணம் ஏற்பட்டு, மத்திய அரசாங்கத்தின் இந்தத் துறை வட்டார அடிப்படையில் ஒரு எருமைப் பண்ணைக்காக, எருமையின் தரத்தை உயர்த்தும் பண்ணைக்காக அந்த இடத்தை வழங்க வேண்டுமென்று கேட்டு, அதிக அளவு தண்ணீர் அளிக்க வேண்டுமென்றும், தீவிர வளர்ச்சித் திட்டத்திற்கு அதிகத் தண்ணீர் வழங்க வேண்டுமென்றும் கேட்டு, அண்மையில் அதற்கான முடிவான கருத்து அறிவிக்கப்பட்டு, அந்தப் பண்ணையை அவர்கள் முழு அளவிற்கு எடுத்துக் கொள்ள ஒப்புதல் தெரிவித்து இருக்கிறார்கள். இதற்கு முன் அவர்களிடத்தில் அந்தப் பண்ணையை வேறு இடத்தில் வைக்கலாம் என்று தெரிவித்தபோது, அந்த இடம்தான் பொருத்தமான இடம், அந்த இடத்தில் பண்ணை அமைத்தால்தான் எங்களுடைய திட்டம் நிறைவேற முடியும் என்று தெரிவித்த காரணத்தால்தான், மாடு வளர்ச்சிக்காகவும், எருமை மாடு தீவிர வளர்ச்சிக்காகவும் அந்தப் பண்ணையை அவர்களுக்கு ஒப்படைப்பதற்குத் தமிழக அரசு முன்வந்து இருக்கிறது. அந்த வேலை 82 லட்சம் ரூபாய் செலவில் 4 ஆண்டுத் திட்டமாக நிறைவேற்றப்பட இருக்கிறது. ரூ. 14—15 லட்சம் செலவில் அங்கே

[திரு. க. அன்பழகன்] [1971 ஜூலை 19

தீவனத் திட்டம் ஆரம்பிக்க இருக்கிறோம். தீவனத் திட்டம் என்று நான் சொல்லும்போது மேய்ச்சல் நிலம் என்று நினைக்க வேண்டாம். மாடுகளுக்கு பல்வேறு வகையான தீனி, தரமான தீனி உற்பத்தி செய்யும் திட்டம் இன்றைய தினம் மத்திய சர்க்காரால் நிறைவேற்றப்பட இருக்கிறது. ஏறத்தாழ ஒரு கோடி ரூபாயில் அந்தத் திட்டம் உருவாக்கியிருக்கிறது என்பதை முதற்கண் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்தக் கால்நடை வளர்ச்சித் திட்டம் இடைக் காலத்தில் தொய்வு அடைந்தது என்று சொன்னால், அதற்கு முக்கியமான காரணம், 4.5 ஆண்டுகளுக்கு முன்னாலே கூட கால்நடைவளர்ச்சிக்காக, கோழி வளர்ச்சிக்காக நாம் ஏற்றுக் கொள்ளும் திட்டங்களை எந்த அளவிற்கு உற்பத்தியாகும், அதில் வருமானம் வரும், அதில் எவ்வளவு செலவு செய்து ஈடுபடலாம் என்பதை யெல்லாம் தமிழ் நாட்டு நிபுணர்கள் ஆராய்ந்தறிய வழியில்லாமல் மத்திய சர்க்கார் கொடுத்த திட்டம் என்பதற்காக ஏற்றுக் கொண்டதால் அந்த நாட்களில் அது உருப்படியாகவில்லை.

கோழி வளர்ப்புத் திட்டம் என்ற பெயரில், பல்வேறு பண்ணைகள் ஆரம்பிக்கப்பட்டு, கட்டடம் கட்ட மத்திய சர்க்கார் நிதி வழங்கிய காரணத்தால், அவை விரிவாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஆங்காங்கு அமைக்கப்பட்டன. அந்த நாளிலே தரமான கோழிகள் கூட 140 முட்டைகள் தான் கொடுக்கும் என்ற அளவில் திட்டம் எடுக்கப்பட்ட காரணத்தால், நல்ல முறையில் நடந்திருந்தாலும் லாபம் இல்லாமல் போய்விட்டது. அதை ஆராய்ந்தபோது, லெக்ஹார்ன் என்ற கோழி இனத்தில் 'மேயார்' என்ற சிறப்பான இனம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு அந்த இனம் 140 முட்டைக்குப் பதில் 210 முட்டைகள் என்ற அளவில் இருக்கிறது. இன்றைக்கு அதே கோழிப் பண்ணைகளை நஷ்டம் இல்லாமல் நடத்த முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. இதை நாம் அணுகும்போது. இது ஒரு தலைமுறை யல்ல, நான்கு தலைமுறைகளானால்தான் நிரந்தரமான வளர்ச்சி உண்டாக முடியும் என்பதையும் அறிந்திருக்கிறோம். அந்த வகையில் அரசு வெற்றி பெற்று, தமிழ் நாட்டில் கோழி வளர்ப்புத் திட்டத்தில் லாபம் பெறுவதற்கு வழி இருக்கிறது.

அது மட்டுமல்லாமல், இங்கே அம்மையார் அவர்கள், புள்ளி விவரங்களைப் படிக்கும்போது. மேலே உள்ளதை விட்டுவிட்டு, அவர்களுக்கு விருப்பமான புள்ளிவிவரங்களை மட்டும் படித்தார்கள். இறைச்சிக்காக உபயோகப்படும் கோழிக் குஞ்சுகளின் எண்ணிக்கை 25,000-லிருந்து 1,472 ஆகக் குறைந்து விட்டது என்றார்கள். இறைச்சிக்குக் கொடுப்பது கோழிப் பண்ணையின் லட்சியமே இல்லை. அப்படிக் கொடுத்தால், கோழிப் பண்ணையின் எண்ணிக்கை குறைந்து விடும். அதனால் தான் கோழிக் குஞ்சுகளைக் குஞ்சுகளாகவே கொடுத்து, வளர்க்க வேண்டும் என்று சொல்லி, கோழிகளைப் பெருக்குவதில் கவனம் செலுத்தப்பட்டது.



1971 ஜூலை 19] [திரு. க. அன்பழகன்]

அந்த வகையில் உற்பத்தி செய்யப்பட்ட குஞ்சுகள் 1968-69-ல் 1,39,000, 1969-70-ல் 1,14,000. ஆனால் 1970-71-ல், இந்த ஒன்பது மாதத்தில் 1,80,000. இப்படி எண்ணிக்கை உயர்ந்திருப்பது அம்மையாருக்குத் தெரியவில்லை. பல அம்மையார்களுக்கு என்ன வருமானம் என்பது தெரியவில்லை, செலவுதான் தெரியும். செலவுக் கணக்கை வைத்துக்கொண்டு சொல்கிறார்கள். ஆகவே, கோழிப் பண்ணையின் குஞ்சுகள் வளர்ச்சிக்காகத்தானே யல்லாது, இறைச்சிக்காக அல்ல. ஆகவே வளர்ச்சிக்காக கிராம மக்களிடம் விற்கப்படுவதில் அதுவும் 22,000-லிருந்து இன்றைக்கு 94,000 என்ற அளவில் உயர்ந்திருக்கிறது. அந்த அளவில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இப்படி நாம் வளர்ச்சி என்பதெல்லாம் வளர்ச்சியே இல்லை. பெரும் வளர்ச்சியில்லை.

தமிழ்நாட்டில் விலங்கினங்கள், கால்நடைகள் தரம் மாறவேண்டிய அளவுக்கு மாறிவிட்டதா என்றால், ஏற்பட வேண்டிய அளவுக்கு வளர்ச்சி ஏற்பட்டுவிட்டதா என்றால், இல்லை. இதெல்லாம் தொடக்க நிலைதான். இந்தக் கால்நடைத் துறையைக் கடந்த ஆண்டு ஜனவரி 1970-ல் திருத்தி அமைத்ததால், நல்ல மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. ஒன்றும் கெட்டுப் போய்விடவில்லை என்று உறுதியாகச் சொல்ல முடியும்.

இதற்கு முன்னால், இந்தத் துறை வேறு வேறு நிபுணர்கள் பார்ப்பது என்ற நிலை இருந்தது. இப்பொழுது வட்டார அடிப்படையில் பிரிக்கப்பட்டு, வட்டாரக் காரியங்கள் ஒருங்கிணைந்து செயல்படுகின்றன.

ஒரு உறுப்பினர் எடுத்துக் கூறினார், மைய கிராம வளர்ச்சி, மும்முர வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றைக் கைவிட்டதால், கால்நடைக் கன்றுகள் வளர்ச்சி அடைய சப்சிடி நிறுத்தப்பட்டு விட்டது என்று சொன்னார்கள். உண்மையாகவே, திட்டம் ஏற்படும்போது, ஒரு காலகட்டத்தில் ஏற்படும் பலன் இன்னொரு வகையில் வளம் பெரும் என்று வழங்கப்பட்டது. முதலிலே 100, 200 கன்றுகள் பொலிக் காளையாகும் அளவிலும், நிறைந்த பால் தரும் பசுவாகவும் வளர்க்க ஊக்கம் தந்து, 100, 200 கன்றுகள் வளர்ந்த பிறகு, நன்மையைப் பார்த்து, மற்றவர்கள் செயல்பட வேண்டும் என்ற வகையில் அடையாளமாக சப்சிடி கொடுக்கப்பட்டது. நிரந்தரமாக வழங்க முடியும் என்று கருத முடியாது. காலையில் கூட ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது, இது இன்செண்டிவ் போன்றது, தொடர்ந்து நீடிக்கக் கூடிய திட்டமில்லை என்று சொன்னேன்.

நம்முடைய நாட்டில் குறிப்பாக மாடுகளுடைய தரம், ஆடுகளுடைய தரம் மாற்றப்பட வேண்டும். இன்றைக்குள்ள மாடுகள் அத்தனையும் ஆடுகள் போலவும், உழைக்கிறவை ஆற்றல் குறைந்தும், அவைகளிடமிருந்து கிடைக்கும் பலன் குறைந்தும் இருக்கிறது. ஆடுகளை எடுத்துக் கொண்டால், தரக் குறைவாக இருக்கின்றன. அவைகளிலிருந்து கிடைக்கும் இறைச்சியின் அளவும்

[திரு. க. அன்பழகன்] [1971 ஜூலை 19

குறைவாக இருக்கிறது. நாளுக்கு நாள் அவை 'டீஜெனரேட்' ஆகும் வகையில்தான் இருக்கின்றன. இங்கே பேசிய உறுப்பினர் திரு. சுப்பிரமணியம், எவ்வளவு கால்நடை இருக்கிறது என்று தமிழ் நாட்டில் கணக்கு இருக்கிறதா என்றார்கள். கால்நடை 1,35,83,362 இருக்கிறது, கணக்கில் வந்தது. அதிலே பசுக்கள் மூன்று ஆண்டுகள் வளர்ந்தவை 37,11,000. அதே போல் எருமைகளும் மூன்று ஆண்டுகள் வளர்ந்தவை 13,46,000. ஆனால் பலனைக் கணக்குப் பார்த்தால், எண்ணெய் தேய்த்தும் பிள்ளை பிழைக்கவில்லை. நம் நாட்டு காமதேனு பரம்பரை, கோரை தின்னும் அளவில் குறைந்து கொண்டே வந்திருக்கின்றன. இதை நாம் 50 ஆண்டுகளுக்கு முன் உணரவே முடியாது; 20 ஆண்டுகளுக்கு முன் தெரிந்து கொள்ள முடியும். இந்தக் காலகட்டத்தில் நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்றதாக வளரவில்லை என்பதை சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் உணர வேண்டும் என்று தெரிவிக்கிறேன்.

மனித வாழ்க்கையிலே குறைபாடுகளை நீக்குவதற்காக குடும்பக் கட்டுப்பாடு திட்டம் எந்த அளவில் இன்றியமையாததாக நாட்டு மக்களுக்கு அமைந்துவிட்டதோ, அதேபோல் இந்த நாட்டு மக்கள் வளம் பெற இந்த நாட்டு மாடுகளுடையவும், ஆடுகளுடையவும் தரம் அடியோடு மாற்றப்பட வேண்டும். சாயில் வளம் பெற வேண்டும். மதுராந்தகம் பக்கத்தில், சாலையிலே காரில் போகும் போதெல்லாம் பார்த்தால், மாடுகள், ஆடுகளின் உயரம் தான் இருக்கின்றன. ஆடுகள், நாய்கள் போல் இருக்கின்றன. நான் மாணவனாக இருந்தபோது பன்றிகள் கூடப் பெரிதாக இருந்தன. அவை இப்பொழுது நாய்க் குட்டிகள் போல் இருக்கின்றன. இந்த நாட்டில், விலங்கினத்திற்கு ஏற்படும் உணவுப் பஞ்சம் ஒழிய, விலங்கினத்தை வளர்க்க, காட்டு விலங்குகளுக்குக் காட்டும் பரிவு கூட நாம், நாட்டு விலங்குகளுக்குக் காட்டுகிறோமா என்று எண்ணும் அளவில் நிலைமைகள் இருக்கின்றன. இந்தக் காரியத்தை அரசாங்கம் மட்டும் செய்ய முடியாது, இலாக்கா மட்டும் செய்து விட முடியாது. மக்கள்தான் சக்தி படைத்தவர்கள். அவர்கள்தான் விலங்கினத்தைக் கண்காணிக்க வேண்டும். அரசாங்கம் தனித்து கண்காணிக்க முடியாது.

அரசாங்கம் என்று சொன்னால் மக்கள் அரசு 'ஸ்டேட்' என்று அர்த்தம். உழைப்பு என்று சொன்னால் வயிறார தாங்களே உணவைத் தேடிச் சாப்பிடுவது என்று பொருள். அரசாங்கத்தின் காரியத்துக்கு மக்கள் முழு ஆதரவினைத் தராத காரணத்தினால் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கேற்ற அளவிற்குப் பலன்களை என்றைக்கும் தரவில்லை. காரணம், மக்கள் அதை முழு அளவிற்கு பயன்படுத்திக்கொள்ளவில்லை.

இதில் ஐந்தாண்டுகளுக்கு முன்பு கோவை மாவட்டத்திலும், ஓரளவிற்கு மதுரை மாவட்டத்திலும், இன்னும் ஒரு சிறு அளவிற்கு நெல்லை மாவட்டத்தின் ஒரு பகுதியிலும் மாற்றம் காணப்பட்டு



1971 ஜூலை 19] [திரு. க. அன்பழகன்]

இருக்கிறது. 'ஸிம்பாலிக் சேஞ்ஜ்' என்று சொல்லத்தக்க அளவிற்குத்தான் இருந்ததே தவிர, 'ஃபண்டமெண்டல் சேஞ்ஜ்' என்று சொல்லத்தக்க அளவிற்கு இல்லை. அடையாள மாற்றம் ஏற்பட்டு இருக்கிறது. ஆனால் அடிப்படை மாற்றம் ஏற்படவில்லை. அப்படிப்பட்ட அடிப்படை மாற்றம் ஏற்பட்டாக வேண்டும். அதற்கு இந்த நாட்டில் கிராமத்துக்கு கிராமம் இப்படிப்பட்ட மாற்றம் ஏற்படுவதற்கான வழி முறைகளை முழு அளவிற்குப் பயன்படுத்திக் கொள்ள முன் வரவேண்டும்.

நமது நாட்டிலுள்ள காளைகள் பார்ப்பதற்கு அழகாக இருக்கலாம். ஆனால் அவற்றின் வழியில் கிடைக்கும் 'ப்ராஜனி' அவற்றின் வழியில் கிடைக்கும் கன்றுகள், சமுதாயத்தின் மொத்த வருமானத்தைப் பெருக்குவதற்கு, அப்படிப்பட்ட வளர்ச்சியைத் தருவதற்கான அளவிற்கு அவைகள் உதவவில்லை என்பதை நாம் மறுப்பதற்கில்லை. எனவே வெளி நாட்டுக் காளைகளிலிருந்து கிடைக்கும் அதாவது ஜெர்ஸி போன்ற, சிந்தி போன்ற இனக் காளைகளிலிருந்து கிடைக்கும் விந்துகள் நமது நாட்டு மாடுகளோடு கலக்குகிற போதுதான், இப்படிப்பட்ட புதிய இனக் கன்றுகள் உருவாக்கப்படும்போதுதான் நாம் இந்தத் துறையில் மாற்றம் காண முடியும்.

காலையில்கூட மாண்புமிகு அங்கத்தினர் ஒருவர் குறிப்பிட்டார்கள், நமது நாட்டில் சாதாரணமாக உற்பத்தியாகும் கன்றுகள் 100-க்கு 50 கன்றுகள் என்று சொல்லத்தக்க அளவிற்கு இல்லாமலேயே போய்விடுகின்றன, அது நமது மாடுகளின் தரத்தின் குறை என்று. விஞ்ஞான முன்னேற்றம் கண்டுள்ள இந்த நாட்களில் இப்படிப்பட்ட குறைகள் இருப்பதற்கே இடமில்லை. காரணம், சிறந்த விந்துகளை விஞ்ஞான முறையில் எடுத்து, அதை விஞ்ஞான முறையில் பக்குவப்படுத்தி, நாடு முழுவதற்கும் விநியோகிப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. இந்த விஞ்ஞான முறை மூலம் சாதாரணமாக ஒரு காளை ஒரு பசுவோடு சேரும்போது வெளி வருகின்ற விந்துகளை வேறு முறையில் எடுத்து விஞ்ஞான முறையில் 'ஃப்ரிசிங்' என்ற முறையில் பாதுகாக்க, 100 மாடுகளுக்குப் பயன்படத்தக்க அளவிற்கு முன்னேற்றம் ஏற்பட்டு இருக்கிறது. இயற்கையாக ஒரு காளை ஒரு பசுவோடு புணரும்போது வெளிப்படுகிற விந்தானது ஒரு பசுவின் அளவிற்கே நின்று விடுகிறது. ஆனால் செயற்கை முறையில் அந்த விந்தை எடுத்து விஞ்ஞான ரீதியில் பாதுகாத்தால் அதே அளவினை 100 பசுக்களுக்குச் செலுத்தும் அளவிற்கு மாற்றம் காணப்பட்டிருக்கிறது.

அது மட்டும் இல்லை, அமெரிக்காவில் வெளிப்படுத்தப்பட்ட விந்தாக இருந்தாலும்கூட அதை இந்த நாட்டில் கொண்டு வந்து இங்குள்ள பசுக்களுக்குச் செலுத்த முடிகிறது. இங்கே கூட ஒரு அங்கத்தினர் எடுத்துக் காட்டினார் இது பற்றி. இங்கே அந்த முறையில் விந்துகளைப் பாதுகாக்கத் தேவையான பனிப் பக்குவ வசதிகள் இல்லை என்று. அவருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதற்கான கருவிகள் ஏறத்தாழ இரண்டு அல்லது

[திரு. க. அன்பழகன்] [1971 ஜூலை 19

மூன்று லட்சம் பெறுமான கருவிகள் வெளிநாட்டிலிருந்து வந்திருக்கின்றன. அவற்றை அமைப்பதற்குத் தேவையான கட்டிடத்தைக் கட்ட வேண்டியிருக்கிறது. அதற்கான வேலையும் ஆலோசனையும் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. இன்னும் ஒரு மூன்று அல்லது ஆறு மாதகாலத்தில் அது அமைக்கப்பட்டுவிடும். அது அமைக்கப்பட்டு விடுமானால் அந்தக் குளிர் சாதன அமைப்பில் இங்கே கிடைக்கும் மிகச்சிறந்த எருதுக்களின் விந்துகள் எடுக்கப்பட்டு பக்குவப்படுத்தி வைக்கப்படுமானால், அவற்றைப் பத்து ஆண்டு காலம் கூட வைத்து இருக்கலாம். ஆனால் நமது தேவை மிக மிக அதிகம். அவை பத்து அல்லது பதினைந்து நாட்களிலேயே செலவழிந்துவிடும். இப்படி வைக்கப்பட்டால் சென்னை முதல் கன்னியாகுமரி வரையில் தமிழகம் முழுதும் இதை தேவைக்கேற்றபடி ஒவ்வொரு நாளும் அனுப்பி வைக்க முடியும். இப்படிச் செய்யப்படுமானால் மிகக் குறைந்த காலத்தில் மிகச் சிறந்த கன்றுகளை மிக அதிகமான எண்ணிக்கையில் பெருக்க முடியும்.

இதுமட்டும் இல்லை. இதற்குத் தேவையான பொலிகாளைகள் நமது நாட்டில் இல்லை. இதற்குத் தேவையான பொலிகாளைகளை நம் நாட்டில் வைத்து இந்தக் கடமைகளை நிறைவேற்றுவதற்காக 95 பொலிகாளைகளை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வதற்கான அனுமதியை மத்திய அரசிடம் கேட்டிருக்கிறோம். இவற்றைத் தருவிப்பதற்கான வெளிநாட்டுச் செலாவணியை அவர்கள் ஏற்றுக் கொள்ளுவார்கள் என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறோம். இப்படிப்பட்ட திட்டங்களின் மூலம் நமது மாடுகளின் தரத்தை உயர்த்துவதற்கு நாம் பாடுபடும்போது பொதுமக்களுடைய முழு ஒத்துழைப்பினை, ஆதரவினை நமது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பெற்றுத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்தத் துறை இப்படி பல் வேறு திசையிலும் விரிவு பெற்று வளர இருப்பதை பலர் அறிய மாட்டார்கள்.

இன்னும் ஒன்றைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பளபளப்பாகப் பலரது கண்களுக்கும் தெரியும் வகையில் இக்கால்நடை இலாக்கா பல காரியங்களைச் செய்யவில்லை என்றாலும் அப்படிச் சொல்லுவதற்கு இடம் இருக்கிறது என்று ஒப்புக் கொண்டாலும் இத் துறையில் நமது தமிழகத்தில் பெருமளவிற்கு வெற்றிகண்டு இருக்கிறோம் என்று நிச்சயமாகச் சொல்ல முடியும்.

அம்மையார் அவர்கள் குறிப்பிட்டார்கள், கோமாரி நோய் வந்துவிட்டால் டாக்டர் வருவதற்கு முன்பே மாடு செத்துப்போய் விடும் என்று. பத்து ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலையை இப்போது குறிப்பிட்டார்கள் என்றே நான் எண்ணுகிறேன். இன்றைக்கு நிலைமை அப்படியில்லை. முன்பிருந்த நிலை முற்றிலும் மாறிவிட்டது என்று திடமாகச் சொல்ல முடியும். 1968–69-ம் ஆண்டில் காணப்பட்ட கால்நடை நோய்கள் சற்றேறக்குறைய 150 ஆகும். அப்படிப்பட்ட நோய்களினால் தாக்குண்ட கால்நடை



1971 ஜூலை 19] [திரு. க. அன்பழகன்]

களின் எண்ணிக்கை 2,382. இதில் இறந்ததாக அறிவிக்கப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை 913. அப்போது இருந்தது 150 வகையான நோய்கள். ஆனால் 1969-70-ல் காணப்பட்ட நோய்களின் மொத்த எண்ணிக்கை 24 தான். பெருமளவிற்கு நோய்வகைகளின் எண்ணிக்கை குறைந்திருப்பதற்குக் காரணம் அந்த அளவிற்கு தடுப்பு ஊசிகள் போடப்பட்டு பல நோய்கள் கட்டுப்படுத்தப்பட்டு விட்டன. இதை இன்னும் 1970–71-க்கான ஆண்டிற்குப் பார்த்தால் காணப்பட்ட நோய்களின் எண்ணிக்கை இரண்டாகக் குறைந்து விட்டன. 150-லிருந்து 24 ஆகக் குறைந்து அது மேலும் 2-க்குக் குறைந்துவிட்டது. இப்படிப்பட்ட தீவிர முறையில் மருத்துவ நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு ஊசிகள் போடப்படவில்லையென்றால், நமது மாநிலத்திலும் பெருமளவிற்குப் பத்திரிகைகளில் பார்த்து இருக்கலாம், கோமாரி நோய் போன்ற பல நோய்களால் மாடுகள் பெரும் அளவிற்கு இறந்துவிட்டன என்று. அப்படிப்பட்ட செய்திகள் நமது காதுகளில் விழாமற் போனதற்குக் காரணம் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்தான்.

இன்னும் ஒன்றைப் பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட நோய்களினால் இறந்ததாக அறிவிக்கப்பட்ட கால் நடைகளின் எண்ணிக்கை 1968-69-ல் 913. 1969-70-ல் அது 142. அடுத்து 1970-71-ல் ஆறேதான். அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்படாமல், கால்நடை மருத்துவ மனைகளுக்குக் கொண்டு வரப்படாமல் எங்கேயாவது எதாவது கால்நடைகள் இறந்து போயிருந்தால் அதற்கு நாம் பொறுப்பேற்க முடியாது. ஆனால் நம்முடைய கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை 1970–71-ல் மிக மிகக் குறைந்து போய் விட்டது. பஞ்சாயத்து யூனியன்களை யொட்டிய கால்நடை பராமரிப்பு நிலையங்கள் பல இருக்கின்றன. இவற்றைத் தவிர அரசின் நேரடிப் பார்வையில் பல மருத்துவ நிலையங்களும் துணை மருத்துவ நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன. இப்படித் தமிழ் நாடு முழுதும் ஒரு பெரும் அளவிற்குக் கால்நடை மருத்துவப்பணி நிறைவேற்றப்பட்டு வருகிறது என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இது மட்டுமின்றி. தனியாகக் கோமாரி ஒப்புத் திட்டம் சிறப்பாக செம்மையாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதை இந்த அறிக்கையின் 14-ம் பக்கத்தில் விவரமாக எடுத்துக் காட்டப்பட்டு இருக்கின்றது. எப்படி அம்மை நோய் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறதோ, பிளேக் எப்படி கட்டுப்படுத்தப்பட்டு விட்டதோ அது போன்றே கால்நடைகளைப் பொறுத்த மட்டில் கோமாரி நோய் பெரும் அளவிற்குக் கட்டுப்படுத்தப்பட்டுவிட்டது. நோய் தடுக்கப்பட்டுவிட்டால் மட்டும் போதாது, எனவேதான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன், வேறு எவ்வளவோ திட்டங்கள் இருக்கின்றன என்றாலுங்கூட அவற்றைப்பற்றி அறிக்கையிலும் விவரமான பட்ஜெட்டிலும் நன்கு புரிந்துகொள்ள முடியும்

என்ற காரணத்தினால் அவற்றையெல்லாம் தனித்தனியாக இங்கே விளக்கவில்லை. ஆனால் மிக அழுத்தமாக உறுதியாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது என்னவென்றால் கிராமத்துக்கு கிராமம், பொதுமக்களோடு தொடர்பு கொண்டவர்கள் அந்தக் கிராமத்தில் ஒவ்வொரு வீட்டிலும் இல்லாவிட்டாலும் ஏதாவதொரு வீட்டில் ஒரு பசுவையோ அல்லது ஒரு எருமையோ நல்ல முறையில் விஞ்ஞான முறையில் வளர்ப்பதற்கு முன்வரும்படிச் செய்ய வேண்டும். வெறும் அதிகாரிகளை மட்டுமே வைத்துக் கொண்டு எவ்வளவுதான் முன்னேற்ற திட்டங்களைப்பற்றி மருத்துவ மனைகளைப்பற்றிப் பேசினாலும் இத்துறையில் மக்கள் தங்களை ஈடுபடுத்திக் கொண்டாலன்றி வெற்றி காண முடியாது. ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு உயர் ரக பசு அல்லது எருமை ஏதாவதொரு வீட்டிலிருக்குமானால், அது மற்றவர்களுடைய ஆர்வத்தை ஊக்குவிக்கும்.

அதுபோன்றே ஒவ்வொரு கிராமத்திலும் யாராவதொருவர் சிறந்த முறையில் கோழிப் பண்ணை ஒன்றை வைத்துப் பேண முன்வரவேண்டும். தாம்பரத்திற்குப் பக்கத்தில் உள்ள படப்பையில், செங்கல்பட்டு மாவட்ட கிராமத்தில், தீவிர கோழி வளர்ப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டிருக்கிறது. வீட்டுக்கு 20 அல்லது 30 அல்லது 50 கோழிகளைக் கொடுத்து அதை முறையாக வளர்க்கச் செய்து அவற்றின் முட்டைகளை அரசாங்கமே பெற்று விற்பனைக்கான ஏற்பாடுகளும் அங்கே செய்யப்பட்டிருக்கிறது. அதற்குத் தேவையான சீரான தீவனமும் கிடைப்பதற்கான திட்டமும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. இது மட்டுமின்றி அந்தக் கிராமத்தில் உள்ளவர்கள் உயர்தர பசுவினை வாங்கி வளர்க்கத் திட்டமிட்டால் அதற்கும் உதவ அரசு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்ய இருக்கிறது.

இது மட்டுமின்றி நமது நாட்டிலேயே சத்துணவு அதிகமாகக் கிடைப்பதில்லை. மிகப் பெருமளவிற்கு சத்தைப் பெற்றிருப்பது பன்றி இறைச்சியாகும். அம்மையார் அவர்கள் பேசும்போது கூட நான் கோழிக்கறி சாப்பிடுவேனா என்று கேட்டார்கள். அதற்காக அவர் பன்றி கறி சாப்பிடுவாரா என்று நான் இப்போது கேட்க விரும்பவில்லை. ஆனால் நாம் இரண்டு பேருமே பன்றிக்கறி சாப்பிட்டால் அது நமக்கும் நல்லது; நாட்டுக்கும் நல்லது. பன்றிக் கறியில் அவ்வளவு சிறந்த சத்தும் புரதப் பொருளும் இருக்கிறது என்று விஞ்ஞான ரீதியில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

தஞ்சாவூர், திருச்சி, திருநெல்வேலி, சங்கரன்கோவில் போன்ற பகுதிகளில் பன்றி வளர்ச்சிக்கான திட்டங்களை நிறைவேற்றுவதில் ஈடுபட்டிருக்கின்றார்கள். பன்றியிறைச்சியைப் பக்குவப்படுத்தி விற்பதற்கான ஏற்பாடுகளை அவர்கள் வைத்திருக்கின்றார்கள். அதில் மூன்று விதமான நன்மைகள் இருக்கின்றன. ஒன்று இந்த இறைச்சியிலுள்ள சில சத்துக்கள் குழந்தைகளுக்கு வரும் நோய்களைத் தடுக்கும் சக்தி உள்ளவையாக இருக்கின்றன. அதிலுள்ள புரோட்டீன் மிகப் பயனுள்ள சத்தாக இருக்கின்றது. அதில்



தயாரிக்கப்படும் உணவுப் பண்டம் எளிதில் கெட்டு விடுவதில்லை. மேலும் ஆர்ட்டிபிஷல் இன்செமினேஷன் முறையில் மிக விரைவில் அதிக எண்ணிக்கையில் இவற்றை உற்பத்தி செய்ய முடியும். மேலும் பிறக்கும்போது இறப்பது மிக மிகக் குறைவு. கோழிக்கு நோய் வந்து 50 இறந்துவிட்டன 100 போய்விட்டன என்பது போன்று அல்லாமல் இவற்றில் இறப்பு எண்ணிக்கை மிகவும் குறைவு. நாம் பன்றி என்று சொல்லும்போது நமது நாட்டில் பலர் இங்கே உள்ள கறுப்பு நிறப் பன்றியை எண்ணிக் கொண்டு பேசுகின்றார்கள். அவர்களுக்குச் சொல்லிக் கொள்ளுவேன். நான் கூறுவது மேல் நாட்டிலுள்ள பசுபோன்று வெண்மையாக உள்ள பன்றிகளை. எனவே அப்படிப்பட்ட பன்றிகள் வளர்ச்சியில் பொதுமக்கள் அக்கறை காட்ட வேண்டும். கிராமத்திலுள்ள ஒரு விவசாயி நான்கு பன்றிகளை வளர்க்க ஆரம்பித்து விட்டால் பிறகு அவரே ஆடு மாடுகளை வளர்ப்பதில் அக்கறை காட்டுவாரா என்பது எனக்குச் சந்தேகம். அந்த அளவிற்கு அது சுலபம் மட்டுமில்லை. லாபகரமானதும்கூட. மேல் நாடுகளில் பன்றி வளர்ச்சி என்பது ஏதோ ஒரு விலங்கு வளர்ச்சி என்று எடுத்துக் கொள்ளுவதில்லை. அதை ஒரு இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்டாகவே ஒரு தொழில் வளர்ச்சியாகவே எடுத்துக் கொண்டு இருக்கின்றார்கள்.

நான் சமீபத்தில் ஒரு சிற்றூருக்குச் சென்றபோது, அங்கேயுள்ள கிராம விவசாயி 500 பன்றிகள் வளர்க்கின்ற பண்ணையை வைத்திருப்பதைக் கண்டேன். அதற்கு அடுத்த நிலையில் ஏறத்தாழ 1,000 இளம் பன்றிகள், 5,000 குட்டிகள் உள்ள பண்ணை, அதைப் பார்க்கின்ற போது ஒரு பெரிய மாட்டு மந்தையை பார்க்கின்றபோது ஏற்படுகின்ற மகிழ்ச்சியைவிட பெருமகிழ்ச்சி ஏற்படுகிறது. முயல் குட்டி போடுகிறபோது, அது எவ்வளவு வேகமாக வளர்கிறது என்று கருதுகிறோமோ, அதே வளர்ச்சி பன்றியில் இருக்கிறது. இந்த வியாபார தந்திரம் யாருக்காவது தெரிந்துவிட்டால், அதில் கிடைக்கின்ற லாபத்துக்காக எல்லோரும் பன்றி வளர்க்க முன் வருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அப்படிப்பட்ட பன்றி வளர்ச்சியில் அக்கறை காட்டவேண்டும்.

அதேபோல் இங்கே பேசிய திரு. சுப்பிரமணியம் அவர்கள் சொன்னார்கள், போதுமான அளவிற்குக் கால்நடைகளுக்குத் தீவனம் கிடைக்கவில்லை. அதில் அக்கறை காட்ட வேண்டும். கால்நடைவளர்ச்சி தீவனத்தில் அடங்கி இருக்கிறது என்று சொன்னார்கள். உள்ளபடியே தமிழ்நாட்டு அரசு தீவனத்தை வளர்க்கப் பல திட்டங்களை நிறைவேற்ற விரும்புகிறது. இன்றைக்கு ஏறத்தாழ 10 ஏக்கராவுக்கு ஒரு ஏக்கரா கால்நடை தீவனத்துக்காக ஒதுக்க வேண்டும் என்று விரும்புகிறது. இன்றைக்கு இருக்கின்ற நிலைமை 60 ஏக்கராவுக்கு ஒரு ஏக்கரா தான் கால்நடை தீவனம் வளர்க்க ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதுகூட போதாத நிலைமை இருக்கிறது. மேய்ச்சல் புறம்போக்கு என்று சொன்னால், அது தானாக முளைத்துவிடுவதை மாடாக மேய்ந்து விடுகிறது. நாமாக வளர்த்து

[திரு. க. அன்பழகன்] [1971 ஜூலை 19

வெட்டித் தருகின்ற தீவனமாக இருந்தால்தான் நன்கு பயன்படும். அறுபது ஏக்கராவுக்கு ஒரு ஏக்கர் என்பதுகூட வருந்தத்தக்க சூழ்நிலையாகும். ஏறத்தாழ 20 ஏக்கருக்கு ஒரு ஏக்கர் தீவனத்தை வளர்க்கத் திட்டம் தமிழ் நாட்டில் வளர வேண்டும். அவ்வாறு வளர்ந்தால்தான் கால்நடை வளர்ச்சி பெருக முடியும். அதற்கு இந்தத் துறையைச் சார்ந்தவர்கள் உள்ளபடியே இன்சென்டிவ் ஸ்கீம் என்ற முறையில் தீவனம் வளர்க்கும் திட்டத்தில் தனிப் பட்டவர்கள் வளர்க்கின்ற பயிருக்கு அதிக நஷ்டம் ஏற்படாமல் வருமானம் குறைந்து போகாமல் இருக்க அவர்களுக்கு இன்சென் டிவ் தரலாம், ஊக்கத் தொகை தரலாம் என்று எண்ணிக் கொண்டி ருக்கிறார்கள். வெறும் விவசாயத்தில் இருப்பவர்கள் இடை யிடையே மாட்டுத் தீவனத்தை வளர்க்க முன்வந்தால்—அதில் குதிரை மசாலா என்ற ஒரு தீவனம் இருக்கிறது. அந்தப் பெயர் எனக்கே கூட இவ்வளவு நாள் தெரியாது. ஒரு வேளை சிலருக்கு அந்தப் பெயரைக் கேட்டவுடன் நாமே சாப்பிடலாமா என்ற எண்ணம் வரலாம். இப்படி எவ்வளவோ வகையான தீவனம் இருக் கிறது! ஆக தீவனங்களை வளர்க்க முன் வந்தால் அவர்களுக்கு உதவித் தொகை அளிக்க அரசு நிச்சயமாக முன்வரும். அதுமட்டு மல்லாமல், எங்கெங்கு இப்படிப்பட்ட கால்நடைப் பண்ணைகள் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் விரிவான முறையில் தீவனத்தை வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் இந்தத் துறையிலிருக்கிறது. இப்போதே வளர்க்க ஆரம்பித்திருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து செய்வதற்கு நிச்சயமாக முயற்சி எடுத்துக் கொள்ளப்படும்.

அதுமட்டுமல்லாது, தமிழ்நாட்டில் கல்வித் துறையில் கால்நடை மருத்துவத் துறை நல்ல முறையில் வளர்ந்திருக்கிறது. இண்டர் நாஷனல் ரெபுடேஷன் என்று சொல்லுகின்ற அளவுக்கு தமிழ் நாட்டு கால்நடை மருத்துவக் கல்லூரியின் பாரம்பரியம் நல்ல வளர்ச்சி பெற்றிருக்கிறது. அந்தக் கல்லூரியில் மேல்பட்டப் படிப்புக்கான போஸ்ட் கிராஜுவேட் பட்டம் பெறுவதற்கான, பல் வேறு துறைகள் கூட இன்றைக்கு வளர்க்கப்பட்டிருக்கின்றன.

இன்றைக்கு ஏறத்தாழ இரண்டு ஆண்டுக் காலமாக ஒவ்வொரு துறையிலும் ஆராய்ச்சி நடத்துவதற்காக இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனம் வழங்கிய நிதியிலிருந்து மாட்டினங்களில் மூக்கு அழற்சி நோய் ஏற்படும் கூறுகளை ஆராய ஏறத்தாழ 2 லட்ச ரூபாயில் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது.

அதேபோல் கோழியின் சுவாச நோயைப் பற்றி ஆய்ந்து அதற் கான தடுப்பு நடவடிக்கைகளுக்குரிய திட்டம் ரூ. 2,55,715-க்குப் போடப்பட்டிருக்கிறது. கோழி இறைச்சிக்கான அனைத்து இந்திய ஒருங்கிணைப்பு ஆராய்ச்சித் திட்டம் ரூ. 12,80,000-க்கு வகுக்கப்பட்டிருக்கிறது.

ஆடு மாடு வெட்டும் தொட்டிகளைப் பற்றி நண்பர் ஹாண்டே பேசும்போது ஆடு மாடு வெட்டுகின்ற இடங்கள் பக்குவமாக இல்லை என்று குறிப்பிட்டார்கள். ஆனால் அதேபோது அங்கே கிடைக்



1971 ஜூலை 19] [திரு. க. அன்பழகன்]

கின்ற துணைப் பொருள்கள் கொம்பாக இருந்தாலும், குளம்பாக இருந்தாலும், அவற்றை எல்லாம் எப்படிப் பயன்படுத்தலாம் என்று ஆராய ரூ. 2,65,000-ல் ஒரு திட்டம் திட்டப்பட்டுள்ளது. இன்னும் சொல்லப் போனால் ஆடுமாடு வெட்டும் இடங்களில் அவற்றைக் கொல்லுவதற்கான சாதனங்கள் கருவிகள் எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றியும், பன்றியின் மதிப்பை ஆராய வும் ஆன திட்டத்திற்கு ரூ. 99,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இப்படி எத்தனையோ திட்டங்கள் இருக்கின்றன. நான் உதாரணத்திற் காகச் சிலவற்றைச் சொன்னேன்.

ஆனால் எல்லாத் திட்டங்களையும், இந்தத் துறைக்குச் செலவழிக் கின்ற மொத்த செலவான ரூ. 3,66,37,600 யும் தமிழ்நாட்டில் இருக் கின்ற கால்நடை செல்வத்தின் அளவை வைத்துப் பார்க்கிறபோது 100-க்கு ஒன்று என்ற கணக்கில்தான் இருக்கிறது. ஆகவே இந்தத் தொகை ஏறத்தாழ 300 கோடி ரூபாயாகப் பெருக வேண்டும். அவ்வாறு 300 கோடி ரூபாயாகப் பெருக வேண்டுமென்றால், இன்றைய தினம் உள்ள கால்நடையின் தரத்தை உயர்த்த வேண்டும். அதன் வளர்ச்சியில் அக்கறை செலுத்த வேண்டும். வீடு கட்டுவதில் அக்கறை காட்டுவதுபோல், ரோடு போடுவதில் அக்கறை காட்டுவதுபோல், நெல்வகைகளை உற்பத்தி செய்வதில் அக்கறை காட்டுவதுபோல், உணவுப் பொருள் என்ற அடிப்படை யில் உற்பத்தியைப் பெருக்குவதுபோல், இந்தத் துறையிலும் அக்கறை காட்ட வேண்டும். அந்த அக்கறையைக் காட்ட, இந்த வெட்டுப் பிரேரணையில் இந்த மானியத்தில் கோரியுள்ள தொகையை வெட்டுகின்ற தீர்மானத்தைத் தந்திருக்கின்ற மாண்பு மிகு அங்கத்தினர்கள் அவர்களுக்கு இந்தத் துறையின் வளர்ச்சியில் இருக்கின்ற அக்கறையை எடுத்துக்காட்ட, வெட்டுத் தீர்மானத்தை கை விடுவார்கள் என்று எதிர்பார்த்து, மொத்த ஒத்துழைப்பின் மூலமாக உருவான பணி செய்ய வேண்டும் என்று கேட்டு இந்த மானியக் கோரிக்கையை முன் வைக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு நடைபெறும்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I am not pressing the cut motion because I am feeling terribly hungry.

The cut motion of Thirumathi T. N. Anandanayaki was, by leave, withdrawn.

The cut motions of Thiru A. K. Subbiah, Dr. H. V. Hande and Thiru K. N. Kumaraswami were, by leave of the House, withdrawn.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That Government be granted a sum not exceeding Rs. 3,66,37,600 under Demand No. 18—Animal Husbandry."

**The Demand was put and carried, and the grant was made.**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவில் முடிவுற்று, நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பி.ப. 2-00 பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

6. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

166. Notification issued with Roc. No. 192331/69-E5, dated the 22nd January 1971, in regard to extension of certain provisions of the Tamil Nadu District Municipalities Act, 1920 in the area within the jurisdiction of the Maduranthagam Town Panchayat, of Chingleput District. [Laid on the Table of the House under Section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

*B. Report, Notifications and Other Papers.*

141. Notification isued with G.O. Ms. No. 2296, Revenue, dated the 20th July 1970, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of a settlement deed to be executed by the Bhakthavatsalam Educational Trust, Chingleput.

@ 142 Policy note on Animal Husbandry for the year 1971-72 (Tamil).

@ 143. The Tamil Nadu Court-fees and Suits Valuation (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 23 of 1971) with Annexure.

@ Despatched to Members on 16—7—1971.



## இணைப்பு.

[217-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### கோரிக்கை எண் XVIII

### கால்நடை வளர்ப்பு—கால்நடை மருத்துவக் கல்வி—ஆராய்ச்சித் துறைகள்.

1971-72-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு —ரூ. 3,66,37,600.

கால்நடை இனப்பெருக்க நடைமுறைகளிலும் தீவனப் பழக்க வழக்கங்களிலும் நவீன முறைகளைக் கையாண்டு, கால்நடை நோய்களைத் தடுப்பதிலும் சிகிச்சையளிப்பதிலும் உள்ள வசதிகளை மேலும் உருவாக்குவதன் மூலம் (ஆடுகள், பன்றிகள், கோழிகள், பசுக்கள், எருமைகள் உள்பட) கால்நடைச் செல்வத்தைப் பெருக்குவதும், உயர்ந்த இன மாடுகளை வளர்த்து, உழைக்கும் இழுவை மாடுகளின் ஆற்றலை மேம்படுத்துவதும் கால்நடை வளர்ப்புத் துறையின் முக்கியமான குறிக்கோள்களாகும். சிறந்த வகையில் திட்டமிட்டு அறிவியல் முறைப்படிக் கால்நடைகளை வளர்ப்பது, பால், இறைச்சி, முட்டைகள் முதலிய பொருட்கள் பெருமளவு கிடைப்பதற்கு வழிகோலும்.

கால்நடை வளர்ப்புத் துறை தனது அமைப்பு முறையில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தை 1970-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1-ஆம் நாள் மேற்கொண்டது. அதன்படி அலுவல் அடிப்படையில் இதுகாறும் இத்துறை பணியாற்றி வந்ததற்கு மாறாக, வட்டார அடிப்படையில் இப்போது இத்துறை பணியாற்றி வருகிறது. கால்நடை வளர்ப்புத் துறையின் அலுவல்களைப் பெருமளவு பரவலாக்கி அதன் பல்வேறு பிரிவுகள், நடவடிக்கைகள் பற்றிய பொறுப்பை ஒருங்கிணைத்து சீராக அமைக்கும் நோக்கத்துடன் இத்துறையின் அமைப்பு முறையில் இத்தகைய மாற்றம் செய்யப்பட்டது.

கால்நடை வளர்ப்புத் துறையின் மாற்றி அமைக்கப்பட்ட இந்த அமைப்பு முறையில், மாநிலம் முழுவதற்குமான பொறுப்பை கால்நடை வளர்ப்புத்துறை இயக்குநர் வகிக்கிறார். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்களடங்கிய வட்டாரங்களுக்குப் பொறுப்புடைய வட்டாரத் துணை இயக்குநர்கள் இவருக்கு உதவியாக இருக்கின்றனர். மாநிலம் முழுமைக்கும் பொறுப்பை இயக்குநர் வகிக்கிறார். இவர்கள் தத்தம் அதிகார வரம்பிற்குள் இருக்கிற கால்நடை வளர்ப்புத்துறை அதிகாரிகளையும், பிரிவுகளையும் தம் பொறுப்பில் வைத்துக்கொண்டு, கால்நடை வளர்ப்புத் துறையில் நடவடிக்கைகளை நெறிப்படுத்துகின்றனர். இப்போது சென்னை, வேலூர், கோயம்புத்தூர், தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி இவற்றைத் தலைமையிடமாகக் கொண்டு ஆறு வட்டாரத் துணை இயக்குநர்கள் பணியாற்றுகின்றனர். சென்னை வட்டாரத் துணை இயக்குநரைத் தவிர, கால்நடை வளர்ப்புத் துறையின் ஒவ்வொரு வட்டாரத் துணை இயக்குநருக்கும் உதவுவதற்கென மூன்று வல்லுநர்கள்: கோழி

வளர்ப்பு வல்லுநர் ஒருவர், கால்நடை வல்லுநர் ஒருவர், நோய் ஆய்வுப் பணி வல்லுநர் ஒருவர் உள்ளனர். இவர்கள் கால்நடை சேர்ந்தவராவார். கால்நடை வளர்ப்புத் துறை வட்டாரத் துணை இயக்குநர்களுக்குக் கீழே, உதவி இயக்குநர்கள் உள்ளனர், இவர்கள் வருவாய்க் கோட்டத்திற்கிணையான பகுதியின் பொறுப்பை மேற்கொண்டு, அப்பகுதியில் கால்நடை வளர்ப்பு நடவடிக்கைகள் அனைத்துக்கும் பொறுப்பேற்று நிர்வகித்து வருகின்றனர். இந்த நடவடிக்கைகளின்கீழ் கால்நடை நோய்களுக்குச் சிகிச்சையும், ஆய்வும் மட்டுமல்லாமல் கோழிகள், கால்நடை, ஆடுகள், பன்றிகள் ஆகியவற்றின் வளர்ப்புப் பணி, செயற்கை முறை இனப் பெருக்கப் பணி, மையக் கிராம வளர்ச்சி, மேம்பாட்டுப் பணிகள் ஆகியவையும் அடங்கும். ஒவ்வொரு சமுதாய வளர்ச்சி வட்டாரத்திலும் குறைந்தது ஒரு கால்நடை மருந்தகமாகிலும் இருக்கும். பொதுவாக ஒவ்வொரு சமுதாய வளர்ச்சி வட்டாரத்திலும் கால்நடை உதவி அறுவை மருத்துவர் இருவர் இருப்பர். ஒருவர் கால்நடை மருந்தகத்தில் கால்நடை நோய் மருத்துவத்தையும் மற்றொருவர் கால்நடை நல வளர்ச்சிப் பணியையும் கவனித்துக் கொள்வார்.

ஊராட்சி ஒன்றிய கிராம நிலைகளில் கால்நடை வளர்ப்புத் துறையின் வேலைகளை நல வளர்ச்சிப் பணி அதிகாரி (கால்நடை வளர்ப்பு) கவனிக்கிறார். அந்தந்தப் பகுதியிலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கை, அங்கு ஏற்கெனவே உள்ள கால்நடை வளர்ப்புப் பிரிவுகளின் எண்ணிக்கை, அந்தப் பகுதியில் முன்னரே மேற்கொள்ளப்பட்ட முனைப்புப் பணிகள் முதலியவற்றைப் பொறுத்து, 6 முதல் 10 வரையிலான (அல்லது அதற்கும் அதிகமான) கிராமங்கள் அடங்கிய துணை நிலையங்களின் பொறுப்பை அந்த அதிகாரி மேற்கொண்டு அவற்றைக் கவனித்து வருகிறார். கால்நடை வளர்ப்புத் துறை சீரமைக்கப்படுவதற்கு முன்பு, கால் நடை வளர்ப்புத் துறையின் பல்வேறு நிறுவனங்களால் இதுவரை செய்யப்பட்டு வந்த பணிகள் யாவும் அதாவது மையக் கிராம நிலையங்கள், செயற்கை முறை இனப் பெருக்க நிலையங்கள் முதலியவை செய்து வந்த பணிகள் தற்போது இந்தத் துணை நிலையங்களைத் தம் பொறுப்பில் வைத்துள்ள (கால்நடை வளர்ப்பு) நல வளர்ச்சிப் பணி அதிகாரிகளால் செய்யப்படுகின்றன. இதுவரை கால்நடை மருத்துவப் பணிகள் தனித் தனித் துறைகளில் ஒன்றுக்கொன்று தொடர்பின்றித் தனித்தனியே கவனிக்கப்பட்டு வந்ததற்குப் பதிலாக கால்நடை மருத்துவப் பணி பரவலான அடிப்படையில் அனைத்துமடங்கிய ஒருங்கிணைந்த பணியாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கால்நடை மருத்துவப் பணி, கால்நடை வளர்ப்பு மேம்பாட்டுப் பணிகளின் பலன்களைக் கிராமங்கள் சிறப்பான முறையில் அடையச் செய்வதுதான் இந்த நிர்வாக சீரமைப்பின் நோக்கமாகும்.

இத்துறை சீரமைப்பில் 9 கால்நடை வளர்ப்புப் பண்ணைகள், காட்டுப்பாக்கம் கோழிப்பண்ணை, 39 கோழி இன வளர்ச்சித் திட்ட



நிலையங்கள், 9 மும்முரா கோழி இன வளர்ச்சி வட்டாரங்கள் ஆகியவற்றின் நிர்வாக அமைப்பு எந்தவித மாற்றத்திற்கும் உட்படவில்லை.

இத் துறையின் குறிப்பிடத்தக்க திட்டங்கள், நடவடிக்கைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

### கால்நடை மேம்பாடு.

**தீவனத் தர மேம்பாடு.**—தீவனத் தர மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நவீன முறைகளில் தீவனப் பயிர்களை வளர்ப்பதற்கும், சுழற்சி முறையில் மேய்ச்சல் இருப்பதன் அவசியத்தையும், சிக்கனமாகத் தீவனங்களைப் பயன்படுத்துவது, உபரியாகவுள்ள தீவனங்களைப் பாதுகாப்பது இவற்றின் அவசியத்தையும் தெரிந்துகொள்வதற்காக உழவர்கள் பயிற்சி அளிக்கப்படுகின்றனர். மேம்பாடான பசும்புல் வெளிகள் ஏற்படுத்தப்பட்டன. சிறந்த கால்நடைகள் வளரவேண்டுமாயின், சத்து மிக்கத் தீவனம் கிடைப்பதற்கான வழிவகை செய்யப்பட வேண்டியிருப்பதன் அவசியத்தை உழவர்கள் படிப்படியாக உணரத் தலைப்படுவதற்கு இத் துறை பெரிதும் முயற்சி எடுத்துள்ளது. மையக் கிராமப் பகுதிகளிலும், மும்முரா கால்நடை வளர்ச்சித் திட்டப் பகுதிகளிலும் தீவனப் பொருட்களை உற்பத்தி செய்வதை பொறுத்த மட்டில் ஏற்கெனவே ஏற்பட்டுள்ள மாபெரும் முன்னேற்றத்தைக் கருத்திற்கொண்டும், தீவனப் பயிர்களைப் பயிரிடுவதன் தேவையையும், முக்கியத்துவத்தையும் குறித்து உழவர்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியதாலும், மையக் கிராமப் பகுதிகளிலும், மும்முரக் கால்நடை வளர்ச்சித் திட்டப் பகுதிகளிலும், தீவன உற்பத்திக்குக் கடனும் உதவித் தொகையும் வழங்குவதை அரசு நிறுத்திவிட்டது. மேலும் தீவன மேம்பாட்டுப் பணி வேளாண்மைத் திட்டத்தில் அடங்கிய ஒரு பணியாக அமைந்தால் மேலும் பயனுள்ளதாயிருக்கும் என்று அரசு கருதி, தீவன மேம்பாட்டுப் பணியை வேளாண்மைத் துறைக்கு மாற்றியது. இருப்பினும், கால்நடை வளர்ப்புத் துறையைச் சேர்ந்த கால்நடை வளர்ப்புப் பண்ணைகளில் அதிகப் பரப்பில் தீவனப் பயிர்களைப் பயிரிட பல்வகையான பாசன வசதிகளுக்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. வெளியார்களிடமிருந்து தீவனம் வாங்கும் செலவு குறைவதுடன் கால்நடைகளுக்குப் போதிய சத்துணவு கிடைக்கவும் வழியுண்டு.

**மையக் கிராமத் திட்டம்.**—கால்நடை இனப் பெருக்கத்தில் சிறந்தவையென மெய்ப்பிக்கப்பட்ட நவீன முறைகளைக் கையாண்டு கால்நடைத் தீவன நிர்வாக முறைகள், நோய்க்கட்டுபாடு விற்பனை போன்றவற்றையும் அவ்வாறே நவீன முறைகளில் மேற்கொண்டு, முனைப்பாகக் கால்நடைகளை வளர்ப்பதுதான் மையக் கிராமத் திட்டத்தின் நோக்கமாகும். 1970-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1-ஆம் நாளிலிருந்து இத்துறை சீரமைக்கப்பட்டதன் விளைவாக, இத் திட்டம் இத்துறையின் பொது நடவடிக்கைகளோடு இணைக்கப்பட்டது. ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பின்கீழ் திறக்கப்பட்ட துணை நிலையங்களிடமும், இத்துறைப்

பொறுப்பின்கீழ் உள்ள கால்நடை மருந்தகங்களிடமும் மையக் கிராமப் பணியும் செயற்கைக் கருத்தரிப்புப் பணி முதலியனவும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இச் சிறப்புத் திட்டம் தனது முன்னுரிமை உணர்வையும் தனிப்பட்ட தன்மையையும் இழந்து விட்டதாலும், கால்நடை வளர்ப்பு துறையின் பொது நடவடிக்கைகளோடு ஒன்றிவிட்டதாலும், அரசு இதனை ஆராய்ந்து பார்த்து சீரமைக்கப்பட்ட அமைப்பிலும்கூட மையக் கிராமத் திட்டத்தின் கீழ் பணிகளை மும்முரப்படுத்துவதென அரசு முடிவு செய்தது. அப்போதுதான், இத் திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்தே இதன்கீழ் விரைவாக ஏற்பட்ட முன்னேற்றத்தை நிலை நிறுத்தி நீடுற மேம்படுத்த முடியுமென்று அரசு கருதியது. அதற்கிணங்க முன்பிருந்த மையக் கிராமப் பகுதிகளில் 21 கால்நடை மருந்தகங்கள்/கால்நடை மருத்துவ மனைகள்—மையக் கிராம நிலையங்கள் ஆகியவற்றைத் திறப்பதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. முன்பிருந்த மையக் கிராமப் பகுதிகளில் 56 கால்நடை மருந்தகங்கள்/கால்நடை மருத்துவமனை/மையக் கிராம நிலையங்கள் ஆகியவற்றை மேம்படுத்தி, அவற்றின் பெயரைக் கால்நடை மருந்தகங்கள்/கால்நடை மருத்துவ மனைகள் மையக் கிராம நிலையங்கள் என்று மாற்றியமைத்தது. இதற்காக, 21 கால்நடை உதவி அறுவை மருத்துவர் பதவிகள், 98 கால்நடை உதவியாளர் பதவிகள் (நிலை—I), 98 பொலி காளைப் பணியாளர் பதவிகள் ஆகியவற்றிற்கும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

### கால்நடை வளர்ச்சி மும்முரத் திட்டம்

வேளாண்மை உற்பத்தி முனைப்புத் திட்டத்தின் அடிப்படையில் அமைந்த இத்தகைய கால்நடை வளர்ச்சித் திட்டங்கள், பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காக நல்ல தரம் வாய்ந்த கறவையினங்களை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன. செங்கற்பட்டு, மதுரை, கோவை ஆகிய இடங்களில் மூன்று மும்முரக் கால்நடை வளர்ப்புத் திட்டப் பகுதிகள் ஏற்படுத்தப்பட்டன. கால்நடை மேம்பாடு, தீவனம், நோய்க் கட்டுப்பாடு பாற்பண்ணை வளர்ச்சிப் பணி அனைத்தையும் ஒருசேர ஒருங்கிணைத்து எல்லா வகையிலும் மும்முரப்படுத்துவதே இத் திட்டத்தின் நோக்கமாகும். ஒவ்வொரு திட்டப் பகுதியிலும், இனப் பெருக்கப் பருவமுள்ள ஒரு லட்சம் ஆவினங்கள், எருமைகள் வளர்க்கப்படுகின்றன.

1970 ஜனவரி 1-ம் நாளிலிருந்து இந்தத் துறை சீரமைக்கப்பட்டதன் விளைவாக மையக் கிராமத் திட்டத்தைப் போன்று, இத் திட்டமும், கால்நடை வளர்ப்புத் துறையின் பொது நடவடிக்கைகளோடு இணைக்கப்பட்டது. ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பின்கீழ் ஏற்படுத்தப்பட்ட துணை நிலையங்களிடமும், இத் துறை பொறுப்பின்கீழ் ஏற்படுத்தப்பட்ட கால்நடை மருந்தகங்களிடமும் மும்முரக் கால்நடை வளர்ச்சித் திட்டப்பணி ஒப்படைக்கப்பட்டது.

இருப்பினும், இது குறித்து 1970 அக்டோபரில் அரசு கவனமுடன் ஆராய்ந்து பார்த்து, இம்மாநிலத்தில், கால்நடை, கால்நடை



வளர்ப்பு, இவற்றின் எதிர்கால வளர்ச்சியை முன்னிட்டு மும்முரக் கால்நடை வளர்ச்சித் திட்டப் பகுதிகளில் செய்யப்பட்டு வந்த பணிகள் தொடர்ந்து நடைபெறுவது அவசியமாகும் என்று முடிவு செய்தது. மேலும் இப்பகுதிகளுக்குச் சாதனங்கள் வாங்குவதற்காகப் பெருந் தொகை ஏற்கனவே செலவழிக்கப்பட்டுள்ளது. சீரமைக்கப்பட்ட அமைப்பில் இவற்றைப் பயன்படுத்துவதற்காகத் தகுந்த நிர்வாக ஏற்பாடுகள் செய்யப்படவில்லையெனில் இந்தச் சாதனங்கள், பயனற்றுப்போய் வீணாகும். அதற்காகவே, முன்னாள் மும்முரக் கால்நடை வளர்ச்சித் திட்டப் பகுதிகளைச் சேர்ந்த 60 கால்நடை மருந்தகங்களில்/கால்நடை மருத்துவ மனைகளில் எதிர்பார்க்கும் அளவுக்குக் கால்நடை வளர்ப்புப் பணியை மும்முரமாக மேற்கொள்வதற்காக 60 கால்நடை உதவியாளர்கள் (நிலை I) 60 பொலிகாளைப் பணியாளர்கள் நியமிக்கப்படுவதன்மூலம் அவை வலுப்படுத்தப்பட்டன. இந்த நிறுவனங்கள் இப்போது கால்நடை மருந்தகங்கள்/கால்நடை மருத்துவ மனை மையக் கிராம நிலையங்கள் என்று மாற்றிப் பெயரிடப்பட்டன.

### ஆனிரைக் காப்பகத் திட்டம்
(Goshala Development Scheme)

கால்நடை இனப் பெருக்கத் துணை நிலையங்களாகவும், பொது அற நிலையங்களில் பாற் பண்ணைச் சிறு பிரிவுகளாகவும் அமைந்து பணியாற்றுவதே ஆனிரைக் காப்பகத் திட்டத்தின் நோக்கமாகும். தெரிந்தெடுக்கப்பட்ட ஒவ்வோர் ஆனிரைக் காப்பகத்திற்கும் 10 பசுக்களும், ஏற்புடைத்த சிறந்த இனக்காளை ஒன்றும் இலவசமாகக் கொடுக்கப்படுகின்றன. இதே எண்ணிக்கையில் கால்நடைகளைத் தங்கள் பங்குக்கு வாங்கிக்கொள்ளுமாறு இந்த நிறுவனம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. கட்டட உதவித் தொகை, பேணுதல் உதவித் தொகை ஆகியவையும் வழங்கப்படுகின்றன. 1969-70-ல் 20 ஆனிரைக் காப்பகங்கள் இருந்தன. மேலும், ஆனிரைக் காப்பகங்கள் இரண்டினுக்கு 1970-71-ல் உதவி வழங்கப்பட்டது. பொது நிறுவனங்களிலிருந்து உதவியளிக்குமாறு கோரிக்கை பெருகுவதை கருத்தில் கொண்டு இத்திட்டத்தின்கீழ் மேலும் இரு நிறுவனங்களுக்கு இவ்வாண்டு நிதி உதவி நல்குவதெனத் திட்டமிடப்பட்டுள்ளது.

### கால்நடைப் பண்ணைகள்

இம்மாநிலத்தின் கால்நடையின் தரத்தை மேம்படுத்துவதற்குத் தேவைப்படும் அடிப்படைக் கால்நடை வளத்தைப் பெருக்குவதற்காக, சிறந்த இன முறையிலும், கலப்பின முறையிலும் இனப் பெருக்கப் பணி, ஓசூர், புதுக்கோட்டை, ஒரத்தநாடு, அபிஷேகப் பட்டி, செட்டிநாடு, உதகமண்டலம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட ஆறு கால்நடைப் பண்ணைகளில் மேற்கொள்ளப்படுகிறது. இவ்விடங்களில் காங்கேயம், புலிக்குளம், உம்பளாச்சேரி, ஹலிகார், ஆலம்பாடி போன்ற பாரமிழுக்கும் மாடுகளும், சிந்தி, முர்ரா, ஜெர்சி, தார்பார்கார், கிர் ஆகிய புகழ் மிக்க கறவையினங்களும் வளர்க்கப்பட்டு, பேணப்பட்டு, தனிப்பட்டவர்களுக்கும், உழவர்களுக்கும் அரசு, தனியார் நிறுவனங்களுக்கும் வழங்கப்படுகின்றன.

1968–69, 1969–70, 1970–71 ஆண்டுகளில் (1971-ம் ஆண்டு சனவரி திங்கள் வரையில்) இந்தக் கால்நடை பண்ணைகளில் கிட்டும் பாலின் அளவைக் கீழ்க்காணும் புள்ளி விவரங்கள் தெரிவிக்கும் :—

| பண்ணையின் பெயர். | கறக்கப்பட்ட பால் (கிலோகிராமில்) | | |
|---|---|---|---|
| | 1968–69. | 1969–70. | 1970–71 (1971 ஜனவரி வரை). |
| 1 மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஓசூர். | 3,74,958 | 3,39,177 | 3,28,985 |
| 2 மாவட்டக் கால்நடைப் பண்ணை, புதுக்கோட்டை. | 2,53,788 | 2,34,717 | 2,41,730 |
| 3 மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஒரத்தநாடு. | 4,29,509 | 3,98,888 | 3,23,766 |
| 4 மாவட்டக் கால்நடைப் பண்ணை, செட்டிநாடு. | 1,25,407 | 1,36,083 | 1,11,181 |
| 5 மாவட்டக் கால்நடைப் பண்ணை, அபிஷேகப்பட்டி. | 84,474 | 92,076 | 58,152 |
| 6 மாவட்டக் கால்நடைப் பண்ணை, உதகமண்டலம். | 1,75,473 | 1,30,181 | 75,026 |
| மொத்தம் .. | 14,43,609 | 13,31,122 | 11,38,840 |

இப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்ட தீவனங்களின் அளவை கீழ்க்காணும் விவர அறிக்கை காட்டும் :—

| பண்ணையின் பெயர். | 1968–69. | 1969–70. (கிலோகிராமில்) | 1970–71 (1971 ஜனவரி வரை). |
|---|---|---|---|
| 1 மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஓசூர். | 14,78,685 | 25,62,629 | 28,46,410 |
| 2 மாவட்டக் கால்நடைப் பண்ணை, புதுக்கோட்டை. | 55,94,108 | 52,67,718 | 42,73,627 |
| 3 மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஒரத்தநாடு. | 29,74,107 | 32,37,521 | 25,70,157 |
| 4 மாவட்டக் கால்நடைப் பண்ணை, செட்டிநாடு. | 7,00,298 | 13,81,975 | 11,40,546 |
| 5 மாவட்டக் கால்நடைப் பண்ணை, அபிஷேகப்பட்டி. | 6,24,607 | 5,94,013 | 2,76,422 |
| 6 மாவட்டக் கால்நடைப் பண்ணை, உதகமண்டலம். | .. | 1,91,388 | 3,27,270 |
| மொத்தம் .. | 1,13,71,805 | 1,32,35,244 | 1,14,34,432 |

இப்போது வெளியிடங்களிலிருந்து தீவனங்கள் வாங்குவதால் ஏற்படும் செலவைக் குறைக்க பண்ணைகளில் அதிகப்படியான நிலங்களில் தீவனப்பயிர் வளர்ப்புத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் கால்நடைப் பண்ணைகள் எல்லாவற்றிலும் மண் வளப் பாதுகாப்பு வேலை, கிணறுகள், துளைக் கிணறுகள் தோண்டுதல், விசையேற்றங்கள் நிறுவுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.





இந்த ஆறு கால்நடைப் பண்ணைகளைத் தவிர, (சின்ன சேலம், சாத்தூர் ஆகிய இடங்களில் செம்மறியாட்டுப் பண்ணைகள் இரண்டும் காட்டுப்பாக்கத்தில் கோழிப்பண்ணை ஒன்றும், அலமாதியில் பால்வற்றிய ஆவினங்களைப் பேணுவதற்காக ஒரு பண்ணையும் உள்ளன. அலமாதியில் மத்திய எருமை வளர்ப்புப் பண்ணையொன்றை ஏற்படுத்துவதென மத்திய அரசு முடிவெடுத்து அலமாதி பண்ணையிலுள்ள நிலம், கட்டிடம், சாதனம் அனைத்தையும் அப்படியே தருமாறு மத்திய அரசு கேட்டதால், மத்திய எருமைப் பண்ணையைத் தொடங்குவதற்காக தற்போதுள்ள நிலத்தையும் கட்டிடங்களையும் இந்திய அரசிற்குக் கொடுக்க இம்மாநில அரசு ஒப்புக் கொண்டுள்ளது. தற்போது அலமாதியில் உள்ள பால்வற்றிய ஆவினங்களைப் பேணும் பண்ணை அருகாமையில் உள்ள மற்றோரிடத்திற்கு மாற்றப்படும். இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத் திட்டம் விரைவில் உருப் பெறும்:

## செம்மறியாடு வளர்ப்பு

அதிக அளவில் செம்மறியாடு வளர்க்க வேண்டுமென்னும் ஆர்வத்தை மக்களிடையே பெருக்கவும் உயர் ரக செம்மறியாடு உற்பத்தி செய்ய வேண்டுமென்கிற ஆர்வத்தை ஆடு வளர்ப்பவர்களிடம் ஏற்படுத்தவும், சின்ன சேலம், சாத்தூர் ஆகிய இடங்களில் உள்ள செம்மறியாட்டுப் பண்ணைகளிலும், ஓசூர், செட்டிநாடு, புதுக்கோட்டை, அபிஷேகப்பட்டி ஆகிய இடங்களில் உள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணைகளைச் சேர்ந்த செம்மறியாட்டு பிரிவுகளிலும், செம்மறியாட்டுக் கடாக்கள் வளர்க்கப்படுகின்றன.

இந்தப் பண்ணைகளில் வளர்க்கப்பட்ட ஆட்டுக்குட்டிகள், இனப் பெருக்கத்திற்காக அனுப்பப்பட்ட ஆடுகள் இறைச்சிக்காக விற்பனை செய்யப்பட்ட ஆடுகள் இவற்றின் எண்ணிக்கையைக் கீழ்க்காணும் புள்ளி விவர அறிக்கை காட்டுகிறது.

| | 1968–69. | 1969–70. | 1970–71 (1970 டிசம்பர் வரை.) |
|---|---|---|---|
| வளர்க்கப்பட்ட ஆட்டுக்குட்டிகளின் எண்ணிக்கை. | *5,243 | 3,075 | 1,603 |
| இனப்பெருக்கத்திற்காக அனுப்பப்பட்ட ஆடுகளின் எண்ணிக்கை. | 4,249 | 920 | 618 |
| இறைச்சிக்காக வெட்டப்பட விற்பனைக்கு அனுப்பிய ஆடுகளின் எண்ணிக்கை. | 2,122 | 2,050 | 618 |

மேற்சொன்ன துறைப் பிரிவுகளைத் தவிர, 9 செம்மறியாட்டுக் கூட்டுறவுச் சங்கங்களும், செம்மறியாட்டு இனவளர்ச்சி—கம்பளி நெசவுக் கூட்டுறவுச் சங்கங்களும் இம் மாநிலத்தில் செயல்படுகின்றன.

* இப்போது சென்னை, கால்நடைக் கல்வி–ஆராய்ச்சி இயக்குநர் பொறுப்பில் உள்ள காட்டுப்பாக்கம், உதகமண்டலம் செம்மறியாட்டுப் பண்ணைகளில் உள்ளவையும் இவ்விவர அறிக்கையில் அடங்கும்.

[1971 ஜூலை 19

மேலும் சில கூட்டுறவுச் சங்கங்களை வேளாண்மை மறு நிதிக் கழகம் தரும் நிதி உதவியுடன் தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. இது நடப்பாண்டில் உருப்பெறும்.

செம்மறியாடுகளின் குடல்களை நல்ல வளர்ச்சிபெறச் செய்வதன் மூலம் அறுவை மருத்துவத்தில் தையலுக்கான நரம்புகள் தயாரிக்கவும், குழம்பு தயாரிக்கவும், இறைச்சியின் தரம் உயரவும், பெருவாரியாகச் செம்மறியாடுகளுக்கு மருந்து புகட்டும் திட்டம் மாநிலம் முழுவதும் நடப்பாண்டில் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மேலும் ஒட்டுண்ணி நோய் அடிக்கடி ஏற்பட்டு செம்மறியாடுகள் மரித்து வருவதும் இதனால் பெரிதும் குறையும்.

## கோழி இன வளர்ச்சி

மக்களிடையே, கோழி வளர்க்கும் ஊக்கத்தையும் ஆர்வத்தையும் முழு அளவுக்குத் திரட்டி, உணவுத் தட்டுப்பாடு, புரதச் சத்துக் குறைவு ஆகியவற்றைப் போக்கவும் மாநிலத்தில் கோழி இன வளர்ச்சிக்குச் சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இன வளர்ச்சிக்கும் கோழிகள், கோழிக் குஞ்சுகள், முட்டைகள் ஆகியவைகளை வழங்கவும், நோய் எதிர்ப்புச் சக்தியும் அதிக முட்டையிடும் ஆற்றலும் உடைய உயர்ந்த இனக் கோழிகள் பெருகிடச் செய்யவும், காட்டுப்பாக்கத்தில் ஒரு கோழிப்பண்ணை, கால்நடைப் பண்ணைகளில் உள்ளவற்றையும் சேர்த்து 39 கோழி வளர்ச்சி நிலையங்கள், 9 மும்முரா கோழி வளர்ப்பு வட்டாரங்கள் (ஓசூர் மாவட்டக் கால்நடைப் பண்ணையில் உள்ள அதிக அளவில் குஞ்சு பொரிக்கும் நிலையம் உட்பட) 3 குஞ்சு பொறிக்கும் நிலையங்கள், 2 கோழி இரை உற்பத்தி நிலையங்கள் ஆகியவற்றை இத்துறை வைத்துள்ளது.

கோழி இன வளர்ச்சி நிலையங்களும், குஞ்சுபொரிப்பு செய்த பணிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

### கோழி இன வளர்ச்சி நிலையங்கள்

| | 1968–69 (74 கோழி இனவளர்ச்சி நிலையங்கள்). | 1969–70 (39 கோழி இனவளர்ச்சி நிலையங்கள்). | 1970–71 (1970 டிசம்பர் வரை.) (39 கோழி இனவளர்ச்சி நிலையங்கள்). |
|---|---|---|---|
| பொரித்த குஞ்சுகளின் எண்ணிக்கை .. .. | 3,11,710 | 2,27,100 | 1,89,012 |
| வளர்ப்பதற்கான விற்பனை செய்யப்பட்ட குஞ்சுகளின் எண்ணிக்கை .. .. .. | 82,405 | 1,06,280 | 46,442 |
| இறைச்சிக்காக விற்பனை செய்யப்பட்ட குஞ்சுகளின் எண்ணிக்கை .. .. .. | 70,165 | 62,339 | 59,405 |



1971 ஜூலை 19]

| | | | |
|---|---|---|---|
| மற்ற பிரிவுகளுக்கு மாற்றப்பட்ட குஞ்சுகளின் எண்ணிக்கை .. | 1,31,475 | 56,054 | 43,794 |
| இடப்பட்ட முட்டைகளின் எண்ணிக்கை .. .. .. | 32,56,158 | 35,48,254 | 26,93,690 |
| குஞ்சு பொரிப்புக்காக விற்பனையான முட்டைகளின் எண்ணிக்கை .. .. .. | 1,07,055 | 72,069 | 1,30,171 |
| உணவுக்காக விற்பனையான முட்டைகளின் எண்ணிக்கை .. | 18,30,647 | 15,08,781 | 13,91,398 |
| குஞ்சு பொரிப்புக்காக வைக்கப்பட்ட முட்டைகளின் எண்ணிக்கை .. .. | 6,52,150 | 8,14,342 | 6,13,152 |
| மற்ற பிரிவுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட முட்டைகளின் எண்ணிக்கை— .. | 8,48,382 | 11,02,733 | 7,96,117 |
| குஞ்சுகளுக்கு உணவாகக் கொடுக்கப்பட்ட உடைந்த முட்டைகளின் எண்ணிக்கை .. | 32,527 | 23,715 | 14,106 |

### குஞ்சு பொரிக்கும் நிலையங்கள்.

| | 1968–69. | 1969–70. | 1970–71 (1970 டிசம்பர் வரை.) |
|---|---|---|---|
| உற்பத்தி செய்யப்பட்ட குஞ்சுகளின் எண்ணிக்கை .. .. | 1,39,147 | 1,14,737 | 1,80,299 |
| கோழி வளர்ப்பவர்களுக்கு விற்பனையான குஞ்சுகளின் எண்ணிக்கை .. .. | 22,170 | 59,809 | 94,173 |
| மற்ற பிரிவுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட குஞ்சுகளின் எண்ணிக்கை .. .. | 86,054 | 49,663 | 39,196 |
| இறைச்சிக்காக விற்பனை செய்யப்பட்ட கோழிக் குஞ்சுகளின் எண்ணிக்கை .. .. | 25,800 | 2,122 | 1,472 |

கோழிகளுக்கும் கோழிக் குஞ்சுகளுக்குத் தேவையான எல்லா சத்துக்களும் அடங்கிய தயார் நிலையிலுள்ள கோழி இரை சிறு அளவில் கோழி வளர்ப்பவர்களுக்குக் கிடைப்பதில்லை. தயார் நிலையில் உள்ள கோழி இரை அதிக அளவில் தேவைப்படுவதைச் சமாளிக்க சென்னை, அரசூர் (கோயம்புத்தூருக்கு அருகில் உள்ளது) ஆகிய இடங்களில் உள்ள இரண்டு கோழி இரை உற்பத்திப் பிரிவுகள், வெந்த கூலம், தவிடு முதலியவற்றின் கலவையை கோழிகளுக்காகவும் கோழிக் குஞ்சுகளுக்காகவும் தனித்தனியே உணவாகத் தயாரித்து கோழி வளர்ப்பவர்களுக்கும் கோழி வளர்ப்புத்துறைப் பிரிவுகளுக்கும் ஆதாயம்-விரயம் இல்லாத அடிப்படையில் வழங்குகின்றன. உலக உணவுத் திட்ட அதிகாரிகள் மற்ற நாடுகளிலிருந்து இலவசமாக மக்காச் சோளம் தருவித்து இரைக் கல்வைப் பிரிவுகளுக்கு அளித்து வருகின்றனர். மக்காச் சோளம்

லிற்றுமுதல் இம் மாநிலத்தில் கோழி இன வளர்ச்சிக்குப் பயன் படுத்தப்படவேண்டுமாதலால் உணவுத் திட்ட நிர்வாகிகள் வாயிலாகக் கிடைக்கும் தொகைகளுக்குத் தனிக் கணக்கு வைக்கப் படுகிறது. கோழி இரைகளை விரைவாக வழங்கவும், கொள்முதல் செய்யவும், உணவுக் கலவையை இப்பிரிவுகளுக்கு எடுத்துச் செல்ல வும் இயலும் வகையில் ரூ. 60,000 செலவில் இரண்டு பொருள் ஒப் படை வண்டிகள் இரண்டினை வாங்குவதற்கு ஒப்பளிப்பு வழங்கப் பட்டுள்ளது. அரசூரில் உள்ள இரை தயாரிப்புப் பிரிவு ஈரோட் டிற்கு மாற்றப்படுகிறது.

இந்த இரைக் கலவைப் பிரிவுகளில் தயாரிக்கப்பட்ட கோழித் தீவனத் தூள் முதலியவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன :—

| | 1968–69. | 1969–70. | 1970 71 (1970 டிசம்பர் வரை.) |
|---|---|---|---|
| | | (டன்களில்) | |
| உள்ளூரில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு தயாரிக்கப் பட்ட கோழித் தீவனத்தூள் .. | 1,248 | 1,354 | 1,168 |
| உலக உணவுத் திட்ட மக்காச் சோளத்தைக் கொண்டு தயாரிக்கப்பட்ட கோழித் தீவனத்தூள் .. .. | 858 | 909 | 1,047 |

கிராமப் பகுதிகளில் கோழி இன வளர்ச்சியைப் பெருக்கவும், குடியானவர்களுக்குக் கூடுதலான வருவாய் கிடைக்கச் செய்யவும், குடியானவர்களுக்குக் குறைந்த விலையில் கோழிகள் வழங்கும் முன்னோடித் திட்டத்திற்கு 1970 செப்டம்பரில் அரசு அனுமதி வழங்கியது. இத்திட்டத்தின்படி, ஒவ்வொரு வட்டாரத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட 500 குடியானவர்களுக்கு 8 முதல் 12 வாரங்கள் வளர்ச்சிப் பெற்ற ரூ. 3.50 மதிப்புள்ள நான்கு இளம் பெட்டைக் கோழிக் குஞ்சுகளும், ரூ. 3 மதிப்புள்ள ஒரு சேவற் குஞ்சும் கோழி ஒன்று ரூ. 2 என்ற குறைந்த விலையில் வழங்கப் படும். இத்துறையைச் சேர்ந்த கோழி இன வளர்ச்சி நிலையங்கள், கோழிப் பண்ணைகள், குஞ்சுப் பொரிப்பு நிலையங்கள் இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட குடியானவர்களுக்கு இவ்வகைக் கோழிக் குஞ்சுகளை வழங்கும் திட்டம் இம்மாநிலத்திலுள்ள நான்கு ஊராட்சி ஒன்றியங்களில் அதாவது திருச்சிராப்பள்ளி மாவட்டத் தைச் சேர்ந்த திருவரங்குளம், வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த கீழ்பெண்ணாத்தூர், தென் ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த மேல்மலையனூர், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த திருபுவனம் ஆகிய இடங்களில் 1970-ம் ஆண்டு டிசம்பர் திங்களி





லிருந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. குடியானவர்கள் இதனால் பெறும் முன்னேற்றத்தைக் கண்ணுற்ற பிறகு, இத்திட்டம் மற்ற ஊராட்சி ஒன்றியங்களிலும் செயற்படுத்தப்படும்.

செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள குன்றத்தூர், சித்தலப்பாக்கம் வட்டாரங்களைச் சேர்ந்த ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள கோழி வளர்ப்பவர்களுக்கு முட்டை உற்பத்தியாளர் சங்கம் ஏற்படுத்துவதற்கான திட்டம் ஒன்றிற்கும் அரசு அனுமதி வழங்கி யுள்ளது. இங்குள்ள கோழி வளர்ப்பவர்களுக்கு வணிக வங்கி களிலிருந்து ரூ. 6,000 வரை கடனுதவி அளிக்கப்படுகிறது.

முட்டைகளும் கோழிகளும் வேண்டுமென மக்கள் பெருவாரியாகக் கேட்பதால் அத்தேவையைச் சமாளிக்க ரூ. 0.50 லட்சம் செலவில் உயர் இனக் கோழிகளை வாங்கி, துறையைச் சேர்ந்த கோழி இன வளர்ச்சி நிலையங்கள், கோழிப்பண்ணைகள் ஆகியவற்றிற்கு வழங்கத் திட்டமிட்டுள்ளது. பல்வேறு திட்டங்களின் கீழ் வளர்ச்சிப் பணிகளுக்காக அதிக அளவு முட்டையிடும் கோழி வகைகளை வளர்ப்பதற்காகவே இவ்வாறு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆதாயமிக்க அடிப்படையில் முட்டை உற்பத்தியைப் பெருக்கும் வகையில் தற்போதுள்ள கோழி இன வளர்ச்சி நிலையங்களில் பெட்டைக் கோழிகளின் எண்ணிக்கையை 1,000 ஆக உயர்த்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டியதன் அவசியத்தையும் மக்களுக்கு புரதச் சத்து நிறைந்த உணவு வழங்க வேண்டியதன் அவசியத்தையும் கருத்திற் கொண்டு, இம் மாநிலத்தில் கோழி இன வளர்ச்சிக்கான பல்வேறு செயற்குறிப்புகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

## பன்றி வளர்ப்பு

கலப்பு இனப் பெருக்கம் செய்வதன் மூலம் உள்ளூர்ப் பன்றி களின் தரத்தை உயர்த்துவதற்காக, ஓசூர், புதுக்கோட்டை, செட்டி நாடு, ஒரத்தநாடு, அபிஷேகப்பட்டி ஆகிய இடங்களில் உள்ள கால் நடைப் பண்ணைகளிலுள்ள பன்றி வளர்ப்புப் பிரிவுகளில் யார்க்ஷயர் வெள்ளைப் பன்றிகள் பேணி வரப்படுகின்றன. 1—1—1970-லிருந்து இத்துறை சீரமைக்கப்பட்டதன் விளைவாக, அலமாதியில் உள்ள பன்றி வளர்ப்புப் பண்ணை, அலமாதி பால் வற்றிய ஆவினங்களைப் பேணும் பணையுடன் இணைக்கப்பட்டது.

[1971 ஜூலை 19

இந்தப் பன்றி வளர்ப்புப் பிரிவுகளில் வளர்க்கப்பட்ட, விற்பனை செய்யப்பட்ட பன்றிகளின் விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன:—

| | 1968–69. | 1969–70. | 1970–71 (1970 டிசம்பர் வரை). |
|---|---|---|---|
| வளர்க்கப்பட்ட பன்றிக் குட்டிகளின் எண்ணிக்கை .. | 2,075 | 1,607 | 1,006 |
| வளர்ப்பதற்காக விற்கப்பட்ட பன்றிகளின் எண்ணிக்கை .. | 1,595 | 1,031 | 891 |
| இவ்வாண்டு இறுதியில் இருந்த பன்றிகளின் எண்ணிக்கை .. | 1,349 | 1,198 | 975 (31–12–1970 நிலவரம்) |

## கால்நடை மருத்துவப் பணிகளும் நோய்க் கட்டுப்பாடும்

### கால்நடை மருத்துவ மனைகளும் மருந்தகங்களும்.

எளிதில் பரவும் பல்வேறு நோய்களினின்றும் தொற்று நோய்களினின்றும் கால்நடை, கோழிகள் ஆகியவற்றைப் பாதுகாத்து பேணுவதும், பொதுவாக ஏற்படுகிற நலிவுகளைக் குணப் படுத்துவதும் இத்துறையைச் சேர்ந்த கால்நடை மருத்துவ மனைகளின் பெரும் பணியாகும். இத்துடன் தொற்றுநோய் பீடித்துள்ள பகுதிகளைச் சுற்றிலும் அவை மேலும் பரவா வண்ணம் தடுக்கும் பொருட்டு, பெருவாரியாக நோய்த் தடுப்பூசியும் போடப்படு கின்றன. பயனற்ற எருதுகளுக்குக் காயடித்தல், கூட்டுறவு பால் வழங்கு சங்கங்கள், ஆனிரைக் காப்பகங்கள், சிறைச்சாலைகள், மருத்துவ மனைகள் ஆகியவற்றைச் சேர்ந்த கறவை மாடுகளைச் சோதித்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டு, கால்நடைத் துணை அறுவை மருத்துவர்கள் அவற்றின் உடல் நலத்தையும் சோதித்தும் பார்க்கின்றனர். நோயால் பீடிக்கப்பட்டு உடல் நலிவுற்ற கால் நடை இறைச்சிகளை மக்கள் உணவாகக் கொள்வதைத் தடுக்கும் பொருட்டு, கால்நடை துணை அறுவை மருத்துவர்கள் இப்போ நிலத்திலுள்ள ஆடு, மாடு வெட்டும் தொட்டிகளுக்குச் சென்று கால்நடைகள் வெட்டப்படுமுன்பும் பின்பும் அவற்றைச் சோதித்து பார்க்கின்றனர்.

சீரமைக்கப்பட்ட இத்துறையின் அமைப்பு முறையில், 35 கால் நடை மருத்துவ மனைகளும், 466 கால்நடை மருந்தகங்களும், 13 மருத்துவ ஆய்வுக் கூடங்களும் உள்ளன. இத்துடன், ஊராட்சி ஒன்றியப்பகுதிகளில் 1,918 துணை நிலையங்களும், பல்வேறு நகராட்சிகளிலும், சென்னை மாநகரிலும் ஆக 22 துணை நிலையங் களும் உள்ளன. இத்துடன், மேலும் ஐந்து மருந்தகங்கள் முறையே தென் ஆர்க்காடு மாவட்டம் நெய்வேலியிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஆதனக் கோட்டையிலும், கோயம்புத்தூர் மாவட்டம்



1971 ஜூலை 19]

பெத்தப்பம்பட்டியிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம் முசிரி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த புலிவலத்திலும், கோயம்புத்தூர் மாவட்டம் சுண்டக்காம்பாளையத்திலும் திறக்கப்பட்டன.

நோய் கண்டு சிகிச்சை அளிக்கப்பட்ட ஆடு மாடுகளின் எண்ணிக்கை, கவனிக்கப்பட்ட நோய்கள், நோய்த்தடுப்பூசி போடப்பட்டுள்ள ஆடு மாடுகளின் எண்ணிக்கை ஆகியவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | 1968–69. | 1969–70. | 1970–71. (1970 டிசம்பர் வரை.) |
|---|---|---|---|
| நோய் கண்டு சிகிச்சையளிக்கப் பட்ட ஆடு மாடுகளின் எண்ணிக்கை .. .. .. | 593 | 380 | 548 |
| அறிவிக்கப்பட்ட நோய்களின் எண்ணிக்கை .. .. | 10 | 12 | 10 |
| நோய்த்தடுப்பூசி போடப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை | 55,04,830 | 35,90,184 | 28,28,350 |
| சிகிச்சை அளிக்கப்பட்டவற்றின் எண்ணிக்கை .. .. | 15,81,508 | 19,35,814 | 16.62,785 |
| காயடிக்கப்பட்டவையின் எண்ணிக்கை .. .. .. | 1,68,521 | 1,71,840 | 1,44,888 |
| சோதனையிடப்பட்ட மாதிரிப் பொருட்களின் எண்ணிக்கை .. | 1,18,687 | 84,766 | 68,685 |
| செய்யப்பட்ட செயற்கை கருத் தரிப்புகளின் எண்ணிக்கை .. | 6,99,730 | 6,94,613 | 4,04,993 |

### கோமாரி ஒழிப்புத் திட்டம்.

ஒரு முனைப்பாக மேற்கொண்ட முயற்சிகளினாலும் பெரு வாரியாக நோய்த் தடுப்பு ஊசி போடப்பட்டதினாலும், இந்நோய் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்நாட்டின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு கால்நடைகள் போவதனால் பரவக்கூடிய இந்நோயினைத் தடுப்பதற்காக, மாநில எல்லைகளில் மூன்று சோதனைச் சாவடிகளும், இரண்டு கண்காணிப்புப் பிரிவுகளும், மத்திய அரசு பொறுப்பில் அமைப்பதற்கான திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மூன்று சோதனைச் சாவடிகள் எளாவூர், திருவொற்றியூர், ஓசூர் ஆகிய இடங்களிலும் இரண்டு கண்காணிப்புப் பிரிவுகள் கோபிச்செட்டிபாளையம், திருத்தணி ஆகிய இடங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. கோமாரி நோய் ஒழிப்புத் திட்டத்தின் கீழ் தெப்பக்காடு, திம்பம், திருவலம் ஆகிய இடங்களில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட மூன்று சோதனைச் சாவடிகள் தொடர்ந்து செயல்படுகின்றன.

[1971 ஜூலை 19

காணப்பட்ட நோயகள், அவற்றால் தாக்குண்ட கால்நடைகள், நோய்த் தடுப்பூசிகள் போடப்பட்ட கால்நடைகள், இறந்த கால்நடைகள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | 1968–69. | 1969–70. | 1970–71. (1971 ஜனவரி வரை.) |
|---|---|---|---|
| காணப்பட்ட நோய்களின் எண்ணிக்கை .. .. .. | 150 | 24 | 2 |
| நோய் தாக்குண்ட கால்நடை எண்ணிக்கை. .. .. | 2,382 | 382 | 18 |
| நோய்த் தடுப்பூசி போடப்பட்டவை எண்ணிக்கை .. | 17,47,494 | 25,36,292 | 16,43,448 |
| இறந்ததாக அறிவிக்கப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை. | 913 | 142 | 6 |

## நான்காவது ஐந்தாண்டுத் திட்டம்.

கால்நடை வளர்க்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளச் செய்து நிலமற்ற தொழிலாளிகள், சிறு விவசாயிகள் ஆகியோரின் பொருளாதார நிலையைப் பலதிறப்படுத்தி வளம்பெறச் செய்தல், சமுதாயத்தில் பல்வேறு தேவைகளுக்கு நல்ல தரமான கால்நடைகள் அவசியமாதலால், கால்நடைகளின் தரத்தை மேம்படுத்த இன உற்பத்தி ஆற்றலுடைய காளைகளை வழங்குதல், பால், பால் பொருள்கள், இறைச்சி, முட்டை போன்ற பலன்தரும் உணவுப் பொருள்களின் உற்பத்தியை அதிகரித்தல், வணிக முக்கியத்துவம் வாய்ந்த கம்பிளி, பதனிட்ட உரிவை தோல், உரோமங்கள், கெட்டி மயிர், எலும்புகள், குளம்புகள் போன்ற விலங்குப் பொருள்கள் உற்பத்தியைப் பெருக்குதல் ஆகியவை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

கால்நடை வளர்ப்புத் துறையின் கீழ் முன்னமேயே அனுமதி அளித்த நான்காவது திட்ட தொடர் திட்டங்களுடன் கீழ்க்கண்ட திட்டங்களை நிறைவேற்றுவதற்காக, 1971-72-ஆம் ஆண்டுத் திட்டத்தில் ரூ. 8.90 லட்சம் தற்காலிகமாக நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது:—

| | | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|---|
| 1 | ஹோசூர், புதுக்கோட்டை, செட்டிநாடு, திருநெல்வேலி ஆகிய இடங்களில் மாவட்ட கால்நடைப் பண்ணைகளை மேம்படுத்துதல். | 2.82 |
| 2 | சாத்தூர், செம்மறியாட்டுப் பண்ணையை விரிவுபடுத்துதல். | 0.75 |
| 3 | சின்ன சேலம், செம்மறியாட்டுப் பண்ணையை விரிவுபடுத்துதல். | 0.30 |
| 4 | செம்மறியாடுகளுக்குப் பரவலாக மருந்தூட்டும் திட்டம். | 0.50 |



1971 ஜூலை 19]

| | | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|---|
| 5 | அபிஷேகப்பட்டி, மாவட்டக் கால்நடைப் பண்ணையில் பன்றி வளர்ப்புப் பிரிவு ஒன்று அமைத்தல். | 0.50 |
| 6 | அதிகமாக முட்டையிடும் கோழிகளை வளர்ப்பதற்காக, நல்ல தரமான கோழிகளை வாங்குதல். | 0.50 |
| 7 | கோயம்புத்தூரில் தற்போதுள்ள கால்நடை மருத்துவ மனையின் தரத்தை உயர்த்துதலும், மேம்பாடு செய்தலும். | 0.37 |
| 8 | ஆனிரை காப்பகங்கள் | 0.37 |
| 9 | காட்டுப்பாக்கத்தில் கோழிக்குஞ்சு பொரிப்பு நிலையம் அமைத்தல். | 0.74 |
| 10 | ஈச்சங்கோட்டையில், மாவட்டக் கால்நடைப் பண்ணையை மேம்படுத்தல். | 1.44 |
| 11 | புதுக்கோட்டையிலுள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணைக்கு டிராக்டர்கள் வாங்குதல். | 0.61 |

தற்போதுள்ள பணித் திட்டங்களை மேலும் விரிவாக்குவதும் எதிர்காலத்தில் கால்நடைகள் துரிதமாகப் பெருகி வளர்ச்சி அடைவதற்கான அடித்தள அமைப்பு உருவாக்கும் வகையில் நல்ல ஆதாயமுள்ள புதிய திட்டங்களை மேற்கொள்வதும் 1971–72-ல் முக்கியமாகக் கருதியுள்ள வளர்ச்சித்திட்ட அடிப்படைக் கொள்கையாகும்.

## கால்நடை மருத்துவக் கல்வி ஆராய்ச்சி.

கால்நடை மருத்துவக் கல்வி ஆராய்ச்சித் துறை தனது பொறுப்பின் கீழ் பின்வரும் நிறுவனங்களைக் கொண்டுள்ளது :—

1. சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி.

2. ராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருத்துவ நிறுவனம்.

3. தேனாம்பேட்டை கோழியின ஆராய்ச்சி நிலையம்.

4. உதகமண்டலம் செம்மறியாடு இனப் பெருக்க ஆராய்ச்சி நிலையம்.

5. காட்டுப்பாக்கம் செம்மறியாட்டுப் பண்ணை.

கால்நடை உற்பத்தி வளத் திறனைப் பெருக்கி கால்நடைகளுக்கு ஏற்படுகிற கொடிய தொற்று நோயைத் திறம்படத் தடுத்து நிறுத்துவதன் பொருட்டு, கால்நடை வளர்ப்புக் கலையில் ஆராய்ச்சி, கல்வி, நலப்பணி இவற்றை ஒருங்கிணைந்துச் செயல்படுவதே இத்துறையின் முக்கிய நோக்கமாகும.

நான்காவது, ஐந்தாவது திட்டம், முக்கியமாக ஆசிரியப் பணியாளர்களை அதிகப்படுத்துவது, நவீன சோதனைச் சாலையுடன் கூடிய கல்விப் பயிற்சிக்கூடங்கள் கட்டுவது, நவீன சாதனங்கள் வாங்குவது ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. உழவர்களின் மிக இன்றியமையாத பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக, பலதரப்பட்ட ஆராய்ச்சித் திட்டங்கள் அதாவது புதிய கோழியினங்கள், செம்மறியாடு, பன்றி, கறவையினங்கள் வளர்த்தல், நோய்த்தடுப்புக்காக ஆற்றல் வாய்ந்த ஊசி மருந்து தயாரித்தல், கால்நடைப் பணியாளருக்கு மறுபயிற்சி வகுப்பு நடத்துதல், கோழியின வளர்ச்சி, கால்நடை வளர்ச்சி ஆகியவற்றில் குடியானவர்களுக்குப் பயிற்சி அளித்தல் ஆகிய நோக்கங்களுடன் தயாரிக்கப்பட்டுள்ளன.

### கல்வி

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி தமிழ் நாட்டில் பட்ட மேற்படிப்பளிக்கும் வட்டார நிறுவனமாக உள்ளது. தென் இந்தியாவில் பட்ட மேற்படிப்பு மாணவர்கள், பட்டப் படிப்பு மாணவர்கள் ஆகியோரின் தேவைகளை இந் நிறுவனம் பூர்த்தி செய்து வருகிறது—பல பாடங்களில்—டாக்டர் பட்டம் பெறுவதற்கான வசதிகளும் உள்ளன. பட்டப் படிப்பு மாணவர்கள் பட்ட மேற்படிப்பு மாணவர்களைப் பொறுத்த வரையில் இந் நிறுவனத்தின் சாதனைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | 1968–69 | 1969–70 | 1970–71 |
|---|---|---|---|
| பி.வி.எஸ்.சி.— | | | |
| ஆண்டுதோறும் சேர்த்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டவர் எண்ணிக்கை. | 136 | 136 | 136 |
| சேர்த்துக்கொள்ளப்பட்டவர் எண்ணிக்கை. | 136 | 136 | 135 |
| எம்.வி.எஸ்சி.— | | | |
| ஆண்டுதோறும் சேர்த்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டவர் எண்ணிக்கை. | 42 | 42 | 42 |
| சேர்த்துக்கொள்ளப்பட்டவர் எண்ணிக்கை. | 35 | 36 | 31 |

கோழி வளர்ப்புக்கலை, விலங்கியல் மருத்துவ ஆய்வுக்கூடக் கல்வி நல வளர்ச்சி போன்ற பட்ட மேற்படிப்பு பாட முறைகள் 1971–72-ல் புதிதாகத் தொடங்கப்படவிருக்கின்றன. நச்சு நோயியல், நோய்க்குறியியல், மருத்துவ உயிரியல் ஆய்வு முதலிய துறைகளை விரிவுபடுத்தி நவீன வசதிகள் அமைத்துக் கொடுக்கப்படும். நவீன இறைச்சி ஆய்வுக்கூடம், விந்து சேமிப்பு நிலையத்தில் விந்துக்களை உறைய வைப்பதற்கான ஆய்வுக்கூடம், ஆகியவை பயிற்சி, ஆராய்ச்சி வசதிகளுக்காக அடுத்த ஆண்டில் ஏற்படுத்தப்படும்.





### ஆராய்ச்சி

கால்நடை மருத்துவக் கல்வி—ஆராய்ச்சி இயக்குநர் அலுவலகத்தில் செயல்படுத்தப்படும் ஆராய்ச்சித் திட்டங்களின் சிறப்புக் கூறுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

#### தேனாம்பேட்டை கோழியின ஆராய்ச்சி நிலையம்.

இந்த நிலையம் 1970–71-ம் ஆண்டு இறுதியில், ஆண்டுக்கு 200 முட்டைகளுக்குக் குறையாமல் இடும் உயர்ந்த இன வகைகளான 8,000 வெள்ளை 'லெக்ஹார்ன்' கோழிகள் வைத்திருந்தது. 9 ஆண்டுகளுக்கு மேலாக ஆராய்ச்சிக்குட்பட்டு, குறைந்த காலத்திலேயே முட்டையிடும் பருவத்தை அடையக்கூடியதும், ஆண்டுக்கு 200 முட்டைகளைக் குறையாமல் இடுவதுமான புதிய 'மேயர்' என்ற கோழியினம் இவ்வாண்டிலிருந்து உழவர்களுக்கு வழங்கப்படவிருக்கிறது.

#### செம்மறியாட்டுப் பண்ணை, காட்டுப்பாக்கம்

788 செம்மறியாடுகள், 77 எருமைகள், 213 பன்றிகளைக் கொண்ட இப்பண்ணை ஆராய்ச்சிப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. அவற்றின் மரபியல் வளங்களை மேம்பாடு செய்தும், இனங்களின் குணநலன்களைக் கூறுபடுத்தியும், புதிய வளர்ப்பு முறைகளைப் பயன்படுததுவதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. பன்றியின் உடற்கூறுகளை ஆராய்ந்து இறைச்சியின் தரத்தை ஆராயும் திட்டமொன்று முன்னரே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

#### செம்மறியாடு இனப் பெருக்க ஆராய்ச்சி நிலையம், உதகமண்டலம்.

தென்னகத்திலேயே, சிறந்த வகைக் கம்பளி உரோமம் கொண்ட செம்மறியாட்டினத்தை வளர்க்கின்ற ஒரே ஆராய்ச்சி நிலையம், உதகை, சந்தியா நல்லாவில் உள்ள ஆராய்ச்சி நிலையமாகும்.

வெளிநாடுகளிலிருந்து உயர் இனங்களை இறக்குமதி செய்து அவற்றுடன் உள்நாட்டு நீலகிரி இனத்தைச் சேர்த்து செம்மறி ஆடுகளின் தரம் உயர்த்தப்படும்.

#### கால்நடை நோய்த் தடுப்பு மருத்துவ நிறுவனம், இராணிப் பேட்டை.

இம் மாநிலத்தில் கால்நடை, கோழியினம் ஆகியவைகளுக்கு ஏற்படும் நோய்களைக் கட்டுப்படுத்துவதற்காக, 1932-ல் இந் நிறுவனம் அமைக்கப்பட்டு உயிரியல் முறையில் 28 வகை மருந்துகளைத் தயாரித்து வருகிறது. 1970-71-ல் 70 லட்சம் மருந்து அளவு (dose) கோமாரி நோய்த் தடுப்பு ஊசி மருந்தும் 100 லட்சம் மருந்தளவு (dose) வெக்கை நோய்த் தடுப்பூசி மருந்தும், இது தவிர பிளாக் குவார்டர் (Block quarter) ஹெமோராஜிக் செப்டிசேமியா (Haemorhage Septicaemia) மருந்து ஆகியவையும் உற்பத்தி செய்யப்பட்டன. இவ்வித ஆற்றல் மிக்க ஊசி மருந்துகளை

உற்பத்தி செய்து பயன்படுத்தியதனால், கோமாரி, வெக்கை போன்ற கொடிய தொற்று நோய்கள் தமிழ் நாட்டில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இந் நிறுவனம் இந்தியாவிலுள்ள ஏனைய மாநிலங்களுக்கும் ஊசி மருந்துகள் வழங்கி வருகிறது. மேலும், இவ்வகையான மருந்துகளை (Biological products) ஏனைய மாநிலங்களுக்கு விற்றதன் மூலம் ரூ. 3 லட்சம் பெற்றுள்ளது. ஆற்றல் மிக்க ஊசி மருந்துகளைத் தயாரிப்பதற்காகவும், இந் நிறுவனத்தால் தயாரிக்கப்படும் ஆற்றல் மிக்க மருந்துகளின் தரம் பாதுகாப்பதற்காகவும், அவற்றைச் சோதனை செய்வதற்காகவும் தரக் கட்டுப்பாட்டு பிரிவு ஒன்று ஏற்படுத்துதல் ஆகியவற்றிற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வகையான மருந்துகள் தயாரிப்பதற்காக நவீன ஆய்வுக்கூடத்துடன் கூடிய புதிய கட்டடம் ஒன்று குளிர்ப்பதன சேமிப்பு வசதிகளுடன் ரூபாய் 15 லட்சம் செலவில் கட்ட அரசால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. கட்டிட வேலைகள் இவ்வாண்டில் மேற்கொள்ளப்படும்.

இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனம் 100 சதவீத உதவியுடனும், 50 சதவீத உதவியுடனும் கூடிய திட்டங்களுக்கு அனுமதியளித்துள்ளது இத்துறையின் ஆராய்ச்சி நடவடிக்கைகளின் குறிப்பிடத்தக்க கூறுகும்.

**இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனம் 100 சதவீத உதவியுடன் அனுமதி அளித்துள்ள திட்டங்கள்.**

| | | மொத்தச் செலவு. ரூபாய் |
|---|---|---|
| 1 | மாட்டினங்களில் மூக்கு அழற்சி நோய் ஏற்படும் கூறுகளை ஆராய்ந்து, வெவ்வேறு துறை நிலைகளில் அதைக் கட்டுப்படுத்தும் ஒருங்கிணைப்பு ஆராய்ச்சித் திட்டம், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி. | 2,05,180 |
| 2 | கோழியின் சுவாச நோயைப்பற்றி ஆய்ந்து அதற்கான தடுப்பு நடவடிக்கைகளுக்குரிய அனைத்து இந்திய ஒருங்கிணைப்புத் திட்டம், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி. | 2,55,715 |
| 3 | கோழி இறைச்சிக்கான அனைத்து இந்திய ஒருங்கிணைப்பு ஆராய்ச்சித் திட்டம். | 12,80,000 |
| 4 | ஆடு மாடு வெட்டும் தொட்டிகளின் துணைப் பொருள் குறித்து அனைத்து இந்திய ஒருங்கிணைப்பு ஆராய்ச்சித் திட்டம். | 2,65,000 |



**இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனம் பாதிச் செலவுக்கு (50:50 என்ற அடிப்படையில்) அனுமதித்துள்ள திட்டங்கள்.**

| | | ரூபாய் |
|---|---|---|
| 1 | மேச்சேரி, மாண்டியா ஆட்டுக்குட்டிகளின் இறைச்சிக்கூறுபாடுகள் பற்றிய ஆய்வு. | 1,41,680 |
| 2 | தீவனமாகக் கடற்பாசி பயன்படுவது குறித்து மதிப்பிடுவதற்குரிய திட்டம். | 1,29,000 |
| 3 | ஆடு, மாடு வெட்டும் இடங்களில் அவற்றைக் கொல்வதற்கான சாதனம், உடற்கூறுபாடுகள், பன்றி மதிப்பு ஆகியவற்றை ஆயும் திட்டம். | 99,000 |
| 4 | காரம் (Alkaline) பாஸ்வரம் செயல் கூறுபாட்டின் அடிப்படையில், அதிகப் பயன் தரும் தரமான கோழிக் குஞ்சுகள் வளர்ச்சித் திட்டம். | 97,900 |

## நல வளர்ச்சிப் பணி

இயக்குநர் அலுவலகத்தின் நல வளர்ச்சித்துறை, செங்கல்பட்டு மாவட்டத்தில் மாதவரம், சைதாப்பேட்டை வளர்ச்சி வட்டாரங்களைச் சேர்ந்த 22 கிராமங்களில் தன் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இப்பொழுது கோழியின வளர்ப்பில் 134 பேர், பால் பண்ணையில் 5 பேர், பன்றி வளர்ப்பில் 3 பேர், செம்மறியாடு வளர்ச்சியில் ஒருவருமாக முற்போக்குக் கருத்துடைய உழவர்கள் ஒத்துழைப்பாளர்களாக உள்ளனர். நல வளர்ச்சித் துறை மேலும் 8 உழவர்களுக்கு கால்நடை வளர்ப்பதற்காகவும், கோழியின மேம்பாட்டிற்காகவும் ரூபாய் இரண்டு லட்சம் வரை கடன் உதவி செய்துள்ளது. இவ்வாண்டில் பணிகள் மேலும் மும்முரப்படுத்தப்படும்.

1971-72-ல் முனைப்பாக முயற்சிகள் மேற்கொண்டு பால், இறைச்சி ஆகியவற்றின் உற்பத்தியைக் கணிசமான அளவில் பெருக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந் நோக்கத்தைக் கருத்தில் கொண்டு, சிறப்புத் திட்டம் ஒன்றுக்கு முக்கியத்துவம் அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நோக்கத்துடன் நல்ல பல பணிகள் தொடர்ந்து செயல்படுவதற்கு இத்தகைய வளர்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

வதற்கு முன்னால், நாமே இந்த ஆலை அதிபர்களுடனும் தொழிலாளர்களுடனும் பேசி முடிவு எடுக்கலாமா என்பதைப் பற்றியும் ஆலோசித்து வருகின்றோம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இந்த ஆலையானது ஏற்கெனவே மூடப்பட்டு, மீண்டும் திறந்து, மறுபடியும் மூடப்பட்டிருக்கிறது. அமைச்சரவர்கள் சொன்ன மாதிரி, இந்த ஆலை நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய, நல்ல இயந்திரங்கள் உள்ள ஆலையாகும். அங்கேயிருக்கும் நிர்வாகத்தில் ஏற்பட்ட சில சிக்கல்கள் காரணமாகத்தான் இது மூடப்பட்டிருக்கிறது. 200 தொழிலாளர்களுக்கு மேல் வேலையில்லாமல் பாதிக்கப்பட்டிருப்பதால் அரசு இதில் துரித நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தொடக்க காலத்தில் நிர்வாகத்தில் சிக்கல் ஏற்பட்டது. அரசாங்கம் தலையிட்டு அந்தச் சிக்கலை ஓரளவு தீர்த்து வைத்தது. அதற்குப் பின்னர், நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்கும் சிக்கல் ஏற்பட்டு, இந்த ஆலை மூடப்பட்டுள்ளது. நாம் அதை மீண்டும் பரிசீலித்து இந்தச் சட்டத்தின்படி எடுக்கும் முயற்சியில் ஈடுபடலாம்.

*Murder of former Member of Parliament at Tirunelveli.*

*318 Q.—THIRU A. SWAMIDHAS: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any former Member of Parliament was murdered at Tirunelveli about the 15th April 1971; and

(b) if so, the details of the investigation made thereon?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) & (ஆ) ஆம். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான திரு. முத்தையாபிள்ளை என்பவர் திருநெல்வேலியில் 15—4—71-ல் கொலை செய்யப்பட்டார். குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் கைது செய்யப்பட்டு சிறைக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். புலன் விசாரணை முடிவு பெற்றுள்ளது. வழக்கைத் தாக்கல் செய்யும் கேள்வி ஆய்விலுள்ளது.

***தமிழ் நாட்டில் தேர்தல் தகராறு காரணமாக கொலையுண்டவர்கள்.***

* 319 வினா—திரு. சு. துரைசாமி :<br>திரு. சி. கணேசன் : } மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1971-ம் ஆண்டு தேர்தலை முன்னிட்டு 1—1—1971-ல் இருந்து 13—3—1971-ம் தேதி முடிய தமிழ் நாட்டில் மட்டும் தேர்தல் தகராறு காரணமாகக் கொலையுண்ட திராவிட முன்னேற்றக் கழக முற்போக்குக் கூட்டணித் தோழர்கள், ஆதரவாளர்கள் எத்தனை பேர் ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஐந்து பேர்.



**திரு. சு. துரைசாமி :** தலைவர் அவர்களே, தேர்தல் காலத்தில் வேண்டுமென்றே திட்டமிடப்பட்டு திராவிட முன்னேற்றக் கழக முற்போக்குக் கூட்டணியைச் சார்ந்தவர்களை—குறிப்பாக கோவை மாவட்டத்தில் கிணத்துக்கடவு தொகுதியில் போட்டியிட்ட வேட்பாளரைத் தாக்க முயற்சித்தார்களா? அதேபோல, வெள்ளைக் கோயிலில் போட்டியிட்ட திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டதா ? அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அவ்வப்போது அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

**திரு. எஸ். கணேசன் :** இப்படிக் கொலையுண்டவர்களில் பெரும் பகுதியினர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்களே, அதற்கான காரணம் என்ன என்பதை அரசு ஆராயுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அவர்கள் கொலையுண்டது தான் காரணம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தேர்தல் காலத்தில் நடந்த இந்தக் கொலைகள் சம்பந்தமான கேஸ்கள் ஏதாவது முடிவுற்றிருக்கின்றனவா, இதுவரையில் ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அந்த வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்னும் முடிவுறவில்லை.

**திரு. கா. காளிமுத்து :** இத்தகைய கொலை வெறிகளுக்கு ஆளாகி இறந்தவர்களுக்கு அனுதாபம் தெரிவித்து, பழைய காங்கிரஸ், சுதந்திரா கட்சித் தலைவர்கள் அறிக்கை ஏதேனும் விடுத்திருக்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதுபற்றி எனக்குத் தெரியாது. ஆனால், பொதுவாக இப்படி அரசியல் காரணங்களுக்காகக் கொலை செய்யப்பட்ட எல்லாக் கட்சியினுடைய நண்பர்களுக்காகவும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அனுதாபம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. என். கிட்டப்பா :** இப்படி அரசியல் காரணங்களுக்காகக் கொலையுண்டவர்களின் குடும்பங்களுக்கு அரசாங்கம் ஏதேனும் நிதி உதவி அளிக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதுபற்றிய செயற் குறிப்பு எதும் இல்லை.

திரு. எம். தேவராசன் : தேர்தல் காலத்தில் இப்போதைய அறநிலைய அமைச்சரையும் மற்றவர்களையும் தாக்க முற்பட்டார்களே, அவர்கள் மீது வழக்கு நடைபெறுகிறதா ?

[1971 ஜூலை 20

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:* அப்படி நிகழ்ச்சிகள் இருந்திருக்குமானால் அது சம்பந்தமாகக் காவல் துறையினர் நடவடிக்கை மேற்கொண்டிருப்பார்கள்.

*திரு. நா. வீராசாமி:* தேர்தல் காலத்தில் கொலையுண்டவர்களுக்கு அரசாங்கத்திலிருந்து நிதி ஒதுக்குவதைப்பற்றிச் செயற் குறிப்பு இல்லை என்றாலும், முதலமைச்சருடைய நிதியிலிருந்தாவது கொடுத்து அந்த ஏழைக் குடும்பங்களைக் காப்பாற்ற முதலமைச்சரவர்கள் முன்வருவார்களா?

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:* கொலையுண்ட கழகத் தொண்டர்களின் குடும்பத்தினருக்கு கழகத்தின் சார்பிலே நிதி உதவிகள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

*திரு. ஆர். பொன்னப்ப நாடார்:* இது சம்பந்தமான வழக்குகள் எல்லாவற்றிலும் சார்ஜ் ஷீட் கொடுக்கப்பட்டதா, விசாரணை துவங்கி இருக்கிறதா என்ற விவரம் அமைச்சரவர்கள் கூறுவார்களா?

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:* நான் நேற்றே அதைப் பற்றி போலீஸ் மானியத்தின் மீது பேசும்போது குறிப்பிட்டிருக்கிறேன். ஒன்றிரண்டைத் தவிர மற்ற எல்லா வழக்குகளிலும் சார்ஜ் ஷீட் கொடுக்கப்பட்டு, வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

*திரு. ஜே. ஜேம்ஸ்:* கழிந்த தேர்தல் நேரத்தில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் கொலையுண்டார்கள் என்பதை முதலமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:* முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் ஐந்து பேரும், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் மூன்று பேரும் கொலையுண்டார்கள்.

*Provision of uniforms to boys in Harijan Hostels.*

* 88 *Q.*—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether there is any proposal to provide uniforms to the boys in the Harijan Hostels of the State; and

(*b*) if so, when they will be provided?

*மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:*

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

THIRU B. VENKATASWAMY: Sir, if the Government provide uniform for boys and girls living in the hostels, it will create a sense of discipline and equality among the boys and girls. So, will the Government come forward to provide uniforms to the Harijan boys and girls who are living in the hostels?



1971 ஜூலை 20]

*மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:* ஹாஸ்டலில் தங்கிப் பயிலுகின்ற மாணவ, மாணவியர்களுக்கு இப்பொழுது ஜாதி வித்தியாசம் பாராட்டாமல் உடைகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் அரிசன நலத்துறைப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்குத்தான்—வெறும் மாணவர்களுக்கு மட்டும்—கொடுக்கப்பட்டு வருகிறது.

*திரு. சு. துரைசாமி:* அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொன்னார்கள். இனிமேலாகிலும் அரசாங்கமே முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:* பரிசீலனை செய்யலாம்.

*Educational tours for Boys and Girls of Harijan Hostels*

* 89 *Q.*—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state whether there is any proposal to arrange educational tours for Harijan boys and girls residing in Government Harijan Hostels in Tamil Nadu?

*மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:* அரசு கலை-கைத்திறப் பணிக் கல்லூரியில் (Government College of Arts and Crafts) படிப்பவர்களும், சென்னை-7-ல் உள்ள தொழில் கல்வி மாணவர்களுக்கான அரசு விடுதியில் (அரிசன நலத் துறை) தங்கியிருப்பவர்களுமாகிய மாணவர்கள் கட்டிடக் கலை—கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்குக் கல்விச் சுற்றுலாக்கள் மேற்கொள்கையில் அரசு அம்மாணவர்களுக்குத் தற்போது தனி மானியங்கள் வழங்க ஒப்பளிப்பு வழங்குகின்றது. இச் சுற்றுலாக்கள் அவர்களுக்குரிய பாடத் திட்டத்தில் ஒரு பகுதியாக அமைந்திருப்பதே அதற்குக் காரணமாகும். மேற்சொன்ன விடுதியில் தங்கியிருப்பவர்களைத் தவிர தமிழ் நாட்டில் உள்ள அரசு அரிசன விடுதிகளில் தங்கியிருக்கும் மாணவ, மாணவியர்க்குக் கல்விச் சுற்றுலாக்கள் ஏற்பாடு செய்யும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

THIRU *B. VENKATASWAMY*: Harijans are economically very poor. According to the answer given by the Hon. Minister some sections of boys and girls are being taken on tours to other areas. Will the students living in these hostels and in high schools also be taken on tour so as to improve their knowledge and education?

*மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:* அரிசன நலத்துறைப் பள்ளியில் பயிலும் மாணவர்களையே இப்படிப்பட்ட சுற்றுலாக்களுக்கு அழைத்துச் செல்வதாக இருந்தது. இப்போது அந்தத் திட்டம் இல்லை. பின்னர் எடுத்துக்கொள்ளலாம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** கல்வியின் ஒரு பகுதியாக சுற்றுலாக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால் தமிழகத்திலுள்ள சில சென்டர்களுக்குத்தான் அனுப்புகிறார்களா? வெளிமாநிலங்களுக்கும் அனுப்புகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இவற்றில் இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. ஒன்று டிப்ளமா கோர்ஸ். இதுவும் 3 தரமாகப் பிரிக்கப்பட்டு, இந்த 3 குழுவினரும் மூன்று இடங்களுக்குப் போகிறார்கள். முதல் பாச் தென்னிந்தியா. இரண்டாவது பாச் வட இந்தியா, மூன்றாவது பாச் வட கிழக்குப் பகுதி—என்பதாக மூன்று கூறாகப் பிரித்து அனுப்பப்படுகிறது.

## தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் வருவோருக்கு தனிப்பட்ட மருத்துவ வசதி

* 283 வினா—திரு. கே. டி. கே. தங்கமணி : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் வருவோருக்கு, தனிப்பட்ட மருத்துவ வசதி குறித்தும் அதற்காகும் செலவைத் திரும்பப் பெறுவது குறித்தும், மதுரைப் பஞ்சாலைத் தொழிற்சங்கங்களின் தொழிலாளர் தலைவர்களிடமிருந்து முறையீடு ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :**

(அ) ஆம். மதுரை பஞ்சாலைத் தொழிலாளர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளரிடமிருந்து 21—3—1970-ல் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் பயன்பெறும் திரு. டி. சின்னான் என்னும் தொழிலாளி அவர் தனிப்பட்ட முறையில் செய்து கொண்ட மருத்துவச் சிகிச்சைக்கான செலவைத் திருப்பி அளிக்கும் கோரிக்கை சென்னை சுகாதார–குடும்ப நல இயக்குநரால் பெற்றுக்கொள்ளப்பட்டது.

(இ) மேற்படி தொழிலாளி தனது சிகிச்சைக்கான செலவு ரூ. 300-ஐ திருப்பியளிக்கக் கோரியுள்ளார். ஆனால் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி (மருத்துவப் பலன்கள்) விதிகளின்படி ஒரு தொழிலாளி, மருத்துவரின் ஆலோசனைக்கு மாறாக, திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ மனைகளிலிருந்து வெளியேறி, தனது சௌகரியத்திற்கேற்றபடி, தனிப்பட்ட மருத்துவ சிகிச்சையை மேற்கொண்டால் அந்தச் சிகிச்சைக்கான செலவுத் தொகையை திருப்பி பெறுவதற்கான அவரது கோரிக்கை அனுமதிக்க இயலாது. இவ்வாறு மேற்படி தொழிலாளிக்குத் தனியே அறிவிக்கப்பட இருக்கிறது.



**திரு. கே. டி. கே. தங்கமணி :** மதுரையிலே ரயில்வே காலனிக்கு அருகாமையில் இந்த இ.எஸ்.ஐ. தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய பணத்தைக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதே, அங்கே வெகு நேரம் இருநூறு பேர், முந்நூறு பேர் பல மணி நேரம் நிற்கவேண்டியிருக்கிறதே, அப்படியானால் அந்த இடத்தை மாற்ற அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** கனம் உறுப்பினரின் யோசனையைப் பரிசீலிக்கலாம்.

## மதுரையிலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை

* 284 வினா—திரு. கே. டி. கே. தங்கமணி : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 13—4—1971-ம் தேதியன்று மதுரையில் திறக்கப்பட்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவ மனை செயல்படத் தொடங்கி விட்டதா?

(இ) ஆமெனில், அங்கு தற்பொழுதுள்ள அகநிலைப் பிணியாளர்கள் எத்தனை பேர்?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :**

(அ) ஆம்.

(இ) 58.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** புதியதாக மதுரையில் ஆரம்பித்திருக்கிற இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரியில் 201 பேர் வரையில் இருக்கலாம் என்று அன்றைக்கு சொல்லப்பட்டது. இப்போது அங்கே அதில் நான்கில் ஒரு பங்குதான் இருப்பதாகச் சொல்கிறார்கள். இன்றுகூட அவர்களுக்கு குடிதண்ணீர் வசதி செய்யப்படாமல் இருக்கிறதே, இதற்கு அரசு துரிதமான நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டும் வருகிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இன்று கூட குடிதண்ணீர் வசதிக்கு மாநகராட்சியில் இருந்து சில லாரிகளில் வந்து கொண்டிருக்கின்றது. இதற்கு மாறாக மெயின் கனெக்ஷன் கொடுத்து வியாதியஸ்தர்களுக்குத் தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்வார்களா? இப்போது சில விசேஷங்கள் வந்துவிட்டால் 12 மணி வரை கூட மாநகராட்சி லாரி வராது. தண்ணீர் இல்லாது அங்கே உள்ளவர்கள் கஷ்டப்படுகிறார்கள், ஆகவே நிரந்தரத் தண்ணீர் வசதிக்கு உத்தரவாதம் அளிப்பார்களா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய விளக்கத்தை ஏற்று ஆவன செய்யப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : நமது மாநிலத்தில் எங்கெங்கே அதிகமாக பல்வேறு தொழிலாளர்கள் இருக்கிறார்களோ அங்கெல்லாம் ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரிகள் அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இப்போதே அந்த சட்டுறுதித் திட்டத்தின் கீழ் நமக்கு அளிக்கப்படுகிற நிதி உதவியை விட ரூ. 1½ கோடி அதிகமாக மாநில அரசு செலவிடுகிறது. கடந்த 6 மாதங்களில் எட்டு இடங்களில் மருத்துவ விடுதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. நிதி வசதி பெருகுமானால் இன்னும் அதிக அளவுக்கு மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோல நிறைவேற்ற முடியும்.

## உர வகைகளின் விலைகள்.

* 294 வினா—டாக்டர் எச். வி. ஹாண்டே : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசு மாநில அரசுகளுக்கு விற்பனை செய்கின்ற வெவ்வேறு உரங்களின் விலை என்ன ?

(இ) உழவர்களுக்கு இவ்வரசு விற்பனை செய்யும் இந்த உரங்களின் விலை என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) & (இ) பேரவையின் முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : ஏற்கனவே விவசாயிகளுக்கு இம்மாதிரி உரங்கள் சப்ளை பண்ணுகிற நேரத்தில் அதற்காக அரசு சப்ஸிடி கொடுத்து வந்தது. இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த விவரங்களைப் பார்த்தால் பல உரங்கள் 90 ரூபாய், 100 ரூபாய் வரையிலும் அதிகமாக விற்கப்படுகிறதே. குறைந்த விலையில் கொடுக்க ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : 1969-க்கு முன்பு விலைப் பட்டியல் மூலமே மத்திய அரசு கொடுத்து விற்பனை செய்யப்பட்டு வந்தது. கலால் வரி உயர்ந்த பிறகு கூடுதல் விலையில் கொடுக்கக் கூடாது என்பதாக முன்பு இருந்த விலைக்கே அரசு கொடுத்தது. சில குறிப்பிட்ட உரங்கள் விலை ஏறிவிட்ட காரணத்தினால் நாம் விவசாயிகளுக்குக் கொடுக்கிற உரங்களின் விலை கூடுதலாக இருக்கிறதே தவிர, அரசு லாப நோக்கத்தோடு எதையும் செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU B. VENKATASWAMY : According to the answer given by the Hon. Minister, the price of Ammonium Sulphate is about Rs. 72 in excess of the Central Government pool price. Urea is about Rs. 90 in excess of the Central Government pool rate. So, will this Government come forward at least to minimise the rate

@ 383–384-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



at the rate fixed by the Central Government? Because, the ryots are suffering a lot as the rates of the foodgrains are coming down and the rates of the fertilisers are going up day by day.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, மத்திய அரசு கொடுக்கின்ற விலைக்கே கொடுக்காமல், லாபகரத்தோடு இந்த அரசு உரங்களை விற்பனை செய்யவில்லையென்று குறிப்பிட்டேன். குறிப்பிடப்பட்ட அம்மோனியம் சல்பேட், யூரியா போன்ற உரங்களைக் கொண்டுவருவதற்கும், அவைகளை இருப்பு வைப்பதற்கும் ஆகிற செலவுகள் தான் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்த அரசு லாபகரமான நோக்கத்தோடு விவசாயிகளுக்கு உரம் வழங்கவில்லை. மத்திய அரசு நமக்குக் கொடுக்கின்ற விலைக்கே நாம் விவசாயிகளுக்கு உரத்தை வழங்க முடியாது, நாம் அவற்றைக் கொண்டுவருவதற்கான போக்குவரத்துச்செலவு, இருப்பு வைக்கின்ற செலவுகளுடன் நாம் கலால் வரியையும் கொடுக்க வேண்டியிருக்கிறது. அப்படிப் பார்க்கிறபோது விலை சற்று அதிகமாகத் தெரிகிறது. ஆகவே, மத்திய அரசு நமக்குக் கொடுக்கும் விலைக்கே நாம் விவசாயிகளுக்கு உரத்தை வழங்க இயலவில்லை. அடுத்த கேள்விக்கு நான் விளக்கமாகப் பதில் அளிக்க இருக்கிறேன். எனவே, இப்போதைக்கு இது அவசியம் இல்லையென்று கருதுகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இந்த 'ஹேண்ட்லிங் சார்ஜையும், பிரைஸ் சார்ஜையும் குறைப்பதற்கு அரசாங்கம் ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா ? அப்படியென்றால், அதனுடைய விவரங்களை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, அப்படி ஒன்றும் இல்லை.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, உணவு உற்பத்தியில் தமிழக அரசு அக்கறை காட்டி வருகிறது, இந்தியப் பேரரசு அக்கறை காட்டி வருவதாகச் சொல்லிக்கொள்கிறார்கள். உண்மையிலேயே இந்தியப் பேரரசுக்கு உணவு உற்பத்தியில் அக்கறை இருக்கிறதென்றால், இந்த உரத்தைப் பொறுத்த வரையில் கலால் வரியை விதிக்கக்கூடாது. எப்படி மூலப் பொருள்களுக்கு சப்சிடி கொடுக்கிறோமோ, அதுபோல மத்திய அரசு கலால் வரி இல்லாமல் உரத்தைக் கொடுக்க வேண்டும் என்று தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, கலால் வரியை உயர்த்தக் கூடாது என்பது மாத்திரமல்ல, முன்பு இருந்த விலையிலேயே விற்க வேண்டுமென்று தமிழக அரசு கேட்டுக் கொண்டதை அப்போது வேளாண்மைத் துறை அமைச்சராக இருந்த திரு. ஜகஜீவன்ராம் அவர்கள் கவனிப்பதாகச் சொன்னார்கள். நமது கோரிக்கை கவனிக்கப்படும் என்ற காரணத்தால் விவசாயிகளுக்கு முன்பு விற்ற விலையிலேயே வழங்கி

பிருக்கிறோம். சமீபத்தில் அதை ஏற்றுக்கொள்ள இயலாது என்ற காரணத்தால் தமிழக அரசு நஷ்டத்தை ஏற்றுக்கொண்டு, முன்பு கொடுத்த விலைக்கே விவசாயிகளுக்கு உரத்தை வழங்கிக் கொண்டு வருகிறது.

* 295 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether, any subsidy is being given by the State Government for fertilizers and the details thereof? and

(b) whether this Government proposes to increase the rates of fertilizers in view of additional taxes by the Central Government?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) பண்மான்யம் வழங்கப்படுவதில்லை. 1969–70 மத்திய வரவு-செலவுத் திட்டத்தில் எல்லா உரங்களின் வகைகள்மீது கலால் வரியை அதிகப் படுத்தியதின் காரணமாக, இந்திய அரசு எல்லா உரங்களின் விலைகளை 1—3—1969 முதல் உயர்த்தியது. இருப்பினும் மாநில அரசு, டை அமோனியம் பாஸ்பேட், கால்சியம் அமோனியம் நைட்ரேட், அமோனியம் பாஸ்பேட், அமோனியம் குளோரைட், முரியேட் ஆப் பொட்டாஷ், என்.பி.கே. காம்ப்ளக்ஸ் போன்ற சில உரங்களைக் கலால் வரி அதிகரிப்பதற்கு முன்பு நிலவிய விலைகளின் படியே விற்று வருகின்றது. இச்சலுகை 31—3—1972 வரை நீடிக்கும்.

(இ) இல்லை.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, மத்திய அரசாங்க வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. ஜகஜீவன்ராம் அவர்கள் ஒத்துக்கொண்டதால், நம்முடைய அரசாங்கம் விவசாயிகளுக்குப் பழைய விலையிலேயே உரத்தை வழங்கி வந்தது. அப்படிக் கொடுத்ததன் விளைவாக நமக்கு எவ்வளவு இழப்பு ஏற்பட்டது? அந்த இழப்பைத் தமிழக அரசு மத்திய அரசிடமிருந்து கேட்டுப் பெறுவதற்கு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, அந்த இழப்பைத் தமிழக அரசு ஏற்றுக்கொண்டு விவசாயிகளுக்கு உரத்தை வழங்கியிருக்கிறது. தனிக் கேள்வி போட்டால் நஷ்டம் எவ்வளவு என்பதைக் குறிப்பிடுகிறேன்.

கால்சியம் அமோனியம் நைட்ரேட் 26 சத விகிதம் என்ற உரத்தை மத்திய அரசு ஒரு மெட்ரிக் டன் 515 ரூபாய் என்ற அளவில் வழங்கி வருகிறது. நாம் அதை சகாய விலையில் 475 ரூபாய்க்கு வழங்குகிறோம், வித்தியாசம் 40 ரூபாய், அமோனியம் பாஸ்பேட் மத்திய அரசு வழங்குவது 814 ரூபாய், நாம் வழங்குவது 738 ரூபாய், வித்தியாசம் 76 ரூபாய், டை-அமோனியம் பாஸ்பேட் மத்திய அரசு வழங்குவது 1,122 ரூபாய். தமிழக அரசு வழங்குவது 1,000 ரூபாய், வித்தியாசம் 122 ரூபாய். அமோனியம் குளோரைட் மத்திய அரசு வழங்குவது 484 ரூபாய்,



தமிழக அரசு வழங்குவது 450 ரூபாய், வித்தியாசம் 34 ரூபாய், முரியேட் ஆப் பொடாஷ் மத்திய அரசு வழங்குவது 473 ரூபாய், தமிழக அரசு வழங்குவது 445 ரூபாய், வித்தியாசம் 28 ரூபாய். என்.பி.கே. காம்ப்ளக்ஸ் மத்திய அரசு வழங்குவது 755 ரூபாய், தமிழக அரசு வழங்குவது 700 ரூபாய், வித்தியாசம் 55 ரூபாய். மற்றொரு வகை மத்திய அரசு வழங்குவது 1,047 ரூபாய், தமிழக அரசு வழங்குவது 970 ரூபாய், வித்தியாசம் 77 ரூபாய். மற்றொரு வகை மத்திய அரசு வழங்குவது 832 ரூபாய், தமிழக அரசு வழங்குவது 760 ரூபாய், வித்தியாசம் 72 ரூபாய்.

DR. H. V. HANDE: Over a period of years the Central Government was subsidising according to the Hon. Minister's reply these fertilisers and even the procurement price that we give to the farmers was also based on this. Now the procurement price is the same as before. But the Central Government, I understand, are still continuing the subsidy to certain other States, but they had withdrawn the same particularly for this State, I do not know for what reasons. May I know from the Hon. Minister on what basis, what were the reasons, why they withdrew the subsidy since 1969? When they were giving the subsidy all these years, what was the basis on which they removed the subsidy, and has this matter been brought to the attention of the Ministry concerned that we have not yet reduced the procurement price? In view of the fact that the State Government are involving themselves into a loss, because of this we are not reducing the subsidised price—will this Government explain this fact before the Centre and see to it that we get the same subsidy? If we do not get it, may I know whether the State Government have got the answer from the Central Government as to the reasons for which we are not getting the extra subsidy?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் எந்தவிதமான சப்சிடியும் கொடுக்கவில்லை. நம்முடைய தமிழக சர்க்கார்தான் இப்படிப்பட்ட சப்சிடியை வழங்கி வருகிறது. தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் தருகிறேன்.

### *Text Books Committee for Schools*

* 298 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether any Committee has been set up to prescribe text books for students for various classes in High Schools and Colleges in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) அரசு பாட நூல்கள் வெளியிட்டிராத பாடங்களைப் பொறுத்தவரை 1971-72-ம் ஆண்டில் இம்மாநிலத்தில் உள்ள எல்லா அரசு உயர் நிலைப்பள்ளிகளிலும் பயன்படுத்தற்குரிய பாட நூல்களைத்

# தமிழ் நாடு சட்டப் பேரவை

---

செவ்வாய்க்கிழமை, 1971 ஜூலை 20.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### செங்கோட்டை பாலராமவர்மா நூற்பாலை

* 3. குறுகிய கால வினா—திரு. கா. மு. கதிரவன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பல மாதங்களாக மூடப்பட்டுள்ள செங்கோட்டை பாலராம வர்மா நூற்பாலையில் வேலை செய்த 700 தொழிலாளர் குடும்பங்கள் அல்லல்படுவதைத் தவிர்க்க, அவ்வாலையை உடனடியாக ஏற்று நடத்தும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, ஐ.டி.ஆர். சட்டப்படி 21 மில்கள் வரையிலும் மத்திய அரசாங்க விசாரணைக்காக அனுப்பப்பட்டன என்று ஏற்கெனவே அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அம்மாதிரியான 21 மில்களில் செங்கோட்டையில் இருக்கக்கூடிய பாலராமவர்மா ஸ்பின்னிங் மில்லும் ஒன்றா? அப்படியானால், எம்மாதிரியான பதில் கொடுத்திருக்கிறார்கள்? அந்தப் பதில் நமக்கு விரோதமாக இருக்குமானால், அரசு மற்ற மில்களை ஏற்று நடத்துவதைப்போல இதையும் ஏற்று நடத்துவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்த ஆலையையும் அரசு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று ஐ.டி.ஆர். சட்டத்தின் கீழே மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்திருந்தோம். அவர்கள் இந்த ஆலையை எடுக்க வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்கள். என்ன காரணத்தினால் என்பது சரியாக விளக்கப்படவில்லை. காரணம், இந்தக் குழுவினுடைய பரிந்துரையில், இந்த ஆலை எடுத்து நடத்தக்கூடிய ஆலை, நல்ல இயந்திரங்கள் உள்ள ஆலை என்று சொல்லியிருக்கிறார்கள். அதே சமயத்தில் அதை எடுத்துக் கொள்ளுவதற்கு அனுமதி அளிக்கவில்லை. எடுத்துக் கொள்ளுவதற்கு அனுமதி அளித்தால்தான் நாம் ஐ.டி.ஆர் சட்டத்தின் கீழ் எடுக்க முடியும். மறுபடியும் அவர்களுக்கு எழுத இருக்கிறோம். எழுது

தேர்ந்தெடுக்கப் பள்ளிக் கல்வி இயக்குநரின்கீழ் ஒரு குழு அமைக்கப்பட்டது. கல்லூரிகளில் பயன்படுத்தற்குரிய பாட நூல்கள் எவை எவை என்பதை முடிவு செய்வது பல்கலைக் கழகங்களே ஆகும்.

**திரு. எஸ். சங்குமுத்து தேவர் :** தலைவர் அவர்களே, சென்ற ஆண்டில் பள்ளிகளில் அரசினால் வெளியிடப்படக்கூடிய பாடப் புத்தகங்கள் சரியாகக் கிடைக்கவில்லை. அதன்காரணமாகப் பள்ளிக் குழந்தைகள் கல்வி கற்பதற்காக மிகவும் கஷ்டப்பட்டார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, சென்ற ஆண்டில் முடிவு எடுத்து, பாடப் புத்தகங்களை அச்சிடுவதில் சிறிது காலதாமதம் ஏற்பட்டதன் காரணமாக பாட புத்தகங்களை அச்சிடுவதில் சிறிது காலதாமதம் ஏற்பட்டதன் காரணமாகப் பாடப் புத்தகங்கள் வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டது. இந்த ஆண்டு மே திங்களுக்குள் எல்லாப் பாட நூல்களையும் அச்சிட்டுக் கொண்டுவந்து முன்கூட்டியே எல்லா மையங்களுக்கும் அனுப்பப் பட்டு, மாணவர்கள் எளிதாகப் பெறுவதற்கு வழிகள் செய்யப் பட்டிருக்கின்றன.

**திரு. கா. வேழவேந்தன்:** தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பாடப்புத்தகக் குழு இனிமேலாவது புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களுடைய புதுமைக்கவிதைகளையும், பேரறிஞர் அண்ணா அவர்களின் சீர்திருத்தக் கட்டுரைகளையும் பாடப் புத்தகத்தில் சேர்க்க வழிவகை செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கும், உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கும் துணைக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. இந்தக் கேள்வி பாட நூல்களைப் பள்ளிகளில் வைப்பது பற்றி. பாட நூல்களில் என்ன என்ன சேர்ப்பது என்பது பாடநூல் ஆசிரியர்கள் கவனிக்க வேண்டிய ஒன்று: வரலாற்றுச் சிறப்பு பெற்றவர்கள் இம்மாதிரி தலைவர்களின் வரலாற்றுக் குறிப்புக்களையெல்லாம் பாடநூல்களில் சேர்க் கிறார்கள். உறுப்பினர் அவர்கள் கூறுகிற கருத்துக்களைச் சேர்ப்பதில் தடை ஒன்றும் இல்லை. அறிஞர் அண்ணாவைப்பற்றிய தனி நூல் நான்-டீடெயிலாகவும் வைக்கப்பட்டிருக்கிறது. ஆசிரியர்கள் நூல்கள் எழுதுகிறார்கள். அதை டெக்ஸ்ட் புக் கமிட்டி ஆய்வு செய்கிறார்கள். அப்படி நூல்கள் தேர்ந்தெடுக்கப்படு வதற்குத்தான் இந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

### பள்ளிப்பாட நூல்கள் வெளியீடு

*** 299. வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அடுத்த 1972–73-ம் கல்வி ஆண்டில் அரசு வெளியிடவிருக்கும், பள்ளிக்கூடப் புத்தகங்கள் பற்றி புத்தக வியாபாரிகளுக்கு முன் அறிவிப்பு கொடுக்கப்பட்டுவிட்டதா?





**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அடுத்த ஆண்டுக்கு தமிழ்நாடு பாடபுத்தக நிறுவனம் என்னென்ன புத்தகங்கள் வெளியிடவேண்டும் என்பது அரசின் பரிசீலனையில் உள்ளது. இது பற்றி விரைவில் முடிவு எடுக்கப்பட்டு அறிவிக்கப்படும்.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, தனியார்களுக்கு வாய்ப்பினை அளிக்காமல், எல்லாப் பாட நூல்களையும் அரசாங்கமே வெளியிட ஆவன செய்ய முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அந்தக் கொள்கையின் அடிப்படையில்தான் எல்லாப் பாடப் புத்தகங்களையும் வெளியிடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. 1 முதல் 10 வகுப்புகள் வரை தமிழ் பாட நூல்கள் வெளியிடப்படுகின்றன. நான்காம் வகுப்பிலிருந்து 10-ம் வகுப்புகள் வரை ஆங்கில பாடபுத்தகங்கள் ஆழ்ந்த படிப்புக்காக வெளியிடப்படுகிறது. 3-வது வகுப்பு முதல் 11-வது வகுப்பு வரை கணக்கு நூல் வெளியிடப்படுகிறது. வேறு அறிவியல், புவியியல் 11-ம் வகுப்புக்கு வெளியிடப்படுகிறது. வேறு எந்தெந்த நிலைகளில் எந்தெந்த நூல்களை வெளியிடுவதற்கு எடுத்துக் கொள்ளலாம் என்பதை யோசித்துக்கொண்டிருக்கிறோம். எந்தெந்த நூல்களை அச்சிடலாம் என்பதை ஆராய்ந்து வருகிறோம். அதற்கான குழு விரைவில் கூடி முடிவு எடுக்கும். அதன்பிறகுதான் இந்த ஆண்டில் எந்தெந்த நூல்கள் அச்சிட்டு வெளியிட எடுத்துக் கொள்ளப்படும் என்பதை அறிய முடியும்.

### கோவை நகராட்சியில் பணிபுரியும் தற்காலிகத் தொழிலாளர்கள்

*** 300. வினா—திரு. என். மருதாசலம் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை நகராட்சி மன்றத்தில் குடிநீர் விநியோகம், மின்சார விநியோகம், ரோடு பராமரிப்பு ஆகிய பிரிவுகளில் ஐந்து முதல் பத்தாண்டுகள் வரை என்.எம்.ஆர். கூலிகளாக வேலை செய்பவர்களை நிரந்தர பணியாளர்களாக்க அரசுக்கு உத்தேசமுண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஆம். இது கோயம் புத்தூர் நகராட்சியின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. என். மருதாசலம் :** தலைவர் அவர்களே, கோவை நகராட்சியிலே தண்ணீர் இலாகா மின்சார இலாகா மற்றும் ரோடு பராமரிப்பு இவற்றில் உள்ள தொழிலாளர்கள் 5, 10 வருடங்களாக நிரந்தரக் கூலியாக இல்லாமல் டெம்பரரியாக வேலைசெய்கிறார்கள். அவர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்று கோவை நகர சபைக்கு அரசாங்கம் உத்திரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பொறியியல் போன்ற துறைகளில் தற்காலிகமாகப் பணி புரிந்து வருகிறார்கள். அப்படிப் பட்டவர்கள் 314 பேர்கள் பணிபுரிந்துவருகிறார்கள். அவர்களிலே

217 பேர்கள் ஆண்கள், 97 பேர்கள் பெண்கள். மின்சாரத் துறையில் 29 பேர்கள் ஆண்கள் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களையெல்லாம் நிரந்தரமாக்க வேண்டுமென்ற கோரிக்கை அந்தத் தொழிலாளர்களின் சார்பிலே வைக்கப்பட்டிருக்கிறது. தொழிலாளர் துறை அலுவலர் அவர்களிலே ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையை நிரந்தரமாக்கவேண்டுமென்று பரிந்துரை செய்திருக்கிறார். நகர மன்றம் தற்காலிக பணிபுரிகின்றவர்களில் யார் யாரை நிரந்தரமாக்க வேண்டுமென்று தொழிலாளர் துறை அலுவலர் ஒரு பட்டியலை அனுப்பி இருக்கிறார். அந்தப் பட்டியல் நகரமன்றத்தின் பரிசிலனையில் இருக்கிறது. அது முடிந்தபிறகு நகரமன்றம் அதுபற்றி ஒரு தீர்மானம் நிறைவேற்றி வந்தவுடனே அது அமுலாக்கப்படும்.

## நகராட்சிகளில் பணிபுரியும் மின்சாரத் தொழிலாளர்கள்

*301. வினா—திரு. என். கே. பழனிசாமி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை, கோவை, தஞ்சை ஆகிய நகரசபைகளின் கீழ் வேலை செய்யும் மின்சாரத் தொழிலாளர்கள் தங்களுக்கு மின்வாரிய ஒப்பந்தப்படி சம்பளம் தரவேண்டுமென்று 1969–70-ல் நடத்திய கிளர்ச்சியின் மீது சர்க்கார் எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** நகராட்சிகளில் உள்ள பொதுப் பிரிவு மற்றும் மின்சாரப் பிரிவுகளைச் சேர்ந்த பணியாளர்கள் குறித்துத் தமிழ்நாடு இரண்டாவது சம்பள ஆணைக்குழு செய்துள்ள பரிவுரைகள் ஏற்றுகொள்ளப்பட்டுள்ளதோடு, அவர்களின் சம்பள விகிதங்களும் திருத்தியமைக்கப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

நகராட்சிகளில் உள்ள பல்வேறு மின்சார நிறுவனங்களின் குறைகளைப் பற்றிப் பரிசிலனை செய்ய குழு ஒன்றையும் அரசு அமைத்துள்ளது. குழுவின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இப்பொழுது மின்சார சப்ளை மதுரை மாநகராட்சி, தஞ்சை, கரூர், பொள்ளாச்சி ஆகிய நகராட்சி இவற்றிலே இருக்கிறது. அங்கே பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்குச் சம்பளம் உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்ற முறையிலே ஒரு ஸ்பெஷல் வேஜ் கமிட்டி ஜி.ஓ.எம்.எஸ்.என். 231, 1971-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24-ம் தேதி பிரகாரம் போடப்பட்டு இருக்கிறது. இரண்டாவது சம்பளக் கமிஷன் ரிப்போர்ட் வந்தும் கூட மின்சாரப் பணியாளர்கள் சம்பள உயர்வு பெற்றும்கூட இவர்கள் பெறமுடியாத நிலைமை இருப்பதால் சீக்கிரத்தில் அந்த சிபாரிசுகளை வெளியிட்டு அவர்களுக்குச் சம்பளம் உயர்த்திக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?





**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நகராட்சிகளைப் பொறுத்தவரையில் பொதுப் பிரிவு மற்றும் மின்சாரம் பிரிவுகளைச் சேர்ந்த பணியாளர்கள் குறித்துத் தமிழ்நாடு இரண்டாவது சம்பள ஆணைக் குழு செய்துள்ள பரிவுரைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதோடு அவர்களின் சம்பள விதங்களும் திருத்தியமைக்கப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன.

நகராட்சிகளில் உள்ள பல்வேறு மின்சார நிறுவனங்களின் குறைகளைப்பற்றிப் பரிசிலனைசெய்ய குழு ஒன்றையும் அரசு அமைத்துள்ளது. அந்தக் குழுவில் பி. என். ராகவன் கூட்டுச் செயலாளர், நிதித்துறைத் தலைவராக இருக்கிறார், மேலும் நகராட்சி நிர்வாக அதிகாரியும், அரசு தலைமை இன்ஸ்பெக்டரும் தொழிலாளர் துறை ஆணையரும் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். விரைவில் அதனுடைய அறிக்கை வந்ததற்குப் பிறகு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

## *Junior Basic School at Poosaripatti*

*320 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether a Junior Basic School was opened at Poosaripatti in Madurai District, in the academic year 1967–68; and

(b) if so, the strength of the school in 1967–68 and 1968–69?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ):

| வருடம் | எண்ணிக்கை |
|---|---|
| 1967–68 | 114 (59 மாணவர்கள், 55 மாணவிகள்) |
| 1968–69 | 165 (86 மாணவர்கள், 79 மாணவிகள்) |

DR. H. V. HANDE: Sir, may I know whether any person went to the court in regard to this matter and wheher the court has passed judgment against the order of the Director of Public Instruction? May I know the full details about it?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்த பூசாரிபட்டி என்ற ஊரிலே டி. எஸ். ராஜன் உதவிபெறும் ஜூனியர் ஆதாரப்பள்ளி துவக்கப்பட்டுள்ளது. பஞ்சாயத்து யூனியன் சார்பாகவும் ஒரு பள்ளி துவக்கப்பட்டுள்ளது. அதை எதிர்த்து டி. எஸ். ராஜன் உதவி பெறும் நிறுவனத்தினர் ரிட் பெட்டிஷன் போட்டார்கள். அது உயர் நீதிமன்றத்திலே விசாரிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியில் உள்ள மக்கள் எண்ணிக்கை. மாணவர்கள் தன்மை ஆகியவற்றைப் பார்த்து இரண்டு பள்ளிகளும் இயங்குவதற்கு இடம் இருக்கிறதா என்று பார்த்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். அதன் பேரில் பள்ளி இயக்குநர் மாவட்டத் தலைமைக் கல்வி அதிகாரி மூலமாக ஆராய்ந்து பார்த்து இரண்டு பள்ளிகளும் இயங்கலாம்,

எந்த ஒரு பள்ளியும் நீக்கப்பட வேண்டிய அவசியமில்லை என்று கூறியிருக்கிறார்கள். 1967-68-லே உதவி பெறும் பள்ளியிலே 98 பேர்களும் பஞ்சாயத்து யூனியன் பள்ளியிலே 114 பேர்களும் இருந்தார்கள். 1968-69-லே உதவி பெறும் பள்ளியிலே 46 பேர்களும் பஞ்சாயத்து யூனியன் பள்ளியிலே 165 மாணவிகளும் இருந்தார்கள் என்று கணக்கு இருக்கிறது. கல்வி இயக்குநர் இரண்டு பள்ளிகளும் இயங்கலாம் என்று அரசாங்கத்திற்கு யோசனை கூறியிருக்கிறார்கள்.

செஞ்சியிலே பெண்கள் ஆதாரப்பயிற்சிப் பள்ளி

* 321. வினா—திரு. ரா. சா. முனுசாமி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சியில் ஒரு பெண்கள் ஆசிரியர் ஆதாரப் பயிற்சிப் பள்ளி நிறுவும் உத்தேசம் ஏதேனும் அரசினர் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

வாலாஜாவிலுள்ள மகளிர் ஆதாரப்பயிற்சிப்பள்ளி

* 322. வினா. திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்டம், வாலாஜாவிலுள்ள மகளிர்க்கான அரசினர் ஆதாரப்பயிற்சிப்பள்ளி, அதன் கட்டடம் நல்ல நிலையில்இல்லாததால் மூடப்பட்டு இருக்கிறதா?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) பள்ளியின் கட்டிடம் நகராட்சிக்குச் சொந்தமானது, கட்டிடத்தைப் பழுது பார்க்க, இடத்தைக் காலி செய்து வேறு கட்டிடத்தில் பள்ளி இயங்குவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. அவ்வாறு முடியாவிட்டால், பள்ளிக்கூடத்தை மூடுவது என்றும், அப்பள்ளி மாணவிகளை வேறு பள்ளியில் சேர்ப்பது என்றும் யோசனையில் இருந்து வருகிறது.

*Mobile Hospital under Chittaranjan Das Memorial Scheme*

* 323 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal to start a Mobile Hospital in this State under the Chittaranjan Das Memorial Scheme; and

(b) if so, the details thereof?





மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) சென்னை, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியுடன் இணைந்து செயல்படும் வகையில், சித்தரஞ்சன், செயலூர்தி மருத்துவமனை ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.

(இ) இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு மருத்துவக் கல்லூரியுடன் இணைந்து செயல்படும் வகையில் செயலூர்தி மருத்துவமனை ஒன்று நிறுவப்படுகிறது. இதற்கு ஆகும் தொடர் செலவு மாநில அரசால் ஏற்கப்படுகிறது. ஒவ்வொரு மருத்துவ மனைக்கும் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படும் ரூ. 3.10 லட்சம் தொடக்கச் செலவை மட்டும் மத்திய அரசு ஏற்கும். மக்கள் தொகையில் 80 சதவிகிதத்துக்கு மேல் உள்ள நமது உழவர் பெருமக்களின் இல்லங்களுக்கு செயலூர்தி மருத்துவமனை நேரடியாகச் சென்று மருத்துவ உதவி அளிப்பதே இந்தச் செயலூர்தி மருத்துவமனையின் நோக்கமாகும். மருத்துவப் பட்டதாரிகளும், அவர்களது பேராசிரியர்களும், கிராமங்களில் பரவியுள்ள நோய்களைப் பற்றி முதல்தர அனுபவம் பெறவும் அவற்றின் காரணங்களைக் கண்டறியவும் இந்த மருத்துவமுறை உதவுகிறது.

*Shortage of Oxygen Cylinders in General Hospital.*

* 324 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that on 15th September 1969 operations at the General Hospital had to be postponed due to shortage of oxygen cylinders; and

(b) if so, the precautionary measures taken to prevent recurrence of such situations?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம். நாட்பட்ட நோயாளிகள் இருவருக்கு மட்டும் அன்று செய்யப்படவிருந்த அறுவை சிகிச்சைகள் ஒத்திப்போடப்பட்டன. நாட்பட்ட நோயாளிகள் என்பது கிரானிக் கேஸஸ். ஏனெனில் அன்று அறுவை சிகிச்சைகளைச் செய்வதனால் ஏற்படக்கூடிய ஆபத்தைவிட அந்த அறுவை சிகிச்சைகளை ஒத்திப்போடுவது நல்லது என்று கருதப்பட்டது.

(இ) பல்வேறு தேவைகளுக்கு வேண்டியவையைத் தவிர கூடுதலாக ஆறு பிராணவாயு உருளைகள் மருத்துவமனையில் எப்போதும் தயாராக வைக்கப்பட்டுள்ளன. நிறுவனம் கூடுதல் உருளைகளையும் தற்போது வழங்கி வருகிறது. இத்தகைய நிகழ்ச்சிகள் மீண்டும் நடைபெறாமல் தடுப்பதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

Dr. H. V. HANDE : Sir, frequently such instances are brought to the attention of the Government, and some of them may be genuine and some of them may not be genuine. The Hon.

Minister has stated in his reply that precautionary steps would be taken in future. May I know, what are the steps taken by the Government to see that such instances are prevented and there is always oxygen in the cylinders? In fact in most of the modern hospitals oxygen is always running in pipes throughout all the wards. So, will the Government take steps to see that there is perennial supply of oxygen to the hospitals?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, டாக்டர் ஹாண்டே அவர்கள் இந்தக் கேள்வியை 100 ஆண்டுகளுக்கு முன்னால் போடுகிறார்கள். 100 ஆண்டுகள் கழித்துத்தான் டாக்டர் ஹாண்டே அவர்கள் அந்தக் கனவுலகத்திற்கு ஒருவேளை வரக் கூடும். அப்படி எல்லா நோயாளிகளுக்கும் செல்கிறது என்ற கருத்தை முதலிலே நான் மறுக்கிறேன். பெரிய நோயாளிகளுக்குத் தரப்பட வேண்டிய அதைப் பங்கிட்டுக்கொள்ள வேண்டும். மற்றொன்று அடிக்கடி நடைபெறுகிறது என்ற கருத்தைச் சொன்னார்கள். அடிக்கடி நடைபெறவில்லை. நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு நாள் மட்டும் இந்த ஆக்சிஜன் கிடைக்காத நிலை ஏற்பட்டது. அதற்குக்காரணம் அந்த ஆக்சிஜன் தயாரிக்கிற கம்பெனியிலுள்ள அதற்கான இயந்திரங்கள் வேலை செய்யாமல் பழுதுபட்டுவிட்டது. மற்றொருமுறை, 10 நாட்களுக்கு அந்தக் கம்பெனியிலுள்ள வேலையாட்கள் வேலைநிறுத்தம் செய்ததால் 10 நாட்கள் ஆக்சிஜன் கிடைப்பதிலே தகராறுகள் ஏற்பட்டன. இன்றைக்கு எவ்வளவு வழக்கமாக ஆக்சிஜன் சிலிண்டர்கள் பெறுகிறார்களோ, அதைவிட 6 சிலிண்டர்களை

'An extra set of 6 cylinders of Oxygen, outside the manifold requirements is always kept in reserve in the hospital.'

என்ற முறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதுதவிர, 6 சிலிண்டர்கள் உள்ள "மேனிஃபோல்ட்" முறைக்குப் பதிலாக 13 சிலிண்டர்கள் உள்ள 'மேனிஃபோர்ட்' முறையை ஏற்படுத்தி அதன்மூலம் ஆக்சிஜன் அதிகமாக வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதுதவிர, அன்றைக்கு ஆக்சிஜன் குறை ஏற்பட்டதினால் அன்றைக்கும் எமெர்ஜென்சி கேஸ்கள் இந்த ஆக்சிஜன் குறையினால் சிகிச்சை செய்யப்படுவது தவிர்க்கப்பட வில்லை. மாறாக நீண்ட நாட்கள் நோய்வாய்ப்பட்டு இன்னும் சிலநாட்கள் கழித்து எப்பொழுது வேண்டுமானாலும் அவர்களுக்கு சுவாசப்பை அளிக்கப்பட வேண்டிய, செஸ்ட் சம்பந்தமான அவர்களுக்கு இன்னும் சில நாட்களுக்கு பிறகு நிச்சயமாக ஆபத்தில்லாத சூழ்நிலையில் செய்யலாம் என்ற அந்த நிலையிலே யிருப்பவர்களுக்கு, 2, 3 நோயாளிகளுக்கு மட்டும்தான் ஆக்சிஜன் அதிகமாகக் கையிருப்பில் இல்லாததால், பின்னாலே அளிக்கப்பட்ட காரணத்தினால் நோயாளிகளுக்கு எந்தவிதமான குறையும் ஏற்படவில்லை.



**ஹவுஸ் சர்ஜன்களின் ஊதியம்.**

*** 325. வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஹவுஸ் சர்ஜன்களின் ஊதியத்தை அதிகப்படுத்தும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, தற்பொழுது ஹவுஸ் சர்ஜன்களுக்கு மாதம் ஒன்றுக்கு அளிக்கப்படும் ஊதியத் தொகை எவ்வளவு என்பதையும், இனியேனும் கொஞ்சமாவது அவர்களுக்கு உயர்த்திக்கொடுக்க அரசு ஆலோசிக்குமா என்பதையும் அறிவிக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஹவுஸ் சர்ஜன்கள் என்பது உத்தியோகம் என்ற கருத்தில் ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அது உத்தியோகம் அல்ல. பயிற்சி பெறுவதற்கு ஒரு வாய்ப்பு. பயிற்சி பெற்றால் டாக்டராக முடியும். பயிற்சி பெறும் காலத்தில் அலவன்ஸ்தான் சம்பளம் என்ற அடிப்படையில் அந்த நோக்கத்தை வலியுறுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், இம்மாதிரி ஹவுஸ் சர்ஜன்களுக்குப் பயிற்சி நடத்தினால் பின்னால் அவர்கள் பிராக்டிஸ் நடத்த சாதகமாகயிருக்கிறது. இருந்தாலும் பயிற்சிபெறும் காலத்தில் கிடைக்கும் அலவன்ஸைக்கொண்டு வாழ்க்கையை நடத்த உதவிகரமாக இருக்கும் வகையில் சற்று உயர்த்திக் கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, இந்தப் பயிற்சி இந்த ஊதியத்தின் மூலமாகத்தான் நடைபெறுகிறது என்று கருதுவதே தவறு. பல மாணவர்கள் இந்த ஊதியம் இல்லா விட்டாலும் பயிற்சி பெறுகிறோம் என்று வேறு மாநிலத்திலே படித்தவர்கள் இங்கே விண்ணப்பிக்கிறார்கள். மற்றொன்று இங்கே பயிற்சி கொடுத்த பிறகு அவர்களுக்கு முழுச்சம்பளத்துடன் அனைவரையும் வேலைக்கு எடுக்க முடியாது என்ற காரணத்தினால் 200 ரூபாய், 300 ரூபாய் என்ற அளவில் ஏற்படுத்தி அசிஸ்டென்ட் என்ற பெயரில் நியமிக்க முடியுமா என்று கருதும் நேரத்தில் இதை வலியுறுத்துவது மொத்த சமுதாய நலனுக்கு மாறுபட்ட தாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : How many House Surgeons are given stipends and what is the amount given as stipend?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, ஐந்தரை ஆண்டுகள் படித்து முடித்த எல்லா மாணவர்களும் இந்தப் பயிற்சிக்கான வாய்ப்பு அளிக்கப்படுகிறார்கள்.

*Exemption under Land Ceiling Act*

* 326 Q.—THIRU K. T. K. THANGAMANI: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether the Committee set up to consiler the exemption granted in the Land Ceiling Act as submitted its report; and

(a) if so, the action taken thereon?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :**

(அ) குழு தன் இடைக்கால அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது.

(இ) கூட்டுக்குழுவின் பரிந்துரைகளின்பேரில் தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உரிமைக்கு வரம்பு கட்டுதல்) திருத்த மசோதா 1971 கொண்டுவரப்பட்டு இருக்கிறது.

MR. SPEAKER: This has been discussed very elaborately on several occasions during the Land Revenue Demand. Hence, I am not allowing any supplementaries.

*Cumbly Weaving Centre in Hosur Block.*

* 327 Q.—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to start a Co-operative Cumbly Weaving Centre in Hosur Block, Dharmapuri District; and

(b) if so, when it will be started?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :**

(அ) ஆம்.

(இ) இக்கூட்டுறவுச் சங்கத்தை நிறுவுவதற்கான செயற்குறிப்பு தொழில் வணிகத்துறை இயக்குநரின் பரிசீலனையிலுள்ளது. இச்சங்கம் அமைத்தால் நன்கு செயல்படுமா என்பதை ஆராய்ந்த பின் அதைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் இயக்குநரால் எடுக்கப்படும்.

**சென்னையிலுள்ள தொழில் கூட்டுறவு வங்கி**

* 328. வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னையில் இயங்கி வரும் தொழில் கூட்டுறவு வங்கி (Industrial Co-operative Bank) லாபத்தில் இயங்கி வருகிறதா?

(இ) ஆம் எனில், 1970-ஆம் ஆண்டு முடிய அதன் லாபம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :**

(அ) ஆம்.

(இ) 1970-ம் ஆண்டு ஜூன் மாதம் 30-ம் தேதி முடிய லாபம் ரூ. 8,04,622.47.



திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, இது இவ்வளவு லாபம் கொடுத்திருப்பதால் இந்த லாபமெல்லாம் சிறுகூட்டுறவுச் சங்கத்தினால் பெறப்பட்டது. எனவே அவர்களுக்குக் கடன் கொடுப்பதிலே வட்டி விகிதத்தைக் குறைத்துக்கொடுக்க அரசு முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அப்படி லாபம் கிடைப்பதால் அதிலே யார் யார் பங்குதாரர்களாக இருக்கிறார்களோ அவர்களுக்கும் பயன் கிடைக்கும், பணம் போட்டவர்களுக்கும் பயன் கிடைக்கும். வட்டியைப் பொறுத்தவரையில் அபெக்ஸ் சொஸைட்டியை பேங்காக ரிசர்வ் பேங்க் ஒத்துக்கொண்டால் வட்டியைக் குறைப்பதைப்பற்றி ஒத்துக்கொள்ளலாம்.

**பாக்கம் மலையில் கனிப்பொருள்கள்**

* 329 வினா—திரு. ரா. ரா. முனுசாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி வட்டத்தில் உள்ள பாக்கம் மலையில் கனிப் பொருள்கள் இருப்பதாக அரசுக்குத் தகவல் ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில் அங்கு ஆராய்ச்சி நடத்தி கனிப்பொருள்கள் எடுக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :**

(அ) இல்லை.

(இ) வினா எழவில்லை.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவர் அவர்களே, முன்னாள் அரசாங்கம் செஞ்சி வட்டத்தில் உள்ள பாக்கம் மலையில் 1956-இல் ஜப்பானிலிருந்து ஆராய்ச்சிக் குழுவினர் வந்து ஆராய்ச்சி நடத்தினார்கள் என்று முன்னாள் அரசாங்கத்தில் சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர்கள் சொல்கிறார்கள், அந்தத் தன்மையைப் போல் ஆராய்ச்சி நடத்தப்பட்டதா. இல்லையென்றால் ஜப்பானிலிருந்து குழுவை வரவழைத்து ஆராய்ச்சி செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அந்தப் பகுதியிலே ஆராய்ச்சி நடத்தப்பட்டது. அதிலே பாக்கம் குன்றிலே (Granite dolerit.) கிடைப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டது.

*Mineral deposits near Palani*

* 330 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether minerals for the fabrication of special steel have been struck near Palani by the Geological Survey of India; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) ஆம். தனித்தன்மை எஃகு வார்ப்பு தொழிலில் உபயோகப்படும் மிக முக்கியமான தாதுவான மாலிப்டினைட் என்னும் கனிப்பொருள் மதுரை மாவட்டம் பழனி வட்டத்திலுள்ள காடிக்குட்டம், சத்திரப்பட்டி என்னும் கிராமங்களுக்கு அருகில் இந்திய கனிப்பொருள் நில ஆய்வுத் துறையாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

(இ) இந்திய கனிப்பொருள் நில ஆய்வுத்துறையார் இப்பகுதியில் தீவிர ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். ஏறத்தாழ 17,000 மெட்ரிக் டன் 0.187 சதவிகிதம் மாலிப்டினைட் தாது 140 மீட்டர் நிலப்பரப்பில் 38.35 மீட்டர் ஆழம் வரை இருக்கலாமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும் துளைக்கருவியின் மூலம், துளை போட்டு விரிவான ஆராய்ச்சி தொடர்ந்து நடந்து வருகிறது.

*Mica deposits in Kanyakumari District.*

*331 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Industries be pleased to state the steps taken by the Government so far to utilise the mica deposits in Kanyakumari district?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அபிரகம் (மைக்கா) வகைகளுள் ஒன்றான ஃப்ளொகோபைட், இந்தியப் புவியியல் துறையினராலும், மாநில புவியியல் பிரிவாலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் திருவிதாங்கோடு, இரணியல், விளவங்கோடு, திப்பூர் மலை, அப்பியோடு, நட்டாலம், நெய்யூர் ஆகிய இடங்களைச் சுற்றிலும் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய அபிரகப் படிவங்கள், மேல்மட்டத்தில் குறைந்த அளவில் மட்டும் கிடைப்பதாக ஆராய்ச்சியின் மூலம் அறியப்பட்டது. மேலும் இவ்வபிரகத்தின் தரக்குறைவு, தொழில் முறையில் இவ்வபிரக வகையில் தேவையின்மை. ஆகிய இவ்விரு காரணங்களினால் மேற்கூறிய அபிரகப் படிவங்கள் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படவில்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, இங்கு முன்னாலிருந்து மைகா டெபாசிட் பல கம்பெனிகளால் எடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல மறுமுறையும் புனராலோசனை செய்து யாராவது முன்வந்தால் அதற்கு அரசாங்கம் வேண்டிய ஊக்கங்களை அளிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** brown coloured mica என்று சொல்கிறார்கள். இது அதிகப் பயன் இல்லை என்றும், Muscovite mica அதிகப் பயனுள்ளதாகவும் கருதப்படுகிறது. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்னதைப்போல் யாராவது முன் வந்தால் அனுமதி கொடுக்கத் தயாராக இருக்கிறோம்.



## தமிழ்நாட்டுக்கு துரு ஏறா எஃகு தகடுகள் ஒதுக்கீடு

* 332. வினா—**திரு. ஏ. எம். இராஜா:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிற்கு ஆண்டொன்றுக்கு எவ்வளவு டன் ஸ்டெய்ன்லஸ் ஸ்டீல் தகடுகள் (Stainless Steel Sheets) கொடுக்கப்படுகின்றன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இம்மாநிலத்திற்கு துரு ஏறா எஃகுத் (Stainless Steel Sheets) தகடுகள் வழங்குவதில், ஆண்டொன்றுக்கு ஒதுக்கீடு இவ்வளவு என்று கிடையாது.

**திரு. ஏ. எம். இராஜா:** தலைவரவர்களே, நம்முடைய தமிழ்நாட்டில் தேவை எந்த அளவிற்கு இருக்கிறது? அந்த அளவில் இந்தியப் பேரரசு ஒவ்வோராண்டும் இந்தத் தகடுகளை ஒதுக்குகிறார்களா, அப்படி ஒதுக்கவில்லையென்றால் நம்முடைய நாட்டிலேயே இந்தத் தகடுகளை யாராவது உற்பத்தி செய்யக் கேட்டிருந்தால் அவர்களுக்கு அரசு உதவி செய்ய முன்வர தகுந்த நடவடிக்கை எடுத்திருக்கிறதா அல்லது அரசே இந்த மாதிரி உற்பத்தி ஆலைகள் நிறுவ நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தமிழ்நாட்டின் தேவை 56,800 மெட்ரிக் டன் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. மத்திய அரசு வட பகுதியிலே உற்பத்தி புதிதாகத் தொடங்கியிருக்கிறது. நம்முடைய தேவைக்கேற்ற ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் கிடைக்கவில்லை. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ஒரு சிறு ஆலையில் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் உற்பத்தியைத் தொடங்கலாம் என்று முயற்சியெடுத்து, மத்திய சர்க்காரை வலியுறுத்தி வருகிறோம். சேலம் உருக்காலையோடு அதையும் இணைக்கலாம் என்ற பரிசிலனையும் உள்ளது.

**திரு. நா. வீரசாமி:** தலைவரவர்களே, நம்முடைய தேவைக்கு வேண்டிய ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். வட மாநிலங்களுக்கு நம்மைவிட 2 மடங்கு, 3 மடங்கு கொடுக்கிறார்கள். மத்திய சர்க்கார் எந்த அடிப்படையில் ஸ்டெயின்லெஸ் ஸ்டீலை அலாட் செய்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மத்திய சர்க்கார் இதைப் போன்ற மூலப்பொருள்களை எல்லா மாநிலங்களுக்கும் பங்கிட்டுக் கொடுக்கும்பொழுது, அந்த மாநிலத்தினுடைய தேவைகளைக் கணக்கிட்டு மாநில அரசாங்கத்திற்குப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டுமென்பது நம்முடைய கோரிக்கை. அதை மத்திய அரசு ஏற்பதாகயில்லை. ஆகவே, இதுபோன்ற சிக்கல்கள் அடிக்கடி வருகின்றன.

*Mobile Booking Service in Madras City*

* 333 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Government are aware of the scheme of the Southern Railway to run a mobile goods booking scheme;

(b) whether permission of the Commissioner of Police, Madras City, has been obtained; and

(c) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) தென் பிராந்திய இரயில்வே, பொதுநிர்வாகி அவர்கள், சிறுசாமான்கள் அனுப்புவதற்கு பண்டங்கள் பதிவு செய்து அனுப்பும் நடமாடும் திட்டம் என்ற புதுபணியை சென்னை நகரில் 26—2—1970 அன்று துவக்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

(இ) இல்லை. காவல் அதிகாரிகளின் அனுமதி தேவையில்லை.

(உ) கேள்விக்கு இடமில்லை.

**சாத்தனூர் அணையில் திரைப்படம் பிடிக்கக் கட்டணம்**

* 334 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தனூர் அணைக்கட்டில் திரைப்படம் எடுக்க கட்டணம் வசூலிக்கப்படுகிறதா?

(இ) ஆம் எனில், எவ்வளவு?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா:** (அ) ஆம்.

(இ) நாள் ஒன்றுக்கு 100 வீதம் கட்டணம் வசூலிக்கப் படுகிறது.

**திரு. என். கிட்டப்பா :** சாத்தனூர் அணைக்கட்டில் படப் பிடிப்புக்குத் தற்போது வசூலிக்கும் தொகையை அதிகப்படுத்தி, மேற்கொண்டு அந்த இடத்தை இன்னும் வனப்புள்ளதாக்க அரசு ஆலோசிக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அதுபோன்ற எண்ணம் இப்போது இல்லை.

*Paddy fields in Lalgudi Taluk*

* 335 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether it is a fact that a number of paddy fields in Lalgudi Taluk, Tiruchirappalli district have been converted into sugarcane growing fields this year;

(b) if so, the extent that has been so converted; and

(c) whether prior permission of the Government was obtained to effect these conversions?





**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) லால்குடி வட்டத்தில் மூன்று ஆண்டுகளுக்கு சுழல்பயிராக crop rotation நன்செய் நிலத்தில் கரும்பு பயிர் செய்வது பழக்கத்திலிருந்து வருகிறது. எனவே, நெல் சாகுபடி செய்யும் நிலங்களை நிரந்தரமாக கரும்பு சாகுபடிக்கு கொண்டு வந்திருப்பதாகக் கூறுவதற்கு இடமில்லை.

(இ) & (உ) இவ் வினாக்களுக்கு இடமில்லை.

DR. H. V. HANDE : May I know whether during the last three years large tracts of paddy fields have been converted into sugarcane fields and whether the Government have got statistics with regard to the number of acres that have been so converted during the last three years?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** 1969–70-ல் லால்குடி வட்டத்தில் கரும்பு சாகுபடி செய்யப்பட்ட பரப்பளவு 8,708 ஏக்கர், 1970–71-ல் 4,874 ஏக்கர். இந்த ஆண்டு இன்னும் கணக்கு வரவில்லை. இதில் ஏறத்தாழ 3,834 ஏக்கர்கள் கரும்பு சாகுபடி செய்யப்பட்டு வந்த நிலங்கள் இப்போது நெல் சாகுபடி செய்யப் பட்டு வருகிறது. அந்தப் பகுதியில் 9,000 ஏக்கர் பயிர் செய்யப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டாலும், அதிகமாக வெல்லம் அதிக விலைக்கு விற்கின்ற நேரத்தில் விவசாயிகள் தாங்களாகவே கரும்பு உற்பத்தி செய்து கொண்டு வருகிறார்கள். கரும்பாலைக்கு எந்த அளவுக்குப் பயிர் செய்யவேண்டுமோ அந்தளவிற்கு பயிர் செய்யப் பட்டு வருகிறது. அதனால்தான் அதிகமாக இப்போது நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** லால்குடி வட்டத்தில் கரும்பின் விலை கணிசமாகக் குறைக்கப்பட்டு விட்டதன் காரணமாக கரும்பு பயிரிடும் விவசாயிகள் கஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** அப்படி ஒன்றும் இல்லை.

DR. H. V. HANDE : May I know whether it is a fact that there are some land-owners in this area who are poor widows and who have very little income, but the tenants have suddenly converted the fields into sugarcane fields and they are making a lot of profit, but these people are not getting whatever basic things they have to get and they go under the protection of the Tenancy Act and they have completely changed over to sugarcane? When such a situation arises, will this Government come forward to give some sort of security to these persons who have no other source of income?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** இது வருவாய்த் துறை அமைச்சரிடம் சொல்ல வேண்டியது. இருந்தாலும் இந்த அரசு கரும்பு சாகுபடி உற்பத்தியைப் பெருக்குவதற்காக சப்சிடிகளும்

கொடுக்கப்பட்டு வருகிறது. விதைக் கரும்பைக் கொடுப்பதற்கும், பயிர்ப் பாதுகாப்பு ரசாயன முறையில் மட்டுமின்றி, அது தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழும் கொண்டு வரப்பட்டிருக்கிறது. கரும்பு சாகுபடியின்கீழ் உள்ள பரப்பளவை அதிகமாக்குவதைக் காட்டிலும் ஏக்கர் ஒன்றுக்குக் கிடைக்கும் விளைச்சலை அதிகப் படுத்தும் நோக்கத்துடன் எட்டு கரும்பாலைப் பிரதேசங்களில் மும்முர சாகுபடித் திட்டம் செயலாக்கப்பட்டிருக்கிறது. அவை களுக்கு வேண்டிய எல்லாவிதமான உதவிகளையும் அரசு வழங்கி வருகிறது.

## *Cellular concrete plant at Ennore*

* 336 *Q.*—DR. H. V. HANDE : THIRU N. KITTAPA : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether there is any proposal to put up a Cellular Concrete Plant opposite the Ennore Thermal Station to produce precast bricks and slabs using flyash as the main raw material; and

(*b*) when is the Plant likely to start production?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) எண்ணூர் அனல்மின் நிலையத்திற்கு எதிரில் அமைக்கப்பட்டு வருகிற புழைக்கற்கல்லைத் தொழிற்சாலை முன்னரே வார்க்கப்பட்ட செங்கற்களையும் மணலை மூலப்பொருளாகப் பயன்படுத்தி மணல் தளக்கற்களையும் உற்பத்தி செய்ய அமைக்கப்பட்டுள்ளது. எண்ணூர் அனல் மின்சார நிலையத்தில் உற்பத்தியாகிற சாம்பலைக் கொண்டு உறுதிவாய்ந்த கட்டிடப் பகுதிகளைத் தயாரிப்பது குறித்து தொடர்ந்து சோதனை நடத்திய பிறகும், அது தொடர்பான பொருளாதாரக் கூறுகளை ஆய்வு செய்த பிறகும், தற்போது கட்டிடப் பொருட்கள் தயாரிப்பதில் மணலைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக இன்னும் சுமார் 4 ஆண்டுகளில் இச் சாம்பலைப் பயன்படுத்துவதற்கான செயற்குறிப்பு ஒன்று ஆய்வில் உள்ளது.

(இ) மணலைப் பயன்படுத்தி மாதிரி உற்பத்தி 1971 நவம்பர் மூன்றாவது வாரத்தில் மேற்கொள்ளப்படுமென எதிர்பார்க்கப் படுகிறது. அதன் பின்னர் 6 வாரத்திற்குள் முறையான உற்பத்தி ஆரம்பிக்கப்படும்.

DR. H. V. HANDE : May I know the investment that the Government are going to make on this—the total amount—whether this is a State Government Project, when is it exactly going to start and the number of persons who are likely to be employed in this Project and whether preference will be given to the persons who belong to that area?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : 1971 நவம்பர் மூன்றாவது வாரத்தில் இந்தத் தொழிற்சாலை வேலை தொடங்கும் என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். இதுவரையில் வீட்டு வசதி வாரியத் துறை மத்திய அரசு உதவித் தொகையாக 230 லட்சம்





ரூபாயை மூலதனமாகப் போட்டிருக்கிறது. மீண்டும் மறு மதிப் பீட்டின்படி 365 லட்சம் ரூபாய் வரையில் செலவு செய்யத் திட்ட மிடப்பட்டிருக்கிறது. முடிந்த வரையில் அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்புகள் தரப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : புதிதாக அமைக்கப்படக்கூடிய பிளாண்டில் ரேட்டெட் கபாசிடி எவ்வளவு? நவம்பர் மாதத் திற்குப் பின்னால் எவ்வளவு தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும்?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தொழிற்சாலை அமைப்பது முடிவுபெற்ற பிறகுதான் அதனுடைய நிலவரம் தெரியும். தற்போது அந்தப் புள்ளி விவரங்கள் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : அதில் உற்பத்தியாகும் செங்கற்கள் எவ்வளவு? ஹவுசிங் போர்டுக்குத் தவிர தனி நபர்கள் பயன்படுத்துவதற்குக் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : ஏறக்குறைய ஆண்டு ஒன்றுக்கு நான்கு கோடி ரூபாய் வரையில் செங்கற்கள் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது. தனியாருக்கும் விற்கப்படும் என்று நம்புகிறேன்.

## *Assistance by Prosperity Brigade to State Transport Services.*

* 337 *Q.* THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the Prosperity Brigade has been deployed to assist the State Transport Services in Madras City; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:

(அ) ஆம்.

(இ) இவர்கள் காலையிலும், மாலையிலும் சென்னை மாநகரில் பேருந்துகள் நிற்கும் முக்கியமான 50 இடங்களில் பயணிகளை ஒழுங்காக வரிசை முறையில் நிற்கவைத்து நெரிசலின்றிப் பயணிகளைப் பேருந்துகளில் ஏற்றியனுப்பி உதவி வருகிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அவர்களுக்காக ஆள் ஒன்றுக்குச் செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஆள் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் தரப்படுகிறது. வேறு எந்தச் செலவும் இல்லை.

திரு. ஏ. எம். இராஜா : இப்போது சென்னை நகரில் 50 இடங்களில் சீரணிப் படையினரைப் பயன்படுத்திக் கொள்வதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இதுபோன்ற மற்ற பல பஸ் ஸ்டாப்புகளிலும் இந்த சீரணிப் படையினரைப் பயன்படுத்து

வார்களா ? டிராபிக் அதிகமாக இருக்கும் நேரத்தில் போக்குவரத்தை ஒழுங்குபடுத்த சீரணிப் படையினரைப் பயன்படுத்த முன் வருவார்களா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இந்தச் சீரணித் தொண்டர்கள் உண்மையில் போக்குவரத்து நெரிசல் நேரங்களில் மிகவும் பயன்படுத்தப்படுகிறார்கள். இப்போது 50 இடங்களில் பயன்படுத்தப்படுகிறார்கள். இன்னும் நல்ல அளவில் ஏராளமான தொண்டர்கள் அத்தகைய தொண்டினை மேற்கொள்ள முன்வருவார்களானால், இதர இடங்களிலும் பயன்படுத்த அரசாங்கம் முன்வரும்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** இந்தப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதற்கு, பாய்ஸ் ஸ்கவுட்ஸ், கேர்ல் ஸ்கவுட்ஸ் ஆகியோரைப் பயன்படுத்துகிறார்களா ? அந்தத் திட்டம் எவ்வளவு தூரம் பயன்படுகிறது ? அதை அபிவிருத்தி செய்யத் திட்டம் உண்டா ? அதற்கு எவ்வளவு செலவாகிறது ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** ஸ்கவுட்ஸ் பிரிவைச் சேர்ந்தவர்களும் பயன்படுத்தப்படுகிறார்கள். எவ்வளவு செலவாகிறது என்ற விவரங்கள் இல்லை. தனியாகக் கேள்வி கேட்பார்களானால், அந்த விவரங்கள் சேகரித்துத் தரப்படும்.

**திரு. என். கணபதி :** இப்போக்குவரத்துக் கட்டுப்படுத்தலில் ஈடுபடுகிற நம் சீரணித் தொண்டர்களுக்கு பஸ் போக்குவரத்திற்கு ஏதாவது வசதி செய்து தரப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** குறிப்பிட்ட வேலை நேரங்களில் அந்தச் சீரணித் தொண்டர்கள் வருவதற்கு இலவச அனுமதிச் சீட்டு சீரணித் தொண்டர்களுக்கு அரசால் வழங்கப்பட்டுள்ளது.

**திரு. கோவை செழியன் :** இப்படி தன்னலம் கருதாது பொது மக்களுக்காக உழைக்கிற இந்தத் தொண்டர்களில் சில பேர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அரசாங்க உத்தியோகங்களில் வேலைக்கு ஆள்களை எடுக்கும்போது இவர்களுக்கு முதலிடம் தரப்படுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அரசாங்க வேலைகளில் இத்தகைய பொது நல நோக்கம் கொண்டவர்களும், நாட்டுப் பற்று கொண்டவர்களும், அனுபவம் மிக்கவர்களும் ஒரு சலுகைக்குரிய இடத்தை கட்டாயம் பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ஆள் ஒன்றுக்கு, நாள் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் கொடுக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த இரண்டு ரூபாய் போதவில்லை என்று அரசுக்கு ஏதாவது முறையீடு செய்திருக்கிறார்களா? அப்படி முறையீடு செய்திருந்தால் அதன் பேரில் என்ன செய்ய உத்தேசம் என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** முறையீடுகள் வருமேயானால் அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

**திரு. கே. ஏ. வகாப் :** சென்னையில் உள்ள பிராட்வே பஸ் நிலையம் மிகவும் நெருக்கடியானதொரு இடமாகும். அங்கு இந்த சீரணித் தொண்டர்களைக் கொண்டு ஒழுங்குபடுத்த ஏற்பாடுகள் செய்வதோடு, அவர்களுக்குத் தரப்படுகிற ஊதியம் மிக மிகக்குறைவாக இருப்பதினால் அதை அதிகப்படுத்தித் தருவதற்கு அரசாங்கம் முன் வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யோசனை அரசால் பரிசீலிக்கப்பட்டு, நடைமுறைக்கு ஒத்துவருமானால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**திரு. ரா. ரா. முனுசாமி :** சென்னை நகரில் சீரணித் தொண்டர்களைக்கொண்டு நெரிசலைத் தவிர்க்க நடவடிக்கைகள் மேற்கொள்கிறார்கள். அதேபோல் மற்ற வட்டங்களிலும், மாவட்டங்களிலும் நம் அரசாங்கப் பஸ்களில் வரக்கூடிய பயணிகளைத் தடுத்து நிறுத்தி தனியார் வண்டிகளில் ஏற்றிச் செல்கிறார்கள். அதையெல்லாம் தடுக்க அங்கு சீரணித் தொண்டர்களைப் பயன்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** நகரத்தில் நெரிசல் நேரங்களில் முழு நேர ஊழியர்களுக்குப் பதிலாக இத்தகைய சீரணித் தொண்டர்களின் பணியை மேற்கொள்வது சிக்கனமானதாகும். அதே சமயத்தில் சீராக நெரிசல் நேரத்தை சமாளிக்க இந்தச் சீரணிப்படையினர் பயன்படுத்தப்படுகிறார்கள். வெளியூர்களில் தனியார் பேருந்துகளிலும், அரசாங்கப் பேருந்துகளிலும் பயணிகளை ஏற்றிக்கொள்கிற வகையில் போட்டி வருவதை தவிர்ப்பதற்கு அங்கு ப்ரோக்கர்களை நியமிக்கலாமா என்பதை அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

**திரு. என். கணபதி :** மகளிர்க்கு மட்டும் என்று பஸ்கள் போகிற நிலையில், மகளிரைக் கட்டுப்படுத்த பெண் சீரணித் தொண்டர்கள் இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மகளிரைப் பொறுத்த வரையில் கட்டுப்படாத அளவிற்கு காரியங்கள் ஒன்றும் நடைபெறுவதில்லை. ஆகவே தேவை இல்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** நெரிசல் நேரம் என்று சொன்னால் எத்தனை மணி நேரம் காலையிலும் மாலையிலும் அவர்கள் வேலை செய்கிறார்கள் ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** காலை எட்டு மணி முதல் 11 மணி வரையிலும், மாலை 4-30 முதல் 7-30 வரையிலும் ஆக ஆறு மணி நேரம் அவர்கள் அப்பணியில் ஈடுபடுகிறார்கள்.

[1971 ஜூலை 20

**திரு. கு. காமாட்சி :** சீருடைத் தொண்டர்கள் நாள் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் பெற்றுக்கொள்கிறார்கள் என்று கூறப்பட்டது. அந்த இரண்டு ரூபாய் கூடப் பெற்றுக்கொள்ளாமல் பணி புரிவது அரசுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இரண்டு ரூபாய் பெற்றுக் கொள்ளாமல் சிலவிடங்களில் பணியாற்றி வருகிறார்கள். ஆனால் அந்த இரண்டு ரூபாய் என்பது அவர்களுக்கு ஊதியமாகத் தரப்படுகிறது என்பது பொருள் அல்ல. அவர்களுக்கான உணவு, மற்றத் தேவைகளுக்காக அது தரப்படுகிறது. சீருடை என்றாலே தானே முன்வந்து செய்கிற தொண்டு என்று பொருள்.

**திரு. நா. வீராசாமி :** சென்னையில் மட்டும் இந்தச் சீருடைத் தொண்டர்கள் பயன்படுத்தப்படுகிறார்கள். ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலுமுள்ள போக்குவரத்து இலாகாவில் இந்தச் சீருடைத் தொண்டர்களின் சேவையைப் பயன்படுத்திக் கொள்ள அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாவட்டத் தலைநகரங்களிலும் இந்தத் தொண்டர்களைப் பயன்படுத்தும் யோசனை இல்லை. தேவைப்படுமானால் அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முற்றுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப்படவில்லை என்பதைக் குறிக்கும்.]

## (2) கவன ஈர்ப்பு.

### தனியார் கல்லூரிகளில் மாணவ, மாணவிகளைச் சேர்த்துக் கொள்வதில் ஏற்படுகின்ற முறைகேடுகள்பற்றி.

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, தனியார் கல்லூரிகளில் மாணவ, மாணவிகளைச் சேர்த்துக் கொள்வதில் ஏற்படுகின்ற முறைகேடுகளைப் பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ், நான் மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, கல்லூரிகளில் சேருவதற்கான தகுதியை நெறிப்படுத்தும் விதிகள், ஒவ்வொரு பிரிவிற்கும் ஏற்படுத்திய இடங்களின் எண்ணிக்கை முதலியன அந்தந்தப் பல்கலைக்கழகங்களினால் வரையறை செய்யப் படுகின்றன. அந்த விதிகளுக்கேற்பவே மானியம் பெறும் கல்லூரிகளில் அந்தந்தக் கல்லூரி முதல்வர்களால் மாணவர்கள் சேர்க்கப் படுகின்றனர். இம் மாநிலத்தின் தேவையை நிறைவு செய்யும் அளவுக்கு கல்லூரிகளில் இடங்கள் இருப்பினும், ஒரே சமயத்தில்,



1971 ஜூலை 20] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

பல கல்லூரிகளுக்கும் மாணவர்கள் விண்ணப்பம் செய்வதால், முதலில் இடநெருக்கடி இருப்பதுபோல் தோன்றுகிறது. மேலும் பெரும்பான்மையான பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை தங்கள் விருப்பத்திற்கேற்ப குறிப்பிட்ட கல்லூரிகளில் சேர்க்க விழைகின்றனர். ஒரு குறிப்பிட்ட கல்லூரியில், குறிப்பிட்ட பிரிவில் இடம் கிடைக்கவில்லையெனில், குறைந்த மதிப்பெண் பெற்றிருந்தும், இட நெருக்கடிப் பிரச்சினை உள்ளதாகக் கருதுகின்றனர்.

1971-72 முதல் எல்லாக் கல்வி நிலையங்களும் எல்லாப் பிரிவுகளுக்கும் கீழ்க்கண்டவாறு இட ஒதுக்கம் செய்யவேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது:

| | |
|---|---|
| பிற்பட்ட வகுப்பினர் | 31% |
| ஷெட்யூல்டு வகுப்பினர் மலை ஜாதியினர் | 18% |

அந்த அரசு ஆணையின்படி இட ஒதுக்கம் செய்தால்தான் அரசு மானியம் கிடைக்கும். இந் நிபந்தனை தனியார் கல்லூரிகள், உள்ளாட்சித் துறைக் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றிற்குப் பொருந்தும். 21—6—1956 நாளிட்ட அரசு ஆணை எண்: 1195 படி புகுமுக வகுப்பு, பி.ஏ., பி.எஸ்.சி., பி.காம். ஆகியவற்றின் ஒவ்வொரு பிரிவின் இளநிலை வகுப்பிலுள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கையைக் கொண்டுதான், தனித்தனியே இட ஒதுக்கம் கணக்கிடப்படவேண்டும். ஒவ்வொரு கிளையிலும்—அதாவது கணித இயல், பௌதிக இயல் முதலானவற்றில் தனித் தனியே இட ஒதுக்கம் சரியாக இல்லாவிட்டாலும் எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்குக் கடைப்பிடிக்க தனியார் நிர்வாகத்தினர் அனுமதிக்கப்படுகின்றனர். பட்டப் படிப்பிற்கு மேற்பட்ட படிப்பிற்கான பிரிவுகளுக்கும் இவ்விதி பொருந்தும்.

1969-70-ல் 1.5 இலட்சமாக இருந்த கலை, அறிவியல் மாணவர்களின் எண்ணிக்கை 1970-71-ல் 1.63 இலட்சமாக உயர்ந்தது. இது மேற்பட்டப் படிப்புப் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையை உள்ளடக்கியதாகும். கீழ்க் குறிப்பிட்டுள்ள புள்ளி விவரங்கள் கல்லூரிகளில் ஏற்பட்டுள்ள இடப்பெருக்கத்தை தெளிவு படுத்தும் :

| | 1967–68 | 1968–69 | 1969–70 | 1970–71 |
|---|---|---|---|---|
| புகுமுக வகுப்பு .. | 57,000 | 60,000 | 64,000 | 70,058 |
| பி. ஏ., பி.எஸ்.சி. } | 53,000 | 59,106 | 65,991 | 75,668 |

1971-72-ல், 9 தனியார் கல்லூரிகளுக்கு அரசு மானியம் வழங்க முடிவு செய்துள்ளது. மேலும், தேவையான அளவு நன்கொடை பொது மக்களிடமிருந்து கிடைத்தால், மூன்று அரசினர் கல்லூரிகளைத் திறக்க அரசு முடிவு செய்துள்ளது. வழக்கமான முழுநேரக் கல்லூரிகளைத் தவிர கலை, அறிவியல் கொண்ட மாலை நேரக் கல்லூரிகள் 1965-66 முதல் திறக்கப்பட்டன. அவற்றில் பல பிரிவுகள் ஒவ்வொராண்டிலும் திறக்கப்பட்டன. 10 மாலை நேரக் கல்லூரிகள்

1970–71-ல் திறக்கப்பட்டன. இப்பொழுது 20 மாலை நேரக்கல்லூரிகள் நடைபெறுகின்றன. 1970-71-ல் இந்த 20 கல்லூரிகளில் 6,262 மாணவர்கள் பயின்று வந்தனர்.

இவை தவிர ஏ.எல். முதலியார் குழுவின் பரிந்துரைகளை அரசு ஏற்றுக்கொண்டது. இதன் விளைவாக, ஆங்கிலம் பயிற்று மொழியாக இல்லாத அரசினர் கல்லூரிகளில், அம் மொழி மூலம் கல்வி பயிலக்க, அதிகமான பிரிவுகளை திறக்க அரசு ஆணையிட்டது. இதனால், கல்லூரிகளில் மாணவர் எண்ணிக்கையும் அதிகமாக இருக்கின்றது.

மேலும், அதிகமான கல்லூரிகள் திறப்பதற்கு வேண்டிய எல்லாவித முயற்சிகளையும் அரசு மேற்கொண்டு வருகின்றது.

**திரு. நா. வீராசாமி :** அரசாங்க கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு ஒரு குழு அமைப்பது போல் தனியார் கல்லூரிகளிலும் அரசாங்கப் பிரதிநிதி ஒருவரை அனுப்பி மாணவர்களை முறையாகச் சேர்த்துக் கொள்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனை நல்ல யோசனைதான். ஆனால், அதை அரசு நேரடியாகச் செய்வதற்கு அரசாங்கத்தினிடம் ஆணை இல்லை. அதைப் பல்கலைக்கழகம் முடிவு செய்யவேண்டும். பல்கலைக்கழக சிண்டிகேட் அவையில் அந்தக் கருத்தைத் தெரிவித்தபோது, அந்த அவையில் உள்ள பெரும்பான்மையினர் அந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகவே, கட்டுப்படுத்தக் கூடிய ஒரு சூழ்நிலையைக் கொண்டுவரவேண்டும் என்பதுதான் அரசின் எண்ணம். அதைப் பல்கலைக்கழகம்தான் முடிவு செய்யவேண்டும். பல்கலைக் கழகத்திடம் அந்தக் கருத்தைத் தெரிவிக்க அரசு எண்ணியிருக்கிறது.

### (3) 1971-72-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு (தொடர்ச்சி)

### (அ) கோரிக்கை எண் 19—கூட்டுறவு.

### (ஆ) கோரிக்கை எண் 22—கதர்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல்,

"கோரிக்கை எண் 19—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,88,01,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நில்வள வங்கிகளுக்குக் கட்சி சார்பற்ற அங்கத்தினர்களை நியமிக்க வேண்டியதன் அவசியம் பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 19—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 5,88,01,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.



**Thiru K. T. K. Thangamani :** Sir, to discuss the need for more allocation of funds to Handloom Weavers for protecting the industry and the workers, I move the following cut motion :—

"That the allotment of Rs. 5,88,01,700 under Demand No. 19—Co-operation be reduced by Rs. 100."

**Dr. H. V. Hande :** To discuss the several irregularities committed by the Tamil Nadu Co-operative Union in or about May 1963 in the construction of the building of the Tamil Nadu Co-operative Union, I move the following cut motion :—

"That the allotment of Rs. 5,88,01,700 under Demand No. 19 Co-operation be reduced by Rs. 100."

**திரு. கே. என். குமாரசாமி :** பேரவைத் தலைவரவர்களே, வேளாண்மைக் கடன்கள் வறட்சிப் பகுதிகளில் கட்ட முடியாத விவசாயிகளுக்கு நிவாரணம அளிப்பது பற்றி சர்வே செய்து, கட்ட முடியாத விவசாயிகளிடம் வட்டி மட்டும் பெற்று, ஜப்தி முதலானவற்றை நிறுத்தி வைப்பது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 19—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 5,88,01,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்", என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்."

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** பேரவைத் தலைவரவர்களே,

"கோரிக்கை எண் 22—கதர் என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 33,50,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

**Thiru R. Ponnappa Nadar :** To stress the need for giving compensation to tappers who meet with fatal accidents and who were not members of a co-operative society and to amend the Government order suitably, I move the following cut motion :—

"That the allotment of Rs. 33,50,400 under Demand No. 22—Khadi be reduced by Rs. 100."

**Thiru K. T. K. Thangamani :** To discuss the closure of the tailoring unit in Mount Road, Madras throwing out 25 workers including 12 girls, I move the following cut-motion :—

"That the allotment of Rs. 33,50,400 under Demand No. 22—Khadi be reduced by Rs. 100."

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கதர் இலாகாவில் பணியாற்றும் பலரை வேலை நீக்கம் செய்ய உள்ள நிலைமையைத் தவிர்ப்பது பற்றி எடுத்துக் கூற—

"கோரிக்கை எண் : 22—கதர் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 33,60,400 ல் ரூ. 100 குறைக்க வேண்டும்", என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

---

478-486-ம் பக்கங்களில் அறுவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. கே. என். குமாரசாமி : பேரவைத் தலைவரவர்களே, கதர் தொழிலில் ஈடுபட்டுள்ள பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு கொடுப்பதைப்பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 22—கதர் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 33,50,400-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மான்யக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் அவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டு இருக்கின்றன. "ஆளுநர் அவர்கள் பரிந்துரையின்மேல்" என்பதை விட்டு விட்டீர்கள், அதையும் சேர்த்துக்கொள்ளுங்கள்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : சேர்த்துக்கொள்கிறேன். "ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கோரிக்கை எண் 22—கதர் என்ற தலைப்பின் கீழ் ரூ. 33,50,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்" என கோருகிறேன். தமிழ்நாடு கூட்டுறவுத் துறை மானியக்கோரிக்கை மீது என் உரை இந்த மாமன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது. I have printed my speech. / It may be included as proceedings of the House.., அது ஆங்கிலத்தில் எழுதித் தமிழாக்கப்பட்டது. அதில் ஒரு சில குறிப்பிடத்தகுந்த பகுதிகளை வாசிக்கிறேன்.

எனவே, அறிஞர் அண்ணாவின் கருத்தைப் பின்பற்றி, இம் மாநிலத்தின் நபர்வாரி வருவாயைப் பெருக்க அடிப்படையாகவும், முக்கியமாகவும் வேளாண்மையைக் கொள்ளவேண்டும் என்று தமிழக அரசு நம்புகிறது. நான்கு கோடி மக்கள் தொகையில் 75 சதவீதம், அதாவது, 3 கோடி மக்கள் கிராமப்புறங்களில் வசிக்கின்றனர். 3 கோடி ஏக்கர் விளைச்சல் நிலங்களில் ஒவ்வொரு ஏக்கரிலிருந்தும் ஆண்டொன்றுக்கு ரூ. 3,000 வருவாய் கிடைக்குமெனில், நபர்வாரி வருவாய் ஆண்டொன்றுக்கு ரூ. 3,000 ஆகும். தற்போதைய சராசரி வருமானத்தை விட இது 6 மடங்கு அதிகமாகும். ஜப்பான், இஸ்ரேல் நாடுகளைத் தவிர, ஆசியா தென் அமெரிக்கா, ஆப்பிரிக்கா கண்டங்களிலுள்ள நாடுகள் அனைத்தையும் விடத் தமிழ்நாட்டின் நபர் வாரி வருவாய் மிக அதிகமாக இருக்கும். கணக்கு அளவில் பார்த்தால், இது சரி என்று எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். ஆனால் உள்ளடங்கியிருக்கும் அடிப்படை ஒன்று உள்ளது. அதாவது ஒவ்வொரு ஏக்கர் நிலத்திலிருந்தும் ரூ. 3,000 வருவாய் ஈட்டப்பட்டாக வேண்டும்.

---

* 385-392-ம் பக்கங்களில் அமைச்சரின் உரை இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

கொள்கை விளக்கக் குறிப்பு 393-400-ம் பக்கங்களில் மூன்றாவது இணைப்பாகவும், ஆய்வுரை 400-443-ம் பக்கங்களில் நான்காவது இணைப்பாகவும், கைத்தறி தொழில் வளர்ச்சி குறித்த ஆய்வுரை 444-477-ம் பக்கங்களில் ஐந்தாவது இணைப்பாகவும் அச்சிடப்பட்டுள்ளது.





ஊற்று நீரை மேல் மட்டத்திற்குக் கொண்டு வந்து பயிர் விளைச்சலுக்குக் கிடைக்கச் செய்வது கூட்டுறவுத் துறையின் பணியாகும். திரவ வடிவிலான தங்கத்தை, (Liquil Gold) தோண்டியெடுப்பதற்கு ஒப்பாகும் இப்பணி. இப்பணி கடினமானதென்றாலும், இதனால் கிட்டும் பலன்கள் மகத்தானவை. (It is Rewarding) பணம், ஆள்வளம், கருவிகள் இவை மூன்றினையும் ஒருங்கு திரட்டுவதற்காக, கூட்டுறவுத் துறை முழுமுனை முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

முதலாவதாக, நிலவள வங்கிகளின் பங்கு மூலதனம், கிளைகள் ஆகியவை வலுப்படுத்தப்பட்டுள்ளன. நிதி வசதியைப் பெருக்குவதற்காக இம்மாநிலத்திற்கு வெளியிலும் உலகெங்கிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உலக வங்கியுடன் பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்காக மாநில நிலவள வங்கியின் தலைவரும், நிதித் துறைச் செயலாளரும் நில நீர்ப்பொறியாளர்களும், அமெரிக்காவிலுள்ள வாஷிங்டன் நகருக்குச் சென்று, ஊற்று நீரை வெளிக் கொணர்வதற்கான பணிக்கென ரூ. 26 கோடி கடன் பெறுவதில் வெற்றி கண்டனர். பம்பாயிலுள்ள வேளாண்மை மறு நிதி உதவிக் கழகத்திடம், இம்மாநிலத்திற்குக் கூடுதலாக ரூ. 31 கோடி கடன் வழங்க ஒப்பளிப்பதற்கான செயற்குறிப்புகள் உள்ளன. மாநில நிலவள வங்கி சாதாரண கடன் ஈட்டுறுதி ஆவணங்களின் மூலம் இந்த ஆண்டில் ரூபாய் 21 கோடி கடன் திரட்ட இயலும். இவ்வாறு கூட்டுறவு மூலம் நிலவளத்திற்காக மொத்தம் ரூ. 78 கோடி நிதி வசதி கிடைக்கும். ஒரு கிணறுக்கும் மற்றொரு கிணறுக்கும் இடையில் 800 அடி இடைவெளி இருக்கவேண்டும். அதாவது ஒவ்வொரு 15 ஏக்கர் நிலத்துக்கும் ஒரு கிணறுக்கு மேல் இருக்கக் கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டு உலக வங்கி கடன் வழங்கியுள்ளது. மேலெழுந்தவாரியாகப் பார்த்தால், இந்த நிபந்தனை கடுமையாகத் தோன்றக்கூடும். ஆனால், இந்தத் தடையைத் தாண்ட முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

வேளாண்மைப் பெருங்குடி மக்களை ஒருங்கு சேர்ப்பதே முன் சொன்ன முயற்சியில் இரண்டாம் முனை நடவடிக்கையாகும். நமது மாநிலத்தில் நில உடைமைகள் சிறு சிறு துண்டுகளாகப் பிரிந்துள்ளன. பெரும்பாலான குடிமக்கள் ஒரு ஏக்கருக்குக் குறைந்த நிலமுடையவர்களாவர். சமூகச் சீர்திருத்த ஏற்பாடாக, நில மேல்வரம்பை நாம் குறைத்துள்ளோம். எனவே, நிறுவனக் கடன் வசதியை உழவர்கள் பயன்படுத்திக் கொள்வதன் பொருட்டு, அவர்களை ஓரளவு ஒருமைப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. ஆனால், கூட்டுரிமை, அல்லது கூட்டு முறையில் பயிரிடுதல் வகையில் ஏற்படும் ஒருமைப்பாட்டினை சிறு உழவர்கள் வரவேற்பதில்லை.

இவற்றிற்கெல்லாம் நாம் காணக்கூடிய ஒரே மாற்று வழி, கூட்டுப் பாசனம் அல்லது கூட்டுறவுப் பாசனமாகும். அதாவது, நீர் வழங்குவதில் மட்டுமே கூட்டுறவு மனப்பான்மை பொருந்தும் என்பதே இதன் பொருள். இந்த நோக்கத்தைக் கொண்டு,

பாசனக் கூட்டுறவுக் கழகங்களை அமைக்க, சட்டம் நிறைவேற்றப் பட்டுள்ளது. பாசனக் கூட்டுறவுகளை உழவர்களாகவே, உவந்து முன்வந்து அமைப்பதை விரைவுபடுத்தும் பொருட்டு, அமைப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர். சிறு குடியானவர்களுக்கு முதன் முதலாகப் பாசனக் கூட்டுறவு, செங்கற்பட்டு மாவட்டத்தில் அகரம் என்னுமிடத்தில் அமையப் பெற்றது. இம்மாநிலமெங்கும் இதைப்போன்று 100 முதல் 300 ஏக்கர் கொண்ட ஒருங்கிணைந்த பகுதிகள், பாசனக் கூட்டுறவுகளாக அமைக்கப்பட்டு வருகின்றன.

மூன்றாவது முனையாக, பயிரிடும் இயந்திர சாதனங்களும் அச் சாதனங்களைக் கையாளும் பொறியாளர்களும் திரட்டப்பட வேண்டும். கிணறுகள், குழாய்க் கிணறுகள் அமைக்கவும், நீர்க் காப்புப் பணிகளை மேற்கொள்ளவும், தொழில் நுட்பம் தெரிந்த பணியாளர்கள் இன்றியமையாதவர்கள். இவ்வகையில், 6,000 வேளாண்மைப் பணிமனைகள் (Agro Service Centres தொடங்குவதற்குப் பணித் திட்டமொன்றை மத்திய அரசு அண்மையில் தொடங்கியுள்ளது. தற்போது வேலையில்லாமல் உள்ள பொறியாளர்கள், தகுதிப் பட்டையுதார்கள் Diploma Holders) ஒவ்வொருவருக்கும் கடனுதவி அடிப்படையில் ரூ. 4 லட்சம் முதல் ரூ. 6 லட்சம் செலவில் சாதனங்கள் கொடுத்து அவர்கள் உதவியுடன் இந்த வேளாண்மைப் பணிமனைகள் அமைக்கப்படுகின்றன. தற்போது ஏற்பட்டுள்ள உடனடித் தேவையை நிறைவு செய்யவே இத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளதால், இதை நிறைவேற்றுவதில் மாநில அரசு உரிய பங்கு ஏற்கும்.

வேளாண்மைத் தொழில் நுட்ப அறிவியலில் ஏற்பட்டுள்ள புதிய முன்னேற்றங்களைப் பயன்படுத்திக்கொண்டும், ஆண்டு முழுவதும் கிடைக்கும் நீரைக் கொண்டும் உழவர் ஆண்டொன்றுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 3,000 வருமானம் ஈட்டலாம் என்பதில் ஐயமேதுமில்லை.

நிலத்திலிருந்து ஆண்டொன்றுக்கு ரூ. 3,000 வருமானம் ஈட்டலாம் என்பது குறைந்த அளவினதேயாகுமென்பதை 'பூசா'வில் உள்ள வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்திற்கு நான் சென்றிருந்தபோது கண்டறிந்தேன். அவ்வாராய்ச்சி நிலையத்திற்குப் பொறுப்பு வகித்த டாக்டர் சாமிநாதன், நிலையாக நீர் வழங்குவதன் மூலமும், தகுந்த பயிர்களை மாற்றி மாற்றிப் பயிரிடுவதன் மூலமும் தமிழ் நாட்டில் உழவர் ஒருவர் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 5,000 வருமானம் பெறலாம் என்று அவர் எனக்கு உறுதிபடக் கூறினார். அமோக விளைச்சலைத் தரும் நெற்பயிர், அதன் பின்னர் அற்புத நீண்ட இழைப் பருத்தியான "சுஜாதா" என்று இவ்வாறு மாற்றி மாற்றி பயிரிடுவதன் மூலம் ஆண்டொன்றுக்கு ரூபாய் 5,000 வருமானத்தை எளிதில் ஈட்ட முடியும். இவ்வகைப் பருத்தியைக் கோயம்புத்தூரில் வெளியிட்டு டாக்டர் சாமிநாதன் கூறினார். 'இவ்வகைப் பருத்தி றிலும் முன்னரே கண்டுபிடித்துள்ள M.C.U. 5 என்கிற பருத்தி





ரகத்தினாலும் தமிழ் நாடு, பருத்தி விளையும் உலக நாடுகள் பொறாமை கொள்ளும் அளவுக்கு முன்னணியில் நிற்கும்' என்று இது பத்திரிகையில் வந்தது.

அறிஞர் அண்ணாவும் தற்போதுள்ள மாண்புமிகு முதலமைச்சரும் வகுத்துள்ள பொருளாதார நோக்கங்களை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்துமாறு இந்த அவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர்களையும் இந்த அவையின் மூலமாக இம்மாநில மக்களையும் நான் கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு செலுத்துவதனால் இரண்டு மூன்று ஆண்டுக்குள் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தினை நாம் அடைய இயலும்; நமது நாட்டு நபர்வாரி வருமானம் தென் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆசியா கண்டங்களில் உள்ள பிற நாடுகளைக் காட்டிலும் (ஜப்பான், இஸ்ரேல், குவைட் நாடுகள் நீங்கலாக) உயர்ந்ததாக இருக்கும். இம்மாநில மக்களாகிய நாம், அடையவேண்டிய லட்சியங்களை மீண்டும் தெளிவுபடுத்தியுள்ளோம், நமக்கென ஒரு புதிய பாதையையும் வகுத்துக் கொண்டுள்ளோம். அப்பாதையில் நாம் தயங்காமல், தளராமல் நடந்து குறித்த லட்சியத்தை அடைவதன் மூலம் தமிழகத்தில் மறுமலர்ச்சியைக் காண்போமாக.

* திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சரால் அவையில் வைக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகள் பேரில் என்னுடைய கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

அமைச்சர் அவர்கள் இந்தக் கூட்டுறவின் நோக்கத்தைத் தெளிவாகச் சொன்னார்கள். மிகப் பெரும்பான்மையான விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நபர் வருமானத்தைப் பெருக்கும் வகையில் இந்தத் துறை சிறந்த திட்டங்கள் வகுத்து இருப்பதாக எடுத்துக் கூறினார்கள்.

பொதுவாக நம் நாட்டைப் பொறுத்த வரையில், தமிழ் நாட்டில் தான் விவசாயிகள் அதிகமாகக் கடன் பளுவில் சிக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது. எல்லா மாநிலங்களையும் விட நம் மாநிலத்தில்தான் விவசாயக் கடன் ரூ. 230 கோடி அளவில் இருக்கிறது என்று சமீபத்திலே பாராளுமன்றத்திலே ஒரு கேள்விக்குப் பதில் சொல்லப்பட்டதாக எனக்கு ஞாபகம். நம் நாட்டில் பொருளாதாரத் துறையின் முதுகெலும்பாக இருக்கும் விவசாயப் பெருங்குடி மக்கள், கடன் பளுவால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்றைக்குப் பல விரிவான ஏற்பாடுகளைச் செய்து கூட்டுறவுத் துறை மூலம் கடன் வழங்குவது போன்ற வசதிகள் செய்து இருந்தாலும், அவர்களுடைய தேவைகளைப் பூரணமாக பூர்த்தி செய்யும் அளவில் அவை அமையவில்லை.

இன்று நம்முடைய நாட்டில், தமிழ் நாட்டில் பெரும் பகுதியான இடங்களில் நீர்ப்பாசன வசதி குறைவாக இருக்கிறது. பருவ மழையையே நம்பி வாழவேண்டிய நிலையில் இருக்கிறார்கள்.

அவர்களுடைய நிலை பரிதாபமாக இருக்கிறது. அப்பகுதி மக்கள் முன்னால் வாங்கிய கடன்களைத் திரும்பச் செலுத்த முடியாத நிலையில் இருக்கிறார்கள். விவசாயிகள் முன்னால் வாங்கிய கூட்டுறவு கடனாக இருந்தாலும், வேறு லேவாதேவிக்காரரிடம் வாங்கிய கடனாக இருந்தாலும், சர்க்கார்க் கடனாக இருந்தாலும், அதைத் திருப்பிக் கொடுக்க முடியாத நிலையில் அவதிப்படுகிறார்கள். அப்படிக் கடன் பாக்கி இருக்கும்போது, நிலத்தைப் பண்படுத்தி விவசாயம் செய்ய, கிணற்றை ஆழப்படுத்த, பம்பு செட் வைக்க மேற்கொண்டு கடன் வாங்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். இதற்கு முன்னால் வாங்கிய பழைய கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியவில்லை. இன்றைக்கு நிலவள வங்கிகளும், பல மட்டங்களாகக் கடன் கொடுக்கின்றன என்றாலும் கூட, விவசாயிகள் முன்னால் வாங்கிய பழைய கடன்களைத் தீர்க்கக் கடன் கொடுப்பதில்லை. அவர்கள் முந்தைய கடன் தொந்தரவு தாங்காமல் தவிக்கிறார்கள். சர்க்காரில் கடன் வாங்கியிருந்தால், நிலத்தை அடைமானம் வைத்திருப்பார்கள். மேற்கொண்டு கடன் வேண்டுமென்றால், அந்தப் பழைய கடனைச் செலுத்தி, பாக்கியில்லை என்று சொன்ன பிறகுதான் மேற்கொண்டு கடன் வழங்க நிலவள வங்கி முன் வருகிறது. அடைமானம் ஒத்தி வைத்திருப்பதை மீட்க முடியாத நிலையில் அவதிப்படுகிறார்கள். அடைமானம், ஒத்தி இவை விவசாயக் காரியங்களுக்காகவும், மற்ற குடும்பக் காரியங்களுக்காகவும், செய்யப்பட்டிருக்கும். விவசாயிகள் கொடு வட்டி செலுத்தி, பழைய கடன் அடைபடாமல், மறுபடியும் விவசாயம் நல்ல முறையில் செய்ய முடியாமல் அல்லல்படுகிறார்கள்.

ஆகவே, இன்றைக்கிருக்கும் முறைகளை மாற்றி, விவசாயிகளுக்கு இருக்கும் பழைய கடன்களைத் தீர்க்கவும் ஏனைய வகையிலும் கடன்கள் கொடுக்க முன்வர வேண்டும். இப்பொழுது இருக்கும் முறைக்குப் பதிலாக ஒவ்வொரு விவசாயிக்கும் இருக்கும் மொத்த நிலத்தை பாஸ் புக் மூலம் கண்டறிந்து, இவ்வளவு மொத்தமாக அவருக்குக் கடன் கொடுக்கலாம் என்று ஒரு உச்ச வரம்பு வைத்துக் கொண்டு, கடன்கள் வழங்க ஏற்பாடுகள் செய்தால், சுலபமான முறையில், வில்லங்க சர்ட்டிபிகேட், ரெவின்யூ அதிகாரிகளிடம் போவது போன்ற தொல்லைகள் இல்லாமல், சங்கடம் இல்லாமல் செய்தால், நல்லதாக இருக்கும்.

அதுமட்டுமல்லாமல், இப்பொழுது நிலவள வங்கிகள் கடன் கொடுப்பதைத் தவணைகளில் திருப்பிக் கொடுக்க 7, 10 ஆண்டுகள் என்று இருக்கிறது. வேறு பல நாடுகளில் அது 20, 30 ஆண்டுகளாக இருப்பதாகத் தெரிகிறது. பம்பு செட் வைத்து விவசாயம் செய்யும்போது ரூ 10,000 ரூ. 15,000 என்று செலவாகிறது. அதை 7, 10 ஆண்டுகளில் வட்டியும் சேர்த்துக் கொடுப்பது முடியாத காரியமாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் கூறும்போது, நிலத்திலிருந்து ஏக்கருக்கு ரூ. 3,000 வருமானம் வரும் என்று குறிப்பிட்டார்கள். அப்படி வருமானம் அடைய கிரி செய்வதற்கு முன்னால், அவர்களைப் பழைய கடன்களிலிருந்து விடுவித்து,





அதற்கான வசதிகளைச் செய்து கொடுத்து, இப்பொழுது இருக்கும் முறைகளை மாற்றியமைத்து வசதி செய்ய வேண்டும். இப்பொழுது இருக்கும் முறையில் மேற்கொண்டு கடன் வாங்க மிகவும் கஷ்டமாக இருக்கிறது.

இன்று கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக அதிகமாக குறுகிய காலக் கடன்கள் தான் தரப்படுகின்றன. இவற்றைத் திரும்பப் பெறும்போது, ஒவ்வொரு மகசூலுக்கு ஒவ்வொரு விதமாகத் தவணைகள் இருக்கின்றன. கரும்பு, வாழை போன்றவற்றிற்கு 12 மாதங்கள் என்று இருக்கின்றன. வேறு சிலவற்றுக்கு வேறுவிதமாக இருக்கின்றன. 12 மாதம் என்று இருக்கும்போது, மகசூல் கைக்கு வருவதற்கு 15 மாதங்கள் கூட ஆகின்றன. அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களிலே அவற்றை எப்படி 12 மாதங்களில் திரும்பக் கட்ட முடியும்? வேறு சில மகசூலுக்கு 8 மாதம் 6 மாதம் என்ற முறையில் கடன்கள் கொடுக்கப்படுகின்றன. அவற்றைப் பொறுத்த மட்டில் கூட வாங்கிய கடன்களை குறித்த நேரத்திலே கொடுக்கப்பட்டு விடவேண்டும் என்று நிர்ப்பந்தம் எழுகிறது. இதனால் விவசாயி லேவாதேவிக்காரர்களிடம் சென்று 10 நாளைக்கு 5 வட்டி 15 நாளைக்குப் பத்து வட்டி என்ற முறையில் வாங்கிக் கடன்களை அடைக்கும் போது இப்படிக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் விவாசயிகளுக்குக் கொடுக்கப்படும் கடன் உதவிகளின் நோக்கம் முழுக்க முழுக்கத் தோல்வியடைந்து விடுகின்றது.

இன்னும் சில சந்தர்ப்பங்களில் கூட்டுறவுச் சங்கத்தில் ஆதிக்கம் செலுத்தும் நபர்களே, கொடுத்த கடன்களுக்காக நிர்ப்பந்தத்தை எழுப்பி, அந்தக் கடன்களைப் பைசல் செய்வதற்காகத் தாங்களே அவர்களுக்கு அதிக வட்டி விகிதத்தில் சொந்த முறையில் கடன்களைக் கொடுக்கின்றார்கள். இப்படிப்பட்ட நிலைகள் நீடிப்பது கூட்டுறவுத் துறைக்கும் நல்லதல்ல, கூட்டுறவுச் சங்கங்களில் கடன் பெறுகின்றவர்களுக்கும் உதவிகரமானதல்ல. எனவே, கொடுக்கும் கடன்களின் தவணைகள் ஆறு மாதம் எட்டு மாதம் அல்லது ஒரு ஆண்டுக்காலம் என்று இருப்பதற்குப் பதிலாக, குறைந்தபட்சம் ஓர் ஆண்டு அல்லது இரண்டு ஆண்டு என்று இருந்துவிட்டால் உதவிகரமாக இருக்கும். அதுபோன்ற மத்திய காலக்கடன் சங்கங்களின் தவணைகளும் மூன்று ஆண்டு என்று இருப்பதை ஐந்து ஆண்டு என்று ஆக்கவேண்டும்.

மேலும் இன்றுள்ள நிலையில், பருவமழை தவறியதன் விளைவாகவோ அல்லது வேறு காரணங்களினாலோ மகசூல் கெட்டு விட்டால், அதற்காக கொடுத்த கடன்களை அடுத்த ஆண்டு வாங்கிக் கொள்ளலாம் என்ற நிலை இல்லை. எப்படியும் தவணையைக் கட்டி விட்டுத்தான் மறுவேலை பார்க்க வேண்டும் என்ற அளவிற்கு நிர்ப்பந்தப்படுத்துகின்றார்கள். இதனால் லேவாதேவிக்காரர்களிடம் நிலத்தைக் கொடுத்துவிட வேண்டிய நிலை ஏற்படுகிறது. எனவே விவசாயிகளுக்கு உண்மையிலேயே உதவும் வகையில், தவணைகளைக்

[திரு. சோ. அழகர்சாமி] [1971 ஜூலை 20

கட்ட முடியாத நேரத்தில் வட்டியைக் கட்டினால் போதும் என்ற நிலை ஏற்படவேண்டும். மேலும் கூட்டுறவு சங்கங்களிலே அபராத வட்டி வசூலிப்பது என்ற முறையே எடுபட்டுவிட வேண்டும்.

அடுத்தபடியாக ஐந்து ஏக்கர் அல்லது பத்து ஏக்கர் உள்ள சாதாரண விவசாயிகள் வாங்கும் கடன்களுக்கு ஐந்து சதவிகிதத்திற்கு மேலே வட்டி வாங்காமல் இருக்க வேண்டும். அதிகமாகக் கடன்கள் வாங்குவோருக்கு வேண்டுமானால் அதிக சதவிகிதம் விதிக்கலாமே தவிர, சிறு விவசாயிகளுக்கு வட்டி இதற்கு மேலே போகாமல் இருக்கவேண்டும்.

அடுத்து இப்போது நிலமற்ற விவசாயிகளுக்கு—விவசாயத் தொழிலாளர்களுக்கு—இப்படிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் எந்தவிதமான கடன் உதவிகளும் கொடுக்கப்படுவதில்லை. அவர்களுக்கும் ஒரு அளவிற்குக் கொடுத்தால் அவர்கள் விவசாயத் தொழில் தவிர, ஆடு மாடுகள் வாங்கி வளர்ப்பது, கோழிகள் வளர்ப்பது போன்ற முறையில் தங்கள் வருமானத்தைச் சற்றுக் கூடுதலாக்கிக்கொள்ள முடியும். இதையும் அரசு யோசித்துப் பார்க்க வேண்டும். குறிப்பாக இத்தகைய உதவிகளைச் செய்தால் அரிசனங்கள் முன்னேற வாய்ப்புகள் ஏற்படும்.

அடுத்து, கைத்தறிச் சங்கங்களுக்கு இப்போது பலவிதத்திலும் உதவி செய்வதாக சொல்லப்படுகிறது. ஆனால் இப்போது கொடுக்கப்படும் கடன் உதவிகள் மாநிலச் சங்கங்களைப் பொறுத்த மட்டில் சற்று கூடுதலாக்கப்பட வேண்டும். மேலும், உற்பத்திச் சங்கங்களில் இரண்டு மாதத்திற்கு மேலே தேங்கி நிற்கும் கைத்தறித் துணிகளை எல்லாம் மாநிலச் சங்கம் வாங்கி ஸ்டாக் வைத்துக்கொள்ளத்தக்க அளவிற்கு மாநிலச் சங்கத்திற்கு நிதி உதவிகள் அளித்திடவேண்டும். இரண்டு மாதங்களுக்கொரு முறை இப்படிப்பட்ட சங்கங்களுடைய தேவைக்கேற்ற முறையில் நிதிக் கடன் உதவிகள் அளிக்கப்பட வேண்டும்.

அடுத்து, கூட்டுறவுத் துறையில் உள்ள சூபர்வைஸர்கள் அனைவரும் ஒரே விதமான தேர்வுகளை எழுதி பாஸ் செய்திருந்தாலும் ஒவ்வொரு சங்கத்தில் அவர்களுக்கு ஒவ்வொரு விதமான சம்பள விகிதம் கொடுக்கப்படுகிறது. ஒரு சங்கத்தில் 100 ரூபாய் என்றும், இன்னொரு சங்கத்தில் 150 ரூபாய் என்றும் இப்படியெல்லாம் கொடுக்கின்றார்கள். துறையிலுள்ள சூபர்வைஸர்கள் அவ்வளவு பேருக்கும் ஒரே மாதிரியான சம்பள விகிதத்தை அமல்படுத்த வேண்டும். இதுபற்றிப் பரிசீலனை செய்வதற்கு ஒரு கமிஷனைப் போட்டு பரிசீலனை செய்து, எந்தெந்த அடிப்படையில் அவர்களுக்குச் சம்பளம் நிர்ணயம் செய்ய வேண்டும் என்பதைப் பரிசீலிக்க வேண்டும்.

இப்போது ஸீனியர் இன்ஸ்பெக்டர் கோர்ஸ் பயிற்சி நடத்தப் படுகிறது. இதிலே பயிற்சி பெறுகின்றவர்களுக்கு அரிஜன மாணவர்களுக்குக் குறைந்த படிப்பு பி.யூ.ஸி. என்றும், மற்றவர்



1971 ஜூலை 20]

களுக்கு பி.எஸ்.ஸி., பி.ஏ., என்றும் இருக்கிறது. ஆனாலும் பயிற்சி பெற்று பணியாற்றும்போது டிபார்ட்மெண்ட் டெஸ்ட் வைக்கிறார்கள். அதில் தேர்ச்சி பெறாதவர்களை வேலையை விட்டு நீக்கி வீட்டுக்கு அனுப்பி விடுகின்றார்கள்.

அதுமட்டும் இல்லை, அவர்களுக்காகக் கொடுக்கப்பட்டு வந்த ஸ்டைபெண்டு, அலவன்ஸ்கள் கூட திரும்பக் கட்டப்பட வேண்டும் என்று சொல்லிவிடுகின்றார்கள். இது அரிசன மாணவர்களைப் பெரிதும் பாதிக்கின்றது. எனவே இத்தேர்வில் தவறியவர்களைக் கூட்டுறவுத் துறையில் தற்காலிகமாக வைத்துக்கொண்டு சம்பளம் கொடுக்க வேண்டும் என்றும், அவர்கள் மீண்டும் அத்தேர்வினை எழுதி பாஸ் பண்ணும் வரையில் அவர்களுக்கு இந்தப் பாதுகாப்பளிக்க வேண்டும் என்றும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

மேலும், முன்பு பல இடங்களில் கருப்பட்டிக் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்து வந்தன. அவற்றையெல்லாம் திரும்ப ஊக்குவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, கோவில் மடங்களின் நிலங்களைப் பயிரிடுவோர் களிடையே சாகுபடியாளர்கள் சங்கங்கள் என்று இருக்கின்றன. பல இடங்களில் கூட்டுறவுத் துறையின் கீழ் இப்படிப்பட்ட சாகுபடியாளர்கள் சங்கம் இணைந்து நல்ல முறையில் பணியாற்றி வந்து நல்ல பலனைப் பெறுகின்றார்கள். இப்படிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களை கோவில்-மடங்களின் நிலங்களைப் பயிரிடும் இடங் களிலேயெல்லாம் ஊக்குவித்தால் பெரும்பலனை அவர்கள் அடைய முடியும். எனவே இதையும் ஊக்குவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

அடுத்து, கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகஸ்தர்களைத் தேர்ந்தெடுக்கும்போது பல இடங்களிலே நாமினேஷன் மூலமாக நியமனம் செய்கின்றார்கள். இதற்குப் பதிலாக உள்ள மெம்பர்களை வைத்துத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஆறு மாதம் அல்லது மூன்று மாதம் போன்ற குறுகிய காலத்திற்குப் போடுவதற்குக்கூட இப்படிப்பட்ட முறையில் அல்லது அனைத்துக் கட்சியினரும் ஒரு சங்கத்தில் அங்கத்தினர்களாக இருக்கின்றார்கள். அவர்களைக் கலந்து ஆலோசித்து இதைச்செய்யலாம். கூட்டுறவுத் துறையில் ஆர்வம் மிக்கவர்கள் அனைத்துக் கட்சியிலும் இருக்கின்றார்கள். எனவே கட்சி மாச்சரியம் இல்லாமல் எல்லோரும் கூட்டுறவுச் சங்கங்களிலே நிர்வாகஸ்தர்களாக நியமிக்கப்பட வேண்டும். இத்துறையை மேலும் மேலும் வலுப்படுத்த வேண்டும், அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். நாமினேஷன் மூலம் நிர்வாகஸ்தர்களைப் பொறுக்கியெடுக்க வேண்டும் என்ற நிலை ஏற்படும்போது அப்படிப்பட்டவர்கள் ஆறு

மாதத்திற்கே இருக்கலாம், அதற்குப் பிறகு அந்தச் சங்கத்தில் உள்ள மெம்பர்கள் எல்லோரும் சேர்ந்து அவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற முறை ஏற்படுத்தப்படவேண்டும்.

கடைசியாக, மீண்டும் ஒரு முறை வற்புறுத்திச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். விவசாயிகளே 100-க்கு 75 பேர் உள்ள நமது நாட்டில் விவசாயத் துறையில் கூட்டுறவுத்துறை பெரும் அங்கம் வகிக்கின்றது. எனவே விவசாயிகள் கூட்டுறவுத்துறையால் உதவிகளைப் பெற வேண்டுமே அல்லாது பல நிர்ப்பந்தங்களுக்கு உள்ளாகக் கூடாது. பயிருக்காகவும் கிணறு வெட்டுவதற்காகவும் கூட்டுறவுத் துறையில் கடன்களைக் கொடுத்து, தோண்டும் கிணற்றில் தண்ணீர் வராமல், போட்ட பயிரும் கெட்டுவிட்ட நிலையில், கொடுத்த கடன்களுக்கு கூட்டுறவுத் துறையில் வசூல் செய்ய, இப்படிப்பட்ட நிர்ப்பந்தங்களைக் கொண்டு வந்தால் விவசாயி நிலத்தையும் கிணற்றையும் விற்று விட்டுப்போக வேண்டிய நிலை ஏற்படும். வருமானம் பெற முடியாத நிலையில் விவசாயி இருக்கும்போது கொடுத்தக் கடன்களுக்காக நிர்ப்பந்தம் கொண்டுவரக்கூடாது என்று கூட்டுறவுத் துறையினரைக் கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த நிலைமையில் கடனுக்கான வட்டியை மட்டும் பெற்றுக்கொண்டு, முதலுக்கான தவணைகளைத் தள்ளிப் போடவேண்டும். அப்போதுதான் கூட்டுறவுத் துறையின் பலன்கள் உண்மையாக விவசாயிகளுக்குப் போய்ச்சேர முடியும்.

கடைசியாக, ஒன்றைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். இப்போது குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் பல்வேறு கூட்டுறவு ஸ்தாபனங்களில் பல கடன்களை வாங்கிவிடுகின்றார்கள். இந்த நிலைமை மாற்றப்பட்டு, குடும்பத்திலுள்ள அவ்வளவு பேரும் அவர்களுக்கு வேண்டிய கடன்களை ஒரே சங்கத்தில் பெற வேண்டும் என்ற முறை ஏற்படவேண்டும்.

அடுத்து, ஊழல்கள் ஏற்படும்போது அவற்றின்மீது தாமதம் இன்றி துரிதமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். தஞ்சாவூரிலுள்ள கூட்டுறவு மார்க்கெட்டிங் பெடரேஷனில் ரூ. 157 லட்சம் நஷ்டம் ஏற்பட்டுவிட்டதாகவும் ஒழுங்கீனங்கள் நடைபெற்றுவிட்டதாகவும் சொல்லப்பட்டது. சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள், அச்சங்கத்தின் நிர்வாகத்தை அரசே மேற்கொள்ள வேண்டும் என்று கேட்கின்றார்களாம். இப்படிப்பட்ட ஒழுங்கீனங்கள் நடைபெறாதவண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொண்டு இந்த மான்யத்தின்மீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து, விவசாயிகளும் கூட்டுறவுத்துறையும் நல்ல முறையில் இணைந்து, பலன்பெறத் தக்க விதத்தில் செயலாற்றவேண்டும். நான் கூறிய கருத்துக்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, விடை பெறுகிறேன்.





* திரு. மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத்துறைக்கான மான்யத்தின் மீது பேச வாய்ப்பினை அளித்தமைக்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இன்று நாட்டிலே நடைபெற்றுவரும் பொருளாதாரப் புரட்சியில் தனியார் துறை, பொதுத் துறை ஆக இரண்டும் செயல்பட்டு வருகின்றன. நாட்டிலே சமதர்ம சமுதாயத்தை ஏற்படுத்துவதற்காக முயற்சி செய்து கொண்டு வரும் இந்த நேரத்தில் கூட்டுறவுத் துறையைச் சார்ந்த நிறுவனங்கள் இவற்றில் பெரும்பங்கு வகிக்கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. நமது நாட்டிலேயே நமது தமிழகம்தான் இத்துறையில் மற்ற மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக இருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது என்றே கருதுகிறேன்.

இக்கூட்டுறவுத்துறை நாட்டின் விவசாயத்தில் பெரும் பங்கு வகிக்கின்றது என்பதையும் யாரும் மறுக்க முடியாது. "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்" என்று வள்ளுவப் பெருந்தகை கூறிய இவ்விவசாயத்திற்கு இன்று இக்கூட்டுறவுத்துறை பெரும் உதவியாக இருந்து வருகிறது. அந்த அளவிற்கு இக்கூட்டுறவுத்துறை இதுநாள் வரையில் செயல்பட்டு வருகிறதை இந்த நாடு நன்றாக அறியும்.

நல்லவர் உள்ளங்கள் எல்லாம் அந்த நற்பணியைப் போற்றாமல் இருக்க முடியாது. இன்றைய தினம் உழவுத் தொழில் மேம்பாட்டுக்காக முன்னமேயே இருந்த நில அடமான வங்கிகளை நிலவள வங்கிகளாக மாற்றி வெறும் சொத்துக்களை அடைமானம் தந்து பணம் பெற்றுச் செல்லுகிற முறையை மாற்றி, நிலவள வங்கிகள் மூலம் இன்றைய தினம் உள்ளபடியே விவசாய மேம்பாட்டுக்காகக் கிணறுகள் தோண்டுவதற்கும், பூமிகளைச் செப்பனிடுவதற்கும் நல்ல முறையிலே கடனுதவிகளைத் தந்து வருகிறது என்பதனை இந்த நாடு அறியும். இந்த நிலவள வங்கிகளை மேலும் வளர்க்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே இன்றைக்கு நம்முன் தந்திருக்கின்ற அறிக்கையிலே பார்க்கின்ற போது, 117 தொடக்க நிலவள வங்கிகளை இந்த அரசாங்கம் ஆரம்பித்திருக்கிறது என்பது இந்த அரசு எந்த அளவு விவசாயத்திற்கு முக்கியத்துவம் தருகிறது என்பதனை மிக நன்றாகத் தெரிந்துகொள்ள முடியும். 1970-71-ல் 2,937 புதிய கிணறுகள் தோண்டப்பட்டதாகவும், 1971–72-ஆம் ஆண்டில் அதனை 7,800 கிணறுகளாகத் தோண்டுவதற்கு இந்த அரசு முயற்சிக்கிறது என்பதையும் பார்க்கின்றபோது, இந்த நாட்டிலே விவசாயத்தை வளர்க்க இந்த அரசு எந்த அளவு முயன்று வருகிறது என்பதனை மிகத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும்.

மேலும், விவசாய மேம்பாட்டுக்காக இந்தக் கூட்டுறவுத் துறையில் பயிர்க் கடன்கள் (Crop loan) வழங்குவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. அவைகள் உள்ளபடியே இந்த நாட்டு விவசாயிகளுக்கு மாபெரும் உதவியாகும்.

[திரு. மா. சுப்பிரமணியன்] [1971 ஜூலை 20

என்னுடைய ஈரோடு தொகுதி மஞ்சள் பயிர் அதிகமாக இருக்கிற பகுதியாகும். அந்த மஞ்சள் பயிரிடுகின்ற விவசாயிகள் எல்லாம், மஞ்சள் பயிரிட்டவுடனே, அந்தப் பயிரின்மேல் கடன் பெறுகின்ற வகையில் வியாபாரப் பெருமக்களிடம் சென்று தங்களுடைய பயிருக்காக அவர்களிடம் பாண்டின் மேல் கடன் வாங்குகிற நிலைமை இன்றைக்கும் இருந்து வருகிறது. அப்படி வாங்குகின்ற நேரத்தில் தாங்கொணு வட்டிச் சுமையை தாங்க வேண்டி ஏற்படுகிறது. இப்படி பயிர்க் கடன்கள் தருவதன்மூலம் இந்தப் பெரும் சுமை விவசாயிகளுக்கு இல்லாத நிலைமையை இன்றைக்கு இந்த அரசு ஏற்படுத்தியிருப்பதை உள்ளபடியே பாராட்டக் கடமைப் பட்டிருக்கின்றோம்.

அதேபோன்று விவசாயிகளுக்குக் கடன் தருகின்ற விஷயம் சம்பந்தமாக என்னுடைய ஒரே ஒரு கருத்தைச் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். இரண்டு, மூன்று நிலவள வங்கிகளுக்கு ஒரு கோவாப்பரேடிவ் சப்-ரிஜிஸ்திரார் என்ற முறையில் இன்றைய தினம் அமர்த்தப்பட்டிருக்கின்றார்கள். அந்த நிலைமையை மாற்றி ஒவ்வொரு நிலவள வங்கிக்கும் ஒரு கோவாபரேடிவ் சப் ரிஜிஸ்திரார் என்ற முறையில் ஏற்படுத்திக் கடன்களை விவசாயிகளுக்கு விரைவாகத் தருவதற்கும், விவசாயிகளின் துயர் துடைப்பதற்குமான பணிகளில் அவர்கள் ஈடுபடுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தும் முறையில், இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

விவசாயப் பெருங்குடி மக்களுக்குக் கடன் தருகின்ற அதே நேரத்தில், கூட்டுறவுத் துறையில் ஒவ்வாரு துறையையும் தனித் தனியாகப் பிரித்து கைத்தறித் துறைக்கு என்று ஒரு தனித் துறையும், அதே போல் கோவாபரேடிவ் இன்டஸ்டிரிஸ் என்று தனியாகவும், இப்படி ஒவ்வொரு துறையையும் தனித்தனியாகப் பிரித்திருப்பதன் மூலம் அந்தந்தத் துறையின் வேலைகள் ஒழுங்காக, செம்மையாக செயல்பட்டு நிறைவேறுவதற்கு நல்ல வாய்ப்பினை இந்த அரசாங்கம் ஏற்படுத்தித் தந்திருக்கின்றது. ஆனால் அதே நேரத்தில் கூட்டுறவுத் துறையில் ஈடுபட்டிருக்கின்ற அலுவலர்கள் தங்களுக்குப் பதவி உயர்வு கிடைக்காமல் போய் விடுமோ என்ற அச்சத்தை, இந்த டிபார்ட்டுமெண்டுகளை தனித் தனியாகப் பிரித்ததன் மூலம் அந்த அலுவலர்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கிறது என்பதனை இந்த நேரத்தில் நாம் மறந்து விடுவதற்கில்லை. எனவே அவர்களுக்குப் பதவி உயர்வு எந்த வகையிலும் பாதிக்கப்படாது என்ற நிலைமையை இந்த அரசாங்கம் ஏற்படுத்தித் தரவேண்டும் என்பதனை இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல், விவசாயிகளுக்கு எந்த அளவுக்கு உதவி செய்ய இந்தக் கூட்டுறவுத் துறை இதுவரையிலும் செயல்பட்டு வந்திருக்கிறதோ, அதே முறையில் மின்சார வசதியைச் செய்து கொடுப்பதற்காக ஆங்காங்கே ஒவ்வொரு பகுதியிலும் உமியை எரிபொருளாகக் கொண்டு மின் உற்பத்தி செய்கின்ற நிலையங்களை



1971 ஜூலை 20] [திரு. மா. சுப்பிரமணியன்]

அமைக்க அரசு திட்டம் தீட்டியிருக்கிறது என்பதை நாம் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். அப்படி தனியாக மின்சார உற்பத்தி செய்யும் நிலையங்களை ஏற்படுத்துவதன்மூலம் மின்சக்தி குறைந்த விலையில் விவசாயிகளுக்குக் கிடைக்கும் அதே நேரத்தில் பல மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கின்ற நிலைமையை ஏற்படுத்தியிருக்கின்ற வாய்ப்பினையும் இந்த அரசு ஏற்படுத்தித் தந்திருப்பதை நான் மனமார பாராட்டுகின்றேன்.

இவற்றை அடுத்து, கூட்டுறவு பண்டக சாலைகள்மூலம் இன்றைய தினம் மக்களுக்கு நல்ல பேருதவியினை கூட்டுறவுத் துறை செய்து வருகிறது. கோவையில் நடைபெற்று வருகின்ற சிந்தாமணி சிறப்பு அங்காடி செயல்படுவது போல் மற்ற சிறப்பு அங்காடிகளும் செயல்படும் முறையில் கவனம் செலுத்தி மக்களுக்குத் தொண்டாற்றும் வகையில் சிறப்பு அங்காடிகளை மேலும் ஏற்படுத்த வேண்டும்.

"செய்யும் தொழிலைச் சீர்தூக்கிப் பார்க்குங்கால்
நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை".

என்பது அறிந்து, உணவுத் துறைக்கு அடுத்து கைத்தறித் தொழிலுக்கு இந்த அரசு முக்கியத்துவம் கொடுத்திருப்பதை நான் மனமாரப் பாராட்டுகின்றேன். கைத்தறித் துணியை தலைச் சுமையாகத் தூக்கித் தெருத்தெருவாக விற்றவர்கள்தான் இன்றைக்கு ஆட்சிபீடத்தில் அமர்ந்திருக்கிறார்கள் என்று எண்ணுகின்றபோது, நெசவாளப் பெருங்குடி மக்கள் உள்ளபடியே தங்கள் பிரதிநிதிகள்தான் அரசுப் பொறுப்பை ஏற்றிருக்கின்றார்கள் என்று பூரிப்பும் பெருமையும் அடைகின்றார்கள் என்பதனைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

கைத்தறித் துறையில் இன்றைய தினம் மாநில சங்கம் ஆற்றி வருகின்ற பணியினை நாம் மறந்து விடுவதற்கில்லை. சென்னை மாநில சங்கத்திற்கு அரசு இதுவரையிலும் ரூ. 50 லட்சம் தந்திருக்கிறது. அதனை 1 கோடி ரூபாயாக உயர்த்தித் தரும் அளவுக்கு அரசு முன்வரவேண்டுமென்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல நெசவாள பெருங்குடி மக்களுக்கு நூல் விலை ஏறுவதன் காரணமாக தாங்கொணு துயரம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இதைப் போக்க ஒரே வழிதான் இருக்கிறது. பருத்தி விலையைக் கட்டுப்படுத்தினாலொழிய நூல் விலையைக் கட்டுப்படுத்துவது இயலாத காரியமாகும். எனவே, பருத்தி விலையைக் கட்டுப்படுத்தி நிர்ணயமான விலையில் பருத்தி கிடைக்க மத்திய அரசினைத் தூண்டுவதன்மூலம் இந்த அரசு நெசவாள பெருங்குடி மக்களுக்கு வாழ்வளிக்கவும், துயரம் துடைக்கவுமான பணியினைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அதேநேரத்தில் கைத்தறிகளுக்கு தனியான சலுகைகள் அளிக்கவேண்டும். போலீஸ் துறையையும், இன்னும் மற்ற அரசாங்க அலுவலர்களும் அணிகின்ற யூனிபார்ம்கள் கைத்தறியில்

தயாரிக்கப்படுகின்ற துணிகள்மூலம் தயாரிக்கப்பட்டவையாக இருத்தல் வேண்டும் என்று ஏற்பாடு செய்வது, கைத்தறிக்கு புதுவாழ்வு தருவதாக அமையும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதேபோல் நீண்ட காலமாக இருந்து வருகிற, கரை போடப்பட்ட வேட்டி, புடவைகள் உற்பத்தி கைத்தறித் துறைக்கு ஒதுக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டு பேச்சை முடிக்கிறேன்.

திரு. ஆ. பாந்தாமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நடைபெறும் கூட்டுறவுத் துறை மானியத்தின் பேரிலான விவாதத்தில் பங்கு பெறுவதற்கான வாய்ப்பினை நல்கியமைக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

கூட்டுறவு சிலருடைய வீட்டு உயர்வாக இருந்ததை மாற்றி கூட்டுறவு நாட்டு உயர்வு என்று செயல்படுகின்ற கலைஞர் அரசை பாராட்ட விரும்புகிறேன். சோஷலிசம் எங்கே மிக வேகமாக வளரவேண்டுமோ அங்கே கூட்டுறவு மிக வேகமாக வளரவேண்டும் என்பது பொருளாதார நிபுணர்களுடைய எண்ணமாகும். அந்த அடிப்படையில் கூட்டுறவை மிகச் சிறப்பான முறையில், தமிழகத்தில் ஒரு நல்ல இயக்கமாக செயல்பட்டு வருவதற்கு காரணமானவர்களில் ஒருவராக இருக்கின்ற மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

கூட்டுறவு மானியத்தின் மீது பேசுகின்ற நேரத்தில் என்னுடைய கவனம் எல்லாம் சந்தானம் அறிக்கையின் மீது செல்லுகிறது. அதில் குறிப்பிட்டிருக்கின்ற அவ்வளவு கருத்துக்களையும், நல்ல கருத்துக்கள் என்றாலும் நமது அரசு அந்தக் கருத்துக்களில் ஏற்கக்கூடிய கருத்துக்களை மிக விரைவாகச் செயல்படுத்த வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்றைய தினம் அறநிலையங்கள் உள்பட இருக்கிற அமைப்புகளில் கணக்குகளை வேறு வங்கிகளோடு வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கணக்குகளை கூட்டுறவு வங்கிகளில் வைத்துக் கொள்ள நமது அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

நாம் விவசாயிகளுக்கு மட்டும் கூட்டுறவு சங்கங்களின் வாயிலாக கடன் கொடுக்கிறோம். ஆனால் விவசாய உற்பத்தியை பெருக்குவதற்கான 'வசதியை அளிப்பவர்களில்' ஒருவராக இருக்கிற தச்சுத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு எல்லாம்கூட நமது அரசு கூட்டுறவு சங்கங்களின் வாயிலாக கடன் தர ஆவன செய்ய வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

அரசு கூட்டுறவு வங்கியோடு தொடர்பு கொண்டு அந்தப் பணத்தை ரீ இம்பர்ஸ் செய்ய வாய்ப்பினை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று அமைச்சர் அவர்களை பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன்.





அது மட்டுமல்ல. இன்றைய தினம் நிலத்தைச் சீர்செய்ய நீங்கள் ஒதுக்கியிருக்கிற தொகை போதாத நிலையிருக்கிறது. அதைக் கூடுதலாக ஆக்க பர்சென்டேஜை உயர்த்தித் தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன். பழைய கடன்களை தீர்க்கின்ற நிலையிலேதான் இன்றைய தினம் நமது நிலவள வங்கிகள் கடன்கள் கொடுக்கின்றன. பழைய கடன்களை தீர்க்க பர்சென்டேஜை உயர்த்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக அரசாங்க ஊழியர்கள் கூட்டுறவுத் துறையில் ஈடுபட்டிருப்பவர்கள் வங்கியில் பணியாற்றுகின்ற தோழர்களை தங்களுக்குக் கீழே பணியாற்றுகின்ற அலுவலர்கள் என்ற எண்ணம் பரவலாக இருக்கிறது. இது கூடாது. அரசாங்க ஊழியர்களும், நிலவள வங்கிகளில் பணியாற்றக் கூடியவர்களும் ஒன்றி காரியங்களை ஆற்றுவதற்கான நிலைமையை நாம் தேடித்தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிந்த திரு. ஜேம்ஸ் அவர்கள் இந்த அரசு கட்சிச் சார்பற்ற முறையில் நடந்துகொள்ள வேண்டுமென்று தெரிவித்தார்கள். நான் மிக மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசு கட்சிச் சார்பற்ற முறையில்தான் பணியாற்ற வருகிறது என்று மக்கள் எல்லாம் இன்றைக்குப் பாராட்டுகிறார்கள். இன்றைய தினம் எங்கள் திருத்தணி வட்டத்தில் இருக்கிற பள்ளிப்பட்டு ஊராட்சி ஒன்றியத்தில் ஏகாம்பர செட்டியார் அவர்களையே இயக்குநராக நியமித்திருக்கிறார்கள் என்றால் அவர் யார்? 1971-ம் வருடத் தேர்தலில் சிண்டிகேட் வேட்பாளராக நின்றவர்தான் அவர் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கடம்பத்தூர் வங்கிக்கு நியமிக்கப்பட்டிருப்பவர் சுப்பராய முதலியார். இவரும் காங்கிரஸ் கட்சிக்காரர்தான். இதில் இருந்தே கலைஞர் ஆட்சியில் காரியங்கள் கட்சிச் சார்பற்ற முறையில் நடந்து வருகிறது என்பதை எல்லோரும் தெரிந்து கொள்ளலாம்.

இதைச் சொல்லுகின்ற நேரத்தில் என்னுடைய கவனம் எல்லாம் மிக மிக வேகமாக பழைய காலத்திற்குச் சென்று கொண்டிருக்கிறது. எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் சில ஆண்டுகளுக்கு முன்னே விண்ணப்பங்கள் போட்ட நேரத்தில் தேதி இல்லை என்று தள்ளுபடி செய்யப்பட்ட மனுக்கள் எத்தனை, தகப்பனார் பெயர் குறிப்பிடவில்லை என்று தள்ளுபடி செய்யப்பட்ட மனுக்கள் எத்தனை, இனிஷியல் போடப்படவில்லை என்று தள்ளுபடி செய்யப்பட்ட மனுக்கள் எத்தனை? இவை எல்லாம் எங்களுக்குத் தெரியாதவை அல்ல.

ஊழல் பற்றிப் பேசுகின்ற நேரத்தில் ஊழல்கள் எல்லாம் களையப்பட வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அவர்கள் காலத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தில் செட்டிக்குறிச்சி

[திரு. ஆ. பரந்தாமன்] [1971 ஜூலை 20

பஞ்சாயத்து யூனியனில் பத்தாயிரம் ரூபாய் கையாடல் செய்யப்பட்ட நேரத்தில் அதுபற்றி இந்த அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டபோது, அலுவலர்கள் தாக்கப்பட்டார்களே அப்போது எந்த அளவு பாதுகாப்பு அளித்தார்கள் என்பது தெரியும். சேலம் மாவட்டம் பொன்னமாப்பேட்டை சொசைடி சம்பந்தமாக நடந்த கையாடல் பற்றி 1963-இல் கேள்வி கேட்டபோது, உடனடியாக நடவடிக்கை எடுக்கிறேன் என்றார்கள். ஓராண்டுகாலம் அதற்குப் பிறகு ஆகியும் கூட நடவடிக்கை எடுக்காதிருந்ததை நாங்கள் மறந்துவிடவில்லை. 1964-ல் மீண்டும் அதே கேள்வியை இந்த அவையில் கேட்டபோது நடவடிக்கை எடுத்தார்களா? அது மட்டுமல்ல, தமிழ் நாட்டில் உள்ள எல்லா கிராமங்களும் கூட்டுறவு இயக்கத்தின் கீழ் வந்துவிட்டது என்பதாக இந்த நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் தவறான புள்ளிவிவரத்தைக் கொடுத்தார்களே அதுவும் எங்கள் ஞாபகத்தில்தான் இருக்கிறது.

ஆனால் இன்றைய அரசு—குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால் திருத்தணி கூட்டுறவு வங்கியில் ஊழல் நடந்து விட்டது என்றவுடனே தனி அதிகாரியை நியமித்து அதுபற்றி நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. தவறு என்றால் அது எங்கிருந்தாலும் அதை உடனே களையவேண்டும் என்ற அடிப்படையில் நடவடிக்கை எடுத்துக் கொள்வது திராவிட முன்னேற்றக் கழக அரசுதான். கட்சி சார்பற்ற முறையில் நடந்து வருகிறது என்றால் அது கலைஞருடைய ஆட்சிதான். அதற்காக இந்த அரசைப் பாராட்டி, இந்த மானியத்திலே குறிப்பிட்டிருப்பதுபோல ஜப்பான் நாட்டு அளவுக்கு 15 சதவிகிதம் தனிப்பட்ட நபருடைய ஆண்டு வருமானத்தை உயர்த்துவதற்கு நாம் அனைவரும் முனைந்து பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த வாய்ப்பினை நல்கியமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

* THIRU K. M. SUBRAMANIAM : Mr. Deputy Speaker, Sir, I am very glad that the Hon. Minister for Co-operation has been good enough to say that there is an inherent dislike for co-operative enterprise amongst the agriculturists of this State, although they have to be encouraged in this. I am happy that the Government are doing their best to encourage the co-operative spirit.

Sir, so far as agriculture is concerned, many methods have been devised, but I think the method that will be workable and very good will be to go by joint enterprise along with individual incentive. It is absolutely possible in a country like Tamil Nadu, unlike Kerala or Bengal where the cultivable lands are few acres here and there. But here there are big pieces of lands—500 acres interspaced by villages. It is possible, even though it would divide the land, it would give the ceiling system of 3 acres and 5 acres, to consolidate these lands into one, so far as agricultural service is concerned. Suppose you level 500 acres of land belonging to all people or many people, agriculturists, there is the possibility, there is the definiteness that the water-level will be the same throughout, and this can be done by the Government. Similarly when there is contiguous extent of 500 acres or such big areas, it is possible to have cultivation through tractors much more economically than doing individually. Similarly, it is also good for the Government to think of giving fertilisers, manuring the lands in the same way.



1971 ஜூலை 20] [Thiru K. M. Subramaniam]

THE HON. THIRU SI. PA. ADITANAR : May, I clarify the point mentioned by the hon. Member? I have given a copy of my speech in English. In paragraph 15 what I have stated is, 'integration either in the shape of Joint ownership or as joint cultivation, does not find favour with the small farmers'. Then I have stated that the remedy is to have only co-operative irrigation. The water source is common—Co-operative element—but the land ownership will be separate. That I find is the solution. Although the trials about joint ownership and joint cultivation were tried both in this State and in other States, they were not very much relished by the farmers. The other States, I am glad to say, are now thinking on our lines, namely, to have the water source only in a co-operative way, the cultivation being done by the individual farmers.

THIRU K. M. SUBRAMANIAM : I thank the Hon. Minister for the clarification. There is no difference between the Hon. Minister and myself so far as the individual ownership is concerned. The average agriculturist is for individual ownership. The only thing is joint cultivation, but even in joint cultivation, I say so far as irrigation is concerned, so far use of tractor is concerned, so far as manuring is concerned, there can be joint activity. And after that individual sowing, individual harvesting, individual selling all that can be done by the individual agriculturist himself. So, there is no difference between me and the Hon. Minister, except I go a step further, instead of confining the co-operative element to irrigation only, it can be extended to the use of tractor or mechanised cultivation and also manuring which are very costly affairs and which cannot be attended to without proper finance by small holders.

Now so far as the co-operative department is concerned, without wasting much of the time, I want to say a few words. I had the unique opportunity of doing some research work in 1942 for the then Government of Madras in the matter of handloom co-operative societies when Thiru S. A. Venkataraman was the Registrar of Co-operative Societies. Of course, then it had many many faults. I do not want to go on repeating those faults. But I can say this much. Whenever the price of yarn goes up, there is always an excuse saying that with this costly yarn it is very difficult to sell cloth. When the cloth price goes up, there is always a tendency on the part of the co-operatives to sell the cloth immediately to some neighbouring people and then genuine buyers have to go to those neighbouring people to purchase their requirements of cloth. These are all things that we have been

able to solve. But today I am sure with a modern outlook and the people having got more political rights and also consciousness about their rights, I am sure so much of underhand dealings do not take place in co-operative societies. But apart from that, I can only tell the Hon. Minister concerned this thing. In 1947 the per-capita income of a weaver family was Rs. 45. To-day after so many years of work, the per-capita income of a weaver family consisting of husband, wife and two children—more or less adult children—is only Rs. 90. This is a very very slow progress, so far as handloom industry is concerned.

மு.ப. 11-00 * THE HON. THIRU SI. PA. ADITANAR: I would like the hon. Member to make a distinction or having the distinction cleared in his mind between the per-capita income and per-family income. Per-capita income is the GNP—grand national product divided by the population. Therefore, in per-capita income we take into account the new-born child to-day and the man having one foot in the grave and all of them are counted. But in the family income we take it on an average. But what I have dealt with is the per-capita income which is an indication of the standard of living of the people.

THIRU K. M. SUBRAMANIAM: I am talking about the per capita income of the handloom weaving family. I am mature enough to understand the difference between the *per capita* income and the per family income. If that was not so, I would not have been a Member of this House. I know what is meant by *per capita* income and the per family income. In this particular context, the handloom weaving family to-day,—I am speaking subject to correction—is only getting Rs. 90 per family and it is a very, very poor income. The Hon. Minister and other Hon. Ministers will definitely admit that an ordinary industrial labourer is getting Rs. 1,800 per year when the per capita income in Tamil Nadu is more than Rs. 500 per family income.

Thus, a weaver is getting a very poor income when compared to others. So I am only appealing to the Government to see that it is the duty of the Government to increase the per family income of the handloom weaver because next to Agriculture the biggest industry in Tamil Nadu is definitely the handloom industry. I think according to the figures of 1952—I do not know the exact figure—about 20 lakhs of persons are now engaged in the handloom industry.

So, we have to make a dynamic approach to solve their problem instead of being indifferent to them. Now, what is happening in the handloom industry? The richest people in the handloom industry are the master-weavers to-day and the poorest people are the weavers. What is the reason for the huge money that is accumulated by the master-weavers and the low income of the handloom weaver and that has to be investigated for our future progress. I can only say that so far as handloom weavers are concerned they





are not looking after them well. Of course, they do something for them but they have not done as Rajaji did when he was the Chief Minister. Certain items like colour sarees of certain width manufactured by the mills were asked to be reserved for the handloom weavers but it is having no effect. Similarly the bordered dhoties reserved for the handloom weavers are not having any effect because to-day it is the trouser which is becoming more and more popular. But we can solve the two problems by one stroke. Now the mills are to manufacture cloth according to the control order of the Government of India and if that order is lifted, the price of mill goods will go up and if they go up, the sale of handloom cloth will push up.

Then I come to the sales tax on yarn. What is the total sales tax on yarn? It is a very small amount but it adversely affects the handloom weaver. I think in 1945—I do not remember the exact year—the then British Government asked the Mills to supply yarn directly to the co-operatives and I do not know whether they are now getting the same facilities. There has been mention about the quality of yarn and if mills like the Harvey Mills at Madurai are asked to supply yarn at ex-mill rates, the handloom weavers would be benefited.

(Mr. Deputy Speaker sounded the gong).

Sir, I have made myself clear with regard to the plight of the handloom weavers. They need a dynamic approach and a sympathetic outlook and no political colour should be attached. We only make suggestions to improve their welfare.

As regards other co-operatives like the Housing Co-operatives I want to say a word. I think there is a rule according to which only those who build houses on a flat system would be given loans. That rule should be cancelled if it is not already cancelled. Sir, co-operatives have a great function to perform in a progressive society and in their functioning there shoud be not only honesty but also intellectual grasp of things. I hope and trust that our Hon. Minister will not misunderstand me when I say that I have only expressed what I felt for the better administration of this Department.

திரு. கே. எ. வகாப் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு மானியத்தை வரவேற்றுத்தான் முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல அழகான அறிக்கையை இங்கே அளித்திருக்கிறார்கள். நல்ல கருத்துக்கள் அதில் கூறப்பட்டிருக்கின்றன. அதேநேரத்தில் பொறுப்பேற்று நடத்துகிற அதிகாரிகளும் நல்லவர்களாக இருக்கிறார்கள். முக்கியமாக எங்கள் மாவட்டத்திலிருந்த நல்ல மாவட்ட ஆட்சித் தலைவர் ஒருவர் அந்தப் பொறுப்பை ஏற்று இருக்கிற காரணத்தை

[திரு. கே. எ. வகாப்] [1971 ஜூலை 20

எண்ணுகிறபோது அந்தத் துறையில் பல புரட்சிகள் நல்ல விதத்தில் ஏற்படும் என்ற நம்பிக்கை இருக்கிறது. நம்முடைய நாட்டில் கூட்டுறவுத் துறை எல்லாவகையிலும் முன்னேறி இருக்கிறது. திருவள்ளுவர் அவர்கள் கூறிய 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர்' என்ற கருத்து இடைக் காலத்திலே மறுக்கப்பட்டு, மறைக்கப்பட்டு, மறக்கப்பட்டுவிட்டது. ஆனால் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலேயும், காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயும் அந்த திருக்குறளின் முதல் வார்த்தை மாறி 'கை கட்டி வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்' என்பதாக மாறியது. ஆனால் இன்றைய தினத்திலே பேறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான் உழவர்களுக்குத் தகுந்த நியாயம் கிடைத்து, தகுந்த மதிப்புக் கிடைத்து வருவதைக் கண்டு நான் மெத்தவும் பூரிப்படைகிறேன்.

வரப்பு உயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல் உயர குடி உயரும், குடி உயர கோல் உயரும் என்ற அடிப்படையிலே வரப்பு உயரவும், நீர் உயரவும் பேறிஞர் அண்ணா அவர்கள் கனவு கண்டார்களே அந்தக் கனவு பசுமைப் புரட்சி என்ற வடிவத்திலே இன்று அமலாவதைக் கண்டு நாங்கள் எல்லாம் உண்மையிலேயே பூரிப்படைகின்றோம். முன்பெல்லாம் சொல்வார்கள், உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக்கூட மிஞ்சாது என்று. உழக்காவது இப்பொழுது மிஞ்சுகிறது என்று எங்களை நாங்களே திருப்திபடுத்திக்கொள்கிறோம். இன்னும் விவசாயிகளுக்குப் போதிய ஊக்கமும், ஆக்கமும் தரவேண்டிய நிலைமை இருக்கிறது.

ஜப்பான், குவெய்த், இஸ்ரேல் போன்ற நாடுகள் பற்றிச் சொன்னார்கள். அவையெல்லாம் சுண்டைக்காய் நாடுகள். பெரிய நாடுகளோடு நம்முடைய நாட்டினுடைய வருமானத்தை ஒப்பிட்டு முன்னேறுவதற்கு முயல்கின்ற நிலைமை முற்போக்கானது. பசுமைப் புரட்சி என்ற அடிப்படையிலே 300 அடிகள், 400 அடிகள் கீழே தோண்டி நீரை எடுத்து விவசாயத்திற்குப் பயன்படுத்த வேண்டுமென்று பேறிஞர் அண்ணா அவர்கள் கனவு கண்ட அந்த முக்கியமான திட்டத்தின் அடிப்படையிலே வட ஆற்காடு, இராமநாதபுரம் ஆகிய இரண்டு மாவட்டங்களையும் எடுத்துக்கொண்டால் என்றைக்குமே நீர்த் தட்டுப்பாடு இல்லாமல் செய்துவிடலாம். இன்றைக்கு நெல் உற்பத்தியிலே தஞ்சாவூருக்கு அடுத்தபடியாக வட ஆற்காடுதான் இருக்கிறது. இந்தத் திட்டத்தின் அடிப்படையிலே வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்த்து விட்டால் நெல் உற்பத்தியிலே தஞ்சாவூரையும் மிஞ்சுகிற நிலைமைக்கு உற்பத்தி வட ஆற்காடு மாவட்டத்திலே பெருகும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். வட ஆற்காடு மாவட்டத்தையும், இராமநாதபுரம் மாவட்டத்தையும் இந்தத் திட்டத்தின் அடிப்படையிலே எடுத்துக் கொண்டு அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உலக வங்கியில் 31 கோடி ரூபாய் கடன் வாங்கியிருப்பது வரவேற்கத்தக்கது. நில வள வங்கியின் தலைவர் இதிலே எடுத்த முயற்சிகள் பாராட்டத் தக்கது. ஆனால் சில



1971 ஜூலை 20] [திரு. கே. எ. வகாப்]

நிபந்தனைகள் போட்டு இருக்கிறார்கள் என்று தெரிகிறது. ஆயிரம் மீட்டர்களுக்கு இடையே வேறு கிணறுக்குக் கடன் கொடுக்கக் கூடாது என்று இருக்கிறது என்று கருதுகிறேன். அப்படியென்றால் கிராமத்திற்கு 3, 4 கிணறுகள்தான் வரக்கூடிய முறையிலே கடன் கொடுக்கப்படும் என்று நினைக்கிறேன். அப்படிச் செய்தால் 3 அல்லது 4 ப்ளாக்கிற்கு ஒரு கிணறு வெட்டுவதற்குத்தான் கடன் கொடுக்கப்படும் என்று தெரிகிறது. எனவே அந்த நிலைமையை மாற்ற ரிசர்வ் வங்கியுடனும், உலக வங்கியுடனும் தொடர்பு கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே கைத்தறிப் பற்றிப் பேசப்பட்டது. விவசாயத்திற்கு அடுத்தபடியாக நம்முடைய நாட்டிலே மிகப் பெரிய தொழிலாக இருப்பது கைத்தறித் தொழில். அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற ஏழை எளிய மக்கள் வாழவேண்டுமென்ற முறையிலேதான் பேறிஞர் அண்ணா, கலைஞர், பேராசிரியர், நாவலர் போன்றவர்கள் புனிதமான தோள்களிலே மூட்டைகளை எடுத்துக் கொண்டு தெருத் தெருவாகச் சென்று கைத்தறி விற்பனை செய்தார்கள். அவர்களுடைய கருணைமிகுந்த கைகளிலேதான் இன்றைக்குப் பொறுப்பு வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, அவர்களைப் பாதுகாக்கின்றது நம்முடைய அரசு.

ஆனால் சில காரணங்களினால் அடித்தளத்தில் உள்ள நெசவாளர்கள் பாதிக்கப்படுகின்றார்கள். உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். கடையநல்லூர் போன்ற இடங்களிலே—அது கோர்ட்டிலே இருக்கிறது, அதிகமாகச் சொல்லவில்லை, நெசவாளர்கள் நூற்றுக் கணக்கிலே, முந்நூற்றுக் கணக்கிலே, ஆயிரக் கணக்கிலே பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். முந்நூற்றுக்கும் அதிகமான நெசவாளர்கள் பேரில் வழக்குகள் போடப்பட்டு இருக்கின்றன. கடையநல்லூரிலே நடைபெற்ற வழக்குகள் அண்மையிலே திருநெல்வேலிக்கு மாற்றப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அப்படிச் செய்யப்பட்டிருப்பதால் 300 பேர்கள், 400 பேர்கள் நெசவாளர்கள் ஒரு நாளைக்கு 1 ரூபாய்கூட சம்பாதிக்க முடியாதவர்கள் நாட்கணக்கிலே இன்றைக்கு கோர்ட் வாசலிலே காத்திருக்கின்றார்கள். கருணைமிகுந்த நம்முடைய அரசும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அந்த வழக்கை முன்னரே விசாரித்த இடத்திலே விசாரணை மீண்டும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று அந்த ஏழை எளிய நெசவாளர்கள் சார்பிலே நான் இந்த நேரத்திலே விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கதர்பற்றிப் பேசப்பட்டது. கதர் என்றால் காங்கிரஸ்காரர்களுக்குத்தான் சொந்தம் என்று இன்னும் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். கதர் என்ற உருது வார்த்தைக்கு மரியாதை என்று பொருள். மரியாதையையும், மானத்தையும் காப்பதற்காகத்தான் அது பயன்படுகிறது. அதை அந்தக் காலத்திலே அண்ணல் காந்தி அவர்கள் நல்ல முறையிலே விருத்தி செய்தார்கள். அதற்குப் பிறகு

[திரு. கே. ஏ. வகாப்] [1971 ஜூலை 20

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சியில் இன்றைக்கும் நல்ல முறையிலே முக்கியத்துவம் கொடுத்து அதை அபிவிருத்தி செய்வது பாராட்டத்தக்கது.

கூட்டுறவு நிர்வாக முறையிலே ஒரு முறையைக் கையாள வேண்டும் என்று கருதுகிறேன். தவறுகள் ஏற்படுகின்றன, தவறுகள் ஏற்படுவதற்கு தவறு இழைக்கக்கூடிய அதிகாரிகள்தான் காரணமாக இருக்கிறார்கள். நிர்வாகிகளை நியமனம் செய்கின்ற நேரத்திலே அவர்கள் முன்னால் எப்படி இருந்தார்கள். அவர்களுடைய பொருளாதார வசதிகள், நாணயம் இவற்றையெல்லாம் பார்த்துத்தான் அவர்களுக்கு நிர்வாகிகளாக ஆக வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று கூறிக்கொண்டு என்னுடைய உரையை நிறைவு செய்துகொள்கிறேன்.

*திரு. கி. ஜெயராமன்: பேரவைத் தலைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன்.

அமைச்சர் அவர்கள் பல அற்புதங்களை நிகழ்த்தி இருக்கிறார்கள் என்றால் மிகையாகாது. இதற்கு முன்னாலே சாதாரணமாக கூட்டுறவு அமைச்சர் அவர்கள் ஏதாவது சொன்னாலும் சாதிக் அலி காங்கிரஸ் கட்சியினர் ஓடிவந்து பாய்ந்துவிடுவார்கள். பாய்ந்தவர்கள் இன்று இல்லை. இனிமேல் யார் பாய்வார்களோ தெரியவில்லை.

பல அற்புதங்களை நிகழ்த்தி இருக்கிறார்கள் என்று சொன்னேன். தமிழக அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு பல அற்புதங்கள் நடந்துள்ளன. பொதுத்துறையாக இருப்பது சரியானதா அல்லது தனித்துறையாக இருப்பது சரியானதா என்று சொன்னவர்கள் எல்லாம் இருந்தார்கள். அமைச்சர் அவர்கள் 'கூட்டுறவு என்பது எவ்வளவுதான் விரும்பத்தக்கதாக இருந்தாலும்' என்று சொல்லி இருக்கிறார்கள். நம்முடைய சமுதாயத்திலே கூட்டுறவு என்று சொன்னால் வெறுப்பு இருந்தது. நிர்வாகத்திலே இருப்பவர்களைப் பொறுத்துத்தான்—திரு. வகாப் அவர்கள் சொல்லியதைப் போல—வெறுப்பு ஏற்படுகின்றது.

இன்றைக்குப் பசுமைப் புரட்சியாக மாறியிருக்கிறது, இன்னும் கூடிய விரைவிலே நிச்சயமாக ஒரு நல்ல மாறுதலைக் காண்போம். லேண்ட் டெவலப்மென்ட் பேங்க்ஸ், லிப்ட் இரிகேஷன் சொஸைடிகள் இவற்றை எல்லாம் விரிவாக, தெளிவாக, விரைவாக ஏற்படுத்தி அக்ரிகல்சரல் ரீபைனான்ஸ் கார்ப்பரேஷன் மூலம் நமக்குக் கடன் தொகையை—நாம் எவ்வளவு வேண்டுமென்று நினைக்கிறோமோ அந்த அளவுக்கு—இன்னும் கோடிக்கணக்கான ரூபாய் அள்ளிக்கொடுக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் நிர்வாகத்திற்குப் புதியவர்கள். கூட்டுறவு வளர்ச்சி நிதி என்ற முறையில் 5 சதவீதம் லாபத்தில் கொடுக்க வேண்டுமென்று ஏற்படுத்தி இந்த ஆண்டிலிருந்து அமலுக்கு வருகிறது. அதிலே நல்ல லாபம் வரக்கூடிய நிலைமையை நாம் பார்க்கப்போகிறோம்.



1971 ஜூலை 20] [திரு. கி. ஜெயராமன்]

சேலம் மாவட்டத்தில் ஒரு நவீன அரிசி ஆலை ஏற்படுத்த வேண்டுமென்று திட்டமிடப்பட்டிருக்கிறது. ஆனால் அங்கேயிருக்கின்ற மார்க்கெட்டிங் சொஸைடி அதை ஏனோதானோ என்று நினைக்கிறது. அதை சிக்கிரமாக ஏற்படுத்த நம்முடைய அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

அரசியல் சட்டத்தை நாம் பேணிக்காப்பதில்லை என்று சொன்னார்கள். நாம்தான் அரசியல் சட்டத்தைப் பேணிக்காத்து வருகின்றோம். சமுதாயத்தில் வலிமை குறைந்தவர்கள், பெண்கள், தாழ்த்தப்பட்டவர்கள் இவர்களுக்கு எல்லாம் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையிலே, பிரதிநிதித்துவம் உண்மையாக அளிக்கப்படுகின்ற வகையிலே, அமைச்சர் அவர்கள் சட்டங்களையும் விதிகளையும் கொண்டுவந்திருப்பது பெரிய சாதனையாக இருக்கிறது. இது மற்றவர்களுக்கு வேதனையாகத்தான் இருக்கும்.

இங்கே கைத்தறி நெசவாளர்களைப் பற்றியும், கூட்டுறவுச் சங்கங்களைப் பற்றியெல்லாம் பேசப்பட்டது. கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதிக ரிபேட், தனிப்பட்டவர்களுக்கும் எவ்வளவு பண வசதிகள் நாம் செய்து தந்துவருகிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். ரிபேட் 110 லட்சம் ரூபாயை எட்டியிருக்கிறது. முன்பு 67 லட்சம் ரூபாயாக இருந்தது. தனிப்பட்ட கைத்தறி நெசவாளர்கள், மாஸ்டர்வீவர்களாக இருந்தாலும் தனிப்பட்ட நெசவாளர்களாக இருந்தாலும் கைத்தறி நிதி கார்ப்பரேஷன் மூலமாக பல்வேறு வகைகளிலே கடன் தொகைகள் அதிகமாகக் கொடுத்துக்கொண்டு வருகிறோம். அது மட்டுமல்ல, அவர்களுக்குத் தேவைப்படுகின்ற சாயப் பொருட்கள், மருந்துகள், நூல்கள் இவையெல்லாம் ஓரளவுக்குச் சீரான முறையிலே கிடைப்பதற்கு நாம் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். இன்னும் போகப் போக இதை விரிவுபடுத்தி நிச்சயமாக நல்லபடியாகச் செய்யலாம். மாண்புமிகு உறுப்பினர் சுப்பிரமணியம் அவர்கள் சொன்னார்கள், கைத்தறி நெசவாளர்களுடைய பெர் கேபிடா இன்கம் குறைந்திருக்கிறது என்று. 1947-க்குப் பின்னாலே—45 ஆக இருந்தது-90 ஆகியிருக்கிறது என்பதையும் அவர்களே ஒப்புக்கொண்டார்கள். இங்கே வருமானம் மட்டும் பெருகிவிடவில்லை, தமிழக அரசு அவர்களுக்குத் தேவையான மற்ற வசதிகள், வீட்டுவசதிகள், நிலம் கொடுக்கின்ற ஏற்பாடுகள், அவர்களுடைய பிள்ளைகள்—நலிந்து விடக்கூடிய தொழிலாக அது ஆகிவிடாமல் இருக்கக்கூடிய வகையிலே—அவர்களைப் படிக்கவைத்து ஐ.டி.ஐ.யில் பயிற்சிகொடுக்கிறோம். மேலும் அந்தத் தொழில் நலிந்துவிடாமல் பாதுகாக்கின்ற முறையில் டிரெயினிங் சென்டர்ஸ் என்ற முறையிலே அமைத்து வண்ண வண்ண முறையிலே தேவைக்கேற்றாற்போல் உற்பத்தி செய்ய ஏற்பாடுகள் செய்கிறோம். இவற்றையெல்லாம் நாம் பாராட்டத்தான் வேண்டும். யாரோ ஆண்டுவிட்டார்கள், யாரோ செய்தார்கள் என்பதல்ல, நம்முடைய அரசு அக்கறை எடுத்துக்கொண்டதால்தான் இவற்றையெல்லாம் செய்ய முடிந்தது.

அதேமாதிரி இங்கே கைத்தறி இலாகாவிற்கும், கூட்டுறவிற்கும் செய்யப்பட்ட செலவைப் பார்த்தால் 596 இலட்சங்களுக்குமேல் இந்தத் துறை செலவிடுகிறது. அதற்கேற்றவாறு மினி சூப்பர் மார்க்கெட் ஃபெடரேஷனில் அதிக அக்கறை கொண்டு அதிகச் செலவை செய்ய வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன.

மற்றொரு முக்கியமான விஷயம். நமக்கு வேண்டிய பஞ்சுகளில் குறைந்த மட்ட நூலுக்கு வேண்டிய பஞ்சு மட்டும் தென்னகத்திலே கிடைக்கிறது. உயர்ந்த ரகமுள்ள நூல்களுக்கு வேண்டிய பஞ்சினை வெளிநாட்டிலிருந்தோ அல்லது வடக்கே குஜராத், மகாராட்டிரத்திலிருந்தோ வாங்கிக்கொண்டிருக்கிறோம். ஏறத்தாழ இந்தியத் துணைக்கண்டத்தில் வெளிநாட்டுச் செலாவணியாக 90 கோடி ரூபாய் ஓராண்டுக்குக் குறையாமல் போகிறது. அந்தப் பஞ்சை இங்கே உற்பத்தி செய்யவேண்டுமென்று அக்கறை கொண்டு கோவை குடியலூர் கோவாப்பரேடிவ் விவசாயிகள் சங்கம் அதிக அக்கறை எடுத்துக்கொண்டு பஞ்சை உற்பத்தி செய்கிறார்கள். அப்படிப்பட்ட சங்கங்கள் வேகமாக வளர்வதற்கு நிச்சயமாக அவற்றிற்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு கைத்தறி நெசவாளர்களுக்கு என்ன செய்துவிட்டார்கள் என்று சொல்லும் நேரத்தில், விசைத்தறியை, ஏற்கெனவே இதே கூட்டத்திலே சொன்னதைப்போல், முன்னிருந்த அரசு விசைத்தறிகளை ஒப்புக்கொள்வதா வேண்டாமா என்று பயந்து விட்டு விட்டார்கள். ஆனால் சுமார் 12.500 விசைத்தறிகளை ஏற்றுக் கொண்டு, அதே நேரத்தில் கைத்தறி நெசவாளர்களும் நலிந்துவிடக் கூடாது, க்ஷீணித்து விடக்கூடாது, அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்றும், அவர்களுடைய வாழ்க்கை முன்னேற வேண்டுமென்றுதான் விசைத்தறிகளை உண்மையான நெசவாளர்களுக்கும், இருக்கின்ற போட்டிகளைக் குறைக்கின்ற முறையிலே, கூட்டுறவு முறையிலே சங்கங்களுக்கும் விசைத்தறிகளைக் கொடுக்கும் முறையையும் மேற்கொண்டிருக்கிறோம். 12,500 விசைத்தறிகளைத் தமிழ் நாடு ஒத்துக்கொண்டிருந்தாலும், தனிப்பட்ட நெசவாளர்களுக்கு ஒதுக்கும்போது, இங்கே சம்பந்தப்பட்ட மத்திய சர்க்கார் ஒதுக்குகின்ற அதிகாரத்தைக் கொடுத்து விட்டாலும், தனிப்பட்டவர்கள் உபயோகிப்பதற்கான பர்மிட்டை மத்திய அரசுதான் வைத்திருக்கிறது. இதைப்பற்றி நம்முடைய அரசு பலமுறை வலியுறுத்தியிருப்பதாக நான் அறிகிறேன். உடனே பர்மிட் கொடுக்கும் முறையை நம்முடைய மாநில கைத்தறி இயக்குநருக்கு மாற்றிக்கொடுக்க வேண்டும், அதற்காக மத்திய அரசை மீண்டும் வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மற்றொரு முக்கியமான விஷயம். இங்கே கடன்களைத் தள்ளிப் போடுவதிலே எத்தனையோ வசதிகளைச் செய்து தந்து விவசாயப் பெருமக்களுக்கு சில்லரைக் கடன்களை வசூலிக்காமல் விடும் நிலையைப் பார்க்கிறோம். மாண்புமிகு திரு. சுப்பிரமணியம் அவர்கள் சொன்னதைப் போல, திரு. வகாப் அவர்கள்





சொன்னதைப்போல் கைத்தறியாளர்கள் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அடுத்தபடியாக இருக்கிறார்கள். அவர்களுக்கு வீட்டு வசதி செய்யப்படவில்லை. 6 கோடி ரூபாயில் வீட்டு வசதி செய்யும் நிலைமை ஏற்பட்டு, பிறகு அது தள்ளிப்போட வேண்டிய வருத்தமான நிலை ஏற்பட்டுள்ளது. 100 ரூபாய் வருமானமுள்ளவர்கள் வீட்டு வாடகை கொடுக்க முடியாமல் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். சமுதாயத்திலே எத்தனையோ பேர்கள் வேறுவேறு தொழில்களிலே தாழ்ந்த நிலையிலேயிருக்கிறார்கள். அவர்களுக்கு அதிக வசதி செய்யும் நேரத்திலே நெசவாளர்களுக்கு அப்படிச் செய்யவில்லை. நான்காவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் 27 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள்.

அவர்களுக்கு அதிக அளவில் வீடு கட்டிக்கொடுக்க வேண்டும். அவர்கள் வாடகை கொடுப்பதற்குச் சக்தியற்றிருப்பதின் காரணமாக, அவர்களிடம் வாடகை வசூலிப்பதை 15 ஆண்டுகள் என்பதை 25 ஆண்டுகளாகத் தள்ளிப்போட வேண்டும். எத்தனையோ கூட்டுறவுச் சங்கங்களிலே வாடகை பூராவையும் தள்ளிவிடுவதாகத் தெரிய வருகிறது. பல்வேறு விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ரைட் ஆஃப் செய்வதைப் பார்க்கிறோம். நாம் அப்படித் தள்ளுபடி செய்யாவிட்டாலும்கூட அதிக காலத்திற்கு அதைத் தள்ளிப்போட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அதை நிச்சயமாகச் செய்து முடிப்பார்கள், அந்த நன்மை அவர்களுக்குப் பெருநன்மையாக முடியும் என்று கூறிக்கொண்டு இந்தக் கோரிக்கையை ஆதரித்து முடிக்கிறேன்.

* திரு. கே. என். குமாரசாமி : உதவித் தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவு வளர்ச்சியைப் பற்றி அமைச்சரவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையிலே எதிர்காலத்திலே நல்லதொரு வளம் தருகின்ற வாய்ப்பு இந்தத் துறையின் மூலமாகத் தமிழகத்திற்கு அளிக்க முடியுமென்ற நம்பிக்கையின் அடிப்படையிலே இந்த வாய்ப்புகளை அளித்திருக்கிறார்கள். கூட்டுறவுத் துறையிலே விவசாயத்தை மேம்படுத்த பல்வேறு முறைகளிலே விவசாய அபிவிருத்தியைச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு கடன் வழங்கப்படுகிறது. அந்தக் கடன்கள் வழங்கப்படும்பொழுது ஒவ்வொரு பகுதியிலேயும் ஒவ்வொருவிதமான சூழ்நிலை தோற்றுவிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காரணம், பல்வேறு துறைகளிலே பணியாற்றினாலும்கூட இந்தக் கூட்டுறவுத் துறையிலே பணியாற்று பவர்கள் மிகவும் ஜாக்கிரதையாக, மிகவும் ஒழுங்காகப் பணியாற்று வதன்மூலம்தான் இந்தத் திட்டம் நல்ல முறையில் நிறைவேற வாய்ப்பு இருக்க முடியும் என்பதையும் இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கூட்டுறவுத்துறையிலே நிலங்கள் பெயரிலே விவசாயப் பயிர் கடன் கிடைப்பதிலே இருக்கிற கஷ்டங்கள், பயிர்க் கடன் பெறுவதிலே அந்த விவசாயிகள் கட்ட முடியாமல் கஷ்டப்படுகிற

துன்பமான நிலை இருக்கிறது. ஆண்டுக் கடன்களைப் பொறுத்த வரையிலே, உரக் கடன், விதைகள், மருந்து போன்றவைகள் விகிதாச்சார அடிப்படையிலே கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கடன் கொடுப்பதின் மூலம் ஒவ்வொரு ஆண்டிலும் கட்ட முடியாமல் சூழ்நிலை இருக்கிறது. அந்தக் கடன்களை முன்னால் பழையமாதிரி இருந்ததைப்போன்று 3 ஆண்டுகளில் கடனைக் கட்ட ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படியில்லையென்றால், 3 ஆண்டுகளுக்குள்ளாகக் கட்டவில்லை என்றால் பயிர் வெள்ளாமை எடுத்துப் பலன்வருகிற அளவிற்குக் காலத்தைத் தள்ளிக் கொடுக்க ஏற்பாடு செய்தால்தான் அவர்களால் ஈடு செய்ய முடியும். அந்த அடிப்படையில் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நிலவள வங்கிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. நிலவள வங்கிகளால் கொடுக்கப்படும் கிணறு வெட்டுவதற்கான கடனை 7 ஆண்டுகளுக்குள்ளாகத் திருப்பிக் கட்டிவிட வேண்டுமென்று அந்தக் கடன் விதிகளிலே சொல்லப்படுகிறது. 7 ஆண்டுகளிலே கட்டுவது என்பது கோவை மாவட்டம் போன்ற பகுதிகளிலே முடியாது. காரணம், அந்தப் பகுதிகளிலே கிணறுகள் வெட்டுவதற்கு அதிக முதலீடு செய்ய வேண்டும். எனவே 7 ஆண்டுகளிலே கடனைத் திருப்ப முடியாது. எனவே அந்தப் பகுதிகளிலேயுள்ள சூழ்நிலையை அனுசரித்து 15 ஆண்டுகள் என்று வைக்க வேண்டும். ஒரு கிணறு வெட்டுவதென்றால் அங்கே 30,000 ரூபாய் வரை வேண்டும். எனவே நிலவள வங்கிகளில் கடனைப்பெற்று 7 ஆண்டுகளிலே கட்டுவது என்பது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. ஆகவே, அந்தக் கடனை அதிகமாகத் தவணை கொடுத்து கட்டச் செய்வதற்கு வாய்ப்பினை ஏற்படுத்தித் தருவதன் மூலமாகத்தான் அதன் பலனை அடைய முடியும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

கிணறு வெட்டுவதற்கான மானியம் அளிக்கப்படும் தொகையை அதிகப்படுத்த வேண்டும். அதிகப்படுத்த வேண்டுமென்பதைச் சொல்லும்பொழுது 30,000 ரூபாயில் கிணறு வெட்டினால் 25 பர்சென்டாவது மானியம் அளிக்கும் வாய்ப்பிருந்தால்தான் அந்த விவசாயிகள் வாழ முடியும். எனவே அந்த முறையை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், அடி வெட்டுகளுக்குப் பணம் பெறுவதிலே 5 தவணைகளிலே அந்தப் பணத்தைத் திருப்பிக் கட்ட வேண்டுமென்று சொல்லப்படுகிறது. அடிவெட்டு வெட்ட வேண்டுமானால் 5,000 ரூபாய், 6,000 ரூபாய்வரை ஆகும். அதை 5 தவணைகளில் திருப்பிக் கட்ட முடியவில்லை. ஒரு டியூ கட்டத் தவறினாலும் 5 தவணைகளுக்கும் உள்ளான பணத்தை ஒரேமுறையில் கட்ட வேண்டுமென்று சொல்வதால் விவசாயிகளுக்குச் செய்யப்படும் உதவியின் பலனை அழிந்து விடுகிறது. எனவே அவர்களுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தைக்கொடுத்து ஒரு டியூவைக் கட்டினால் அதை ஏற்றுக்கொள்ள முன்வந்து, அதைத் தள்ளிக்கொடுக்க





ஏற்பாடு செய்வதன் மூலமாகத்தான் அந்தப் பிரச்சனைக்கு முடிவு காண முடியும். இப்பொழுது அப்படிக் கட்ட முடியாதவர்கள் ஜப்திக்கு உள்ளாகி, நிலங்களைப் போன விலைக்கு விற்று திருப்பிக் கட்டக்கூடிய நிலை ஏற்படுகிறது.

அரசாங்கம் நில அடி நீரை வெளியே கொண்டுவருவதற்கு அமெரிக்காவோடு பேசி, இன்றைக்கு உலக நாடுகளோடு தொடர்பு வைத்து அதற்காக நம்முடைய நிபுணர்களைக்கொண்டு நீரை வெளியே கொண்டுவர கிட்டத்தட்ட 26 கோடி ரூபாய் பெற்றுக் கொண்டு வர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்ற கருத்தை அறிக்கையிலே அமைச்சரவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். 7,000, 8,000 கிணறுகளுக்கு மேலாக இந்த ஆண்டிலே வெட்டுவதற்கு வாய்ப்பு உருவாக்கப்பட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். கிணறு வெட்டுவதைப்பற்றி 69-ஆம் ஆண்டில் அறிக்கையை அமைச்சரவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள். கோவை, உடுமலைப் பேட்டை, தொண்டாமுத்தூர் பகுதிகளில் ஆயிரம் கிணறுகளையும், ஆயிரமாயிரம் பம்பு செட்டுகளையும் வைக்கத் திட்டம் தீட்டினார்கள். ஆனால் அந்தத் திட்டத்தினால் என்ன சாதனைகள் அங்கே செய்யப்பட்டிருக்கிறது என்றால் 1968-ஆம் ஆண்டிலிருந்து இதுவரைக்கும் அதாவது 31-3-1971 வரைக்கும், அங்கே போடப் பட்டிருந்த திட்டமானது 1,000 கிணறுகளும், 1,000 பம்பு செட்டுகளும், தொண்டாமுத்தூர் பிர்க்காவிலே அங்கே 618 கிணறுகளும், 218 பம்பு செட்டுகளுக்கு மேல் முடியவில்லை. என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. ஆனால் நம்முடைய திட்டம், ஆயிரம் கிணறுகள் வெட்டும் திட்டத்திற்குக் காலதாமதத்திற்கு என்ன காரணம் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

உடுமலைப் பேட்டையிலும் அதே மாதிரி ஆயிரம் கிணறுகள் வெட்டப்படும் என்று சொன்னார்கள். ஆனால் 180 கிணறுகள்தான் வெட்டப்பட்டிருக்கின்றன.

**திரு. இரா. மாணிக்கவாசகம்** : தொண்டாமுத்தூர் தொகுதியில் ஆயிரம் கிணறு திட்டத்தை அமைச்சர் அவர்கள் அறிவித்தது என்ன ஆயிற்று என்று கேட்டார்கள். அங்கு உண்மையிலேயே ஆயிரம் கிணறுகள் பூர்த்தி செய்யப்பட்டு முப்பது லட்சம் ரூபாய்க்கு மேல் முதல் தவணையாகவே கொடுக்கப்பட்டிருக்கிறது
என்பதை அங்கத்தினர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர 11-30
விரும்புகிறேன்.

MR. DEPUTY SPEAKER: Is this a point of Order ?

THIRU R. PONNAPPA NADAR: If any question is put by Minister, the Member is bound to yield. But when a question is put by another Member, the Member is not bound to yield. That has been the practice we have been following all along. No member should interrupt another member in the middle of his speech, except by point of order.

MR. DEPUTY SPEAKER: It is not desirable for any Member to interrupt another Member's speech in the middle. Hon. Members can raise point of Order. But this is no point of Order.

THIRU R. MANICKAVASAKAM: Point of clarification.

MR. DEPUTY SPEAKER: That is not allowed. The hon. Member Thiru Kumarasamy may continue.

**திரு. கே. என். குமாரசாமி:** நான் தவறான தகவல்களைச் சொல்லவில்லை. 1970-ம் ஆண்டு சாதனையை எடுத்துச் சொன்னேன். 1971-க்குப் பிறகுதான் அதனைக் கொடுத்திருக்கிறார்கள். அதே மாதிரி உடுமலைப் பேட்டையிலும் ஆயிரம் கிணறுகள் என்று திட்டமிட்டிருந்தது குறைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். திட்டமிட்டது போல் திட்டம் முழுவதையும் செயல்படுத்துவதன் மூலந்தான் போடுகின்ற திட்டம் வெற்றிபெற வாய்ப்பு ஏற்படும் என்பதற்காகத்தான் சொன்னேனே தவிர வேறல்ல. பல்வேறு பகுதிகளில் இப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்பது என்னுடைய அவா. இந்தத் திட்டத்தைக் கோவை பிரதேசங்களில் பாசன வசதிகள் உள்ள பகுதிகளில் மட்டும் அமலாக்கும் போக்குதான் இருக்கிறது. பாசனம் அற்ற பகுதிகளில் இந்தத் திட்டங்களை நிறைவேற்ற அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வீட்டுமனை அபிவிருத்தி வங்கிகளை ஏற்படுத்துகின்ற கொள்கையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. வீட்டு மனைக்குப் பணம் கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு பல இடங்களில் வங்கிகள் ஏற்படுத்துவதில் இன்னும் அரசாங்கத்தினால் பிரதிநிதிகள் நியமிக்கப்படாமல் காலதாமதம் செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்காகப் பணம் திரட்டப்பட்டு பாங்கில் டெபாசிட் செய்யப்பட்டு பணியாற்றுகின்றவர்களுக்கு எந்தவிதமான பதிலும் இல்லாமல் அரசாங்கம் நாமினேட் பண்ணும் முறையில் ஏதோ சொல்லிக் கொண்டு காலம் தாழ்த்திக் கொண்டு வருவதால் வசூல் செய்யப்பட்ட பணத்தைப் பொறுத்து மெம்பர்களிடத்தில் அச்சத்தை விளைவிக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சிங்காநல்லூர் பகுதியில் அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறது. சேர்க்கப்பட்ட மெம்பர்கள் மூலமாகத் தேர்தலை நடத்தி அதிகாரத்தை அவர்கள் கையில் ஒப்படைக்கும் வாய்ப்பை உருவாக்க வேண்டியது அவசியம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கதர் உற்பத்தியைப் பொறுத்தவரை அதன் தரத்தை உயர்த்த வேண்டும். அந்நிய நாட்டினர் கதரை விரும்பிக் கேட்கின்ற நிலை வளர்ந்து வருகிறது. அந்நிய நாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் அளவுக்கு தரத்தை உயர்த்த முன்வரவேண்டும். பொதுவாக இந்தத் துறை மூலமாக உற்பத்தி செய்யப்படும்



மற்றப் பொருள்களும் மக்களால் கவரக்கூடிய வகையில் அமைந்திருக்கின்றன. அந்தப் பொருள்களை எல்லாம் கூட வெளிநாட்டு மக்கள் விரும்பி வாங்குகின்ற நிலையில் அதற்குரிய ஏற்பாடுகளை எல்லாம் செய்யவேண்டும். அந்தத் தொழிலை அபிவிருத்தி செய்ய அரசு தேவையான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வதோடு அந்தத் தொழிலாளர்களுடைய வருமானத்தை உயர்த்திக் கொடுப்பதற்கான முறையில் அந்தத் துறையினை வளர்க்க பெரு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

* **திரு. வீ. கார்த்திகேயன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் கூட்டுறவு மானியத்தை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் கூற முன்வருகிறேன்.

கூட்டுறவுத் துறையிலே சரித்திரம் காணாத அளவுக்கு கூட்டுறவு அமைச்சர் மாண்புமிகு திரு. பி. மா. ஆதித்தனார் அவர்கள் ஏழை விவசாயிகளின் நலன் கருதி நீண்ட நாள் கடன்கள், குறுகிய காலக் கடன்கள் அளிக்க பல திட்டங்களைத் தீட்டி ஆங்காங்கே நிலவள வங்கிகளை அமைத்து கடன் பெறுவதை இலகுவாக்கியிருக்கிறார்கள். வேளாண்மைத் துறையில் அபிவிருத்தி ஏற்படும் வகையில் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து விவசாயிகளுக்குப் பல வகைகளில் உதவி செய்து வரும் இந்த அரசாங்கத்தைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. விவசாயக் கிணறுகள் தோண்டவும், விசையேற்றங்கள் அமைக்கவும், டிராக்டர்கள் வாங்கவும் 1971-72-ம் ஆண்டுக்கு 21 கோடி ரூபாய் வழங்க இருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது சிறு விவசாயிகள் கூட இலகுவாகக் கடன்பெற்று அண்ணா அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள பசுமைப் புரட்சியில் பங்கு கொள்ள வழி ஏற்பட்டிருக்கிறது என்று கூற விரும்புகிறேன். அதற்காக இந்த அரசைப் பாராட்டுகிறேன். பசுமைப் புரட்சிக்காக பயிர்க் கடன் திட்டம், குறுகிய, நடுத்தர காலக் கடன்கள் கொடுக்க 62½ கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். விசையேற்றங்களுக்கு உமியை எரி பொருளாகக் கொண்டு உற்பத்தி இயந்திரங்களை ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதையெல்லாம் பார்க்கும்போது இந்த அரசைப் போற்றாமல் இருக்க முடியாது.

இராதாபுரம் தொகுதியிலுள்ள மணல் நிறைந்த பாலைவனம் போன்ற பகுதியை நந்தவனமாக்கும் வகையில் ஒரு கிளை நிலவள வங்கியை ஏற்படுத்தி காங்கிரீட் நந்தவனம் போட அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்துள்ளார்கள். இப்படிச் செய்வதின் மூலம் ஏழை விவசாயிகள் குறைந்த தண்ணீரில் நிறைய விவசாயம் செய்ய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. இராதாபுரம் பகுதி வறட்சியான பகுதி. இங்குள்ள விவசாயக் கிணறுகளை

ஆழப்படுத்தவும், மின் மோட்டார்களை வழங்கவும் ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். இராதாபுரம் பகுதி நாங்குநேரி வட்டத்தைச் சேர்ந்தது. இங்குள்ள கிணறுகளில் கொஞ்சம் கூடத் தண்ணீர் இல்லை. விவசாயக் கிணறுகள் மாத்திரமல்ல; குடிநீர்க் கிணறுகளில் கூடத் தண்ணீர் இல்லை. மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அந்தப் பகுதி மக்களின் கஷ்டங்களை நீக்கி கிணறுகளை ஆழப்படுத்த அரசு உடனுக்குடன் கடன்களைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின் மோட்டார்கள் வாங்க கடன் கொடுக்கவேண்டும்.. இந்தப் பகுதிகளில் வாழைகள்தான் அதிகமாகப் பயிரிடப்படுகின்றன. ஆகவே இந்தப் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு கடன் கொடுக்க வாழைக்கடன் திட்டத்தை விரிவுபடுத்தி அவர்களை உற்சாகப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் கூட்டுறவு நீர்ப்பாசனக் கிணறுகளை விரைவில் இயங்கச் செய்தால் அப்பகுதியினர் முன்னேற ஏதுவாகும். இந்த அறிக்கை ஏழை எளிய மக்களை வாழவைக்கும் வரப்பிரசாதம் என்று சொல்லிக் கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

* **திருமதி த. ந. அனந்தநாயகி**: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கை மீது கொடுக்கப் பட்டுள்ள அத்தனை வெட்டுப்பிரேரணைகளையும் ஆதரித்து இத் துறையின் மீதான சில கருத்துக்களை இந்தச் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவர நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அமைச்சர் அவர்களின் அறிக்கையைப் பார்க்கும்போது அதை ஓரளவிற்குப் பாராட்ட வேண்டும். நம் நாட்டு மக்கள் முன்னேற வேண்டுமென்று பல நல்ல திட்டங்களை ஆராய்ந்து உருவாக்கு வதில் உற்சாகம் காட்டியிருக்கிறார்கள். ஆனால் திட்டங்களைப் போடுவது பெரிதல்ல. அது நல்லமுறையில் அமல்படுத்தப் படுகிறதா, அதில் என்னென்ன குறைகள் இருக்கின்றன என்பதை சட்டசபை பிரதிநிதிகளாகிய நாங்கள் அல்லது மற்றவர்கள் எடுத்துச் சொல்லும்போது அதைத் திருத்திக்கொள்வதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும்.

மொத்தத்தில் கூட்டுறவுத் துறை என்பது மிக நல்ல எண்ணத்தோடு ஆரம்பிக்கப்பட்டது என்றாலும் இன்று கூட்டுறவுத் துறை என்பது சில குடும்பங்களின் கூட்டுச் சொத்தாக இருந்து கொண்டிருக்கிறது என்று எண்ணக்கூடிய சூழ்நிலையில்தான் இருந்து கொண்டிருக்கிறது. ஒரு கட்சிக்குச் சொந்தமாக இருக்கக்கூடியவர்கள் அடிக்கடி கூட்டுறவுத் துறையில் முக்கியத்துவம் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பது மக்களின் கவலையாக இருக்கிறது





நாங்கள் ஆட்சியில் இருந்தபோதே சொன்னேன். இரண்டு முறைகளுக்கு மேல் யாரும் டைரக்டராக வரக்கூடாது, இரண்டு முறைகளுக்கு மேல் யாரும் மானேஜிங் டைரக்டராக வரக்கூடாது என்று சொல்லியிருக்கிறேன். அதை எங்களால்தான் செய்ய முடியவில்லை. இந்த ஆட்சி வந்த பிறகாவது அதைச் செய்யும் என்று நினைத்தேன். அமெரிக்க ஜனாதிபதி கூட இரண்டு முறை களுக்கு மேல் வரக் கூடாது என்றிருக்கிறது. அப்படியிருக்க கூட்டுறவுத் துறையில் டைரக்டராக இரண்டு முறைகளுக்கு மேல் வரக்கூடாது என்று சொல்வதினால் ஒன்றும் கெட்டு விடாது, அடுத்தவர்களின் அனுபவத்தைப் பெறுவதில் கஷ்டம் ஒன்று மில்லை. ஆகவே கூட்டுறவுத் துறையில் இப்படி இரண்டு முறை களுக்கு மேல் யாரும் பதவி வகிக்கக் கூடாது என்ற முறையில் திருத்தம் செய்யப்படவேண்டும். அந்தளவிற்கு சட்டத்தைத் திருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டும்.

அதேபோன்று கூட்டுறவுத் துறையில் உள்ளவர்கள் அவரவர்கள் வசதிகளைப் பெருக்கிக் கொள்ளவேண்டுமென்று—மானேஜிங் லைடில் உள்ளவர்கள்—ஆசைப்படுகிறார்கள். என்ன அழகான கெஸ்ட் ஹௌஸ்கள். இந்த அரசாங்கத்திற்குப் பாரலலாக இருக் கிறது இந்த கோவாப்பரேட்டிவ் டிப்பார்ட்மென்ட். அழகான கெஸ்ட் ஹௌஸ்களை ஊட்டி முதல் மதராஸ் வரை கட்டிக் கொண்டு வசிக்கவேண்டுமென்று நினைக்கிறார்கள். ஏழை எளிய மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால், நம் பேரைச் சொல்லிக் கொண்டு இப்படியெல்லாம் தங்கள் வசதிகளைப் பெருக்கிக் கொண்டு போகிறார்களே . . .

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்**: கெஸ்ட் ஹௌஸஸ் கட்டியதெல்லாம் 1967-க்கு முன்னாலே. அதற்குப் பிறகு ஒன்று கூட நாங்கள் கட்டவில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி**: முன்னால் கட்டப்பட்டதோ அல்லது பின்னால் கட்டப்பட்டதோ இந்த முறைகள் எல்லாம் தவிர்க்கப்படுவது நல்லது. இனிமேலாவது கட்டவில்லை என்றால் அதை நான் வரவேற்கிறேன்.

அதோடு கூட யாரும் இரண்டு முறைகளுக்கு மேல் டைரக்டராக இருக்கக்கூடாது என்றும் அரசாங்கம் திருத்தம் கொண்டு வந்தால் வரவேற்பேன்.

பின்னர், கடன் கொடுக்கப்படுகிறது. கடன் எப்படிச் செலவழிக் கப்படுகிறது என்பதைப் பார்க்கவேண்டும். விவசாயிகளுக்கு கிணறுகள் தோண்டுவதற்கும், கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும் கடன் கொடுக்கப்படுகிறது. இந்தக் கடன்களைப் பெறுவதில் உள்ள கஷ்டநஷ்டங்கள் கொஞ்சநஞ்சமல்ல. 5,000 ரூபாய் கடன் கொடுத்தால் அந்த விவசாயியின் கைக்கு ரூ. 3,000 தான் போகிறது என்பது நடைமுறையில் இருக்கிறது. அதைத் தடுக்கவேண்டும்.

பின்னர், கிணறு வெட்டுவதற்கு கொடுக்கப்படும் பணம் போதாத நிலையும் இருக்கிறது. கிணறு வெட்டும்போது பாறையாக இருக்கிறது, இல்லாவிடில் எவ்வளவு ஆழத்திற்கு வெட்டினாலும் தண்ணீர் கிடைக்காத ஒரு நிலையும் ஏற்படுகிறது. அந்நிலையில் வாங்கிய கடனை திருப்பிக்கொடுக்க அந்த விவசாயி தன் வீடு, நிலம் எல்லாவற்றையும் விற்றுப் பணத்தைக் கொடுக்கவேண்டிய ஒரு நிலை ஏற்படுகிறது. இந்நிலை தடுக்கப்படவேண்டும். அதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டும்.

கடையம் பஞ்சாயத்து யூனியனில் கிணறுகளை ஆழப்படுத்த பணம் கடன் கொடுத்தார்களாம். இதை அந்தத் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் என்னிடம் கூறினார்கள். கிணறு வெட்டியும் தண்ணீர் வரவில்லை. அத்தகைய வரட்சிகரமான நிலைமை. இப்போது கடனைத் திருப்பிக்கொடுங்கள் என்று அவர்களை நிர்ப்பந்தப்படுத்தினால் அதன் விளைவு என்னவது? ஆடு மாடுகள், இருக்கிற நிலம் இவற்றை விற்கவேண்டியதொரு நிலை தான் ஏற்படும். அவற்றை ஜப்தி செய்யும் ஒரு நிலைதான் ஏற்படும். ஆக, நாம் எதற்காகக் கடன் கொடுத்தோமோ அது பயன்பட்டதா என்பது கேள்விக்குறியாக ஆகிவிடும்.

கிணற்றை ஆழப்படுத்த கடன் கொடுத்தால் மட்டும் போதாது, தண்ணீரை வெளியே கொண்டுவரவேண்டும். தண்ணீர் வெளியே கொண்டு வருவதற்கு பம்ப் செட்ஸ் பொருத்தப்படவேண்டும். சிலர் கிணற்றை ஆழப்படுத்துகிறார்கள். அதிகாரி வந்து பார்க்கும்போது தண்ணீர் இவ்வளவு அடியில் இருக்கிறது என்று சர்டிபிகேட் கொடுக்கிறார்கள். நான் கூட ஒரு கேள்வி கேட்டேன். அதிகாரி இறங்கி ஆழம்பார்க்கிறாரா அல்லது ஆழம் பார்ப்பதற்குரிய கருவி ஏதாவது கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று. அவர்கள் சர்டி-பிக்கட் கொடுக்கிறார்கள். அப்படி சரியாக ஆழப்படுத்தவில்லை என்றால் கடன் கொடுக்கப்பட்டது நிர்ப்பந்தித்து திரும்ப வாங்கப் படும் என்ற நிலை இருக்கிறது. ஆகவே நான் சொல்வது என்னவென்றால், நீங்களே கிணற்றை வெட்டி பம்ப் செட்டையும் பொருத்திக் கொடுத்து விடுங்கள். பின்னர் அத்தொகையை தவணையில் வசூலித்துக்கொள்ளலாம்.

இப்போது, அக்ரோ சர்வீஸ் சென்டர்கள் என்று ஆரம்பிக்கப் போகிறார்கள். ஆகவே கிணற்றை வெட்டி பம்ப் செட்டையும் பொருத்தி ரெடிமேடாகக் கொடுத்துவிட்டால் பின்னர் கடனைத் திருப்பி வாங்கிக் கொள்ளுங்கள். சிலயிடங்களில் கிணறு வெட்ட செலவழித்திருக்கிறார்கள் என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. கடன் தொகை, முழுத் தொகையும் போய் சேருவதில்லை. ஆகவே நாமே அவற்றைச் செய்து கொடுத்தால் நல்லது. இல்லாவிடில் விவசாயிகளின் கடன் சுமை அதிகமாகப் போய்விடும்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்துக்களில் கோடவுன்ஸ் கட்டுவது.





THE HON. THIRU SI. PA. ADITANAR: I greatly admire and appreciate the intelligent outlook brought to bear on the subject by the learned Member. The very same subject has been a problem which the Department has tackled. You will observe in paragraph 19 of my speech—of course we have suggested the remedy on the lines thought of by the learned member—I have stated as follows:

"The Land Development Banks will enable the cultivator (through the Agro-Service Centres) to sink a well and install a pump-set and to lay the water-saving floor, and to raise 3 crops per year."

திருமதி த. ந. அனந்தநாயகி: ஒருவேளை அக்ரோ சர்வீஸ் சென்டர் சர்வீஸ் செய்வதோடு நின்று விடுமோ என்று நினைத்தேன். நல்லமுறையில் இதைச் செய்திருப்பது வரவேற்கத்தக்கது.

அடுத்தபடியாக, கோடவுன்ஸ். கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் கோடவுன்ஸ் கட்டுகிறார்கள. சிலர் தேவையிருந்தால் கட்டு கிறார்கள். சிலர், அமைச்சர் வந்து நம் தலைமையில் திறப்பு விழா நடக்கட்டுமே என்று கட்டுகிறார்கள். கட்டப்பட்ட பல கிட்டங் கிகள் காலியாக இருக்கின்றன. ஆகவே அது ஏன் என்பதை ஆராய்ந்து இனிமேல் அவற்றை விரிவுபடுத்த வேண்டுமா, இல்லையா என்பதை நன்கு ஆலோசித்துப் பார்த்த பின்னர்தான் செய்ய வேண்டும். பல கிட்டங்கிகள் காலியாக இருக்கும்போது இன்னும் பல கிட்டங்கிகள் கட்டிக்கொடுப்பது அவசியந்தானா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். 'கோடவுன்-கம் ஆபீஸ் பில்டிங்ஸ்' கட்ட திட்டம் போட்டிருக்கிறார்கள். அந்த ஊரில் அது நன்கு பயன்படுத்தப்படுமா என்பதைப் பார்க்கவேண்டும். அவசியம் என்றிருந்தால் பரவாயில்லை, கிட்டங்கிகள் கட்டுவது. ஆனால் சம்பிரதாயத்திற்காகக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்றால் அதை நிறுத்துவது நல்லது. மக்களும் பயன்படுத்தவில்லை. கிட்டங்கிகளும் பாழாகிக் கொண்டிருக்கின்றன. எப்போதாவது ப்ரொக்யூர்மென்ட் வந்தால் அவை தேவைப்படும் என்றால் பெரிய பெரிய கிட்டங்கிகளை அரசாங்கம் ஆங்காங்கு கட்டி தயாராக வைத்திருந்தால் பரவாயில்லை. ஒவ்வொரு ஊராகக் கட்டிப் பணத்தைப் பாழாக்குவது என்பது சரியல்ல. அதில் சற்று கவனமாக இருக்கவேண்டும்.

கடன் வாங்குகிறவர்களுக்கு ஒரு பாஸ் புக் கொடுப்பது நல்லது என்று சொன்னார்கள். ரெவின்யூ துறை அமைச்சர் அவர்களும் நிலத்தைப் பொறுத்தவரையில் அப்படி ஒன்று கொடுக்கவேண்டு மென்று சொன்னார்கள். கூட்டுறவுக்கு என்று ஒரு பாஸ் புக், நிலத்திற்கு ஒரு பாஸ் புக் என்று இப்படி பல பாஸ் புக்குகளைக் கொடுத்தால் விவசாயிகள் குழப்பத்திற்கு ஆளாகிவிடுவார்கள். ஆகவே, எல்லாவற்றையும் சேர்த்து ஒரு பாஸ் புக் கொடுத்தால் என்கம்பரன்ஸ், பட்டா, கடன் வாங்கியது, கோவாப்பரேட்டிவ் சொஸைட்டியில் வாங்கிய கடன், எவ்வளவு கடன் அவரது

சொத்தின் பேரில் கொடுக்க முடியும் என்று இப்படி எல்லா விவரங்களும் அடங்கிய ஒரு பாஸ் புக்கைக் கொடுத்தால் நல்லது. கூட்டுறவுத் துறையில் திறமை மட்டுமல்ல, அரசாங்கத் தலையீடும் கிடையாது, கட்சி நோக்கமும் இல்லை என்றதொரு நல்ல நிலையை ஏற்படுத்தவேண்டும். இன்று பல வங்கிகள் சூப்பர்ஸீட் செய்யப் படுகின்றன. Bad management or loss என்று சொல்லிவிடலாம். சூப்பர்ஸீட் செய்வதை அதிகாரிகள் ஊக்குவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற குறைபாடு தமிழ்நாட்டில் பலயிடங்களிலிருந்தும் வந்து கொண்டிருக்கின்றன. ஒரு சொஸைட்டியில் திடீரென்று நஷ்டம் ஏற்படுகிறது, திடீரென்று லாபம் வருகிறது. இதைப் பார்க்கும்போது சூப்பர்ஸீட் செய்வது அரசியல் நோக்கத்தோடு செய்யப்படுகிறதா அல்லது கூட்டுறவுத்துறையைச் சுத்தப்படுத்தப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்களா என்பதை அமைச்சரவைக்கே விட்டு விடுகிறேன். காரணம், இப்படி நடக்கின்றது என்பதை நாங்கள் எடுத்துச் சொல்லாமே தவிர, எங்கே நடைபெறுகிறது, எப்படி நடைபெறுகிறது என்பதை அமைச்சர் அவர்களே கவனித்து நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

அரசாங்கமே கூட்டுறவு சொசைடிகளுக்கு டைரக்டரை அப்பாயின்ட் செய்வது தடுத்து நிறுத்தப்படவேண்டும். அதற்கென்று பங்குதாரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் டைரக்டர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுவார்கள். இப்படி அரசாங்கமே டைரக்டர்களை அப்பாயின்ட் செய்வதால், அதிலே அரசியல் செல்வாக்கு பயன்படுத்தப்படுகிறது. கூட்டுறவுத் துறை சரிவர ஜனநாயக முறையில் நடைபெறுவதற்கு இதனால் முடியவில்லை. ஆகவே, இதை மாற்றியமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஸ்பெஷல் ஆபீசர் அப்பாயின்ட் செய்தால் 4 ஆண்டுக் காலத்திற்குச் செய்யலாம் என்று இருக்கிறது. நான்கு ஆண்டு காலத்திற்கு இருக்கலாம் என்று இருக்கும்போது, 4 மாதத்திற்கு, 6 மாதத்திற்கு என்று கூடப் போடுகிறோம். மிகமிக பாதிக்கப் படக்கூடிய சூழ்நிலை இருக்கும்போதுதான் இதைக் கையாள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சட்டத்திலே எங்கே ஓட்டை இருக்கிறது என்று பார்த்துக்கொண்டு இருந்து, அதன் காரணமாக நல்ல சொசைடிகள் கூட கவிழ்க்கப்படும் நிலை இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கோவாபரேடிவ் சொசைடியில் . . . .

THE HON. THIRU Si. Pa. ADITANAR: Regarding the point mentioned by the hon. Member, namely, supersession of certain banks I would like the hon. Member to point out any case where the overdues have not been in excess of the overdues permitted by the Reserve Bank. If the overdues exceed 25 per cent, then what happens is, the money given by the Reserve Bank of India is not advanced. If it exceeds 50 per cent, then the Reserve Bank withdraws its support in its entirety. Then, what will happen to the party? Therefore, when the Bank reaches a position where the overdues have become extraordinarily heavy and affect the Bank





itself and the credit sector, then, there is no other go than to take charge of the Bank by means of a Special Officer and get the overdues reduced, and then we will have an election again.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: I understand the difficulties of the Hon. Minister. But I will be very glad if this policy is followed without any partiality. But what happens exactly is this. Wherever the society is not to their liking they have taken this attitude and I would like to point out that the Kanyakumari Marketing Society.........

THE HON. THIRU Si. Pa. ADITANAR: As the hon. Member was mentioning about the banks—(Thirumathi T. N. Anandanayaki: Co-operative Societies)—I will come to the co-operative societies later—I asked her to point out a single case of any bank anywhere in any district where the committee has been superseded, unless and until the Bank exceeded the limit in point of overdues.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: I only wanted to say co-operative societies. Perhaps I have mentioned it as a bank. But Kanyakumari Co-operative Marketing Society has been superseded for no proper reasons. At the same time there are some other banks where overdues are there. I was told that a Bank in Tenkasi has overdues, but it has not been superseded. But the bank which is functioning very effectively has been superseded.

THE HON. THIRU Si. Pa. ADITANAR: Regarding the Tenkasi Bank what happened is this. As soon as the notice was given, the overdues were brought down within the limits. The limit is 15 per cent and regarding the Tiruchendur Bank, the President died.

THIRU R. PONNAPPA NADAR: May I put one question to the Hon. Minister? Regarding Tenkasi Bank was any staff deputed to collect the overdues? Did the Joint Registrar go over there? Did he come there and did he just ask the subordinates to collect the overdues? All these things I will be able to put.........

THE HON. THIRU Si. Pa. ADITANAR: I am glad to say that the Bank is now run by officials. With regard to the attitude to help the public and to help the bank, whenever the Banks are in difficulties, they help.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: We are very happy that the Officers are helping the public and the bank. But we are afraid in doing so they will help the Government out of the way. They should not do that. They are not there to collect the overdues. Because you are interested in the Tenkasi Bank, you have sent the officials to that Bank. But you have not sent them to some other banks. That is our grievance. Co-operative department should be above party politics. Only then it will be a healthy practice and helpful to the people. Otherwise, it will become a tool in the Government's hands and it can never bring about good policies.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : I have asked the hon. Member to point out any single case of any Bank anywhere whose committee had been superseded while it did not have the overdues beyond the limit prescribed by the Reserve Bank. I say that we do help the Banks. The Officers are there for that purpose. They help not only the Tenkasi Bank. They also help several other Banks to bring down their overdues so that they can get the money from the State level Bank. The State level Bank can get the money from the Reserve Bank and credit channel can run smoothly.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** நான் ஏற்கனவே சொல்லி யிருக்கிறேன். இந்தச் சட்டத்திலே எங்கெங்கே வளைவு நெளிவுகள் இருக்கின்றனவோ அவற்றை எல்லாம் பயன்படுத்தி பாரபட்சத் தோடு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. நாங்கள் குறைகள் சொல்லலாம். அப்படிப்பட்ட குறைகள் இல்லாமல் எப்படிச் செயல் படுவது என்று நடவடிக்கை எடுப்பதுதான் வரவேற்கத்தக்கது என்று கூறிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக வரும்போது, வேளாண்மைத் துறையில் அதிக அக்கறை காட்டியுள்ள அமைச்சர் அவர்கள் நகர்புறத்திலும் சற்று அதிக அக்கறை காட்ட வேண்டும். இப்போது ஹவுஸ் பில்டிங் சொசைடியில் ரூ. 20,000 வரை கடன் கொடுக்கிறார்கள். தற்போதுள்ள விலைவாசியில் அந்தப் பணம் போதாது. குறைந்தது ரூ. 30,000-மாவது கொடுக்கவேண்டும். ரிப்பேருக்கு என்று ரூ. 10,000 தான் கொடுக்கிறார்கள். இதையும் சற்று உயர்த்த வேண்டும். வேளாண்மைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக் கிறீர்கள். ஆனால் அதே சமயத்தில் மனிதர்களுக்கு வீடும் அவசியம் தான். வேளாண்மைத் துறையில் இருப்பவர்களுக்கு தனி நபர் ஜாமீன் பேரில் கடன் கொடுக்கப்படுகிறது. அதேபோல் நகர் புறத்தில் இருக்கும் மக்களுக்கும் தனி நபர் ஜாமீனில் கடன் கொடுக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பல நடுத்தர குடும்பங்கள் திடீரென்று கல்லூரிக்கு ஸ்பெஷல் பீஸ் கட்டவேண்டுமென்று சொன்னால், உடனடியாக அவர்களுக்கு பணம் தேவைப்படுகிறது. ஆனால் அவர்களுக்கு அது கிடைப்பது இல்லை. எப்படி விவசாயிகளுக்கு தனி நபர் ஜாமீன் பேரில் ரூ. 1,000 வரை கொடுக்கிறார்களோ, அதே போல் நகர்ப்புறத்தில் பணியாற்றக்கூடிய நடுத்தர மக்களுக்கும், அவசியப்பட்டால் அதற்கு கீழே இருக்கும் லோயர் மிடில் கிளாசுக்கும், கடன் கொடுக்க முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டு இந்தக் கூட்டுறவுத் துறை மான்யத்தின் மீது கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** 20 நிமிடங்கள் பேசி யிருக்கிறீர்கள்.

**திரு. கு. காமாட்சி :** ஆன் எ பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன்.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. பி. எஸ். மணியன்.

THIRU R. PONNAPPA NADAR : Nobody is in possession of the House.

MR. DEPUTY SPEAKER : Thiru P. S. Manian . . . . .

**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கூட்டுறவு மான்யத்தினை வரவேற்று ஒருசில கருத்துக்களை நான் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக் கிறேன்.

நம்முடைய அரசு கூட்டுறவுத் துறையிலே பல அதிசயமான சாதனைகளை எல்லாம் இன்றைக்கு செய்து கொண்டு இருக்கிறது. சில தினங்களுக்கு முன்னாலே கூட நமது கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் நமது தமிழக அரசு 'அற்புத விளக்கு' என்று வர்ணித்து, நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்களை 'அலாவுதீன்' என்று வர்ணித்து இருந்தார்கள். அப்படி அதிசய மான அளவுக்கு நம்முடைய அரசு கூட்டுறவுத் துறையிலே பசுமைப்புரட்சியை ஏற்படுத்தி பல அதிசயமான சாதனைகளை தொடர்ந்து செய்து வருகிறது.

நம்முடைய உறுப்பினர் திருமதி அனந்தநாயகி குறிப்பிடும் போது கூட்டுறவுத் துறை சிலருடைய குடும்பச் சொத்தாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். பல வருஷங்களாக, 20 ஆண்டுகளுக்கு மேலாக சிலருடைய குடும்பச் சொத்துக்களாக இருந்த கூட்டுறவு வங்கிகளைத்தான் இன்று குடும்ப சொத்தாக இல்லாமல் புதிய விறுவிறுப்பு, புதிய தலைவர்களை உருவாக்கி பல்வேறு பணிகளைச் செய்து, பல்வேறு வங்கிகளை கூட்டுறவுத் துறையில் ஏற்படுத்தி அதை புதிய தலைவர்களின் கையில் ஒப்படைக்கக்கூடிய வகையில் சட்டத்தின் துணைகொண்டு செய்து இருக்கிறார்கள் என்று சொன்னால் மிகையாகாது என்று கருது கிறேன்.

சிறு விவசாயிகளுக்கு இறைவை நீர்ப்பாசன சங்கங்கள் 1,399-ஐ நம்முடைய அரசு உருவாக்கியிருக்கிறது. கிராமப் புறங்களில் எண்ணெய் உற்பத்தி செய்யும் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தி இருக்கிறது. வட்டத்திற்கு ஒன்றாக நிலவள வங்கிகள் நாடு முழுவதும் உருவாக்கக்கூடிய திட்டத்தை வெகுவேகமாகச் செய்வதிலே ஈடுபட்டு இருக்கிறது. விவசாயிகளுக்கு நிலவள வங்கிகளின் மூலமாக கடன் வழங்கச் செய்வதற்கு உலக வங்கி யிலிருந்து 26 கோடி ரூபாய் கடனைப் பெற்று இருக்கிறது. இதை யெல்லாம் இந்தக் கூட்டுறவுத் துறை மூலமாக தமிழக அரசு செய்து இருக்கக்கூடிய மகத்தான, அதிசயமான செய்தி என்று சொன்னால் தவறாகாது என்று கருதுகிறேன்.

[திரு. பி. எஸ். மணியன்] [1971 ஜூலை 20

இவ்வளவு அதிகமாக காரியங்களைச் செய்து, பசுமைப் புரட்சியை வெகு வேகமாக கூட்டுறவுத் துறை மூலமாக உருவாக்கி இருந்தும் கூட இந்தத் துறையின் சாதனைகள் அதிகமாக வெளியிலே தெரிவது இல்லை. கிராமப்புறங்களில் கூட்டுறவுத் துறை செய்துவரக்கூடிய நல்ல பல காரியங்களை விளம்பரப்படுத்தும் வகையில், செய்திப் படங்களில் கொண்டு வந்து, ஒவ்வொரு கிராமத்திலும் போட்டுக் காட்ட வேண்டும் என்றும், அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், இந்த இலாகா மூலம் துண்டு நோட்டீஸ்கள் வெளியிட்டு, கிராமப்புறங்களில் விவசாய மக்களுக்கு போஸ்டர்கள் மூலமும் விளம்பரம் செய்ய வேண்டியது அவசியமாக இருக்கிறது. நம்முடைய அரசு இந்த 4, 5 ஆண்டுகாலமாக நல்ல காரியங்களைச் செய்துவருகிறது. அதே நேரத்தில் சில சீர்திருத்தங்களையும் செய்ய வேண்டும் என்று பணிவோடு வேண்டிக் கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையில் இயக்குநராக வா வோட்டு மூலம் வருகிறார்கள். தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆனால் மூன்றில் ஒரு பங்கு சீட்டுக் குலுக்கிப் போட்டு பதவியிலிருந்து விலகவேண்டிய நிலை இருக்கிறது. இப்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் சீட்டுக் குலுக்கிப் போட்டு வெளியேறவேண்டும் என்று இருக்கும் நிலை ஜனநாயகத்திற்கு முறையாக இருக்காது என்கிற என் கருத்தைத் தெரிவிக்கிறேன். ஆகவே, இந்த முறையை மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதில் விருப்பம் உள்ளவனாக இருக்கிறேன். இன்றைக்கு இருக்கும் முறைப்படி மூன்று ஆண்டுகள் தான் பதவிக்காலம் என்று இருக்கிறது. கூட்டுறவுத் துறையில் அனுபவம் பெற்றவர்கள் குறைந்தது 5 ஆண்டுகளாவது அது இருக்கவேண்டும் என்கிறார்கள். ஆகவே, இந்த மூன்று ஆண்டு என்பதை ஐந்து ஆண்டுகளாக மாற்றியமைக்க வேண்டும் என்ற என்னுடைய வேண்டுகோளையும் தெரிவிக்க விரும்புகிறேன். செய்யும் நல்ல காரியங்களை இன்னும் நல்ல முறையில் செய்ய வேண்டும் என்கிற வேண்டுகோளையும் அமைச்சர் முன் வைக்க விரும்புகிறேன்.

கூட்டுறவுத் துறையில் பல துறைகள் இருக்கின்றன. கூட்டுறவு வங்கிகள், நிலவள வங்கிகள், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள், கூட்டுறவு நூற்பாலைகள் இப்படி, இன்னும் பால்பண்ணை என்று வெவ்வேறு நிறுவனங்கள் இருக்கின்றன. இவைகளிலெல்லாம், வேறு வேறு இலாகாக்களைச் சேர்ந்தவர்கள் அதிகாரிகளாக இருக்கிறார்கள். இந்த நிலையை மாற்றி, மாநில அளவிலிருந்து, வட்டாரம் வரையில் அந்த அந்தத் துறையில் பயிற்சி பெற்றவர்களை அந்த அந்தப் பணிக்கு அமர்த்த வேண்டும். நூற்பாலை என்றால் நூற்பாலையில் ஸ்பெஷலைஸ் செய்து இருக்க வேண்டும். அப்படியே கூட்டுறவு சர்க்கரை ஆலையில் என்றால், அந்த வகையில் நிபுணராக இருக்க வேண்டும். தொடர்ந்து பணியாற்றி அனுபவம்



1971 ஜூலை 20] [திரு. பி. எஸ். மணியன்]

பெற்றிருக்கவேண்டும். அந்த வகையில் ஒரு 'காமன் அத்திட்டத்திற்கு 1971–72-ல் ரூ. 65.5 கோடி அளவு அரசு நிதி காரியங்களைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**பசுமைப் புரட்சிக்கு முக்கிய ஆதாரம் பாசனக் கடன் திட்டம்.** அத்திட்டத்திற்கு 1971–72-ல் ரூ. 66.5 கோடி அளவு அரசு நிதி ஒதுக்கியிருப்பது வரவேற்கத்தக்க ஒன்று. நான்காம் திட்டம் முடிவதற்குள்ளாக 75 கோடியாக உயர்த்தப்படும் என்று கூறியிருப்பதும் வரவேற்கத்தக்கது. இந்தத் திட்டத்தை அமுல் நடத்தும் பொறுப்பு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளிடம் இருக்கிறது. மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கும், விவசாயக் கடன் சங்கத்திற்கும் இடையே, கூட்டுறவு மேற்பார்வை யூனியன்கள் என்ற அமைப்பு இருக்கிறது. விவசாயக் கடன் சங்கத்திலிருந்து மத்திய வங்கிக்கு மனுக்களை அனுப்பும்போது, இடையிலே காலத்தை விணடிக்கும் ஒரு அமைப்பாகத்தான் இருக்கிறது இந்த கூட்டுறவு மேற்பார்வை யூனியன் என்பது. ஆகவே, இதைக் கலைத்தெறிய அரசு ஆலோசிக்க வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கூட்டுறவுத் துறை வங்கிகள் இன்றைக்கு வர்த்தகத் துறை வங்கிகளோடு போட்டிபோட வேண்டிய நிலையில் இருக்கின்றன. வர்த்தகத் துறை வங்கியை இவர்களால் சமாளிக்க முடியவில்லை. நம்முடைய அரசில் மின்சாரத் துறை, அறநிலையத் துறை போன்ற இதரத் துறைகளில் கூட்டுறவு வங்கிகளில்தான் கணக்கு வைத்துக் கொள்ளவேண்டும் என்ற அளவில் சட்டத்தைத் திருத்தி அமைக்க வேண்டும் என்று மிகவும் எதிர்பார்க்கிறேன். மகாராஷ்டிரா மாநிலத்தில் ஜில்லா பரிஷத் என்று மாவட்ட ஆட்சி அமைப்பு இருக்கிறது. அதில் அந்த முறையில், கூட்டுறவு வங்கிகளில் கணக்குகளை வைக்க வேண்டும் என்று ஆணைகள் பிறப்பித்திருக்கிறார்கள். அந்த வகையில் நாமும் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே டெபாசிட் தொகைகளை அதிகரிக்க வசதி செய்து தரப்படவேண்டும். கிராமப்புறங்களில் மானியம் கொடுப்பது வரவேற்கத்தக்கது. ஓவர்-டிராப்ட் கொடுப்பதில் நம் அரசு ரூ. 5,000 வரைக்கும் வைத்திருக்கிறது. வர்த்தக வங்கிகளோடு போட்டி போட வேண்டியதாக இருப்பதால், இந்த லிமிட்டை ரூ. 10,000 என்று அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும்.

அதேபோல், டெபாஸிட் இன்ஷூரன்ஸ் முறையை அமுல்படுத்த அரசு தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதற்காகச் சட்டத்தைத் திருத்தியமைக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன்.

இன்னொரு சிக்கல் இருக்கிறது. கிராமப்புறங்களில் அக்ரிகல்சுரல் கிரெடிட் சொஸைடி இருக்கிறது. நகர்ப்புற வங்கிகள், அர்பன் பாங்க்ஸ் இருக்கின்றன. விவசாயக் கடன் சங்கத்தின் உறுப்பினராக இருப்பவர், நகர்ப்புற வங்கியில் உறுப்பினராக இருக்க முடியவில்லை. ஒருவர் தன்னுடைய நிலத்தை வைத்து,

விவசாயத்திற்குக் கடன் வாங்கலாம், வீட்டை அடமானம் வைத்து வேறு காரியத்திற்கு கடன் வாங்கலாம். ஆனால் ஒரு வங்கியில் கடன் இருந்தால் இன்னொரு வங்கியில் கடன் கிடையாது என்று சட்டம் இருக்கிறது. இது அடிப்படை உரிமையைப் பாதிக்கிறது. இரண்டு வங்கிகளிலும் உறுப்பினர்களாக இருக்க உரிமை இருக்க வேண்டும். நம்முடைய அரசு அந்த வகையில் வழிவகை செய்து கொடுக்க வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

மதுரையில் சூப்பர் மார்க்கெட் இருக்கிறது. அது லாபத்தில் ஓடவில்லை என்று தெரிகிறது. அதற்குக் காரணம் என்னவென்றால், அந்த சூப்பர் மார்க்கெட் மதுரையில் ஒதுக்குப்புறமாக இருக்கிறது. மத்திய வங்கிக் கட்டடத்தில் இருக்கிறது. அதனால் அங்கே சாதாரண மக்கள் போகமுடியவில்லை. மதுரையில் ஒரு மத்திய இடத்திற்கு அதை மாற்றி வைக்க வேண்டும், அதற்கான காரியங்களைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்த மானியக் கோரிக்கைகளை மனப்பூர்வமாக ஆதரித்து, என் உரையை முடிக்கிறேன்.

* திரு. என். மருதாசலம் : துணைத் தலைவர் அவர்களே, இந்த கதர், கிராமத் தொழில் பற்றிய மானியத்தின் மேல் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு கதர் தொழில் ரொம்ப க்ஷீணித்து வருகிறது. கதரானது இன்றைக்கு முன்புபோல் கிராமங்களில் குடிசைத் தொழிலாக இருக்கவில்லை. கிராமங்களில் அம்பர் சர்க்காவில் நூல் நூற்று, சிட்டங்களை கடையில் கொடுத்து, ஊதியம் பெற்று வந்தார்கள். ஆனால் இன்றைக்கு கதரானது ரொம்ப க்ஷீணித்து விட்டிருக்கிறது. அதே சமயத்தில், இன்றைக்கு 250 சேல்ஸ் டெப்போக்கள் இருக்கின்றன. 300 உற்பத்தி சென்டர்கள் இருக்கின்றன. இந்த 250 சேல்ஸ் டெப்போக்கள் போதாது. அதிகப்படுத்த வேண்டும். கதர் வாரியத்தை விரிவு செய்தால் கைத் தொழில்கள் விரிவடைந்து, வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிவதற்கு உதவியாக இருக்கும். இதற்கு ரூ. 33 லட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். இதை இன்னும் அதிகப்படுத்தி, கதர் அதிகமாக உற்பத்தியாகி, மக்கள் க்ஷேமமாக இருப்பார்கள். அந்த முறையில் அதிகப்படுத்தி, ஊதியத்தையும் அதிகப்படுத்த வேண்டும்.

மவுண்ட் ரோட்டில் தையல் தொழில் வைத்திருந்தார்கள். அதில் 22 பேர்கள் இருந்தார்கள். அவர்களில் 13 பெண்கள், 9 ஆண்கள் இருந்தார்கள். இப்பொழுது அதை மூடிவிட்டதால், அவர்கள் தெருவிலே நிற்கக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. தையல் தொழிலில் இருந்தவர்களுக்கு வேலைகொடுக்கவும், அவர்களுக்கு உதவி செய்யவும் ஆவன செய்ய வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.



அதே சமயத்தில் இன்றைக்கு இந்த வாரியத்தின் கீழே பல தொழில்கள் இருந்து வருகின்றன. உதாரணமாக வெல்லம் உற்பத்தி, கைக்குத்தல் அரிசி விற்பனை போன்று பல இருக்கின்றன. ஆனால் உண்மை என்ன என்று பார்த்தால் கைக்குத்தல் அரிசி என்பதே இன்றைக்கு நாட்டிலே மறைந்துவிட்டது என்று சொல்லலாம். எனவே, இந்தக் கதர் கைத்தொழில் வாரியத்தின் கீழ் என்னென்ன தொழில்கள் இருக்கின்றனவோ அவற்றையெல்லாம் அபிவிருத்தி செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டும்.

அடுத்து, இக்கூட்டுறவுத் துறையைப் பற்றிச் சொல்லும்போது, இதுவரையில் இதனால் நாட்டிலே ஏற்பட்ட அபிவிருத்திகள் என்னென்ன, இனி ஏற்பட இருக்கும் அபிவிருத்தித் திட்டங்கள் என்னென்ன என்பதைப்பற்றி இதிலே ஒன்றையும் குறிப்பிடவில்லை. அதிகமாகக் குறிப்பிடவில்லை என்றே சொல்லுகிறேன். கூட்டுறவுத்துறையில் விவசாயத்தைப்பற்றி மட்டுமே அதிகமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் சென்ற காலத்தில் கூட்டுறவால் விவசாயத்தில் எவ்வளவு அபிவிருத்தி காணப்பட்டது, மேலும் எந்த அளவிற்கு அபிவிருத்தி ஏற்பட இருக்கிறது என்பதையும் குறிப்பிட வேண்டும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இவற்றையெல்லாம் முறையாகக் குறிப்பிட்டு எதிர்காலத்திற்கான நடவடிக்கைகள் என்னென்ன என்பதைத் தெரிவித்தால்தான் நாட்டிலே முறையான சுபிட்சம் ஏற்படும்.

அடுத்து. முன்பு கதர் வாரியத்தில் ஸ்ட்ரைக் செய்தார்கள். ஸ்ட்ரைக்கில் ஈடுபட்ட பலரும் மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு விட்டார்கள் என்றாலும் இன்னும் ஒரு சிலர் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படாமல் இருக்கின்றார்கள். அவர்களையும் மீண்டும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

எனவே மேற்சொன்ன யோசனைகளையெல்லாம் பரிசீலித்து ஆவன செய்தால்தான் கதர் மற்றும் கிராமக் கைத்தொழில் துறையில் நல்ல அபிவிருத்தி ஏற்படும் என்று சொல்லிக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

திரு. மு. பழனிசாமி : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத்துறை மானியக்கோரிக்கையை வரவேற்று ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களைவிட நமது தமிழகத்தில் கூட்டுறவுத் துறை மிகச் சிறப்பாக இயங்கி வருகின்றது என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றாகும். அந்த அளவிற்கு கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு நல்ல பல சட்டதிட்டங்களை அமல்படுத்தி இத்துறையானது மேன்மேலும் சிறந்த முறையில் இயங்குவதற்கான வகையில் பணியாற்றிக் கொண்டு வருகிறது.

[திரு. மு. பழனிசாமி] [1971 ஜூலை 20

நமது அரசு கூட்டுறவுத்துறைமூலம் இந்த நாட்டு மக்கள் எவ்வளவு நன்மைகளை அடையமுடியுமோ அந்த அளவிற்கு நன்மையடையத்தக்க அளவிற்குப் பல முறைகளை ஏற்படுத்திக் கொடுத்து இருக்கின்றார்கள். கிராமப்புற மக்களுக்கு இக்கூட்டுறவுத் துறையானது பெரும் அளவிற்குப் பயன் தரவேண்டும் என்ற வகையில் அநேகமாக ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒரு நில வள வங்கியை ஏற்படுத்திக் கொடுத்து விவசாயத்திற்குப் பெருமளவிற்கு உதவத்தக்க வகையில் பல ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கின்றன.

இப்படிச் செயல்பட்டு வரும் நில வள வங்கிகளைப்பற்றி இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக நில வள வங்கிகள்மூலம் விவசாயத்திற்கென ஒரு குறிப்பிட்ட காரியத்திற்கென கடன்கள் கொடுக்கப்படுகின்றன. அந்தப் பணி நிறைவேறியவுடன் கடன்களுக்கான, கெடுகாலத்தில் கொடுக்கப்பட்ட கடன்களுக்கான தவணைகளை வசூலிக்க முற்படுகிறார்கள். இதைவிடக் கொடுக்கப்பட்ட கடன்களினால் அந்த விவசாயி அதற்கான பலன்களை அடையும்தருவாயில் வெள்ளாமை கிடைத்துப் பலன் அடையும் நேரத்தில் தவணைகளைப்பெற ஆரம்பித்தால் நல்லதாக இருக்கும் என்றுமட்டும் இந்நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, என் பகுதியில், வெள்ளக்கோவில் பகுதி மூலனூரில் நல்ல முறையில் இப்படிப்பட்ட நிலவள வங்கிகள்மூலம் கடன் உதவிகளை அளித்து அப்பகுதியைச் செழிப்படையச் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை வணக்கமாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக இந்த கிராமக் கூட்டுறவு நாணயச்சங்கங்களைப் பற்றி இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்தக் கிராமக் கூட்டுறவு நாணயச் சங்கங்களில் எல்லாம் டைரக்டர்களாக 30, 40 வருஷ காலமாக செல்வாக்குடைய ஒரு சிலரே இருந்து வருகின்றார்கள்.

இந்த நிலைமை பல இடங்களிலே வெகுகாலமாக இருந்து வருகிறது. இந்த நிலை மாற வேண்டும் என்பதற்காக நமது மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்கூட அதற்கான பல சட்ட மாற்றங்களைச்செய்து, யார் வேண்டுமானாலும் அந்தப் பதவியை வகிக்கலாம் என்ற ஏற்பாட்டைச் செய்தார்கள். ஆனாலும் தேர்தல் முறையில் தேர்ந்தெடுப்பது என்று சொல்லும் போது, அப்படிப் பட்ட சங்கங்களிலே தலைவர்கள்தான் முன் நின்று தேர்தலை நடத்துகின்றார்கள். பல சந்தர்ப்பங்களிலே தலைவராக இருப்பவர், தேர்தலை நடத்தாமல், தானே தேர்தல் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாக ரெகார்டுகளைத் தயார் செய்துகொண்டு அவர்களே தலைவர்களாக இருந்து வருகின்றார்கள். எனவே, இப்படிப்பட்ட தேர்தல் நடைபெறும்போது கூட்டுறவுத்



1971 ஜூலை 20] [திரு. மு. பழனிசாமி]

துறையைச் சார்ந்த அதிகாரிகள் முன்னிலையில் தேர்தல் நடைபெற்றால் முறையாக இருக்கும். அதற்கான வகையில் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

(திரு. நா. வீராசாமி—தலைமை)

அடுத்து, கதர் உற்பத்தியைப் பொறுத்தமட்டில் வெள்ளக்கோவில் வட்டாரம்தான் முன்னணியில் இருக்கிறது. அப்படியிருக்கும் அந்தப் பகுதியில் கதர் உற்பத்தியிலுள்ளவர்களுக்கு கதர் வாரிய நிதியிலிருந்து வீடுகள் கட்டித்தரப்பட்டன. இப்போது கடந்த ஓரிரு ஆண்டுகளாக அந்த முறை நிறுத்தப்பட்டுவிட்டது. இப்போது மானியமாகவோ கடனாகவோ எதுவும் அவர்கள் வீடு கட்டிக்கொள்ளுவதற்குக் கொடுக்கப்படுவதில்லை. மீண்டும் பரிசீலனை செய்து இந்த உதவிகளை மறுபடியும் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, நமது கிராம நாணயச் சங்கங்களிலே வசூலிக்கப்படும் வட்டி விகிதம் ஒன்பது சதவீதமாகும். ஆனால் ரிசர்வ் பாங்கியில் அவர்கள் 4.5 சதவிகித வட்டி விதத்தில் கடன் வாங்குகின்றார்கள். மக்களுக்கு, விவசாயிகளுக்கு அதைக் கடனாகத் தரும்போது ஏறத்தாழ ஒன்பது சதவிகிதம் வட்டி என்று வசூலிக்கப்படுகிறது. இது மிகவும் அதிகமாகத் தோன்றுகிறது. இதனால் கடன் வாங்கும் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள். இதுபற்றிப் பரிசீலிக்க வேண்டும். மேலும் கடன் வாங்கும் விவசாயிகள் கடனைப் பைசல் செய்யும்போது கட்டியுள்ள பங்குத் தொகையை கடனுக்கு ஈடுசெய்து பைசல் செய்யமுடியாத நிலை இப்போது இருக்கிறது. மூன்று ஆண்டுகள் கழித்துத்தான் கட்டிய பங்கைத் திரும்பப்பெறலாம் அல்லது கடனுக்கு அட்ஜஸ்ட் செய்யலாம் என்று இருக்கிறது. இதனால் ஒரு அளவிற்குக் கடன் வாங்கும் விவசாயிகள் சற்றுக் கஷ்டத்திற்குள்ளாகின்றார்கள். எனவே கடன் தொகையில் இதைக் கழித்துக்கொண்டு கடனைப் பைசல் செய்ய வசதியைச்செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இதை வரவேற்று என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

*திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி: தலைவர் அவர்களே, நம் பேரவையில் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையை ஆதரித்து என் கருத்துக்களைச் சொல்ல அனுமதித்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கடந்த நான்காண்டு காலத்தில் தமிழகத்தில் கூட்டுறவுத்துறையில் நல்ல பல முன்னேற்றங்களைக்கண்டு தமிழக மக்கள் அனைவரும் இத்துறையை வரவேற்றுப் பாராட்டுகின்றார்கள் என்பதில் ஐயப்பாடு இல்லை. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் கூட்டுறவால் நல்ல பல முன்னேற்றங்களைக் கொண்டுவரவேண்டும்

என்ற நோக்கத்தோடு பல இடங்களில் கூட்டுறவுத்துறையில் நிலவள வங்கிகளைத் திறந்து வைத்து அவைகள் திறம்படச் செயலாற்றிக் கொண்டிருப்பதைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. ஏறத்தாழ ரூ. 5,88,01,700 ஒதுக்கியிருப்பது போதாது, அது பற்றாக் குறையாகவே இருக்கும் என்று கருதுகிறேன். மேலும் அதற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து மேலும் பல முன்னேற்றத் திட்டங்களை நிறைவேற்ற அரசு முன்வரவேண்டும் என்று இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தனி நபர்கள் ஜாமீன் கடன் வாங்குகின்ற முறை கிராமக் கூட்டுறவு நாணயச் சங்கங்களில் இருந்து வருகிறது. அதே முறையைக்கூட நிலவள வங்கியில் விஸ்தரிக்கலாம். சாதாரணமாக விவசாயி கிணற்றை ஆழப்படுத்துவது என்றால், ஓராயிரம் ரூபாயாவது உடனடியாக ஜாமீன் கடனாகக் கொடுக்கப்பட்டு, அந்தக் கிணற்றை ஆழப்படுத்தினால், நடப்பு ஆண்டிலேயே விவசாயப் பயிர்களுக்குத் தண்ணீர் வர வாய்ப்பு ஏற்படும் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நிலவள வங்கியில் கடன் கொடுப்பதில், நிலமதிப்பீடு செய்யும் அதிகாரிகள் ஐந்தாண்டு காலத்தில் சுற்றுப்புற வட்டாரத்தில் நிலம் என்ன விலைக்கு விற்றது என்று பத்திர அலுவலகத்திற்குச் சென்று கணக்கு எடுத்து அதில் 75 சதவிகிதம் கடன் கொடுக்கின்ற முறையை கையாண்டு வருகிறார்கள். கடந்த இரண்டு ஆண்டுக்காலமாக வருவாய்த் துறை நிலத்தின் மதிப்புக்களைப் பரிசீலனை செய்து பத்திர பதிவுத் துறைக்கு நிலமதிப்பீட்டு கைட் லைன் (Guide line) என்ற பட்டியல் ஒன்றை ரெவின்யூ இலாக்கா தாசில்தார் அவர்களால் பத்திரப் பதிவு அலுவலகத்திற்குத் தந்திருக்கிறது. ஆகவே நடப்பு ஆண்டில் கைட் லைன் ரேட்டை எடுத்து அதிலிருந்து 75 சதவிகிதம் கடனாகக் கொடுத்தால் நிச்சயமாக பல விவசாயிகள் சுலபமாகக் கடன் வாங்க வசதி ஏற்படும் என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, நிலவள வங்கியில் ஈடுகாட்டி வாங்கப்படும் கடன் முறையை எடுத்துக்கொண்டால், நிலத்தைக் கிரயம் எழுதிக் கொடுத்திருக்கும் நபர் மைனரையும் கட்டுப்படுத்தி எழுதியிருந்தால், கடன் கொடுக்கிறபோது மைனரின் பங்கைக் கழித்துவிட்டு, எழுதிக்கொடுத்தவனுக்கு நிலத்தில் என்ன உரிமையிருக்கிறதோ அதைக் கணக்கெடுத்து, அதில் 75 சதவீதம் கடனாகக் கொடுக்கிறார்கள். மைனரைக் கட்டுப்படுத்திவிட்ட பிறகு, மைனர் மகனுக்கு கார்டியனை தந்தை மைனரையும் கட்டுப்படுத்தி எழுதிக்கொடுக்க இந்து கோட் சட்டப்படி உரிமை இருக்கும்போது கூட்டுறவு நிலவள வங்கியில் அந்த முறை கையாளப்படவில்லை. நிலத்திற்கு உரியவர் மைனரையும் கட்டுப்படுத்தி எழுதிக் கொடுத்திருந்தால், பூரா சொத்தையும் ஈடுகாட்டும்போது, பூரா சொத்தின் மதிப்பையும் கணக்கில் எடுத்துக்கொண்டு நிலவள வங்கிகள் கடன் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.





அடுத்தபடியாக எங்களுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலும் இரண்டு ஆண்டுக் காலமாகத் தொடர்ச்சியாக வறட்சி நிலவி விவசாயம் பழுதடைந்து, எந்தவித விவசாயமும் இல்லாத நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே இன்றைக்கு அங்கேயிருக்கின்ற கூட்டுறவு நாணயச் சங்கங்களின் மூலமாகவும் நிலவள வங்கிகள் மூலமாகவும் வாங்கப்பட்டுள்ள கடன்களையும், மற்ற கடன் வசூலையும் ஒத்திவைத்திருப்பதுபோல் கூட்டுறவுத் துறையில் வாங்கப்பட்டுள்ள கடன்களையும் ஒத்திவைக்க வேண்டுமென்று பணிவோடு தொகுதியின் மக்கள் சார்பில் கேட்டுக் கொள்ளுகிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்தில் எடுத்துக் கூறி கூட்டுறவு வங்கித் தலைவர்களுக்கு எழுதினாலும், கூட்டுறவுத் துறையிலுள்ளவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையை கவனிக்காமல் கடனை வசூலிக்க நடவடிக்கை எடுக்கிறார்கள். நடப்பு ஆண்டில் எங்கள் தொகுதியில் ஏற்பட்டுள்ள வறட்சியின் காரணமாகக் கூட்டுறவு கடன்களை விவசாயிகளிடமிருந்து வசூலிப்பதை நிறுத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

எங்கள் பகுதியிலுள்ள பல கிராமங்கள் இனாம்தாரரிடத்திலிருந்து வந்ததை இப்போதுதான் நமது அரசு பட்டா கொடுக்க முனைந்திருக்கிறது. செட்டில்மெண்டு துறையால் ரப் (Rough) பட்டா கொடுக்கப்பட்டு வருகிறது. ஆகையால் விவசாயிகள் கிணறு வெட்டக் கடன் வாங்க வசதியற்ற நிலையிருக்கிறது. செட்டில்மெண்டுக்குப் பிறகு பைனல் பட்டா கொடுக்கப்படும் வரையில் ரப் பட்டாவை வைத்துக்கொண்டு கடன் வழங்கவேண்டுமென்று ஆணையிடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

**திரு. வி. கே. இராஜாப் பிள்ளை :** தலைவர் அவர்களே, இந்த அவையில் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய ஒரு உறுப்பினர் கூறினார், கூட்டுறவு என்பது சிலரின் உறவினர்களின் சொத்தாக இருக்கிறது; அல்லது கட்சிக் கண்ணோட்டத்தோடு செயல்படுகிறது என்று. ஆனால் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், இது என்றைக்கு உறவுக் கூட்டாக இருந்தது என்றால் கழக ஆட்சி வருவதற்கு முன்னால் உறவுக்கூட்டாக இருந்தது. உதாரணமாகப் பார்த்தால், என்னுடைய கன்னியாகுமரி மாவட்டத்தில் கோவாபரேடிவ் பாங்கு என்று ஒரு பாங்கு இருந்தது. இன்றும் இருக்கிறது. அது போலவே அங்கே ஒரு நில அடமான பாங்கு இருந்தது; இருக்கிறது. அதில் எல்லாம் நான் இதுவரை பார்த்தபோது, உறவினர்களே தலைவராகவும், நிர்வாக இயக்குநர்களாகவும் அன்றும் இருந்தார்கள்; இன்றைக்கும் இருந்து வருகிறார்கள். எதாவது போட்டி பூசல் ஏற்படுகிறது என்றால், அவர்களுக்குள்ளே பதவிக்கு ஏற்படுமே தவிர, பொதுமக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு அல்ல. அது மாத்திரமல்ல. அந்த பாங்கியிலிருந்து

[திரு. வி. கே. இராஜாப் பிள்ளை] [1971 ஜூலை 20

பயன் பெற்றுக்கொண்டு வந்தவர்கள் உறவினர்களும், அவர்களுடைய சொந்தக்காரர்களுமே தவிர, பொதுமக்கள் அல்ல. அந்த நிலைமையை இப்போது குறிப்பாகக் கழக அரசு பதவியேற்ற பிறகு நமது கூட்டுறவு அமைச்சர் அவர்கள், இப்போதிருக்கிற அமைச்சர் அவர்கள் பதவி ஏற்ற பிறகு, மாற்றி உண்மையிலேயே கூட்டுறவின் தத்துவம் எப்படியிருக்கவேண்டும் என்று கருதி அந்த முறையில் இப்போது செயல்பட்டுக்கொண்டு வருகிறதென்றால் அதை யாரும் மறுக்கமாட்டார்கள். ஏனென்று கேட்டால் இப்போதிருக்கின்ற மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் பேரறிஞர் அண்ணாவின் தத்துவத்தையும் கலைஞர் அவர்கள் இந்த அரசு எப்படி நடக்க வேண்டும், பாரபட்சமற்று நடக்கவேண்டும் என்று கருதுகிறார்களோ, அதையே கருத்தில்கொண்டு செயல்பட்டு வருகிறார்கள்.

உதாரணமாகப் பார்த்தால் இப்போது தமிழ்நாடு முழுவதும் பல பஞ்சாயத்து யூனியன்களில் நிலவள வங்கிகள் திறக்கப்பட்டிருக்கின்றன. நான் தலைவராக இருக்கிற தோவாளை பஞ்சாயத்து யூனியனில் ஒரு நிலவள வங்கி செயல்பட்டு வருகிறது. அதில் நானும் ஒரு நிர்வாக உறுப்பினர். தோவாளைப் பகுதி நிலவளம் நிறைந்தது. ஒரு சிறு பகுதி மாத்திரமே தண்ணீர் வசதியற்றிருக்கிறது. அந்தப் பகுதிக்கு 7 லட்ச ரூபாய் நாங்கள் கடன் கொடுத்து பூமிக்கடியில் இருக்கின்ற தண்ணீரை மேலே கொண்டு வந்து, அந்தப் பகுதி இப்போது செழித்திருக்கிறது.

இப்போது அங்கே கடன் கொடுக்க இடம் இல்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இதற்கு முன்பு நில அடமான வங்கியாக இருந்தபோது இவற்றை எல்லா இடங்களிலும் செய்ய முடியவில்லை. பசுமைப் புரட்சியை ஏற்படுத்தி நமது கூட்டுறவு அமைச்சர் அவர்கள் இந்த மாநிலத்தில் வெள்ளாமையைப் பெருக்கியிருப்பதை நாம் பாராட்ட வேண்டுமே தவிர, எங்கோ ஒரு குறையிருக்கிறது என்று சொல்லி, அதனை மாத்திரம் பிடித்துக்கொண்டு சொல்லுவது சரியல்ல. முன்புகூடப் பசுமைப் புரட்சி என்றால் பூமிக்கு அடியில் தண்ணீர் இருக்கிறது, இதை அமைச்சர் கண்டு பிடித்துவிட்டாராம் என்று கேலி பேசியிருக்கிறார்கள்.

அப்போது நான்கூட பதிலுக்கு ஒரு உதாரணத்தைக் கூறியிருக்கிறேன். சந்திரன் இருக்கிறது என்று ரஷ்யர்களோ, அமெரிக்கர்களோ சொன்னால் அது புரட்சி அல்ல, அதில் எங்கே எப்படிப் போய் இறங்குவது, எப்படி மண்ணைக் கொண்டுவருவது என்று ஆராய்ந்து கண்டுபிடித்திருக்கிறார்களே, அதுபோன்றது தான் பசுமைப் புரட்சி. பூமிக்கு அடியில் இருக்கிற நீரை மேலே கொண்டு வந்து அதை மக்களுக்கும், விவசாயத்திற்கும் பயன்படுத்தியிருக்கிறார்களே அதுதான் பசுமைப் புரட்சி என்று சொல்லியிருக்கிறேன். அந்த முறையில் முன்பு கழக ஆட்சி வருவதற்கு முன்னால் இப்படிப்பட்ட நிலைமை இல்லாமல் இருந்ததை மாற்றி, இன்று உணவுத் துறையில் தமிழகத்தில்



1971 ஜூலை 20] [திரு. வி. கே. இராஜாப் பிள்ளை]

தன்னிறைவு பெறச் செய்திருக்கிறார்களே, அதுதான் பசுமைப் புரட்சி. அந்த முறையில் பார்க்கும்போது மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு கருத்து கூறப்பட்டது. ஏதோ ஒரு மார்கெட்டிங் சொசைடியை சூபர் சீட் செய்துவிட்டார்கள். உண்மையிலேயே சொல்லுகிறேன், அந்த மார்க்கெட்டிங் சொசைடியை சூபர்சீட் செய்யப் பல காரணம் உண்டு. நோட்டீசில் கூறப்பட்டிருந்த காரணங்களோ, வேறு. அதில் 23,000 ரூபாய்க்குக் கணக்கு கிடையாது. அது நோட்டீசில் கூறப்படவில்லை. இதை அமைச்சர் அவர்கள் கவனித்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நோட்டீஸ் கொடுத்த பின்பு, டைரக்டர்கள் மார்க்கெட்டிங் சொசைடி செலவில் அச்சடித்து சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். நோட்டீஸ் கொடுத்த பின்பும் மார்கெட்டிங் சொசைடி பணத்தை இப்படி வீணாக்குகிறார்கள் என்றால், அந்த சொசைடி எப்படி நடைபெற்றிருக்கும் என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை. அந்த சொசைடியில் எங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் டைரக்டர்களாக இருக்கிறார்கள். கட்சிக் கண்ணோட்டத்தோடு பார்க்காமல் ஊழல் இருக்கிறது என்பதற்காக நோட்டீஸ் கொடுக்கப்பட்டு கலைக்கப்பட்டதே தவிர வேறில்லை என்று கூறி முடிக்கிறேன்.

திரு. எஸ். நல்லசாமி : தலைவர் அவர்களே, கூட்டுறவு மானியக் கோரிக்கையின்மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகின்றேன்.

கூட்டுறவுத் துறையில் இயங்கிக்கொண்டிருக்கக்கூடிய முறைகள் மூன்று நான்கு விதமாக இருக்கின்றன. அதில் என்னைப் பொறுத்தவரையிலும் விவசாயத்தைப்பற்றி ஓரளவிற்குத் தெரிந்தவன். விவசாயத்திற்கு அளித்திருக்கக்கூடிய தொகையை இந்த மானியத்தில் இன்னும் அதிகப்படுத்தினால்கூட பரவாயில்லை. ஏனென்றால் நாட்டில் தேசீய உடமையாக்க வேண்டுமென்று பரவலாக எண்ணம் இருக்கிறது. அந்த அடிப்படையில் கூட்டுறவு முறையில் விவசாயப் பண்ணைகளை விருத்தி செய்வது தேசீய உடமையாக்கப்படும் முறையில் பொதுவாக இருக்கக்கூடிய சுரண்டப்படாத நிலையில் இருக்கிற அமைப்பாகும்.

அதேமாதிரிதான் புகளூர், ஈரோடு, கரூர் வட்டத்தில் இருக்கக்கூடிய தமிழ்நாட்டுக்கு எடுத்துக்காட்டாக இருக்கக்கூடிய நதிநீர் பாசனத் திட்டம். அது அண்ணா காலத்தில் ஏற்பட்டது. அதை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு, சுமார் 4,000 ஏக்கர் சாகுபடியாகும்படியான தமிழ்நாட்டுக்கு முன்னோடியாக இருக்கக்கூடிய நதிநீர் திட்டமாக செய்யப்பட்டிருக்கிறது. அதிலே 14 யூனிட்டுகள் உள்ளன. அந்தப் பதினான்கு யூனிட்டுகளிலும் நிலத்திற்கு அடியில் ஐந்து மைல், ஆறு மைல் தண்ணீர் போய் உயர் மட்டத்தில் ஏறித் தண்ணீர் பாயக்கூடிய திட்டம். இந்தத் திட்டத்திற்கு ஒரு ஏக்கராவுக்கு நாலாயிரம் ஆகிறது. அதை நமது அரசு ஆய்வுக்கு

எடுத்து, பரிசீலனை செய்து இப்போது கையெழுத்தாகப் போகிறது. அந்த வட்டார விவசாயிகளுக்குத் திருப்பி அந்தப் பணத்தைக் கொடுக்கும் சக்தி இருக்கிறதா, அந்த நிலத்தின் தன்மை என்ன என்பதை எல்லாம் நேரில் கண்டறிய வந்திருந்தார்கள். ஒரு அடி ஆழம் மண்ணைத் தோண்டியும் பார்த்தார்கள். உடம்பில் சட்டையில்லாமல் உழைக்கின்ற அந்த விவசாயிகளின் சக்தி என்ன என்பதை அறியக் கிராமத்தில் போய் அவர்களுடன் பேசினார்கள். கரூர் வட்டத்தில் இருக்கிற விவசாயிகள் அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதைப்போல மூவாயிரத்தில் இருந்து ஐந்தாயிரம்வரை வருமானம் சம்பாதிக்கக்கூடியவர்கள். சாதாரணமாக 3 ஏக்கர் நிலம் வைத்திருக்கக்கூடியவர்கள் உயர்தர வாழ்க்கை வாழக்கூடியவர்கள் பஞ்சாப் விவசாயிகளைப்போல் சக்தி படைத்தவர்கள் என்கிற திருப்தி அடைந்த பிறகு, அந்தத் திட்டத்தை சாங்ஷன் செய்ய இருக்கிறார்கள்.

அடுத்து, கூட்டுறவு முறையில் கரூர் வட்டத்தில் இருக்கக்கூடிய கைநெசவாளர்கள் அனைவரையும் கொண்டுவந்தாக வேண்டும். கூட்டுறவுத் துறையில் இருப்பவர்களுக்கும், தனிப்பட்ட முறையில் இருப்பவர்களுக்கும் உள்ள வித்தியாசம் மலைக்கும் மடுவுக்குமாக இருக்கிறது. கூட்டுறவுத் துறையில் இருப்பவர்களுக்கு வருஷம் பூராவும் நிரந்தர வேலையிருக்கிறது. ஒரு ரூபாய்க்கு நான்கு அணா கிடைக்கிறது. இந்தியாவில் இருக்கக்கூடிய கைநெசவாளர்களில் நான்கில் ஒரு பங்கு தமிழகத்தில் இருக்கிறார்கள். அதுவும் கைநெசவுத் தொழிலுக்கு மையமாக அமைந்திருக்கிற கரூர் வட்டத்தில் அதிகமான கூட்டுறவு சொசைடிகளை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டு, பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ந. நாச்சியப்பன் :** தலைவர் அவர்களே, கூட்டுறவுத்துறை மானியக் கோரிக்கையின்மீது அமைச்சர் அவர்கள் கோரிய தொகையை ஆதரித்து எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

ஒரு காலத்தில் கூட்டுறவுத்துறை என்பது பெரிய வசதி படைத்தவர்களுடைய கையில் இருந்தது. அந்த நிலைமை மாறி சாதாரண மக்கள் கையில் கூட்டுறவுத்துறை வருவதற்கு நமது அரசு சீரிய முயற்சிகளை எடுத்துக்கொண்டது. அதன் காரணத்தினால்தான் சாதாரண மக்கள் அத்தனை பேர்களுக்கும் பயன்படக்கூடிய ஒரு துறையாக அது இன்றைய தினம் செயல்பட்டு வருகிறது என்பதை இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எடுத்துச் சொன்னார்கள்.

கடன் பெறுவதற்கு நில அடமான பாங்குகள் எங்கே இருக்கின்றன என்று தெரியாத நிலைமையில் ஏழை விவசாயிகள் எல்லாம் இருந்த காலமும் உண்டு. அந்த நிலையை மாற்றி இன்றைய தினம் சாதாரண சிறிய விவசாயிகள்கூட கூட்டுறவுத் துறையில் கடன்பெறுவதற்கு உரிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த தனிப்பெருமை நம் அரசுக்குத்தான் உண்டு என்றால் மிகையாகாது.



இங்கே பேசிய அங்கத்தினர் ஒருவர், கூட்டுறவு வங்கியில் ஐந்தாயிரம் ரூபாய் கடன்பெற இரண்டாயிரம் செலவழிக்க வேண்டியிருக்கிறது என்று சொன்னார்கள். அதுபோல நடைமுறையில் இல்லை என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 250 ரூபாய் பங்குத்தொகை செலுத்துகிறார்கள். அடுத்து பல கட்டணங்கள் என்ற முறையில் வசூலிக்கப்படுவது ரூ. 50 என்றாலும் மொத்தமாக 300 ரூபாய்க்குள் அவர்கள் கடன் பெறுகிற நிலைதான் இருக்கிறது. அதுவும் பங்குத்தொகை ரூ. 250 கடனில் பின்னால் ஈடுசெய்து கொள்ளப்படுகிறது. எனவே அதிகச் செலவு இல்லாமல் இன்றைக்கு விவசாயிகளுக்குக் கடன் கிடைக்கிறது என்றால் அது கூட்டுறவு வங்கிகளில்தான் என்று சொல்ல விரும்புகிறேன். இதை விவசாயிகள் பெரிதும் வரவேற்கிறார்கள்.

முன்னாலே கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற 30 ஆண்டு வில்லங்க சர்டிபிகேட் கொடுக்கவேண்டுமென்று இருந்தது. அதை மாற்றி 13 வருட வில்லங்க சர்டிபிகேட் போதும் என்று செய்தது நம் அரசுதான். இந்த முறையில் விவசாயிகளுக்கு நன்மை செய்ய மேலும் சில நடைமுறைச் சிக்கல்களை மாற்றி அமைத்தால் நல்லது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக, புதியதாக கிணறு வெட்டவேண்டுமென்றோ, ஆழப்படுத்த வேண்டுமென்றோ கடன் பெறுவதற்கு முதலில் வில்லங்க சர்டிபிகேட் பெற வேண்டும். பின்னர் கூட்டுறவுப் பதிவாளர் நிலத்தை வந்து பார்வையிடுவார். அதன் பின்னர் சாங்ஷன் ஆகும். இதற்குள் இரண்டு மூன்று திங்கள் ஆகிவிடுகிறது. அப்படியின்றி புதுக்கிணறுகள் வெட்டவோ, ஆழப்படுத்தவோ என்றால் முதலில் நிலவள வங்கி மேலாளர் பார்வையிட்டுக் கடன் வழங்கலாம். பிறகு கூட்டுறவு உப பதிவாளர் வந்து நிலத்தைப் பார்வையிட்டு சாங்ஷன் செய்வது நல்லது.

அதுபோல கூட்டுறவு நிலவள வங்கி மகாசபை என்றால் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் வரவேண்டும் என்றிருக்கிறது. அதை மாற்றி 100 பேர்கள் வந்தால் போதும் என்பதாக ஒரு எண்ணிக்கையை நிர்ணயித்துவிடுவது நல்லது என்று தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

சிறிய விவசாயிகளுக்குக் கடன் தருகிற வகையில் சில ஒன்றியங்களில், எடுத்துக்காட்டாக, என்னுடைய சங்கராபுரம், ரிஷிவந்தியம் ஆகிய ஒன்றியங்களில் தாசில்தார் ஒருவர், பீல்டுமேன் 2 பேர் போட்டிருக்கிறார்கள். இவர்கள் சிறிய விவசாயிகளின் பட்டியலைத் தயாரித்து அனுப்புவதோடு சரி. இதனால் அரசுக்கு வீண் விரயம்தான். இதை மாற்றிக் கூட்டுறவுத் துறையிலேயே அதிகமான அதிகாரிகளைப் போட்டு அவர்களே விரைவாகக் கடன் வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

***திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்**: மாண்புமிகு சட்டப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் 1971–72-ம் ஆண்டுக்குப் பல துறைகளில் முன்னேற்றம் காண்பதற்காக 6 கோடி ரூபாய்க்கு மேலாகக் கொடுக்கப்பட்டுள்ள இந்த மானியத்தை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

குறிப்பாக இந்த நாட்டிலே 5 இலட்சத்திற்கு மேலாக உள்ள கைத்தறிகளில் ஓரளவு தறிகள் கூட்டுறவுத் துறையிலே இயங்கி, கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் நெசவாளர்களுக்கு வேண்டிய மூலதனத்தைக் கடனாகப் பெறுகின்றன. நெய்யப்படுகின்ற துணிகளை விற்பதற்கும் கூட்டுறவுச் சங்கம் வழிவகை செய்திருக்கிறது. விற்பனையாகாத காலத்தில், 'கைத்தறி வார விழா' போன்றவற்றை ஏற்படுத்தித் தள்ளுபடி போன்ற சலுகைகளையெல்லாம் அளித்து, நெசவாளர்களுக்குப் பேருதவி செய்து வருவதைக் கண்டு நான் இந்த அரசைப் பாராட்டுகிறேன்.

ஆனால் ஒன்றைமட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். கைத்தறி வார விழா என்று ஏற்பாடு செய்யும்போது அதில் ஒரு சில விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். கைத்தறி வார விழா என்று சொல்லிக் கொண்டு, அங்கே பண்ட பாத்திர சாமான்கள் விற்பனை செய்வதற்கு இடம் தருகிறார்கள். மற்ற சரக்குகளும் விற்கப்படுகின்றன. அதற்கு அடிப்படையான காரணம், விழாவை நடத்தக்கூடியவர்கள் வாடகையையே பிரதானமாகக் கருதுவதுதான். கைத்தறித் துணிக்குப் பதிலாக மில்துணிகளையும் விற்கிறார்கள். எப்படியாவது வாடகை கிடைத்தால் போதும் என்ற மனப்பான்மையில் இருக்கிறார்கள். இது சரியல்ல. ஒருவர் தன்னுடைய குடும்பத்தோடு கைத்தறி விழாவுக்கு 100 ரூபாய் எடுத்துக்கொண்டு போகிறார் என்றால், அங்கே இருக்கக்கூடிய பண்ட பாத்திர சாமான்களைப் பார்த்ததும் அதில் முப்பது நாற்பது ரூபாய்க்குச் சாமான்களை வாங்கிவிட்டு, மீதி ஐம்பது அறுபது ரூபாய்க்குத்தான் துணிகளை வாங்குவார். இந்த மாதிரிப் பிற கடைகளை அனுமதிப்பதன்மூலம் கைத்தறி விழாவின் அடிப்படை நோக்கம் ஈடேறாமல் போகிறது.

அடுத்தபடியாக, கைத்தறி வார விழாவில் தனியார் துறையில் ஈடுபட்டிருக்கிற நெசவாளர்களுக்கு ஒரு பக்கத்திலும், கூட்டுறவுத் துறையில் ஈடுபட்டிருக்கிற நெசவாளர்களுக்கு ஒரு பக்கத்திலும் இடம் ஒதுக்கித் தருகின்ற பாகுபாடுகளை சென்னை போன்ற நகரங்களிலும்கூடக் காட்டுகிறார்கள். இந்தப் பாகுபாடுகளையெல்லாம் அகற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் துறையில் கைத்தறித் தொழில் பாதியளவு தமிழகத்தில் இயங்கிக்கொண்டு வருகிறது. ஆகவே, இந்தத் தொழிலுக்குத் தமிழக அரசாங்கம் நல்ல முறையில் உதவி புரிந்து இதை வளர்க்க வேண்டும். இப்போது அரசாங்கம் கைத்தறியாளர்





நிதிக் கழகம் என்ற அமைப்பை ஏற்படுத்தி, அந்தக் கழகத்தின் மூலமாக நெசவாளர்களுக்கு ஏறக்குறைய 140 லட்சம் ரூபாய் வரையில் கடன் வழங்கி வந்திருக்கிறது. அப்படி வழங்கி வருகிற கடனுக்கு 9 சதவீதம் வட்டி என்று வாங்கப்படுகிறது. இதை கைத்தறி உற்பத்தியாளர்கள் தர முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். தனிப்பட்ட கைத்தறி உற்பத்தியாளர்கள் ஆதரவற்ற நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, இந்த வட்டி விகிதத்தை பாதியாகக் குறைத்து, அதாவது 4 சதவீத வட்டியாகக் குறைத்துக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சாயத் தொழிலைப்பற்றி ஓரிரு வார்த்தைகள். சாயத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு மூலதனம் குறைவாக இருக்கிறது. குறைவாக மூலதனம் உள்ளவர்கள் மார்க்கெட்டில் போய் வாங்கினால் தரம் குறைவானதாக வாங்கி வருகிறார்கள். ஒரே மருந்து, இரண்டு விலை. ஒரே மருந்தை 50 ரூபாய்க்கும் கொடுக்கிறார்கள். 40 ரூபாய்க்கும் கொடுக்கிறார்கள். கம்மியான விலையில் வாங்கிச் சாயம் போட்டால் துணி நயமாக இருப்பதில்லை. சாயம் சீக்கிரத்தில் மறைந்து விடுகிறது. இந்தச் சாய மருந்துகளை கூட்டுறவு சங்கத்தின்மூலம் வாங்க வழி செய்ய வேண்டும். தனிப்பட்டவர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைத்து, அந்தச் சங்கத்தின் மூலமாக வாங்கிப் பங்கு போட்டுக் கொள்ளலாம். இதற்கான வழி வகையை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

இந்தக் கைத்தறித் தொழிலில் லட்சக்கணக்கான மக்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். விவசாயத்திற்கு அடுத்தபடியாக இருப்பது கைத்தறித் தொழில்தான். இதற்கு ஒரு பாதுகாப்புக் கொடுக்க 'கைத்தறி வாரியம்' ஒன்றை ஏற்படுத்த வேண்டும். கைத்தறி தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் இன்றைக்கு செத்துச் செத்து மடிகிறார்கள். அவர்கள் எல்லாம் எந்தெந்த வகையில் கஷ்டப்படுகிறார்கள் என்று அறியவும் நிரந்தரமான பாதுகாப்பு அளிக்க என்ன செய்ய வேண்டும் என்கிற நிலைமைகளையெல்லாம் ஆராயவும் ஒரு கைத்தறி வாரியத்தை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. என். இராஜாங்கம்** : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, கூட்டுறவு மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.

இந்திய உப கண்டத்தில் மின்சாரத் துறையில் எப்படித் தமிழகம் முன்னணியில் இருக்கிறதோ அதேபோலக் கூட்டுறவுத் துறையிலும் தமிழ் நாடு முன்னணியில் நிற்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பசுமைப் புரட்சித் திட்டம் கூட்டுறவுத் துறையால் முக்கியத்துவம் பெற்றது. விவசாயிகள் கடன் பெறுவதற்கும், விவசாய வேலைகளுக்கான உரம், விதை போன்றவை வாங்குவதற்கும், மற்ற அனைத்திற்கும் ஒன்று சேர்ந்த முறையில் கூட்டுறவுத் துறை உதவி செய்து வருகிறது. விவசாயப் பெருவளர்ச்சிக்கு கூட்டுறவுத் துறைதான் காரணம் என்பதை நாம்

எல்லோரும் அறிவோம். கடந்த நான்கைந்து ஆண்டுகளில் நல்ல செல்வாக்கைப் பெற்று, விவசாயிகளுக்குப் பெருத்த உதவி செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாற்பது, ஐம்பது ஆண்டுகளாக ஒரு குடும்பத்திற்கே கட்டுப்பட்டு வந்த இந்தத் துறை இன்றைய தினம் ஏழை, எளிய, நடுத்தர மக்கள் பங்குகொண்டு நாட்டை நடத்திச் செல்ல வேண்டும், மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும், என்கிற அளவில் ஒரு நல்ல சந்தர்ப்பத்தை உண்டாக்கிக் கொடுத்த தமிழக அரசைப் பாராட்டுகிறேன். ஒரு குடும்பத்தில் ஒருவர் இருப்பார். அவருக்கு வேண்டியவர்கள் 50 பேர்கள் இருப்பார்கள். இந்தக் கூட்டுறவுத் துறையின் நன்மைகள் எல்லாம் இந்த ஐம்பது பேர்களுக்குத்தான் கிடைத்துக்கொண்டிருக்கும். அவர்களுக்குள்ளேதான் அந்தப் பணம் புழங்கிக்கொண்டிருக்கும் என்கிற நிலைமைகள் எல்லாம் மாறி, ஏழை மக்களுக்கு அதனுடைய சேவை கிடைக்கும்படி செய்ததற்கு இந்தத் தமிழக அரசை மனமாரப் பாராட்டுகிறேன். பரம்பரை பரம்பரையாக இந்தத் துறையை உபயோகித்து வந்தவர்கள், ‘ இது எல்லோர் கையிலும் போய்விட்டதே ’ என்ற வயிற்றெரிச்சலின் காரணமாகத்தான் இதைத் தூற்றுகிறார்கள். அதை நாம் எங்கும் சொல்வதற்கு அச்சப்படுவதில்லை.

என்னுடைய தொகுதியில், எனக்கு உலகம் தெரிந்த நாள்முதல் எனக்கு அரசியல் உணர்வு ஏற்பட்ட நாள்முதல் கூட்டுறவுத் துறை ஒரு குடும்பத்தினர் கையில்தான் இருந்து வந்தது. நாட்டில் ஏற்படும் நல்ல பலனைக் காண்பதற்குக் கூட்டுறவுத் துறை பெருத்த அளவில் உதவி செய்துவருகிறது. இந்தத் துறை நாளுக்குநாள் வளர வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். இந்த அரசும் விரும்பி, அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் தங்களாலான முயற்சிகளை எடுத்துக் கொள்கிறார்கள். அதற்கான பணிகளை மேலும் மேலும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றியைக் கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE : In support of the cut motion that I have moved in this House, I wish to offer a few remarks. I am very sorry to state that in the first speech of the Hon. Minister, he had stated that his introductory printed speech should go into the record of proceedings, without having mentioned anything concrete. The functioning of the co-operative department for the past one year is there. He has painted a grand picture on paper. But I expected him to make a concrete assessment of the functioning of the department. Let me say that the functioning of the department is far from satisfactory.

Much is made of consumer co-operative stores. There are 30 wholesales and 1,700 primary stores in our State. They are said to have a sales turn over of Rs. 40 crores. More than 50 per cent of them are making losses. Even the much-talked of Super



Markets are not very bright. The Santhanam Committee had said that their efficiency is at a low ebb and their working should be improved. The average stock-turn frequency which is 4 :1 is far below the norms of 12, prescribed by the I.L.O. Expert on Consumer Co-operation (Page 147 para 12 of Part I of Santhanam Committee Report) While this is the sorry state of affairs, the glib talk of the Minister in trying to extend the so-called ‘ Mini-super markets ’ is very strange. I do not know how far this experiment would succeed. That is one point which has to be taken note by Government.

I would also suggest a remedial measure. I will be very happy if the Government consider the remedial measure. How exactly you are going to improve the managerial system? Efficient management and efficient, and satisfactory distribution system is the only answer to this problem. I want the Government to concern itself as to how exactly it can do away with this particular thing.

Another important point that I want the Government to take note of, is inefficient departmental officers. We have appointed some Special Officers as managers of consumer co-operative societies. But who are the Special Officers? They are birds of passage. They come here and are posted there as a sort of penal punishment. Even one of the members of the ruling party or somebody, has mentioned about it. They stay there for a year or two as birds of passage and they go on like that. As a penal punishment for them, they are posted there. What is the net result? Colossal waste of monies. The solution for that would be to appoint officers who are managerially trained by private agencies and to organise a special cadre of well-trained managerial experts and to post them permanently to the consumer organisations. Such a cadre should be controlled by the non-officials of the Co-operative Department. I only hope and trust that the Government will take note of this suggestion.

Then again, I come to inefficient audit. That is a very important point and major cause of mismanagement. I had mentioned it in this House twice. We have a single entry system and double entry system of keeping accounts. I had mentioned that the snigle entry system will help the camouflage of serious defalcations and irregularities under the Head ‘ Adjusting Heads ’. I had mentioned it in this House and the Hon. Minister promised that it would be looked into, if I remember aright. I do not know what has happened. I do not know whether the double entry system has been introduced, what is the position ? Also you must adopt the up-to-date method of Cost Accounting, Margin Control, Stock Control, etc. I am sorry that even the Santhanam Committee Report had not made a mention of this. Even on the other day I had mentioned it. So, I had brought this particularly to the notice of the Hon. Minister so that he might do something. But nothing has happened so far.

I want to give another concrete suggestion which will go to improve the Department. We have one parent department of the Registrar of Co-operative Societies—Co-operative Department and they themselves happen to be the Audit Department also. In the Central Government we have got the Accountant General and Auditor General—independent agencies. Just like that we should have a separate Audit Department which directly comes under the Finance Ministry, so that any irregularity in the co-operative department will be dealt with by this independent department. Otherwise the department itself commits the mistake and the department arrogates to itself the task of becoming an auditor. This suggestion should be given a careful study by the Government. I hope and trust that the Government will give due consideration to this separation—something like separation of judiciary from that executive. This is very necessary and I would like this to be done. That would be a good idea.

Then, Sir, for Audit Rectification, a separate agency is needed. I have stated a number of times in this forum that the audit defects pointed out remain unrectified for years together. The audit points out some mistakes but then there is no agency to see that those misakes are rectified. What is the agency which follows up whether those defects have been rectified. There is no separate agency for that, so that both the officials and the non-officials connive and wink at these irregularities and audit lapses for years together and after the lapse of five or six years the trial of the Audit defects will be effaced and the whole file will be closed and the monies misappropriated will not come back to the co-operatives. That is the root trouble and this must be rectified. This is the *modus operandi* by which co-operative mismanagement flourishes, unchecked and unabated. It is very difficult to check it. It is like a Pandoraa's box. Take any Minister or the whole Cabinet, they cannot easily rectify it. So, I hope and trust that the Government will look into this.

I had mentioned in this House several times and raised several questions and supplementaries later on. I was asked to put a separate question. I had again put another question with regard to the functioning of the Tamil Nadu Co-operative Union and the consequent mismanagement. Here I give a glaring example. The Hon. Minister himself has stated on the floor of the House that in respect of this organization, a sum of Rs. 6,600 has been misappropriated and that it has not been possible to recover the money, because six years have lapsed. I gave the question actually in July 1967. It was answered in June 1971. I also want to point out a particular paragraph the Memo. of the District Co-operative Audit Officer, Madras. He has stated in his Memo. FAR. 259/61-62, dated 24th July 1963 as follows :

" 7 (*a*) The contractor had given revised rates in April 1961 for construction of additional storeys and the Architect has suggested to the Union to enter into revised agreement . . ."



Because the Chief Minister also is here. It will be beneficial for him to know how things are happening.

" This has not been implemented so far. In the interest of the Union the revised agreement should have been adopted in 1961 itself. "

In such fine words he has put it.

I do not know why he has couched it in such fine words, to please somebody. I do not know. But, normally if such a big mistake is committed, there are a number of instances where strong words have been used. Even for smaller mistakes very strong words have been used. But here a major mistake has been committed. The full economic and monetary significance of the Audit Defect is that due to mismanagement of funds, the union has lost over Rs. 3 lakhs. The original estimate was Rs. 3 lakhs, but later on the estimate was Rs. 6 lakhs. The loss would be to the tune of over Rs. 3 lakhs, the audit has pointed out because the cost of construction of the building has been inflated exorbitantly from Rs. 25 to 42 per square foot. I had mentioned it in this House on several occasions. I am not blaming this particular Ministry alone. This is from 1962 onwards. I am very frank about it and I do not want that it should look as if this particular Ministry has erred. I had pointed this out many a time. But nothing has been done. I wish to point out here, had the Department been watchful, this huge loss of Rs. 3 lakhs could have been averted. The net result is, a sum of Rs. 3 lakhs has gone astray. That is one instance.

Another instance I shall point out and that is with regard to Tiruvarur Society. Of course, I gave a Call Attention notice, but it was time barred. Thanjavur Co-operative Marketing Federation, Tiruvarur—the loss there is to the tune of Rs. 2 crores. The State Bank has intervened and they are going to withdraw the credit. This is another gross mismanagement. There are some small mismanagements also.

There is another case with regard to Navamani Society also. I have got a number of cases. I do not want to give details now. I have got them with me and it will be a big story. I want the Government to take an impartial attitude and do the correct thing, and not to act according to political exigencies.

Take the case of Ashok Leyland Co-operative Housing Society. There also a certain sum has been defrauded. All these things I am pointing out because there are grave irregularities. Gross irregularities have been brought to the attention of the Government in this House by repeated questions and the Government should give clear answers.

There is another co-operative society, that is, the Kanyakumari District Co-operative Supply and Marketing Society, Limited, Nagercoil. The original loss was Rs. 21,559.42. That was the

original loss pointed out. The particular society people concerned told the Goernment and told the department that their information is wrong. Then later on anotrer certificate was issued that the net profit was Rs. 10,131.58. The loss was converted into a profit of Rs. 10,000. Originally it was declared as a loss. Subsequently it was declared as a profit.

Then a particular order was issued by this Government, by the Registrar's Department to the particular society and the society concerned appointed a sub-committee to go into the order. I want an impartial statement by the Hon. Minister or the Hon. Chief Minister here. They just referred to a sub-committee. Just because they referred it to the sub-committee they have passed the supersession order. Everything has taken place in a lightning speed. That is the only grievance I have got. I want this particular issue to be properly considered. Section 72 (1) notice has been given. I have studied the 19 allegations in the notice. Most of them are frivolous. I have now pointed out a very gross irregularity on the one side and a frivolous irregularity on the other side. I want the Government to see that something is done about it.

I had already mentioned about the audit rectification agency. Section 64 (5) states . . . .

THE HON. THIRU SI. PA. ADITANAR: Regarding Kanyakumari Wholesale Co-operative Society I am sorry that the hon. Member was not here, when the lady member was supporting and was taking me to task for having superseded the society, for having taken action against the society. I suppose Dr. Hande has now answered this point raised by the hon'ble lady member and the Leader of the Opposition.

DR. H. V. HANDE: I am sorry that the Hon. Minister has not given the correct facts in this case. First of all, I was here itself. I was completely listening to the speeches and the controversy over all these things. That is an incorrect statement of fact. The second incorrect statement of fact is, he is trying to make it out as if the hon. Lady Member has said something which she has not said. She has made only a general observation. She did not speak about this particular society. She made only a general observation and the Hon. Minister is trying to connect this general observation with this. That was a different context and this was a different context. I am quite sure about it and I was here watchful and listening to the speeches. She did not make mention about this society. She did not complain that this society has not been superseded. She did not say that. I am complaining that the society has been superseded. The Hon. Minister has been trying to show that she has complained.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: I was only complaining about the supersession of that Society by the Government, when the society is running so efficiently and it was made to show



a loss by the departmental staff. But the Hon. Minister has misunderstood me. I did not support the supersession. I oppose the supersession so far as Kanyakumari Marketing Society is concerned.

DR. H. V. HANDE: I do not know how confusion can arise. It is very clear that orinally the Department had stated that it was running at a loss but later on they had stated that it was running at a profit. Now I am pointing out that the loss is there and that has been agreed to by the Hon. Minister also on the floor of the House but no action has been taken so far . . .

THE HON. THIRU SI. PA. ADITANAR: May I ask the hon. Member to make it clear whether he supports the action taken against the Society at Nagercoil or whether the action taken is in any way wrong. The Deputy Leader of the Opposition was saying that the action taken was not right but the hon. Member says that more stringent action should have been taken.

DR. H. V. HANDE: The whole House has understood me except the Hon. Minister. I have made it clear that there is action in excess of the requirements of the situation and the Department has committed a mistake. I may even say that that section should not be applied. If the matter goes to a court of law, you can take it from me that the Government's stand will not be sustained.

THE HON. THIRU SI. PA. ADITANAR: May I point out that if this matter goes to a court, this will not be the first one. I have come across during the last two years more than 100 cases and in no case was the Department held to be wrong. If this case also goes to the court, I am sure it will be held that the action taken by the Government is 100 per cent correct.

DR. H. V. HANDE: Both of us have made the prediction. I have made it clear that in one case the action is excessive and in another case no action has been taken even though irregularities have been committed. (Interruption) I am not betting on this issue of the decision of the court. It is only a challenge. Betting is different from the challenge.

Then I come to the Audit. Even though Section 64 (5) of the Act states that the Registrar has got power to rectify the Audit defect this provision remains a dead letter. So I suggest that it should be the statutory duty of the Registrar to take prompt action to remedy the defects within a stipulated time.

Finally I come to a very important point relating to the report of the Santhanam Committee, and the hon. Member Thirumathi Anandanayaki also referred to it. In that report it is mentioned that a non-official member could hold office for only two terms. At that time Anna had also mentioned in this House that he wanted

to infuse new blood and he also asked Thiru Santhanam to examine this particular aspect of the matter so that the period of office may be restricted. The then Hon. Minister for Co-operation, Sri Madhavan, also told the House that that would be done. Now, Sir, the Maharashtra Co-operative Societies Act has already introduced such restrictions. The Madras University Amendment Act of 1966 and the decision of the Madras High Court of 1963 on tre revised scheme of Pachaiyappa's Trust have embodied the principle of putting reasonable restrictions on the period of office . . . .

THE HON. THIRU SI. PA. ADITANAR: I suppose the hon. Member will pardon me if I point out that although the Maharashtra Government have passed this Act restricting the period to six years, they have not enforced it and they have not fixed the date of the commencement of the Act. The reason is that they have their own doubts whether this would stand in a court of law.

DR. H. V. HANDE: I cannot understand it. What about the Urban Land Tax Act . . . .

THE HON. THIRU Si. Pa. ADITANAR: I take this opportunity of pointing out something which the hon. Member did not present in a correct manner. He has stated that the restriction already exists in the Maharashtra Act. I say it does exist but there is a provision which says that the Act will come into force from such and such date. They have not fixed the date for the commencement of the Act. That is enough reason for us to be cautious in regard to this matter.

DR. H. V. HANDE: That is only an excuse and that is my charge. What about the Urban Land Tax Act and the Land Ceiling Amendment Act? Did they not go before the court. . . .

THE HON. THIRU S.. Pa. ADITANAR: What I am saying is that the Maharashtra Government have not brought this Act into force, and do you agree with me or not ? If I am wrong, the hon. Member can correct me. It is only decent to accept that the Maharashtra Act has not been brought into force.

DR. H. V. HANDE: It is not a question of decency or not. If the Hon. Minister had carefully listened to my speech, he would have known what I had stated. I did not say that it was brought into force. I only stated it has been incorporated in the Act. They have gone one step further but we are watching others . . .

MR. DEPUTY SPEAKER: Let the hon. Member better face the Chair.

DR. H. V. HANDE: I thought that by not facing the Hon. Minister I would run the risk of not carrying conviction with him. Sir, I would face the Chair now.



It has been stated that this matter may be brought before a court of law. Have not so many Acts passed in this House gone before a court of law ? Let this Act also go before a court of law. I leave it at that.

(Mr. Speaker in the Chair.)

The method now adopted is to bring fresh blood by allowing voting rights for persons nominated by the Government and this is the back-door method of bringing persons from the ruling hierarchy . . . .

THE HON. THIRU Si. Pa. ADITANAR: The hon. Member will permit me to correct him when he makes a wrong statement. I say even now persons nominated by the Government do not have power to vote at elections and section 21 (4) of the Act has not been altered and it is still there. So, why does the hon. Member say that we have given voting power to the persons appointed by the Government ? We have not amended the Act.

DR. H. V. HANDE: I am coming back to this particular point. Why are we fighting shy of implementing the Santhanam Committee's recommendation? I want a specific answer from the Hon. Minister. We have not actually gone to the Court. If it is taken to court. I am sure it will be struck down. The Santhanam Committee was appointed for the specific purpose of restricting the entry of persons who had already entrenched themselves into the co-operative institutions. But that important provision is completely cast to the winds. For what purpose, I do not know. Let the Hon. Minister give me a categorical answer.

THE HON. THIRU Si. Pa. ADITANAR: I have given a categorical answer that there is a provision in the statute that persons nominated by Government will not vote in an election. That is part of the statute. It is still valid. What the hon. Member had stated is not therefore correct . . .

DR. H. V. HANDE: Tell me what exactly that I have stated is not correct. Specify it.

MR. SPEAKER: Let the Hon. Minister have his say.

THE HON. THIRU Si. Pa. ADITANAR: You please look into the proceedings, Sir. The hon. Member was saying, nominated members have been permitted to vote. I say it is not true. It has not taken place. We have not amended the Act in that respect.

DR. H. V. HANDE: The Hon. Minister has not still answered my point. Why this 'clay feet'? Sometime ago I put a specific question what a provision is there in Maharashtra Act. The Minister said 'No'. I again checked up the thing and I found in the Maharashtra Act, the provision is incorporated. Now the Hon. Minister is saying that provision has not been brought into force.

THE HON. THIRU Si. Pa. ADITANAR: If the hon. Member were kind enough to look into the proceedings, he would find that I would have said that the Act had not been brought into force. I can answer all the legal questions as much as the hon. Member. There are two points. The hon. Member mentioned about provision in the Maharashtra Act. Point No. 1 is that the provision has not been brought into force. The second point is this. Let not the hon. Member think I am going away from the point. The second point is, whether the persons nominated by Government have the right to vote. I say 'No'. They do not have the right to vote. The Hon. Speaker may look into the proceedings. That was the statement made by the hon. Member, that persons who were nominated by the Government have been allowed to vote. I can say, again and again, that it is not so. **The provision against nominated members voting in elections is** there in sub-section (4) of Section 21. That is still there. Why not the hon. Member accept it?

DR. H. V. HANDE: The Hon. Minister says that he can answer legal questions better.

MR. SPEAKER: No. As far as the point regarding Maharashtra Act is concerned, the Hon. Minister has clearly said that the provision has not been brought into force. Do you still hold that he is not correct?

DR. H. V. HANDE: The Hon. Speaker was absent a few minutes before. I started with the Maharashtra Act.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Let them not think of Maharashtra always. Let them come to Madras and argue.

DR. H. V. HANDE: There is a clear provision in the Maharashtra Act, under Maharashtra Co-operative Societies Act. First I told this sometime before. But the Hon. Minister then refuted it. I checked it up and found that the provision was there in the Maharashtra Act. I did not say now that they were in force. That is not the point. My submission is why should the Government fight shy of implementing the Santhanam Committee's report. I am again and again saying that. What is the specific reason . . . .

MR. SPEAKER: Your statement has been corrected. You are accepting the Hon. Minister's contention.

DR. H. V. HANDE: I may stand corrected. Sometime ago I did mention about this Act but then the Hon. Minister said there is no such Act at all. That was his original speech. I checked it up. I found a provision was there. We do not have opportunity to speak about co-operation every now and then. I can speak only now. That is why I am mentioning it. Now the Hon. Minister says the provision had not come into force. I will





have to check it up. I have to go to the library and get the book and check it up. According to our Rules I have to accept what all the Hon. Minister says, because he is a Minister.

THE HON. THIRU Si. Pa. ADITANAR: I take strong objection to the hon. Member's statement that he has to accept whatever the Minister says. I can read right from the Act just now. Sub-section (4) of Section 21 says that notwithstanding anything contained in this section, members nominated by Government would not be entitled to vote . . . . .

MR. SPEAKER: That is all over. Dr. Hande, the Hon. Minister has refuted your statement.

DR. H. V. HANDE: I have to go to the library and have it checked up . . . .

MR. SPEAKER: There are only two issues. The Hon. Minister has categorically said that nominated members cannot vote. That is point No. 1. Even though there is provision in the Maharashtra Act it had not been brought into force. That is point No. 2. The two points are clear.

DR. H. V. HANDE: There are wo different issues. There is a proviso.

MR. SPEAKER: You are again coming to the same point.

* THIRUMATHI JOTHI VENCATACHELLUM: There are two different categories of nomination. One is the nomination by the Registrar. They have got powers to vote. The other is nomination by State Government. They have no power to vote. The two things have been mixed up. I think we will be late for lunch, Sir.

DR. H. V. HANDE: That is exactly what is there in the proviso. I did not have the book. I will have to go to the library to get it. I am thankful to the hon. Lady Member for clarifying the position. I only wanted to point that the Santhanam Committee's recommendations had not been implemented fully.

* Let me conclude. I want this Government to take an impartial attitude. Let them not have two distinct type of societies, for one type of which one set of action is taken and for another type of societies, another type of action is taken. Two different types of action should not be taken. Let the Government take an impartial attitude. I hope the Hon. Minister in his reply would explain this.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Point of Order, Sir. There are three clocks here, each showing different timings. What exactly is the correct time?

MR. SPEAKER: I will take care of the time. The hon. Lady Member need not worry.

THIRU R. PONNAPPA NADAR: Sir, I wish to offer a few remarks regarding the subject-matter of discussion in this House. I had listened to the speeches and exchanges between the Hon. Minister and Dr. Hande. I was very much elated because the speech is something like talisman with magic spells. The Hon. Minister for Co-operation was saying like a talisman that poverty would be banished, etc. I am sure the Hon. Minister has discovered 'liquid gold' from underneath. He is mining gold. Just as America has discovered, our Co-operation Minister has discovered this liquid mine which is lying underneath the earth. I do not want to say much. But I would say that the speech that has been made by the Hon. Minister relates mor to the agricultural side than the co-operation side.

He has been just stating that this Government ushered in a period of green revolution and there are so many improvements through the co-operative sector. That is the reason why in the speech he made mention of all the details of the steps that have to be taken regarding the development of the co-operative department.

I am extremely thankful to the Hon. Minister for the various steps that he has detailed in the note that has been circulated to us. But I would only say that so far as the co-operative department is concerned, all is not well. There has been so many instances which have been brought to the notice of this House and certain instances have been singled out in which discrimination has been shown. I would say that this department is the pet of the ruling party, whereas people belonging to the opposition parties are being victimised and terrorised and the supersession business is something like a Damocle's sword. I am sure that the Hon. Minister will agree with me that there are instances in which I can say without fear of contradiction that all is not well with the co-operative department.

I may be permitted to point out a few instances. If there are any mistakes, I would welcome the Hon. Minister to correct them then and there.

First, I would instance one or two cases from my constituency and I will say that there is discrimination. There is a Land Development Bank at Munchery and the President or promotor of that Bank is one Mr. Chistopher. He has been nominated by the Registrar and the nomination is not by the Government. I know that the collection made has not been remitted so far. What I learn is, that receipts for collection of Rs. 30,000 have been issued and the collection charges are said to be Rs. 7,000. Even now more than Rs. 10,000 is yet to be deposited. It is more than 8 months since the Bank was started or promoted. The share that has been taken by the Land Development Bank from the Central Land Development Bank is only Rs. 100 share, even though a substantial amount has been collected and that amount has not been deposited into the Central Co-operative Bank. No action has been taken so





far. Is it because that he is your party-man or is it because that he is above law? That is the question which I am asking the Hon. Co-operative Minister Is it not partiality? Is it not discrimination? That is a matter which the learned Minister will have to answer.

Then again, there is one other instance. I want to bring to the notice of this House that some action has been taken against two Banks, that is, the Tiruchendur Bank and the Nanguneri Bank. Both these Banks have now been superseded, whereas the Tenkasi Bank which is the pet of your party has not been superseded. I will give certain figures also. In the Tenkasi Bank the overdues is about Rs. 3 lakhs. What is the action that has been taken? When an exchange was going on, I just intervened and said that your Officers went there, stationed there and they tutored some of your men and certain collections have been made. I ask the learned Co-operation Minister whether all the overdues have been collected, whereas I would say without any fear of contradiction that in the Tiruchendur Bank and the Nanguneri Bank there are no overdues. I can understand if there is any substantial irregularity or any defalcation that has been found out in these two Banks. Nothing has been found out. When these things are like this, why should a discriminatory action be taken? That is the point which I want to say.

Then, there are certain other minor things which I do not want to say. I would also just instance one Paragai M.P.C.S. and two persons have taken one rupee share and each member has taken Rs. 1,000 as loan, that is, beyond the usual borrowing capacity. If those things are done and if those things are allowed, no action is taken by the Department. Is this just? Is this fair? Is this allowed under the Co-operation Act? That is the matter which will have to be considered.

Then there is another society in which some amount was kept under suspense by the members of the committee. That is the Sanitary Workers Co-operative Union Society functioning at Nagercoil. They purchased articles worth Rs. 2,400 on credit from the K.D.C.S. Bank. I say, Sir, that this amount has not been brought into account and after some time the amount has been paid and there has been a temporary misappropriation because keeping money on hand or not bringing it to account for some days amounts to misappropriation. But nothing has been done because I learn that some of the members have got some leaning towards the ruling party. That is the way in which things are going on there.

Then regarding the supersession that has been made of the Kanyakumari District Co-operative and Supply Marketing Society, Limited—Y. No. 26, Sir, it has been stated that 19 charges have been framed and I would just give one or two facts regarding this society. This society was manned by a Gazetted Officer in the rank of a D.R. and he is a Gazetted Officer drawing a very fat

salary and he was assisted by one C.S.R. who acted as the Assistant Secretary. The day-to-day administration and other functions of the society has been under the management of these two responsible officers and they were also assisted by a host of other subordinates. These people can bring to the notice of the Directors any irregularity. The first charge—that was the major charge levelled against the society—was that they did not seek to amend the bye-law. I ask the learned Co-operative Minister Whether any District Supply and Marketing Society in the State has brought forward this amendment, whereas the heinous sin that has been committed by this society is that they considered this and by a resolution they relegated this matter to a Board.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : In view of the fact that Dr. Hande, the other hon. Member mentioned that this matter is going to Court and probably the Leader of the Opposition was also of the same opinion, should we discuss it further here?

THIRU R. PONNAPPA NADAR : I never say and I never endorse the view that I am just advocating that this matter may go to Court. It is for the parties to take it to Court and it is now for Government to listen to this. This may be the 101th case or 1001th case. I am not anticipating the decision of the High Court or any oher Court that may be seized of the matter. I will be the last person to say and I will be the last person to cast any aspersion on the judiciary and the decision that will have to be rendered by the learned Judges. I know the points of law and I will not travel beyond that. Keeping that in view, I just want to say that things are not done properly. Things are done in hot haste and I would say in indecent haste.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : If this matter is being taken to Court, is it proper for us to question or ask here whether things are being done properly or not? Whether the matter has been done rightly or not will be the decision by the Court. Now our friend on the other Bench has announced that this matter is going to Court, why not wait till the Court gives its decision?

THIRU R. PONNAPPA NADAR : I know I am not a match against a Barrister. But I am sure that this matter has not gone to the Court's far. If it has gone to the Court, I will be the last person to make mention of it. I know the meaning of *sub judice* and I do not think that I will travel beyond that limit.

Just to show that the charges are baseless, frivolous and vexatious I am bringing it to the notice of the House. That is the reason why I say that there has been no meaningful consideration of the Act. There are several matters which are purely of administrative character. The only charge that is sustainable is that the Committee failed to carry out amendments. So, I would once again reiterate and repeat that the action taken by the Joint Registrar is not happy and that is all. Who is behind it,



and what are the powers behind it, I know not, Sir. I do not want to say that somebodyelse is behind it. I know that the action taken by the department is not in Keeping with the accepted norms and principles. So, I would once again emphasise that the action taken regarding this society calls for reconsideration and I am sure the Hon. Minister will agree with me when I say that the whole question may be examined at length.

MR. SPEAKER: We may sit till the business of the day is over.

THIRU R. PONNAPPA NADAR: Sir, to the reply to be submitted to the Hon. Minister in the form of appeal due consideration may be given. I do not say that we should go to the court. Going to the court is the fast thing and that would be the last straw on the camel's back. These are things which have happened and what is the position of the marketing society is the next point which I would like to bring to the notice of the House. The full Board was elected in September 1966 and the president was the person who opposed the hon. Member, Thiru Raja Pillai in the Panchayat Union elections and he has now been overthrown and many thanks to him and to the members of his party for overthrowing him in a legal manner.

Now what is the financial position of the society is the next question? During 1966–67 that society earned a profit of Rs. 60,862.92 and in 1967–68 a profit of Rs. 70,523.99. In 1968–69 the dispute cropped up and on 30th August 1970 the Auditors first showed a net loss of Rs. 2,47,773.93. While this has been communicated to the Board, they objected to the findings and they pointed out certain irregularities. Then there has been a second audit and the auditors showed a net profit of Rs. 10,131.58, that is the loss which amounted to lakhs has been converted into a profit of Rs. 10,131.58. Again another loss has been invented by the Department and by the third Audit. The third Audit figures would show a loss of Rs. 21,559.42. But a sum of about Rs 41,000 is due from the Government and that has been credited to the bad debt. I am sure the Government are in a good financial position and they can pay back Rs. 41,000 and this is not a bad debt to be included in the Reserve Fund. This shows that the audit has not been properly conducted and that is the reason why my learned Friend Dr. Hande has stated that the Audit Department is not functioning properly.

Then, what is the amount that is spent for auditing this society is the next question. An amount of Rs. 25,000 has been paid from the society for the three audits conducted. Why all this dilly-dallying, is the question that will have to be considered. And finally what is the result? One fine morning the society has been superseded. Probably there was an apprehension that the President and the members of the Board were not amenable to the Ruling Party. I am sure that this method of asking the officers to supersede it under the provisions of the law is not a healthy sign

[Thiru R. Ponnappa Nadar] [1971 ஜூலை 20

so far as the democratic Government are concerned and a Minister of his stature should be the last person to condescend to this method and I hope the Government will put an end to all these things.

Then I want to say a word about the Central Bank that is functioning in the Kanyakumari district. The President of the Central Bank is no less a person than an esteemed friend of the learned Minister, Thiru Balan, who was a former M.L.A. He has been doing all sorts of things which are out of taste. He frequently transfers persons even though it may be stated that they are all administrative matters. How he became President is another matter which is well-known to the Hon. Minister. Certain nominations have been made by the department and not by the Government—I want to make this clear distinction—and consequently the elected members were reduced to a minority and the nominated members became a majority and that has been the clever and ingenious way in which the provisions of law have been circumvented.

THE HON. THIRU Si. Pa. ADITANAR: There is a provision in the Act that the nominated members should not exceed one-fifth of the total members. Therefore it is not correct to say that the nominated members were more than the elected members. If the law had been broken, Thiru Ponnappa Nadar would have been the first person to know about it.

THIRU R. PONNAPPA NADAR: Sir, I know there are certain paper societies like lift irrigation and oilmongering societies with no membership. It is only in the embryo stage and it has not begun to hatch and not even a drop of water has been pumped out though lakhs and lakhs of rupees have been spent on the lift irrigation society. These are things which I wanted to bring to the notice of the Government. I am sure that the Co-operation Department which is spending crores of rupees for the advancement of agriculture by way of granting loans and sinking wells, etc., will be better administered and with this observation I am going to wind up the discussion so far as the Co-operation Department is concerned.

Now I would like to offer a few remarks regarding the handloom industry. The plight of the handloom industry is not very happy and the industry is facing a crisis. There has been so much of stagnation of cloth and the increase in the yarn price is abnormal. Several times it has been represented that effective steps may be taken to arrest the soaring price of yarn and I am sure that the Co-operation Department through the Minister for Co-operation will take effective and prompt steps to see that the abnormal rise in the price of yarn is averted and put an end to.

The next point is with regard to the Khadi department. It has been said that the Khadi department has increased its production. I am very happy to see that there has been total improvement of sale of Khadi.



1971 ஜூலை 20] [Thiru R. Ponnappa Nadar]

So far as ready-made goods of Khadi are concerned (I think it had been suspended temporarily) it might be revived and then we could expect that sales would increase. Many spinning units had been closed in rural centres. Those units may be revived. Regarding Parishramalayas, etc., I think the Hon. Minister would tell in his reply about their working.

I have only to talk about the tappers now. They are doing an arduous job. If they lose their lives by faling from the tree. I think Government gives about Rs. 1,000 or Rs. 1,500, if they are in the co-operative sector. There are innumerable tappers who had not joined the co-operative sector. Why not extend the benefit to these tappers also? I am sure the Hon. Minister would take steps to see that the benefit is extended to all sectors irrespective of the fact whether he is a member of a co-operative society or not.

With these remarks I would once again repeat to the Hon. Minister that so far as the Co-operation Demand is concerned, political considerations should not weigh and legal considerations only should always weigh with the Minister and then only discrimination would be put an end to. I am sure discrimination would not be repeated in future.

With these words I conclude, Sir.

* மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்தக் கூட்டுறவுத் துறையின் மானியத்தை வரவேற்றவர்கள் பலராகவும், கண்டித்தவர்கள் சிலராகவும் இருப்பதைப் பார்த்து, எப்படியும் கண்டித்தவர்களானாலும், வரவேற்றவர்களானாலும், வாழ்த்துபவர்களானாலும் சரி, இந்தக் கூட்டுறவுத் துறையில் கவனத்தைச் செலுத்தி வருகிறார்கள் என்று மகிழ்ச்சி அடைகிறேன்.

அவ்வாறு கவனம் செலுத்தும்போது, நண்பர் திரு. மருதாசலம் 'கதரின் உற்பத்தி குறைந்து போய்விட்டது' என்று சொல்லிக் கொண்டிருந்ததை, நண்பர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கேட்டுக்கொண்டிருந்து, 'அது உண்மையில்லை' என்று மறுத்தார்கள். உறுப்பினர் திரு. மருதாசலம் அவர்கள் இந்த அறிக்கையின் மூன்றாவது பக்கத்தில் பார்த்தால், கதர் எவ்வளவு உற்பத்தியாகியிருக்கிறது என்பது தெரியும். 1966–67-ல் ஒரு கோடியளவில் இருந்தது, இந்த வருஷம் 3 கோடி அளவில் உயர்ந்திருக்கிறது என்பதைப் பார்க்கலாம். ஆண்டுதோறும் இந்த உற்பத்தி உயர்ந்து கொண்டே வந்திருக்கிறது. உற்பத்தி குறையவில்லை. திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள் 'வளர்ந்திருக்கிறது'. 'இருந்தாலும் ....' என்று என்னவோ சொன்னார்கள். 'இருந்தாலும்' என்று சொல்லக் கூட இடம் இல்லை. என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

கதர் நூற்பவர்களுக்கு வருவாய் குறைவாக ஆகிவிட்டது என்று நண்பர் திரு. மருதாசலம் சொன்னார்கள். இதிலே ஒன்றைப் பார்க்க வேண்டும். கதர் நூற்பு என்பது பழைய கிசான் ராட்டை

யில் நூற்பதில்லை போதுவாக. என்ன காரணம் என்றால், நமக்கு வருவாய் அதிகமாக வளரவேண்டும் என்பதை அடிப்படையாக கொண்டு செயலாற்றும் துறையில் வருவாயையும் அதிகரிக்க வேண்டும் என்று பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதால், கதர் நூற்பவர்களுக்கு வருவாய் உயர்ந்திருக்கிறது. எடுத்துக்காட்டாக கிசான் ராட்டையில் நூற்பவர்களுக்கு ஒரு ரூபாய் வருவதே கடினம். அதிகமாகப் போனால் கூட எட்டு அணா வரமுடியும். பொதுவாக பெண்கள்தான் அதிகமாக இதில் ஈடுபடுகிறார்கள். ஒரு ரூபாய்க்குக் குறைந்த வருமானம்தான் என்று எனக்குத் தெரிகிறது. இந்தக் குறைந்த வருமானத்தைச் சற்றுக் கூடுதலாக்க வேண்டும் என்று ஆறு கதிர்கள் கொண்ட 'டெக்ஸ்டுல்' ராட்டை —அதைக் கூட ராட்டை என்றுதான் சொல்லுகிறோம்,—கொஞ்சங் கொஞ்சமாக வளர்த்து, அதைப் புகுத்தி, கையாண்டதன் மூலமாக, ஒரு ரூபாய் வருவாய், ஒன்றரை ரூபாய்க்கு உயர்ந்தது. பெரும்பாலும் பெண்கள் ஆறு கதிர் ராட்டைகளை நூற்கிறார்கள். அதைவிட அதிகமாகச் செய்ய வேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் உத்தரவு போட்டார்கள். உடனடியாக 12 கதிர் கொண்ட ராட்டையை ஒரு ஆயிரம் நுழைக்க வேண்டும் என்று. அதன்படி செய்தும், இரண்டொரு இடங்களில்தான் பெரிய அளவில் வளர்ச்சியடைந்தது. அப்படி 12 கதிர்கள் கொண்ட ராட்டைகளில் நூற்பவர்களுக்கு 2 ரூபாய் கிடைக்கும் தன்மைகளும் ஏற்பட்டன. இப்பொழுது உள்ள போக்கில் ஒரு நாளைக்கு இரண்டு ரூபாய் போதுமான அளவா என்ற ஐயப்பாடு இருப்பதால், இப்பொழுது 48 கதிர்கள் கொண்டதாகச் செய்து, இன்னும் பெரிதாகச் செய்து, கொஞ்சம் மின்சாரத்தை—தவறில்லை என்று கதர்வாரியம் சொன்னதால், அதையும் உபயோகித்து, இப்பொழுது 2½ முதல் 3 ரூபாய் வரை பெண்களுக்கு வருமானம் வர வழிவகை செய்து, கோவை மாவட்டத்தில் நுழைக்கப் பட்டிருக்கிறது. இன்னும் வேறு பல மாவட்டங்களிலும் 48 கதிர் ராட்டையைப் புகுத்தி வருகிறோம். சம்பளம், கூலி வருவாய் என்பதை மறந்துவிட்டுச் செயல்படவில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

நண்பர் மருதாசலம் அவர்கள் கருப்புக்கட்டி சங்கங்கள் பற்றி சொன்னார்கள். அவர்களுக்குச் சொல்வேன், கருப்புக்கட்டிக் காலம் இப்பொழுது அல்ல என்று. பனைமரத்திலிருந்து வருஷம் பூராவும் பதநீர் வராது. இது காலம் இல்லை என்பதைத்தான் சொல்லுகிறேன். திரும்ப காலம் வரும்போது கூட, முன் போல் இல்லை. கருப்புக்கட்டி தயாரிக்கும் பாம் கர் சொசைடி என்று இரண்டு கோடி ரூபாய் அளவில் சங்கம் நிறுவி, அதில் இரண்டு சீர்திருத்தங்கள் செய்திருக்கிறோம். ஒன்று பதனீரைக் கருப்பட்டியாகக் காய்ச்சி, தண்ணீரை ஊற்றி, ஏதாவது மக்கள் விரும்பும் வகையில் சோடா பாட்டிலில் அடைத்து விற்பதைவிட, பதனீரை 'பாஸ்சுரைஸ்' செய்து, சுகாதார முறையில் தயார் செய்து விற்பனை செய்யவேண்டும் என்று அதற்காக ரூ. 6,92,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைக்கொண்டு, இந்தப் பதனீரை



" சாப்ட் ட்ரிங்க்ஸ் " என்று ஏதாவது, லெமனேட்கள், ஆரஞ்சுகள் இருக்கின்றனவே அதேபோல், வெற்றிலை பாக்குக்கடைகளில் விற்கக்கூடிய அளவில், வேலைகள் செய்ய பணம் ஒதுக்கப்பட்டு, காரியங்கள் நடைபெறுகின்றன.

மேலும் அவர்கள், மரம் ஏறும் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு காயம் ஏற்பட்டால் அல்லது அவர்களுக்கு மரணம் ஏற்பட்டால், அவர்களுடைய குடும்பங்களுக்கு உதவி கொடுப்பதில் சங்கடம் இருப்பதாகச் சொன்னார்கள். முதலிலே இப்படிப்பட்ட கடுமையான, அபாயகரமான தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு ஏதாவது உதவி செய்யவேண்டும் என்ற எண்ணமே தமிழக அரசை பேரறிஞர் அண்ணா ஏற்று, ஆட்சிக்கு வந்த பிறகுதான் ஏற்பட்டது. அதிலும் மரணம் அடைந்தவர்களுடைய குடும்பத்தினருக்கு போன உயிர் திரும்பிவரவில்லை, வரமுடியாது என்று, அந்தக் குடும்பம் நிம்மதியாக வாழ்க்கை நடத்த வேண்டும் என்று, ஒரு ஆயிரம் ரூபாய் கொடுப்பது என்றும், யாராவது, பனை மரம் ஏறும் தொழிலில் ஈடுபட்டு, கை கால் ஊனமாகிவிட்டால், அவருக்கு ரூ. 500 என்றும், ஏதாவது சின்னக் காயம் ஏற்பட்டிருந்தால் அதற்கு ரூ. 100 என்றும் கொடுத்து வருகிறோம். நண்பர் சொன்னார்கள் சங்கத்திலே உறுப்பினராக இருந்தால்தான் அவர்கள் கொடுக்கிறார்கள் என்று. நான் சொல்கிறேன், பணிவோடு, அப்படியில்லை என்று. அதற்கெல்லாம் விதியிருக்கிறது. சங்கத்தில் உறுப்பினராக இல்லை என்றாலும், நியாயமாகக் காயம் பட்டிருந்தாலும், உண்மையாகக் காயம் பட்டிருந்தாலும், யாராவது மரணம் அடைந்திருந்தாலும், விதி விலக்குக் கொடுத்து நிதி உதவி கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் கருணாநிதி அவர்கள் உத்தரவு இட்டு செயல்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் அதிகமாகவே கொடுத்து வருகிறோம். மிகுந்த வருத்தத்தோடு சொல்கிறேன், எதிர்க்கட்சியில் சிலர் இந்தப் பணத்தை வாங்காதே, திராவிட முன்னேற்றக் கழக அரசு கொடுப்பதை வாங்குவது தவறு என்று சொல்லி, பல இடங்களில் குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் கேட்பதுகூட கிடையாது. கேட்டால் . . .

THIRU R. PONNAPPA NADAR : May I put one-question for clarification?

இன்னும் பல மனுக்கள் தாக்கல் செய்தும், பலருக்கும் கொடுக்கப்படவில்லை. குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் பெற விரும்பவில்லை என்று கூறினார்கள். அது முழுக்க முழுக்க உண்மைக்குப் புறம்பானது என்பதைத் தங்களுக்குத் தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அவர்கள் வழக்கறிஞர், வார்த்தையைக் கவனிக்கவேண்டும். விரும்பவில்லை என்று சொல்லவில்லை; விரும்புகிறார்கள். ஆனால் தலைவர்கள் 'மனுச் செய்யாதே' என்று தடுக்கிறார்கள். அதைத்தான் . . .

THIRU R. PONNAPPA NADAR : I take strong objection to that word used by the Hon. Minister. If he is prepared to substantiate, I am prepared even to resign my seat and get away.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : All right. I will substantiate.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** எந்த இடத்தில், எப்போது, யார், அப்படி வாங்கவேண்டாம் என்று தடுக்கப்பட்டு இருக்கின்றார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்ல முடியுமா?

I want to know from the Hon. Minister if he has got proof.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** என்றால் சொல்ல முடியும். கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு தாலுக்காவிலே இப்படி பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவி செய்ய முற்படும் போது, அவர்கள் தடுக்கப்பட்டிருக்கின்றார்கள். பத்திரிகையிலேயே வந்து இருக்கிறது. அப்போதே அதற்கு மறுப்பு சொல்லியிருக்க முடியும்.

THIRU R. PONNAPPA NADAR : Are you prepared to institute a judicial enquiry regarding that?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** நான் என்ன சொல்ல வந்தேன் என்றால் சங்கத்தில் உறுப்பினர்களாக இருப்பவர்களுக்குத்தான் அப்படிப்பட்ட உதவிகளைக் கொடுக்கின்றார்கள் என்ற ஒரு தவறான கருத்தின் அடிப்படையில் அப்படி ஆலோசனை சொல்லியிருக்கமுடியும் என்ற முறையில்தான் குறிப்பிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

'Advice'—He is amending his statement.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** எனவே இப்படிப்பட்ட அசம்பாவிதங்கள் ஏற்படும்போது நமது அரசு அவர்களுக்குப் பெருமளவிற்கு உதவிகளை அளித்துக் கொண்டு வருகிறது. கடந்த வருஷம் ஏறத்தாழ ரூ. 25, 26 ஆயிரம்தான் கொடுக்கமுடிந்தது இந்த வகையில். இந்த வருஷம் சற்று அதிகமாகவே இருக்கும் என்று கருதுகிறேன். காரணம் இப்போது மனப்பான்மை சற்று மாறி, திராவிட முன்னேற்றக் கழக அரசிடமிருந்து பெறுவதால் தவறு ஏதும் இல்லை என்ற அளவிற்கு நம்மோடு ஒத்துப் போகும் போக்கு வளர்ந்து இருப்பதால், முந்தைய போக்கில் ஒரு தளர்ச்சி ஏற்பட்டு இருப்பதால் இத்தொகை சற்று கூடுதலாக இருக்கும் என்று எண்ணுகிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அப்படி எந்தவிதமான தளர்ச்சியும் ஏற்பட்டுவிடவில்லை.





**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** அடுத்து மாண்புமிகு உறுப்பினர்களில் சிலர்—என் நண்பர் திரு. மருதாசலம் என்று நினைக்கிறேன்—நில வள வங்கியில் போதுமான அளவிற்குப் பணம் கொடுப்பதில்லை என்று சொன்னார்கள். வேறு சிலரும், கொடுக்கப்பட்ட கடன்களைத் தள்ளிவைப்பதற்கான அளவிற்குப் பண உதவி செய்யவில்லை என்று குறிப்பிட்டார்கள், நண்பர் காதர் பாஷா என்கிற வெள்ளைச்சாமி அவர்கள் என்று எண்ணுகிறேன். விளைச்சல் இல்லாதபோது அந்தக் கடன் வசூலை எப்படித் தள்ளி வைப்பது என்பதற்கு ஒரு முறை இருக்கிறது. விளைச்சல் இல்லை என்று சான்று பெறவேண்டும். அதற்குப் பெயர் அனாவாரி சர்டிபிகேட். இதை ரெவின்யூ அதிகாரிகளிடம் பெற வேண்டும். இது வரையில் ஒரு ஊரிலாவது இப்படி ரெவின்யூ அதிகாரிகளிடம் சான்று பெற்ற பிறகு கடன் தவணையை வற்புறுத்திப் பெற்றதில்லை. இப்படி விளைச்சல் இல்லை என்று ரெவின்யூ அதிகாரிகளிடம் அத்தாட்சி பெற்ற பிறகு, அது கூட்டுறவுத் துறையினருக்குக் கிடைத்த பிறகு, நிச்சயம் கடன் தவணையைத் தள்ளித்தான் போட்டு இருக்கிறார்களே தவிர, கடனைத் திரும்பப் பெறுவதற்கான நடவடிக்கை எடுத்துக்கொண்டது இல்லை. உதாரணமாக, சேலம் மாவட்டத்தில் ரூ. 24,40,000 தள்ளி வைக்கப்பட்டது, இந்த ஆண்டில். மதுரை மாவட்டத்திலும் ரூ. 20 லட்சத்திற்கு இப்படித் தள்ளிவைக்கப்பட்டது. திரு. காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி அவர்களுடைய மாவட்டமான இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏறத்தாழ ரூ. 94,62,000 இப்படித் தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் மற்ற மற்ற மாவட்டங்களிலும் இப்படிப்பட்ட நிலைமைகளில் கடன் தவணைகள் தள்ளிவைக்கப்பட்டிருக்கின்றன. இதை நாம் ஒன்றும் வரிப்பணத்திலிருந்து கொடுப்பதில்லை. இதற்காக ரூ. 170 லட்சத்திற்கு ரிஸர்வ் பாங்கியிடமிருந்து பெற்று வைத்திருக்கிறோம். எனவே, இதனால் நமது அரசுக்கு எந்த விதமான கஷ்டமும் கிடையாது. ரிஸர்வ் பாங்கியிலுள்ளவர்கள் பம்பாயில் உள்ளவர்கள் எவ்வளவு கேட்டாலும் கொடுப்பதற்குத் தயாராயிருக்கின்றார்கள். என்னுடைய அனுபவத்தில்—ஒரு கிராமத்துக்கும் சரி, தாலுக்கா அல்லது மாவட்டத்திற்கும் சரி, விளைச்சல் இல்லை என்று சான்று கொடுப்பார்களானால், கடன் தொகைகள் வசூல் எப்போதும் தள்ளிப்போடப்படுகிறது. எனவே, கடன் தொகைகளைத் தள்ளி வைப்பது ஒரு முறையாக ஒழுங்காக நடைபெறவில்லை என்று சொன்னால் நாம் நடைமுறையை நன்கு புரிந்துகொள்ள வில்லை என்றுதான் பொருளே தவிர, கூட்டுறவுத் துறை அல்லது வங்கிகள் அல்லது ரிஸர்வ் பாங்கி காரணமாகத்தான் இப்படி ஏற்பட்டது என்று பொருள் இல்லை.

அடுத்து, நில வள வங்கிகளிலிருந்து போதுமான அளவிற்குப் பணம் கொடுப்பதில்லை என்று சொன்னதைக் கேட்டபோது நான் பெரிதும் வருந்தினேன். கூட்டுறவுத் திட்டங்களின் முன்னேற்றம் பற்றிய ஆய்வுரையான இந்தப் புத்தகத்தைப் படித்துப் பார்த்திருப்பார்களானால் நண்பர்கள் அவ்வாறு சொல்லியிருக்க மாட்டார்கள் என்று எண்ணுகிறேன். அதைப் பார்த்தால்,

[திரு. சி. பா. ஆதித்தனார்] [1971 ஜூலை 20

ஆண்டுக்கு ஆண்டு நிலவள வங்கிகளால் வழங்கப்படும் கடன் தொகை எப்படி அதிகரித்துள்ளது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

1966-67-ல் 2,93,00,000 ரூபாயும்

1967-68-ல் ஐந்து கோடியே எழுபது லட்ச ரூபாயும்

1968-69-ல் பதினான்கு கோடியே பதினைந்து லட்ச ரூபாயும்

1969-70-ல் பதினான்கு கோடியே தொண்ணூற்று ஐந்து லட்ச ரூபாயும்

1970-71-ல் பத்தொன்பது கோடியே எழு லட்ச ரூபாயும்

கொடுக்கப்பட்டிருக்கிறது என்று இந்த புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறேன். பிறகு, எங்கே குறைவு இருக்கிறது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

குறிப்பாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், பம்பாயிலுள்ள ரிஸர்வ் பாங்கியின் ஸ்தாபனத்தார் நில வள வங்கி மூலம் ஒரு குறிப்பிட்ட தொகையை நாம் விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும் என்று சொல்லி, அவர்கள் கொடுக்கும் அந்த முழுத் தொகையையும் செலவழிக்க முடியாத காரணத்தினால் அவர்களுக்கு நாம் ஒரு சதவிகிதம் அபராத வட்டியாகக் கட்டிக் கொண்டிருக்கிறோம் என்றால் நிலைமையைப் புரிந்துகொள்ள முடியும். அந்த அளவிற்கு அவர்களும் தாராளமாகக் கொடுக்கின்றார்கள். நாமும் தாராளமாக நில வள வங்கிகளின் மூலம் கடன்களை வழங்குகிறோம். இப்படிக் கொடுக்கப்பட்ட தொகையை முழுக்க முழுக்க செலவழிக்க முடியாத காரணத்தினால் அபராத வட்டியாக நாம் கட்டிக் கொண்டிருக்கும்போது, கடன் கேட்கும் விவசாயிகளுக்குத் தொகையில்லை என்று சொல்லக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்குமா, என்று எண்ணிப்பார்க்க வேண்டும். எனவே, நில வள வங்கிகள் மிக வேகமாக—மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிடுவார்கள் குதிரை வேகத்தில் என்று, அந்த அளவிற்கு—செயல்பட்டுக்கொண்டு வருகின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது.

அடுத்து எதிர்க் கட்சித் தலைவர் பொன்னப்ப நாடார் அவர்கள் குறிப்பிட்டார்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு திரு. பொன்னப்ப நாடார் அவர்களை எதிர்க்கட்சித் தலைவராக ஆக்காதீர்கள். அவர்கள் காங்கிரஸ் கட்சித் தலைவர். நமது மன்றத்தில் எதிர்க் கட்சி என்று கிடையாது. எனவே, அவரைக் 'காங்கிரஸ் கட்சித் தலைவர்' என்று குறிப்பிட வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** நன்றி, ஸ்தாபன காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் குறிப்பிட்டார்கள் கூட்டுறவுத் துறையிலுள்ள வங்கிகள் எல்லாம் ஒழுங்காக நடைபெறவில்லை, திறமை குறைந்துவிட்டது, என்று.



1971 ஜூலை 20] [திரு. சி. பா. ஆதித்தனார்]

இதோ என் கையில் ரிஸர்வ் பாங்கியின் அறிக்கையொன்று இருக்கிறது. நமது கூட்டுறவு பாங்கிகளைப்பற்றி அவர்கள் தங்கள் அறிக்கையில் என்ன சொல்லியிருக்கின்றார்கள் என்று பாருங்கள். அவர்கள் சொல்லுகின்றார்கள், முன்பு இருந்ததைவிட இப்போது அவற்றின் தரம் மிக மிக உயர்ந்திருக்கிறது என்று. முன்பு ஒரு சிலருடைய ஆதிக்கத்திலிருந்தது, இப்போது சாதாரண மக்களுடைய கைக்கு வந்திருப்பதால் பெருமளவிற்கு ஏழை எளியவர்களுடைய விவசாயத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன என்று நான் சொன்னால் ஏற்றுக்கொள்ள மாட்டார் என் நண்பர். ஆனால் ரிஸர்வ் பாங்கின் அறிக்கையே குறிப்பிடுவதால், ஏற்றுக்கொள்ளுவார் என்றே நான் நம்புகிறேன்.

இப்போது பதினாறு நிலவள மத்திய பாங்குகள் இருக்கின்றன. ஒவ்வொன்றும் 7 அல்லது 8 கோடி ரூபாய் என்ற அளவில் நிதியோடு அவை செயல்பட்டுக்கொண்டு இருக்கின்றன. இவை எதுவும் தரத்தில் குறைந்துவிடவில்லை. ஆனால் உயர்ந்துகொண்டே வருகின்றன. எடுத்துக்காட்டாக, புதுக்கோட்டையிலுள்ள மத்திய பாங்கு முன்பு 'ஸி' என்ற தரத்திலிருந்து இப்போது 'ஏ' என்ற தரத்திற்கு உயர்ந்திருக்கிறது. ரிஸர்வ் பாங்கியில் உள்ளவர்கள் ஒவ்வொரு பாங்கையும் 'ஏ', 'பி', 'ஸி', 'டி' என்று தரவாரியாகப் பிரித்திருக்கின்றார்கள். முன்பு 'ஸி' யாக இருந்தது இப்போது 'பி'யைத் தாண்டி 'ஏ'வாக உயர்ந்திருக்கிறது என்பதைக் காண வேண்டும். அடுத்து, நெல்லை மாவட்டத்திலுள்ள வங்கி 'பி' யிலிருந்து இப்போது 'ஏ'வாக மாறியிருக்கிறது. இப்படி நாளுக்கு நாள் தரம் உயர்ந்துகொண்டுதான் போகிறது என்பதை நான் சொன்னால் ஏற்றுக்கொள்ளாதவர்கள் ரிஸர்வ் பாங்கியினுடைய அறிக்கையிலிருப்பதையாவது ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று பணிவாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தாற்போல, வேறு பலவற்றைச் சொல்லி வந்தார்கள். குறிப்பாக எனது நண்பர், இராதாபுரத்திலிருந்து வந்த நண்பர் அவர்கள் சொன்னார்கள், எங்களுடைய இராதாபுரம் பகுதி வறட்சியாக இருக்கிறது என்று. அதற்கு என்னுடைய முன்னுரையில் சொல்லியபடி, புதிதாகத் தண்ணீர் வளத்தைப் பெருக்க அங்கே ஏற்கனவே பட்டணங்கால் என்ற கால்வாயை வெட்டியிருக்கிறோம். நீர்த்தேக்கத் தளம் என்று போட்டு, 3 கோடி ரூபாய் திட்டத்தின் அடிப்படையில் முதலாவதாக எடுத்துக்கொண்டிருக்கிற பகுதிகளில் இராதாபுரம் ஒன்று.

அதற்குப் பிறகு எருமைப்பட்டி, மோகனூர், தஞ்சை மாவட்டத்தில் ஒரத்தநாடு. நாம் அதற்காக எ.ஆர்.சிக்கு ரூபாய் 1 கோடி 12 லட்சத்துக்கு ஒரு திட்டம் அனுப்பியிருக்கிறோம். அவர்கள் வந்து பார்த்துப் பேசினார்கள். நீர்த்தேக்கத் தளம் போடுவது என்றால், இங்கே உள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, குறிப்பாக சென்னையில் இருப்பவர்களுக்கு, இப்படி நீர்த்தேக்கத் தரை என்று ஒன்று இருக்கமுடியுமா என்று ஆச்சரியமாக இருக்கும். மழை அதிகமாகப்

[திரு. சி. பா. ஆதித்தனார்] [1971 ஜூலை 20

பெய்யாத பகுதியில் எப்படி மூன்று போகம் விளைய முடியும், என்று கேட்கத் தோன்றும். என்னுடைய நண்பர் கே. எம். எஸ். அவர்களை, தேனாம்பேட்டையில் மாதிரிக்காக ஒரு சிறிய இடத்தில் போட்டு வைத்திருப்பதை ஒரு நாள் போய்ப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஒரு நேரத்தில் தண்ணீர் ஊற்றினால் அது அப்படியே இருக்கிறது. இப்படித் தண்ணீர் வீணாகாமல் மூன்று போகம் விளையும் அளவுக்குத் தண்ணீரை உண்டாக்க நாம் பல இடங்களைத் தேர்ந்தெடுத்துச் செய்துகொண்டிருக்கிறோம். அதற்குச் செலவு அதிகம் என்பதை ஒத்துக்கொள்ளுகிறேன். ஏக்கருக்கு ரூ. 4.000 அல்லது ரூ. 4,500 ஆகிறது. ஆனால் முன்னால் ஒரு போகம் கூட விளையாத இடங்களில் மூன்று போகம் விளைந்து விவசாயிகளுக்கு அதிக வருமானத்தைத் தருகின்றது. ஆகவே என்னுடைய நண்பர் இராதாபுரம் தொகுதி உறுப்பினர் கவலைப் படவேண்டியதில்லை என்று சொல்லிக்கொள்ளுகின்றேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அமைச்சர் அவர்கள் தெரிவித்த, சென்னையில் இருக்கக்கூடிய தேனாம்பேட்டை 'நீர்த்தேக்கத் தரையை' பார்க்கவேண்டும். அமைச்சர் வசதி செய்வாரா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தேனாம்பேட்டைக்குப் போவது கடினமான காரியமல்ல. அப்படிக் கடுமையாக இருக்குமானால், வசதி செய்ய முடியும். ஏற்கனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நாளொன்றுக்கு போக்குவரத்துச் செலவிற்கென்று அங்கத்தினர்களுக்குக் கொடுத்திருக்கிற பணத்தைக் கொண்டு கூட பார்க்கலாம். (சிரிப்பு)

திருமதி த. ந. அனந்தநாயகி : நான் செலவைப்பற்றிக் கவலைப் படவில்லை. அமைச்சர் அவர்கள் அக்கறை எடுத்துக்கொண்டு, கொண்டுபோய்க் காட்டி, விளக்கம் சொன்னால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்களை அமைச்சர் அவர்கள் தலைமை வகித்து அழைத்துச் சென்று, விளக்கம் சொல்ல வேண்டுமென்கிறார்கள்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கடைசியாக நான் அங்கத்தினர்களுடைய ஒத்துழைப்பைக் கேட்க இருக்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR : He should co-operate.

MR. SPEAKER : They want your company.

THIRU K. M. SUBRAMANIAM : The Hon. Minister should co-operate. There is no use of telling us.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Mr. Speaker Sir, as I am the Minister for Co-operation, you can expect me to co-operate.



1971 ஜூலை 20] [திரு. சி. பா. ஆதித்தனார்]

எதிர்க் கட்சியிலுள்ள நண்பர்களை நான் பெரிதும் மரியாதையோடு, மதிப்போடு வைத்துப் பார்க்கின்றவன். அதன் தலைவர் ஆகட்டும், துணைத் தலைவர் ஆகட்டும், மற்ற எதிர்க் கட்சிகளில் உள்ளவர்கள் ஆகட்டும், சந்தர்ப்ப வசத்தால் அவர்கள் எதிர்க் கட்சியில் உட்கார்ந்திருக்கிறார்களே தவிர, திரு. பொன்னப்ப நாடார் என்னோடு இங்கே இருக்கவேண்டியவர்கள். கட்சி என்ற கண்ணோட்டத்தோடு நான் பார்க்கின்றேன் என்ற அவர்களுடைய குற்றச்சாட்டு எனக்கு வேதனையைத் தந்தது. நான் எடுத்துக் காட்டுக்காகச் சொல்லுகிறேன்.

வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி நண்பர் திரு. அழகர்சாமி அவர்கள். இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் பிரதிநிதியான அந்த நண்பர் அவர்கள், அண்மையில் ஒரு இடத்தில், எட்டயபுரம் தொகுதியில், ஒரு நிகழ்ச்சி நடந்தபோது அதற்குத் தலைமை தாங்கினார்கள். அந்த வரவேற்பு இதழை நான் கையில் வைத்திருந்தேன். எதிர்க் கட்சி உறுப்பினர்களை, நமது சட்டமன்ற உறுப்பினர்களை நான் மதிப்பதில்லை என்று யாராவது சொன்னார்களானால், அப்போது முதலில் குறிக்கிட வேண்டியவர் என்னுடைய நண்பர் அழகர்சாமி அவர்கள் ஆவார்கள். அவர்கள், எட்டயபுரம் கிராமக் கைத்தொழில் என்ற முறையில் நடந்த விழாவிற்கு, அவர்கள் தலைமை தாங்கியிருக்கிறார்கள். கலெக்டரும் வந்திருப்பார் என்று நினைக்கிறேன். ஆகையால் சட்டமன்ற அங்கத்தினர்களைப் புறக்கணித்திருக்கிறேன் என்பது உண்மைக்குப் புறம்பானது.

அடுத்ததாக, உறுப்பினர்கள் சிலர் நியமனம் செய்யப்பட்டதாகவும், ஆளுங்கட்சியினரே போடப்பட்டதாகவும் ஒரு வெட்டுத் தீர்மானம் வந்தது. அதைப்பற்றி நல்ல வேளை திரு. ஜேம்ஸ் அவர்கள் விவாதித்துப் பேசவில்லை. ஏனென்றால் அவருக்கு நன்றாகத் தெரியும். அப்படி நியமிக்கப்பட்டிருப்பதில் திரு. ஏகாம்பர ரெட்டியார் காங்கிரஸ்-0 கட்சியைச் சேர்ந்தவர்கள். அதேபோல் கடம்பத்தூரில் நியமித்திருக்கிறார்கள். நண்பர் ஹாண்டே அவர்கள். எல்லாம் காங்கிரஸ்காரர்களையே நியமித்திருக்கிறீர்கள், எங்கள் சுதந்திரா கட்சியைச் சார்ந்தவர்களை நியமித்திருக்கிறீர்களா என்றால், அதற்கும் விவரம் இருக்கிறது. ஒன்றை மட்டும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இவ்வாறு நியமனம் செய்யும்போது நான் எல்லாக் கட்சியினரின் ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கின்றேன். நம்முடைய தமிழகம் முன்னேற, பொருளாதாரத் துறையில் முன்னேற, ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும், தென் அமெரிக்காவிலும் உள்ள மற்ற நாடுகளை விட உயர்ந்த தரத்தை எய்த, விவசாயம் எவ்வளவு முக்கியம் என்பதையும், கூட்டுறவுத் துறை என்பது விவசாயத்திற்கு வேண்டிய பண உதவி தரக்கூடிய துறை என்பதையும் கவனித்து ஒத்துழைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். கட்சி வேறுபாடு செய்யவில்லை என்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காங்கிரஸ்காரர்களுக்கு —தியாகிகளுக்கு—ஏறத்தாழ 41 லட்சம் ரூபாய் கொடுத்துக் கொண்டு வருவதைச் சொன்னார்கள். சுதந்திராக் கட்சியாகட்டும்,

வேறு யாராகட்டும். நாங்கள் வேறுபாடு இல்லாமல் நடந்து கொள்ளுகிறோம். நமது மாண்புமிகு லேடி மெம்பர், அம்மையார் அவர்கள், திருச்செந்தூரில் உள்ள வங்கியைக் கலைத்துவிட்டீர்களே என்று கவலையோடு சொன்னார்கள்.

THIRU K. M. SUBRAMANIAM : I do not get even one pie out of that Rs. 41 lakhs. I heard the Hon. Minister say that Rs. 41 lakhs have been given to the Congress Party.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Congress Thyagi, I said.

THIRU K. M. SUBRAMANIAM : I am sorry then.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, எனது வெட்டுத் தீர்மானத்தில் சொல்லப்பட்ட விஷயத்தை நான் பேசவில்லை என்று கூறினார்கள். நான் விளக்கம் கேட்பது என்னவென்றால், கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைக்கப்பட்டிருக்கின்ற நிலவள வங்கிகளில் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்களில் யாரையாவது நீங்கள் போட்டிருக்கிறீர்களா என்று.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, அதைத்தான் அவர்கள் சொல்லுவார்கள் என்று எதிர்பார்த்தேன். ஏனென்றால் அவர்களுக்கு 'அங்கத்தினர்கள்' என்பதற்கும் 'இயக்குநர்கள்' என்பதற்கும் வேறுபாடு தெரிந்ததாகத் தெரியவில்லை. வெட்டுத் தீர்மானம் கொடுத்திருப்பதில், அங்கத்தினர்களை நியமித்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். எங்கும் அங்கத்தினர்களை நியமனம் செய்யவில்லை. இயக்குநர்களைத்தான் நியமனம் செய்வார்கள். வெட்டுத் தீர்மானத்தைப் பற்றிப் பேசினால், அவர் எவ்வளவு தூரம் கூட்டுறவுத் துறையைப்பற்றித் தெரிந்து கொண்டிருக்கிறார் என்பது வெளிவந்து விடும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

தென்காசி வங்கியில் நிலுவை அதிகமாக இருந்தது என்பதற்காக அதிகாரிகளெல்லாம் ஓடி ஓடிச் சென்று அதிக நிலுவையைக் குறைத்து இருக்கும்போது ஏன் திருச்செந்தூர் வங்கியைக் கலைத்தார்கள் என்றால், அவர்கள் என்ன நினைத்துக் கொண்டு பேசுகிறார்கள் என்று எனக்குத் தெரிகிறது. திருச்செந்தூர் வங்கியில் யாரோ ஒருவர், அவர்கள் கட்சியைச் சேர்ந்தவர் தலைவராக இருந்ததாகவும், ஆகவே வேண்டுமென்றே கலைத்து விட்டதாகவும் எண்ணிக் கொண்டு சொல்லியிருக்கிறார்கள். நல்ல வேளையாக இதைச் சொன்னார்கள். காரணம், இவ்வாறு கலைக்கப்பட்ட வங்கியின் தலைவராக இருந்தது திராவிட முன்னேற்றக் கழகத்தவர் தான், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் அல்ல. திராவிட முன்னேற்றக் கழகத்தவர் நிர்வகிக்கும் வங்கியாக இருந்தாலும், வேறு எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் நிர்வகிக்கும் வங்கியாக





இருந்தாலும், இந்த அரசு கட்சி அடிப்படையில் பார்க்காது, அது செயல்படும் முறையைப் பார்த்தே நடவடிக்கை எடுத்துக் கொள்கிறது என்பதற்கு இது ஒன்று போதும்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Does he belong to the opposite group of the D.M.K. which is supported by the Hon. Minister?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** திராவிட முன்னேற்றக் கழகத்தில் பல கோஷ்டிகள் இருப்பதாக எங்களுக்குத் தெரியவில்லை. அம்மையார் நல்ல வழக்கறிஞர் அல்லவா? சமாளிக்கிறார்கள். வாதத்தில் சற்று தோல்வி ஏற்படும் என்று தெரிந்தால் எப்படிச் சமாளிக்கவேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியும் அவர்கள் எந்த எண்ணத்தோடு சொன்னார்கள் என்பதை நான் அறிவேன். அவர் யாரைக் குறிப்பிட்டுச் சொன்னாரோ அவர் காலமாகிவிட்டார். அடுத்து நடந்த தேர்தலில்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருந்தார். ஆயினும், மற்ற இடங்களில் நடப்பது போலத்தான் இங்கும் நடந்தது. அவர் எங்கள் கட்சிக்காரர் என்பது தெரியும். கார்டைக் கூடக் காட்டினார். ஆயினும் நீதி என்ற அடிப்படையில் தான், இந்த இயக்கம் வெற்றிகரமாக நடைபெறுவதற்குக் குந்தகமாக இருக்கிற தடைகள் அகற்றப்பட வேண்டும் என்ற அடிப்படையில் தான் இந்த அரசு செயல்படுகிறது என்பதற்கு அவர்கள் வாயில் இருந்து வந்த இந்த ஒன்றே நல்ல உதாரணமாகும். இந்த அரசு கட்சி வேறுபாடு இல்லாமல் செயல்படுகிறது என்பதற்கு இதுவும் ஒரு உதாரணம்.

நாங்கள் நிலவள வங்கிகளுக்கு இயக்குநர்களையோ, மற்றவர்களையோ நியமிக்கிறபோது எவ்வாறு நியமிக்கிறோம் என்றால், கட்சிக் கண்ணோட்டத்தோடு அல்ல. இது செயல்படுவதே நிலத்தை வளப்படுத்தத்தான். இந்த எண்ணத்தின் அடிப்படையில் யாருக்கு நம்பிக்கையிருக்கிறது என்று பார்த்தே செய்கிறோம். அப்படியின்றி இதில் நம்பிக்கை இல்லாதவர்களைப் போடுவது என்றால் உறுப்பினர்கள் சொன்னார்களே,—இது நிலவள வங்கியா, வழவழ வங்கியா என்பதாக—அதுபோல இது ஆகிவிடக்கூடாது என்பதற்காகத்தான், யாரை நியமித்தால் இது நல்லமுறையில் செயல்படும், நம்முடைய லட்சியம், நம்முடைய அடிப்படைக் கொள்கை வெற்றி பெறும் என்று பார்த்தேதான் நியமனம் செய்கிறோம்.

அடுத்து, உறுப்பினர்கள் வேறுபல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். சில இடங்களுக்கு சி.எஸ்.ஆர். தேவை என்றார்கள். குறிப்பிட்ட சில சங்கங்களைப் பற்றிச் சொன்னார்கள். "எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும்" என்பதுபோல அவற்றை எந்தக் கட்சி உறுப்பினர்கள் குறிப்பிட்டிருந்தாலும் அவற்றில் உள்ள உண்மைகளை ஆராய்ந்து இந்த இயக்கம் செவ்வையாகச் செயல்

[திரு. சி. பா. ஆதித்தனர்] [1971 ஜூலை 2

பட வேண்டிய காரியங்களை அரசு செய்யும். எடுத்துச்சொல்லப் பட்ட சிறுசிறு குற்றங்குறைகளை எல்லாம் களைவதற்கும் இந்த அரசு முற்படும்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது சிலர் இந்தத் துறையைப் பாராட்டிப் புகழ்ந்தும் சொன்னார்கள். குறிப்பாக திரு மணி அவர்கள் பேசுகின்றபோது இந்தத் துறை "அதிசய விளக்கு" என்றார்கள். அதிசய விளக்கை இயக்குவதற்கு அல்லாவுதீன் தேவை என்பதுபோல, இந்தத் துறையை இயக்குவதற்கும் நமக்கு மாண்புமிகு கருணாநிதி அவர்கள் கிடைக்க, அவர்களும் இதை வெகு நல்லமுறையில் இயக்கி வைத்துக்கொண்டிருக்கி றார்கள். இத்துறை இன்னும் சிறப்பாகச் செயல்பட உறுப்பினர்கள் அரிய பல கருத்துக்களைச் சொல்லி ஊக்குவித்ததற்காக நான் மகிழ்ச்சியடைவதோடு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உறுப்பினர்கள் எல்லாம் இன்னமும் சின்னஞ்சிறு சச்சரவுகளில் கவனம் செலுத்தவேண்டுமா? நமது மாநிலத்தில் 25 ஆயிரம் கூட்டுறவு அமைப்புகள் இருக்கின்றன. அவற்றில் இது சொள்ளை இது சொத்தை என்பதாகத்தான் கவனத்தைச் செலுத்த வேண்டுமா? இதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நம்முடைய லட்சியம் என்ன? நாம் வைத்திருக்கக்கூடிய திட்டம் எத்தகையது? நம் நாடு முன்னேறுவது மட்டுமல்ல—பொருளாதாரத் துறையில் தாழ்ந்து கிடக்கிற நிலை மாறி, ஆசியாவில் உள்ள மற்ற நாடுகளை விட, தென் அமெரிக்காவில் உள்ள வாழ்க்கைத்தரத்தைவிட இங்குள்ளவர்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதற்கு, பேரறிஞர் அண்ணா அவர்களால் வகுத்துக் கொடுக்கப்பட்ட நிலையில், நம்முடைய லட்சியத்தை அடைவதற்கு ஒன்றாகச் சேர்ந்து செயல் பட்டாக வேண்டாமா? அந்த லட்சியத்தை நாம் அடைய வேண்டும் என்பதற்காகத்தான் நமக்கெல்லாம் ஊக்கம் அளிக்கக் கூடிய வகையில் திரு. மணி போன்றவர்கள் இதை வெகுவாக ஆதரித்துப் பேசினார்கள் என்று நான் எடுத்துக் கொள்கிறேன்.

ஏறத்தாழ எல்லாவற்றுக்கும் நான் பதில் அளித்திருக்கிறேன் என்றாலும், ஒன்றிரண்டு விடுபட்டிருக்கலாம். ஆயினும், இங்கே கூறப்பட்ட கருத்துக்கள் அனைத்தையும் நான் கவனித்து இந்தத் துறை நல்லமுறையில் செயல்பட ஆவன செய்கிறேன். வெட்டுத் தீர்மானங்களில் உள்ள கருத்துக்களை எல்லாம் ஆராய்வதற்குத் தயாராய் இருக்கிறேன். ஆகவே இந்த மானியத்திற்குக் கொடுக்கப் பட்ட வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் மாண்புமிகு உறுப் பினர்கள் திரும்பப் பெற்று இந்த மானியத்தை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொண்டு உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** மீஞ்சூர் நிலவள கூட்டுறவு வங்கியில் பணம் அடைக்கவில்லை என்று சொன்னேன். அடைபட்டு விட்டதா? அடைபடுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக் கிறதா என்பதை விளக்கவேண்டும்.



1971 ஜூலை 20]

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்:** அவர்கள் முன்னடியே சொன்னார்கள் மறுக்கவில்லை. அவர் சொன்னது திரு. பொன்னப்ப நாடாருக்கு நேர் எதிராக உள்ளவரைப்பற்றியது. இவரை எதிர்த்துப் போட்டியிட்டவரைப்பற்றியது. யாரையும் இந்த அரசு சும்மா விடுவதில்லை. வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Certain deeds of misappropriation also were told about a co-operator from Tirunelveli district—Thiru A. P. C. Veerabahu. Has any action been taken?

THE HON. THIRU Si. Pa. ADITANAR: The particular friend mentioned by the hon. Member who belonged to her party, but who unfortunately now belongs to a different party has resigned his position. We are now looking into it and into the old accounts and the financial position.

**திரு. சோ. அழகர்சாமி:** ஒரு விளக்கம். தவணைகள் குறைவாக இருப்பதால் வாங்கிய முன் கடனை அடைக்க முடியாது வேறு கடன் பெற முடியாத நிலையை மாற்ற நீண்டகாலக் கடன் தவணையை அதிக ஆண்டுகளாக ஆக்க வழிசெய்வார்களா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்:** முன்கடன் தீர்ப்பதைப் பற்றிச் சொன்னார்கள். முன் கடன் எதற்காக வாங்கப்பட்டது என்பதுதான் முக்கியம். குடும்பச் செலவு, வீட்டிலுள்ள பெண் கல்யாணம் என்பதற்காக வாங்கப்பட்டதாக இருந்தால் கொடுக்க முடியாது. 1968-ஆம் ஆண்டு சட்டசபையிலேயே நாம் நிலத்தை வளப்படுத்துவதற்காக முன் கடன் வாங்கப்பட்டிருந்தால் அந்த அடமானத்தின் மீதிலேயே மீட்டும் கடன் பெற ப்ரையாரிடி கொடுக்க வழி செய்திருக்கிறோம்.

நீண்டகாலக் கடனை 20 ஆண்டு, 30 ஆண்டு என்று கொடுக்கக் கூடாதா என்றார்கள். பணம் அடிப்படையாக எப்படி வருகிறது என்று பார்க்க வேண்டும். நாம் ரிசர்வ் வங்கியில் வாங்கி, டிபெஞ்சர் மூலம்—12 வருடங்களில் அடைப்பதாக, 15 வருடங்களில் அடைப் பதாகக் கடன் வாங்கி விவசாயிகளுக்குக் கொடுக்கிறோம். இவர் களிடம் இருபதாண்டு, முப்பதாண்டு தவணையில் கொடுப்பது என்றால் பன்னிரண்டு வருடங்கள் கழித்து, பதினைந்து வருடங்கள் கழித்து நாம் யாரிடம் கடன் வாங்கியிருக்கிறோமோ அவர்களுக்கு எப்படித் திருப்பிக் கொடுப்பது என்பதையும் பார்க்கவேண்டும். ஆகவேதான், நாம் 12 வருடங்களில் தருவதாக வாங்கியுள்ள கடனை விவசாயிகளிடத்தில் 7 வருடங்கள், பத்து வருடங்கள் என்பதாக நீண்ட காலக் கடனை அந்தப் பன்னிரண்டு வருடங்களுக்கு மேலே போகாமல்தான் கொடுக்கவேண்டியதாக இருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், குறைந்தகாலக் கடன்களைப் பொறுத்தவரையில் வாழை, கரும்பு போன்றவைகளுக்கு ஓர் ஆண்டும், நெல்லுக்கு 6 மாதமும் தவணை இருக்கிறது. அதைப்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1971 ஜூலை 20

பதினைந்து மாதமாக மாற்றிக் கொடுத்தால் வசதியாக இருக்கும் என்று சொல்கிறார்கள். ஆகவே, அதை நீட்டிப்பதற்கு ஆலோசனை ஏதாவது இருக்கிறதா? அடுத்து, காதி போர்டின்கீழ் மவுண்ட் ரோடில் தையல் மெஷின்கள் வைத்து 22 பேர்கள் வேலை செய்து வந்தார்கள். அந்த யூனிட் மூடப்பட்டு, இப்போது கான்ட்ராக்டரிடம் விடப்படுவதால் அந்த 22 பேரும் வேலையில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பு அளிக்கப்படுமா? நான் இதைக்குறித்து வெட்டுப் பிரேரணைகூட கொடுத்திருந்தேன். அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் போகிறார்கள்?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவர் அவர்களே, மவுண்ட் ரோடில் உள்ள விவகாரம் பற்றிச் சொன்னார்கள். அது பற்றி என்னிடம் விவரம் இல்லை. அப்படியிருந்தால் உடனடியாக அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய கடமை எனக்கு உண்டு. அதைப் பார்த்து அதற்கு என்ன செய்ய வேண்டுமென்று முடிவு எடுக்கப்படும்.

அடுத்தது பயிர்க் கடன் என்று சொன்னார்கள். பாங்கு என்றால் ஒரே வகையான பாங்கு அல்ல. நிலத்தை வளப்படுத்தக் கடன் கொடுக்கிறோம், அதேபோல பயிருக்கும் கடன் கொடுக்கிறோம். நெல் 6 மாதங்களில் அறுவடையாகிவிடுகிறது. சில வகை நெல் 110 நாளில்கூட அறுவடையாகிறது. வாழை ஒரு வருடத்தில் பயிராகிறது. ஆகவே, இதற்கு 15 மாதம் என்று அளவிட்டு இருக்கிறோம். தென்னை மரம் போன்றவற்றிற்கு 7 வருடம் கொடுக்கிறோம். கன்னியாகுமரி மாவட்டத்தில் இருப்பவர்களுக்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம். இதை அவர்கள் பயன்படுத்திக்கொள்ளலாம். தென்னங்கன்றுகளுக்காக 3 கோடி ரூபாய் வரையில் கடன் கொடுப்பதற்கு இருக்கிறோம். அதை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

**திரு. என். கணபதி:** தலைவர் அவர்களே, எங்களுக்குப் பசி எடுக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பகல் உணவைச் சாப்பிட்டு விட்டாரா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது பசுமைப் புரட்சிக்காக நடைபெறுகிற விவாதம். அங்கத்தினர் அவர்கள் பசிப் புரட்சியைத் தாங்கிக்கொள்ள வேண்டும்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, நிலவள வங்கியில் கட்சி சார்பற்ற அங்கத்தினர்கள் என்பதற்கு இயக்குநர் என்று தெரிவித்தார்கள். அந்த இயக்குநராவது கட்சி சார்பற்ற முறையில் போடப்படும் என்ற வாக்குறுதி அளித்தால் நலமாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** நியமனம் செய்யும்போது என்ன கட்சி என்று கேட்பது இல்லை.



1971 ஜூலை 20]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இத்துடன் விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு உறுப்பினர்களின் வெட்டுத் தீர்மானங்களை வாக்கெடுப்புக்கு விட வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ், திரு. கே. டி. கே. தங்கமணி, டாக்டர் ஹாண்டே ஆகியோர் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தவில்லையாதலால், அவை, பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

திரு. கே. என். குமாரசாமி அவர்கள் தன்னுடைய இருக்கையில் இல்லாததால், அவருடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெறப் பட்டதாகக் கருதப்பட்டது.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 5,88,01,700 under Demand No. 19—Co-operation.'

The Demand was put and carried and the Grant was made.

THIRU R. PONNAPPA NADAR: Sir, I am not pressing my cut motion to Demand No. 22 in view of the clarification given by the Hon. Minister.

The cut motion of Thiru Ponnappa Nadar was, by leave, withdrawn.

THIRU K. T. K. THANGAMANI: Sir, I am not pressing my cut motion in view of the explanation given by the Hon. Minister.

The cut motion of Thiru K. T. K. Thangamani, was by leave withdrawn.

DR. H. V. HANDE: Sir, I am not pressing my cut motion.

The cut motion of Dr. H. V. Hande was, by leave, withdrawn.

As hon. Member Thiru K. N. Kumaraswamy was not in his seat his cut motion was deemed to have been withdrawn.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 33,50,400 under Demand No. 22—Khadi.'

The Demand was put and carried and the Grant was made.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இத்துடன் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்று, பேரவை மீண்டும் நாளை காலை 9 மணியளவில் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

**4. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.**

A. *Statutory Rules and Orders.*

167. Notification issued with G.O. Ms. No. 1956, Agriculture, dated the 29th June 1967, in regard to certain amendments to the Rules to regulate the pursuit of game in Palani Hills in Madurai District. [Laid on the Table of the House under section 64-A of the Tamil Nadu Forest Act, 1882 (Tamil Nadu Act V of 1882)].

168. Balance Sheet and Profit and Loss Account of the Tamil Nadu Warehousing Corporation for the year 1968–69. [Laid on the Table of the House under section 31 (11) of the Warehousing Corporation Act, 1962 (Central Act 58 of 1962)].

B. *Reports, Notifications and Other Papers.*

@ 144. Policy Note on Co-operation (English and Tamil).

@ 145. Review of the Progress made in Co-operative Development Schemes, duringg the year 1970–71 (English and Tamil).

@ 146. Policy Note on Khadi and Village Industries Board (Tamil Nadu) (English and Tamil).

£ 147. A Review on Nationalised Transport in Tamil Nadu 1970–71 (English and Tamil).

---

@ Despatched to Members on 17th July 1971.
£ Despatched to Members on 19th July 1971.





**இணைப்பு I**

[276-ம் பக்கத்தில் 294-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குறிய விடையைக் காண்க].

**விடை—**

| உர வகைகள். | மத்திய அரசு மத்திய உரத் தொகுப்பிலிருந்து மாநில அரசுக்கு வழங்கும் உரங்களின் விவரம். | மாநில அரசு நிர்ணயம் செய்துள்ள உயர் வரம்பு உர விலைகள் (விவசாயிகளுக்கு வழங்க) விவரம். | மாநில அரசு உரங்களை விவசாயிகளுக்கு வழங்கும் விலை. (அதாவது 1–3–1969 முதல் நிர்ணய விலைகளின்படி). |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (மெட்ரிக் அளவில்.) | | |
| | ரூ. | ரூ. | ரூ. |
| 1. அமோனியம் சல்பேட்— | | | |
| (1) 50 கி.கி. .. .. | 485·00 | 557·90 | .. |
| (2) 100 கி.கி. .. .. | 474·00 | 546·50 | .. |
| 2. யூரியா .. .. .. | 843·00 | 933·42 | .. |
| 3. அமோனியம் சல்பேட் நைட்ரேட் .. .. .. | 564·00 | 642·76 | |
| 4. கால்சியம் அமோனியம் நைட்ரேட் 20·5 சத விகிதம் | 385·00 | 451·30 | 448·25 |
| 5. கால்சியம் அமோனியம் நைட்ரேட் 26 சத விகிதம்— | | | |
| (1) காகித உறை .. .. | 455·00 | 529·94 | 522·70 |
| (2) சணல் உறை .. .. | 515·00 | 592·04 | 534·40 |
| 6. அமோனியம் பாஸ்பேட் .. | 814·00 | 905·51 | 819·60 |
| 7. டை அமோனியம் பாஸ்பேட் .. | 1,122·00 | 1,232·39 | 1,098·88 |
| 8. அமோனியம் குளோரைட் .. | 484·00 | 557·87 | 520·63 |
| 9. மூரியேட் ஆப் பொட்டாஸ் .. | 473·00 | 541·31 | 503·10 |
| 10. நைட்ரஜன், பாஸ்பரஸ் பொட்டாஷ் கலவை உரம்— | | | |
| 14 : 14 : 14 .. .. | 755·00 | 859·05 | 802·13 |
| 14 : 28 : 14 .. .. | 1,047·00 | 1,176·80 | 1,097·10 |
| 15 : 15 : 15 .. .. | 832·00 | 943·93 | 869·40 |
| 12 : 24 : 12 .. .. | 830·00 | 947·03 | 947·03 |

| Serial number and name of the Fertiliser. | Cost at which the Government of India supplies pool fertilisers to the State Government. | Maximum retail price fixed by the State Government for supply to the cultivators. | Concessional price adopted for sale of stocks as per 1—3—69 rates. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (IN METRIC TONNES.) | | |
| | RS. | RS. | RS. |
| 1. Ammonium Sulphate— | | | |
| (i) 50 kg. .. .. | 485·00 | 557·90 | — |
| (ii) 100 kg. .. .. | 474·00 | 546·50 | — |
| 2. Urea .. .. .. | 843·00 | 933·42 | — |
| 3. Ammonium Sulphate Nitrate .. .. | 564·00 | 642·76 | — |
| 4. Calcium Ammonium Nitrate (20·5 per cent) | 385.00 | 451·30 | 448·25 |
| 5. Calcium Ammonium Nitrate (26 per cent)— | | | |
| (i) Paper Packing | 455·00 | 529·94 | 522·70 |
| (ii) Jute Packing .. | 515·00 | 592·04 | 543·40 |
| 6. Ammonium Phosphate .. | 814·00 | 905.51 | 819·60 |
| 7. Di-Ammonium Phosphate | 1,122·00 | 1,232·39 | 1,098·88 |
| 8. Ammonium Chloride .. | 484·00 | 557·87 | 520·63 |
| 9. Muriate of Potash .. | 473·00 | 541·31 | 503·10 |
| 10. N.P.K. Complex: | | | |
| 14 : 14 : 14 .. .. | 755·00 | 859·05 | 802·13 |
| 14 : 28 : 14 .. | 1,047·00 | 1,176·80 | 1,097·10 |
| 15 : 15 : 15 .. | 832·00 | 943·92 | 869·40 |
| 12 : 24 : 12 .. | 830·00 | 947·03 | 947·03 |



## இணைப்பு 2.

[309-ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

**மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனர் : 1971-72-ஆம் ஆண்டுக்குரிய மானியக் கோரிக்கையை 1971-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 20-ம் நாள் அன்று சட்டமன்றப் பேரவை முன் வைத்து ஆற்றும் உரை.**

பேரவைத் தலைவர் அவர்களே !

கூட்டுறவுக் கொள்கையை விவாதிப்பதற்காக ஏராளமான வெட்டுத் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதால், இம் மாநிலத்திலே கூட்டுறவு இயக்கத்தின் பொதுக் கொள்கை குறித்தும், வருங்காலம் குறித்தும் எனது குறிப்புரைகள் சிலவற்றைத் தருவது பொருத்தமுடையதாக இருக்குமென்று நினைக்கிறேன்.

1. கூட்டுறவு என்பது எவ்வளவுதான் விரும்பத்தக்கதாக இருந்தாலும், அதுவே நமது குறிக்கோள் அல்ல **என்பதையும்** நமது குறிக்கோளை எய்துவதற்கு அது ஒரு **வழியே என்பதையும்** நாம் கருத்தில் கொள்ள வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமது வரவு-செலவுத் திட்ட உரையில் தெளிவாக விளக்கிக் கூறிய அரசியல்-சமூக நோக்கங்களுக்கிணங்க பொருளாதாரக் குறிக்கோளை எய்துவதற்குக் கூட்டுறவு என்பது ஒரு கருவியாகும்.

2. இம் மாநில மக்களின் செல்வ நிலையை விரைந்து பெருக்குவது, அதாவது, மக்களின் நபர்வாரி வருமானத்தை Income பெருக்குவது, நமது பொருளாதார இலட்சியம் என்று கூறுவது கூட்டுறவுத் துறைக்குப் பொருந்தும்.

3. தமிழ்நாட்டிலே நபர்வாரி ஆண்டு வருமானம் தற்போது ரூ. 503 ஆக இருக்கிறது. பிற மாநிலங்களின் நபர்வாரி வருமானம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | ரூ. |
|---|---|
| ஆந்திரப் பிரதேசம் .. .. .. .. | 449 |
| பீஹார் .. .. .. .. .. .. | 294 |
| மகாராஷ்டிரம் .. .. .. .. .. | 606 |
| பஞ்சாப் .. .. .. .. .. .. | 751 |

4. பிற நாடுகளுடன் நமது நாட்டின் வாழ்க்கைத்தரத்தை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கென, பிற நாட்டு மக்களின் நபர்வாரி வருமானம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | ரூ. |
|---|---|
| ஆசியா— | |
| பாகிஸ்தான் .. .. .. .. .. | 810 |
| இலங்கை .. .. .. .. .. | 990 |
| இஸ்ரேல் .. .. .. .. .. | 8,685 |
| ஜப்பான் .. .. .. .. .. | 6,908 |
| கொரியா .. .. .. .. .. | 1,050 |
| பிலிப்பைன்ஸ் .. .. .. .. | 1,748 |

[1971 ஜூலை 20

| | ரூ. |
|---|---|
| ஆப்பிரிக்கா— | |
| எகிப்து .. .. .. .. .. | 1,245 |
| கென்யா .. .. .. .. .. | 750 |
| தென் அமெரிக்கா— | |
| பிரேஸில் .. .. .. .. .. | 1,890 |
| அமெரிக்கா .. .. .. .. .. | 24,773 |
| இங்கிலாந்து .. .. .. .. .. | 11,700 |

5. இந்தியாவில் உள்ள ஏனைய மாநிலங்கள், வெளிநாடுகள், இவற்றிலே இருக்கின்ற வாழ்க்கைத்தரத்தினை நாமும் அடைய வேண்டுமானால், நாம் நத்தை வேகத்தில் முன்னேறிக் கொண்டிருந்தால் போதாது. நமது வாழ்க்கைத்தரம் உயரும்வரை, பிற நாடுகள் முன்னேறாமல் அப்படியே இருக்காதென்பதால், நாம் பிற நாடுகளை மிஞ்சும் வகையில் பந்தயக் குதிரை வேகத்தில் பறந்தோட வேண்டும். ஜப்பானில் பொருளாதார முன்னேற்றம் ஆண்டொன்றுக்கு 15 சத வீதம் உயர்ந்து, நமது முன்னேற்றம் 5 சத வீத அளவிலேயே இருந்தால் ஆண்டுகள் செல்லச் செல்ல நமக்கும் பிற நாட்டவர்களுக்கும் உள்ள இடைவெளி விரிந்து கொண்டே போகும். எனவே, நமது பொருளாதார முன்னேற்றம் ஆண்டுதோறும் 50 சத வீத அளவிற்கு உயரும் வகையில் நமது வளர்ச்சி வேகம் அமைய வேண்டும்.

6. நமது நபர்வாரி வருமானத்தை எப்படி **உயர்த்துவது?** எந்த முறையில் உயர்த்துவது? "மாநிலத்தைத் தொழில் மயமாக்க வேண்டும்; தொழில்களைத் தொடங்க வேண்டும்; மேலும் பல தொழில்களைத் தொடங்க வேண்டும்; பெரிய தொழில்களைத் தொடங்க வேண்டும்", என்பதே இதற்கு வழக்கமாகக் கூறக் கூடிய ஒரு விடையாக இருக்கிறது.

இந்த விடையை அமெரிக்க அரசாங்கம் சோதித்துப் பார்த்து சரியெனக் கண்டறிந்ததாகக் கூறப்படுகிறது. இதைக் குறித்து சோதனை ஒன்று "போர்டோரீகோ" என்ற சிறு நாட்டில் செய்து பார்க்கப்பட்டது. அங்கே அனைத்து வகைகளையும் சார்ந்த நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகள் அடுத்தடுத்து விரைந்து தொடங்கப்பட்டன. இதன் பயனாக இந்தச் சின்னஞ்சிறு தீவிலே ஆண்டுதோறும் ரூ. 900 ஆக இருந்த தொழிலாளர் ஊதியம் ரூ. 7,500 ஆக உயர்ந்தது.

**7. மறைந்த முதல்வர் பேரறிஞர் அண்ணா இதைப்பற்றி நேரில் கண்டறிவதற்காக 1968-ஆம் ஆண்டில் நெடுந்தூரம் பயணம் செய்து இந்தத் தீவினை அடைந்தார். அங்கே இந்தச் சோதனை வெற்றிகரமாகச் செயல்பட்டு வருவதை நேரில் கண்டார்.**

**அதே நேரத்தில், மேற்கத்தியப் பொருளாதார வல்லுநர்களால் உருவாக்கப்பட்ட இந்தப் பொருளாதாரக் கோட்பாட்டினை இந்தியாவுக்குப் பயன்படுத்துவதென்றால், அதிலும் குறிப்பாக கடும்**



1971 ஜூலை 20]

வெயில் காயும் பகுதியில் இருக்கும் தமிழ்நாட்டிற்குப் பயன்படுத்துவதென்றால், அதனை ஓரளவு மாற்றியமைக்க வேண்டுமென்பதையும் அறிஞர் அண்ணா எடுத்துரைத்துள்ளார்.

8. ஒரு மாநிலத்திலே ஒரு சில பெருந்தொழிற்சாலைகள் இருந்தால், அந்த மாநில மக்களின் சராசரி வருமானம் பெருகிவிடும் என்று எவரேனும் கூறுவதாயிருந்தால், இந்தியாவிலேயே பீஹார் மாநிலத்தில் மாபெரும் உருக்காலைகளும், உர ஆலைகளும் இருப்பதால் அதுவே இந்தியாவில் வளங்கொழிக்கும் மாநிலமாக இருக்க வேண்டும். ஆனால், அதுதான் இந்தியாவிலேயே மிக வறிய மாநிலமாக இருக்கின்றது. அங்கு நபர்வாரி ஆண்டு வருமானம் ரூ. 294 ஆகத்தான் இருக்கின்றது. இதற்கு மாறாக, வேளாண்மைக்கு முதலிடம் அளித்துவரும் பஞ்சாப் மாநிலத்தில் நபர்வாரி ஆண்டு வருமானம் ரூ. 751 ஆக இருப்பதால், அதுவே இந்தியா முழுவதிலும் நபர்வாரி வருமானத்தில் முன்னணியில் இருக்கிறது.

9. எனவே, அறிஞர் அண்ணாவின் கருத்தைப் பின்பற்றி, இம் மாநிலத்தின் நபர்வாரி வருவாயைப் பெருக்க அடிப்படையாகவும் முக்கியமாகவும் வேளாண்மையைக் கொள்ள வேண்டும் என்று தமிழக அரசு நம்புகிறது. நான்கு கோடி மக்கள் தொகையில், 75 சதவீதம், அதாவது, 3 கோடி மக்கள் கிராமப்புறங்களில் வசிக்கின்றனர். 3 கோடி ஏக்கர் விளைச்சல் நிலங்களில் ஒவ்வொரு ஏக்கரிலிருந்தும் ஆண்டொன்றுக்கு ரூ. 3,000 வருவாய் கிடைக்குமேயானால், நபர்வாரி வருவாய் ஆண்டொன்றுக்கு ரூ. 3,000 ஆகும். தற்போதைய சராசரி வருமானத்தை விட இது 6 மடங்கு அதிகமாகும். ஜப்பான், இஸ்ரேல் நாடுகளைத் தவிர, ஆசியா, தென் அமெரிக்கா, ஆப்பிரிக்கா கண்டங்களிலுள்ள நாடுகள் அனைத்தையும் விட தமிழ்நாட்டின் நபர்வாரி வருவாய் மிக அதிகமாக இருக்கும். கணக்கு அளவில் பார்த்தால் இது சரி என்று எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். ஆனால் உள்ளடங்கியிருக்கும் அடிப்படை ஒன்று உள்ளது. அதாவது ஒவ்வொரு ஏக்கர் நிலத்திலிருந்தும் ரூ. 3,000 வருவாய் ஈட்டப்பட்டாக வேண்டும்.

10. கூட்டுறவு இயக்கத்தினால் இதைச் செய்ய முடியும் என்று திட்டவட்டமாகக் கூற முடியும். வெப்ப நாடுகளில் வேளாண்மையின் வாயிலாக அதிக உற்பத்தித் திறனை நாம் எய்த முடியும். இந்தியாவைப் போன்ற புவியியல் அமைப்புடைய நாடுகளில் வேளாண்மை ஒரு தொழில் வகை என்பது மட்டுமல்லாமல் பிற தொழில்களை விட அதிக வேலை வாய்ப்பும் தரத்தக்கதாகும்.

1971-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16-ம் நாளிட்ட "எக்கனமிக் டயம்ஸ்" இதழில், பஞ்சாப் மாநிலத்திலுள்ள லூதியானாபற்றி முக்கிய செய்தித் துணுக்கு ஒன்று வெளியாகியுள்ளது :—

"1970-71-இல் தோல் பதனிடு தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 7,015 இலிருந்து 687 ஆக குறைந்தது. கைத்தறி நெசவுத் தொழிலிலுள்ள நெசவாளர்களின் எண்ணிக்கையும் 2,713-லிருந்து 1,417 ஆகக் குறைந்து

[1971 ஜூலை 20

விட்டது. இதற்குக் காரணம் வேளாண்மைப் பெருக்கமேதான். அதில் ஆதாயம் அதிகம் கிடைக்கின்றது. எனவே பிற தொழில்களிலிருந்து வேளாண்மைக்கு ஏராளமான தொழிலாளர்கள் மாறிச் செல்கின்றனர்".

11. தமிழ்நாட்டில், வேளாண்மை ஒரு தொழிலாகக் (Industry) கருதப்பட வேண்டும். இந்தத் தொழிற்சாலைக்கு வேண்டிய மூலப்பொருட்கள் சூரிய வெப்பமும், தண்ணீரும் (விதைகள், உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள் நீங்கலாக). ஐரோப்பாவில் வருடந்தோறும் 60 நாட்கள் சூரிய வெப்பமும் மற்ற நாட்களில் கடுங்குளிரும் காணப்படுகிறது. ஆனால், இங்குள்ள நிலைமையோ அப்படியல்ல. ஆண்டில் 350 நாட்களுக்கு நாம் சூரிய வெப்பம் பெறுகிறோம். ஆண்டு முழுவதும் பயிர் செய்ய நமக்கு வசதியுள்ளது. ஆண்டு ஒன்றுக்கு நான்கு பயிர்களைப் பயிரிடமுடியாவிடின் மூன்று பயிர்களையாவது பயிரிடமுடியும். இதனால் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 3,000 முதல் 4,000 வரை வருவாய் கிடைக்கும். இதன் வாயிலாக அதே அளவுக்கு நபர்வாரி வருவாய் உயரும். இந்நோக்கத்தை எய்த வேண்டிய மூலப்பொருட்கள் நம்மிடம் ஏராளமாக உள்ளன. இயற்கை அள்ளி வழங்கும் கதிரொளியும், கூட்டுறவு இயக்கம் அளிக்கும் நீருமே இந்த மூலப்பொருட்களாகும்.

12. "நீர்" என்னும்போது, தமிழ்நாட்டில், அதுவும் குறிப்பாக தென் மாவட்டங்களில் மிகச் சொற்பமாக உள்ள மழையை நான் குறிப்பிடவில்லை. அப்பகுதிகள் மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கும் இலங்கை மலைகளுக்கும் இடையில் உள்ள "மழை மறைவுப்" பகுதியாகும். மேலும் இம்மாநிலப் பரப்பில் பத்தில் ஒரு பாகத்துக்குக் கூடப் பாசனவசதிக்குப் போதுமானதாயிராத நீரைக் கொண்டு செல்கிற ஆறுகளைப் பற்றியும் நான் குறிப்பிடவில்லை. "நீர்" என்னும்போது ஊற்று நீரை, அதாவது நில மட்டத்துக்கு அடியில் உள்ள நீர் வளத்தைத்தான் நான் குறிப்பிடுகிறேன். தென் ஆற்காடு, தஞ்சாவூர் (திருப்பனந்தாள், வடபாதிமங்கலம், ஒரத்தநாடு முதலியன), புதுக்கோட்டை, கிழக்கு இராமநாதபுரம் மாவட்டங்களில் பொங்கு நீர் ஊற்றுகளும் ( Artesian wells ) உள்ளன.

13. ஊற்று நீரை மேல் மட்டத்திற்குக் கொண்டு வந்து பயிர் விளைச்சலுக்குக் கிடைக்கச் செய்வது கூட்டுறவுத் துறையின் பணியாகும். திரவ வடிவிலான தங்கத்தைத் தோண்டியெடுப்பதற்கு ஒப்பாகும் இப்பணி. இப்பணி கடினமானதென்றாலும், இதனால் கிட்டும் பலன்கள் மகத்தானவை. பணம், ஆள்வளம், கருவிகள் இவை மூன்றினையும் ஒருங்கு திரட்டுவதற்காக கூட்டுறவுத் துறை மும்முனை முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

14. முதலாவதாக, நிலவள வங்கிகளின் பங்கு மூலதனம், கிளைகள் ஆகியவை வலுப்படுத்தப்பட்டுள்ளன. நிதி வசதியைப் பெருக்குவதற்காக இம்மாநிலத்திற்கு வெளியிலும் உலகெங்கிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உலக வங்கியுடன் பேச்சு



1971 ஜூலை 20]

வார்த்தைகள் நடத்துவதற்காக மாநில நிலவள வங்கியின் தலைவரும், நிதித் துறைச் செயலாளரும், நில நீர்ப் பொறியாளர்களும், அமெரிக்காவிலுள்ள வாஷிங்டன் நகருக்குச் சென்று ஊற்று நீரை வெளிக் கொணர்வதற்கான பணிக்கென ரூ. 20 கோடி கடன் பெறுவதில் வெற்றி கண்டனர். பம்பாயிலுள்ள வேளாண்மை மறுநிதி உதவிக் கழகத்திடம், இம்மாநிலத்திற்குக் கூடுதலாக ரூ. 31 கோடி கடன் வழங்க ஒப்பளிப்பதற்கான செயற்குறிப்புகள் உள்ளன. மாநில நிலவள வங்கி சாதாரண கடன் ஈட்டுறுதி ஆவணங்களின் மூலம் இந்த ஆண்டில் ரூ. 21 கோடி கடன் திரட்ட இயலும். இவ்வாறு கூட்டுறவு மூலம், நிலவளத்திற்காக மொத்தம் ரூ. 78 கோடி நிதி வசதி கிடைக்கும். ஒரு கிணறுக்கும், மற்றொரு கிணறுக்கும் இடையில் 800 அடி இடைவெளி இருக்க வேண்டும். அதாவது, ஒவ்வொரு 15 ஏக்கர் நிலத்துக்கும் ஒரு கிணறுக்கு மேல் இருக்கக்கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டு உலக வங்கி கடன் வழங்கியுள்ளது. மேலெழுந்தவாரியாகப் பார்த்தால், இந்த நிபந்தனை கடுமையாகத் தோன்றக்கூடும். ஆனால், இந்தத் தடையைத் தாண்ட முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

15. வேளாண்மைப் பெருங்குடி மக்களை ஒருங்கு சேர்ப்பதே முன்சொன்ன முயற்சியின் இரண்டாம் முனை நடவடிக்கையாகும். நமது மாநிலத்தில் நில உடைமைகள் சிறு சிறு துண்டுகளாகப் பிரிந்துள்ளன. பெரும்பாலான குடிமக்கள் ஒரு ஏக்கருக்குக் குறைந்த நிலமுடையவர்களாவர். சமூகச் சீர்திருத்த ஏற்பாடாக, நில மேல் வரம்பை நாம் குறைத்துள்ளோம். எனவே, நிறுவனக் கடன் வசதியை உழவர்கள் பயன்படுத்திக் கொள்வதன்பொருட்டு அவர்களை ஓரளவு ஒருமைப்படுத்தவேண்டியது அவசியமாகிறது. ஆனால், கூட்டுரிமை, அல்லது கூட்டு முறையில் பயிரிடுதல் வகையில் ஏற்படும் ஒருமைப்பாட்டினை சிறு உழவர்கள் வரவேற்பதில்லை.

16. இவற்றிற்கெல்லாம் நாம் காணக்கூடிய ஒரே மாற்று வழி, கூட்டுப் பாசனம் அல்லது கூட்டுறவுப் பாசனமாகும். அதாவது, நீர் வழங்குவதில் மட்டுமே கூட்டுறவு மனப்பான்மை பொருந்தும் என்பதே இதன் பொருள். இந்த நோக்கத்தைக் கொண்டு, பாசனக் கூட்டுறவுக் கழகங்களை அமைக்க, சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. பாசனக் கூட்டுறவுகளை, உழவர்களாகவே உவந்து முன் வந்து அமைப்பதை விரைவுபடுத்தும்பொருட்டு, அமைப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர். சிறு குடியானவர்களுக்கு முதன் முதலாகப் பாசனக் கூட்டுறவு, செங்கற்பட்டு மாவட்டத்தில் அகரம் என்னுமிடத்தில் அமையப் பெற்றது. இம் மாநிலமெங்கும் இதை போன்று 100 முதல் 300 ஏக்கர் கொண்ட ஒருங்கிணைந்த பகுதிகள் பாசனக் கூட்டுறவுகளாக அமைக்கப்பட்டு வருகின்றன.

17. மூன்றாவது முனையாக, பயிரிடும் இயந்திரச் சாதனங்களும், அச்சாதனங்களைக் கையாளும் பொறியாளர்களும் திரட்டப்பட வேண்டும். கிணறுகள், குழாய்க் கிணறுகள் அமைக்கவும் நீர்க்

காப்புப் பணிகளை மேற்கொள்ளவும், தொழில் நுட்பம் தெரிந்த பணியாளர்கள் இன்றியமையாதவர்கள். இவ்வகையிலே, 6,000 வேளாண்மைப் பணி மனைகள் (Agro-Service Centres) தொடங்குவதற்கு பணித்திட்டமொன்றை மத்திய அரசு அண்மையில் தொடங்கியுள்ளது. தற்போது வேலையில்லாமல் உள்ள பொறியாளர்கள், தகுதிப் பட்டயதாரர்கள் (Diploma holders) ஒவ்வொருவருக்கும் கடனுதவி அடிப்படையில் ரூ 4 லட்சம் முதல் ரூ. 6 லட்சம் செலவில் சாதனங்கள் கொடுத்து அவர்கள் உதவியுடன் இந்த வேளாண்மைப் பணிமனைகள் அமைக்கப்படுகின்றன. தற்போது ஏற்பட்டுள்ள உடனடித் தேவையை நிறைவு செய்யவே இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளதால், இதை நிறைவேற்றுவதில் மாநில அரசு உரிய பங்கு ஏற்கும்.

18. நீர் வீணாகாமல் காக்கும் ஏற்பாடுகள் நடைமுறைக்குக் கொண்டு வரப்படவேண்டுமாயின், பொறியாளர், தொழில் நுட்பப் பணியாளர் ஆகியோரின் தொண்டு மிக முக்கியமானதாகிறது. தற்போதுள்ள பகுதியை விடப் பத்து மடங்குப் பகுதிக்குப் பாசனமளித்து, முப்போகமும் பயிரிடவேண்டுமானால், நமக்குக் கிடைக்கும் தண்ணீரை துளியும் வீணாக்காமல் காக்கவேண்டும். இவ்வாறு நீரைக் காக்கின்ற பெரு முயற்சியில் தொழில் நுட்பப் பணியாளரையே நாம் பெரிதும் சார்ந்துள்ளோம். பயிரிடும் முறையில் தற்போதுள்ள பழக்கவழக்கங்களின்படி, கிடைக்கும் நீரில் ஐந்தில் நான்கு பகுதி, கீழே நீர்க் கசிவினாலும், மேலே ஆவியாகப் போவதாலும் வீணாகிறது.

19. நீர் வீணாகி விடாமல் தடுப்பதற்குச் சிறந்த வழியென நிரூபிக்கப்பட்ட முறை ஒன்று, நில மேற்பரப்பிற்கு ஓரடிக்குக் கீழ் "நீர்த்தேக்கத் தளம்" அமைப்பதாகும். இந்த நீர்க்காப்புத் தளத்தை அமைப்பதற்காகும் மூலதனச் செலவு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 4,000 ஆகும். ஆனால், அதற்கு முன்பு ஒரு போகங்கூடப் பயிரிடாத நிலத்தில் ஆண்டொன்றுக்கு மூன்று போகம் விளைவித்தல் இயலும். கிணறு வெட்டவும், விசையேற்றம் நிறுவவும், நீர் காப்புத் தளம் அமைக்கவும், ஆண்டொன்றுக்கு மூன்று போகம் விளைவிக்கவும் விவசாயிகளுக்கு கடனுதவி புரிவது நிலவள வங்கி. அவ்வாறு உதவி பெறும் உழவர்கள் இரு போக வருவாயைத் தமக்கென்று வைத்துக்கொண்டு. மூன்றாவது போகத்திலிருந்து கிடைக்கும் வருவாயைக் கொண்டு வாங்கிய கடனை 10 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்திவிட முடியும்.

20. கடன் தொகையைத் திருப்பிக் கொடுக்கவேண்டுமென்று நான் சொல்லியிருப்பதை, சில விவசாயிகள் விருப்பமுடன் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். ஆனால், நான் அவர்களுக்குச் சொல்வேன், நமது வாழ்வில் பயனுள்ள ஒவ்வொன்றையும் நாம் விலை கொடுத்துத்தான் வாங்கியாக வேண்டும். எந்த ஒரு நிலச் சொந்தக்காரரும் தமது நிலம் இலவசமாக மேம்படுத்தப்படவேண்டும் என்று எதிர்பார்த்தால், அவர் தமது நலனுக்காக, நாட்டு மக்கள்



அனைவரும் வரிச்சுமை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று எதிர்பார்க்கிறார் என்றே பொருள்படும். அது நீதியுமல்ல, நியாயமுமல்ல. தரிசு நிலம், மூன்று போகம் தரும் விளை நிலமாக ஆக்கப்படும்பொழுது, வேளாண்மையாளர்கள் இரண்டு போக விளைவைத் தமக்கு வைத்துக்கொண்டு, மூன்றாவது போக விளைச்சலைக்கொண்டு ஒரு பத்து ஆண்டுக்காலத்துக்கு வங்கிக் கடனைத் திருப்பித் தருவதற்காகப் பயன்படுத்த வேண்டும்; 10 ஆண்டுகள் சென்ற பின் அவர்கள் 3 போக விளைச்சலையும் தாமே எடுத்துக்கொள்ளலாம்.

21. வேளாண்மைத் தொழில் நுட்ப அறிவியலில் ஏற்பட்டுள்ள புதிய முன்னேற்றங்களைப் பயன்படுத்திக்கொண்டும், ஆண்டு முழுவதும் கிடைக்கும் நீரைக்கொண்டும் உழவர் ஆண்டொன்றுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 3,000 வருமானம் ஈட்டலாம் என்பதில் ஐயமேதுமில்லை.

நிலத்திலிருந்து ஆண்டொன்றுக்கு ரூ. 3,000 வருமானம் ஈட்டலாம் என்பது குறைந்த அளவினதேயாகுமென்பதை "பூசா"வில் உள்ள வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்திற்கு நான் சென்றிருந்த போது கண்டறிந்தேன். அவ்வாராய்ச்சி நிலையத்திற்குப் பொறுப்பு வகித்த டாக்டர் சாமிநாதன், நிலையாக நீர் வழங்குவதன் மூலமும், தகுந்த பயிர்களை மாற்றி மாற்றிப் பயிரிடுவதன் மூலமும் தமிழ்நாட்டில் உழவர் ஒருவர் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 5,000 வருமானம் பெறலாம் என்று அவர் எனக்கு உறுதிபடக் கூறினார். அமோக விளைச்சலைத் தரும் நெற்பயிர், அதன் பின்னர் அற்புத நீண்ட இழைப் பருத்தியான சுஜாதா என்று இவ்வாறு மாற்றி மாற்றிப் பயிரிடுவதன் மூலம் ஆண்டொன்றுக்கு ரூ. 5,000 வருமானத்தை எளிதில் ஈட்ட முடியும். இவ்வகைப் பருத்தியை கோயம்புத்தூரில் வெளியிட்டு டாக்டர் சாமிநாதன் கூறினார் :—

> "இவ்வகைப் பருத்தியினாலும் முன்னரே கண்டுபிடித்துள்ள M. C. U. S. என்கிற பருத்தி ரகத்தினாலும் தமிழ் நாடு, பருத்தி விளையும் உலக நாடுகள் பொறாமை கொள்ளும் அளவுக்கு முன்னணியில் நிற்கும்"—இந்தியன் எக்ஸ்பிரஸ்", ஜனவரி 23, 1970.

22. பல்வேறு பயிர்களைப் பயிரிடுவதன் மூலம், வருவாய் பெருகும் என்பதற்கு எடுத்துக்காட்டாக கீழ்க்கண்ட ஏக்கர் வருமானங்களைச் சொல்லலாம் :—

(i) ரூ. 5,000 .. .. அமோக விளைச்சல் தரும் நெற்பயிர் ஒரு தடவை, "சுஜாதா" பருத்திப்பயிர் ஒரு தடவை.

(ii) ரூ. 5,000 .. .. அமோக விளைச்சல் தரும் நெற்பயிர் ஒரு தடவை, சூரியகாந்திப் பயிர் (என் 68415—77 நாட்கள்) இருதடவை.

(iii) ரூ. 5,000 .. .. இரட்டையாக நடப்படும் குட்டை வாழை ஒரு தடவை ("இந்து" நாளிதழ், ஆகஸ்ட் 25, 1969).

(iv) ரூ. 5,000 .. .. மஞ்சள், இடைப்பயிர்களுடன்" இந்தியன் எக்ஸ்பிரஸ்" (நாளிதழ், 19–10–1970).

(v) ரூ. 5,000 .. .. புதிய கலப்பின குச்சிக்கிழங்குப் பயிர்.

(vi) ரூ. 7,000 .. .. தென்னை, குட்டை வகை, கடற்கரை சார்ந்த மாவட்டங்களில் மிகுபயன் தருவது.

(vii) ரூ. 8,500 .. அன்னாசி (ஏக்கர் ஒன்றுக்கு 35,000 செடிகள்)—"இந்து," 31–3–1970.

(viii) ரூ. 25,000 .. திராட்சை (1970 மார்ச், வேளாண்மை கோரிக்கை குறித்த அரசுக் குறிப்பு).

23. வேளாண்மை பற்றிய ஆராய்ச்சியும், தொழில்நுட்ப் முறையும் பெருகியதன் விளைவாக, வேளாண்மையில் மேலும் அதிக வருமானத்தை எதிர்பார்க்கலாம். ஏக்கர் ஒன்றுக்குப் பயிரிடும் செடிகளின் எண்ணிக்கையை உயர்த்தி அதன் பலனை உற்பத்தியை அமோகமாகப் பெருக்கலாம் என்பது இத் துறையில் செய்துள்ள ஆராய்ச்சியின் நல்லதொரு கண்டுபிடிப்பு. "மக்கட் பெருக்கம், மனித வாழ்விற்கு நன்மை பயக்காமல் இருக்கலாம்; ஆனால் தாவரங்களை நெருக்கமாக அதிக அளவில் பயிரிடுவது மிகவும் பயன்தரத்தக்கதாகும்" கிளைகளை நீக்குதல் மூலம் ஏக்கர் ஒன்றுக்கு 40,000 முதல் 2,00,000 வரை தாவரங்கள் பயிராகின்றன. இதனால் ஒரு ஏக்கருக்கான விளைச்சல் பெருகுகிறது. எனவே ஒரு ஏக்கருக்கான வருமானமும் 3 முதல் 4 மடங்கு வரை பெருகுகிறது. எண்ணெய் வித்துக்களைப் பொறுத்தவரையில், கிளையற்ற ஆமணக்கும், கிளையற்ற சூரியகாந்தியும் நல்ல பலனை ஏற்கெனவே நமக்குக் கொடுத்துள்ளன. ஏக்கர் ஒன்றுக்கு தென்னை, யூகாலிப்ட்ஸ், விறகு மரங்கள் ஆகியவற்றின் மாசூலைப் பெருக்குவதில் இவ்வகை ஆராய்ச்சி மிகவும் பேருதவியாக இருக்கும்.

24. புதிய வகைப் பயிர்கள் பயிரிடப்பட்டு அவை நல்ல மாசூல் கொடுக்கையில், அவற்றை செய்முறைப்படுத்தி விற்பனை செய்யும் பிரச்சினை எழும்; இவற்றைக் கூட்டுறவுத் துறை கவனித்துக்கொள்ளும். புதிய ரகங்கள் பெரும்பாலானவை வெளிநாட்டு ஏற்றுமதிக்கு ஓரளவு தகுந்தவைகளாக உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

25. அறிஞர் அண்ணாவும் தற்போதுள்ள மாண்புமிகு முதலமைச்சரும் வகுத்துள்ள பொருளாதார நோக்கங்களை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்துமாறு இந்த அவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர்களையும் இந்த அவையின் மூலமாக இம் மாநில மக்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு செலுத்துவதனால் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குள் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தினை நாம் அடைய இயலும்; அன்றியும் நமது நாட்டு நபர் வாரி வருமானம் தென் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆசியா கண்டங்களில் உள்ள பிற நாடுகளைக் காட்டிலும் (ஜப்பான், இஸ்ரேல், குவைட் நாடுகள் நீங்கலாக) உயர்ந்ததாக இருக்கும். இம் மாநில மக்களாகிய நாம், அடையவேண்டிய லட்சியங்களை மீண்டும் தெளிவுபடுத்தியுள்ளோம்; நமக்கென ஒரு புதிய பாதையையும்





வகுத்துக்கொண்டுள்ளோம்; அப்பாதையில் நாம் தயங்காமல், தளராமல் நடந்து, குறித்த லட்சியத்தை அடைவதன் மூலம் தமிழகத்தின் மறுமலர்ச்சியைக் காண்போமாக.

## இணைப்பு-3.

[302-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

### கூட்டுறவுபற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு.

இம்மாநிலத்தில் கூட்டுறவு இயக்கம், கடன் வழங்குதுறை, விற்பனை செய்முறை, பயன்துய்ப்போர் கூட்டுறவுகள், ஏனைய பொது நடவடிக்கைகள் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காட்டியுள்ளது. கூட்டுறவு இயக்கம் மேலும் முன்னேற்றம் காணும் என்றும், இனிவரும் ஆண்டுகளில் மாநிலத்தின் எதிர்கால வளர்ச்சி வரலாற்றில் தனக்கெனத் தனிச்சிறப்பு மிக்க இடத்தை வகுத்துக் கொள்ளும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த ஆண்டுகளில் குறிப்பாக 1970-71-ஆம் ஆண்டில், கூட்டுறவுத் துறையில்அடைந்த சாதனைகள், "1970-71-ஆம் ஆண்டில் கூட்டுறவு வளர்ச்சிப் பணிகளில் முன்னேற்றம் பற்றிய ஆய்வறிக்கை"யில் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன. பொதுவாக வருங்காலத்துக்கும் குறிப்பாக 1971-72-ஆம் ஆண்டையொட்டியும் கூட்டுறவுப் பணிகள், கொள்கைகள் பற்றி இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பு முக்கியமாக எடுத்துக் கூறுகிறது.

**கடன் வசதி.**—வேளாண்மை மேம்பாட்டுக்குக் கடன் வசதியை கூட்டுறவு நிறுவனத்தின் மூலம் கொடுக்கும் கொள்கைக்கிணங்க, வேளாண்மைக் கடன் வசதித் திட்டத்தில் ஏற்பட்டுள்ள மிகவும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் என்னவெனில் தொடக்க நிலவள வங்கிகள் மூலமாகக் கிடைக்கும் நீண்டகாலக் கடன் வசதியாகும். இதில் பெற்ற சாதனைகள் கடந்த சில ஆண்டுகளிலே இரு மடங்காகவும் நான்கு மடங்காகவும் பல்கிப் பெருகின. சாதாரண திட்டத்தில் நீண்ட காலக் கடனை 1971-72-ல் தொடக்க நிலவள வங்கிகள் ரூ. 21 கோடி வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நீண்ட காலக் கடன் தொகையில் 90 சத வீதத்திற்கு மேல், உணவு உற்பத்திப் பெருக்கத்தை அடைவதற்கு உதவக் கூடிய, அதாவது கிணறுகள் தோண்டுதல், விசையேற்றங்கள் நிறுவுதல், இப்போதுள்ள கிணறுகளை ஆழப்படுத்துதல், நிலங்களைப் பண்படுத்துதல், டிராக்டர்கள் வாங்குதல் முதலிய பணிகளுக்குப் பயன்படுத்தவே கொடுக்கப்படுகின்றது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலம் முழுவதிலும் சாதாரண திட்டத்தின்கீழ் நீண்டகாலக் கடனை ஏறத்தாழ ரூ. 103 கோடி வழங்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ் நாடு கூட்டுறவு நிலவள வங்கி வெளியிடும் கடனீட்டுறுதி ஆவணங்களுக்கு 1971–72-ம் ஆண்டிலும் மாநில அரசு தொடர்ந்து தொகை வழங்கும். 1971-72-ல் அவ்வாறு தொகை வழங்குவதற்கு ரூ. 200 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

[1971 ஜூலை 20

நீண்டகாலக் கடன் வசதித் திட்டத்தின் மிக முக்கியமான கூறு, வேளாண்மை மறுநிதிக் கழக உதவியுடன் இம் மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள பெருவாரியான சிறப்புப் பகுதி வளர்ச்சிப் பணிகள் ஆகும். இவற்றில் சிறு பாசனப் பணித் திட்டங்களும் ஏனையப் பணித் திட்டங்களும் அடங்கும். இந்தப் பாசனப் பணித் திட்டங்களின் தொழில் நுட்பச் சாத்தியக் கூறுகளும், பொருளாதார வகையில் தனித்தியங்கக் கூடிய கூறுகளும் ஆய்ந்து மதிப்பிடப்பட்டுள்ளன. மாநில நிலவள வங்கி வெளியிடும் சிறப்பு வளர்ச்சி கடனீட்டுறுதி ஆவணங்களுக்குத் தொகை கொடுப்பதன் மூலம் வேளாண்மை மறுநிதிக் கழகம் உதவுகிறது. மாநில அரசும், வேளாண்மை மறுநிதிக் கழகமும், சிறு பாசனப் பணிகளுக்கு 1:9 என்ற விகிதாசாரத்திலும், சிறுபாசனமற்ற ஏனைய பாசனப் பணிகளுக்கு 1:3 என்னும் விகிதாசாரத்திலும் கடனீட்டுறுதி ஆவணங்களுக்குத் தொகை வழங்குகின்றன. இந்தச் சிறப்புப் பணிகளுக்கு 1970-71-ல் நீண்டகாலக் கடனாக ரூ. 3.29 கோடி வழங்கியதற்கு மாறாக, 1971-72-ல் ரூ. 8 கோடி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில், 1971-72-ல் ஏறத்தாழ சிறுபாசனப் பணிகளுக்கு ரூ. 7 கோடி கொடுக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 1970-71-ல் 2,937 புதிய கிணறுகள் தோண்டியும், 1,176 கிணறுகள் ஆழப்படுத்தியும், 1,657 விசையேற்றங்கள் அமைத்தும் இருந்ததற்கு மாறாக, 1971-72-ல் இவற்றில் முறையே ஏறத்தாழ 7,800 புதிய கிணறுகள் தோண்டியும், 2,300 கிணறுகள் ஆழப்படுத்தியும், 9,800 விசையேற்றங்கள் அமைத்தும் போற்றத்தக்க வகையில் சாதனைகள் பெற எதிர்பார்க்கிறோம். இத்தகைய சிறப்புப் பணிகளில் ஏற்றமிகு சாதனையை நாம் அண்மையில் அடைந்துள்ளோம். வாஷிங்டனிலுள்ள அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனத்துடன் நமது மாநில அரசு பேச்சுவார்த்தை நடத்தி வளர்ச்சிக் கடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து முடித்துள்ளோம். இதுவே பெரும் சாதனையாகும். இந்தப் பணித் திட்டத்தின்கீழ் சிறு பாசனத்திற்கான மொத்தத் திட்ட இலக்கு, 7,000 வடிமுனைக் கிணறுகள், 3,800 ஆழமற்ற குழாய்கள், 700 நடுத்தர குழாய்க் கிணறுகள், 10,000 பாசனக் கிணறுகள் இருக்குமென்று எடுத்துச் சொல்லப்படுகிறது. இவற்றில் சிறுபாசனமற்ற சாதாரணப் பாசனப் பணிகளும் உள்ளன. அதாவது டிராக்டர்கள், யந்திரங்கள் ஆகியவை ஏற்பாடு செய்தல். இத்திட்டத்திற்கு உலக வங்கி உதவி 350 லட்சம் டாலராகும். இது ரூ. 26.25 கோடிக்குச் சமமாகும். இத் தொகை இந்திய அரசுக்கு வந்து சேர்ந்து அதன் மூலமாக வேளாண்மை மறுநிதிக் கழகத்திற்குக் கிடைக்கும். இத் திட்டத்திற்காக வேளாண்மை மறுநிதிக் கழகத்திடமிருந்து இம் மாநில அரசு எதிர்பார்க்கக்கூடிய மொத்த மறு நிதி உதவி சுமார் ரூ. 40 கோடியிருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் 1971-72 கூட்டுறவு ஆண்டில் செயல்படத் தொடங்கலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

நிலவள வங்கிகள், தங்களது பொறுப்புக்களைத் தொடர்ந்து செவ்வனே நிறைவேற்றி வருவதுடன், தங்களிடம் வைக்கப்பட்ட



1971 ஜூலை 20]

நம்பிக்கை வீண் போகாத வகையில் செயல்படுவது, அவை இதுவரை சாதித்துள்ள சாதனைகளிலிருந்தும், வருங்காலப் பணிகளிலிருந்தும் தெள்ளிதின் விளங்கும். வேளாண்மைப் பணிகளுக்கான கடன் வசதிகள், குடியானவர்களுக்கு எளிதில் கிடைக்கச் செய்யவேண்டும் என்னும் அரசுக் கொள்கைக் கிணங்க, வளர்ச்சி வட்டார நிலையில் 117 தொடக்க நிலவள வங்கிகள் தொடங்கப்பட்டுள்ளன. வேளாண்மை மறுநிதிக் கழகத்துடனும், இந்திய ரிசர்வ் வங்கியுடனும் நடத்திய விவாதங்களின் அடிப்படையில் வங்கி ஏற்படுத்தப்படாத வளர்ச்சி வட்டாரங்களில், இனி ஏற்படவிருக்கும் பற்று வரவுகளினால் கிளை வங்கியின் தேவை ஏற்படும் போதெல்லாம் 134 தொடக்க நிலவளக் கிளை வங்கிகளைத் தொடங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. தொடக்க நிலவள வங்கிகளின் பற்று வரவுகளின் அடிப்படையில், தகுதித் தேர்வு முறைகள் முடிவு செய்யப்பட்டுள்ளன. கிளை வங்கிகளைத் திறக்கத் தகுதி பெற்ற தொடக்க நிலவள வங்கிகள் உதவித்தொகை பெறும். இதில் மாநில அரசின் பங்கு 3 ஆண்டுகளில் ரூ. 6,000 ஆகும். இந்த உதவித்தொகைக்காக 1971-72-ல் ரூ. 1.5 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கடன் வசதியை சிறு குடியானவர்களும் பெறவும், பசுமைப் புரட்சியில் அவர்கள் பங்கு கொள்ளவும், சிறு குடியானவர்களுக்காக இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1970-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாள் முதல் 1971ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31-ஆம் நாள் வரை 1,899 இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இனி வரும் ஆண்டுகளில், இத்தகைய இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்களை மேலும் முனைப்பாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக, நிறுவன அமைப்பாளர்கள் நியமிக்கும் திட்டத்துக்கு ஏற்பளிக்கப்பட்டுள்ளது. வேளாண்மை-பணி நிலையங்கள் ஏற்படுத்துவது குறித்து திட்டமும் பரிசீலனையில் உள்ளது. வாஷிங்டனில் நடைபெற்ற விவாதத்தின்போது, உதவித் தொகை வழங்குவதை அடியோடு நிறுத்திவிட வேண்டுமென்று உலக வங்கி வற்புறுத்தியபோதிலும், சிறு குடியானவர்களுக்கு கிணறு கட்டுவதற்கான உதவித் தொகை தொடர்ந்து கொடுக்கப்பட வேண்டுமென்று நாம் வலியுறுத்தியது சிறு குடியானவர்கள், சிறு குடியானவர்கள் சங்கங்கள் இவர்களின் நலன்களைக் கட்டிக் காப்பதில் நமது அரசுக்குள்ள அக்கறையைத் தெற்றெனப் புலப்படுத்துகிறது. முடிவாக, சிறு குடியானவர்களின் நலன்கள் நன்கு பாதுகாக்கப்பட்டு, சிறு உழவர்களுக்காக கிணறுகள் உதவிப்பணம் தொடர்ந்து கொடுக்கப்படவேண்டும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

பசுமைப் புரட்சிக்கு முக்கிய ஆதாரமாக உள்ளது பயிர்க் கடன் திட்டமாகும். 1971-72-ல் குறுகிய, நடுத்தரக் காலக் கடனாகத் தற்காலிகமாக ரூ. 61.50 கோடி பகிர்ந்தளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இரண்டாவது திட்ட முடிவிற்குள், வேளாண்மைக் கடன் திட்டத்தின்கீழ் இம்மாநிலத்தின் எல்லாக் கிராமங்களும் கொண்டுவரப்பட்டன. நான்காவது திட்ட முடிவுக்குள் கடன் கூட்டுறவு உறுப்பினர்களின் எண்ணிக்கையை 33 லட்சத்திற்குப் பெருக்கவும், நான்காம் திட்ட இறுதி ஆண்டில் குறுகிய, நடுத்தரக் காலக் கடனுகை ரூ. 75 கோடி வழங்கப்படும் வகையில், வேளாண்மைக் கடன் வசதியை ஆண்டுக்காண்டு அதிகப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. நான்காவது திட்டக் காலத்தில் கடன் கூட்டுறவுகளின் பங்கு மூலதனத்தை ரூ. 21.31 கோடியிலிருந்து ரூ. 30.45 கோடியாக உயர்த்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. நான்காவது திட்ட முடிவுக்குள், கையடைத் தொகையை ரூ. 37.61 கோடியிலிருந்து ரூ. 51.69 கோடியாக உயர்த்தவும் திட்டமுள்ளது.

தொடக்க நிலைச் சங்கங்களைச் செவ்விய வகையில் செயற்படுத்தும் திட்டத்தின்கீழ், 1971-72-ல் நிர்வாக உதவித்தொகையுடன் (நான்காவது திட்டத்தில் திட்டமிட்ட 2,000 கடன் சங்கங்களுள்) 200 கிராமக் கடன் வழங்குச் சங்கங்களுக்கு கடனுதவி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ் வகையில், 1971-72-ல் சங்கங்களுக்கு புதிதாக உதவியளிப்பதற்காக, ரூ. 1.80 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. எஞ்சிய பணித் திட்டங்கள் உட்பட, 1971-72 திட்ட மதிப்பீட்டில் மொத்தம் ரூ. 4.40 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1971-72-ல் கிடங்கு-அலுவலகம்-பணி-கொட்டகை ஆகியவை ஒருங்கே அமையப்பெற்ற கட்டடம் அமைப்பதற்கு 40 தொடக்க நிலைச் சங்கங்கள் ஒவ்வொன்றுக்கும் கடனுகை ரூ. 12,500ம், உதவித் தொகையாக ரூ. 12,500-ம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக 1971-72 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் (ரூ. 5 லட்சம் கடனுகவும், ரூ. 5 லட்சம் உதவித் தொகையாகவும்) ரூ. 10 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துடன், 1970-71-ல் கடன் பகுதியாக மொத்தம் ரூ. 10 லட்சம் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ள மேற்சொன்ன 80 சங்கங்களுக்கு, 1971-72-ல் இத்திட்டத்தின் கீழ் உதவித்தொகையாக ரூ. 10 லட்சம் கொடுக்கப்படும். நான்காவது திட்ட இலக்கு, 240 சங்கங்களுக்கு கிடங்கு-அலுவலகம்-பணி-கொட்டகைகள் ஏற்படுத்திக் கொடுப்பதாகும்.

கிராமப் பகுதிகளில் மேலும் பல கிளைகள் திறப்பதற்கு, மத்தியக் கூட்டுறவு வங்கிகளை ஊக்குவிக்கும் ஓர் ஏற்பாடாக, திறக்கப்பட்ட ஒவ்வொரு கிளைக்கும் ஆன பணியாளர் செலவு முதலியவற்றை ஈடுசெய்ய இயலுவதற்காக, மூன்று ஆண்டுக் காலத்தில் ரூ. 5,000 வீதம் மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு அரசு உதவித்தொகை அளித்து வருகிறது. 1971-72-ல் மேலும் 50 கிளைகளைத் திறக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. புதிய கிளைகளுக்காக உதவித்தொகையும் ஏற்கனவே திறக்கப்பட்ட கிளைகளுக்காக இரண்டாவது, மூன்றாவது ஆண்டு உதவித்





தொகையும் கொடுப்பதற்காக, 1971-72-ல் ரூ. 2.89 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

வேளாண்மை தொழில் செய்யும் சமூகத்தினரிடையே எளிய பிரிவினருக்கும் கடன் எளிதில் கிடைக்கச் செய்வதன் பொருட்டு, தொடக்க நிலை கடன் சங்கங்கள், மத்திய கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றின் மீளாக் கடன் சிறப்புச் சேம நிதிக்கு அரசு தொகை கொடுத்து வருகிறது. இந்தப் பணிக்காக, 1971-72-ல் ரூ. 5.33 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பெறுமானமில்லாதவர்களுக்கு வழங்கும் கடன்களினால் எழும் எதிர்பாரா இழப்புக்களை ஈடு செய்யும் பொருட்டு, இவ்வாண்டும் வேளாண்மைக் கடன் (துயர் தணிப்பு-உத்தரவாத) நிதிக்குத் தொடர்ந்து தொகை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பணித் திட்டத்திற்காக 1971-72-ல் ரூ. 12 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்திய ரிசர்வ் வங்கியின் நீண்டகாலக் கடன் நிதியிலிருந்து கடன் பெற்று பல்வேறு கூட்டுறவுக் கடன் நிறுவனங்களின் பங்கு மூலதனத்தைப் பெருக்கவும் அரசு திட்டமிட்டுள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கி, தொடக்க நிலவள வங்கிகள், மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தொடக்க நிலை கடன் வழங்கு சங்கங்கள் ஆகியவற்றின் பங்கு மூலதனத்தில் மாநில அரசு முதலீடு செய்வதற்கு 1971–72-ல் வரவு-செலவுத் திட்டத்தில் தற்காலிகமாக ரூ. 550 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**விற்பனையும், செய்முறையும்.**— வேளாண்மை விளைபொருள் விற்பனை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மிக முக்கியமான பணியாகும். திட்டத்தின் கடைசி ஆண்டில் ரூ. 35 கோடி மதிப்புடைய வேளாண்மை விளை பொருள் விற்பனைச் சங்கங்களால் விற்பனை செய்யப்படவும் திட்டமிடப்பட்டுள்ளது. 1971-72-ம் ஆண்டுக்காக, ரூ. 29 கோடி மதிப்புடைய வேளாண்மை விளை பொருள் விற்பனைத் திட்டம் உள்ளது. கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் நடைமுறை மூலதனத்தைப் பெருக்குவதற்காக, 1971–72-ல் அச்சங்கங்களுக்குப் பங்கு மூலதன உதவித் தொகையாக ரூபாய் 10 லட்சம் அனுமதிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. வேளாண்மை விளை பொருள்கள், பயிரிட பொருள்கள் ஆகியவற்றின் விற்பனைக்கு வசதி செய்யும் பொருட்டு, மோட்டார், லாரிகள் வாங்க 1971-72-ல் விற்பனைச் சங்கங்களுக்குக் கடனுகை ரூ. 2 லட்சம் அனுமதிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

வேளாண்மை விளை பொருள்களை உடனடியாகக் கொள்முதல் செய்வதில் விற்பனைச் சங்கங்களை ஊக்குவிக்கும் பொருட்டு, 1971-72-லும் விற்பனைச் சங்கங்களின் விலை ஏற்றத் தாழ்வுச் சமனீட்டுச் சிறப்பு நிதிக்கு அரசு உதவித்தொகை அளிக்கும் திட்டத்தை தொடர்ந்து வைத்து வரவும் திட்டமிடப்பட்டுள்ளது.

விற்பனைச் சங்கங்களில் பணியாளர்களைத் தரம் பிரித்தல், சாதனங்களைத் தரம் பிரித்தல் ஆகியவற்றிலும், தமிழ் நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு தனது தொழில் நுட்ப தொழில் வளர்ச்சி உட் குழுவுக்கும், பொதுப் பணி வகையிலும் பணியாளர்களை நியமிப்பதற்கான செலவுக்கும் தொடர்ந்து உதவித் தொகை அளிக்கப்படும்.

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பும், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பும் 1971-72-ல் ஏறத்தாழ ரூ. 20 கோடி மதிப்புள்ள ரசாயன உரங்களைப் பங்கீடு செய்யும். இவை தங்களுக்கு வேண்டிய நிதி வசதியைத் திரட்டிக் கொள்ள இயலும் பொருட்டு, தேசிய கூட்டுறவுத் தொழில் வளர்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின்கீழ் இவ்வரசு அவற்றின் பங்கு மூலதனத்திற்கு இருப்பு உதவிப் பணம் வழங்கி வருகிறது. கடந்த ஈராண்டுகளில் இது வரை கொடுக்கப்பட்ட ரூ. 59 லட்சம் மட்டுமல்லாமல், 1971-72-ல் ரூ. 38.50 லட்சம் கொடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

நான்காவது திட்டத்தில், பல்வேறு செய்முறைத் தொழிற்சாலைகளை (Processing units) நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழக உதவியுடன் கீழ்க்காணும் செய்முறைத் தொழிற்சாலைகளை 1971-72-ல் தொடங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் :—

| | தொடர் எண்ணும், பணித் திட்டமும். | மொத்தச் செலவு. (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|---|
| 1. | வேர்கடலை எண்ணெய் செய்முறை ஆலை .. .. | 25·00 |
| 2. | கரையத்தக்க எண்ணெய்த் தவிடு, பருத்தி விதை, கடலைப் புண்ணாக்கு இவற்றை எடுத்தல். | 17·00 |
| 3. | தானியப் பொருள் தொழிற்சாலை .. .. .. | 20·00 |
| 4. | முந்திரி செய்முறை தொழிற்சாலை .. .. .. | 11·00 |
| 5. | சிக்கோரி செய்முறை .. .. .. .. .. | 0 50 |
| | மொத்தம் .. | 73·50 |

1971-72-ல் மேற்சொன்ன செய்முறைத் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதை முன்னிட்டு ரூ. 20 லட்சம்வரை நிதியுதவியளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

சூரியகாந்தி செடி பயிரிடுவது மிகவும் பரவலாகி வருவதாலும் ஹெக்டேருக்குக் கொடுக்கும் எண்ணெய், வேர்க்கடலையிலிருந்து எடுக்கும் எண்ணெயைக் காட்டிலும் இரு மடங்காக இருப்பதாலும், பொருத்தமான எண்ணெய் எடுக்கும் ஆலைகளை நிறுவவும் நிதி ஒதுக்கப்படும்.

விற்பனைச் சங்கங்கள் நிறுவும் அன்றுசி, முந்திரி செய்முறைத் தொழிற்சாலைகளைக் கட்டி முடிப்பதற்காக, ரூ. 2.10 லட்சம் வரை 1971–72-ல் கடன் வழங்கப்படும். இத்தகைய செய்முறை ஆலைகளை





நிறுவியுள்ள விற்பனைச் சங்கங்களுக்கு நிர்வாக உதவித் தொகையாக ரூ. 3.21 லட்சம் கொடுக்கப்படும்.

தேசிய கூட்டுறவுத் தொழில் வளர்ச்சிக் கழக உதவியுடன் 12 நவீன அரிசி ஆலைகள் ஏற்படுத்துவதற்காக, நவீன அரிசி ஆலைகளின் மூலதனச் செலவில் விற்பனைச் சங்கங்களின் பங்கு மூலதனத்திற்கு அரசு ரூ. 135.73 லட்சம் தொகை வழங்கியுள்ளது. 1970-71-ல், கொள்முதல் பணிகளுக்கு இருப்பு உதவிப் பணமாக (Margin Money) இருக்கும் பொருட்டு நவீன அரிசி ஆலைகளுக்கு பங்கு மூலதனமாக ரூ. 23.01 லட்சம் உதவி செய்யப்பட்டுள்ளது.

விசையேற்றங்களை இயக்குவதற்கு வேண்டிய மின்சார வசதியைச் செய்து கொடுப்பதைக் கருத்தில் கொண்டு, உமியை எரிபொருளாகக் கொண்டு மின் உற்பத்தி இயந்திரங்களை ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாசனச் சங்கமும் 200 முதல் 300 ஏக்கர் பரப்பளவுக்குப் பாசனமளிக்கும் 3 இறைவைப் பாசனச் சங்கங்களினால், இத்தகைய 3 இயந்திரங்கள் அமைக்கப்படவிருக்கின்றன. திருவாரூரில் உள்ள அரிசி ஆலையில் மின்சக்தி உற்பத்தி செய்வதற்கு எரிபொருளாக ஏற்கனவே உமி பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**பயன் துய்ப்போர் கூட்டுறவு.—** தொடக்கநிலை கூட்டுறவுப் பண்டக சாலைகள் தங்கள் வர்த்தகத்தை மேம்படுத்துவதன் நிமித்தமாக, அவற்றிற்குப் பங்கு மூலதன உதவி, நிர்வாக உதவித்தொகையளிக்கும் திட்டம், 1971-72-இலும் தொடரும். பயன் துய்ப்போர் கூட்டுறவுகள் பயன் துய்ப்போர் தொழில்களை ஏற்படுத்துவதற்காக, 1971-72-ல் ரூ. 9.26 லட்சம் வரை உதவி அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. சிறு சிறப்பங்காடிகள் எனப்படும் புதிய சில்லறைப் பண்டகசாலைகள் ஏற்படுத்துவதில் பயன் துய்ப்போர் கூட்டுறவுகளுக்கு அரசு உதவி செய்து வருகிறது. இதுவரை அரசு உதவி அளித்துள்ள 23 சிறு சிறப்பங்காடிகளைத் தவிர, ரூ. 9 லட்சம் வரை கடனாகவும், பங்கு மூலதனமாகவும் அளிப்பதன் மூலம் 1971–72-ல் மேலும் சில சிறு சிறப்பங்காடிகளை நிறுவுதற்கு உதவி செய்வதென்றும் திட்டமிடப்பட்டுள்ளது.

பொது—சமூக பொருளாதார முன்னேற்றத் திட்டங்களுள், கூட்டுறவுத் தொழிலாளர் ஒப்பந்தச் சங்கங்களின் பங்கு மூலதனம், நடைமுறை மூலதனச் சேமநிதி, தொழில் கருவிகள் வாங்குதல் ஆகியவை குறித்துக் கடன் வடிவில் தொடர்ந்து உதவி அளிப்பது பற்றிக் குறிப்பிடலாம். இதற்காக, 1971-72-ல் ரூபாய் 50,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுக் கல்வி, பயிற்சிக்கான பணித் திட்டங்களைத் தொடர்ந்து செயற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. கூட்டுறவுக் கொள்கைகள் பற்றிப் பெருவாரியான மக்கள் அறிந்துக்கொள்ள விளம்பரம், பிரச்சாரப் பணிகள், கூட்டுறவு பற்றிய முக்கியமான கூறுபாடுகளில் பயிற்சி அளிக்கும்பணி ஆகியவை இதிலடங்கும்.

[1971 ஜூலை 20

கூட்டுறவு பற்றிய குழுவின் பரிந்துரைகள் பரிசிலனையில் உள்ளன. அடங்கல் சட்டம் கொண்டுவருவதற்கான வரைவு மசோதா இயற்றும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கூட்டுறவு நடவடிக்கைகளின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் வகை செய்ய, "கூட்டுறவு வளர்ச்சி நிதி"யை அமைத்திருப்பது முக்கியமான புதிய வளர்ச்சிப் பணியாகும். இதற்காக தமிழ்நாடு 1963-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளைச் சேர்ந்த 46-வது விதி பொருத்தமான வகையில் திருத்தப்பட்டுள்ளது. இந்த நிதிக்குத் தொகை வழங்க, ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் அதன் நிகர ஆதாயத்தில் 5 சத விகிதம் ஒதுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந் நிதி தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தில் வைத்துவரப்பட்டு, ஒரு குழுவினால் நிர்வகிக்கப்படும். இக் குழுவில் அரசு அதிகாரிகளும், அரசுச் சார்பற்ற அலுவலர்களும் அங்கம் வகிப்பர்.

முடிவாக, விரைவான பொருளாதார வளர்ச்சி வேகம் குறையாமல் தொடர்ந்து நீடிக்கும் வகையில் கூட்டுறவுக் கொள்கை நன்கு வகுக்கப் பட்டிருப்பதைக் காணலாம். கூட்டுறவுத் திட்டப் பணிகளுக்கு ஆன செலவு, வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு பற்றிய புள்ளி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

இதற்கு இது ஓர் எடுத்துக்காட்டாக அமையும்.

| கணக்குகள் 1969–70. | திருத்த மதிப்பீடு, 1970–71. | திட்ட மதிப்பீடு 1971–72. |
|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்.) | |
| 263·19 | 344·58 | 599·66 |

பொதுத் துறைக்கும் தனியார் துறைக்கும் இடையே கூட்டுறவுத்துறை சமன்படுத்தும் சக்தியாக பசுமைப் புரட்சியிலும், மக்களது பொருளாதார முன்னேற்றத்திலும் தனது முழுப் பொறுப்பையும் செவ்வனே நிறைவேற்றி வருவதோடு இனியும் அவ்வாறே தொடர்ந்து நிறைவேற்றி வரும்.

## இணைப்பு 4.

[302-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### 1970–71-ஆம் ஆண்டில் கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்களில் எய்திய முன்னேற்றம் குறித்த ஆய்வுரை.

1970–71-ம் ஆண்டில் இம் மாநிலத்தில் வேளாண்மைக் கடன் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், வாணிப-செய்முறை கூட்டுறவுச் சங்கங்கள், துய்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் இவற்றின் வாயிலாகக் கூட்டுறவு இயக்கம் தொடர்ந்து வளர்ச்சி பெற்று வந்துள்ளது.

இந்த ஆண்டில் நிலவள வங்கிகள் மூலமாக நிலங்களின் வளர்ச்சிக்காக நீண்ட காலக் கடன் அளிப்பதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது. 1970-71-ல் நிலவள வங்கிகள் ரூ. 19.07 கோடி அளவுக்கு நீண்ட காலக் கடன்கள் வழங்கின. இதற்கு மேலும், வேளாண்மை மறுகடனுதவிக் கழகம் உதவும்



1971 ஜூலை 20]

திட்டங்களின்கீழ் நிலவள வங்கிகள் ரூ. 3.29 கோடி அளவுக்குக் கடன்கள் வழங்கின. இந்த ஆண்டில், வேளாண்மை மறு கடனுதவிக் கழகத்தின் உதவியுடன் 18 சிறு பாசனத் திட்டங்களும் மலைத் தோட்டத் திட்டங்கள் இரண்டும் நிறைவேற்றப்படுவதற்காக மேற்கொள்ளப்பட்டன. இவற்றுக்கு மேலாக, மொத்தம் ரூ. 58.19 கோடி முதலீட்டுச் செலவுடன் 33 சிறு பாசனத் திட்டங்களும் ரூ. 10.50 கோடி முதலீட்டுச் செலவுடன் பண்ணைகளில் இயந்திரங்களைக் கொண்டு பயிர் செய்யும் திட்டம் ஒன்றும் வேளாண்மை மறு கடனுதவிக் கழகத்தின் பரிசீலனையின்கீழ் உள்ளன. இவை தவிர, ரூ. 23.30 கோடி செலவில் 28 சிறுபாசனத் திட்டங்களும் ரூ. 6.52 கோடிக்குச் சிறுபாசனமல்லாத ஏனைய பாசனத்திட்டங்கள் 6-ம் மாநில அரசின் அளவிலும், மாநில நிலவள வங்கியின் அளவிலும் பரிசீலனையில் உள்ளன. மத்திய கூட்டுறவு வங்கிகள், தொடக்கக் கடனுதவிச் சங்கங்கள், மாநில நிலவள வங்கி, தொடக்க நிலவள வங்கிகள் ஆகியவற்றின் பங்கு மூலதனத்துக்குத் தொகை வழங்கிட, தேசிய வேளாண்மைக் கடனுதவி (நீண்ட காலம்) நிதியிலிருந்து கடனுதவி வேண்டி, தமிழ் நாடு அரசு இந்திய ரிசர்வ் வங்கிக்கு எழுதித் தெரிவித்தது. மாநில அரசு நகர்ப்புற வங்கிகளின் பங்கு மூலதனத்திலும்கூடப் பங்கு பெற முடிவு செய்தது, இந்த ஆண்டில் ஏற்பட்ட புதிய வளர்ச்சியாகும். கீழே காட்டப்பட்டுள்ளவாறு நிறுவனங்களின் பங்கு மூலதனத்தில் முதலீடு செய்வதற்காக தேசீய வேளாண்மைக் கடனுதவி (நீண்ட காலம்) நிதியிலிருந்து மாநில அரசுக்கு இந்திய ரிசர்வ் வங்கி கடன்கள் வழங்க ஒப்பளித்தது :—

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| மாநில நிலவள வங்கியில் .. .. .. | 75·00 |
| தொடக்க நிலவள வங்கிகளில் .. .. | 7·25 |
| கூட்டுறவு மத்திய வங்கிகளில் .. .. | 37·55 |
| தொடக்கக் கடனுதவிச் சங்கங்களில் .. .. | 29·67 |
| நகர்ப்புற வங்கிகளுக்கு .. .. .. | 0·85 |

தேசீயக் கூட்டுறவு வளர்ச்சி கழகத்தின் புதிய திட்டத்தின்கீழ், ரூ. 23.01 லட்சம் தொகையை, நவீன அரிசி ஆலைகள் நிறுவியுள்ள 12 விற்பனைச் சங்கங்களில் பங்கு மூலதனமாக அரசு முதலீடு செய்தது ; இத்தொகை, நெல் கொள்முதல் செய்வதற்குத் தேவையான வங்கிக் கடன்கள் எழுப்புவதற்கான அடிப்படைத் தொகையாகப் பயன்படும். கல்குளம் விளவங்கோடு கூட்டுறவு விற்பனைச் சங்கத்துக்கும், சிவகங்கை கூட்டுறவு விற்பனைச் சங்கத்துக்கும் முறையே அன்னாசிப் பழம் பதப்படுத்தும் தொழிற்சாலையும், முந்திரிக் கொட்டை பதப்படுத்தும் தொழிற்சாலையும் நிறுவுவதற்காக ரூ. 35,000 பங்கு மூலதனமாக நிதி வழங்க ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

விலைவாசிகளைக் கட்டுக்குள் வைத்திருக்கும் துய்ப் பொருள்கள் நியாயமான விலைகளில் கிடைக்கச் செய்யவும் சிறு சிறப்பங்காடிகள் என்னும் நவீன சில்லறைக் கடைகள் 16 இடங்களில் தொடங்கப்பட்டுள்ளன; அவை விரைவில் 12 இடங்களில் நிறுவப்படும். நவீன சில்லறைக் கடைகள் (சிறு சிறப்பங்காடிகள்) திறக்க வேண்டுமென்னும் கோரிக்கை அதிகமாகவுள்ளது.

நான்காவது ஐந்தாண்டுத்திட்டத்தின் முதலிரு ஆண்டுகளில் கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்களின் மீதான மொத்தச் செலவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| திட்டங்கள். | 1968–69-இல் செலவு. | நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்துக்கு நிதி ஒதுக்கீடு. | 1969–70-இல் செலவு. | 1970–71-க்கு வரவு–செலவு திட்ட நிதி ஒதுக்கீடு. | 1970–71-இல் செலவு. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | (ரூபாய் லட்சத்தில்.) | | | |
| ஏ. மாநிலத் திட்டங்கள்— கூட்டுறவுக் கடன் வசதி, வாணிப–செய்யும்முறை, நுய்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவுக் கல்வியும் பயிற்சியும், பல்வகைச் சங்கங்கள் தொடர்பான திட்டங்கள். | 45·16 | 1022·32 | 57·91 | 74·45 | 72·41 |
| பி. மாநில நிலவள வங்கி— சாதாரண கடனீட்டுப் பத்திரங்களுக்கும் சிறப்புக் கடனீட்டுப் பத்திரங்களுக்கும் தொகைகள் கொடுத்தல், புதிய கிணறுகள் கடனுதவித் திட்டத்துக்குத் தொகை கொடுத்தல். | 261·14 | 1700·00 | 200·91 | 278·00 | 273·25 |
| சி. கடனுதவிக் கூட்டுறவுச் சங்கங்களில் அரசின் பங்கு .. | .. | .. | 51·43 | 15·00 | 230·65 |
| டி. கழகத்தின் திட்டங்கள், மத்திய அரசுத் திட்டங்கள் .. | .. | 112·45 | 135·65 | .. | 102·85 |



## வேளாண்மைக் கடன்.

வேளாண்மைக் கடன் வழங்குதல், நிதி வாயில்களை ஒழுங்கு திரட்டுதல், முதலியவற்றில், கடன் வசதிக் கூட்டுறவுகள் எய்திய முன்னேற்றத்தைக் கீழே கொடுத்துள்ள விவர அறிக்கையில் காணலாம் :—

| தொடர் எண்ணும் இனமும். | 1968–69 முடிவில் நிலைமை. | நான்காம் ஐந்தாண்டுத் திட்ட இலக்கு. | 1969–70-க்கு இலக்கு. | 1969–70-இல் எய்திய சாதனை. | 1970–71-க்கு இலக்கு. | 1970–71-இல் எய்திய சாதனை. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. கூட்டுறவின் கீழ்க் கொண்டு வரப்பட்ட கிராமங்களின் சதவீதம். | கிராமங்களனைத்தும் கூட்டுறவின் கீழ்க் கொண்டு வரப்பட்டன. | | | | | |
| 2. தொடக்க வேளாண்மைக் கடனுதவிச் சங்கங்களின் உறுப்பினர்கள் (லட்சத்தில்). | 33·00 | 39·00 | 34·00 | 34·00 | 35·25 | 38·54 |
| 3. கடன் வழங்கல்— | | | | | | |
| (i) குறுகிய கால, நடுத்தரக் காலக் கடன்கள் (ரூபாய் கோடியில்). | 44·12 | 75·00 | 62·50 | 42·77 | 55·00 | 44·23 |
| (ii) நீண்ட காலம்— | | | | | | |
| (அ) சாதாரணத் திட்டத்தின்கீழ் (ரூபாய் கோடியில்). | 14·67 | 25·00 | 16·40 | 16·26 | 19·00 | 19·07 |
| (இ) சிறப்புத் திட்டத்தின்கீழ் (ரூபாய் கோடியில்). | 1·33 | 16·00 | .. | 1·31 | .. | 3·29 |
| 4. புத்துயிரளிக்கும் திட்டத்தின் கீழ்த் தெரிந்தெடுக்கப்பட்ட சங்கங்கள் (எண்ணிக்கை). | 170 | 2,000 | 400 | 206 | 300 | 214 |
| 5. மத்திய கூட்டுறவு வங்கிகளால் திறக்கப்பட்ட கிளைகள். | 117 | 150 | 50 | 51 | 50 | 52 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 6. அரசுப் பங்கு மூலதனம் நீங்கலாக, எய்திய பங்கு மூலதனம் (ரூ. கோடியில்)— | | | | | | |
| (i) தொடக்கச் சங்கங்கள் .. .. .. | 11·25 | 15·68 | 12·11 | 12·04 | 13·01 | 12·72 |
| (ii) மத்தியக் கூட்டுறவு வங்கிகள் .. .. | 7·92 | 11·55 | 8·82 | 8·47 | 9·51 | 8·92 |
| (iii) மாநிலக் கூட்டுறவு வங்கி .. .. | 2·14 | 3·22 | 2·74 | 2·17 | 2·86 | 2·28 |
| 7. வைப்புத் தொகைகள்— (ரூ.-கோடியில்) | | | | | | |
| (i) தொடக்கச் சங்கங்கள் .. .. .. | 3·55 | 6·25 | 4·61 | 3·31 | 5·02 | 4·20 |
| (ii) மத்திய கூட்டுறவு வங்கிகள் .. .. | 22·87 | 30·44 | 24·88 | 25·33 | 26·27 | 29·70 |
| (iii) மாநில கூட்டுறவு வங்கிகள் .. .. | 11·19 | 15·00 | 12·20 | 12·86 | 12·90 | 15·20 |



கடன் வழங்கு நிறுவனங்கள் தமது கடன் வழங்கும் பணியை ஆண்டுதோறும் பெருக்கிச் செல்லும் பொருட்டு, அரசு பின்வரும் வழிகளில் போதுமான நிதியுதவி அளித்து வந்துள்ளது. கடன் வழங்கு நிறுவனங்களின் பங்கு மூலதனத்திலும், தமிழ்நாடு அரசு கூட்டுறவு நிலவள வங்கி வெளியிட்ட கடனீட்டுப் பத்திரங்களிலும் முதலீடு செய்தல், நிர்வாகப் பணியாளர் செலவை ஈடுகட்ட உதவித் தொகை அளித்தல்; நிலவள வங்கி வெளியிட்ட கடனீட்டுப் பத்திரங்களின் அசலும் வட்டியும் திருப்பிச் செலுத்தப் படுவதற்கு உத்தரவாதமளித்தல்; பருவ கால வேளாண்மைத் தொழில்களுக்கு இந்திய ரிசர்வ் வங்கியால் அளிக்கப்பட்ட கடன்கள் திருப்பிச் செலுத்தப்படுவதற்கு உத்திரவாதமளித்தல் ஆகியன.

கடன் வழங்கு நிறுவனங்கள், தமது கடன் வாங்கும் சக்தியை அதிகரிக்கும் வகையில் அவற்றின் பங்கு மூலதனத்தில் இது வரை செய்யப்பட்ட மொத்த முதலீடு ரூ. 775.36 ஆகும். அதன் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| (1) தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி .. .. | 126·00 |
| (2) மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் .. .. | 232·85 |
| (3) தொடக்கக் கடனுதவிச் சங்கங்களும் வேளாண்மை வங்கிகளும். | 167·61 |
| (4) தமிழ்நாடு மாநில கூட்டுறவு நிலவள வங்கி .. | 170·00 |
| (5) தொடக்க நிலவள வங்கிகள் .. .. .. | 43·05 |
| (6) கூட்டுறவு நகர்ப்புற வங்கிகள் .. .. .. | 0·85 |
| (7) மத்திய வீட்டு அடமானச் சங்கம் .. .. | 35·00 |
| மொத்தம் .. | 775·36 |

1969-70-ஆம் ஆண்டில் இந்தக் கடன் வழங்கு நிறுவனங்களின் பங்குகளின் மீதான ஆதாயப் பங்குத் தொகை வடிவில், அரசுக்குக் கிடைத்த தொகை ரூ. 4.78 லட்சம் ஆகும்.

கடனுதவி நிறுவனங்கள் உழவர்களில் எளிய பிரிவினருக்கு, அதாவது, ஆதாயம் குறைந்த உழவர்களுக்கும், ஆதாயம் மிகக் குறைந்த உழவர்களுக்கும், நிலமற்ற குத்தகைக்காரர்களுக்கும், தயக்கம் காட்டாமல் போதுமான கடன்கள் வழங்கும் வண்ணம் அவற்றுக்கு ஊக்கமளிக்கும் பொருட்டு, மிக வறிய நிலையில் உள்ள உழவர்கள் பெயரில் நிலுவையாகவுள்ள கடன்களின் உயர்வின் மேல், தொடக்கக் கடனுதவிச் சங்கங்களுக்கு 12 சதவீத அளவிலும் மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு 4 சதவீத அளவிலும் ஏற்படுத்தப்பட்ட மீளாக்கடன் சிறப்புச் சேம நிதிக்கு (Special Bad Debt Reserve Fund) அரசு முழு மானியங்களை அளித்து வந்துள்ளது.

[1971 ஜூலை 20

**1970-71**-ஆம் ஆண்டில், மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தொடக்கச் சங்கங்கள் ஆகியவற்றின் மீளாக் கடன்கள் சிறப்புச் சேம நிதிக்காக ரூ. 3.46 லட்சம் தொகை வழங்கப்பட்டது. கீழே காட்டப் பட்டுள்ளவாறு, அரசு இது வரை மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தொடக்கச் சங்கங்கள் ஆகியவற்றின் மீளாக்கடன் சிறப்புச் சேமநிதிக்குத் தொகை வழங்கியுள்ளது.

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| மத்தியக் கூட்டுறவு வங்கிகள் .. .. .. | 18·83 |
| தொடக்கச் சங்கங்கள் .. .. .. .. | 93·23 |
| மொத்தம் .. | 112·06 |

பொருளாதார ஆதாயமற்ற சங்கங்களையும் நொய்ந்த சங்கங்களையும் கலைத்துவிடவும் அவற்றை ஆதாயமளிக்கும் சங்கங்களாக மாற்றி அவை ஆண்டு ஒன்றுக்குக் குறைந்த அளவு ரூ. 2 லட்சம் கடன் வழங்குமாறு செய்திடவும், உரிய திட்டம் 1970-71 ஆண்டிலும் தொடர்ந்து நிறை வேற்றப்பட்டது. இந்தத் திட்டம் கொண்டுவரப்படுவதற்கு முன்னர் 11,000 கடன் வழங்கு சங்கங்கள் இருந்தன. அந்த எண்ணிக்கை 5,929 ஆகக் குறைக்கப் பட்டது; அவற்றில் 4,278 சங்கங்கள் ஆதாயமளிப்பன அல்லது ஆதாயமளிக்கும் திறனுடையன.

முன்னரேயுள்ள கிராமக் கடனுதவிச் சங்கங்கள் ஆதாயம் தருவனவாகத் திருத்தியமைக்கப்பட்டன; அவை, உழவர்களின் பல்வேறு தேவைகளையும் நிறைவு செய்கின்ற உண்மையான பணிக் கூட்டுறவுச் சங்கங்களாகப் பணியாற்றுகின்றன. அவை, உறுப்பினர்களுக்கு பயிர்த்தொழிற் பணிகளுக்காக வழங்கப்படும் கடன்களில், பொருளாக வழங்கப்படுவதற்கான உரங்களையும், பூச்சி கொல்லி மருந்துகளையும் சேமித்து வைப்பதற்கு மேல், உறுப்பினர்களின் உபரி உற்பத்திப் பொருள்களையும் சேமித்துவைப்பதற்குரிய எல்லா வசதிகளையும் பெற்றிருத்தல் வேண்டும். அவற்றுள் அன்றாட அலுவல்களைக் கவனிப்பதற்காக அவற்றுக்குத் தனி அலுவலக அறை வேண்டும்; சங்க உறுப்பினர்களின் பயிர்த் தொழிற்பணிகளுக்குத் தேவைப்படுகின்ற விசைத் தெளிப்புக் கருவிகள், மருந்து தூவும் விசைக் கருவிகள் முதலிய வேளாண்மைக் கருவிகளை வைத்து வருவதெற்கென பணிக் கொட்டகை ஒன்றும் அவற்றிற்கு வேண்டும். எனவே, கிடங்கு—அலுவலகம்—பணிக் கொட்டகையொன்றைக் கட்டிக்கொள்வதற்காக, அரசு, அவற்றுக்குக் கடனாகவும் உதவித் தொகையாகவும் (50 சதவீதம் கடன், 50 சதவீதம் உதவித்தொகை) ரூ. 25,000 அளவுக்கு நிதியுதவி அளித்து வருகின்றது. 1969–70-இல் 10 சங்கங்களுக்கு இத்தகைய உதவி அளிக்கப்பட்டது. 1970–71-ல் 80 சங்கங்களுக்கு ஒவ்வொன்றுக்கும் ரூ. 12,500 கடன் வடிவில் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இந்தச் சங்கங்களுக்கு 1971–72-ல் நிதியுதவியின் பகுதியான உதவித் தொகை வழங்கப்படும்.



1971 ஜூலை 20]

உழவர்களுக்குத் தேவையான நீண்டகால, குறுகியகாலக் கடன்கள், கிராம அளவில் 5,929 தொடக்க வேளாண்மைக் கடனுதவிச் சங்கங்களால் அளிக்கப்படுகின்றன. அந்தத் தொடக்க வேளாண்மைக் கடனுதவிச் சங்கங்கள், மாவட்ட அளவில் 15 மத்தியக் கூட்டுறவு வங்கிகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. அவை, தமிழ் நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ளன. இந்தக் கடன் வழங்கு முகவரமைப்புகள், ஆண்டு தோறும் கணிசமான அளவில், வேளாண்மை உற்பத்திக்குத் தேவைப்படும் கடன்களை வழங்குகின்றன; அதன் மூலம் இந்த மாநிலத்தில் உணவு உற்பத்தியை உயர்த்தப் பெருமளவு துணை புரிகின்றன. கடந்த ஐந்தாண்டுகளிலும், கடந்த 1970–71-லும் வேளாண்மைக் கடன் வழங்கு நிறுவனங்கள் அளித்த உற்பத்திக் கடன்களின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | (ரூபாய் கோடியில்). |
|---|---|
| 1965–66 .. .. .. .. .. .. | 30·95 |
| 1966–67 .. .. .. .. .. .. | 31·51 |
| 1967–68 .. .. .. .. .. .. | 37·26 |
| 1968–69 .. .. .. .. .. .. | 44·12 |
| 1969–70 .. .. .. .. .. .. | 42·77 |
| 1970–71 .. .. .. .. .. .. | 44·23 |

இம்மாநிலத்தில் வேளாண்மை உற்பத்தி பற்றிய குழுவால் மதிப்பிடப்பட்டுள்ள மொத்த வேளாண்மைக் கடன் தேவைகளில் ஏறத்தாழ 50 சதவீதம் அதாவது ரூ. 75.00 கோடியளவுக்கு, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி ஆண்டின்போது அதாவது 1973-74-இல் கடன் வழங்கிடக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இயலச் செய்யும் பொருட்டு, ஆண்டுக்கு ஆண்டு கடன் வழங்குவது உயர்த்தக் கருதப்பட்டுள்ளது.

உழவர்கள் தங்கள் கடன் தேவை முழுவதையும் பெறும் வண்ணம் வேளாண்மைக் கடனுதவிச் சங்கங்களின், உறுப்பினர்களில் ஒவ்வொருவரும் பெறக் கூடிய உயர்ந்த அளவு கடன் பெறும் தொகை வரையறை கீழே காட்டியுள்ளவாறு வரையறுக்கப்பட்டுள்ளது:—

| | சொந்த பொறுப்பின் பேரில். | அடமானப் பொறுப்பின் பேரில். |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| சர்க்கரை ஆலைகளில் பதிவு செய்யப்பட்ட கரும்புப் பயிர் நேர்வில், குறுகிய காலக் கடன். | 15,000 | 20,000 |
| கரும்பு தவிரப் பிற பயிர்களின் நேர்வில் குறுகிய காலக் கடன். | 10,000 | 15,000 |
| நடுத்தரக் காலக் கடன் .. .. .. | 1,000 | 10,000 |

விசையேற்றங்களை வாங்கி நிறுவுதல், கிணறுகள் வெட்டுதல், டிராக்டர்கள் வாங்குதல், ஆகியவற்றைப் பொறுத்தவரையில் சொந்தப் பொறுப்பின்பேரில், ரூ. 3,500 வரை நடுத்தர காலக்

கடன்கள் வழங்கப்படுகின்றன. ஆனால் கடன் பெறுபவர் செலவுத் தொகையில் 15 சதவீதத்தை ஈடுசெய்யவேண்டும். மேலும், கடன் தொகையில் 10 சதவீதத்தைப் பங்கு மூலதனமாகக் கொடுக்க வேண்டும்.

கிராமப்புற நகர்புறச் சேமிப்புவாயில்களை ஒருங்கு திரட்டும் பொருட்டும், அதன் மூலம், உற்பத்திக் கடன்களுக்குப் பெருகி வரும் தேவைகளைச் சரிக்கட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் நிதி வாயில்களை மேம்படுத்தவும், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், எல்லா வட்டத் தலைமையிடங்களிலும், ஏனைய முக்கிய மான இடங்களிலும் கிளைகளைத் திறந்து வருகின்றன. 1970-71-இல் மத்தியக் கூட்டுறவு வங்கிகளால் திறக்கப்பட்ட கிளைகளின் எண்ணிக்கை 52 ஆகும். அதன் மூலம் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 217 ஆக உயர்ந்தது.

உறுப்பினர்களின் பங்கு மூலதனத் தொகையையும் அவர்கள் வைத்துள்ள வைப்புத் தொகைகளையும் கடனுதவி கூட்டுறவுச் சங்கங்கள் உயர்த்தியுள்ளன. அவைகுறித்த விவரம் கீழேகொடுக் கப்பட்டுள்ளன :—

| | 1969–70 | 1970–71. |
|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | |
| பங்கு மூலதனம் .. .. .. | 22·68 | 23·92 |
| கையடைத் தொகைகள் .. .. | 41·50 | 49·10 |

நிர்வாகப் பணியாளர்களை நியமிப்பதற்காக ரூ. 100 லட்சத்திற் கும் குறைவான நடை முதல் மூலதனத்தைக் கொண்டுள்ள மத்தி யக் கூட்டுறவு வங்கிகளுக்கு உதவித் தொகையாக நிதி உதவியளிக் கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் புதுக்கோட்டை, மத்தியக் கூட்டுறவு வங்கி மட்டும் ரூ. 100 லட்சத்திற்கும் குறைவான நடை முதல் மூலதனத்தைப் பெற்றுள்ளது. இம் மத்தியக் கூட்டுறவு வங்கி தன் நடைமுதல் மூலதனத்தை ரூ. 100 லட்சத்திற்கு உயர்த்தும் வரையில் அதற்கு உதவித் தொகையளிக்கப்படுகிறது.

அகில இந்தியக் கிராம கடனுதவி ஆய்வுக் குழு துணிந்து கடனுதவியளிப்பதனால் ஏற்படும் எதிர்பாராத விரயங்களை ஈடு செய்ய வேளாண்மைக் கடனுதவி நிதி (துணை உதவி—உத்தர வாதம்) ஒன்றை மாநில அளவில் எற்படுத்த வேண்டுமென அகில இந்திய கிராமக் கடனுதவி ஆய்வுக் குழு பரிந்துரைத்தது. வேளாண்மை உற்பத்திக்காக, குறிப்பாக ஏழைக் குடியானவர் களுக்குக் கடன்கள் வழங்குவதற்காக அதிகப்படியான நிதி ஒதுக்கம் செய்வதற்காகவும், இயற்கைப் பேரிடர்களால் ஏற்படும் விரயங்கள் காரணமாக இந்த வேளாண்மைக் கடனுதவித் திட்டத் திற்கு ஆதரவு அளிக்க வேண்டிய தேவையைக் கருதியும், சங்கத் தால் வழங்கப்படும் முன் பணத்தில் குறைந்தது 1 சதவீதம் அளவி லாவது இந்த நிதி அமைய வேண்டும் என்று இந்திய அரசு கருத் துரை வழங்கியது. 1960-61. 1966-67-ம் ஆண்டுகளில் ஆண்டு



ஒன்றுக்கு ரூ. 5 லட்சம் என்ற வீதத்தில் அரசு இந்த நிதிக்குத் தொகையளித்துள்ளது. 1970–71-ம் ஆண்டில் இந்நிதிக்கு அரசு ரூ. 5 லட்சம் அளித்துள்ளது.

பஞ்சம், வெள்ளம், வறட்சி முதலியவற்றால் எழும் எதிர்பாராத நிலைமைகளில், பற்பல நிலைகளிலுள்ள கூட்டுறவுக் கடனுதவி நிறு வனங்களின் நிதி நிலையை உறுதிப்படுத்துவதற்காகத் தக்க நட வடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அனைத்திந்திய கிராமக் கடனுதவி ஆய்வுக் குழு, பரிந்துரைத்ததற்கிணங்க, மாநிலக் கூட்டுறவு வங்கி, மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தொடக்கக் கடனுதவிச் சங்கங்கள் ஆகியவை முறையே தத்தம் நிலைகளில் வைத்து வரும் வேளாண்மைக் கடனுதவி (உறுதி) நிதிக்கு உதவித் தொகைகள் அளித்து வருகின்றன. இந்த நிதியை வலுப்படுத்து வதற்காக, இந்திய ரிசர்வ் வங்கி திட்டம் ஒன்றை வகுத்தது. அத் திட்டத்தின்படி, மாநிலக் கூட்டுறவு வங்கிக்கு வேளாண்மைக் கடனுதவி உறுதி நிதிக்கு மாநில அரசு ஒரு மொத்தத் தொகையை உதவித் தொகையாக அளிக்க வேண்டும். இந்த நிதிக்கு மாநில அரசு தொகையளிப்பதற்கு இந்திய அரசு நிதி வழங்கும். மாநிலக் கூட்டுறவு வங்கியின் வேளாண்மைக் கடனுதவி உறுதி நிதிக்கு அரசு இதுவரை ரூ. 171.35 லட்சம் அளித்துள்ளது. இந்த நிதி, வறட்சி, வெள்ளம், புயல் முதலியவற்றால் பயிர் விளைச்சல் பாதிக் கப்படுகிற போதெல்லாம் குறுகிய காலக் கடன்களை நடுத்தரக் காலக் கடன்களாக மாற்றிக்கொள்ளப் பயன்படுத்தப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளாகப் பயிர் விளைச்சல் பாதிக்கப்பட்ட தால், இந்த நிதியிலிருந்து தொகை முழுவதும் மேற்கூறப்பட்ட நிகழ்வுகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் நோக்குடன், தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங் களில் நவரைப் பயிர் விளைச்சலைப் பெருக்கும் இயக்கம் ஒன்றை அரசு தொடங்கியுள்ளது. இத் திட்டத்தில் கூட்டுறவுத் துறையின் பங்கு, இத் திட்டத்தில் சேர்ந்துள்ள உழவர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் உரிய காலத்தில் போதுமான கடனுதவியளிப் பதாகும். இத்திட்டத்தின் சிறப்பான முக்கியத்துவம், இரசாயன உரங்களை அதிக அளவில் பயன்படுத்திப் பயிர் விளைச்சல்களைப் பெருக்குவதாகும். ஏக்கர் ஒன்றுக்கு வழங்கப்படும் கடனுதவி ரூ. 450 அதன் நிதி அளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | ரூபாய். |
|---|---|
| விதைகள் | 12 |
| உரங்கள் | 250 |
| பூச்சிக்கொல்லி மருந்து | 38 |
| ரொக்கம் | 150 |
| மொத்தம் | 450 |

மேற்கூறப்பட்டுள்ள மாவட்டங்களிலுள்ள மூன்று மத்திய வங்கிகளும் இத்திட்டத்தின்கீழ், 1969-70-ல் ரூ. 1.50 கோடி கடனுதவியளித்திருந்ததற்கு மாறாக, 1970–71-ல் ரூ. 1.85 கோடி அளவில் கடனுதவியளித்துள்ளது.

சிறு உழவர்கள் தங்கள் பண்ணைத் தொழிலையும் பிற பணிகளையும் மேம்படுத்திக்கொண்டு உபரி விளைச்சலைப் பெற்று மேற்கொண்டு வளர்ச்சியடைவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்ள அவர்களுக்கு உதவும் வகையில் சில நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கான சிறு உழவர்கள் மேம்பாட்டு நிறுவனம் Small Farmers Development Agency ஒன்றை அமைக்க வேண்டுமென்று அனைத்திந்தியக் கிராமக் கடனுதவி ஆய்வுக் குழு பரிந்துரைத்துள்ளது. தகுதியுள்ள உழவர்களுக்குக் குறுகிய காலக் கடன்களையும், நடுத்தரக் காலக் கடன்களையும், நீண்ட காலக் கடன்களையும், தாராளமாகக் கிடைக்க வகை செய்வதே இப்பணித் திட்டத்தை நிறைவேற்றுவதில் கூட்டுறவுச் சங்கத்தின் பங்காகும். இத்திட்டம், தென் ஆர்க்காடு, மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் நிறைவேற்றுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

இதைத் தவிர, மிக வறிய நிலையிலுள்ள குடியானவர்கள், வேளாண்மைத் தொழிலாளர்கள் ஆகியோரின் மேம்பாட்டிற்கான ஒரு திட்டமும் வட ஆர்க்காடு மாவட்டத்தில் செங்கம், புதுப்பாளையம் ஆகிய இரண்டு வளர்ச்சி வட்டாரங்களிலும், சேலம் மாவட்டத்தில் வேலப்பாடி, பெத்தநாயக்கன்பாளையம் ஆகிய இரண்டு வளர்ச்சி வட்டாரங்களிலும் நிறைவேற்றப்படுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டம் ஒரு ஏக்கர் அல்லது அதற்குக் குறைவான நன்செய் நிலம் அல்லது 2 ஏக்கர் அல்லது அதற்குக் குறைவான புன்செய் நிலங்கள் கொண்டுள்ள மிக வறிய குடியானவர்களுக்கும், நிலமற்ற தொழிலாளர்களுக்கும் ஒரு ஏக்கரிலிருந்து இரண்டு ஏக்கர் வரை நன்செய் நிலம் வைத்திருக்கும் அல்லது இரண்டு ஏக்கர் முதல் நான்கு ஏக்கர்வரை புன்செய் நிலம் வைத்திருக்கும் ஓரளவு நல்ல நிலையிலுள்ள குடியானவர்களுக்கும் வசதியளிப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இத் திட்டத்திற்கான தொடக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இம்மாநிலத்திலுள்ள உழவர்களின் நீண்ட காலக் கடன் தேவையை, தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ள வட்ட அளவிலும் வளர்ச்சி வட்டார நிலையிலுள்ள 223 தொடக்க நிலவள வங்கிகள் நிறைவு செய்கின்றன. 1969–70, 1970-71-ஆம் ஆண்டுகளில் 117 தொடக்க நிலவள வங்கிகள் வளர்ச்சி வட்டார அளவில் திறக்கப்பட்டன. புதிய கிணறுகள் தோண்டுதல், மின் விசை இயந்திரங்கள், எண்ணெய் இயந்திரங்கள், விசையேற்றங்கள் வழங்குதல், விசையேற்றங்களை அமைத்தல், பாசனப் பயனுக்காகக் குழாய்களை அமைத்தல், நிலங்களைப் பண்படுத்துதல்,





டிராக்டர்கள் போன்ற வேளாண்மைக் கருவிகளை வாங்குதல் இவை போன்ற வேளாண்மை உற்பத்திக் காரியங்களுக்காகவே, நிலவள வங்கிகளால் வழங்கப்படும் கடன் தொகையில் ஏறத்தாழ 95 சதவிதம் வழங்கப்படுகிறது.

நிலவள வங்கிகளின் நலனைக் காப்பதற்காக மாநில நிலவள வங்கிகள் சட்டம், 1968-69-ல் திருத்தப்பட்டது. வங்கிகள் 1968 ஜூலை 4-ஆம் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் தங்கள் பெயரில் அடமானம் வைக்கப்பட்ட நிலங்கள் குறித்து, பிற எல்லா உரிமைக் கோரிக்கைகளைக் காட்டிலும் (அரசுக்குச் சேரவேண்டிய நிலவரி நிலுவைகள் நீங்கலாக) முன்னுரிமை பெற வேண்டும் என்று வகை செய்ய இச் சட்டம் திருத்தப்பட்டது. நிலவள வங்கிகள்மூலம் கொடுக்கப்படும் கடன் விவரங்களைப்பற்றி உழவர்கள் நன்கு அறிந்து கொள்ளவும், இக்கடன்கள் அவர்களுக்கு எளிதில் கிடைக்கும்படிச் செய்யவும் உள்ள சில நடைமுறைகள் எளிதாக்கப்பட்டன. பல சலுகைகளும் குடியானவர்களுக்கு நீடிக்கப்பட்டன. பல்வேறு காரியங்களுக்காக அனுமதிக்கத்தக்க உயர் அளவுக் கடன்கள் தாராளமாகக் கீழே கண்டவாறு செய்யப்பட்டன :—

| | | ரூபாய். |
|---|---|---|
| 1 | விசையேற்றங்கள், டிராக்டர்கள், ஏனைய துணைக் கருவிகள். | 40,000 |
| 2 | கிணறுகள் தோண்டுதல் .. .. .. .. | 35,000 |
| 3 | விசையேற்றங்கள் அமைத்தல், அவைகளுக்காகக் கொட்டகைகள் கட்டுதல். | 5,000 |
| 4 | கிணறுகளை ஆழப்படுத்துதல் .. .. .. | 10,000 |
| 5 | நிலம் பண்படுத்துதல் .. .. .. | 5,000 |

கடன்கள் விரைந்து அளிக்கப்படும் வகையில் கன்னியாகுமரி, நீலகிரி, சென்னை நீங்கலாக ஒவ்வொரு மாவட்டத்திலும், தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி தன் கிளை வங்கிகளைத் திறந்துள்ளது.

கடன் விண்ணப்பங்களை முறைப்படுத்துவதுகுறித்த நடைமுறைகளை எளிதாக்கியதன் காரணமாகவும், வங்கிகள் கடன்களை ஒப்பளித்து வழங்குவதற்கான நடைமுறைகளை எளிதாக்கிய காரணத்தாலும் கடன் வாங்கும் வரம்பு குறித்து குடியானவர்களுக்குச் சலுகைகள் நீட்டிக்கப்பட்டதாலும் வில்லங்கச்சான்றிதழ் முதலியவற்றிற்குக் கட்டணங்கள் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டதாலும் கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு நிலவள வங்கிகளால் வழங்கப்படும் கடன் தொகை அதிகரித்துள்ளது :—

| ஆண்டு. | வழங்கப்பட்ட கடன் தொகை. (ரூபாய் கோடியில்.) |
|---|---|
| 1965–66 .. .. .. | 3·00 |
| 1966–67 .. .. .. | 2·93 |
| 1967–68 .. .. .. | 5 70 |
| 1968–69 .. .. .. | 14·15 |
| 1969–70 .. .. .. | 14·95 |
| 1970–71 .. — .. | 19·07 |

[1971 ஜூலை 20

தமிழ்நாடு மாநில நிலவள வங்கியால் வெளியிடப்பட்ட கடன் ஈட்டுப் பத்திரங்களின் மதிப்பில், மாநில அரசு, மத்திய அரசு, ரிசர்வ் வங்கி, ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் ஆகியவை பொதுவாக 40 சதவீதம் வரை தொகையளிக்கின்றன. தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியின் கடன் ஈட்டுப் பத்திரங்களுக்கு மாநில அரசு 31-3-1971 முடிய ரூ. 1,028.19 லட்சம் வரை தொகையளித்துள்ளது. அதில், 1970–71-ல் ரூ. 202.60 லட்சம் தொகை கொடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியால் வெளியிடப்பட்ட கடன் ஈட்டுப் பத்திரங்களுக்கான அசலையும் வட்டியையும் திருப்பித் தருவதற்கு மாநில அரசு உத்தரவாதம் அளிக்கிறது. மாநில அரசால் கொடுக்கப்படும் உத்தரவாதத்தின் உயர் வரம்பு அண்மையில் ரூ. 75 கோடியிலிருந்து ரூ. 125 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

நில மேம்பாடு குறித்த பல முக்கிய செயல் திட்டங்களுக்காக நிலவள வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| செயல் திட்டங்கள். | வழங்கப்பட்ட கடன்கள். 1968–69. | 1969–70. | 1970–71. |
|---|---|---|---|
| | (ரூ. லட்சத்தில்.) | | |
| 1 புதிய கிணறுகள் தோண்டுதல் | 338·26 | 586·09 | 749·35 |
| 2 கிணறுகளை ஆழப்படுத்துதல் .. | 224·71 | 213·62 | 482·28 |
| 3 விசையேற்றங்களை அமைத்தல் .. | 362·85 | 319·47 | 400·78 |
| 4 விசையேற்றங்களை அமைத்தல் .. | 40·80 | 52·78 | .. |
| 5 நிலம் பண்படுத்துதல் .. .. | 94·19 | 31·32 | .. |
| 6 டிராக்டர்கள் வாங்குதல் .. .. | 111·22 | 106·65 | .. |
| 7 வடிமுனைக் குழாய்க் கிணறுகள் | 6·30 | 31·35 | .. |
| 8 ஏனைய நில மேம்பாடுகள் .. | 117·36 | 145·97 | 274·64 |
| | 1,295·69 | 1,487·25 | 1,907·05 |

"புதிய கிணறு உதவித் தொகை" திட்டத்தின்கீழ் தக்காவிக் கடன்கள் வழங்குவதையும் எண்ணெய் இயந்திரங்கள், விசையேற்றங்கள் ஆகியவற்றைத் தவணைக் கொள்முதல் முறையில் வாங்கும் திட்டத்தையும் 1—4—1968 முதல் மாநில அரசு நிறுத்தி பாசனக் கிணறுகள் தோண்டுவதற்கும், விசையேற்றங்கள் அமைப்பதற்கும் நிலவள வங்கிகள் மூலம் கடன்கள் வழங்கப்படவேண்டுமென்று அரசு ஆணையிட்டது. நிலவள வங்கிகளிடமிருந்து பெற்ற கடன்களைக் கொண்டு புதிய கிணறுகளைத் தோண்டும் குடியானவர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தை அரசு 1968-69-லிருந்து செயலுக்குக் கொண்டுவந்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஒரு குடியானவர், ரூ. 500 என்ற உயரளவிற்குட்பட்டு கிணறு வெட்ட ஆகும் செலவில் 25 சதவீத உதவித் தொகையைப் பெறுவதற்குத் தகுதியுடையவராவார். இத் திட்டத்தின்கீழ்



1971 ஜூலை 20]

வழங்கப்பட்ட ஆண்டுவாரி உதவித் தொகையின் அளவும், தோண்டப்பட்ட கிணறுகளின் எண்ணிக்கையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | உதவியளிக்கப்பட்ட கிணறுகளின் எண்ணிக்கை. | உதவித் தொகை. (ரூ. லட்சத்தில்.) |
|---|---|---|
| 1968–69 .. .. | 640 | 3·20 |
| 1969–70 .. .. | 4,842 | 24·21 |
| 1970–71 .. .. | 5,092 | 25·46 |

கிராம சேமிப்புகளை ஈட்டும் நோக்குடன் தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கி கிராமக் கடன் ஈட்டுறுதிப் பத்திரங்களை வெளியிடுகிறது. தனிப்பட்டவர்களாலும், இந்திய ரிசர்வ் வங்கியாலும் இந்தக் கடன் பத்திரங்களில் முதலீடு செய்யப்படுகிறது. இந்தக் கடன் ஈட்டுப் பத்திரங்களில் இருந்து கிடைக்கும் தொகைகள் தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியின் சாதாரணக் கடன் வழங்கு திட்டத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றன. 31—3—1971 அன்றுள்ளபடி நடைமுறையில் உள்ள கிராமக் கடன் ஈட்டுறுதிப் பத்திரங்களின் மதிப்பு ரூ. 2.37 கோடியாகும்.

கிணறுகள் வெட்டுதல், விசையேற்றங்கள் அமைத்தல் முதலிய சாதாரணத் திட்டங்களுக்காக தொடக்க நிலவள வங்கிகளின் மூலம் குடியானவர்களுக்கு நிதியுதவி அளிப்பதைத் தவிர, தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கியால் வெளியிடப்பட்ட சிறப்பு மேம்பாட்டுக் கடன் ஈட்டுப் பத்திரங்களுக்குத் தொகையளிப்பதன் மூலம் வேளாண்மை மறு நிதியுதவிக் கழகத்திடமிருந்தும் மாநில அரசிடமிருந்தும் பெற்ற நிதியுதவியுடன் சிறு பாசனம், மலைத் தோட்டப் பயிர்த் திட்டங்கள் வாயிலாக அவ்வப் பகுதி மேம்பாட்டு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. தமிழ்நாட்டு கூட்டுறவு மாநில நிலவள வங்கியால் வெளியிடப்பட்ட சிறப்பு மேம்பாட்டுக் கடன் ஈட்டுறுதிப் பத்திரங்களில் வேளாண்மை மறு நிதியுதவிக் கழகமும், மாநில அரசும் சிறு பாசனத் திட்டங்களுக்கு 9:1 என்ற விகிதத்திலும், நில மேம்பாடு, போன்ற சிறு பாசனத் திட்டமில்லாத திட்டங்களுக்காகவும், ரப்பர், தேயிலை, தென்னை, காப்பி போன்ற மலைத் தோட்டத் திட்டங்களுக்காகவும் 3:1 என்ற விகிதத்திலும் முதலீடு செய்கின்றன. தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியின் சிறப்பு மேம்பாட்டுக் கடன் ஈட்டுறுதிப் பத்திரங்களுக்கு மாநில அரசு இதுவரை ரூ. 1.58 கோடி தொகையளித்துள்ளது. அவை குறித்த விவரம் பின் வருமாறு :—

| ஆண்டு. | அளிக்கப்பட்ட தொகை. (ரூ. லட்சத்தில்.) |
|---|---|
| 1965–66 .. .. .. | 5·0000 |
| 1966–67 .. .. .. | 15·0000 |
| 1967–68 .. .. .. | 25·0000 |
| 1968–69 .. .. .. | 41·1500 |
| 1969–70 .. .. .. | 27·0125 |
| 1970–71 .. .. .. | 45·2650 |
| | 158·4275 |

31-3-1971 அன்றுள்ளபடி தற்போது நடைமுறையிலுள்ள சிறப்பு மேம்பாட்டுக் கடன் ஈட்டுறுதிப் பத்திரங்களின் மதிப்பு ரூ. 7.94 கோடியாகும்.

31-3-1970 வரை உள்ள நிலவரப்படி கீழ்க்கண்ட திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன:—

1. பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டப் பகுதியில் (1-நிலை) உள்ள நிலங்களைப் பண்படுத்துதல்.

2. கோயம்புத்தூர் மாவட்டத்தில் தொண்டாமுத்தூர், பெரிய நாயக்கன்பாளையம் வட்டாரங்களில் கிணறுகள் வெட்டுதல்.

3. திருச்சிராப்பள்ளி மாவட்டம், புதுக்கோட்டை கோட்டத்தில் கிணறுகள் வெட்டுதல்.

4. நீலகிரி மாவட்டத்தில் தேயிலைத் தோட்டப் பயிருக்கான திட்டம்.

5. கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தோட்டப்பயிருக்கான திட்டம்.

6. தஞ்சாவூர் மாவட்டத்தில் தென்னை தோட்டப் பயிருக்கான திட்டம்.

7. ராமநாதபுரம் மாவட்டத்தில் சிவகெங்கை, திருப்பத்தூர் வட்டங்களில் கிணறுகள் வெட்டுதல்.

8. உடுமலைப்பேட்டை வட்டத்தில் கிணறுகள் வெட்டுதல்.

உலக வங்கியின் உதவியுடன் இம்மாநிலம் முழுவதிலும் நில அடிமட்ட நீர்வளத்தை முழு அளவில் பயன்படுத்திக்கொள்வதற்கு மாநில அரசு அடங்கல் திட்ட அறிக்கை ஒன்றைத் தயாரித்துள்ளது. கூடுதல் சிறு பாசனத் திட்டங்களையும், டிராக்டர்களையும் பெருமளவில் வழங்கும் திட்டத்தையும் நிறைவேற்றும் பணிகள் இவ்வறிக்கையில் உள்ளன.

1970-71-ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட சிறு பாசனத் திட்டங்களையும், மலைத் தோட்டப் பயிர்த் திட்டங்களையும் நிறைவேற்றுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டன:—

1. திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி, உடையார்பாளையம் வட்டங்களில் கிணறுகள் வெட்டுதல்.

2. செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம், செங்கற்பட்டு வட்டங்களில் திறந்த கிணறுகள் தோண்டுதல், விசையேற்றங்களை அமைத்தல்.

3. திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோயில் வட்டத்தில் புதிய கிணறுகள் தோண்டுதல், கிணறுகளை ஆழப்படுத்துதல், விசையேற்றங்களை அமைத்தல்.

4. மதுரை மாவட்டம் திருமங்கலம், உசிலம்பட்டி வட்டங்களில் புதிய கிணறுகள் தோண்டுதல், கிணறுகளை ஆழப்படுத்துதல், விசையேற்றங்களை அமைத்தல்.





5. மதுரை மாவட்டம் திண்டுக்கல், வேடசந்தூர் வட்டங்களில் கிணறுகளை ஆழப்படுத்துதல், விசையேற்றங்களை அமைத்தல்.

6. ராமநாதபுரம் மாவட்டம் சிவகெங்கை, திருப்பத்தூர் வட்டங்களில் திறந்த கிணறுகள் வெட்டுதல், விசையேற்றங்களை அமைத்தல்.

7. திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டத்தில் பாசனக் கிணறுகளையும் விசையேற்றங்களையும் அமைத்தல்.

8. திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி, தென்காசி வட்டங்களில் பாசனக் கிணறுகளையும் விசையேற்றங்களையும் அமைத்தல்.

9. மதுரை மாவட்டம், மதுரை மேலூர் வட்டங்களில் பாசனக் கிணறுகளையும், விசையேற்றங்களையும் அமைத்தல்.

10. தருமபுரி மாவட்டம். கிருஷ்ணகிரி ஊத்தங்கரை வட்டங்களில் பாசனக் கிணறுகளையும், விசையேற்றங்களையும் அமைத்தல்.

11. திருச்சி மாவட்டம், முசிறி வட்டத்தில் பாசனக் கிணறுகளையும் விசையேற்றங்களையும் அமைத்தல்.

12. திருச்சி மாவட்டம், குளித்தலை வட்டத்தில் பாசனக் கிணறுகளையும் விசையேற்றங்களையும் அமைத்தல்.

13. திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டத்தில் புதிய கிணறுகளைத் தோண்டுதல், கிணறுகளை ஆழப்படுத்துதல், விசையேற்றங்களை அமைத்தல்.

14. திருச்சி மாவட்டம், கரூர் வட்டத்தில் புதிய கிணறுகளையும், விசையேற்றங்களையும் அமைத்தல்.

15. தென்னார்க்காடு மாவட்டம், விழுப்புரத்தில் தோண்டிய துளைக் கிணறுகளையும் விசையேற்றங்களையும் அமைத்தல்.

16. தஞ்சாவூர் மாவட்டத்தில் வடிமுனைக் கிணறுகளை இறக்குதல்.

17. சேலம் மாவட்டம் நாமக்கல் வட்டத்தில் கிணறுகளைத் தோண்டுதல், விசையேற்றங்களை அமைத்தல்.

18. தருமபுரி மாவட்டம், தருமபுரி, ஹோசூர், ஹரூர் வட்டங்களில் கிணறுகளை ஆழப்படுத்துதல், விசையேற்றங்களை அமைத்தல்.

மேற்சொன்ன திட்டத்தைத் தவிர, கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த பரம்பிக்குளம்-ஆளியாறு திட்ட ஆயக்கட்டுப் பகுதியைச் சேர்ந்த 32,000 ஏக்கர் நிலங்களைப் பண்படுத்துவதற்கான திட்டத்தின் இரண்டாவது நிலை, சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த

ஏர்க்காடு மலையிலும் மதுரை மாவட்டத்தில் பழனி மலையிலும் காப்பி பயிரிடும் சிறு தோட்ட முதலாளிகளுக்கும் நிதி உதவி அளித்தல் ஆகிய இத் திட்டங்கள் இந்த ஆண்டில் நிறைவேற்றப் பட்டு வருகின்றன.

மேற்சொன்ன திட்டங்களுக்கான செலவு மதிப்பீடு ரூ. 28.46 கோடியாகும். இத் திட்டங்களை நிறைவேற்றுவதனால் 22,350 புதிய கிணறுகள் வெட்டப்படும். 6,300 கிணறுகள் ஆழமாக்கப் படும் ; 25,550 விசையேற்றங்கள் நிறுவப்படும் ; 6,500 ஏக்கர் பரப் பளவில் காப்பித் தோட்டங்களும், 1,000 ஏக்கர் பரப்பளவில் தேயிலைத் தோட்டங்களும், 1,580 ஏக்கர் பரப்பளவில் ரப்பர் தோட் டங்களும், 2,000 ஏக்கர் பரப்பளவில் தென்னந் தோப்புகளும் வளர்க்கப்படும்.

ஏற்கனவே எடுத்துக் கொள்ளப்பட்ட திட்டங்களில் ஏற்பட் டுள்ள முன்னேற்றம் பற்றிய விவரங்கள் இணைப்பில் குறிப்பிடப் பட்டுள்ளன. ரூ. 28.46 கோடி செலவில் 35 திட்டங்களைச் செயல் படுத்துவது குறித்து வேளாண்மை மறு நிதி உதவிக் கழகத்தின் ஆலோசனையில் இருந்து வருகிறது. ரூ. 29.82 கோடி செலவில் 34 திட்டங்களை நிறைவேற்றுவது குறித்து மாநில நிலவள வங்கி யும், மாநில அரசும் ஆலோசனை செய்து வருகின்றன.

வேளாண்மை மறு நிதி உதவிக் கழகத்தின் திட்டங்களைத் திறம் பட உருவாக்கி அவற்றை நிறைவேற்றுவதற்காக மாநில நிலவள வங்கி நிலையில் தொழில் நுட்பப் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள் ளது. இப்பிரிவில் மாநிலப் புவியியல் வல்லுநர் ஒருவர், வேளாண் மைப் பொருளாதார வல்லுநர் ஒருவர், வேளாண்மைப் பொறியியல் வல்லுநர் ஒருவர் ஆகியோர் இருப்பர். இம் மாநிலத்தில் செயல் படுத்தபட்டு வரும் சிறு பாசனத் திட்டங்கள், நிலத்தைப் பண் படுத்தும் திட்டங்கள், மலைத் தோட்ட வளர்ச்சித் திட்டங்கள் போன்ற சிறப்புத் திட்டங்கள் பற்றி நன்கு மதிப்பிட மாநில நில வள வங்கிக்கு இயலும் பொருட்டே அத்தகைய பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. அன்றியும் துணைப்பதிவாளர் தரத்தில் திட்ட அதிகாரிகள் இம்மாநிலத்திலுள்ள 12 மாவட்டங்களிலு முள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களின் நேரடி மேற்பார்வையின் கீழ்ப் பணிபுரிய வேண்டுமென நியமிக்கப்பட்டனர். 12 மாவட்டங் கள் ஒவ்வொன்றுக்காகவும் தொழில் நுட்பப் பிரிவு ஒன்று அமைக் கப்பட்டது. திட்டங்கள் வகுக்கவும், நிறைவேற்றப்பட்டு வரும் திட்டங்களுக்காகத் தகுந்த தொழில் நுட்ப ஆலோசனை நடத்தவும் மாவட்ட ஆட்சி தலைவர்களுக்கு உதவும் வகையில் இப்பிரிவுகள் ஒவ்வொன்றிலும் உதவிப் புவியியல் வல்லுநர் ஒருவரும் வேளாண்மைப் பொறியியல் வல்லுநர் ஒருவரும் இருப்பர். ஒரே ஒரு மாவட்டத்தில்தான் வேளாண்மைப் பொறியாளருக்குப் பதிலாக வேளாண்மைப் பொறியியல் மேற்பார்வையாளர் நியமிக் கப்பட்டுள்ளார். அண்மையில் சிறு பாசனத் திட்டங்களுக்கு



முதன்மையளித்து ஒப்புதல் வழங்குவதற்காகச் சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்களின் அடிப்படையில் புதிய திட்டங்களைத் தயா ரிக்கும் பணியைக் கவனிப்பதற்காகப் புவியியல் உதவியாளர் தரத்தில் அவசியமான பணியாளர்களுடன் நிர்வாகப் பொறியாளர் தரத்தில் சிறப்பு அதிகாரியின் பதவி ஒன்றையும் அரசு ஏற் படுத்தியது. சிறப்பு திட்டங்கள் கீழ் நிலவள வங்கிகள் வழங்கிய கடன்கள் குறித்த விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | வழங்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்.) |
|---|---|
| 1968–69 .. .. .. .. | 1·33 |
| 1969–70 .. .. .. .. | 1·31 |
| 1970–71 .. .. .. .. | 3·29 |

ஒன்று அல்லது இரண்டு ஹெக்டேர் நிலம் உள்ள குடியானவர்கள் சிறு பாசனத் திட்டங்களின் நன்மைகளைப் பெற இயலும் பொருட்டும், கிணறுகள் வெட்டுவதற்கும், விசையேற்றங்களை நிறுவுவதற்கும் போதிய மூலதனத்தைக் கடனாகப் பெறும் வகை யில் கூட்டுறவு இறைவைப் பாசனச் சங்கங்கள்Co-operativeLift Irrigation Societiesஅமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அரசு, நிலவள வங்கிகள் பிற நிதி உதவும் நிறுவனங்கள் ஆகியவை வழங்கும் கடன் வசதிகளை அச்சங்கங்கள் பெற்றுப் பொதுக் கிணறுகளைத் தோண்டும் பணியையும் விசையேற்றங்களை நிறுவும் பணியையும் மேற் கொள்ளுகின்றன. 1971-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முடிய 1,899 சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நிறைவேற்றப்பட்டு வரும் திட்டங்களை முடிப்பதற்காகக் கடன் வசதிகளை அதிகரிப்பதன் மூலம் இம்மாநிலத்திலுள்ள நிலவள வங்கிகள் புன்செய் நிலங்களைப் பாசனம் பெறும் நன்செய் நிலங் களாக மாற்ற வகைசெய்து அதன் மூலம் இம்மாநிலத்தின் உணவு உற்பத்தியைப் பெருக்க வழிகோலும் மேற்படித் திட்டங்களைச் சடுதியில் நிறைவேற்றும் பணியைத் தாங்கள் மனநிறைவளிக்கும் வகையில் நிறைவேற்ற இயலும் என மெய்ப்பித்துள்ளன.

### II கூட்டுறவு விற்பனை, செய்முறைச் சங்கங்கள்.

கூட்டுறவு வாணிப-செய்முறைத் தொழிலில் முன்னேற்றம் கீழே விவரிக்கப்பட்டுள்ளது :—

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கூட்டுறவு விற்பனைத் திட்டங்களுக்காகவும் செய்முறை திட்டங்களுக்காகவும் 539 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1970-71-ஆம் ஆண்டில் மேற்படி தலைப்புகளின் கீழ்ச் செய்யப்பட்ட மொத்தச் செலவு ரூ. 1,19.93

லட்சமாகும். 1969-70-ம் ஆண்டிலோ ரூ. 87.72 லட்சமே செலவு ஏற்பட்டதென்பது குறிப்பிடத் தக்கதாகும். செலவு செய்த முக்கியமான திட்டங்களின் விவரம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது :—

| திட்டத்தின் பெயர். | பயன்படுத்தப்பட்ட தொகை. | |
|---|---|---|
| | 1969–70 | 1970–71 |
| | (ரூ. லட்சத்தில்.) | |
| 1 நவீன அரிசி ஆலைகளை நிறுவுதல் .. | 37·10 | 20·00 |
| 2 கொள்முதல் பணிக்காக அரிசி ஆலைகளை நிறுவிய கூட்டுறவு விற்பனைக் சங்கங்களுக்குக் கட்டுப்படியாவதற்கான தொகையை அளித்தல். | .. | 23·01 |
| 3 இரசாயன உரங்களுக்காகத் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கழகத்திற்கும் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கழகத்திற்கும் கட்டுபடியாவதற்காகத் தொகை அளித்தல். | 16·00 | 43·00 |
| 4 தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கழகம் உரமணித் தொழிற்சாலை ஒன்றை நிறுவுதல். | 8·25 | 10·00 |
| 5 பயிர் நோய் மருந்து, பூச்சிக்கொல்லி மருந்து தயாரிக்கும் பிரிவை நிறுவுதல். | 0·82 | 1·17 |
| 6 தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு டிராக்டர் பழுது பார்க்கும் பிரிவு ஒன்றை நிறுவுதல். | .. | 0·92 |
| 7 கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்குப் பங்கு மூலதனம் உதவுதல். | 6·55 | 10·00 |
| 8 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் லாரிகள் அல்லது டிரக்குகளை வாங்குதல். | 3·00 | 1·00 |
| 9 கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் விலை ஏற்ற, இறக்க நிதிக்கு உதவித் தொகை அளித்தல். | .. | 0·52 |
| 10 குளிர் சாதன அறை நிறுவுவதற்காகக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு உதவி. | 4·91 | .. |
| 11 செய்முறைப் பிரிவுகளை நிறுவதற்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மூலதன முதலீடும் கடனுதவியும் அளித்தல். | 2·81 | 1·10 |

விற்பனைச் சங்கங்களின் நடைமுறை மூலதனத்தைப் பெருகச் செய்வதற்காகக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் மூலதன முதலீட்டில் மாநில அரசும் பங்கு கொள்கிறது. மேலாளர்கள், கணக்கர்கள், கிடங்குக் காப்பாளர்கள் முதலிய பணியாளர்களை நியமிப்பதற்காகக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு நிர்வாக உதவித் தொகையும் வழங்கப்படுகிறது. இந்த உதவி மூன்றாண்டுக் காலத்திற்குப் படிப்படியாய்க் குறையும் அளவுக்கு வழங்கப்படுகிறது.





உழவர்களின் விளைபொருள்கள் விற்பனை செய்வதற்கும், அவர்களுக்குத் தேவையான பொருள்களை வழங்குவதற்கும் விற்பனைச் சங்கங்களுக்கு விரைவான போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுக்கும் நோக்குடன் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு லாரிகள் வாங்க நிதி உதவி அளிக்கப்படுகின்றது. இதுவரையில் 82 லாரிகளை வாங்கக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு உதவி வழங்கப்பட்டுள்ளது.

விற்பனைச் சங்கங்கள் தங்களது உறுப்பினர்களின் விளை பொருள்களை மொத்தமாக வாங்கித் தங்கள் விற்பனை நடவடிக்கைகளை மேம்படுத்திக் கொள்ள அவற்றிற்கு ஊக்கமளிக்கும் வகையில், விலை ஏற்ற இறக்கத் தடுப்பு (Price Eulctuation Fund) நிதி ஒன்றை ஏற்படுத்த அரசு கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவித் தொகை வழங்குகிறது. அச்சங்கங்கள் முந்திய ஆண்டில் ஒரு மொத்தமாக வாங்கிய வேளாண்மை விளை பொருள்களின் மதிப்பில் 2 சதவித உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. செயல் முறைக்கு உட்படுத்தப்பட்ட பிறகு கூட்டுறவுச் சங்கங்களினுல் விற்கப்படுபவையும், விலை ஏற்ற இறக்கம் அதிகமாய் இருக்கக் கூடியவையுமான பொருள்கள் அல்லது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருள்கள் குறித்து அரசு உதவித் தொகையின் வரையறை 2 சதவிதத்திலிருந்து 5 சதவிதமாக உயர்த்தப்படலாமென அரசு ஒப்புக் கொண்டுள்ளது. 1970-71-ஆம் ஆண்டில் இந்த நிதிக்கு உதவித் தொகையாக ரூ. 0.52 லட்சம் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு அளிக்கப்பட்டது.

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு நிலையில் மேம்பாட்டுப் பிரிவுகளையும் மதிப்பீட்டுப் பிரிவுகளையும் ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத் திட்டத்தின்கீழ் விற்பனைப் பிரிவு ஒன்றும், உரத் தயாரிப்புப் பிரிவு ஒன்றும், வேலை முறைப் பிரிவு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இப் பிரிவுகளில் நியமிக்கப்பட்டுள்ள வல்லுநர்களுக்கான செலவை 5 ஆண்டுக் கால அளவில் அரசு ஓரளவு ஈடு செய்கிறது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு விற்பனைச் சங்கங்களின் பணியாளர்களாக நியமிக்கப்படுவதற்குரிய பணியாளர்களைக் கொண்டு பொதுவான பணித்தரம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. இப் பணியாளர்கள் அக் கூட்டமைப்புடன் இணைந்துள்ள கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் செயலாளர்களாகவோ நிர்வாகிகளாகவோ பணியாற்றுவதற்குத் தற்காலிகமாக அனுப்பப்படுவர். இவ்வாறு அனுப்பப்படுவதால், அச்சங்கங்கள் இத் துறையில் நாளடைவில் தங்களது சொந்தப் பணியாளர்களை நியமித்துக்கொள்ள அவைகளுக்கு வசதியாக இருக்கும். நிர்வாகப் பணியாளர் குறித்த செலவை அரசு ஓராண்டுக் கால அளவுக்கு ஓரளவு ஈடு செய்கிறது. தற்போது இத் திட்டத்தின் கீழ் 36 பணியாளர்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர்.

குளிர் சாதன அறை ஒன்றை நிறுவுவதற்காகத் தமிழ் நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்புக்கு ரூ. 4.91 லட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது. இதற்காகத் தேவைப்படும் நிலத்தைக்

[1971 ஜூலை 20

கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எண்ணெய் ஆலைகள், மரவள்ளிக் கிழங்கு, முந்திரி அன்னாசிப்பழம் இவற்றின் செய்முறைப் பிரிவுகளைக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் துணைப் பிரிவுகளாக நிறுவ அரசு, பங்கு மூலதனமாகவும், கடனாகவும் உதவி வழங்குகிறது. செய்முறைப் பிரிவுகளை நிறுவியுள்ள கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு நிர்வாக உதவித் தொகைக்காகவும் ரூ. 3.39 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் கொள்முதல் பணிகளில் தொடர்ந்து ஆர்வம் காட்டின. 1970-ஆம் ஆண்டில் சம்பா, குறுவைப் பருவங்களில் மொத்தம் 0.74 லட்சம் டன் கொள்முதல் செய்யப்பட்டது.

கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சொந்தமான செய்முறைப் பிரிவுகளும், நிறுவப்பட்டுவரும் செய்முறை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| தொடர் எண்ணும் பிரிவின் வகைகள். | பிரிவுகளின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1. பருத்தி அடித்தல் பிரிவுகள் | 18 |
| 2. வேர்க்கடலை மேல்தோல் நீக்கும் பிரிவுகள் | 25 |
| 3. எண்ணெய் ஆட்டும் பிரிவுகள் | 5 |
| 4. அரிசி உமி நீக்கும் பிரிவுகள் | 36 |
| 5. காப்பி பக்குவப்படுத்தும் தொழிற்சாலை | 1 |
| 6. நவீன அரிசி ஆலைகள் | 13 |
| 7. அரிசித் தவிட்டு எண்ணெய்ப் பிரிவு | 1 |
| 8. பழங்களைக் கொள்கலன்களில் அடைக்கும் பிரிவு | 1 |
| 9. ஏலக்காய் எண்ணெய்த் தயாரிப்புப் பிரிவு | 1 |
| 10. மரவள்ளிக் கிழங்கு தொழிற் பிரிவு | 1 |
| 11. முந்திரிப் பருப்பு தொழிற் பிரிவு | 1 (நிறுவப்பட்டு வருகிறது.) |
| 12. அன்னாசிப் பழம் செய்முறை பிரிவு | 1 (நிறுவப்பட்டு வருகிறது.) |

திருவாரூரில் 1965-ம் ஆண்டு முதல் நவீன அரிசி அரைவை ஆலைகள் இயங்கிவருகின்றன. தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து பெற்ற நிதி உதவியுடன் ஏற்படுத்தப்பட்ட பன்னிரண்டு நவீன அரிசி ஆலைகளில், ஐந்து ஆலைகள் தஞ்சாவூர்



1971 ஜூலை 20]

மாவட்டத்திலும், மற்ற ஏழு ஆலைகள் பிற மாவட்டங்களிலும் நிறுவப்பட்டுள்ளன. அவை குறித்த விவரம் கீழே குறிக்கப்பட்டுள்ளது :—

| மாவட்டம். | இருப்பிடம். | மணி ஒன்றுக்குத் திறனளவு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | டன். |
| தஞ்சாவூர் .. .. | திருவையாறு .. .. | 4 |
| தஞ்சாவூர் .. .. | கும்பகோணம் .. .. | 4 |
| தஞ்சாவூர் .. .. | மன்னார்குடி .. .. | 4 |
| தஞ்சாவூர் .. .. | மாயூரம் .. .. | 4 |
| தஞ்சாவூர் .. .. | புதுக்கோட்டை .. .. | 2 |
| செங்கற்பட்டு .. . | செங்கற்பட்டு .. .. | 2 |
| வட ஆர்க்காடு .. .. | செய்யாறு .. .. | 2 |
| தென் ஆர்க்காடு .. | கள்ளக்குறிச்சி .. .. | 2 |
| திருச்சி .. .. .. | திருச்சிராப்பள்ளி .. .. | 2 |
| மதுரை .. .. .. | மதுரை .. .. .. | 2 |
| திருநெல்வேலி .. . | திருநெல்வேலி .. .. | 2 |
| கோயம்புத்தூர் .. | பொள்ளாச்சி .. .. | 2 |

இப்பன்னிரண்டு ஆலைகளில் 9 ஆலைகள் உற்பத்தி தொடங்கியுள்ளது. மாயூரத்திலுள்ள ஆலையின் கட்டடப்பணி நிறைவேறி வருகிறது. திருச்சிராப்பள்ளியிலும், திருநெல்வேலியிலுமுள்ள ஆலைகள் விரைவில் பணி தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. உற்பத்தி தொடங்கியுள்ள ஆலைகள் ஏறத்தாழ 29,000 டன் நெல்லை அரைத்துள்ளன.

இவ்வாண்டுக் காலத்தில் மொத்தச் செலவுக்காகக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்குப் பங்கு மூலதனவாயிலாக அரசு ரூ. 20.00 லட்சம் வரை நிதி உதவி அளித்துள்ளது.

அரிசி ஆலைகளை நிறுவியுள்ள கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் கொள்முதல் காரியங்களுக்காக நடைமுதல் மூலதனத்தைத் திரட்டுவதற்குத் துணை செய்யும் வகையில் பங்கு மூலதன வடிவில் அரசு ரூ. 23.01 லட்சம் நிதி உதவி அளித்தது. பதினொரு கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் இதனால் பயன் பெற்றன.

அன்னியச் செலாவணி பெறும் துணைப் பொருளாகிய தவிட்டு எண்ணெய் தயாரிப்பதில் தஞ்சாவூர் மாவட்ட அரிசி ஆலைகளில் கிடைக்கிற அரசித் தவிட்டைப்பயனுள்ள வகையில் பயன்படுத்தும் பொருட்டு, ரூ. 19.75 லட்சம் செலவில் அரிசித் தவிட்டு எண்ணெய் ஆலை ஒன்றைத் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் தொடங்கியுள்ளது. இத்தொகையில் அரசின் உதவி ரூ. 14.80 லட்சமாகும்.

வேர்க்கடலை செய்முறைப் பிரிவு, சிக்கிரித்தூள் தொழிற் பிரிவு, சோள உற்பத்தித் தொழிற்சாலை, முந்திரிப் பருப்பு தொழிற்சாலை முதலியவை தொடங்குவதுபற்றிய செயற்குறிப்பு பரிசீலனையில் இருந்து வருகிறது. ஐதராபாத் வட்டார ஆராய்ச்சி ஆய்வுக் கூடத்துடன் கலந்தாலோசித்துத் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பால் மதுரை மாவட்டத்தில் பருத்தி விதை

எண்ணெய் ஆலை ஒன்றை நிறுவுவதற்கான திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்காக ரூ. 0.14 லட்சம் உதவித் தொகை வழங்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு ரூ. 8.25 லட்சம் பங்கு மூதலனமும் ரூ. 10 லட்சம் கடனும் சேர்ந்த நிதி உதிவியுடன் ஏறத்தாழ ரூ. 25 லட்சம் செலவில் மன்னார்குடியில் உரத் தொழிற் அத்தொழிற்சாலை 2—1—1971 அன்று பணி தொடங்கியுள்ளது. சாலை (Granular Fertilizer Plant) ஒன்றை நிறுவியுள்ளது. ஆண்டொன்றுக்கு 45,000 டன் உரம் உற்பத்தி செய்யும் வகையில் அது வடிவமைக்கப்பட்டுள்ளது.

துடியலூர் கூட்டுறவு வேளாண்மைப் பணிகள் நிறுவனம், பயிர் நோய்களை ஒழிக்கும் மருந்துகளையும், பூச்சிக் கொல்லி மருந்து களையும் தயாரிக்கும் பிரிவு ஒன்றை அமைத்துள்ளது. ரூ. 1.30 லட்சம் பங்கு மூலதனமாகவும் ரூ. 0.51 லட்சம் கடனாகவும், ரூ. 013 லட்சம் உதவித் தொகையாகவும் அரசு நிதியுதவி அளித்துள்ளது. இயந்திரங்கள், சாதனகங்ள் வாங்குவதற்காகவும், பணிமனையும் சேமிப்பு இடம் கட்டுவதற்காகவும், வங்கியிலிருந்து உதவித் தொகை பெறுவதற்காகவும், நிர்வாக உதவித் தொகைக்காகவும் மேற்கூறிய கடனும், உதவித் தொகையும் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு லிமிடெட் நிறு வனத்தால் டிராக்டர் பணிமனை ஒன்று கட்டத் திட்டமிடப்பட் டுள்ளது. இதற்காக ரூ. 0.92 லட்சம் நிதியுதவி இக் கூட்டமைப் புக்கு வழங்கப்பட்டுள்ளது.

தஞ்சாவூரைத் தவிர, எல்லா மாவட்டங்களிலுமுள்ள தமிழ் நாடு கூட்டுறவு விற்பனை கூட்டமைப்பும் தஞ்சாவூர் மாவட்டத் திலுள்ள தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை கூட்டமைப்பும் மாவட்ட அளவில் பயிற்சியளிக்கப்பட்ட உரமேம்பாட்டு அதிகாரிகளை நியமித்து, விற்பனைச் சங்கங்கள், கிராமக் கடன் சங்கங்கள் மூலம் தொகுப்பு ஏற்பாட்டில் அடங்காத உரத்தை வாங்கி வழங்கு கின்றன. 1970–71-ஆம் ஆண்டில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பும், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பும் ரூ. 8.80 கோடி மதிப்புக்கு தொகுப்பு ஏற்பாட்டில் அடங்காத உரத்தை (Non-Pool Fertilizer) வாங்கி வழங்கியுள்ளன. இதைத் தவிர, இக் கூட்டுறவுச் சங்கங்கள் அரசு வாணிகத் திட்டத்தின்கீழ் தொகுப்பு ஏற்பாட்டின்கீழ் வருகிற உரத்தை வழங்கின. 1970-71-ல் ரூ. 6.90 கோடி அளவிற்கு மதிப்புள்ள தொகுப்பு ஏற்பாட்டின்கீழ் வருகிற உரம் அவற்றால் வாங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பும், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பும் உரங்களைக் கொள்முதல் செய்து விற்பனை செய்வதை மேற்கொள்வதற்குத் தேவையான நிதியைத் திரட்ட இயலும் வகையில் 1969-70-ல் ரூ. 16 லட்சமும், 1970–71-ல் ரூ. 43 லட்சமும் மேற்சொன்ன நிறுவனங்களுக்குப் பங்கு மூலதனத் தொகையாக வழங்குவதன் மூலம் அரசு நிதியுதவி அளித்துள்ளது.





## III. துய்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள்.

452 சில்லறை விற்பனை நிலையங்களுடன் கூடியதும், 1,686 தொடக்கக் கூட்டுறவு விற்பனை நிலையங்களுடனும் கூடிய 30 மொத்த விற்பனை நிலையங்கள் துய்ப் பொருள்களை நியாயமான விலையில் விற்கின்றன. பங்கு மூலதனத் தொகை, நடைமுதல் மூலதனம், மேசை நாற்காலி போன்ற சாமான்கள், வண்டிகள் ஆகியவை வாங்குதல், கிடங்குகள் கட்டுதல் முதலியவற்றிற்காக இந்தப் பண்டகசாலைகளுக்கு அரசு நிதி உதவி அளித்து வந்துள்ளது.

1968-69-ஆம் ஆண்டுவரை, துய்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பான திட்டங்கள் மத்திய அரசுத் திட்டமாகச் செயல்படுத் தப்பட்டன. பொதுமக்களுக்கு நியாயமான விலையில் துய்ப் பொருட்களை வழங்குவதை உறுதிப்படுத்தும் நோக்கத்துடனும், விலைவாசிகள் ஏறாமல் கட்டுப்படுத்தும் நோக்கத்துடனும், 50,000-க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட நகரங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. அரசு இந்தப் பண்டக சாலைச் சங்கங்களில் பங்கெடுத்துக்கொண்டு, நடைமுதல் மூலதனம், வண்டிகள் வாங்குதல், கிடங்குகள் கட்டுதல் முதலியவற்றிற்கு நிதியுதவி அளித்து வந்தது. ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் தொகையுடைய மாநகரங்களிலும், நகரங்களிலும் 12 துறைப் பண்டக சாலைகளும் திறக்கப்பட்டிருக்கின்றன.

1968-69-ஆம் ஆண்டில் துய்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் பல திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ரூ. 11.97 லட்சம் செலவிடப் பட்டது. துய்ப்போர் திட்டங்களுக்காக 1969-70-ல் ரூ. 55.40 லட்சம் செலவிடப்பட்டது. 1970-71-ல் இத் திட்டத்தின்கீழ் ரூ. 19.75 லட்சம் செலவிடப்பட்டது.

துய்ப்போர் விரைவுத்திட்டத்தின் கீழ் தமிழ் நாட்டில் ஒரு லட்சத்துக்கு மேற்கொண்ட மக்கள் தொகையுடைய நகரங்களில் துறைப் பண்டக சாலைகள் திறக்கப்பட்டுள்ளன. இப் பண்டக சாலைகள் ஒவ்வொரு இடத்திலும் ஒன்று வீதத்தில் கடலூர், மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, வேலூர், தஞ்சாவூர், சேலம், திருச்சிராப்பள்ளி, நாகர்கோயில், நீலகிரி ஆகிய மாவட்டங் களில் துறையினர் பண்டக சாலைகள் திறக்கப்பட்டுள்ளன. சென்னையில் மட்டும் துறையினர் பண்டகசாலைகள் இரண்டு திறக் கப்பட்டுள்ளன. துறையினர் பண்டக சாலைகள் மூலம் 1969–70, 1970-71-ம் ஆண்டுகளில் கிடைத்த மொத்த விற்பனைத் தொகை முறையே ரூ. 638.42 லட்சம், ரூ. 929.48 லட்சம் ஆகும். விரைவில் காஞ்சிபுரத்தில் துறையினர் பண்டகசாலை ஒன்றை திறப்பதற்கு செங்கற்பட்டு மாவட்டக் கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஏற்பாடுகள் செய்கிறது.

மூன்றாவது திட்டக் காலத்தில் கூட்டுறவுப் பண்டகசாலைகள், காப்பிக் கொட்டை அரைக்கும் இயந்திரம், மாவு அரைக்கும் இயந்திரம், எண்ணெய் ஆட்டும் இயந்திரம், தரம் பிரிக்கும்

இயந்திரம் போன்ற நுய்ப்போருக்கான தொழில்களை நிறுவின. 45 காப்பிக்கொட்டை அரைக்கும் இயந்திரங்கள், 10 மாவு அரைக்கும் இயந்திரங்கள், 14 எண்ணெய் ஆட்டும், தரம் பிரிக்கும் இயந்திரங்கள் ஆகியவை நிறுவப்பட்டன. 4-ம் திட்டக் காலத்தில், வாசனைப் பொருட்களைப் பொடி செய்தல், ரொட்டி தயாரித்தல் பிரிவு, பருப்பு ஆலை, காகிதம் எழுதுபொருள்கள் பிரிவு, காப்பித் தூள் அரைக்கும் இயந்திரம், எண்ணெய் எடுக்கும் பிரிவுகள், பாலிதீன் பைகள், சோப்பு தயாரித்தல் முதலிய நுய்ப்போர் தொழில்களை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1969–70, 1970–71-ம் ஆண்டுகளில், வாசனைப் பொருட்களைப் பொடி செய்தல், கடலை எண்ணெய் ஆலைகள், காப்பித்தூள் அரைக்கும் பிரிவு, பாலிதீன் பைகள், துணி சோப்பு தயாரிக்கும் பிரிவு, பருப்பு ஆலை, ரொட்டி தயாரிக்கும் பிரிவு, காகிதம் எழுது பொருள்கள் பிரிவு, சோளப்பொறி தயாரிக்கும் பிரிவு( Popcorn ) போன்ற பயன் நுய்ப்போர் தொழில்களை அமைக்க, கூட்டுறவு மொத்தப் பண்டகசாலைகள், மாவட்டக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு ரூ. 8.54 லட்சம் பங்கு மூலதனத் தொகைமூலம் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

நுய்ப்போர் பண்டகசாலைகளின் வாணிகத்தை விரிவு படுத்தவும், அவற்றின் வணிகங்களைப் பல்வகைப்படுத்தவும், கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்கள் நவீன சில்லறை விற்பனை நிலையங்களையும் நன்கு செயல்படுகிற தொடக்கச் சங்கங்களையும் தங்களது பிரிவுகளாக நிறுவுகின்றன. இந்த நவீன சில்லறை விற்பனை நிலையங்கள் பொதுவாக "சிறிய சிறப்பு அங்காடிகள்" என்று அழைக்கப்படுகின்றன. இதுவரை, கீழ்க்கண்ட இடங்களில் அத்தகைய 16 நவீன சில்லறை விற்பனை நிலையங்கள் நிறுவப் பட்டன. திண்டுக்கல், சிவகெங்கை, விழுப்புரம், மாயூரம், திருப்பூர், செங்கல்பட்டு, மேட்டுப்பாளையம், கோயம்புத்தூர் நகரம், திருச்சிராப்பள்ளி, கோவில்பட்டி, சிதம்பரம், நெய்வேலி, அருப்புக்கோட்டை, காட்பாடி நகரியம், பொள்ளாச்சி, வத்தலகுண்டு இவை தவிர, விரைவில் இன்னும் 12 சில்லறை விற்பனை நிலையங்கள் நிறுவ சங்கங்களால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு நிலையத்தையும் திறப்பதற்காக சங்கங்களுக்குப் பங்கு மூலதனத் தொகை கடன்கள், உதவித் தொகை மூலம் ரூ. 45,000-க்கு நிதியுதவி 1969-70 ஆம் ஆண்டில் அளிக்கப்பட்டுள்ளது. 1970-71 ஆம் ஆண்டில் ஒவ்வொரு நிலையத்தையும் திறப்பதற்காக சங்கங் களுக்குப் பங்கு மூலதனத் தொகை, கடன் மூலம் ரூ. 45,000-க்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு தலைமை நிறுவனமாகும். இது தொடக்க விற்பனைச் சங்கங்கள், மாவட்ட விற்பனைச் சங்கங்களின் செயல்களை ஒருங்கிணைக்கிறது. 1970-71-ஆம் ஆண்டில் இந்தக் கூட்டமைப்புக்கு பங்கு மூலதன உதவித் தொகையாக ரூபாய் ஒரு லட்சம் அளிக்கப்பட்டது. இவ்வாறாக, அரசால் தரப்படும் மொத்த பங்கு மூலதன உதவித் தொகை





ரூ. 6.00 லட்சமாகும். இக் கூட்டமைப்பு வேளாண்மை விளை பொருள்கள் விலை ஏற்றத்தாழ்வுத் தடுப்பு நிதி ஒன்றை ஏற்படுத்த வேண்டும். வேளாண்மை சார்ந்த இன்றியமையாப் பண்டங்களின் முடையிருப்பு குறித்துச் செயல்படுவதில் ஏற்படக்கூடிய பொறுப்பைச் சரிக்கட்ட அந்த நிதி உதவும். அதற்கென இந்த நிதியில் கூட்டமைப்பு தனது நிகர ஆதாயத்தில் 10 சதவீதத் தொகையை ஒதுக்கி வைக்க வேண்டும். கடந்த ஆண்டில் வேளாண்மைப் பொருள்களைப் பொறுத்தவரையில், கூட்டமைப்பு செய்த மொத்த கொள்முதலில் 2 சதவீதத்துக்கு உதவ அரசு திட்ட மிட்டுள்ளது. 1970–71-ல் இந்த நிதிக்கு ரூ. 0.45 லட்சம் கொடுக்கப் பட்டது.

இந்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட இலக்கின்படி, 20 சதவீத நகர்ப்புற மக்கள் இதன்கீழ் நன்மை பெறுவர். அதே சமயத்தில் 20 சதவீதம் சில்லறை வணிகர்களும் பயனடைவர். இதற் கெதிராக, 37 சதவீத மக்களும், 20 சதவீதம் சில்லறை வணிகர் களும் ஏற்கெனவே இத் திட்டத்தால் பயனடைந்துள்ளனர்.

நான்காம் திட்டத்தின் கடைசி ஆண்டில் நுய்ப்போர் விற்பனை நிலையங்களின் சில்லறை விற்பனையின் மதிப்பு ரூ. 50.00 கோடியாக இருக்க வேண்டுமென்று இந்திய அரசும் நிர்ணயித்துள்ளது. நகர்ப்புற நுய்ப்பவர்களுக்கு விற்கப்பட்டதன் மூலம் கிடைத்த விற்பனைத் தொகை 1969-70-ஆம் ஆண்டில் ரூ. 40.00 கோடியாகும்.

## பிறவகைச் சங்கங்களும் அவற்றின் செயல்களும்.

மத்திய வீட்டு அடைமானச் சங்கத்துடன் 63 ஆரம்ப வீட்டு அடைமானச் சங்கங்கள் இணைக்கப்பட்டுள்ளன. அச்சங்கம் புதிய குடியிருப்பு வீடுகளைக் கட்ட கடன்கள் வழங்குவது தவிர, ஏற்கெனவே உள்ள வீடுகளுக்குச் சேர்க்கைகள், மாற்றங்கள், செப் பனிடுதல்கள் குறித்துக் கடன் வழங்குகிறது. மேலும், அடை மானத்திலிருந்து வீடுகளை மீட்கவும், முந்தியக் கடன்களை திருப்பிக் கொடுக்கவும் அச் சங்கம் கடன் வழங்குகின்றது. இம் மாநில அரசின் உத்திரவாதத்தின் மேல், இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத் திடமிருந்து நிதிகளைக் கடன் வாங்குகின்றது. புதிய வீடுகளைக் கட்ட ஒருவருக்கு வழங்கப்படும் பேரளவுக் கடன் ரூ. 20,000 ஆகும். வீடுகளுக்குச் சேர்க்கைகள், மாற்றங்கள் செய்யப் பேரளவுக் கடன் ரூ. 10,000 ஆகும். முந்திய கடன் தொகைகளைக் கொடுத்துத் தீர்ப் பதற்கான பேரளவுக் கடன் ரூ. 5,000 ஆகும். 1970–71-ல் இச் சங்கம் ரூ. 1.61 கோடி அளவிற்குக் கடன்கள் வழங்கியது. இச் சங்கத்தின் பங்கு மூலதனத்துக்கு அரசு ரூ. 20.00 லட்சம் வழங்கியுள்ளது. இதன் மூலம் இதுவரை அச்சங்கத்தின் பங்கு மூலதனத்துக்கு வழங்கப்பட்ட மொத்த தொகை ரூ. 35 லட்சமாகும்.

**சமுதாயத்தில் எளியோருக்கான சங்கங்கள்.**

தேர்ச்சி பெற்ற, தேர்ச்சி பெறாத தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள், முடிதிருத்துபவர்கள் போன்று சமுதாயத்தில் ஏழை எளியவர்களுக்காக உதவும் நோக்கத்துடன், அவர்களின் நன்மைக்காக சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கூலி வேலை செய்பவர்களுக்கு உதவுவதற்காக, கூட்டுறவுக் கூலி வேலையாட்கள் ஒப்பந்த சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது 188 சங்கங்கள் உள்ளன. இச் சங்கங்களுக்குப் பங்கு மூலதனம், நடைமுதல் மூலதனம், சேமநிதி ஆகியவற்றிற்கும் கருவிகளை வாங்குவதற்கும் கடன் வடிவில் நிதியுதவி அளிக்கப்படுகிறது. பணியாளர்களின் இலவசப் பணியும் அவற்றிற்கு வழங்கப்படுகிறது. 1970-71-ஆம் ஆண்டில் 9 சங்கங்களுக்கு ரூ. 0.86 லட்சத்துக்கு உதவி அளிக்கப்பட்டுள்ளது.

சலவைத் தொழிலாளர் சமுதாயத்திற்கு உதவும்பொருட்டு 16 சங்கங்களும், 2 சலவை நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. பங்கு மூலதனம் மூலமும், சலவைப் பெட்டி, மேஜை, சலவைச் சோடா முதலிய சாதனங்கள் வாங்குவதற்கான கடன், உதவித் தொகை மூலமும் இச்சங்கங்களுக்கு நிதி உதவி அளிக்கப்படுகிறது. உப்பு தயாரிக்கும் பணியாளர்களுக்கு உதவி செய்ய 13 உப்புத் தயாரிப்பு கூட்டுறவு சங்கங்கள் இம் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன.

முடிதிருத்தும் நிலையங்களுக்காகவும், நாவிதர்களுக்காகவும் 17 சங்கங்கள் உள்ளன. இச் சங்கங்களுக்கு முடிதிருத்தும் இடங்களைத் திறப்பதற்கும், சாதனங்கள், மரச் சாமான்கள் முதலியன வாங்குவதற்காகவும் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

மலைச் சாதியினர்களின் நன்மைக்காக 7 விற்பனைச் சங்கங்கள் உள்ளன. இச் சங்கங்கள் வெட்டு மரக்காடுகளைக் குத்தகைக்கு எடுத்துக் கொள்கிறது. இவை காடு படு சிறு பொருள்களைச் சேகரிக்கின்றன. நடைமுதல் மூலதனம், கிடங்குகள் கட்டுதல் முதலியனவற்றிற்காக இச் சங்கங்களுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது.

சென்னை தமிழ்நாடு கூட்டுறவு யூனியன் லிமிடெட் கூட்டுறவு பயிற்சியளிப்பதற்கான சிறப்புக் குழு இம்மாநிலத்தில் கூட்டுறவுப் பயிற்சியளிப்பதற்குப் பொறுப்பானதாகும். இத் திட்டங்கள் தமிழ்நாடு கூட்டுறவு யூனியனின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஏழு இளநிலை கூட்டுறவு பயிற்சி நிலையங்கள் உள்ளன. இவை கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக உள்ளன. கூட்டுறவு துறைப் பணியாளர்களுக்குப் பயிற்சியளிக்க ஒரு நிலையம் உள்ளது. நேரடியாக வேலைக்கு அமர்த்தப்பட்ட கூட்டுறவு சங்கங்களின் முதுநிலை ஆய்வாளர்கள், கூட்டுறவு உதவிப் பதிவாளர்கள், துணைப் பதிவாளர்கள் ஆகியோருக்குப் பயிற்சியளிக்க பயிற்சிக் கல்லூரி ஒன்று உள்ளது.



இடைநிலைப் பணியாளர்களுக்காக கூட்டுறவு வங்கித் தொழிலில், தணிக்கை ஆகியவற்றில் குறுகிய கால சிறப்புப் பாட முறை வகுப்புகளையும் நடத்துகிறது. தமிழ்நாடு கூட்டுறவு யூனியன் இயலூர்தி ஒன்றை வைத்துக்கொண்டும், அனைத்திந்தியக் கூட்டுறவு வார விழா கொண்டாடுவதன் மூலமும், நூலகங்களை விரிவுபடுத்தும் மூலமும், பள்ளிகளில் "கூட்டுறவு" பொருள்பற்றி கட்டுரைப் போட்டிகள், பேச்சுப் போட்டிகள் ஆகியவை நடத்துவதன் மூலமும் தொடர்ந்து கூட்டுறவு பற்றி பிரசாரம் செய்து வருகிறது. கூட்டுறவுப் பாட முறையைச் சிறப்புப் பாடமாகக் கொண்டு பட்டப் படிப்பில் முதலாவதாக, இரண்டாவதாக தேறிய பல்கலைக் கழக மாணவர்களுக்குத் தங்கம், வெள்ளிப் பதக்கங்கள் பரிசாகக் கொடுக்கப்படும் திட்டமும் செயல்படுத்தப்பட்டது. ஆனந்திலுள்ள கூட்டுறவுப் பயிற்சி கல்லூரி, ஐதராபாத்தில் உள்ள இந்திய நிர்வாக பணியாளர் கல்லூரி, பூனா, வைகுந்தில் உள்ள மேதா தேசீய கூட்டுறவு நிர்வாக நிலையம் ஆகியவற்றில் நடத்தப்படும் பல பாடமுறைகளுக்கு 9 அதிகாரிகள் முகமையில் அனுப்பப்பட்டனர். ஸ்வீடன், ஸ்டாக்ஹோமில் நடைபெற்ற அனைத்து நாடுகள் கருத்தரங்குக்கு இவர்களுள் ஒரு அதிகாரி சென்றிருந்தார்.

இவ்வாறாக, பல்வேறு துறைகளிலும் கூட்டுறவுச் சங்கங்கள் குறிப்பிடத்தக்க முறையில் செயல்பட்டு வருகின்றன.

## இணைப்பு

| தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும். | திட்டத்தின் காலளவு. (ஆண்டுகளின் எண்ணிக்கை) | திட்டம் தொடங்கப்பட்ட நாள். | திட்டத்தின் மொத்த நிதி ஒதுக்கம். | தோண்டுவதற்கான கிணறுகளின் எண்ணிக்கை. | அமைக்கப்படவிருக்கும் விசையேற்றங்களின் எண்ணிக்கை. | பண்படுத்தப்பட்ட அல்லது திட்டத்தின்கீழ்க் கொண்டு வரப்பட்ட பரப்பு. | 31—3—1970 வரை ஏற்படுத்திய சாதனைகள்: 31—3—1970 வரை செலவாகிய தொகை. | கிணறுகள். | விசையேற்றங்களின் எண்ணிக்கை. | பண்படுத்தப்பட்ட அல்லது திட்டத்தின்கீழ்க் கொண்டு வரப்பட்ட பரப்பு. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| | | | | | (ரூபாய் லட்சத்தில்.) | | | | | |
| 1. திருச்சி மாவட்டத்திலுள்ள புதுக்கோட்டை கோட்டத்தில் கிணறு தோண்டுவதான திட்டம். | 3 | ஜூலை 1968 | 72·97 | 2,000 | 500 | .. | 53·25 | 2,000 | 500 | .. |
| 2. கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள தொண்டமுத்தூர், பெரியநாயக்கன் பாளையம் ஆகிய வட்டாரங்களில் கிணறுகள் தோண்டுதலும் விசை யேற்றங்கள் அமைத்தலும். | 3 | நவம்பர் 1968 | 110·00 | 1,000 | 1,000 | .. | 48·38 | 618 | 250 | .. |
| 3. கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள உடுமலைப்பேட்டை வட்டத்தில் கிணறுகள் தோண்டுதலும் விசையேற்றங்கள் அமைத்தலும். | 3 | டிசம்பர் 1969 | 95·00 | 1,000 | 1,000 | .. | 8·20 | 180 | 12 | .. |



| தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும். | 1970–71க்கான திட்டக் குறிக்கோள் அளவு: 1970–71க்கான நிதிக் குறிக்கோள் அளவு (ரூ. லட்சத்தில்). | கிணறுகள். | விசையேற்றங்கள். | பண்படுத்தப்பட்ட அல்லது திட்டத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்ட பரப்பு. | 1970–71-ல் சாதனை: நிதிச் சாதனை. (ரூ. லட்சத்தில்) | கிணறுகள். | விசையேற்றங்கள். | பண்படுத்தப்பட்ட அல்லது திட்டத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்ட பரப்பளவு. | தொடக்கத்திலிருந்து 31-3-71 வரையில் சாதனை: நிதிச் சாதனை. | கிணறுகள். | விசையேற்றங்கள். | பண்படுத்தப்பட்ட அல்லது இத்திட்டத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்ட பரப்பளவு. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (12) | (13) | (14) | (15) | (16) | (17) | (18) | (19) | (20) | (21) | (22) | (23) |
| | | | | | | | | (ரூ. லட்சத்தில்) | | | | |
| 1. திருச்சி மாவட்டத்திலுள்ள புதுக்கோட்டை கோட்டத்தில் கிணறு தோண்டுவதான திட்டம். | 19·72 | .. | .. | .. | 13·56 | .. | .. | .. | 66·81 | 2,000 | 500 | .. |
| 2. கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள தொண்டமுத்தூர், பெரியநாயக்கன் பாளையம் ஆகிய வட்டாரங்களில்கிணறுகள் தோண்டுதலும் விசை யேற்றங்கள் அமைத்தலும். | 49·50 | 400 | 270 | .. | 41·07 | 332 | 238 | .. | 89·35 | 950 | 488 | .. |
| 3. கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள உடுமலைப்பேட்டை வட்டத்தில் கிணறுகள் தோண்டுதலும் விசையேற்றங்கள் அமைத்தலும். | 58·00 | 550 | 550 | .. | 22·79 | 356 | 192 | .. | 30·99 | 536 | 204 | .. |

| தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும். (1) | திட்டத்தின் கால அளவு (ஆண்டுகளின் எண்ணிக்கை). (2) | திட்டம் தொடங்கப்பட்ட நாள். (3) | திட்டத்தின் மொத்த நிதி ஒதுக்கம். (4) | தோண்டவேண்டிய கிணறுகளின் எண்ணிக்கை. (5) | அமைக்கப்படவிருக்கும் விசையேற்றங்களின் எண்ணிக்கை. (6) | பண்படுத்தப்பட்ட அல்லது திட்டத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்ட பரப்பு. (7) | 31—3—1970 வரை ஏற்படுத்திய சாதனைகள்: 31—3—1970 வரை வாகிய செலவுத் தொகை. (8) | கிணறுகள். (9) | விசையேற்றங்களின் எண்ணிக்கை. (10) | பண்படுத்தப்பட்ட அல்லது திட்டத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்ட பரப்பு. (11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | (ரூபாய் லட்சத்தில்). | | | | | | | |
| 4. இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சிவகங்கை, திருப்பத்தூர் ஆகிய வட்டங்களில கிணறுகள் தோண்டுதலும் விசையேற்றங்கள் அமைத்தலும். | 2 | டிசம்பர் 1969 | 9·00 | 150 | 150 | .. | 1·25 | 26 | 18 | .. |
| 5. திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள லால்குடி, உடையார்பாளையம் ஆகிய வட்டங்களில் கிணறுகள் தோண்டுதலும் விசை ஏற்றங்கள் அமைத்தலும். | 2 | ஆகஸ்ட் 1970 | 38·00 | 700 | 1,000 | .. | .. | .. | .. | .. |
| 6. செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள மதுராந்தகம், செங்கற்பட்டு வட்டங்களில் கிணறுகள் தோண்டுதலும், விசையேற்றங்கள் அமைத்தலும். | 3 | ஆகஸ்ட் 1970 | 110·00 | 1,000 | 1,000 | .. | .. | .. | .. | .. |



| தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும். | 1970–71-க்கான திட்டக் குறிக்கோள் அளவு: 1970–71-க்கான நிதிக் குறிக்கோள் அளவு (ரூ. லட்சத்தில்). (12) | கிணறுகள். (13) | விசையேற்றங்கள். (14) | பண்படுத்தப்பட்ட அல்லது திட்டத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்ட பரப்பு. (15) | 1970–71-ல் சாதனை: நிதிச் சாதனை (ரூ. லட்சத்தில்) (16) | கிணறுகள். (17) | விசையேற்றங்கள். (18) | பண்படுத்தப்பட்ட அல்லது திட்டத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்ட பரப்பளவு. (19) | தொடக்கத்திலிருந்து 31—3—71 வரையில் சாதனை: நிதிச் சாதனை. (20) | கிணறுகள். (21) | விசையேற்றங்கள். (22) | பண்படுத்தப்பட்ட அல்லது திட்டத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்ட பரப்பளவு. (23) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | (ரூபாய் லட்சத்தில்). | | | | |
| 4. இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சிவகெங்கை, திருப்பத்தூர் ஆகிய வட்டங்களில் கிணறுகள் தோண்டுதலும் விசையேற்றங்கள் அமைத்தலும். | 9·00 | 150 | 150 | .. | 3·61 | 98 | 44 | .. | 4·86 | 124 | 62 | .. |
| 5. திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள லால்குடி, உடையார்பாளையம் ஆகிய வட்டங்களில் கிணறுகள் தோண்டுதலும் விசையேற்றங்கள் அமைத்தலும். | 24·75 | 350 | 500 | .. | 0·51 | 21 | 2 | .. | 0·51 | 21 | 2 | .. |
| 6. செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள மதுராந்தகம், செங்கற்பட்டு வட்டங்களில் கிணறுகள் தோண்டுதலும், விசையேற்றங்கள் அமைத்தலும். | 22·00 | 200 | 200 | .. | 8·90 | 221 | 221 | .. | 8·90 | 221 | 221 | .. |

| தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும். (1) | திட்டத்தின் காலளவு. (ஆண்டுகளின் எண்ணிக்கை) (2) | திட்டம் தொடங்கப்பட்ட நாள். (3) | திட்டத்தின் மொத்த நிதி ஒதுக்கம். (4) | தோண்டுவதற்கான கிணறுகளின் எண்ணிக்கை. (5) | அமைக்கப்படவிருக்கும் விசையேற்றங்களின் எண்ணிக்கை. (6) | பண்படுத்தப்பட்ட அல்லது திட்டத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்ட பரப்பு. (7) | 31—3—1970 வரை ஏற்படுத்திய சாதனைகள்: 31—3—1970 வரை செலவாகிய தொகை. (8) | கிணறுகள். (9) | விசையேற்றங்களின் எண்ணிக்கை. (10) | பண்படுத்தப்பட்ட அல்லது திட்டத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்ட பரப்பு. (11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | (ரூபாய் லட்சத்தில்) | | | | | | | |
| 7. திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோயிலில் கிணறுகள் தோண்டுதல், ஆழப்படுத்தல் ஆகிய பணிகளும், விசையேற்றங்கள் அமைத்தலும். | 4 | ஆகஸ்ட் 1970 | 134·00 | 1,500 | 1,800 | .. | .. | : | .. | .. |
| 8. மதுரை மாவட்டம், திருமங்கலம் உசிலம்பட்டி ஆகிய வட்டங்களில் கிணறுகள் தோண்டுதலும், விசையேற்றங்கள் அமைத்தலும். | 2 | ஆகஸ்ட் 1970 | 114·00 | 1,000 | 1,300 | .. | .. | .. | .. | .. |
| 9. மதுரை மாவட்டம், திண்டுக்கல் வேடசந்தூர் ஆகிய வட்டங்களில் கிணறுகள் ஆழப்படுத்தலும், விசையேற்றங்கள் அமைத்தலுமான திட்டம். | 3 | ஆகஸ்ட் 1970 | 91·50 | .. | 300 | .. | .. | .. | .. | .. |



| தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும். | 1970–71-க்கான திட்டக் குறிக்கோள் அளவு: 1970–71-க்கான நிதிக் குறிக்கோள் அளவு (ரூ. லட்சத்தில்). (12) | கிணறுகள். (13) | விசையேற்றங்கள். (14) | பண்படுத்தப்பட்ட அல்லது திட்டத்தின் கீழ்க்கொண்டு வரப்பட்ட பரப்பு. (15) | 1970–71-ல் சாதனை: நிதிச்சாதனை (ரூ. லட்சத்தில்). (16) | கிணறுகள். (17) | விசையேற்றங்கள். (18) | பண்படுத்தப்பட்ட அல்லது திட்டத்தின் கீழ்க்கொண்டு வரப்பட்ட பரப்பளவு. (19) | தொடக்கத்திலிருந்து 31—3—1971 வரையில் சாதனை: நிதிச் சாதனை. (20) | கிணறுகள். (21) | விசையேற்றங்கள். (22) | பண்படுத்தப்பட்ட அல்லது திட்டத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்ட பரப்பளவு. (23) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | (ரூபாய் லட்சத்தில்.) | | | | | | | |
| 7. திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோயிலில் கிணறுகள் தோண்டுதல், ஆழப்படுத்தல் ஆகிய பணிகளும், விசையேற்றங்கள் அமைத்தலும். | 26·80 | 300 | 360 | .. | 23·16 | 187 | 73 | .. | 13·16 | 187 | 73 | .. |
| 8. மதுரை மாவட்டம், திருமங்கலம், உசிலம்பட்டி ஆகிய வட்டங்களில் கிணறுகள் தோண்டுதலும், விசையேற்றகள் அமைத்தலும். | 54·00 | 500 | 600 | .. | 26·12 | 455 | 96 | .. | 26·12 | 455 | 96 | .. |
| 9. மதுரை மாவட்டம், திண்டுக்கல், வேடசந்தூர் ஆகிய வட்டங்களில் கிணறுகள் ஆழப்படுத்தலும், விசையேற்றங்கள் அமைத்தலுமான திட்டம். | 25·00 | .. | 100 | .. | 15·60 | .. | 91 | .. | 15·60 | .. | 91 | .. |

| தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும். | திட்டத்திற்கான காலளவு (ஆண்டுகளின் எண்ணிக்கை). | திட்டம் தொடங்கப்பட்ட நாள். | திட்டத்தின் மொத்த நிதித்தொகை. | தோண்டுவதற்கான கிணறுகளின் எண்ணிக்கை. | அமைக்கப்படவிருக்கும் விசையேற்றங்களின் எண்ணிக்கை. | பண்படுத்தப்பட்ட அல்லது திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட பரப்பு. | 31—3—1970 வரை ஏற்படுத்திய சாதனைகள்: 31—3—1970 வரை செலவாகிய தொகை. | கிணறுகள். | விசையேற்றங்களின் எண்ணிக்கை. | பண்படுத்தப்பட்ட அல்லது திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்ட பரப்பு. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| | | | | | | (ரூபாய் லட்சத்தில்.) | | | | |
| 10. இராமநாதபுரம் மாவட்டம், சிவகங்கை, திருப்பத்தூர் ஆகிய வட்டங்களில் கிணறுகள் தோண்டுதலும், விசையேற்றங்கள் அமைத்தலும். | 5 | ஆகஸ்ட் 1970 | | 165·00 | 2,750 | 2,750 | .. | .. | .. | .. |
| 11. திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டத்தில் விசையேற்றங்களோடு புதிய கிணறுகள் தோண்டுதல். | 3 | அக்டோபர் 1970 | 126·00 | 1,200 | 1,200 | .. | .. | .. | .. | .. |
| 12. திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி, தென்காசி ஆகிய வட்டங்களில் விசையேற்றங்களோடு புதிய கிணறுகள் தோண்டுதல். | 3 | அக்டோபர் 1970 | 112·50 | 1,500 | 1,500 | .. | .. | .. | .. | .. |
| 13. மதுரை மாவட்டம், மதுரை, மேலூர் வட்டங்களில் புதிய கிணறுகள் தோண்டுதலும் விசையேற்றங்கள் அமைத்தலும். | 3 | செப்டம்பர் 1970 | 63·00 | 1,050 | 1,050 | .. | .. | .. | .. | .. |



| | 1970–71-க்கான திட்டக் குறிக்கோள் அளவு: 1970–71-க்கான நிதிக்குறிக்கோள் அளவு (ரூ. லட்சத்தில்). | கிணறுகள். | விசையேற்றங்கள். | பண்படுத்தப்பட்ட அல்லது திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்ட பரப்பு. | 1970–71-ல் சாதனை: நிதிச் சாதனை (ரூ. லட்சத்தில்). | கிணறுகள். | விசையேற்றங்கள். | பண்படுத்தப்பட்ட அல்லது திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்ட பரப்பளவு. | தொடக்கத்திலிருந்து 31—3—71 வரையில் சாதனை: நிதிச் சாதனை. | கிணறுகள். | விசையேற்றங்கள். | பண்படுத்தப்பட்ட அல்லது திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட பரப்பளவு. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | (12) | (13) | (14) | (15) | (16) | (17) | (18) | (19) | (20) | (21) | (22) | (23) |
| | | | | | | | | (ரூபாய் லட்சத்தில்.) | | | | |
| 10 இராமநாதபுரம் மாவட்டம், சிவகங்கை, திருப்பத்தூர் ஆகிய வட்டங்களில் கிணறுகள் தோண்டுதலும், விசையேற்றங்கள் அமைத்தலும். | 30·00 | 500 | 500 | .. | 11·07 | 404 | 70 | .. | 11·07 | 404 | 70 | .. |
| 11 திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டத்தில் விசையேற்றங்களோடு புதிய கிணறுகள் தோண்டுதல். | 21·00 | 200 | 200 | .. | 3·43 | 90 | 3 | .. | 3·43 | 90 | 3 | .. |
| 12 திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி தென்காசி ஆகிய வட்டங்களில் விசையேற்றங்களோடு புதிய கிணறுகள் தோண்டுதல். | 22·50 | 300 | 300 | .. | 4·37 | 118 | 10 | .. | 4·37 | 118 | 10 | .. |
| 13 மதுரை மாவட்டம், மதுரை, மேலூர் வட்டங்களில் புதிய கிணறுகள் தோண்டுதலும், விசையேற்றங்கள் அமைத்தலும். | 18·00 | 300 | 300 | .. | 1·30 | 56 | .. | .. | 1·30 | 56 | .. | .. |

| தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும் (1) | திட்டத்திற்கான காலளவு (ஆண்டுகளின் எண்ணிக்கை). (2) | திட்டம் தொடங்கப்பட்ட நாள். (3) | திட்டத்தின் மொத்த நிதி ஒதுக்கம். (4) | தோண்டுதற்கான கிணறுகளின் எண்ணிக்கை. (5) | அமைக்கப்பட இருக்கும் விசையேற்றங்களின் எண்ணிக்கை. (6) | பண்படுத்தப்பட்ட அல்லது திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட பரப்பு. (7) | 31-3-1970 வரை ஏற்படுத்திய சாதனைகள்: 31-3-1970 வரை செலவழிய தொகை. (8) | கிணறுகள். (9) | விசையேற்றங்கள் எண்ணிக்கை. (10) | பண்படுத்தப்பட்ட அல்லது திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட பரப்பு. (11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | (ரூபாய் லட்சத்தில்). | | | | | | | |
| 14 தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை ஆகிய வட்டங்களில் கிணறு தோண்டுவதற்கான திட்டம். | 3 | அக்டோபர் 1970 | 122·00 | 1,000 | 1,000 | .. | .. | .. | .. | .. |
| 15 திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிரி வட்டத்தில் கிணறு தோண்டுவதற்கான திட்டம். | 3 | நவம்பர் 1970 | 102·50 | 900 | 1,400 | .. | .. | .. | .. | .. |
| 16 திருச்சிராப்பள்ளி மாவட்டம், குளித்தலை வட்டத்தில் கிணறு தோண்டுவதற்கான திட்டம். | 3 | நவம்பர் 1970 | 74·50 | 700 | 700 | .. | .. | .. | .. | .. |
| 17 திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறையில் கிணறு தோண்டுவதற்கான திட்டம். | 3 | நவம்பர் 1970 | 62·00 | 600 | 800 | .. | .. | .. | .. | .. |
| 18 திருச்சிராப்பள்ளி மாவட்டம், கரூர் வட்டத்தில் கிணறு தோண்டுவதற்கான திட்டம். | 3 | நவம்பர் 1970 | 70·50 | 600 | 900 | .. | .. | .. | .. | .. |



| தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும் (1) | 1970-71-க்கான திட்டக் குறிக்கோள் அளவு: 1970-71-க்கான நிதிக் குறிக்கோள் அளவு (ரூ. லட்சத்தில்). (12) | கிணறுகள். (13) | விசையேற்றங்கள். (14) | பண்படுத்தப்பட்ட அல்லது திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட பரப்பு. (15) | 1970-71-ல் சாதனை: நிதிச் சாதனை (ரூ. லட்சத்தில்). (16) | கிணறுகள். (17) | விசையேற்றங்கள். (18) | பண்படுத்தப்பட்ட அல்லது திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட பரப்பளவு. (19) | தொடக்கத்திலிருந்து 31-3-71 வரையில் சாதனை: நிதிச் சாதனை. (20) | கிணறுகள். (21) | விசையேற்றங்கள். (22) | பண்படுத்தப்பட்ட அல்லது திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட பரப்பளவு. (23) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | (ரூபாய் லட்சத்தில்). | | | | |
| 14 தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை ஆகிய வட்டங்களில் கிணறு தோண்டுவதற்கான திட்டம். | 2·90 | 50 | 25 | .. | 4·49 | 194 | 37 | .. | 4·49 | 194 | 37 | .. |
| 15 திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிரி வட்டத்தில் கிணறு தோண்டுவதற்கான திட்டம். | 28·75 | 250 | 400 | .. | 4·75 | 33 | 137 | .. | 4·75 | 33 | 137 | .. |
| 16 திருச்சிராப்பள்ளி மாவட்டம், குளித்தலைவட்டத்தில் கிணறு தோண்டுவதற்கான திட்டம். | 22·50 | 200 | 300 | .. | 2·88 | 35 | 89 | .. | 2·38 | 35 | 89 | .. |
| 17 திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறையில் கிணறு தோண்டுவதற்கான திட்டம். | 19·75 | 200 | 250 | .. | 2·47 | 24 | 93 | .. | 2·47 | 24 | 93 | .. |
| 18 திருச்சிராப்பள்ளி மாவட்டம், கரூர் வட்டத்தில் கிணறு தோண்டுவதற்கான திட்டம். | 19·00 | 150 | 250 | .. | 2·40 | 35 | 74 | .. | 2·40 | 35 | 74 | .. |

| தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும். | திட்டத்தின் காலளவு (ஆண்டுகளின் எண்ணிக்கை) | திட்டம் தொடங்கப்பட்ட நாள். | திட்டத்தின் மொத்த நிதி ஒதுக்கம். | தோண்டுவதற்கான கிணறுகளின் எண்ணிக்கை. | அமைக்கப்படவிருக்கும் விசையேற்றங்களின் எண்ணிக்கை. | பண்படுத்தப்பட்ட அல்லது திட்டத்தின்கீழ்க் கொண்டு வரப்பட்ட பரப்பு. | 31—3—1970 வரை ஏற்படுத்திய சாதனைகள். 31—3—1970 வரை செலவாகிய தொகை. | கிணறுகள். | விசையேற்றங்களின் எண்ணிக்கை. | பண்படுத்தப்பட்ட அல்லது திட்டத்தின்கீழ்க் கொண்டு வரப்பட்ட பரப்பு. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| | | | | | (ரூபாய் லட்சத்தில்,) | | | | | |
| 19 தென் ஆற்காடு மாவட்டம், விழுப்புரம் வட்டத்தில் வெட்டப்பட்ட—தூர்வியிடப்பட்ட கிணறுத்திட்டம். | 3 | அக்டோபர் 1970 | 95·50 | 1,200 | 1,700 | .. | .. | .. | .. | .. |
| 20 தஞ்சாவூர் மாவட்டத்தில் வடிமுனைக் கிணறுகள். | 2 | பெப்ரவரி 1971 | 1,00·00 | 2,500 | 2,500 | .. | .. | .. | .. | .. |
| 21 சேலம் மாவட்டம், நாமக்கல் வட்டத்தில் கிணறுகள் தோண்டுதலும், விசையேற்றங்கள் அமைத்தலும். | 2 | பெப்ரவரி 1971 | 60·00 | .. | 500 | .. | .. | .. | .. | .. |
| 22 தருமபுரி மாவட்டம், தருமபுரி, ஹொசூர், ஹரூர் ஆகிய வட்டங்களில், கிணறுகளை ஆழப்படுத்தலும் விசையேற்றங்கள் அமைத்தலும். | 3 | பெப்ரவரி 1971 | 1,12.50 | .. | 1,500 | .. | .. | .. | .. | .. |
| | | மொத்தம் .. | 20,40·47 | 22,350 | 25,550 | .. | 111·08 | 2,824 | 780 | .. |



| தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும். | 1970–71க்கான திட்டக் குறிக்கோள் அளவு. 1970-71-க்கான நிதிக் குறிக்கோள் அளவு (ரூ. லட்சத்தில்). | கிணறுகள். | விசையேற்றங்கள். | பண்படுத்தப்பட்ட அல்லது திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்ட பரப்பு. | நிதிச் சாதனை (ரூ. லட்சத்தில்). | 1970-71-ல சாதனை. கிணறுகள். | விசையேற்றங்கள். | பண்படுத்தப்பட்ட அல்லது திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்ட பரப்பு. | தொடக்கத்திலிருந்து 31-3-71 வரையில் சாதனை. நிதிச் சாதனை. | கிணறுகள். | விசையேற்றங்கள், | பண்படுத்தப்பட்ட அல்லது திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்ட பரப்பளவு. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | (12) | (13) | (14) | (15) | (16) | (17) | (18) | (19) | (20) | (21) | (22) | (23) |
| | | | | | | | (ரூ. லட்சத்தில்) | | | | | |
| 19 தென் ஆர்க்காடு மாவட்டம், விழுப்புரம் வட்டத்தில் வெட்டப்பட்ட—தூர்வியிடப்பட்ட கிணறுத் திட்டம். | 28·00 | 350 | 500 | .. | 6·25 | 114 | 144 | .. | 6·25 | 114 | 144 | .. |
| 20 தஞ்சாவூர் மாவட்டத்தில் வடிமுனைக் கிணறுகள். | 40·00 | 1,000 | .. | .. | 11·96 | 99 | 99 | .. | 11·96 | 99 | 99 | .. |
| 21 சேலம் மாவட்டம், நாமக்கல் வட்டத்தில்கிணறுகள் தோண்டுதலும், விசையேற்றங்கள் அமைத்தலும். | 30·00 | .. | 250 | .. | 1·25 | .. | 2 | .. | 1·25 | .. | 2 | .. |
| 22 தருமபுரி மாவட்டம், தருமபுரி ஹொசூர், ஹரூர் ஆகிய வட்டங்களில் கிணறுகளை ஆழப்படுத்தலும் விசையேற்றங்கள் அமைத்தலும். | 37·50 | .. | 500 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| மொத்தம் | 608·67 | 5,950 | 6,505 | .. | 201·44 | 2,872 | 1,715 | .. | 312·42 | 5,696 | 2,495 | .. |

| தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும். (1) | திட்டத்தின் காலளவு. (ஆண்டுகளின் எண்ணிக்கை) (2) | திட்டம் தொடங்கப்பட்ட நாள். (3) | திட்டத்தின் மொத்த நிதி ஒதுக்கம். (4) | தோண்டுவதற்கான கிணறுகளின் எண்ணிக்கை. (5) | அமைக்கப்படவிருக்கும் விசையேற்றங்களின் எண்ணிக்கை. (6) | பண்படுத்தப்பட்ட அல்லது திட்டத்தின்கீழ்க் கொண்டு வரப்பட்ட பரப்பு. (7) | 31—3—1970 வரை செலவாகிய தொகை. (8) | 31—3—1970 வரை ஏற்பட்டிய சாதனைகள்: கிணறுகள். (9) | விசையேற்றங்களின் எண்ணிக்கை. (10) | பண்படுத்தப்பட்ட அல்லது திட்டத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்ட பரப்பு. (11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | (ரூபாய் லட்சத்தில்.) | | | | | | | |
| **சிறுபாசன திட்டங்கள் அல்லாத திட்டங்கள்.** | | | | | | | | | | |
| | | | (ரூபாய் லட்சத்தில்.) | | | | | | | |
| 1 பரம்பிக்குளம்-ஆழியாறு திட்ட முதல் நிலையிலுள்ள நிலங்களை சீரமைத்துப் பண்படுத்துதல். | 5 | சனவரி 1965 | 4,52·04 | .. | .. | 85,110 | 4,25·50 | .. | .. | 65,957 |
| 2 தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள தென்னைமரத் தோட்டத்திற்கான மேம்பாடு. | 4 | ஏப்ரல் 1968 | 29·56 | .. | .. | 2,000 | 6·20 | .. | .. | 991 |
| 3 நீலகிரி மாவட்டத்திலுள்ள தேயிலைத் தோட்டத்திற்கான திட்டம். | 6 | ஏப்ரல் 1968 | 25·00 | – | .. | 1,000 | 7·92 | .. | .. | 628 |
| 4 கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தோட்டம். | 9 | ஏப்ரல் 1968 | 24·00 | .. | .. | 1,500 | 5·03 | .. | .. | 922 |



| தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும். | 1970–71க்கான திட்டக் குறிக்கோள் அளவு: 1970-71-க்கான நிதிக் குறிக்கோள் அளவு (ரூ. லட்சத்தில்) (12) | கிணறுகள். (13) | விசையேற்றங்கள். (14) | பண்படுத்தப்பட்ட அல்லது திட்டத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்ட பரப்பு. (15) | நிதிச் சாதனை (ரூ. லட்சத்தில்). (16) | 1970–71–ல் சாதனை: கிணறுகள். (17) | விசையேற்றங்கள். (18) | பண்படுத்தப்பட்ட அல்லது திட்டத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்ட பரப்பளவு. (19) | தொடக்கத்திலிருந்து 31-3-71 வரையில் சாதனை: நிதிச் சாதனை. (20) | கிணறுகள். (21) | விசையேற்றங்கள். (22) | பண்படுத்தப்பட்ட அல்லது திட்டத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்ட பரப்பளவு. (23) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | (ரூ. லட்சத்தில்) | | | | | | |
| **சிறு பாசன திட்டங்கள் அல்லாத திட்டங்கள்—தொடர்ச்சி.** | | | | | | | | | | | | |
| 1. பரம்பிக்குளம்-ஆழியாறு திட்ட முதல் நிலையிலுள்ள நிலங்களை சீரமைத்துப் பண்படுத்துதல். | 26·51 | .. | .. | 19,153 | 17·21 | .. | .. | 6,030 | 442·71 | .. | ... | 71,987 |
| 2. தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள தென்னைமரத் தோட்டத்திற்கான மேம்பாடு. | 4·30 | .. | .. | 500 | 3·81 | .. | .. | 417 | 10·01 | .. | .. | 1,408 |
| 3. நீலகிரி மாவட்டத்திலுள்ள தேயிலைத் தோட்டத்திற்கான திட்டம். | 8·00 | .. | .. | 500 | 5·05 | .. | .. | 562 | 12·97 | .. | .. | 1,190 |
| 4. கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தோட்டம். | 4.20 | .. | .. | 600 | 3·47 | .. | .. | 521 | 8·50 | .. | .. | 1,443 |

| தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும். | திட்டத்தின் காலளவு (ஆண்டுகளின் எண்ணிக்கை) | திட்டம் தொடங்கப்பட்ட நாள். | திட்டத்தின் மொத்த நிதி ஒதுக்கம். | தோண்டுவதற்கான கிணறுகளின் எண்ணிக்கை. | அமைக்கப்படவிருக்கும் விசையேற்றங்களின் எண்ணிக்கை. | பண்படுத்தப்பட்ட அல்லது திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்ட பரப்பு. | 31—3—1970 வரை ஏற்படுத்திய சாதனைகள்: 31—3—1970 வரை செலவாகிய தொகை. | கிணறுகள். | விசையேற்றங்களின் எண்ணிக்கை. | பண்படுத்தப்பட்ட அல்லது திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்ட பரப்பு. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| | | | (ரூபாய் லட்சத்தில்.) | | | | | | | |
| 5 பரம்பிக்குளம்-ஆளியாறு திட்ட இரண்டாம் நிலையிலுள்ள நிலங்களை சீரமைத்து பண்படுத்துதல். | 4 | 1969 | 190·00 | .. | .. | 32,000 | 21·75 | .. | .. | 2,028 |
| 6 சேலம் மாவட்டத்திலுள்ள காபி தோட்டத்திற்கான மேம்பாடு. | 6 | ஆகஸ்ட் 1970 | 25·00 | .. | .. | 2,000 | .. | .. | .. | .. |
| 7 மதுரைமாவட்டத்திலுள்ள காபி தோட்டத்திற்கான மேம்பாடு. | 6 | டிசம்பர் 1970 | 60·00 | .. | .. | 4,500 | .. | .. | .. | .. |
| மொத்தம் .. | | | 805·60 | .. | .. | 1,28,110 | 466·40 | .. | .. | 70,526 |



| தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும். | 1970-71க்கான திட்டக் குறிக்கோள் அளவு: 1970-71-க்கான நிதிக் குறிக்கோள் அளவு (ரூ. லட்சத்தில்.) | கிணறுகள். | விசையேற்றங்கள். | பண்படுத்தப்பட்ட அல்லது திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்ட பரப்பு. | நிதிச் சாதனை (ரூ. லட்சத்தில்). | 1970-71-ல் சாதனை: கிணறுகள். | விசையேற்றங்கள். | பண்படுத்தப்பட்ட அல்லது திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்ட பரப்பளவு. | தொடக்கத்திலிருந்து 31-3-71 வரையில் சாதனை: நிதிச் சாதனை. | கிணறுகள். | விசையேற்றங்கள். | பண்படுத்தப்பட்ட அல்லது இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்ட பரப்பளவு. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | (12) | (13) | (14) | (15) | (16) | (17) | (18) | (19) | (20) | (21) | (22) | (23) |
| | | | | | | | (ரூ. லட்சத்தில்) | | | | | |
| 5. பரம்பிக்குளம்-ஆளியாறு திட்ட இரண்டாம் நிலையிலுள்ள நிலங்களை சீரமைத்து பண்படுத்துதல். | 73.25 | .. | .. | 19,172 | 28·02 | .. | .. | 4,279 | 49·79 | .. | .. | 6,307 |
| 6 சேலம் மாவட்டத்திலுள்ள காபி தோட்டத்திற்கான மேம்பாடு. | 1·90 | .. | .. | 400 | 1·17 | .. | .. | 164 | 1·17 | .. | .. | 164 |
| 7. மதுரை மாவட்டத்திலுள்ள காபி தோட்டத்திற்கான மேம்பாடு. | 3·20 | .. | .. | 600 | 5·67 | .. | .. | 969 | 5·67 | .. | .. | 969 |
| மொத்தம் .. | 121·36 | .. | .. | 40,925 | 64·40 | .. | .. | 12,942 | 530·82 | .. | .. | 83,468 |

*[1971 ஜூலை 20*

## இணைப்பு—5.

[302 -ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.]

### தமிழ்நாட்டில் 1970-ம் ஆண்டில் கைத்தறித் தொழில் வளர்ச்சி குறித்த ஆய்வுரை.

தமிழ்நாட்டில் கைத்தறித் தொழில் மிகத் தொன்மையான டாபெரும் குடிசைத் தொழிலாகும். இங்கு சுமார் 5.50 லட்சம் கைத்தறிகள் உள்ளன. (இது இந்தியாவில் உள்ள கைத்தறிகளின் எண்ணிக்கையில் 25 சதவீதத்திற்கு சற்றுக் கூடுதலாகும்.) ஏறத்தாழ 20 லட்சம் மக்கள் இத் தொழிலை நம்பியுள்ளனர். ஆண்டொன்றிற்கு ரூ. 48 கோடி மதிப்புள்ள சுமார் 39 கோடி கஜம் கைத்தறி துணிகள் உற்பத்தி செய்வதற்கான வாய்ப்புள்ள இத் தொழில் மாநிலத்தின் பொருளாதாரத்தில் முக்கிய இடம் வகிக்கிறது.

2. மனித உழைப்பின் உதவியுடன் பரவலான முறையில் அமைந்துள்ள ஒரு தொழிலாக இருப்பதால், மூலப் பொருட்கள், நிதி தொடர்பான சிக்கல்களை அது எப்போதும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. மேலும், பஞ்சாலைத் தொழிலின் முனைப்பான போட்டியையும் அது சமாளிக்கவேண்டியுள்ளது. இத்தொழிலின் மேம்பாட்டிலும் அதில் ஈடுபட்டுள்ள மக்களின் நலனிலும் தமிழ் நாடு அரசு தொடர்ந்து அக்கறை செலுத்தி வருகின்றது. மூலப்பொருள்கள் நிதி விற்பனை வசதிகள் ஆகியவற்றை நலந்தரு வகையில் பெற்றுத் தருவதற்கான தகுந்த நிறுவன முகவர் களாகச் செயலாற்றும் கூட்டுறவுகள் மூலம் அரசு உதவி பெரும் பாலும் அளிக்கப்படுகின்றது. இத் தொழிலின் மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்கள் அரசால் நிறைவேற்றப்பட்டுவருகின்றன. ஆண்டுத் திட்டங்களின் கீழ் அரசுக்கு ஏற்பட்டுள்ள செலவு விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | | | செலவு. (ரூ. லட்சத்தில்.) |
|---|---|---|---|
| 1967–68-ம் ஆண்டுத் திட்டம் | .. | .. | 118·00 |
| 1968–69-ம் ஆண்டுத் திட்டம் | .. | .. | 130·69 |
| 1969–70-ம் ஆண்டுத் திட்டம் | .. | .. | 145·06 |
| 1970–71-ம் ஆண்டுத் திட்டம் | .. | .. | 197·06 |
| 1971–72-ம் ஆண்டுத் திட்டம் (திட்டமிடப்பட்டது) | | | 254·34 |

இத் தொழிலின் மேம்பாட்டிற்காக, IV -வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 10.60 கோடி ஒதுக்க அரசு திட்டமிட்டுள்ளது. மூன்றாவது திட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பற்பல கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள், பிந்திய ஆண்டுகளின் திட்டங்களின் கீழ் ஆன செலவு, 1971-72-ம் ஆண்டுக்கும், நான்காவது திட்டத்திற்கும் திட்டமிடப்பட்ட செலவு ஆகியவை குறித்த தனித்தனியான விவரங்கள் I a -ம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.



*1971 ஜூலை 20]*

### 3. நடப்பாண்டில் கைத்தறித் தொழிலுக்கு வழங்கப்பட்டு, திட்டநிதி ஒதுக்கத்தில் சேர்க்கப்படாத நிதி உதவி.

1970–71-க்கென கீழ்க்கண்டவாறு மேற்கொண்டு நிதி ஒதுக்கம் (திட்டத்தில் சேராதது) செய்யப்பட்டுள்ளது :—

| (1) | (ரூ. லட்சத்தில்) (2) |
|---|---|
| **(1) கூட்டுறவுத் துறை மூலம் உதவி.** | |
| (a) நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி செய்கிற கைத்தறித் துணிகளை முனைந்து வாங்குவதற்கெனத் தமிழ் நாட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கிய குறுகிய காலக் கடன்கள் .. .. .. .. | 50·00 |
| (b) கைத்தறித் துணியும், நூலும் வாங்குவதற்காக இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து தமிழ் நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்பட்ட நடைமுறை மூலதனக் கடன் .. | 190·00 |
| (c) கூட்டுறவு மத்திய வங்கிகள் மூலமாக இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடைமுறை மூலதனக் கடன் வழங்குதல் .. .. .. .. | 284·20 |
| (d) மத்திய வங்கியின் சொந்த நிதி வாயில்களி லிருந்து நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடைமுறை மூலதனக் கடன் வழங்குதல்.. .. .. .. .. | 90·62 |
| (e) மாநில, மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் கூட்டுறவு, நூற்பு ஆலைகளுக்கு நடைமுறை மூல தனக் கடன் வழங்குதல் .. .. .. | 279·90 |
| மொத்தம் .. | 894·72 |
| **(2) கூட்டுறவுத் துறையின்கீழ் வராமல் கைத்தறித் தொழிலுக்கு உதவி.** | |
| கூட்டுறவுத் துறையின் கீழ் வராமல் கைத்தறித் தொழிலின் மேம்பாட்டுக்காக கைத்தறி நிதிக் கழகத்தினால் வழங்கப்பட்ட கடன்கள் .. .. | 140·09 |
| பெருமொத்தம் .. | 1,034·81 |

4. இம் மாநிலத்தில் நிறைவேற்றப்படும் பல்வேறு கைத்தறி வளர்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் குறித்த சுருக்கம் வருமாறு :—

I. **கூட்டுறவுத் துறையின்கீழ் கைத்தறிகளைக் கொண்டு வருதல்.**—இம்மாநிலத்தில் 31-3-1970 அன்றைய நிலவரப்படி 903 நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. இவற்றில் 1.87 லட்சம் தறிகள் இருந்தன. இவை, இம்மாநிலத்தில் உள்ள கைத்தறிகளின் மொத்த எண்ணிக்கைகளில் 33.4 சதவீதம் என்று கணக்கிடப்பட்டது.

[1971 ஜூலை 20

கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட கைத்தறி நெசவாளர்கள் ஒவ்வொருவருக்கும் உறுப்பினர் ஒருவருக்கு ரூ. 75 என்ற பேரளவுக்கு உட்பட்டு பங்கு மதிப்பில் 75 சதவீதம் கடன் வழங்கப்படுகிறது. ஏற்கனவே உறுப்பினர்களாக உள்ளவர்களுக்கும் தங்களுடைய பங்கு மூலதனத்தை அதிகரிக்கவும் அதே உயர் வரம்புக்குட்பட்டு கடன்கள் வழங்கப்படுகின்றன. புதிய உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்வதில் இத் திட்டத்தின் சாதனை குறித்த விவரங்கள் பின் வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன:—

| ஆண்டு. | | புதிய தறிகளைச் சேர்த்தல். | புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் உட்பட உறுப்பினர்களுக்கு பங்கு மூலதனக் கடன்கள். |
|---|---|---|---|
| | | | (ரூ. லட்சத்தில்.) |
| (1) | | (2) | (3) |
| 1967–68 | .. .. | 3,522 | 2·16 |
| 1968–69 | .. .. | 3,871 | 2·99 |
| 1969–70 | .. .. | 2,500 | 2·00 |
| 1970–71 | .. .. | 5,000 | 5·80 |
| 1971–72 | .. .. | 5,000 | 6·00 |
| | | (திட்டமிடப்பட்டது.) | |

பொருளாதார முறையில் தனித்து இயங்க முடியாதவையும் நிதி வசதியற்றவையுமான சங்கங்களை மூடிவிடும் நோக்கத்துடன் நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களைச் சீரமைக்கும் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் விளைவாக 1967-ல் 1,069 ஆக இருந்த அவற்றின் எண்ணிக்கை 1970 மார்ச்சில் 903 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. எனினும், அடுத்துள்ள தனித்தியங்கக் கூடிய சங்கங்களில் இவ்வாறு மூடப்பட்ட சங்கங்களின் நெசவாளர்களைச் சேர்த்துக் கொள்வதும், தற்போதுள்ள சங்கங்களில் புதிய நெசவாளர்களைச் சேர்த்துக் கொள்வதும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. இயலுமிடங்களிலெல்லாம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைத் தொடங்குவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. இம் மாநிலத்தின் பல பாகங்களிலும் 1970-71-ஆம் ஆண்டுக்கால அளவில் 14 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை தொடங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**II. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் நடைமுறை மூலதனம்.**—நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நியாயமான வட்டி வீதத்தின் போதிய அளவுக்கு நடைமுறை மூலதனம் வழங்க வகை செய்வதே கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சிக்கு மிக முக்கிய முதல்



1971 ஜூலை 20]

தேவையாகும். கைத்தறித் துணிகளை உற்பத்தி செய்வதற்கும், விற்பனை செய்வதற்கும் மாநிலக் கூட்டுறவு வங்கிகள், மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கிகள் மூலமாக இந்திய ரிசர்வ் வங்கி வட்டி வீதத்தைக் காட்டிலும் 1.5 சதவீதம் குறைவான வட்டி வீதத்தில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இந்திய ரிசர்வ் வங்கி நிதி உதவி வழங்குகின்றது. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடன் வழங்க இயலும் வகையில் கடன் வழங்கும் கூட்டுறவு வங்கிகளுக்கு சலுகை வட்டி வீதத்தில் ஈட்டுத் தொகையாக 3 சதவீதம் அளிக்கப்படுகின்றது.

மாநில கைத்தறி நெசவாளர் சங்கம் உட்பட நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் நடை முறை மூலதனத்திற்கு அரசு உத்தரவாதமுண்டு. 1970-71-ம் ஆண்டில் இது தொடர்பாக ரூ. 500 லட்சம் அளவிற்கு இந்திய ரிசர்வ் வங்கிக்கு அரசு உத்தரவாதமளித்துள்ளது. 1971-72-ம் ஆண்டுக்காக இந்திய ரிசர்வ் வங்கிக்கு ரூ. 550 லட்சம் வரை உத்தரவாதமளிக்கும்படி இந்த அரசு கேட்கப்பட்டுள்ளது. மத்திய வங்கிகள் தங்களுடைய சொந்த நிதி வாயில்களிலிருந்து அளிக்கும் கடன்களுக்காகவும் உதவித் தொகை அளிக்கப்படுகின்றது. இந்திய ரிசர்வ் வங்கி அளிக்கும் தொகையைக் கொண்டு தமிழ் நாடு கூட்டுறவு வங்கி தமிழ் நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சலுகை வட்டி வீதத்தில் கடன் வழங்கும்பொழுது அதற்குரிய ஆதாயமாக வட்டி வகையில் ஒரு சதவீத உதவித் தொகை அதற்குத் தரப்படுகிறது.

மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கும் நெசவாளர் தொடக்க கூட்டுறவுச் சங்கத்திற்கும் வழங்கப்பட்ட கடன்களும், வட்டி குறித்து வழங்கப்பட்ட உதவித் தொகையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

கீழ்க்கண்ட அளவில் கடன்கள் வழங்கப்பட்டன:—

| ஆண்டு | | மாநிலக் கைத்தறிச் சங்கம். | நெசவாளர் தொடக்க கூட்டுறவுச் சங்கங்கள். | மொத்தம். | நடைமுறை மூலதன கடன்கள் மீதான வட்டி குறித்த மொத்த உதவித்தொகை. |
|---|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) | (5) |
| | | | (ரூ. லட்சத்தில்.) | | |
| 1967–68 | .. | 100·00 | 286·05 | 386·05 | 10·62 |
| 1968–69 | .. | 100·00 | 281·70 | 381·70 | 9·00 |
| 1969–70 | .. | 100·00 | 284·20 | 384·20 | 11·00 |
| 1970–71 | .. | 150·00 | 350·00 | 500·00 | 11·52 |
| 1971–72 (திட்டமிடப்பட்டது). | .. | 200·00 | 350·29 | 550·29 | 13·00 |

[1971 ஜூலை 20

***நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு நடைமுறை மூலதனக் கடன்கள் வழங்குவதில் கூட்டுறவு மத்திய வங்கிகளுக்கு ஏற்பட்ட விரயங்களை ஈடுசெய்வதற்கு உத்திரவாதம் அளிக்கும் திட்டம்.***—விரயத்தை ஈடு செய்யும் திட்டத்தின்கீழ், இந்திய ரிசர்வ் வங்கிக் கடன்களிலிருந்தும் வங்கிகளின் சொந்த வாயில்களிலிருந்தும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட நடைமுறை மூலதனக் கடன்களைத் திரும்ப வசூலிக்க இயலாததால் எழக் கூடிய விரயங்களை முறையே 50 சதவீதம் 40 சதவீதம் அளவிற்கு ஏற்க இந்திய அரசும், மாநில அரசும் ஒப்புக் கொண்டுள்ளன. எஞ்சியுள்ள 10 சத விதத்தைக் கூட்டுறவு கடன் வழங்கும் வங்கிகளே ஏற்க வேண்டும். கூட்டுறவு மத்திய வங்கிகளால் கைத்தறித் தொழிலுக்கு வழங்கப்படும் மொத்தக் கடன்களில் 5 சதவீதம் என்ற மேல்வரம்பு வரையில்தான் மத்திய அரசு மாநில அரசுகள் பொறுப்பேற்கவேண்டுமென்று முடிவு செய்யப் பட்டுள்ளது.

1966-67 முதல் இது வரையில் இத் திட்டத்தின் கீழ் ஆறு மத்திய வங்கிகளுக்கு ரூ. 1.88 லட்சம் அளிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின் கீழ் 1971-72-ம் ஆண்டிற்கு ரூ. 2.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**III நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூலதனத்தில் மாநில அரசு பங்கு கொளல்.**—நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடைமுறை மூலதன நிதி வழங்கும் இந்திய ரிசர்வ் வங்கி சில விதி முறைகளை வரையறுத்துள்ளது. அவற்றில் ஒரு விதி முறையின் கீழ் சங்கங்கள் தாங்கள் வாங்கும் கடனுக்காக 10 சதவீத ஈடு காட்ட வேண்டும். அவ்வாறு ஈடு காட்ட வேண்டும். அவ்வாறு ஈடு காட்ட இயலாத சங்கங்களுக்கு உதவுவதற்காக, அவற்றின் பங்கு மூலதனத்தில் முதலீடு செய்வதன்மூலம், அவற்றின் நிதிவாயில்களை அரசு வலுப்படுத்தியுள்ளது. இவ்வாறு 1967-68 ஆம் ஆண்டில் ரூ 4 லட்சம் அளவில் 101 நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச்சங்கங்களிலும் 1968-69-ம் ஆண்டில் ரூ. 5 லட்சம் அளவுக்கு 103 நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களிலும் அரசு பங்கு மூலதன முதலீடு செய்தது. 1969-70 ஆண்டில் நிதி ஒதுக்கத்தை ரூ. 9.00 லட்சமாக அரசு கூடுதலாக்கியுள்ளது. 1970-71-ம் ஆண்டிற்கு ஆன செலவு ரூ. 8 லட்சமாகும்.

**IV தொழில் நுட்ப மேம்பாடுகளுக்குரிய திட்டம்.**—நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தியையும், உற்பத்தி முறைகளையும் மேம்படுத்தவேண்டும். அப்போதுதான் அவை கவர்ச்சிகரமான துணிகளை உற்பத்தி செய்து ஆலைகளின் போட்டிக்கு ஈடு கொடுக்க முடியும். சீரான கைத்தறிகள், நெசவுக் கருவிகள் இவற்றின் விலையில் 75 சதவீதம் உதவியளிப்பதற்கான திட்டங்களை அவர்கள் வகுத்துள்ளனர். எஞ்சிய 25 சதவீதம் கடனுகை வழங்கப்படுகிறது. பெரிய சிறிய சாயச்



1971 ஜூலை 20]

சாலைகளை நிறுவும் திட்டங்களுக்கும் அரசு நிதி உதவி அளிக்கின்றது. இத்திட்டத்தின்கீழ் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| ஆண்டு. | செலவு. (ரூபாய் லட்சத்தில்.) | பிரிவு. | எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1967–68 .. | 2·22 | மேம்பாடு செய்யப் பட்ட கருவிகள். | 6,719 |
| 1968–69 .. | 2·65 | மேம்பாடு செய்யப் பட்ட கருவிகள் சிறு சாயச்சாலைகள். | 8,354 |
| 1969–70 .. | 2·65 | மேம்பாடு செய்யப் பட்ட கருவிகள் சிறிய சாயச்சாலைகள். | 8,355 |
| 1970–71 .. | 6·62 | மேம்பாடு செய்யப் பட்ட கருவிகள். | 3.927 |
| 1971 72 .. | 10·00 (திட்டமிடப் பட்டது.) | மேம்பாடு செய்யப் பட்ட கருவிகள். | |

**V உற்பத்தியும், விற்பனையும்.**—கூட்டுறவுத் துறையில் கைத்தறித் துணிகளின் உற்பத்தியும், விற்பனையும் கீழே கொடுக்கப் பட்டுள்ளன :—

| ஆண்டு. | உற்பத்தி (பத்து லட்சம்) (கெஜத்தில்). | விற்பனை (ரூபாய் கோடியில்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1966–67 .. .. .. .. | 80·00 | 10·50 |
| 1967–68 .. .. .. .. | 83·94 | 10·74 |
| 1968–69 .. .. .. .. | 77·72 | 11·01 |
| 1969–70 .. .. .. .. | 36·88 | 10·85 |
| 1970–71 (எதிர் பார்க்கப்படுவது) .. .. | 100·00 | 15·00 |

தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் மட்டும் தனது விற்பனைப் பிரிவுகளின் மூலம் விற்ற கைத்தறித் துணிகளின் மதிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| ஆண்டு. | (ரூபாய் கோடியில்). |
|---|---|
| 1966–67-ல் விற்பனை .. .. .. .. | 4·10 |
| 1967-68-ல் விற்பனை .. .. .. .. | 4·14 |
| 1968–69-ல் விற்பனை .. .. .. .. | 4·23 |
| 1969–70-ல் விற்பனை .. .. .. .. | 4·69 |
| 1970–71-ல் விற்பனை (எதிர்பார்க்கப்படுவது) .. | 6·00 |
| 1971–72-ல் விற்பனை (திட்டமிடப்பட்டது) .. .. | 8·00 |

முதல் ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் கூட்டுறவுத் துறையில் சுமார் ரூ. 8 கோடி மதிப்புள்ள 740 லட்சம் கெஜம் கைத்தறித் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டன. கைத்தறித் தொழிலுக்குப் பெருமளவு நிதி உதவி வழங்கப்பட்டதன் விளைவாகப் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதால், 1963-64-ல் 11.5 கோடி கெஜம் அளவிற்கு கைத்தறித் துணிகள் உற்பத்தி பெருகியது. ஆனால் பஞ்சாலைத் தொழிலில் பொதுவாக மந்த நிலை ஏற்பட்டதாலும், நைலான், டெரிலின் முதலிய செயற்கை நூல் துணிகளை மக்கள் பெரிதும் விரும்பி வாங்கியதாலும் கைத்தறித் துணியின் உற்பத்தி அது முதல் குறைந்து வந்துள்ளது. மேலும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, இந்திய ரிசர்வ் வங்கி கடன் வழங்கும் முறையைத் தறிக்கு இவ்வளவு கடன் என்ற அடிப் படையிலிருந்து உற்பத்தி அடிப்படைக்கு மாற்றியுள்ளது. திருத்த அடிப்படையின் நிபந்தனைகள் பல்வேறு சங்கங்கள் செயலாற்று வதையும் அவற்றின் உற்பத்தியையும் பாதித்துள்ளது. நடைமுறை மூலதனக் கடன் வழங்குவதற்கான நிபந்தனைகளைத் தளர்த்து மாறு இந்திய ரிசர்வ் வங்கியை மாநில அரசு வற்புறுத்தி வந்துள்ளது. இந்திய ரிசர்வ் வங்கியும் சில நிபந்தனைகளைத் தளர்த்த அனுமதி வழங்கியுள்ளது. நெசவாளர் கூட்டுறவு சங்கங் கள் வணிக முறைகளை மேற்கொள்வதுடன் பொதுவான வங்கிக் கோட்பாடுகளை ஒட்டி நடக்கவும் வேண்டும். குறைவான வாணிபத் துக்கு அதிகப் பங்கு மூலதனம் தேவைப்படுவதே அவர்களுடைய பெருந் துன்பமாகும். அவர்களுடைய வணிகத்தை விரிவு படுத்து வதற்கும் அதிகரிப்பதற்கும், உற்பத்தியைச் சீரமைப்பது மிகவும் அவசியமாகும். இந்த நோக்கில் நெசவாளர்களுக்குப் பயிற்சி யளிப்பதற்காக வகுக்கப்பட்டுள்ள திட்டம், பிறிதொரு இடத்தில் விளக்கப்பட்டுள்ளது.

சங்கங்கள், தங்களிடம் உள்ள இருப்புகளை விற்பனை செய்வதற்கு அரசு சிறப்பு உதவி அளித்து வந்துள்ளது. நெசவாளர் தொடக்கச் சங்கங்களிடம் இருப்புகள் தேங்கி கிடக்கும் பொழுது அவற்றை முனைந்து வாங்குவதற்காக மாநிலக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு நிதி உதவி அளிக்கப்படுகின்றது. அப்பொழுது தான் சங்கங்களின் உறுப்பினர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்புக் கிடைக்க இயலும். 1969-70-ம் ஆண்டு தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு ஏற்கெனவே அளிக் கப்பட்ட ரூ. 25 லட்சம் கடனுடன் கூட, இந்த நோக்கத்திற்காக ரூ. 50 லட்சம் கடன் அளிக்கப்பட்டது.

கைத்தறி துணிகளின் விற்பனையைப் பெருக்குவதற்காக, 1968-69-ம் ஆண்டில் ஒரு திட்டத்திற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியது. அத் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் கூட்டு றவுச் சங்கங்களின் விற்பனைப் பிரிவுகளிலிருந்து கைத்தறித் துணி வாங்குவதற்காக அரசுப் பணியாளர்களுக்கு முன் பணங்கள் வழங்கப்படும். இத் திட்டத்தின்கீழ், அரசுப் பணியாளர் ஒருவர்



ஒரு திங்களுக்கான அடிப்படைச் சம்பளத் தொகைக்கு நிகராகத் தமக்கு வழங்கப்படும் முன் பணத்தைக் கொண்டு தமக்குத் தேவை யான கைத்தறித் துணிகளை வாங்கிக் கொள்ளலாம். முன் பணம் மொத்தத் தொகையாகப் பெற்றுக் கொள்ளப்பட்டு மாநிலச் சங்கத்திடம் அளிக்கப்படுகின்றது. இத் தொகை சம்பந்தப்பட்ட அரசுப் பணியாளரின் சம்பளத்திலிருந்து 6 அல்லது 8 திங்கள் தவணைகளில் அலுவலகத் தலைவரால் வசூலிக்கப்படுகின்றது. இத் திட்டம் நடப்பு ஆண்டிலிருந்து நிலைப்படுத்தப்பட்டு, உள்ளாட்சி மன்ற ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களுக்கும் நீட்டிக்கப்பட்டது. மாநிலக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் 1969-ம் ஆண்டு தீபாவளி காலத்தில் தனது விற்பனையை ரூ. 48 லட்சம் அளவுக்கு அதிகரிக்கவும், 1970-ல் ரூ. 71.36 லட்சம் அளவில் அதிகரிக்கவும் இத் திட்டம் உதவி செய்துள்ளது. ஆண்டு ஒன்றுக்கு அரசுக்கு ரூ. 70 லட்சம் செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அளவிற்கு தலைமை சங்கத்தால் அதன் விற்பனைகளை அதிகரிக்க இயலாது.

VI. **தள்ளுபடித் தொகை உதவி.**—கைத்தறித் துணி வாங்கு வோருக்கு ஊக்கமளிக்கும் வகையில், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களது விற்பனைகளுக்குத் தள்ளுபடி அனுமதிக்கும் வகையில் சில்லறை விற்பனைகளின் ஒவ்வொரு ரூபாய்க்கும் 5 காசும் மொத்த விற்பனைகளின் ஒவ்வொரு ரூபாய்க்கும் 3 காசும் உதவித் தொகையை அரசு அளித்து வந்துள்ளது. அனைத்திந்தியக் கைத் தறி வாரம் போன்ற விழாக்களின் போதும் தீபாவளி, பொங்கல் போன்ற முக்கிய பண்டிகைகளின் போதும் 15 நாள் கால அளவுக் குப் பருத்தி கைத்தறித் துணிகள், கலப்பு கைத்தறித் துணிகள் சில்லறை விற்பனையின் மேல் ரூபாய் ஒன்றுக்கு 10 காசு வீதம் கூடுதல் தள்ளுபடி வழங்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களிடம் தேங்கிவிட்ட இருப்புகளை விற்பனை செய்வதற்காக (பருத்தி, பட்டு, செயற்கைப் பட்டு அல்லது வேறு ஏதேனும் செயற்கை நூலைக் கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட) எல்லா வகையான கைத்தறித் துணிகளுக் கும் 10 காசு வீதம் உயரிய தள்ளுபடி அளிக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியது. இந்த உதவித் தொகை முந்திய ஆண்டில் 69 நாட் களுக்கு வழங்கப்பட்டிருக்க, 1969-70-ம் ஆண்டில் மொத்தம் 89 நாட்களுக்கு வழங்கப்பட்டது. ஆனால், அனைத்திந்தியக் கைத் தறி வாரியம், பருத்தித் துணிகளின் சில்லறை விற்பனைகள் மீதான தள்ளுபடித் தொகை உதவியை ஓர் ஆண்டில் 15 நாட் களுக்குத் தான் வழங்கலாம் என்று அனுமதித்துள்ளது. 1970-71-ம் ஆண்டில் அரசு இச் சலுகையை 68 நாட்களுக்கு நீட்டித்துள்ளது.

தள்ளுபடி வழங்குவதற்கான திட்டத்தின்கீழ் கடந்த மூன்றாண்டுகளில் ஏற்பட்ட செலவு குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| ஆண்டு | செலவு (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|
| 1968–69 | 84·65 |
| 1969–70 | 90·00 |
| 1970–71 | 110 00 |
| 1971–72 (திட்டமிடப்பட்டது) | 110·00 |

VII. விற்பனையும் பிரச்சாரமும்.—விற்பனைக் கிடங்குகளையும், விற்பனை நிலையங்களை நிறுவவும், நாள்காட்டிகளை அச்சிடுதல், காகிதப் பைகள், செய்தித் தாள்களில் விளம்பரம் வெளியிடுதல், பொருட்காட்சிகளில் பங்கு கொள்ளுதல் முதலிய பல்வேறு விளம்பர நடவடிக்கைகளுக்காகவும், தலைமைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், அரசு நிதி உதவி வழங்குகின்றது. உற்பத்திப் பொருள்களின் வகைகள், மலிவு, கைத்தறித் துணியின் தன்மை முதலியவற்றை விளக்குவதற்காக கிராமப் பகுதிகளிலும் பெருநகர்ப் பகுதிகளிலும் காண்பிப்பதற்காக விளம்பரப்படம் தயாரிக்கவும் திட்டமிடப்பட்டது. இத்திட்டத்திற்கான செலவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.—

| ஆண்டு | செலவு. (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 1967–68 | 7·45 |
| 1968–69 | 6·50 |
| 1969–70 | 6·95 |
| 1970–71 | 5·39 |
| 1971–72 (திட்டமிடப்பட்டது) | 7·00 |

VIII நெசவாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்.—தறி இல்லாத நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்காக நெசவாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்படுகின்றன. உறுப்பினர்களின் பங்கு மூலதனத்திற்கும் தறிகளையும், ஏனைய துணைக் கருவிகளையும் வாங்குவதற்கும் உதவி அளிப்பதோடு, பணிக்கூடங்கள் கட்டுவதற்கு 10 ஆண்டுகளுக்குள் திருப்பித்தரத் தக்க நீண்ட காலக் கடன்கள் இச்சங்கங்களுக்கு வழங்கப்படுகின்றன. பணியாளர்களை அமர்த்தல், வாடகைச் செலுத்தல் ஆகியவற்றிற்காக முதல் மூன்று ஆண்டுகளுக்கு உதவித் தொகை இச்சங்கங்களுக்கு வழங்கப்படுகின்றன.

இச் சங்கங்களின் உறுப்பினர்கள்; சங்கப் பணிக்கூடங்களில் பணியாற்றி ஊதியம் பெறுகின்றனர். மேலும் சங்கங்களுக்கு ஆதாயம் கிடைக்கும்போது, தங்கள் உற்பத்தியின்மீது அவர்கள் பூரிப்பூதியம் பெறுகின்றனர். இம் மாநிலத்தில் 22 நெசவாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவற்றின் ஆண்டு





உற்பத்தி மதிப்பு ரூ. 68.70 லட்சமாகும். இவற்றிலே சில சங்கங்கள் கவர் படுக்கை விரிப்புகளையும், வண்ணத் துவாலைகளையும், வீடுகளுக்கும் அழகூட்டும் துணிகளையும் தயாரிக்கின்றன, இவை உடனடியாக விற்பனையாகின்றன.

இத் திட்டத்தின்கீழ் செய்த செலவு விவரத்தை கீழே காணலாம் :—

| ஆண்டு. | செலவு. (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|
| 1967–68 | 0·11 |
| 1968–69 | .. |
| 1969–70 | 0·20 |
| 1970–71 | 1·80 |
| 1971–72 (திட்டமிடப்பட்டது) | 1.30 |

IX பட்டுத் தொழில்.—தமிழ்நாட்டிலுள்ள 20,000 பட்டுத்தறிகளில் 11 பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின்கீழ் 3,500 தறிகள் கூட்டுறவுத் துறையில் இயங்கி வருகின்றன. பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் நடைமுறை மூலதனத்திற்குப் பெருந்தொகை வேண்டியுள்ளது. எனவே, இந்திய ரிசர்வ் வங்கி 1968-69-ல் இருந்து இச்சங்கங்களுக்குக் கடனுதவி வழங்கியுள்ளது. பட்டு நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம் சராசரி ஆண்டுதோறும் உற்பத்தி செய்யும் சரக்கின் மதிப்பு ரூ. 89 லட்சமாகும். இவை விற்பனை செய்யும் சரக்கின் மதிப்பு ரூ. 97 லட்சமாகும். இத் திட்டத்தின்கீழ் ஏற்பட்ட செலவு விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| ஆண்டு. | நிகரச் செலவு. (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|
| 1967–68 | 4·19 |
| 1968–69 | 0·54 |
| 1969–70 | 0·70 |
| 1970–71 | 0·86 |
| 1971–72 (திட்டமிடப்பட்டது) | 0·74 |

1968-69-ல் இருந்து நடைமுறை மூலதனக் கடன் வழங்குவதை இந்திய ரிசர்வ் வங்கி எடுத்துக்கொண்டு விட்டதால், செலவு குறைந்துள்ளது.

X பயிற்சி.—கைத்தறி துணிகளின் ரகங்கள், வண்ணங்களை மேம்படுத்தும் நோக்கத்தோடு, நெசவாளர் சங்கங்களின் உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ் அருகிலுள்ள நெசவாளர்களுக்கு இம்மாநிலத்திலுள்ள நான்கு நிலையங்களில் பல்வேறு நவீன நெசவு முறைகளில் பயிற்சி அளிக்கப்பட்டது. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் சாயத் தொழிலாளர்களுக்கு

மேம்பாட்டு முறைகளில் சாயத் தொழிலுக்கான பயிற்சியும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் பணியாளர்களுக்கு, கணக்கெழுதி வைத்து வருதல், அலுவலக நிர்வாக முறை, கைத்தறி தொழிலியல் ஆகியவற்றில் பயிற்சியும் அளிக்கப்பட்டது.

இத் திட்டத்தின்கீழ் ஏற்பட்ட மேம்பாடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | செலவு. (ரூபாய் லட்சத்தில்.) | திட்டச் சாதனை. | |
|---|---|---|---|
| 1967–68 | 1·57 | பயிற்சியளிக்கப்பட்ட நெசவாளர் | 397 |
| | | பயிற்சியளிக்கப்பட்ட சாயத் தொழிலாளர் | 15 |
| | | பயிற்சியளிக்கப்பட்ட பணியாளர் | 229 |
| 1968–69 | 1·45 | பயிற்சியளிக்கப்பட்ட நெசவாளர் .. | 377 |
| | | பயிற்சியளிக்கப்பட்ட சாயத் தொழிலாளர் | 17 |
| | | பயிற்சியளிக்கப்பட்ட பணியாளர் .. | 162 |
| 1969–70 | 1·27 | பயிற்சியளிக்கப்பட்ட நெசவாளர் .. | 353 |
| | | பயிற்சியளிக்கப்பட்ட சாயத் தொழிலாளர் | 14 |
| | | பயிற்சியளிக்கப்பட்ட பணியாளர் .. | 103 |
| 1970–71 | 4·45 | பயிற்சியளிக்கப்பட்ட நெசவாளர் .. | 2,160 |
| | | பயிற்சியளிக்கப்பட்ட சாயத் தொழிலாளர் | 20 |
| | | பயிற்சியளிக்கப்பட்ட பணியாளர் .. | 200 |
| 1971–72 (திட்டமிட்டது) | 5·32 | பயிற்சியளிக்கப்பட்ட நெசவாளர் .. | .. |
| | | பயிற்சியளிக்கப்பட்ட சாயத் தொழிலாளர் | .. |
| | | பயிற்சியளிக்கப்பட்ட பணியாளர் | .. |

நெசவாளர் பயிற்சிக்கான திட்டம் பல வழிகளில் குறைபாடுகள் உள்ளதாக காணப்பட்டது. செயல்படும் நிலையங்களின் எண்ணிக்கையோ குறைவு. நெசவாளர்களோ, தொலை தூர இடங்களிலிருந்து வரவேண்டியிருந்தது. இதனால் அவர்களுக்கு வசதிக்குறைவு ஏற்பட்டது. பல்வேறு பொருட்களின் உற்பத்தியில் பயிற்சி அளிக்கப்பட்டதும் ஒரு குறையாகும். மேலும் பயிற்சி பெற்ற நெசவாளர்கள் இந்நிலையங்களில் தாம் கற்ற முறைகளைக் கடைபிடிக்கின்றனரா என்பதைக் கவனிக்க, மேற்கொண்டு நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. எனவே, இத்திட்டத்தை அரசு தக்கவாறு திருத்தி 15-2-1970 முதற்கொண்டு செயலுக்குக் கொண்டு வர முனைந்துள்ளது. இப்பயிற்சி நீல்கிரி, சென்னை நீங்கலாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பயிற்சி நிலையமாக 12 நிலையங்களில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அந்தந்த மாவட்டத்திலுள்ள நெசவாளர் தொடக்க கூட்டுறவுச் சங்கம் இத்திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பை ஏற்கும். தகுதி வாய்ந்த கைத்தறி தொழில் நுட்ப ஆசிரியர்கள் பணி, அரசுச் செலவில் இச்சங்கத்திற்குக் கொடுக்கப்படும். ஒவ்வொரு நிலையத்திலும் முப்பது நெசவாளர்களுக்கு ஒவ்வொரு பாடமுறையிலும் பயிற்சி அளிக்க ஆறு பாடமுறைகள் இருக்கும். அந்தந்த திட்டத்தை நடத்தும்,



சங்க உறுப்பினர்களிலிருந்தும் அந்த கிராமத்தில் அல்லது நகரில் பிற சங்கங்கள் எவையேனும் இருப்பின் அவற்றிலிருந்தும், நெசவாளர்கள் இப்பயிற்சிக்காகத் தெரிந்தெடுக்கப்படுவர். விரைவில் விற்பனையாகக்கூடியவையும், ஆலைகள் போட்டியிடாதவையும் படுக்கை விரிப்புகள், தரை விரிப்புகள், துண்டுகள், சட்டைத்துணி, உயர்தரமான சேலைகள் போன்ற இரண்டு மூன்று வகைகளை உற்பத்தி செய்வது குறித்துப் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சிக்குப் பின்னர் புதிய ரகங்களைச் சங்கங்களின் சார்பாக தயாரிக்குமாறு நெசவாளர் கேட்கப்படுவர். அவர்களுக்குப் புதிய கருவிகள் குறைந்த விலையில் கொடுக்கப்படும். பயிற்சித் திட்டத்தின் கால அளவு 45 நாட்களாகும். பயிற்சி பெறுபவருக்கு திங்களொன்றுக்கு ரூ. 100 உதவிப் பணமாக வழங்கப்படும். நடப்பு ஆண்டில், ஒரு பாடமுறையில் பயிற்சியளிக்கப்படும். 12 நிலையங்களிலும், மொத்தமாக 360 நெசவாளர்கள் பயிற்சி பெறுவர். 1970-71-ஆம் ஆண்டு முதற்கொண்டு, ஆண்டுதோறும் 2,160 நெசவாளர்கள் பயிற்சி பெறுவர். ஒரு மாவட்டத்தில் செயல்படும் நிலையம் குறிப்பிட்டதொரு இடத்தில் நியாயமான எண்ணிக்கையுள்ள நெசவாளர்களுக்குப் பயிற்சி அளித்த பின்னர், அந்த மாவட்டத்திற்குள்ளேயே ஒவ்வொரு இடமாகச் செயல்படும். இப்பயிற்சி மும்முரமான பயிற்சி மட்டுமன்றி, பரவலான பயிற்சியுமாகும். இப்பயிற்சியின் காரணமாக எளிதில் விற்பனையாகக்கூடிய கைத்தறிச் சரக்குகளை உற்பத்தி செய்வதன் மூலம் கைத்தறித் தொழில் வளம் பெறுவதற்கு இப்பயிற்சி உதவுமென எதிர்பார்க்கப்படுகிறது. 1971-72-ஆம் ஆண்டுக்கான ரூ. 5.32 லட்சம் திட்டமிடப்பட்டுள்ளது.

**XI நிர்வாகப் பணியாளருக்காக ஆகும் செலவிற்கான உதவித் தொகை.**—இத்திட்டத்தின்கீழ், நிதி வசதி குறைந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிர்வாகப் பணியாளர் செலவு குறித்து நிதி உதவி அளிக்கப்படுகிறது. இந்த நிதி உதவி படிப்படியாக குறையும் வகையில் நான்கு ஆண்டுகளில் அளிக்கப்படுகிறது. முதலாவது ஆண்டில் ஒரு சங்கத்திற்கு அதிக அளவாக ரூ. 1,000 உதவியளிக்கப்படும். இத் திட்டத்தின்கீழ் செலவு விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| ஆண்டு. | செலவு. (ரூபாய் லட்சத்தில்.) | பயன்பெற்ற சங்கங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1967–68 .. .. .. .. | 0·49 | 72 |
| 1968–69 .. .. .. .. | 0·39 | 54 |
| 1969–70 .. .. .. .. | 0·50 | 56 |
| 1970–71 .. .. .. .. | 0·89 | 102 |
| 1971–72 (திட்டமிட்டது) .. .. .. | 1·00 | 100 |

**XII நெசவாளர் தலைமைச் சங்கத்தின் பங்கு மூலதனத்தில் அரசு முதலீடு செய்தல்.**—கைத்தறித்துணிகளை அதிக அளவில் வாங்கி விற்பனை செய்வதற்கு சங்கத்தின் நடைமுதல் மூலதன

வசதிகளை அதிகப்படுத்துவதற்காக அரசு, தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் இதுவரையில் ரூ.21.50 லட்சம் பங்கு மூலதன முதலீடு செய்துள்ளது. 1969–70-ஆம் ஆண்டில் மேற்கொண்டும் ரூ. 1.00 லட்சம் பங்கு மூலதனம் முதலீடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 5. நெசவாளர் நலத் திட்டம்.

கைத்தறி தொழில் வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்களை செயல் படுத்துகையில் நெசவாளர் நலத் திட்டங்களை மேற்கொள்வதன் மூலம் அவர்களின் சமூக-பொருளாதார நிலைகளை மேம்படுத்து வதில் அரசு சிறப்பான நாட்டம் செலுத்தி வருகிறது. இத்திட்டங் கள் சுருக்கமாகக் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

(1) **நெசவாளர்களுக்கு வீட்டு வசதி.**—நெசவாளர்களுக்குத் தொழில் கூடம் இணைந்த வசதியான வீடுகளைக் கட்டி கொடுப் பதன் மூலம் அவர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்காக இத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளன. ஒரு வீட்டிற்கு அதிக அளவாக ரூ. 3,600 செலவிட ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது இதில் ரூ. 2,000 கடனாகவும், ரூ. 1,250 உதவித் தொகையாகவும் வழங்கப்படுகிறது. எஞ்சிய 350 ரூபாய் அல்லது வீட்டிற்குச் செலவிட ஒப்பளிப்பு வழங்கப்பட்ட தொகையில் 10 சதவீதம், இவ்விரண்டில் எது அதிகமான தொகையோ, அத்தொகையை உறுப்பினர்கள் கொடுக்க வேண்டும். இக் கடன் 25 சமமான ஆண்டுத் தவணைகளில் 4½ சத வீத வட்டியுடன் திருப்பிச் செலுத்தப்படத்தக்கதாகும். வீட்டு வசதி புதுக்குடியேற்றங்களில் சாலைகள் அமைத்தல், குடிநீர் வசதி செய்து கொடுத்தல், தெரு விளக்கு வசதி செய்து கொடுத்தல் போன்ற பொதுவான வாழ்க்கை வசதிகளைச் செய்து கொடுப்பதற் காகவும் சங்கங்களுக்குக் கடன்கள் வழங்கப்படுகின்றன.

இத் திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ. 127.65 லட்சம் செலவிட்டு, 2,683 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 1962-ல் இருந்து புதிதாக வீட்டு வசதித் திட்டம் எதற்கும் ஒப்பளிப்பு வழங்கப்படவில்லை. திங்களொன்றுக்கு ரூ. 100-க்கு மேல் ஊதியம் பெறுகின்ற நெசவா ளர்கள் மாதத் தவணையாக ரூ. 25 செலுத்துவது கடினமாக இருப்பதால், சிக்கலை நன்கு ஆய்ந்த பின்னரே இத்திட்டம், நடப்பு ஆண்டில் செயல்படுத்த எடுத்துக்கொள்ளப்படும். நான்காவது திட்டக் காலத்தில் 500 வீடுகள் கட்டிக்கொடுப்பதற்காக ரூ. 27 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங் களிடமிருந்து கடன் பெற்று வீடு கட்டிக் கொண்டுள்ள உறுப்பினர் கள் தங்களது குறைந்த ஊதியத்திலிருந்து வீடுகளுக்கான தவணை நிலுவைகளையும் அவர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் மீதான தண்ட வட்டியையும் செலுத்த இயலவில்லை என்ற காரணத்தால், அரசுக்கு முறையீடுகள் செய்துகொள்ளப்பட்டன. அதன் மேல், திங்களொன்றுக்கு ரூ. 5 முதல் 10 வரையில் வசூல் செய்வதன் மூலம் முறையான திங்கள் வாரித் தவணைகளுடன் தவணை நிலுவைகள் சுலபத் தவணைகளில் வசூலிக்கப்படலாமென்று அரசு





ஆணை பிறப்பித்துள்ளது. இவ்வரசு ஆணைத் தேதியன்று வரை உறுப்பினர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கட்ட வேண்டியதாய்ச் சேர்ந்துள்ளதும், சங்கங்கள் தங்கள் முறையில் அரசுக்கு செலுத்த வேண்டியதுமான தண்ட வட்டித் தொகையைச் செலுத்த வேண்டி யதில்லையென ஆணையிட்டுள்ளது.

(b) **உதவித் தொகை சிக்கன நிதி (வருங்காலச் சேமிப்பு நிதி) திட்டம்.**—இத் திட்டத்தின் கீழ் சேமித்து வைக்கும் பழக்கத்தை கைக்கொள்ளும் வகையில் நெசவாளர்களுக்கு ஊக்கமளிக்கப்படு கின்றது. அது மட்டுமல்லாமல், வீடு கட்டுதல் போன்ற பயனுள்ள செயல்களுக்கும், திருமணம் முதலியவை போன்ற அவசியமான சமூக நிகழ்ச்சிகளுக்கும், முன் பணம் பெறுவதற்கும் உதவியளிக் கப்படுகின்றது. இத்திட்டத்தின்கீழ் நெசவாளர் ஒருவர் தாம் ஈட்டும் ஒவ்வொரு ரூபாய்க்கும் 6 காசு வீதம் கொடுக்கிறார்கள். அரசு 4 காசும் சம்பந்தப்பட்ட சங்கம் 2 காசும் கொடுப்பதால், இந்த நிதிக்கு நெசவாளர் வழங்கும் தொகைக்கு இணையாக மேலும் 6 காசு சேருகின்றது. இத் திட்டம் 1962-63-ம் ஆண்டி லிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், அதிக சங்கங் களும் உறுப்பினர்களும் பயனடையும் வகையில் இத் திட்டம் படிப் படியாக விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. இந்த உதவித் தொகை சிக்கன நிதியானது சம்பந்தப்பட்ட மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கிகளில் சிக்கன நிதித் திட்டத்தில் சேர்ந்துள்ள ஒவ்வொரு வருடைய பெயரிலும் 6 சதவீத வட்டிக்கு முதலீடு செய்யப்படு கிறது. 30—12—1970 முடிவில் பல்வேறு கூட்டுறவு மத்திய பாங்கு களிலும் உதவித் தொகைச் சிக்கன நிதியானது மொத்தம் 42 லட்சம் ரூபாய்க்கு மேல் சேர்ந்துள்ளது.

இத் திட்டத்தின்கீழ் நன்கொடையாக அரசு அளித்த உதவித் தொகை கீழே கொடுக்கப்படுகிறது :—

| ஆண்டு. | அரசு கொடுக்கும் உதவித் தொகை (ரூ. லட்சத்தில்.) |
|---|---|
| 1967–68 | 1·80 |
| 1968–69 | 1·89 |
| 1969–70 | 2·00 |
| 1970–71 | 2·05 |
| 1971–72 (திட்டமிட்டது) | 2·75 |

6. **ஏனைய திட்டங்கள்.**—பின் வரும் திட்டங்கள் கூட்டுறவுத் துறையின் கீழ் வராத நெசவாளர்களின் நலனையும் பொதுவாக கைத்தறி தொழிலின் நலனையும் நோக்கமாகக் கொண்டமை யாகும் :—

(a) **புள்ளி விவரம் திரட்டுதல்.**—இது, இம்மாநிலத்தில் கூட்டு றவுத் துறையிலும் கூட்டுறவுத் துறைக்கு வெளியிலும் கைத்தறித் துணிகளின் உற்பத்தி, இருப்பு, விற்பனை ஆகியவை குறித்த புள்ளி

விவரங்களைத் திரட்டுவதற்கான திட்ட வேலையாகும். மாவட்டங்களில் முக்கிய கைத்தறி உற்பத்தி உள்ளூர் நிலையங்களில் அவ்வப்போது அங்குமிங்குமாகப் புள்ளி விவரம் திரட்டும் (Random Sampling) முறையை மேற்கொண்டு இத் திட்டம் புள்ளி விவரத் துறை இயக்குநரால் செயல்படுத்தப்படுகிறது. இத் திட்டத்திற்கு 1967–68-ல் ரூ. 1.16 லட்சமும், 1968–69-ல் ரூ. 1.23 லட்சமும், 1969-70-ல் ரூ. 1.26 லட்சமும் செலவாயிற்று. 1970-71-க்கு ரூ 1 லட்சம் தொகை செலவாகுமென எதிர்பார்க்கப்பட்டது. 1971–72-ம் ஆண்டில் ரூ. 1 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(b) **பரிசு வழங்கும் திட்டம்.**—கைத்தறித் துணிகளில் புதிய கவர்ச்சிகரமான துணி வகைகளைத் தயாரிப்பதற்கு கூட்டுறவு அமைப்பில் சேர்ந்துள்ள நெசவாளர்களுக்கும், கூட்டுறவு அமைப்பில், சேராத நெசவாளர்களுக்கும் மற்றும் தறி முதலாளிகள், நெசவுத் தொழிற்சாலை முதலாளிகள், துணி வடிவமைப்பாளர்கள் ஆகியவர்களுக்கும் நேரடியான ஊக்கமளிப்பதன் மூலம், கைத்தறி துணிகளை மக்கள் பெரிதும் விரும்பச் செய்யும் நோக்கத்துடன் இம் மாநிலத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட இடங்களில் போட்டி நடத்தி ஒவ்வொரு வகையிலும் சிறந்த ரகத் துணிக்கு பரிசளிக்கும் திட்டம் அரசினால் ஆண்டுதோறும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்தகைய பரிசுகள் வழங்கப்படுவதற்காக மொத்தம் 20,000 ரூபாய் அரசாங்கத்தால் செலவிடப்படுகிறது. பரிசுகள் வழங்கப்படுவதற்கான சிறந்த துணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அரசுப் பணியாளர், அரசுப் பணி சார்பற்றவர்கள் ஆகியவர்களைக் கொண்ட ஓர் ஆலோசனைக் குழுவின் உதவியுடன் தெரிந்தெடுக்கின்றனர்.

**தமிழ் நாடு கைத்தறி நிதி உதவும் கழகம்.**—கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் வராத நெசவாளர்களுக்கு உதவும் வகையில் பொது நிறுவனம் ஆகவும், வங்கி அலுவல் புரியாத நிறுவனமாகவும் இக் கழகம் 1964-ஆம் ஆண்டில் அரசால் நிறுவப்பட்டது. இக்கழகம் தொடர்ந்து வளர்ச்சி பெற்று வந்துள்ளது. கழகத்தின் தொகை செலுத்தப்பட்ட பங்கு மூலதனமாகிய ரூ. 62.85 லட்சத்திலிருந்து (31—12—1970 நாள் நிலவரம்) குறிப்பாகக் கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் வராத கைத்தறி விசைத்தறி இவை தொடர்பான தொழில்கள் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இக்கழகம் நிதி உதவி அளிக்கிறது. 1969-70-ம் ஆண்டில் தமிழ் நாடு அரசு இக் கழகத்தில் ரூ. 7.40 லட்சம் அளவிலும், 1970-71-ல் ரூ. 5 லட்சம் அளவிலும் கூடுதல் பங்குகள் மூலதன முதலீடு செய்தது. இதன் விளைவாக இக்கழகத்தில் அரசின் மொத்த மூலதன முதலீடு ரூ. 25 லட்சமாக உயர்ந்துள்ளது. தமிழ் நாடு கைத்தறி நிதி உதவும் கழகத்திற்கு இந்திய ஸ்டேட் வங்கி அரசு உத்தரவாதத்தின் மேல் ரூ. 90 லட்சம் அளவிற்குத் தொடர்ந்தாற் போல் ரொக்கக் கடன் வசதி வழங்கியுள்ளது. இந்த ஆண்டில் ரூ. 140.09 லட்சம் அளவிற்கு இக்கழகம் கடன் வழங்கியுள்ளது.





7. **திட்ட வேலைகளுக்கான நிர்வாகச் செலவு.**—கைத்தறித் திட்ட வேலைகளைச் செயல்படுத்தும் பொருட்டு நியமிக்கப்பட்டுள்ள துறை பணியாளர்களுக்கு ஆகும் செலவை ஈடு செய்யக் கடன் உதவியளிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். 1969-70-ஆம் ஆண்டில் ரூ. 3.60 லட்சம் செலவாகிறது. 1970-71-ஆம் ஆண்டில் ரூ. 5.53 லட்சம் செலவாயிற்று. 1971-72-ல் ரூ. 4 லட்சம் ஒதுக்கக் கருதப்பட்டு உள்ளது.

8. **கைத்தறி தொழிலுக்கு மூலப் பொருள்கள் வழங்குதல்— (a) பருத்தி நூலைத் தயாரித்தலும், வழங்கலும்.**—(1) இம் மாநிலத்தில் 402 மில்லியன் கதிர்கள், 3,287 தறிகள் நிறுவப்பட்ட திறனுடன் 199 பஞ்சாலைகள் (175 நூற்பு, 24 நூற்பு-நெசவு) உள்ளன. இம் மாநிலத்திலுள்ள கைத்தறித் தொழிற்சாலைகளின் மொத்த உற்பத்தித் திறன் திங்களொன்றுக்கு ஏறத்தாழ 20,000 பேல்களாகும். விசைத் தறிகள், உள்ளாடை தயாரிப்பு நிறுவனங்கள், பிற துணைத் தொழிற்சாலைகளுக்குத் திங்களொன்றுக்கு 9,000 பேல்கள் தேவைபடுகின்றன. எல்லா ஆலைகளின் மொத்த உற்பத்தியைக் கருதிப் பார்க்குமிடத்து, பருத்தி நூலுற்பத்தியைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு எப்பொழுதும் உபரி நிலையிலேயே உள்ளது. இம் மாநிலத்திற்குள் பருத்தி நூல் பற்றாக்குறை நிலவ வாய்ப்பில்லை என்பது இதனால் தெரியவருகிறது.

(2) ஆனால் பருத்தி நூலின் விலை, சந்தையின் நிலவரம், பருத்தியின் விலை ஆகியவற்றைப் பொறுத்துள்ளது. சிறப்பாக தமிழ் நாட்டில், பருத்தியின் உற்பத்தி தேவைக்குக் குறைவாகவே உள்ளதென்பது குறிப்பிட வேண்டியதொன்றாகும். எனவே, பருத்தி விலை அதிகமாகியதால் பருத்தி நூலின் விலையும் அதிகமாக வேண்டியதாகிறது, அண்மையில் ஏற்பட்ட பருத்தி விலை உயர்வு பருத்தி நூல் விலையில் தொல்லைகள் ஏற்படக் காரணமாயிருந்தது. இதனால் கைத்தறி தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டது.

(3) கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் இடர்பாடுகளைப் போக்கும் நோக்கத்துடன் இந்திய அரசு அண்மையில் பருத்தி நூல் தொகுப்பு தனித் திட்டம் ஒன்றை, இறக்குமதி செய்யப்படும் அயல்நாட்டு பருத்தியை எதிர்பார்த்திருக்கும் பரவல் முறைப் பிரிவிலுள்ள கைத்தறி தொழிற்சாலைகளுக்கு (கைத்தறி, விசைத்தறி, உள்ளாடை தொழிற்சாலைகளுக்கு) 10, 20, 30, 40-ம் நம்பர் பருத்தி நூல்களைப் பகிர்ந்தளிப்பதற்காக ஏற்படுத்தியுள்ளது. இத் திட்டம் 1971-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் முதல் ஏப்ரல் திங்கள் வரை செயலில் இருக்கும். 1971-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் வரை செயலில் இருக்குமாறு இது நீட்டிக்கப்பட்டுள்ளது. பம்பாய் நூற்பாலை ஆணையாளரால் பருத்தி நூல் விலைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. இத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

(b) **நார்ப் பட்டு.**—பங்களூரிலுள்ள நூற்பாளர்கள் நெசவாளர்கள் மத்தியக் குழுவின் தென்னிந்திய வட்டாரக் குழு விஸ்கோஸ் இழை நூலை, கைத்தறித் துணிவு உற்பத்தியாளர்களின் சங்கங்

களுக்கு வழங்குகிறது. உள்நாட்டில் உற்பத்தியாகும் நார்ப் பட்டு நூல் தற்போது கைத்தறி, பஞ்சாலைகள் இயக்குநரின் பரிவுரையின் அடிப்படையில் இப்போது செய்யப்படுகிறது. நார்ப் பட்டு நூல் நியாய விலையில் ஆலைகளின் மூலம் வழங்கப்படுகிறது.

**(c) இறக்குமதி செய்யப்படும் நார்ப் பட்டு நூல்.**—நார்ப் பட்டு நூலை உண்மையில் பயன் படுத்துவோரும், அத்தொழில் ஈடு பட்டுள்ள இறக்குமதியாளர்களும் நார் பட்டு நூலை இறக்குமதி செய்வது இந்திய அரசினால் அனுமதிக்கப்படவில்லை. ஆனால் செயற்கைப் பட்டு நூலை இறக்குமதி செய்யும் பொறுப்பை இந்திய அரசு, அரசு வர்த்தகக் கழகத்திடம் ஒப்படைத்துள்ளது. 1969-ம் ஆண்டில் அரசு வர்த்தகக் கழகம் 172 டன் நார்ப் பட்டு நூலை இம் மாநிலத்திலுள்ள கைத்தறி சங்கங்களுக்கும், கூட்டுறவுச் சங்கங் களுக்கும் வழங்குவதற்கு ஒதுக்குகின்றது. இதிலே எட்டு டன் நூல் மட்டும் கைத்தறிச் சங்கங்களாலும், கூட்டுறவுச் சங்கங் களாலும் எடுத்துக்கொள்ளப்படுகிறது. நூலின் விலை அதிகமாயி ருப்பதே இதற்குக் காரணமாகும். 1970-ஆம் ஆண்டில் ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை.

(d)மூலப்பட்டு.—பட்டு நூலிழை ஏற்றுமதியின் அளவு குறைந்த தாலும், பட்டு நூலிழை உற்பத்தி அதிகரித்ததாலும் ஏற்கெனவே பட்டின் அங்காடி விலை குறைந்துள்ளது. மூலப்பட்டு இறக்குமதி செய்வதற்காக அனுமதி வழங்கப்படும் என்று இந்திய அரசு அறிவித்தது பட்டு நூலிழை சந்தையில் ஓர் அதிர்ச்சியைக் கொடுத்தது. மூலப் பட்டு விலை குறைவுக்கு இதுவும் ஒரு காரண மாகும். இம்மாநிலத்தில் பட்டு நூலிழைகள் தயாரிப்பதற்கு உப யோகப்படுத்தப்படும் சர்க்கா மூலப்பட்டின் விலை 1970-ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் கிலோ ஒன்றுக்கு ரூ. 210-ஆக இருந்ததற்கு எதிராக இப்பொழுது ரூ. 160 முதல் 165 வரை உள்ளது. சப்பூரி முதல் தரம் கிலோ ஒன்று ரூ. 135 முதல் 189 வரை கிடைக்கிறது. இப்பொழுது மூலப் பட்டின் விலை ஒரே நிலையிலுள்ளது. இம் மாநிலத்தில் பட்டுத் துணி தயாரிப்பதற்குத் தேவைப்படும் மூலப் பட்டை வாங்குவதற்கு இப்போது ஒரு தொல்லையுமில்லை. இம் மாநிலத்தில் பட்டு நூலிழைகளைத் தயாரிப்பதற்காக, மூலப் பட்டை வாங்குவதில் முதன்மையிடமாக உள்ள பெங்களூர் பட்டு சந்தை யில் போதுமான அளவு மூலப் பட்டு உள்ளதென்று தெரி வருகிறது. மூலப் பட்டின் விலை உயர்வை கட்டுப்படுத்துவதற் காக, மத்திய பட்டு வாரியம் குறுகிய கால நடவடிக்கையாக, (i) இறக்குமதியை ரத்து செய்தல், (ii) மூலப் பட்டு சேமிப்பு நிலையம் ஒன்றை ஏற்படுத்துதல், (iii புதியதாக ஏற்படுத்தப் படும் பட்டுத் தொழிற்சாலைகளைத் தடுத்தல், அல்லது நடப்பு காலண்டர் ஆண்டில் மூலப்பட்டு தொழிற்சாலையில் இயங்கிவரும் கைத்தறிகளை விசைத் தறிகளாக மாற்றுதல் போன்ற நடவடிக்கை களை ஏற்கெனவே தொடங்கியுள்ளது.

***சரிகை.***—தமிழ்நாட்டிலுள்ள பட்டு, கைத்தறி நெசவா ளர் ஆண்டுதோறும் ரூ. ஒரு கோடிக்கு மேற்பட்ட மதிப்புடைய



பொன் சரிகையைச் சூரத்திலிருந்து வாங்குகின்றனர். நியாய மான விலையில் பொன் சரிகை கிட்டுவதற்கு வகை செய்யும் பொருட்டு சரிகை உற்பத்திப் பிரிவு ஒன்றை காஞ்சிபுரத்தில் ரூ.25 லட்சம் செலவில் நிறுவ அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இதற்கு வேண்டிய பொன் இந்திய அரசினால் இப்போது ஒதுக்கப்பட்டுள் ளது. இச் சங்கத்தை விரைவில் நிறுவுவதற்கான நடவடிக்கை கள் எடுக்கப்பட்டு வருகின்றன. சரிகைத் தொழில் பிரிவு அமைப் பதற்கான இடத்தைக் கையகப்படுத்தும் பணி நிறைவேற்றப்பட்டு வருகிறது.

(b) ***சாயங்களும், இராசாயனப் பொருள்களும்.***—சாயங்கள் இறக்குமதி செய்வது 1969-70 உரிமக் கால அளவில் சாயம் பயன் படுத்துவோர் உரிமத்தின்கீழ் அனுமதிக்கப்படுவதில்லை. கைத்தறித் தொழிலில் இயல்பாகப் பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருட் களில் எதுவும் நடப்பு உரிமக் கால அளவில் இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படுவதில்லை. கைத்தறித் துணி ஏற்றுமதியாளர்கள் அவர்கள் ஏற்றுமதி செய்யும் சரக்குகளின் மதிப்பில் 5 சத வீதம் வரையில் சாயங்களையும், இரசாயனப் பொருட்களையும் (அனுமதிக் கப்பட்டுள்ள வகைகளைச் சேர்ந்தவை) இறக்குமதி செய்ய அனு மதிக்கப்பட்டுள்ளன.

***ஹைட்ரோ சல்பைட் சோடா.***—ஹைட்ரோ சல்பைட் சோடா மிகவும் பற்றுக்குறையாக உள்ளபடியால் அதனைக் கைத்தறி நெச வாலை இயக்குநருக்கு ஒழுங்காக ஒதுக்குவதற்காக ஆல்வாயிலுள்ள திருவாகூர்—கொச்சி கெமிக்கல்ஸ் நிறுவனத்துடனும் ஜே. கே. கெமிக்கல்ஸ் நிறுவனத்துடனும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கைத்தறி இயக்குநர் மேற்சொன்ன நிறுவனங்களிடமிருந்து பெறப் படும் சோடாவைக் கைத்தறிச் சங்கங்களுக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பங்கிடு செய்கிறார். இறக்குமதி செய்யப்படும் இருப்புகளிலிருந்து அரசு வணிகக் கழகத்தினால் ஒதுக்கப்படும் அளவும் கைத்தறிச் சங்கங்களுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பங்கீடு செய்யப்பட்டது.

***9. ஏற்றுமதி.***—1965-ஆம் ஆண்டு முதற்கொண்டு சென்னைத் துறைமுகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட கைத்தறித் துணி களின் அளவு பற்றிய விவரங்களைக் கீழே உள்ள அறிக்கையில் காணலாம் :—

| ஆண்டு. | வண்ணம் மாறும் துணியின் ஏற்றுமதி மதிப்பு. | பிற நூல் இழைகள். | மொத்தம். |
|---|---|---|---|
| 1965 .. .. .. | 6·16 | 1·39 | 7·55 |
| 1966 .. .. .. | 0·03 | 3·63 | 3·66 |
| 1967 .. .. .. | 0·06 | 3·19 | 3·25 |
| 1968 .. .. .. | 0·05 | 2·53 | 2·58 |
| 1969 .. .. .. | .. | 3·69 | 3·69 |
| 1970 .. .. .. | 0·01 | 1·21 | 1·22 |

[1971 ஜூலை 20

வண்ணம் மாறும் துணியின் ஏற்றுமதி 1965-ஆம் ஆண்டு பிற்பாதியில் குறைந்தது. 1969-ஆம் ஆண்டில் இதன் ஏற்றுமதி மிகக் குறைவாகும். இந்திய அரசு ஊக்கம் அளித்ததால் வண்ணம் மாற்றும் துணியின் ஏற்றுமதி 1970-ஆம் ஆண்டில் பெருகியது.

10. பொது.—தமிழ் நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்துமாகச் சேர்ந்து ஆண்டொன்றுக்கு சுமார் ரூ. 12 கோடி அளவிற்கு உற்பத்தி செய்து விற்பனை செய்யும் பணியை மேற்கொள்வதன் மூலம் தங்களிடம் உறுப்பினர்களாக உள்ள நெசவாளர்களுக்குச் சிறந்த உதவியை அளிக்கின்றன. அரசினல் நிறைவேற்றப்பட்ட பல்வேறு திட்டங்கள், மூன்றும் திட்டத்தில் அளிக்கப்பட்ட நிதி உதவி, 1966-67 முதல் 1970-71 வரை உள்ள ஆண்டுத் திட்டங்களில் செய்யப்பட்ட செலவு 1971–72 ஆம் ஆண்டுக்காகச் செய்யப்பட்ட நிதி ஒதுக்கம் ஆகியவை குறித்த விவரங்கள் இந்த ஆய்வுரையின் I- வது இணைப்பில் தரப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறையின்கீழ் கைத்தறித் தொழில் அடைந்துள்ள முன்னேற்றத்திற்குத் தொடர்பான புள்ளி விவரங்கள் II- ஆவது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. கூட்டுறவு நூற்பு ஆலைகள் 1970-ஆம் காலண்டர் ஆண்டில் ஆற்றிய பணி குறித்த விவரங்களை III-வது இணைப்பில் காணலாம். நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பல்வேறு திட்டங்களின்கீழ் அரசு அளித்துள்ள கணிசமான நிதி உதவி அச் சங்கங்களின் வளர்ச்சிக்கு உதவியது.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஆலோசனை நல்குவதன் மூலமும் அவற்றை மேற்பார்வையிடுவதன் மூலமும் அச் சங்கங்களுக்கு வலுவூட்டும் நோக்கத்தோடு மாவட்ட நிலையில் நிர்வாக அமைப்பைச் சீரமைப்பது அவசியமென அரசு கருதியது. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகப் பொறுப்பைக் கவனித்து வந்த துணைப் பதிவாளர்கள் (பொது அலுவல்) பிற வகையைச் சேர்ந்த பல சங்கங்களையும் கவனிக்க வேண்டியிருந்ததால் அவர்கள் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகத்தில் போதிய கவனம் செலுத்த இயலாது எனக் கருதப்பட்டது. எனவே நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகத்தைத் தனிப்பட்ட முறையில் கவனித்து வருவதற்காகத் தனித் துணைப் பதிவாளர்கள் (கைத்தறி) என்கிற 5 பதவிகளை ஏற்படுத்தவும், அவசியமான பணியாளர்களை நியமிக்கவும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. சேலம் வட்ட அலுவலகம் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றது. இவ்வாறாகத் தற்போது தனித் துணைப் பதிவாளர் (கைத்தறி) வட்டங்கள் ஆறு செயல்பட்டு வருகின்றன. இந்த வட்டங்கள் ஒவ்வொன்றும் ஒன்று முதல் மூன்று மாவட்டங்களைக் கவனித்து வருகின்றன. 1969 அக்டோபர் திங்கள் முதற்கொண்டு செயலுக்கு வந்துள்ள இந்த அமைப்பு நெசவாளர் தொடக்கச் சங்கங்களைப் பொருளாதார முறையில் தனித்து இயங்கக் கூடிய பிரிவுகளாக விரைவில் சீரமைப்பதற்கும், விரைவில் விற்பனை ஆகக் கூடிய கைத்தறித் துணிகளின் உற்பத்திக்கு ஊக்கமளிக்கவும்



1971 ஜூலை 20]

சங்கங்கள் செயல்படும் முறை நெசவாளர் நலன் ஆகியவற்றில் பொதுவான முன்னேற்றம் காணவும் உதவுகின்றது.

**1970-ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் உள்ள கூட்டுறவு நூற்பாலைகள்.**—தமிழ் நாட்டில் இப்போது 12 கூட்டுறவு நூற்பாலைகள் செயல்படுகின்றன. இந்த ஆய்வுரை ஆண்டில், இந்த ஆலைகள் அனைத்தும் தொடர்ந்து செயல்பட்டன.

2. 1970-ஆம் காலண்டர் ஆண்டில் இந்த 12 கூட்டுறவு நூற்பாலைகளும் செயல்பட்டதில் கிட்டிய பலன்கள் இணைக்கப்பட்ட புள்ளி விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன. மொத்தம் 182,808 கதிர்கள் நிறுவப்பட்ட திறனுடைய இந்த ஆலைகள், 20-ஆம் எண் நூல் முதல் 100-ஆம் எண் நூல் வரை பருத்தி நூலை நூற்கின்றன. இந்த ஆண்டில் கூட்டுறவு நூற்பு ஆலைகள் அனைத்தும் வார வேலை நாட்களை ஏழு நாட்களாக அதிகப்படுத்தியுள்ளன. சென்ற இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது 1970-ஆம் ஆண்டில் இந்த ஆலைகளின் உற்பத்தி அளவு கணிசமான அளவிற்குப் பெருகியுள்ளதைக் கீழே காணலாம் :—

| | 1968. | 1969. | 1970 |
|---|---|---|---|
| உற்பத்தி (லட்சம் கிலோ கிராமில்). | 88·25 | 105·70 | 118·10 |
| விற்பனை (ரூபாய் இலட்சத்தில்). | 743·06 | 899·36 | 1,146·17 |

3. இக் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூலதனத்தில் அரசு மொத்தம் ரூ. 184.12 லட்சம் மூலதன முதலீடு செய்துள்ளது. இந்தச் சங்கங்கள் தங்களின் நிதிப் பற்றாக்குறையைப் போக்கிக் கொள்ளும் வகையில், ரூ. 52.07 லட்சம் வரை கூட்டுறவு நூற்பு ஆலைகளுக்கு நேரடிக் கடன்களுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. மேலும், இவை, கடன் உதவி நிறுவனங்களிடமிருந்து ரூ. 618.98 லட்சம் வரையில் வாங்கிய தவணைக் கடன் நடைமுறை மூலதனக் கடன் முதலியவற்றைக் கூட்டுறவு நூற்பாலைகள் திருப்பிச் செலுத்துவதற்காக அரசு உத்தரவாதமளித்துள்ளது. மேலும், தொகைகளைப் பின்னர் செலுத்தும் அடிப்படையில் இந்த ஆலைகளால் வெளிநாடுகளிலிருந்தும் உள்நாட்டில் பொருள்களை வழங்குபவர்களிடமிருந்தும் பின்னர் செலுத்தும் அடிப்படையில் முதன்மை இயந்திரங்கள் வாங்கிய வகையில், இந்த ஆலைகள் ரூ. 30.69 லட்சம் வரையில் தவறாமல் கொடுக்கப்படுமென அரசு உறுதி மொழி அளித்துள்ளது.

4. ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பாலையும் திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பாலையும் கணிசமான அளவிற்குத் தங்கள் பணியை விரிவுபடுத்தும் திட்டமொன்றைத் தயாரித்தன. திட்டப்பணி ஏறத்தாழ நிறைவேறும் நிலையிலுள்ளது. இந்த ஆலைகள் விரிவுபடுத்தும் திட்டத்தை இரண்டு நோக்கங்களுடன் மேற்கொண்டன. வெளிநாடுகளிலிருந்து தாயகம் திரும்பும் இந்திய அகதிகளுக்கு வேலை வாய்ப்பளிப்பதற்கும், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கும் நூலின் அளவை அதிகரிப்பதற்கும் இந்தத் திட்டத்தை

இவை மேற்கொண்டன. ஸ்ரீவில்லிப்புத்தூர் கூட்டுறவு நூற்பாலையைப் பொறுத்தவரையில் 11 வட்டச் சட்டங்கள் (Ring frames) நிறுவுவதைத் தவிர இயந்திரங்களை நிறுவும் பணி முடிக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டங்களுக்காக சில பகுதிகள் பொருத்தப்பட்டு வருகின்றன. இந்த ஆலை தனது விரிவுத் திட்டங்களை முடித்து 1971-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் நாளில் 25,088 கதிர்கள் அனைத்தையும் இயக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. விரிவுத் திட்டத்தின் கீழ் 206 அகதிகளுக்கு ஆலைகளில் பயிற்சியளிக்கப்பட்டு அதில் 130 பேர் முறையான பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். மேலும், 24 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர். அவர்கள் பயிற்சி முடித்த பின்னர் அவர்களும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவர். எல்லா வகையிலும் இந்த விரிவுத் திட்டம் முடிவுறும் சமயத்தில் இந்த 200 அகதிகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்க இயலும். மற்றோர் ஆலையாகிய திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பாலையும்கூட 15 வட்டச் சட்டங்கள் நிறுவுவது தவிர (Ring frames) இயந்திரங்கள் அனைத்தையும் நிறுவும் பணி முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய வட்டச் சட்டங்களுக்குத் தேவையான பாகங்களை வாங்குவதற்கும் அவைகளை நிறுவுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த ஆலை அதன் விரிவுத் திட்டம் முடிவு பெற்றவுடன் 200 அகதிகளுக்கு வேலை வாய்ப்பளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

5. ஏனைய ஆலைகளுக்கும் கூட நிறுவனத் திறனை அதிகரிப்பதற்காகத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. எல்லாக் கூட்டுறவு நூற்பாலைகளும் 5 ஆண்டுகளுக்கும் மேலாகச் செயல்படுவதால், பஞ்சாலைத் தொழிலில் அண்மையில் செய்யப்பட்ட தொழில் நுட்ப மேம்பாடுகளைக் கருத்தில் கொண்டு தற்பொழுதுள்ள இயந்திரங்களை புதுப்பிப்பதற்கும், நவீனப்படுத்துவதற்குமான திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. இந்த நவீனப்படுத்தும் புதுப்பிக்கும் திட்டம் தனி ஆலைகளால் முந்துரிமையடிப்படையில் படிப்படியாக நிறைவேற்றும் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்படுகிறது. பொருள் வாங்குபவர்களின் விருப்ப நோக்கில் மாறுதல் ஏற்பட்டதன் காரணத்தால் இந்த ஆலைகளில் உற்பத்தியாகும் பொருளின் தன்மையை மாற்ற வேண்டியதும் அவசியமாகிறது. எனவே, "இரட்டிப்புப் பொறி", "கூம்புப் பொறி" ஆகிய இயந்திரங்களை ஆலைகளில் பல நிறுவி வட்ட நூற்சுருள் தயாரிப்பதுடன் இரட்டிப்பு நூலும் கூம்பு நூலும் தயாரிக்கின்றன.

6. 1970-ஆம் ஆண்டு இறுதியில், குறிப்பாக மட்டரக நூல் தயாரிக்கும் கூட்டுறவு நூற்பாலைகள், உள்ளூர், வடக்கத்திய பஞ்சைப் பெறுவதில் சில இடர்பாடுகளுக்குட்பட்டன. இந்த ஆலைகளின் இடர்பாடுகளைப் போக்க வெளிநாட்டு பஞ்சினைக் கூடுதல் அளவில் பெற்று ஆலைகளுக்குப் போதுமான அளவு பஞ்சு கிடைக்கச் செய்ய அரசு பல நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டது. பம்பாயிலுள்ள மகாராஷ்டிர மாநில கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு மூலமாக, வடக்கத்திய பஞ்சினை மலிவு



விலையில் ஆலைகள் வாங்க முடிந்தது. இந்த நடவடிக்கைகளின் பயனாகக் கூட்டுறவுத் துறையிலுள்ள ஆலைகள் தங்களது உற்பத்தித் திட்டத்தை எந்த விதத் தடையுமில்லாமல் தொடர்ந்து நடத்த முடிந்தது.

7. 1970-ஆம் ஆண்டில் கீழ்க்காணும் கூட்டுறவு நூற்பாலைகள், தாங்கள் உற்பத்தி செய்த நூலை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முன்வந்தன. அத்தகைய ஆலைகளின் பெயர்கள், ஒவ்வொரு ஆலையும் ஏற்றுமதி செய்ய முன் வந்த நூலின் அளவு ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| தொடர் எண்ணும், கூட்டுறவு நூற்பு ஆலையின் பெயரும். | ஏற்றுமதி செய்யப்பட்ட பேல்களின் எண்ணிக்கை. | ஏற்றுமதியான நாடுகள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பு ஆலை .. | 998 | பர்மா, மேற்கு ஐரோப்பா. |
| 2 கோயம்புத்தூர் மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை. | 1,000 | பர்மா. |
| 3 கன்னியாகுமரி மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை. | 1,275 | பர்மா. |
| 4 வட ஆர்க்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை. | 825 | பர்மா. |
| 5 திருச்சிராப்பள்ளி மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை. | 950 | பர்மா. |
| 6 காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கூட்டுறவு நூற்பு ஆலை. | 250 | பர்மா. |

8. பொதுவாகப் பார்க்குமிடத்து கூட்டுறவு நூற்பு ஆலைகள் அனைத்திலும் ஆண்டு முழுவதும் தொழிலாளர் தகராறு எதுவுமின்றி நல்லுறவுடன் நற்பணி புரிந்தனர்.

# இணைப்பு 5-அ

## வேலைத் திட்டங்களின் முன்னேற்றம் (நிதி)

(ரூபாய் இலட்சத்தில்.)

| தொடர் எண். | திட்டத்தின் பெயர். | மூன்றாவது திட்ட செலவு. | நான்காவது திட்ட நிதி ஒதுக்கம். | 1966–67 ஆண்டு கணக்குகள். | 1967–68 ஆண்டு கணக்குகள். | 1968–69 ஆண்டு கணக்குகள். | 1969–70 ஆண்டு கணக்குகள். | 1970–71 ஆண்டு கணக்குகள். | 1971–72 ஆண்டுக்கான திட்டம். | குறிப்புரைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| 1 | பங்கு மூலதன உதவி—நெசவாளர்களைக் கூட்டுறவு அமைப்பில் சேர்த்துக் கொள்வது. | 38·23 | 30·00 | 4·16 | 2·16 | 2.99 | 2·00 | 5·80 | 6·00 | .. |
| 2 | தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூலதனத்தில் மாநில அரசின் பங்கு. | .. | 25·00 | .. | 4·00 | 5·00 | 9·00 | 8·00 | 10·00 | .. |
| 3 | தொழில் மூலதனக் கடனுக்கு வட்டி வகையில் வழங்கப்படும் உதவித் தொகை. | 33·69 | 65·00 | 10·50 | 10·62 | 9·00 | 11·00 | 11·52 | 13·00 | .. |
| 4 | ஆராய்ச்சியும் தொழில் நுட்பமும். | 67·16 | 68·00 | 6·03 | 2·22 | 2·65 | 2·65 | 6·62 | 10·00 | .. |
| 5 | தள்ளுபடி .. .. .. | 3,14·52 | 3,25·00 | 64·00 | 64.00 | 84·65 | 90·00 | 1,10·00 | 1,10·00 | .. |
| 6 | விற்பனையும் விளம்பரமும் .. | 30·37 | 61·75 | 7·11 | 7·45 | 6·50 | 6·95 | 5.39 | 7·00 | .. |
| 7 | கூட்டுறவு நூற்பு ஆலைகள் .. | 1,19·81 | 1,35·00 | 70·00 | 10·20 | 10·00 | 5·34 | 15·34 | .. | .. |
| 8 | நெசவாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள். | 11·93 | 9·75 | 0·04 | 0·11 | .. | 0·20 | 1.80 | 1·30 | .. |
| 9 | வீட்டு வசதி .. .. .. | 56·13 | 27·00 | 1·22 | 0·08 | .. | .. | .. | .. | .. |
| 10 | உதவித்தொகை—சிக்கன நிதி. | 5·16 | 15·00 | 1·80 | 1·80 | 1·89 | 2·00 | 2·05 | 2·75 | .. |
| 11 | பட்டு—செயற்கைப் பட்டுத் தொழில். | 8·52 | 13·25 | 9·13 | 4·19 | 0·54 | 0·70 | 0·86 | 0·74 | .. |
| 12 | பயிற்சி .. .. .. | 3·97 | 11·25 | 1·41 | 1·57 | 1·45 | 1·27 | 4·45 | 5·32 | .. |
| 13 | நிர்வாகப் பணியாளர்களுக்கான உதவித் தொகை. | 3·10 | 5·00 | 0·50 | 0·49 | 0.39 | 0·50 | 0·89 | 1·00 | .. |
| 14 | தலைமைச் சங்கத்திற்குப் பங்கு மூலதனம். | 12·00 | 12·00 | .. | 2·70 | 0·80 | 1·00 | .. | .. | .. |
| 15 | நிர்வாகச் செலவுகள் .. | 23·50 | 26·00 | 5·46 | 3·96 | 3·60 | 3·60 | 5,58 | 4·00 | .. |
| 16 | நெசவாளர்களின் கடன் சுமையைத் தீர்ப்பதற்கான கடன் உதவி. | 5·11 | .. | 0·96 | .. | .. | .. | .. | .. | .. |
| 7 | கைத்தறி நிதி உதவிக் கழகம். | 12·60 | 5·00 | .. | .. | .. | 7·40 | 5·00 | 5·00 | .. |
| 18 | புள்ளி விவரங்களைத் திரட்டுதல். | 4·39 | 5·00 | 1·03 | 1·16 | 1·23 | 1·26 | 1·26 | 1·[illegible]0 | .. |

## இணைப்பு 5-ஆ—தொடர்ச்சி.

### வேலைத் திட்டங்களின் முன்னேற்றம் (நிதி)—தொடர்ச்சி.

(ரூபாய் லட்சத்தில்.)

| தொடர் எண். | திட்டத்தின் பெயர். | மூன்றாவது திட்ட செலவு. | நான்காவது திட்ட நிதி ஒதுக்கம். | 1966-67 ஆண்டு கணக்குகள். | 1967-68 ஆண்டு கணக்குகள். | 1968-69 ஆண்டு கணக்குகள். | 1969-70 ஆண்டு கணக்குகள். | 1970-71 ஆண்டு கணக்குகள். | 1971-72 ஆண்டு கணக்குகள். | குறிப்புரைகள். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| 19 | அரசு நெசவுப் பயிற்சி நிலையத்தின் ஆராய்ச்சிப் பிரிவு. | 0·06 | .. | .. | — | — | .. | .. | .. | .. |
| 20 | நடைமுதல் மூலதனக் கடன்கள் வழங்கிய வகையில் ஏற்பட்ட இழப்பிற்காக உதவித் தொகை. | 0·05 | 5·00 | 0·10 | 1·29 | — | 0·19 | 0·30 | 2·00 | .. |
| 21 | விசைத் தறிகள் .. .. | .. | 2,16·00 | .. | — | — | .. | 11·33 | 74·36 | .. |
| 22 | உதவித் தொகையுடன் கூடிய சிக்கன நிதிக் கணக்குக்கான பணியாளர்களை அமர்த்திக்கொள்வதுகுறித்த உதவித் தொகை. | .. | .. | .. | — | — | — | 0·12 | 0·12 | .. |
| 23 | மேற்பார்வை பணியாளர் குறித்த செலவில் 7/8 பாகம். | .. | .. | .. | — | — | — | 0·75 | 0·75 | .. |
| | மொத்தம் .. | 7,50·30 | 10,60·00 | 1,83·45 | 1,18·00 | 1,30·69 | 1.45·06 | 1,97·06 | 2,54·34 | .. |



## இணைப்பு 5-ஆ.

### வேலைத் திட்டங்களின் முன்னேற்றம்

ஆண்டுத் திட்ட சாதனை.

| தொடர் எண். | திட்டத்தின் பெயர். | இனமும் பிரிவும். | மூன்றாவது திட்ட சாதனை. | நான்காவது திட்டக் குறிக்கோள் அளவு. | 1966-67. | 1967-68. | 1968-69. | 1969-70. | 1970-71. | 1971-72-க்கான குறிக்கோள் அளவு. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| 1 | நெசவாளர்களைக் கூட்டுறவு அமைப்பில் சேர்த்துக் கொள்ளுதல். | கூட்டுறவு அமைப்பில் சேர்த்துக் கொள்ள வேண்டியுள்ள தறிகள். | 61,446 | 50,000 | 4,912 | 3.522 | 3,871 | 2,607 | 5,000 | 5,000 |
| 2 | ஆராய்ச்சியும், தொழில் நுட்பமும். | நவீன கருவிகள். | 2,19,392 | 1,50,000 | 22,402 | 6,719 | 8,354 | 8,355 | 5,542 | 8,570 |
| | | சிறிய சாயப் பட்டறைகள். | 112 | 150 | 2 | .. | 2 | 5 | .. | 3 |
| | | பெரிய சாயப் பட்டறைகள். | 1 | 5 | 1 | .. | .. | .. | .. | .. |
| | | பாவுஅமைத்து கஞ்சி போடும் இயந்திரம். | .. | 1 | .. | .. | .. | .. | .. | .. |

இணைப்பு 5-ஆ—தொடர்ச்சி.

வேலைத் திட்டங்களின் முன்னேற்றம்

| தொடர் எண். | திட்டத்தின் பெயர். | இனமும் பிரிவும். | ஆண்டுத் திட்ட சாதனை. மூன்றாவது திட்ட சாதனை. | நான்காவது திட்ட குறிக்கோள் அளவு. | 1966-67. | 1967-68. | 1968-69. | 1969-70. | 1970-71. | 1971-72-க்கான குறிக்கோள் அளவு. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| | | சரிகை இழை தயாரிப்புப் பிரிவு. | .. | 1 | .. | .. | .. | .. | .. | .. |
| | | மறைப்புப் படுதா அச்சிடும் (ஸ்கிரீன் பிரிண்டிங்) இயந்திரம் | .. | 1 | .. | .. | .. | .. | .. | .. |
| | | எவர்ஸெட் சுருக்கு நீக்கும் இயந்திரம். | .. | 1 | .. | .. | .. | .. | .. | .. |
| | | முறுக்கேற்றும் இயந்திரம். | . | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 3 | விற்பனையும், விளம்பரமும். | பிற மாநிலங்களில் விற்பனை நிலையங்கள். | 7 | 10 | 2 | .. | .. | .. | .. | 1 |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பட்டு கிடங்குகளும் விற்பனை நிலையங்களும் | 3 | 60 | .. | .. | .. | .. | .. | .. |
| | | ஆயத்த உடைத் தயாரிப்பு தொழிற்சாலை. | 1 | 1 | .. | .. | .. | .. | .. | .. |
| | | கிடங்குகள் .. | 1 | | | | | | | |
| | | ஏற்றுமதி செய்யத் தக்க துணிவகைகள் உற்பத்திக்கான திட்டம். | .. | 2<br>1 | .. | .. | .. | .. | .. | .. |
| 4 | நெசவாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள். | .... | .. | 1,000 தறிகள் | .. | .. | .. | 1 கூட்டுறவு சங்கம், 100 தறிகளும் 160 தறிகள் கூடுதலும். | 300 தறிகள் கொண்ட 33 கூட்டுறவுச் சங்கங்கள். | |
| 5 | வீட்டு வசதி .. .. | வீடுகள் .. .. | 1,181 | .. | .. | .. | .. | .. | .. | .. |
| | | இராமப் பகுதிகளில் வீட்டு மனைகள். | 1,000 | .. | .. | .. | .. | .. | .. | |
| | | நகரப் பகுதிகளிலும் நகரம் போன்ற பகுதிகளிலும் வீடுகள். | 500 | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 6 | பட்டு—செயற்கைப் பட்டு. | பட்டுத் தறிகள் .. | 1,102 | 2,500 | 300 | 300 | 288 | 260 | 300 | 300 |
| | | செயற்கைப் பட்டுத் தறிகள். | 100 | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 7 | பயிற்சி | துணி மாதிரி தயாரிப்புத் தொழிற்சாலை நெசவாளர்கள். | 821 | 2,000 | 380 | 400 | 377 | 353 | 2,160 | 2,160 |

இணைப்பு 5–ஆ—தொடர்ச்சி.

வேலைத் திட்டங்களின் முன்னேற்றம்.

| தொடர் எண். | திட்டத்தின் பெயர். | இனமும், பிரிவும். | மூன்றாவது திட்ட சாதனை. | நான்காவது திட்டக் குறிக்கோள் அளவு. | ஆண்டுத் திட்ட சாதனை. 1966–67. | 1967–68. | 1968–69. | 1969–70. | 1970–71. | 1971–72க்கான குறிக்கோள் அளவு. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| 7 | பயிற்சி—தொடர்ச்சி. | கணக்கு முதலியன பார்க்கும் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள். | 495 | 1,000 | 155 | 229 | 162 | 103 | 171 | 200 |
| | | சாயக்காரர்கள் .. | 49 | 100 | 20 | 20 | 17 | 14 | 17 | 20 |
| 8 | நிர்வாகப் பணியாளர்க்கான உதவித் தொகை. | கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை. | 351 | 500 | 64 | 50 | 54 | 56 | 102 | 100 |
| 9 | நெசவாளர்களின் கடன் சுமையைத் தீர்ப்பதற்கான கடன் உதவி. | நெசவாளர்கள் .. | 3,118 | 7,500 | 723 | .. | .. | .. | .. | .. |
| 10 | விசைத் தறிகள் | தறிகளின் எண்ணிக்கை | .. | .. | .. | .. | .. | .. | 500 | 2,000 |



இணைப்பு 5-இ.

தமிழ் நாட்டில் கைத்தறித் தொழில் குறித்த புள்ளி விவரங்கள்.

| தொடர் எண். | இனங்கள். | முதலாம் திட்டத்தின் முடிவில் (1956 மார்ச்) உள்ள நிலை. | 1966 ஜூன் 30-ம் நாள் முடிவில் உள்ள நிலை. | 1969 ஜூன் 30-ம் நாள் முடிவில் உள்ள நிலை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | கூட்டுறவுத் துறையில். | | | |
| 1 | நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை— | | | |
| | (a) பருத்தி .. | 842 | 1,049 | 1,028 |
| | (b) பட்டு .. .. | 5 | 20 | 19 |
| | (c) செயற்கைப்பட்டு. | 1 | 6 | 3 |
| 2 | தறிகளின் எண்ணிக்கை. (லட்சத்தில்). | 1·57 | 2·28 | 1·80 |
| | | (ரூபாய் லட்சத்தில்) | | |
| 3 | பங்கு முலதனம் .. | 79·12 | 1,72·21 | 1,88·49 |
| 4 | சேம நிதி .. .. | 79·77 | 1,77·18 | 1,55·44 |
| 5 | ஏனைய இருப்பு நிதிகள். | 30·22 | 82·47 | 26·84 |
| 6 | ஆண்டொன்றுக்கு வழங்கப்படும் ஊதியம். | 1,37·88 | 3,84·17 | 3,59·63 |
| 7 | வசூலிக்கப்பட்ட சிக்கன நிதி. | 8·29 | 32·60 | 59.44 |
| 8 | நடைமுதல் மூலதனம். | 2,77·86 | 7,96·68 | 6,36·20 |
| 9 | உதவித் தொகை— சிக்கன நிதித்திட்டம்— | | | |
| | (a) பங்கு கொள்ளும் சங்கங்களின் எண்ணிக்கை. | .. | 153 | 133 |
| | (b) உறுப்பினர்களின் எண்ணிக்கை. | .. | 9,400 | 7,063 |
| | (c) நிதியிலுள்ள மொத்த தொகை (ரூபாய் லட்சத்தில்). | .. | 18·80 | 32·83 |
| | (d) [9 (e)] மொத்த நிதியில் அரசு வழங்கிய பங்கு (ரூபாய் லட்சத்தில்). | .. | 6·15 | 10·71 |

## இணைப்பு 5-இ—தொடர்ச்சி.

| தொடர் எண். | இனங்கள். | முதலாம் திட்டத்தின் முடிவில் (1956 மார்ச்) உள்ள நிலை. | 1966 ஜூன் 30-ம் நாள் முடிவில் உள்ள நிலை. | 1969 ஜூன் 30-ம் நாள் முடிவில் உள்ள நிலை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 10 | உற்பத்தி (ஆரம்ப நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்)— | | | |
| | (a) அளவு (கெஜம் பத்து லட்சத்தில்). | 74·34 | 102·00 | .77·72 |
| | (b) மதிப்பு (ரூபாய் கோடியில்). | 8·00 | 13·02 | 11·71 |
| 11 | விற்பனைகள் (ரூபாய் கோடியில்). | 5·91 | 13·03 | 11·16 |
| 12 | பெரிய சாயப் பட்டறைகள். | .. | 4 | 4 |
| 13 | சிறிய சாயப் பட்டறைகள். | .. | 143 | 143 |
| 14 | நெசவாளர் வீட்டு வசதித் திட்டம்— | | | |
| | (a) காலனிகளின் எண்ணிக்கை. | 2 | 36 | 36 |
| | (b) வீடுகளின் எண்ணிக்கை. | 65 | 2,683 | 2683 |
| | (c) நிதி முதலீடு (ரூபாய் லட்சத்தில்). | 1·08 | 1,27·65 | 1,27 65 |
| 15 | நெசவாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்— | | | |
| | சங்கங்களின் எண்ணிக்கை. | .. | 27 | 22 |
| 16 | மாநிலக் கைத்தறிச் சங்கம்— | | | |
| | (a) உறுப்பினர்கள். | 999 | 1,083 | 1,264 |
| | (b) பங்கு மூலதனம். (ரூபாய் லட்சத்தில்) | 6·14 | 36·25 | 42·27 |
| | (c) துணி கொள்முதல் (ரூபாய் லட்சத்தில்.) | 1,36·21 | 3,77·40 | 4,02·76 |
| | (d) துணி விற்பனை (ரூபாய் லட்சத்தில்·) | 1,40·16 | 3,83·22 | 3,98·74 |
| | (e) நூல் கொள்முதல் (பேல்களின் எண்ணிக்கை). | 10,329 | 25·225 | 26,600 |
| | (f) நூல் விற்பனை (பேல்களின் எண்ணிக்கை). | 10,671 | 27·504 | 25,909 |



## இணைப்பு 5-(இ)—தொடர்ச்சி.

| தொடர் எண். | இனங்கள். | முதலாம் திட்டத்தின் முடிவில் (1956 மார்ச்) உள்ள நிலை. | 1966 ஜூன் 30-ம் நாள் முடிவில் உள்ள நிலை. | 1969 ஜூன் 30-ம் நாள் முடிவில் உள்ள நிலை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 16 | (g) சாயப் பொருள்கள் விற்பனை (ரூபாய் லட்சத்தில்). | .. | 33·68 | 73·76 |
| | (h) கச்சாப் பட்டு விற்பனை (ரூபாய் லட்சத்தில்). | .. | 1·13 | .. |
| | (i) சரிகை விற்பனை (ரூபாய் லட்சத்தில்). | .. | 0·11 | .. |
| | (j) செயற்கைப் பட்டு விற்பனை (ரூபாய் லட்சத்தில்). | .. | 5·12 | 1·41 |
| | (k) விற்பனைப் பிரிவுகளின் எண்ணிக்கை | | | |
| | மாநிலத்தில் .. | 258 | 236 | 252 |
| | மாநிலத்திற்கு வெளியே. | 23 | 110 | 92 |
| | (l) சேமநிதி .. (ரூபாய் லட்சத்தில்). | 5·15 | 11·76 | 12·17 |
| | (m) நடைமுதல் மூலதனம் (ரூபாய் லட்சத்தில்). | 92·91 | 1,61·83 | 2,17·22 |
| | (n) சங்கத்தின் மூலதனத்தில் அரசின் பங்கு (ரூபாய் லட்சத்தில்). | .. | 18 | 18 |
| | (o) சங்கத்தின் ஏற்றுமதி. | .. | 32,329 | .. |
| 17 | கூட்டுறவு நூற்பு ஆலைகள்— | | | |
| | (a) மொத்த நூற்பு கதிர்கள். | .. | 1,64,360 | 1,82,808 (31–12–1970) |
| | (b) ஆண்டு உற்பத்தித் திறன் (பேல்கள்) | | 66,000 | 66,000 |
| | (c) ஆலைகளுக்கான மொத்த மூலதனச் செலவு (ரூபாய் கோடியில்). | .. | 9 | 9 |
| 18 | தமிழ்நாடு கைத்தறி நிதிக் கழகம் கூட்டுறவு அமைப்பில் சேராத நெசவாளர்க்ளுக்கு வழங்கிய கடன்கள் (ரூபாய் லட்சத்தில்). | .. | 217 | 140·09 (1970-ல்) |

## இணைப்பு 5-ஏ.

| தொடர் எண். (1) | நூற்பாலையின் பெயர். (2) | உரிமத் திறனளவு (நூற்புக் கதிர்கள்). (3) | அமைப்புத் திறனளவு (நூற்புக் கதிர்கள்). (4) | 1970-ம் ஆண்டில் சராசரியாக ஒவ்வொரு நாளுக்கும் ஒவ்வொரு முறைக்கும் இயங்கும் நூற்புக் கதிர்களின் எண்ணிக்கை. (5) | 1970-ம் ஆண்டில் வேலை செய்த மொத்த நாட்கள். (6) | 1970-ம் ஆண்டில் உற்பத்தி செய்த மொத்த நூல் அளவு (கிலோவில்) (7) | 1970-ம் ஆண்டில் விற்பனை செய்த மொத்த நூல் அளவு (கிலோவில்). (8) | 1970-ம் ஆண்டில் விற்பனை செய்த நூல் மதிப்பு (ரூபாய் லட்சத்தில்) (9) | குறிப்புகள். (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தென் இந்திய கூட்டுறவு நூற்பாலைகள்— | | | | | | | | |
| | "ஏ" பிரிவு .. .. | 17,600 | 17,600 | 16,349 | 355 | 1,396·595 | 1,410,671 | 119·38 | .. |
| | "பி" பிரிவு .. .. | 12,096 | 12,096 | 11,740 | 333 | 352,700 | 347,020 | 57·24 | .. |
| 2 | திருவல்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பாலைகள். | 25,088 | 19,264 | 15,101 | 337 | 789,537 | 776,263 | 74·96 | .. |
| 3 | திருசெந்தூர் கூட்டுறவு நூற்பாலைகள். | 25,200 | 18,800 | 15,508 | 343 | 923,242 | 929,456 | 90·59 | .. |
| 4 | சேலம் கூட்டுறவு நூற்பாலைகள். | 14,080 | 14,080 | 13,684 | 357 | 478,273 | 472,307 | 72·93 | .. |
| 5 | மதுரை மாவட்ட கூட்டுறவு நூற்பாலைகள். | 13,680 | 12,420 | 11,615 | 354 | 1,449,262 | 1,532,139 | 119·02 | .. |
| 6 | கோயம்புத்தூர் மாவட்ட கூட்டுறவு நூற்பாலைகள். | 12,420 | 12,420 | 10,864 | 356 | 1,566,131 | 1,557,500 | 122·34 | .. |
| 7 | திருச்சிராப்பள்ளி மாவட்ட கூட்டுறவு நூற்பாலைகள். | 12,000 | 12,000 | 11,182 | 351 | 1,468,494 | 1,565,997 | 122·29 | .. |
| 8 | கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலைகள். | 12,000 | 12,000 | 10,812 | 323 | 1,504,935 | 1,455,141 | 109·07 | .. |
| 9 | காஞ்சீபுரம் கூட்டுறவு நூற்பாலைகள். | 13,680 | 13,680 | 12,910 | 352 | 537,826 | 554,962 | 64·33 | .. |
| 10 | தென் ஆர்க்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பாலை. | 12,096 | 12,096 | 10,535 | 346 | 372,189 | 372,644 | 50·41 | .. |
| 11 | வட ஆர்க்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பாலை. | 13,824 | 13,824 | 13,342 | 356 | 611,965 | 635,291 | 80·25 | .. |
| 12 | தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை. | 25,000 | 12,528 | 11,598 | 356 | 358,391 | 365,412 | 63·36 | .. |
| | மொத்தம் .. | 208,764 | 182,808 | 165,240 | .. | 11,809,540 | 11,974,803 | 1,146·17 | .. |

## இணைப்பு 6.

[301-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### கொள்கை விளக்கக் குறிப்பு.

### மானியக் கோரிக்கை எண் 20: தொழில்கள் கிராமத் தொழில்கள்.

### மானியக் கோரிக்கை எண் 22: கதர்த் தொழில்கள்.

#### கதர்.

கிராமங்களில் வேலை வாய்ப்பற்றோருக்கும், போதிய வேலையற்றோருக்கும் கதர்-கிராமத் தொழில்கள் பெருமளவில் வேலை வாய்ப்பு அளிக்க வகை செய்வதால், கதர்-கிராமத் தொழில்கள் வளர்ச்சியில் இவ்வரசு மிக்க ஆர்வம் கொண்டுள்ளது.

2. 1969-70-ஆம் ஆண்டில், 20 பெரிய நிலையங்கள், 116 துணை நிலையங்கள், 63 கிராம நூற்பு நிலையங்கள், நூலும் கதர்த் துணியும் உற்பத்தி செய்து வந்தன. வேலைக்கமர்த்தப்பட்ட நூற்பவர்களின் எண்ணிக்கை, உற்பத்தி செய்யப்பட்ட நூல், அவர்கள் ஈட்டிய ஊதியம் ஆகியவை பற்றிய விவரம் கீழ்க்காணும் விவர அட்டவணையிலிருந்து தெரியவரும்.

| | நூற்பவர்கள் எண்ணிக்கை. | உற்பத்தி செய்யப்பட்ட நூல். | கொடுக்கப்பட்ட ஊதியம். |
|---|---|---|---|
| | | (ரூபாய் லட்சத்தில்.) | |
| 1. கிசான் நூல் .. .. | 67,198 | 158·54 | 55·49 |
| 2. அம்பர் நூல் .. ... | 10,392 | 96·11 | 9·61 |
| 3. டெக்ஸ் டூல் நூல் .. ... | 1,660 | 53·03 | 5·30 |
| மொத்தம் .. | 79,250 | 307·68 | 70·40 |

3. நூற்பவர்கள் 1970-71-ல் ஈட்டிய ஊதியம் ரூ. 59.40 லட்சம் என்றும் 1971-72-ல் ரூ. 61.00 லட்சம் ஊதியம் ஈட்டக்கூடும் என்றும் மதிப்பிடப்படுகிறது.

4. அன்றியும், சற்றேறக்குறைய 3,972 நெசவாளர்கள் வேலையில் அமர்த்தப்பட்டுள்ளனர். அவர்கள் 1969-70, 1970-71-ஆம் ஆண்டுகளில் ஈட்டிய ஊதியம் முறையே ரூ. 48.52 லட்சமும் ரூ. 58.75 லட்சமும் ஆகும். 1971-72-இல் ரூ. 61.00 லட்சம் அவர்கள் ஊதியம் ஈட்டக் கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதைப் போலவே, கிராமத் தொழில்களின் கீழ் 2.7 லட்சம் கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. 1969-70-ல் ரூ. 287.17 லட்சம் ஊதியமாக வழங்கப்பட்டது. இத் தொழிலில் 1970-71-ல் 3.13 லட்சம் பேருக்கும் 1971-72-ல் 3.24 லட்சம் பேருக்கும் வேலை வாய்ப்பு கிட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.





5. கதர் விற்பனைக்குத் தடையாக உள்ளது அதன் அதிக விலை. இதனைக் குறைக்கும் நோக்கத்துடன், வாரியம், சிட்டம் ஒன்றுக்கு 50 காசு செலவில் வாலாயமான பழைய கை இராட்டைகளில் நூல் உற்பத்தி செய்யப்படுவதைப் படிப்படியாகக் குறைத்தும் அதற்கு மாறாக மேம்பாடுற்ற அம்பர், டெக்ஸ்டூல் இராட்டைகளில் சிட்டம் ஒன்றுக்கு 35 காசு செலவில் நூல் உற்பத்தி செய்யப்படுவதை அதிகரித்தும் வருகிறது. இதனால் நூற்பவர்களின் ஊதியமும் கணிசமான அளவுக்குக் கூடுதல் ஆகும்.

6. இத் திட்டத்திற்குப் பொறுப்பு வகிக்கும் தமிழ் நாடு கதர்-கிராமத் தொழில் வாரியம் 3,107 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்தது 1969-70-ல் பணியாளர் குறித்த செலவு, "கதர் என்பதன் கீழ் ரூ. 61.06 லட்சமும் கிராமத் தொழில்களின் கீழ் ரூ. 15.18 லட்சமும் ஆயிற்று. இத் திட்டங்கள் கதர்-கிராமத் தொழில் ஆணைக் குழுவின் உதவியைக் கொண்டே பெரும்பாலும் நிறைவேற்றப்படுகின்றன.

7. 1970-71-ல் கதருக்காக ரூ. 13.47 லட்சமும் கிராமத் தொழில்களுக்காக ரூ. 12.14 லட்சமும் மட்டுமே மாநில அரசு மானியமாக வழங்குகிறது. 1971-72-ல் கொடுக்கப்படும் இந்த மானியத் தொகை கதருக்காக ரூ. 23.66 லட்சமும் கிராமத் தொழில்களுக்காக ரூ. 17.78 லட்சமுமாக இருக்கும்.

8. இம் மாநிலத்தில் குறிப்பாக கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பின்மை பெருகி வருவதைத் தொடர்ந்து, கதர்-கிராமத் தொழில் வளர்ச்சி தனி முக்கியத்துவம் அடைந்துள்ளது. இத்திட்டங்களின் மூலம் மேலும் வேலைவாய்ப்பு ஏற்படுத்த வேண்டுமாயின், விற்பனையில், அதிலும் முக்கியமாகக் கதர் விற்பனையில் முயற்சிகளை முனையபாக்கவேண்டும். அரசு ஊக்கமுடன் அளிக்கும் உதவியைப் பெற்று வாரியம் கடந்த மூன்று ஆண்டுகளாக திட்டத்தின் இந்த நோக்கத்தினை நிறைவேற்ற நாட்டமுடன் பணியாற்றி வந்துள்ளதற்கு கீழ்க்காணும் புள்ளி விவரங்களே போதிய சான்றாகும்:—

#### கதர் விற்பனை

| 1969-70. | 1970-71. | 1971-72. மதிப்பீடு. |
|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்.) | |
| 283·58 | 306·70 | 325·00 |

மேற்சொன்ன புள்ளிவிவரங்களிலிருந்து விற்பனை சீராகப் பெருகி வந்துள்ளதைக் காணலாம். அண்ணல் காந்தி பிறந்த நாளாகிய அக்டோபர் 2-ம் நாள் முதற்கொண்டு 30 நாட்கள் கால அளவுக்கு ஒவ்வோர் ஆண்டிலும் இவ்வாணைக் குழு விற்பனையில்

[1971 ஜூலை 20

சிறப்புத் தள்ளுபடி அளித்து வருகிறது. இக்கால அளவில் தான் அதிக அளவில் விற்பனை நடைபெறுகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் விற்பனையில் காணப்படும் முன்னேற்றம் பின்வருமாறு :—

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 1966–67 .. .. .. | 1,46·97 |
| 1967–68 .. .. .. | 1,56.08 |
| 1968–69 .. .. .. | 1,76·48 |
| 1969–70 .. ... .. | 2,41·53 |
| 1970–71 .. .. .. | 2,63·67 |

9. கதர் கிராமத் தொழில் உற்பத்திப் பொருள்களின் விற்பனையை மேலும் பெருக்குவதற்காக, சென்னையில் குறளகத்திலும், திருச்சிராப்பள்ளியிலும் விற்பனைப் பெரு நிலையங்களை வாரியம் தொடங்கி வைத்துள்ளது. மற்றொரு விற்பனை பெரு நிலையம் இவ்வாண்டில் கோயம்புத்தூரில் தொடங்கப்பட்டுள்ளது. சென்னை மலைச் சாலையிலுள்ள விற்பனை நிலையத்தை விற்பனைப் பெரு நிலையமாக மாற்றக் கருதப்பட்டுள்ளது. இது போன்ற விற்பனைப் பெரு நிலையங்களை ஏற்படுத்துவதற்கு மதுரை, சேலம் ஆகிய இடங்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

10. திண்டுக்கல் வளர்ச்சி மாவட்டத்தில் மெத்தை தயாரிப்புப் பிரிவு ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.

11. கதர்த் தொழில் பெருவாரியான நூற்பாளர்களுக்கு வேலை வாய்ப்பளித்தபோதிலும், நூற்பாளர் உண்மையில் ஈட்டுகின்ற ஊதியம் குறைவு என்பது அடுத்த முக்கியமான கூறு ஆகும். கடந்த மூன்றாண்டுகளில் மேம்பாடுற்ற ராட்டைகளை இத்தொழிலில் புழக்கத்துக்குக் கொண்டுவர முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வந்துள்ளது. இதன் மூலம் நூற்பாளர்களுக்கு கூடுதல் ஊதியம் கிடைக்க வழி ஏற்பட்டுள்ளது.

12. யந்திர ஆலைகளும் கைத்தறிகளும் உற்பத்தி செய்யும், நிகரான துணிக்கு இருக்கும் அதே விலையில் கதர்த் துணியைச் சிக்கனச் செலவில் உற்பத்தி செய்யவும், கிராமப்புறமக்களை ஈர்க்கும் வகையில் ஊதியம் அளிக்க வகை செய்யவும் வேண்டி ஐந்து முன்னோடிப் பிரிவுகளைத் தொடங்கக் கருதப்பட்டுள்ளது. இப் பிரிவுகளில், 12 கதிர் நூற்பு சட்டங்கள் மூன்றினை இணைத்து அவற்றை மின் சக்தியினால் இயக்குவதன் மூலம் நூல் உற்பத்தி செய்யப்படும். மேலும், தயாரிப்பு முறைகளைச் சீர்ப்படுத்துவதால், வேலைக்கமர்த்தப்படுபவர்களின் எண்ணிக்கை குறைவதோடு யந்திர ஆலைகளில் உற்பத்தி செய்யப்படும் நூல் போன்ற அதே தரமுள்ள திறனுள்ள நூல் யந்திர ஆலை நூலுக்கான விலையிலேயே உற்பத்தி செய்யப்படுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நூல் மின் சக்தியினால் இயங்கும் நேப்பாள தறி மூலம் துணியாக நெய்யப்படும்.



1971 ஜூலை 20]

13. கதர் விற்பனையைத் தவிர, கதரை மக்கள் விரும்பிப் பயன்படுத்தச் செய்ய பிற நடவடிக்கைகளையும் வாரியம் எடுத்து வருகிறது. இப்போது பூ முதலானவை அச்சிடப்பெற்ற கதர் துணிகளையே எல்லோரும் விரும்பி வாங்குகின்றனர். இவ்வாறு அச்சிட்ட கதர்த் துணிகளின் விற்பனை ஆண்டுதோறும் பெருகி வருகிறது. இதைப் போலவே, பல்வகை மக்கள் விரும்பும் வெவ்வேறு ரகங்களில் ஆயத்த உடைகள் தயாரிக்கப்படுகின்றன. கதர்ப்பட்டு பிரபலமாகி வருகிறது. 1971-72-ல் ரூ. 60 லட்சம் பெறுமான கதர்ப் பட்டு உற்பத்தி செய்வதென குறிக்கோள் அளவு முடிவு செய்யப்பட்டுள்ளது.

14. நெசவாளர்கள் பயனுக்கென, சிக்கன நிதித் திட்டம் ஒன்றை ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. சந்தா விதம், நெசவாளர் ஈட்டும் ஊதியத்தில் 5 சத விதமாக இருக்கும். இதற்கு நிகரான உதவித் தொகையை வாரியம் அளிக்கும்.

15. 1969-71 ஆண்டுகளுக்கான உற்பத்தி விற்பனை பற்றிய விவரங்களும் 1971-72-ல் எதிர்ப்பார்க்கப்படும் உற்பத்தி, விற்பனை பற்றிய விவரங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

**உற்பத்தி—**

| | (ரூபாய லட்சத்தில்.) |
|---|---|
| 1969–70 .. .. .. | 2,07·47 |
| 1970–71 .. .. .. | 2,38 84 |
| 1971–72 .. .. . | 2,62·00 (மதிப்பிடப்பட்டது) |

விற்பனை—

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 1969–70 .. .. .. | 2,83.58 |
| 1970–71 .. .. .. | 3,06·70 |
| 1971–72 .. .. .. | 3,25·00 (மதிப்பிடப்பட்டது) |

16. கதர் என்பதன்கீழ் நிதி நிலை விவரம் கீழே சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது :—

| | 1969–70 கணக்குகள். | 1970–71 வரவு-செலவு திட்டமதிப்பீடு. | 1970–71 திருத்த மதிப்பீடு. | 1971–72 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் லட்சத்தில்.) | | |
| ரெவின்யூ கணக்கு செலவு. | 4,03·36 | 5,00·39 | 5,13·12 | 4,99·52 |
| வருவாய்— | | | | |
| துறை வாரியான வருவாய். | 2,51·80 | 4.04·91 | 3,96·03 | 4,25·05 |
| கதர்-கிராமத் தொழில்கள் ஆணைக் குழுவிடமிருந்து கிடைக்கும் மானியம். | 71·71 | 57·52 | 69·89 | 68·83 |

[1971 ஜூலை 20

17. பம்பாயிலுள்ள கதர்-கிராமத் தொழில்கள் ஆணைக் குழுவிடமிருந்து எதிர்பார்க்கப்படும் கடனுதவியும் மானிய உதவியும் பின் வருமாறு :—

| | 1969–70. கணக்குகள். | 1970–71. | 1971–72. |
|---|---|---|---|
| | | (ரூபாய் லட்சத்தில்.) | |
| மானியம்— | | | |
| தள்ளுபடித் தொகைகளும் உதவித் தொகைகளும். | 65·23 | 67·00 | 67·00 |
| பிற மானியங்கள் .. | 6·48 | 2·89 | 1·83 |
| கடன்— | | | |
| நடைமுதல் நிதி முன் பணம். | 0·60 | 27·81 | 30·44 |
| பிற கடன்கள் .. .. | 0·25 | 22·40 | 8·59. |

18. 1970-71 இறுதி நிலவரப்படி கதர்-கிராமத் தொழில் ஆணைக் குழுவிடமிருந்து கடனாகப் பெற்ற தொகை ரூ. 2,71.00 லட்சம்.

19. வாணிபத் துறை சாராத பணிகளில் ரெவின்யூக் கணக்கில் ஏற்படும் பற்றாக்குறையை ஈடுசெய்ய மட்டுமே அரசு மானியம் வழங்குகிறது. நிகரச் செலவு அடிப்படையில் மாநில அரசு கொடுக்கும் மானியம் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன :—

| | 1969–70 கணக்குகள். | 1970–71 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | 1970–71 திருத்த மதிப்பீடு. | 1971–72 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| ரெவின்யூ கணக்கு. | 4,03·36 | 5 00·39 | 5,13·12 | 4,99·52 |
| மாநில அரசு அளிக்கும் மானியம். | 16·62 | 10·00 | 13·47 | 23·66 |

20. அரசுப் பணியாளர்களுக்கு நிகராக கதர் வாரியப் பணியாளர்களின் சம்பள விகிதங்களையும் படி விகிதங்களையும் திருத்தியமைக்க இரண்டாவது சம்பள ஆணைக் குழு செய்த பரிந்துரைகளை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இதனால் பணியாளர் குறித்து ஏற்படும் கூடுதல் செலவையும் அரசு ஏற்றுள்ளது. 1971-72 திட்ட மதிப்பீட்டில் மானியத்தின்கீழ் கூடுதல் நிதி ஒதுக்கம் செய்யப் பட்டுள்ளதற்கு இதுவே காரணமாகும்.

## கிராமத் தொழில்கள்.

கிராம மக்களின் வறுமையைக் களையவும், உள்ளூரில் கிடைக்கும் மனித ஆற்றலையும் பொருள்களையும் பயன்படுத்துவதற்கும், சிறப்பாக கிராமப்புறத்தில் உள்ள மக்களின் தேவைகளுக்கேற்ப பொருள்களை வழங்கவும் கிராமத் தொழில்களுக்காகத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.



1971 ஜூலை 20]

2. கீழ்க்காணும் தொழில்கள் கிராமத் தொழில்களாக வகைப் படுத்தப்பட்டு, தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில்கள் வாரியத்தின் அதிகார வரம்புக்குள் வருகின்றன :—

1. பனைவெல்லம்.
2. நாட்டுச் செக்கு.
3. கையினால் நெல் குத்துதல்.
4. கிராமத் தோல் தொழில்.
5. கிராம மட்பாண்டத் தொழில்.
6. சுண்ணாம்பு.
7. தேனீ வளர்த்தல்.
8. கருமார் தொழில்.
9. தச்சு வேலை.
10. பழப்பாதுகாப்பும் பதனம்.
11. கையால் காகிதம் செய்தல்.
12. வெல்லமும் கண்டசாரியும் (மாவுச் சர்க்கரை).
13. குடிசைத் தொழில் முறையால் தயாரிக்கும் தீப்பெட்டி.
14. சோப்பும், உட்கொள்ளத் தகாத எண்ணெயும்.
15. நார்ப்பொருள்கள்.
16. மாட்டுச்சாணத்திலிருந்து தயாரிக்கப்படும் வாயு.
17. வீட்டுத் தேவைகளுக்கான அலுமினியப் பாத்திரங்கள்.
18. பிரம்பும் மூங்கிலும்.
19. அவலரக்கு தயாரித்தல்.
20. மருத்துவக் காரியங்களுக்காக வனத் தாவரங்களையும் வனப் பழங்களையும் சேகரித்தல்.
21. பீடி இலை தயாரித்தல்.
22. மரப்பிசின் தயாரித்தல்.

3. 1969-70, 1970-71, 1971-72 ஆண்டுகளில் கிராமத் தொழில் பொருள்களின் உற்பத்தி, விற்பனை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

உற்பத்தி—

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 1969-70 .. .. .. | 9,52·48 |
| 1970-71 .. .. .. | 6,37·24 |
| 1971-72 .. .. .. | 12,01·99 (மதிப்பிடப்பட்டது.) |

விற்பனை—

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 1969-70 .. .. .. | 10,27·08 |
| 1970-71 .. .. .. | 6,95·31 |
| 1971-72 .. .. .. | 13,35·08 (மதிப்பிடப்பட்டது.) |

[1971 ஜூலை 20

4. அரிசித் தவிட்டிலிருந்து எண்ணெய் எடுப்பதற்காக தமிழ் நாடு எண்ணெய்—எண்ணெய்த் துணைப் பொருள்கள் நிறுவனம் என்றழைக்கப்படும் கூட்டமைப்பு ஒன்று சென்னையில் 1970-ம் வருடம் டிசம்பர் மாதம் 3-ம் தேதி அன்று பதிவு செய்யப் பட்டுள்ளது. அரிசித் தவிட்டிலிருந்து எண்ணெய் எடுப்பதற்காக, மாநிலத்தில், எண்ணெய் எடுக்கும் ஆலைகள் மூன்றினை நிறுவக் கூட்டமைப்பு திட்டமிட்டுள்ளது.

5. பண்ணைகளில் கருமாற் தொழில், தச்சு வேலை. முதலிய வற்றின் வளர்ச்சியில் நவீன முறைகளைக் கொண்டுவரும் பொருட்டும் கிராமக் கை வினைஞர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் நோக்கத்துடனும் பண்ணைப் பணிகள் சங்கங்களை யும், கிராமத் தொழில்கள் கூட்டுறவுச் சங்கங்களையும் முடிந்த அளவு அதிகமாக அமைக்கக் கருதப்பட்டுள்ளது. வேளாண்மைத் தொழில்களிலும் கிராமத் தொழில்களிலும் பயன்படுத்தப்படும் கரும்பு பிழியும் எந்திரங்கள், குழாய்கள், அரிசிப் பதர் நீக்கும் எந்திரங்கள், எந்திரக் கலப்பைகள், எண்ணெய்ப் பொறிகள், மோட்டார்கள், துளையிடும் கருவிகள் முதலிய எந்திரங்களைப் பழுது பார்க்கும் பணியை இந்தச் சங்கங்கள் மேற்கொள்ளும். மேலும் அத்தகைய எந்திரங்களைப் பயன்படுத்துவதையும், பழுது பார்ப்பதையும் மேற்கொள்ளும்.

6. வாரியம் நடத்துகின்ற, கையினல் தயாரிக்கப்படும் காகிதத் தொழிற் சாலைகள் கடந்த ஆண்டிலிருந்து, குறிப்பேட்டுப் புத்தகங் கள் (Note-books) தயாரிக்கும் பணியையும் மேற்கொண்டுள்ளன. 1970-71-இல் 7 லட்சம் குறிப்பேட்டுப் புத்தகங்கள் தயாரிக்கப் பட்டிருக்க, 1971–72-ல் இவற்றின் எண்ணிக்கையை 10 லட்ச மாக அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

7. கிராமத் தொழில்கள் வரவு-செலவுத் திட்டத்தின் நிதிநிலை விவரம் கீழே சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது :—

| | 1969-70 கணக்குகள். | 1970-71 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | 1970-71 திருத்த மதிப்பீடு. | 1971-72 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்.) | | | |
| ரெவின்யூ கணக்கு-செலவு வருவாய்— | 73·97 | 1,15·77 | 1,19·04 | 1,26·46 |
| துறைவாரியான வருவாய் .. | 28·27 | 69·36 | 63·05 | 68·75 |
| கதர்-கிராமத் தொழில்கள் ஆணைக்குழுவிடமிருந்து கிடைக் கும் மானியம். | 11·76 | 13·83 | 23·66 | 12·96 |
| மாநில அரசிடமிருந்து பெற்ற மானியம் | 11·22 | 11·00 | 12·14 | 17·78 |



1971 ஜூலை 20]

| | 1969-70 கணக்குகள். | 1970-71 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. | 1970-71 திருத்த மதிப்பீடு. | 1971-72 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| கூட்டுறவுச் சங்கங்களுக்கும் நிறு வனங்களுக்கும் வழங்கும் கடன்களும், முன்பணமும்— | | | | |
| 1 செலவு .. .. | 80.82 | 60·42 | 65·46 | 78·30 |
| 2. வசூல் .. .. | 90·74 | 1,10·14 | 91·90 | 93·34 |
| கதர்-கிராமத் தொழில் ஆணைக் குழுவிடமிருந்து கிடைத்த கடன் தொகை. | 1,18·51 | 76·58 | 1,15·42 | 79·82 |
| கதர்-கிராமத் தொழில் ஆணைக் குழுவிற்குத் திருப்பிக் கொடுத்த கடன்கள். | 1,17·88 | 94·51 | 1,11·74 | 27·50 |

8. 1970-71-ம் ஆண்டு இறுதி நிலவரப்படி கதர்-கிராமத் தொழில் ஆணைக் குழுவிற்குத் திருப்பிக்கொடுக்க வேண்டிய கடன் நிலுவை ரூ. 355 லட்சமாகும்.

## கிராமக் கலைகள், கைவினைகள் தொழில்கள் திட்டம்.

ஊராட்சி ஒன்றியங்களில், கிராமக் கலைகள், கைவினைகள், தொழில்கள் திட்டத்தைத் தமிழ் நாடு கதர்-கிராமத் தொழில் வாரியம், தொழில் நுட்ப முறையில் மேற்பார்வை செய்கிறது.

2. கிராமக் கலைகள், கைவினைகள், தொழில்கள் வேலைத் திட்டத் தின் கீழ் உள்ள திட்டங்களை நிறைவேற்றுவதற்கு, ரூ. 25 லட்சம் நடைமுறை மூலதனக் கடனுடன்கூட, இந்த அரசு தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில்கள் வாரியத்திற்கு இதுவரை ரூ. 2,44.16 லட்சம் வழங்கியுள்ளது. விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | தொகை. | நடைமுறை மூலதனக் கடன். |
|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்.) | |
| 1961-62 .. .. .. | 20·78 | .. |
| 1962-63 .. .. .. | 15·00 | .. |
| 1963-64 .. .. .. | 32·67 | 5·00 |
| 1964-65 .. .. .. | 35·68 | 20·00 |
| 1965-66 .. .. .. | 38·26 | .. |
| 1966-67 .. .. .. | 30·89 | .. |
| 1967-68 .. .. .. | 28·48 | .. |
| 1968-69 .. .. .. | 11·40 | .. |
| 1969-70 .. .. .. | 16·00 | .. |
| 1970-71 .. .. .. | 15 00 | .. |

3. ஆதாயத்தில் செயல்பட்டுவரும் 8 தச்சுவேலை, கருமார் தொழிற் பிரிவுகளுக்குக் கட்டிடங்கள் கட்ட ரூ. 1 லட்சம் கடன் வழங்கப்பட்டது.

4. கிராமக் கலைகள், கைவினைகள், தொழில்கள் திட்டத்தின்கீழ் இம் மாநிலத்தில் தற்போது 307 பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. 1970-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரை உற்பத்தி விற்பனை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | 1969-70. | 1–4–1970-லிருந்து 31–12–1970 வரை. |
|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்) | |
| உற்பத்தி .. .. .. .. .. | 37·29 | 25·625 |
| விற்பனை .. .. .. .. .. | 32 597 | 20·668 |

5. தற்போதுள்ள தொழில் பிரிவுகள் தொடர்ந்து நடைபெற, 1971-72-ல் ரூ. 12.10 லட்சம் தேவைப்படும்.

6. ஊராட்சி ஒன்றியங்களில் 8 அல்லது 9 தொழில்கள் மட்டுமே இதுவரை நிறைவேற்றப்பட்டு வந்தன. கிராமப் பகுதிகளில் கூடுதலான வேலை வாய்ப்பு வசதிகளைச் செய்து கொடுப்பதற்கான ஆயத்த அமைப்பினை ஏற்படுத்துவதற்காக, கிராமக் கலைகள், கைப்பணிகள், தொழில்கள் நிதியைக் கொண்டு கீழ்க்காணும் தொழில் பேட்டைகளை அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

| திட்டத்தின் பெயர். | இடம். |
|---|---|
| (i) நூல் நூற்பதற்கும், துணி நெய்வதற்கும் 3 கதர்தொழில்பேட்டைகள். | திருப்பூர், பெருமாநல்லூர், கண்மலையம்பட்டி. |
| (ii) கதர் தையல் தொழில், பூவேலைத் தொழிற்சாலை. | திருப்பூர். |
| (iii) கதர் தொழில்பேட்டை .. .. | இடையன்வலசு (ஒட்டன் சத்திரம் வட்டாரம்), பழனி வட்டம். |

கிராமக் கலைகள், கைப்பணிகள், தொழில்கள் நிதியைக் கொண்டு 5 கிராமத் தொழிற்பேட்டைகளை, மூன்று கிராமத் தொழில்கள் திட்டப் பகுதியில் நிறுவவும் அரசு அனுமதித்துள்ளது. அந்த ஐந்து கிராமத் தொழிற்பேட்டைகளில் இரண்டு பேட்டைகள் தனியார் தொழில் முனைவர்களின் பயனுக்காக ஸ்ரீபெரும்புதூர் திட்டப் பகுதியில் நிறுவப்படவிருக்கின்றன. ஓமலூர் திட்டப்பகுதியில் ஜலகண்டபுரத்தில் ஒன்றும் தாரமங்கலத்தில் ஒன்றுமாக விசைத் தறிகளுக்காக இரண்டு கிராமத் தொழிற்பேட்டைகள் நிறுவப்பட இருக்கின்றன. பல்வேறு கிராமத் தொழில்களுக்கான பணிக்கூடங்கள் கட்டுவதற்கு, நாங்குனேரித் திட்டப் பகுதியில் வள்ளியூரில் ஒரு கிராமத் தொழிற்பேட்டை நிறுவ அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பணிக்கூடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது.

7. 1971-72-ஆம் ஆண்டில் 22, 23-ஆம் எண் கோரிக்கைகளின்கீழ் வேலைத் திட்டச் செலவு குறித்து வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கிய மொத்தத் தொகை ரூ. 15 லட்சமாகும்.

# தமிழ்நாடு சட்டப் பேரவை

---

## புதன்கிழமை, 1971 ஜூலை 21.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள்

* 340 வினா—திரு. என். மருதாசலம் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செகண்டரி கிரேட் ஆசிரியர்களாகப் பணியாற்றும் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்குப் பட்டதாரி ஆசிரியர் சம்பளம் வழங்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இல்லை.

**திரு. என். மருதாசலம்:** தலைவர் அவர்களே, செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு இன்னும் பாதிச் சம்பளம் கொடுக்காமலிருக்கிறதே, அந்தச் சம்பளத்தைக் கொடுக்க அரசு உத்தேசிக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுப்பதைப் பற்றிய குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி போட்டால் அந்த விவரம் திரட்டித் தரப்படும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** பொதுவாக, தொழிற்சங்க விதிமுறைகள்படி, எந்த வேலைக்கு ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கின்றாரோ அவர் அந்த வேலையைச் செய்யவேண்டுமென்றும் எந்தப் பணிக்காக அவர் ஒதுக்கப்பட்டிருக்கின்றாரோ, அந்தப் பணிக்குரிய ஊதியம் அவருக்குக் கொடுக்கவேண்டும் என்றும் இருக்கிறது. அப்படி இருக்கிறபோது, இம்மாதிரி பி. டி. பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு, சில காரணங்களுக்காக வேறு வேலை கொடுக்கின்றபோது, அந்த வேலைக்குரிய ஊதியம் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக இருந்து பணி புரிகிறபோது, தாங்களாகவே தங்கள் தகுதியைப் பெருக்கிக் கொள்ளுகிறார்கள். பி.ஏ., பி.டி. படித்தவர்களுக்கு "இம்மீடியட்" ஆக இரண்டு 'இன்க்ரிமென்ட்ஸ்' தரப்படுகின்றன. எம்.ஏ., பி.டி. படித்தவர்களுக்கு நான்கு இன்க்ரிமென்ட்ஸ் தரப்படுகின்றன. பி.ஏ., பி.டி. படித்தவர்களாயிருந்தாலும், எம்.ஏ., பி.டி. படித்தவர்களாயிருந்தாலும், அந்த பி.டி. ஆசிரியர் வேலை காலியாக இருக்கும்

போது அந்தப் பதவிக்கு வர அவர்களுக்கு உரிமை உண்டு. செகண்டரி கிரேடு ஆசிரியராக இருந்துகொண்டு பி.டி. கிரேடு ஆசிரியர் சம்பளம் வாங்குவது என்பதற்கு இப்பொழுது குறிப்புகள் இல்லை. இன்க்ரிமென்ட் மட்டும் தரப்படுகிறது.

**திரு. கோ. இளங்கோவன் :** பட்டதாரி ஆசிரியர்களின் ஊதியத்தை உயர்த்தும் திட்டம் அரசிடம் ஏதேனும் உள்ளதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட திட்டம் அரசாங்கத்திடம் இல்லை. அவர்கள் கோரிக்கை தந்திருக்கிறார்கள். அதை நிதித் துறை ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, தற்போது முறைப்படி ஐ.ஏ.எஸ். பயிலாதவர்களுக்கு அவர்களுடைய சர்வீசைக் கணக்கிட்டு, முறைப்படி ஐ ஏ.எஸ். பயின்றவர்களுக்குத் தரப்படும் சம்பளம் போல—உயர் பதவி கொடுக்கப்படுவது போல—ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்கும் செகண்டரி கிரேடு பள்ளி ஆசிரியர்களுக்கும், அவர்களுடைய கல்வித் தகுதிக்கேற்ப சம்பளம்கொடுப்பதில் நம்முடைய அரசு தாமதம் காட்டுவதற்குறிய காரணங்கள் யாவை என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அந்தந்தப் பதவிக்கு ஏற்ற அளவு தனிச் சம்பள விகிதங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, பொதுவாக, செகண்டரி கிரேடு படித்துவிட்டு, ஹையர் கிரேடிலே ஆசிரியராக இருந்து, ஹையர் கிரேடு ஆசிரியருக்குரிய சம்பளம் பெற்று வந்ததைத்தான் அரசாங்கம் மாற்றியமைத்தது. தகுதிக்குரிய பதவியைப் பெற வேண்டுமேதவிர தகுதியில் முழு நிலையைப் பெற்றுவிட்டார் என்றவுடனேயே அந்தச் சம்பளத்தைத் தர முடியாது. ஆனால் பி.ஏ., பி.டி., எம்.ஏ., பி.டி. படித்தவர்கள் பி.டி. அசிஸ்டென்ட் வேலை காலி ஏற்படுகிறபோது அதிலே சேர்ந்துகொண்டு அதற்குரிய சம்பளம் வாங்குவதற்கு உரிமையுடையவர்கள் ஆவார்கள். ஆகவே, அவர்கள் இருக்கும் பதவியில் இருந்துகொண்டே தங்கள் தகுதியை உயர்த்திக் கொண்டவுடனேயே அதற்குள்ள சம்பளம் தருவது என்பது இயலாது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் பலர் இந்த முறையில் தங்கள் முயற்சியால் தகுதிகளைப் பெருக்கிக்கொள்ளுகிறார்கள். பெருக்கிக்கொண்டும் பல ஆண்டுகள் அதே வேலையில் தான் அமர்ந்திருக்கிறார்கள். ஆனால், அதே சமயத்தில், நாம் உயர் நிலைப் பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர்களை நியமித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே இம்மாதிரித் தன் முயற்சியால் தகுதியைப் பெருக்கிக் கொண்டவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டு அவர்களுக்கு முதலிடம் அளித்து, பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்கும்போது, அவர்களுக்கு நியமனம் அளிக்க இந்த அரசு முன்வருமா ?



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அவர்கள் தங்களுடைய தகுதியை உயர்த்திக்கொண்டு, பி.டி. அஸிஸ்டென்ட் வேலை பார்க்கும் தகுதி பெறும்போது அந்த வேலைகளை அவர்களுக்குத் தரலாம் என்று விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அப்படி இடங்கள் ஏற்படும்போது அவர்களுக்கு அந்த இடங்களை வழங்கலாம்.

* **341 வினா—திரு. என். மருதாசலம் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செகண்டரி கிரேடு ஆசிரியர்களாகப் பணியாற்றுகின்ற பட்டதாரி ஆசிரியர்களைப் புதிதாக வேலைக்கமர்த்தும்போது மேற்கண்டவர்களுக்கு சர்வீஸ் அடிப்படையில் முதலிடம் அளித்து வேலையில் அமர்த்த அரசுக்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அரசினர் பள்ளிகளிலும் கழக உயர்நிலைப்பள்ளிகளிலும் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்களில் பட்டப்படிப்பும், பி.டி. ஆசிரியர் பயிற்சியில் தேர்வும் பெற்றவர்கள் பட்டதாரி ஆசிரியர்களாகப் பதவி உயர்வு பெற தமிழ்நாடு கல்வி சார்புப் பணி தனி விதிகளிலும், மாவட்டக் கழகச் சட்ட விதிகளிலும் போதிய வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. உதவி பெறும் தனியார் பள்ளிகளில் நிர்வாகத்தினருக்கு அம்மாதிரிப் பதவி உயர்வு அளிக்க உரிமையுள்ளது.

**திரு. என். மருதாசலம் :** செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் பட்டதாரி ஆசிரியர்களாக மாறும்போது அவர்களுக்குப் பட்டதாரி ஆசிரியர்களுக்குரிய ஸீனியாரிடி பிரகாரம் பதவி உயர்வு கொடுக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அவர்கள் தகுதி பெற்றதற்குப்பிறகு பி.டி. ஆசிரியர்கள் ஆகிறார்கள். அதிலேதான் ஸீனியாரிடி பார்க்க முடியுமேதவிர, செகண்டரி கிரேடு ஆசிரியராக எத்தனை ஆண்டுகள் ஸீனியராக இருந்தார்கள் என்று பார்ப்பதற்கில்லை. பி.டி. ஆசிரியராக ஆகும்போது அந்த ஸீனியாரிடியை இந்த ஸீனியாரிடியோடு கொண்டுபோய் ஒப்பிட முடியாது. பி.டி. தகுதி பெற்று அவர்களைச் சேர்த்துக்கொள்ளும் போது அதற்குப் பிறகு பி.டி. ஆசிரியர்களைப் பொறுத்து வருகிற ஸீனியாரிடியோடு அவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

**திரு. கே. என். குமாரசாமி :** செகண்டரி கிரேடு ஆசிரியராகப் பணியாற்றியவர்கள் பி.ஏ., படித்து நேரடியாக உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களாகப் போவதற்குப் பதில் அவர்கள் பி.டி. ட்ரெயினிங் பெற வேண்டும் என்ற நிலைமையைத் தவிர்த்து, அவர்களுக்கு நேரடியாகப் பதவி உயர்வு கொடுக்கும் வாய்ப்பை அரசு ஏற்படுத்துமா?

[1971 ஜூலை 21

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளில் பாடம் கற்றுக்கொடுக்க பி.டி. ட்ரெயினிங் இருக்க வேண்டும் என்ற நியதி இருக்கிறது. அந்த பி.டி. பயிற்சி பெற்று அதற்குத் தகுதியுள்ளவர்களாக ஆக்கிக்கொண்டால்தான் பி.டி. அஸிஸ்டெண்டாக உயர்த்த முடியுமேதவிர, நேரடியாக உயர்த்துவதற்கில்லை. பி.ஏ., பி.டி. படித்தவர்களை பி.டி. ஆசிரியர்களாக நியமிப்பதிலே தடை இல்லை. அவர்கள் விண்ணப்பித்துக் கொண்டால் அவர்களுக்கு முதல் சலுகை தரலாம் என்ற அளவுக்குக்கூட நிலைமை இருக்கிறது.

## High Power Committee for Madras Corporation

* 342 *Q.*—THIRU N. K. PALANISAMI :

DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether the High Power Committee constituted by the Government to study the Madras Corporation's financial position, and make suggestions to improve its finance has submitted its report; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

DR. H. V. HANDE : Is it not a fact that the Government appointed a High Power Committee consisting of Mr. S. Venkitaramanan, Secretary to the Government, Finance Department and Mr. E.C.P. Prabakar, Secretary to the Government on July 16th? This was also published in all the Dailies. We also got the information confirmed. May I know whether the Government are also concerned about the deplorable manner in which the funds allotted under different Heads are spent? Supposing the Government give funds under a particular Head to be spent under that particular Head, have the Government observed that in a number of cases there is transfer of funds? Is it because of this that the Government seriously considered the need to appoint a Committee or have the Government having alternative plan to exactly find out how to examine the accounts of this Corporation, whether they are spending the money under proper Heads or not?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : உறுப்பினர் அவர்கள் அந்தக் குழு அறிக்கையைச் சமர்ப்பித்துவிட்டதா என்று கேட்டார்கள். இல்லையென்று சொன்னேன். அமைக்கப்பட்ட குழு பரிசீலனை செய்துவருகிறது. அந்தக் குழுவிலே பலரும் உறுப்பினர்களாக இருக்கின்றார்கள், மாநகராட்சியினுடைய நிதி நிலைமை வசதிகளை எல்லாம் சீர்படுத்துவதற்காக யோசனைகளைக் கூறுவதற்காக என்று அந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.



1971 ஜூலை 21]

கூடுதல் வரிகள் விதித்துத் தொகை திரட்டுதல், தற்போதைய வரிகளை உரிய வகையில் முறையாக வசூலித்தல், வருவாய் இழப்பு, ஊதாரிச் செலவு முதலியவற்றை நீக்குதல் ஆகியவற்றுக்கான சாத்தியக் கூறுகளைக் கருத்திற் கொண்டு, 1969–74 ஆண்டுகளில் சென்னை மாநகராட்சி வருவாய், செலவுகள்பற்றிய நிதி மதிப்பீடுகளை இக்குழு ஆராய்தல் வேண்டும்.

DR. H. V. HANDE : May I know what prompted that?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அடிக்கடி மாநகராட்சி மன்றம் கடன் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்ற காரணத்தினாலேயும் செலவுகள் வளர்ந்துகொண்டிருக்கின்ற காரணத்தினாலேயும் அதைச் சீரமைப்பதற்கு அவசியம் ஏற்பட்டிருக்கிறது. 1974-ஆம் ஆண்டுவரை எப்படி எப்படி இருக்கும், என்ன என்ன செய்தால் நல்லது என்ற முழு விவரங்கள் அளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. விரைவில் அந்தக் குழுவின் அறிக்கை வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்தக் குழு எப்பொழுது அமைக்கப்பட்டது? இந்தக் குழுவினுடைய அறிக்கை எப்பொழுது சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்று ஏதாவது உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 1969-ஆம் ஆண்டு ஜூலை திங்களில் இந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் எப்பொழுது அறிக்கை சமர்ப்பிக்கப்படவேண்டுமென்ற குறிப்பு இருப்பதாகத் தெரியவில்லை. விரைவில் அறிக்கை அளிக்கப்பட வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. அறிக்கை விரைவிலே அளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : அந்தக் குழு அமைக்கப்பட்டதன் உள்நோக்கம் என்ன ? கார்ப்பரேஷன் விவகாரங்களிலே பணம் சரியான தலைப்பின்கீழ் செலவுகள் செய்யப்படவில்லை என்ற குறிப்பு வந்து இருக்கிறதா ? நாங்கள் இதைப்பற்றி இந்தச் சட்டமன்றத்திலே பல முறைகள் சொல்லி இருக்கிறோம், நிரூபித்து இருக்கிறோம், எடுத்துக்காட்டியிருக்கிறோம். சரியான தலைப்பின்கீழ் பணத்தை விநியோகம் செய்யவில்லை என்ற குறிப்புகள் வந்திருக்கிறதா? வந்திருந்தால் அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திற்குத் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்தக் குழு அமைக்கப்பட்டது, நிதிநிலைமை சரியாக இல்லையென்றால் அதைச் சீராக்க வழிவகை கூறவேண்டுமென்ற அடிப்படையிலேதான். குற்றச்சாட்டுகள் இருந்தால் என்குயரி கமிட்டிபோட்டு விசாரித்திருக்கலாம். ஆனால் நிதிநிலை சீராக இல்லை. கடன் வகைகளைப் பெருக்கிக் கொண்டிருக்கிறார்கள், வருவாய் குறைந்திருக்கிறது, செலவு அதிகமாகிறது. அந்தவகையிலே கேட்கப்பட்டு இருக்கிறது.

கூடுதல் வரிகள் விதித்துத் தொகை திரட்டுதல், தற்போதைய வரிகளை உரிய வகையில் முறையாக வசூலித்தல், வருவாய் இழப்பு, ஊதாரிச் செலவு முதலியவற்றை நீக்குதல் ஆகியவற்றுக்கான

சாத்தியக் கூறுகளைக் கருத்திற்கொண்டு, 1969-74 ஆண்டுகளில் சென்னை மாநகராட்சி வருவாய், செலவுகள்பற்றிய நிதி மதிப்பீடு களை இக்குழு ஆராய்தல் வேண்டும்.

அத்தகைய வருவாய் மதிப்பீட்டிற்கும் செலவிற்கும் இடையே அது ஏற்றுக்கொள்கிற பற்றாக்குறையைப் போக்க இக்குழு வழி வகைகளைக் குறிப்பிடும்.

இக்குழு, மாநகராட்சியின் மூலதன வரவு-செலவுத் திட்டத் தையும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஐந்து ஆண்டு களுக்குத் தேவையான மூலதன வாயில்களையும் ஆராய்ந்து, இவ் வாயில்களைப் பெறுவதற்கான வழிவகைகள்பற்றி ஆலோசனை நல்கும்.

இக்குழு மாநகராட்சிக்குத் தேவைப்படுகிற ரொக்க வசதிகளை ஆராய்ந்து, இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகம், வணிக வங்கிகள் போன்ற நிறுவனங்களிடமிருந்து ஈட்டுறுதி ஆவணங்கள், சிறப்புச் காரிய ஆவணங்கள், பத்திரங்கள்மூலம் நிதி பெறும் வாய்ப்புகளைப் பற்றி இக்குழு ஆய்வு செய்யும்.

ஈட்டுறுதி ஆவணங்கள்மூலம் கிடைக்கிற வருவாயைப் பயன் படுத்துவது தமிழ்நாடு அரசு வழங்கிய கடன்களைத் திருப்பிச் செலுத்துவது, ஆகியவைகுறித்த வரையறைகள், நிபந்தனைகள் பற்றி இக்குழு ஆலோசனை நல்கும்.

மாநகராட்சியில், வரிவிதிப்பு, வரிவசூல், வரியில்லாத வருவாய் கள் ஆகிய பணிகளை விரைவுபடுத்துவதற்குத் தேவையான நடவ டிக்கைகள்பற்றி இக்குழு பொதுவாக ஆலோசனை நல்கும்.

இக்குழு தனது அறிக்கையை அளிக்கும்போது, உள்ளாட்சி நிதி விசாரணைக் குழு தனி அதிகாரி அளித்த ஆலோசனைகளையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

இக்குழு அமைக்கப்பட்ட இரண்டு திங்களுக்குள்ளாகவே இடைக்கால அறிக்கை ஒன்றை மாநகராட்சிக்குத் தற்போதுள்ள இடர்பாடுகளைச் சமாளிப்பதற்காக அளிக்கவேண்டும். ஒரு கோடி ரூபாய் மதிப்புடைய நகராட்சிக் கடன் பத்திரங்கள், பங்கு சான்றிதழ்கள் ஆகியவற்றை வெளியிட்டு நகராட்சிக் கடன் வாங்கி, இந்திய வங்கியில் வைப்பீடு செய்துள்ள தொகையை என்னென்ன காரியங்களுக்கும், நோக்கங்களுக்காகவும் செலவிடப்படவேண்டும் என்பதுபற்றியும் அரசுக்குத் திட்டவட்டமாக இக்குழு ஆலோசனை நல்கும்.

## *Nursing Orderlies*

* 343. Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state:

(a) whether the designation of the Nursing Orderly has been altered;

(b) if so, the details thereof; and

(c) the details of other names altered in this service?



மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) செவிலியர் பணியாளரின் பெயர் 'செவிலியர் உதவி யாளர்' என மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதற்குரிய உத்திரவு 13—5—1971 நாளிட்ட அரசு ஆணை (நிலை) எண். 1253-ல் பிறப்பிக் கப்பட்டுள்ளது.

(உ) அதுபோன்று வேறு பெயர் மாற்றம் இல்லை.

திரு. என். கணபதி : பேரவைத் தலைவர் அவர்களே, நர்ஸிங் ஆர்டர்ளி என்று சொல்லப்படுகிறவர்களுக்கு என்று குறிப்பிட்ட வேலை நேரக் கட்டுப்பாடு இருக்கிறதா ? பொது விடுமுறை நாட்கள் அவர்களுக்கும் அனுமதிக்கப்படுகின்றதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இது அவர்களுடைய பெயர் மாற்றத்தைப்பற்றியது, வேலை நேரத்தைப் பற்றியதல்ல.

திரு. கே. டி. கே. தங்கமணி : நர்ஸிங் அஸிஸ்டெண்ட்ஸ் சமீபத் திலே மதுரையிலே கூடி தங்களுடைய குறைகளை எடுத்துச்சொல்லி, தாங்கள் நான்காவது தரச் சிப்பந்திகளாக நடத்தப்படுவதாக முறையீடு கொடுத்திருக்கிறார்களே, அதைப்பற்றி அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்த செவிலியர் உதவியாளர்கள் சங்க மாநாட்டில், அவர்கள் நான்காம் தர கடைநிலையில் இருக்கக்கூடாது, சுபீரியர் சர்வீஸ் என்ற வகை யிலே சேர்க்கப்படவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இப் பொழுது அவர்கள் 60 வயதிலே ஓய்வுபெறமுடியும் என்று சொன்னால், இவ்வாறு வேறு நிலை அவர்கள் கேட்கின்றபொழுது 55 வயதிலே ஓய்வுபெறவேண்டும், அதை அவர்கள் ஏற்றுக்கொள் கிறார்களா என்று கேட்டறியப்பட்டிருக்கிறது. அதற்குமேல் அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

## *Graduate Nurses*

* 344 Q. DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Public Health be pleased to state:

(a) the number of persons who graduated from the College of Nursing from its inception in 1967 till March, 1971;

(b) whether any scheme has been evolved to fully utilise their services; and

(c) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) 19.

(இ) & (உ) அவர்களின் பணி இப்பொழுதே முழுமையாகப் பயன்படுத்தப்படுகிறது.

Dr. H. V. HANDE : Sir, we spend a lot of amount under this Section for training graduate nurses. Having spent that amount, there is a feeling among the graduate nurses that their services are not fully utilised. May I know from the Hon. Minister whether he has got any detailed programme–here afterwards we will get more graduates–chalked out, whether it is envisaged to see that the full knowledge that was given to them during training is properly utilised and higher qualified work is given to the qualified nurses. May I know all the details?

The Hon. Thiru K. ANBAZHAGAN : The training is given with a purpose to get them into particular services in the Medical Department and especially the services of the public health nurses, the nurses who are graduated under the subject public health are used in the teaching programme, both in the college, school of nursing and public health field. Nurses specialised with medical and surgical nursing are posted to the hospitals to work with the specialised doctors in Medicine and Surgery and their services are fully utilised for the improvement of the nursing course in the medical college hospitals. Generally, there is some difficulty in giving jobs to the nurses generally trained, but there is no difficulty found for these specialised trained nurses.

Thirumathi JOTHI VENCATACHELLUM : Sir, may I know how many of these graduate nurses are being sent abroad for specialised training?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இது ஸ்பெஷலைஸ்டு டிரெயினிங், வெளிநாட்டுக்கு அனுப்புகிற திட்டம் பற்றியது அல்ல. இங்கேயே பட்டதாரி வகுப்புகளிலே பயிற்சி பெறுவதற்காக 19 பேர்கள் எடுக்கப்பட்டார்கள். இப்பொழுது அந்த 19 பேர்களும் பணியில் இருக்கிறார்கள் என்ற அளவுக்குத் தான் என்னிடத்திலே இப்பொழுது விவரம் இருக்கிறது.

## கோவை அரசு மருத்துவமனையில் பயிற்சிப் பெற்ற செவிலியர்கள்

* 345 வினா—**திரு. என். மருதாசலம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை அரசினர் மருத்துவமனையில் 1967 முதல் 1971 மார்ச் முடிய செவிலியர் (Nurse) பயிற்சி பெற்றுத் தேறியவர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களில் எத்தனை பேருக்கு அரசு பணி கொடுத்துள்ளது?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) 241 செவிலியர் மாணவியர் பொது செவிலியர் (General Nursing) பயிற்சி பெற்றுத் தேறினார்கள்.



(இ) ஒவ்வொரு மருத்துவமனையில் தேறியவருக்கும் தனியாகப் பட்டியல் வைத்து பணி, வேலைவாய்ப்பு, கொடுக்கப்படுவதில்லை. எல்லா அரசாங்க மருத்துவமனைகளில் பயிற்சி பெற்ற செவிலியர்கள் யாவருக்கும் அவர்களுடைய மதிப்பெண்படி Seniority வரிசையாக நலப்பணிகள் மற்றும் குடும்ப நலத் திட்ட இயக்குநரால் அரசாங்க செவிலியர் பணி இன்றைக்கு வழங்கப்பட்டு வருகிறது.

**திரு. என். மருதாசலம் :** தலைவரவர்களே, ஆஸ்பத்திரிகளில் பணிபுரியும் செவிலியர்கள் 3 வருஷங்கள் பணிபுரிந்து 3-வது வருஷம் மறுபடியும் 6 மாதம் தாய் சேய் நல விடுதியில் பரீட்சையில் தேறியபிறகு அவர்கள் வீட்டிற்கு அனுப்பப்படுகிறார்கள். ஆகவே, அரசாங்க உத்தரவு எப்பொழுது வருகிறதோ அப்பொழுதுதான் அவர்கள் டியூட்டிக்கு ஜாயின் ஆக வேண்டியிருக்கிறது. ஆகையால் பரீட்சையில் தேர்ந்தவுடனேயே அவர்களுக்கு வேலை தேடிக் கொடுக்க அரசாங்கம் உத்தரவு அனுப்புமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, இந்தச் செவிலியர்களுடைய பயிற்சியைப்பற்றி ஒரு தெளிவான கருத்து ஏற்பட வேண்டுமென்று விரும்புகிறேன். பயிற்சி அளிப்பது அரசாங்க மருத்துவ மனைகளில் வேலை செய்வதற்காக மட்டுமல்ல. ஏற்கனவே தனியார் மருத்துவ மனைகளிலும் வேலை வாய்ப்பினைப் பெறமுடியும். மற்றுமொன்று, இது 3½ ஆண்டுக்காலப் பயிற்சி, 3 ஆண்டுகாலப் பயிற்சி அல்ல. மூன்றாண்டுக் காலம் பொதுப் பயிற்சியும், 6 மாத காலம் மகப்பேறு மருத்துவத்துறை பயிற்சி பெறுவதும் இந்தப் பயிற்சித் திட்டத்தின் குறிக்கோளாகும். அந்த மகப்பேறுத்துறை பயிற்சி பெற கோவையிலுள்ள சில மருத்துவ மனைகளில் பயிற்சிபெறும் செவிலியர்கள் இருக்கிறார்கள். அங்கே பயிற்சி பெற முடியாதவர்கள் இங்கே சென்னையிலே உள்ள 3 மருத்துவ மனைகளிலேயும், மதுரையிலே உள்ள ஒரு மருத்துவ மனையிலேயும், தஞ்சாவூரிலேயுள்ள ஒரு மருத்துவமனையிலேயும் பயிற்சி பெறுகிறார்கள். அப்படிப் பயிற்சிபெற்ற மாணவிகள் அவர்கள் எந்த நேரத்திலே பயிற்சியை முடித்து விண்ணப்பிக்கிறார்களோ அந்தக்காலத்திலே எண்கள் பதிவு செய்யப்படுகின்றன. ஒரு ஆண்டு, ஒன்றரை ஆண்டுகளுக்கு முன் பதிவு பெற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு இப்பொழுது அளிக்கப்பட்டு வருகிறது. அந்த வேலை வாய்ப்பு அளிக்கப்படுவதில் உள்ள காலதாமதம் தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, பயிற்சி முடித்த செவிலியர்கள் அவர்களுடைய மதிப்பெண்களுக்கேற்றபடி பதிவு செய்யப்பட்டு வேலை பெறுகிறார்கள். இதனால் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்ட அந்த மாணவிகள் அவர்களுக்குக்குரிய கோட்டா பிரகாரம் 18 சதவிகிதம் 31 சதவிகிதம் பெறுவதற்கு வாய்ப்பில்லை. எனவே அந்த விதிமுறைகளை மாற்றிப் பிற்படுத்தப்

பட்டவர்களுக்கு, தாழ்த்தப்பட்டவர்களுக்கு உரிய முறையில் இனி மேலாவது வேலைவாய்ப்பு அளிக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்ன அந்த யோசனை நிச்சயமாக அந்தத் துறையினால் ஏற்றுக்கொள்ளப்பட முடியும். ஆனால் அதனால் பிரச்னை தீராது.

### நீதிமன்றங்களுக்கு வழங்கப்படும் எழுதுபொருள்கள்

* 346 **வினா—திரு. க. சுப்பு :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீதி மன்றங்களுக்குத் தேவையான எழுதுபொருள், அச்சுப் பாரங்கள் ஆண்டுதோறும் அனுப்பப்பட்ட பட்டியல்படி உரிய காலத்தில் வழங்கப்படுவதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** நீதி மன்றங்களுக்கு உரிய காலத்தில் கைவசம் இருக்கும் எல்லா எழுதுபொருள்களையும் ஆண்டுதோறும் அனுப்பி வைக்க ஆவன செய்யப்பட்டுள்ளது. எழுதுபொருள்கள் இருப்பில் இல்லாமலிருந்து வழங்குவதற்கு இயலாமற் போயின் அத்தியாவசியத் தேவைக்குண்டான எழுது பொருள்களை வாங்கும் விதிகளின்படி உள்ளூர் அங்காடிகளில் வாங்கிக் கொள்வதற்கு அனுமதி வழங்கப்படுகிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், தமிழக அரசின்கீழ் இருக்கும் கோர்ட்டுகள் முதலியவைகளில் இம்மாதிரி பாரம் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. ஆனால் மத்திய அரசாங்கத்தினுடைய நிர்வாகத்தில் தமிழகத்தில் இருக்கிற பிராவிடெண்ட் ஃபண்ட் போன்ற ஆபிஸ்கள் இருக்கின்றன. அங்கெல்லாம் ஃபார்ம்ஸ் சப்ளை செய்வதில் தாமதம் ஏற்படுகிறது. அந்த ஆபிஸ்களில் உடனடியாக சப்ளை செய்ய தமிழக அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** அதுபற்றிப் பரிசீலனை செய்யப்படும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, சம்மன்ஸ், வாரண்டுகள் போன்றவைகளுக்கான ஃபாரங்கள் காலாகாலத்திலே கோர்ட்டுகளிலே கிடைக்காத காரணத்தினால் அங்கு பல சங்கடங்களுக்கு ஆளாக்கப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, இன்டெண்டுகள் கோர்ட்டுகளில் இருந்து வந்தவுடனே உடனடியாக அவற்றை அனுப்ப அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, நீதிமன்றங்கள் தங்கள் தேவைப்பட்டியல்களை இரண்டு மாதங்கள்



முன்னதாக அதாவது அக்டோபர் மாதம் முதலிலேயே எழுது பொருள் அச்சுத்துறை இயக்குநருக்கு அனுப்பி வைக்கவேண்டும். இவ்வாறு உரிய காலத்தில் வரப்பெற்ற அனைத்துத் தேவைப் பட்டியல்களின்மீது பொருள்கள் தாமதமின்றி வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. என். கணபதி :** பேரவைத் தலைவரவர்களே, தற்பொழுது நீதிமன்றங்களில் சாட்சிகள் பெரும்பாலும் கையால் எழுதப்படுகிறது. அப்படி சாட்சிகள் எழுதப்படும் அந்தப் பேப்பர் தரக் குறைவாகயிருப்பதால் இங்க் ஊறி வார்த்தைகள் புரிய மாட்டேனென்கிறது. எனவே உயர்ந்த ரகப் பேப்பரைக் கொடுக்க அரசாங்கம் வழிவகுக்குமா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** இதுபோன்ற குறைகள் இதுவரையில் தெரிவிக்கப்படவில்லை. அப்படித் தெரிவிக்கப்பட்டால் ஆலோசிக்கலாம்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இப்படிப்பட்ட ஸ்டேஷனரி ஃபார்ம்ஸ் வாங்கப் பல அங்காடிகளில் வாங்கக்கூட அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது என்று கூறினார்கள். அதற்காகத் தனிப்பட்ட தொகை ஒதுக்கப்படவில்லை என்று அவர்கள் கூறுவது உண்மையா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** அவ்வித உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது, அப்படி வாங்கப்பட்டும் இருக்கிறது.

### Free distribution of bread to children

* 347 *Q.*—THIRUMATHI T. N. ANANDANAYAKI :
THIRU N. DENNIS :

Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state :

(*a*) the criteria under which slums are selected for free distribution of bread to children; and

(*b*) the agency through which such distribution is made

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) நகரங்களிலுள்ள குடிசைப் பகுதிகளில் வாழும் 6 மாதம் முதல் 3 வயதுவரை உள்ள எல்லாக் குழந்தைகளும் இத்திட்டத்தின்கீழ் ரொட்டி வழங்கப்படுவதற்காகக் கணக்கெடுக்கப்பெற்றுள்ளன. ஆதலால் குடிசைப் பகுதிகளைத் தேர்ந்தெடுப்பதில் வரையறை நிர்ணயம் செய்வது அவசியமில்லை.

(இ) அந்தந்தக் குடிசைப் பகுதிகளில் உள்ள சீரணிப்படை, கில்ட் ஆப் சர்வீஸ், செஞ்சிலுவைச் சங்கம், ரோட்டரி கிளப், அரிமா சங்கம், குழந்தைகள் நல இந்தியக் கவுன்சில் போன்ற சமூக நல நிறுவனங்கள் ரொட்டி வழங்குவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அப்படிச் சமூக நல நிறுவனங்கள் இல்லாத பகுதிகளில் உள்ளாட்சி மன்றங்கள் இந்தப் பணியைச் செய்கின்றன.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, is it a fact that some of the D.M.K. Manrams are distributing bread and 50 per cent of it is escaping through various shops? Also, are the Government aware that Anna Ninaivu Manrams. . .

*திரு. நா. வீராசாமி :* பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். கேள்வி நேரத்தில் இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் இருக்கக்கூடாது என்று தெளிவாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றிக் குறிப்பிடுகிறார்கள், எனவே அந்தக் கேள்வியை அனுமதிக்கக்கூடாது.

THIRU K. M. SUBRAMANIAM: I did not mean any party. I mentioned only Anna Ninaivu Manrams. . .

MR. SPEAKER: The hon. Member may resume his seat. மாண்புமிகு உறுப்பினர் கேள்வி கேட்கலாம், எப்படிக் கேட்கலாம் என்றால் குறிப்பிட்ட இடத்திலேயிருக்கிற அண்ணா மன்றம், காமராஜர் மன்றம் போன்றவை என்று கேள்வி கேட்கலாமேதவிர, பொதுப்படையாக, மோட்டிவ் 'இம்ப்யூட்' பண்ணுவது மாதிரி கேட்கக்கூடாது. அதனால் உங்கள் கேள்வி அனுமதிக்கப்படவில்லை.

DR. H. V. HANDE: Sir, may I know from the Hon. Minister the agency through which the grant is received and who is actually footing the bill, whether it is the Central Government or the State Government? Also, whether it is being distributed by a Governmental agency? Also, sometime ago the hon. Member, Thirumathi Anandanayaki pointed out an incident wherein in her constituency a member belonging to the ruling party was issuing cards and whether that was brought to the attention of the Hon. Minister and if so, will he give an assurance that no political agency would be allowed to exploit it?

*மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :* இதற்கு மத்திய சர்க்கார்தான் நிதி ஒதுக்கீடு செய்கிறது! மாநில அரசாங்கத்தின் மூலம் இதனை நாம் நிறைவேற்றிக்கொண்டு வருகிறோம். நான் கேள்விக்குச் சொன்ன பதிலிலிருந்து பல சமூகநல நிறுவனங்கள், இன்னும் நிறுவனங்கள் இல்லாத இடங்களில் உள்ளாட்சி மன்றங்கள் இப்படி ரொட்டி வழங்குவதில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு அம்மையார் அவர்கள் எடுத்துச் சொன்ன குற்றச்சாட்டைப்பற்றி விசாரித்தேன். அந்தப் பகுதியிலே தீ விபத்து ஏற்பட்டபொழுது, இவர்கள் கொடுத்த கார்டுகள் அழிந்து விட்டன என்றும் அதற்காக அத்தாட்சிக்காக எம்.ஜி.ஆர். மன்றம் என்ற மன்றம் அத்தாட்சிக்காகத் தங்கள் முத்திரை பொறிக்கப்பட்டதைத் தந்தார்கள் என்ற விளக்கத்தைத் தந்தார்கள். மேலும் விசாரணை செய்தபொழுது காமராஜர் மன்றமும் இப்படிப்பட்ட செய்கையிலே முத்திரை குத்திக் கொண்டுவந்து கொடுக்கிறார்கள் என்றும் சொல்லப்பட்டது. இனி அப்படிப்பட்ட காரியங்களைச் செய்யக்கூடாது என்று உத்தரவு கொடுக்கிறோம். இதுவரையிலும் மொத்தம் 22 இலட்சத்து 8 ஆயிரம் ரூபாய் மத்திய சர்க்கார் கொடுத்திருக்கிறது.





THIRU K. M. SUBRAMANIAM: Are these distributing agencies allowed to charge any small fees as expenses for distribution from the slum dwellers? மு.ப. 9-30

*மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :* தொண்டர்களுக்கு மாதம் 20 ரூபாயும், அவர்களுக்கு உதவி செய்கிற பணியாளர்களுக்கு மாதம் ரூ. 10-ம் மதிப்பூதியமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது.

THIRU R. PONNAPPA NADAR: May I know from the Hon. Minister what is the agency for supervision of this scheme?

*மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :* சமூக நலத்துறைதான் தற்போது இவைகளைக் கண்காணித்து வருகிறது. அதிகப்படியான குழந்தைகளுக்கு நம் மாநிலம் பூராவும் பல இடங்களில் கொடுக்கப்பட்டு வருகிற காரணத்தினால் சமூக நலத் துறையிலுள்ள பெண்கள் நல அதிகாரி அவர்களே இதைப் பொறுப்பேற்று நடத்தலாமா என்பதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டு வருகிறது.

## நகர்ப்புறச் சொத்துக்கு உச்சவரம்பு.

**348 வினா—திரு. சு. துரைசாமி:* மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நகர்ப்புறச் சொத்து வரம்புபற்றி ஆராயக் குழு ஒன்று நியமிக்கும் நோக்கம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விபரம் என்ன?

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :* (அ) & (இ) அரசு தனது 3—7—1971 தேதியிட்ட ஆணையில் ஆறு அதிகாரிகள் அடங்கிய ஒரு குழுவை அமைத்திருக்கிறது. அக்குழு தனது அறிக்கையை ஆறு மாதங்களுக்குள் சமர்ப்பிக்கும்படி கோரப்பட்டிருக்கிறது.

*திரு. சு. துரைசாமி :* நம்முடைய தமிழகத்தில் பொதுவுடைமைக் கருத்துக்களை, கொள்கைகளைப் பரப்புவதற்காக நாம் விவசாயிகள் மத்தியில் 15 ஏக்கர்கள் என்ற முறையில் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். அதேபோன்று பத்து பஸ்களுக்கு மேல் தனியார் யாரும் வைத்திருக்கக்கூடாது என்றும் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். ஆனால் சென்னை, கோவை போன்ற நகரங்களில் பலர் பல அடுக்குமாளிகைகளைக் கட்டிக் கொண்டு லட்சக்கணக்கில் மாத வருமானம் சம்பாதித்துக் கொண்டு வருகிறார்கள். ஆகவே அவைகளின்மீது உச்சவரம்பு கட்டுவதற்கு விரைவில் நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :* நகர்ப்புறச் சொத்துக்களுக்கு உச்சவரம்பு விதிக்கவேண்டுமென்று மத்திய அரசு ஒரு சட்டத்தைத் தயாரித்து அது மாநில முதல் அமைச்சர் அவர்

களுக்கு அனுப்பப்பட்டது. அதை வைத்துக்கொண்டு இங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்துபார்க்குமாறு கேட்டிருக்கிறார்கள். அதற்காகத்தான், தமிழ் நாடு நிலைமையை ஆராய்வதற்கும் அந்த மத்திய அரசுச் சட்டத்தையொட்டியும் என்னென்ன செய்ய முடியும் என்பதற்காக ஒரு குழு அமைத்திருக்கிறோம். ஆறு மாத காலத்திற்குள் அதன் அறிக்கையைச் சமர்பிக்கவேண்டும். அதற்குப் பிறகுதான் அரசு பரிசிலித்து முடிவு எடுக்க முடியும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : அமைச்சர் அவர்கள் விடையளிக்கையில் இது சம்பந்தமாக ஒரு குழு அமைக்கப்பட்டிருப்பதாகக் கூறினார்கள். அதில் யார் யார் அங்கம் வகிக்கிறார்கள்? எந்தக் காலத்திற்குள் அது தன் அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று அரசாங்கம் ஏதாவது ஆலோசனை கூறியிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆறு மாத காலத்திற்குள் அறிக்கையைச் சமர்பிக்கவேண்டுமென்று அரசாங்கம் கேட்டுக்கொண்டிருக்கிறது. குழுவில் யார் யார் அங்கம் வகிக்கிறார்கள் என்று கேட்டார்கள். அவர்களாவன :

1. First Member, Board of Revenue—Chairman.
2. Second Member, Board of Revenue-in-charge of Urban Land Tax.
3. Secretary to Government, Revenue Department.
4. Secretary to Government, Law Department.
5. Government Pleader, Madras.
6. Commissioner, Urban Land Tax.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்தக் குழுவில் எல்லோருமே அரசாங்க உத்தியோகஸ்தர்கள்தான் அங்கம் வகிக்கிறார்கள். இம்மாதிரியான காரியங்களைச் செய்யவேண்டுமென்று ஒரு டயரக்டிவ் மத்திய அர்சாங்கத்திலிருந்து கொடுத்ததற்குப் பின்னால் இம்மாதிரியான கருத்துள்ள ஒரு நான் அஃபிஷியலை ஏன் நியமிக்கவில்லை என்று அறிய விரும்புகிறேன். அதனுடைய 'டேர்ம்ஸ் ஆஃப் ரெபரன்ஸ்' என்னவென்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பிரதமர் அவர்களிடமிருந்து 20—2—1970 தேதியிட்ட கடிதம் ஒன்று வந்தது. அதில் டயரக்டிவ் ஒன்றும் கொடுக்கவில்லை. இதைப் பரிசீலிக்கவேண்டுமென்று சொல்லியிருந்தார்கள். அதைப் பரிசீலிப்பதற்கு ஒரு குழு அமைத்திருக்கிறோம். அதிகாரிகள் மட்டத்தில் அவர்கள் அறிக்கையைச் சமர்ப்பித்தபிறகு அரசு பரிசீலிக்கவேண்டுமென்பதற்காகத்தான் இருக்கிறோம். என்னென்ன கேட்டிருக்கிறார்கள் என்றார்கள். அதைப் படிக்கிறேன்.

(a) the extent to which the findings of the Central Working Group are applicable to the conditions prevalent in this State;



(b) to offer specific comments on the various clauses in the draft bill suggested by the Government of India prescribing ceilings on urban property;

(c) whether the ceiling should be with reference to the value of the property or with reference to the built-up area;

(d) the exact monetary ceiling or ceilings to be fixed in the case of an individual, a Hindu undivided family, a trust and other types of institutions, if any,

(e) whether there should be a lower monetary ceiling for unbuilt land,

(f) classes and categories of ownership promoting economically desirable uses of urban property that may be exempted from the ceiling,

(g) the need for an additional wealth tax and the additional estate duty in order to act as a disincentive to own property in excess of ceiling,

(h) whether and, if so, how ceilings could be enforced in respect of indivisible single units used for residential or non-residential purposes or whether it should suffice in such cases to levy additional estate duty and additional wealth tax for the property in excess of the ceiling;

(i) the need for a special enactment for the compulsory acquisition of urban property in excess of the ceiling, the definition of 'public purpose' in that connection and the basis of compensation, and

(j) how urban property compulsorily acquired is to be distributed.

DR. H. V. HANDE : The Hon. Minister in his reply said that a model bill has been sent by the Centre to the Chief Minister. May I know whether it is possible for the Hon. Minister to give copies of this model bill to party leaders so that we will be able to offer our views how best it could be implemented. We could give our ideas. Will the Hon. Minister consider this proposal?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மத்திய அரசு அனுப்பியிருக்கிற அந்த மாடல் பில்லை எல்லாத் தலைவர்களுக்கும் அனுப்ப முடியுமா என்று கேட்டார்கள். இப்போதைக்கு அது சாத்தியம் இல்லை. அந்தக் குழுவின் அறிக்கை கிடைத்த பிறகு அரசாங்கம் பரிசீலிக்கும்.

*Availability of China clay in Tamil Nadu*

* 349 Q.—THIRU A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(a) whether China Clay is available in this State; and
(b) if so, the places where it is available?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் தாலுகாவில்.

### அரியலூர் பகுதியில் ஜிப்சம்

* 350 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரியலூர் பகுதியில் கிடைக்கும் ' ஜிப்சம் ' கல்லைக்கொண்டு தொழிற்சாலை ஏதேனும் ஏற்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

### *Gold found in Kanjamalai area.*

* 351 *Q.*—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to exploit the Gold found in Kanjamalai and Pavalamalai in Salem district?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

### தமிழ்நாட்டில் கிடைக்கும் பவழங்கள்

* 352 வினா—திரு. ரா. ரா. முனுசாமி : திரு. ஏ. எம். இராஜா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் நயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் பவழங்கள் எந்தெந்த மாவட்டங்களில் வெட்டி எடுக்கப்படுகின்றன ?

(இ) 1967-லிருந்து 1970 வரை எவ்வளவு பவழங்கள் வெட்டி எடுக்கப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) வினா எழவில்லை.

### தாழங்குளம் கிராமம் அருகே காந்தக்கற்கள்

* 353 வினா—திரு. ரா. ரா. முனுசாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி வட்டத்திலுள்ள தாழங்குளம் கிராமம் அருகில் காந்தம் இருப்பதாக அரசுக்குத் தகவல் ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அங்கு ஆராய்ச்சி நடத்தி காந்தம் எடுக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) வினா எழவில்லை.



### பீடித் தொழில் நிலையங்களை நவீனப்படுத்தல்

* 354 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பீடித்தொழில் நிலையங்களை நவீனப்படுத்தும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொழில் வணிகத்துறையைப் பொறுத்தமட்டில் பீடித் தொழில் நிலையங்களை நவீனப்படுத்தும் திட்டம் ஒன்றும் இல்லை

திரு. கே. எ. வகாப் : இன்றைய தினம் வெளிநாடுகளுக்குச் செல்ல இருக்கும் அமைச்சர் அவர்களுக்கு வாழ்த்துக் கூறி அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று அங்குள்ள சிகரெட் தொழிற்சாலைகள் போன்ற தொழிற்சாலைகளில் உள்ள நவீன முறைகளைக் கண்டு, நம் நாட்டில் பீடித் தொழிலாளர்கள் காசநோய் போன்ற பல வியாதிகளால் அல்லல்படுகிறார்கள். ஆகவே, அதை எண்ணி யாவது நவீன முறையில் அதை அமைக்கும் திட்டத்தோடு வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசைப் பொறுத்தவரையில் இரண்டு கூட்டுறவுச் சங்கங்கள் இதை நடத்தி வருகின்றன. தனியார் துறையில் எந்தளவு இதைப் புதுப்பிக்க வேண்டுமென்று கேட்டால் அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

### *Staff of High Court.*

* 355. *Q.*—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the staff of the High Court stayed away from work in November 1970; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) 1970 ஆம் ஆண்டு நவம்பர் 28 ஆம் நாள் சனிக்கிழமையன்று சென்னை உயர்நீதிமன்றப் பணியாளர்களில் ஒரு சிலரைத் தவிர மற்ற அனைவரும் "சென்னை உயர்நீதி மன்றப் பணியாளர் சங்கத்தை" உடனடியாக அங்கீகரிக்க வேண்டுமென்று கோரி வேலைக்கு வாராமல் நின்றனர். அதேநாளன்று தலைமை நீதிபதியவர்கள் அச்சங்கத்திற்கு அங்கீகாரம் வழங்கினார். உயர்நீதி மன்றப் பணியாளர்கள் 30—11—1970 திங்கட்கிழமையன்று வேலைக்குத் திரும்பினர்.

Thiru R. PONNAPPA NADAR : May I know from the Hon. Minister whether any members of the staff have been punished on account of this agitation ?

The Hon. Thiru S. MADHAVAN : I have no information,

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இந்தப் பணியாளர்கள் வெளியே உண்ணாவிரதம் இருந்தபோது 'ப்ரஸ்டீஜ்' என்ற காரணத்தை வைத்து அவர்களுக்கு உடனடியாக அங்கீகாரம் கொடுக்காத காரணத்தினால்தான் இந்தப் போராட்டம் நீடித்தது என்றும் உடனடியாக அங்கிருக்கக்கூடிய அதிகாரிகள் அங்கீகரித்திருந்தால் இது நீடித்திருக்காது என்பதை அரசாங்கம் அறியுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பணியாளர்கள் சங்கம் உயர் நீதிமன்றத்தைப்பொறுத்தவரை தனியாக அங்கீகாரம் கேட்டார்கள். அதைப் பற்றி அவர்கள் பரிசீலிப்பதாக முடிவு இருந்தது. உடனடியாக வேண்டுமென்று கேட்டார்கள். முதலில் அதைப் பற்றி பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று விரும்பியதாகத் தெரிகிறது. இருந்தாலும் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அவர்கள் இதற்கு உடனடியாக அங்கீகாரம் கொடுத்து இந்தப் பிரச்னைக்கு ஒரு முடிவைக் கண்டிருக்கிறார்கள்.

**திரு. என். கணபதி :** உயர் நீதி மன்ற ஊழியர்கள் சங்கம் இப்போது அங்கீகரிக்கப்பட்டுள்ளதா? அதற்கு அந்தஸ்து ஏதேனும் தரப்பட்டிருக்கிறதா உயர்நீதிமன்றத்திலிருந்து ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்போதுதான் சொன்னேன்.

### *Building for District Court at Krishnagiri*

* 356. *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the construction of the building for the District Court at Krishnagiri has been started; and

(*b*) if not, the reasons therefor ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) இல்லை.

(இ) கிருஷ்ணகிரியில் ரூ. 14.50 லட்சம் செலவில் அனைத்து நீதிமன்றங்களும் இணைந்துள்ள வகையில் நீதிமன்றக் கட்டடங்கள் கட்டுவது குறித்த செயற்குறிப்பு 1971, ஜூன் திங்களில்தான் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**திரு. சொ. காவேரிமணியம் :** நீதிமன்றங்களுக்குக் கட்டடங்கள் கட்டுகின்ற நேரத்தில் அதிலே பணிபுரிகின்ற வழக்கறிஞர்கள் தங்க தனி அறைகள் அமைத்து கட்சிக்காரர்களோடு கலந்து பேசவும், ஓய்வு பெறவும் வழி செய்து தரப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நீதிமன்றக் கட்டடத்திற்குப் பக்கத்திலே வழக்கறிஞர்கள் ஓய்வு எடுப்பது வழக்கம் இல்லை என்று கருதுகிறேன். அவர்களுக்கு அங்கே நல்ல வேலை இருக்கும். இருந்தாலும் ஒரு இடத்தில் தங்க வேண்டுமென்பதற்காக ஒரு பெரிய ஹால் அமைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் எங்கே வழக்கறிஞர் பயிற்சி எடுக்கிறார்களோ அங்கே அப்படிப்பட்ட ஒரு ஹால் அமைக்கப்பட்டிருக்கிறது.



### நல்லாற்றின் குறுக்கே உள்ள பாலம்

* 357 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருப்பூரிலிருந்து அவனாசி செல்லும் பாதையில் நல்லாற்றின் குறுக்கே உள்ள பாலம் பழுது பட்டிருப்பதால் அதை புதுப்பிக்கும் நோக்கம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இல்லை.

**திரு. சு. துரைசாமி :** அமைச்சர் அவர்கள் இல்லையென்று பதில் சொன்னார்கள். அந்தப் பாதை 22 அடி அகலம் உள்ள பாதையாக இருக்கிறது. பாலம் 12 அடி அகலம் இருக்கும் காரணத்தால் அடிக்கடி விபத்து ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, பாலத்தைப் புதுப்பிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பாலத்தைப் புதுப்பித்துக் கட்டும் அளவுக்கு நிலைமை இல்லையென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் சில மராமத்துகள் செய்யப்பட்டிருக்கின்றன.

### மதுரை நகரில் கட்டப்படும் மேம்பாலங்கள்

* 358 வினா—**திரு. கு. திருப்பதி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மதுரை நகரில் கட்டப்படும் இரண்டு மேம்பாலங்களின் வேலை எப்போது முடியும்?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தேசிய நெடுஞ்சாலை எண். 7-ல் மைல் 300/2-ல் சுப்ரமணியபுரத்திற்கு அருகில் உள்ள மேம்பாலத்தின் பணி, 1972 பிப்ரவரியில் முடியலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தேசிய நெடுஞ்சாலை எண். 7-ல், மைல் 300/7-ல் மீனாட்சி மில்லுக்கு அருகில் அமைக்கப்போகும் மேம்பாலத்திற்கான ஒப்பந்தப்புள்ளிகள், அண்மையில் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டது. இப் பணியும் ஒப்பந்தக்காரரிடம் இடத்தை ஒப்புவித்த தேதியிலிருந்து 18 மாதங்களில் முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. கு. திருப்பதி :** சுப்பிரமணியபுரம் கேட்டுக்கு அருகே இருக்கும் பாலம் அமைக்கும் வேலை வேகமாக நடைபெறுகிறது. மீனாட்சி மில் அருகே கட்டப்படும் பாலம் வேலை துவங்காமல் இருக்கிறது. அதற்கு ஏதாவது குறிப்பிட்ட காரணம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** குறிப்பிட்ட காரணம் ஒன்றும் இல்லை. மீனாட்சி மில் அருகே இடம் இப்போதுதான் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இடத்தை ஒப்படைத்து 18 மாதத்தில் தொடங்கப்படும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இந்த மேம்பாலம் கட்டப்படாமல் இருக்கும் காரணத்தால் ஒன் வே டிராபிக் என்று வைத்து அதனால் பெரிய சிரமங்கள் இருக்கும் காரணத்தால் மூன்று மாத காலத்திற்குள்ளாக மேம்பாலத்தைக் கட்டுவதற்குத் தீவிர நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** 25 ஆண்டுகளுக்குப் பிறகு மேம்பால வேலைகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. மூன்று மாத காலத்திற்குள் வேலையைத் துவங்க முடியாது. வேலைகளைத் துரிதப்படுத்த அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

*Age-limit for Government appointments*

* 338. Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal to enhance the age-limit for Government appointment from 25 years to 30 years in Tamil Nadu Government Service; and

(b) if so, when it will be implemented ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) & (இ) இது குறித்துப் பெறப்பட்ட முறையீடு ஒன்று ஆய்வில் உள்ளது. இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

DR. H. V. HANDE : Sir, the Hon. Chief Minister in his reply stated that investigations are going on with regard to this. May I know the terms of reference that he has allotted for this and on what basis the Hon. Chief Minister has asked them to investigate the whole matter? May I know all the details concerned about it ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் வேலை தேடுவோர் கழகம் என்ற கழகத்தின் சார்பில் 19—4—1971-ல் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதிலே அரசுப் பணிகளிலே சேர்பவர்களுக்கு உயர்ந்தபட்ச வயது 25 என்று இருப்பதை 30 ஆக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முறையீடு செய்தார்கள். அதைப் பற்றி ஆராய்வதற்காக பப்ளிக் சர்விஸ் கமிஷனுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அவர்களுடைய கருத்துக்காக அரசு காத்திருக்கிறது.

**திரு. பி. எஸ். மணியன் :** அரசு ஊழியர்களும் மற்றத் துறைகளில் இருக்கக்கூடிய ஊழியர்களும் ஓய்வு பெறும் வயது வேறு வேறு விதமாக 55, 58, 60 என்ற வகையில் இருக்கிறது. இவைகளை எல்லாம் மாற்றி ஒரே சீராக 55 என்று குறிப்பிட அரசு ஆராயுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அந்த லட்சியத்தை நோக்கித்தான் அரசு பல காரியங்களை இப்போது எடுத்துக் கொண்டு நிறைவேற்றி வருகிறது.





**திரு. எம். ஆர். கண்ணன் :** இப்போது வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிறது. 25 வயதுக்குள் சர்க்கார் வேலை கிடைக்கவில்லை என்றால் பெருவாரியான இளைஞர்கள் தங்கள் வாழ்க்கையே பாழ்பட்டுப் போய்விட்டதாக எண்ணிக் கொள்ளுகிறார்கள். ஆகவே, இந்த வயது வரம்பை 40 வயது என்று ஆக்கி அந்த அளவுக்கு பென்ஷன் மற்ற வசதிகளை அவர்கள் சர்வீசுக்கு ஏற்ப கொடுத்து வேலையில்லாத் திண்டாட்டத்தின் தீவிரத் தன்மையைக் குறைக்க அரசுக்கு எண்ணம் உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** 25 வயது என்று வரம்பு இருக்கும்போது சென்ற ஆண்டு பப்ளிக் சர்விஸ் கமிஷன் குரூப் 4 தேர்வு எழுதியவர்கள் சுமார் 26,000 பேர், அரசுக்குத் தேவையான பணியாளர்கள் 2,500 அல்லது 3,000 பேர்தான். 25 வயது என்ற வரம்பு இருக்கும்போதே 26,000 பேர் தேர்வு எழுதியிருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. செ. சதாசிவம்:** இப்போது ஆசிரியர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்காக பயிற்சித் திட்டத்தின்கீழ் வேலை கொடுக்கப்படுகிறது. வேலையில்லாமல் நீண்ட நாட்களாக காத்துக்கொண்டிருக்கும் அவர்களுக்கு வயது வரம்பு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா ? செகண்டரி பள்ளிகளுக்குத் தனியாகவும், பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளுக்குத் தனியாகவும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** வயது வரம்பு தளர்த்தப்படுவதற்காகத்தான் சில சலுகைகள் அளிக்கப்படுகின்றன.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சிலதடவை போட்டிப் பரீட்சை எழுதி அவர்கள் அதில் பாஸ் பண்ணி இருந்தால்கூட செலக்ஷன் ஆகாமல் போய் விடுகிறார்கள். அந்தக் காரணத்தால் 25 வயது என்பதற்குப் பதிலாக 30 வயது என்று ஆக்க வேண்டுமென்று நெல்லை மாவட்டத்திலிருந்து மட்டுமல்ல, மற்ற மாவட்டங்களில் இருந்தும் முறையீடுகள் வருகின்றன. இது சம்பந்தமாக அரசு சீக்கிரம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஏற்கெனவே குறிப்பிட்டது போல் பப்ளிக் செர்விஸ் கமிஷன் அறிக்கை வந்த பிறகு உடன் முடிவு எடுக்கப்படும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** பிற்பட்ட வகுப்பினர், அரிசனங்கள் போன்றவர்களுக்கு இப்போது இருக்கின்ற வயதைக் கூட்டுவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா ? அதே போன்று எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில் பதிவு செய்திருக்கின்றவர்களுடைய வயதை உயர்த்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஷெட்யூல்டு கிளாஸஸ், ஷெட்யூல்டு டிரைப்ஸ், பாக்வார்டு கிளாசஸ் ஆகியவர்களுக்கு சர்வீஸ் கமிஷனில் இப்போதே சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கிறது. வயது வரம்பு தளர்த்தப்பட்டிருக்கிறது. எம்ப்ளாய்மெண்ட்

எக்ஸ்சேஞ்சில் பதிவு செய்திருக்கின்றவர்களுக்கு வயது வரம்பு தளர்த்தப்படுமா என்று கேட்டார்கள். செர்வீஸ் கமிஷன் அறிக்கை வந்த பிறகு இதைப்பற்றியெல்லாம் முடிவு செய்யப்படும்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** 25 வயது என்று இருப்பதை 30 ஆக உயர்த்துவது பற்றி பப்ளிக் செர்விஸ் கமிஷனின் ஆராய்ச்சியில் இருப்பதாக கனம் முதல் அமைச்சர் பதில் கூறினார்கள். 25 வயது என்று இருக்கும்போதே சிலருக்கு நாட் கணக்கில், வாரக் கணக்கில், மாதக் கணக்கில் வித்தியாசம் ஏற்படுவதன் காரணமாக டிஸ்குவாலிபிகேஷன் ஆகக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இப்படி குறுகிய தினங்களாக இருந்தால் அரசாங்கம் ரிலாக்சேஷன் கொடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்போதேகூட அப்படி அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். வித்தியாசம் நாள் கணக்கில், வாரக் கணக்கில் இருந்தால் சலுகை அளிக்கப்படுகிறது.

## 'Dine and Dance' features in hotels in City

* 339. Q.—Thiru S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Chief Minister be pleased to state the number of vegetarian and non-vegetarian hotels in which 'Dine and Dance' features have been permitted in Madras City ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சென்னை மாநகரில் ஆறு புலால் உணவு ஓட்டல்களில் உணவு-நடன நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன. சைவ ஓட்டல் எதிலும் அத்தகைய நிகழ்ச்சி நடைபெறுவதற்கு அனுமதிக்கப்படவில்லை.

**திரு. எம். தேவராசன்:** சில நாட்களுக்கு முன்னால் இந்த புலால் உணவு நாட்டிய ஓட்டலில் இருந்து பாம்பு ஒன்று தப்பித்து ஓடி விட்டதாகவும், அடுத்த நாள் பிடிபட்டதாகவும் சொல்வது உண்மையா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பாம்பு தப்பித்ததா அல்லது பாம்பு நாட்டியம் ஆடியவர்கள் தப்பித்தார்களா என்பது தெரியாது.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** ஓட்டல்களில் இதுபோன்ற நாட்டியங்களுக்கு ஆபாசமில்லாது நடத்த அனுமதி அளிக்கப்பட்டதாகச் சொன்னார்கள். ஆனால் இப்பொழுது சென்னையில் உஷா அய்யர் என்ற அம்மையார் ஆங்கில பாடல்களைப் பாடும்போது பார்த்துக் கொண்டிருப்பவர்களில் சிலர் ஆண்களும் பெண்களுமாகச் சேர்ந்து ஆடுகின்றார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ? அந்த நடனத்திற்கு அனுமதி கொடுத்திருக்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** உஷா அய்யர் கச்சேரியைப் பொறுத்தவரை நான்கூட இதுவரை வெறும் இசைக் கச்சேரி என்றுதான் கருதிக் கொண்டிருந்தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைப் பார்த்துவிட்டு இந்த மன்றத்திற்குத் தகவல் கொடுத்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.





**திரு. கோவை செழியன் :** இப்படி உணவு விடுதிகளில் நடனம் என்ற பெயரால் ஸ்ட்ரிப்டீஸ் என்ற நடனங்கள் அதாவது உடம்பில் இருக்கும் துணிகளை ஒவ்வொன்றாகக் கழற்றிவிட்டு கடைசியாக அம்மணத்தோடு ஆடுகிறார்கள். இதனால் உணவு அருந்த வருகிறவர்கள் மனது பாதிக்கப்படுவதால் இந்த நடனம் தடைசெய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இப்போதே இந்த நடனங்கள் நடத்தப்படுவதற்குச் சில விதிமுறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவை மீறப்படுகின்ற உணவு விடுதிகள் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1. எந்த இடத்திலும் ஆபாச நிகழ்ச்சிகள் எதுவும் நடத்தப்படக்கூடாது அல்லது அந்த நிகழ்ச்சிகளை நடத்த அனுமதிக்கக் கூடாது.

2. கவர்ச்சியின் பொருட்டு அணிந்துள்ள ஆடைகள் நீக்கப்பட்டால், அத்தகைய நிகழ்ச்சி கண்டிப்பாகத் தடைச்செய்யப்படுகிறது.

3. மெல்லிய அல்லது ஓரளவு மெல்லிய அல்லது மிகக் குறைந்த ஆடைகளை அணிந்துகொண்டு நிர்வாணமாகவோ அல்லது அரை நிர்வாணமாகவோ நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு எந்தவொரு நபரும் அனுமதிக்கப்படமாட்டார்.

4. சிற்றின்ப உணர்ச்சிகளை அல்லது பால் உணர்ச்சிகளைத் தூண்டக்கூடிய வகையில் எழுதப்பட்ட பாடல், நடனப்பாட்டு அல்லது பிற சைகைகள் அத்தகைய இடங்களில் அனுமதிக்கப்படமாட்டாது.

5. நிகழ்ச்சிக்கென குறிப்பிடப்பட்ட மேடையில் மட்டுமே ஒவ்வொரு நிகழ்ச்சியும் நடத்தப்பட வேண்டும். மேற்சொன்ன நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொள்ளும் கலைஞர்கள் வேறு எவருடனோ அல்லது காட்சிக்கு வந்திருப்பவர்களுடனோ நெருங்கிப் பழகக் கூடாது.

6. நிகழ்ச்சியில் பங்கு கொண்டுள்ள கலைஞர் அல்லது கலைஞர்கள் தங்களுடைய உடல் மீதிருந்து எந்தப் பொருளையும் அல்லது ஆடையின் ஒரு பகுதியை நீக்கி, காட்சிக்கு வந்திருப்பவர்கள் மீது அவற்றை எறிவது கூடாது அல்லது அவ்வாறு செய்வது அனுமதிக்கப்படக்கூடாது.

7. இத்தகைய நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்கு 18 வயதிற்குக்கீழ் உள்ளவர்கள் எவரும் அனுமதிக்கப்படக் கூடாது.

இப்போது கூறப்பட்டவைகள் மீறப்பட்டால், மாநகரக் காவல் துறை நடவடிக்கை எடுப்பதற்கு இப்போதே விதிமுறைகள் இருக்கின்றன. இவைகளை மீறிய இரண்டு மூன்று உணவு விடுதிகள் மீது நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கிறது.

[1971 ஜூலை 21

**திரு. கு. காமாட்சி :** தமிழ்ப் பண்புக்கு ஒத்து வராத இந்த மாதிரி நிகழ்ச்சிகளுக்குத் தடை விதிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தமிழ்ப் பண்பாட்டுக்கு விரோதமாக எந்த நிகழ்ச்சியும் நடைபெறக்கூடாது என்பதற்காகத்தான் இந்த விதிகள் இயற்றப்பட்டுள்ளன.

**திரு. எஸ். முருகையன் :** சென்னையில் எந்தெந்த ஓட்டல்களில் இந்த நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன என்று முதலமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஓட்டல் அருண், ஓட்டல் பேபர், ஓட்டல் இம்பீரியல், பால்ஸ் ரெஸ்டாரெண்ட், ஓட்டல் சவேரா, ஓட்டல் கேலார்டு ஆகிய ஆறு உணவு விடுதிகளில் இந்த நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. எங்கெங்கே நடைபெறுகிறது என்பதை மாத்திரம் கேட்டார்கள். விதிகளுக்கு மீறி நடன நிகழ்ச்சிகள் நடைபெற்ற இடங்களில் நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த இடங்கள் 11–11–70 அன்று ஆபாச நடனங்களை நடத்தி, உரிமத்தின் சிறப்பு நிபந்தனைகளை மீறியதற்காக பால்ஸ் ரெஸ்டாரெண்டின் உரிமம் நிறுத்தி வைக்கப்பட்டது. அவர்கள் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். 24–10–70-ல் ஓட்டல் இம்பீரியல் சோதனையிடப்பட்டபோது நிபந்தனைகள் மீறப்பட்டிருப்பதைப் பார்த்து வழக்குத் தொடரப்பட்டு அது தற்போது விசாரணையில் உள்ளது. 28—11—70-ல் அருண் ஓட்டலில் சோதனையிட்டபோது நிபந்தனைகள் மீறப்பட்டிருப்பது கண்டு வழக்குத் தொடரப்பட்டு 100 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. நா. வீராசாமி :** இப்படிப்பட்ட உணவு-நடன நிகழ்ச்சிகள் சென்னையில் உள்ள அசைவ ஹோட்டல்களில்தான் நடைபெறுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சைவ ஹோட்டல்களுக்குப் போகிறவர்கள் என்ன பாவம் செய்தார்கள் ? இப்படிப்பட்ட சைவ ஹோட்டல்களிலும் உணவு-நடன நிகழ்ச்சிகள் நடைபெற ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சைவர்களுக்கு சிவ பார்வதி நடனம் ஏற்பாடு செய்யலாம்.

**திரு. துரைமுருகன் :** இத்தகைய நடனங்கள் எப்படி நடைபெற வேண்டுமென்பதற்குப் போடப்பட்ட விதிகளைப் படித்துக் காட்டினார்கள். அந்த விதிகளுக்கு உட்பட்டு நடனமாடுவதாய் இருந்தால் அது நடனமாகத் தெரியாது. அது பரதநாட்டியம் போலத்தான் இருக்கும். வெளிநாடுகளில் இருந்து வரக் கூடிய டூரிஸ்டுகள் இந்தமாதிரியான நிகழ்ச்சிகள் இருப்பதைத்தான் விரும்புகிறார்கள். ஆகவே வெளிநாடுகளில் இருந்து அதிகமான டூரிஸ்டுகள் இங்கே வருவதற்கு இந்த நடனங்கள் கவர்ச்சிகரமான முறையில் அமைவதை அரசு அனுமதிக்குமா ?



1971 ஜூலை 21]

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நம்முடைய பண்புகளைக் கெடுத்துக் கொண்டாவது அப்படி ஒரு சுற்றுலாவை வளர்க்க வேண்டுமென்று தமிழக அரசு விரும்பவில்லை.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** முதல் அமைச்சர் அவர்கள் பேசும்போது நம்முடைய பண்பு கெடக்கூடாது என்று சொன்னார்கள். பண்பு கெடக்கூடாது என்பதற்காக இத்தகைய விதிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தபோதிலும் அந்த விதிகளை மீறியே நடக்கிறது. வழக்குத் தொடர்ந்தாலும் உயர்நீதி மன்றத்திற்குச் சென்று நிவாரணம் தேடிக் கொள்கிறார்கள். ஆகவே வெளி நாட்டவர்கள் இங்கே வரும்போது நம் நாட்டுப்பண்பையும், பண்பாட்டையும் கண்டு களிக்கவே விரும்புவதால் இந்த உணவு நடன நிகழ்ச்சிகளை அறவே தடை செய்ய அரசு யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** வெளிநாட்டவர்கள் தமிழ் நாட்டுக்கு வரும்போது தமிழ் நாட்டினரின் பண்புகளையே அறிந்து கொள்ள வருகிறார்கள். ஒரு ஆண்டுக்கு முன்பு அமெரிக்கர் ஒருவரை நான் சந்தித்தபோது அவர் என்னிடம் சொன்னார்—" உங்கள் நாட்டுப் பண்பாடு, கலாசாரம், உணவு உடை வகைகளை அறிந்து கொள்ளவே நாங்கள் இங்கு வருகிறோம். ஆனால் இங்கே உள்ளவர்கள் எங்களைப்போல ஆடை அணிந்து கொண்டிருக்கிறார்கள். எங்கள் நாட்டுக்கும் இந்த நாட்டுக்கும் வித்தியாசம் தெரியவில்லை. என்றார்கள். இதே கருத்தைத்தான் மாண்புமிகு உறுப்பினர்களும் இங்கே சொன்னார்கள். ஆகவேதான் நம் நாட்டுப் பண்பாடு காக்கப்படுகிற அளவுக்கு இந்த நிகழ்ச்சிகள் நடைபெறவேண்டுமென்று இந்த அரசு விரும்புகிறது.

**திரு. ரா. ரா. முனுசாமி :** சென்னை ஓட்டல்களில் மாத்திரம் உணவு நடன நிகழ்ச்சிகள் இருப்பதால் வட்டம், மாவட்டங்களில் இருந்து ஜனங்கள் இங்கே வருவதனால் இங்கே உள்ளவர்களுக்கும் நெரிசல் ஏற்படுகிறது. ஆகவே வட்டம், மாவட்டங்களில் இந்த ஓட்டல்களையும் இந்த நடன நிகழ்ச்சிகளையும் ஏற்படுத்த உத்தரவாதம் அளிக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இவைகள் சென்னையில் மாத்திரம் இப்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. வட்ட, மாவட்ட ரீதியாக இந்தக் காரியத்தைச் செய்வதற்கு இப்போது உத்தேசம் எதுவும் இல்லை.

**திரு. சொ. காவேரிமணியம் :** மதுரை மாநகராட்சி எல்லைக்குள் இதுபோல உணவு நடன நிகழ்ச்சிகள் நடத்த எந்த ஓட்டலாவது அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மதுரைக்கு தனியாகக் கேள்வி போட்டால் அந்த விவரங்களை அறிந்து உறுப்பினர் பயன்படுத்திக்கொள்ளலாம்.

[1971 ஜூலை 21

**திரு. கே. எ. வகாப் :** தற்போது சென்னை சீடோ கண்காட்சி என்பதாக 15 நிமிடங்கள், 20 நிமிடங்கள் நடைபெறுவதற்கு 2 ரூபாய், 3 ரூபாய் என்பதாகக் கட்டணம் வசூலிக்கப்படுகிறதே, மாணவர்கள் எல்லாம் அதிக அளவில் செல்வதாகச் சொல்லப்படுவதை அரசு அறியுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சென்னையில் நடைபெறுகிற கண்காட்சி மட்டுமல்ல, தமிழகத்தில் வேறுசில மாவட்டங்களிலும் இதுபோல நடைபெறுவதாக என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு, உடனடியாக தலைமை போலீஸ் அதிகாரியினிடத்திலும் நான் தெரிவித்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது அந்தக் காட்சிகள் மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. என். கணபதி :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சொல்கிற போது ஓட்டல் நடனங்கள் நம்முடைய பண்பாட்டுக்கு விரோதமாக இருக்கக்கூடாது என்று சொன்னார்கள். ஆகவே நம்முடைய கலாசாரம், பண்பாட்டுக்கு ஏற்ப பரதநாட்டியம் அங்கே நடைபெற அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பரதநாட்டியம்தான் நம்முடைய பண்பாடு என்று கூறவில்லை. ஆபாசங்களைத் தடுப்பதும் நம் பண்பாடு ஆகும்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, do these restrictions apply only to hotels or to other types of public places also ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பொது இடங்களை ஆபாசப்படுத்தக்கூடாது என்று சட்டம் இருக்கிறது. அதைக் காவல் துறையினர் கண்காணித்து வருகிறார்கள்.

**திரு. ச. சங்குமுத்துத் தேவர் :** முதல் அமைச்சர் அவர்கள் ஓட்டல்களில் உணவு-நடன நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான விதிகளைத் தெரிவித்தார்கள். நமது அண்ணா சாலையில் உணவு அருந்த காரில் வருபவர்கள் ரோடிலிருந்தே உணவு அருந்துவதும், அதனால் போக்குவரத்து பாதிக்கப்படுவதுமாக இருக்கிறது. ஓட்டலுக்குள் இருக்கும் உணவு ரோடுக்கு வந்துவிட்டதைப் போல ஓட்டலுக்குள் இருக்கும் நடனம் ரோடுக்கு வந்துவிடக்கூடாது. அதுவும் அரசாங்கம் மதுவிலக்கை ஒத்திவைத்திருக்கிற த[illegible]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியே போடாது இது போலப் பேசிக்கொண்டே போவதை நான் அனுமதிக்கவில்லை.

**திரு. கோவை செழியன் :** தமிழ்நாட்டினுடைய கலை, கலாசாரத்தை அறிவதற்காகவே மேலைநாட்டினர் இங்கே வருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே நமது ஓட்டல்களில் பரத நாட்டியத்தோடு, காக ஆட்டம், பொய்க்கால் குதிரை, குறவன் குறத்தி நடனம் ஆகியவற்றை அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?



1971 ஜூலை 21]

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அரசாங்கம் ஏற்பாடு செய்யாது. உறுப்பினருக்குப் பண வசதி இருந்தால் இதுபோன்ற நடன நிகழ்ச்சிகள் அமைய ஒரு ஓட்டலைத் துவங்கலாம்.

**திரு. துரைமுருகன் :** சீடோ கண்காட்சிக்கு அதிக அளவில் மாணவர்கள் போவதாகச் சொன்னார்கள். என்னுடன் வந்தால் அழைத்துப்போய் காட்டுகிறேன். அங்கே உள்ளவர்கள் எல்லோரும் நரைத்த தலையினராகவே இருக்கிறார்கள் என்பதை அரசு அறியுமா ?

(விடை இல்லை).

**திரு. எம். தேவராசன் :** பேரவைத் தலைவரவர்களே, உல்லாசப் பயணிகளை பெரும் அளவில் கவரும் வகையில் உதகமண்டலத்தில் இத்தகைய விடுதிகள் நடத்த அனுமதி அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** உதகையில் இது போல் விடுதிகள் அமைக்க யாரும் அனுமதி கேட்கவில்லை. அப்படி அனுமதி கேட்டுப் பெறுகிற வரையில் மாண்புமிகு உறுப்பினர் சென்னையைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

## பயிர் காப்புறுதித் திட்டம்

*** 359 வினா—திரு. கே. என். குமாரசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விவசாயிகளுக்கு பயிர் இன்சூரன்ஸ் திட்டம் கொண்டு வர உத்தேசம் ஏதேனும் அரசிடம் உண்டா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது அமுலுக்கு வரும் ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) & (இ) இந்திய அரசால் மாநில அரசுகளுக்கு அனுப்பப்பட்ட பயிர்காப்புறுதி குறித்த வரைவு மாதிரி மசோதாவும் மாதிரித் திட்டமும் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

**திரு. கே. என் குமாரசாமி :** தலைவரவர்களே, மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கமும் சேர்ந்து மற்ற பகுதிகளில் எப்படி பயிர் கெட்டாலும் கூட நஷ்ட ஈடு கொடுக்கத் திட்டம் கொண்டு வர இருக்கிறார்களோ அது மாதிரி விவசாயிகளுக்கு இத் திட்டத்தைப் பயன்படுத்தி அமுல்படுத்துவதற்கான முயற்சிகளை இந்த அரசாங்கம் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவரவர்களே, இந்த காப்புறுதி திட்டம் முழுவதுமே மத்திய அரசு பார்க்க வேண்டிய திட்டமாக இருக்கிறது. மாநில அரசு எந்தெந்த வகையில் எப்படி எப்படி அமுல்படுத்தலாம் என்பதற்கு விதிமுறைகள் தயாரிக்கப்பட்டு இருக்கின்றன. அந்த விதிமுறைகள் உருவாக்கப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

[1971 ஜூலை 21

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவரவர்களே, பயிர்களின் பேரில் கடன் கொடுக்கப்படும் என்று நேற்று விவாதத்தின்போது அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதே போன்று இந்த பயிர்களின் மேல் இன்சூரன்ஸ் செய்தால் விவசாயிகளுக்கு மிகவும் நன்மையாக இருக்கும். மத்திய அரசு உத்தரவை எதிர்பார்க்காமல் பயிர் இன்சூரன்ஸ் திட்டம் அமுல் நடத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவரவர்களே, இந்தத் திட்டதின்படி புன்செய் பயிர்கள் சோளம், கம்பு, கேழ்வரகு, மற்றும் நெற்பயிர்களுக்காக பயிர்காப்புறுதியைக் கொண்டு வரும் வாய்ப்புக்கூறுகள் குறித்து ஆய்வு செய்வதற்காக ரூ. 38,591 செலவில் ஒரு திட்டத்தை இரண்டாண்டு கால அளவுக்கு அண்மையில் 18—6—1970-ம் நாளிட்ட அரசாணை எண் 1841-ல் ஒப்பளிக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தின் கீழ் எந்தப் பயிறும் காப்புறுதி செய்யப்படவில்லை. பயிர்காப்புறுதியை நிறைவேற்றி வைப்பதற்காக முறையான திட்டம் ஒன்றை உருவாக்குவதன் முன்னர், கடந்த 20 ஆண்டு காலத்தில் பயிர்களின் விளைச்சல், மண்வளம், மற்றும் விளைச்சலின்மைக்கான காரணங்கள் தொகுக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு, விளைவுகள் வகுத்துரைக்கப்படும். இத் திட்டம், கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த உடுமலைப் பேட்டை, தாராபுரம், காங்கேயம், கோபி ஆகிய வளர்ச்சி வட்டாரங்களில் புன்செய் நிலச்சோளம், சம்பு, கேழ்வரகு ஆகிய பயிர்கள் குறித்தும், திட்டப்பணிப்பகுதிகள் மற்றும் திட்டப் பணிப்பகுதிகளல்லாத பிற பகுதிகளின் கீழ் உள்ள நெற்பயிர்கள் குறித்தும் நிறைவேற்றப்படுகிறது. இம்முன்னோடித் திட்டம் 6—8—1970-ல் துவக்கப்பட்டு தொடர்ந்து நடந்து வருகிறது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவரவர்களே, இந்தப் பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தை தஞ்சாவூர் ஜில்லாவில் இருக்கும் நஞ்சை நிலங்களுக்கும் விஸ்தரிக்க அரசாங்கம் ஆலோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தமிழ் நாடு பூராவும் எல்லாப் பயிர்களுக்கும் வேண்டிய முறையில், அந்த கால அளவு, மண்வளம் ஆகியவற்றை பரிசீலனை செய்து அந்த வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

THIRUMATHI JOTHI VENCATACHELLUM : This insurance scheme is an important one for farmers. I think the model Bill of the Government of India is under the consideration of the State Government. Will the State Government, since crop insurance scheme's implementation comes under their control, and it is their responsibility, come forward to place the model Bill before a Joint Select Committee ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவர் அவர்களே, இப்போதுதான் அந்த திட்டத்திற்கு வேண்டிய விதிமுறைகள் வகுக்கப்பட்டு வருகிறது. அந்த விதிமுறைகள் ஆய்வு முடிந்த பிறகு, கனம் உறுப்பினர்களின் யோசனையைப் பரிசீலிக்கலாம்.



1971 ஜூலை 21]

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, மத்திய அரசாங்கத்திலிருந்து டிராப்ட் வந்து இருக்கிறது என்று கூறினார்கள். அதை அங்கத்தினர்களுக்கு வழங்கச் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா? அதன்பேரில் அங்கத்தினர்கள் கருத்து தெரிவிப்பதற்கு வழி செய்யுமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** அந்த விதிமுறைகள் பரிசீலனை செய்யப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்ட பிறகு அங்கத்தினர்களுக்கு வழங்க முயற்சிக்கலாம்.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவரவர்களே இந்தத் திட்டம் அமெரிக்கா போன்ற நாடுகளில் மிக உயர்ந்த அளவிற்குச் செயல்பட்டு வருகிறது. அவற்றை அமைச்சர் அவர்கள் நேரில் சென்று கண்டறிய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** இப்போது அப்படி ஒன்றும் இல்லை.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, இப்படிப்பட்ட கிராப் இன்சூரன்ஸ் திட்டம் அமெரிக்கா, இத்தாலி, தாய்வான் போன்ற நாடுகளில் வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. நம்முடைய நாட்டிலும் கூட, மகாராஷ்டிரப் பகுதியில் அது அமுல்படுத்தப்பட வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கிறது. நம்முடைய மாநிலத்திலே சில முன்னோடித் திட்டமாக கோயம்புத்தூர் மாவட்டத்தில் சில இடங்களைத் தேர்ந்தெடுத்து இருப்பதாகச் சொன்னார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் சாத்தனூர் பகுதியில், திருவண்ணாமலை போளூர் பகுதிகளில் அந்த மாடல் திட்டம் அமுல் படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** பொதுவாக இப்படிப்பட்ட காப்புறுதிகளின் மேல் மக்களுக்கு நம்பிக்கை வருவதில்லை. அதோடு பயிர்பாதுகாப்பு கொடுப்பதில் சிக்கல் இருக்கிறது. இதிலே குத்தகைதாரர்கள் நிலச் சொந்தக்காரர்கள் இருக்கிறார்கள். யார் யார் எப்படி எப்படிப் பயிர் செய்கிறார்கள் என்று இருக்கிறது. காப்புறுதித் திட்டத்தைப்பற்றி விளக்குவதற்கு விளம்பரம் செய்வதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கிறது. திருவண்ணாமலைக்கு என்று தனித் திட்டம் இப்போது தேவையில்லை.

*Conference of Minister for Tourism*

• 360. *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether any conference of Ministers for Tourism was held in Ooty about the 17th May 1971; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், கேரளா, மைசூர், பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த சுற்றுலா அமைச்சர்களின் மண்டல மாநாடு 1971-ஆம் ஆண்டு மே திங்கள் 17, 18-ஆம்

தேதிகளில் உதகமண்டலத்தில் நடைபெற்றது. இதற்கு முன்னோடியாக அதிகாரிகளின் கூட்டம் 16-ஆம் தேதி நடைபெற்றது. தமிழக அரசு சார்பில் நடைபெற்ற இம் மாநாடு தென் மாநிலங்களின் சுற்றுலா வளர்ச்சி சம்பந்தமாகப் பொதுவான பிரச்சனைகளைக் கலந்து ஆலோசித்து ஒருங்கிணைந்த முறையில் அவற்றிற்குத் தீர்வு காணும் நோக்கத்துடன் இம் மாநாடு கூட்டப்பட்டது.

ஆந்திர மாநில சுகாதார அமைச்சர், பாண்டிச்சேரி முதலமைச்சர், கேரள அரசு சுற்றுலா அமைச்சர், மைசூர் அரசின் உள் துறைச் செயலாளர் ஆகியோரும் தமிழக, பாண்டிச்சேரி அரசுகளின் தலைமைச் செயலாளர்களும் ஆந்திர கேரள மாநிலங்களைச் சேர்ந்த உயர்தா அதிகாரிகளும், இந்திய அரசு சுற்றுலாத்துறை அதிகாரிகளும் இம் மாநாட்டில் கலந்து கொண்டனர். (ஏர் இந்தியா, இண்டியன் ஆயில் போன்ற) சுற்றுலாச் சம்பந்தப்பட்ட பொதுத்துறை நிறுவனங்களின் பிரதிநிதிகளும், ஓட்டல் சங்கம், சுற்றுலாத் தொடர்பு உள்ள வர்த்தக நிலையங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும், இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். தென் மாநிலங்களின் சுற்றுலா வளர்ச்சிக்கான பல பிரச்சினைகளையும், திட்டங்களையும் இம்மாநாடு கலந்தாலோசித்தது. இம்மாநாட்டின் தீர்மானங்களை நிறைவேற்றினுல் தென் மாநிலங்களின் சுற்றுலா வளர்ச்சி வளம் பெறும். உதாரணமாகத் தென் மாநிலங்களில் கூட்டுச் சுற்றுலாத் திட்டம் ஒன்றினை உருவாக்கவும், அதுபற்றிய விவரங்களைப் பரிசீலனை செய்யவும், தென் மாநில அரசுகளின் பிரதிநிதிகள் கொண்ட கூட்டுக் குழு ஒன்றினை நிறுவ தீர்மானிக்கப்பட்டது. இம்மாநாடு நிறைவேற்றிய நான்கு தீர்மானங்கள் சபையில் வைக்கப்பட்டுள்ளன. இம் மாநாட்டின் நடவடிக்கைகளின் அறிக்கைகளை இதர மாநில அரசுகள் பரிசீலனை செய்து செயல்படுத்தும்படி அனுப்பப்படுகின்றன.

திரு. சோ. கருணைநாதன் தலைவரவர்களே, இந்தச் சுற்றுலாத் துறை அமைச்சர் மாநாட்டுக்கு வந்திருந்த மற்ற அமைச்சர்கள் தங்கள் மாநிலங்களுக்கு வரும்படி தமிழ்நாட்டு அமைச்சருக்கு அழைப்பு விட்டார்களா ? மற்ற மாநிலங்களில் அப்படிப்பட்ட மாநாடு நடத்த திட்டம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** அடுத்த மாநாடு கேரளத்தில் இருக்கிற தேக்கடியில் நடைபெறுகிறது. அதற்கு அழைப்பு விடுக்கப்பட்டு இருக்கிறது. தென் பிராந்திய அமைச்சர்கள் கலந்து கொள்வதற்காக ஒப்புதல் அளித்து இருக்கிறார்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, இந்தச் சுற்றுலா இடங்களில் மிகக் குறைந்த வருவாய் உடைய மக்களுக்கு வசதிகள் செய்வது அவசியம் என்ற அருமையான யோசனையை அந்த மாநாட்டில் மாண்புமிகு அமைச்சர் கூறியதாகப் பத்திரிகையில் படித்தேன். அந்தக் கருத்துக்கு ஏற்றவாறு ஊட்டி, கொடைக்கானல், குற்றாலம் போன்ற இடங்களில் சாதாரண மக்கள் தங்கக்



கூடிய வகையில் இடங்கள் அமைக்க அரசு முன்வருமா, அப்படிப்பட்ட திட்டம் ஏதேனும் அமைச்சர் வைத்து இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** பேரவைத் தலைவரவர்களே, இன்று கொடைக்கானல் போன்ற மற்ற இடங்களில் பள்ளிக்கூடம் சம்பந்தப்பட்ட உணவு விடுதிகளையும் ஹாஸ்டல்களையும் எடுத்து, அதைக் கோடைக்காலங்களிலே வரும் பயணிகளுக்கு வழங்கலாம் என்ற திட்டத்தை அரசு மேற்கொள்கிறது. மத்திய அரசு ரூ. 25 கோடி இந்தச் சுற்றுலாத் திட்டத்திற்காக ஒதுக்கியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தில் தென் மாநிலத்திற்கு என்று தனியாக எந்தத் தொகையும் ஒதுக்கப்படவில்லை. அதை அந்த மாநிலத்தில் கூறி, தென் மாநிலங்களுக்கு ரூ. 7 அல்லது ரூ. 10 கோடி வரை ஒதுக்கி, அந்தந்த மாநிலத்தில் உள்ள மக்கள், உள்நாட்டிலே பயணம் செய்யும் மக்களுக்கு வசதிகளைச் செய்து தரும் காரியங்களைச் செய்வதற்கு வழி வகை செய்ய வேண்டுமென்று மத்திய அரசுக்கு எழுதிக் கேட்டுக்கொள்ளப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### *Bonus for workers of State Transport Service*

* 361. *Q.*—THIRU A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Transport be pleased to state :

(*a*) whether a section of the workers of the State Transport Service have not been paid bonus for 1970–71; and

(*b*) if so, the reasons therefor ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) தமிழ் நாடு அரசு போக்குவரத்துத் துறையில் அக்டோபர் தொடங்கி செப்டம்பர் முடிய உள்ள காலப் பகுதிக்குப் பூரிப்பூதியம் வழங்கப்படுகிறது. 1969 அக்டோபரில் தொடங்கி 1970 செப்டம்பரில் முடிந்த பூரிப்பூதிய ஆண்டிற்கு எல்லாத் தொழிலாளர்களுக்கும் பூரிப்பூதியம் வழங்கப்பட்டுள்ளது. 1970 அக்டோபரில் தொடங்கி 1971 செப்டம்பரில் முடியும் ஆண்டுக்குரிய பூரிப்பூதியத் தொகை பற்றித் தக்க தருணத்தில் அறிவிக்கப்படும்.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.

### திருப்பரங்குன்றம் தேவஸ்தானம்.

* 362 வின—திரு. சொ. காவேரிமணியம் : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பரங்குன்றம் தேவஸ்தானத்தை தனி தேவஸ்தானமாக ஆக்க, அறநிலையப் பாதுகாப்பின் நிர்வாகத்தின் கீழ் எடுத்துக் கொள்ளும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனின், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** (அ) ஆம்.

(இ) அது அரசின் பரிசீலனையில் உள்ளது

**திரு. கே. டி. கே. தங்கமணி :** பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பரங்குன்றம் தேவஸ்தானமானது அழகர்கோவில் தேவஸ்தானத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறது. இவை இரண்டு தேவஸ்தானங்களுமே தனித்தனியாக மிகச் சிறந்த முறையில் வளர்ந்துள்ள தேவஸ்தானங்களாக இருப்பதால் இவை இரண்டையும் பிரித்து இவை தனித்தனியாக இயங்கச் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, திருப்பரங்குன்றம் தேவஸ்தானம் மதுரை ஸ்ரீ மீனாட்சியம்மன் தேவஸ்தானத்தோடுதான் இணைக்கப்பட்டிருக்கிறது. கள்ளழகர் கோவிலோடு இணைக்கப்பட்டிருக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்த திருப்பரங்குன்றம் தேவஸ்தானம் இன்னொரு தேவஸ்தானத்தோடு இணைக்கப்பட்டிருப்பது பிரிக்கப்படுமா என்றுதான் நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இது அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது. மேலும் திருப்பரங்குன்றம் தேவஸ்தானம் மட்டுமின்றி எட்டு தேவஸ்தானங்கள் மதுரை மீனாட்சியம்மன் தேவஸ்தானத்தோடு இணைந்திருக்கின்றன. இவற்றில் திருப்பரங்குன்றம் தேவஸ்தானத்தைப் பிரிப்பதற்கு அந்த தேவஸ்தானத்தைச் சார்ந்த அறங்காவலர்களும் மதுரை ஸ்ரீ மீனாட்சி தேவஸ்தானத்தைச் சார்ந்த அறங்காவலர்களும் அதற்கான காரணங்களைப் பரிசீலித்துக் கொண்டு இருக்கின்றார்கள். மீனாட்சியம்மன் தேவஸ்தானத்தோடு இணைந்துள்ள துணைக் கோவில்களுக்குப் போதுமான வருமானம் இல்லாத காரணத்தினால் அவற்றைப் பிரிக்காமல் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இருப்பதால் இவையனைத்தும் இணைந்திருக்கின்றன. இருந்தாலும் இப்படி ஒரு சில தேவஸ்தானங்களைப் பிரிப்பதற்கான காரணங்கள் இருப்பதால் அரசாங்கம் அதுபற்றிப் பரிசீலனை செய்து கொண்டு இருக்கின்றது.

**திரு. சொ. காவேரிமணியம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி திருப்பரங்குன்றம் ஊராட்சி மன்றம் ஏற்கெனவே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பியிருக்கிறது. திருப்பரங்குன்றத்தைச் சுற்றியுள்ள பதினாறு கிராமங்களைச் சார்ந்தவர்களும் இதுபற்றி மனுக் கொடுத்திருக்கின்றார்கள். கடந்தகாலத்தில் திரு. அக்கினிராஜ் அவர்களும் உறுப்பினர் என்ற முறையில் பல முறை இதுபற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எனவே இதுபற்றி எவ்வளவு சீக்கிரத்தில் முடிவெடுக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய தீர்மானங்களும் கோரிக்கைகளும் அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றன. அவற்றைப் பரிசீலனை செய்து கொண்டு இருக்கின்றோம். பரிசீலனை முடிந்த பிறகு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. கு. காமாட்சி :** பேரவைத் தலைவர் அவர்களே, மிகப் பிரசித்திபெற்ற சமயபுரம் ஸ்ரீ மாரியம்மன் தேவஸ்தானம் ஸ்ரீரங்கம் ரங்கநாதர் தேவஸ்தானத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறது. இவற்றைப் பிரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இங்கே பேசப்படுவது திருப்பரங்குன்றத்திலுள்ள தேவஸ்தானத்தைப்பற்றியது.

வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி(*) இடப்பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிக்கை அளித்தல்.

**கதர், கிராமத் தொழில்கள்பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளின்மேல் அரசு எடுத்த நடவடிக்கைகள் மீதான அறிக்கை.**

THIRU K. VEZHAVENDAN : Mr. Speaker, Sir, I rise to present the Second Report of the Committee on Estimates on the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report on Khadi and Village Industries.

## 3. 1971-72-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 2—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம்.

(ஆ) கோரிக்கை எண் 30—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள்.

(இ) கோரிக்கை எண் 43—சாலைப் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல்,

"கோரிக்கை எண் 2—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 52,12,900-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**திரு. ஏ. சுவாமிதாஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தில் ஓடுவதற்கு அனுமதிக்கப்பட்ட ஓம்னிபஸ் போக்குவரத்தைப் பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 2—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 52,12,900-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

[1971 ஜூலை 21

**திரு. க. சுப்பு :** பேரவைத் தலைவரவர்களே, பயணிப் பேருந்துகளில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு அதிகமாகப் பயணிகளை ஏற்றிச் செல்லும் பேருந்து உரிமையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று விவாதிக்க—

"கோரிக்கை எண் 2—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 52,12,900-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகின்றேன்.

DR. H. V. HANDE : Sir, to discuss the need to avoid inordinate delay at the counters of D.C. (T & C) Egmore office in the matter of disposal of persons who come to pay the quarterly Motor Vehicles Tax, I move the cut motion standing in my name, namely

"That the allotment of Rs. 52,12,900 under Demand No. 2 Motor Vehicles Acts—Administration—be reduced by Rs. 100".

**திரு. கே. என் குமாரசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லாரிகளால் நெடுஞ்சாலைகளில் நிகழும் விபத்துக்களைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க அரசு தவறிவிட்டது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 2—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 52,12,900-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல்,

"கோரிக்கை எண் 30—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 21,56,95,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்" என்று முன்மொழிகின்றேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி ஜில்லாவில் தனியார் பஸ்களை நாட்டுடைமை ஆக்கியதால் பாதிக்கப்பட்ட பஸ் தொழிலாளர்களை அரசு ஏற்று வேலை அளிக்காதது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 30—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 21,56,95,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.



1971 ஜூலை 21]

**திரு. கே. டி. கே. தங்கமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசுப் பேருந்து போக்குவரத்தைத் திறமையாக நிர்வகிக்க வேண்டும் என்பதுபற்றி விவாதிக்க

"கோரிக்கை எண் 30—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 21,56,95,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

DR. H. V. HANDE : Sir, to discuss the need to exercise restraint and caution in the matter of Nationalization of Road Transport in view of the continued losses incurred by the State Transport, I move the cut motion standing in my name, namely,

"That the allotment of Rs. 21,56,95,300 under Demand No. 30—Road Transport Schemes—be reduced by Rs. 100".

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பஸ் போக்குவரத்தை, பொது மக்களுக்குச் சுமையை ஏற்றாமல் திறம்படவும் லாபகரமாகவும் நடத்துவதற்கு வழிவகை செய்வதன் அவசியம்பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 30—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 21,56,95,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல்,

"கோரிக்கை எண் 43—சாலைப் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,52,21,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

THIRU R. PONNAPPA NADAR : Sir, to discuss about the policy regarding the augmentation of the buses and the need to streamline the Ranithottam Workshop at Nagercoil, I move the cut motion standing in my name, namely,

"That the allotment of Rs. 3,52,21,000 under Demand No. 43—Capital Outlay on Road Transport Schemes—be reduced by Rs. 100.".

DR. H. V. HANDE : Sir, to discuss policy I move the cut motion standing in my name, namely,

"That the allotment of Rs. 3,52,21,000 under Demand No. 43—Capital Outlay on Road Transport Schemes—be reduced by Rs. 100".

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, கொள்கைபற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 43—சாலைப் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,52,21,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மான்யக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் அவைமுன் விவாதத்திற்கு வைக்கப் படுகின்றன.

***மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மான்யக்கோரிக்கைகளின் மீதான சொற்பொழிவினுடைய நகல்@ உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இதைச் சட்டமன்றக் குறிப்புகளில் பதிந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு ஒரு சில முக்கியமான கருத்துக்களை மட்டும் இப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

குறிப்பாக விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளும்போது, தனியார் நடத்தும் போக்குவரத்துத் துறைக்கான நிர்வாகத்தை ஒரு பகுதியாகவும் அரசு நடத்தும் போக்குவரத்துக்கான நிர்வாகத்தை ஒரு பகுதியாகவும் விவாதத்திற்கு எடுத்துக் கொண்டால் உதவிகரமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

தனியார் வண்டிகளைப் பொறுத்த வரையில், மோட்டார் வாகன வரிகள் மூலம் 1967 ஆம் ஆண்டில் ரூ. 14.96 கோடி ரூபாயாக இருந்தது. இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் கிட்டத்தட்ட 23 கோடி ரூபாயாக உயரக்கூடிய வாய்ப்பிருக்கிறது என்று நாம் மதிப்பிட்டிருக்கிறோம். குறிப்பாகச் சொல்லப் போனால் விற்பனை வரிக்கு அடுத்தபடியாக நமது மாநிலத்தில் இந்த மோட்டார் வாகன வரிகள் அமைந்திருக்கின்றன என்று எண்ணும்போது இந்தத் துறைக்காக அதிலிருந்து ரூ. 52 லட்சம் ரூபாயை இத் துறையின் நிர்வாகச் செலவிற்காக ஒதுக்குவதில் யாருக்கும் ஆட்சேபணையிருக்க முடியாது என்று கருதுகிறேன்.

அடுத்து, இந்த ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல பேருந்துகளை நாட்டுடைமையாக்கும் திட்டங்களில் நல்ல முன்னேற்றத்தைக் கண்டு இருக்கிறோம். பத்து வழித்தடங்களுக்கான பெர்மிட்டுகளுக்கு மேலே யாரும் வைத்துக்கொள்ளக் கூடாது என்ற கொள்கையின் அடிப்படையில் இப்போது செயலாற்ற இருக்கும் இந்நேரத்தில்

@ அமைச்சரவர்களின் உரை 600–603-ம் பக்கங்களில் முதல் இணைப்பாகவும், ஆய்வுரை 603–630-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாகவும், குறிப்புரை 630–636-ம் பக்கங்களில் மூன்றும் இணைப்பாகவும் அச்சிடப்பட்டுள்ளது.





இத் துறையில் மேலும் பல முன்னேற்றத்தைக் காண முடியும் என்று கருத இடமிருக்கிறது. நாட்டுடைமையாக்கப்பட வேண்டும் என்ற திட்டத்தை அமல்படுத்திய காலத்தில் அதாவது அத் திட்டத்தைச் சற்று வேகமாக அமல்படுத்தத் தொடங்கிய காலத்தில் 1967-ல் அரசிடம் 1,234 பேருந்துகள்தான் இருந்தன. இன்றைய தினம் கிட்டத்தட்ட 2,754 பேருந்துகளுக்கு மேல் இருக்கின்றன என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக 'ஆம்னி பஸ்'ஸைப் பொறுத்த வரையில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு குறிப்பிட்ட தூரத்திற்கு குறிப்பிட்ட பயணிகளை ஏற்றிச் செல்லுவதற்காகத்தான் அனுமதிக்கப்பட்டது. ஆனால் இன்றைய தினம் அது சாதாரணப் பயணப் பேருந்துகளைப் போல் ஓடிக்கொண்டு இருக்கின்றன என்பதையறிந்து அதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கிறோம். இது போன்ற யோசனைகள் இன்று அரசாங்கத்தின் கவனத்தில் இருந்து வருகிறது. இதில் ஸீட் ஒன்றுக்கு காலாண்டுக்கு ரூ. 30 என்று இருந்ததை ரூ. 50 ஆக உயர்த்தி மீண்டும் அது ரூ. 100 ஆக உயர்த்தப்பட்டது. ஆனால் உயர்நீதிமன்றத்திற்குச் சென்று, அது ரத்தாகி மறுபடியும் 30 ரூபாய் என்ற நிலைமையாகிவிட்டது. இருந்தாலும் அதை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டிற்கு அரசு அப்பீல் செய்திருக்கிறது. ஆனால் இந்த ஆண்டு 1—7—1971-லிருந்து மறுபடியும் 100 ரூபாயாக ஆக்குவதென்று அரசு நிர்மானித்து அதற்கான தனி நோட்டிபிகேஷன், தனிக் குறிப்பு சட்டப் பேரவைமுன் சமீப காலத்தில் மறுபடியும் வைக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அதேபோன்று நமது பேருந்துகள், லாரிகள், வாடகைக் கார்கள் இவை சம்பந்தமாக அண்டை மாநில அரசுகளோடு நல்ல ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட நல்லமுறையில் பேச்சுக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அண்மையில்கூட ஆந்திரத்தைச் சேர்ந்த போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே வந்து என்னைச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். இதற்கு முன்பு எவ்வளவு வழித் தடங்கள் விடுகின்றோமோ, அத்தனை தடங்கள் இதர மாநிலங்களில் நமக்குத் தருவார்கள். ஆனால் இப்போது இங்கு எத்தனை மைல்கள் ஓடுகின்றனவோ அவ்வளவு மைல்கள் ஆந்திரத்தில் ஓட்டுவதற்கு ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அதன்மூலம் திருப்பதி போன்ற முக்கிய நகரங்களுக்கு போக்குவரத்து பயணிப் பேருந்துகளை விட வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அதைக் கொள்கையளவில் ஒப்புக் கொண்டு ஆந்திர அரசு முன் வந்திருக்கிறது அதற்கான ஒப்பந்தம் சமீபத்தில் கையெழுத்தாகும்.

அதேபோன்று வாடகைக் கார்களுக்கு அண்மையில் கட்டணங்கள் உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதும் உறுப்பினர்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். அதுமட்டுமல்லாமல், தென்மாநிலங்கள், தென்னாடு முழுவதும் வாடகைக் கார்கள் ஒரே பெர்மிட்டில்

ஓட்டுவதற்கான வாய்ப்பு, சாத்தியக்கூறு ஆகியவைப் பற்றி கேரள அரசும், ஆந்திர அரசும் நம்முடன் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். மைசூர் அரசிடம் இன்னும் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடை பெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அரசுப் பேருந்துகளைப் பொறுத்தவரையில் இன்றைய தினம் 2,125 பேருந்துகள் தமிழ்நாடு முழுவதும் அரசுப் போக்குவரத்துத் துறையால் நடத்தப்படுகின்றன. கிட்டத்தட்ட 13,000 தொழிலா ளர்கள் வேலை பார்க்கின்றார்கள். அரசாங்கத்துக்கு மோட்டார் வாகன வரியாகக் கிடைப்பது 2.86 கோடி ரூபாயாகும். நாள் ஒன்றுக்கு 14 லட்சம் பேர் அரசாங்கப் பயணிப் பேருந்துகள் மூலம் பயணம் செய்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இதிலே சென்னை மாநகரைப் பொறுத்தவரையில், 1,173 பஸ்கள் இருக்கின்றன. நாள் ஒன்றுக்கு 10 லட்சம் பேர் பயணம் செய்கிறார்கள். பயணங்கள் 18,471. நெரிசல் நேரங்களில் போக்கு வரத்து நெரிசலைத் தவிர்க்க இணைப்பு வண்டிகள், நின்று பயணம் செய்யும் பேருந்துகள், பெண்களுக்கு என்று தனி பேருந்துகள் விடப்படுகின்றன. இரவு நேரங்களில் தொழிலாளர்களுக்காக இரவு நேரப் பயணப் பேருந்துகள் விடப்பட்டு வருகின்றன.

அதேபோல இன்னும் நீண்ட தூரப் பேருந்துகளை எடுத்துக் கொண்டால், கிட்டத்தட்ட 150 வழித்தடங்களில் நீண்டதூர பேருந்துகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. அவற்றைப் பொறுத்த வரையில் நாள் ஒன்றுக்கு 62,479 கிலோமீட்டர் ஓட்டிக் கொண் டிருக்கிறோம். இப்போதெல்லாம் ஹெட்டுல்டு கிலோமீட்டர்களுக்கு எல்லா இடத்திலும் நமது பேருந்துகள் ஓடுகின்றன. நாள் ஒன்றுக்கு வருமானம் 7,000 ரூபாயாக ஆகியிருக்கிறது. நீண்ட தூரப் பேருந்துகளில் புகார் புத்தகங்கள் வைக்கப்பட்டிருக்கிறது. அதில் பயணிகள் தங்களுக்கு என்று இருக்கிற குறைகளை தெரிவித் தால் ஒரு நகல் நேராக அமைச்சருக்கோ அல்லது அதிகாரி களுக்கோ அனுப்பப்படும். ஒரு நகல் நிலைய அதிகாரிக்கும், இன் னொரு நகல் புத்தகத்திலேயே இருப்பதற்கும் வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

அதுமட்டுமல்லாமல் தொழிலாளர்களுக்கு என்று கிட்டத்தட்ட 87 லட்ச ரூபாய் ஊதியக் குழு பரிந்துரைகள் மூலம் தரப்பட்டு, வீட்டு வசதி போன்றவைகள் எல்லாம் ஏற்பாடு செய்யப்பட்டிருக் கின்றன. ஆகையால் இந்தத் துறை நல்ல முறையில் இயங்கிவர நல்ல யோசனைகளைச் சொல்ல வேண்டுமென்றும், ஏற்கனவே பணப் பற்றுக்குறை இருக்கின்ற காரணத்தால் இதில் வெட்டுத் தேவைப் படாது என்று தெரிவித்துக் கொண்டு என்னுடைய முன்னுரையை முடிக்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)**





**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, இந்தப் போக்குவரத்து மானியத்தின்மீது எங்கள் கட்சியின் சார்பாக கொண்டுவரப்பட்டிருக்கின்றன. வெட்டுப் பிரேரணையை ஆதரித்துச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

While welcoming certain suggestions and proposals put forth in the Note on Road Transport, I wish to offer my suggestions mainly regarding the nationalisation of transport. It has been clearly stated that the buses of fleet-owners whose buses exceed more than 50 are to be nationalised. In this context, I wish to state that there are many bus-owners who will be deprived of their maintenance. There are bus companies which are running on a joint family system and more than three or four brothers are working in these companies. So, I request the Government to nationalise those companies in such a manner that each bus-owner gets a minimum of 10 buses so that they can maintain their livelihood. With regard to their maintenance workshops also, the Government should have deep consideration for that and should not put much difficulty for these fleet-owners.

Sir, we have received some petitions from the A.B.T. bus workers that their arrears due according to the recommendations of the Wage Board have been deprived and the Government should take necessary steps to see that these arrears are given to them.

There are important bus companies like the T.V.S., Madurai, A.B.T., Pollachi and Raman & Raman, Kumbakonam. After nationalisation the Government should seek advice from such companies, particularly from the T.V.S. administrators.

As regards maintenance works which has been mentioned in the review, it looks that the amount that is allotted for the maintenance is very little compared with the number of buses plying and the number of buses registered. Also I find that the number of buses plying on the road is quite contrary to what is stated in the Review.

As the bus is a poorman's conveyance, it is the duty of the Government to see that more buses are put on the road so that the needs of the public could be fully met.

Though we are aware that the State Transport is always running at a loss, still we feel that it is the bounden duty of the Government to look after the comforts of the bus passengers. I am happy that they have introduce the standee system though it sounds so feminine.

In spite of the fact that seats have been reserved for women, many times we find that least courtesy is shown to them. Though these are small matters, the Government should take serious note of them and see that the seats that are reserved for them are kept vacant and even if occupied by men, they should get up when ladies get in.

[திருமதி ஜோதி வெங்கடாசலம்] [1971 ஜூலை 21

A number of accidents occur every day. The other day the Hon. Minister for Transport stated, in reply to a question whether a speed limit will be fixed for the buses near the colleges as in the case of school zone, that the college students are old enough to protect themselves from accidents. We noted particularly the other day an accident happened in which a young girl had been killed, not while travelling in a bus, but while walking along the pavement, along the footpath. In such cases even though compensation is being paid, whatever be the amount, it is not going to compensate the life of the person.

Even in the Police Commission Report I find that Sri Govind Swaminathan stated that the President of the 'Road Safety First' Association had stated clearly that we have the largest number of accidents in India when compared to other countries. This is a very sad state of affairs.

I find from the statistics that the total number of Transport bus acidents during 1970 is 8,400 and for the period January-June 1971, it is 1,691, working out nearly 20 per cent to 25 per cent. This is not a very happy position. I happen to be near Traffic Commissioner's Office and I find there is a board in front of the office giving the total number of deaths due to road accident every day. It is a sad thing. The reasons for these accidents is due to the people clinging on to the buses for want of seats, in the buses on the footboard. There are drivers who drive rashly and negligently costing many lives. They don't observe minimum road sense. This is rather tragic. This must be looked into and strict instructions should be issued to drivers.

Apart from this, the drivers find it rather difficult to cover the distance within the specified time. This also is one of the reasons for their speeding up. This may be looked into and necessary steps taken in regard to workers.

I also want to suggest that the stock position and stock details must be given from time to time. There have been instances when the P.A.C. has aslo pointed out the mistakes and necessary action should be taken in regard to that.

Regarding taking over of bus transport I wish to say that many bus-owners have purchased their buses on credit basis particularly from Marwaris paying heavy interest. It is but just and proper when Government take over those buses that the bus is sold to the people from whom the owners had taken loan. Otherwise it will be difficult for bus-owners who had taken loan on heavy interest to repay.

As regards giving jobs to those who will be affected by this nationalisation the Hon. Minister has stated that they will be absorbed once the States takes over the whole things. But there is also a provision that all these workers will be taken over provided the Regional Transport Officer certificates as to their fitness. I



1971 ஜூலை 21] [திருமதி ஜோதி வெங்கடாசலம்]

do not find any reason for this. They have been in service all along and how can the question of fitness again come up on the eve of their being absorbed in Nationalised Transport. Considering their long years of service in the private companies, they should become eligible automatically for absorption into the nationalised transport and Government should not cast on the Regional Transport Officer the duty to certify as to their fitness Otherwise it will be causing the greatest hardship and many poor workers would be affected. While taking the buses it is but right and proper that Government takes over the workers also.

Apart from that I have received petition from the Trichy District Workers that there are four main companies ,i.e., T.S.T., Sundaram Transport, Ramajayam and L.G.P. etc. They have requested that surplus workers who are going to be displaced because of nationalisation shoud be given first preference in absorption in nationalised bus transport. Till such time I wish to make a suggestion that subsistence allowance, which is given in the same way for dock workers, might be given to these people also.

I wish once again to stress that fleet owners who own more than 50 buses should be given at least 10 buses, in spite of the fact that there is no provision here. Government should take a humanitarian outlook and give atleast 10 buses to these fleet owners who own more than 50 buses. It is not very clear whether they would be given any buses when Government takes them over. If it is 49 buses, they would be given but if it is 50 and above, the Government takes them over. So the difference of 'one' makes all the difference. I hope and trust that taking a humanitarian outlook Government would see to it that these bus owners are not deprived of this minimum at least. They have been deprived of their buses, of their normal earnings, etc. It is but fit and proper that they are left with at least 10 buses, after taking all their other buses.

I find there is a proposal to increase the number of permits issued for private vehicles. Private vehicles, ply mostly in the nights, and they ply with bright lights, responsible for many accidents. Those coming in cars on the opposite direction are affected by these bright lights and many an accident is caused. When the number of private vehicles are going to be increased in city and districts, it is better rules with regard to use of bright lights are enforced, strictly. During the second World War period we had on arrangement that they should blackout their headlights or at least half of it should be blacked out. That sort of instructions should be given. It seems to be the greatest nuisance for ordinary people who travel in their motor vehicles.

With regard to the other things, I appreciate the Hon. Chief Minister. He has given us an assurance that all these workers will be absorbed. The workers should be absorbed without

[திருமதி ஜோதி வெங்கடாசலம்] [1971 ஜூலை 21

giving once again the choice (interruption). There was an assurance that they will be absorbed. I once again stress that they should be absorbed in toto without making any discrimination whether they are fit or unfit. They are bound to be fit having many years of service to their credit which I want to stress. With these few words I hope and trust that the Government will take our suggestions.

There is one more important thing and that is with regard to the roads. Unless the roads are broad and good it will not be possible for the buses to ply. The roads also should be maintained well and the buses should be in good running condition. Wherever there is necessity the number of buses should be increased. Thank you, Sir.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்* : மாண்புமிகு உறுப்பினர்கள் இன்றைக்காவது சீக்கிரம் பேச்சை முடித்துக் கொள்வது நலம். ஏனென்றால், நாள் தவறாமல் பசிப் பிரச்சினை வந்துவிடுகிறது. ஆகவே, பேசுகிற உறுப்பினர்கள் தங்களுடைய பேச்சை ஐந்து நிமிடங்களிலிருந்து 6 நிமிடங்களுக்குள் முடித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. மா. வே. நாராயணசாமி* : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசுப் போக்குவரத்து மானியத்தை வரவேற்று, அதனை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

நாட்டுடைமையாக்கப்பட்டுள்ள பஸ் போக்குவரத்து மிகச் சிறப்பாகவும், திறமையாகவும் நடத்தப்பட வேண்டும் என்பதிலே யாருக்கும் கருத்து வேற்றுமை இருக்க முடியாது. அந்த அடிப்படையிலே தமிழக அரசு பஸ்கள் நாட்டுடைமையாக்கப்பட வேண்டுமென்ற கொள்கை வழிநின்று, மிகத் திறமையான முறையில் நடத்திட வேண்டும், சிறப்பான முறையிலே அமைத்திட வேண்டுமென்ற ஆர்வத்தோடு அரும்பணியாற்றிக் கொண்டு வருவதை நாடு மிக நன்றாக அறியும். அதற்காக போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டு வருவதையும் இந்த மாமன்றம் மிக நன்றாக அறியும், என்றாலும் போக்குவரத்துத் துறை இன்னும் சிறப்பாகப் பணியாற்றவில்லை யென்கிற பொதுவான கருத்தும், பல்வேறு விதமான குறைபாடுகளும் இருக்கின்றன. அந்தக் குறைபாடுகள் அனைத்தையும் விரைவிலே களைந்தெறிய வேண்டுமென்கிற கருத்தும் பரவலாக இருப்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. போக்குவரத்துத் துறையிலே பஸ்கள் நாட்டுடைமையாக்க வேண்டுமென்ற ஆர்வம் உள்ள அத்தனை பேரும் அதிக கவனம் செலுத்தி வெற்றிகரமாக இயக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் இருக்கிறதென்பதைச் சுட்டிக் காட்டுகிறேன்.



1971 ஜூலை 21]

(திரு. நா. வீராசாமி—தலைமை)

இன்றையதினம் சென்னைநகரத்திலும், சென்னைமாநகரத்தையொட்டியுள்ள புறநகர்ப் பகுதிகளிலும் ஆயிரக்கணக்கான பஸ்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன. ஆனால் மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவிலே பஸ்களின் எண்ணிக்கை உயர்த்தப்படவில்லை. மக்கள் ஆங்காங்கு மணிக்கணக்கில் காத்திருக்கிற நிலைமை இருப்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. குறிப்பாக, சென்னை மாநகரத்தின் வடபகுதியையொட்டியுள்ள திருவொற்றியூர் பகுதியிலே மக்கள் பஸ் வசதி இல்லாத நிலைமையிலே வெகுவாக தொல்லைப்படுகிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் அறிவார்கள். திருவொற்றியூர் பகுதி பாட்டாளி மக்கள், தொழிலாளர் மக்கள் வாழக்கூடிய பகுதியாகும். அன்றாடம் சென்னை மாநகரத்தின் பல பகுதிகளிலிருந்தும் அந்தப் பகுதிக்கு தொழிற்சாலைகளில் வேலைக்குச் செல்லக்கூடியவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் பஸ் வசதி இல்லாத காரணத்தால் குறிப்பிட்ட நேரத்தில் வேலைக்குச் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டு, அதனால் பல இடையூறுகள் ஏற்படுகின்றன. காலையில் 8 மணிக்கு வேலைக்குச் செல்ல வேண்டுமென்றால், அவர்கள் காலையில் 5 மணிக்கேகூட தயாராகி, வீட்டிலிருந்து புறப்பட்டு, பஸ் ஸ்டாப்புக்குச் செல்கிறார்கள். அரை மணிநேரம், ஒருமணி நேரம் காத்திருந்து. பஸ் வந்தவுடன் முண்டியடித்துக் கொண்டு பஸ்ஸில் ஏறி, நிற்பதற்காவது இடம் கிடைத்துவிட்டாலும், குறித்த நேரத்தில் அவர்கள் தொழிற்சாலைக்குச் செல்ல முடியாத நிலைமை இருக்கிறது. குறித்த நேரத்தில் தொழிற்சாலைக்குச் செல்ல முடியாமல் காலங்கடந்து செல்வதால், 'ஹேபிச்சுவல் லேட்' என்று சொல்லி, தொழிலாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதன் விளைவுகளுக்கு தொழிலாளர்கள் ஆளாக்கப்படுகிறார்கள் என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களும் தொழிற்சங்கத் தலைவராக இருந்தவர். தொழிற்சங்க நடவடிக்கைகள் எல்லாம் அவருக்கே நன்றாகத் தெரியும். ஏராளமான தொழிலாளர்கள் குறித்த நேரத்தில் பஸ் பிடித்து. தங்களுடைய தொழிற்சாலைகளுக்குச் செல்ல முடியாத நிலைமையில் இருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்—தலைமை)

வட சென்னையை ஒட்டியுள்ள பகுதிகளிலும், பொதுவாக சென்னை மாநகரத்தின் எல்லை வழித் தடங்களிலும் பஸ்களின் எண்ணிக்கை உயர்த்தப்படவில்லை என்ற குறைபாடு இருந்தாலும், குறிப்பாக வடசென்னையையொட்டியுள்ள பகுதிகளில் பஸ் போக்குவரத்து சரியாக இல்லையென்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கடந்த பத்தாண்டுக் காலமாக திருவொற்றியூர், எண்ணூர், மாதவரம், புழலேரி போன்ற பகுதிகளில் பஸ்களின் எண்ணிக்கை உயர்த்தப்படவில்லை. பொதுவாகச் சொல்லப் போனால், அந்தப் பகுதிகள் எல்லாம் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன என்பதை அழுத்தமாக வலியுறுத்திச் சொல்லிக் கொள்கிறேன். அந்தப்

பகுதிகளில்தான் உழைக்கின்ற வர்க்கத்தினர் வாழ்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகள் அந்தந்த நேரத்தில் கவனிக்கப்படாததன் காரணமாக, இந்தக் குறைபாடு இருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழக அரசின் பொறுப்பை ஏற்ற பிறகு, மாண்புமிகு கலைஞர் அவர்கள் தலைமையில் நடக்கும் கழக ஆட்சி நம்முடைய குறைகளைப் போக்கும் என்று நம்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதிகளில் பஸ்களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், அந்தப் பகுதிகளில் புதிய ரூட்டுகளை அமைத்தல் வேண்டும். அது மிகமிக இன்றியமையாதது.

வடசென்னையை எடுத்துக்கொண்டால், தங்கசாலையிலிருந்து 56 எண் பஸ்ஸும், 56-ஏ என்கிற பஸ் எண்ணூருக்குப் போகிற பஸ்ஸும், ஹைகோர்ட்டிலிருந்து திருவொற்றியூருக்கு 56-பி. என்கிற பஸ்ஸும் என்ற அளவில் இரண்டு மூன்று ரூட்டுகளைத் தவிர வேறு ரூட் கிடையாது. திருவொற்றியூர், மணலி, போன்ற பகுதிகளில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் பணியாற்றக் கூடிய நிலைமை இருக்கிற காரணத்தாலே, மவுண்ட் சாலையிலிருந்தும், தியாகராயநகரில் ( இருந்தும், திருவல்லிக்கேணியிலிருந்தும், எழும்பூரிலிருந்தும், இன்னும் மத்திய பகுதிகளிலிருந்தும் பஸ்களை விட்டு, புதிய ரூட்களை ஏற்படுத்தித் தரவேண்டும். தொழிலாளர்களுக்கு வேண்டிய வசதிகளையும் பொதுமக்களுக்கு வேண்டிய வசதிகளையும் நம்முடைய அரசு செய்து கொடுக்கும் என்ற நம்பிக்கை அந்தப் பகுதியில் வாழக்கூடிய பொதுமக்களுக்கும், குறிப்பாக தொழிலாளர் பெருமக்களுக்கும் இருக்கிறது. ஆகவே, அரசு உடனடியாக புதிய ரூட்களை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சென்னை பெருநகர்த் திட்டம் என்று நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். இந்தத் திட்டத்தின்கீழ் பார்க்கும்போது 20 மைல் சுற்றளவிற்கு இருக்கும் பகுதிகளை வளர்க்க வேண்டுமென்று நான் வரவுசெலவுத் திட்டத்தின்போது என்னுடைய பேச்சில் குறிப்பிட்டேன். அப்படி புறநகர்ப் பகுதிகளை வளர்த்தால்தான் சென்னைநகரத்தின் மக்கள் நெருக்கத்தைத் தவிர்க்க முடியும் என்று முன்பே குறிப்பிட்டிருந்தேன். ஆகவே, புறநகர்ப் பகுதிகளுக்கும் நல்ல முறையில் போக்குவரத்து வசதியை ஏற்படுத்தித் தந்தாக வேண்டும். அப்படிச் செய்தால் பத்து மைல், பதினைந்து மைல் தொலைவில் இருந்து தொழிலாளர்கள் தங்களுடைய தொழிற்சாலைக்கு வருவதற்கும் வாய்ப்பாக இருக்கும்.

பம்பாய், கல்கத்தா போன்ற நகரங்களில் பணியாற்ற முப்பது மைல், நாற்பது மைல் தொலைவிலிருந்துகூட வருகிறார்கள். அங்கே நல்ல மின்சார ரயில் வசதி இருக்கிறது. சென்னை மாநகரத்திலே சென்னை பீச்சிலிருந்து தாம்பரம் வரைக்கும்தான் மின்சார ரயில் வசதி இருக்கிறதே தவிர மற்ற பகுதிகளில் இந்த வசதி இல்லை,





மற்ற பகுதிகளில் இருப்பவர்கள் எல்லாம் பஸ் போக்குவரத்தை தான் முக்கியமாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, புதிதாக பல்வேறு விதமான ரூட்டுகளை அமைக்க வேண்டும்.

அடுத்தபடியாக, சாலைகளையும் நன்றாகச் செப்பனிட வேண்டும். சாலைப் போக்குவரத்துத் துறையும், பொதுப்பணித் துறையும் நல்ல ஒத்துழைப்புடன் காரியங்களை ஆற்றினால் சாலையமைப்பும் நன்றாக இருக்கும், போக்குவரத்து வசதிகளும் நன்றாக இருக்கும். திருவொற்றியூரிலிருந்து பூவிருந்தவல்லிக்கு புதிய ரூட் ஒன்று அம்பத்தூர் வழியாகத் தரப்பட்டதாகச் சொன்னார்கள். அந்த ரூட்டில் சாலை வசதி சரியாக இல்லை, சாலை சரியான முறையில் செப்பனிடாததால் பஸ்களை ஓட்ட முடியவில்லை. ஆகவே, போக்குவரத்துத் துறைக்கும், பொதுப்பணித் துறைக்கும் ஒத்துழைப்பு இருந்து நல்ல ஒற்றுமையுடன் செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து போக்குவரத்துத் தொழிலாளர்களுடைய நிலைமையை உயர்த்துகின்ற பிரச்னை இருக்கிறது. அதற்கான நடவடிக்கைகளை நம்முடைய அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும். ஆனால் அதே நேரத்தில் அவர்களுடைய கடமைகளை நாம் வலியுறுத்திச் சொல்ல வேண்டும். உரிமைகள் மதிக்கப்பட்டு, கடமைகள் வலியுறுத்தப்பட வேண்டும். இன்சென்டிவ் ஸ்கீம் அவர்களுக்கு ஏற்படுத்த வேண்டுமென்று எல்லோருமே கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

பஸ் போக்குவரத்துத்துறை இன்றைய தினம் அரசாங்க இலாக்கா மட்டத்திலே இருக்கிறது. இதை ஒரு கார்ப்ரேஷனாக வாரியமாக அமைக்க வேண்டுமென்ற கருத்து இருக்கிறது. அது நல்லது அது தேவை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக, நான் கேட்டுக் கொள்வதெல்லாம் இரவு ஷிப்டுகளிலே வேலை செய்கின்ற தொழிலாளர்கள் எல்லாம் பஸ் வசதிகள் இல்லாமல் கஷ்டப்படுகின்றார்கள். நாட்டின் முதுகெலும்பு தொழிலாளர்கள் என்று நாம் சொல்கிறோம், உழைப்பே மூலதனம் என்று நாம் முழங்கிக் கொண்டிருக்கின்றோம். அவர்கள் இலவசமாக பஸ் வசதிகள் கேட்கவில்லை, தாங்கள் சம்பாதிக்கக்கூடிய ஊதியத்திலிருந்து காசு கொடுக்க அவர்கள் தயாராக இருக்கிறார்கள். அவர்கள் தொழிற்சாலைகளிலே 8 மணி நேரம் கடுமையாக உழைக்கின்றார்கள். அப்படி உழைத்துவிட்டு வெளியே வருகின்ற நேரத்திலே இரண்டு மணி நேரம், மூன்று மணி நேரம் என்று மணிக் கணக்கிலே அவர்கள் பஸ்ஸுக்காகக் காத்துக்கிடக்க வேண்டியிருக்கின்றது. 10 மைல் தூரத்திற்குச் செல்ல வேண்டிய தொழிலாளர்கள் பலர் இருக்கிறார்கள். எனவே இரவு நேரத்தில் ஷிப்டு வேலை செய்துவிட்டு வருகின்ற தொழிலாளர்களுக்கு வசதியாக இருக்கும் பொருட்டு குறைந்த பட்சம் அரை மணி நேரத்திற்குள்ளாக பஸ் வசதி செய்து கொடுக்க வேண்டும். தங்கசாலை முதல் எண்ணூர்

[திரு. மா. வே. நாராயணசாமி] [1971 ஜூலை 21

வரையிலே பஸ் போக்குவரத்து இப்பொழுதும் இரவு நேரத்திலே இருக்கின்றன, அந்த பஸ்கள் ஒரு மணி நேரத்திற்கொருமுறை வருவதாகச் சொல்லப்படுகிறது. நடைமுறையிலே இரண்டு மணி நேரத்தில்தான் வருகிறது. தொழிலாளர்கள் நடுப்பாதையிலே நின்றுகொண்டு தூங்கிவழிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வேதனைப்படுகிறார்கள். எனவே இரவு நேரத்திலே அரை மணி நேரத்திற்குள் பஸ் வருகின்ற முறையிலே ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அப்படிச் செய்கின்றபொழுது அது தங்கசாலையோடு நின்றுவிடக் கூடாது, மவுண்ட் ரோடு வரையிலும் அதை நீடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்து இலாகாவினுடைய இலக்கு அதாவது டார்ஜட் எப்படி இருக்க வேண்டுமென்றால் பொதுமக்கள் பஸ் ஸ்டாப்பிலே 10 நிமிடத்திற்கு மேல் காத்திருக் கூடாது என்ற நிலைமையை அடிப்படையாக வைத்துக் கொண்டு பஸ் வசதிகளைச் செய்து தர வேண்டும். இது ஒரு கடினமான பிரச்சனை, நான் அறிவேன். இருந்தாலும் கடுமையான பல பிரச்னைகளை எத்தனையோ பிரச்னைகளை நம்முடைய அரசு சமாளித்து வருகின்றது. நாட்டுடைமையாக்கப்பட்ட பஸ் போக்குவரத்து மக்களுடைய எண்ணத்திலே சமதர்மத்தினை வளமாக வளர்ப்பதற்கான முறையிலே இந்தத் துறையிலே கவனம் செலுத்த வேண்டுமென்று சொல்லி இந்த அளவுக்கு இந்த மானியத்தை ஆதரித்து நான் முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ஏ. சுப்பிரமணியம்:** துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளைக் குறித்து என் கட்சியின் சார்பாக கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்துச் சில பல கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

முதலாவதாக, அரசாங்கத்தினுடைய தேசிய மயம் ஆக்குகின்ற கொள்கையை நான் முழு மனதோடு வரவேற்கிறேன். அதே நேரத்திலே 50 பஸ்களுக்கு மேற்கொண்டு இருக்கின்ற பஸ் கம்பெனிகளை எடுக்கும்பொழுது அரசாங்கம் அப்படியே அவற்றையெல்லாம் அடானமஸ் கார்பரேஷன் கையிலே ஒப்படைப்பது நல்லது என்று கருதுகிறேன். அப்படி கார்ப்பரேஷன் அமைக்கப்படுகின்றபொழுது அவற்றில் காம்பெடிஷன் போட்டி ஏற்படுகின்ற முறையிலே ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் ஒன்று என்ற முறையிலே வெவ்வேறு கார்ப்பரேஷன்கள் அமைக்கப்பட்டால் அது நல்ல முறையிலே பயன்படாதா என்று ஆலோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக 10 பஸ்களுக்கு மேலாக இருக்கின்ற பஸ்களை எடுப்பது என்று அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. அது வரவேற்கத் தக்க திட்டம். ஆனால் அப்படிச் செய்வதின் மூலம் புதிய பஸ் முதலாளிகளை உண்டாக்கிவிடாமல் பஸ் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கம் என்று அமைத்து அந்தச் சங்கங்களிடம் அந்த



1971 ஜூலை 21] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

பஸ்களை ஒப்படைத்தால் அரசு ஏற்றுக் கொண்டிருக்கின்ற சமதர்மக் கொள்கைக்கு அது ஏற்புடையதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்வேன்.

மூன்றாவதாக அரசாங்கம் எடுத்துக் கொள்கின்ற பஸ்களில் தனியார் துறையில் ஏற்கனவே பணியாற்றுகின்ற தொழிலாளர்களை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றால் ஆர்.டி.ஓ.க்கள் சிபாரிசு இருந்தால்தான் ஏற்றுக் கொள்ளலாம் என்று இருக்கிறது. அப்படி ஆர்.டி.ஓ. விடம் தொங்குகின்ற ஏற்பாடு வேண்டாம். இருக்கின்ற தொழிலாளர்கள் அத்தனை பேர்களையும் அப்படியே அரசு எடுத்துக் கொள்வது என்ற கொள்கையை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன்.

தேசிய மயக் கொள்கையை வரவேற்கின்ற அதே நேரத்திலே தேசியமயக் கொள்கை மிகவும் சூழ்ச்சிக்குள்ளாகியிருக்கிறதென்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அதற்குக் காரணம் திறமைக் குறைவு, பல தவறுகள், கோளாறுகள் நடக்கின்றன என்று சொல்லப்படுகிறது. கண்ணை மூடிப் பயனில்லை, அது உண்மைதான். இதனைச் சொல்லி தேசியமயக் கொள்கையை எதிர்ப்பவர்கள் வெற்றி பெறுவதற்கு இடம் அளித்துவிடக் கூடாது.

முக்கியமாக சென்னைக் கிளையிலேதான் ஏராளமாக நஷ்டம் வருகிறது. சென்ற ஆண்டு 44.37 லட்சமாக இருந்தது இப்பொழுது 53.03 லட்சமாக உயர்ந்திருக்கிறது என்று இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. இதற்குப் பல காரணங்கள் சொல்கிறார்கள். அதிகாரிகள் பல காரணங்களைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் காரணங்களினால்தான் அப்படி நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறதா என்பது தெரியாது. தனியார் துறையிலே பஸ் தொழில் லாபமாக நடைபெறுகின்றபொழுது நமக்கு மட்டும் ஏன் நஷ்டம் வருகிறது என்பது ஆராயத்தக்கது. இதற்காக ஒரு ஹை பவர் கமிட்டி அமைக்கப்பட வேண்டும். அந்தக் கமிட்டியிலே அதிகாரிகள், தொழில் நுட்பம் தெரிந்தவர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள், அந்தத் தொழிலிலே ஏற்கனவே பழக்கமுள்ள திறம்படைத்தவர்கள் இவர்களைப் போட்டு ஆராய்ந்து அறிக்கையை வாங்கி அந்த அறிக்கையின்மேல் உடனடியாக அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அதே நேரத்திலே நான் ஒரு சில யோசனைகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பஸ்களிலே நாலில் ஒரு பங்கு பிரேக் டவுன் ஆகி நின்று விடுகின்றன என்ற செய்திகள் வருகின்றன. நாலில் ஒரு பங்கு, ஐந்தில் ஒரு பங்கு என்று பிரேக்டவுன் ஆகி நின்றுவிட்டால் லாபம் வருவது கடினம். எனவே பிரேக் டவுன்களைக் குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். நான் விசாரித்த வரையில் மெயின்டனென்ஸ் மோசமாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். தொழிலாளர்களும் சொல்கிறார்கள், மற்றவர்களும் சொல்கிறார்கள். இந்தக் காரணம் எவ்வளவு தூரம் உண்மை என்பதை அமைச்சர் அவர்கள் அறிய வேண்டும். டியூவல் கன்ட்ரோல் இருப்பதாகச்

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [1971 ஜூலை 21

சொல்கிறார்கள். முன்பு டைரக்டர் அதிகாரத்திலேயே இருந்ததால் மெயின்டெனன்ஸில் குறைகள் இருந்தால் கண்டிப்பதற்கு முடியும் என்ற நிலைமை இருந்தது, இப்பொழுது சீப் எஞ்சினியர் போடப்பட்டிருப்பதால் டியூவல் கன்ட்ரோல் என்ற முறையில் மெயின்டெனன்ஸில் அக்கறையில்லாமல் கொடுக்கின்ற பஸ்ஸை எடுத்துக் கொண்டு போ என்று சொல்கின்ற நிலைமை இருப்பதாகத் தொழிலாளர்கள் சொல்கிறார்கள். இதை அமைச்சர் அவர்கள் ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன். டையர், ஸ்பேர் பார்ட்ஸ் இவையெல்லாம் சென்னையிலே ஸ்டாக் வைத்திருக்கிறார்கள். இதனால் கோவையிலே கன்னியாகுமரியிலே ஸ்பேர் பார்ட்ஸ் வேண்டுமென்றால் அதற்காக டிரங்க் கால் போட்டு அதற்குப் பிறகு டிரான்ஸ்போர்ட் சார்ஜ் எல்லாம் செலவிட்டு அவை வர வேண்டிய நிலைமை இருக்கிறது. இதனால் பணமும் செலவாகிறது அதிகமாக, அதே நேரத்திலே தாமதமும் ஆகிறது. அதற்குப் பதிலாக ஆங்காங்குள்ள டெப்போக்களிலேயே ஸ்டாக் வைத்துக் கொண்டு சப்ளை செய்துவிட்டால் அதிகச் செலவுகளையும், தாமதத்தையும் தவிர்க்கலாம் என்று தெரிகிறது.

பஸ்களுக்கு குவார்டர்கள் கட்டுகிறார்கள். அதிலே மிகுந்த குழப்பமேற்படுவதாகச் சொல்கிறார்கள். ஒருவர் சென்று குவார்டர் கட்டுகிறார் என்றால் ஆர்.சி.யில் உடனே பதிவு செய்வதில்லை, விட்டு விடுகிறார்கள். பிறகு வெகு நாள் கழித்து அவர்கள் கட்டியிருக்கிறார்களா இல்லையா என்று தெரியாத அளவுக்குப் போய் அதிலே ஏராளமான பணம் விரயமானதாகச் சொல்கிறார்கள். அமைச்சர் அவர்கள் இதையும் ஆராய வேண்டுமென்று கேட்டுக் கொள்வேன்.

டீசல் செலவு இருக்கிறது. பல குறைபாடுகள் இதிலே சொல்கிறார்கள். இதனை சுலபமாகக் கண்டுபிடித்துவிட முடியும். எத்தனை மைல்கள் ஓடியிருக்கின்றன என்று பார்த்து, அதோடு எத்தனை லிட்டர்கள் டீசல் வாங்கப்பட்டிருக்கிறது என்பதையும் பார்த்தால் கண்டுபிடித்துவிட முடியும். அதிலே தவறுகள் நடப்பதாக அடிக்கடி புகார்கள் வருகின்றன. அதைக் குறித்தும் ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன்.

தேசியமயமாக்கப்பட்ட தொழில் சிறப்புற நடைபெற வேண்டுமென்று சொன்னால் பொதுமக்களுடைய ஒத்துழைப்பு வேண்டும். தொழிலாளர்களும் மனப்பூர்வமாக உள்ளன்போடு பணியாற்றிட வேண்டும். அவர்களுக்கு எங்களுடைய தொழில் என்ற உணர்வு
மு.ப. 11-00 ஏற்பட வேண்டும். இதற்காக, அமைக்கவிருக்கிற கார்ப்பரேஷன் நிர்வாகத்தில் அவர்களுக்கும் பங்கு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன். அதோடு அவர்களுக்கு ஏராளமான குறைகள் உண்டு. அவற்றில் ஒன்றிரண்டை மாத்திரம் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதிலே ஒன்று, இன்றைய தினம் தொழிலாளர்கள் என்.ஜி. ஓ.க்களா அல்லது அவர்கள் தொழிலாளர்களா என்ற ஐயப்பாட்டில் தவித்துக்கொண்டு இருக்கிறார்கள். என்.ஜி.ஓ. க்கள் என்று சில



1971 ஜூலை 21] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

நேரங்களில் கருதப்பட்டு அதன்படி நடத்தப்படுகிறார்கள், சில நேரங்களில் தொழிலாளர்கள் என்று கருதப்பட்டு அதன்படி நடத்தப்படுகிறார்கள். தொழிலாளர்கள் என்ற முறையில் கிராஜுவிடி என்று இருக்கிறது, வேறு சில நேரங்களில் என்.ஜி.ஓ.க்கள் என்று கருதும் முறையில் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே அவர்கள் என்.ஜி.ஓ.-க்களா அல்லது தொழிலாளர்களா என்பதைத் திட்டவட்டமாக அறிவித்து என்.ஜி.ஓ. க்கள் என்றால் அவர்களுக்கு இருக்கும் வசதிகளைக் கொடுக்க வேண்டும், இல்லை தொழிலாளிகள் என்றால் அவர்களுக்கு இருக்கும் வசதி வாய்ப்புகளைக் கொடுக்க வேண்டும். ஸ்டாண்டிங் ஆர்டர் கூடக் கிடையாது என்று சொல்கிறார்கள். எல்லாத் தொழில்களிலும் ஸ்டாண்டிங் ஆர்டர் இருக்கிறது, ஆனால் இங்கே கிடையாது. அதிகாரிகள் வைத்ததுதான் சட்டம் என்னும் முறையில் இருக்கிறது. எனவே ஆணா பெண்ணா என்று தீர்மானித்து ஆணாகயிருந்தால் அதற்குரியவைகளையும், அல்லது பெண்ணாகயிருந்தால் அதற்குரியவைகளையும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, திரு. நாராயணசாமி அவர்கள் குறிப்பிட்டதைப் போல் தொழிலாளர்கள் வேலைக்கு வருகிறார்கள் என்றால் அவர்கள் 8 மைல், 10 மைல்களுக்கு அப்பால் குடியிருக்கிறார்கள். வேலை முடிந்த பிறகு அவர்கள் வீட்டுக்குச் செல்வதற்குப் போதுமான வசதிகள் இல்லை. எனவே அவர்கள் வீட்டிற்குப் போகவும், வீட்டிலிருந்து வரவும் ஃப்ரீ பாஸ்கள் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராஜுவிடி வழங்கப்படுகிறது. ரிடையர் ஆவதற்கு 3, 4 மாதங்களுக்கு முன்னால் நோட்டீஸ் கொடுக்கிறார்கள். ரிடையரானவுடன் கிராஜுவிடி கொடுக்கப்படாமல் வாரக் கணக்கில், மாதக் கணக்கில் கூட வழங்கப்படாமல் இருக்கிறது. இது அநியாயம், கொடுமையானது. இப்படியிருந்தால் வேலையிழந்தவர்கள் வாழ்வது எப்படி? எனவே கிராஜுவிடி பணத்தை வேலையிலிருந்து நின்ற நாளிலேயே கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன்.

டிரைவர்களுக்கு இண்டர் ஸ்டேட் அலவன்ஸ் என்று ஸ்டேட் விட்டு ஸ்டேட் சென்று இரவில் தங்கினால் தனி அலவன்ஸ் கேரளாவிலே கொடுக்கிறார்கள். அதேபோல் இங்கேயும் கொடுத்தல் வேண்டும்.

அடுத்தபடியாக, பிரயாணிகளுக்கு இருக்கிற சில குறைபாடுகளை நான் இங்கே சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன். ரிடையரிங் ரூம் என்று இருக்கிறது. பஸ் ஸ்டாண்டுகளில் பிரயாணிகள் உடனடியாக வெளியிடங்களுக்குச் செல்ல முடியாதவர்களுக்கென்று கட்டப்பட்டிருக்கின்றன. அந்த ரிடையரிங் ரூம்கள் பலவற்றை அதிகாரிகள்தான் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள் என்று எனக்குத் தெரிய வருகிறது. எனவே அவைகள் பொது மக்களுக்கு மட்டுமே பயன்படும் வகையில் ஏற்பாடு செய்து, கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [1971 ஜூலை 21

பல பஸ் ஸ்டாண்டுகளில் வாட்டர் கூலர்கள், திருச்சி, தஞ்சை, கோவை போன்ற இடங்களில் வைத்திருக்கிறார்கள். வாட்டர் கூலர்கள் பெரும்பாலும் வேலை செய்வது இல்லை. கோவையிலே அமைக்கப்பட்ட வாட்டர்கூலரை ஒர்க் ஷாப்பில் போட்டாகி விட்டது.

இதுபோல் லௌட் ஸ்பீக்கர் வைத்திருக்கிறார்கள் அனவுன்ஸ் பண்ணுவதற்கு. பஸ் கிளம்பும் நேரத்தைச் சொல்வதற்காகப் பல இடங்களில் லௌட் ஸ்பீக்கர்கள் வைத்திருந்தும் பெரும்பாலும் பயன்படுத்துவது கிடையாது.

என்கொயரி கவுண்டர்கள் இருக்கின்றன. அதற்கென்று தனியாக ஆள் கிடையாது. யார் யார் அந்தந்த நேரங்களிலே வருகிறார்களோ அவர்கள் அட்டெண்ட் செய்வதால் பல கோளாறுகள் ஏற்படுகின்றன. டிக்கெட் எழுதிக் கொண்டே போனையும் அட்டெண்ட் பண்ணுவதால் பல கோளாறுகள் ஏற்படுகின்றன. எனவே என்கொயரிக்கு என்றுத் தனியாக ஆளைப் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன்.

அடுத்தபடியாக, இந்த பஸ்கள் காலாகாலத்திலே ஓடும்படி பார்த்துக் கொள்வது மிகமிக அவசியம். ஒன்று, மெயின்டெனன்ஸ் சரியாக இருக்க வேண்டும். இன்னொன்று, டிரைவர்களும் சரியாகப் போகும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். குறிப்பாக கோவை திருச்சி ரூட் இருக்கிறது, அதிலே இரவிலே போகும் வண்டிகள் இருக்கின்றன. அவை எந்த நேரத்திலே வரும் என்று யாராலும் சொல்ல முடியாது. அடிக்கடி ப்ரேக் டவுன் ஆகிறது. 10 மணிக்கு வர வேண்டிய பஸ் 11 மணிக்கு வரும், 12 மணிக்குக்கூட வரும், யாராலும் எதுவும் சொல்ல முடியாது. இம்மாதிரியில்லாமல் உரிய நேரத்தில் வந்து சேரும்படி பார்த்துக் கொள்வது மிகவும் அவசியம் என்று கூறிக் கொள்கிறேன்.

இன்னொன்று ரூட் 518 இருக்கிறது. கோவையிலிருந்து நாகப்பட்டிணம் செல்லும் பஸ். அதைச் திருச்சியோடு நிறுத்திவிட்டு, ரிலேயாக ஓட்டுகிறார்கள். இதனால் பாசஞ்சர்கள் பாதிக்கப்படுகிறார்கள். உடனடியாக நாகப்பட்டிணத்திற்குப் போக முடியவில்லை. அந்த ரூட்டில் நிறைய கலெக்ஷன் ஆகிறது. எனவே, அதைக் கட் செய்ய வேண்டியதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியாகிய சிங்காநல்லூர் தனி நகர சபையாக இருக்கிறது. கோவையிலிருந்து சிங்காநல்லூர் வழியாக, பீளமேடு வழியாக நகரத்தினூடே எக்ஸ்பிரஸ் பஸ்கள் போகின்றன. ஆனால் சிங்காநல்லூர் பீளமேட்டிலே நிற்பது கிடையாது. அவர்கள் கோவை நகரத்திற்குச் சென்றுதான் ஏற வேண்டும், அல்லது இறங்க வேண்டும். இதை மாற்றி சிங்காநல்லூரிலும், பீளமேட்டிலும் ஏறவும் இறங்கவும் வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.



1971 ஜூலை 21]

* **திரு. என். கிட்டப்பா:** துணைத் தலைவரவர்களே, இன்றைய தினம் போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒருசில வார்த்தைகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நமது கழக அரசு பேரறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையில் பொறுப்பேற்றுக் கொண்ட முதல் தடவையிலேயே பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒன்றினை இந்த மாமன்றத்திலே அறிவித்தார்கள். 75 மைல்களுக்கு மேலுள்ள பஸ் தடங்கள் நாட்டுடைமையாக ஆக்குவதாகவும், அதற்குப் பின்னால் படிப்படியாக தமிழகத்திலிருக்கின்ற தனியார் நடத்தும் பேருந்துத் தடங்களை அரசே படிப்படியாக மேற்கொள்ளும் என்ற நல்ல செய்தியினை 1967-68-ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணா அவர்கள் அறிவித்தார்கள்.

அதற்குப் பின்னால் அண்மையில் நமது கலைஞர் அவர்கள் தலைமையிலே இயங்கும் நமது அரசில் நமது போக்குவரத்துறை செய்திருக்கிற மிகச் சிறப்பான சாதனை, தமிழகத்தில் தனியார் வைத்திருக்கின்ற பஸ்களை பத்துக்கு மேற்படாமல் வைத்துக் கொள்ள உச்சவரம்பு நிர்ணயித்து பத்துக்கு மேற்பட்டவைகளை அரசாங்கமே நாட்டுடைமையாக்குவதெனவும் முடிவு செய்வதும், அதைப் போலவே 50-க்கு மேற்பட்ட பஸ் தடங்களைத், தனியார் உடமையாளர்களிடமிருந்து அரசாங்கமே மேற்கொள்வது என்ற நல்ல முடிவையும் போக்குவரத்துத் துறையைப் பொறுத்தமட்டில் நமது அரசாங்கம் சிறப்பான முடிவுகளாக எடுத்து வந்திருக்கிறது.

நமது பெருமதிப்பிற்குரிய மாற்றுத் தாப்பிலேயுள்ளவர்கள், குறிப்பாக காங்கிரஸ் இயக்கத்தைச் சார்ந்தவர்கள், நீங்கள் வந்துதான் நாட்டுடமை ஆக்கினீர்கள் இல்லை, நாங்களே இதைச் செய்திருக்கிறோம், 1948-லே செய்திருக்கிறோம் என்று சொல்லக் கூடும். ஆனால் 1948-க்கு முன்னால் சென்னை மாநகரத்தில் ஓடிக் கொண்டிருந்த டிராம்கள் நீக்கப்பட்டதன் காரணமாக உடனடியாக மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய பேருந்துகளை அரசாங்கமே நடத்த வேண்டிய ஒரு சூழ்நிலை அன்றையதினம் உருவாக்கப்பட்டது. அதைப்போலவே, திருவாங்கூர் மாநிலம் பிரிக்கப்பட்டு, கன்னியாகுமரி மாவட்டத்தில் திருவாங்கூர் மாநிலத்தோடு முதல் கேரள மாநிலத்தோடு தொடர்பு கொண்டிருந்து, அங்கு ஓடிக் கொண்டிருந்த பஸ்களுக்கு மாறாக உடனடியாக அரசாங்கமே ஏற்படுத்த வேண்டிய சூழ்நிலை உருவாக்கப்பட்டது. இவற்றிற்கெல்லாம் அடுத்தாற்போல், 1959-லே கூட அருமை காங்கிரஸ்காரர்கள் 120 மைல்களுக்கு மேற்பட்ட தூரத்திற்கு ஓட்ட, பேருந்துகளை விட முடிவு செய்தார்களேயொழிய ஓடிக் கொண்டிருக்கும் பஸ்களை அரசாங்கமே ஏற்றுக்கொள்வது என்ற சோஷலிச நடைமுறையை அவர்கள் உருவாக்கவில்லை. அதற்கெல்லாம் அப்பாற்பட்டு நமது இன்றைய அரசு பேரறிஞர் அண்ணா அவர்களின் வழிநின்று பஸ்களை பத்துக்கு மேற்பட்ட பஸ்களையும்,

[திரு. என். கிட்டப்பா] [1971 ஜூலை 21

50-க்கு மேற்பட்ட உடமையாளர்களின் பயணி போக்குவரத்து நிறுவனங்களையும் நாட்டுடமையாக்கியிருப்பதை நாம் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

1966–67-இல் 5,395 தனியார் பஸ்களும், 1,234 அரசுத் துறை பஸ்களும் தமிழகத்தில் ஓடிக்கொண்டிருந்த நிலையினை நாம் பார்த்தோம். அதாவது மொத்தம் ஓடிக்கொண்டிருந்த பஸ்கள் நமது அரசு, கழக அரசு பொறுப்பேற்றுக்கொண்ட அன்றைய நாளில் 18 சதவிகிதம் மட்டுமே அரசாங்க பஸ்கள் ஓடிக்கொண்டிருந்திருக்கிறது. ஆனால் இன்றைய நிலையில் நமது கலைஞர் ஆட்சியில், 1970-71-இல் 5458 தனியார் பஸ்களும், 2734 அரசு பஸ்களும் ஓடிக்கொண்டிருக்கின்ற சூழ்நிலையை நாம் பார்க்கிறோம். 18 சதவிதமாக ஓடிக்கொண்டிருந்த அரசாங்க பஸ்கள் இன்றைய தினம் மொத்தமாக ஓடிக்கொண்டிருக்கும் பஸ்கள் 33 சதவிகிதத்தை எட்டிப் பிடித்திருக்கிற சூழ்நிலையை நாம் அறிவிக்கின்றபொழுது ஒருகாலத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டுக் காட்டினார்கள், சோஷலிச தத்துவத்தைப் பேசிக் கொண்டிருந்த மதிப்பிற்குரிய காங்கிரஸ் இயக்கத்தினர் அதற்கு எவ்வளவு தூரம் புறம்பாக நடந்து கொள்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட காகிதப்பூ மணக்காது, காங்கிரஸ் சமதர்மம் இனிக்காது என்று கூறினார்கள். ஆனால் இன்று கழக சமதர்ம ஆட்சியில், அதனுடைய நல்ல வளர்ச்சியை சமதர்மத்திற்கு நல்ல வழிகளை நாம் பார்க்கிறோம். 1970 மார்ச்சுக்குள் 419 பேருந்துகளையும், 1970-71-ல் 54 பேருந்துப் பணிகளையும் நாட்டுடமையாக்க அரசாங்கத்திலே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

இவற்றுக்கு இடையில் 1967-க்குப் பின்னால் தனியார் பஸ்களை நாட்டுடமையாக்க வேண்டுமென்ற கோரிக்கை செயல்படத் துவங்கியதில் இருந்து இன்றையதினம் வரை ஏறத்தாழ 268 ரிட் மனுக்கள் முடிவுறாத நிலையில் காத்துக் கொண்டிருக்கின்ற நிலையைப் பார்க்கிறோம். தனியார் கொடுக்கின்ற இவ்வளவு தொல்லைகளுக்கிடையில் சமதர்ம சமுதாயத்தை உருவாக்கும் பணியில் நம்முடைய அரசு தீவிரமாக நடைபோடுவதைப் பார்க்கும் போது நிச்சயமாக நம்மால் பாராட்டாமல் இருக்க முடியாது.

அரசுப் போக்குவரத்துத் துறையில் தனியார் பேருந்துகளை மேற்கொண்டுவிட்ட நிலையில் அந்தத் துறையில் பணியாற்றிக் கொண்டிருந்தவர்களை அரசாங்கச் சிப்பந்திகளாக அரசுப் பேருந்துகளில் மேற்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கைகளுக்கு நாம் முழுக்க முழுக்க செவி சாய்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதை மிகத் தாழ்மையோடு அரசுக்கும், குறிப்பாக போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். திருச்சி, மதுரை, சேலம், கோவை ஆகிய இடங்களில் தலைமைப் பணிமனைகளையும் திருவண்ணாமலை, ஆரணி, சிதம்பரம், தருமபுரி, மேட்டூர் போன்ற



1971 ஜூலை 21] [திரு. என். கிட்டப்பா]

பகுதிகளில் துணைப் பணிமனைகளையும் ஏற்படுத்த நமது அரசு திட்டங்களை மேற்கொண்டுள்ளது. அந்தப் பணிமனைகளை அமைக்கும். அதே நேரத்தில் அத்தகைய பணிமனை ஒன்றை மாயூரத்திற்கும் வழங்க வேண்டுமென்று அமைச்சரிடத்தில் பல முறை கேட்டிருக்கின்றேன். அதனை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல் முக்கியமான ஒரு விஷயத்தை பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதியோடு சொல்ல விரும்புகிறேன். நமது அரசுப் பேருந்துகளில் மிக அதிகமான ஸ்பேர் பார்ட்ஸ் களவு போவதாக அடிக்கடி செய்திகள் வெளிவருவதைப் பார்க்கும்போது அவ்வாறு பேச்சு வார்த்தைகள் பரவலாக அடிபடுவதையும் பார்க்கிறோம். அதனை திறமையாகக் கண்காணிக்க போக்குவரத்துத் துறையிலுள்ளவர்கள், குறிப்பாக நம்முடைய அமைச்சர் அவர்கள், அதனைத் திறமையாகக் கண்டு பிடித்து அரசுக்குத் தகவல் கொடுக்கக்கூடிய தொழிலாளர்களுக்குத் தங்கப் பதக்கமே கூட அளிக்க முன்வரலாம் என்பதை மிகத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பழுதடைந்த பேருந்துகளைச் சரிபார்க்க சென்னை நகரில் நடமாடும் சீர்படுத்தும் படைகள் ஒன்பது இருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. இவைகளை சென்னை மாநகரத்தில் மட்டுமல்லாது பஸ்கள் நடமாடும் எல்லா இடங்களிலும் அமைக்கப்பட வேண்டும். குறிப்பாக ஏனைய பகுதிகளுக்கு மாவட்டத்திற்கு இரண்டு வீதம் ஏற்படுத்துவதற்கு முன்வர வேண்டும்.

இன்றைன்று எப்படித் தனியார் பேருந்துகளுக்கு உச்ச வரம்பு 10 என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதோ அதே போன்று தனியார் லாரி போக்குவரத்தைப் பொறுத்தவரை 10-க்கு மேற்பட்டு இருக்கக் கூடாது என்று உச்ச வரம்பை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். லாரிகள் வேகத்தைக் கட்டுப்படுத்த அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒப்பந்த ஊர்தி என்ற பெயராலும், ஆம்னி பஸ் என்ற பெயராலும் ரெகுலர் டிரான்ஸ்போர்ட் நடத்திக் கொண்டிருப்பது எல்லோருக்கும் மிக நன்றாகத் தெரியும். அதை மூடி மறைப்பதில் பயன் இல்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களே கூட அறிவார்கள். அவர்களே இன்றையதினம் மானியக் கோரிக்கையினை முன் வைத்துப் பேசும்போது சொன்னார்கள். எப்படி அரசாங்க பஸ் குறிப்பிட்ட நேரத்தில் புறப்படுகிறதோ அதே போன்று குறிப்பிட்ட நேரம் அறிவிக்கப்பட்டு அவர்கள் பாசஞ்சர்களை ஏற்றிச் செல்லக்கூடிய நிலை இருக்கிறது. அதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை மாயூரம் தொகுதியில் ஒருசில குக்கிராமங்களுக்குச் செல்லக்கூடிய பாதைகளில் பஸ் வசதி வேண்டுமென்று கடந்த நாலு, நாலரை ஆண்டுகளாக

[திரு. என். கிட்டப்பா] [1971 ஜூலை 21

அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் சொல்லி வந்திருக்கிறேன். அதற்கான நடைமுறைகளையும் செயல்முறைகளையும் உடனடியாக எடுத்து அதனை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டு மானியக் கோரிக்கையை ஆதரித்து முடித்துக் கொள்கிறேன்.

* திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவைமுன் அளிக்கப்பட்டிருக்கின்ற மானியக் கோரிக்கையை ஆதரித்துப் பேசுகின்ற முறையில் ஒன்றிரண்டு சொல்ல விரும்புகிறேன்.

பாதைகளையும், அகலப்படுத்தப்படுகின்ற பாலங்களையும், வருவாயையும் வைத்துப் பார்க்கின்ற நேரத்தில் போக்குவரத்து ஆண்டு தோறும் பெருகி வருகிறது என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. போக்குவரத்துத் துறையில் நமது அரசு அதிக அக்கறை காட்டுவது உண்மையிலேயே பாராட்டத்தக்கது. 1969-70-ல் வருவாய் 19.46 கோடி ரூபாய் என்று சொல்லப்பட்டிருக்கிறது. 1970–71-ல் வருவாய் 21.81 கோடி ரூபாய் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதுபோல் வருவாய் பெருகுவதில் இருந்தும் மற்ற நடவடிக்கைகளில் இருந்தும் போக்குவரத்து சீர்பட்டு வருகிறது என்பது தெரிகிறது. அதுமட்டுமல்லாமல் புதிய பேருந்து வழித்தடங்களுக்கு அனுமதிச் சீட்டுகள் வழங்க நமது அரசு முன்வருகிறது. உள்ள வழித்தடங்களில் கூடுதலான பேருந்துகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. பயணத் தடவைகளின் எண்ணிக்கையும் அதிகமாகியிருக்கிறது. இருக்கைகளின் எண்ணிக்கையும் அதிகமாகி இருக்கிறது. இந்த முறையில் பார்க்கும்போது 1970 மார்ச் 31-ம் நாள் கணக்கின் படி 7,846 பேருந்துகள் இருக்க, 1971 மார்ச் 31-ஆம் நாள் அன்று 8,192 பேருந்துகள் இருக்கின்றன. அதிகபட்சமாக 346 பேருந்துகளை விடுவதற்கு அரசு வழி செய்திருக்கிறது. அதற்காக அரசினைப் பாராட்டுகிறேன்.

அதுமட்டுமல்லாமல் பேருந்துத் துறையில் ஈடுபட்டிருக்கின்றவர்கள் பெரிய பெரிய லட்சாதிபதிகளாகவும், கோடீஸ்வரர்களாகவும் ஆவதைத் தடுக்கும் முறையில் பல போக்குவரத்துத் தடங்களைப் பொதுவுடைமை ஆக்க முன்வந்திருப்பதை நாம் பாராட்ட வேண்டியிருக்கிறது. 75 கல் தொலைவுக்கு அப்பால் செல்லுகின்ற வழித் தடங்களை எல்லாம் சென்ற ஆண்டு அரசு பொதுவுடமை ஆக்கியிருக்கிறது. அதே போல் சென்னைக்கு வருகிற பேருந்துத் தடங்களாக இருந்தாலும் சரி, சென்னையிலிருந்து செல்லும் பேருந்துத் தடங்களாக இருந்தாலும் சரி, அவற்றையும் அரசு பொதுவுடமை ஆக்கியிருக்கிறது. அதுமட்டும் அல்லாமல் தற்போது 50-க்கு மேற்பட்ட உரிமங்களைப் பெற்று இருக்கும் போக்குவரத்தை அரசு தேசிய உடமை ஆக்க முன் வந்திருப்பதை நான் பாராட்டுகிறேன்.



1971 ஜூலை 21] [திரு. கோ. இளங்கோவன்]

சரக்கு உந்துகளைப் பொருத்தவரை 988 சரக்கு உந்துகள் அதிகப்படியாகச் செல்ல அரசு வழிகோலியிருக்கிறது. அதற்காக அரசைப் பாராட்டுகிறேன். மைசூருக்கும், மராட்டியத்திற்கும், ஆந்திரத்திற்கும், அருகே உள்ள கேரளாவிற்கும் சரக்குப் பேருந்துகள் 200-க்கு மேல் செல்ல வழிகோலியிருக்கிறது.

அரசு வருவாயைப் பெருக்க வேண்டுமென்பதற்காக 270 கிலோ மீட்டர் செல்லுகின்ற பேருந்துகளுக்குக் கால் ஆண்டுக்கு 50 ரூபாய் வசூலித்து வந்ததை 60 ரூபாயாக உயர்த்திருப்பதையும் 270 கிலோ மீட்டருக்கு மேல் ஓடுகின்றவற்றிற்கு கால் ஆண்டுக்கு 55 ரூபாயில் இருந்து 65 ரூபாய் என்று உயர்த்தியிருப்பதையும் நான் பாராட்டுகிறேன். பாராட்டிப் பேசுகின்ற நேரத்தில் என்னுடைய தொகுதியிலுள்ள ஒருசில குறைபாடுகளையும் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

என்னுடைய தொகுதி ரயில்வே நிலையத்திற்குச் சற்று அப்பாலுள்ள தொகுதியாகும். என்னுடைய தொகுதியிலிருந்து ரயில்வே நிலையத்திற்குச் செல்ல வேண்டுமென்றால் குறைந்தது 9 கல் தொலைவு, 10 கல் தொலைவு. 15 கல் தொலைவு, 20 கல் தொலைவு என்று செல்ல வேண்டியிருக்கிறது. என்னுடைய தொகுதியைப் பொருத்தவரை திருவையாறு பகுதியாக இருந்தாலும் சரி, திருக்காட்டுப்பள்ளிப் பகுதியாக இருந்தாலும் சரி, கண்டியூராக இருந்தாலும் சரி, கல்யாணபுரமாக இருந்தாலும் சரி, புதுக்குடியாக இருந்தாலும் சரி, புனல்வாசலாக இருந்தாலும் சரி, செங்கிப்பட்டியாக இருந்தாலும் சரி, செந்தலையாக இருந்தாலும் சரி, சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் செல்கின்ற நேரத்தில் இந்தப் பகுதியில் போக்குவரத்து சரி செய்யப்பட வேண்டுமென்றுதான் மக்கள் சொல்லுகிறார்கள்.

அரசு அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுத்திருக்கிறதா? தேவையான உரிமங்களை வழங்கியிருக்கிறதா என்றால் தகுந்த நடவடிக்கை எடுத்திருக்கிறது, தேவையான உரிமங்களை வழங்கி இருக்கிறது. அதற்காக அரசுக்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆனால் வழங்கப்பட்டிருக்கின்ற உரிமங்களில் செல்லுகின்ற வண்டிகள் எல்லாம் ஒழுங்காக செல்லுகின்றனவா என்றால் இல்லை. நாள் ஒன்றுக்கு 20 முறை செல்ல வேண்டுமென்று சொன்னால் ஏறத்தாழ பத்து அல்லது 12 முறைதான் செல்லுகின்றது. இதனால் ஏற்படும் இடர்ப்பாடு என்னவென்றால், செல்ல வேண்டிய பேருந்து செல்லாமல் பயணிகள் ஒன்று கால்கடுக்க நடந்து செல்ல வேண்டும் அல்லது மணிக் கணக்காக காத்துக் கொண்டிருக்க வேண்டும். அந்தக் கம்பெனி அல்லாமல் வேறு கம்பெனி பஸ் வருகிற நேரத்தில் 50 பேர் செல்லலாம் என்று இருக்குமானால் அதிலே 60 அல்லது 70 பேர் செல்லும் பரிதாபகரமான சூழ்நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. என்னுடைய தொகுதியில்தான் கரிகால் பெருவளத்தான் நினைவுச் சின்னமாம்

[திரு. கோ. இளங்கோவன்] [1971 ஜூலை 21

கல்லணை இருக்கிறது. அந்தக் கல்லணைக்கு நம்முடைய மாநிலத்தின் பல பகுதிகளில் இருந்தும், பிற மாநிலங்களில் இருந்தும், பிற நாடுகளில் இருந்தும் கூடப் பயணிகள் வருகிறார்கள்.

அப்படி பயணிகளாக வருகிறவர்கள் தஞ்சைநகரிலிருந்து அங்கு செல்வதற்கு அவர்கள் காத்திருக்க வேண்டியிருக்கிறது. ஆகவே அந்த நிலை மாற்றியமைக்கப்பட வேண்டும். இதுபோன்ற குறைகளைச் சாதாரணமாக மாவட்ட ஆட்சித் தலைவர்களே தீர்த்து வைக்கலாம் என்றிருந்தாலும் இந்தப் பிரச்னை என் தொகுதியில் மட்டும் இருப்பதாக நான் கருதவில்லை. அருகிலுள்ள பாபநாசம் தொகுதியிலும் இருக்கிறது. குடந்தைத் தொகுதியில் இருப்பவர்கள் பலமுறை எடுத்துச் சொல்லியும் கூட இந்தக் குறைகள் நீக்கப்படாத காரணத்தினால்தான் இந்த மாமன்றத்தில் இந்தக் குறைகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நகரப் பேருந்துகளைப்பற்றி ஒன்று சொல்லுவேன். நகரப் பேருந்துகள் சாதாரணமாக ஐந்து கல் அல்லது ஆறு கல் தொலைவிற்குத்தான் சென்று கொண்டிருந்தன. இப்போது 14 கல் தொலைவிற்கு அவை செல்கின்றன. அது பயணிகளுக்கு மிகவும் வசதியாக இருக்கிறது. ஆகவே அதற்காக அரசுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். சட்ட விதிகளின் படி நகராட்சிப் பகுதியிலிருந்து தான் நகரப் பேருந்துகள் விடலாம் என்ற நிலைமை இருக்கிறது. என் தொகுதியில் பேரூராட்சிகள் இருக்கின்றனவே தவிர, நகராட்சி இல்லை. ஆகவே நகராட்சிப் பகுதியில் இருந்து தான் விடுவது என்பதல்லாமல் பேரூராட்சிகள் இருக்கிற பகுதிகளில் இருந்தும் விடுவதற்கு, குறிப்பாக திருவையாற்றிலிருந்து, திருக்காட்டுப்பள்ளியிலிருந்து பிற பகுதிகளுக்குச் செல்வதற்கு வசதி செய்து கொடுத்தால், பள்ளிப் பிள்ளைகளுக்கும் கல்லூரி மாணவர்களுக்கும், பயணிகளுக்கும் மிகவும் வசதியாக இருக்கும் என்று கூறிக்கொண்டு இந்தக் கோரிக்கையை ஆதரித்து என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம். நன்றி.

* **திரு. எஸ். முருகையன்** : சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள மானியக் கோரிக்கைகளை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

1967க்கு முன்பிருந்த ஆட்சி 1948-ம் ஆண்டிலேயே பஸ்களை யெல்லாம் நாட்டுடைமையாக்கவேண்டுமென்ற சட்டத்தைச் செய்து வைத்து அதை அமலுக்குக் கொண்டு வாராமலேயே 19 ஆண்டு களாக அரசாண்டு விட்டுச் சென்றது. இது ஒரு முக்கியமான பிரச்னை. ஒரு சிலரிடத்தில் மட்டும் பணம் சேராத அளவிற்கு அதைப் பரவலாக்கிப் பொதுத் துறைக்கு வரவேண்டிய பிரச்னையை சட்டமாக ஆக்கி வைத்து 19 ஆண்டுகள் அதை நடைமுறைக்குக் கொண்டு வராமல் இருந்தார்கள் என்றால் அதிலிருந்து



1971 ஜூலை 21] [திரு. எஸ். முருகையன்]

என்ன தெரிகிறது என்றால் அவர்கள் கட்சி வளர்ச்சிக்கு அது ஒரு காமதேனுத் திட்டமாக இருந்த காரணத்தினால்தான் அதை அமலுக்குக் கொண்டுவராத ஒரு சூழ்நிலையில் இருந்துவிட்டுச் சென்றுவிட்டார்கள்.

நமது முதல் அமைச்சர் அவர்கள் இந்தப் போக்குவரத்துத் துறைப் பொறுப்பை ஏற்றவுடன் 75 மைல்களுக்கு அப்பால் போகக்கூடிய பஸ்களையெல்லாம் நாட்டுடைமையாக்கும் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றினார்கள். அப்போது எதிர்தரப்பிலிருந்து சொல்லப்பட்ட வாதம் எல்லாம் அரசால் இதை நடத்தமுடியுமா, ஏற்கனவே நகரத்தில் நடத்தக் கூடிய பஸ்கள் எல்லாம் நல்லமுறையில் லாபத்தில் நடக்கவில்லையே என்றெல்லாம் சொன்னார்கள். அவர்களே முதலில் ஒரு சட்டத்தைச் செய்து வைத்துவிட்டு அதை அமலுக்குக் கொண்டுவராமல் விட்டது மட்டுமல்லாமல் அரசு தனியார் பஸ்களை ஏற்றுக்கொள்கிற நேரத்தில் அதுகுறித்து குறை சொல்லக் கூடிய அளவில் அவர்கள் இருந்துகொண்டிருந்தார்கள். ஆனால் இந்த நான்காண்டுகளில் அரசாங்கத் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பஸ்கள் எல்லாம் இன்றையதினம் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. ஆனால், நாம் எதிர்பார்த்த லாபம் இல்லை என்று வேண்டுமானால் குறை சொல்லலாமே தவிர அரசாங்கத்திற்கு நஷ்டமில்லை.

அடுத்து, இந்தப் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சிறந்ததொரு பொறியாளராக இருக்கிற காரணத்தினால் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட நாளிலிருந்து சிறந்த முறையில் அவர்கள் அதன் நிர்வாகத்தினை நடத்தி வருகிறார்கள். குறிப்பாக இந்த மூன்று மாத காலத்திற்குள் இந்த பஸ் துறையில் வரக்கூடிய வருவாயில் 10% உயர்த்தியிருக்கிறார்கள் என்பதிலிருந்தே அவர்கள் எவ்வளவு கவனமாக இருந்து செயலாற்றி வருகிறார்கள் என்பது நன்கு தெரிகிறது.

அது மட்டுமல்ல. இந்த மோட்டார் வாகன வரிச் சட்டம் அடிக்கடித் திருத்தப்படுகிறது. இந்தச் சட்டத்தை ஒன்றாக ஆக்கி ஒரு ஒழுங்குமுறையிலாக்குவதற்காக இதை ஒரே சட்டமாக அமைச்சர் அவர்கள் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் இந்த மூலச் சட்டத்தில் பல குறைபாடுகள் இருப்பதால் தனிப்பட்ட பஸ் முதலாளிகள் கோர்ட்டுகளுக்குச் செல்லும்போது ஏதோ ஒரு சட்டத்தின் துணையைக் கொண்டு அடிக்கடி பஸ் சொந்தக்காரர்கள் பலவிதமான அனுகூலங்களை அடைந்து விடுகிறார்கள். ஆகவே எல்லாவற்றையும் நன்கு ஆலோசித்து நிறைவுள்ளதொரு சட்டமாக இதை ஆக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, புது வழித்தடங்களுக்கு அனுமதி கொடுப்பதில் தனியார்களுக்கு இப்போது கொடுப்பது என்றால் 15 மைல்களுக்குள்ளாக இருந்தால்தான் கொடுக்கிறார்கள். பதினைந்து மைல்களுக்கு அப்பால் உள்ள தடங்களை இப்போதுள்ள பஸ் ஓனர்

களுக்கே கொடுக்கிறார்கள். நாட்டுடமையாக்கியதற்குப் பிறகு மீண்டும் மீண்டும் அவர்களிடத்திலேயே அந்த உரிமங்கள் செல்லக்கூடிய நிலையை மாற்றி பதினைந்து மைல் என்பதை இருபத்தைந்து மைலாக உயர்த்தி அதிலும் புதிதாக பஸ் உரிமங்கள் கொடுக்கிறபோது தனிப்பட்டவர்களுக்குத்தான் கொடுக்க வேண்டும், ஏற்கனவே பஸ் ஓனர்களாக இருப்பவர்களுக்குக் கொடுக்கக்கூடாது என்ற நிலையை உருவாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கப் போக்குவரத்து வண்டிகளில் 47 முதல் 49 ஸீட்டுகள் வைத்திருக்கிறார்கள். ஆனால் தனியார் துறையினர் நடத்தக் கூடிய பஸ்களில் 64 ஸீட்டுகள் போட்டு பஸ்களை ஓட்டுகிறார்கள். முன்பு ஒருமுறை இந்த மன்றத்தில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கும்போது இத்துறை அமைச்சர் அவர்கள் பதிலளித்தார்கள், அரசாங்க பஸ்களில் 47 ஸீட்டுகள் போட்டு நல்முறையில் மக்களுக்கு நல்லவசதிகளோடு நடத்தவேண்டுமென்றாலும்கூட பல பத்திரிகைகள் அதைக் கண்டித்து எழுதுகின்றன, ஆனால் தனிப்பட்டவர்கள் 64 ஸீட்டுகளை வைத்து நடத்தி மக்கள் நெருக்கமாக உட்காரக் கூடிய நிலை இருந்தாலும் அவைகள் எல்லாம் அவர்கள் கண்களுக்குத் தெரிவதில்லை என்று. ஆகவே 64 ஸீட்டுகள் வைத்து தனிப்பட்டவர்கள் நடத்துவதை, அதைச் சற்று குறைக்க வேண்டும் என்ற அளவில் சட்டத்தைத் திருத்த வேண்டும்.

அதே நேரத்தில் அரசாங்க பஸ்களை நல்லமுறையில், சொகுசாக அமைத்துத்தந்தால்தான் மக்களுக்கு வசதியாக இருக்கும். தனிப்பட்ட பஸ் முதலாளிகள் அடிக்கடி 'டைமிங்கை' மாற்றுகிறார்கள். அப்படி மாற்றுகிற நேரத்தில் அரசாங்கத் துறையிலிருந்து அதிகாரிகள் யாரும் டைமிங் கான்பரன்ஸ்க்கு செல்லாத காரணத்தினால் தனிப்பட்டவர்கள் தங்களுக்கு எப்படி எப்படி நேரங்களை மாற்றி வைத்துக் கொள்ளவேண்டுமோ அவற்றை நிறைவேற்றிக் கொள்ளும் ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. அந்நிலையில் அரசாங்க பஸ் ஒரு வழித்தடத்தில் செல்கிற நேரத்தில் நான்கு பஸ்கள் ஒன்றன்பின் ஒன்றாகச் செல்கிற முறையில் நிலைமையை மாற்றிவிட்டு தனியார் துறையினர் ஒரு மணி ஒன்றரை மணி நேரத்திற்கு முன்னடியாகவே பஸ்களை கொண்டு வந்து நிறுத்தி பஸ் நிரம்ப ஆள்களை ஏற்றிச் சென்று விடுகிறார்கள். ஆகவே டைமிங் கான்பரன்ஸ்க்கு தனியாக அரசாங்கத் துறையிலிருந்து ஒரு அதிகாரியை நியமித்து அதை மட்டும் அவர் பார்த்துக் கொள்ளக் கூடிய வகையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு அதிகாரியை நியமிப்பார்களேயானால் வசதியாக இருக்கும்.

அதே நேரத்தில் சென்னையிலிருந்து புறப்பட்டு வெளியிடங்களுக்குச் செல்லக்கூடிய அரசாங்கப் பஸ்களில் லக்கேஜ் கட்டணத்தை இப்போது சற்று உயர்த்தியிருக்கிறார்கள். உதாரணமாக, எங்கள் திருவண்ணாமலைப் பகுதியிலிருந்து



சென்னைக்கு கோழிக் கூடைகளை பஸ்ஸின் டாப்பில் ஏற்றி வருகிறார்கள். முன்பு அதற்கு ரூ. 2½ லக்கேஜ் சட்டணம் வசூலித்து வந்தார்கள். இப்போது அதை ரூ. 5 ஆக உயர்த்தி விட்டார்கள். அப்படி உயர்த்தியிருப்பதினால் தனியார் துறை பஸ்களில் அந்த லக்கேஜ் ஏற்றப்படுகிறது. அதனால் அரசாங்கத்திற்கு பஸ் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 25 முதல் ரூ. 30 வரையில் வருவாய் குறைந்திருக்கிறது. அவற்றை பஸ்டாப்பில்தான் போடுகிறார்கள். ஆகவே அந்தக் கட்டணத்தை நாம் குறைப்போமேயானால் நம் வருவாய் பெருகுவதற்கு ஏதுவாகும்.

அடுத்து, அரசாங்க பஸ்களுக்கு இப்போது ஸ்டாண்டுகளில் எல்லாம் ப்ரோக்கர்கள் கிடையாது. அப்படி ப்ரோக்கர்கள் இல்லாத காரணத்தினால் நான்கு மணிக்கு அரசாங்க வண்டி வருகிறது என்றால் தனியார் துறை வண்டிகள் 3.30-க்கு வருவதாக இருந்தாலும் 3.45க்கே தனியார் வண்டிகளைக் கொண்டு வந்து நிறுத்தி எல்லா டிக்கட்களையும் ஏற்றிக்கொண்டு முன்னாலேயே சென்று விடுகிறார்கள். காரணம் அங்கு கேட்பார் கிடையாது. அப்படி கேட்பார் யாரும் இல்லாத காரணத்தினால் அரசாங்கத்திற்கு வர வேண்டிய வருவாய் தனியார்களுக்குச் சென்று விடுகிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இதைப் பரிசீலித்து ஸ்டான்ட் ப்ரோக்கர்களைப் போடவேண்டும். அப்படி ப்ரோக்கர்களைப் போடுவதால் அரசாங்கத்திற்கு அதிகச் செலவு ஒன்றும் ஆகிவிடாது. ஒரு பஸ்க்கு ஒரு ஸ்டான்டில் எட்டணா அல்லது ஒரு ரூபாய் கொடுத்தால் போதும். அப்படிக் கொடுப்பதினால் ஒரு வண்டிக்கு ஒரு ஸ்டான்டில் ரூ. 15 முதல் ரூ. 20 வரை வருவாய் கூடுதலாக வரும். ஆகவே நிச்சயமாக அமைச்சர் அவர்கள் இதை உடனடியாகக் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது முக்கியமானதொரு பிரச்னை.

அடுத்து, டெப்போக்கள் இருக்கின்றன. அங்கெல்லாம் போதுமான அளவிற்கு மெக்கானிக்ஸ், ஃபிட்டர்கள் இவர்களைப் போட வேண்டும். அதேபோல் வண்டிகள் ஸ்டான்டிற்கு வந்து நிற்கும்போது அவற்றைத் துடைப்பதற்கு க்ளீனர்களைப் போடவேண்டும். அப்படி சுத்தமாக, தனிப்பட்டவர்கள் வைத்திருப்பதைப் போன்று வைத்திருந்தால்தான் அரசாங்கத்திற்கு அதிக வருவாய் கிடைக்கும். இதையும் கவனிக்கவேண்டும்.

அடுத்து, ஒருசில முதலாளிகள் மற்றவர்களின் பேர்களில் வண்டிகளை வைத்துக்கொண்டு, பினாமியாக அதன்மூலம் லாபம் பெற்று வருகிறார்கள். அவற்றையெல்லாம் ஸி.ஐ.டி. மூலம் நன்கு பரிசீலனை செய்து பார்த்து, ஒருவர் எவ்வளவு வண்டிகள் வைத்திருக்கிறார்கள், யார் யார் பேரில் வைத்திருக்கிறார்கள் என்று பார்ப்பார்களேயானால் இப்புதுச்சட்டத்தினால் அரசுக்கு நல்ல வருவாய் கிடைக்கும் ஒருசூழ்நிலை ஏற்படும். பத்து வண்டிகளுக்கு மேல் வைத்துக் கொள்ளக் கூடாது என்று அரசாங்கம் புதிதாக ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

[திரு. எஸ். முருகையன்] [1971 ஜூலை 21

எதிர்க்கட்சித் தரப்பில் இருக்கும் காங்கிரஸ்காரர்கள் 50 பஸ் வைத்து இருப்பவர்களிடமிருந்து அத்தனை பஸ்களையும் எடுத்துக் கொள்கிறீர்களே, அவர்களுக்கு 10 பஸ்களாவது கொடுக்கக்கூடாதா என்று சொன்னார்கள். அவர்களுக்குப் பரிவு காட்டி 10 பஸ் கொடுக்கும் சூழ்நிலை இருக்குமானால், அந்தக் கம்பெனியில் 4-5 பேர் பங்குதாரர்களாக இருப்பார்கள். அந்த 4-5 பங்குதாரர்களுக்கும் ஆளுக்கு பத்து பஸ் கொடுக்கவேண்டி வரும். அப்புறம் அரசாங்கம் எடுப்பதற்கு பஸ்கள் இருக்காது. இப்படி அந்த 50 பஸ்களையும் அவர்களிடத்திலேயே திரும்பத் தருவதற்காகத்தான் காங்கிரஸ் காரர்கள், முன்பு ஆட்சியில் இருந்த காங்கிரஸ்காரர்கள், மறைமுகமாக அவர்களுக்கு லாபம் தேடித் தரும் வகையில் சொல்லியிருக்கிறார்கள். அதை ஒப்புக்கொள்ளாமல் அரசாங்கம் சட்டம் எப்படி போட்டு இருக்கிறதோ அதுமாதிரி 50 பஸ்ஸையும் அரசாங்கமே எடுத்துக் கொள்ளவேண்டுமென்று சொல்லி, பஸ் துறையிலே அதிகமான லாபத்தை அடைவதற்கு என்னென்ன வழிகள், நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அவற்றை நல்ல முறையில் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அமைச்சரவர்கள் நடப்பு 3 மாத காலத்திலேயே 10 சதவிகிதம் வருவாயை உயர்த்தி இருக்கிறார்கள். இன்னும் 6 மாதத்திலே இன்னும் 10 சதவிகிதம், 20 சதவிகிதம் என்று நல்ல முறையில் உயர்த்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. ஜே. ஜேம்ஸ்:** துணைத் தலைவரவர்களே, இந்த மான்யத்தின் மீது என் கட்சியின் சார்பில் தரப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானத்தை ஒட்டி சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

நல்ல தகுதி படைத்த ஒரு அமைச்சரை இந்த இலாக்காவுக்கு அமைச்சராக ஏற்படுத்தி இருப்பதைப் பார்க்கிறபோது மகிழ்ச்சி அடைகிறோம். நிச்சயமாக இந்த இலாகா நல்ல முறையில் செயல்படுவதற்கு அது ஒரு காரணமாக இருக்கும் என்பதில் ஐயப்பாடு இல்லை. இருந்தாலும், எத்தனை நிபுணர் ஆனாலும் கூட இந்த இலாகா இருக்கிற நிலைமையைப் பார்க்கிறபோது அதைச் சரிப்படுத்த முடியுமா என்பது கொஞ்சம் வியப்பை உண்டாக்கக்கூடிய நிலையில் இருக்கிறது.

நாம் இதற்கு 20 கோடி ரூபாய் மூலதனம் செய்து இருக்கிறோம். அந்த 20 கோடி ரூபாய் கள்ள நாணயமாக, கள்ள நோட்டாக கொடுத்து வந்தது அல்ல, ஏழை எளிய மக்களின் வரிப் பணத்தை எடுத்துத்தான் இந்த இலாகாவில் முதலீடு செய்து இருக்கிறோம். ஆண்டுதோறும் இது நஷ்டத்தில் ஓடிக் கொண்டிருக்கிறது என்று சொன்னால், அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். இது எப்போதுமே இப்படி நஷ்டத்தில் ஓடியது அல்ல. 1964-ம் ஆண்டு வரையிலும் லாபத்தில்தான் செயல்பட்டுக்கொண்டு வந்தது. திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்றுக்கொண்ட



1971 ஜூலை 21] [திரு. ஜே. ஜேம்ஸ்]

பிறகுதான் ஆண்டுதோறும் வளர்பிறை போல் அந்த நஷ்டக் கணக்கு கூடிக்கொண்டு வருகிறது என்று சொன்னால் அதற்குக் காரணம் என்ன, அதன் ரகசியம் என்ன என்பதைப் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இன்று பொறுப்பு ஏற்றுக்கொண்டு இருக்கும் அமைச்சருக்கு முன்பு ஒரு அமைச்சர் இருந்தார்கள்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** துணைத் தலைவரவர்களே, அவர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திலே லாபம் இருந்ததாகவும், அதற்குப் பிறகு கழகம் பொறுப்பு ஏற்றதற்குப் பின்னால் நஷ்டம் வளர்பிறை போல் வளர்ந்து வருவதாக எடுத்துச் சொன்னார்கள். 1967 வரை இருந்த ஆட்சி வளர்பிறை மூலம் ரூ. 61 லட்சத்திற்கு நஷ்டக் கணக்கை கொண்டு வந்தார்கள். இது ரெவின்யூ கணக்கில் இருக்கிறது. அதற்குப் பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தத் துறையை நிர்வகித்து வந்த போது அந்த நஷ்டக்கணக்கு ரூ. 23 லட்சத்திற்கு குறைந்து இருக்கிறது. ஆகவே, அது தொடர்ந்து வளர்பிறை என்று சொல்வது பொருத்தமானதாகாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** துணைத் தலைவரவர்களே, கொடுக்கப்பட்டிருக்கிற இந்த ஆய்வுரையில் 1970-ல் ரூ. 83 லட்சம் நஷ்டக் கணக்கு காட்டப்பட்டிருக்கிறது. 1970-ல் 83 லட்சம் ரூபாய் என்றால், 1969, 68, 67-ல் நஷ்டம் தானே இருந்து இருக்கவேண்டும். 1971-ல் இது இன்னும் வளர்ந்து கொண்டு போகும் நிலைமை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் ஒரு நிபுணர், அதற்கு முன்பு அமைச்சராக இருந்தவர்கள் அன்று சட்டமன்றத்தில் ஒரு வாக்குறுதி கொடுத்தார்கள், அடுத்த ஆண்டில் ரூ. 2 கோடி லாபத்தை இந்தத் துறையில் காட்டுவேன் என்று சொன்னார்கள். அதை நிறைவேற்ற முடியாத காரணத்தால்தான் அந்த அமைச்சர் அந்த இலாகாவை விட்டுப் போய் விட்டார் என்று கருதுகிறேன். யார் அமைச்சராக இருந்தாலும், எத்தகைய நிபுணர் இருந்தாலும், இன்று இருக்கும் அந்த நஷ்டத்தைக் குறைக்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நஷ்டக்கணக்கு வருவதற்கு அமைச்சர் கூறுகிற காரணம், தொழிலாளர்களுக்கு அதிகமான படிகள் கொடுத்ததாலும், ஏதோ ஒரு குழு கொடுத்த பரிந்துரைகளின் காரணமாக அதிக நஷ்டம் ஏற்பட்டது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல காரணம். அதுவும் ஒரு காரணமாக இருக்கும். இன்னும் பல்வேறு காரணங்கள் இருக்கும். அதற்கான காரணத்தை அரசு சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த இலாக்காவில் பழுதுபட்ட சாமான்களை விற்பதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இதுபோன்று இந்த இலாகாவுக்கு லட்சக்கணக்கில் மாற்றுப் பொருள்கள் வாங்க

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1971 ஜூலை 21

வேண்டியிருப்பதால், அப்படி வாங்குவதற்கு எல்லாக் கட்சி அங்கத்தினர்களையும் கொண்ட ஒரு கமிட்டி அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒருவேளை அந்த முறையில் ஒழுங்கீனம் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது என்று சொன்னால், அது தவிர்க்கப்பட நம்மால் முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த இலாக்காவின் நிர்வாகத்தில் பார்த்தால் மேல் அதிகாரிகள் அதிகமான அளவில் இருக்கிறார்கள். அந்த நிர்வாகத்திற்கு இத்தனை அதிகாரிகள் தேவைதானா என்று சிந்திக்கவேண்டும். எங்கள் மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் அந்த இலாகா பெரிய இலாகாவாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. ஒரு டி.டி.எஸ். தான் அங்கே சில ஆண்டுகளாக வேலையில் இருந்தார்கள். அந்த ஒரு டி.டி.எஸ். இருந்த இடத்தில் இன்று ஜாயின்ட் டைரக்டர், டெபுடி டைரக்டர், அசிஸ்டெண்ட் டைரக்டர் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட அதிகாரிகள் இருப்பதால்தான் அதிக நஷ்டம் ஏற்படுகிறது. இன்று சென்னையை எடுத்துக் கொண்டால் பல்வேறு ஜாயின்ட் டைரக்டர்கள், டெபுடி டைரக்டர்கள், அசிஸ்டெண்ட் டைரக்டர்கள், இன்ஜினீயர்கள் இருக்கிறார்கள். இதனால் செலவு அதிகமாகிறது. / இது தேவைதானா என்று அரசு சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆகவே, நல்லமுறையில் அதைப் பரிசீலனை செய்து செலவைக் குறைக்கவில்லை என்று சொன்னால் நிச்சயமாக அது இன்னும் நஷ்டத்தில்தான் போய்க்கொண்டு இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். பேருந்துகளை நாட்டுடமை ஆக்கும் கொள்கையை சரிவர நடைமுறைக்குக் கொண்டு வர முடியாமல் போகும். அதோடு அது மக்களை ஏமாற்றும் அளவுக்குப் போய்விடும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த இலாகா மிகவும் மோசமான நிலையில் இன்று நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. மக்களுக்கு அதிகமான சேவைகளைச் செய்யவில்லை என்று ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களே கூட குறை சொன்னார்கள். இன்று அதிகமான பிரேக்டவுன் ஆகிறது என்று சொன்னால், நிச்சயமாக பணிமனைகள் சரிவர செயல்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஸ்பேர் பார்ட்ஸ் ஒழுங்காக வாங்குவது இல்லை என்று சொல்கிறார்கள். தேவைக்கேற்ற ஊழியர்கள் ஓர்க்ஷாப்பில் இல்லை என்று சொல்கிறார்கள். அதனால் ஒழுங்கான முறையில் வண்டிகள் பழுதுபார்க்கப்படுகிறது இல்லை என்று சொல்கிறார்கள். படித்த இன்ஜினீயர்களை நியமித்து செய்யவேண்டிய வேலையைச் செய்யாமல் இப்போது பெஞ்ச் பிட்டர்கள், க்ளீனர்கள் போன்றவர்களை வைத்து பழுதுபார்ப்பு வேலை செய்வதால், அந்த வேலைகள் சிறந்தமுறையில் நடைபெறவில்லை என்று கருதுகிறேன். ஆகவேதான், ஆக்சிடெண்ட், பிரேக்-டவுன் சாதாரணமாக ஏற்படுகிறது. அரசாங்கம் இதைப் பரிசீலிக்கவேண்டும். இப்போது நம் மாநிலத்தில் பட்டம் பெற்ற இன்ஜினீயர்கள் இருக்கிறார்கள். அவர்களை இந்த இலாகாவில் நியமித்து ஓர்க் ஷாப்பில் போட்டு,



1971 ஜூலை 21] [திரு. ஜே. ஜேம்ஸ்]

நல்லமுறையில் நடத்தலாம். அதனால் ஆக்சிடெண்ட், பிரேக்டவுன் இவற்றைக் குறைக்கலாம என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

டைம் அன்டு மோஷன் ஸ்டடி என்று ஒரு ஏற்பாடு இருக்கிறது. அந்தப் பிரிவின் பரிந்துரைகளின் அடிப்படையில் பழுது பார்க்கும் வேலைகளை நிறைவேற்றினால் நிச்சயமாக பல முனைகளில் நமக்கு லாபம் ஏற்படும் என்பதை அமைச்சர் இன்ஜினியர் அவர்களுக்கு கூறிக்கொள்கிறேன். இன்னொரு குறை கூறினார்கள். சாதாரணமாக நம் பஸ்களை விடுவதற்குப் போதுமான ஷெட்கள் இல்லை. ரோடுகளில் விட்டு விடுகிறார்கள். அனாதை மாடுகள் ரோடுகளில் திரிவது போல் இந்த பஸ்களும் இரவுவேளைகளில் நடு ரோட்டில் நிறுத்தப்பட்டு இருக்கின்றன. இதைப் பார்த்துக் கொள்வதற்கு ஆட்கள் கிடையாது. களவு சர்வசாதாரணமாக நடைபெறுகிறது. அதன் காரணமாக மிகுந்த நஷ்டம் ஏற்படுகிறது என்றும் கூறுகிறேன். இன்னும் ஆக்சிடெண்டுகளைப் பற்றி அமைச்சரவர்கள் கொடுத்திருக்கும் அறிக்கையில் சாதாரணமாக ஒரு ஆக்ஸிடென்ட் ரிப்போர்ட் கொடுக்கப்படும். ஆனால் இந்த அறிக்கையில் அப்படிப்பட்ட ரிப்போர்ட் கொடுக்கப்படவில்லை. காரணம் என்ன என்று புரியவில்லை. ஒருவேளை கணக்கில் சொல்லக் கூடாத அளவுக்கு இருந்து, அதை எவ்வாறு கொடுப்பது என்று நினைத்தார்களோ என்னவோ. சில மாதங்களுக்கு முன்பாகக் கூட நீதிமன்றத்திலே ஒரு தீர்ப்பு வந்தது. நான்கு மாதங்களாக ஃபிட்நஸ் சர்டிபிகேட் இல்லாமலேயே ஒரு ஸ்டேட் ட்ரான்ஸ்போர்ட் வண்டி ஓடிக்கொண்டிருந்தது, அந்த வண்டியில் அகப்பட்டு ஒரு பெண்பணி இறந்ததாகவும், ஹைகோர்ட்டுக்கு கேஸ் போய், ஒரு தீர்ப்புகொடுத்து, அதில் சில ஆப்ஸர்வேஷன்களும் இருந்தன என்பதையும் நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்த இலாகாவில் பணியாற்றும் தொழிலாளிகளைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் ஆகிறது. தாங்கள் 10 நிமிடங்களுக்கு மேல் பேசுகிறீர்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** இப்படிச் சொன்னால் எப்படி ? ஒரு மினிட் கொடுங்கள். அன்று ஒரு பில்லில் பேசும்போது குறிப்பிட்டேன், எக்ஸ்-சர்வீஸ்மென் கூட்டுறவுச் சங்கம் தங்கள் ட்ரைவர்களுக்கும், கண்டக்டர்களுக்கும் கொடுக்கும் சம்பளம், டி.வி.எஸ். நிறுவனத்தில் கொடுக்கும் சம்பளம் அதிகமாக இருக்கிறது. இருந்தும் அந்த நிறுவனங்கள் லாபத்தில்தான் ஓடுகின்றன. நம்முடைய ட்ரைவர்கள், கண்டக்டர்கள் இவர்களுக்கும் அதிகமான சம்பளத்தைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நண்பர் முருகையன் காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் 120 மைல் அளவில் கூட தேசியம் ஆக்கமுடியவில்லை, நாங்கள் இதையாவது செய்திருக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். 75 மைல் அளவில்

உள்ள ரூட்களை எடுத்து விட்டு, இன்றைக்கு 400, 500 மைல் நீளமுள்ள ரூட்களை ஆம்னி பஸ்களுக்கு கொடுத்திருக்கிறோம். தனியார் நிறுவனத்திற்குக் கொடுத்திருக்கிறோம். இதனால் எவ்வளவு லாபம் வருகிறது என்பதைப் பார்க்கவேண்டும். இதுவும் அமைச்சருக்குத் தெரியும். இந்த ஆம்னிபஸ் ரூட்களை நிறுத்திவிட்டு, அவசியமானால், சர்க்காரிலேயே இரவு நேரங்களில் அரசாங்கமே பஸ்ஸை ஓட்டினால், பெரும் லாபமும் வரும், மக்களுக்கு சௌகரியமாகவும் இருக்கும்.

கடைசியாக இந்த நிர்வாகத்தில் அரசியல் தலையீடு இருப்பதை அகற்ற வேண்டும் என்பதை அமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு மனுவை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, சொல்ல விரும்புகிறேன். நாகர் கோவில் வட்டச் செயலாளர் சீப் செகரடரிக்கு ஒரு மனு கொடுத்திருக்கிறார்கள். அதில் கூறியிருப்பது,

"The Government staff, who are natives of Kanyakumari district working in various offices worked for the Congress in the recent election and they had then supported Thiru Kamaraj Nadar. They must be transferred from this district to various other districts . . ."

MR. DEPUTY SPEAKER : I am not permitting you to read from the letter. That person is not in this House.

THIRU J. JAMES : I am placing this letter to the Hon. Minister. I take full responsibility for the statement I am making.

MR. DEPUTY SPEAKER : The hon. Member should have taken my permission beforehand.

THIRU J. JAMES : I now seek your permission. I take responsibility for this letter.

THIRU R. PONNAPPA NADAR : This document is in the possession of Government. A copy has been obtained by the hon. Member and he takes full responsibility to substantiate what he says. What is the legal flaw in this ?

THIRU J. JAMES : I take responsibility.

THIRU M. A. LATHEEF : The Chair has given its ruling that it would not permit the reading of the letter. After the ruling by the Chair, the hon. Member has no business to read the contents of the letter, which has not been forwarded to the Hon. Speaker. I strongly object to the hon. Member reading it.

MR. DEPUTY SPEAKER : The hon. Member should have taken my prior permission.





THIRU J. JAMES : I seek your permission now and I take the responsibility. It goes on like this :—

"If the Government takes serious steps in this regard, Kanyakumari district will become a D.M.K. front for the next election." . .

MR. DEPUTY SPEAKER : I don't allow you to read.

THIRU N. GANAPATHY : The hon. Member should not be permitted to read the document. The Chair has not permitted it. How can he go on reading ?

திரு. ஜே. ஜேம்ஸ் : இந்தமாதிரி ஒரு மனுவைக் கொடுத்ததின் அடிப்படையில் பல்வேறு அதிகாரிகள் அங்கிருந்து மாற்றப் பட்டிருக்கிறார்கள். ஒரு பெண்மணி, ஆர்.டி.ஓ. ஆபீசில் பணி யாற்றி வந்தவர் மெடர்னிடி லீவில் இருந்து வந்ததும், நாகர் கோவிலிலிருந்து இந்தக் கடிதத்தின் அடிப்படையில் சேலம் மாவட்டத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள் என்பதை கவனத் திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இந்த வகையில் இருக்கும் அரசியல் தலையீட்டைத் தவிர்க்க வேண்டும் . . .

(வேறு உறுப்பினர் அழைக்கப்பட்டார்)

* திரு. சு. துரைசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள மானியக் கோரிக்கையை ஆதரித்து என் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த மன்றத்திலே 1967-க்கு பின் அமைந்த அரசு, நாட்டு மக்கள் மத்தியில் இருக்கும் நம்பிக்கை காரணமாக ஏழை மக்களின் நன்மைக்காக சமதர்மக் கொள்கையின் அடிப்படையில் 75 மைலுக்குமேல் உள்ள வழித்தடங்களை நாட்டுடமை ஆக்கும் காரியத்தைச் செய்தது. 1967-ம் ஆண்டு இந்த மன்றத்திலே அதைச் செய்தோம். ஆளும் பொறுப்பை நாம் மார்ச்சு மாதம் ஏற்றுக் கொண்டோம். அடுத்த கூட்டத்திலேயே நாட்டுடமையாக்கும் காரியம் நம் அரசால் செயல்படுத்தப்பட்டது. இப்பொழுது 50-க்கு மேல் உள்ள பஸ்களை நாட்டுடமை ஆக்கும் காரியத்தையும், தனிப்பட்ட ஒருவருக்கு 10 பஸ்-தடங்களுக்கு மேல் இருக்கக் கூடாது என்றும் சமதர்மக் கொள்கையை நடைமுறைப்படுத்தி யிருக்கிறோம். இந்த அரசின் இந்தக் காரியங்களை நாட்டு ஏழை மக்கள் வரவேற்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில் இந்த நாட்டிலே சமதர்ம லட்சியத்தை கொண்டுவரப்போகிறோம் என்று சொன்னாலும், 1943-ம் ஆண்டில் நாட்டுடமை ஆக்கும் சட்டத்தைக் கொண்டுவந்தாலும், 1953-ம் ஆண்டில் சென்னை நகரத்தை அடுத்து ஆவடியில் காங்கிரஸ் கட்சி மாநாட்டில் சமதர்மக் கொள்கையை நடைமுறைக்குக் கொண்டு வந்தால் எங்கே முதலாளி வர்க்கத்தின் ஆதரவு போய்விடுமோ

என்று அஞ்சி, மாதிரி சமதர்ம லட்சியத்தைக் கொண்டு வருகிறோம் என்று சொல்லிவிட்டு, அப்படிப்பட்ட கருத்தை 1953-ல் தெரிவித்தாலும், 1959-ம் ஆண்டில்தான் தமிழ்நாட்டில் பேருந்துகளை நடத்த நடைமுறைக்குக் கொண்டு வந்தார்கள். ஆனால் நம் கழகம் 1967-ல் பொறுப்பேற்று, 1967-லேயே நாட்டுடைமைக் கொள்கையை நடைமுறைப்படுத்தியது. அதேபோல் 50-க்கு மேல் உள்ளவைகளையும் நாட்டுடைமை ஆக்குவது என்று செய்திருக்கிறது. இப்படிப் படிப்படியாக விரைவில் செய்திருப்பதைப் பார்க்கிறோம். 1947-லே விடுதலை கிடைத்து, 1953-லே சட்டம் கொண்டு வந்து, 59-லே நடைமுறைப்படுத்தியது இதற்கு முன்னால் இருந்த அரசு. அவர்களுடைய சமதர்மக் கொள்கைக்கும், நம் கழக சமதர்மக் கொள்கைக்கும் இருக்கும் வேறுபாடு என்ன என்பதைப் புரிந்து கொள்ளமுடியும்.

பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திற்கு ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். 1967-க்குப் பிறகு, இந்தத் தேதி வரையில் அரசாங்க பஸ்ஸானாலும் சரி, தனியார் பஸ்ஸானாலும் சரி, பயணிகளுடைய பஸ் கட்டணம் உயர்த்தப்படவில்லை என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். 1967-க்குப் பிறகு டீசல் விலை ஏறியிருக்கிறது; வண்டிக்குத் தேவையான உறுப்புகளின் விலை ஏறியிருக்கிறது. இருந்தாலும், ஏழை மக்கள் பாதிக்கப்படக்கூடாது என்ற அளவில் பஸ் கட்டணத்தை உயர்த்தாமல் காத்த இந்த அரசைப் பார்த்து நாம் பெருமைப்படுகிறோம்.

அதுமட்டுமல்ல, பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக ஒரு கருத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். ரெயில்வேயை எடுத்துக் கொண்டாலும், எக்ஸ்பிரஸ் ரெயிலில் வாங்கும் கட்டணத்தைவிட நம்முடைய எக்ஸ்பிரஸ் பஸ்ஸில் குறைந்த கட்டணமே வாங்கப்படுகிறது. இது ஏழை மக்களுக்கு உதவியாக இருக்கும் ஒரு நல்ல காரியம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், எங்கள் ஊர் திருப்பூரிலிருந்து கோயம்புத்தூருக்கு 1967-க்கு முன்பு கட்டணம் ரூ. 1.65 தனியார் பஸ்ஸில். இன்றைக்கு அதே வழிக்கு ரூ. 1.50 தான் கொடுக்கிறோம் இந்த நான்கு ஆண்டுகளாக. இவையெல்லாம் ஏழை மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையில் இந்த அரசு செய்யும் காரியங்கள் என்பதைக் கண்டு பெருமைப்படுகிறோம்.

இந்தப் போக்குவரத்துத் துறையைப்பொறுத்தவரையில், இப்பொழுது இருக்கும் இந்த நிறுவனத்தை, 4, 5 பிரிவுகளாகப் பிரித்து, கோயம்புத்தூர் மதுரை, சென்னை என்ற முறையில் பிரிக்கப் பட்டு, ஒவ்வொரு பிரிவும் ஒப்பகரமாக ஓடும் முறையில் முயற்சி செய்ய வேண்டும் என்றும், அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.





இதுமட்டுமின்றி, பொது மக்களின் கோரிக்கைக்கு எப்படி செவி சாய்த்து நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பதை எடுத்துக் காட்ட ஒன்றைச்சொல்ல விரும்புகிறேன். அண்மையில் கோவை—திருச்சி செல்லும் எக்ஸ்பிரஸ் பஸ்கள் திருப்பூர் வழியாக விடப்பட வேண்டும் என்ற மக்களின் நீண்ட நாள் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் 1970-ஆம் ஆண்டு இறுதியிலோ அல்லது 1971 ஆம் ஆண்டு ஆரம்பத்திலோ கோவை—திருச்சி பஸ்கள் திருப்பூர் வழியாக ஓட்டப்பட வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப் பட்டது. ஆனாலும் அதிகாரத்திலுள்ள நிர்வாகஸ்தர்களுடைய துணையோடு, ‘ அரசாங்க பஸ்கள் தங்கள் தடங்களின் வழியே சென்றால் தங்களுடைய இலாபம் குறைந்துவிடும்’. என்ற நோக்கத்தில் சில தனியார் பேருந்து நிறுவனங்கள் இதில் தலையிட்டு இதைச் செயலாக்காத வகையில் கட்டுப்படுத்திக்கொண்டு வருகின்றார்கள். இப்படிக் குந்தகம் செய்பவர்கள் யார் என்று கண்டுபிடிக்கப்பட்டு திருத்தப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இதேபோல தொழிலாளர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட அரசாக இருப்பதால், போக்குவரத்துத்துறை தொழிலாளர்களின் பல கோரிக்கைகள் அவ்வப்பொழுது பரிசீலிக்கப் பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. புதிய கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டதன் காரணமாக ரூ. 81 லட்சம் கூடுதலாக ஊதியங்கள் வகையில் செலவழித்து வருகின்றார்கள். சுமார் 18 ஆயிரம் தொழிலாளர்கள் கூடுதலாக ரூ. 81 லட்சம் ஊதியம் பெறுகின்றார்கள் என்றால் இது பெருமைப்படத்தக்க ஒன்றாகும். மேலும் தொழிலாளர்களின் குடியிருப்புத் தேவைகளை இந்த அரசு அனுதாபத்தோடு கவனித்து வருகின்றது. போக்குவரத்துத்துறை ஊழியர்களுக்கு ஊக்கம் அளிக்கத்தக்க வகையில் வசூலைப்பொறுத்து ஊக்க போனஸ் அளிக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இதைச் சொல்லும் நேரத்தில் இன்னொரு வேண்டுகோளையும் விடுக்க விரும்புகிறேன். தமிழகத்தில் டி.வி.எஸ். ஏ.பி.டி. போன்ற நிறுவனங்கள் பெரும் எண்ணிக்கையில் லாரிகளை வைத்துக்கொண்டு பார்சல் சர்வீஸை நடத்திக்கொண்டிருக்கின்றார்கள். இவற்றையெல்லாம் நாட்டுடைமையாக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து தமிழகத்தின் தலைநகரான சென்னையைச் சுற்றியுள்ள 10 அல்லது 16 மைல் தூரத்தில் பரவியிருக்கும் மக்கள் சுலபமாக மின்சார ரயில்களிலும் மற்ற மற்ற பஸ்களிலும் வரமுடிகின்றது. ஆனால் கோவை போன்ற பெரிய நகரங்களில் காலையிலும் மாலையிலும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நெரிசல் காரணமாக மாணவர்களும், பெண்களும், தொழிலாளர்களும் மிகவும் கஷ்டத்திற்குள்ளாகின்றார்கள். எனவே மாணவர்களுக்காகவும் பெண்களுக்காகவும் காலை 6 லிருந்து 7 மணி வரையிலும் மாலை 4 லிருந்து 5 மணி வரையிலும் தனியார் துறையில் பஸ்களை நடத்துகின்றவர்கள் அந்நகரங்களிலே மேலும் கூடுதலாக பஸ்களை விடுவதற்கு முயற்சி

எடுத்துக்கொள்ளுவதற்கான நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இக்கோரிக்கையின் மீது பேச வாய்ப்பினை அளித்தமைக்காக நன்றி தெரிவித்து முடித்துக் கொள்ளுகிறேன்.

*** திரு. டி. கணபதி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மானியத்தை வரவேற்று இரண்டொரு கருத்துக்களை இப்பேரவையின் முன் வைக்க விரும்புகிறேன்.

இன்றைக்கு நமது மாநிலத்தில் உள்ள போக்குவரத்து மேலும் மேலும் மேம்பாடடையத்தக்க நடவடிக்கைகள் மூன்று இருக்கின்றன. ஒன்று, புதிய வழித்தடங்களுக்கு அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படுவது; உள்ள வழித்தடங்களுக்குக் கூடுதலாக அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படுவது. இரண்டாவது, பேருந்துகளின் தடவைகளைக் கூட்டுதல்; அடுத்து பேருந்துகளில் உள்ள பயணிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவது. மூன்றாவது, புதிய வழித்தடங்களுக்கான அனுமதிச் சீட்டுகளை தாராளமாக வழங்குவது. இவற்றை நிறைவேற்றி வருவதன் காரணமாக பெருமளவிற்கு மக்கள் பலனடைந்து இருக்கின்றார்கள். இதற்காக நாட்டிலே அனைவருமே இந்த அரசுக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கின்றார்கள். எனவே இதற்காக அமைச்சரவையைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். முன்பெல்லாம் கன்னியாகுமரியிலிருந்து நாகர்கோவிலுக்கு வருகின்றவர்களும் அங்கிருந்து திருநெல்வேலி வருகின்றவர்களும் வழிநெடுக பஸ்களுக்காக மணிக்கணக்காகவும், நாட்கணக்காகவும் காத்துக் கொண்டு நிற்கும் ஒரு அவல நிலை இருந்தது.

அண்மையில் கடந்த ஜூனில் மாண்புமிகு அமைச்சர் வந்த பொழுது இதனை முறையிட்டோம். இதையறிந்த நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனேயே அத்தடத்தில் ஓடும் ஒவ்வொரு பேருந்தும் கூடுதலாக ஒரு முறை ஓடவேண்டும் என்று உத்தரவிட்டதன் காரணமாக இம்முறையில் மக்கள் படும் தொல்லைகள் ஓய்ந்தன. சில தடவைகளை ஏர்வாடி வழியாக விடுவது அவசரம். அம்மக்களின் சார்பிலே நன்றியையும் பாராட்டுதலையும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து கன்னியாகுமரிக் கிளையில் உள்ள நாகர்கோவில் பேருந்து நிலையத்தில் தினமும் மக்கள் ஆயிரக்கணக்கில் காத்திருந்து தங்கள் தங்கள் இடங்களுக்குப் போய்ச்சேருகின்றார்கள். ஆனால் இவர்கள் டிக்கெட்டு வாங்கும் கௌண்டரில் நீண்ட நெடு நேரம் காத்திருக்க வேண்டிய நேரத்தில் மேலே மின் விசிறி இல்லாத காரணத்தினால் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். உள்ளே அமர்ந்திருக்கும் இரண்டொரு கண்டக்டர்களுக்கு மின்விசிறிகள் இருக்கின்றன. ஆனால் பொது மக்களுக்கு இல்லை. எனவே





பயணிகளுக்கு உதவும் வகையில் அங்கே நான்கைந்து மின்விசிறிகளையாவது அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதுபோன்றே நாகர்கோவிலில் உள்ள பேருந்து நிலையத்திலுள்ள கக்கூஸ் வசதி மிகமிகக்கேவலமாக சுகாதாரமற்ற முறையில் இருக்கிறது. இதை நல்லமுறையில் அமைத்துத்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து நாகர்கோவிலிலிருந்து குறிப்பாக கன்னியாகுமரியிலிருந்து திருச்செந்தூருக்கு நேரடியாக இட்டமொழி, வள்ளியூர், சாத்தான்குளம், காயாமொழி வழியாகவும் இன்னும் ஒன்று கன்னியாகுமரியிலிருந்து உவரி வழியாக திருச்செந்தூருக்கும் ஆக இரண்டு பேருந்துகள் விட்டால் உதவிகரமாக இருக்கும். வருவாயும் பெருகும். மக்களுக்கும் வசதியாக இருக்கும். நாகர்கோவிலிலிருந்து கோலியங்குளத்துக்கு புதிய பஸ் தடம் திறக்க வேண்டும்.

இதேபோல கன்னியாகுமரியிலிருந்து, நாகர்கோவிலிலிருந்து குற்றாலத்திற்கு நேரிடையாக ஒரு பஸ் விடவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்,

மேலும் கன்னியாகுமரி வட்டத்தில் மாணவர்களுக்கு பாஸ் வசதியைச் செய்துகொடுத்திருக்கின்றார்கள். இதை நெல்லை மாவட்டத்திலுள்ள இராதாபுரம், நாங்குநேரி தொகுதியிலுள்ள செட்டிகுளம், கன்னங்குளம், ஆவரைகுளம், வள்ளியூர், பணகுடி போன்ற கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்துள்ள பகுதிகளிலுள்ள மாணவர்களுக்கும் விஸ்தரித்திருந்தார்கள். அவர்களுக்கு வசதியாக இருந்தது. ஆனால் இந்த வசதியைச் சென்ற ஆண்டு நிறுத்திவிட்டார்கள். இச்சலுகை மீண்டும் அளிக்கப்படவேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தையொட்டிய பத்துமைல் பகுதியிலுள்ளவர்களுக்கு மாணவர்களுக்கு விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து லாப நஷ்டத்தையொட்டிய கணக்கைப் பார்த்தால் கன்னியாகுமரிப் பகுதியில் 1969-70 ல் ரூ. 2,44,000 லாபம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் 1970-71 ல் ரூ. 10,17,000 நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஏன் இப்படி நஷ்டம் ஏற்பட்டதென்பதைக் கண்டறிய வேண்டும். நஷ்டத்திற்கு என்ன காரணம் என்று கண்டறிய வேண்டும். யாரோ ஒருவரை மாற்றிவிட்டதால் நஷ்டம் என்று சொல்லுவது சரியாக இருக்க முடியாது. டீசல் எண்ணெய் விலை கூடுதல். அதிக சம்பளப் பட்டுவாடாக்கள் போன்ற காரணத்தினால் செலவினங்கள் கூடுதலாகியிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆனாலும் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சென்னைப் பிராந்தியத்திலும் இப்படி ஆண்டுக்கு ஆண்டு, 1970-71-இல் ரூ. 75 லட்சம் நஷ்டம் ஏற்பட்டதாகத்தான் சொல்லப்படுகிறது. சென்னை நகரில் ஓடும் பிரிவையும் நீள் தடப் பிரிவையும் வெவ்வேறாகக் காட்டினால் நஷ்டம் வேறாகத் தெரியும். ஒன்றைக் கவனிக்க வேண்டும். கன்னியாகுமரிப் பகுதியில் நான்

பார்த்திருக்கின்றேன். நெரிசல் நேரங்களில், மாணவர்களும் அலுவல் அகங்களுக்குச் செல்லுபவர்கள்கூட பயணச்சீட்டை வாங்குவதே கிடையாது. எனவே இரண்டு கண்டக்டர்கள் இருக்க வேண்டும். எனவே கூடுதலான கண்டக்டர்களை நியமித்தால் இந்த நஷ்டத்தினைத் தவிர்க்க முடியும் என்று கருதுகிறேன்.

அடுத்து, தேசியமயமாக்கிய பஸ் சர்விசுகளிலுள்ள கண்டக்டர் ட்ரைவர்களை அரசு எடுத்துக்கொள்ளவில்லை என்று வெட்டுப் பிரேரணைகளைக் கொண்டுவந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் குறிப்பிட்டிருக்கின்றார்கள். ஆனால் ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். சமீப காலத்தில் நெல்லையில் கண்டக்டர்கள்—ட்ரைவர்கள் மகாநாடு ஒன்று நடந்தது. அதில் முன்னூற்றுக்கு அதிகமான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டவர்கள் என்றும், குறிப்பாக 15 பேர் தவிர, அநேகமாக அனைவரையுமே திரும்ப வேலைக்கு எடுத்துக்கொண்டாகிவிட்டது என்றும், அந்தப் பதினைந்துபேரும் சொந்தக் காரணங்களுக்காக வேறு வேலைக்குப் போய்விட்டார்கள் என்றும் சொல்லப்பட்டது. மாண்புமிகு அமைச்சரும் இருந்தார்கள். கடைசியாக நெல்லை, மதுரை, திருச்சி செல்லும் எல்லா எக்ஸ்பிரஸ் பஸ்களும் பணகுடி பஸ் ஸ்டாண்டில் நிற்க வேண்டும், பேருந்துகள் எல்லாம் பணகுடி பஸ் ஸ்டாண்டைச் சுற்றிக்கொண்டு போக வேண்டும் என்று மட்டும் கேட்டுக்கொண்டு, இதை ஆதரித்து விடைபெறுகிறேன்.

*திரு. ரா. ரா. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின் முன்பு வைக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கையின் மீது இரண்டொரு கருத்துக்களை மட்டும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

எனக்கு முன்பு பேசிய நண்பர்கள் எல்லாம் மிகத் தெளிவான கருத்துக்களைச் சொன்னார்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களது கவனத்திற்கு ஒன்றை மட்டும் கொண்டு வர விரும்புகிறேன்.

'தனக்கு மிஞ்சித்தான் தர்மம்' என்று பெரியவர்கள் சொல்லுவார்கள். தமிழகத்திலே படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்களும் எஸ்.எஸ்.எல்.ஸி. படித்தவர்களும் லட்சக்கணக்கில் வேலைவேண்டும் என்று அன்றாடம் வேலைதேடித் தரும் ஸ்தாபனங்களுக்குச் சென்று தினமும் காத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமை மாற்றப்பட வேண்டுமானால், நான் முன்பு குறிப்பிட்டதுபோல 'தனக்கு மிஞ்சித்தான் தர்மம்' என்று, அதையொட்டி இப்படிப்பட்ட துறைகளில் தமிழ் மாணவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அகில இந்திய அடிப்படையில் நாம் இருக்கிறோம் என்றாலும் இங்கே படித்த இளைஞர்கள் ஏராளமாக வேலையற்று அலைந்து கொண்டிருப்பவர்களுக்கு வேலை தரும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.



அடுத்து தமிழகத்தில் இரவு நேரங்களில் ஓடிக்கொண்டிருக்கிற ஆம்னி பஸ்களுக்கு உரிமை வழங்கப்பட்டு அவைகள் இரவு நேரங்களில் ஓடிக்கொண்டிருக்கின்றன. அவைகளை எந்த அளவுக்கு ஓட்டுகின்றார்கள் என்பதைத் தயவு செய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும். இரவு நேரத்தில் போக்குவரத்துக்கு எவ்வளவு இடைஞ்சலாக வேகமாக ஓட்டுகிறார்கள் என்று பார்க்கின்றபோது மிகவும் பயங்கரமாக இருக்கின்றது. உரிமை வழங்கப்படாமலும் சில முதலாளிகள் ஆம்னி பஸ்களை ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட ஆம்னி பஸ்களுக்கு உரிமை வழங்க வேண்டாம் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

என்னுடைய செஞ்சி வட்டத்தில், கிட்டத்தட்ட 1967-லிருந்து தனியார் ஓட்டிக்கொண்டிருந்த ஒரு பஸ் தடத்தை, அரசு 75 மைலுக்கு உள்பட்டத் தடங்களை எடுத்துக்கொள்ளுவது என்ற முறையில் எடுத்துக்கொண்டு ஓட்டுகின்றபோது, தனியார் ஓட்டும்போது இருந்த வசதிகளும் வாய்ப்புக்களும் பயணிகளுக்கு அளிக்கப்படாமல், மிகுந்த குறைபாட்டோடு ஓடிக்கொண்டிருக்கிறது. அந்தப் பகுதியில் செல்லுகின்ற பஸ் எந்த அளவுக்குப் போகிறது என்று பார்க்கின்றபோது வழியெல்லாம் நின்று நின்று போகிறது. எக்ஸ்பிரஸ் வழியாக இருந்தது, இப்போது ஆங்காங்கு நின்று நின்று போகின்ற காரணத்தினால், 3 மணி நேரத்தில் சென்னையிலிருந்து செஞ்சி செல்லுகின்ற பஸ், இப்போது 4½ மணி நேரம் ஆகிறது. தனியாரிடம் இருந்தபோது 64 இருக்கை கொண்டதாக இருந்த பஸ், இப்போது 48 இருக்கை கொண்ட பஸ்ஸாக மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, செஞ்சியிலிருந்து சென்னை வரும் இந்த அரசுத்துறை பஸ்ஸில் இருக்கையை அதிகரிப்பதோடு, துரிதப் போக்குவரத்தாக மாற்றியமைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சென்னையிலிருந்து வளத்தி வரையில் ஒரு பஸ் ஓடிக்கொண்டிருந்தது. அது தனியார் துறையில் இருந்தது. அந்தத் தடத்தை இப்போது அரசு எடுத்துக்கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த நேரத்தில் அந்தத் தடத்தை 4 கிலோ மீட்டர் அதிகப்படுத்தி மேல் மலையனூர் வரை பஸ்ஸை விடும்படி அரசை இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் மதுரையில் ஓடுகின்ற பஸ்களில் கவுன்சிலர்களுக்கும், பத்திரிகை நிருபர்களுக்கும், டி.வி.எஸ். பஸ் முதலாளிகளால் இலவச பாஸ் வழங்கப்பட்டிருக்கிறது. அதே போல் சென்னையில் உள்ள கவுன்சிலர்களுக்கும் மாநகராட்சிக்குச் செல்லவேண்டியிருந்தாலும், வேறு வெளியே செல்லவேண்டியிருந்தாலும் இலவச பாஸ் கொடுக்கவேண்டுமென்று அரசினரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

[திரு. ரா. ரா. முனுசாமி] [1971 ஜூலை 21

அடுத்து பத்திரிகை நிருபர்கள் தமிழகம் பூராவும் பத்திரிகை மூலமாக தமிழக ஆட்சியின் நிலைமையை எடுத்துக்காட்ட வேண்டிய நிலைமையிருப்பதால், அவர்களுக்கும் போக்குவரத்துத் துறையில் இலவச பாஸ் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து 1967-லிருந்து தனியார் பஸ்களுக்குப் போட்டிருக்கின்ற வரி காலாண்டுக்கு 30 ரூபாயாக இருந்ததை, 50 ரூபாயாக அரசு ஆக்கியிருக்கிறது. தனியார் முதலாளிகள் உயர் நீதிமன்றத் திற்குச் சென்று அதிகமாக வரி விதித்திருப்பதைச் சுட்டிக்காட்டி, மீண்டும் வரியை 30 ரூபாயாக ஆக்கியிருக்கிறார்கள். இதை தயவு செய்து அமைச்சரவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். அரசுக்கு எதிராக உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்குகிறது. இதை மாற்றி யமைக்கவேண்டும். மத்திய அரசு எவ்வளவோ தடவை சட்டத் தைத் திருத்தியிருக்கிறார்கள். அரசுக்கு எதிரான தீர்ப்பை உயர் நீதிமன்றம் வழங்குகின்ற போது, அதைத் திருத்தியமைக்க தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத்தவேண்டும் என்று கூறி இந்த வாய்ப்பினை அளித்த பேரவை உதவித் தலைவரவர்களுக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR : How can the Governnent request the Court to pass a favourable judgment ?

MR DEPUTY SPEAKER : You can leave it to him.

* திரு. க. சுப்பு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போக்குவரத்து மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத் துக்களை கூறுவதற்கு முன்பு லாபத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு வருகின்ற தனியார் துறை வலிவர்க இருந்துகொண்டி ருக்கிற பஸ் போக்குவரத்துத் துறையை தேசியமயமாக்கி, அதைத் திறம்பட நடத்தவேண்டுமென்ற கருத்தில் அடியெடுத்து வைத் திருக்கின்ற தமிழக அரசை முதலில் பாராட்டுகின்றேன். ஏற் கெனவே நமது நிதிநிலை அறிக்கையின்மீது பேசும்போது தேசிய மயமாக்கி நடத்த அரசுக்குத் தடைக் கற்கள் உண்டென்றாலும், தடம்தோள் உண்டு; அந்த முறையில் அரசாங்கம் நடைபோடும் என்று முதல்வர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இந்த நாட்டுடைமை ஆக்கப்படும் திட்டம் நல்ல திட்டம், போக்குவரத்துத் துறை தேசியமாமாக்கப்பட கூறப்படுகின்ற யோசனைகள் அனைத்தையும் நாங்கள் வரவேற்கின்றோம் என்று சொல்லிவிட்டு, அதே நேரத்தில் பல குறைபாடுகளைச் சொல்லு கிறார்கள் இங்கே உள்ள மாண்புமிகு அங்கத்தினர்கள் பலர். நிர் வாகத்தை நல்முறையில் நடத்திச் செல்ல என்ன ஆலோசனை கூறவேண்டும் என்ற அடிப்படையில் கருத்துக்களைக் கூறுவதுதான் பொருத்தமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன். தேச உடமையாக்கப்பட்ட போக்குவரத்து நிர்வாகத்தில் ஊழல்கள் இருக்கலாம். அந்தத் துறையிலிருக்கிற சீர்கேடு



1971 ஜூலை 21] [திரு க. சுப்பு]

களுக்குக் காரணம் தனியார் துறையில் உள்ளவர்கள் பொதுத் துறையை எப்படியும் வீழ்த்தவேண்டும் என்று நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுகிறார்கள். அப்படிப்பட்ட போட்டிக்கு நடுவில் பொதுத் துறை இயங்கவேண்டியிருக்கிறது. ஆகவே, இந்தப் போட்டியை எப்படிச் சமாளிப்பது என்பதற்கு எங்களுடைய யோசனை என்னவென்றால் தனியார் துறையை மொத்தமாக ஒழித்துவிட்டு, பஸ் போக்குவரத்துத் துறை முழுதும் தேசவுடமை ஆக்கப்பட வேண்டும் என்பதாகும். தனியார் துறையில் சில வற்றை விட்டுவிட்டு, இன்னும் சிலவற்றை அரசுடமை ஆக்கு தால், அரசுடமை ஆக்கப்பட்டுள்ள பகுதியை எப்படிச் சிரழிப்பது என்று சிந்தனை செலுத்துகிறவர்களாக தனியார் துறையில் உள்ள வர்கள் இருக்கிறார்கள். அந்த அடிப்படையில்தான் கருத்துக்களை வழங்குகிறார்கள். ஆகவே, நாட்டுடமை ஆக்கப்பட்ட திட்டம் நல்ல முறையில் நடத்தப்படவேண்டுமென்றால், சாலைப் போக்கு வரத்து பூராவையும் தேசவுடமை ஆக்குவதுதான் பொருத்த மாகும். 10, 15 பஸ்களை ஒரு சிலரிடத்தில் விட்டுவிட்டு, மற்றதை மட்டும் நாம் வைத்திருப்பது நல்லதல்ல. இந்தத் துறையில் முழு மனதோடு செயலாற்ற நாட்டுடமைத் தத்துவத்தில் நம்பிக்கையும், தொழிலாளர்களோடு தொடர்பு கொண்ட பொறியியல் வல்லுநராக உள்ளவரை அமைச்சராக அமைத்திருப்பதால் அவரும் முனைந்து செயல்படுவார் என்று நம்புகிறேன். அப்படிப்பட்ட நோக்கத் தோடு திறமை வாய்ந்த அமைச்சராக நமது போக்குவரத்துத் துறை அமைச்சர் அமைந்திருப்பதை வரவேற்கிறேன்.

சில குறைபாடுகள் சொல்லப்படுகின்றன. ஆம்னி பஸ், ஒப் பந்த ஊர்திகள் ஓடுவதில் குறைபாடுகள் இருக்கின்றன. பகிரங்க மாக அவர்கள் டிக்கெட் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதி காரிகள் என்ன செய்கிறார்கள் என்று புரியவில்லை. சில நேரங் களில் சிலருக்குக் காது கேட்பதில்லை, சிலருக்குக் கண்தெரிவதில்லை. அந்தமாதிரியிருக்கிறார்களா என்று தெரியவில்லை. தனியார் துறையில் வேலை பார்ப்பவர்கள் எவ்வளவுச் சம்பளம் வாங்குகிறார் கள் என்று பார்த்தால், அவர்கள் கையெழுத்துப் போடுவது ஒரு தொகைக்கு; கையில் வாங்குவது வேறு குறைந்த தொகை. பல நேரங்களில் தொழிலாளர்களிடம் வெள்ளைக்காகிதத்தில் கையெழுத்து வாங்கிக்கொண்டு வேலைக்கு அமர்த்துகின்ற முதலாளி களும் இருக்கின்றார்கள். இப்படி தனியார் துறையில் சம்பளம் கொடுக்காமல் இருக்கின்ற நிலைமையில், உயர்தர அதிகாரிகளைப் போட்டு, அவர்களுக்கு அதிகமாகச் சம்பளம் கொடுத்து திறமையாக நடத்த அரசுப் போக்குவரத்துறையில் அதிகப் பணத்தை ஒதுக்கி யிருக்கிறார்கள். ஆகவே இழப்பு அதிகமாக வந்திருக்கிறது என்றால் அதனை அதில் இருக்கின்ற தொழிலாளர்களும், மற்றவர்களும் நல்ல முறையில் வரவேற்கவேண்டும். அதே நேரத்தில் தொழிலாளர் களுக்கும் நமக்கும் இந்தத் துறையில் பங்குண்டு என்ற எண்ணத்தை ஊட்டவேண்டும். தொழில் சங்கத் தலைவர்களுக்கும், மற்ற நண்பர்களுக்கும் விடுகின்ற வேண்டுகோள் பொதுத்துறை

நல்ல முறையில் இயங்கவேண்டும், நல்ல பெயர் வாங்கவேண்டும் என்று பாடுபடவேண்டும். சீர்கேடுகள் இருக்கிறது என்பதற்காக, பொதுத்துறையை சீர்குலைக்கவேண்டும் என்று நினைக்கின்ற ஒரு சிலர் இருக்கின்றார்கள் என்பதற்காக எல்லாவற்றையும் தனியார் துறையில் விட்டுவிடவேண்டும் என்று சொல்ல முற்படுவது சரியல்ல.

இழப்பு அதிகமாக இருப்பதற்குக் காரணம் சொல்லும்போது, ஊதியத்தை உயர்த்திக் கொடுத்தது ஒன்று, பெட்ரோல் விலை உயர்வு ஒன்று என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதில் பெட்ரோல் எதற்காக வந்தது என்று எனக்குப் புரியவில்லை. எல்லா பஸ்களும் டீசலில் தான் ஓடிக்கொண்டிருக்கின்றன. அரசு பஸ்கள் மட்டும் பெட்ரோலில் ஓடுவதாக நான் நம்பவில்லை. ஆகவே, அவ்வாறு சொல்லப்பட்டிருப்பது தவறாக இருக்கலாம் என்று நினைக்கிறேன். இப்படிப்பட்ட குறைபாடுகளை வேண்டுமானால் சுட்டிக்காட்டலாம்.

**மாண்புமிகு திரு.ச. இராமச்சந்திரன் :** துணைத் தலைவர் அவர்களே, அது டீசல் என்று இருக்கவேண்டும். டீசல் மீது கடந்த ஆண்டு மத்திய அரசு வரி விதித்திருக்கிறார்கள். அது கடந்த ஆண்டு நஷ்டமாக இருக்கிறது.

**திரு. க. சுப்பு :** துணைத் தலைவர் அவர்களே, டீசலாக இருந்தாலும், டயராக இருந்தாலும், அரசு போக்குவரத்துத் துறைக்குக் கொடுக்கின்றபோது, தனியார் துறைக்குக் கொடுப்பதைக் காட்டிலும் குறைவான விலைக்குக் கொடுக்கிறார்கள். அப்படிக் கொடுத்தும் நஷ்டத்தில் ஓடுகின்றது என்றால், நிர்வாகச் சீர்கேடு என்றுதான் சொல்லமுடியும். அதை எப்படிக் களைவது என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்தத் துறையில் உள்ள பஸ்கள் இடையிடையே நின்றுவிடுகின்றன; பல தொழிலாளர்கள் சரியாக வேலை செய்வதில்லை என்ற குறைபாடுகள் இருக்கின்றன. அதேபோன்று தொழிலாளர்களுக்கும் சில கோரிக்கைகள் இருக்கின்றன. தொழிலாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுகின்ற முறையில் அரசு பரிசீலனை செய்யவேண்டும். அந்தத் தொழிலாளர்கள் பல குறைகளை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். தொழிற் சங்கத்தில் நல்ல அனுபவம் வாய்ந்த அமைச்சர் அவர்கள் இதைக் கவனிக்க வேண்டும். இன்றைக்கு தொழிற் சங்கங்கள் அங்கீகரிக்கப்படும் போது அதிகமான தொழிலாளர்களைக் கொண்டச் சங்கமே அங்கீகரிக்கப்படவேண்டும். அந்த முறை சரியாக இல்லாத காரணத்தினாலும் பலப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. தற்போது அரசுப் போக்குவரத்துத் துறையில் அதிக அங்கத்தினர்களைக் கொண்டச் சங்கம் அங்கீகரிக்கப்படாமல் வேறொரு சங்கம் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.



அதுபோல நிர்வாகத்திலும்கூட—திரு. சுப்பிரமணியம் அவர்கள் கூடக் குறிப்பிட்டார்கள்—நீங்கள் வாரியம் என்றோ வேறு என்ன பெயரிட்டோ அழைத்தாலும் அங்கே வேலை செய்கிற தொழிலாளர்களுக்கும் அதில் பங்கு இருக்க வேண்டும். ஏதோ அதிகாரிகளின் கீழ் வேலை செய்யக்கூடியவர்களாக அவர்களை நடத்துவது சரியல்ல. நிர்வாகத்தில் தொழிலாளர்களுக்கும் பங்கு இருந்தால்தான் தங்களுடைய குறைபாடுகளை அவ்வப்போது எடுத்துச் சொல்லி நிர்வாகத்தில் உள்ள சிக்கலை நீக்கி, போக்குவரத்துத்துறை லாபகரமானதாகச் செயல்பட அவர்களும் ஒத்துழைப்பை நல்க முடியும். அதோடு சில பகுதிகளில் கூட, தனியார் பஸ் இயங்க வாய்ப்பின்றி எல்லா இடத்தையும் அரசாங்கமே ஏற்று நடத்த முன் வந்தால் தான் பெரும்பாலான பிரச்சினைகள் தீரும். அதுதான் பொருத்தமாகவும் இருக்கும் என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். ஏ. அபுசாலி :** மதிப்பிற்குரிய துணைச் சபாநாயகர் அவர்களே, மோட்டார் வண்டிகள் மானியத்தின் மீது கொண்டு வந்துள்ள கோரிக்கையை ஆதரித்து இரண்டொரு கருத்துக்கள் சொல்ல ஆசைப்படுகிறேன். குறிப்பாக எனக்கு முன் சில மெம்பர்கள் தனிப்பட்ட பஸ் அதிபர்களிடமே பஸ் இருக்கக் கூடாது என்று சொல்கிறார்கள். அதேநோக்கில் நமது அரசாங்க போக்குவரத்துத் துறையில் நஷ்டம் ஏற்படுகிறதே என்கிறார்கள். அது தேவையா, இது தேவையா என்பதைப் பார்க்க வேண்டும். போக்குவரத்துத் துறையில் இன்றைக்கு பஸ்கள் விடுவது என்றால் எவ்வளவு சங்கடங்கள் இருக்கின்றன என்பதை அந்தத் துறையில் இருந்தால்தான் தெரியும். அவர்கள் எந்த அளவுக்கு வருமானவரி கட்ட வேண்டியிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும். மிகுந்த கஷ்டத்தோடு செயல்படுகிற நிலையில் அவர்களை அடியோடு நீக்கவேண்டுமென்றால் அவர்களுடைய கதி என்ன ஆகும் என்பதையும் சிந்திக்க வேண்டும்.

குறிப்பாக அமைச்சர் அவர்கள் 15-ஆம் தேதிக்குள் வெகிகிள் டாக்ஸ் கட்டிவிடவேண்டும் என்று உத்தரவிட்டதாகத் தெரிகிறது. நாங்கள் எல்லாம் 13-ஆம் தேதியே கட்டிவிட்டோம். ஆனால் 16-ஆம் தேதி காலையில் எக்ஸ்டென்ஷன் கொடுக்கப்பட்டிருப்பதாக ஆர்.டி.ஓ. சொல்கிறார்கள். எக்ஸ்டென்ஷன் கொடுப்பது என்றால் 10-ஆம் தேதியே கொடுக்க வேண்டும். அப்படியின்றி 1 ரூபாய்க்கு 4 ரூபாய் வட்டியில் மார்வாடிகளிடம் இருந்தெல்லாம் அவர்கள் கடன் வாங்கிக் கட்டிய பிறகு இதுபோல எக்ஸ்டென்ஷன் கொடுப்பது என்பது சரியல்ல. முன்கூட்டி கொடுக்கவில்லை என்றால் எந்தக்காரணத்தைக்கொண்டும் இதுபோல கொடுக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து டாக்ஸி நடத்துகிறவர்களுக்கு டீசல், பெட்ரோல் விலை உயர்வைக் குறித்து சில சலுகைகள் அளித்திருக்கிறார்கள். அதைப் போலவே பஸ் ஓனர்களுக்கும் கிலோவுக்கு ½ பைசாவாவது

[திரு. எம். ஏ. அபுசாலி] [1971 ஜூலை 21

உயர்த்திக்கொள்ள சலுகை கொடுத்தால்தான் அவர்களுக்கு உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். 60 ரூபாயாக இருந்த க்ளச் ப்ளேட் 180 ஆக விற்கிறது. டயர் 400 ரூபாய் இருந்தது 1,200 ஆக இருக்கிறது. இந்த நிலையில் அவர்கள் அதிக லாபம் சம்பாதித்துவிடுவதாகவும், ப்ளைமவுத் காரில் செல்வதாகவும் கூறுவது எல்லாம் பொருத்தமானதல்ல. அவர்களுக்கு லாபம் வருகிறது என்கிறபோது அரசாங்கப் போக்குவரத்துக்கு மட்டும் நஷ்டம் வருகிறது என்று சொல்கிறார்களே, அதுதான் புரியவில்லை.

தனியார் துறையில் எவ்வளவோ சிரமங்கள் இருந்தும் லாபம் வரக்கூடிய நிலைமை இருக்கும்போது அரசுத்துறையில் நஷ்டம் வருகிறது என்றால் ஏன் வருகிறது என்பதை அத்துறையில் திறமைமிக்க அதிகாரிகளைப்போட்டு கவனிக்கவேண்டும். தேசியமாக்கப்பட்ட நிலையில் அரசுப் போக்குவரத்துத் துறையில் மிகுந்த நஷ்டம் வருகிற ஒரு நிலையில், தனியார்கள் மிகுந்த திறமையாக செயலாற்றி வருகிறார்கள் என்றால் அவர்களுக்குப் போதிய ஊக்கத்தையும், நன்மையையும் தரவேண்டும் என்பதை அமைச்சர் அவர்கள் கவனித்து உணர்வார்கள் என்று நான் கருதுகிறேன்.

அடுத்து குறிப்பாக இன்னும் சில ஆம்னி பஸ் முதலாளிகள் டூரிஸ்டு பஸ் என்று வைத்துக்கொண்டு ரெகுலர் பஸ்ஸாகவே விடுகிறார்கள். இரவு மூர்மார்க்கெட் போனால் 10 அல்லது 15 பஸ்கள் அதுபோல நடத்தப்படுவதைக் காணலாம். இதை அரசாங்கம் நேரடியாகக் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையில் உள்ள வெளியார் பஸ் நிலையங்கள் மோசமான நிலையில் இருக்கின்றன. உடனடியாக அவற்றைச் சீர்திருத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

திரு. டி. வி. சம்பத் : சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போக்குவரத்து மானியக் கோரிக்கை மீது பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி, இந்தப் போக்குவரத்துத் துறையிலே, ஓடுகின்ற பஸ்கள் எல்லாம் தேசியமாக்கப்படும் என்பதாக, திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் காலத்தில் தன் அறிக்கையில் குறிப்பிட்டதற்கிணங்க—இன்றையதினம் தமிழகத்தில் ஓடுகிற பஸ்கள் அனைத்தும் நாட்டுடைமை ஆகிய சீரிய திட்டத்தை மாண்புமிகு முதல்வர்—கலைஞர் அவர்கள் கொண்டுவர எடுத்துள்ள முயற்சிகளை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதே நேரத்தில் என்னுடைய தொகுதியில் சில குறைபாடுகளை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். என்னுடையத் தொகுதியில் தனியார்துறை பஸ்கள் சரியாக ஓடாத காரணத்தினால் மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள் என்பதை சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பதினைந்து



1971 ஜூலை 21] [திரு. டி. வி. சம்பத்]

மைல், இருபது மைல் தூரத்தில் உள்ள சீர்காழி வழக்கு மன்றத்திற்கு போவதற்குள் நடுவழியிலேயே நிறுத்தி விடுகிற சதித்திட்டமாகத்தான் அது இருக்கிறது. எங்கள் தொகுதியில் சக்திவிலாஸ் என்ற தனியார் கம்பெனி 60, 70 பஸ்களுக்கு உரிமையாளர்—பெயர் சக்தி விலாஸ்—ஆனால் கடலோரப்பகுதியில் அது சரியான முறையில் இயங்கச் சக்தியற்ற நிலையில் இருக்கிறது. தனியார் துறையை அரசு நாட்டுடைமை ஆக்கப்போகிறது என்று தெரிந்து அவர்கள் சில வழித்தடங்களை ஏற்கெனவே விற்பனை செய்துவிட்டதாகவும் தெரிகிறது. குறிப்பாக, சரித்திரப் புகழ் பெற்ற பூம்புகாரில் இருந்து திருவெண்காடு, கொண்டல், ஆக்கூர் போன்ற வழித்தடங்களை விற்றுவிட்டார்கள். ஆனால் வாங்கியவர்கள் யாரும் அங்கே முறையாக பஸ் விடுவதாகவும் தெரியவில்லை. போக்குவரத்துத் துறையைச் சரியான முறையில் சீர்திருத்தி வருகிற இந்த அரசு அந்தப் பகுதியையும் நல்லமுறையில் மாற்றி அமைத்து தரவேண்டும். பூம்புகார் பகுதியில் இருந்து கடலூர் வரை, பூம்புகாரில் இருந்து குடந்தை, தஞ்சை வரை நல்ல வளமான போக்குவரத்து அமைப்பை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். தனியார் துறையில் இருக்கும் தொழிலாளர்கள் இன்றையதினம் தங்கள் நிலை என்ன ஆகுமோ என்று அஞ்சிக்கொண்டிருக்கிறார்கள். தனியார் துறையினர் அவர்களை வேலைநீக்கம் செய்யப்போவதாகவும் மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்கள் தினந்தினம் இங்கே கடிதம் எழுதிக்கொண்டு, அமைச்சர்களைச் சந்தித்து, எங்களுக்கு வேலை வாங்கித் தாருங்கள் என்று கேட்டவண்ணம் இருக்கிறார்கள். அப்படி யாராவது சக்தி விலாஸ் பஸ்களை வாங்கியிருந்தால், தொழிலாளர்கள் நலனில் அக்கறையுள்ள அரசாக இருக்கிற காரணத்தால், தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அந்த பஸ்களையும் தேசியமயமாக்க வேண்டும் என்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, விடைபெறுகிறேன். வணக்கம்.

THIRU M. A. LATHEEF : Sir, on a point of clarification. The observations made by the hon. Member, Thiru Abusali are his personal views and the Muslim League stands for all socialistic programmes including the nationalisation of motor transport.

THIRU R. PONNAPPA NADAR : It is for the leader of his Party to say that and not . . .

THIRU M. A. LATHEEF : In the absence of my leader, I am saying it on behalf of my party.

MR. DEPUTY SPEAKER : He is the Whip of the Party.

* திரு. ஏ. சி. நரசிம்மன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள மானியக் கோரிக்கையை வரவேற்று, சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த அரசு புதிய ரூட்டுகளைத் தருவதில் தாராளமான கொள்கைகளைக் கடைபிடிக்கும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது நல்ல முறையில் வரவேற்கக்கூடிய செய்தியாக இருக்கிறது. பஸ்களை தேசிய உடைமையாக்கினாலும், புதிய ரூட்டுகளைத் தந்தாலும் பஸ் முதலாளிகள் உடனே 'ஸ்டே' ஆர்டர் வாங்கிவிடுகிறார்கள். அப்படி 'ஸ்டே' கொடுப்பதைச் சட்டப்பூர்வமாகத் தடை செய்ய வேண்டும். எதற்கெடுத்தாலும் ஹைகோர்ட்டிலே போய் 'ஸ்டே' வாங்கி விடுகிறார்கள். எடுத்ததெற்கு எல்லாம் 'ஸ்டே' என்று கொடுப்பது சரியல்ல. இதை நாம் சட்டபூர்வமாகத் தடை செய்ய வேண்டும்.

அடுத்தப்படியாக புதிய பஸ் ரூட்டுகளைத் திறக்கும்போது, ரோட் ஃபிட்னஸ் சர்டிபிகேட் பெறுவதில் அதிக காலதாமதம் ஏற்படுகிறது. இதனால் உடனடியாகப் புதிய பஸ் ரூட்டுகளைத் திறக்க முடியவில்லை. உடனடியாக டெம்பரரி பர்மிட்டாவது கொடுத்து புதிய ரூட்டுகளைத் திறக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, புதிய ரூட்டுகளைத் திறக்கும்போது, சிறிய ரூட்டுகள் இருந்தால் அதை 'நியூ என்ட்ரன்ஸ்'க்குத்தான் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால் அவர்கள் அனுபவசாலிகளாக இருக்கமாட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. யார் யார் பஸ்துறையில் அனுபவப்பட்டவர்கள் என்று பார்த்தால், யார் யார் அதற்கு மனு செய்கிறார்கள் என்று பார்த்தால் ஒரு முதலாளியாக இருப்பார், அல்லது அவருடைய மகனாக இருப்பார். முதலாளி தன்னுடைய மகன் பேரிலேயே புதிய ரூட்டுக்கு மனுப் போடுவார். அவருக்கு வேண்டிய அத்துணை சௌகரியங்களும் இருப்பதால் புதிய ரூட் அவருக்குத்தான் போகுமே தவிர புதியவர்களுக்குக் கிடைக்கிற நிலைமை இருப்பதில்லை. ஆகவே, பஸ் துறையிலே இல்லாதவர்களுக்கு புதிய ரூட்டுகளைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டுடைமையாக்கப்பட்ட பஸ்களைப்பற்றி உறுப்பினர்கள் பேசினார்கள். எங்கே பார்த்தாலும் நாட்டுடமையாக்கப்பட்ட பஸ்களில் ரிப்பேர் என்றெல்லாம் சொன்னார்கள். இந்தக் குறைபாடுகள் எல்லாம் நாட்டுடமையாக்கப்பட்ட பஸ்களில் மட்டுமா இருக்கின்றன ? தனியார் துறையில் கூட இப்படிப்பட்ட குறைபாடுகள் இருக்கின்றன. நாட்டுடமையாக்கப்பட்ட பஸ்கள் பெரிய அளவில் அதிகமாக இருக்கிற காரணத்தால், "பார்த்தீர்களா, பார்த்தீர்களா, ரிப்பேர்" என்று சொல்லிவிடுகிறார்கள். என்னுடையத் தொகுதியான ஆரணியிலிருந்து முன்பு தனியார் துறையில் இருந்த பஸ்களில் சென்னைக்கு வந்தாலும்கூட வழியில் நின்று போகக்கூடிய நிலைமை இருந்தது. இப்போது சர்க்கார் துறையிலும் சில சமயங்களில் பஸ் வழியில் ரிப்பேர் ஆகிவிடுகிறது.



தனியார் துறையில் எந்த அளவிற்கு இருந்ததோ அதே அளவிற்குத்தான் சர்க்கார் துறையிலும் இருக்கிறது. சர்க்கார் துறையில்தான் இப்படிப்பட்ட கோளாறு இருக்கிறது என்று சொல்வது சரியான கூற்று அல்ல. நான் கூறிக்கொள்வது என்னவென்றால், குறைபாடுகள் இல்லாத அளவிற்கு நாம் நல்ல முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தனியார் துறையில் இருந்த பஸ்கள் சர்க்கார் துறையில் நாட்டுடைமையாக்கப்பட்டப் பிறகு எப்படி நடைபெறுகின்றன என்பதற்கு ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். தனியார் துறையில் இருந்தபோது, வேலூரிலிருந்து காலை 4 மணிக்கு பஸ் புறப்படும். அது ஆரணிக்கு 5 மணிக்கு வந்து சேரும். பின்னர் கால் மணி நேரம் இருந்துவிட்டு, பின்னர் 5¼ மணிக்கு மீண்டும் வேலூருக்குத் திரும்பும். ஆனால் அதே பஸ் நாட்டுடைமையாக்கப்பட்ட பின்னர், வேலூரில் காலை 4 மணிக்குப் புறப்பட்டு, ஆரணிக்கு 5 மணிக்கு வந்து பின்னர் வேலூருக்கு மீண்டும் புறப்படும்போது 5½ மணிக்குப் புறப்படுகிறது. முன்னர் 5¼ க்குப் புறப்பட்ட பஸ், இப்பொழுது 5½ மணிக்குப் புறப்படுகிறது. இப்படியாக நேரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. முன்னர் முதலாவதாக போய்க் கொண்டிருந்தது, இப்பொழுது இரண்டாவது நேரத்தில், அதாவது 5½ மணிக்குப் போகிறது. இப்படியெல்லாம் நடைபெறாமல் கவனம் செலுத்த வேண்டும். பஸ்ஸையும், அது ஓடும் நேரத்தையும் சரியாகக் குறிக்க வேண்டும். அப்போழுதுதான் பிரயாணிகளுக்கு சௌகரியம் ஏற்படும்.

அடுத்தபடியாக, பஸ் ஓடுகின்ற நேரத்தையும் குறைக்க வேண்டும். ஆரணியிலிருந்து சென்னைக்கு வரவேண்டுமென்றால் முன்பெல்லாம் தனியார் துறை பஸ்களில் மூன்று மணி நேரம் தான் ஆகும். ஆனால் இப்பொழுது சர்க்கார் பஸ்ஸுக்கு நான்கு மணி பத்து நிமிடம் பஸ் ஓடுகின்ற நேரம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, பஸ் ஓடுகின்ற நேரத்தைக் குறைக்க வேண்டும்.

மேலும் முன்பு ஆரணியிலிருந்து விரைவு வண்டிகள் சென்னைக்கு வந்துகொண்டிருந்தன. இப்பொழுது விரைவு வண்டிகள் விடப்படுவதில்லை. ஆகவே, விரைவு வண்டிகளை மீண்டும் விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. என். டென்னிஸ் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்மீது எங்கள் கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்துச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பஸ்கள் தேசியமயமாக்கப்பட்டது வரவேற்கத்தக்கது. ஆனால் பொதுமக்களுக்கு வசதியாக, நன்மை பயக்கக்கூடிய வகையில் இந்த அரசாங்கப் பஸ்போக்குவரத்து செயல்படுகிறதா என்று பார்க்கும்போது, அவ்வாறு செயல்படவில்லையென்பதைக் கூறிக் கொள்கிறேன்.

[திரு. என். டென்னிஸ்] [1971 ஜூலை 21

தனியார் துறையில் நடத்தப்படும் பஸ்களில் உள்ள வசதிகள்கூட நாட்டுடைமையாக்கப்பட்ட பஸ்களில் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த போக்குவரத்து இலாகா பெரிய முதலீட்டில் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் வருஷத்திற்கு வருஷம் நஷ்டம்தான் காட்டப்படுகிறது. போக்குவரத்துத் துறையில் இந்த ஆண்டாவது லாபம் காட்டப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அல்லது கடந்த ஆண்டைவிட குறைந்த நஷ்டமாவது இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் கடந்த ஆண்டைவிட கூடுதலான நஷ்டம்தான் காட்டப்பட்டிருக்கிறது. 1969-70-ல் 44.50 லட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டிருந்தது. அது 1970-71-ல் 83.22 லட்சம் ரூபாய் என்ற அளவில் உயருகிறது. ஒரு ஆண்டில் ஒரு பங்கு கூடுதலான நஷ்டம் ஏற்படுகிறது. இந்த நஷ்டத்திற்குப் பல காரணங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சொல்லப்பட்டிருக்கிற காரணங்களினால் மாத்திரம் இவ்வளவு நஷ்டம் வருமா என்று பார்த்தால், இருக்காது என்றே சொல்லலாம். நிர்வாகத்தில் ஏற்பட்டிருக்கிற குறைகள் இந்த நஷ்டத்திற்குக் காரணமாகும்.

அரசுப் போக்குவரத்திலிருக்கிற சில பிரச்சினைகளை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அரசாங்க பஸ்ஸுக்கு வைக்கப்பட்டிருக்கிற ஸ்டேஜ் பாயின்ட்கள் சரியான முறையில் ஒன்றுபோல இடத்திற்கு இடம் வித்தியாசமில்லாமல் சரியான தூரத்தின் அடிப்படையில் வைக்கப்படவில்லை. அப்படி வைக்கப்பட வேண்டியது அவசியம். மேலும், ஒழுங்கான நேர அட்டவணை மிகவும் அவசியம். பஸ் புறப்படுகின்ற சமயம், எந்தெந்த நேரங்களில் எந்தெந்த இடத்திற்குப் போய்ச்சேரும் என்ற நம்பிக்கை இருந்தால் பிரயாணிகளுக்கு வசதியாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பிரயாணிகளின் எண்ணிக்கை கூடுதலான ரூட்டுகளில் கூடுதலான பஸ்களை விட வேண்டும். பிரயாணிகள் குறைவாக இருக்கிற ரூட்டுகளில் குறைவான பஸ்களை விட வேண்டும். இப்போது இதற்கு நேர்மாறாக நடந்துகொண்டிருக்கிறது. சில ரூட்டுகளில் ஒரே சமயத்தில் பஸ் அடிக்கடி போய்க்கொண்டிருக்கிறது. பிறகு மணிக்கணக்கில் பஸ் இல்லாமல் காத்து இருக்க வேண்டியிருக்கிறது. ஒரே ரூட்டில் சில பகுதிகளில் கூடுதல் பிரயாணிகளும், சில பகுதிகளில் குறைந்த எண்ணிக்கையிலான பிரயாணிகளும் இருக்கின்றார்கள். கூடுதல் பிரயாணிகள் உள்ள பகுதிக்குக் கூடுதல் பஸ்களையும், குறைவான பிரயாணிகள் உள்ள இடங்களில் குறைவாக பஸ்களையும் விட வேண்டும். மேலும், கூடுதல் பிரயாணிகள் உள்ள பகுதிகளில் பொது மக்களின் சௌகரியத்திற்காக ஷட்டில் சர்வீஸ்களையும் விடலாம், பஸ்களிலே காலியான இடங்கள் இருந்தாலும் சில கண்டக்டர்களும் டிரைவர்களும் பஸ்களை நிறுத்தாமல் போகிறார்கள். அவற்றைக் கண்காணிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1971 ஜூலை 21] [திரு. என். டென்னிஸ்]

ஓவர் லோடை தவிர்ப்பதற்கு நெரிசல் நேரங்களிலே கூடுதலாக பஸ்களைப் போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஸ்கள் ரூட்டில் போகும்பொழுது நல்ல கன்டிஷனில் இருக்க வேண்டும். அவை சரியான பராமரிப்பில் இல்லையென்றால் அதன் காரணமாகத்தான் பிரேக் டவுன் ஆகிறது. ஆக்ஸிடன்ட்களும் ஏற்படுகின்றன. எனவே பஸ்களைப் பராமரிக்க கூடுதலாக டெப்போக்களையும் ஒர்க்ஷாப்புகளையும் ஏற்படுத்தவேண்டும்.

இந்த பஸ் போக்குவரத்துத் துறையை 4 மண்டலங்களாகப் பிரித்திருக்கிறார்கள். கன்னியாகுமரியிலிருந்து போகிற பஸ் திருச்சியிலே பழுதடைந்து நின்றுவிட்டால் அதற்கு ரிப்பேர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பணியாளர்களால்தான் சரி செய்ய வேண்டுமென்ற நிலைமை இருக்கிறது. அந்த நிலைமை மாற வேண்டும்.

பஸ்கள் போகக்கூடிய ரூட்டுகள் சரியான முறையிலே பண்படுத்தப்படவேண்டும். அப்படிச் செய்தால்தான் பஸ்கள் பாதுகாப்புக்கு அது உதவியாக இருக்கும்.

பஸ் ஸ்டாப்புகளை சரியாக நிர்ணயிக்க வேண்டும். பிரயாணிகள் கூடுதலாக இருக்கின்ற இடங்களில் ஸ்டாப்புகள் அதிகப்படியான வசதிகளுடன் ஏற்படுத்தப்படவேண்டும்.

புது பஸ் ரூட்டுகள் கொடுப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது, அது தவிர்க்கப்படவேண்டும்.

நாகர்கோவிலிலிருந்து திருவனந்தபுரத்திற்கு நைட் சர்வீஸ் பஸ் வசதிகள் செய்யவேண்டும். கேரள ராஜ்யத்தில் . .

* திரு. மு. இரத்தினசபாபதி: சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசுப் போக்குவரத்து மானியத்தின்மீது எனது ஒருசில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன்.

1971-72 ஆம் ஆண்டுக்கான இந்த மானியக் கோரிக்கையைப் பொறுத்தவரையில் தமிழக அரசு போக்குவரத்துத் துறையிலே புரட்சிகரமான மாறுதல்களை ஏற்படுத்தி இருக்கிறது. சமதர்ம லட்சியத்தை நோக்கிச் செல்கின்ற பாதையில் போக்குவரத்துத் துறை மிக வேகமாகத் தனது செயலைக் காட்டிக்கொண்டு வருகிறது என்பதைத் தான் இது காட்டுகிறது. இந்த முறையிலே போக்குவரத்து இந்த அளவுக்கு விரைவாக செயல்பட்டுவருகின்ற வேளையிலே அவற்றிலே உள்ள சில குறைபாடுகள் பற்றி மிகைப்படுத்திக் கூற நாம் ஆசைப்படுகின்றோம்.

போக்குவரத்துத் துறையினாலே நம்முடைய சமுதாயத்திற்குக் கிடைக்கக்கூடிய நன்மைகளை கொஞ்சம் நாம் மறந்துவிடுகின்றோம். தமிழக அரசுப் போக்குவரத்துத் துறையிலே 2,125 பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன என்றால் அதன்மூலம் தமிழ

[திரு. மு. இரத்தின சபாபதி] [1971 ஜூலை 21

கத்தில் வேலை வாய்ப்பிலே ஏறக்குறைய 18 ஆயிரம் பேர்கள் வேலை வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். தனியார் துறையாக இருந்தால் 2,200 பஸ்கள் இருந்தால் அதற்காக அவர்கள் அதிகமாக வேலை கொடுக்கிறார்கள் என்றாலும்கூட ஏறக்குறைய 10 ஆயிரம் பேர்களுக்குத்தான் வேலைகிடைத்து இருக்கும். ஆனால் அது அரசுத் துறையிலே இன்றையதினம் வந்ததாலே, தமிழகத்திலே உள்ள குடும்பங்களிலே ஏறக்குறைய 8 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் வேலை வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே மறந்துவிடக்கூடாது.

தமிழகத்திலே குறைந்தக் கட்டணத்திலே பயணம் செய்வதற்கு ஏற்ற முறையிலே போக்குவரத்துத் துறை பல நன்மைகளைச் செய்து வருகின்றது. 1967-ஆம் ஆண்டு இன்றைய முதல்வராக இருக்கின்ற கலைஞர் அவர்கள் போக்குவரத்துத்துறை அமைச்சராக இருந்தபொழுது கிலோமீட்டருக்கு மூன்று காசுகளாக இருந்த கட்டணத்தை 2½ காசுகளாகக் குறைத்து, அது இன்றைக்கும் நல்ல முறையிலே அமல்படுத்தப்பட்டுவருகிறது., ஏழை எளிய மக்களுடைய பணம் விரயம் ஆகாதமுறையில் இந்த அரசு நன்மை செய்து வருகின்றது.

பஸ் போக்குவரத்திலே மெயின்டனன்ஸ் நல்லமுறையிலே செய்யப்படவில்லை என்றும் பேணிப் பாதுகாக்கப்படவில்லையென்றும், அதனால் பல வழித் தடங்கள் நின்றுவிடுகின்றன என்றும் இங்கே கூறினார்கள். இன்றைக்கு இவ்வளவு அதிகமான பஸ்களைப் பேணிப் பாதுகாக்கக்கூடிய அளவுக்கு அதிகமான அளவுக்குத் தொழில் நுட்பம் தெரிந்தவர்களைப் போட்டிருக்கிறோம். ஒட்டு மொத்தமாக அவர்களைப்போட்டு இருப்பதற்குப் பதிலாக 10 பஸ்களுக்கு 30 பேர்கள் என்ற முறையிலே போட்டு, அந்த பஸ்களுக்கு நீங்கள்தான் பொறுப்பு என்று அவர்களிடம் பொறுப்பை ஒப்படைக்கக்கூடிய முறையிலே இந்த முறையை மாற்றியமைப்பதன்மூலம் ஏற்பாடு செய்தால், அவர்கள் போட்டி உணர்ச்சியோடு பாடுபட்டு நல்லமுறையிலே பேணிப் பாதுகாப்பார்கள் என்பது என்னுடைய அபிப்பிராயம். எனவே, இதை மாற்றியமைக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

தனியார் துறையிலே நல்ல முறையிலே பஸ்கள் நடைபெறுகின்றன என்று சொன்னார்கள். நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியிலே விளாத்திகுளம், மதுரை மாவட்டத்திற்கும் நெல்லை மாவட்டத்திற்கும் மத்தியிலே அமைந்திருக்கிறது. அந்தப் பகுதியிலே அரசுப் போக்குவரத்து ஏற்படவில்லை. தனிப்பட்டவர்கள்தான் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அரசுப் போக்குவரத்து இல்லாததால் தனியார்கள் மோசமாக நடத்தி வருகிறார்கள்



1971 ஜூலை 21] [திரு. மு. இரத்தின சபாபதி]

அருப்புக்கோட்டை பஸ் நிலையத்திலே சென்று பார்த்தால் நாம் 71-லே தமிழ்நாட்டிலேதான் இருக்கிறோமா என்ற ஐயப்பாடுதான் வருகிறது. அந்த பஸ் சொந்தக்காரர்கள் காட்டு தர்பார் நடத்திக் கொண்டு பயணிகளைக் கொடுமையாக நடத்திக்கொண்டு வருகிறார்கள். மதுரையிலிருந்து அருப்புக்கோட்டைக்கு 30 மைல் தூரம்தான். அதற்கு அவர்கள் போட்டிருக்கிற நேரம் ஒரு மணி முப்பது நிமிடம்தான். ஆனால் அவர்கள் இரண்டேகால் மணி நேரம் எடுத்துக்கொள்கிறார்கள். அதேபோன்று அருப்புக்கோட்டை-புதூர் 15 மைல் தூரம்தான். அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நேரம் 52 நிமிடம்தான். ஆனால் அவர்கள் ஒன்றரை மணி நேரம் எடுத்துக்கொண்டு வேண்டுமென்றே செய்கிறார்கள். அதன் காரணமாகப் பொதுமக்கள் அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள். விளாத்திகுளத்திலிருந்து மதுரைக்குப் போகவேண்டுமென்றால் 52 மைல் தூரம் இருக்கிறது. அதற்கு பஸ் விட்டு பஸ் மாறிப் போகவேண்டிய நிலைமை இருக்கிறது. 6 மணி நேரம் ஆகிறது. திருச்செந்தூரிலிருந்து மதுரைக்கு விளாத்திகுளம் வழியாக, தூத்துக்குடி வழியாக பஸ் போக்குவரத்து அரசின் சார்பாக உடனடியாக ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

## (4) அமைச்சரின் அறிக்கை

**காவிரி நீர்ப் பங்கீடுபற்றி தமிழ்நாடு முதலமைச்சருக்கு இந்தியத் தலைமை அமைச்சரிடமிருந்து வந்துள்ள கடிதம் பற்றி முதலமைச்சரின் அறிக்கை.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : சட்டப் பேரவை விதி 82-ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையைச் சமர்ப்பிப்பார்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : தலைவர் அவர்களே, இந்தப் பேரவையில் காவிரி நீர் பங்கீடு பற்றி ஒருமனதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அந்தத் தீர்மானம் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதையொட்டி இந்தியத் தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் எனக்கு எழுதியுள்ள கடிதத்தை இந்த அவையில் வைப்பது பொருத்தம் என்று கருதி, தங்கள் அனுமதியோடு இந்த அவையில் இதனைப் படிக்கிறேன்.

New Delhi,
July 19th.

Dear Thiru Karunanidhi,

I have seen the Resolution of the Legislative Assembly and the Legislative Council of Tamil Nadu. I do appreciate the deep feelings of the people of Tamil Nadu which have been voiced by you and the Legislature. I am conscious of the need to ensure that the Legitimate rights of the farmers of Tamil Nadu

[1971 ஜூலை 21

are fully protected. This matter has been dragging on for quite some time. You will appreciate that in the present circumstances when there is no popular Government in Mysore, it would not be proper to take any steps committing the Mysore Government. I hope you will therefore accept my sincere assurance of sympathetic understanding and intention to take steps to find a solution to this issue.

I am anxious to have this matter amicably settled without creating further bitterness. If you consider it desirable, we can meet and discuss this matter further.

Yours sincerely,
INDIRA GANDHI.

இந்தக் கடிதத்தை அவைமுன் வைக்கிறேன்.

THIRU K. T. K. THANGAMANI rose.

MR. DEPUTY SPEAKER : No discussion or question is allowed now.

THIRU K. T. K. THANGAMANI : Submission to the Chair can be made at any time.

MR. DEPUTY SPEAKER : I can allow it.

THIRU K. T. K. THANGAMANI : Sir, I do not want to say anything which will embarrass the Government. I would like to know whether any further details with regard to the budgetary provisions for the Mysore Government which will have to be voted by the Lok Sabha, have come to the notice of the Government. That is the only information that I would like to have now.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதுபற்றி பத்திரிக்கைகளிலே வந்திருக்கிற செய்திதான். நமக்கு எந்தவிதமான முழுத் தகவலும் வரவில்லை. நாடாளுமன்றத்தில் வரும்பொழுது என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பிறகுதான் சொல்லப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நிதிக் கோரிக்கைகள் மீது விவாதம் தொடர்ந்து நடைபெறும். அடுத்து திரு. காவேரி மணியம்.

### (3) 1971–72-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

**திரு. சொ. காவேரிமணியம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கக்கூடிய மானியக் கோரிக்கையை வரவேற்று ஒருசில கருத்துக்களைக் கூற ஆசைப் படுகிறேன்.



1971 ஜூலை 21] [திரு. சொ. காவேரிமணியம்]

நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய அறிக்கைகள். தெளிவாகக் காட்டப்பட்டிருக்கிற புள்ளிவிவரங்கள், உணர்த்தப் பட்டிருக்கிற உண்மைகள் இவைகள் யாவும் மிகத்தெளிவாக நம்முடைய உள்ளத்திலே பதிகின்ற அளவிற்கு இந்த அரசு கடந்த 5 அல்லது 6 ஆண்டுகாலமாகத் தீவிரமான நடவடிக்கையை இந்தத் துறையில் ஏற்படுத்தி வருகிறது என்பதை மிகத் தெளிவாகக் காட்டுகிறது.

குறிப்பாக, இந்தத் துறையிலே என்னென்ன குறைகள் இருக்கின்றன, அவைகளைச் சீர்திருத்த வேண்டிய முறைகள் எவை என்பதைப் பற்றி மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. பெருநகரங்களில் பலவிதமான வசதிகள் இருக்கின்றன. குறிப்பாக சென்னை, மதுரை, கோயம்புத்தூர் போன்ற நகரங்களில் எல்லாவிதமான வசதிகளும் போக்குவரத்திற்கான வசதிகளெல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் பல கிராமங்களை உள்ளடக்கியதாக இருக்கிறது என்பது இங்கிருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள், அமைச்சர்கள் அத்துணைபேர்களுக்கும் தெரியும். கிராமத்தின் முன்னேற்றம்தான் நாட்டின் முன்னேற்றம் என்று பல பேரறிஞர்கள் கூறியிருக்கிறார்கள். கிராமங்களிலேயிருப்பவைகளை நகரங்களிலே பயன்படுத்தவும், நவீன காலக் குறிப்புகளைப் பயன்படுத்தவும், விஞ்ஞானத்தினுடைய செல்வத்தைப் பயன்படுத்தவும் கிராமப்புறங்களுக்கு அதிகமான உரிமங்கள், அதைத் தொடக்கூடிய வண்டிகளுக்கு உரிமங்கள் தரப்பட வேண்டுமென்று நான் மிகப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றை இந்த நேரத்திலே கூறி என்னுடைய உரையை முடிக்கலாம் என்று கருதுகிறேன். பொதுவாக, சமதர்மத்தைப் பேசக் கூடியவர்களும், பொதுவுடைமை பற்றிப் பேசக்கூடியவர்களும், தேசிய உடைமை என்று சொல்லக்கூடியவர்களும் எப்படியெப்படி எந்தெந்தச் சூழ்நிலைகளில் சொல்கிறார்கள் என்பதை நாம் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். குறிப்பாகத் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னாலேயே இந்தத் திட்டத்தை மிகத் தெளிவாகச் சொல்லி இருக்கின்றது. 1967-இலிருந்து இந்தத் திட்டத்திற்கான சாதனைகளை, உரிமங்கள் வழங்குவதிலிருந்த தடங்களை அல்லது பெருவழித் தடங்களைத் தேசியமயமாக்குவது என்ற முறையிலேயிருந்து இன்று வரையிலேயும் பல புரட்சிகரமான திட்டங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இருக்கும் அரசு செய்து வருகின்றது.

பல போராட்டங்களுக்குப் பிறகு, பலருடைய இரத்தம் சிந்தியதற்குப் பிறகு, பலர் அங்கஹீனர்களாக ஆக்கப்பட்டபிறகு, புரட்சிகரமான திட்டங்களை மிக நல்ல நேரத்தைக் கருதி திராவிட முன்னேற்றக் கழக அரசு இப்பொழுது புகுத்தியிருக்கிறது. இந்தத்

[திரு. சொ. காவேரிமணியம்] [1971 ஜூலை 21

திட்டத்திலேயிருக்கும் நன்மைகள்பற்றி எனக்கு முன்னால் பேசிய நண்பர்களெல்லாம் குறிப்பிட்டார்கள். நான் ஒன்றை மட்டும் கூறுவதற்கு ஆசைப்படுகிறேன். பொதுவாக, தேசியமயமாக்கப் பட்ட பொருள்களின் மீது நமக்கு அதிகமான அக்கறை தேவை, அது எந்தத் துறையிலே இருக்கக்கூடியவர்களானாலும் சரி, அரசியலிலே இருக்கக்கூடிய தலைவர்களானாலும் சரி அல்லது தொழிலாளர் பெருமக்களுக்கு அறிவுரை வழங்கும் தொழிலாளர் தலைவர்களாகயிருந்தாலும் சரி அவர்களுக்கு இந்தக் கருத்தை வலியுறுத்திக்கொண்டு, தனியார் துறையிலே ஏற்படும் லாபத்தைக் காட்டிலும் அரசுத்துறை ஆக்கப்பட்டிருக்கும் பேருந்துக்ளிலே அதிக லாபம் ஏற்படும் என்று என்னால் துணிந்து கூற முடியும்.

உதாரணத்திற்கு ஒன்றைத் தெளிவாகக் கூற முடியும். மதுரையிலே ஒரு ஸ்தாபனம் பேருந்துகளை நடத்திக்கொண்டு வருகிறது. அங்கே கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற கொள்கைகள், நடைமுறையிலே அனுசரிக்கப்பட்டுவரும் விதிகள் எவ்வளவு கட்டுப்பாடாக இருக்கிறது என்பது பல நண்பர்களுக்குத் தெரியும். இதையெல்லாம் சொல்வதற்குக் காரணம், தேசிய உடைமையாக்கப்பட்டிருக்கும் அரசுப் பேருந்துகளில் அவர்களுக்கு வழங்கக்கூடிய, அதாவது அவர்களுக்கு வழங்கக்கூடிய சம்பளத்தைவிட அரசு நிச்சயமாகக் குறைத்துக் கொடுக்க முடியாது அல்லது சட்டத்திற்குப் புறம்பான எந்த நடவடிக்கைகளிலேயும் ஈடுபட முடியாது. அவ்வாறு இருக்கின்ற காரணத்தினால்தான் அரசுக்குச் சில சமயங்களிலே இம்மாதிரியான நஷ்டக் கணக்கு இருப்பதற்கு உள்ளாக்கப்படுகிறது.

உதாரணத்திற்கு இன்னொன்றையும் சொல்ல வேண்டுமானால், மதுரையிலேயிருக்கும் கம்பெனியில் வேலைபார்க்கும், அதாவது தனியார் துறை கம்பெனியிலே வேலை பார்க்கக்கூடியவர்கள் வேலை முடிந்தவுடனே வெளியிலே வருகின்ற நேரத்தில் அவர்களுடைய பைகளெல்லாம் சோதனை செய்து பார்க்கப்படுகின்றன. அவ்வாறு அரசுடைமையாக்கப்பட்டபின் இந்தப் போக்குவரத்து அலுவலகங்களில் அவர்களுடைய பைகள் அல்லது உடைமைகள் சோதனைக்கு உள்ளாக்கப்படுமேயானால் உடனே அதற்குப் பெரும் எதிர்ப்பு கிளம்பும். நமது தொழிலாளர்கள் மீது நம்பிக்கையில்லை என்று சொல்லவில்லை. ஆனால் தனியார் நடத்தும் இந்த ஸ்தாபனங்களில் எவ்வளவு கவனம் செலுத்தப்படுகிறது, தங்களுடைய உடைமைகள் பாதுகாக்கப்பட வேண்டும், அதிலே வரும் லாபத்தைப் பெருக்க வேண்டும், தொழிலாளர்கள் தங்களுடைய வேலையில் அதிக அக்கறை காட்ட வேண்டும் என்பதற்காகத் தனியார் எந்தெந்த முறையிலே தீவிரமான நடவடிக்கைகளை எடுக்கிறார்கள் என்பதையும் நாம் அனுசரித்து அவைகள் அத்தனையும் நம்முடைய பொதுவுடைமையாக்கப்பட்ட அல்லது தேசிய உடைமையாக்கப் பட்ட நம்முடைய பேருந்துகளிலேயும் அல்லது பணி மனைகளிலேயும் இருக்க வேண்டுமென்று நான் குறிப்பிட ஆசைப்பட



1971 ஜூலை 21] [திரு. சொ. காவேரிமணியம்]

வில்லை, ஆனால் எவ்வளவுக்கெவ்வளவு அது நமக்குத் தேவையோ அவைகளையெல்லாம் நாம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேசமயத்தில் 1971-72-க்கான நிதிநிலை அறிக்கையில் மிகத் தெளிவாக நம்முடைய முதல்வரவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள், தேசிய உடைமையாக்கப்பட்டுள்ள உரிமங்கள் அல்லது பேருந்துகளின் எண்கள் தெளிவாகக் காட்டப்பட்டிருக்கின்றன. அவ்வாறு தனிப்பட்ட பேருந்துகளை நடத்தக்கூடிய நிறுவனங்களில் திறமையான டிரைவர்கள், திறமையான கண்டக்டர்கள், திறமையான நிர்வாகிகள் பலர் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய உழைப்பையும், அப்படிப்பட்டவர்களுடைய திறமையையும் நாம் நிச்சயமாக இழக்கக்கூடாது, அப்படிப்பட்டவர்களுக்கு நம் அரசுடைமையிலே பணிகள் கொடுக்கும் நேரத்தில், வேலைக்கு அமர்த்தும் நேரத்தில் அவர்களுக்கு முதலிடம் கொடுத்து அவர்களுடைய திறமையையும் நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று நான் மிகப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் ஒன்றை மட்டும்கூறி என்னுடைய உரையை முடித்து விடுகிறேன். நம்முடைய மாறுபட்ட கருத்துப் படைத்தவர்கள் அடிக்கடி அரசியல் தலையீடு, அரசியல் தலையீடு என்று சொன்னார்கள். இந்த வார்த்தைகளைக் கேட்கின்ற நேரத்தில் ஆளுங்கட்சியிலே உள்ள எங்கள் உள்ளத்திலே ஈட்டி பாய்வது போல் இருக்கிறது. நான் மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன், அரசியல் முறையீடு என்பது வேறு, தலையீடு என்பது வேறு. அரசியல் முறையீடு என்றால், அரசியலிலே தொடர்பு கொண்டவர்கள் பொதுமக்களுடைய நலன்கள்மீது நாட்டம் கொண்டவர்கள் ஆங்காங்கு ஏற்படக்கூடிய குறைகள், ஆங்காங்கு ஏற்படக்கூடிய மாறுதல்கள் இவைகளையெல்லாம் அதிகாரிகளிடத்திலே முறையிடுவதில் எந்தவிதமான தவறும் இல்லை. ஆனால் அரசியல் தலையீடு என்று சொல்பவர்கள் எந்த இடத்திலே, எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் தலையிட்டு யாருக்கு ஆபத்து ஏற்பட்டது, யாருக்கு அநீதி விளைவிக்கப்பட்டது என்பதை இனிமேலாவது குறிப்பிட்டுப் பேசுவார்கள் என்று மிகப் பணிவன்போடு தெரிவித்து, ஏற்கனவே திறமை வாய்ந்த கண்டக்டர்கள், திறமை வாய்ந்த டிரைவர்கள், இதிலே உண்மையாகப் பாடுபட்ட பணியாளர்கள் இவர்களையெல்லாம் இந்த அரசு பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று இவ்வாறு தனியார் துறையிலே இருக்கக் கூடியவர்களையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

DR. H. V. HANDE : Hon. Deputy Speaker, Sir, in support of the cut motion moved on the behalf of my party, viz., to discuss the need to exercise restraint and caution in the matter of nationalisation of road transport in view of the continued losses incurred by the State transport, I wish to offer a few remarks.

Sir, this is a monopoly organisation especially in the City of Madras, and also adjoining city of Madras. The Hon. Minister has himself mentioned that the most important aspect to be taken about transport is its 'public utility value' and not the needs of owners of buses. When the question of ex-servicemen's transport companies was raised on the floor of the House, it was said that the most important question is the one concerning those who use the road transport, viz., bus passengers. Viewed from these angles, viz., 'public utility value' and 'convenience to passengers' let me say that the picture is pathetic. The Hon Minister may of course refuse it because he is holding the transport portfolio here. But if one were to search his heart of hearts, if one were to take a dispassionate view, (there are so many problems which have not been properly taken care of) one would definitely feel that transport is far from satisfactory. Even the Hon. Minister himself, has said while inaugurating traffic safety campaign :

"An analysis of the traffic accidents in the city involving passenger buses showed that the Governmente Transport despite their number being smaller than the private buses, accounted for a larger number of mishaps".

That is what he said. I am again sorry to say that in spite of the losses incurred for the past several years, no attempt has been made to improve the department. The department should provide at least the minimum requirements. Then we can forget their omissions and commissions if there are minimum comforts for passengers. But that is not there. Here things are going on in reverse. More loss to Government and more sufferings to the public. Things are only going from bad to worse. In other words there is increasing loss, increasing inconvenience to passengers. The travel in a public transport will be an eventful experience. Suddenly it will have a breakdown. Some are plying without good break certificates. The poor passengers suffer. There is no point in penalising the public for no fault of theirs. This is a point which the Government should take note of. I do not know whether penalising the public for no fault of theirs is one of the progressive measures. The fact that buses have run without proper break certificates and the same had led to serious accidents had drawn observation from Court is known to the public. It should be known to Government also.

Suddenly a bus will stop in the middle of a road. It would be said it is 'breakdown'. I do note know what is the cause for the frequent breakdowns. I do not know whether Government had looked into this question and taken preventive measures. When the people are suffering a lot due to lack of sufficient number of buses can't the department make use of the available buses, properly? Why should some buses be allowed to rest on road corners due to breakdowns? Why can't there be proper coordination and why not the breakdowns be attended to quickly or



additional buses immediately rushed from depot. Let me say in one sentence that this department is the best example for perfect mismanagement, gross mishandling, inefficiency and utter disregard to public needs, total carelessness, etc., etc.

Let me give some instances. Due to lack of proper maintenance of buses, 26,892 single trips were cancelled during 25th April 1971 and 1st May 1971. No bus stops at the stopping places.

In fact I have got a circular No. 358/4346-PDC/71, dated 15th May 1971 issued by the Director of Tamil Nadu State Transport Department. I shall now read some excerpts from that circular. It is as follows :—

"It has been noticed that the Depot Superintendents have been cancelling services indiscriminately which has seriously affected the traffic clearance in the City and in Suburban routes.

On an average about 165 vehicles are cancelled daily in all the routes operated in Madras Region. . . ."

This circular is signed by Thiru Mayilvahanan, Joint Director (M) and Annexure I refers to Madhavaram Depot and the Ambathur Depot. This is a cyclostyled official document. Sir, I have calculated the number of singles cancelled. From 25-4-1971 to 1-5-1971 26,892 singles have been cancelled. The details are as follows :—

| | | |
|---|---|---|
| April | 25 ... ... ... ... | 3,313 |
| " | 26 ... ... ... | 4,176 |
| " | 27 ... ... ... ... | 3,899 |
| " | 28 ... ... ... ... | 3,924 |
| " | 29 ... ... ... | 3,847 |
| " | 30 ... ... ... ... | 4,003 |
| May | 1 ... ... ... ... | 3,730 |
| | Total | 26,892 |

The reasons for cancellation are that there is lack of sufficient number of buses, there is lack of sufficient number of mechanics to attend to repairs, there is lack of enthusiasm among the employees and there is no proper understanding between the management and the trade unions.

Then I come to the most important point. A majority of the buses do not stop at the stopping place. There may be two reasons for that. One reason may be that the buses may be full and the other reason may be that the buses are not able to stop at the stopping place due to the ineffective functioning of the brakes which make creeching sound before the bus stops a few yards away from the stopping place and the people in the queue find it difficult to get into the bus. I want to know why repairs to breakes are not attended to then and there.

[Dr. H. V. Hande] [1971 ஜூலை 21

Now if we make a random collection of the number of passengers waiting at the bus stops in the Sterling Road or Choolai High Road, we will find that a large number of persons who are supposed to do extraordinarily important work would be waiting for hours together I do not think that any other country in the world would tolerate such a thing. Buses do not have even window covers and even letters to the editors of newspapers have been sent and published. Even the repairs to the window-covers are not attended to immediately. I do not know what the departmental people are doing.

Then I come to intermediate stops. Now there is no possibility of getting into buses at the intermediate stops on the routes—Aminjikari to Poonamallee and from Choolai High Road to Wall Tax Road. Buses do not stop at the intermediate stops even if they are not fully occupied. In this connection, I wish to point out one important thing. The time given to each trip is not suitable for the bus driver and perhaps due to lack of time they do not stop at these stops. So there should be a proper co-ordination betwen the bus depots and the drivers and something must be done. Also a number of buses are not working at the terminus due to non-availibility of drivers.

Then I come to the name-board light. I have mentioned it several times. As the light is not working, by the time the passengers could identify the destination, the bus goes away from the bus stop. What is the solution? The Hon. Minister should find it out.

Then I come to the standee buses. Even in the review mention has been made about the increase in the number of standee buses.

(Mr. Deputy Speaker sounded the gong)

Sir, I will finish my speech in five minutes.

Increasing the number of buses is the only solution and not the increase in the number of standee buses. That is my point. Then I come to page 18 of the Review. In the Statement showing Annual replacement and increases in number of buses, it is stated that during 1969–70 the number of fleet replaced is 192 and the number of fleet increased is 29. What does it mean? It means that a number of buses have been completely ruined and they have to be replaced. That is because the load of the bus is much more than what it could take. Human-beings are packed like sardines and in the long run the buses get ruined. This is not the economic way of running buses and it is a serious matter and I request the Hon. Minister to look into this matter. This is another important point which I hope the Hon. Minister will give due consideration.



1971 ஜூலை 21] [Dr. H. V. Hande]

Then again as regards Tyre Retreading Units, in paragraph 27 at page 13 of the Review they have given details about the Tyre Retreading Units. Have we got proper accounts about tyre retreading? How many tyres were retreaded? What is the earning of the Department? How much of cost accounting is there? Have we got profit and loss account with regard to the Tyre Retreading Units? What is the quantum of work turned out? Have all the statistics been taken? No, that has not been done. This is an important point which I would like to bring to the attention of the House.

I shall give you some statistics about bus route No. 541. There is a note No. 6147/AB/AR/71, dated 26th March 1971. With regard to punctuality of Route No. 541 it has come 97 minutes late on 1st February 1971. On 2nd February 1971 it has come late by 60 minutes, on 4th February 1971 by 167 minutes and on 6th February 1971 by 247 minutes. Like that it goes on. On some day it has come 685 minutes late. That is a record which it has created. The Hon. Minister can get a copy of the memo. from the Department and check up what exactly is the problem, why is it like that.

I have already mentioned about utility. Another important point which I would like the Hon. Minister to appreciate is this. That relates to details of loss which is fantastic. There has been uniform and equitable inefficiency for the past four years. The Madras Branch including Long Distance Service has incurred a loss of Rs. 53.30 lakhs in 1969–70. In 1970–71 it has incurred a loss of Rs. 75.23 lakhs. That means for one year increase in loss is Rs. 21.93 lakhs—Rs. 22 lakhs increase in loss. As regards the State Transport Central Workshop, the decrease of profit is about Rs. 2 lakhs. In Kanyakumari Branch increase in loss is Rs. 12.61 lakhs. In Ranithottam Workshop decrease in profit is Rs. 2.26 lakhs. The total increase in loss during the last one year is Rs. 38.72 lakhs.

Then I have worked out the details of loss after the D.M.K. party came to power. During 1967–68 the loss is Rs. 23 lakhs, during 1968–69 the loss is Rs. 29 lakhs, during 1969—70 the loss is Rs. 44.50 lakhs. The year 1970–71 tops—the loss is Rs. 83.22 lakhs. The total loss comes to Rs. 179.77 lakhs which means Rs. 1.79 crores loss. Does the increase in loss mean that the Government are providing maximum facilities? But I have shown clearly that there are no facilities at all and no increased facilities at all.

Another thing is cost per mile. Have you worked out? The cost per mile works out to Rs. 1.59. Earning per mile is Rs. 1.52. Loss per mile is Rs. 0.07 per mile. Earning per passenger is as follows :—

| | Rs. |
|---|---|
| Tamil Nadu ... ... ... ... ... | 55.63 |
| Andhra ... ... ... ... ... | 68.85 |
| Mysore ... ... ... ... ... | 75.56 |

[Dr. H. V. Hande] [1971 ஜூலை 21

Even there the department concerned and the officials concerned must take a proper attitude. The Government may argue that profit motive is not the only criterion. But that is an important criterion. That is an important point.

Then log sheets are not properly maintained. Conductors' remittance chalans—I have got a bundle of chalans which I do not want to show to the House—Hon. Minister can take my word—even numbering of the chalans has not been done. They are not numbered.

Due to improper selection of sites for buildings, losses have been incurred. All these things are there. No proper log book for each bus is maintained. Details as to how much it has earned, all these things, are not properly maintained. In other words, the net result is this. We are completely spreading the loss equitably. Neither the bus passenger has got any comforts, nor the tax-payer has got any relief. Taxpayers are taxed more. Bus passengers are more inconvenienced. Bus passengers are more inconvenienced, the more we call it socialistic measure, relief measure, welfare measure.

I would, therefore, request the Hon. Minister to come down on its pedestal from the ivory tower and see the facts realistically. I am not in the least bothered if a few owners are weeded out. I am not holding any brief for them. I have no interest. But I am very much concerned about the bus passenger and about all the dents it makes on the Exchequer. I hope and trust that the Hon. Minister will not be trying to make some sweeping remarks. I would be very happy in the interest of the Department—also I have given facts and figures—if he analyses these figures and tries to improve matters. We will be only very happy if he does that. Thank you, Sir.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** மிஸ்டர் டெப்டி ஸ்பீக்கர் சார், போக்குவரத்து சம்பந்தமான மானியங்கள் 2, 30, 43 என்றுள்ள மானியங்களுக்கு 25 கோடி ரூபாய் வரையில் நம் அனுமதிக்காக வந்து இருக்கக்கூடிய இந்த மானியங்கள் மிக முக்கியமானவை என்றும் இதிலுள்ள பல அம்சங்களைப் பற்றி ஏற்கனவே பல உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். அவைகளை நான் திருப்பிச் சொல்ல ஆசைப்படவில்லையென்று சொன்னாலும் சில விஷயங்களை வற்புறுத்த வேண்டுமென்று நான் நினைக்கிறேன்.

எங்கள் கட்சியின் சார்பாக வெட்டுப்பிரேரணைகள் கொடுத்திருக்கிறோம். அதில் இரண்டு முக்கியமான வெட்டுப்பிரேரணைகள் தனியார் துறையில் இருக்கக்கூடிய பஸ்களில் ஓவர்லோட் போடப்படுவது என்பதை அனுமதிக்கக்கூடாது என்பதும், பொதுத் துறையில் உள்ள பஸ்கள் சீரான முறையில் நடத்தப்படவேண்டும் என்றும் நாங்கள் கொடுத்திருக்கிறோம். தேசீயமயமாக்குவது என்பதைப் பொறுத்தவரையில் ஒருசில அம்சங்களை முதலில் சொல்லலாம் என்று நினைக்கிறேன். 1943-44 ல் அமைக்கப்பட்ட போஸ்ட் வார் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கமிட்டியில் உறுப்பினர்களாக இருந்த



1971 ஜூலை 21] [திரு. கே. டி. கே. தங்கமணி]

சர். ஆர். கே. ஷண்முகம் செட்டி அவர்களும், திரு. டி. டி. கிருஷ்ணமாசாரி அவர்களும் அன்றே தெளிவாகக் கூறினார்கள். இந்தியா பூராவிலும் இருக்கக்கூடிய பஸ் போக்குவரத்து தேசீயமயமாக்கப்படவேண்டும் என்று சொல்லியிருக்க, இன்று முப்பதாண்டுகளுக்குப் பிறகு கூட தேசீயமயமாக்குவது சரிதானா இல்லையா என்று சொல்லக்கூடிய வாதத்தைப் பேசக்கூட பல உறுப்பினர்கள் இந்தச் சபையில் இருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது எனக்கு ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. சில கட்சிகள் கூட தேசீயமயமாக்குவது தவறு என்று சொல்லக்கூடிய அளவில் இருக்கிறார்கள் என்பதும் எனக்கு ஆச்சரியத்தை அளிக்கிறது.

இன்னொரு முக்கியமான விஷயம். ஒரு உதாரணம் சொல்லலாம் என்று நினைக்கிறேன். இங்கிருந்து டெல்லிக்குப் போகக்கூடிய ரெயில் வண்டி பிர்லாவிற்குச் சொந்தம், இங்கிருந்து மதுரைக்குப் போக்கூடிய ரெயில் வண்டி டி.வி.எஸ்.-க்குச் சொந்தம், இங்கிருந்து கோயம்புத்தூருக்குப் போகக்கூடிய ரெயில் வண்டி ஏ.பி.டி.-க்குச் சொந்தமானது என்று சொன்னால் எப்படி அதை மக்கள் எள்ளி நகையாடுவார்களோ அதே முறையில்தான் பஸ்களும், அதிலிருந்து வரக்கூடிய வருமானம் ஒரு சிலரது கைக்குப் போகிறது என்ற காரியமும். அப்படி இருப்பது தவறு என்று சொல்வதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். ஆகவே அடிப்படையில் இது தேசீயமயமாக்கப்படவேண்டுமென்ற கொள்கையில் அரசாங்கம் கொஞ்சம் உறுதியாக நடவடிக்கைகள் எடுக்கிறது என்பதை நினைத்துப் பாராட்டுகிறேன்.

ஐம்பது பஸ்களுக்கு மேல் உள்ளவற்றை தேசீயமயமாக்குவது என்ற மசோதா நமக்கு முன்னால் வர இருக்கிறது. அப்படி தேசீயமயமாக்கப்படும்போது ஒரு விஷயத்தை நான் சொல்ல விரும்புகிறேன். பஸ்கள் மட்டுமல்ல. அந்தப் பஸ்களோடு இணைந்திருக்கக்கூடிய வொர்க்ஷாப்புகளையும், அதில் இருக்கக்கூடிய நிர்வாகஸ்தர்களையும் சேர்த்து எடுப்பதுதான் நிர்வாகத்தைத் திறமையாக நடத்துவதற்கு உதவியாக இருக்கும் என்ற என் ஆலோசனையைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இந்த பத்து பஸ்கள் என்பதைப் பொறுத்தவரையில் ஒருசில சிக்கல்கள் வருகின்றன. இந்த விவாதத்தைத் துவக்கி வைத்த திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் பொதுவாக அந்த விஷயத்தைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். பத்து பஸ்களை எடுத்துவிட்டு பாக்கியிருக்கக்கூடிய பஸ்களைப் பொறுத்தவரையில் என்ன நிலைமை. பாக்கியிருக்கக்கூடிய பஸ்களில் பணியாற்றக் கூடிய தொழிலாளர்களின் நிலைமை என்ன என்ற கேள்வி உடனடியாக எழுகிறது. பஸ்கள் பூராவும் தேசீயமயமாக்கப்பட்டால் அந்தத் தொழிலாளர்கள் பூராவும் அரசே ஏற்று நடத்திக் கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை. பத்து பஸ்களுக்கு மேல் வரும்போது நிலைமை என்ன என்று பார்க்கவேண்டும். அதற்கு நான் என்ன ஆலோசனை கூறுகிறேன் என்றால் ஒன்று கூறுகிறேன்.

டாக் லேபர் போர்டில் ரெஜிஸ்டேர்ட் வொர்க்கர்ஸ் என்றிருக்கிறார்கள். அது விஷயம் இங்குள்ள அமைச்சர்களுக்கும், பல உறுப்பினர்களுக்கும் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். அந்த லிஸ்ட்டட் வொர்க்கர்ஸ்க்கு வேலை இல்லை என்று சொன்னால் வேலையில்லாத நாட்களுக்கு அவர்களுக்கு ஸப்ஸிஸ்டன்ஸ் அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது. அதே போல் பத்து பஸ்களுக்கு மேல் இருக்கக்கூடிய பஸ்களில் உள்ள தொழிலாளர்களை வேலையில் இருந்து எடுக்கும்போது எந்தெந்தத் தொழிலாளர்கள் வேலை இழந்திருக்கிறார்கள் என்ற ஒரு லிஸ்டை எடுத்துக்கொண்டு அந்த லிஸ்டட் வொர்க்கர்ஸ்க்கு கண்டிப்பாக ஸப்ஸிஸ்டன்ஸ் அலவன்ஸ் கொடுக்கப்படவேண்டும். அடுத்தபடியாக வேறு வேலை வரும் போது அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

இன்னொரு ஆலோசனையும் கொடுக்கலாம் என்று நினைக்கிறேன். பத்து பஸ்களுக்கு மேல் உள்ளவற்றைத் தனியாருக்கு இன்னும் ஏலத்திற்கு விடுவதைப் போல் விடுவதற்குப் பதிலாக அவற்றை அரசாங்கமே ஏற்று நடத்துவதற்கு நடவடிக்கைகள் எடுத்தால் பேருதவியாக இருக்கும் என்ற இந்த இரண்டு ஆலோசனைகளை முதன்முதலாக இங்கு வைக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொரு விஷயம். இந்த இலாகாவைப்பற்றிக் குறை கூறுகிறேன் என்று நினைக்கக் கூடாது. போர்டு ஆஃப் ரெவின்யூ இருக்கக்கூடாது என்று நீண்ட நாட்களாக நாங்கள் சொல்லி வருகிறோம். அப்படிப்பட்ட போர்டு ஆஃப் ரெவின்யூவில் இருக்கும் ஒரு உறுப்பினர் கையில் இந்த மிகவும் பொறுப்பு வாய்ந்த இலாகாவை ஒப்படைத்து இருக்கிறோம். அமைச்சர் இருக்கிறார், அதற்கென்று தனி இலாகா இருக்கிறது என்று சொன்னாலும், அட்மினிஸ்டிரேடிவ் கன்ட்ரோல் இருப்பது போர்ட் மெம்பர் கையில்தான். இதனால்தான் இந்த இலாகா சரிவர நடத்த முடியாமல் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் கூட தன்னுடைய அறிக்கையில் கூறியிருக்கிறார்கள்.

"Sustained efforts are being taken to improve the operational efficiency of the Road transport and to increase services to the public"

இன்று நடப்பது திருப்தியாக இல்லை என்ற விஷயத்தை அவர்களே ஏற்றுக் கொண்டு இருக்கிறார்கள். அடுத்து நாம் நல்ல முறையில் செயல்படுவதற்கு முயற்சிக்கிறோம் என்ற முறையில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அப்படி அவர்கள் குறிப்பிட்டு இருப்பது வரவேற்கத்தக்கது. அந்த இலாகாவை பரிபூர்ணமாக ஓவர் ஹால் செய்யவேண்டும்.

தொழிலாளர்களை அந்த நிர்வாகத்தில் எப்படி பங்கு எடுக்கச் செய்வது என்ற பிரச்சனை வருகிறது. தொழிலாளர்கள் பங்கு ஏற்க வேண்டுமென்று சொன்னால் வெறும் கார்ப்பரேஷனை அமைத்து அதிலே தொழிலாளர்களைப் போட்டால் போதாது. கீழ் மட்டத்திலிருந்து, பல மட்டங்களில் உள்ள தொழிலாளர்





களையும் அந்தக் கமிட்டியில் போட்டு, அந்த கமிட்டியின் ஆலோசனையின் பேரில் காரியங்களைச் செய்தால் இன்று இருக்கும் பல ஊழல்கள், திறமையின்மை இவற்றைப் போக்குவதற்கும், தொழிலாளர்கள் தவறாக நடந்தாலும், அல்லது தவறு நடக்காமல் கண்காணிப்பதற்கும் முடியும் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

உதாரணத்திற்காக ஒன்று சொல்லலாம் என்று நினைக்கிறேன். அந்த நாட்டைப் பற்றி சொல்கிறேன் என்பதற்காகத் தவறாக நினைக்கக்கூடாது. 1957-வது வருஷத்தில் தொழிலாளர் மாநாட்டிற்காக இந்திய அரசின் ஆதரவோடு எங்களைச் சீனாவுக்கு அனுப்பிவைத்தார்கள். இரண்டு மாதங்கள் ஹாங்காங் அங்கெல்லாம் சுற்றுப்பயணம் செய்து கொண்டு இருந்தோம். அப்படிச் சுற்றுப்பயணம் செய்கிற நேரத்தில் அந்த டிரெயினை சுத்தம் செய்வதற்காக ஒரு 18 வயது பையன் வந்தான். அந்த டிரெயின் பால்போல் வெண்மையாக சுத்தமாக இருந்தது. நம்முடைய தேர்தல் காலத்தில் சுவற்றில் பெயர் எழுதுகிற மாதிரி, அந்த வெண்மையான இடத்தைப் பார்த்ததும் என் பெயரை எழுதவேண்டுமென்று ஆவல் வந்தது. இதில் பெயரை எழுதலாமா என்று அவனைக் கேட்ட நேரத்தில், அவன் கையை ஓங்கி, மூக்கை உடைத்து விடுவேன் என்று சொன்னான். அவனுடைய செய்கை எனக்கு ஒன்றை நினைவு படுத்தியது. எப்படிப்பட்டவன் ஆனாலும் அவன் மூக்கை உடைப்பேன் என்று சொல்கிறாயே, அந்த அளவுக்கு உன் உள்ளத்தில் இது உன் சொத்து, இதையாரும் சேதப்படுத்த விடமாட்டேன் என்ற எண்ணம் இருக்கிறதே, நீ பிழைத்துக் கொள்வாய் என்று சொன்னேன். அப்படிப்பட்ட எண்ணம் நம் தொழிலாளர்கள் மத்தியில் வளரவேண்டும். 1967-க்கு பிறகு கொஞ்ச காலத்திற்கு இருந்தது. இப்படிப்பட்ட எண்ணம். இப்போது அந்த எண்ணம் வர வரக் குறைந்து வருகிறது என்பதை சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தனியார் துறையில் இருக்கும் பஸ்களைப் பற்றி பல வெட்டுப் பிரேரணைகள் கொடுத்து இருக்கிறேன். கட்டணம் 85 பைசா என்று இருக்கிறபோது 1 ரூபாய் வாங்கிப்போகும் நிலைமை இருக்கிறது. அது அருப்புக்கோட்டையில் இருக்கும் ஒரு பஸ் கம்பெனியால் செய்யப்படுகிறது. இன்று அதிகமாக ஷட்டில் பஸ்கள் போட வேண்டும். 15 மைல் அளவுக்கு சிடி பஸ் என்று சொன்னால், 20, 25 மைல் தூரத்திற்கு ஷட்டில் பஸ்கள் போட வேண்டும். பல இடங்களுக்கு இப்படி ஷட்டில் பஸ்கள் விட வேண்டும். கல்பாக்கம் ஸ்கீம் பற்றிச் சொன்னார்கள். இது ரொம்ப முக்கியமான இடம். இந்த இடத்திற்கு அதிகமான பஸ்கள் சென்னையிலிருந்து விடவேண்டும்.

அநேகமாக இந்தத் திட்டம் நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் எடுக்கப்படும் என்று நினைக்கிறேன். இன்று சென்னையிலிருந்து கல்பாக்கத்திற்கு (சட்ராஸ்) போகவேண்டுமென்று

சொன்னால் சரியானபடி பஸ்கள் கிடையாது. அதிகமான பஸ்கள் கல்பாக்கத்திற்கும் சென்னைக்குமிடையே விடவேண்டும். அதோடு, அந்த அடாமிக் எனர்ஜி பிராஜக்டை பாதிக்காத அளவுக்கு, மகாபலிபுரம் வழியாக கல்பாக்கத்திற்கு பஸ்கள் விடவேண்டும். கல்பாக்கத்திற்கும் மகாபலிபுரத்திற்கும் இணைப்பு ஏற்படுத்தும் வகையில் பஸ்கள் விடவேண்டும். சென்னையிலிருந்தும் மகாபலிபுரம் வழியாக கல்பாக்கத்திற்கு பஸ்கள் விட்வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

சர்க்கார் துறையில் போகும் பஸ்களை திடீர் திடீரென்று நிறுத்தி விடுகிறார்கள். இந்த மாதம் நாகப்பட்டினத்தில் என்று நினைக்கிறேன், நாகப்பட்டினத்திற்கும்-கோயம்புத்தூருக்கும் இடையே ஜூலை மாதம் 7-ம் தேதியிலிருந்து பஸ் கான்சல் ஆகிவிட்டது என்று சொல்லிவிட்டார்கள். அதனால் பிரயாணிகள் மிகவும் பாதிக்கப்பட்டார்கள். அவர்கள் வாங்கிய டிக்கெட் பணம் திரும்பத்தரப்பட்டதா இல்லையா என்று தெரியவில்லை. திடீரென்று ரத்து செய்வது என்பது சரியான காரியம் இல்லை. (மணியடிக்கப்பட்டது) ஒரு நிமிடம் அதிகமாகக்கொடுங்கள். நேரம் இல்லாத காரணத்தால் சில விவரங்களை வேகமாகச் சொல்லிக்கொண்டு போகலாம் என்று நினைக்கிறேன்.

சர்க்காரில் இருக்கும் பஸ்களில் நஷ்டம், நஷ்டம் என்று சொல்கிறார்கள். கேரளத்தில் நல்ல முறையில் நடத்துகிறார்கள். அங்கேயும் ½ கோடி ரூபாய் அளவுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. பொதுத் துறையில் இப்படிப்பட்ட நஷ்டம் வரத்தான் செய்கிறது. ஆனால், மக்களுக்கு அந்தத்துறை எந்த அளவுக்குச் சேவை செய்கிறது என்பதை நாம் பார்க்கவேண்டும். நகரத்தில் இருக்கும் பஸ்களின் எண்ணிக்கை இப்போது 1,000 என்று சொன்னால் அதை 1,500 என்று ஆக்கவேண்டும்.

பஸ்கள் ரோடுகளில் ஆங்காங்கே 'ஊண்டட் சோல்ஜர்' மாதிரி நிற்கக்கூடாது. பிரேக்டவுன் ஆன பஸ்களை உடனடியாக அந்த இடத்தை விட்டு, 10 நிமிடத்திற்குள்ளாக நீக்கிவிடும் வகையில் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அந்த இடங்களிலேயே அதிக நேரம் நிறுத்தப்படுவதால் இந்த அரசாங்க பஸ்களே இப்படித்தான் நின்று விடுமோ என்ற எண்ணும் அளவுக்கு வருகிறது. ஆகவே, இந்த பஸ்களை உடனடியாக அந்த இடத்திலிருந்து எடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

லாரி டிரான்ஸ்போர்ட்டைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். பொதுவாக நம்முடைய டிரான்ஸ்போர்ட்டைப் பார்த்தால் 2 ஆண்டுகளுக்கு முன்பு 30,197 ஆக இருந்தது இப்போது 37,000க்கு வந்து இருக்கிறது. வருஷத்திற்கு 2,500 புதிய லாரிகள் அதிகமாகிக்கொண்டு இருக்கிறது. இந்த லாரிப் போக்குவரத்து இப்போது அதிகமாகிக்கொண்டிருக்கிறது. இந்த லாரியில் இருக்கும் தொழிலாளர்களின் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. அவர்களுடைய உயிரைக் காப்பாற்ற வேண்டுமென்ற





நோக்கத்தோடு காங்கிரஸ் ஆட்சி இருந்த காலத்தில் ஒரு உத்தரவு போட்டார்கள். இரவு 12 மணியிலிருந்து காலை 4 மணிவரை லாரி ஓட்டக் கூடாது என்று. ஆனால் மறுபடியும் அந்த உத்தரவை ரத்து செய்துவிட்டார்கள். அந்த உத்தரவை மறுபடியும் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த உத்தரவை மறுபடியும் அமுல் நடத்தினால் தான் ஆக்சிடென்ட்கள் அதிகமாக நடக்காமல் இருக்கும். இல்லாவிட்டால் அந்தத் தொழிலாளர்களுடைய உயிருக்கு ஆபத்து நேரிடுவதோடு அல்லாமல், விபத்துகளும் அதிகமாகிவிடும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

(திரு. நா. வீராசாமி தலைமை)

டாக்சிகளைப் பொறுத்தவரையில் மற்ற மாநிலங்களுக்கும் போகக்கூடிய வகையில் பர்மிட்டுகள் வழங்குவது என்று முடிவு செய்து இருக்கிறார்கள். தமிழ்நாட்டிலிருந்து கேரளத்திற்கும், சென்னையிலிருந்து திருப்பதிக்கும், மதுரையிலிருந்து கொடைக்கானலுக்கும், கோயம்புத்தூரிலிருந்து ஊட்டிக்கும் போக வசதியாக இருக்கும் வகையில் டாக்சிகளை அரசாங்கமே ஏற்று நடத்தலாம். ஏற்கனவே நான் கேள்விப்பட்டிருக்கிறேன். உத்திரப்பிரதேசத்தில் நைனிடால் பகுதியில் அரசாங்கமே டாக்சி நடத்துகிறார்கள். அது நல்லமுறையில் நடைபெறுகிறது.

சர்க்கார் தரப்பில் பணியாற்றும் தொழிலாளர்களிடையே பல சஸ்பெண்ட் ஆன தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய விஷயங்களை உடனடியாகக் கவனிக்கவேண்டும். 1970–71 ஆண்டுக்கான போனஸ் இது வரையில் கொடுக்கப்படவில்லை. அந்த போனஸ் உடனடியாகக் கொடுக்கப்பட ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

இறுதியாக இந்த எஸ்.டி.ஏ.டி. யைப் பற்றி சொல்ல ஆசைப்படுகிறேன். இது கொஞ்சம் கண்காணிக்கவேண்டிய இலாகாவாக இருக்கிறது. அங்கே நம்முடைய விஜிலென்ஸ் செல் சரியாக கவனித்து வேலை செய்யவேண்டும். அதிலிருந்து கம்ப்ளெய்ன்ட்கள் நிறைய வருகிறது. அந்தப் புகார்களை நான் நம்புகிறேன் என்று சொல்லவில்லை. நிறையப் புகார்கள் வருவதால் அதை பிரத்யேகமாக விசாரிக்கச் சொல்லி, விஜிலென்ஸ் செல்லுக்கு உத்தரவு போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த இலாகா மேலும் மேலும் சிறப்பாகச் செயலாற்றுவதற்கு நாங்கள் கூறுகிற ஆலோசனைகளை நீங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

THIRU R. PONNAPPA NADAR: Mr. Chairman, Sir, I would like to offer a few remarks regarding the most important demand which is under discussion before this House.

I may be permitted to point out that the policy of nationalisation is being accepted and adopted by our party. It has been urged on the floor of the House that some parties are against nationalisation. I would here and now say once again and repeat that the

High Command of our party has already accepted the principle of nationalisation. It may not be said that some parties are only anxious to find fault.

Sir, the transport department is a public utility service. As regards public utility service the argument that it cannot be run on profit may be accepted. But is it not a fact that our department is running at a loss and that it is mounting up and this may be seen from the figures which have been furnished to us by the Hon. Minister in his Book No. 3, the Nationalised Transport a review. I may be permitted to refer to certain figures. The learned Minister while intervening said that during 1963-64 the loss was Rs. 28.09 lakhs and there has been a decrease subsequently. But I would once again refer to the other fiugres also.

| | |
|---|---|
| 1963-64 ... ... ... ... ... | Rs. 28.09 lakhs. |
| 1964-65 ... ... ... ... ... | Rs. 18.24 lakhs. |
| 1965-66 ... ... ... ... ... | Rs. 14.39 lakhs. |
| 1966-67 ... ... ... ... ... | Rs. 61.00 lakhs. |

1966-67 is the period when the D.M.K. Government came to power.

In 1967-68 the loss was reduced to Rs. 23.25. But in 1968-69 the loss has increased to Rs. 29.38 lakhs. So, there is an increase of Rs. 6 and odd lakhs so far as the losses are concerned. Again in 1969-70 the loss is stated to be Rs. 44.50 lakhs. Then the anticipated loss for the current year, 1970-71, is Rs. 63.22 lakhs. So, by a comparison of the figures it is clear that this public utility service is not running on a profit. The reason that has been stated in the Review is that the City services are being run at a loss and so. that accounts for the lion's share of the loss that is sustained by the Department. It may be true to a large extent. But are we going to alleviate the fear in the public mind and say that this Department should be run on better lines and better managerial efficiency may be insisted upon?

So far as this Department is concerned, there is a talk that this will be made a Corporation. I am sure that Corporations are being run in Kerala State, Mysore State, Andhra Pradesh and other States. I would here and now say that this Transport Corporation should not be a place for dispensation of political power. Because there are several Boards which have been constituted and many members of the ruling party have found their berths in those Boards. I do not want to question the authority of Government regarding that matter. But I would here and now say, Sir, that this should be run on strict commercial lines and whatever be the obstacles, they will have to be tackled at the point of the Government.

Then, Sir, again, so far as this Department is concerned there are certain anomalies which are existing now. Now it has been divided into four regions and it has been urged on the floor of this House that so far as the regions are concerned, the establishment charges are very high and abnormal and that may be reduced. That is the point which the Hon. Minister will take into account



So far as our district is concerned, there was a complete nationalisation and there are several problems which concern the public as well as the employees who are manning that Department. The most important thing is that after 1956 the fleet strength has been augmented, but the services that are being operated is disappointingly meagre. I would say that the public are very much agitated over the gross mismanagement that is taking place in that Kanyakumari Branch. The workers also are not satisfied. The public also are not satisfied. It may be said that there is so much of problems so far as that district is concerned.

The operational efficiency has been stated to be 86 last year and this year they hope to increase it to 87. The operational efficiency that has been set forth by this Department is far from satisfactory. I do not want to embark upon any detailed discussion regarding the operational efficiency. Suffice it for me to say that the operational efficiency needs reconsideration. I am sure that the Hon. Minister who is an Engineer will take immediate and prompt steps to see that the operational efficiency is increased at the moment.

Then, Sir, so far as the Kanyakumari Branch is concerned, there are two depots, one at Kuzhithurai and another at Nagercoil. Kuzhithurai depot has been neglected. On account of the trade union rivalries that existed in that district, several victimisations have taken place. There is unhealthy competition between the rival trade unions and I am sure this is not a healthy sign and the augury is very bad. I am sure that the Minister will bestow his attention so far as this district is concerned. I think he will take steps to see that the Kuzhithurai depot is put into service and the fleet is augmented by many more buses. So far as that depot is concerned, that depot is now in utter disaway and neglect. I am sure that will not be neglected in future. That is situated in my constituency. I know that the number of buses that is now there is very little. I am sure that the existing buses are also taken away from that. Besides this, several trips have been cancelled. As the hon. Member Dr. Hande pointed out regarding the cancellation of the trips, I would once again repeat and reiterate that cancellation of trips is the order of the day and that is the malady of the department. When we board the buses, the buses do not reach the destination. But on the other hand the buses stop in the middle and no arrangement is made for taking us to the destination. That is the pitiable plight in which the passengers are put to.

It has been stated that the buses plying between Nagercoil and Tirunelveli are running very efficiently. I am sorry to say that that is not a fact and it is a travesty of truth. I have got personal experience. I have travelled by 65-X Service, so that I may reach Tirunelveli. But unfortunately for me, one day it had stopped in the middle and there was no alternative provision made and we had to take the ordinary bus. There was no express bus

[Thiru R. Ponnappa Nadar] [1971 ஜூலை 21

available. We had to wait for long. It is a bus which connects the outgoing train from Tirunelveli. These are matters which the Department may take into consideration and I am sure they will be attended to.

Then another thing which I want to say is about fares. So far as fares are concerned, I would once again reiterate and repeat that the existing fares should not be increased on no account. It may be said that the operation cost has increased, the cost of fuel has increased, overhead expenses have increased. But on behalf of the travelling public I would once again say that no increase should be made and that would be against the public interest. I am sure the Hon. Minister will appreciate me when I say that it is a genuine demand putforth on behalf of the public.

(Mr. Deputy Speaker in the Chair.)

So far as tickets are concerned, they are printed for the express buses in large sizes. Should we have such a big size tickets? That is a matter for the Government to consider. Another fact is, that most of the tickets are printed in Hoe & Company. Why not we print those tickets in our Government Press? Or the Department may install a separate press of their own and print the tickets. That is an important thing which I want to stress upon the Hon. Minister.

Another point is running of express buses. The express buses are also met with this breakdown and this should be put an end to. As regards the express buses plying between Nagercoil and Tiruchirappalli and Tiruchirappalli and Madras, there should be co-ordination between these two services. If we want to come to Madras we will have to take the first bus that starts at 5'o clock in the morning and we can reach Tiruchirappalli at about 2'o clock and then board the bus at Tiruchirappalli to come to Madras. That is the arrangement that has been made so far as these express buses are concerned. Once again I would urge upon the Hon. Minister that direct bus services may be instituted from Nagercoil to Madras and Tiruchirappalli.

It has been pointed out in this House that several private operators in the name of omni buses are plying direct services from Nagercoil to Madras. I do not want to enter into any controversy. Whoever is running these services, it is for the Government to supervise those buses. But it would be advisable if the Government do take immediate steps to see that direct bus service between Nagercoil and Madras is undertaken.

Then I want to say another thing regarding the frequent stopping of the buses. Sir, without notice bus service plying from Talakudi to Nagercoil—Talakudi is a village from which our ex-Member Thiru B. Mahadevan Pillai hails and he got defeated in the elections—has been stopped abruptly. I once again request the Hon. Minister to see that such things do not happen.



1971 ஜூலை 21]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சபையின் அனுமதி யோடு பேரவையின் நேரம் நீடிக்கப்படுகிறது.

Thiru R. PONNAPPA NADAR: Sir, I am sorry I did not notice this.

It has been stated that a Committee has been constituted for the sale of condemned buses. I learn that some condemned buses have been sold recently. I want to know whether after the matter has been discussed in the Committee the disposals have been made. That is a matter which the Hon. Minister may clarify in his reply. Also, I would let to know whether this Committee has met and if it has met, the dates. I also learn that 9 buses have been sold recently and what are the details about it and that is also a point which the Hon. Minister may clarify.

So far as accidents are concerned, according to the Detailed Budget Estimates for 1971–72 in the Kanyakumari district the number of accidents during 1969–70 was 514, of which 13 were fatal accidents. Details regarding the Madras Branch are not contained in this book and I am sure the Department will take steps to see that these accidents are averted to the minimum. The accidents have occurred on account of the improper maintenance of the vehicles and that is a point which I want to stress.

As regards the staff in various branches the strength of the technical and non-technical staff in mofussil is far from satisfactory and that is also mentioned in the Review furnished by the Hon. Minister. So far as the Kanyakumari district is concerned, there have been less number of technical men and only an Assistant Engineer is in charge of that big depot. I am sure the status of that depot will have to be raised. There is a body building workshop at Ranithottam and that is doing very useful work and it is running at a profit. Cheap skilled labour and well qualified technical staff are available and that is the opinion of the D.T.S. Thiru Ramakrishnan. I am sure his report would have reached the Department and steps will be taken for streamlining the Ranithotam Workshop.

As regards other amenities, amenities for passengers will have to be augumented.

So far as co-ordination between the staff and the department is concerned, effective steps may be taken. Of course there are trade union rivalries and that should be eliminated and I am sure prompt and immediate steps would be taken by the Hon. Minister to see that such things do not recur.

Then I want to say a few words regarding other road transport schemes. I saw a report that we are going to increase the number of lorries and taxis. So far as the City of Madras is concerned, the number of taxis plying is not sufficient and during peak-hour, we find it difficult to get taxis. Even in the M.L.As. hostel we are

[Thiru R. Ponnappa Nadar] [1971 ஜூலை 21

not able to get them. So I would request the Hon. Minister to take steps to see that the strength of the taxis is increased. So far as tourist taxis are concerned, they are not in sufficient numbers and I am sure the Government will take steps to see that their number is also increased.

So far as lorries are concerned, the restriction that was in vogue should be re-introduced because we see so many fatal accidents on account of the rash and negligent driving of the lorry drivers.

So far as Inter-State Services are concerned, a single-point tax may be adopted and suitable negotiations may be made with the Kerala Government, Mysore Government and the Andhra Government and the number of vehicles both in the private and public sector which could ply in those States can be fixed so that sufficient number of buses can be operated. In this connection, I may suggest that we should also put on the road good buses so that we could have a feeling that our transport system is running efficiently.

I would once again urge that the private operators should not increase fares. The existing rate is $2\frac{1}{2}$ paise per kilometre and many operators want to raise it by 1/2 paise and that should not be allowed. I am sure the Hon. Minister will look into this matter. With these words, I conclude my speech.

*** மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறை மானியத்தின்மீது பல்வேறு கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் கலந்துகொண்டு, பல்வேறு ஆலோசனைகளை இங்கு எடுத்துவைத்தார்கள். எவற்றையெல்லாம் நடைமுறைக்கு எடுத்துக் கொள்ள முடியுமோ அவற்றையெல்லாம் தகுந்த நேரத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே எழுப்பப்பட்ட அவ்வளவு பிரச்சனைகளுக்கும் இப்போது பதில் அளிப்பது என்றால் நேரம் இராது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள் என்ற காரணத்தினால் இதைச்சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அனைவருக்கும் பதில் அளிக்காத காரணத்தினால் என்னுடைய கவனத்திலிருந்து விடுபட்டுப்போய்விடுமோ என்று யாரும் ஐயப்பட வேண்டாம் என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உட்பட 20 பேர் பேசினார்கள். இன்றைய தினம் 21-ம் தேதியான இன்று நான் 21-ஆவதாக இந்த மான்யத்தின்மீதான உரையில் கலந்துகொண்டு பதிலளிக்கிறேன். போக்குவரத்துறை எப்படி நன்றாக நடைபெற வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஆவலும் அக்கரையும் இருக்கிறதோ அந்த அளவிற்கு இன்றையதினம் இதில் ஆவலும் அக்கறையும் நமது அரசுக்கும் இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கும் இருக்கிறது என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.



1971 ஜூலை 21] [திரு. ச. இராமச்சந்திரன்]

பதில் அளிக்கும் இந்த நேரத்தில், முதலில் தனியார் துறையில் உள்ள நிலை பற்றி எடுத்துக்கொள்ளுகிறேன். ஏற்கெனவே அவற்றை நாட்டுடைமையாக்கும் கொள்கை அமுலில் இருந்துவருகிறது. அது அல்லாமல் பத்து உரிமங்களுக்கு மேல் யாரும் வைத்துக்கொள்ளக்கூடாது என்ற சட்டமும், ஐம்பது பஸ்களுக்கு மேல் பெற்றுள்ள நிறுவனங்களை அரசுடமையாக்கும் திட்டமும் செயல்படுத்தப்பட இருக்கின்றன. எனவே, இது இரட்டைக் குழல் துப்பாக்கி எனக்கருத இடமிருக்கிறது. ஐம்பது பெர்மிட்டுகளுக்கு மேலுள்ள நிறுவனங்களை அரசுடமையாக்குவது மூலம் அவை சமுதாயத்தின் உடமைகளாக்கப்படுகின்றன என்பதைப் போல பத்து உரிமங்களுக்குமேல் யாரும் பெற்றிருக்கக்கூடாது என்பதன் மூலம் இத்துறையில் ஏகபோகத்தைத் தடுக்கிறோம். இவற்றின் காரணமாக சமதர்ம திட்டங்களை உருவாக்க வழிவகை காணமுடிகிறது. இந்த இரண்டையும் இந்த மன்றத்தில் உள்ள அனைத்துக்கட்சி உறுப்பினர்களும் வரவேற்றுப் பேசியிருக்கின்றார்கள். ஆனால், சுதந்திராக்கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் மட்டும் ‘ நாட்டுடைமையாக்கும் திட்டத்தின் மூலம் நஷ்டம்தான் வரும் ’ என்ற கணக்கைநாண்பித்து இக்கொள்கையை எதிர்த்து வந்திருக்கின்றார்கள். அவர்களுக்கு ஒரு சிறு கொள்கை விளக்கத்தை மட்டும் சொல்லிக்கொள்ளுவது எனது கடமையாகும் என்றே கருதுகிறேன். நாட்டுடைமையாக்குவது என்பது வேறு, நிர்வாகம் வேறு. Concept of ownership is different from management. concept of அனைத்துமே விஞ்ஞான ரீதியில் வளர்ந்துள்ள இக்காலத்தில், எது ஒன்றையும் விஞ்ஞான ரீதியில் ஆராய்ந்து ஏற்றுக்கொள்ளவேண்டிய இக்காலத்தில், இதை மறந்துவிடுவதற்கு இல்லை. யார் ஒரு அமைப்பிற்கு சொந்தக்காரர்கள் என்பதல்ல முக்கியம். அத்தொழிலால் யாருக்கு நன்மை ஏற்படுகிறது, இதை எப்படி நடத்துகின்றார்கள் என்று யோசித்துப்பார்ப்பதுதான் முக்கியம். எந்த நாட்டையெடுத்துப் பார்த்தாலும், பொருளாதார வளர்ச்சி காரணமாக, விஞ்ஞான வளர்ச்சி காரணமாக தொழிலபிவிருத்தி காரணமாக நிர்வாகம் நல்ல முறையில் நடைபெறுமானால் நல்ல பலன் தரும் என்பதை நாம் நன்றாக அறிந்துகொள்ளவேண்டும்.

ஆகையால் நாஷனலைஸ் பண்ணிவிடுவதால், நாட்டுமையாக்கிவிடுவதால் 'அது கெட்டுப்போகும் என்பது கவைக்கு உதவாத பழங்காலக் கருத்து என்பதனைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். இன்னும் சொல்லப்போனால் இங்கிலாந்து நாட்டில்கூட கன்சர்வேட்டிவ் கட்சி ஆளுகிறபோதுதான் லண்டன் பாசஞ்சர் டிரான்ஸ்போர்ட் போர்டை நாஷனலைஸ் செய்தார்கள் என்பதை அவர்கள் மறந்துவிடக்கூடாது. நாட்டுடமை ஆக்கிவிடுவதால் நஷ்டம் வரும் என்ற கொள்கையை நாம் ஏற்றுக்கொள்ளத் தேவையில்லை. ஏனென்றால் இப்போது நிர்வாகம் என்பது வேறு, உடமை என்பது வேறு என்கின்ற நிலைமைக்கு விஞ்ஞானம் நம்மைக் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறது என்பதனை நாம்

[திரு. ச. இராமச்சந்திரன்] [1971 ஜூலை 21

மறந்துவிடக்கூடாது. அந்த வகையில் பார்க்கின்றபோது இன்றைய தினம் இந்தத் திட்டங்களெல்லாம் சமுதாய நன்மைக்காகக் கொண்டுவரப் பட்டிருக்கின்றன என்று நான் எடுத்துச் சொல்ல விரும்புகின்றேன்.

ஆம்னிபஸ்களைப் பற்றி நண்பர்கள் சொன்னார்கள். அவைகளைப் பொறுத்த விஷயம் அரசாங்கத்தின் கவனத்தில் இருந்து வருகிறது. இரவில் இந்தப் பேருந்துகள் ஓடுவதற்கு அனுமதிக்கலாமா கூடாதா என்பதைப் பற்றி அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. இரவில் ஓடுவதைத் தடை செய்வதன் மூலம் அத்தகைய ஆம்னிபஸ்கள் கொடுக்கின்ற தொந்திரவுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கமுடியும் என்று கருதுகிறது. அதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதே நேரத்தில் அவர்களுக்கு இப்போது விதிக்கப்பட்டிருக்கின்ற 30 ரூபாயாக வரி என்பதை 100 ரூபாயாக ஆக்குவதற்கான உத்தேசம் இப்போது இருந்து வருகிறது.

அதற்கு அடுத்தபடியாக இங்கே பேசுகின்றபோது உறுப்பினர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். லாரிகள் மூலமும், பஸ்கள் மூலமும் விபத்துக்கள் அதிகம் ஏற்படுகின்றன என்று சொன்னார்கள். விபத்துக்கள் என்பது ஏதோ நம்முடைய நாட்டுக்கு மட்டும் உள்ள பிரச்னையல்ல. உலகத்திலே, இன்னும் சொல்லப்போனால் மிக வளர்ந்து, நாகரிகத்திலே மேம்பட்ட நாடுகளிலேகூட இந்த விபத்துக்களைப் பொறுத்த வரையில் என்ன செய்வது, அவற்றை எப்படி தடுப்பது என்று பல்வேறு திட்டங்களையெல்லாம் கையாண்டு வருகிறார்கள். ஆனால் நமது நாட்டைப் பொறுத்த வரையில் இன்னும் கைவண்டி இழுக்கின்ற நிலைமைகளும், சைக்கிள் ரிக்ஷா போன்று மெதுவாகச் செல்லுகின்ற வாகனங்கள் இருப்பதாலும், அதேபோன்று பாதை ரூல்கள். பாதை நடைமுறைகளை தெரிந்து கொள்ளாத பயணிகள் இருக்கின்ற காரணத்தாலும், நடைபாதையில் செல்லுகிற போதும், பாதையின் குறுக்கே செல்லுகின்றபோதும் அத்தகைய விபத்துக்கள் ஏற்படுகின்றன. ஆனால் ஒன்றுமட்டும் சொல்லுவேன். விபத்துக்களைத் தடுக்க இந்த அரசு தீவிரமாக நடவடிக்கை எடுக்கும் என்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

விபத்துக்களை யாரும் வேண்டுமென்றே செய்வதில்லை. கார்களை ஓட்டுகின்ற டிரைவர் ஆனாலும் சரி, சாலையைக் கடக்கின்ற பயணிகளானாலும் சரி, விபத்துக்கள் வேண்டும் என்று செய்வதல்ல. 'Accident is not uncommon அவைகளை தடுக்கவேண்டும் என்பதில் இரண்டுவித அபிப்பிராயங்கள் கிடையாது. அரசு பேருந்துகள் மூலம்தான் விபத்துக்கள் அதிகமாகின்றன என்பதல்ல. அரசுப் போக்குவரத்து அதிகமாக ஓடுவது சென்னை மாநகரத்தில், சென்னையில்தான் போக்குவரத்து நெரிசல் இருக்கின்ற இடம். ஆகையால் நகரம் என்ற அமைப்பின் காரணமாகவும், பல்வேறு போக்குவரத்து வசதிகளை நாம் இங்கே நடத்து



1971 ஜூலை 21] [திரு. ச. இராமச்சந்திரன்]

கின்ற காரணத்தாலும்தான், இங்கே இந்தப் பகுதியைப் பொறுத்த வரையில் விபத்துக்கள் அப்படி அதிகமாகத் தெரிகின்றனவே ஒழிய வேறல்ல என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். முதல் தடுப்பு நடவடிக்கையாகத் தான் நாம் 50 இடங்களை பேருந்துகள் கட்டாயமாக நிற்கவேண்டிய இடங்களாக (கம்பல்சரி ஸ்டாப்களாக) தேர்ந்தெடுத்து, அவைகள் கம்பல்சரி ஸ்டாப்புகள் என்று அறிவிக்கப்பட்டு, அந்த இடங்களில் முறையாக பேருந்துகளை நிறுத்தி பயணிகளை ஒழுங்காக ஏற்றிச் செல்லுகின்ற திட்டத்தை செயல்படுத்த இருக்கின்றோம் என்று ஏற்கனவே இந்த மன்றத்திற்குத் தெரிவித்திருக்கின்றேன்.

விபத்துக்கள் பொதுவாக எந்த வகைகளில், இடங்களில் அதிகமாக இருக்கின்றன என்று பார்த்தோமேயானால், பஸ்கள் மூலம் இருக்கிறது, லாரிகள் மூலம் இருக்கிறது, நடைபாதை பாதசாரிகள் மூலமும் இருக்கிறது. இந்த மூன்று வகையானவர்கள்தான் விபத்திற்கு காரணமாக இருக்கின்றார்கள். லாரிகள் இரவில் போகின்றபோது, இரண்டு டிரைவர்களை நியமிக்கலாமா என்ற யோசனையும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றது. ஏனென்றால் இரவில் கண்விழித்துச் செல்லுகின்ற காரணத்தாலும் இத்தகைய விபத்துக்கள் நடைபெறுகின்றன என்ற கருத்து நிலவி வருகிறது. அதையும் இப்போது நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான திட்டம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நமது நாட்டுடமையாக்கப்பட்டுள்ள அரசு பேருந்து போக்குவரத்தைப் பற்றி பல உறுப்பினர்கள் பலவாறு எடுத்துச் சொன்னார்கள். நான் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புவதெல்லாம், இதை வெறும் லாப நஷ்ட கணக்காக ஆக்கிவிடக் கூடாது என்பதுதான். இந்த அரசு பயணிகள் பேருந்து போக்குவரத்துத் துறையை எடுத்துக்கொள்ளுகிறபோது அதில் நாம் கடைபிடிக்கவேண்டியது, பயணிகளுக்கு எந்த அளவிற்கு பயனளிக்கக் கூடியதாக இருக்கிறது என்பதுதான். ஆகையால் இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் பேருந்துகள் முறையாக, ஒழுங்காக நல்லமுறையில் ஓடுவதற்கான ஒரு திட்டத்தை முதற்திட்டமாகக் கொண்டிருக்கிறது.

அதற்கு அடுத்தபடியாக நாம் இன்றைய தினம் தொழிலாளர்களிடையே, நிர்வாகத்தினரிடையே நல்லுறவை ஏற்படுத்துவதன் மூலம், பொதுமக்களுக்கு எந்த விதமான சங்கடமும் இல்லாமல், வீண் விரோதங்கள் இல்லாமல் நல்லுறவை ஏற்படுத்துவதன் மூலம் தான் தொடர்ந்து இந்த வசதியை பொதுமக்களுக்குத் தர முடியும். மூன்றாவதாகத்தான் லாப நஷ்டக் கணக்கை என்னைப் பொறுத்தவரையில் பார்க்கத் தயாராயிருக்கிறேன். முதலில் பயணிகளுக்கு வசதி. இரண்டாவது நாட்டுடமையாக்கப்பட்டுள்ள தொழில் நிறுவனத்தில் தொழிலாளர்கள் நல்ல வசதியோடு

[திரு. ச. இராமச்சந்திரன்] [1971 ஜூலை 21

வாழ்ந்து அவர்கள் மக்களுக்கு வசதி செய்வது. கடைசியாகத் தான் லாப நஷ்டக் கணக்கை வைத்துக்கொள்ளவேண்டும். இது தான் நமக்கும் முதலாளித்துவ சக்திகளுக்கும் இருக்கின்ற வேறுபாடு. லாப நஷ்டத்தை அவர்கள் முதலில் வைத்து காரியம் ஆற்றுவார்கள். ஆனால் மக்கள் நலன் முதலிலும், தொழிலாளர் நலன் இரண்டாவதாகவும் கடைசியாக லாப நஷ்டக் கணக்கையும் நாம் வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. லாப நஷ்டத்தைப் பற்றி இங்கே முதலில் நான் பேசிவிடலாம் என்று கருதுகிறேன்.

லாப நஷ்டத்தைப் பற்றி ஒவ்வொரு சட்டமன்ற கூட்டத் தொடரிலும் கேள்வி எழுப்பப்பட்டு, அதற்குத் தக்க விளக்கங்களும் அவ்வப்போது அளிக்கப்பட்டு வந்தாலும், நஷ்டம் வருகிறது, நஷ்டம் வருகிறது என்று அடிக்கடி திரும்பத் திரும்பச் சொல்லப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் இன்றைய தினம் சுதந்திராக் கட்சி உறுப்பினர் அவர்கள் பேசும்போது ஆதாரங்களை எல்லாம் எடுத்துச் சொல்லி, இப்படியெல்லாம் நஷ்டம் வருகிறது, மற்ற நாடுகளில் எல்லாம் எவ்வளவு வருவாய் வருகிறது என்ற புள்ளிவிவரங்களை எடுத்துச் சொன்னார்கள். அது ஓரளவுக்கு எனக்கு பயன்தரும் வகையில் அமைந்திருப்பதால் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அவர்கள் இங்கே பேசுகின்றபோது தமிழ்நாடு, ஆந்திரா, மைசூர் போன்ற மாநிலங்களைப் பற்றிய விவரங்களை எடுத்துச் சொன்னார்கள். நானும் அந்தக் கணக்கை அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றேன். "Kilometre-run per bus" ஒரு பஸ் எவ்வளவு கிலோ மீட்டர் ஓடுகிறது என்ற கணக்கை எடுத்தால் :

| | |
|---|---|
| தமிழ்நாடு | 94 |
| ஆந்திரா | 87 |
| மைசூர் | 80 |

Administrative Expenditure per bus operation cost.

| | |
|---|---|
| தமிழ்நாடு | 02 |
| ஆந்திரா | 03 |
| மைசூர் | 02 |

Earning per passenger.

| | |
|---|---|
| தமிழ்நாடு | 35.63 பைசா |
| ஆந்திரா | 68.85 பைசா |
| மைசூர் | 70.50 பைசா |

நமது பஸ்கள் ஓடுவது அதிகம். ஆனால் சம்பாதிப்பது குறைவு. அதற்கு காரணம் என்னவென்றால் ஒரு கிலோமீட்டருக்கு தமிழ்நாட்டில் கட்டணம் 2½ பைசா. ஆந்திராவில் 3.12 பைசா; மைசூரில் 5 பைசா. ஆகையால் அவர்கள் எடுத்துச்சொன்ன புள்ளிவிவரங்கள் நம்முடைய நஷ்டத்தை சரிக்கட்டுவதற்கு இனி மேலாவது உதவும் என்ற கருத்தில் நான் வரவேற்கக் காத்துக் கொண்டிருக்கிறேன்.



1971 ஜூலை 21] [திரு. ச. இராமச்சந்திரன்]

ஆனால் நம்முடைய மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் பொன்னப்ப நாடார் அவர்கள் பேசும்போது எங்கே கட்டணத்தை உயர்த்தி விடுவார்களோ என்ற முறையில் பேசினார்கள். ஆனால் நஷ்டத்தைத் தவிர்க்கவேண்டும் என்றும் சொன்னார்கள். 1964 லிருந்து கட்டணம் மாற்றப்படவில்லை. அதுமட்டுமல்ல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தபோது நெடுந்தூர பேருந்துகளின் கட்டணத்தை 6 பைசாவிலிருந்து 5 பைசாவாக குறைத்திருக்கிறார்கள். இப்படியெல்லாம் பொதுமக்களுக்கு நன்மை செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கனவே கிலோ மீட்டருக்கு 3 பைசா வரையில் வைத்துக்கொள்ளலாம் என்று அரசு உத்தரவு இருக்கிறது. அதற்கு 2½ பைசா சில இடங்களில் வசூலிக்கிறார்கள். இன்னும் சில இடங்களில் 2 பைசா வசூலிக்கிறார்கள். ஏனென்றால் அவர்களுக்குள்ளே ஒரு போட்டி வந்திருக்கிறது. இப்படி தற்கொலை போட்டியுள்ளதைத் தடுக்க 3 பைசா என்று ஆக்கலாம் என்று அரசு பரிசீலனையில் வைத்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இதனால் அரசுப் போக்குவரத்துக்கு லாபம் வந்துவிடும் என்று கருதத் தேவையில்லை. அரசு போக்குவரத்துத் துறையில் 1,600 பஸ்கள் டவுன் சர்வீஸ்களாக ஓடிக்கொண்டிருக்கின்றன. ஆகையால் அவர்களுக்குள் இருக்கின்ற 'கட்துரோட்' காம்பெடிஷனை ( cut-throat competition குறைக்க 3 பைசாவாகப் போடுவது என்று அரசாங்கம் ஆலோசனை செய்துகொண்டிருக்கிறது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆகையால் லாப நஷ்டத்தை மட்டும் இதில் பார்ப்பதற்குப் பதிலாக, இதனால் எவ்வளவு சலுகைகள், வசதிகள் சமுதாயத்திற்கு கிடைக்கின்றன என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். இந்தத் துறையைப் பொறுத்தவரையில் நஷ்டத்தில் தான் இயங்கவேண்டும் என்ற கருத்தில் இயங்கவில்லை. லாபத்துக்கு நடத்த வேண்டிய சூழ்நிலையை உருவாக்குவதை லட்சியமாகக் கொண்டு அதற்காக நம்மால் இயன்ற காரியங்களைச் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்னொன்றையும் அவர்கள் சொன்னார்கள். இந்த அமைப்பைப் பொறுத்த வரையில் தனி வாரியம் வைத்துக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். தனி வாரியமமைப்பது என்பது யாருக்காவது பதவி கொடுப்பதற்காக வைத்துக் கொள்ளக்கூடாது என்று சொன்னார்கள். காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் எதைப் பார்த்தாலும் அரசியலாகத் தெரிகிறது. அதற்குக் காரணம் 100-க்கு 99 பேர் குறிப்பிட்ட கட்சியினை, முற்போக்கு அணியினை ஆதரிக்கின்ற காலமாக இருப்பதால், நல்லவர்களை, திறமையாளர்களைப் போடுகிறபோது, அந்த இயக்கத்தின் சார்பாக இருக்கிறவர்கள் வந்தால் என்ன செய்வது ? 100-க்கு ஒருவரை வைத்துக்கொண்டு போடவில்லையே என்று வருத்தப்படுவதில் பயனில்லை. ஆனால் இந்த வாரியம் அமைக்கும் யோசனை எந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது என்பதனை கவனத்தில்

வைத்துக்கொள்ளவேண்டும். நகரத்தில் ஓடுகின்ற பேருந்துகள் இருக்கின்றனவே அவை ஒரு தனி அமைப்பு. ஒரு நாளைக்கு 200 கிலோமீட்டர் என்ற அளவில் ஓட்ட முடியாது. ஒரு இடத்திற்கும் இன்னொரு இடத்திற்கும் இடையில் உள்ளது 12 கிலோ மீட்டர் என்றால் எட்டு ட்ரிப் என்றால் ஒரு நாளைக்கு 96 கிலோ மீட்டர்தான் ஆப்பரேட் செய்ய முடியும்.

எக்ஸ்பிரஸ் பஸ் என்பது ஒரு தனி அமைப்பு: இதைப்போலவே ஜில்லா ரூட் ஒரு தனி அமைப்பு. எக்ஸ்பிரஸ் பஸ்களுக்குத் தனி வாரியம் இல்லை என்றாலும் தனியே இயங்கக்கூடிய பங்ஷனல் ஆர்கானிசேஷன் ஒன்று, அதுபோலவே டிஸ்ட்ரிக்ட் ரூட்களுக்கு தனியே இயங்கக்கூடிய பங்ஷனல் ஆர்கானிசேஷன் அமைத்து சிடி ரூட் சம்பந்தப்பட்டவரை—போக்குவரத்து வாரியம் என்றே அமைக்கலாம் என்பது ஆலோசிக்கப்படுகிறது. இந்த வாரியம் அமைப்பதே business flescilility என்று சொல்வார்களே அதற்கு மிகவும் பயனுடையதாக இருக்கும் என்பதாக அரசு பரிசீலனை செய்து வருகிறது.

தொழிலாளர்களைப்பற்றிப் பேசும்போது திரு. சுப்பிரமணியம் அவர்கள் கூடக் குறிப்பிட்டார்கள். ஆணா, பெண்ணா, என்.ஜி.ஓ'வா, தொழிலாளர்களா என்று தெரியாத நிலைமை என்றார்கள். அது ஓரளவுக்கு உண்மை. மின்சாரவாரியத்தில் ஒருகாலத்தில் இருந்தது. அவர்கள் எல்லோரும் உழைக்கவும், உழைப்பின் பயனை தொழிலாளர்கள் பெறவும் வாரியம் என்று ஏற்படுத்தினால் நல்ல பலன் கிடைக்கும் என்று அரசு கருதுகிறது. போர்ட் ஆப் டைரெக்டர்ஸ் என்கிறபோது தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தில் பங்கு தரப்படவேண்டும் என்று சொன்னார்கள். அந்த ஆலோசனையை அரசு கட்டாயம் கவனிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவேதான் இத்தகைய வாரியம் அமைந்தால் உண்மையில் நல்லமுறையில் செயல்பட வாய்ப்பு ஏற்படும்.

துரித வண்டிகளைப் பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். நான் பொறுப்பேற்றவுடன் இத்துறையில்தான் அதிக கவனம் செலுத்தினேன். அதன் காரணமாகவும், தொழிலாளர்களின் ஒத்துழைப்பு காரணமாகவும் இன்றையதினம் மாதம் ஒன்றுக்கு 2 லட்சம் ரூபாயை இத்துறை அதிகப்படுத்திக் காட்டியிருக்கிறது. அந்தமுறையில் வண்டிகள் நன்றாக ஓடிக்கொண்டிருக்கின்றன. தினசரி ரூட்டில் ஓடுகிற வண்டிகள், ப்ரேக் டவுன் ஆன வண்டிகள், ஷெட்டில் இருக்கக்கூடிய வண்டிகள் ஆகியவை பற்றி எல்லாம் கணக்கு ஒவ்வொரு நாளும் எனக்கு வந்துகொண்டு இருக்கிறது. துரித வண்டிகளைப் பொறுத்தவரை ஷெட்யூல் கிலோமீட்டர் 87% 88%, ஆவது இருக்க வேண்டுமென்று திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள். நான் பெருமையோடு இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றையதினம் ஷெட்யூல் கிலோமீட்டர் 99.5 சதவிகிதம் ஆக ஓடிக்கொண்டிருக்கிறது.



அடுத்து, மாவட்ட வழித்தடங்களுக்கு வருகிறபோது கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் குறிப்பிட்டதைப்போல தனியார் பேருந்துகளின் தொந்தரவு இருந்துகொண்டுதான் இருக்கிறது. நம்முடைய தொழிலாளர்கள் வருமானத்தை அதிகப்படுத்தவேண்டுமென்று கொஞ்சம் முயன்றால் கூட ஆட்களை வைத்து அடித்துப்போடுகிற நிலையில்தான் இருக்கிறது. அதுபோல இரண்டு மூன்று இடங்களில் நடந்து இருக்கின்றது. தனியார்களோடு போட்டி போடுவது மிகவும் கஷ்டமான காரியம். அதற்காகத்தான் டைமிங் கான்பரன்சில் நம்முடைய வட்டார ஜாயின்ட் டைரெக்டர் பார்த்து அரசாங்க பஸ்களுக்கு பாதுகாப்பு அளிக்க தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று ஆணையும் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இனிமேல் அதிக சங்கடங்கள் வராது என்று நினைக்கிறேன். தனியார்களும் உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்து அவர்களும் ஓட்டுவதற்கு அனுமதி பெற்றிருக்கிறார்கள். எந்த எந்த நேரங்களில் வசூல் நன்றாக இருக்கும் என்பதை எல்லாம் பார்த்து டைமிங் கான்பரன்சில் நமக்கு பாதுகாப்பு ஏற்படுத்திக்கொள்ள ஆவன செய்யப்படும்.

அடுத்து சிடி சர்வீசை எடுத்துக்கொண்டால் மாண்புமிகு ஹாண்டே அவர்கள் வெகுவேகமாக எடுத்துச்சொன்னார்கள். இந்த சிடி சர்வீசையும் மூன்று வகையாகப் பார்க்கவேண்டும். சிடியில் ஓடுகிற பஸ்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவேண்டும் என்றார்கள். பம்பாய், டெல்லி, போன்ற நகரங்களின் ஜனத்தொகையோடு ஒப்பிடுகிறபோது அங்கே இருக்கிற பஸ்கள் குறைவுதான். ஆனால் நம்மிடத்தில் இப்போதே பஸ்கள் அதிகமாக இருக்கின்றன. பஸ்களின் எண்ணிக்கையைக் கூட்ட வேண்டுமென்பதில்லை.

ஆகவே நம்முடைய நகரத்தின் நெரிசல் பற்றி நன்றாக சர்வே செய்து எந்த எந்த வகையில் எந்த எந்த நேரங்களில் எந்த எந்தப் பகுதிகளில் பஸ்கள் போகவேண்டும் என்பதை எல்லாம் விரிவாக ஆராய்ந்து டைமிங்ஸ் போட்டு பஸ்களை விட்டாலே போதும். இவ்வளவு பஸ்கள் கூட வேண்டாம். இதற்காகத்தான் ஹெட் ஆப் டிபார்ட்மெண்டு ஆப் டிராபிக் என்ஜினியரிங்—திரு அய்யாசாமி அவர்களை இதுபற்றி விரிவாக சர்வே செய்து கொடுக்குமாறு கேட்டிருக்கிறோம். சில நேரங்களில் ஒரு பகுதியில் நெரிசல் வரும்—இன்னொரு பகுதியில் இருக்காது. ஆகவே விஞ்ஞான அடிப்படையில் முழு அளவில் விரிவாக இதைச் சர்வே செய்து—எத்தனை பஸ்கள் வைத்துக்கொண்டால் போதும் என்பதைக் கூட முடிவு செய்துவிடலாம்.

உதாரணமாக மதுரையில் 5 லட்சம் ஜனத்தொகை இருக்கிறது. அங்கே 108 பஸ்கள் தான் இருக்கின்றன. அந்த அடிப்படையில் 28 லட்சம் ஜனத்தொகை கொண்ட சென்னைக்கு 500 பஸ்கள் இருந்தால் போதும். ஆனால் ஆயிரம் பஸ்கள் வைத்துக் கொண்டிருக்கிறோம்.

ஆகவே சிடி சர்வீசைப் பொறுத்தவரை ஒன்று டெக்னிகல், இரண்டு டிராபிக், மூன்று ஸ்டோர்ஸ் ஆர்கனிசேஷன் ஆகிய இந்த மூன்றையும் நாம் சீரமைத்துக்கொண்டால் போதும்.

டெக்னிகல் ஆர்கனைசேஷன் பற்றித்தான் லேலாண்டு என்ஜினியர் ஜூலை மாதம் முதற்கொண்டு ஆராய்ந்துகொண்டிருக்கிறார்கள். ஒரு டெப்போவுக்கு 100 வண்டி. அதை நான்காகப் பிரித்து 25 வண்டி ஒரு பிரிவு, பத்து வண்டிக்கு ஒரு க்ரூப் என்பதாக அமைத்து எல்லா நடவடிக்கையும் எடுக்க முயற்சிக்கப்படுகிறது. உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல டெப்போக்கள் சீர்திருத்த திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

அடுத்து ஆப்டிமம் யுடிலிசைசேஷன் வேண்டுமென்றால் தேவையான பஸ்களை வைத்துக்கொண்டு அவற்றினால் முழுப்பயனைப் பெறக்கூடிய அளவுக்கு முயற்சி செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் ப்ரொபசர் அய்யாசாமி அவர்களை நியமித்திருக்கிறோம். அவரது தலைமையில் அமைந்துள்ள குழு நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது.

ஸ்பேர் பார்ட்ஸ் பற்றி திரு. சுப்பிரமணியம் அவர்கள் கூடச் சொன்னார்கள். சென்னையில் இருந்து வாங்கி கன்னியாகுமரி கொண்டுசெல்ல செலவு அதிகமாகிறது என்பதாக. இங்கே வாங்கி நாம் கொண்டுபோகவேண்டும், நம் செலவில் என்பது கூட இல்லை. நாம் பர்சேஸ் ஆர்டர் கொடுக்கிறபோதே கன்னியாகுமரியில் டெலிவரி செய்யவேண்டும், கோயம்புத்தூரில் டெலிவரி செய்ய வேண்டும் என்று ஆர்டர் போடுகிற வழக்கம் உண்டு. ஆகவேதான் இதுபற்றி எல்லாம் பரிசீலனை செய்ய இப்கான் [IBCON] ஏஜென்சியை அமைத்தோம். அவர்களும் ஏற்கனவேயே இது பற்றி ஆராய்ந்து ரிப்போர்ட் கொடுத்துவிட்டார்கள். அதை அரசு பரிசீலனை செய்கிறது.

இப்படி டெக்னிகல் பகுதி, டிராபிக் பகுதி, ஸ்டோர்ஸ் ஆர்கனைசேஷன் ஆகிய மூன்றையும் நாம் செம்மைப்படுத்திக்கொண்டுவிட்டால் எந்தவிதமான குந்தகமும் வராது என்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

நிறைய சிங்கிள் லாஸ் ஆகிறது என்று சொன்னார்கள். டிராபிக் சைடில் சிங்கிள் லாஸ் ஜீரோ. டெக்னிகல் சைடில் இருக்கிறது. அதைக் குறைப்பதற்கான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கண்டம்டு பஸ் என்பதாக 9 பஸ்கள் எங்கோ ஏலம் விடப்பட்டதாகச் சொன்னார்கள். அது எங்கே என்கிற விவரங்களைக் கொடுத்தால் நல்லது. காரணம் இதுபோல ஆக்ஷன் போடக்கூடாது என்று உத்தரவிட்டு கிட்டத்தட்ட 200 பஸ்கள் இருக்கின்றன. நம்மிடம் இந்த பஸ்களை வாங்கிப்போய் தனியார் ரிப்பேர் செய்து ரோடில்





போகவிடுகிற போது அந்தக் காரியத்தை நாமே ஏன் செய்யக் கூடாது என்பதற்காக ஒரு தனிடிவிஷனை ஏற்படுத்தப்பட்டு இந்த வண்டிகள் இப்போது புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. எட்டு வண்டிகள் இன்றையதினம் ரெடியாக முடிந்துகொண்டிருக்கின்றன என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகையினாலே 9 வண்டிகள் பிரச்னைக்கு—எங்கேயோ ஏலம் போட்டார்கள், எங்கேயோ எடுத்துச் சென்றார்கள் என்பதற்கு—இடமில்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அளவிற்கு நல்ல முறையில் இந்த இலாகா இயங்க ஆரம்பித்திருக்கிற காரணத்தால் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் விட்டுக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மானியத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கூறி உரையை முடித்துக்கொள்கிறேன். பி.ப. 2–00

DR. H.V HANDE: The Hon. Minister was saying that bus transport runs in a loss. It is a serious thing. I would like to know whether he is not concerned about the loss. When we speak of loss, the Hon. Minister points to convenience to passengers. When we point out lack of convenience to passengers, he gets into the question of loss. What is the policy of Government? I want the Hon. Minister to tell us clearly and also whether he had taken steps to minimise the loss? Even in socialist countries, profit motive in public concern is one of the principles accepted. He says that Madurai transport is functioning well. If that is the case, why is not the City fleet running profitably? Will the Hon. Minister explain? I never mentioned that rates should be increased. In fact it should be cut down. Let me make it clear.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே தெரிவித்துள்ளபடி இந்த அரசு முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறது. முதலாவது, மக்களின் நலன், அதாவது தொடர்ந்து பயணிகளின் வசதிகளும், பயணிகள் போய்ச் சேர வேண்டிய இடத்திற்கு உரிய நேரத்தில் அவர்களைக் கொண்டுபோய் சேர்ப்பது. இரண்டாவது, தொழிலாளர் உறவு நல்ல முறையில் உருவாகுமானால் அந்த வசதி எளிதில் தொடர்ந்து கிடைக்கும். மூன்றாவதாக, இந்த இரண்டு நடைமுறைக்கு வந்துவிட்டால் மூன்றாவது தானாகவே வந்துவிடும்

**திரு. நா. வீராசாமி:** ஆன் எ பாயிண்ட் ஆப் க்ளாரிபிகேஷன் சார், அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிய நேரத்தில் பழுதான பஸ்களையெல்லாம் ரிப்பேர் செய்து, அரசாங்கமே விடுவதாகச் சொன்னார்கள். அப்படி பழுதான பஸ்களை ரிப்பேர் செய்யும் செலவு, புதிய பஸ்களை வாங்குவதற்கான செலவை விட அதிகமாகுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, பழுதான பஸ்களை ரிப்பேர் செய்வதற்கு ஒரு எஸ்டிமேட் தயார் செய்து, அது புதிய பஸ் வாங்கும் அளவிற்கு அதிகமானால், ரிப்பேர்

[திரு. ச. இராமச்சந்திரன்] [1971 ஜூலை 21

செய்வதில் பயன் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் கூறிய யோசனை கவனத்தில் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** விவாதம் இத்துடன் முடிவடைந்தது. இப்பொழுது வாக்கெடுப்பு.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஏ. சுவாமிதாஸ், திரு. க. சுப்பு, டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. கே. என். குமாரசாமி ஆகியோர் கோரிக்கை 2-க்கு கொடுத்திருந்த தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தாமையினால், அவ்வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

MR. DEPUTY SPEAKER : The question is :—

" That the Government be granted a sum not exceeding Rs. 52,12,900 under Demand No. 2. Motor Vehicles Acts—Administration. "

The Demand was put and carried and the Grant was made.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜே. ஜேம்ஸ், திரு. கே. டி. கே. தங்கமணி, டாக்டர் ஹாண்டே, திரு ஏ சுப்பிரமணியம் ஆகியோர் கோரிக்கை 30-க்கு கொடுத்திருந்த தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தாமையினால், அவ்வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

MR. DEPUTY SPEAKER : The question is—

" That Government be granted a sum not exceeding Rs. 21,56,95,300 under Demand No. 30—Road Transport Schemes ".

The Demand was put and carried and the Grant was made.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆர். பொன்னப்ப நாடார், டாக்டர் ஹாண்டே; திரு. ஏ. சுப்பிரமணியம் ஆகியோர் கோரிக்கை 43-க்கு கொடுத்திருந்த தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தாமையினால், அவ்வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

MR. DEPUTY SPEAKER : The question is :—

" That the Government be granted a sum not exceeding Rs. 3,52,21,000 under Demand No. 43—Capital Outlay on Road Transport Schemes ".

The Demand was put and carried and the Grant was made.

பி.ப. 2-05 **மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் நாளை காலை 9 மணிக்குக் கூடும். வணக்கம்.

**பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.**



### (5) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

169. Notification issued with G.O. Ms. No. 975, Agriculture, dated the 23rd March 1971, in regard to establishment of regulated markets in certain places in Dharmapuri district. [Laid on the Table of the House under section 29(4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

170. Notification issued with G.O. Rt. No. 1113, Revenue, dated the 22nd June 1971, in regard to exemption from liability to entertainments tax to the cinematograph film show organised by the Chairman, Annual Charity Drive British Women's Association, Madras [Laid on the Table of the House under section 16(4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

171. Notification issued with G.O. Ms. No. 1608, Revenue, dated the 29th May 1971, in regard to exemption from liability to all Cinema shows conducted in the City of Madras and in the Districts in aid of Beggar Rehabilitation Fund [Laid on the Table of the Hose under section 16(4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

### *B. Reports, Notifications and other Papers.*

@148. Brief on the Cauvery Water Dispute (Tamil).

£149. Speech of Hon. Thiru Si. Pa. Aditanar, Minister for Co-operation, on Demand No. 19—Co-operation (1971-72) (English and Tamil).

---

@ Despatched to Members on 19th July 1971.

£ Laid on the Table of the House on 20th July 1971.

## இணைப்பு 1.

[522-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

**"மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம் குறித்த மானியக் கோரிக்கைபற்றி போக்குவரத்து அமைச்சர் மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் அவர்கள் ஆற்றும் உரை.**

மாண்புமிகு சட்டமன்றப் பேரவை தலைவர் அவர்களே!

"கோரிக்கை எண். 2—மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம்" என்பதன்கீழ் ரூ. 52,12,900 மானியம் இவ்வரசுக்கு வழங்கப்படவேண்டுமென்று முன்மொழிய அனுமதி வேண்டுகிறேன்.

### போக்குவரத்துத் துறையின் அமைப்பு.

கீழ்க்காணும் சட்டங்களின் விதித்துறைகளையும் அதன்கீழ்ச் செய்யப்பட்ட விதிகளையும் செயல்படுத்துவது இத்துறையின் முக்கியப் பணியாகும் :—

(1) மோட்டார் வண்டிகள் சட்டம், 1939.

(2) தமிழ் நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டம், 1931.

(3) தமிழ் நாடு மோட்டார் வண்டிகள் (பயணிகள்-சரக்குகள் வரி விதிப்பு) சட்டம், 1952.

### அனுமதிச் சீட்டுகள் வழங்குதல்.

பேருந்துப் போக்குவரத்து வசதிகளின் மேம்பாடு கீழ்க்காணும் வழி முறைகளில் எய்தப்படுகிறது :—

(1) புதிய வழித்தடங்களுக்கு அனுமதிச்சீட்டுகள் வழங்குதல், தற்போதுள்ள வழித்தடங்களில் கூடுதலான பேருந்துகளுக்கு அனுமதிச் சீட்டுகள் வழங்குதல்மூலம் வண்டிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தல் ;

(2) பேருந்துகளின் பயணத் தடவைகளின் எண்ணிக்கையை அதிகரித்தலும், தற்போதுள்ள வழித்தடங்களை நீட்டித்தலும்.

(3) தற்போதுள்ள வண்டிகளுக்குப் பதிலாக இருக்கைகள் அதிகமாக உள்ள பெரிய வண்டிகளை விடுவதன்மூலம் இருக்கைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல். இம்மாநிலத்தில், பேருந்துகளுக்குப் புதிய அனுமதிச்சீட்டுகள் வழங்குவதில் தாராளமான கொள்கையைக் கடைப்பிடிக்குமாறு எல்லா வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளுக்கும் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.



### நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து.

நாட்டுடைமை ஆக்கும் கொள்கையில் மாறுதல் ஏதும் இல்லை. அது கீழ்க்கண்ட வகையைச் சேர்ந்த வழித்தடங்களுக்குப் பொருந்தும் :—

(1) 75 மைல்களும் அதற்கு மேலுள்ள சாதாரணப் பேருந்துப் பணி—விரைவுப் பேருந்துப் பணிகளின் வழித்தடங்கள் அனைத்தும் ;

(2) எவ்வளவு தொலைவாக இருப்பினும், சென்னை மாநகரிலிருந்து தொடங்கும் அல்லது அங்கு முடிவடையும் வழித்தடங்கள் அனைத்தும்;

(3) கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து தொடங்கும் அல்லது அங்கு முடிவடையும் வழித்தடங்கள் உட்பட கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள வழித்தடங்கள் அனைத்தும்.

இக் கொள்கை படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. இவ் வழித் தடங்களில் தனியார் பேருந்து உரிமையாளர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள உரிமங்களின் செல்திறன் கால அளவு முடிவடையும்போது (இரு மாநிலங்களுக்கிடையிலான வழித் தடங்கள் உட்பட), இந்த வழித்தடங்கள் அரசால் மேற்கொள்ளப் படுகின்றன. இக் கொள்கை, செவ்வையாகவும், உரிய காலத்திலும் செயல்படுத்தப்படுவதற்காக, மோட்டார் வண்டிகள் சட்டத்தின் சில விதித் துறைகள் திருத்தப்பட்டுள்ளன.

### பேருந்துகள்.

பேருந்துகளுக்கு அனுமதிச்சீட்டுகள் வழங்குவதில் ஒரு சிலரிடமே உரிமைச்சீட்டுகள் குவியும் ஏகபோக உரிமையைத் (monopoly) தடுக்கும் நோக்கத்தோடு, தனியார் பேருந்து உரிமையாளர்கள் எத்தனை உரிமைச்சீட்டுகளை வைத்திருக்கலாம் என்பதற்கு மேல்வரம்பு விதிக்க அரசு முடிவு செய்துள்ளது. பினாமிதாரர்களுக்கு (benamidars) பேருந்து அனுமதிச்சீட்டுகள் வழங்குவதை மறுப்பதன்மூலம், பினாமிதாரர்கள் பேருந்து அனுமதிச்சீட்டு வைத்திருக்கும் பழக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதென அரசு முடிவு செய்துள்ளது.

மேலும், ஐம்பது அல்லது அதற்கு மேற்பட்ட பேருந்து உரிமங்களை வைத்துள்ள பேருந்து உரிமையாளர்கள் பயணிப் போக்குவரத்து நிறுவனங்கள் அனைத்தையும் பொது நலனை முன்னிட்டுக் கையகப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

### சரக்கு வண்டிகள்.

வளர்ந்துவரும் வர்த்தகத்திற்கும் வாணிபத்திற்கும் ஏற்ப வாடகை லாரிகளுக்கும், தனியார் லாரிகளுக்கும் மாநிலம் முழுவதிலும் அனுமதிச் சீட்டுகள் தாராளமாக வழங்கப்படுகின்றன. வாடகை லாரிகளைக் கொண்டுவந்து காண்பித்தவுடன், முறையான

அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படும் வரையில், அவற்றிற்கு, தற்காலிக அனுமதிச் சீட்டுகள் உடனடியாக வழங்கப்படுகின்றன. தென் மாநிலங்களில் சரக்கு வண்டிப் போக்குவரத்து தடையின்றி நடைபெற வகைசெய்யும் நோக்குடன், இம்மாநிலத்திலுள்ள லாரிகளுக்குப் பொது மாநில அனுமதிச் சீட்டுகள் (Composite permits) வழங்கப்படுகின்றன. இந்த அனுமதிச் சீட்டுகள் கேரளா, மைசூர், ஆந்திரப் பிரதேசம், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களிலும் செல்திறன் உள்ளவையாகும். இதற்கு மற்ற மாநிலங்களின் போக்குவரத்து அதிகாரிகள் மேலொப்பமிட வேண்டியதில்லை. அதுபோன்ற அனுமதிச்சீட்டுகள் வழங்கப்பட்ட வண்டிகளின் எண்ணிக்கை 200 ஆகும். பொது மாநில அனுமதிச் சீட்டை 200-லிருந்து 300-ஆக உயர்த்தும் செயற்குறிப்புக்கு தமிழ் நாடு லாரி உரிமையாளர்கள் சங்கம் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததால் அது தள்ளிவைக்கப்பட்டுள்ளது. அதிக அளவு சரக்குகளை ஏற்றிச் செல்வதற்கு சரக்கு வண்டிகளை அனுமதிக்கவேண்டுமென்ற கோரிக்கை நீடித்து வருவதால், 1970-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1-ம் நாளிலிருந்து சரக்கேற்றிய நிலையில் பேரளவு எடை 12,192 கிலோ கிராமிலிருந்து 15,240 கிலோ கிராமாக அல்லது வண்டியின் பதிவு செய்யப்பட்ட எடை, இவற்றில் எது குறைந்த எடையோ அந்த எடை அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது.

ஒப்பந்த வண்டிகள்.

வாடகைக் கார்கள், சுற்றுலா வாடகைக்கார்கள் ஆகியவற்றிற்கு அனுமதிச்சீட்டுகள் தாராளமாக வழங்கப்படுகின்றன. ஆட்டோ ரிக்ஷாக்கள், சிறிய, நடுத்தர வாடகைக் கார்கள் ஆகியவற்றில் கட்டண வீதங்களை 1971-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 12-ம் நாள் முதல் அரசு திருத்தியமைத்துள்ளது.

தனிப்பட்ட சீர்வசதிப் பேருந்துகள்.

1969-ம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ம் நாள்வரை, இருக்கை ஒன்றுக்கு, காலாண்டிற்குத் தனிப்பட்ட சீர்வசதிப் பேருந்துகளுக்கான வரி வீதம் ரூ. 30-ஆக இருந்தது. 1969-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1-ம் நாளிலிருந்து, இருக்கை ஒன்றுக்கு, காலாண்டிற்கு ரூ. 50-ஆக இந்த வரி வீதம் உயர்த்தப்பட்டது. முறையான பேருந்துகளுக்கும் தனிப்பட்ட சீர்வசதிப் பேருந்துகளுக்கும், இடையே வேண்டாத போட்டியைத் தவிர்க்கும்பொருட்டும், தனிப்பட்ட சீர்வசதிப் பேருந்துகள் தவறாகப் பயன்படுவதை நிறுத்தவும், தனிப்பட்ட சீர்வசதிப் பேருந்துகளின் வரி வீதம், 1970-ல் காலாண்டு ஒன்றுக்கு இருக்கை ஒன்றுக்கு ரூ. 100-ஆக உயர்த்தப் பட்டது. தனிப்பட்ட சீர்வசதிப் பேருந்துகள் உரிமையாளர்கள் ரிட் மனு ஒன்றைத் தாக்கல் செய்ததன்மேல், இந்த வரி வீதம் செல்லாதென உயர்நீதி மன்றம் குறிப்பிட்டு, தனிப்பட்ட சீர்வசதிப் பேருந்துகளுக்கு, காலாண்டிற்கு, இருக்கை ஒன்றுக்கு, ரூ. 30 என்றும், பழைய வரியையே வசூலிக்க வேண்டும் என்றும் ஆணை பிறப்பித்தது. இதுகுறித்து, தலைமை நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்வதென அரசு முடிவு செய்துள்ளது.





வருவாய்.

1970-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாளிலிருந்து 1971-ம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31-ஆம் நாள்வரை ரூ. 21.81 கோடி வருவாய் கிடைத்தது. முந்தைய ஆண்டில் (1969-70) இந்த வருவாய் ரூ. 19.46 கோடியாக இருந்தது.

பொது.

அண்மை ஆண்டுகளில் போக்குவரத்துத் துறையில் சீரான முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. சட்டமன்றப் பேரவையில் நடக்கும் இவ்விவாதத்தின்போது, போக்குவரத்து ஒழுங்குமுறைகளையும், போக்குவரத்து வசதிகளையும் மேம்படுத்தும் வகையில் தெரிவிக்கப்படும் கருத்துக்களை அரசு வரவேற்கும்.

## இணைப்பு 2.

[522-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

### தமிழ் நாடு அரசு போக்குவரத்து, 1970-71.

பொது.

1. தமிழ் நாடு அரசு போக்குவரத்து மக்கள் பணியில் 23 ஆண்டுகளைக் கழித்த பின்னர் 1970-ஆம் ஆண்டில் தனது பணியின் 24-வது ஆண்டில் அடியெடுத்து வைத்தது. உலகப் போருக்குப்பின் நாட்டினைச் சீர்படுத்துவதை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட மத்திய குழு பொதுப் போக்குவரத்து ஏற்பாடு அரசுக்குச் சொந்தமாகவும், அரசால் நிர்வகிக்கப்படுவதாகவும் இருக்க வேண்டுமென 1944 டிசம்பர் திங்களிலேயே பரிவுரை செய்தது. இப் பரிவுரையினையொட்டி தமிழ் நாட்டில் உள்ள பேருந்துப் போக்குவரத்தை நாட்டுடைமையாக்க வேண்டும் என்று 1946 டிசம்பரில் அரசு முடிவு செய்தது. 1947 மார்ச் திங்களிலேயே, சென்னை மாநகரில் அப்போதிருந்த 230 தனியார்ப் பேருந்துகட்குக் கூடுதலாக, 30 பேருந்துகளை விடுவதற்கு அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியது. நாட்டுடைமையாக்கும் திட்டம் 1947-ம் ஆண்டு அக்டோபரில் இறுதியாகச் செயலுக்கு கொணரப்பட்டு, ஒவ்வொரு திங்களிலும் கூடுதலான பேருந்துகள் விடப்பட்டன. தனியார் பேருந்து உரிமையாளர்கள் தங்களது பேருந்து போக்குவரத்துகளை நிறுத்திக்கொண்டு வந்தனர். படிப்படியாக 1948 ஜூலைத் திங்களில் சென்னை மாநகரில் உள்ள நகரப்பேருந்து போக்குவரத்து முழுவதும் நாட்டுடைமையாக்கப்பட்டது. மாநிலங்கள் மாற்றியமைக்கப்பட்டதின் விளைவாக கன்னியாகுமரி மாவட்டத்தில் முன்பே நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துப் பணிகள் 1956-ஆம் ஆண்டு இத்துறையின் கிளையாகச் சேர்க்கப்பட்டன.

2. முதல் நெடுந்தொலை கடுவிசைப் போக்குவரத்து சீர்வசதியுடன் 1959 ஆகஸ்டில் தொடங்கப்பட்டது. 120 மைலுக்கு மேற்பட்ட எல்லா வழித் தடங்களிலும் போக்குவரத்துக்

துறையின் விரைவுப் பேருந்துகளை விட வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் அது தொடங்கப்பட்டது. அவ்வப்போது நெடுந்தொலை வழித்தடங்கள் பல தொடங்கப்பட்டன. தற்போது இம்மாநிலத்தின் மாவட்டத் தலைமையிடங்கள் அனைத்தும் போக்குவரத்துத் துறையின் விரைவுப் பேருந்துப் போக்குவரத்துப் பணியினால் இணைக்கப்பட்டுள்ளன.

3. பயணிகள் பேருந்துப்போக்குவரத்தை படிப்படியாக நாட்டுடைமையாக்கும் நோக்கத்துடன் தனியார்ப் பேருந்து உரிமையாளர்களின் உரிமங்களின் செல்திறன் கால அளவு முடிவடைகையில், அவர்களது கீழ்க்கண்ட வகை வழித்தடங்களை நாட்டுடைமையாக்கி, தமிழ் நாடு அரசு போக்குவரத்துத் துறையின் பேருந்துகளை அவற்றில் ஓட்டுவதென 1967 ஜூன் திங்களில் அரசாங்கம் முடிவு செய்தது :—

(அ) 75 மைல்களும் அதற்கு மேற்பட்ட தொலைவும் உள்ள வழித்தடங்கள் அனைத்தும் சாதாரண, கடுவிரைவுப் போக்குவரத்துகள்;

(ஆ) சென்னை மாநகரிலிருந்து வெளிச் செல்கிற, சென்னை மாநகருக்குள் வந்து முடிவடைகிற வழித்தடங்கள் அனைத்தும் (அவற்றின் நீளம் என்னவாக இருப்பினும்);

(இ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள வழித்தடங்கள் அனைத்தும்—அந்த மாவட்டத்திலிருந்து வெளிச்செல்கிற, அதற்குள் வந்து முடிவடைகிற வழித்தடங்கள் உட்பட.

மேற்குறிப்பிட்ட வழித்தடங்களில் பேருந்து போக்குவரத்துப் பணியை மேம்படுத்தும் பணிகள் அனைத்தும் போக்குவரத்துத் துறையே மேற்கொள்ள வேண்டும் என்றும் அரசாங்கம் முடிவு செய்தது. தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு அளிக்கப் பட்டுள்ள அனுமதிச் சீட்டுக்களின் செல் திறன் கால அளவு முடிகையில் இந்த வழித்தடங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது கொள்கையாக இருக்கவேண்டும் என முடிவு செய்யப் பட்டது. மேற்குறிப்பிட்ட கொள்கையின்கீழ் மேற்கொள்ளப்பட்ட முதல் வழித்தடம் சென்னை—ஆரணி வழித்தடமாகும். 1967 ஆகஸ்ட் 1-ம் நாள் முதல் அதில் அரசு போக்குவரத்துப் துறைப் பேருந்துகள் ஓடுகின்றன. இக் கொள்கையையொட்டி 1970 மார்ச் 31-ம் நாளுக்குள் 419 பேருந்துப் பணிகள் அரசால் மேற்கொள்ளப் பட்டுள்ளன. 1970—71-ஆம் ஆண்டில் 54 பேருந்துப் பணிகள் நாட்டுடைமையாக்கப்பட்டன.

4 தொழில்துறை, மோட்டார் வண்டிகள் சட்டத்தின் 68-C பிரிவின் கீழ் வரைவுத் திட்டங்களை வெளியிட்டு வந்தது. மறுப்புக்களைக் கேட்ட பின்னர், அச்சட்டத்தின் 68-D பிரிவின்கீழ் இந்த வரைவுத் திட்டங்கள் உள்துறையால் இறுதி வடிவம் கொடுக்கப் படுகின்றன. 68-C பிரிவின்கீழ் திட்டங்களைத் தொடக்க நிலையில் வெளியிடும் அதிகாரங்களை அரசுப் போக்குவரத்து இயக்குநருக்கு அளித்து அரசு 1969 மே திங்களில் ஆணைகள் பிறப்பித்தது.





தற்சமயம் தனியார் பேருந்து உரிமையாளர்கள் மோட்டார் வண்டிகள் சட்டத்தின் அதிகாரம் VI A பாரபட்சம் உடையதென சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனுக்கள் போட்டிருக்கிறார்கள். இவைகளையும் சேர்த்து, பேருந்து வழித்தடங்களை நாட்டுடைமை யாக்குவதை எதிர்த்து இப்பொழுது 268 ரிட் மனுக்கள் உயர் நீதி மன்றத்தில் முடிவுறாது உள்ளன. நீதிமன்றம் பெரும்பாலான வழக்குகளில் வரைவுத் திட்டங்கள் அல்லது ஒப்பளிப்புத் திட்டங்களைத் தடுத்து வைத்துப் பேருந்துகளை இயக்கத் தற்காலிக அனுமதிச் சீட்டு தனியார் துறை உரிமையாளர்களுக்கு வழங்க உத்தரவு கொடுத்தது.

5. தனியார் துறைப் பேருந்துப் பணியாளர்; அரசு அந்தந்த வழித்தடங்களை மேற்கொண்டதன் பலனாக வேலையிழந்த போதிலும் அவர்கள் அரசுப் போக்குவரத்துத் துறையில் பணி செய்வதற்குத் தகுதியுடையவர் என்று கண்டறியப்பட்டால் அரசுப் போக்குவரத்து துறைப்பணியில் எடுத்துக் கொள்ளப்படுகின்றனர். இவர்கள் பணி குறித்த தகவல்களை வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகள் சரி பார்த்து அரசுப் பேருந்து போக்குவரத்துப் பணித்துறைக்கு அனுப்புகின்றனர். அவர்கள் அளிக்கும் தகவல்களின் அடிப்படையிலேயே தனியார் பேருந்து பணியாளர் இத்துறையில் எடுத்துக் கொள்ளப்படுகின்றனர்.

### பணிமனைகள்.

6. இதுவரை சென்னை வட்டாரத்திலும், கன்னியாகுமரி மாவட்டத்திலும் பேருந்துப் பணிகளை இயக்கி வருவதிலும் ஒரு சில நீள்தொலை விரைவுப் பேருந்துகளை இயக்கி வருவதிலும் கவனம் செலுத்தி வந்த இத்துறை பேருந்து வழித்தடங்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டதன் காரணமாக இம்மாநிலம் முழுவதிலும் பல்வேறு வழித்தடங்களில் பேருந்துகளை இயக்க வேண்டியிருந்ததால் பெரியதொரு நிறுவனமாக மாறிவிட்டது. இதற்கான வசதிகளைச் செய்துகொடுப்பதற்காகத் திருச்சிராப் பள்ளி, மதுரை, சேலம், கோயம்புத்தூர், ஆகிய இடங்களில் தலைமைப் பணி மனைகள் நிறுவப்பட்டன. இவை ஒவ்வொன்றும் முறையே திருச்சிராப்பள்ளி-தஞ்சாவூர், மதுரை-இராமநாதபுரம், சேலம்-தருமபுரி, கோயம்புத்தூர்-நீலகிரி ஆகிய மாவட்டங்களில் பேருந்துப் பணிகளைக் கவனித்து வருகின்றன. இந்த மாவட்டங்களிலுள்ள துணைப் பணிமனைகள் இந்த நான்கு இடங்களிலுள்ள தலைமைப் பணிமனைகளின்கீழ் இயங்கி வருகின்றன.

7. கீழ்க்கண்ட இடங்களில் துணைப் பணிமனைகள் கட்டுவதற்கான வேலைகள் மேற்கொள்ளப்பட்டன:—

(1) திருவண்ணாமலை;
(2) ஆரணி;
(3) சிதம்பரம்;
(4) தருமபுரி;
(5) மேட்டூர்.

[1971 ஜூலை 21

காஞ்சீபுரத்தில் முழு அளவில் பணிமனை ஒன்றைக் கட்டுவதற்காக நகராட்சி பரிந்துரைத்த நிலம் (பேருந்து நிலையத்துக்கருகில்) போதாதாகையால் பேருந்து நிலையத்தருகில் பணிமனை கட்டுவது கைவிடப்பட்டது. அதற்குப் பதிலாக காஞ்சீபுரம் பேருந்து நிலையத்தில் இருந்து 1½ மைல் தொலைவில் உள்ள ஓரிக்கை இராமத்தில் உள்ள சர்க்கார் தரிசு நிலம் கைவசப்படுத்தப்பட்டது. பழனியில் பணிமனைக்காக நிலத்தைக் கையகப்படுத்தும் செயற்குறிப்புகள் முடிவடையும் தறுவாயில் உள்ளன. துணைப் பணிமனைகளைக் கட்டுவதற்காக உளுந்தூர்பேட்டை, ஈரோடு, குன்றத்தூர், பூவிருந்தவல்லி, திருவள்ளூர், திருத்தணி, பொன்னேரி, ஊத்துக்கோட்டை, மகாபலிபுரம், திருப்பத்தூர், விருதுநகர், புதுக்கோட்டை, சத்தியமங்கலம், பொள்ளாச்சி, உத்தமபாளையம், கொடைக்கானல், திருச்செந்தூர் ஆகிய இடங்களில் தகுந்த நிலங்களைப் பெறுவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

8. சென்னை மாநகரில் ஓடும் பேருந்துகளின் எண்ணிக்கை மிகவும் அதிகரித்துள்ளதால் அவைகளைப் பராமரிப்பதற்கான வசதிகளை அதிகப்படுத்துவதற்காக வடசென்னையில் (மாதவரம்) பணிமனை ஒன்று கட்டப்பட்டுள்ளது. இப்பணிமனை 4—5—1970 அன்று திறக்கப்பட்டது. அசோக் நகரில் ஒன்று, அண்ணாநகரில் ஒன்று, வியாசர்பாடியில் ஒன்று ஆக 3 பணிமனைகள் கட்ட முன்னேற்பாடு செய்யப்பட்டுள்ளது. வீட்டுவசதி வாரியம் அதற்கான நிலங்களை ஒதுக்கியுள்ளது. அசோக் நகரில் வேலை துவங்கப்பட்டது. தங்கசாலை, பெரம்பூர், அயன்புரம், அம்பத்தூர் ஆகிய இடங்களில் பேருந்து நிலையங்கள் கட்ட முன்னேற்பாடு செய்யப்பட்டது.

வட்டாரங்கள்.

9. இத்துறையின் செயலாட்சி எல்லா மாவட்டங்களிலும் விரிவடைந்து விட்டதால் நிர்வாக முறையை மேலும் வலுப்படுத்தியும், சீர்படுத்தியும் அமைப்பதற்காக இந்தத்துறை நான்கு வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவது (1) கன்னியாகுமரி, (2) சேலம், (3) திருச்சிராப்பள்ளி, (4) சென்னை. மேற்கண்ட ஒவ்வொரு வட்டாரமும் ஒரு கூட்டு இயக்குநரால் கண்காணிக்கப்படுகிறது. இந்த வட்டாரங்களில் பேருந்துகள் சீரிய முறையில் ஓட்டப்படுவதற்கு அந்தந்தக் கூட்டு இயக்குநர் பொறுப்பாளியாக்கப்பட்டுள்ளார்.

ஏலக் குழு.

10. துறையைச் சேர்ந்தவையும் பயன்படுத்தத் தகுதியற்றவை என ஒதுக்கப்பட்டவையுமான பேருந்துகளுக்குத் தக்க மதிப்பிட்டு, சரியான விலையைக் கணக்கிட்டு, அவற்றை ஏலத்தில் விடுவதற்காக, சட்டமன்றத்தின் மூன்று உறுப்பினர்களும், துறையின் அதிகாரிகளும் அடங்கிய குழு ஒன்று அரசினால் ஏற்படுத்தப்பட்டது.



1971 ஜூலை 21]

அக்குழு குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை கூடுகிறது. உதவாதவை என்று ஒதுக்கப்பட்ட பேருந்துகளை இக்குழு பார்வையிடுகிறது. மேலும் அந்த வண்டிகள் ஏலம் விடப்படும்போது இக்குழு நேரில் அந்த ஏலத்தைக் கண்காணிக்கிறது.

11. பேருந்துகளில் விளம்பரம் வெளியிடுவது 1970-71-ம் ஆண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. இதன்மூலம் தற்போது ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2 லட்சத்துக்கு மேலாக வருவாய் கிடைக்கிறது.

நிதிநிலை.

12. இத்துறையின் நிதிநிலை விவரங்கள் சுருக்கமாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | மூலதன முதலீடு — ஆரம்ப இருப்பு. | இந்த ஆண்டில் சேர்க்கைகள். | இறுதி இருப்பு. | மொத்த வருவாய். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் லட்சத்தில்.) | | |
| 1969–70 .. | 16,67·16 | 1,46·72 | 18,13·88 | 17,95·11 |
| 1970–71 .. (எதிர்பார்க்கப் படுவது). | 18,13·88 | 1,91·85 | 20,05·73 | 19,12·57 |

| ஆண்டு. | மொத்தச் செலவு. | நிகர வருவாய். | பயணிகள், வசதி நிதி, வளர்ச்சி நிதி, தேய்மான நிதி, தொழிலாளர் வீட்டு வசதி நிதி ஆகியவற்றிற்குத் தொகை வழங்கல். | நிகர ஆதாயம் (+) அல்லது இழப்பு (—) |
|---|---|---|---|---|
| | (6) | (7) | (8) | (9) |
| | | (ரூபாய் லட்சத்தில்) | | |
| 1969-70 .. | 16,43·09 | 1,52·02 | 1,96·52 | (—) 44·50 |
| 1970–71 .. (எதிர்பார்க்கப்படுவது) | 17,89·29 | 1,23·28 | 2,06·50 | (—) 83·22 |

13. 1969–70-ல் ரூபாய் 44·50 லட்சம் இழப்பு ஏற்பட்டதுகுறித்துப் பிரிவுவாரி விவரங்கள் பின்வருமாறு—

| | | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|---|
| (1) | அரசு பேருந்து போக்குவரத்து, சென்னைக் கிளையும் நெடுந்தூரப் போக்குவரத்துப் பணியும், | (—) 53·30 |
| (2) | அரசு போக்குவரத்து மத்திய பணிக்களரி, குரோம்பேட்டை. | (+) 2·05 |
| (3) | அரசு பேருந்து போக்குவரத்து, கன்னியாக்குமரிக்கிளை. | (+) 2·44 |
| (4) | இராணித்தோட்டம் பணிக்களரி .. .. | (+) 4·31 |
| | | (—) 44·50 |

துறையின் சென்னைக் கிளையிலும், நீள் தொலைப் போக்குவரத்துப் பணிகளிலும் முந்திய ஆண்டில் ரூ. 44.37 லட்சம் இழப்பு ஏற்பட்டிருக்க, இந்த ஆண்டில் ஏற்பட்ட இழப்பு ரூ 53.30 லட்சமாகும். செலவு அதிகரித்துள்ளதே அதற்கு காரணம். 15—9—1969 முதல் நாட்படி, இரவு நேரப்படி, விடுமுறை ஊதியம், முதலியவைபற்றிய உயர் அதிகாரக்குழு பரிவுரைகள் நிறைவேற்றப்பட்டதும், முதலீட்டின் மீதுள்ள வட்டிக் கணக்கிடும் முறையை மாற்றியமைத்ததும் இந்த இழப்பு அதிகரிப்புக்கு முக்கிய காரணம் ஆகும். இதனால் ரூ. 32 லட்சம் அதிக செலவு ஏற்பட்டது. அதிகரித்த வருவாய் காரணமாக கூடுதல் செலவு ஓரளவு சரிக்கட்டப்படுகிறது. இந்த ஆண்டில் திங்கள் ஒன்றுக்கு ஒரு பேருந்துமூலம் கிடைத்த வருவாய் ரூ. 7,017 ஆகும் (முந்திய ஆண்டில் வருவாய் ரூ. 6,751 ஆக இருந்தது).

கன்னியாகுமரி கிளையைப் பொறுத்தவரையில், முந்திய ஆண்டில் ரூ. 4.44 லட்சம் ஆதாயம் ஏற்பட்டிருக்க இந்த ஆண்டில் ரூ. 2.44 லட்சம் ஆதாயம் கிட்டியது. இந்த ஆண்டில் திங்கள் ஒன்றுக்கு ஒரு பேருந்துமூலம் கிடைத்த வருவாய் ரூ. 7,228 ஆகும். (முந்திய ஆண்டில் வருவாய் ரூ. 6,958 ஆக இருந்தது) உயர் அதிகாரக்குழு பரிவுரைகள் நிறைவேற்றப்பட்டதினாலும், குறைந்த ஆதாயம் கிட்டியுள்ளது.

14. 1970-71-ல் எதிர்பார்க்கப்படும் ரூ. 83.22 லட்சம் இழப்புப் பற்றிய பிரிவுவாரி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | | | (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|---|---|
| (1) | சென்னைக் கிளையும் நீள்தொலைப் போக்குவரத்துப் பணியும். | (—) | 75·23 |
| (2) | அரசு போக்குவரத்து மத்தியப் பணிக்களரி குரோம் பேட்டை. | (+) | 0·13 |
| (3) | கன்னியாகுமரி கிளை .. .. .. .. | (—) | 10·17 |
| (4) | இராணித் தோட்டம் பணிக்களரி .. .. | (+) | 2·05 |
| | | (—) | 83·22 |

சென்னைக் கிளையிலும், நீள்தொலைப் போக்குவரத்துப் பணியிலும் முந்திய ஆண்டுடன் ஒப்பிட்டுக் காண்கையில் இந்த ஆண்டின் இழப்பு அதிகரித்துள்ளது. பின் வருமாறு செலவுகள் அதிகரித்துள்ளதே அதற்குக் காரணம் (1) உயர் அதிகாரக்குழு பரிவுரைகள் முழு அளவில் நிறைவேற்றப்பட்டது. (2) 1—4—1970 முதல் பிரத்தியேக ஈட்டுப்படி ரூ. 10 எல்லா ஊழியர்களுக்கும் கொடுக்கப்பட்டது, (3) வெளியூர்ப் பணிகளில் ஒரு இருக்கைக்கு ரூ. 10 வீதம் மோட்டார் வண்டிகள் வரி உயர்த்தப்பட்டது, (4) பெட்ரோல் விலை உயர்ந்தது, (5) திருத்தப்பட்ட சம்பள விகிதங்களை அமுலாக்கியதன் விளைவாக ஊதியங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு. இவையெல்லாம் சேர்ந்து ரூ. 47.27 லட்சம் அதிக செலவு ஏற்படுத்தியது.



கன்னியாகுமரி கிளையில் ரூ. 10.17 லட்சம் இழப்பு ஏற்பட்டதற்குக் காரணம் உயர் அதிகாரக்குழு பரிவுரைகள் முழு அளவில் நிறைவேற்றப்பட்டதும், பிரத்தியேக ஈட்டுப்படி ரூ. 10 எல்லா ஊழியர்களுக்குக் கொடுக்கப்பட்டதும் திருத்தப்பட்ட சம்பள விகிதங்களை அமுலாக்கியதன் விளைவாக ஊதியங்களில் ஏற்பட்ட அதிகரிப்பும் ஆகும்.

### தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறையின் சேம நிதிகள்

15. **தேய்மான சேம நிதி.**—பேருந்துகள் ஓடுவதன் விளைவாக அவற்றில் ஏற்படும் பழுதுகளைச் சரிபார்க்கவும் பயனற்றுப்போன இயந்திரப் பாகங்களுக்குப் பதிலாக புதியனவற்றை வாங்கவும் ஆகும் செலவைச் சரிக்கட்டத் தேய்மான சேமநிதி ஒன்று உள்ளது. 1970–71-ல் மேற்படி நிதியில் சேர்க்கப்பட்ட தொகை, மேற்படி நிதியிலிருந்து எடுக்கப்பட்ட தொகை ஆகியவற்றைக் குறித்த புள்ளி விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 1970 ஏப்ரல் 1-ம் தேதியன்று மேற்படி நிதியில் இருப்பில் இருந்த தொகை. | 8,07·39 |
| 1970-71-ல் சேர்ந்த தொகைகள் .. .. | 2,06·50 |
| மொத்தம் .. | 10,13·89 |
| 1970-71-ம் இந்நிதியிலிருந்து எடுக்கப்பட்ட தொகை. | 1,09·00 |
| 1971 ஏப்ரல் 1-ம் தேதியன்று இந்த நிதியில் இருப்பு (எதிர்பார்க்கப்படுகிறது). | 9,04·89 |

துறைக்குச் சொந்தமான பேருந்துகளின் காரணமாகத் தேய்மான சேமநிதிக்கு மிகுதியான தொகைகள் சேர்க்கப்பட்டன. அது அரசால் பொதுக்கணக்கில் வைத்துவரப்படுகின்றது. அரசு ஈட்டுப் பத்திரங்களில் ஏற்கனவே ரூபாய் 38.50 லட்சம் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

16. **பயணிகள் வசதி நிதி.**— தொடக்கத்தில் ரூபாய் 3 லட்சம் தொகையுடன் இந்த நிதி 1960-61-ல் ஏற்படுத்தப்பட்டது. பேருந்து போக்குவரத்து நிறுவனம் வளர்ச்சியடைந்துகொண்டே போகையில் பயணிகளின் வசதிகளை மேம்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவே இந்த நிதி வகை செய்யப்பட்டது. 1965-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் நாள்வரையில் இந்த நிறுவனத்தில் தனித்தனி பிரிவுகளிலிருந்து கிடைக்கும் நிகர ஆதாயத்திலிருந்து 5 சதவிகிதம் மேற்படி நிதிக்கு வழங்கப்படவேண்டும் என்று இருந்தது. 1965-66 முதல் துறை முழுவதற்கும் அதாவது, பிரிவுகள் அனைத்தும் அடங்கிய துறை முழுவதற்கும் கிட்டுகிற நிகர ஆதாயத்தில் 5 சதவீதம் மேற்படி நிதிக்கு வழங்கப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

1971 ஏப்ரல் 1-ல் உள்ளவாறு நிதி இருப்பு கீழே காட்டியுள்ள விவர அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது :—

| | (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|
| 1970 ஏப்ரல் 1-ம் நாளன்று இருந்த இருப்பு .. | 3·27 |
| 1970–71–ல் சேர்ந்த தொகை (நிதி இருப்புகள் மீது வட்டி). | 0·23 |
| மொத்தம் .. | 3·50 |
| 1970–71-ல் இதிலிருந்து வாங்கிய தொகை .. | .. |
| 1971 ஏப்ரல் 1-ம் நாளன்று இருப்பு (எதிர்பார்ப்பது). | 3·50 |

1964 அக்டோபர் திங்கள் 1-ம் தேதிக்கு முன்பு மேற்படி நிதிகளை நிர்வகிப்பதில் இயக்குநருக்கு உதவி செய்வதற்கென, சென்னை, கன்னியாகுமரி கிளைகளுக்குத் தனிச் சிறப்பு ஆலோசனைக் குழுக்கள் இருந்தன. சென்னை, கன்னியாகுமரி கிளைகளுக்கான பயணிகள் வசதி நிதிக்கான சிறப்பு ஆலோசனைக் குழுக்கள் கலைக்கப்பட்டதால் 1964 அக்டோபர் திங்கள் 1-ம் நாள்முதல் சென்னை, கன்னியாகுமரி கிளைகளின் போக்குவரத்து ஆலோசனைக் குழுக்கள் கலைக்கப்பட்ட குழுக்களின் அலுவல்களையும் கவனித்து வந்துள்ளன.

17. வளர்ச்சி நிதி.—போக்குவரத்துத் துறையின் பெருகிவரும் தேவைகளை நிறைவேற்றுவதற்காக ரூபாய் 22.5 லட்சம் தொடக்கத் தொகையுடன் இந்த நிதி 1960-61-ல் நிறுவப்பட்டது. 1965 மார்ச் 31-ம் நாள் வரையில் இத்துறையின் தனித்தனிப் பிரிவுகளின் நிகர ஆதாயத்தில் 33-1/3 சதவீதம் மேற்படி நிதிக்குச் செலுத்தப்பட வேண்டுமென்று விதிக்கப்பட்டிருந்தது. 1965-66 முதல் துறை முழுவதன் நிகர ஆதாயத்தில் அதாவது, பிரிவுகள் அனைத்தும் அடங்கிய துறை முழுவதன் நிகர ஆதாயத்தில் 33-1/3 சதவீதம் நிதிக்கு வழங்கப்படுமென்று வகைசெய்யப்பட்டது.

1971 ஏப்ரல் 1-ம் நாளன்று இந்த நிதியின் தோராய இருப்பு குறித்த புள்ளி விவரம் வருமாறு:—

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 1970-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் நாளன்று இருப்பு. | 29·72 |
| 1970–71-ல் சேர்ந்த தொகை (நிதி இருப்புக்கள் மீது வட்டி). | 2·08 |
| மொத்தம் .. | 31·80 |
| 1970–71-ல் இதிலிருந்து எடுத்த தொகை .. | .. |
| 1971 ஏப்ரல் 1–ம் நாளன்று இருப்பு எதிர்பார்ப்பது. | 31·80 |



18. வீட்டு வசதி நிதி.—தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை தொழிலாளர் வீட்டு வசதி நிதி எனப்படும் நிதியை அரசு 1962–63-ல் நிறுவியது. இத்துறையின் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதியையும், ஏனைய வசதியையும் செய்து கொடுப்பதற்கான செலவுக்கு வகைசெய்வதே இந்த நிதியின் நோக்கமாகும். ஒவ்வோர் ஆண்டும் தனிப்பட்ட முறையில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறையின் நிகர வருவாயிலிருந்து இந்த நிதிக்குத் தொகை வழங்கப்படுகிறது. இவ்வாறு செய்கையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை ஏற்றுக்கொண்ட பொறுப்புகளும், வீட்டுவசதிக்கான அதன் வேலைத்திட்டமும் கருத்தில் கொள்ளப் படுகின்றன. 1971 ஏப்ரல் 1-ம் நாளன்று இந்த நிதியில் இருக்கக் கூடிய இருப்பைக் கீழ்கண்ட புள்ளிவிவரம் காட்டுகிறது :—

| | ரூபாய் லட்சத்தில்). |
|---|---|
| 1970 ஏப்ரல் 1-ம் நாளன்று இருப்பு .. | 11·38 |
| 1970–71-ல் சேர்ந்த தொகை (நிதி இருப்புக்கள் மீது வட்டி). | 0·80 |
| மொத்தம் .. | 12·18 |
| 1970–71-ல் இதிலிருந்து எடுத்த தொகை .. | .. |
| 1971 ஏப்ரல் 1-ம் நாளன்று இருப்பு (எதிர்பார்ப்பது). | 12·18 |

தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை தொழிலாளர்க்கான வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காக, தண்டையார்பேட்டையிலும், குரோம்பேட்டைக்கு அண்மையில் உள்ள நெமிலிச்சேரி கிராமத்திலும், நாகர் கோயிலில் நீண்டகரை கிராமத்திலும் நிலம் கையகப்படுத்தப்பட்டது. கோயம்புத்தூர், தஞ்சை, மதுரை போன்ற முக்கியமான வெளியூர்களிலும் நிலம் பெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நாகர்கோயில், கோயம்புத்தூர், குரோம்பேட்டை ஆகிய இடங்களில் வீடு கட்டும் வேலை துவங்கப் பட்டது. தண்டையார்பேட்டையில் வேலை துவங்க இருக்கிறது.

19. விபத்து சேம நிதி.—முதன் முதலாக இந்நிதி 1951 நவம்பரில் ஏற்படுத்தப்பட்டது. பேருந்துகள் செல்கையில் எதிர் பாராமல் ஏற்படும் விபத்துக்களால் பாதிக்கப்பட்ட மற்றவர்கள் செய்து கொள்ளும் உரிமைக் கோரிக்கைகளுக்குச் சம்பந்தப்படுகிற செலவைச் சரிக்கட்டப் போதுமான நிதியைப் பேணி வருவதே இந்நிதியின் நோக்கமாகும்.

ஒவ்வோர் ஆண்டின் வருவாயிலிருந்து ஆண்டுதோறும் மொத்தமாக ரூ. 2,000 என்ற சீரான வீதத்தில் அல்லது மேற்படி நிதியில் ரூ. 2 லட்சம் எஞ்சியிருப்பதற்கு அவசியமான வகையில் இவற்றில் எது குறைவோ அத்தொகை மேற்படி நிதிக்குச் செலுத்தப் பட்டது. பேருந்துகளை ஈட்டுறுதி செய்வது தொடர்பான விதிகளை 1965-ல் இந்திய அரசு திருத்தியது. இவ்விதிகளின்படி,

[1971 ஜூலை 21

ஆண்டொன்றுக்கு வண்டி ஒன்றுக்கு ரூ. 100 அளிக்கப்பட வேண்டும். இதன்படி தற்போது இந்நிதி அமைக்கப்பட்டுள்ளது. பழைய நிதியில் எஞ்சியிருந்த இருப்பு புதிதாக அமைக்கப்பட்ட நிதியில் சேர்த்துக்கொள்ளப்பட்டது. 1971 ஏப்ரல் 1-ம் நாளன்று மேற்படி நிதியில் இருக்கக்கூடிய இருப்புத்தொகையைக் கீழ்க் காணும் விவர அறிக்கையில் காணலாம் :—

| | (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|
| 1970 ஏப்ரல் 1-ம் நாளன்று இருப்பு .. .. | 0·39 |
| 1970–71-ல் சேர்ந்த தொகை .. .. (வருவாயிலிருந்து கொடுக்கப்பட்ட தொகையும் நிதி இருப்புக்களில் கிடைத்த வட்டியும்.) | 1·98 |
| மொத்தம் .. | 2·37 |
| 1970–71-ல் இதிலிருந்து எடுக்கும் தொகை .. | 1·98 |
| 1971 ஏப்ரல் 1-ம் நாளன்று இருப்பு (எதிர்பார்ப்பது) | 0·39 |

20. *துயர் தணிப்புக் கருணை நிதி.*— இந்நிதியை ஏற்படுத்த அரசு 1960 ஜூன் திங்களில் அனுமதி வழங்கியது. ஊழியர் எவரேனும் அல்லது அவரைச் சார்ந்திருப்போர் எவரேனும் இறக்க நேரிடின் அவரது ஈமச் சடங்குக்காகவும், பெரும் விபத்துக்குள்ளான ஊழியரது உடனடியான செலவுக்கும், போக்குவரத்து துறைப் பேருந்துகளால் ஏற்படும் விபத்துக்களில் சிக்கிய ஏழைகளுக்கு, ஆதரவற்றவர்களுக்கு அல்லது அவர்களுடைய குடும்பத்தினருக்கு தொகை கொடுக்கவும் இந்நிதி பயன்படுத்தப்படுகிறது. தொடக்கத்தில் இந்நிதிக்கு ரூபாய் 1,000 செலுத்தப்பட்டது. அரசு தொடக்கத்தில் அனுமதித்த ரூபாய் 1,000 அளவிற்கு இந்நிதியின் இருப்புத் தொகை இருக்குமாறு செய்ய ஆண்டுதோறும் தொகை சேர்க்கப்படுகிறது.

1971 ஏப்ரல் 1-ம் நாளன்று இருக்கக்கூடிய இருப்புத் தொகையைக் கீழ்காணும் விவர அறிக்கையில் காணலாம் :—

| | (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|
| 1970 ஏப்ரல் 1-ம் நாளன்று இருப்பு .. | 0·01 |
| 1970–71-ல் சேர்மானங்கள் .. .. | 0·04 |
| மொத்தம் .. | 0·05 |
| 1970–71-ல் இதிலிருந்து எடுக்கும் தொகை .. | 0·04 |
| 1971 ஏப்ரல் 1-ம் நாளன்று இருப்பு (எதிர்பார்ப்பது). | 0·01 |



1971 ஜூலை 21]

## பேருந்து செயல்படுவதால் ஏற்படும் பலன்கள்

21. ஒரு போக்குவரத்து நிறுவனத்தின் திறன், போக்குவரத்துப் பணிக்கென வழங்கப்படும் பேருந்துகளின் சதவிதத்தையும் சாலைகளில் ஓட்டப்படும் பேருந்துகளின் சதவீதத்தையும் பொறுத்ததாகும். துறை முழுவதற்குமாக, செயல்படும் திறன், சாலையில் ஓட்டப்படும் பேருந்துகள் இவைபற்றிக் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. (1) | சராசரி பேருந்துகளின் எண்ணிக்கை. (2) | செயல்பட சராசரியாக வழங்கிய பேருந்துகளின் எண்ணிக்கை. (3) | செயல்படும் திறன். (4) | சாலையில் ஓட்டப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை. (5) | மொத்தப் பேருந்துகளின் எண்ணிக்கைக்குச் சாலையில் ஓட்டப்பட்டுள்ளவற்றின் சதவீதம். (6) |
|---|---|---|---|---|---|
| | | | சதவீதம் | | சதவீதம் |
| 1969–70 .. .. | 1,961 | 1,784 | 91 | 1,691 | 86 |
| 1970–71 .. .. (எதிர்பார்ப்பது). | 2,019 | 1,878 | 93 | 1,764 | 87 |

22. இவ்வாண்டில் புதிதாகச் சேர்க்கப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை அவை பயணம் செய்த மைல்கள், வசூல் முதலியவை குறித்த விவரங்கள் கீழே உள்ள புள்ளிவிவர அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன :—

| | | 1969–70. | 1970–71. |
|---|---|---|---|
| (1) | ஆண்டுத் தொடக்கத்தில் பேருந்துகளின் மொத்த எண்ணிக்கை. | 1,946 | 1,975 |
| (2) | பெருக்கியவை .. .. | 29 | 150 |
| (3) | மாற்றியமைக்கப்பட்டவை .. | 192 | 205 |
| (4) | ஆண்டு முடிவில் பேருந்துகளின் மொத்த எண்ணிக்கை. | 1,975 | 2,125 (எதிர் பார்க்கப் படுவது). |
| (5) | பயணம் செய்த மைல்கள் .. | 1,578·25 (லட்சம்). | 1,720·15 (லட்சம்). (எதிர் பார்க்கப் படுவது). |
| (6) | சராசரி நாள் வசூல் .. .. | ரூ. 4·09 (லட்சம்). | ரூ. 4·40 (லட்சம்) (எதிர் பார்க்கப் படுவது). |

[1971 ஜூலை 21

23. (1) சென்னை மாநகரப் பணியில் கீழ்காணும் புதிய வழித்தடங்களில் பேருந்துகள் விடப்பட்டன—

| | | |
|---|---|---|
| (i) | 58-D உயர்நீதி மன்றம்—திருக்கண்டலம். | 1 பேருந்து. |
| (ii) | 23-C அடையாறு—தாக்கர் சத்திரம். | 4 பேருந்துகள் |
| (iii) | 21-K பாரிமுனை—பட்டினப்பாக்கம். | 3 பேருந்துகள் (ஒரு தொடர் பேருந்து உட்பட). |

(2) கீழே கூறப்பட்டுள்ள வழித்தடங்களில் பேருந்துகளின் எண்ணிக்கை பெருக்கப்பட்டது—

| | | | |
|---|---|---|---|
| (i) | வழித்தடம் எண் 6 .. | எம்.யூ.சி.—அங்க சாவடி. | 1 நிற்போர் பேருந்து அதிகரிக்கப் பட்டது. |
| (ii) | வழித்தடம் எண் 6-சி | ஷை | 1 நிற்போர் பேருந்து அதிகரிக்கப் பட்டது. |
| (iii) | வழித்தடம் எண் 37-B. | பெரம்பூர்—வட பழனி. | ஷை |
| (iv) | வழித்தடம் எண் 37-C. | இ.பெ.தொ.—வட பழனி. | ஷை |
| (v) | வழித்தடம் எண் 18-B | பாரிமுனை—கோட்டூர் | 2 பேருந்துகள் அதிகரிக்கப் பட்டன. |
| (vi) | வழித்தடம் எண் 29-A | பெரம்பூர்—திருவல்லிக்கேணி | 1 பேருந்து அதிகரிக்கப் பட்டது. |

(3) கீழ்காணும் வழித்தடங்கள் நீட்டிக்கப்பட்டன—

| | | | |
|---|---|---|---|
| (i) | வழித்தடம் எண் 15-A | அம்பத்தூர் தொழில்பேட்டை—நுங்கம்பாக்கம் ரயில் நிலையம். | அம்பத்தூர் வரை நீட்டிக்கப்பட்டு, நாள் முழுவதும் செயல்படும் பணியாக மாற்றப் பட்டது. |
| (ii) | வழித்தடம் எண் 58-B. | தங்கசாலை—காரணேடை. | திருக்கண்டலம் வரை நீட்டிக் கப்பட்டது. |
| (iii) | வழித்தடம் எண் 48 .. | தங்கசாலை—இ.பெ.தொ. | வில்லிவாக்கம் வரை நீட்டிக்கப் பட்டது. |
| (iv) | வழித்தடம் எண் 111 .. | சென்னை—நம்பாக்கம். | 1 பேருந்து வெள்ளாத்துக்கோட்டை வரை நீட்டிக் கப்பட்டது |



1971 ஜூலை 21]

| | | | |
|---|---|---|---|
| (v) | வழித்தடம் எண் 112 .. | சென்னை—சத்தியவேடு. | தேர்வை வழியாக தமிழ் நாடு எல்லைவரை செலுத்தப் படுகிறது. |
| (vi) | வழித்தடம் எண் 26 .. | இ.பெ.தொ.—பாரிமுனை. | 1 பேருந்து அதிகரிக்கப் பட்டு இராயபுரம் மாதா கோவில் வரை நீட்டிக்கப் பட்டது. |

(4) பொதுமக்களின் வசதிக்காக கீழ்காணும் வழித்தடங்களில் மாடிப் பேருந்து, தொடர் பேருந்துகள் விடப்பட்டன—

| | | | |
|---|---|---|---|
| (i) | வழித்தடம் எண் 18 .. | பாரிமுனை—கிண்டி தொழிற்பேட்டை. | ஒரு புதிய மாடிப் பேருந்து விடப்பட்டது. |
| (ii) | வழித்தடம் எண் 11-A | பாரிமுனை—தியாகராயநகர். | ஒரு தொடர் பேருந்து விடப்பட்டது. |
| (iii) | வழித்தடம் எண் 61 | பிராட்வே—ஆவடி விமானத்தளம் | ஒரு தொடர் பேருந்து விடப்பட்டது. |
| (iv) | வழித்தடம் எண் 21-K. | பாரிமுனை—பட்டினப்பாக்கம் | ஒரு தொடர் பேருந்து விடப்பட்டது. |
| (v) | வழித்தடம் எண் 15 | பாரிமுனை—அண்ணாநகர். | ஒரு தொடர் பேருந்து விடப்பட்டது. |
| (vi) | வழித்தடம் எண் 71 | பிராட்வே—அம்பத்தூர் தொழிற்பேட்டை | ஒரு தொடர் பேருந்து விடப்பட்டது. |

*(5) கீழ்காணும் வழித்தடங்களில் மகளிர்களுக்கு மட்டும் தனிப் பேருந்துகள் விடப்பட்டன :—*

(i) வழித்தடம் எண் 12-E—அசோக்நகர்—பட்டினப்பாக்கம்.

(ii) வழித்தடம் எண் 17-D—அசோக்நகர்—சீதக்காதிநகர்.

(iii) வழித்தடம் எண் 25—திருவல்லிக்கேணி—வடபழனி.

(iv) வழித்தடம் எண் 12—விவேகானந்தர் இல்லம்—தியாகராயநகர்.

(v) வழித்தடம் எண் 29—பெரம்பூர்—கலைக்கல்லூரி.

(vi) வழித்தடம் எண் 24—அண்ணாநகர்—விவேகானந்தர் இல்லம்

(vii) வழித்தடம் எண் 5-B—மயிலை—தியாகராயநகர்.

(viii) வழித்தடம் எண் 28-C—சுங்கச்சாவடி—கலைக்கல்லூரி.

(ix) வழித்தடம் எண் 43—இ. பெ. தொ.—பட்டினப்பாக்கம்,

(x) வழித்தடம் எண் 29-B—தியாகராயநகர்—பெரம்பூர்.

(xi) வழித்தடம் எண் 48—தங்கசாலை—வில்லிவாக்கம்.

(xii) வழித்தடம் எண் 37—தங்கசாலை—வடபழனி.

(6) பேருந்துப் பணிகள் செலுத்துவதில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்குமுகமாக கீழ்கண்ட நடவடிக்கைகள் இந்த வருடத்தில் எடுக்கப்பட்டன.—

(i) வழித்தடம் 38-G (பாரிமுனை-சத்தியமூர்த்தி நகர்) ரத்து செய்யப்பட்டது.

(ii) ஏழு நகர வழித்தடங்களில் பேருந்துகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது.

(iii) இருபத்தெட்டு மாவட்ட வழித்தடங்களில் இருந்து பேருந்துகள் எடுத்து மாநகரில் விடப்பட்டன.

(iv) பன்னிரண்டு வழித்தடங்களில் ஓடும் புறநகர் பேருந்துகள் ஓய்வு நேரத்தில் மாநகரத்தில் தனிப்பேருந்துகளாக விடப்பட்டன.

(7) திருவிழாக்கள், கலைநிகழ்ச்சிகள், மாநாடுகள், சந்தைகள் தொடர்பாக ஏற்பட்ட கூடுதல் போக்குவரத்தைச் சரிசெய்யத் தனிப்பேருந்துகள் விடப்பட்டன. நெரிசல் மிகுந்த போக்குவரத்து அதிகமுள்ள பேருந்து நிறுத்துமிடங்களில் போக்குவரத்துப் பயணச்சீட்டுகள் வழங்க நிலைப் பயணித் துணைவர்கள் நியமிக்கப்பட்டு போக்குவரத்து முறைப்படுத்தப்படுகிறது.

(8) இத்துறையினால் ஓட்டப்படுகின்ற நகரப் பேருந்துகளில் விடுமுறை நாட்சலுகைப் பயணச் சீட்டுகள் வழங்கப்பட வேண்டுமென்று பொதுமக்களிடமிருந்து முறையீடுகள் வந்தன. இந்தக் கோரிக்கையை நிறைவேற்றும் பொருட்டு 1967-ம் ஆண்டு, செப்டம்பர் திங்கள், 15-ம் நாள் முதல் " விருப்பம் போல் பயணம் செய்வதற்கான " பயணசீட்டுகளை பயணிகளுக்கு வழங்குவதற்கான திட்டமொன்றுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியது. இப் பயணச் சீட்டுகள் அனைத்தும் நகர வழித்தடங்கள் அனைத்துக்கும் செல்லுபடியாகும். இப்பயணச்சீட்டுகள். விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக் கிழமைகளிலும் விற்பனை செய்யப்படுகின்றன. அவை எந்த நாளன்று விற்பனை செய்யப்படுகின்றனவோ அந்த நாளுக்கு மட்டுமே செல்லுபடியாகும். இப் பயணச்சீட்டு ஒவ்வொன்றுக்குமுரிய மதிப்பு ரூபாய் 1.50 என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

24. கீழ்க்கண்ட மாவட்ட விரைவு பேருந்துகள் புதிய வழித்தடங்களில் விடப்பட்டன :—

(1) வழித்தடம் எண் 224—திருவண்ணாமலை—திருப்பதி 1 பேருந்து.

(2) வழித்தடம் எண் 365- A—திண்டுக்கல்—கீழ்அணை 1 பேருந்து.





(3) வழித்தடம் எண் 365—திண்டுக்கல்—குமிளி 1 பேருந்து.

(4) வழித்தடம் எண் 599—தஞ்சாவூர்—பழனி 1 பேருந்து.

தற்போது 153 சீர்வசதிப் பேருந்துகள் (10 மாடிப் பேருந்துகள் உட்பட) 59 நீள்தொலை வழித் தடங்களில் இயக்கப்படுகின்றன. லேலண்டு காமெட் அடிச்சட்டத்தில் சாதாரண காமெட் 370 என்ஜினை பயன்படுத்தி தமிழ்நாடு அரசுப்போக்குவரத்தினால் கட்டப்பட்ட மாடிப்பேருந்து 1969-70-ம் ஆண்டில், சென்னை—திருச்சி டிரங்க் வழித்தடத்தில் விடப்பட்டது. பேருந்து செயல்படுவதைக் கண்காணித்த பிறகு இந்த வழித்தடத்தில் மேலும் சில பேருந்துகளும் திண்டுக்கல் வழியான சென்னை-மதுரை வழித்தடத்திலும் இத்தகைய பேருந்துகள் விடப்பட்டன. 12 ஒற்றைப் பயணத் தடவைகளில் திருச்சி செல்லும் 6 பேருந்துகளும், 12 ஒற்றைப் பயணத் தடவைகளில் மதுரை செல்லும் 4 பேருந்துகளுமாக 10 பேருந்துகள் விடப்பட்டன. இப் பேருந்துகளில் கீழ்ப்பகுதியில் 48 இருக்கைகளும், மாடியில் 24 இருக்கைகளும் உள்ளன. மாடியின் உயரம் பயணிகள் காரில் உள்ள உயரத்துக்கு சரியானதாகும்.

25. இத்துறையின் திறனை அதிகப்படுத்துவதற்காக கீழ்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

(1) பயணிகள் அதிகமாகச் செல்லக்கூடிய வகையில் நிற்போர் பேருந்துகள் இத்துறையினால் விடப்பட்டன. நிற்கும் பயணிகளுக்கு வரிகுறைவாகையால் இத்துறைக்கு மோட்டார் வாகன வரிப்பணம் மிச்சப்படுகிறது.

(2) பழுதடைந்த பேருந்துகளை உடனடியாகக் கவனிப்பதற்காகக் கம்பியில்லாத் தந்தி சாதனங்கள் பொருந்திய ஒன்பது நடமாடும் (பழுதடைந்த பேருந்தை சீர்படுத்தும்) படைகளை இத்துறை ஏற்படுத்த இருக்கிறது. இவை மத்திய கட்டுப்பாடு நிலையம் ஒன்றுடன் தொடர்பு கொண்டு பழுதடந்த பேருந்துகளை உடனடியாகச் சீர்படுத்துவதற்காக நகர் முழுவதும் சுற்றிக்கொண்டிருக்கும். இந்த ஏற்பாட்டினால் பழுதடைந்த பேருந்துகள் உடனடியாகக் கவனிக்கப்படுமாதலால் பேருந்துகள் ஓடும் தடவைகள் குறையாமலும் வருமானம் குறையாமலும் இருக்க உதவுகிறது.

(3) இத்துறையின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் பண்டங்களை உபயோகிப்பது அதிகமாகவுள்ளது. பண்டங்கள் வாங்குவதிலும், அதை உபயோகிப்பதிலும் அதைப்பற்றி கணக்கு வைப்பதிலும் அதிகக்கட்டுப்பாடு ஏற்படுத்த வல்லுநர் பரிசீலனை தேவை என்று கருதப்பட்டது. இவ்வேலை " இர்கான் " (IRCON கம்பெனியிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர்கள் சமர்ப்பித்த அறிக்கை பரிசீலனையில் உள்ளது.

(4) பொறிகளையும் அதைச்சார்ந்த பொருள்களையும் சீர் படுத்துவதற்காக திருச்சியில் இத்துறை ஒரு பிரிவு ஏற்படுத்த திட்டமிட்டுள்ளது. குரோம்பேட்டை, கன்னியாகுமரியில் உள்ள பிரிவுகளை விரிவு படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஏற்பாடு வண்டியின் பழுதுபட்ட பெரிய பொருள்களை மாற்ற உதவுகிறது. பேருந்துகள் நீண்டகாலம் பட்டறையில் தங்கி இருப்பதையும் தவிர்க்க உதவுகிறது. இதனால் போக்குவரத்து இயக்கத்தில் முன்னேற்றம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பணிக்களரிகள்.

26. குரோம்பேட்டையிலும் நாகர்கோவிலிலும் உள்ள பணிக் களரிகளின் வேலை முன்னேற்றம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| ஆண்டு. | தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை பணிமனையின் பணிக்களரி களில் கட்டப்பட்ட பேருந்து கூடுகளின் எண்ணிக்கை. | தனியார் நிறுவனங் களில் கட்டப்பட்ட பேருந்து கூடுகளின் எண்ணிக்கை. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1969–70 .. | 332 | .. | 332 |
| 1970–71 .. | 392 | .. | 392 |

பணிக்களரிகளின் எஞ்சிய திறன், பிற துறைகட்கு வேண்டிய வற்றைச் செய்யப் பயன்பட்டது.

டயர் புதுப்பிக்கும் பிரிவுகள்.

27. சென்னை, கன்னியாகுமரியில் உள்ள டயர் புதுப்பிக்கும் பிரிவுகள் மூன்று முறைமாற்றுகளில் செயல்படுகின்றன. டயர்கள் புதுப்பிக்கப்படுவதால் புதிய டயர்களுக்காகும் செலவு குறை கின்றது. கடந்த இரண்டு ஆண்டுகளில் புதுப்பிக்கப்பட்ட டயர் களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப் பட்டுள்ளது:—

| ஆண்டு. | புதுப்பிக்கப்பட்ட டயர்களின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1969–70 .. .. .. .. | 23,178 |
| 1970–71 .. .. .. .. | 25,487 |

டயர் புதுப்பிக்கும் பிரிவுகளில் டயர்கள் புதுப்பிக்கப்படுவ துடன், ட்யூபுகளும் டயர்களும் ஒட்டிச் செப்பனிடப்படுகின்றன.



பணியாளர்.

28. இத்துறையில் பணியாற்றும் பணியாளர்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | சென்னைப் பிரிவு. | கன்னியா குமரிப் பிரிவு. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| **(அ) தொழில் நுட்பப் பணியாளர்—** | | | |
| (1) மேற்பார்வைப் பணியாளர். | 333 | 52 | 385 |
| (2) மேற்பார்வைப் பணியாளர் நீங்கலான பிற பணி யாளர். | 5,640 | 1,021 | 6,661 |
| மொத்தம் .. | 5,973 | 1,073 | 7,046 |
| **(இ) போக்குவரத்துப் பணியாளர்—** | | | |
| (1) மேற்பார்வை பணியாளர். | 606 | 85 | 691 |
| (2) மேற்பார்வைப் பணியாளர் நீங்கலான பிறபணி யாளர். | 7,560 | 1,462 | 9,022 |
| மொத்தம் .. | 8,166 | 1,547 | 9,713 |

பணியாளர் நலன்.

29. கடந்த ஆண்டுகளைப் போல், தொழிலாளர் கல்வித் திட்டத்தின் பயன்கள் இத்துறையினால் முற்றிலும் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றன. தொழிலாளர்—ஆசிரியர்கள் 9 பேருக்கும் பிரிவு நிலை வகுப்புப் பயிற்சியாளர்கள் 534 பேருக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது. பிரிவு நிலை வகுப்புகளில் பயிலும் பணியாளர் களுக்கு, அவ்வகுப்புகளின் கால அளவு 45 நிமிடங்களுக்கு மேற்படுகையில் கூடுதல் ஊதியமும் அளிக்கப்படுகின்றது.

பயிற்சி.

30. (1) 1961-ம் ஆண்டு பயிற்சியாளர்கள் சட்டத்தின்கீழ், வேலை பயிலுவோருக்குப் பயிற்சியளிக்கும் திட்டம், இந்த ஆண்டும் தொடர்ந்து செயல்பட்டது. இச்சட்டத்தின் கீழ் இந்த ஆண்டு பயிற்சி பெறுவோரின் எண்ணிக்கை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் பயிற்சி பெறும் காலம் 2 ஆண்டுகளாகும்.

[1971 ஜூலை 21

| தொழில். | பயிற்சி பெறுவோரின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|
| | சென்னைக் கிளை. | அரசு போக்குவரத்து மத்தியப் பணிக்களரி. | கன்னியாகுமரி பிரிவு. | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| கம்மியர் (மோட்டார் வண்டி). | 101 | 16 | 19 | 136 |
| உலோகம் பற்றவைப்பவர் .. | 4 | 3 | 2 | 9 |
| கடைசல் இயந்திரப் பணியாளர் | .. | 3 | 1 | 4 |
| பெஞ்சு பிட்டர் .. | .. | .. | 1 | 1 |
| | 105 | 22 | 23 | 150 |

வேலை பழகுவோருக்குக் கீழ்க்கண்ட விதத்தில் பயிற்சி உதவித் தொகை வழங்கப்படுகிறது :—

| (1) | சென்னையில், (2) | அரசு போக்குவரத்து மத்தியப் பணிக்களரியில். (3) | கன்னியாகுமரிக் கிளையில். (4) |
|---|---|---|---|
| | (திங்கள் ஒன்றுக்கு ரூபாய்) | | |
| (1) பயிற்சியின் முதல் ஆண்டின்போது. | 70 | 60 | 60 |
| (2) பயிற்சியின் 2-வது ஆண்டின்போது. | 80 | 70 | 70 |

பயிற்சியாளர்கள் பயிற்சியை வெற்றிகரமாக முடித்ததும், இயன்ற அளவு இத்துறையில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். பயிற்சி முடித்தோரை அவர்கள் திறமை பெற்றுள்ள தொழில் பிரிவில், குறிப்பாக யந்திரத் (மோட்டார் வாகனங்கள்) தொழிற் பிரிவில் வேலைக்குத் தெரிந்தெடுக்க, இந்தப் பணித்திட்டம் இத்துறைக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.

(2) இந்திய அரசின் பயிற்சித் திட்டத்தின்கீழ், பொறியியலில் பட்டம் பெற்றோருக்கும் பட்டயத்தகுதி பெற்றோருக்கும் பயிற்சியளிக்கும் பணித்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது.

(3) துறையைச் சேர்ந்த பணிக்களரியில், உதவித்தொகை பெறும் வேலை பழகுவோரைப் போன்று, பட்டயத்தகுதி பெற்றோருக்கும், பட்டம் பெற்றோருக்கும் கூடப் பயிற்சியளிக்கப்படுகிறது. ஓரே நேரத்தில், இத்துறை நகரப் பணிமனைகளில் 40 பேருக்கும், அரசு போக்குவரத்து மத்தியப் பணிக்களரியில் 24 பேருக்கும் கன்னியாகுமரிக் கிளையில் 30 பேருக்கும் பயிற்சியளித்து வருகிறது.



1971 ஜூலை 21]

(4) இத்துறையைச் சேர்ந்த பணியாளர்களின் ஆண் மக்களுக்கும் சார்ந்து வாழ்வோர்க்கும்
employees) பயிற்சியளிக்கும் பணித் திட்டமும் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. ஓராண்டு காலப் பயிற்சியின் போது முதல் ஆறு மாத காலத்திற்கு ரூபாய் 1 விதமும் அடுத்த ஆறு மாத காலத்திற்கு ரூபாய் 1.50 விதமும் பயிற்சியாளர்களுக்கு நாள்படி வழங்கப்படுகிறது. பயிற்சியை வெற்றிகரமாக முடித்த பின்னர் அவர்கள் இத்துறையில் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப் படுகிறார்கள்.

### தொழிலாளர்களுக்குப் பணி நலன்கள்.

31. (1) ஒவ்வொரு நகரப் பணிமனைகளுக்கும் அரசு போக்குவரத்து மத்தியப் பணிக் களரிக்கும் கன்னியாகுமரிப் பிரிவிற்கும் மருந்தகங்கள் உள்ளன. இந்த மருந்தகங்களில் இருப்பு இல்லாததும், மருத்துவத்திற்குப் பணியாளர்கள் விலைக்கு வாங்கியதுமான விலை உயர்ந்த மருந்துகளின் செலவை அரசு திருப்பித் தருகிறது. இத் துறையுடன் குடும்ப நலத் திட்டப் பிரிவு ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது.

(2) அபராத நிதியிலிருந்து, காயமடைந்த தொழிலாளர்களுக்கும் தீயினாலும் வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கும் நிதியுதவி அளிக்கப்பட்டது.

(3) முந்திய ஆண்டில் அளிக்கப்பட்ட பொழுதுபோக்கு வசதிகள் தொடர்ந்து அளிக்கப்பட்டு வந்தன. இந்த ஆண்டில் இதற்கென அரசு ரூபாய் 8,000 அளித்துள்ளது. 1968-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 23-ஆம் நாளிலிருந்து ஒரு நூல் நிலையம் செயல்பட்டு வருகிறது. கோயம்புத்தூர், சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி முதலிய மண்டலத் தலைமையிடங்களில் பொழுதுபோக்கு மன்றங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

(4) 1964-ஆம் ஆண்டு மே திங்கள் 1-ம் நாள் முதல் நியாய விலைக்கடை செயல்பட்டு வருகிறது. பங்கீட்டுப் பொருள்களனைத்தும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. தொழிலாளர்களுக்கு கடன் வசதியும் செய்யப்பட்டுள்ளது. தற்போது நியாய விலைக் கடையில் 2,767 உறுப்பினர்கள் சேர்ந்துள்ளனர். அரிசி வழங்குவதை, மாத ஊதியம் ரூபாய் 300-க்குக் குறைவாகப் பெறுவோருக்கு மட்டுமே என்று வரையறுக்குமாறு அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்த உத்தரவின்படி மலிவு விலை அரிசி வழங்கும் திட்டம் 2,487 பணியாளர்களுக்கு நன்மை பயக்கிறது.

### பொது மக்கள் தொடர்புப் பணிகள்.

32. (1) இத்துறை பொது மக்களிடம் நல்ல தொடர்பு வைத்துள்ளது. பொது மக்களிடம் இருந்து வரும் புகார்களும், குறைகளும், உடனடியாக கவனிக்கப்பட்டு நிவர்த்திக்கப் படுகின்றன.

[1971 ஜூலை 21

(2) இழப்புப் பொருள் பிரிவிற்குப் பயணிகளின் 1,081 பொருள்கள் வந்து சேர்ந்தன. அவற்றில் 294 பொருள்கள் அவற்றை இழந்தவரிடமே சேர்ப்பிக்கப்பட்டன. எஞ்சிய பொருள்கள் உரியவரிடம் சேர்ப்பிக்க காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

(3) செய்தித்தாள் மூலமும், அனைத்திந்திய வானொலி மூலமும் முக்கிய அறிவிப்புக்களை மக்களுக்கு அறிவிக்க 59 செய்திக் குறிப்புக்கள் இத்துறையால் வெளியிடப்பட்டுள்ளன.

(4) பயணம் செய்வோரின் நன்மைக்காக பேருந்துகளின் பக்கவாட்டில் உள்ள மேற்புரச் சட்டங்களில் முக்கிய குறிப்புகள் எழுதப்பட்டிருக்கின்றன. இந்த குறிப்புகள் தொலைப்பேசி அட்டவணைப் புத்தகத்திலும் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

(5) பயணம் செய்வோரிடம் நல்லுறவை வைத்துக் கொள்வதற்காகவும் இத்துறையைப் பற்றிய முன்னேற்றத்தை தெரியப்படுத்துவதற்காகவும் இத்துறை அதிகாரிகளும் தொழிலாளர்களும் அனைத்திந்திய வானொலி நிகழ்ச்சிகளிலும், தனியார்த் துறையும், சங்கங்களும் நடத்துகின்ற பொது நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டனர்.

(6) ஏற்பு பெற்ற அரசு மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற பேருந்தில் இல்வசப் பயணம் செய்ய குருடர்களுக்கும், உடல் ஊனம் உடையவர்களுக்கும் இத்துறை பேருந்து சீட்டுகள் அளித்து வருகிறது.

(7) பேருந்தில் பணி செய்யும் பணியாளர் பயணிகள் இழந்த பொருள்களை நல்லெண்ணத்துடன் கொண்டுவந்து தருவதற்காக இத்துறையில் " நன்னடத்தை பரிசளிப்பு திட்டம் " ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. நன்னடத்தை உள்ள நடத்துநர்களுக்கு பண பரிசளிப்பை சிறு சேமிப்பு பத்திரமாக பொது நிகழ்ச்சிகளில் தரப்படுகிறது.

(8) ஒப்பற்ற திறமையுள்ள அல்லது ஒப்பற்ற தொண்டு செய்த தொழிலாளர்களுக்கு தனிச் சிறப்பு பரிசுகள் வழங்கப் படுகின்றன.

(9) சுற்றுலா பயணம் செய்வோரை ஊக்குவிப்பதற்காகவும், சென்னை நகரத்தில் முக்கியமான புகழ் பெற்ற இடங்களைச் சுற்றிப் பார்ப்பதற்காகவும் இத்துறையினரால் குறைந்த கட்டணத்தில் தனிப் பேருந்துகள் விடப்படுகின்றன.

(10) இத்துறையைச் சேர்ந்த குரோம்பேட்டை பணிக்களரியில் எதிர்பாராத இடர் நேரா வண்ணம் முன்னெச்சரிக்கையுடன் மிக நல்ல முறையில் தொழில் நடந்து வருகிறது. இந்த பணிக்களரி கடந்த 6 வருட காலமாக மத்திய அரசால் தரப்படும் " நாடு முழுமைக்குரிய பாதுகாப்பு பரிசளிப்பை " தொடர்ந்து பெற்று வருகிறது. மேலும் இந்த பணிக்களரி உறுப்பு ஊனமுள்ளவர்களை அதிகமாக வேலைக்கு நியமித்துள்ளதற்காகவும் பரிசுகளைப் பெற்றிருக்கிறது.



1971 ஜூலை 21]

## மோட்டார் வண்டிகள் பேணுதல் நிறுவனம்.

33. 1955-ம் ஆண்டு, ஆகஸ்டு திங்கள், 15-ம் நாள் முதல் செயல்படும் மோட்டார் வண்டிகள் பேணுதல் நிறுவனம், அதன் நடவடிக்கைகளை படிப்படியாக விரிவுபடுத்திக் கொண்டது. தற்போது இந்த நிறுவனத்தினால் அரசின் பல்வேறு துறைகளுக்குச் சொந்தமான 2,000 வண்டிகளுக்கு மேல் பேணப்பட்டு வருகின்றன. மூன்று கட்டங்களில் இந்த நிறுவனத்தின் முழு அமைப்பு சீர்படுத்தப்பட இருக்கிறது. கூடுதல் பணியாளர்களை நியமித்தல், கருவிகளையும், சாதனங்களையும் வழங்குதல் மத்திய கொள்முதல் சேமிப்புப் பிரிவை ஏற்படுத்துதல் ஆகியவைகளுக்கு ஒப்பளிப்பு வழங்குவது குறித்த முதல் கட்டம் முடிக்கப்பட்டுள்ளது. சென்னை, மத்தியப் பணிக் களரிக்காக புதிய கட்டிடங்களைக் கட்டுதல், சேலத்திலும், மதுரையிலும், தஞ்சாவூரிலும் உள்ள பணிக்களரி கட்டிடங்களை விரிவுபடுத்துதல் ஆகியவை இரண்டாம் கட்டத்தில் அடங்கும். இவ்வேலை 1971-72 ஆண்டிற்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கோயம்புத்தூரிலும், கன்னியாகுமரியிலும் புதிய பணிக் களரிகள் திறப்பது குறித்த மூன்றுவது கட்டம் 1972-73 ஆண்டில் செயல்படுத்த திட்டமிடப்பட்டிருக்கிறது. வேலூர், கடலூர், திருச்சி, திருநெல்வேலி, காஞ்சிபுரம், கோயம்புத்தூர் ஆகிய 6 இடங்களில் பணித்துறை நிலையங்கள் ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கி இருக்கிறது.

1968 டிசம்பர் திங்களில் கார் செப்பனிடும் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டது. அமைச்சர்களின் கார்களையும், தலைமைச் செயலகம், அரசு விருந்தினர் மாளிகை முதலியவற்றின் வண்டிகளையும் செப்பனிடுவதற்காகவே இது ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

### விவர அறிக்கை

பேருந்துத் தொகுதிகளின் மொத்த எண்ணிக்கையும் சாலையில் செல்லும் வண்டிகளின் சராசரி எண்ணிக்கைகளும்.

| ஆண்டு. | இந்த ஆண்டு முடிவில் பேருந்துத் தொகுதிகளின் மொத்த எண்ணிக்கை. | இந்த ஆண்டில் சாலையில் செல்லும் வண்டிகளின் சராசரி எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1959–60 .. .. .. .. | 561 | 386 |
| 1960–61 .. .. .. .. | 695 | 537 |
| 1961–62 .. .. .. .. | 770 | 569 |
| 1962–63 .. .. .. .. | 814 | 629 |
| 1963–64 .. .. .. .. | 950 | 690 |
| 1964–65 .. .. .. .. | 1,076 | 789 |
| 1965–66 .. .. .. .. | 1,256 | 937 |
| 1966–67 .. .. .. .. | 1,373 | 1,069 |

### விவர அறிக்கை I—தொடர்ச்சி.

| ஆண்டு. | இந்த ஆண்டு முடிவில் பேருந்துத் தொகுதிகளின் மொத்த எண்ணிக்கை. | இந்த ஆண்டில் சாலையில் செல்லும் வண்டிகளின் சராசரி எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1967-68 .. .. .. .. | 1,731 | 1,259 |
| 1968-69 .. .. .. .. | 1,946 | 1,599 |
| 1969-70 .. .. .. .. | 1,975 | 1,691 |
| 1970-71 (எதிர்பார்க்கப்படுகிறது) .. | 2,125 | 1,764 |

### விவர அறிக்கை II.

மாற்றியமைக்கப்பட்ட, அதிகரிக்கப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கையைக் காட்டும் விவர அறிக்கை.

| ஆண்டு. | மாற்றியமைக்கப்பட்ட பேருந்துத் தொகுதிகளின் எண்ணிக்கை. | அதிகரிக்கப்பட்ட பேருந்துத் தொகுதிகளின் எண்ணிக்கை. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1959-60 .. .. .. | 114 | 10 | 124 |
| 1960-61 .. .. .. | 35 | 134 | 169 |
| 1961-62 .. .. .. | 11 | 75 | 86 |
| 1962-63 .. .. .. | 130 | 44 | 174 |
| 1963-64 .. .. .. | 43 | 136 | 179 |
| 1964-65 .. .. .. | 137 | 126 | 263 |
| 1965-66 .. .. .. | 113 | 180 | 293 |
| 1966-67 .. .. .. | 105 | 117 | 222 |
| 1967-68 — .. .. | 151 | 358 | 509 |
| 1968-69 .. .. .. | 101 | 215 | 316 |
| 1969-70 .. .. .. | 192 | 29 | 221 |
| 1970-71 (எதிர்பார்க்கப்பட்டது).. | 205 | 150 | 355 |



### விவர அறிக்கை III.

1959-60-லிருந்து 1970-71 வரையிலான ஆண்டுகளில் வரவு, செலவு, நிகர வருவாய், லாபம் இவற்றின் விவரங்கள்.

| ஆண்டு. | மொத்த வருவாய். | செலவு. | நிகர வருவாய். | நிதி. | நிகர லாபம். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | (ரூபாய் லட்சத்தில்.) | | | |
| 1959-60 .. .. .. .. .. | 2,66·53 | 2,01·70 | 64·83 | 37·73 | 27·10 |
| 1960-61 .. .. .. .. .. | 3,16·27 | 2,39·67 | 76·60 | 61·37 | 15·23 |
| 1961-62 .. .. .. .. .. | 3,91·65 | 2,97·21 | 94·44 | 75·81 | 18·63 |
| 1962-63 .. .. .. .. .. | 4,68·96 | 3,78·72 | 90·24 | 77·82 | 12·42 |
| 1963-64 .. .. .. .. .. | 5,50·83 | 4,87·10 | 63·73 | 91·82 | (—)28·09 |
| 1964-65 .. .. .. .. .. | 6,75·82 | 5,89·43 | 86·39 | 1,04.63 | (—)18·24 |
| 1965-66 .. .. .. .. .. | 8,39·27 | 7,40·67 | 98·60 | 1,12.99 | (—)14·39 |
| 1966-67 .. .. .. .. .. | 9,68·15 | 8,96·55 | 71·60 | 1,32.60 | (—)61·00 |
| 1967-68 .. .. .. .. .. | 12,23·81 | 10,87·99 | 1,35·82 | 1,59.07 | (—)23·25 |
| 1968-69 .. .. .. .. .. | 16,48·32 | 14,88·81 | 1,59·51 | 1,88.89 | (—)29·38 |
| 1969-70 .. .. .. .. .. | 17,95·11 | 16,43·09 | 1,52·02 | 1,96.52 | (—)44·50 |
| 1970-71 (எதிர்பார்க்கப்படுகிறது) .. .. .. | 19,12·57 | 17,83·29 | 1,23·28 | 2,06.50 | (—)83·22 |

## விவர அறிக்கை IV.

### தமிழ்நாடு அரசு போக்குவரத்து—நேர்முக, மறைமுகக் கட்டணங்களைக் காட்டும் விவர அறிக்கை.

### பகுதி I.

| செலவு விவரங்கள். (1) | 1969–70. (கணக்குகள்). (2) | 1970–71 (எதிர் பார்க்கப் படுகிறது). (3) |
|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்.) | |
| I–A. நேர்முகக் கட்டணங்கள்— | | |
| 1. போக்குவரத்து, தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு ஊதியம். | 3,90·62 | 4,38·86 |
| 2. எரிபொருள் .. .. .. .. | 3,45·23 | 3,54·31 |
| 3. டயர்களும், ட்யூப்களும் (காற்றுக் குழாய்களும்)- | 93·27 | 1,00·61 |
| 4. சில்லரை பாகங்களும், அணுகு சாதனங்களும். } 5. பழுது பார்த்தலும், பணி செய்தலும். | 2,03·42 | 2,32·00 |
| 6. மோட்டார் வண்டிகளுக்கான வரிகளும், மேற்கட்டணங்களும். | 2,70·39 | 2,86·28 |
| 7. அலுவலர், நிர்வாகம் இவற்றிற்கான சம்பளம். | 34·34 | 41·15 |
| 8 வாடகை, கட்டணம், வரி, துணி வகை, மற்றும் ஏனைய சில்லரைச் செலவுகள். | 42·47 | 47·89 |
| 9. அரசு போக்குவரத்துத் துறையின் மத்தியப் பணிக்களரிக்கு நேர்முகக் கட்டணங்கள். | 70·86 | 93·80 |
| 10 ராணித் தோட்டம் பணிக்களரிக்கு நேர்முகக் கட்டணங்கள். | 42·46 | 38·5[illegible] |
| மொத்தம்—நேர்முகக் கட்டணங்கள். | 14,93·06 | 16,33·4[illegible] |
| | ரூ. காசு. | ரூ. காசு |
| B. ஒரு மைலுக்கு நேர்முகக் கட்டணங்கள்— | | |
| 1. சென்னைப் பிரிவு (மாநகர், புறநகர், மாவட்டம், கடுவிசை உட்பட). | 1 41 | 1 4[illegible] |
| 2. கன்னியாகுமரிப் பிரிவு .. .. | 1 31 | 1 2[illegible] |





| செலவு விவரங்கள். (1) | 1969–70 (கணக்குகள்). (2) | 1970–71 (எதிர் பார்க்கப் படுகிறது). (3) |
|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்.) | |
| II–A. மறைமுகக் கட்டணங்கள்— | | |
| 1. விடுப்பும், ஓய்வூதியமும் .. .. | 30·52 | 31·50 |
| 2. தணிக்கைக் கட்டணம் .. .. | 1·45 | 1·50 |
| 3. மூதலீட்டில் வட்டி .. .. | 1,04·23 | 1,10·30 |
| 4. அரசுப் போக்குவரத்துத் துறையின் மத்தியப் பணிக்களரிக்கு மறைமுகக் கட்டணங்கள்- | 10·57 | 7·80 |
| 4. ராணித் தோட்டம் பணிக்களரிக்கு மறைமுகக் கட்டணங்கள். | 3·26 | 4·71 |
| மொத்தம்—மறைமுகக் கட்டணங்கள் | 1,50·03 | 1,55·81 |
| | ரூ. காசு | ரூ. காசு |
| B. ஒரு மைலுக்கு மறைமுகக் கட்டணங்கள்— | | |
| 1. சென்னைப் பிரிவு (மாநகர், புறநகர், மாவட்டம், கடுவிசை உட்பட). | 0·15 | 0·15 |
| 2. கன்னியாகுமரிப் பிரிவு .. .. | 0·07 | 0·06 |

### பகுதி II.

| செலவு விவரங்கள். (1) | 1969–70 (கணக்குகள்). (2) | 1970–71 (எதிர் பார்க்கப் படுகிறது). (3) |
|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்.) | |
| 1. போக்குவரத்துப் பணிகளுக்கான நேர்முகக் கட்டணங்கள். | 13,79·74 | 15,01.10 |
| 2. அரசு போக்குவரத்து மத்தியப் பணிக்களரி, ராணித்தோட்டம் பணிக்களரிகளுக்கு நேர்முகக் கட்டணங்கள். | 1,13·32 | 1,32·38 |
| 3. மொத்தம்—நிறுவனங்களுக்கான நேர்முகக் கட்டணங்கள். | 14,93·06 | 16,33·48 |
| 4. போக்குவரத்துப் பணிக்கு மறைமுகக் கட்டணங்கள். | 1,36·20 | 1,43·30 |
| 4. அரசு போக்குவரத்து மத்தியப் பணிக்களரி, ராணித்தோட்டம் பணிக்களரிகளுக்கு மறைமுகக் கட்டணங்கள். | 13·83 | 12·51 |
| 6. மொத்தம்—நிறுவனங்களின் மேல் மறைமுகக் கட்டணங்கள். | 1,50·03 | 1,55·81 |
| 7. மொத்தம்—தமிழ்நாடு போக்குவரத்துத் துறைக்கு நேர்முக, மறைமுகக் கட்டணங்கள். | 16,43·09 | 17,89·29 |

[1971 ஜூலை 21

பகுதி III.

| | பங்குத் தொகை. | | 1 எப்ரல் 1971 (அன்றுள்ள படி). |
|---|---|---|---|
| | 1969-70. | 1970-71 (எதிர்பார்க்கப் படுகிறது). | |
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் லட்சத்தில.) | | |
| 1. தேய்மான சேமநிதி | 1,96·52 | 2,06·50 | 9,04·89 |
| 2. வளர்ச்சி நிதி .. .. | .. | .. | 31·80 |
| 3. பயணிகள் வசதிக்கான நிதி | .. | .. | 3·50 |
| 4. வீட்டு வசதி நிதி .. .. | .. | .. | 12·18 |
| | 1,96·52 | 2,06·50 | 9,52·37 |

விவர அறிக்கை V.

மூலதன முதலீடு.

| அன்றுள்ளபடி | மொத்தம். | ஒவ்வோராண்டும் கூடுதல். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் லட்சத்தில்.) | |
| 1-4-1959 .. .. .. | 3,01·84 | 25·66 |
| 1-4-1960 .. .. .. | 3,68·08 | 66·24 |
| 1-4-1961 .. .. .. | 4,33·66 | 65·58 |
| 1-4-1962 .. .. .. | 4,96·05 | 62·39 |
| 1-4-1963 .. .. .. | 5,11·06 | 15·01 |
| 1-4-1964 .. .. .. | 6,88·54 | 1,77·48 |
| 1-4-1965 .. .. .. | 8,48·86 | 1,60·32 |
| 1-4-1966 .. .. .. | 10,02·02 | 1,53·16 |
| 1-4-1967 .. .. .. | 12,03·17 | 2,01·15 |
| 1-4-1968 .. .. .. | 14,20·51 | 2,17·34 |
| 1-4-1969 .. .. .. | 16,67·16 | 2,46·65 |
| 1-4-1970 .. .. .. | 18,13·88 | 1,46·72 |
| 1-4-1971 (தற்காலிகமானது) | 20,05·73 | 1,91·85 |



1971 ஜூலை 21]

விவர அறிக்கை VI.

குரோம்பேட்டையில் உள்ள அரசு போக்குவரத்துத் துறையின் மத்தியப் பணிக் களரியில் கட்டப்பட்ட பேருந்துக் கூடுகளின் எண்ணிக்கை:—

| கால அளவு. | கட்டப்பட்ட பேருந்துக் கூடுகளின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1958-59 .. .. | 66 |
| 1959-60 .. .. | 83 |
| 1960-61 .. .. | 97 |
| 1961-62 .. .. | 127 (20 நனி சீர் வசதிப் பேருந்துகள், 3 லாரிகள் உட்பட). |
| 1962-63 .. .. | 122 (28 நனி சீர் வசதிப் பேருந்துகள் உட்பட). |
| 1963-64 .. .. | 182 (37 நனி சீர் வசதிப் பேருந்துகள், 7 லாரிகள் உட்பட). |
| 1964-65 .. .. | 292 (42 நனி சீர் வசதிப் பேருந்துகள், 4 லாரிகளாக மாற்றப்பட்ட 60 பேருந்துகள், ஏனைய 15 பணிகள் உட்பட). |
| 1965-66 .. .. | 324 (23 நனி சீர் வசதிப் பேருந்துகள், ஏனைய துறைகளுக்காக 61 பணிகள் உட்பட). |
| 1966-67 .. .. | 342 (15 நனி சீர் வசதிப் பேருந்துகள் மத்திய பிரதேசத்திற்காகக் கட்டப்பட்ட 7 பேருந்துகள் ஏனைய துறைகளுக்காக 151 பணிகள் உட்பட). |
| 1967-68 .. .. | 432 (5 கடுவிசைப் பேருந்துகள், 133 கடுவிசைப் பேருந்துகள் போன்ற பேருந்துகள், 2 லாரிகள், மத்தியப் பிரதேசத்திற்காகக் கட்டப்பட்ட 2 பேருந்துகள், ஏனைய துறைகளுக்காக நான்கு பணிகள், உலகத் தொழிற் சந்தைக்காகக் கட்டப்பட்ட 3 சிறப்பு வகைப் பேருந்துகள் உட்பட). |
| 1968-69 — — | 328 (209 மாநகர-வெளியூர்ப் பேருந்துகள், 71 கடுவிசைப் பேருந்துகள் போன்ற பேருந்துகள், 3 லாரிகள், அரசின் ஏனைய துறைகளுக்காகக் கட்டப்பட்ட 45 பேருந்துக் கூடுகள் உட்பட). |
| 1969-70 .. .. | 279 (158 மாநகர-வெளியூர்ப் பேருந்துகள், 15 மாடிப் பேருந்துகள், 7 கடுவிசைப் பேருந்துகள் போன்ற பேருந்துகள், 4 தொடர்ப் பேருந்துகள், அரசின் ஏனைய துறைகளுக்காகக் கட்டப்பட்ட 95 பேருந்துக் கூடுகள் உட்பட). |
| 1970-71 .. .. | 324 (202 மாநகர-வெளியூர்ப் பேருந்துகள், 2 மாடிப் பேருந்து, 1 கடுவிசைப் பேருந்து போன்ற பேருந்து, 3 கடுவிசைப் பேருந்துகள், 62 நிற்கும் பேருந்துகள், அரசின் ஏனைய துறைகளுக்காகக் கட்டப்பட்ட 54 பேருந்துக் கூடுகள் உட்பட). |

[1971 ஜூலை 21

## விவர அறிக்கை VII.

ராணித் தோட்டப் பணிக் களரியில் கட்டப்பட்ட பேருந்துக் கூடுகளின் எண்ணிக்கை:—

| கால அளவு. | கட்டப்பட்டுள்ள பேருந்துக் கூடுகளின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1964–65 .. .. | 44 (4 நனி சீர் வசதிப் பேருந்துகள் உட்பட). |
| 1965–66 .. .. | 60 (21 நனி சீர் வசதிப் பேருந்துகள் உட்பட; ஆனால், ஏனைய துறைகளுக்கு ஆற்றிய 23 பணிகள் நீங்கலாக). |
| 1966–67 .. .. | 72 (7 நனி சீர் வசதிப் பேருந்துகள், ஏனைய துறைகளுக்கு ஆற்றிய 32 பணிகள் உட்பட). |
| 1967–68 .. .. | 111 (12 நனி சீர் வசதிப் பேருந்துகள், அரசின் ஏனைய துறைகளுக்காகக் கட்டிய 12 பேருந்துக் கூடுகள் உட்பட). |
| 1968–69 .. .. | 83 (15 நனி சீர் வசதிப் பேருந்துகள், ஏனைய துறைகளுக்காக ஆற்றிய 15 பணிகள் உட்பட). |
| 1969–70 .. .. | 53 (6 கடுவிசைப் பேருந்துகள், 10 சாதாரணப் பேருந்துகள், ஏனைய துறைகளுக்காக ஆற்றிய 37 பணிகள் உட்பட). |
| 1970–71 .. .. | 68 (22 கடுவிசைப் பேருந்துகள், 31 சாதாரணப் பேருந்துகள், ஏனைய துறைகளுக்காக 15 பேருந்துக் கூடுகள் உட்பட). |

## இணைப்பு 3.

[522ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### 1970-71-ல் போக்குவரத்துத் துறையின் நிர்வாகம் பற்றிய குறிப்புரை.

சமூக-பொருளாதார வளர்ச்சிக்குப் போக்குவரத்து மிக இன்றியமையாததாகும். சாலைப் போக்குவரத்து ஏற்பாட்டின் திறமை, முக்கியமாக, அது பொதுமக்களுக்கு ஆற்றும் தொண்டினையொட்டி மதிப்பிடப்படுகிறது. சாலைப் போக்குவரத்தின் இயங்கு திறனை மேம்படுத்தவும் அது பொதுமக்களுக்கு ஆற்றும் பணியைப் பெருக்கவும் சீரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1970-71-ல் பேருந்துப்போக்குவரத்து ஒரு சீராக வளர்ந்து வந்துள்ளதைக் கீழ்க்கண்ட விவர அறிக்கை தெளிவாகக் காட்டுகிறது :-

| கீழ்க்காணும் நாள் வரை. | பேருந்துகள்: தனியார். | பேருந்துகள்: தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை. | சரக்கு வண்டிகள்: வாடகை லாரிகள். | சரக்கு வண்டிகள்: தனியார் லாரிகள். | ஒப்பந்த வண்டிகள். | ஏனைய போக்குவரத்து ஊர்திகள். | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|
| 31–3–1969 .. .. .. .. | 5,661 | 1,979 | 12,004 | 3,182 | 9,019 | 1,445 | 32,290 |
| 31–3–1970 .. .. .. .. | 5,840 | 2,006 | 12,593 | 2,863 | 10,161 | 1,840 | 35,303 |
| 31–3–1971 .. .. .. .. | 6,013 | 2,179 | 13,475 | 2,969 | 11,124 | 2,216 | 37,976 |



1971 ஜூலை 21]

இணைப்பு 3—தொடர்ச்சி.

### போக்குவரத்துத் துறை அமைப்பு

கீழ்க்காணும் சட்டங்களையும், அவற்றின்கீழ்ச் செய்யப்பட்டுள்ள விதிகளையும் செயல்படுத்துவது இத் துறையின் முக்கிய பணியாகும் :—

(1) மோட்டார் வண்டிகள் சட்டம், 1939.

(2) தமிழ் நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டம், 1931.

(3) தமிழ் நாடு மோட்டார் வண்டிகள் (பயணிகள்—சரக்குகள் வரி விதிப்பு) சட்டம், 1952.

போக்குவரத்துத் துறை, போக்குவரத்துத் துறை ஆணையாளரின் நிர்வாகப் பொறுப்பில் செயல்படுகிறது. போக்குவரத்து ஆணையாளர் வருவாய்த் துறை வாரியத்தின் உறுப்பினராவார். போக்குவரத்து ஆணையாளருக்கு உதவியாக மூன்று போக்குவரத்துத் துணை ஆணையாளர்களும், இரண்டு உதவிச் செயலாளர்களும் உள்ளனர். மாவட்டங்களில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளாகச் செயல்படுகின்றனர். அவர்களுக்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் உதவிபுரிகின்றனர். இவ்வலுவலர்கள் வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளுக்குச் செயலாளர்களுமாவர். சென்னை மாநகரில், காவல்துறைக் கமிஷனர் வட்டாரப் போக்குவரத்து அதிகாரியாகச் செயல்படுகின்றார். இவருக்குக் காவல் துறை (போக்குவரத்து—உரிமம் வழங்கல்) துணைக் கமிஷனர் செயலாளராக உள்ளார். மாநகரில், வட்டாரப் போக்குவரத்து அதிகாரியாக அவர் பணியாற்றுகிறார். தமிழ் நாடு 1931-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டம், தமிழ் நாடு 1952-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (பயணிகள்—சரக்குகள் மீதான வரி விதிப்பு) சட்டம் ஆகியவற்றின்கீழ் வரி வசூலிப்பைக் கவனிப்பாக்குவதில் காவல் துறைக் கமிஷனருக்கு உதவி புரியும் பொருட்டும், மோட்டார் வண்டிகள் சட்டத்தை நிர்வகிப்பதற்கும், சென்னை மாநகரில் போக்குவரத்துத் துறை உதவி ஆணையாளர் ஒருவர் காவல் துறைக் கமிஷனருக்கு உதவி புரிகிறார்.

## அனுமதிச் சீட்டுகள் வழங்குதல்

பேருந்து போக்குவரத்து வசதிகளின் மேம்பாடு கீழ்க்காணும் வழி முறைகளில் ஏற்படுகின்றது :—

(1) புதிய பேருந்து வழித்தடங்களுக்கு அனுமதிச் சீட்டுகள் வழங்குதல், ஏற்கெனவேயுள்ள வழித்தடங்களில் கூடுதலான பேருந்துகளுக்கும் அனுமதிச் சீட்டுகள் வழங்குதல் மூலம் வண்டிகளின் எண்ணிக்கையைப் பெருக்குதல்.

(2) பேருந்துகளின் பயணத் தடவைகளின் எண்ணிக்கையை அதிகரித்தலும், தற்போது உள்ள வழித்தடங்களை நீட்டித்தலும்;

(3) தற்போதுள்ள வண்டிகளுக்குப் பதிலாக இருக்கைகள் அதிகமுள்ள பெரிய வண்டிகளை விடுவதன் மூலம் இருக்கைகளின் எண்ணிக்கையை உயர்த்துதல்.

1970, மார்ச் 31-ம் நாள், 1971, மார்ச் 31-ம் நாள் ஆகிய நாட்கள் வரையுள்ள பேருந்துகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப் பட்டுள்ளது :—

1970, மார்ச் 31-ம் நாள் வரை உள்ள பேருந்துகளின் 7,846 எண்ணிக்கை.

1971, மார்ச் 31-ம் நாள் வரை உள்ள பேருந்துகளின் 8,192 எண்ணிக்கை.

இம் மாநிலத்தில். பேருந்துகளுக்குப் புதிய அனுமதிச் சீட்டுகள் வழங்குவதில் தாராளமான கொள்கையைக் கடைப்பிடிக்குமாறு எல்லா வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளுக்கும் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. பேருந்து அனுமதிச்சீட்டுகளைப் பொறுத்தமட்டில் (monopoly) ஏகபோக உரிமையைத் தடுக்கும் நோக்கத்தோடு, தனியார் பேருந்து உரிமையாளர்கள் எத்தனை அனுமதிச் சீட்டுகளை வைத்திருக்கலாம் என்பதற்கு மேல் வரம்பு விதிக்க அரசு முடிவு செய்துள்ளது.

## நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து

நாட்டுடைமை ஆக்கும் கொள்கையில் மாறுதல் எதும் இல்லை. அது கீழ்க்கண்ட வகையைச் சேர்ந்த பேருந்து வழித்தடங் களுக்குப் பொருந்தும் :—

(1) 75 மைல்களும் அதற்கு மேலுமுள்ள சாதாரணப் பேருந்துப்பணி, விரைவுப் பேருந்துப் பணிகளின் வழித்தடங்கள் ;

(2) எவ்வளவு தொலைவாக இருந்தபோதிலும், சென்னை மாநகரிலிருந்து தொடங்கும் அல்லது அங்கு முடிவடையும் வழித்தடங்கள் அனைத்தும் ;

(3) கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து தொடங்கும் அல்லது அங்கு முடிவடையும் வழித்தடங்கள் உட்பட கன்னியா குமரி மாவட்டத்திலுள்ள வழித்தடங்கள் அனைத்தும்.





இக் கொள்கை படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. இவ்வழித்தடங்களில் தனியார் பேருந்து உரிமையாளர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள உரிமங்களின் செல்திறன் கால அளவு முடிவடையும்போது (இரு மாநிலங்களுக் கிடையிலான வழித் தடங்கள் உட்பட) இந்த வழித்தடங்கள் அரசால் மேற்கொள்ளப் படுகின்றன. இக் கொள்கை செவ்வையாகவும் உரிய காலத்திலும் செயல்படுத்தப்படுவதற்காக, மோட்டார் வண்டிகள் சட்டத்தின் சில விதித் துறைகள் திருத்தப்பட்டுள்ளன.

நாட்டுடைமை ஆக்கப்பட்ட போக்குவரத்து செயல்படுவது குறித்து விரிவான ஆய்வுரை ஒன்று பேரவையில் தனியாக வைக்கப்படும்.

## சரக்கு வண்டிகள்.

வளர்ந்துவரும் வர்த்தகத்திற்கும், வாணிபத்திற்கும் ஏற்ப வாடகை லாரிகளுக்கும், தனியார் லாரிகளுக்கும் மாநிலம் முழுவதிலும் அனுமதிச் சீட்டுகள் தாராளமாக வழங்கப்படுகின்றன. வாடகை லாரிகளைக் கொண்டு வந்து காண்பித்தவுடன், முறையான அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படும் வரையில், அவற்றிற்குத் தற்காலிக அனுமதிச் சீட்டுகள் உடனடியாக வழங்கப்படுகின்றன. 1970–71-ல் 988 சரக்கு வண்டிகள் அதிகரித்துள்ளன.

தென் மாநிலங்களில் சரக்கு வண்டிப் போக்குவரத்துத் தடை யின்றி நடைபெற வகைசெய்யும் நோக்குடன், இம் மாநிலத்திலுள்ள லாரிகளுக்கு பொது மாநில அனுமதிச்சீட்டுகள் Composite permits வழங்கப்படுகின்றன. இந்த அனுமதிச்சீட்டுகள் கேரளா, மைசூர், ஆந்திரப் பிரதேசம், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களிலும் செல் திறன் உள்ளவையாகும். இதற்கு மற்ற மாநிலங்களின் போக்கு வரத்து அதிகாரிகள் மேலொப்பமிட வேண்டியதில்லை. அதுபோன்ற அனுமதிச்சீட்டுகள் வழங்கப்பட்ட வண்டிகளின் எண்ணிக்கை 200 ஆகும். பொது மாநில அனுமதிச்சீட்டை 200-லிருந்து 300-ஆக உயர்த்தும் செயற்குறிப்புக்கு தமிழ் நாடு லாரி உரிமை யாளர்கள் சங்கம் கடும் எதிர்ப்பு தெரிவித்ததால் அது தள்ளி வைக்கப்பட்டுள்ளது. சரக்கு வண்டிகள் அதிக அளவுச் சரக்குகளை ஏற்றிச் செல்ல அனுமதிக்க வேண்டுமென்ற கோரிக்கை தொடர்ந்து இருந்து வருவதால், 1970-ம் ஆண்டு ஜூலை திங்கள் 1-ஆம் நாளிலிருந்து. சரக்கேற்றிய நிலையில் பேரளவு எடை 12,192 கிலோ கிராமிலிருந்து 15,240 கிலோ கிராமாக அல்லது வண்டிகளின் பதிவு செய்யப்பட்ட எடை இவற்றில் எது குறைவாகவுள்ளதோ அந்த எடை அளவுக்கு உயர்த்தப் பட்டுள்ளது.

## ஒப்பந்த வண்டிகள்

வாடகைக் கார்களுக்கும், சுற்றுலா வாடகைக் கார்களுக்கும் மாநிலம் முழுவதிலும் தாராளமாக அனுமதிச் சீட்டுகள் வழங்கப் படுகின்றன. சுற்றுலாப் பயணிகளுக்கு வசதியாக இருக்கும்

[1971 ஜூலை 21

பொருட்டு, புதிய அம்பாஸிடர் கார்களுக்கும், இறக்குமதி செய்யப்பட்ட கார்களுக்கும் சுற்றுலா வாடகைக் கார் அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படுகின்றன. 1971-ம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31-ஆம் நாள் வரை, 8,168 வாடகைக் கார்களும், 760 சுற்றுலா வாடகைக் கார்களும், 243 தனிப்பட்ட சீர்வசதிப் பேருந்துகளும் 32 சிறப்பு வசதிப் பேருந்துகளும் இயங்கிவந்தன. சென்ற ஆண்டில், இம் மாநிலத்தில் 7,651 வாடகைக் கார்களும், 509 சுற்றுலா வாடகைக் கார்களும், 370 தனிப்பட்ட சீர்வசதிப் பேருந்துகளும், 26 சிறப்பு வசதிப் பேருந்துகளும் இயங்கி வந்தன.

## ஆலோசனைக் குழுக்கள்.

(1) மோட்டார் போக்குவரத்தின் கொள்கை, நிர்வாகம் குறித்த பொருள்கள்பற்றி அரசுக்கு ஆலோசனை கூற, அரசுப் போக்கு வரத்துத் துறையின் பொறுப்பு வகிக்கும் அமைச்சரைத் தலைவராகவும், சட்டமன்ற உறுப்பினர்களையும் பேருந்து போக்கு வரத்துத் தொழிலில் ஈடுபட்டுள்ளோரின் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகவும் கொண்ட, "அரசுப் போக்குவரத்துத் துறை ஆலோசனைக் குழு" ஒன்று உள்ளது.

(2) மாவட்ட அளவில், மோட்டார் போக்குவரத்துத் தொடர்பானவற்றில் வளர்ச்சி மன்றங்கள் அரசுக்கு ஆலோசனை கூறுகின்றன.

(3) போக்குவரத்துக் கட்டுப்பாட்டையும், போக்குவரத்துப் பாதுகாப்பையும் ஒட்டிய எல்லா நடவடிக்கைகளையும் கவனிப்பதற்காகத் "தமிழ்நாட்டுச் சாலை மேம்பாடு-போக்குவரத்துத் திட்டக் குழு" என்னும் உயர் அதிகாரக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில், மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் ஒரு குழுவான மாவட்டச் சாலை மேம்பாடு-போக்குவரத்துத் திட்டக் குழு" ஒன்று உள்ளது. சென்னை மாநகரில், சென்னை மாநகரச் சாலை மேம்பாடு-போக்குவரத்துத் திட்டக் குழு என்ற தனிக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. பற்பல சாலைப் பணிகளின் பொறுப்பேற்றுள்ள பல்வேறு முகவர் அமைப்புகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் பொருட்டு மாநகரச் சாலைகள் மேம்பாட்டு-போக்குவரத்துத் திட்டக் குழுவின் ஒருங்கிணைப்புத் துணைக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

(4) சென்னை மாநகரில், சென்னை மாநகர் சாலை மேம்பாடு-போக்குவரத்துத் திட்டக் குழு ஒன்றும் செயல்பட்டு வருகிறது.

## வரி விதிப்பு.

பேருந்துகளின் வரி வீதங்கள் 1970 ஜூலைத் திங்கள் 1-ம் நாளிலிருந்து கீழ்க்கண்டவாறு உயர்த்தப்பட்டுள்ளன:—

| | |
|---|---|
| தினந்தோறும் 270 கிலோ மீட்டர்களுக்கு மேற்படாமல் பயணம் செய்யும் பேருந்துகளுக்கு. | காலாண்டு ஒன்றுக்கு ரூ. 50-லிருந்து ரூ. 60-ஆக. |
| தினந்தோறும் 270 கிலோ மீட்டர்களுக்கு மேற்பட்டு பயணம் செய்யும் பேருந்துகளுக்கு. | காலாண்டு ஒன்றுக்கு ரூ. 55-லிருந்து ரூ. 65-ஆக. |



1971 ஜூலை 21]

நகராட்சி எல்லைகளுக்குள் ஓடும்நகர்ப் பேருந்துகளின் வரி வீதங்களிலும், நகராட்சி எல்லைகளில் பாதியும், அதற்கப்பால் பாதியும் உள்ள நகர்ப்பணி வழித்தடங்களில் ஓடும் பேருந்துகளின் வரி வீதங்களிலும் மாற்றம் ஏதும் இல்லை. சரக்கு வண்டிகளின் எடை சரக்கேற்றிய நிலையில் 12,192 கிலோ கிராமிலிருந்து 15,240 கிலோ கிராமாக உயர்த்தப்பட்டுள்ளதால், சரக்கு வண்டிகளின் வரி வீதங்கள் கீழ்க்கண்டவாறு திருத்தி அமைக்கப் பட்டுள்ளன :—

### வண்டிகளின் வகை.

சரக்கு வண்டிகள் (தொடர் வண்டிகள் நீங்கலாக).

| வண்டிகளின் வகை | வரி வீதம். ரூ. | காசு. |
|---|---|---|
| 10,500 கிலோ கிராமுக்கு மேற்பட்டு ஆனால், 12,000 கிலோ கிராமுக்கு மேற்படாமல். | 825 | 00 |
| 12,000 கிலோ கிராமுக்கு மேற்பட்டு, ஆனால், 12,500 கிலோ கிராமுக்கு மேற்படாமல். | 865 | 00 |
| 12,500 கிலோ கிராமுக்கு மேற்பட்டு, ஆனால், 13,000 கிலோ கிராமுக்கு மேற்படாமல். | 905 | 00 |
| 13,000 கிலோ கிராமுக்கு மேற்பட்டு, ஆனால் 13,500 கிலோ கிராமுக்கு மேற்படாமல். | 945 | 00 |
| 13,500 கிலோ கிராமுக்கு மேற்பட்டு, ஆனால், 14,000 கிலோ கிராமுக்கு மேற்படாமல். | 985 | 00 |
| 14,000 கிலோ கிராமுக்கு மேற்பட்டு, ஆனால், 14,500 கிலோ கிராமுக்கு மேற்படாமல். | 1,025 | 00 |
| 14,500 கிலோ கிராமுக்கு மேற்பட்டு, ஆனால், 15,000 கிலோ கிராமுக்கு மேற்படாமல். | 1,065 | 00 |
| 15,000 கிலோ கிராமுக்கு மேற்படுபவை .. .. .. | 1,065 | 00 |
| | 15,000 கிலோ கிராமுக்கு மேற்பட்டுள்ள ஒவ்வொரு 250 கிலோ கிராம் எடைக்கும் அதன் பகுதிக்கும் ரூ. 25 உடன சேர்த்துக் கொள்ள வேண்டும். | |

1969 ஜூன் திங்கள் 30-ம் நாள்வரை, இருக்கை ஒன்றுக்கு, காலாண்டு ஒன்றுக்கு தனிப்பட்ட சீர்வசதிப் பேருந்துகளுக்கான வரி வீதம் ரூ. 30-ஆக இருந்தது. 1969 ஜூலைத் திங்கள் 1-ம் நாளிலிருந்து இந்த வரி வீதம் காலாண்டிற்கு, இருக்கை ஒன்றுக்கு ரூ. 50-ஆக உயர்ந்தது. முறையான பேருந்துகளுக்கும் தனிப்பட்ட சீர்வசதிப் பேருந்துகளுக்கும், இடையே வேண்டாத போட்டியைத் தவிர்க்கும் பொருட்டும், தனிப்பட்ட சீர்வசதிப் பேருந்துகள் தவறாகப் பயன்படுத்தப்படுவதை நிறுத்தவும் தனிப்பட்ட சீர்வசதிப் பேருந்துகளின் வரி வீதம் 1970-ல் காலாண்டு ஒன்றுக்கு இருக்கை ஒன்றுக்கு ரூ. 100-ஆக உயர்த்தப்பட்டது. தனிப்பட்ட சீர்வசதிப் பேருந்துகள் உரிமையாளர்கள் ரிட் மனு ஒன்று தாக்கல் செய்ததன்பேரில், இந்த வரி வீதம், செல்லாதென உயர்நீதிமன்றம் குறிப்பிட்டு தனிப்பட்ட சீர்வசதிப் பேருந்துகளுக்கு இருக்கை

ஒன்றுக்கு, காலாண்டிற்கு உள்ள வரி விதம் பழைய கட்டண விதமாகிய ரூ. 30-ஆகவே வசூலிக்கப்படவேண்டும் என்றும் ஆணை பிறப்பித்தது. தலைமை நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்வதென அரசு முடிவு செய்துள்ளது.

### வருவாய்.

1970 ஏப்ரல் திங்கள் 1-ம் நாளிலிருந்து 1971 மார்ச் திங்கள் 31-ம் நாள் வரை ரூ. 21.81 கோடி வருவாய் கிடைத்தது ; முந்தைய ஆண்டில் (1969–70) இந்த வருவாய் ரூ. 19.46 கோடியாக இருந்தது.

### செயற்குறிப்புகள்

மாநிலங்களுக்கிடையிலான கீழ்க்காணும் செயற்குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன:—

(1) ஒருமுனை வரி செலுத்தி ஓட்டப்படுவதற்கு தமிழ்நாடு, மைசூர், ஆகிய ஒவ்வொரு மாநிலத்திற்கும் லாரிகளின் எண்ணிக்கையை 1,000-லிருந்து 1,100 ஆக அதிகப்படுத்தும் செயற்குறிப்புகள்.

(2) ஒருமுனை வரி செலுத்தி ஓட்டப்படுவதற்கு தமிழ்நாடு, கேரளா, ஆகிய ஒவ்வொரு மாநிலத்திற்கும் தற்போதுள்ள வாடகை லாரிகளின் எண்ணிக்கையை 800-லிருந்து 900-ஆக அதிகப்படுத்தும் செயற்குறிப்பு.

(3) ஒருமுனை வரி செலுத்தி ஓட்டப்படுவதற்கு தமிழ்நாடு, கேரளா ஆகிய ஒவ்வொரு மாநிலத்திற்கும் தற்போதுள்ள வாடகை கார்களின் பங்களவை 250 லிருந்து 350 ஆக அதிகப்படுத்தும் செயற்குறிப்பு.

(4) ஒருமுனை வரி செலுத்தி ஓட்டப்படுவதற்குத் தமிழ்நாடு புதுச்சேரி ஆகிய மாநிலங்களுக்கிடையே ஓடும் வண்டிகளுக்கு மேலொப்பமிட்டும் அனுமதிச் சீட்டு வழங்கும் செயற்குறிப்பு.

(5) தமிழ்நாடு, மைசூர், ஆகிய மாநிலங்களுக்கிடையே ஓடும் பேருந்துகளுக்குரிய அனுமதிச் சீட்டுகளைப் பகிர்ந்துகொள்ளும் செயற்குறிப்பு இன்னும் முடிவாகவில்லை.

### முடிவுரை.

சட்டமன்றப் பேரவையில் நடக்கும் விவாதத்தின்போது போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தும் வகையில் தெரிவிக்கப்படும் கருத்துக்களை அரசு வரவேற்கும். மொத்தத்தில், அண்மை ஆண்டுகளில் சாலைப் போக்குவரத்து படிப்படியாக நெடுகிலும் மேம்பாடு அடைந்துள்ளது. வரும் ஆண்டுகளிலும் சீரான முன்னேற்றம் காணப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# INDEX TO THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES.

## SECOND SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

17TH, 19TH, 20TH AND 21ST JULY 1971.

*Volume VIII (Nos. 1 to 4).*

## A

PAGES

ABUSALI, THIRU M.A.—
Budget (Revised), 1971–72, Voting :
Motor Vehicles Acts—Administration Road Transport Schemes and Capital Outlay on Road Transport Schemes ... ... ... ... 561-562

ACCIDENT—
Fire accidents in Mylapore, relief to victims ... 135

ACCOUNTANT-GENERAL—
Police assistance to—to deal with employee—demonstrators ... ... ... ... ... 15–17

ADITANAR, THIRU SI. PA.—
Budget (Revised), 1971–72, Voting :
Co-operation ... ... ... ... ... 300, 301.
Khadi ... ... ... ... ... ... 302–305, 317, 318, 331, 333, 334–335, 336, 356, 357, 358, 359, 360, 361, 364, 366, 367–379, 380

PAGES.

A—*cont.*

AGRICULTURE—
Crop insurance scheme for Tamil Nadu, introduction ... 513-515
Fertilisers, prices ... 276-278
Fertilisers, subsidy by State Government ... 278-279
Paddy fields in Lalgudi Taluk, conversion into sugarcane growing fields ... 292-294

ALAGARSWAMY, THIRU S.—
Budget (Revised), 1971-72, Voting:
Co-operation Khadi ... 305-310, 379

ANANDANAYAKI, THIRUMATHI T. N.—
Budget (Revised), 1971-72, Voting:
Animal Husbandry ... 217, 233-237
Co-operation Khadi ... 330-336 356, 360, 374, 377, 379
Police ... 163-168
Free distribution of bread to children in slums, criteria of selection of slums ... 497-499

ANBAZHAGAN, THIRU K.—
Budget, (Revised), 1971-72, Voting:
Animal Husbandry ... 217, 218-219, 237-247

ANIMAL HUSBANDRY.
Horse breeding, Hosur Cattle Farm ... 129-136

B

BACKWARD CLASSES.
Dhobies, Memorandum from Salavai Thozilalar Munnetra Sangam ... 25-26

BALASUNDARAM, THIRU V.—
Budget (Revised), 1971-72, Voting:
Police ... 170-172



PAGES

B-*Cont.*

BILLS.
Buildings (Lease and Rent Control) Second Amendment Bill 1971, Int. ... 158

BREAD.
Criteria for selection of slums for free distribution of ... 497-499

BRIDGES AND CULVERTS.
Bridge across Nallaru ... 505
Bridge near Agaram village, construction ... 22-23
Fly-over Near Gemini ... 146-149

BUSES.
Radio Set in private buses ... 154

CALLING ATTENTION—
Colleges (Private), alleged malpractices in admission of boys and girls ... 298-300
Rise in price of Rayan Yarn and hardship of handloom and Powerloom Weavers ... 155-157

CAUVERY WATER DISPUTE.
Prime Minister's letter on the resolution passed by the House ... 569-570

CHAIR—
Ruling and Observations—
Cut motions—
Police Demand—
On a point of order raised by a Member that the cut-motion given notice of by another Member, namely, "To discuss the need for the issue of instruction to all the Police stations to take impartial action irrespective of political considerations, whenever complaints are brought to Police Stations" contained an intimation against the Police, the Chair held that there was no insinuation in it and that it was in perfect order ... 29

PAGES.

C-cont.

CHAIR—*cont.*
Rulings and Observations—*cont.*
Debate—
Interruptions—
Interruptions could be allowed only to raise points of order and not for expressing opinion or for geeting the required reply ... ... 61
It is not desirable for a Member to interrupt another Member's speech except on a point of order ... ... ... ... ... ... 328
Questions and Answers—
Supplementary questions—
Motives—
Members should not impute motives in their supplementaries ... ... ... ... 498
While putting supplementaries, Members should put only questions and should not make a speech ... ... ... ... ... 512
QUOTATION.
Before quoting from any letter or document Members should obtain the prior consent of the chair ... 550–551
CHELLIAH, THIRU Kuzha—
Budget (Revised) 1971–72, Voting:
Police ... ... ... ... ... ... 80–83
CHEZHIAN, THIRU Kovai—
Budget (Revised) 1971–72, Voting:
Police ... ... ... ... ... ... 42–45
CHOCKALINGAM, THIRU P. Pon—
Budget (Revised), 1971-72, Voting:
Police ... ... ... ... ... ... ... 77–80
COLLEGES.
Private colleges, alleged malpractices in admission of boys and girls (C.A.) ... ... ... ... ... 298–300
CO-OPERATION.
Co-operative Cumbly Weaving Centre, starting in Hosur Block ... ... ... ... ... ... 288
Industrial Co-operative Bank, profit ... ... 288–289



PAGES

C—*cont.*

COMMITTEES.
Estimate, First report on action taken, Highways and Rural Works ... ... ... ... 157
Report on Khadi and Village Industries presentation ... ... ... ... ... ... 519
High Power Committee to study financial position of Corporation of Madras ... ... ... 490–492
CORPORATION—
Madras Corporation, revision of property tax ... 5–7
COTTAGE INDUSTRIES—
Palm leaf products, Ramanathapuram, marketing facilities ... ... ... ... ... ... 140–142
COURTS—
District Court, Krishnagiri, construction of building. 504

D

DAMS—
Hosur taluk ... ... ... ... ... 149–152
DENNIS, THIRU N.—
Barrels manufacturing factory, setting up by Indian Oil Corporation ... ... ... ... ... 20
Budget (Revised) 1971–72, Voting:
Motor Vehicles Acts, Administration—Road Transport Schemes—Capital Outlay on Road Transport Schemes ... ... ... ... 505–507
District Court, Krishnagiri, construction of building 504
Free distribution of bread to children in slums, criteria of selection of slum ... ... ... 497–499
Glass bangle industry, financial assistance to ... 19
High Court staff, staying away ... ... ... 503–504
Minerals for fabrication of special steel near Palani ... ... ... ... ... ... 289–290

PAGES

D—*cont.*

DENNIS, THIRU N.—*cont.*

Prosperity Brigade, deployment to assist State Transport Services ... ... ... ... 295-298

Tourism Ministers' Conference in Ooty in May 1971—Details ... ... ... ... ... 515-517

DURAIMURUGAN, THIRU—

Budget (Revised), 1971-72, Voting—Police ... 168-170

DURAISWAMY, THIRU S.—

Bridge across Nallaru ... ... ... ... ... 505

Budget (Revised), 1971-72, Voting:

Motor Vehicles Acts—Administration—Road Transport Schemes—Capital Outlay on Road Transport Schemes ... ... ... ... 551-554

Ceiling on urban property, formation of a Committee ... ... ... ... ... ... 499-501

Dyeing factory at Chennimalai ... ... ... 135-136

Madras-Mahabalipuram seashores, flower gardens ... 152-154

Persons murdered due to election disputes ... ... 270-272

E

ELANGOVAN, THIRU K.—

Budget (Revised), 1971-72, Voting:

Motor Vehicles Acts—Administration—Road Transport Schemes—Capital Outlay on Road Transport Schemes ... ... ... ... 540-542

EMPLOYEES—

House-Surgeons, increase of stipend ... ... ... 287

Police assistance to Accountant-General to deal with employee-demonstrators ... ... ... ... 15-17

F

FINANCIAL BUSINESS—

Budget (Revised), 1971-72, Voting:

Animal Husbandry ... ... ... ... ... 217-247

Co-operation—Khadi ... ... ... ... ... 300-381

Motor Vehicles Acts—Administration—Road Transport Schemes—Capital Outlay on Road Transport Schemes ... ... ... ... 519-598



PAGES.

F—*cont.*

FINANCIAL BUSINESS—*cont.*

Budget (Revised), 1971-72, Voting—*cont.*

Police ... ... ... ... ... ... 28-99
158-217

FAMINE—

Ramanathapuram and Dharmapuri districts, inclusion by Central Government in perenially drought-affected areas ... ... ... ... ... 10-15

Taluks recognised by Central Government as famine-affected areas and nature of assistance ... ... 9-15

FERTILISERS—

*See* Agriculture

FILMS—

Shooting at Sathanur Dam, levy of charges ... ... 292

G

GANAPATHY, THIRU N.—

Budget (Revised), 1971-72, Voting:

Animal Husbandry ... ... ... ... 229-230

Police ... ... ... ... ... ... 94-99

Cut motion, insinuation against police (Point of order) ... ... ... ... ... ... 29

GANAPATHY, THIRU T.—

Budget (Revised) 1971-72, Voting:

Motor Vehicles Acts—Administration—Road Transport Schemes—Capital outlay on Road Transport Schemes ... ... ... ... 554-556

GANESAN, THIRU S.—

Persons murdered due to election disputes ... ... 270-272

Temples, Mutts and Adheenams, utilisation of income ... ... ... ... ... ... 27-28

GOPAL, THIRU K. P.—

Budget (Revised), 1971-72, Voting:

Police ... ... ... ... ... ... 83-85

PAGES

## H


HANDE, DR. H. V.—

Budget (Revised), 1971-72, Voting:
- Animal Husbandry ... ... ... ... 218, 230-233
- Co-operation ... ... ... ... ... 301
- Khadi ... ... ... ... ... ... 301, 352-361
- Motor Vehicles Acts—Administration—Road Transport Schemes—Capital Outlay on Road Transport Schemes ... ... ... ... 520, 573-578
- Police ... ... ... ... 28, 174-178

Cellular Concrete Plant at Ennore, starting ... 294-295

College of Nursing, number of persons graduated from ... ... ... ... ... 493-494

Dhobies, Memorandum from Salavai Thozhilalar Munnetra Sangam ... ... ... ... 25-26

Fertilisers, prices ... ... ... ... ... 276-278

Fertilisers, subsidy by State Government ... ... 278-279

Flyover near Gemini ... ... ... ... 146-149

General Hospital, shortage of oxygen cylinders ... 285-286

Junior Basic School, Poosaripatti ... ... ... 283-284

Madras Corporation's financial position—Study by High Power Committee ... ... ... 490-492

Mica deposits in Kanyakumari district, utilisation ... 290

Mobile Hospital under Chittaranjan Das Memorial Scheme, starting ... ... ... ... 284-285

Paddy fields in Lalgudi taluk, conversion into sugar-cane growing fields ... ... ... ... 292-294

Ramanathapuram and Dharmapuri districts, inclusion by Central Government in perenially drought-affected areas ... ... ... ... 10-15

HANDLOOM—

Handloom Industry, reduction of price of yarn ... 136-138

HARIJAN WELFARE—


See Hostels.



H—*cont.*


HOSPITALS AND DISPENSARIES—

Employees State Insurance of Hospital, Madurai. 275-276

General Hospital, shortage of oxygen cylinders. 285-286

Mobile Hospital under Chittaranjan Das Memorial Scheme, starting ... ... ... ... ... 284-285

HOSTEL(S)—

Harijan Hostels, education tours for boys and girls 273-274

Harijan Hostels, provision of uniforms to boys ... 272-273

HOTELS—

Vegetarian and non-vegetarian hotels in City, number permitted to have "dine and dance" features ... ... ... ... ... ... 508-513

HOUSING—

Quarters for Revenue Officials in Tiruchirappalli District ... ... ... ... ... ... 134-135


## I


INDUSTRIES—

Balaramavarma Spinning Mills, Shencottah, take-over ... ... ... ... ... ... 269-270

Barrels manufacturing factory, setting up by Indian Oil Corporation ... ... ... ... ... 20

Beedi industrial centres, modernisation ... ... 503

Cellular Concrete Plant at Ennore, starting ... 294-295

Dyeing factory at Chennimalai ... ... ... 135-136

Glass bangle industry, financial assistance to ... 19

Gunny bags factories, setting up ... ... ... 18-19

Scooter factory at Ambathur ... ... ... 143-146

Spinning mill, starting in Hosur taluk ... ... 19

INSURANCE—

Crop Insurance Scheme, introduction ... ... 513-515

Employees State Insurance, special medical facilities 274-275

IRON AND STEEL—

Stainless steel sheets, annual allotment ... ... 291

PAGES

J.


JAILS—

Open air jails, provision in each district ... ... 20–22

JAMES, THIRU J.—

Budget (Revised), 1971–72, Voting:
Co-operation
Khadi ... ... ... ... 300, 380

Motor Vehicles Acts—Administration—Road Transport Schemes—Capital Outlay on Road Transport Schemes ... ... ... ... ... 546, 547 547–550

JAYARAMAN, THIRU K.—

Budget (Revised), 1971–72, Voting—
Co-operation
Khadi ... ... ... ... ... 322–325

Rise in price of Rayan Yarn and hardship of handloom and Powerloom Weavers (C.A.) ... ... 155–157

JUDICIARY—

High Court staff, staying from work ... ... 503–504


K.


KANDASAMY, THIRU MANALI C.—

Budget (Revised), 1971–72, Voting—
Police ... ... ... ... ... 35–37, 41

KANNAN, THIRU M. R.—

Budget (Revised) 1971–72, Voting, Police ... 161–163

KARTHEESAN, THIRU V.—

Budget (Revised), 1971–72, Voting—
Co-operation
Khadi ... ... ... ... ... 329–330

KARUNANIDHI, DR. M.

Budget (Revised), 1971–72, Voting Police ... ... 28,29,33, 59,60,61, 67,70,87, 88,89,90, 199–217

Cauvery water dispute, Prime Minister's letter on the resolution passed by the House (St.) ... ... 569–570




K—*cont.*

PAGES


KARUPPIAH, THIRU A.—

Budget (Revised), 1971–72, Voting:
Police ... ... ... ... ... ... 48–50

KATHER BATCHA ALIAS VELLAICHAMY, THIRU, S.—

Budget (Revised), 1971–72, Voting:
Co-operation—Khadi ... ... ... ... 343–345

KATHIRAVAN, THIRU K. M.—

Balaramavarma Spinning Mills, Shencottah, take-over ... ... ... ... ... ... ... 269–270

KAVERIMANIAM, THIRU S.—

Budget (Revied), 1971–72, Voting—
Motor Vehicles Acts—Administration—Road Transport Schemes—Capital Outlay on Road Transport Schemes ... ... ... ... 570–573
Police ... ... ... ... ... ... ... 55–58

Tiruparankundram Devasthanam, constitution as separate Devasthanam ... ... ... ... 517–519

KITTAPPA, THIRU N.—

Budget (Revised), 1971–72, Voting—
Motor Vehicles Acts—Administration—Road Transport Schemes—Capital Outlay on Road Transport Schemes ... ... ... ... 537–540

Films—Levyo f charges for shooting at Sathanur Dam ... ... ... ... ... ... 292

Flyover near Gemini ... ... ... ... 146–149

Gunny bags factories, setting up ... ... ... 18–19

House Surgeons, increase of stipend ... ... ... 287

Municipal tax on huts, abolition ... ... ... 7–9

Open air jails, provision in each district ... ... 20–22

Poramboke lands under Public Works Department, assignment to agriculturists ... ... ... ... 23–25

Quarters for Revenue Officials in Tiruchirappalli District ... ... ... ... ... ... 134–135

Radio sets in private buses ... ... ... 154

School Text Books, notice to Book Publishers *re*, publication by Government ... ... ... 280–281

Starting of a factory in Ariyalur area with gypsum 502

K—*cont.*


PAGES

KITTAPPA, THIRU N.—*cont.*

Taluks recognised by Central Government as famine affected areas and nature of assistance. ... 9-15

Temples, Mutts and Adheenams, utilisation of income ... ... ... ... ... ... 27-28

Veterinary Hospital for Manalmedu ... ... ... 130-134

KOTHANDARAMAIAH, THIRU K. S.—

Dams in Hosur taluk ... ... ... ... ... 149

KUMARASAMY, THIRU K. N.—

Budget (Revised), 1971-72, Voting—

Animal Husbandry ... ... ... ... 218, 227-230

Co-operation ... ... ... ... ... 301, 302,
Khadi ... ... ... ... ... 325-329

Police ... ... ... ... ... ... 50-55

Crop Insurance Scheme, introduction ... 513-515

Temples, Mutts and Adheenams, utilisation of income ... ... ... ... ... ... 27-28


L


LABOUR—

Electricity labourers in Madurai, Coimbatore and Thanjavur Municipalities, Electricity Board—pay-scale ... ... ... ... ... 282-283

N.M.R. coolies in Coimbatore Municipality, confirmation ... ... ... ... ... 281-282

LANDS—

Land Ceiling Act, Exemptions Committee's report ... 288

Poramboke lands under Public Works Department, assignment to agriculturists ... ... ... 23-25

LAW AND ORDER—

Murder of former Member of Parliament at Tirunelveli ... ... ... ... ... ... ... 270

Persons murdered due to election disputes ... ... 270-272

LIBRARIES—

Local Library Authority, Special Director ... ... 1-5.





PAGES

M.

MADHAVAN, THIRU S.

Rise in price of Rayan yarn and hardship of handloom and powerloom weavers (C.A. St.) ... 155-157

MAHABALIPURAM—

Master Plan ... ... ... ... ... 150-1952

MANICKAVASAKAM, THIRU R.—

Budget (Revised), 1971-72, Voting:
Co-operation—Khadi ... ... ... ... 327

MANIYAN, THIRU P. S.

Budget (Revised), 1971-72, Voting:

Co-operation—Khadi ... ... ... ... 337-340

Local Library Authority, Special Director ... 1-5

MARUDHACHALAM, THIRU N.

Budget (Revised). 1971-72, Voting:
Co-operation—Khadi ... ... ... ... 340-341

Graduate teachers working as secondary Grade teachers, preference in appointment ... ... 489-490

N.M.R. coolies in Coimbatore Municipality, confirmation ... ... ... ... ... 281-282

Nurses trained in Government Hospital, Coimbatore, number of nurses trained in ... ... 494-496

Trained Graduate teachers working as secondary grade teachers, salary as B.T. teachers ... ... 487-489

MATS—

Foreign market ... ... ... ... ... 142

MINES AND MINERALS—

China Clay, availability ... ... ... ... 501

Corals, availability ... ... ... ... 502

Gold in Kanjamalai and Paralamalai area, exploitation ... ... ... ... ... ... 502

Gypsum, starting of factory in Ariyalur area with gypsum ... ... ... ... ... ... 502

Load stone deposits near Thazhangulam village ... 502

Mica deposits in Kanyakumari district, utilisation 290

Mineral deposits at Pakkam Hills ... ... ... 289

Minerals for fabrication of special steel near Palani ... ... ... ... ... 289-290

M—*cont.*

PAGES

MOHIDEEN, THIRU TIRUPPUR A. M.—
Budget (Revised), 1971–72, Voting:
Police ... ... ... ... ... 47, 67–72

MUNUSWAMI, THIRU R.R.—
Budget (Revised), 1971–72, Voting:
Motor Vehicles Acts—Administration—Road Transport Schemes—Capital Outlay on Road Transport Schemes ... ... ... ... 556–558
Corals, availability ... ... ... ... ... 502
Load stone deposits near Thazhangulam village ... 502
Mineral deposits at Pakkam Hills ... ... ... 289
Teachers' Basic Training School for Women, starting at Gingee ... ... ... ... ... 284

MURDERS—
Murder of former Member of Parliament at Tirunelveli ... ... ... ... ... ... 270

MURUGAIYAN, THIRU S.
Budget (Revised), 1971–72, Voting:
Motor Vehicles Acts—Administration—Road Transport Schemes—Capital Outlay on Road Transport Schemes ... ... ... ... 542–546

MUTHIAH, THIRU M.
Budget (Revised), 1971–72, Voting:
Police ... ... ... ... ... ... 172–174

N

NACHIAPPAN, THIRU A. M. T.—
Budget (Revised), 1971–72, Voting:
Co-operation—Khadi ... ... ... ... 350–351

NACHIAPPAN, THIRU N.
Budget (Revised), 1971–72, Voting:
Co-operation, Khadi ... ... ... ... 348–349
Police ... ... ... ... ... ... 72–75

NALLASAMI, THIRU S.—
Budget (Revised), 1971–72, Voting:
Co-operation, Khadi ... ... ... ... 347–348



N—*cont.*

NARASIMHAN, THIRU A. C.
Budget (Revised), 1971–72, Voting:
Motor Vehicles Acts—Administration—Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes ... ... ... ... 564–565
Police ... ... ... ... ... ... 45–48

NARAYANASWAMI, THIRU M. V.
Budget (Revised) 1971–72, Voting:
Motor Vehicles Acts—Administration—Road Transport Schemes—Capital Outlay on Road Transport Schemes ... ... ... ... 528–632

NATARAJAN, THIRU N. V.—
Budget (Revised), 1971–72, Voting:
Police ... ... ... ... ... ... 88

NEDUNCHEZHIAN, THIRU V. R.
Colleges (Private) alleged malpractices in admission of boys and girls (C. A. St.) ... ... ... 298–300

NURSES.
College of Nursing( number of persons graduating from ... ... ... ... ... ... 493–494
Government Hospital, Coimbatore, number of nurses trained in ... ... ... ... ... 494–496
Nursing Orderlies, change in designation ... ... 492–493

O

OVERBRIDGES—
Overbridges in Madurai City, probable date of completion ... ... ... ... ... ... 505–506

P

PALANISWAMY, THIRU M.—
Budget (Revised), 1971–72, Voting:
Co-operation—Khadi ... ... ... ... 341–343

PALANISWAMY, THIRU K.—
Electricity labourers in Madurai, Coimbatore and Thanjavur Municipalities, Electricity Board—pay scale ... ... ... ... ... ... 282–283
Gold in Kanjamalai and Paralamalai area, exploitation ... ... ... ... ... ... 502

PAGES

P-*cont.*


PALANISWAMY, Thiru N. K.—*cont.*

Handloom industry, reduction of price of yarn ... 136–138

Madras Corporation's financial position, study by High Power Committee ... ... ... 490–492

PAPERS LAID ON THE TABLE—

Agricultural Produce Markets Act, 1959—Notification ... ... ... ... ... ... 599

Animal Husbandry, Policy note ... ... ... 248

Cauvery Water Dispute, Brief (Tamil) ... ... 599

Co-operative Development Schemes during 1970–71, Review of progress (English and Tamil) ... ... 382

Co-operation, Policy Note (English and Tamil) ... 382

Court Fees and Suits Valuation (Amendment) Bill, 1971 ... ... ... ... ... ... 248

Demand No. 19, Co-operation, Speech by Hon. Minister ... ... ... ... ... ... 599

Forest Act, 1882, notification re. amendments to Rules ... ... ... ... ... ... 382

Handloom industry, review for 1970 ... ... ... 100

Indian Stamp Act, 1899, Notification ... ... 248

Industrial Investment Corporation Limited, Government's review and Twenty-first Annual Report and Statement of Accounts for 1969–70 ... 100

Khadi and Village Industries Board, Policy Note (English and Tamil) ... ... ... ... 382

Nationalised Transport, review for 1970–71 (English and Tamil) ... ... ... ... ... ... 382

Panchayats Act, 1958, Notifications ... ... 100, 248

Police, review for 1970–71 (English and Tamil) ... 100

Tamil Nadu Entertainments Act, 1939, notifications ... ... ... ... ... ... 599

Warehouse Corporation, Balance sheet and profit and Loss Account for 1968–69 ... ... ... ... 382

PARANDHAMAN, Thiru A.—

Budget (Revised), 1971–72, Voting:

Co-operation, Khadi ... ... ... ... ... 314–316




PAGES.

P-*cont.*


POLICE—

Police firing at Tenkasi, report of Inspector-General of Police on ... ... ... ... 17–18

PONNAPPA NADAR, Thiru R.

Budget (Revised), 1971–72, Voting:

Co-operation—Khadi ... ... ... ... 301, 327, 362–367, 369, 370, 581

Motor Vehicles Acts—Administration—Road Transport Schemes—Capital Outlay on Road Transport Schemes ... ... ... ... ... 520, 583, 588

Police ... ... ... ... ... ... 70, 71, 78

PROPERTY—

Ceiling on urban property, formation of a Committee ... ... ... ... ... ... 499–501

PROSPERITY BRIGADE—

Deployment to assist State Transport Services ... 295–298

R

RAILWAYS—

Southern Railway, mobile goods booking scheme ... 292

RAJA, Thiru A.M.

Corals, availability ... ... ... ... ... 502

Stainless steel sheets, annual allotment ... ... 291

RAJANGAM, Thiru N.—

Budget (Revised), 1971–72, Voting:

RAJA PILLAI, Thiru V. K.—

Budget (Revised), 1971–72, Voting:

Animal Husbandry ... ... ... ... 225–227

Co-operation, Khadi ... ... ... ... 345–347

Police ... ... ... ... ... ... 75–77

Co-operation—Khadi ... ... ... ... 351–352

Police ... ... ... ... ... ... 92–94

RAJARAM, Thiru K.

Buildings (Lease and Rent Control) Second Amendment Bill, 1971 ... ... ... ... ... 158

PAGES.

R—*cont.*

RAMACHANDRAN, THIRU S.
Budget (Revised), 1971-72, Voting :
Motor Vehicles Acts—Administration—Road Transport Schemes—Capital Outlay on Road Transport Schemes ... ... ... ... 522-524, 588-598

RATHINASABAPATHY, THIRU M.
Budget (Revised), 1971-72, Voting :
Motor Vehicles Acts—Administration—Road Transport Schemes—Capital Outlay on Road Transport Schemes ... ... ... ... 567-569

RELIGIOUS INSTITUTIONS—
Tiruparankundram Devasthanam, constitution as separate Devasthanam ... ... ... ... 517-519

S

SAMPATH, THIRU T. V.—
Budget (Revised) 1971-72, Voting :
Motor Vehicles Acts—Administration ...
Road Transport Schemes ... ... ...
Capital Outlay on Road Transport Schemes ... 562-563

SANGUMUTHU THEVAR, THIRU S.—
Master Plan for Mahabalipuram ... ... 150-152
Nursing Orderlies, change in designation ... 492-493
Police assistance to Accountant-General to deal with employee-demonstrators ... ... 15-17
Police firing at Tenkasi, report of Inspector-General of Police on ... ... ... ... 17-18
Property tax, revision by Madras Corporation ... 5-7
Silk sarees, price ... ... ... ... ... 138-140
Southern Railway, Mobile Goods booking Scheme 292
Temples, Mutts and Adheenams, utilisation of income ... ... ... ... ... ... 27-28
Text Books Committee for Schools and Colleges 279-280
Vegetarian and non-vegetarian hotels, number permitted to have 'dine and dance' features ... 508-513



S-*cont.*

SARATHY, THIRU M. P.—
Open air jails, provision in each district ... ... 20-22

SAREES—
Silk Sarees, price ... ... ... ... 138-140

SCHOOLS—
Junior Basic School, Poosaripatti ... ... 283-284

SEA-SHORES—
Madras-Mahabalipuram Sea-shores, flower gardens 152-154

SERVICES—
Age-limit for Government appointment, enhancement ... ... ... ... ... 506-508

SHANMUGAM, THIRU P. U.—
Bdget (Revised), 1971-72, Voting :
Police ... ... ... ... ... 32

SOUNDARAPANDIAN, THIRU P.—
Budget (Revised), 1971-72, Voting :
Police ... ... ... ... ... 63-66

STATE TRANSPORT—
Non-payment of bonus to a section of workers ... 517

STATIONERY—
Timely supply to Courts ... ... ... 496-497

SUBBIAH, THIRU A. K.—
Budget (Revised) 1971-72, Voting :
Animal Husbandry ... ... ... 218, 223-225

SUBBIAH, THIRU A. R.—
Budget (Revised) 1971-72, Voting :
Animal Husbandry ... ... ... ... 221-223

SUBRAMANIAM, THIRU A.—
Budget (Revised), 1971-72, Voting :
Motor Vehicles Acts—Administration ...
Road Transport Schemes ... ... ...
Capital Outlay on Road Transport Scheme ... 521, 532-536

SUBRAMANIAM, Thiru K. M.—
Budget (Revised), 1971-72, Voting:
Animal Husbandry ... ... ... ... 219-221
Co-operation ... ... ... ...
Khadi ... ... ... ... ... 316-319, 376
Police ... ... ... ... ... 29-33

SUBRAMANIAM, Thiru M.—
Budget (Revised), 1971-72 Voting:
Co-operation, Khadi ... ... ... ... 311-314
Silk Sarees, price ... ... ... ... 138-140

SUPPU, Thiru K.—
Budget (Revised), 1971-72, Voting:
Motor Vehicles Acts—Administration ...
Road Transport Schemes ... ... ...
Capital Outlay on Road Transport Schemes ... 558-561
Police ... ... ... ... ... 28, 86-92
Palm leaf products, Ramanathapuram marketing facilities ... ... ... ... ... 140-142
Stationery, timely supply to courts ... ... 496-497

SWAMIDHAS, Thiru A.—
Budget (Revised), 1971-72, Voting:
Police ... ... ... ... ... 28, 58-63
China clay, availability ... ... ... 501
Fire accidents in Mylapore, relief to victims ... 135
Murder of former Member of Parliament at Tirunelveli ... ... ... ... ... 270
Scooter factory at Ambattur ... ... ... 143-146
State Transport Service, non-payment of bonus to a section of workers ... ... ... 517



PAGES.

T

TAXES—
Municipal tax on huts, abolition ... ... 7-9
Property tax, revision by Madras Corporation ... 5-7

TEACHERS—
Basic Training School for women, starting at Gingee ... ... ... ... ... ... 284
Basic Training School for women, Walajapet, closure on account of dilapidated condition of building ... ... ... ... ... 284
Graduate teachers working as secondary grade ... teachers, preference in appointment ... 489-490
Secondary grade teachers with degree and teachers' training, salary as B.T. teachers ... ... 487-489

TEMPLES—
Temples, Mutts and Adheenams, utilisation of income ... ... ... ... ... 27-28
Sri Chandra Choodeswara temple at Hosur, laying of a road ... ... ... ... ... 155

TEXT BOOKS—
Notice to Book Publishers re. publication of school— 280-281
Text Books Committee for schools and colleges. 279-280

THANGAMANI, Thiru K. T. K.—
Budget (Revised), 1971-72, Voting:
Co-operation, Khadi ... ... ... 301, 379-380, 381
Motor Vehicles Acts—Administration—Road Transport Schemes—Capital Outlay on Road Transport Schemes ... ... ... ... 521, 578-583
Police ... ... ... ... ... 89, 178-188
Employees State Insurance Hospital, Madurai 275-276
Employees State Insurance, special medical facilities ... ... ... ... ... 274-275
Land Ceiling Act, Exemption Committee's report 288
Ramanathapuram and Dharmapuri districts, inclusion by Central Government in perenially drought affected areas ... ... ... ... 10-15

PAGES.

T-*cont.*

THIRUPATHI, THIRU K.

Overbridges in Madurai City, probable date of completion ... ... ... ... ... 505–506

THIRUVENGADAM, THIRU THOPPUR

Bridge near Agaram village, construction ... 22–23

TOURISM—

Minister's Conference in Ooty in May 1971, details ... 515–517

V.

VEERASAMY, THIRU N.

Budget Revised) 1971–72 ,voting :

Police ... ... ... ... ... ... 158–161

Colleges (private), alleged mapractices in admission of boys and girls (C.A.) ... ... ... ... 298–300

VENKATACHELLUM JOTHI, THIRUMATHI

Budget (Revised) 1971–72, voting :
Motor Vehicles Acts—Administration ... ...
Road Transport Schemes ... ... ... ...
Capital Outlay on Road Transport Schemes ... 525–528

VENKATASWAMY, THIRU B.

Age limit to Government service, enhancement ... 506 508

Budget (Revised), 1971–72, Voting :

Police (in Telugu) ... ... ... ... ... 48

Co-operative Cumbly Weaving Centre, starting in Hosur Block ... ... ... ... ... ... 288

Dams in Hosur taluk ... ... ... ... ... 149

Harijan Hostels, education tours for boys and girls. 273–274

Harijan Hostels, provision of uniforms to boys ... 272–273

Horse breeding, Hosur Cattle Farm ... ... ... 129–130

Spinning mill, starting in Hosur taluk ... ... 19

Sri Chandra Choodeswaran Temple at Hosur laying of a road ... ... ... ... ... ... 155

VETERINARY

Hospital, Manalmedu ... ... ... ... ... 130–134



PAGES.

V—*cont.*

VEZHAVENDAN, THIRU K.

Budget (Revised), 1971–72, Voting :

Police ... ... ... ... ... ... 37–42

Committee on Estimates, first report on action taken Highways and Rural Works, presentation ... 157

Committee on Estimates Report on Kadhi and Village Industries, presentation ... ... ... ... 519

W

WAHAB, THIRU K.A.

Basic Training School for Women, Wallajapet, closure on account of dilapidated condition of building ... ... ... ... ... ... ... 284

Beedi Industrial Centres, modernisation ... ... 503

Budget (Revised) 1971–72, Voting :

Co-operation, Khadi ... ... ... ... ... 319–322

Flyover near Gemini ... ... ... ... ... 146–149

Industrial Co-operative Bank, profit ... ... ... 288–289

Madras—Mahabalipuram sea-shores flower gardens. 152–154

Mats, Foreign market ... ... ... ... ... 142

WEAVERS

Rise in price of Rayan yarn hardship of handloom and powerloom weavers (C.A.) ... ... ... 155–157

61519